ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

நம்மாழ்வார் அருளிச்செய்த

திருவாய்மொழி (முதல் பத்து)

(ஈடு வ்யாக்யான மூலம், எளிய நடை)

(வேதம் தமிழ் செய்த மாறன்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

(Email: sridharan_book@yahoo.co.in)

ஈடு வ்யாக்யான அறிமுகம்

நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய்மொழிக்கு, எம்பெருமானாரின் கட்டளைக்கு ஏற்ப திருக்குருகைப்பிரான்பிள்ளான் ஆறாயிரப்படி என்னும் முதல் உரையை அருளிச்செய்தார். ஆராயிரம் க்ரந்தங்கள் கொண்டது இதுவாகும். உயிர் எழுத்து, உயிர்மை எழுத்து என்று 32 எழுத்துக்கள் கொண்ட்து ஒரு க்ரந்தம் ஆகும். படி என்றால் அளவு என்பதாகும். ஆக ஆறாயிரப்படி என்பது ஆறாயிரம் க்ரந்தங்களைக் கொண்டதாகும். இதே அளவுடைய நூல் ஸ்ரீவிஷ்ணுபுராணம் ஆகும்.

நஞ்ஜீயர் திருவாய்மொழிக்கு ஒன்பதாயிரப்படி என்ற வ்யாக்யானத்தை அருளிச் செய்தார். இது ஸ்ரீபாஷ்யம் அளவில் உள்ள க்ரந்தம் ஆகும். இதனை நம்பூர் வரதராஜர் என்பவர் ஒரு பட்டோலையில் எழுதி அவற்றை நஞ்சீயரிடம் கொண்டு வந்து கொடுக்க, காவேரியைத் தாண்டி வந்தபோது, வெள்ளத்தில் அது அடித்துச் செல்லப்பட்டது. இதனால் வருந்திய வரதராஜரின் கனவில் ஸ்ரீரங்கநாதன் தோன்றி, “உன்னுடைய ஆசானை எண்ணியபடி நீரே மீண்டும் எழுத ஆரம்பியும். நாம் உம்முடைய நினைவில் நின்று உமக்கு உதவுவோம்”, என்றான். இவர் எழுதிய பட்டோலையை பின்னர் நஞ்சீயர் பார்க்க, தான் எழுதிய பல சொற்களுக்கு மிகுதியான விளக்கம் இருப்பது கண்டு மகிழ்ந்து, அதற்கான காரணம் கேட்டார். வரதராஜரும் நடந்ததைக் கூற, நஞ்சீயர் அவரைத் தழுவிக் கொண்டு, அவருக்கு ”நம்பிள்ளை” என்று திருநாமம் சூட்டி மகிழ்ந்தார்.

வாதிகேசரி அழகிய மணவாள ஜீயர், பன்னீராயிரப்படி என்னும் உரையை அருளிச் செய்தார். இது ஸ்ரீமத்பாகவதத்தின் அளவு உடையது ஆகும்.

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவாய்மொழிக்கு, நம்பிள்ளையின் கட்டளை பேரில் இருபத்துநாலாயிரப்படி என்ற வ்யாக்யானத்தை அருளிச் செய்தார். இது இராமாயணத்தின் அளவு கொண்டது.

வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவாய்மொழிக்கு, ஈடு என்று போற்றப்படும் “ஈடு முப்பத்தாறாயிரப்படியை” அருளிச்செய்தார். இதனை இவர் தன்னுடைய ஆசார்யனான நம்பிள்ளை அன்றாடம் கூறிய குறிப்புகளை வைத்துக்கொண்டு எழுதினார். அதனை நம்பிள்ளையிடம் கொண்டு செல்ல, ”நம்முடைய அனுமதி இல்லாமல் எழுதியதால், என்னிடமே அது இருக்கட்டும்”, என்று கூறி அதனை உள்ளே வைத்து விட்டார். பின்னர் மாதவப்பெருமாள் மூலமாக ஸ்ரீரங்கநாதன் இதனை வெளிக்கொணர்ந்தான். ஈடு என்பது ஸ்ரீபாஷ்யத்திற்கு ஸுதர்சனபட்டர் அருளிச்செய்த ச்ருதப்ரகாசிகை அளவு கொண்டதாகும். இது பகவத்விஷயம் என்றும் போற்றுப்படுகிறது. இதனைக் கேட்க ஸ்வாமி மணவாளமாமுனிகளிடம் ஸ்ரீரங்கநாதன் தன்னுடைய ஒரு வருடத்து உற்சவங்கள் அனைத்தையும் நிறுத்தி வைத்து, சிஷ்யனாக வந்தான் என்பது இதற்குப் பெருமையாகும்.

திருவாய்மொழித் தனியன்கள்

ஸ்ரீநாதமுனிகள் அருளிச்செய்தது

பக்தாம்ருதம் விச்வஜநாநுமோதநம்
ஸர்வார்த்ததம் ஸ்ரீசடகோப வாங்மயம்
ஸஹஸ்ரசாகோபநிஷத் ஸமாகமம்
நமாம்யஹம் த்ராவிட வேத ஸாகரம்

பொருள் – அடியவர்களுக்கு அமுதமாகவும், அனைத்து மக்களுக்கும் இன்பம் விளைவிப்பதாகவும், அனைத்து உறுதியான நல்ல பொருட்களையும் கொடுப்பதாகவும், ஆயிரம் கிளைகள் உடைய ஸாமவேதம் மற்றும் உபநிஷத்துக்களின் சேர்க்கையாகவும், உள்ள நம்மாழ்வாரின் திருமொழி என்னும் தமிழ் வேதமாகிய கடலை நான் வணங்குகிறேன்.

ஸ்ரீஈச்வரமுனிகள் அருளிச்செய்தது

திருவழுதிநாடென்றும் தென்குருகூரென்றும்
மருவினிய வண்பொருநலென்றும் – அருமறைகள்
அந்தாதி செய்தானடியிணையே எப்பொழுதும்
சிந்தியாய் நெஞ்சே! தெளிந்து.

பொருள் - என்னுடைய மனமே! நீ எப்போதும் திருவழுதி நாடு என்றும், திருக்குருகூர் என்றும், ஜீவநதியான தாமிரபரணி நதியென்றும் கூறியபடி இருப்பாயாக. மேலும், வடமொழி வேதங்களைத் திருவாய்மொழியாக அருளிச் செய்த, நம்மாழ்வாரின் ஒன்றுக்கொன்று பொருந்தியதாக உள்ள திருவடிகளை, "இதுவே உபாயம்" என்று உணர்ந்து, எப்போதும் நினைத்திருப்பாயாக.

ஸ்ரீசொட்டை நம்பிகள் அருளிச்செய்தது

மனத்தாலும் வாயாலும் வண்குருகூர் பேணும்
இனத்தாரையல்லா திறைஞ்சேன் - தனத்தாலும்
ஏதும் குறைவிலேன் எந்தை சடகோபன்
பதங்கள் யாமுடைய பற்று.

பொருள் - அழகான திருக்குருகூரினை அடையும் வம்சத்தில் தோன்றியவரை அல்லாமல், வேறு யாரையும் நான் மனத்தாலும், வாயாலும் வணங்க மாட்டேன். "என் அப்பனான ஆழ்வாரின் திருவடிகளே பற்று", என்று நான் அடைந்ததால் செல்வத்திலும் எந்தவிதக் குறையும் எனக்கு இல்லை.

ஸ்ரீ அனந்தாழ்வான் அருளிச்செய்தது

ஏய்ந்த பெருங்கீர்த்தி இராமனுச முனிதன்
வாய்ந்த மலர்ப்பாதம் வணங்குகின்றேன் - ஆய்ந்த பெருஞ்
சீரார் சடகோபன் செந்தமிழ்வேதம் தரிக்கும்
பேராதவுள்ளம் பெற.

பொருள் - மிகவும் சிறப்புடையவை என்று ஏற்றுக் கொள்ளப்பட்ட மேன்மை உடைய ஆழ்வாரின் தமிழ் வேதமாகிய திருவாய்மொழியினை எப்போதும் மனதில் வைத்துக் கொள்ளும் வல்லமை பெற்றிட, அதனைத் தவிர வேறு ஒன்றும் நினைக்காத மனம் வேண்டும் என்பதற்காக, மிகுந்த புகழினை உடைய, எம்பெருமானாரின் திருவடிகளை வணங்குகிறேன்.

ஸ்ரீ பராசரபட்டர் அருளிச்செய்தது

வான் திகழும் சோலை மதிளரங்கர் வண்புகழ் மேல்
ஆன்ற தமிழ் மறைகள் ஆயிரமும் - ஈன்ற
முதல் தாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த
இதத்தாய் இராமானுசன்.

பொருள் - விண்ணை முட்டும் அளவிற்கு ஓங்கி வளர்ந்துள்ள சோலைகளையும், நீண்ட மதில்களையும் உடைய திருவரங்கத்தில் பள்ளி கொண்டுள்ள பெரியபெருமாளின் திருக்கல்யாண குணங்களைப் பற்றி கூறப்பட்டுள்ள, தமிழ் வேதமான திருவாய்மொழிப் பாசுரங்கள் ஆயிரத்தையும், பெற்றெடுத்த தாயார் நம்மாழ்வார் ஆவார்; அதனை வளர்த்த தாயார் எம்பெருமானார் ஆவார்.

மிக்கவிறை நிலையும் மெய்யாம் உயிர் நிலையும்
தக்க நெறியும் தடையாகித் தொக்கியலும்
ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும் குருகையர்கோன்
யாழிசை வேதத்தியல்.

பொருள் - திருக்குருகூரில் உள்ளவர்களின் தலைவரான நம்மாழ்வார் அருளிச்செய்த, யாழினும் இனிய இசை போன்ற திருவாய்மொழிப் பாசுரங்கள் - எல்லோரையும் விட வேறுபட்ட எம்பெருமானின் இயல்பையும், ஜீவாத்மாவின் இயல்பையும், இந்த ஜீவாத்மா அவனை அடையும் வழிமுறைகளையும், அவனை அடைவதற்குத் தடையாக உள்ள வினைகளைப் பற்றியும், மோக்ஷ வாழ்வினைப் பற்றியும் உபதேசிக்கின்றது.

ஸ்ரீநம்பிள்ளை தனியன்

வேதாந்தவேத்யாம்ருதவாரிராசேர்
வேதார்த்த ஸாராம்ருதபூரமர்க்யம்
ஆதாய வர்ஷந்தமஹம் ப்ரபத்யே
காருண்யபூர்ணம் கலிவரிதாஸம்

ஸ்ரீவடக்குத்திருவீதிப்பிள்ளை தனியன்

ஸ்ரீக்ருஷ்ணபாதபாதாப்ஜே நமாமி சிரஸா ஸதா
யத் ப்ரஸாத ப்ரபாவேந ஸர்வஸித்திரபூந்மம

தனியன்கள் ஸம்பூர்ணம்

தெள்ளியதா நம்பிள்ளை செப்பு நெறிதன்னை வள்ளல் ஸ்வாமி
வடக்குத்திருவீதிப்பிள்ளை அருளிச்செய்த

ஈடு மஹாப்ரவேசம் – முதல் ஸ்ரீய:பதி

மூலம் - ச்ரிய:பதியாய், அவாப்த ஸமஸ்தகாமனாய், ஸமஸ்த கல்யாண குணாத்மகனான ஸர்வேச்வரன், "மாறி மாறிப் பலபிறப்பும் பிறந்து" என்கிறபடியே ஜந்மபரம்பரைகளிலே தோள் மாறி நித்ய ஸம்ஸாரியாய்ப் போந்த இவரை, "அடியை அடைந்து உள்ளந்தேறி ஈறிலின்பத் திருவெள்ளம் யான் மூழ்கினன்" என்று முதலிலே தம் திருவாயாலே சொல்லவல்லராம்படியாக முதலடியிலே விசேஷ கடாக்ஷம் பண்ணி அருளினான்; ப்ருந்தாவநம் பகவதா க்ருஷ்ணேநாக்லிஷ்ட கர்மணா ஸுபேந மநஸா த்யாதம் கவாம் வ்ருத்திமபீப்ஸதா என்கிறபடியே ஸ்ரீப்ருந்தாவநத்தை, உத்பந்நவசஷ்பாட்யம் என்னும்படி கடாக்ஷித்தாப்போலே தத்வங்களை விசதமாக அறிவல்லராம்படி கடாக்ஷித்தான்.

விளக்கம் - ஸ்ரீரங்கநாச்சியாரின் நாயகனும், அடைய வேண்டிய அனைத்தையும் உடையவனும், அனைத்துவிதமான திருக்கல்யாண குணங்களைக் கொண்டவனும் ஆகிய ஸர்வேச்வரன் (ஸ்ரீரங்கநாதன்) நம்மாழ்வாரை செய்தது என்ன என்றால் - திருவாய்மொழி (2-6-8) – மாறி மாறிப் பலபிறப்பும் பிறந்து – என்னும்படி, தொடர்ச்சியாக வருகின்ற பல பிறவிகளில் தோன்றி, ஒரு பிறவி கழிந்தவுடன் மற்றொரு பிறவி எடுத்தபடி நித்ய ஸம்ஸாரியாக நின்ற ஆழ்வாரை: திருவாய்மொழி (2-6-8) - அடியை அடைந்து உள்ளந்தேறி ஈறிலின்பத் திருவெள்ளம் யான் மூழ்கினன் - என்று முதலிலேயே (பரபக்தி, பரஜ்ஞான, பரமபக்தி, ஆனந்த அனுபவம் என்னும் வரிசையில் அல்லாமல்), தன்னுடைய திருவாயினால் கூற வைத்து, முதல் அடியிலேயே சிறப்பான கடாக்ஷத்தையும் அருளிச் செய்தான். விசேஷ கடாஷம் என்பது "மயர்வற மதி நலம் அருளினான்" என்னும்படி உள்ள, பக்தி ரூபமாகிய எல்லையற்ற ஞானத்தைக் கொண்டிருக்கும்படியாகச் செய்தான்.

கடாக்ஷம் என்றால் மற்ற விஷயங்களில் வைராக்யமாக இருந்து, பகவத் அனுபவம் மட்டுமே உண்டாகக் காரணமாக உள்ளது ஆகும். விசேஷ கடாக்ஷம் என்றால் இந்த ப்ரபந்தத்தின் மூலமாக, அகில உலகும் உய்யும்படியாகக் கடாக்ஷித்தான் என்பதாகும். இப்படியாக அவன் கடாக்ஷம் செய்த இடம் வேறு ஏதேனும் உண்டா என்பதற்குப் பதில் அருளிச் செய்கிறார்.

ஸ்ரீவிஷ்ணுபுராணம் – ப்ருந்தாவநம் பகவதா க்ருஷ்ணேநாக்லிஷ்ட கர்மணா ஸுபேந மநஸா த்யாதம் கவாம் வ்ருத்திமபீப்ஸதா – பகவான் எனப்படுபவனும், பசுக்களை விரும்புபவனும் ஆகிய கண்ணன் தன்னுடைய தூய மனதால் பிருந்தாவனம் புற்கள் நிறைந்த இடமாக மாறவேண்டும் என்று நினைத்தவுடன் இந்த இடம் புற்களால் நிரம்பி, அவற்றின் இடையில் பத்மராகக் கற்கள் போன்ற பல உயர்ந்த கற்களுடன் காணப்பட்டது என்று கூறியது. ப்ருந்தாவனத்தை இப்படியாகக் கடாக்ஷித்தது போன்று உண்மையான பொருள்களை உள்ளது உள்ளபடி அறிய வல்லவராக நம்மாழ்வாரைக் கடாக்ஷித்தான். அதாவது, தனக்காக ஆழ்வாரைத் திருவாய்மொழி அருளிச் செய்யவைத்து, அந்த திருவாய்மொழி மூலமாகத் தன்னை அடைந்தவர்களுக்கு வேண்டுவன செய்யலாம்படி ஆழ்வாரைக் கடாக்ஷித்தான்.

மூலம் – இதர தர்சநங்களில் தத்வங்களைப் பதினாறென்பார், ஆறென்பாராய் பஹுப்ரகாரங்களிலே விப்ரதிபத்தி பண்ணுவர்கள். எங்ஙனேயென்னில் லோகாயதிகன், "ப்ருதிவ்யாதி பூதங்கள் நாலினுடைய கூட்டரவில் சைதந்யமென்றொரு தர்மம் பிறக்கும்; அதுக்குண்டான ஸுகதுக்கங்களே ஸ்வர்க்கநரகங்கள், அவற்றினுடைய பிரிவிலே சைதந்யம் நசிக்கும்; அவ்வருகொன்றுமில்லை", என்பது அவனுடைய ஸித்தாந்தம். ஆர்ஹதன், "கார்ய காரணரூபத்தாலே ஜகத்து நித்யாநித்யமும் பிந்நாபிந்நமும் ஸத்யாஸத்யமுமாயிருக்கும்; ஆத்மாக்கள், கர்மாநுரூபமான சரீரங்களினுடைய பரிமாணத்தையே தனக்குப் பரிமாணமாகக் கொண்டிருக்கும்; ஸம்ஸாரம் அநாதி; மலதாரணாதிகளாலும் ஆத்மஜ்ஞாநத்தாலும் ப்ரக்ருதி விநிர்முக்தராய் ஊர்த்வகதியை ப்ராபியா நிற்கை மோக்ஷமாகிறது", என்றான்.

விளக்கம் – தத்துவங்களை உள்ளபடி அறிதல் என்றால், அவற்றில் ஏதேனும் சந்தேகம் உண்டோ என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார். மற்ற மதங்களில் தத்துவங்களை பதினாறு என்றும், ஆறு என்றும் பலவிதமாக மாறுபாடுகளுடன் உபதேசிப்பார்கள். **(குறிப்பு** - பதினாறு என்பது நையாயிகர்கள் கூறும் – ப்ரமாண, ப்ரமேய, ஸம்சய, ப்ரயோஜந, த்ருஷ்டாந்த, ஸிந்தாந்த, அவயவ, தர்க்க, நிர்ணய, வாத, ஜல்ப, விதண்டா, ஹேத்வாபாஸ, சல, ஜாதி, நிக்ரஹஸ்தாநங்கள் என்பவை ஆகும். பஹுப்ரகாரங்கள் என்பதன் மூலம் பின் வருபவற்றைக் கூறுவதாகக் கொள்ளலாம் - ஸாங்க்யர்கள் 25 தத்துவங்கள் என்பர். இத்துடன் ஈச்வரனையும் சேர்த்து 26 என்று யோகிகள் கூறுவது. ஸாங்க்யர்கள் கூறும் 25 உடன் - நியதி, காலம், ராகம், வித்யை, கலை, மாயை, சுத்த வித்யை, ஈச்வரன், ஸதாசிவன், சக்தி மற்றும் சிவன் ஆகிய பதினொன்று சேர்ந்தது 36 என்பர் பாசுபதர். பஞ்சஸ்கந்தம், த்வாதசாயதநம், அஷ்டாதச தாதுக்கள் மற்றும் தத்வம் என்பர் பௌத்தர். ஜீவன், தர்ம அதர்மங்கள், புத்கலம் மற்றும் கால ஆகாசங்கள் என்பர்

ஜைநர்). இவர்கள் கூறும் கருத்து என்ன என்றால் லோகாயதிகன் – மண், நெருப்பு, காற்று, அக்னி ஆகியவை கூட்டாக இணைந்து அறிவு என்னும் தர்மம் பிறக்கும்; அந்த தர்மத்திற்கு உண்டான இன்பதுன்பங்களே ஸ்வர்க்கம் மற்றும் நரகம் ஆகும்; அவை பிரியும்போது அந்த அறிவு அழிந்து விடும் - என்பது இவனுடைய ஸித்தாந்தம். ஆர்ஹதன் என்னும் ஜைநன் கூறுவது - காரிய காரண ரூபத்தினால் இந்த உலகமானது நித்யம், அநித்யம், பிந்தம், பிந்நம் இன்மை, சத்தியம், அசத்தியம் என்று உள்ளது; தங்களது கர்ம பலன் காரணமாக ஆத்மாக்கள் எடுக்கின்ற சரீரங்களின் அளவையே தங்களுடைய அளவாகவும் ஆத்மாக்கள் கொண்டிருக்கும்; இந்த ஸம்ஸாரம் என்பது எல்லையற்றது ஆகும்; மலதாரணை, ஆத்ம அறிவு, ப்ரக்ருதியில் இருந்து விடுபடுதல், மேல் நோக்கிச் செல்லுதல் முதலானவையே மோக்ஷமாகும் – என்பது இவர்களது ஸித்தாந்தம்.

மூலம் - பௌத்த மதங்களில் வைத்துக்கொண்டு வைபாஷிகன், "பரமாணுஸங்காதமாய், ப்ரத்யக்ஷ ஸித்தாமாயிருக்கும் ஜகத்து; தத்விஷய ஜ்ஞாநமும் க்ஷணிகம்; வேறோர் ஆத்மாவில்லை; இதில் ஸ்திரத்வபுத்தி ஸம்ஸாரம்; க்ஷணிக புத்தி மோக்ஷம்", என்றான்.

விளக்கம் - பௌத்த மதத்தைச் சேர்ந்த வைபாஷிகன் கூறுவது – இந்த உலகம் பரமாணுக்களின் கூட்டத்தால் உண்டானது. காட்சி அளவு மூலம் அறியக்கூடியதாக உள்ளது. காண்பது என்பதன் மூலம் கிட்டுகின்ற அறிவும் ஒரு நொடியே நிலைக்கும். ஞானம் என்பதே ஆத்மா, அல்லாமல் வேறு ஆத்மா என்பது இல்லை. பொருள்கள் நிலையாக உள்ளன என்னும் ஞானம் காரணமாகவே ஸம்ஸாரம் ஏற்படுகிறது. பொருள்கள் நிலையாக உள்ளன என்னும் ஞானம் காரணமாகவே ஸம்ஸாரம் ஏற்படுகிறது. பொருள்கள் நொடிதோறும் அழிகின்றன என்னும் ஞானமே மோக்ஷத்தின் காரணமாக உள்ளது.

மூலம் - ஸௌத்ராந்திகனுக்கு ஸித்தாந்தம் அதுவேயாயிருக்கச்செய்தே, "அநுமாந ஸித்தம் ஜகத்து" என்றான்; அதுவே அவனுக்கு விசேஷம். யோகாசாரன் – ஜ்ஞாத்ரு ஜ்ஞேயங்கள் ப்ரமம், ஜ்ஞாநமேயுள்ளது. அதுவும் க்ஷணிகமென்றிருக்கை மோக்ஷம் – என்றான். மாத்யமிகன், "ப்ரமாணமும், ப்ரமேயமும், ப்ரமாதாவும் இவையுண்டென்றறிகை ப்ரமம்; சூந்யத்தாலே சூந்யமென்றறிகை மோக்ஷம்", என்றான்.

விளக்கம் – பௌத்த மதத்தைச் சார்ந்த ஸௌத்ராந்திகன், மேலே கூறிய வைபாஷிகனின் கருத்தையே ஒத்துக்கொண்டாலும், "இந்த உலகமானது அனுமானத்தால் பெறப்படுவது ஆகும்", என்று கூறுவதே இவனுடைய விசேஷம். பௌத்த மதத்தைச் சார்ந்த யோகாசாரன் கூறுவது – அறிகின்றவன், அறியப்படும் பொருள் ஆகியவற்றுக்கு மயக்க

உணர்வும், ஞானமும் உள்ளது. அந்த ஞானம் சில நொடிகளே என்று அறிவதே மோக்ஷத்தின் காரணமாகும் – என்பதாகும். மாத்யமிகன் கூறுவது, "ப்ரமாணம், ப்ரமாணத்தால் அறியப்படும் பொருள்கள், அறிகின்றவன் ஆகியவை மட்டுமே உண்டு என்று அறிவது மயக்க ஞானம் ஆகும். அனைத்தும் சூந்யம் என்பதை சூந்யம் மூலமே அறிபவன் மோக்ஷம் அடைகிறான்", என்பதாகும்.

மூலம் - நையாயிக வைசேஷிகர்கள், "ஜகத்துக்கு உபாதாந காரணம் பரமாணுக்கள்; ஆநுமாநிகேச்வரன் நிமித்த காரணம்; ஸம்ஸாரம் அநாதி; ஈச்வரோபாஸ்தியாலே ஸுகதுக்க ஜ்ஞாநங்கள் நசிக்கை மோக்ஷம்", என்றார்கள். பாஸுபதன், "பரமாணுக்கள் ஜகத்துக்கு உபாதாந காரணம்; ஆகமஸித்தேச்வரன் நிமித்த காரணம்; ஸம்ஸாரம் அநாதி; ஆகமோக்தமான கர்மாநுஷ்டாநத்தாலே பசுபதி ஸாரூப்யத்தைப் பெறுகை மோக்ஷம்", என்றான்.

விளக்கம் - நையாயிகன் மற்றும் வைசேஷிகன் கூறுவது – உலகின் உபாதானக் காரணம் பரமாணுக்கள்; அனுமானத்தால் கூறப்படும் ஈச்வரன் நிமித்த காரணம்; ஸம்ஸாரம் என்பது எல்லையற்றது; ஈச்வரனை வணங்குவதால், கல்லைப் போன்று மாறி, அதனால் சுக, துக்க, ஞானம் அழிவதே மோக்ஷம் ஆகும். பாசுபதம் என்னும் சைவர்கள் கூறுவது - இந்த உலகின் உபாதானக் காரணம் பரமாணுக்களே; ஆகமங்களில் கூறப்படுகின்ற சிவன் நிமித்த காரணம்; ஸம்ஸாரம் என்பது எல்லையற்றது; ஆகமங்கள் கூறுகின்ற கர்மங்களைச் செய்தபடி இருந்து, சிவனுடைய ஸாரூப்யத்தை அடைதலே மோக்ஷம் ஆகும்.

மூலம் – ஸாங்க்ய யோகிகள், "ப்ரக்ருதியே ஸ்வதந்த்ரமாய்க் கொண்டு ஜகத் காரணமாகிறது; அந்த ப்ரக்ருதியோடு ஆத்மாவுக்குண்டான அநாதி ஸம்பந்தம் ஸம்ஸாரம்; ப்ரக்ருதி புருஷ விவேகம் மோக்ஷம்" என்றார்கள். பாட்ட ப்ராபாகரர்கள், "நித்யராய், அநேகராய், ஸர்வகதராய் அநாதி கர்மத்தாலே ஸம்ஸரிக்கிறார்கள் ஆத்மாக்கள்; ஜகத்து ப்ரவாஹ ரூபேண நித்யம்; கர்மாபூர்வமே ஆத்மப்ராப்திரூப மோக்ஷ ஹேது; ஈச்வர ஸத்பாவம் இல்லை", என்றார்கள்.

விளக்கம் – ஸாங்க்யர் மற்றும் யோகியர்கள் கூறுவது - மூல ப்ரக்ருதியே எதனுடைய உதவியும் இன்றி இந்த உலகின் காரணமாக உள்ளது. மூல ப்ரக்ருதியுடன் ஆத்மாவிற்கு இருக்கின்ற எல்லையற்ற காலமாக இருந்து வரும் தொடர்பே ஸம்ஸாரத்திற்குக் காரணம் ஆகிறது. மூல ப்ரக்ருதி வேறு, புருஷன் வேறு என்னும் ஞானமே மோக்ஷம் ஆகும் – என்பதாகும். பாட்டர் மற்றும் ப்ராபாகர்கள் கூறுவது - என்றும் உள்ளவராக, பலராக, எங்கும் உள்ளவராக, எல்லையற்ற காலம் கர்மத்தால் பீடிக்கப்பட்டதால் ஆத்மாக்கள் ஸம்ஸாரத்தில் உள்ளனர். இந்த உலகம், நீரானது பெருகிக் கொண்டே இருப்பது போல், என்றும் உள்ளதாகும். கர்ம அபூர்வமே (அபூர்வம் என்றால் ஆத்மாக்கள் கர்மங்களை இயற்றும்போது, அதன் பலனாக, முன்பு இல்லாத ஏதோ ஒன்று தோன்றுவது) ஆத்மாவை

அடைய வைக்கும் மோக்ஷத்திற்குக் காரணம்; ஈச்வரன் என்று யாரும் இல்லை – என்பதாகும்.

மூலம் – மாயாவதி, "நிர்விசேஷ சிந்மாத்ரமே மாயாசபளமாய்க்கொண்டு ப்ரமிக்கை ஸம்ஸாரம்; தத் த்வமஸி இத்யாதி வாக்ய ஜந்ய ஜ்ஞாநத்தாலே அந்த ப்ரமம் போகை மோஷம்", என்றான். பாஸ்கரீயன், "அந்த ப்ரஹ்மந்தானே ஸத்யோபாதி மிச்ரமாய்க் கொண்டு ப்ரமிக்கை – ஸம்ஸாரம்; வர்ணாச்ரம தர்மோபேதமாய், வாக்யஜந்ய ஜ்ஞாந பூர்வகமாயுள்ள உபாஸநாத்மக ஜ்ஞாநத்தாலே உபாதி நசிக்கை – மோக்ஷம்", என்றான். யாதவப்ரகாசன், "அந்த ப்ரஹ்மந்தானே ஸத்யமான சிதசிதீச்வராத்மகமாய்க் கொண்டு ப்ரமிக்கிறது; அதுக்கு உண்டான பேதஜ்ஞாநம் ஸம்ஸாரம்; ஜ்ஞாந கர்ம ஸமுச்சயத்தினாலே பேத ஜ்ஞாநம் போகை மோக்ஷம்", என்றான். ப்ரஹ்மம் ஜகத்காரணமென்கிற வைதிக ஸித்தாந்தத்திற்காட்டில், ஏகாயநன் ப்ரஹ்மத்தைக் கதிபயசக்தி விசிஷ்டமாகக் கொண்டானத்தனை; அதுவே அவனுக்கு விசேஷம்.

விளக்கம் – மாயாவாதிகள் கூறுவது, "நிர்விசேஷ சிந்மாத்ரத்தை மாயா சபளமாய்க் கொண்டு மயங்குவது உலகின் இயல்பு" என்பதாகும். விசேஷம் என்றால் பேதம் ஆகும். இது ஸஜாதீய பேதம், விஜாதீய பேதம், ஸவகத பேதம் என்றாகும். ஸஜாதீயம் என்பது ஜீவ ப்ரஹ்ம வேறுபாடு; விஜாதீயம் என்பது அசித் ப்ரஹ்ம வேறுபாடு; ஸ்வகதம் என்பது ப்ரஹ்ம ஞான சக்தி வேறுபாடு என்பதாகும். நிர்விசேஷம் என்றால், இப்படியாக எந்த விதமான வேறுபாடுகளும் இல்லை என்று கருத்து. சிந்மாத்ரம் என்றால் ஸ்வயம் ப்ரகாசமாக உள்ள பரம்பொருள். மாயாசபளம் என்றால் மாயை கலப்பது ஆகும். தத் த்வம் அஸி – அது நீயாகவே உள்ளாய் - முதலான வாக்கியங்கள் மூலம் ஏற்படுகின்ற ஞானம் காரணமாக, இந்த மயக்கம் நீங்குவதே மோக்ஷம் ஆகும். பாஸ்கரீயன் கூறுவது - ப்ரஹ்மம் ஸத்ய உபாதி கலந்ததாக (உபாதி = தேஹம், இந்த்ரியம்) எண்ணி மயங்குதலே ஸம்ஸாரம் ஆகும். வர்ணாச்ரம தர்மங்களைச் செய்தபடி, தத்வம் அஸி போன்ற வரிகளின் மூலம் ஏற்பட்ட ஞானத்தை முன்னிட்டு, அந்த ஞானத்தையே உபாஸித்து, அதனால் உபாதி அழிவதே மோக்ஷம் ஆகும் – என்பதாகும். யாதவ ப்ரகாசன் கூறுவது – ப்ரஹ்மம் தானே ஸத்யமான சித் – அசித் – ஈச்வரன் என்ற உருவங்களைக் கொண்டு மயங்குகிறது. இப்படியாகப் பரம்பொருளுக்கு ஏற்பட்ட பேத ஞானமே ஸம்ஸாரத்தின் காரணம் ஆகும். ஞானம் மற்றும் கர்மங்கள் ஒன்று சேர்வதால் இந்தப் பேத ஞானம் நீங்குகிறது. இதுவே மோக்ஷம் ஆகும் – என்பதாகும். ஏகாயனன் என்பவன் பிராட்டியுடன் தொடர்பு இல்லாத நாராயணனே இந்த உலகின் காரணம் என்று விசேஷமாக கூறுகிறான்.

மூலம் - நம் தர்சநத்துக்குத் தத்வங்கள் மூன்று; அவையாவன – சித்தும், அசித்தும், ஈச்வரனும் ப்ரகாரப்ரகாரிகள் ஐக்யத்தாலே ஒன்றென்னலாய், ஸ்வரூப பேதத்தாலே பலவென்னலா யிருக்கும். அசித்தாகிறது – குணத்ரயாத்மகமாய், நித்யமாய், விபுவாய், ஸதத பரிணாமியாய், ஹேயதயா ஜ்ஞாதவ்யமாயிருக்கும். இப்படியிருக்கிற அசித்திலே போக்யதா புத்தி பண்ணி, ஸம்ஸாரத்தை த்ருடமாக்கிக் கொள்ள

வேணுமென்றிருக்குமவனுக்கும் ஸர்வேச்வரனை ஆச்ரயிக்கவேணும்; இது த்யாஜ்ய மென்னும் ப்ரதிபத்தியுண்டாய், இத்தைக் கழித்துக் கொள்ள வேணுமென்றிருக்குமவனுக்கு ஸர்வேச்வரனை ஆச்ரயிக்கவேணும். ஸம்ஸார பந்த ஸ்திதி மோக்ஷ ஹேது: என்னும் தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா மாமேவ யே ப்ரபத்யந்தே மாயா மேதாம் தரந்தி தே என்னும் சொல்லுகிறபடியே. "நான் பிணைத்த பிணை ஒருவராலவிழ்க்கப் போகாது; என்னையே கால்கட்டி அவிழ்த்துக் கொள்ளவேணும்" என்றானிறே. அது தன்னையே இவரும் "பொல்லாவாக்கையின் புணர்வினையறுக்கலறா சொல்லாய் யானுன்னைச் சார்வதோர் சூழ்ச்சி" என்றாரிறே. ஒரு குருவி பிணைத்த பிணை ஒருவரால் அவிழ்க்கப் போகிறதில்லை; ஸர்வ சக்தி கர்மாநுகுணமாகப் பிணைத்த பிணையை அவனையே கால் கட்டி அவிழ்த்துக் கொள்ளுமித்தனைகாண்"என்று திருநறையூரறையர் வார்த்தை. சேதநன் நித்யனாய், அணுவாய், ஜ்ஞாநாநந்த லக்ஷணனாய், ஜ்ஞாந குணகனாய், ஏகரூபனாய், பகவச்சேஷபூதனாயிருக்கும்.

விளக்கம் - நம்முடைய தரிசனத்திற்குத் தத்துவங்கள் மூன்றாகும். அவை – சித், அசித் மற்றும் ஈச்வரன் என்பதாகும். இங்கு ஒரு கேள்வி எழலாம் - அனைத்தும் ப்ரஹ்மமாகவே உள்ளன; பொருள் ஒன்றே, பல அல்ல என்றும் கூறும்போது மூன்று எனப்படுவது எப்படி? ப்ரகாரப்ரகாரிகள் ஐக்கியம் காரணமாக ஒன்று எனவும், ஸ்வரூப வேறுபாடுகளால் பலவும் ஆகும். அசித் என்பது மூன்று குணங்களுடன் கூடியதாக, எப்போதும் உள்ளதாக, எங்கும் உள்ளதாக, எப்போதும் மாற்றத்தை அடைந்தபடி உள்ளதாக, விடத்தக்கது என்று அறியக் கூடியதாக இருக்கும். இப்படியாக உள்ள அசித் பொருள்களில் இன்பம் உள்ளது என்று எண்ணி, ஸம்ஸாரத்தைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்று உறுதியாக உள்ளவன் கூட, ஸர்வேச்வரனையே பற்றவேண்டும். இது விடத்தக்கது என்னும் நினைவு காரணமாக, இவற்றைக் கழித்துக் கொள்ளவேண்டும் என்று இருப்பவன் கூட ஸர்வேச்வரனையே பற்ற வேண்டும். இதற்கான ப்ரமாணங்கள்:

- ச்வேதாஸ்வதர உபநிஷத் – ஸம்ஸார பந்த ஸ்திதி மோக்ஷ ஹேது: – ஸம்ஸாரத்தில் கட்டுப்படுவதற்கும், அதில் நிலைப்பதற்கும், அதில் இருந்து விடுபடுவதற்கும் காரணமாக ஸர்வேச்வரன் உள்ளான்.

- கீதை (7-14) – தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா மாமேவ யே ப்ரபத்யந்தே மாயா மேதாம் தரந்தி தே - இந்த ப்ரக்ருதி என்னுடைய குணங்களின் ரூபமாக என்னால் உருவாக்கப்பட்டது; இதனை யாரும் கடக்க இயலாது; என்னைச் சரணம் அடைந்தவர்கள் இதனைத் தாண்டுகின்றனர். எம்பெருமான், "நான் கட்டி வைத்த கட்டு என்பது யாராலும் அவிழ்க்க இயலாது. என்னையே கால் பிடித்து மட்டுமே அதனை அவிழ்த்துக் கொள்ள வேண்டும்", என்று மேலே உள்ள கீதையில் கூறினான். இதனையே ஆழ்வாரும் திருவாய்மொழியில் (3-2-3) - பொல்லாவாக்கையின் புணர்வினையறுக்கலறா சொல்லாய் யானுன்னைச் சார்வதோர் சூழ்ச்சி என்றது காண்க.

பிள்ளை திருநறையூரறையர், "ஒரு சாதாரண குருவி கட்டி வைத்தது அல்ல இந்தக் கட்டு. அதனால் இந்தக் கட்டை யாரும் எளிதாக அவிழ்க்க முயல்வதில்லை. இந்தக் கட்டு ஸர்வசக்தியும் படைத்த எம்பெருமானால், கர்மங்களுக்கு ஏற்பக் கட்டப்பட்டது. ஆக அவனையே கால் பிடித்து அவிழ்த்துக் கொள்ள வேண்டும்", என்றார். சேதனன் எனப்படும் சித் என்பது - என்றும் உள்ளதாக, அணு அளவே உள்ளதாக, ஞானம் மற்றும் ஆனந்தமயமானதாக, ஞானத்தையே குணமாகக் கொண்டதாக, மாற்றம் அற்றதாக, எம்பெருமானுக்கு எப்போதும் அடிமைப்பட்டதாக இருப்பதாகும்.

மூலம் - இப்படியிருக்கிற ஆத்மாவினுடைய வைலக்ஷண்யத்தை அநுஸந்தித்து ஜராமரண மோக்ஷாய என்கிறபடியே ஆத்மாநுபவமமமையுமென் றிருக்குமவனுக்கும், ஸர்வேச்வரனை உபாஸிக்கையும் அந்திமஸ்ம்ருதியும் வேணும்; ஆத்மாநுபவத்தை நெகிழ்ந்து ஸர்வேச்வரனுடைய குணாநுபவம் பண்ணவேணுமென்றிருக்குமவனுக்கும் அவன்றன் னையே உபாயமாகப் பற்றவேணும்.

விளக்கம் – இப்படியாக உள்ள ஆத்மாவின் உன்னதமான தன்மையையே எண்ணியபடி இருக்கவேண்டும். கீதை (7-29) – ஜராமரண மோக்ஷாய - கிழத்தன்மை, மரணம், மோக்ஷம் என்னும்படி ஆத்ம அனுபவம் அமையும் என்று உள்ளவன் - ஸர்வேச்வரனை உபாஸிக்கவேண்டும், உயிர் நீங்கும் அந்திம காலத்திலும் அவனுக்கு ஸர்வேச்வரனின் நினைவு இருத்தல் வேண்டும். ஆத்ம அனுபவத்தை நெகிழ்ந்து ஸர்வேச்வரனின் குணங்களை அனுபவிக்க வேண்டும் என்று எண்ணுபவனும் அந்த ஸர்வேச்வரனையே உபாயமாகப் பற்றவேண்டும்.

மூலம் - இவற்றிலொன்றை அறியிலும் "ஒண்டாமரையாள் வேள்வனொருவனையே நோக்குமுணர்வு" என்கிறபடியே ஸர்வேச்வரனளவிலே பர்யவஸித்தன்றி நில்லாது. ஜ்ஞாநமாகில் ஸ்ரீய:பதியைப் பற்றியல்லது நில்லாது. பகவத்வ்யதிரிக்த விஷயங்களைப் பற்றிப் பிறக்கும் ஜ்ஞாநமெல்லாம் அஜ்ஞாநகல்பம்; தத்ஜ்ஞாநமஜ்ஞாநமநோந்யதுக்தம், தத கர்ம யந்ந பந்தாய ஸா வித்யா யா விமுக்தயே ஆயாஸாயாபரம் கர்ம வித்யாந்யா சில்பநைபுணம் என்கிறபடியே பகவத் விஷயத்தையொழியக் கற்றவை எல்லாம் செருப்புக்குத் தக்கற்றவோபாதி. இப்படியிருக்கிற சிதசிதீச்வரர்கள் ஸ்வரூப ஸ்வபாவங்களை அறியக்கடவாரொருவருமில்லை; இவற்றையுள்ளபடியறிவாரில் தலைவராயிற்று இவ்வாழ்வார்.

விளக்கம் - ஸர்வேச்வரனின் ஸ்வரூபத்தைத் தனியாக அருளிச் செய்யாமல், இப்படி சித் மற்றும் அசித் ஆகியவற்றுடன் கூறியது ஏன்? இவற்றில் ஒன்றை அறிந்தாலும், அந்த அறிவானது முதல் திருவந்தாதி (67) - ஒண்டாமரையாள் வேள்வனொருவனையே நோக்குமுணர்வு – என்னும்படி ஸர்வேச்வரனிடம் சென்று முடிந்து அல்லாது, வேறு

எங்கும் நிற்காது. ஞானம் என்பது பெரியபிராட்டியின் நாயகனைப் பற்றியது அல்லாமல், தனியாக எம்பெருமானைப் பற்றியது மட்டும் அல்ல. எம்பெருமானைப் பற்றி ஞானம் அல்லாமல் மற்ற விஷயங்களைப் பற்றிய ஞானம் அனைத்தும் அஞ்ஞானமே ஆகும். இதனை ப்ரஹ்லாத சரிதத்தில் கூறப்பட்ட வசனம் மூலம் அருளிச்செய்தார். ஸ்ரீ விஷ்ணுபுராணம் (6-5-87) – தத்ஜ்ஞாநமஜ்ஞாநமநோந்யதுக்தம், தத கர்ம யந்ந பந்தாய ஸா வித்யா யா விமுக்தயே ஆயாஸாயாபரம் கர்ம வித்யாந்யா சில்பநைபுணம் – ஸம்ஸார பந்தத்தை ஏற்படுத்தாத கர்மமே கர்மம்; மோக்ஷத்தை ஏற்படுத்தும் ஞானமே ஞானம்; மற்ற கர்மங்கள் துக்கத்தை உண்டாக்கும்; மற்ற ஞானங்கள் கர்மங்களின் மேன்மையை மட்டுமே காட்டும் - என்றது. ஆகவே பகவத் விஷயத்தைத் தவிர ஒருவன் கற்றவை அனைத்தும் கர்மங்களின் மேன்மையை மட்டுமே உணர்த்துவதாகும். இப்படியாக உள்ள சித், அசித் மற்றும் ஈச்வரன் ஆகியவற்றின் ஸ்வரூபம் மற்றும் ஸ்வபாவம் ஆகியவற்றை உள்ளது உள்ளபடி அறிந்தவர்களோ அல்லது அறியக்கூடியவர்களோ யாரும் இல்லை. முதலாழ்வார்கள் போன்றவர்கள் இவற்றை அறிவார்களே என்று கேட்கலாம். இப்படி இவற்றை உள்ளது உள்ளபடி அறிபவர்களின் தலைவராக நம்மாழ்வார் உள்ளார் என்று கருத்து.

மூலம் - இவர்க்கு ஒப்புச்சொல்லாவார் ஸம்ஸாரிகளிலுமில்லை, நித்யஸூரிக ளிலுமில்லை. தம்படி தாமுமறியார்; ஸம்ஸாரிகளுமறியார்கள்; ஸர்வேச்வரனு மறியான். ஒரு ஸாதநத்தை அநுஷ்டித்து இந்த நன்மை நமக்கு வருமென்றிருக்க வந்ததல்லா மையாலே தாமுமறியார்; இவரைப்போலே இருப்பாரை ஸம்ஸாரத்தில் காணாமையாலே ஸம்ஸாரிகளுமறியார்கள்; தன் குணங்கள் புறம்பொரு வ்யக்தியில் இப்படிப் பலிக்கக் காணாமையாலே ஸர்வேச்வரனுமறியான். ஸம்ஸாரிகளில் வ்யாவ்ருத்தரானவோபாதி நித்யஸூரிகளிலும் வ்யாவ்ருத்தர்.

விளக்கம் - தத்வத்ரயம் என்ற இவற்றின் உண்மையான ஞானம் காரணமாக ஸர்வேச்வரனின் அனுபவம் என்ற ஆனந்த வெள்ளத்தில் மூழ்கிய இந்த ஆழ்வாருக்கு ஈடாக ஸம்ஸாரிகளில் யாரும் இல்லை; நித்யசூரிகளிலும் யாரும் இல்லை. ஏதோ ஒரு சாதனம் மூலம் இந்த நன்மை உண்டாகும் என்று எண்ணி அதனைச் செய்பவர் போன்று இவர் இல்லாததால், தன்னைப் பற்றித் தாமும் அறியார்; ஸம்ஸாரிகளும் அறிய மாட்டார்கள்; தனது குணங்களுடன் கூடிய இப்படிப்பட்ட ஒருவரைப் படைத்தோம் என்று இதுவரை அறியாத ஸர்வேச்வரனும் இவரை உள்ளபடி அறியமாட்டான். ஸம்ஸாரிகளில் இவர் எப்படி வேறுபட்டுள்ளாரோ, அது போன்று நித்யஸூரிகளிலும் வேறுபட்டவர் ஆவார்.

மூலம் - "அடியார் நிலாகின்ற வைகுந்தமோ வையமோ நும் நிலையிடம்" என்று உபய விபூதியிலுமடங்காதிருப்பர். "விண்ணுளாரிலும் சீரியார்" என்னும்படியாயிற்று இவர் நிலை. பகவதநுபவத்துக்குப் பாங்கான தேசத்திலே இருந்து அநுபவிக்கிறவர்களைப்

போலன்றே, அவ்வநுபவத்துக்கு மேட்டு நிலமான ஸம்ஸாரத்திலே இருந்து அநுபவிக்கிறவர்கள். கலௌ ஜகத்பதிம் விஷ்ணும் ஸர்வஸ்ரஷ்டாரமீச்வரம் நார்ச்சயிஷ்யந்தி மைத்ரேய பாஷண்டோ பஹதா ஜநா: என்கிறபடியே கலிகாலத்திலே பகவத்ருசி ஒருவர்க்கும் பிறக்கிறதல்ல. துர்லபோ மாநுஷோ தேஹோ தேஹிதாம் க்ஷணபங்குர: தத்ராபி துர்லபம் மந்யே வைகுண்ட ப்ரியதர்சநம் என்கிறபடியே முதல் தன்னிலே மநுஷ்யசரீரம் கிடையாது; பெற்றாலும் ஸர்வேச்வரன் ப்ராப்யமென்று அவனைப் பெறுகைக்கு அநுரூபமாயிருப்பதொரு உபாயத்தைப் பரிக்ரஹிக்க வேணுமென்னும் ருசி ஒருவருக்கும் பிறவாது; இதுண்டாகிலுமுண்டாம்; பாகவத சேஷத்வம் உண்டாகாதென்னுமிடம் சொல்ல வேண்டாவிறே. மநுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு கச்சித்யததி ஸித்தயே! யததாமபி ஸித்தாநாம் கச்சிந்மாம் வேத்தி தத்வத: என்று ஸர்வேச்வரன் தானுமருளிச் செய்தான்.

விளக்கம் – நித்யசூரிகளில் இவர் வேறுபட்டவர் ஆவார் என்று கூறும்போதே ஸம்ஸாரிகளிலும் வேறுபட்டவர் ஆவார் என்பது கிம்புநர் ந்யாயம் மூலம் விளங்குகிறது. ஆயினும் கடந்த பத்தியில் கூறியது போன்று ஏன் தனித்துக் கூறவேண்டும்? இதனை ஓர் உதாரணம் மூலம் அருளிச் செய்கிறார். திருவிருத்தம் (75) - அடியார் நிலாகின்ற வைகுந்தமோ வையமோ நும் நிலையிடம் - என்னும்படி உபயவிபூதியில் இவர் அடங்காதவர் ஆவார். திருவிருத்தம் (79) - விண்ணுளாரிலும் சீரியார் – என்னும்படியாக இவரது நிலை உள்ளது. அதாவது லீலா விபூதியில் இவர் உள்ளபோது, உபயவிபூதியில் இவர் அடங்காதவர் என்பது எப்படி என்பதைக் கடந்த திருவிருத்த வரி உணர்த்துகிறது. எம்பெருமானுடைய அனுபவம் கிட்டுவதற்கு ஏற்ற இடமாக உள்ள பரமபதத்தில் நின்று அனுபவிப்பவர்கள் போன்று அல்லாமல், அந்த அனுபவம் எளிதாகக் கிட்ட இயலாமல் உள்ள ஸம்ஸாரத்தில் நின்று அனுபவிப்பவர்கள் என்று மிகவும் அரிதே. ஸம்ஸாரம் என்பது இடம் காரணமாக மட்டுமே எம்பெருமானின் அனுபவத்திற்கு ஏற்ற இடமாக இல்லாமல், காலத்தாலும் ஏற்ற இடமாக இல்லை என்பதை அருளிச்செய்கிறார். ஸ்ரீவிஷ்ணு புராணம் – கலௌ ஜகத்பதிம் விஷ்ணும் ஸர்வஸ்ரஷ்டாரமீச்வரம் நார்ச்சயிஷ்யந்தி மைத்ரேய பாஷண்டோ பஹதா ஜநா: - மைத்ரேயரே! கலிகாலத்தில் உலகின் தலைவனாகவும், விஷ்ணு என்று போற்றப்படுபவனும், அனைத்தையும் படைத்தவனும், ஸர்வேச்வரனும் ஆகிய எம்பெருமானைப் பாஷாண்டிகளால் திசை திருப்பப்பட்ட மக்கள் வணங்குவதில்லை - என்றது. இதன்படி, கலிகாலத்தில் பகவத் ருசி யாருக்கும் எளிதாகப் பிறப்பதில்லை. ஸ்ரீமத்பாகவதம் – துர்லபோ மாநுஷோ தேஹோ தேஹிதாம் க்ஷணபங்குர: தத்ராபி துர்லபம் மந்யே வைகுண்ட ப்ரியதர்சநம் – மனித சரீரம் கிடைப்பது மிகவும் அரிது; அப்படியே கிடைத்தாலும், அது உடனே அழிந்துவிடும் தன்மை கொண்டது; சில காலம் அழியாமல் இருந்தாலும், அந்தக் காலத்தில் ஸ்ரீவைகுண்டநாதனே நமக்கு ஏற்றவன் என்ற ஞானம் பிறப்பது அரிது - என்று கூறும்படி மனிதசரீரம் என்பது எளிதாகக் கிட்டுவதில்லை. அப்படியே கிட்டினாலும் ஸர்வேச்வரனே அடையத்தக்கவன் என்று எண்ணி, அவனைப் பெறுவதற்கு ஏற்றதான உபாயத்தைப் பற்றவேண்டும் என்ற ஆசை பிறப்பது அரிது; அப்படியே அந்த ஆசை பிறந்தாலும்,

அவனது அடியார்களுக்கு அடிமையாக இருக்கும் எண்ணம் ஏற்படாது என்று சொல்லவும் வேண்டுமா? இதனை உணர்ந்தே கீதையில் (7-3) - மநுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு கச்சித்யததி ஸித்தயே! யததாமபி ஸித்தாநாம் கச்சிந்மாம் வேத்தி தத்வத: - ஆயிரம் மனிதர்களில் ஒருவன் மட்டுமே ஸித்தி அடைய முயற்சிக்கிறான்; அப்படி முயல்கின்ற ஆயிரம் ஞானிகளில் ஒருவன் மட்டுமே என்னை அறிகிறான் – என்றான்.

மூலம் - இப்படியிருக்கிற ஸம்ஸாரத்திலே ஆழ்வார் வந்தவதீர்ணரான இது சேதநர் பண்ணின ஸுக்ருத பலமாயிற்று. ததோகிலஜகத்பத்மபோதாயாச்யுதபாநுநா என்கிறபடியே ஸர்வேச்வரன் வந்து அவதரித்தாப் போலேயாயிற்று, ஆழ்வார் வந்தவதரித்தபடி. ஆதித்யன் பாஹ்யமான அந்தகாரத்தைப் போக்கும்; இவன் ஆந்தரமான அந்தகாரத்தைப் போக்கிக் கொண்டாயிருற்றிருப்பது. அப்படியே இவரும் "ஊரும் நாடும் உலகமும் தன்னைப்போல்", "மரங்களுமிரங்கும் வகை" என்றும், பாலேய் தமிழரிசைகாரர் பத்தர்பரவும்படியாயும், "கேட்டாரார் வானவர்கள்" என்றும், "பண்ணார் பாடலின்கவிகள் யானாய்த் தானைத் தான் பாடித்தென்னாவென்னும் என்னம்மான்" என்னும்படியே தம்முடைய நன்மை எங்குமுண்டான எல்லார்க்கும் உண்டாம்படி பண்ணிக் கொண்டாயிற்றிருப்பது. ஹஸிதம் பாஷிதம் சைவ கதிர்யா யச்ச சேஷ்டிதம் தத் தர்மவீர்யேண யதாவத் ஸம்ப்ர பச்யதி என்கிறபடியே ப்ரஹ்மாவின் ப்ரஸாதத்தாலே ஸ்ரீவால்மீகி பகவான் ஸர்வத்தையும் ஸாக்ஷாத்கரித்தாப்போலே இவரும் பகவத் ப்ரஸாதத்தாலே ஸாக்ஷாத் க்ருதமான பகவத் ஸ்வரூபரூபகுண விபூதிகளை யுடையராயிருப்பர்.

விளக்கம் – இப்படியாக உள்ள ஸம்ஸாரத்தில் ஆழ்வார் அவதரித்ததற்கு காரணம் என்ன என்றால் - சேதனர்கள் செய்த நன்மை என்றே ஆகிறது. ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-3-2) - ததோகிலஜகத்பத்மபோதாயாச்யுதபாநுநா – உலகம் என்ற தாமரையை மலரச் செய்வதற்காகக் கண்ணன் என்னும் சூரியன் அவதரித்தான் – என்னும்படி ஸர்வேச்வரனே வந்து அவதரித்தது போல் ஆழ்வார் வந்து அவதரித்தார். அப்படி என்றால் சூரியன் வெளியில் உள்ள இருளை நீக்குவான்; எம்பெருமான் உள்ளே இருக்கின்ற இருளைப் போக்குவான். இது போன்று ஆழ்வாரும் திருவாய்மொழி (6-7-2) - ஊரும் நாடும் உலகமும் தன்னைப்போல் – என்றும், (6-5-9) – மரங்களுமிரங்கும் வகை – என்றும், (1-5-11) – பாலேய் தமிழரிசைகாரர் - என்றும், (10-6-11) – கேட்டாரார் வானவர்கள் - என்றும், (10-7-5) - பண்ணார் பாடலின்கவிகள்யானாய்த் தானைத் தான் பாடித்தென்னா வென்னும் என்னம்மான் - என்னும்படி தனக்கு உண்டான நன்மைகள், எங்கும் உள்ள அனைவருக்கும் உண்டாகும்படிச் செய்து கொண்டுள்ளார். கொண்டாயிற்றிருப்பது என்று நிகழ்காலத்தில் கூறியதன் மூலம், இன்னமும் ஆழ்வார் நம்மிடையே நன்மையைச் செய்தபடி உள்ளார் என்றாகும். இவர் தமக்கு ஏற்பட்ட நன்மையை அனைவருக்கும் உண்டாக்குவதற்குக் காரணம் என்ன என்பதை அருளிச்செய்கிறார். இராமாயணம் (பாலகாண்டம்) – ஹஸிதம் பாஷிதம் சைவ கதிர்யா யச்ச சேஷ்டிதம் தத் தர்மவீர்யேண யதாவத் ஸம்ப்ர பச்யதி – இராமனுடைய புன்னகை, பேச்சு, நடை, செயல்கள்

ஆகியவற்றை என்னுடைய ஸங்கல்பம் மூலம் உனக்குக் கிட்டிய தவ வலிமையால் அறிவாய் என்று நான்முகனின் அருளால் வால்மீகி முனிவர், இராமனைப் பற்றி அனைத்தும் அறிந்தார். இது போன்று ஆழ்வாரும் எம்பெருமானின் கடாக்ஷத்தால் பகவானின் ஸ்வரூபம், ரூபம், குணம், விபூதிகள் ஆகியவற்றை நேரடியாகவே அறிந்து கொண்டார். அடுத்து இவருக்குப் பலனை எதிர்பராத காரணத்தினால் கிட்டிய நன்மையை அருளிச் செய்கிறார்.

மூலம் - ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம் - ஐச்வர்யம், ஆத்மலாபம், ஏதேனுமோரு புருஷார்த்தமாகவுமாம் நம் பக்கலிலே கொள்ளுமவர்கள் உதாரர், ஜ்ஞாநியானவன் எனக்கு தாரகன் என்று ஸர்வேச்வரன் அருளிச்செய்த ஜ்ஞாநிகளுக்கு அக்ரேஸரரா யிருப்பர்.

விளக்கம் – கீதை (7-18) - ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம் – என்னும்படி ஐச்வர்யம், ஆத்மலாபம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைப் புருஷார்த்தமாக நம்பக்கல் கொள்பவர்கள் உதாரர், ஞானி எனப்படுவான்; அவன் என்னையே தாங்கி நிற்பவன் - என்று ஸர்வேச்வரன் அருளிச்செய்தபடி ஞானிகளில் முதன்மையானவராக இவர் உள்ளார்.

மூலம் - பால்யாத் ப்ரப்ருதி ஸுஸ்நிக்தோ லக்ஷ்மணோ லக்ஷ்மிவர்த்தந: என்று பால்யம் தொடங்கி பெருமாள் திருத்தொட்டிலோடு அணையத் திருத்தொட்டில் இடாதபோது பள்ளி கொள்ளாத இளையபெருமாளைப் போலே இவரும் பருவம் நிரம்புவதற்கு முன்பே பகவத்குணைக தாரகராயிருப்பர். "அறியாக் காலத்துள்ளே அடிமைக்கண் அன்பு செய்வித்து" என்றும், "முலையோ முழுமுற்றும் போந்தில பெருமான் மலையோ திருவேங்கடமென்று கற்கின்ற வாசகம்" என்றும் சொல்லுகிறபடியே, ந ச ஸீதா த்வயா ஹீநா ந சாஹமபி ராகவ முஹூர்த்தமபி ஜீவாவோ ஜலாந்மத்ஸ்யா விவோத்த்ருதௌ "உம்மை ஒழிந்தவன்று பிராட்டியுமில்லை, அடியேனுமில்லை, ஜீவித்தோமோ, முஹூர்த்தம்; என்போலே என்றால், ஜலாதுத்த்ருதமான மத்ஸ்யம் நீர் நசையறுமளவும் ஜீவிக்குமாபோலே நீர் நிறுத்திப் போகிறோமென்கிற வார்த்தை உம்முடைய திருவுள்ளத்திலே உண்டென்றறியுமளவுங்காணும் நாங்கள் ஜீவிப்பது" என்றாரிறே.

விளக்கம் – அடுத்து பக்தி, ஏகதாரகத்வம், வைராக்யம், அனைத்து விதமான பந்துத்வம் மற்றும் கைங்கர்யம் கிட்டுதல் ஆகியவற்றுக்கு இவருக்கும் லக்ஷ்மணனுக்கும் உள்ள ஒற்றுமையை அருளிச்செய்கிறார். இராமாயணம் - பால்யாத் ப்ரப்ருதி ஸுஸ்நிக்தோ லக்ஷ்மணோ லக்ஷ்மிவர்த்தந: - இளமைக் காலம் தொடங்கி லக்ஷ்மணன் மஹாலக்ஷ்மி வாசம் செய்கின்ற இராமனுடன் பரம் ஸ்நேகிதனாக உள்ளான் – என்னும்படி, குழந்தைப் பருவம் தொடங்கியே இராமனின் தொட்டிலின் அருகில் தன்னுடைய தொட்டில் வைக்கப்படாமல் இருந்தால் லக்ஷ்மணன் தூங்கவே மாட்டான். அது போன்று இவரும் பருவம் நிரம்புவதற்கு முன்பாகவே பகவானுடைய குணங்களையே தன்னைத் தாங்கி நிற்கும் வஸ்துக்களாகக் கொண்டார். இதனைத் திருவாய்மொழி (2-3-3) – அறியாக்

காலத்துள்ளே அடிமைக்கண் அன்பு செய்வித்து – என்றும், திருவிருத்தம் (60) – முலையோ முழுமுற்றும் போந்தில பெருமான் மலையோ திருவேங்கடமென்று கற்கின்ற வாசகம் - என்றும் கூறுவதன் மூலம் காணலாம். இராமாயணம் – ந ச ஸீதா த்வயா ஹீநா ந சாஹமபி ராகவ முஹூர்த்தமபி ஜீவாவோ ஜலாந்மத்ஸ்யா விவோத்த்ருதௌ - தண்ணீரில் இருந்து வெளிவந்த மீன், அதன் மீது உள்ள தண்ணீர் காயும்வரை மட்டுமே பிழைக்கும்; அது போன்று, இராமா! நீ எங்களை அயோத்தியிலேயே விட்டுச் செல்ல போகிறாய் என்று உன்னுடைய மனதில் உள்ளவற்றை வார்த்தையால் கூறும்வரை மட்டுமே நாங்கள் பிழைத்து இருப்போம்; நீ இங்கிருந்து மறைந்தவுடன் சீதையும் இருக்க மாட்டாள், நானும் இருக்கமாட்டேன்; அப்படியும் பிழைத்தால் ஒரு முஹூர்த்தம் மட்டுமே உயிருடன் இருப்போம்", என்று லக்ஷ்மணன் கூறினான்

மூலம் - அத்தலையில் நினைவாலேயிறே இத்தலை ஜீவிப்பது; "எத்தேவர் வாலாட்டு மெவ்வாறு செய்கையுமப்போதொழியும்" என்கிறபடியே அவன் நினைவில்லாதவன்று இவையுமில்லையிறே. அப்படியே இவரும் "நின்னலாலிலேன் காண்" என்றிருப்பா ரொருவர்.

விளக்கம் - எம்பெருமானின் நினைவால் அல்லவோ உயிர்கள் பிழைத்து நிற்கிறது? நான்முகன் திருவந்தாதி (38) - எத்தேவர் வாலாட்டுமெவ்வாறு செய்கையுமப் போதொழியும் – என்னும்படி அவனுடைய நினைவில்லை என்றால் இவை ஏதும் இல்லை. இது போன்றே இவரும், திருவாய்மொழி (2-3-7) - நின்னலாலிலேன் காண் – என்னும்படி நிரதிசய போக்யனாக உள்ள உன்னை ஒழிந்தால் எனக்கு வாழ்வில்லை என்று இருப்பார்.

மூலம் - ந தேவே லோகாக்ரமணம் நாமரத்வமஹம் வ்ருணே ஐச்வர்யம் வாபி லோகநாம் காமயே ந த்வயாவிநா - வானவர் நாடு என்கிற பரமபதம், ஆத்மலாபம், லோகாநாமைச்வர்யம் இவையித்தனையும் உமக்குப் புறம்பாய் வருமன்று வேண்டேன் என்ற இளையபெருமாளைப்போலே, இவரும் "திருவொடுமருவிய இயற்கை மாயாப் பெருவிறலுலகம் மூன்றினொரு நல்வீடு பெறினுங் கொள்வதெண்ணுமோ?" என்றும், "எம்மா வீட்டுத் திறமும் செப்பம்" என்றும், "பாவியேனைப் பல நீ காட்டிப் படுப்பாயோ" என்றும் இதர புருஷார்த்த ப்ரஸ்தாவத்திலே வெருவும் ஸ்வபாவருமாயிருப்பர். அஹம் தாவந்மஹாராஜே பித்ருத்வம் நோபலக்ஷயே ப்ராதா பர்த்தா ச பந்துச்ச பிதா ச மம ராகவ: என்று பெருமாளையே எல்லாவுறவுமாகப் பற்றின இளையபெருமாளைப் போலே, இவரும் "சேலேய் கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும் மேலாத் தாய் தந்தையுமவரே" என்று பகவதைகாந்த்யஸீமையாயிருப்பர்.

விளக்கம் - அடுத்து வைராக்யத்தைப் பற்றி அருளிச்செய்கிறார். இராமாயணம் – ந தேவே லோகாக்ரமணம் நாமரத்வமஹம் வ்ருணே ஐச்வர்யம் வாபி லோகநாம் காமயே ந த்வயாவிநா – வானவர் நாடு என்னும் பரமபதம், ஆத்மலாபம், உலகவிஷயங்கள் என்னும்

செல்வம் ஆகியவை உனக்குப் புறம்பாக வரும் என்பதால் அதனை நான் வேண்டமாட்டேன் – என்று இலட்சுமணன் கூறினான். இது போன்று ஆழ்வாரும் திருவாசிரியம் (2) – திருவொடுமருவிய இயற்கை மாயாப் பெருவிறலுலகம் மூன்றினொரு நல்வீடு பெறினுங் கொள்வதெண்ணுமோ – என்றும், திருவாய்மொழி (2-9-1) - எம்மா வீட்டுத் திறமும் செப்பம் - என்றும், திருவாய்மொழி (6-9-9) - பாவியேனைப் பல நீ காட்டிப் படுப்பாயோ - என்றும் மற்ற புருஷார்த்தங்களைப் பற்றிப் பேசுகையில் மிகவும் அச்சத்துடன் உள்ளவராக இருப்பார் (எம்மா வீடு என்பதில் ஐச்வர்ய கைவல்யங்களை காண்பித்து, அவற்றை நீக்கவல்லவனாகிய நீ அதனைச் செய்யாமல், பாவியான என்னை முடிக்க நினைக்கிறாயோ என்று கூறப்பட்டது). அடுத்து ஸர்வ பந்துத்வம் கூறப்படுகிறது. இராமயணம் – அஹம் தாவந்மஹாராஜே பித்ருத்வம் நோபலக்ஷயே ப்ராதா பர்த்தா ச பந்துச்ச பிதா ச மம ராகவ: – நான் தசரதனிடம் தந்தை முறையைக் காணவில்லை; என்னுடைய அண்ணனாகவும், ஸ்வாமியாகவும், பந்துவாகவும், தகப்பனாகவும் இராமனே உள்ளான் - என்று இராமனையே அனைத்துவிதமான உறவுமாக இலட்சுமணன் பற்றினான். இது போன்று ஆழ்வாரும் (5-1-8) - சேலேய் கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும் மேலாத் தாய் தந்தையுமவரே – மீன் போன்ற கண்கள் கொண்ட பெண்களும், செல்வமும், சிறந்த புத்திரர்களும், உயர்ந்த தாய்தந்தையரும் அவனை அண்டிய பிறகு அவனே ஆவான் - என்று எம்பெருமானே அடையத்தக்கவன் என்று உறுதியுடன் இவர் உள்ளார்.

மூலம் - அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதஸ் ஸ்வபதச்ச தே பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா கிரி ஸாநுஷு ரம்ஸ்யதே என்று இளையபெருமாள் ஸர்வவித கைங்கர்யங்களும் செய்தல்லது தரியாதாப்போலே இவரும் "ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்யவேண்டும்" என்று எல்லாவடிமைகளும் செய்தல்லது தரியாத தன்மையராயிருப்பர். விஸ்தரணோத்மநோ யோகம் விபூதிஞ்ச ஜநார்த்தந, ந ததர்ப்ப ஸமாயாந்தம் பச்யமாநோ நராதிப: என்றும் சொல்லுகிற அர்ஜுந தசராதிகளைப்போலே கால தத்வமுள்ளதனையும் அநுபவியா நின்றாலும் "அப்பொழு தைக்கப்பொழுதென்னாராவமுதம்" என்னும்படி மேன்மேலெனப் பெருகிவருகிற ஆராத காதலையுடையராயிருப்பர்.

விளக்கம் - அடுத்து கைங்கர்ய ப்ராப்தியை அருளிச்செய்கிறார். இராமாயணம் – அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதஸ் ஸ்வபதச்ச தே பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா கிரி ஸாநுஷு ரம்ஸ்யதே – இராமா! நான் இரவுபகல் என்று பாராமல் எப்போதும் அனைத்து அடிமைகளையும் உனக்குச் செய்வேன்; நீ சீதையுடன் மலை அடிவாரங்களில் இன்பமாக இருப்பாயாக - என்று இலட்சுமணன் அனைத்துவிதமான கைங்கர்யங்களும் செய்யாமல் உயிர் தரிக்க மாட்டான். இது போன்றே இவரும் (3-3-1) - ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்யவேண்டும் – என்னும்படி எம்பெருமானுக்கு அனைத்துக் காலத்திலும், எந்த இடத்திலும், எந்த நிலையிலும் பிரியாமல் நின்று அனைத்துவிதமான கைங்கர்யங்களும் செய்தால் மட்டுமே உயிர் தரிப்பார்.

எம்பெருமானின் அனுபவம் எத்தனை கிட்டினாலும் மனநிறைவு அடையாத நிலையை அருளிச் செய்கிறார். கீதை (10-18) - விஸ்தரணோத்மநோ யோகம் விபூதிஞ்ச ஜநார்த்தந – ஜநார்த்தநா! உன்னுடைய திருக்கல்யாண குணங்களை மீண்டும் விரிவாக உரைப்பாயாக – என்று அர்ஜுனனும், இராமாயணம் – ந ததர்ப்ப ஸமாயாந்தம் பச்யமாநோ நராதிப: – அருகில் உள்ள இராமனை எப்போதும் பார்த்துக் கொண்டே இருந்தாலும் தசரதனுக்கு திருப்தி உண்டாகவில்லை - என்று தசரதனும் இருந்தார்கள். இவர்கள் போன்று, கால தத்வம் என்பது உள்ளவரை எம்பெருமானை அநுபவித்தாலும், திருவாய்மொழி (2-5-4) அப்பொழுதைக்கப்பொழுதென்னாராவமுதம் – என்னும்படி மேலும்மேலும் பெருகி வழிகின்ற ஆராத காதலை (காதல் = பக்தி, ஆசை) உடையவராக இருப்பார்.

மூலம் - தர்மாத்மா ஸத்யசௌசாதி குணாநாமாகரஸ் ததா உபமாநமசேஷாணாம் ஸாதூநாம் யஸ்ஸதா: அபவத் என்று, ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானை, ஸாதுக்களுக்கெல்லாம் உபமாந பூமியாகச் சொல்லுகிறார்போலே எல்லார்க்கும் தம்முடைய ஓரோவகைகளாலே உபமாந பூமியாயிருப்பர். அஹமஸ்யாவரோ ப்ராதா குணைர் தாஸ்யமுபாகத: என்று குணங்களுக்குத் தோற்று அடிமை புக்க இளையபெருமாளைப் போலே இவரும் பகவத் குணங்களிலே தோற்று "உயர்வறவுயர்நலமுடையவன் – துயரறு சுடரடி தொழுதெழென் மனனே" என்றார். இப்படி பகவத் ஸ்வரூப ரூப குண விபூதிகளை விசத விசததர விசததமமாக அநுபவித்து, அது உள்ளடங்காமை வழிந்து புறப்பட்ட சொல்லாயிற்று இப்ரபந்தங்கள்.

விளக்கம் - இதற்கு முன்பு இவருக்கு ஈடு யாரும் இல்லை என்று கூறிவிட்டு மேலே கூறியபடி பலவிதமானவர்களை இவருக்கு ஒப்பாகக் கூறலாமோ என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார். ஸ்ரீவிஷ்ணுபுராணம் - தர்மாத்மா ஸத்யசௌசாதி குணாநாமாகரஸ் ததா உபமாநமசேஷாணாம் ஸாதூநாம் யஸ்ஸதா: அபவத் - தர்மத்தின் உருவமாகவும், சத்யம் மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றின் பாத்திரமாகவும், சாதுக்களுக்கு உவமையாகக் கூறத்தக்கவனாகவும் ப்ரஹ்லாதன் இருந்தான் - என்று கூறியது. ஆக சாதுக்கள் அனைவருக்கும் உவமையாக ப்ரஹ்லாதனைக் கூறுவது போன்று, ஆழ்வாரின் ஒவ்வொரு தன்மைக்கும் பலருக்கு உவமை கூறும்படியாக இருப்பார் என்று கருத்து. இராமாயணம் – அஹமஸ்யாவரோ ப்ராதா குணைர் தாஸ்யமுபாகத: – நான் அவருக்குப் பின்னே பிறந்த தம்பி, அவருடைய குணங்களால் அடிமைப்பட்டேன் - என்று இராமனின் குணங்களுக்குத் தோற்றுப்போய் அவனுக்கு அடிமைப்பட்ட இலட்சுமணன் போன்று, இவரும் எம்பெருமானின் குணங்களிலே தோற்றுப் போனார். இதனால் திருவாய்மொழியில் (1-1-1) – உயர்வறவுயர்நலமுடையவன் துயரறு சுடரடி தொழுதெழென் மனனே – என்றார். இப்படியாக எம்பெருமானின் ஸ்வரூபம், ரூபம், குணங்கள் மற்றும் விபூதிகள் ஆகியவற்றை விசத விசததர விசததமமாக அனுபவித்தார் (விசதம் என்றால் பரபக்தி, அது எம்பெருமானுடன் சேர்கையில் இன்பமும் அவனை விட்டுப் பிரியும்போது துன்பமும் இருவருக்கும் ஏற்படுவது; விசததர என்றால் பரஜ்ஞானம் என்பதாகும். பரஜ்ஞானம் என்றால் எம்பெருமானைத் தெளிவாக

அறிவதாகும். விசததமம் என்றால் பரமபக்தி என்பதாகும்). இந்த அனுபவங்கள் ஆழ்வாருக்கு மிகுதியாக உண்டாகி, அது அவரது உள்ளத்தில் அடங்காமல், பொங்கி வழிந்துப் புறப்பட்டுச் சொற்களாக இந்த பிரபந்தத்தில் வெளிவந்தது.

மூலம் - இங்ஙனேயாகில் இப்ரபந்தங்களுக்குப் பாட்டும், ஸங்க்யையும், பாட்டுக்கு நாலடியாகையும், அக்ஷரங்கள் ஸமமாகையும், "எழுத்தசை சீர் பந்தமடி தொடை பாவினம்" என்றாப்போலே சொல்லுகிற ப்ரபந்த லக்ஷணங்கள் சேர விழுந்தபடி எங்ஙனேயென்னில் - சோகவேகத்தாலே பிறந்த மாநிஷாத இத்யாதி ச்லோகமானது மச்சந்தாதேவ என்கிற ச்லோகத்தின்படியே அத்திக்காயிலறுமான் போலே பகவத் விபூதியில் ஏதேசஸ்தனான ப்ரஹ்மாவின் ப்ரஸாதத்தாலே ஸர்வலக்ஷணோ பேதமானாப் போலே பகவத் ப்ரஸாதமடியாகப் பிறந்த இப்ரபந்தங்களுக்கு இவற்றில் கூடாததில்லை.

விளக்கம் - இந்தப் பிரபந்தம் தானாகவே வெளி வந்தது என்றால் இதில் எழுத்து, அசை, சீர், பந்தம், அடி, தொடை ஆகியவற்றுடன் கூடியதாகப் பாசுரங்கள் அமைந்தது எப்படி? எப்படி என்றால், எம்பெருமானின் திருவுள்ளம் காரணமாக வெளிவந்த இவற்றில் தோஷங்கள் இருக்க வாய்ப்பு இல்லை. இராமாயணம் – மாநிஷாத - என்ற ச்லோகம், மச்சந்தாதேவ என்னும் ச்லோகத்தின்படி அத்திகாயில் கொசு போன்று, எம்பெருமானின் விபூதியில் உள்ள ஒருவனான நான்முகனின் திருவருளால் பிறந்த இராமாயணம் அனைத்து இலக்கணங்களின்படியும் அமைந்தது போன்றதாகும். ஆக இந்தப் பிரபந்தம் எம்பெருமானின் திருவருளாலேயே பிறந்ததாகிறது.

மூலம் - இவை என்ன கோடியிலே அடைக்கப்பட்ட ப்ரபந்தங்கள்? இவை பிறந்தபடி எங்ஙனே? இவற்றுக்கு மூலமென்? ஒன்றை மூலமாகச் சொன்னால் அது மூலமென்றறியும்படி எங்ஙனே? இவை ப்ரமாணமென்றறிவதெத்தாலே? இவற்றுக்கு ப்ரதிபாத்யரார்? இப்ரபந்தங்கள் கற்கைக்கு அதிகாரிகளார்? இவற்றுக்கு போக்தாக்களார்? இவை எதுக்காகப் பண்ணப்பட்டன? என்று சில அவ்யுத்பந்நர் கேட்க;

விளக்கம் – உலகில் உள்ள நூல்களில் இந்த ப்ரபந்தம் எந்த இனத்தைச் சேர்ந்தவை (அர்த்தவாதமா அல்லது தத்வ உபதேசமா)? இவை எப்படித் தோன்றின (இவருடைய புத்தியின் காரணமாகவா அல்லது எம்பெருமானின் குணங்களை அனுபவித்த மகிழ்வின் காரணமாகவா)? இவற்றின் மூலகாரணம் என்ன (ஆழ்வார் செய்த தவ பலனா அல்லது எம்பெருமானின் கடாக்ஷமா)? ஏதோ ஒன்றை இதன் மூலகாரணமாகக் கூறினால் (உதாரணமாக எம்பெருமானின் கடாக்ஷம்), அதுவே மூலகாரணம் என்று எப்படி அறிய முடிந்தது? இவை ப்ரமாணம் என்று எப்படிக் கூறமுடியும்? இவற்றில் கூறப்படும் ஈச்வரன் யார் (ஏகாயநன் கூறுவது போன்று தனியான ஈச்வரனா அல்லது மஹாலக்ஷ்மியுடன் கூடிய எம்பெருமானா)? இந்த ப்ரபந்தங்களைக் கற்பதற்குத் தகுதி உள்ளவர்கள் யார்? இவற்றை அநுபவிக்கும் மனிதர் யார்? இந்த ப்ரபந்தங்கள் எதற்காக இயற்றப்பட்டன

(அதாவது எந்தப் புருஷார்த்தம் உயர்வானது என்று காண்பிக்க இயற்றப்பட்டன) என்று அறிவற்ற சிலபல கேள்விகளைக் கேட்கலாம். இதற்கான விடை கூறப்படுகிறது.

மூலம் - இவை புருஷார்த்த ப்ரகாசகமான ப்ரபந்தங்களில் ப்ரதாந ப்ரபந்தங்கள்; பகவத்குணாநுபவஜநித ஹர்ஷப்ரகர்ஷ பலாத்காரம் சொல்லுவிக்கப் பிறந்தன; பகவத் ப்ரஸாத லப்தமான திவ்யசக்ஷுர் மூலமாகப் பிறந்தனவென்னுமிடம் ஸ்வரவசந வ்யக்திகளாலே அறியலாம். வேதாந்த வித்துக்களான ஸர்வசிஷ்டர்களும் பரிக்ரஹிக்கையாலும், ஸம்ஸாரத்தில் உத்வேகம் பிறந்தார்க்கும் ஜ்ஞாதவ்யமான வேதார்த்தங்களை இப்ரபந்தங்களிலே காண்கையாலும் இவை உத்க்ருஷ்டதமமான ப்ரமாணமென்றறியலாம். எல்லார்க்கும் பரமப்ராப்ய பூதனான ச்ரிய:பதி இப்ரபந்தங்களுக்கு ப்ரதிபாத்யன். ஸம்ஸாரத்தில் ருசியற்று எம்பெருமான் திருவடிகளிலே எப்பேர்ப்பட்ட அடிமைகளும் செய்யவேணுமென்றிருக்குமவன் இவை கற்கைக்கு அதிகாரி. முமுக்ஷுக்களும், முக்தரும், நித்யரும், எம்பெருமான் தானும் இவற்றுக்கு போக்தாக்கள், பகவத் கைங்கர்யமாகிற நிரதிஸய புருஷார்த்தம் இன்னபடிப்பட்டிருக்குமென்று அறிவிக்கைக்காகப் பிறந்த ப்ரபந்தங்களிவை – என்று சிரோபாசித ஸத்வருத்தராயிருப்பார்கள் பரிஹரித்தார்கள்.

விளக்கம் – புருஷார்த்தங்களை விளக்குகின்ற ப்ரபந்தங்களில் திருவாய்மொழி முதன்மையானது ஆகும்; எம்பெருமானுடைய குணங்களை அனுபவித்ததன் மூலம் ஏற்பட்ட அளவற்ற மகிழ்ச்சியால் இவை பிறந்தன. எம்பெருமானின் திருவுள்ளம் மூலமாக ஆழ்வாருக்கு ஏற்பட்ட ஞானப்பார்வையின் விளைவாகப் பிறந்தன. இதனைப் பல இடங்களில் காணமுடியும். வேதங்களின் பொருள்களை அறிந்த சான்றோர்கள் பலர் திருவாய்மொழியை ஏற்பதாலும், ஸம்ஸாரத்தில் உத்வேகம் பிறந்தவர்கள் அறிய வேண்டிய வேதப்பொருள்களைத் திருவாய்மொழியில் காணலாம் என்பதாலும் இது மிகச் சிறந்த ப்ரமாணம் ஆகிறது. அனைவரும் சென்று அடையத்தக்கவனும், அனைவரிலும் மேம்பட்டவனும், மஹாலக்ஷ்மியின் நாயகனும் ஆகிய எம்பெருமானே இந்த ப்ரபந்தங்களின் தலைவன் ஆவான். ஸம்ஸாரத்தில் பிடிப்பு இல்லாமல், எம்பெருமானின் திருவடிகளில் எப்படிப்பட்ட அடிமைத் தொழிலையும் செய்யவேண்டும் என்று உள்ளவர்கள் அனைவரும் திருவாய்மொழியைக் கற்பதற்குத் தகுதி உடையவர்கள் ஆவர். இவற்றை அனுபவிப்பவர்கள் முமுக்ஷுக்கள், முக்தர், நித்யர், மற்றும் எம்பெருமான் ஆகியோர் ஆவர். எம்பெருமானுக்குச் செய்யப்படும் கைங்கர்யம் என்னும் எல்லையற்ற புருஷார்த்தம் "இப்படியாக இருக்கும்" என்று அனைவருக்கும் உணர்த்துவதற்காகவே திருவாய்மொழி தோன்றியது. இப்படியாகத் திருவாய்மொழியைச் சிறந்த ப்ரபந்தம் என, ஆசார்யர்களைப் பலகாலம் போற்றியவர்கள் மேலே உள்ள கேள்விகளுக்குப் பதில் அளித்தனர்.

மூலம் – நிஷித்த பாஷையாகையாலும், இப்ரபந்தங்களை வேதத்தில் அநதிகாரிகள் அப்யஸிக்கக் காண்கையாலும், கலிகாலத்திலே ஜ்ஞாநத்துக்கு அடைவில்லாத சதுர்த்த வர்ணத்திலே பிறந்தாரொருவராலே நிர்மிதங்களாகையாலும், தேசாந்தரங்களிலின்றிக்கே ப்ராதேசிகங்களாகையாலும், அவைதிகர் பரிக்ரஹிக்கையாலும், ச்ருதி ஸ்ம்ருதி விருத்தமான காம புருஷார்த்தத்தைப் பலவிடங்களிலும் பேசுகையாலும், ச்ருதி ஸ்ம்ருதிகளிலே புருஷார்த்ததயா சொல்லப்படுகிற ஐச்வர்ய கைவல்யங்களைக் காற் கடைக் கொள்ளுகையாலும், இப்ரபந்தங்கள் ப்ரமாணமாக மாட்டா என்று வைதிககோஷ்டியில் பழக்கமில்லாதார் சில அறிவுகேடர் வந்து ப்ரத்யவஸ்தாநம் பண்ண;

விளக்கம் – அடுத்து, திருவாய்மொழி தமிழில் உள்ளதால் சில அறிவற்றவர்கள் இந்த மொழியை மதிக்காத காரணத்தால், திருவாய்மொழி மீது அவர்களுக்கு விச்வாசம் பிறக்க வேண்டும் என்பதற்காகத் திருவாய்மொழி சிறந்த ப்ரமாணம் என்பதை ஆக்ஷேபம் மற்றும் ஸமாதாந வடிவத்தில் அருளிச் செய்கிறார். திருவாய்மொழி அமைந்துள்ள பாஷை வைதீகச் செயல்கள் செய்யப்படும் காலங்களில் பேசத்தக்கது அன்று என்பதாலும்; வேதங்களை ஓதுவார்க்கு அதிகாரம் இல்லாதவர்களால் இது கூறப்படுவதாலும்; கலிகாலத்தில் ஞானம் அடையாத நான்காம் வர்ணத்தில் பிறந்த ஒருவரால் இயற்றப்பட்டது என்பதாலும்; இராமாயணம் போன்று அனைத்து இடங்களிலும் இல்லாமல், ஒரு குறிப்பிட்ட தேசத்தில் மட்டுமே காணப்படுவதாலும்; ஸாங்க்கியர் முதலான வேதங்களுக்கு விரோதியானவர்கள் கற்பதாலும்; ச்ருதி ஸ்ம்ருதிகளில் விளக்கப்பட்ட காமபுருஷார்த்தங்களைப் பல இடங்களில் கூறுவதாலும்; ச்ருதி ஸ்ம்ருதிளில் உறுதியாகக் கூறப்படும் ஐச்வர்யகைவல்யங்களைக் காற்கடையாகக் கொள்ளுவதாலும் – திருவாய்மொழி ப்ரமாணங்களாக இயலாது என்று வைதீக கோஷ்டியில் சரியான பரிச்சயம் இல்லாத அஞ்ஞானிகள் சிலர், முரண்பட்டு கேள்வி எழுப்பினர் (இவற்றுக்கான விடைகள் அடுத்த பத்தியில் உள்ளன).

மூலம் - மாத்ஸ்ய புராணத்திலே, பாஷாந்தரத்தாலே பாடாநின்றுள்ள கைசிகாதிகளைத் தன் நாட்டினின்றும் போகவிட்ட ராஜாவைக் குறித்து ஹரிகீர்த்திம் விநைவாந்யத் ப்ராஹ்மணேந நரோத்தம பாஷாகாநம் ந காதவ்யம் தஸ்மாத் பாபம் த்வயா க்ருதம் என்ற யம வசநத்தின்படியே பாஷாநிஷேதம் பகவத்வ்யதிரிக்த விஷயங்களிலேயாகையாலும், அங்ஙனன்றியே பாஷாமாத்ராவதியாக விதிநிஷே தங்களை அங்கீகரிக்கில் ஸம்ஸ்க்ருத பாஷையான பாஹ்ய சாஸ்த்ராதிகளப்யஸிக்க வேண்டுகையாலும், ஆழ்வார் தம்முடைய க்ருபாதிசயத்தாலே வேதத்தில் அநதிகாரிகளான ஸ்த்ரீ சூத்ராதிகளும் இழவாதபடி வேதார்த்தத்தை த்ராவிட பாஷையாலே அருளிச் செய்கையாலும், எதிர்சூழல்புக்கு அநேக ஜந்மங்கள் எம்பெருமான் தானே தொடர்ந்து விஷயீகரிக்கைக்கடியான பாக்யத்தை யுடையராய், நிரந்தர பகவத் கடாக்ஷ பாத்ர பூதருமாய், தத்வஹிதங்களில் நிபுணராய், அவற்றினுடைய உபதேசத்திலும் ப்ரவ்ருத்தராய், விதுர சபர்யாதிகளில் விலக்ஷணரான ஆழ்வார் பக்கலிலே இப்ரபந்தங்கள் பிறக்கையாலும், இப்பாஷை நடையாடி சிஷ்டப்ரசுரமான தேசங்களெங்குமுண்டாய் பாஷாந்தரங்களிலே பிறந்து விலக்ஷணரா

யுள்ளாரும் இவற்றின் வைலக்ஷண்யத்தைக் கேட்டு "இவற்றை அப்யஸிக்கைக்கீடான இப்பாஷை நடையாடும் தேசத்திலே பிறக்கப் பெற்றிலோமே" என்றிருக்கையாலும், இவற்றின் நன்மையைக் கண்டு வேதார்த்தஜ்ஞாநத்துக்கு அடைவில்லாத அவைதிகருங் கூடப்பரிக்ரஹிக்கை ச்லாக்யத ஹேதுவாகையாலும், வேதநமென்றும் உபாஸநமென்றும் உபநிஷத்துக்களிற் சொல்லுகிற பக்தியை இவற்றில் காமமாகச் சொல்லுகையாலும், ஐச்வர்ய கைவல்யங்களை தூஷித்தது அல்பாஸ்திரத்வாதி தோஷத்தாலேயாகையாலும், ப்ரதிபாத்யனான எம்பெருமானுடைய மாஹாத்ம்யத்தாலும், எம்பெருமானை ஸுஸ்பஷ்டமாக ப்ரதிபாதிக்கையாலும், பக்திக்கு உத்பாதகங்களாகையாலும், உத்பந்நையான பக்திக்கு வர்த்தகங்களாகையாலும், ச்ரவணாதிகளில் அப்போதே நிரதிசய ப்ரீதி ஜநகங்களாகையாலும், இவற்றில் சொல்லுகிற அர்த்தங்களுக்கு வேதத்தில் பலவிடங்களிலும் ஸாக்ஷியாகச் சொல்லுகையாலும், ப்ரஹ்மகாரண வாதத்தாலும், ப்ரஹ்மஜ்ஞாநாந் மோக்ஷத்தைச் சொல்லுகையாலும், புருஷார்த்த விஷயமான ப்ரபந்தங்கள் எல்லாவற்றிலும் இப்ரபந்தங்களை த்ருடதர ப்ரமாணங்களாக உபபாதித்து வைதிக கோஷ்டியில் அபியுக்தரானவர்கள் பரிஹரித்தார்கள்.

விளக்கம் – மத்ஸ்ய புராணத்தில் ஒரு நிகழ்வு உண்டு. வேறு மொழியில் பாடிய கைசிகன் போன்ற பலரை, நாடு கடத்திய அரசனைப் பார்த்து யமன் – ஹரிகீர்த்திம் விநைவாந்யத் ப்ராஹ்மணேந நரோத்தம பாஷாகாநம் ந காதவ்யம் தஸ்மாத் பாபம் த்வயா க்ருதம் – அந்தணன் ஒருவன் ஸ்ரீஹரியின் மேன்மையைத் தவிர மற்றவர்களின் புகழை வேறு மொழியில் பாடக்கூடாது; இப்படி இருக்க, அவன் வேறு மொழியில் பாடியதைக் கொண்டு நாடு கடத்திய காரணத்தால் நீ பாவம் செய்தவன் – என்றான். இதன் மூலம் குறிப்பிட்ட மொழியை மட்டுமே பிரதானமாகக் கொண்டு வாதம் செய்தால், வடமொழியில் காணப்படும் வேதத்திற்குப் புறம்பான சாஸ்த்ரங்களையும் கற்க வேண்டும் என்றாகிறது. ஆழ்வார் தன்னுடைய கருணை காரணமாக, வேதங்களை ஓதும் தகுதி இல்லாத பெண்கள் மற்றும் நான்காம் வர்ணத்தினர், வேதங்களில் கூறப்பட்டவற்றை இழக்காதபடி, வேதங்களில் பொருள்களைத் தமிழில் அருளிச்செய்தார். பல பிறவிகள் அவதரித்து எம்பெருமானைத் தொடர்ந்து பற்றுவதற்கு ஏற்ற பாக்கியத்தை உடையவராகவும், எப்போதும் எம்பெருமானின் கடாக்ஷத்திற்குப் பாத்திரராக உள்ளவரும், தத்துவ ஹிதங்களில் வல்லவராகவும், அவற்றின் உபதேசங்களில் தேர்ந்தவராகவும், விதுரர் மற்றும் சபரி போன்றவர்களை விட வேறுபட்டவரும் ஆகிய ஆழ்வார் மூலமாக இந்த ப்ரபந்தங்கள் பிறந்தன. தமிழ்மொழி நடையாடுவதால் மற்ற தேசங்களில் பிறந்து சிறப்படைந்த சான்றோர்கள் தமிழ்மொழியின் சிறப்பைக் கண்டு, "இந்த மொழி கற்பதற்குத் தகுதியாக, இந்த மொழி நடையாடும் தேசத்தில் பிறக்காமல் போனோமே", என்று வருந்துகின்றனர். தமிழ்மொழியின் மேன்மையைக் கண்டு வேதார்த்த ஞானத்தை ஏற்காத மற்ற மதத்தினர்களும் கூட, இந்த மொழியை ஏற்பதற்குக் காரணம் இதன் சிறப்பே ஆகும். உபநிஷத்துக்கள் வேதனம் (அறிதல்), உபாசனம் (வழிபாடு) ஆகியவற்றைப் பக்தி என்பதற்கு ஈடாக வைத்து, அதனையே காமம் என்று கூறுகின்றன. மேலும் ஐச்வர்யம் மற்றும் கைவல்யங்கள் தள்ளப்படுகின்றன – காரணம்

அவை அற்பம் மற்றும் நிலையற்றன என்னும் தோஷங்களுடன் கூடியதால் ஆகும். இதில் கூறப்படுகின்ற ஸர்வேச்வரன் மிகுந்த மென்மை உடையவன்; அப்படிப்பட்டவனைக் குறித்து மிகவும் தெளிவாகத் திருவாய்மொழி கூறி, அதனால் பக்தியை ஏற்படுத்தி, அந்த பக்தியை மேலும்மேலும் வளரச்செய்கிறது. திருவாய்மொழியைக் கேட்டவுடனும் கற்றவுடனும் எம்பெருமான் மீது எல்லையற்ற ப்ரேமையை உண்டாக்குகிறது. இவற்றில் கூறப்படும் அர்த்தங்களுக்கு, வேதங்களில் பல இடங்களையும் ப்ரமாணமாகக் கூறலாம். இந்த உலகின் தோற்றத்திற்கு ப்ரஹ்மமே காரணம் என்று திருவாய்மொழி முழங்குகிறது. ப்ரஹ்மத்தைக் குறித்த ஞானம் பெற்றால் மோக்ஷம் அடையலாம் என்றும் கூறுகிறது, புருஷார்த்தங்களைப் பற்றிக் கூறுகின்ற அனைத்து ப்ரபந்தங்களிலும், திருவாய்மொழியே உறுதியான ப்ரமாணம் ஆகிறது என்று வைதீக கோஷ்டியில் அறிவுள்ளவர்கள், மேலே உள்ள கருத்துக்களை மறுத்தனர்.

மூலம் - பகவத் ப்ரஸாதத்தாலே அவனை அனுபவித்துப் பரிபூர்ணராயிருக்கிற இவர்க்கு இவர்க்கு எம்பெருமானைப் பிரிகையும், பிரிவாலே நோவுபட்டுக் கூப்பிடுகையும் கூடினபடி எங்ஙனேயென்னில், ஓரோகுணத்தை அநுபவித்தால் அநுபூத குணங்களிலு ண்டான ப்ரியத்வ ப்ரகர்ஷம் க்ஷுத்ர விஷயங்களில் வைராக்யத்தைப் பிறப்பித்து, குணாந்தரங்களிலே ஸ்ப்ருஹையைப் பிறப்பிக்கும்; பரமாத்மநி யோ ரக்தோ விரக்தோபரமாத்மநி என்றும், "மாற்பால் மனஞ்சுழிப்ப மங்கையர் தோள் கைவிட்டு" என்றும் சொல்லுகிறபடியே, பின்னை அக்குணங்களில் க்ரமப்ராப்தி பற்றாது, யாதொருபோது ஆசைமிக்கது, அப்போது ஆசைப்பட்ட பொருள் கிடையாமையாலும் பகவதநுபவ விரோதியான ப்ரக்ருதி ஸம்பந்த ஸ்மரணாதிகளாலுமாக பகவத் விஷயத்தில் அநுபவித்த அம்சத்தையும் இழந்து "எந்நாள் யானுன்னை இனி வந்து கூடுவன்" என்றும், "பல நீ காட்டிப் படுப்பாயோ" என்றும், "போர வைத்தாய் புறமே" என்றும், "கூவிக்கொள்ளும் காலமின்னம் குறுகாதோ" என்றும் கூப்பிடா நிற்பர். அவனை அநுபவிக்கப்புக்கால் "அடியேனடைந்தென் முதன்முன்னமே" என்றும், "பருகிக்களித்தேனே" என்றும், "உண்டுகளித்தேற்கும்பரென் குறை" என்றும், "தொண்டீரெல்லீரும் வாரீர் தொழுதுதொழுது நின்றார்த்தும்" என்றும், "எமர் கீழ் மேலெழு பிறப்பும் மாசதிர் இது பெற்று நம்முடைய வாழ்வு வாய்க்கின்றவா" என்றும் தாமும் நம்முடைய ஸம்பந்தி ஸம்பந்திகளுமாய்க் கூடக் களிப்பர்.

விளக்கம் – எம்பெருமானின் கடாக்ஷத்தால் அவனை எப்போதும் அனுபவித்தபடி பூர்ணராக ஆழ்வார் இருந்தார். இப்படி உள்ளபோது அவனை விட்டு பிரிந்ததும், அந்தப் பிரிவால் வருந்தி அவனை அழைத்ததும் ஏன் நடந்தது என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார். எம்பெருமானின் ஒவ்வொரு குணத்தையும் தனித்தனியே அனுபவிக்கும்போது, அப்படி அனுபவித்த குணங்களில் மிகுந்த விருப்பம் ஏற்பட்டு, தாழ்ந்த விஷயங்களில் வைராக்யம் உண்டாகி, எம்பெருமானின் மற்ற குணங்களையும் அனுபவிக்க வேண்டும் என்ற ஆசை உண்டாகும். இதனை பார்ஹஸ்பத்ய ஸ்ம்ருதி – பரமாத்மநி யோ ரக்தோ விரக்தோபரமாத்மநி – யார் ஒருவன் எம்பெருமானிடம்

பக்தியுடன் உள்ளானோ அவன் மற்ற விஷயங்களில் வைராக்யத்துடன் உள்ளான் – என்றும், மூன்றாம் திருவந்தாதி (14) - மாற்பால் மனஞ்சுழிப்ப மங்கையர் தோள் கைவிட்டு – என்றும் கூறியது காண்க . இப்படியாக வைராக்யம் ஏற்பட்ட பின்னர், எம்பெருமானின் குணங்களை வரிசையாக அனுபவிப்போம் என்ற எண்ணம் ஏற்படாது. எப்போது ஆசை மிகுதியாக உள்ளதாலும், அவ்விதம் ஆசைப்பட்ட பொருளான எம்பெருமான் கிடைக்காமல் போவதாலும் - எம்பெருமானின் அனுபவத்திற்கு விரோதியாக உள்ள சரீர தொடர்பு மற்று நினைவு போன்றவற்றைக் காரணமாகக் கொண்டு எம்பெருமானை அனுபவித்தபடியையையும் இழந்து நிற்கக் கூடும். அப்போது திருவாய்மொழி (3-2-1) - எந்நாள் யானுன்னை இனி வந்து கூடுவன் - என்றும், (6-9-9) - பல நீ காட்டிப் படுப்பாயோ - என்றும், (5-1-5) - போர வைத்தாய் புறமே - என்றும், (6-9-9) கூவிக்கொள்ளும் காலமின்னம் குறுகாதோ என்றும் அழைத்தபடி நிற்பார்கள். மேலும் அவனை அனுபவிக்க முற்படும்போது, திருவாய்மொழி (2-3-6) - அடியேனடைந்தென் முதன்முன்னமே - என்றும், (2-3-9) – பருகிக்களித்தேனே - என்றும், (10-8-7) - உண்டுகளித்தேற்கும்பரென் குறை - என்றும், (5-2-2) - தொண்டீரெல்லீரும் வாரீர் தொழுதுதொழுது நின்றார்த்தும் - என்றும், (2-6-7) - எமர் கீழ் மேலெழு பிறப்பும் மாசதிர் இது பெற்று நம்முடைய வாழ்வு வாய்க்கின்றவா - என்றும் கூறுவது போன்று, தாமும் தம்மைச் சேர்ந்தவர்களும் கூடக் களிப்பார்கள்.

மூலம் - இப்படி பஹுகுணனான எம்பெருமான் பக்கலிலே நிரதிசய பக்திமான்களாய், தத்ஸம்ச்லேஷ விச்லேஷைக ஸுகதுக்கராய், அவனையல்லதறியாதபடியாய், பகவதநுபவ ஸுகம் மிக்கபோது இதர பதார்த்தங்களுமெல்லாம் நம்மைப்போலே எம்பெருமானைப் பெற்று ஸுகிக்கிறனவாகவும், விச்லேஷமென்றோரு வகை உண்டென்றுமறியாதே லோகயாத்ரையோடொக்க மறந்து, விச்லேஷ வ்யஸநம் மிக்கால் ஸம்ச்லேஷ ரஸம் உண்டென்றுமறியாதே இதர பதார்த்தங்களுமெல்லாம் நம்மைப் போலே எம்பெருமானைப் பிரிந்து நோவுபடுகிறனவாகக் கொண்டு "நீயும் திருமாலால் நெஞ்சங்கோட்பட்டாயே" இத்யாதியாலே அவற்றுக்குமாகத் தாம் நோவுபடாநிற்பர். இவருக்கு ப்ரியாப்ரியங்கள் ஒருகாலும் முடியாதே பர்யாயேண உண்டாயிருக்கையாலே, இவர்க்கு சிந்தயந்திப்படி நித்யமாய்ச் சொல்லுகையாலே இவரை தீர்க்கசிந்தயந்தி யென்றாயிற்று நம் முதலிகள் அருளிச் செய்வது.

விளக்கம் - இப்படியாகப் பல திருக்கல்யாண குணங்களைக் கொண்ட எம்பெருமானிடம் எல்லையற்ற பக்தி கொண்டவராக இருப்பார். அவனை அடையும்போது ஏற்படும் இன்பத்தின் அதே அளவை, அவனைப் பிரியும்போது துன்பத்தில் கொண்டவராக இருப்பார். அவனை அல்லாது வேறு எதனையும் அறியாத இவர், தான் பகவானை அனுபவிக்கும்போது உண்டாகின்ற இன்பங்கள் போன்றே மற்றைய பொருள்களும் அவனைப் பெற்று இன்பம் அடைகின்றன என்றே எண்ணுவார். பிரிவு என்ற ஒன்று உள்ளது என்பதையே மறந்திருப்பார். தான் எம்பெருமானை விட்டுப் பிரிய நேர்ந்தால், மற்ற பல பொருள்களும் தம்மைப் போன்றே எம்பெருமானைப் பிரிந்து துன்படுகின்றன

என்று எண்ணி, திருவாய்மொழி (2-1-1) - நீயும் திருமாலால் நெஞ்சங்கோட்பட்டாயே - என்பது போன்ற பாசுரங்கள் மூலம் அவற்றுக்கும் சேர்த்து, தான் துன்பத்தில் இருப்பார். ஆகவே இவருக்கு இன்ப துன்பங்கள் மாறி மாறி உண்டானபடி இருப்பதால், இவருக்கு இவரை தீர்க்கசிந்தயந்தி என்று ஆசார்யர்கள் கூறுவர்.

மூலம் - ஆனால் சேதநர்க்கு ஸ்த்ர்யந்நபாநாதிகளே தாரகபோஷக போக்யங்களாய்ச் செல்லா நிற்க, இவரை பகவத் குணைகதாரகரென்னக்கூடுமோ? என்னில் திருவயோத்யையிலும், கோஸலஜந பதத்திலுமுள்ள ஸ்தாவரஜங்கமங்களடைய ராம குணைகதாரகங்களாயிருக்கும்படியை அநுஸந்தித்து இதுவும் கூடுமென்று கொள்வது. இப்படி இருக்கிற இவர்க்கு எம்பெருமானோடு ஸம்ச்லேஷமாவது ப்ரத்யக்ஷ ஸமாநாகாரமான ஜ்ஞாந ஸாக்ஷாத்காரம். விச்லேஷமாவது – பாஹ்ய ஸம்ச்லேஷாபேக்ஷை பண்ணி அது பெறாமையாலே மாநஸாநுபவத்துக்கு வந்த கலக்கம்.

விளக்கம் - மனிதர்களுக்குப் பெண், சோறு, தண்ணீர் ஆகியவையே நிலையாகவும், வளர்வதாகவும், அனுபவிக்கப்படுவதாகவும் கூறும்போது, இவர் எம்பெருமானின் குணங்களால் மட்டுமே உயிர் வாழ்கிறார் என்று எப்படி கூறமுடியும் என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார். இராமாயணத்தில் – அயோத்தியிலும், கோசல நாட்டிலும் உள்ள அசையும் மற்றும் அசையாப் பொருட்கள் அனைத்தும் இராமனின் குணங்களை எண்ணியே உயிர் வாழ்ந்தன என்று கூறப்பட்டது காணலாம். இது போன்றே இங்கு இவருக்கும் பொருந்தும். இப்படி உள்ள இவருக்கு, எம்பெருமானுடன் சேர்தல் என்பது நேரில் காண்பது போன்று, ஞானம் மூலமே காண்பதாகும். அவனைப் பிரிவது என்பது, சாதாரணக் கண்கள் மூலம் அவனைக் காண எண்ணி, அது இயலாமையால் மனதிற்கு ஏற்பட்ட கலக்கமாகும்.

மூலம் - ஸர்வஜ்ஞனாய், ஸர்வசக்தியாய், ஸர்வநியந்தாவாய், நிரவதிகக்ருபாவானா யிருந்த எம்பெருமான் இவருடைய அநுபவத்தை முடிய நடத்தாதே, இவ்வநுபவத்தை விச்சேதித்ததுக்கு ப்ரயோஜநமென்னென்னில்; திருவயோத்யையிலும் திருக்குரவையிலும் பிரிந்த பிரிவு போலே இவர்க்கு அநுபூத குணங்கள் ஸாத்மிக்கைக்காகவும் மேன்மேலென த்ருஷ்ணை பிறக்கைக்காகவும். எம்பெருமான் பக்கல் பிறந்த ஆசை முதிர்ந்து, நினைத்தபடி பெறாவிட்டாவாறே சோக மோஹங்கள் பிறக்கும். இப்படியுள்ள கலவியாலும் பிரிவாலும் ஆழ்வாருக்கு வந்த தசை அந்யாபதேசப் பேச்சைப் பேசுவிக்கும்.

விளக்கம் - அனைத்தும் அறிந்தவனும், அனைத்து வல்லமை படைத்தவனும், அனைத்தையும் நியமிப்பவனும், எல்லையற்ற கருணை மிக்கவனும் ஆகிய எம்பெருமான் இவருடைய இனிய அனுபவத்திற்கு ஏற்றபடி நடக்காமல், அனுபவத்தைப் பிரித்ததன் பயன் என்ன என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார். அயோத்தியிலும், திருகுரவையிலும் ஏற்பட்ட பிரிவு போன்று இவருக்கு அவனது குணங்களை பொறுத்தலும், மேலும்மேலும் அனுபவிக்க ஆசை உண்டாவதும் பயனாகிறது.

எம்பெருமான் மீது ஏற்பட்ட காதல் முற்றிவிட்ட நிலையில், நினைத்தபடி அவனைப் பெறாமல் போனால் சோகம் மற்றும் மோகங்கள் பிறக்கின்றன. இப்படிப்பட்ட சேர்க்கையாலும், பிரிவாலும் ஆழ்வாருக்கு ஏற்பட்ட நிலையை வெளிப்படையாக கூறுகின்ற திருவாய்மொழியை உண்டாகியது.

மூலம் - இப்ரபந்தங்களில் ஸூக்திகள் ப்ராப்யனான எம்பெருமானுடைய ஸ்வரூப ப்ரதிபாதநபரமாயிருக்கும் சில; ப்ராப்தாவான ப்ரத்யகாத்ம விஷயமாயிருக்கும் சில; ப்ராப்த்யுபாயத்தைச் சொல்லும் சில; அவசிஷ்டமானவை இவற்றுக்கு உபபாதகங்களா யிருக்கும். இவற்றில் உத்தேச்யம் பலம்; ததர்த்தமாக மற்றுள்ள நாலர்த்தமும் சொல்லுகிறது. இவற்றில் ப்ரதம ப்ரபந்தமான திருவிருத்தத்தில் – த்வதநுபவ விரோதியான ஸம்ஸர ஸம்பந்தத்தை அறுத்துத் தந்தருளவேணுமென்று எம்பெருமானை அர்த்திக்கிறார். திருவாசிரியத்தில் – நிவ்ருத்த ஸம்ஸாரர்க்கு போக்யமான தன்னுடைய வடிவழகை – கலம்பகன் மாலையைப் பணியாக எடுத்துக் காட்டுமாபோலே காட்டிக் கொடுக்கக் கண்டு அநுபவித்தார் பூர்ணமாக. பெரியதிருவந்தாதியில் – நிரதிசய போக்யனான எம்பெருமானை அநுபவிக்கையாலே ததநுகுணமாக த்ருஷ்ணை பிறந்து த்ருஷ்ணாநுகுணமாகப் பேசியும் நினைத்தும் தரிக்கிறார்.

விளக்கம் - இந்த ப்ரபந்தங்கள் அர்த்தபஞ்சகத்தை வெளிப்படுத்துகின்றன என்று அருளிச்செய்கிறார். அடையப்படும் இலக்கான எம்பெருமானின் ஸ்வரூபத்தை விளக்குவதாக சில உள்ளன (இவை உயர்வற, திண்ணன் வீடு, அணைவது, ஒன்றும் தேவும்). அடையப்படும் அவனை அடைகின்ற ஆத்மாவைப் பற்றி சில திருவாய்மொழிகள் கூறுகின்றன (இவை பயிலும் சுடர் ஒளி, ஏறாளும் இறையோன், கண்கள் சிவந்து, கருமாணிக்கமலை). எம்பெருமானை அடைவதற்கான உபாயத்தை ஒரு சில திருவாய்மொழிகள் கூறுகின்றன (இவை நோற்ற நோன்பு, ஆராவமுது, மானேய் நோக்கு, பிறந்தவாறும்). அவனை அடைவதற்கான பலனை சில திருவாய்மொழிகள் கூறுகின்றன (இவை எம்மாவீடு, ஒழிவில் காலம், நெடுமாற்கடிமை, வேய் மருதோள் இணை). அவனை அடைவதற்குத் தடையாக உள்ளவற்றைச் சில திருவாய்மொழிகள் கூறுகின்றன (இவை வீடுமின், சொன்னால் விரோதம், ஒரு நாயகம், கொண்ட பெண்டிர்). மற்ற எண்பது திருவாய்மொழிகளும் இவற்றை விளக்குவதாக உள்ளன. திருவாய்மொழியானது புருஷார்த்தங்கள் அனைத்தையும் கூறுகிறது என்று கீழே சொல்லிய பின், இங்கு அர்த்த பஞ்சகத்தைக் கூறுகின்றன என்பது முரணாக உள்ளதே என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார். அர்த்தபஞ்சகத்தில் உத்தேச்ய பலம் என்ற கைங்கர்யத்தை கூறிவிட்டு, அதன் பொருட்டு உள்ள மற்ற நான்கும் கூறப்படுகின்றன என்று கொள்ளவேண்டும். ஆழ்வாரின் ப்ரபந்தங்களில் முதல் ப்ரபந்தமான திருவிருத்தத்தில் எம்பெருமானின் அனுபவத்திற்குத் தடையாக உள்ள ஸம்ஸாரதொடர்பை அறுத்துத் தரவேண்டும் என்று எம்பெருமானை வேண்டுகிறார். திருவாசிரியத்தில் முக்தர்களுக்கு இனிமையாக உள்ள தன்னுடைய திருமேனி அழகை, பலவிதமான மலர்களில் கட்டப்பட்ட மாலையை இனிமையாக எடுத்துக் காட்டுவது போன்று எம்பெருமான் இவருக்குக் காண்பிக்க, அதனை

அநுபவித்தார். பெரியதிருவந்தாதியில் எல்லையற்ற இனிமை கொண்ட எம்பெருமானின் அநுபவத்தால், அதற்குத் தகுதியான ஆசை பிறந்து, அந்த ஆசைக்குத் தகுதியான குணங்களைப் பேசவும் நினைக்கவும் செய்கிறார்.

மூலம் – திருவாய்மொழியில், இவருடைய த்ருஷ்ணாநுகுணமாக ச்ரிய:பதியாய் ஸமஸ்த கல்யாணகுணத்மகனாய், தனக்குத் தகுதியான திவ்ய தேஹத்தையுடையனுமாய் திவ்ய பூஷண பூஷிதனுமாய், சங்கசக்ராதி திவ்யாயுததரனுமாய் பரம வ்யோமத்திலே ஆநந்தமயமான திவ்யாஸ்தாந ரத்ந மண்டபத்திலே பெரியபிராட்டியாரும் தானும், திவ்ய ஸிம்ஹாஸநத்திலே ஏழலகும் தனிக்கோல் செல்ல வீற்றிருந்தருளி, அஸ்தாநேபய சங்கிகளான அயர்வறும் அமரர்களாலே அநவரத பரிசர்யமான சரண நளிநனாய்க் கொண்டு, அங்கு அங்ஙனே செல்லா நிற்க, ஸ்வஸங்கல்பாயத்த ஸ்வரூப ஸ்திதி ப்ரவிருத்தி நிவ்ருத்திகமான ஸ்வேதர ஸமஸ்தத்தையும் தனக்கு சரீரதயா சேஷமாகவுடையனாய், அந்தராத்மதயா சேதநாசேதநங்களை வ்யாபித்து, தத்கததோஷை ரஸம்ஸ்ப்ருஷ்டனாய், நாராயணாதி நாமங்களைத் தனக்கு வாசகமாகவுடையனாய், ஏவம்விதனாக "உளன் சுடர்மிகு சுருதியுள்" என்கிறபடியே உபநிஷத் ஸித்தனுமாய், இப்படி விஸஜாதீயனுமாயிருந்து வைத்து ஆச்ரித வாத்ஸல்யத்தாலே தேவ மநுஷ்யாதி ஸஜாதீயனாய் வந்து தன்னுடைய பரம க்ருபையாலே திருவவதாரம் பண்ணும் ஸ்வபாவனுமாய், தன்னுடைய ஆதாரங்களிலும் உதவப் பெறாத கர்ப்ப நிர்ப்பாக்யர்க்கும் இழக்க வேண்டாதபடி, ஸர்வாபராத ஸஹனாய், பத்ரபுஷ்பாதிகளாலே ஸ்வாராதனாய்க் கொண்டு ஆச்ரிதர்க்கு அத்யந்த பரதந்த்ரனாய், அவர்களுடைய இச்சாநுகுணமான போஜநசயநாதிகளை உடையனாய், ஸமஸ்த கல்யாணகுண பரிபூர்ணனான தானே ஆச்ரித ஸுலபத்வார்த்தமாகக் கோயில்களிலே வந்து நின்றருளியும், இப்படியுள்ள ஸர்வேச்வரத்வத்துக்கும் ஆச்ரிதாநுக்ரஹத்துக்கும் ஏகாந்தமான படிகளால் பரிபூர்ணனான எம்பெருமான், தன்னை நிர்ஹேதுகமாகக் காட்டியருளக் கண்டநுபவித்து, தம்முடைய ப்ரக்ருதி ஸம்பந்தமாகிற ப்ரதிபந்தகமற்று எம்பெருமானைப் பெற்று முடிக்கிறார். இனிச் சொல்ல வேண்டுமவையெல்லாம் அவ்வவ திருவாய்மொழிகள்தோறும் சொல்லக் கண்டு கொள்வது.

விளக்கம் - திருவாய்மொழியில் இவருடைய ஆசைக்கு ஏற்றபடி உள்ள எம்பெருமானைக் குறித்து கூறுகிறார். அவன் மஹாலக்ஷ்மியின் நாயகனாக, அனைத்துவிதமான திருக்கல்யாண குணங்களை உடையவனாக, தனக்கு ஏற்ற திவ்யமான திருமேனியை உடையவனுமாக, திவ்யமான ஆபரணங்களைக் கொண்டவனாக, சங்கு சக்கரம் முதலான திவ்யமான ஆயுதங்களை உடையவனாக இருக்கிறான். மேலும், பரமபதத்தில் ஆனந்த மயமான திவ்ய ஆஸ்தான ரத்தின மண்டபத்தில், பெரியபிராட்டியாருடன் தானும் சேர்ந்து, திவ்யமான ஸிம்ஹாஸனத்தில் தன்னுடைய செங்கோலானது ஏழு உலகிலும் ஆட்சி செய்தபடியாக வீற்றிருந்து அருள்கிறான். அச்சம் கொள்ளவேண்டாத இடத்திலும் சந்தேகம் கொண்ட அமரர்களால் தொண்டு செய்யப்பட கூடிய திருவடித்தாமரைகளைக் கொண்டுள்ளான். தன்னுடைய நினைவால் ஏற்படுகின்ற ஸ்வரூபம், ஸ்திதி, கர்மம்

நடத்தல், கர்மம் நடவாமை ஆகியவற்றை உடையதும், தன்னைக் காட்டிலும் வேறுபட்ட்தும் ஆகிய பொருள்களைத் தனக்குச் சரீரமாகக் கொண்டதால், அவற்றை அடிமையாக உடையவன் ஆவான். அவற்றின் ஆத்மாவாக உள்ளதால், சேதனம் மற்றும் அசேதனங்களில் வ்யாபித்து, ஆனால் அவைகளின் தோஷங்களால் தீண்டப்படாமல் உள்ளான். நாராயணன் முதலான அத்திருநாமங்களை தன்னுடைய பெயராகக் கொண்டுள்ளான். இப்படிபட்டவனாக, திருவாய்மொழி (1-1-7) - உளன் சுடர்மிகு சுருதியுள் - என்பதற்கு ஏற்ப உபநிஷத்துக்களால் கூறப்பட்ட பொருளாக உள்ளான். இப்படி அனைத்தையும் விட மாறுபட்டவனாக உள்ளபோதிலும், அடியார்களிடம் கொண்ட வாத்ஸல்யத்தின் காரணமாகத் தன்னுடைய கருணையால், மனிதனாகவும் அவதாரம் செய்யும் தன்மை கொண்டவன் ஆவான். தன்னுடைய அவதாரத்தின்போதும், தன்னால் உதவி செய்ய இயலாதவாறு, கர்ப்பத்திலேயே குற்றம் உள்ளவர்களும் தன்னை இழக்க வேண்டாதபடி, அனைத்து குற்றங்களையும் பொறுப்பவனாக உள்ளான். பத்ரம் புஷ்பம் முதலான எளிய ஆராதனைக்கு உட்படுகிறான். அடியார்களுக்குத் தொண்டு செய்கின்றவனாக இருக்கிறான். அவர்களுடைய விருப்பம் போன்று உணவு, படுக்கை போன்றவற்றை அமைத்துக் கொள்கிறான். அனைத்து திருக்கல்யாணகுணங்களையும் பரிபூரணமாகக் கொள்கிறான். அடியார்கள் சுலபமாகத் தன்னை அடையும்படியாகத் தானே கோயில்களில் வந்து நிற்கிறான். இப்படியாக ஸர்வேச்வரனாகவும், அடியார்களுக்கு அனுக்ரஹம் புரிபவனாகவும், பரிபூர்ணமாக உள்ளவனும் ஆகிய எம்பெருமான் எதனையும் எதிர்பார்க்காமல் ஆழ்வாருக்குத் தன்னைக் காட்டி அருளினான். இப்படியாக அவனை அனுபவித்து, தன்னுடைய உலகத் தொடர்பு என்னும் தடை நீங்கி, எப்பெருமானைப் பெற்று, திருவாய்மொழியை முடிக்கிறார். இனி என்ன கூறவேண்டுமோ அவற்றை அந்தந்த திருவாய்மொழிகளில் ஆழ்வார் கூற, அதனைக் கண்டு கொள்க.

மூலம் - முதல் திருவாய்மொழியில் சொல்லிற்றாவது நாநாரத்ந பரிபூர்ணமாய், அபரிச்சேத்யமான கடலை முந்துற திரளக்கண்டாப்போலே ஸ்வரூபரூபகுண விபூதிகளாலே பரிபூர்ணனாய், எல்லாப்படியாலே எல்லாரிலும் மேற்பட்டு, ஸர்வேச்வரனாய், ச்ரிய:பதியாக, அபௌருஷேயமான ஸுத்ருடமான ச்ருதிகளாலே ப்ரதிபாதிக்கப்பட்டுள்ள எம்பெருமானை பாஹ்ய குத்ருஷ்டிகளால் அவிசால்யமாம்படி அவன் ப்ரஸாதத்தாலே ஸாக்ஷாத்கரித்து அநுபவித்து, அவ்வநுபவ ஜநித ப்ரீதி உள்ளடங்காமை அநுபவித்தபடியே ஸவிபூதிகனான எம்பெருமானைப் பேசி, ஏவம் விதனானவன் திருவடிகளிலே அடிமை செய்து உஜ்ஜீவியென்று தம் திருவுள்ளத்தைக் குறித்து அருளிச் செய்கிறார்.

விளக்கம் - இனி முதல் திருவாய்மொழியில் கூறுவது என்ன என்றால் – பலவிதமான இரத்தினக்கற்களால் நிறைவுற்றதாகவும், அளவிட இயலாத கடலை கண் முன்பே கண்டது போன்று ஸ்வரூப ரூப குண விபூதிகளால் பரிபூர்ணமாக உள்ள எம்பெருமானைக் கண்டார். அனைத்துவிதத்திலும், அனைவரிலும் மேம்பட்டு, ஸர்வேஸ்வரனாகவும், மஹாலக்ஷ்மியின் நாயகனாகவும், யாராலும் இயற்றப்படாத

வேதங்களால் கூறப்பட்டுள்ளவனும் ஆகிய எம்பெருமானை - வேதங்களுக்குப் புறம்பாகப் பேசுபவர்களால் அசைக்க இயலாதபடி, அவன் திருவருளால், அவனை நேரே கண்டு அனுபவித்தார். அந்த அனுபவம் காரணமாக உண்டான ப்ரேமையை, ஆழ்வாரால் அடக்க இயலவில்லை. தான் அனுபவித்தபடியே விபூதியுடன் கூடிய எம்பெருமானைப் பற்றியே பேச வேண்டும், இப்படிப்பட்ட தன்மை கொண்ட அவனது திருவடிகளில் அடிமை செய்து பிழைக்க வேண்டும் என்று தம் திருவுள்ளத்தைக் குறித்து அருளிச்செய்கிறார்.

மூலம் - கடலைத் திரளக் கண்டானெருவன் அதிலுண்டான முத்துமாணிக்காதிகளையும் தனித்தனியே காணுமாபோலே முதல் திருவாய்மொழியிலே திரள அநுபவிக்கப்பட்ட எம்பெருமானுடைய குணங்களை ஓரோவகைகளிலே ஓரோதிருவாய்மொழியாய்ச் சொல்லுகிறது இரண்டாம் திருவாய்மொழி தொடங்கி மேலெல்லாம்.

விளக்கம் – எம்பெருமானின் ஸ்வரூபம், ரூபம், குணம் முதலானவற்றை முதல் திருவாய்மொழியில் அருளிச்செய்தார் என்றால், மற்ற திருவாய்மொழிகளில் அருளிச் செய்யப்பட்டவை எவை என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார். கடலை முழுவதுமாகக் காணும் ஒருவன், அதில் காணப்படும் முத்துமாணிக்கம் போன்றவற்றைத் தனித்தனியாகக் காண்பது போன்று, முதல் திருவாய்மொழியில் முழுமையாக அனுபவிக்கப்பட்ட எம்பெருமானின் குணங்களை - பரத்வம், ஸௌலப்யம் போன்ற பல வகைகளில், ஒவ்வொரு திருவாய்மொழியாக, இரண்டாம் திருவாய்மொழி தொடங்கி அருளிச் செய்கிறார்.

மூலம் – இப்படிச் செய்தாரிவரேயல்லர். பாரத ராமாயணாதிகளைப் பண்ணின வ்யாஸாதிகளும் ஸங்க்ஷேப விஸ்தரங்களாலே தங்கள் ப்ரபந்தங்களை ப்ரபந்தீகரித்தார்கள். பரஸ்வரூபம் அகிலஹேய ப்ரத்யநீகத்வத்தாலும், கல்யாணை கதாநத்வத்தாலும் ஸ்வேதர ஸமஸ்த வஸ்து விலக்ஷணமாய், விபுத்வாத் தேசத: பரிச்சேத ரஹிதமாய், நித்யத்வாத் காலத: பரிச்சேத ரஹிதமாய், ஸர்வமும் தனக்கு ப்ரகாரமாகத் தான் ப்ரகாரியாய், தனக்கொரு ப்ரகார்யந்தரமில்லாமையாலே வஸ்து பரிச்சேத ரஹிதமுமாய், ஜ்ஞாநாநந்தமயமாய், ஜ்ஞாந பலைச்வர்ய சீலாத்யநந்த கல்யாண குண கண மஹோததியாய், ச்ரிய:பதியாய், ஸ்வேதர ஸமஸ்தத்தையும் வ்யாபிக்குமிடத்தில் அப்ராக்ருதமாய், ஸுத்தஸத்வமயமாய், ஸ்வா ஸாதாரணாமாய், புஷ்பஹாஸ ஸுகுமாரமாய், புண்யகந்தவாஸிதாநந்ததி கந்தராளமாய், ஸர்வாபாச்ரயமாயிருந்துள்ள திவ்ய விக்ரஹம் போலே வ்யாபித்து தரித்து நியமித்து, இப்படி ஸர்வப்ரகாரத்தாலும் ரக்ஷகமாய்க் கொண்டு சேஷியாயிருக்கும்.

விளக்கம் - இவ்விதம் செய்தவர் இவர் மட்டும் அல்லர். மஹாபாரதம் மற்றும் இராமாயணம் போன்றவற்றை இயற்றிய வ்யாசர் முதலானவர்களும் தங்கள் ப்ரபந்தங்களை இவ்விதம் சுருக்கமாகவும் விவரித்தும் அருளிச் செய்தார்கள். பரம்பொருளின் ஸ்வரூபம் எப்படிப்பட்டது என்றால், அனைத்து தோஷங்களுக்கு

எதிர்த்தட்டாக இருக்கும்; தன்னை விட வேறுபட்ட அனைத்தையும் விட வேறுபட்டதாக இருக்கும்; எங்கும் உள்ளதால், இந்த இடத்தில்தான் இருக்கும், இந்த காலத்தில்தான் இருக்கும் என்று அளவு கூற இயலாததாக இருக்கும்; அனைத்தையும் தனக்கு சரீரமாகக் கொண்டதால், தானே அனைத்திற்கும் ஆத்மாவாக உள்ளதால், தனக்கு வேறு எதுவும் ஆத்மாவாகக் கொள்ளாததால், எந்த ஒரு பொருளையும் கொண்டு அளவிட்டு இவனை அறிய இயலாது. ஞானம் மற்றும் ஆனந்தமயமாக உள்ளது; ஞானம், பலம், ஐச்வர்யம், சீலம் போன்ற எல்லையற்ற குணங்களின் ஸமுத்திரமாக உள்ளது; மஹாலக்ஷ்மியின் நாயகனாக உள்ளது; ப்ரக்ருதியின் தொடர்பு இல்லாமல், சுத்த ஸத்வமயமாக உள்ளது; மலரின் மலர்ச்சியைக் கொண்டதாகவும் உள்ளது; தெய்வீகமான தனது நறுமணத்தால் நிறையப் பெற்ற, எல்லையற்ற திசைகளை உடையது; அனைவரும் வந்து அண்டும்படியான ஞானம் பெற்ற, விக்ரஹம் போன்று வ்யாபித்து, அனைத்தையும் தரித்து, நியமித்தபடி உள்ளது. இப்படியாக அனைத்து விதங்களிலும் அனைவருக்கும் பாதுகாப்பாக இருந்து, எஜமானனாகவும் உள்ளது.

மூலம் - ப்ரக்ருதி ஸ்வரூபம் மஹதாதி விகாரங்களையுடைத்தாய், நித்யமாய் த்ரிகுணத் மிகையாய், சுக்லக்ருஷ்ண ரக்தவர்ணையாய், அநேக ப்ரஜைகளுக்கு ப்ரஜநநபூதையாய், எம்பெருமானுக்கு சரீரதயா சேஷமாய், சேதநர் கர்மாநுகுணமாக இச்சிக்க, இந்த இச்சாநுகுணமாக பகவத் ஸங்கல்பத்தாலே சதுர்விம்சதி தத்வமாய்க் கொண்டு விகரிக்கக்கடவதாய், இப்படி எம்பெருமானுக்கு இஷ்டவிநியோகார்ஹமாயிருக்கும்.

விளக்கம் - ப்ரக்ருதியின் ஸ்வரூபம் மஹத் முதலான மாற்றம் கொண்டதாய், நித்யமாக உள்ளதாய், மூன்று குணங்கள் கொண்டதாய், வெண்மை, கருமை மற்றும் சிகப்பு ஆகிய நிறங்களுடன் கூடியதாய், பல உயிர்களும் உண்டாகும் இடமாய், எம்பெருமானின் சரீரமாக உள்ளதால் அவனுக்கு அடிமையாய், சேதனர்களின் கர்மங்களுக்கு ஏற்ப அவர்களின் விருப்பப்படி எம்பெருமானின் ஸங்கல்பத்தால் இருபத்துநான்கு தத்துவங்களால் விரிந்து உள்ளதாய் இருக்கிறது. இப்படியாக எம்பெருமானின் இஷ்டப்படி உபயோகிப்பதற்குத் தகுதியாக உள்ளது.

வ்யாக்யானம் - ஆத்மஸ்வரூபம் அணுபரிமாணாமாய், தேஜோத்ரவ்யமாய் ஜ்ஞாதாவாய், ஜ்ஞாநாநந்த குணகமாய், நித்யமாகையாலே காலபரிச்சேதரஹிதமாய், ஜ்ஞாநத்ரவ்ய மாகையாலே வஸ்து பரிச்சேதரஹிதமாய், அப்ருதக்ஸித்த்யர்ஹ ப்ருதங்நிர்தேசாநர்ஹ அநந்யார்ஹசேஷமுமாய், பரசேஷதைகரஸமுமாய், அத்யந்தபரதந்த்ரமுமாய் இருக்கும் எம்பெருமானுக்கு; இத்தையுள்ளபடி அறிவாரில் தலைவராயிற்று இவர்.

விளக்கம் - ஆத்மாவின் ஸ்வரூபம் அணுவின் அளவாக, ஒளிவீசுவதாக, ஆனந்தம் ஆகிய குணங்களைக் கொண்டதாக, என்றும் உள்ளதால் காலத்தால் அளவிட முடியாததாக, ஞானமயமாக உள்ளதால் மற்றோரு பொருளால் அளவு காட்ட இயலாததாக, எம்பெருமானை விட்டுத் தனியே பிரித்துக் கூறுவதற்கு தகுதியற்றதாக,

எம்பெருமானுக்கே அடிமைப்பட்டதாக, எம்பெருமானுக்குச் செய்யும் கைங்கர்யத்தையே இன்பமாகக் கொள்ளுவதாக, எம்பெருமானையே மிகவும் சார்ந்துள்ளதாக இருக்கும். இப்படியாக உள்ள தத்வத்ரயம் எனப்படும் இந்த மூன்று தத்வங்களை (பரமாத்மாவின் ஸ்வரூபம், ப்ரக்ருதி ஸ்வரூபம், ஜீவ ஸ்வரூபம்) உள்ளது உள்ளபடி அறிபவர்களின் தலைவராக நம்மாழ்வார் உள்ளார்.

வ்யாக்யானம் - இவ்வாழ்வார் திருவாய்மொழி ப்ரபந்தத்தால் செய்ததாயற்ற அர்த்தம் ஏதென்னில் முதல் திருவாய்மொழியிலே "உயர்வறவுயர்நலமுடையவன்" என்று தொடங்கி, "உணர்முழுநலம் – மிகுநரையிலன்", "நிலனிடை விசும்பிடை உருவினன் அருவினன்", "ஆமவைஆயவையாய் நின்ற அவர்" என்று சொல்லிக்கொண்டு போந்து, "கரவிசும்பெரி வளி நீர் நிலமிவைமிசை வானவில் திறல் வலி அளி பொறைமாய் நின்ற பரன்" என்று தலைக்கட்டுகையாலே, நாராயணனே பரதத்வமென்கைக்காக நாராயண சப்தார்த்தத்தை அருளிச்செய்தார்; ஸர்வாதிகத்வமும் ஸமஸ்த கல்யாண குணாத்மகத்வமும் உபயவிபூதிநாதத்வமுமிறே நாராயணசப்தார்த்தம். இதினுடைய சேஷமிறே ஒன்றும் தேவும் திண்ணன் வீடும்.

விளக்கம் - திருவாய்மொழியின் மூலம் இவர் அருளிச்செய்த பொருள் எவை? முதல் திருவாய்மொழியில் (1-1-1) – உயர்வற உயர் நலம் உடையவன் - என்று தொடங்கி, (1-1-2) – உணர்முழுநலம், (1-1-3) – நிலனிடை விசும்பிடை உருவினன் அருவினன், (1-1-4) - ஆமவை ஆயவையாய் நின்ற அவர் - என்று கூறி கொண்டே போய், (1-1-11) - கரவிசும்பெரி வளி நீர் நிலமிவைமிசை வானவில் திறல் வலி அளி பொறைமாய் நின்ற பரன் - என்று முடிக்கையால், நாராயணனே பரதத்த்வம் என்று உணர்த்துவதான நாராயண சப்தத்தின் பொருளை அருளிச்செய்கிறார். நாராயணன் என்ற பதத்தின் பொருள் - அனைவரையும் விட உயர்ந்தவன், அனைத்து கல்யாண குணங்களும் கொண்டவன், நித்ய மற்றும் லீலா விபூதி ஆகியவற்றைக் கொண்டவன் என்பதாகும். இந்தத் திருவாய்மொழியின் பொருளை, (4-10) - ஒன்றும் தேவும், (2-2) - திண்ணன் வீடு ஆகிய இரண்டும் மேலும் விவரிக்கின்றன.

வ்யாக்யானம் - அநந்தரத் திருவாய்மொழியிலே இவ்வர்த்தத்துக்கு வாசகமான திருநாமந்தன்னை "வண்புகழ்நாரணன்" என்று அருளிச்செய்தார்; வ்யாபகாந்தரங்களிலும் இவ்வர்த்தத்தை அறியலாயிருக்குமே; அங்ஙனன்றிக்கே, இதுவே வாசகமென்று தன் திருவுள்ளத்திலே அறுதியிட்ட ஆகாரந்தோற்ற "செல்வநாராணன்", "திருநாரணன்", "நாரணன் முழுவேழுலகுக்கு நாதன்", "காராயின கால நன்மேனியினன் நாராயணன்", "திண்ணம் நாரணன்" என்று ஆதரித்துக் கொண்டு போந்து, "வாழ்புகழ் நாரணன்" என்று வழிப்போக்கில் வார்த்தையும் இதுவேயாய்த் தலைக்கட்டுகையாலே இதுவே வாசகமென்கிற நிர்ப்பந்தத்தை அருளிச்செய்தார்.

விளக்கம் - இரண்டாம் திருவாய்மொழியில், நாராயண அர்த்தத்திற்கு வாசகமான திருநாமத்தை (1-2-10) - வண் புகழ் - என்று அருளிச்செய்தார். வ்யாபக மந்திரங்களாக உள்ள விஷ்ணு, வாசுதேவன் ஆகியவையும் இந்தப் பொருளையே கூறுகின்றன என்று இருந்தாலும், தன்னுடைய திருவுள்ளத்தில் நாராயணன் என்று திருநாமமே உறுதியாக உள்ளது என்பதை - (1-10-8) - செல்வநாராணன், (4-1-1) - திருநாரணன், (2-7-2) - நாரணன் முழுவேழுலகுக்கு நாதன், (9-3-1) - காராயின காள நன்மேனியினன் நாராயணன், (10-5-1) - திண்ணம் நாரணன் - என்று கூறிக்கொண்டே சென்றார். இறுதியாக (10-9-7) - வாழ் புகழ் நாரணன் - என்று அர்ச்சிராதி மார்க்கத்தை கூறும் இடத்திலும் இந்தத் திருநாமத்தையே அருளிச் செய்து முடித்தமையால், இதுவே வாசகம் என்று உறுதியாக அருளிச்செய்தார்.

வ்யாக்யானம் - இனி "மலர்மகள் விரும்பும் நம் அரும்பெறலடிகள்" என்று தொடங்கி, "திருவுடையடிகள்" என்றும், "மையகண்ணாள் மலர் மேலுறைவாளுறைமார்பினன்" என்றும், "நமக்கும் பூவின் மிசை நங்கைக்கு இன்பன்" என்றும், "கோலத்திருமாமகளோ என்னைக் கூடாதே" என்றும் சொல்லிக்கொண்டு போந்து, "திருவாணை" என்றும், "கோலமலர்ப்பாவைக்கன்பாகிய என்னன்பே" என்றும் தலைக்கட்டுகையாலே ஸ்ரீமானான நாராயணனே பரதத்வமென்றும் சொல்லிற்று. இத்தால் நம்மாசார்யர்கள் ரஹஸ்யத்தில் பதத்வயத்தாலும் அருளிச்செய்து கொண்டு போரும் அர்த்தத்துக்கு அடி இவ்வாழ்வாராயிருக்கும் என்றதாயிற்று; ஆச்ரயண வேளையிலே "மலர் மகள் விரும்பும் நம் அரும்பெறலடிகள்" என்று தொடங்கி, போகவேளையில் "கோலமலர்பாவைக் கன்பாகிய என்னன்பே" என்று சொல்லுகையாலே, ஆச்ரயண வேளையோடு போக வேளையோடு வாசியற ஒரு மிதுநமே உத்தேச்யம் என்னுமிடம் சொல்லிற்றாயிற்று.

விளக்கம் - அடுத்து (1-3-1) - மலர்மகள் விரும்பும் நம் அரும்பெறலடிகள் – என்று தொடங்கி, (1-3-8) - திருவுடையடிகள் - என்றும், (4-5-2) - மையகண்ணாள் மலர் மேலுறைவாளுறைமார்பினன் – என்றும், (4-5-8) - நமக்கும் பூவின் மிசை நங்கைக்கு இன்பன் – என்றும், (6-9-3) - கோலத்திருமாமகளோ என்னைக் கூடாதே - என்றும் கூறுயபடியே சென்று, (10-10-2) - திருவாணை – என்றும், (10-10-7) - கோலமலர்ப்பாவைக்கன்பாகிய என்னன்பே – என்றும் முடிக்கையாலே, மஹாலக்ஷ்மியை உடைய ஸ்ரீமந்நாராயணனே பரதத்த்வம் என்று அருளிச்செய்து கொண்டு போகும் பொருளுக்கு அடி, இந்த ஆழ்வாரே ஆவார். இதற்கான அடி இந்த ஆழ்வாரே என்றால், இதே கருத்தை ஆழ்வார் அருளிச்செய்தார் என்பதாகும். எம்பெருமானை அண்டும் நேரத்தில் (1-3-1) - மலர் மகள் விரும்பும் நம் அரும்பெறலடிகள் – என்று தொடங்கி, அனுபவிக்கும் நேரத்தில் (10-10-7) - கோலமலர்பாவைக்கன்பாகிய என்னன்பே - என்று கூறுவதால் அண்டுகின்ற நேரம், இன்பமான நேரம் ஆகிய இரண்டிற்கும் வேறுபாடு இல்லாமல் அண்டப்பட வேண்டியது, இந்த திவ்ய தம்பதிகளே என்று அருளிச்செய்தார்.

மூலம் - இப்படி பரஸ்வரூபம், நிர்ணீதமாயிற்று; பரஸ்வரூப ப்ரதிஸம்பந்தியான ஸ்வஸ்வரூபமிருக்கும்படி என்னென்னில்; "உடன்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்து" என்று, சரீராத்ம பாவத்தைத் தாம் அநுஸந்தித்துப் பிறருக்கு உபதேசிக்கிறவிடத்திலே "உம்முயிர் வீடுடையானிடை" என்று அந்த சரீராத்ம பாவந்தன்னையே உபதேசித்து, இந்த சரீராத்ம பாவத்தால் பலிக்கிறது அநந்யார்ஹ சேஷத்வமென்னுமிடத்தை "தனக்கேயாக என்னைக் கொள்ளுமீதே" என்றும், "அடியேனுள்ளான் உடலுள்ளான்" என்றும் சொல்லி, இது தச்சேஷத்வத்தளவிலே நிற்பதொன்றல்ல, ததீயசேஷத்வ பர்யந்தமானாலாயிற்று தச்சேஷத்வ ஸித்தியென்னுமிடத்தை பயிலுஞ் சுடரொளி நெடுமாற்கடிமையிலே பரக்க அருளிச் செய்து, "அடியார்கள் குழாங்களை உடன் கூடுவதென்றுகொலோ" என்று ப்ரார்த்தித்து, ப்ரார்த்தித்தபடியே "அடியரோடிருந்தமை" என்று தலைக்கட்டுகையாலே, பாகவத சேஷத்வ பர்யந்தமான பகவச்சேஷத்வமே ஸ்வரூபமென்னுமிடம் சொல்லிற்று.

விளக்கம் - இப்படியாகப் பரம்பொருளின் ஸ்வரூபம் அருளிச்செய்தார். அடுத்து, பரஸ்வரூபத்திற்குத் தொடர்புடைய ஆத்மாவின் ஸ்வரூபம் எப்படி உள்ளது என்று அருளிச் செய்கிறார். திருவாய்மொழி (1-1-7) - உடன்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்து – என்று சரீர ஆத்ம தொடர்பை தான் அனுஸந்திக்கிறார்; தொடர்ந்து மற்றவர்களுக்கு உபதேசிக்கின்ற இடங்களிலும், திருவாய்மொழி (1-2-1) - உம்முயிர் வீடுடையானிடை – என்று சரீர ஆத்ம தொடர்பையே உபதேசிக்கிறார். மேலும், சரீர ஆத்ம தொடர்பு மூலம் உணரக்கூடிய "வேறு யாருக்கும் இல்லாமல், எம்பெருமானுக்கே அடிமை" என்பதை திருவாய்மொழி (2-9-4) - தனக்கேயாக என்னைக் கொள்ளுமீதே – என்றும், திருவாய்மொழி (8-8-2) - அடியேனுள்ளான் உடலுள்ளான் – என்றும் கூறி, இந்த ஆத்மா அவனது அடிமை என்ற அளவில் மட்டுமே நிற்கக்கூடாது என்றும், அவனது அடியார்களுக்கும் அடிமையாக இருக்கவேண்டும் என்றும், அப்போதுதான் அவனுக்கு அடிமையாக இருக்கமுடியும் என்றும் அருளிச்செய்தார். இதனை திருவாய்மொழி (3-7-1) - பயிலுஞ் சுடரொளி – என்றும், திருவாய்மொழி (8-10-1) – நெடுமாற்கடிமை - என்றும் விரிவாக அருளிச்செய்தார். மேலும் திருவாய்மொழி (2-3-10) - அடியார்கள் குழாங்களை உடன் கூடுவதென்றுகொலோ - என்று விண்ணப்பித்து, விண்ணப்பித்தபடியே திருவாய்மொழி (10-9-11) - அடியரோடிருந்தமை – என்று முடித்ததால், பாகவதர்களுக்கு அடிமையாக இருப்பதையே எல்லையாகக் கொண்ட எம்பெருமானின் அடிமைத்தனமே ஆத்மாவின் ஸ்வரூபம் என்று அருளிச்செய்தார்.

மூலம் - ஸ்வரூபாநுரூபமான புருஷார்த்தம் இருக்கும்படியென்னென்னில் "தனக்கேயாக என்னைக் கொள்ளுமீதே" என்று தொடங்கி, "வழுவிலா அடிமை செய்யவேண்டும் நாம்" என்றும், "பணிமானம் பிழையாமே அடியேனைப் பணிகொண்ட" என்றும், "முகப்பே கூவிப்பணிகொள்ளாய்" என்றும் இப்படிகளாலே அடிமையே புருஷார்த்தம் என்னுமிடத்தை நிர்ணயித்து, "இதுதான் சாஸ்த்ரவிஹிதமென்று செய்யுமளவல்ல. ஸ்வரூப ப்ராப்தமென்று செய்யுமளவல்ல. ராகப்ராப்தம்" என்று சொல்லுகைக்காக,

அடியிலே "உயர்வறவுயர்நலமுடையவன்" என்று கொண்டு ப்ராப்யமான குணங்களைச் சொல்லி, "சுவையன் திருவின் மணாளன்" என்றும், "தூய அமுதைப் பருகிப்பருகி" என்றும், குணவிசிஷ்ட வஸ்துவினுடைய போக்யதையையும் சொல்லி, "அப்பொழுதைக்கப் பொழுது என்னாராவமுதம்" என்றும், "ஆராவமுதே" என்றும், "ஆராவமுதானாயே" என்றும் இந்த போகத்தினுடைய நித்யாபூர்வதையைச் சொல்லி, "உகந்து பணி செய்துனபாதம் பெற்றேன்" என்று குணாநுபவ ஜநித ப்ரீதிகாரித கைங்கர்யமே புருஷார்த்தமென்னுமிடத்தைச் சொல்லி, இதுதான் யாவதாத்மபாவியான புருஷார்த்த மென்கைக்காக "ஈதே இன்னம் வேண்டுவதெந்தாய்" என்று தலைக்கட்டுகையாலே பகவத் குணாநுபவஜநித ப்ரீதிகாரித கைங்கர்யமே புருஷார்த்தமென்று அருளிச்செய்தார்.

விளக்கம் - ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு ஏற்றபடி புருஷார்த்தம் எப்படி இருக்கவேண்டும் என்று அருளிச்செய்கிறார். திருவாய்மொழி (2-9-4) - தனக்கேயாக என்னைக் கொள்ளுமீதே – என்று தொடங்கி, திருவாய்மொழி (3-3-1) - வழுவிலா அடிமை செய்யவேண்டும் நாம் – என்றும், திருவாய்மொழி (4-8-2) - பணிமானம் பிழையாமே அடியேனைப் பணிகொண்ட – என்றும், திருவாய்மொழி (8-5-7) - முகப்பே கூவிப்பணிகொள்ளாய் – என்றும் உள்ள பாசுரங்கள் மூலம், கைங்கர்யம் செய்தலே புருஷார்த்தம் என்று நிர்ணயித்தார். இந்த அடிமைத்தனம் சாஸ்திரங்களில் கூறப்பட்டது என்பதற்காகச் செய்வது அல்ல, ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு ஏற்றது என்பதற்காகச் செய்யப்படுவது அல்ல, கைங்கர்யத்திற்காகவே செய்யப்படுவது என்று உணரவேண்டும் என்பதை விளக்க எண்ணினார். இதனை உணர்த்தவே திருவாய்மொழி (1-1-1) - உயர்வறவுயர்நலமுடையவன் - என்று அடையப்படவேண்டிய வஸ்துவான அவனது குணங்களைக் கூறி, திருவாய்மொழி (1-9-1) - சுவையன் திருவின் மணாளன் - என்றும், திருவாய்மொழி (1-7-3) - தூய அமுதைப் பருகிப்பருகி – என்றும் எம்பெருமானின் இனிமையை உணர்த்தினார். திருவாய்மொழி (2-5-4) - அப்பொழுதைக்கப் பொழுது என்னாராவமுதம் – என்றும், திருவாய்மொழி (5-8-1) - ஆராவமுதே – என்றும், திருவாய்மொழி (10-10-5) - ஆராவமுதானாயே – என்றும் எம்பெருமானின் இனிமையானது எப்போதும் புதிது புதிதாகவே இருப்பதை உணர்த்தினார். திருவாய்மொழி (10-8-10) - உகந்து பணி செய்துனபாதம் பெற்றேன் – என்பதன் மூலம் அவனது குணங்களை அனுபவிப்பதால் ஏற்படும் மகிழ்ச்சி காரணமாகச் செய்யப்படும் கைங்கர்யமே புருஷார்த்தம் என்பதை உணர்த்தினார். இந்தப் புருஷார்த்தம் உயிர் நிலைக்கும் அளவு நிலைக்க வேண்டும் என்பதை திருவாய்மொழி (10-8-10) - ஈதே இன்னம் வேண்டுவதெந்தாய் - என்று கூறி முடித்தார். ஆக, எம்பெருமானின் குணங்களை அனுபவிப்பதன் மூலம், அவன் மீது உள்ள ப்ரேமையால் செய்யும் கைங்கர்யமே புருஷார்த்தம் என்று அருளிச்செய்தார்.

மூலம் - இப்புருஷார்த்தத்துக்கு இடைச்சுவரான விரோதிவேஷத்தை இரண்டாம் திருவாய்மொழியிலே "வீடுமின் முற்றவும்" என்று கட்டடங்கச்சொல்லி, அது தன்னையே மேல் மூன்று திருவாய்மொழியாலே விஸ்தரித்து அருளிச்செய்தார்; அவையெவை?

என்னில்; அஸேவ்யஸேவை – த்யாஜ்யமென்றார். சொன்னால் விரோதத்திலே; ஐச்வர்ய கைவல்யங்கள் த்யாஜ்யம் என்றார் ஒரு நாயகத்திலே; சரீரஸம்பந்த நிபந்தநமாக வரும் பரிக்ரஹங்கள் த்யாஜ்யமென்றார் கொண்ட பெண்டிரிலே. அங்ஙனே சொல்லலாமோ? சாஸ்த்ரஸித்தமான ஐச்வர்ய கைவல்யங்கள் புருஷார்த்தமாகத் தட்டென்னென்னில்; பரமபுருஷார்த்த லக்ஷண மோக்ஷத்திலே அதிகரித்தவனுக்கு ஐங்கருவி கண்ட வின்பமாகையாலும், தெரிவரிதாய் அளவிறந்திருந்ததேயாகிலும் பகவதநுபவத்தைப்பற்ற சிற்றின்பமாகையாலும் முமுக்ஷுவுக்கு இவை த்யாஜ்யம் என்றார். ஆக த்யாஜ்யவேஷத்தை அருளிச்செய்கிறார்.

விளக்கம் - புருஷார்த்தத்துக்கு இடையே உள்ள விரோதியின் தன்மை எப்படி இருக்கும் என்பதை அருளிச்செய்கிறார். இதனை இரண்டாம் திருவாய்மொழியில் (1-2-1) – வீடுமின் முற்றவும் - என்று சுருக்கமாக அருளிச்செய்தார். அவை யாவை? திருவாய்மொழி (3-9) - சொன்னால் விரோதம் – என்பதில், பணியத்தகாதவர்களை பணிதல் கைவிடத்தக்கது என்றார். திருவாய்மொழி (4-1) - ஒரு நாயகம் – என்பதில் ஐச்வர்யம், கைவல்யம் ஆகியவை கைவிடத்தக்கது என்றார். திருவாய்மொழி (9-1) - கொண்ட பெண்டிர் - என்பதில் சரீர தொடர்பு காரணமாக வருபவை கைவிடத்தக்கவை என்றார். சாஸ்திரங்கள் மூலமாகக் கூறப்படும் ஐச்வர்யம் மற்று கைவல்யங்கள் புருஷார்த்தத்திற்கு விரோதிகள் என்று எப்படிக் கூறலாம் என்ற சந்தேகம் எழலாம். மிகவும் உயர்ந்த புருஷார்த்தமான மோக்ஷத்தில் விருப்பம் உள்ளவனுக்கு, ஐச்வர்யம் மற்றும் கைவல்யம் ஆகியவை திருவாய்மொழி (4-9-10) – ஐங்கருவி, திருவாய்மொழி (4-9-10) - தெரிவரிதாய் என்பது போன்று, எம்பெருமானின் அனுபவத்திற்கு நேராகப் பார்த்தால், சிற்றின்பமே என்றாகிறது. ஆகவே முமுக்ஷுக்களால் இவை கைவிடத்தக்கவை என்றார். இப்படியாக விரோதியின் தன்மையை அருளிச்செய்தார்.

மூலம் - த்யாகப்ரகாரமிருக்கும்படி எங்ஙனேயென்னில்; த்யாஜ்யமென்றால் விடுமத்தனை யன்றோ, த்யாகப்ரகாரமிருக்கும்படி அறியவேணுமோ என்னில்; வேணும்; விஷயங்களில் நின்றும் தான் கடக்க வர்த்திக்கவோ? அன்றியே விஷயங்களை நசிப்பித்து வர்த்திக்கவோ என்றால், இரண்டும் ஒண்ணாது; கடக்க வர்த்திக்கவென்று நினைத்தால் லீலாவிபூதிக்கு அவ்வருகே போகவேணும்; நஸிப்பித்து வர்த்திக்கவோ என்றால், பகவத் விபூதியை அழிக்கையாய்விடும்; இரண்டுமொழிய விஷய ஸந்நிதியில் நின்றும் நிர்மாநுஷ்யமான காட்டிலே வர்த்தித்தாலோ என்றால், ஸர்வத்தையும் விட்டுக் காட்டிலே இருந்த ஆதிபரதனுக்கு மானின் பக்கலிலே ஸங்கம் உண்டாய், ஜ்ஞாநப்ரம்சம் பிறந்தது; ஸௌபரி நீருக்குள்ளே முழுகிக் கிடக்கச்செய்தே அங்கே சில மத்ஸ்ய ஸஞ்சாரத்தைக் கண்டு விஷயப்ரவணனானான்; ஆகையாலே த்யாகப்ரகாரம் இவையல்ல. ஆனால் ஏதாவதென்னில் "நீர்நுமதென்றிவை வேர் முதல் மாய்ந்து இறைசேரின்" என்று தேஹத்தில் ஆத்மபுத்தியையும், தேஹாநுபந்திகளான பதார்த்தங்களில் மமதாபுத்தியையும் தவிருகை - த்யாகப்ரகரமென்று பிறருக்கு உபதேசித்தார். "யானே என்னை அறியகிலாதே யானேயென்றனதே என்றிருந்தேன்" என்று தாமும் அநுஸந்தித்தார்.

விளக்கம் - கைவிடுதலில் வகைகள் எவ்விதம் இருக்கும் என்றால் – கைவிடுவது என்றால் விட்டுவிட வேண்டியதுதானே, அதன் வகைகளை அறியவேண்டுமா என்றால், அறிய வேண்டும். விஷயங்களில் இருந்து கடக்க, அவற்றில் முதலில் நின்று பின்பற்றவேண்டுமா அல்லது விஷயங்களை அழித்துப் பின்பற்ற வேண்டுமா என்றால் இரண்டும் ஏற்காது. கடக்க இருத்தல் என்னும்போது லீலா வீபூதிக்கு அவ்வருகே செல்லவேண்டும். அழித்து நிற்கலாம் என்றால், எம்பெருமானின் விபூதியை அழிப்பது என்றாகிவிடும். சரி, இரண்டையும் விடுத்து உலக விஷயங்களில் இருந்தே ஒதுங்கி, மனித நடமாட்டம் இல்லாமல் இருக்கின்ற காட்டில் வசிக்கலாமா என்றால் – அனைத்தையும் விட்டுக் காட்டில் வசித்த ஆதிபரதனுக்கும் மானின் மீது ஏற்பட்ட அன்பு காரணமாக ஞானக்குறைவு ஏற்பட்டு அடுத்த பிறவியில் மானாக பிறக்க நேரிட்டது அல்லவோ? ஸௌபரி நீரில் முழ்கிக் கிடக்க, அங்கே இருக்கின்ற மீன்களைக் கண்டு சிற்றின்பத்தில் மூழ்கியதும் காண்க. ஆகவே கைவிடுதல் என்பதன் முறை இப்படி அல்ல. வேறு எப்படி என்றால் திருவாய்மொழி (1-2-3) - நீர்நுமதென்றிவை வேர் முதல் மாய்ந்து இறைசேரின் – என்று, உடலையே ஆத்மா என எண்ணும் அறிவு, சரீர தொடர்பு காரணமாக "எனது" என்று எண்ணும் அறிவு ஆகியவற்றைக் கைவிடுதலே சிறந்த வகை என்று உபதேசித்தார். இதனை திருவாய்மொழி (2-9-9) - யானே என்னை அறியகிலாதே யானேயென்றனதே என்றிருந்தேன் – என்று தானும் கடைப்பிடித்தார்.

மூலம் – நிவ்ருத்தராகஸ்ய க்ருஹம் தபோவநம் என்று நிவ்ருத்தராகனாயிருக்குமவனுக்குத் தானிருந்த தேசமே தபஸ்ஸுக்கு ஏகாந்த ஸ்தலமென்றதாயிற்று. இப்படி எங்கே கண்டோமென்னில்; ஸ்ரீஜநகராஜன் பக்கலிலும் ஸ்ரீகுலசேகரப்பெருமாள் பக்கலிலும் கண்டுகொள்வது; ஆகையாலே புத்தி த்யாகமே த்யாகமென்றபடி.

விளக்கம் – ஆகவே, நிவ்ருத்தராகஸ்ய க்ருஹம் தபோவநம் —ஆசையற்றவனுக்குத் தான் இருக்கும் வீடே தவம் செய்யும் வனமாகிறது - என்பதற்கு ஏற்ப, ஆசையைத் துறந்தவனுக்குத் தான் உள்ள தேசமே தவம் செய்வதற்கு ஏற்ற இடம் என்று அறியலாம். இதனை எங்கே காணலாம் என்றால் ஜனகராஜனிடமும், குலசேகரப்பெருமாளிடமும் காணலாம். ஆக, புத்தி த்யாகமே த்யாகம் என்றாகிறது.

மூலம் - இவ்விரோதி நிவ்ருத்திக்கும் புருஷார்த்த ஸித்திக்கும் உபாயமேதென்னில்; த்ரைவர்ணிகாதிகாரமான பக்தி அகிஞ்சநாதிகாரமான ப்ரபத்தியுமென்று இரண்டிறே வேதாந்த ஸித்தமான உபாயம்; இதில் ப்ரபத்தியே உபாயமென்று நமக்கு ஸித்தாந்தமென்னும் ஆகாரந்தோற்ற உபாயாவேஷத்தை அருளிச்செய்கிறார்.

விளக்கம் - இப்படியாக உள்ள நேரத்தில் விரோதியை நீக்குவதற்கும், புருஷார்த்தம் கைகூடுவதற்கும் ஏற்ற உபாயம் என்ன? மூன்று வர்ணத்தினர் கைக்கொள்ளும் பக்தி; எந்தத் துணையும் இல்லாதவன் கைக்கொள்ளும் ப்ரபத்தி ஆகிய இரண்டு வழிகளும்

வேதாந்தங்களில் கூறப்படும் உபாயம் ஆகும். இவற்றில் ப்ரபத்தியே சிறந்த உபாயம் என்று ஆழ்வாருக்குத் தோன்ற, அந்த உபாயத்தின் தன்மையை அருளிச்செய்கிறார்.

மூலம் - "நோற்ற நோன்பிலேன்" என்று தொடங்கி, "ஆறெனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்" என்றும், "உழலையென்பின் பேய்ச்சி முலையூடு அவனை உயிருண்டான் கழல்களவையே சரணாகக்கொண்ட" என்றும், "நாமங்களாயிரமுடைய நம்பெருமானடி மேல் சேமங்கொள் தென்குருகூர்ச் சடகோபன்" என்றும், "நாகணைமிசை நம்பிரான் சரணே சரண் நமக்கு" என்றும் சொல்லிக்கொண்டு போந்து, "ஆவிக்கோர் பற்றுக்கொம்பு நின்னலாலறிகின்றிலேன்" என்று தலைக்கட்டுகையாலே திருவடிகளே உபாயமென்று அருளிச்செய்தார்.

விளக்கம் - எப்படி என்றால், திருவாய்மொழி (5-7-1) - நோற்ற நோன்பிலேன் – என்று தொடங்கி, திருவாய்மொழி (5-7-10) - ஆறெனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய் - என்றும், திருவாய்மொழி (5-8-11) - உழலையென்பின் பேய்ச்சி முலையூடு அவனை உயிருண்டான் கழல்களவையே சரணாகக்கொண்ட – என்றும், திருவாய்மொழி (5-9-11) - நாமங்களாயிரமுடைய நம்பெருமானடிமேல் சேமங்கொள் தென்குருகூர்ச் சடகோபன் – என்றும், திருவாய்மொழி (5-10-11) - நாகணைமிசை நம்பிரான் சரணே சரண் நமக்கு - என்றும் சொல்லிக் கொண்டே போய், திருவாய்மொழி (10-10-3) - ஆவிக்கோர் பற்றுக்கொம்பு நின்னலாலறிகின்றிலேன் – என்று முடிப்பதன் மூலம், எம்பெருமானின் திருவடிகளே உபாயம் என்று அருளிச்செய்தார்.

மூலம் - இத்தைப் பிறர்க்கு உபதேசிக்கிறவிடத்திலும் "திருநாரணன்தாள் காலம் பெறச் சிந்தித்துய்ம்மினோ" என்றார்; "ஆறெனக்கு நின்பாதமே" என்றும், "கழல்களவையே" என்றும், "சரணே சரண் நமக்கு" என்றும் அவதரிக்கையாலே, உபாயபூர்த்தியை அருளிச்செய்தார்; இவ்வுபாயத்துக்கு அதிகாரிகளாவா ராரென்னில்; "மயர்வற மதிநலமருளினன்" என்ற இடத்தில் எனக்கருளினன் என்கைக்குத் தம்மைக் காணாமையாலே ஆகிஞ்சந்யத்தையே புரஸ்கரித்து, உபாய நிர்ணயவேளையிலே "நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன்" என்று த்ரைவர்ணிகாதிகாரமான உபாயாந்தரங்களில் அநந்வய முகத்தாலே ஆகிஞ்சந்யத்தைப் பேசி, ஆச்ரயண வேளையிலே "புகலொன்றில்லாவடியேன்" என்று சொல்லி, போகவேளையில் தமக்கு உண்டான தடங்க பகவத் ப்ரஸாதலப்த மென்மைக்காக "நீசனேன் நிறையொன்றுமிலேன்" என்று கருந்தரையைப் பேசி, "ஒப்பில்லாத தீவினையேனை உய்யக்கொண்டு" என்று, ஸாபராத ஜந்துக்களுக்கும் புகுரலாமென்று தோற்றுகையாலே ஸர்வாதிகாரமென்றதாயிற்று.

விளக்கம் - ஆழ்வார் நான்காம் வர்ணத்தில் தோன்றியதால் பக்தி செய்வதற்கு ஏற்ற தகுதி இல்லாமல் போய் விட்டார், எனவே ப்ரபத்தியைக் கைக்கொண்டார், அதனால்தான் பக்தியை உபாயமாகத் தான் கூறாமல் ப்ரபத்தியைக் கூறுகிறாரோ என்ற சந்தேகம்

எழலாம். ஆகவேதான், மற்றவர்களுக்கு உபதேசிக்கும்போது திருவாய்மொழி (4-1-1) – திருநாரணன்தாள் காலம் பெறச் சிந்தித்துய்ம்மினோ - என்றார். மேலும் திருவாய்மொழி (5-7-10) - ஆறெனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய் – என்றும், திருவாய்மொழி (5-8-11) – கழல்களவையே – என்றும், திருவாய்மொழி (5-10-11) - சரணே சரண் நமக்கு – என்றும் கூறிய ஏவகாரத்தால் (அது மட்டுமே என்னும் கருத்து வெளிப்பட) உபாயத்தை அருளிச்செய்தார். இதன் மூலம், அந்தத் திருவடிகளைக் காட்டிலும் வேறு உபாயங்களில் தனக்கு அதிகாரம் இல்லை என்று தனது கதியற்ற நிலையைத் திருவாய்மொழி (5-7-1) - நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன் – என்று கூறி, அவனைப் பற்றுகிற நேரத்தில் திருவாய்மொழி (6-10-10) - புகலொன்றில்லாவடியேன் - என்று கூறி, இன்பத்துடன் உள்ள நேரத்தில் தனக்கு ஏற்பட்ட அனைத்தும் எம்பெருமானின் திருவருளால் கிட்டியவை என்பதைத் திருவாய்மொழி (3-3-4) – நீசனேன் நிறையொன்றுமிலேன் - என்று தன்னை பாழும் நிலமாகக் கூறி, திருவாய்மொழி (7-9-4) - ஒப்பில்லாத தீவினையேனை உய்யக்கொண்டு - என்று முடிக்கிறார். ஆகவே, பாவங்களை மட்டுமே செய்து வரும் எந்தவித உயிர்களும் அவனைச் சென்று சேரத் தகுதி உடையவை என்பதற்கு ஏற்ப அனைவரும் அதிகாரிகள் என்று அருளிச்செய்தார்.

மூலம் - அதிகாரியைப் பெற்றாலும், உபாயம் ஸித்தமானாலும் ஸ்வீகாரமில்லாதபோது ஜீவிக்கையாகாமையாலே, அந்த ஸ்வீகார வேஷத்தை "கழல்களவையே சரணாகக் கொண்ட" என்றும், இதினுடைய ஸாங்காநுஷ்டாநவேளையிலே "அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேன்" என்றும் அருளிச்செய்தார். இந்த ஸ்வீகார ஸித்திதானும் அவனாலே என்னுமிடத்தை "நின் பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்" என்றும், "அதுவுமவன தின்னருளே" என்றும் அருளிச்செய்தார்; இந்த ஸ்வீகர்த்தாவினுடைய அத்யவஸாய வேஷத்தை "களைவாய் துன்பங்களையாதொழிவாய் களைகண் மற்றிலேன்" என்றும், "நாடொறும் ஏகசிந்தையனாய்" என்றும் அருளிச்செய்தார். இவ்வுபாயத்தைப் பிறர்க்கு உபதேசிக்கிறவிடத்திலே "சிற்றவேண்டா சிந்திப்பேயமையும்" என்ற உபாய ஸௌகர்யத்தை அருளிச்செய்து, இது தன்னை ஸப்ரகாரமாக அருளிச் செய்கிற இடத்திலே "இது பக்த்யங்கமன்று; ஸ்வதந்த்ரோபாயம்" என்கைக்காக "சரணமாகும்" என்று தொடங்கி "மரணமானால் வைகுந்தங்கொடுக்கும் பிரான்" என்று ப்ராப்தி பர்யந்தமாக முடிய நடத்தும் என்றருளிச்செய்தார்; இவ்வுபாயாத்யவஸாயம் பண்ணியிருக்குமவனுக்குக் காலக்ஷேப ப்ரகாரமிருக்கும்படி என்னென்னில்; "தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்" என்று திருவாய்மொழிதானே காலக்ஷேபப்ரகாரம் என்று அருளிச்செய்தார்.

விளக்கம் - அவனை அடைவதற்கான தகுதியைப் பெற்றாலும், உபாயம் எளிதாக இருந்தாலும், அவனை அடைய வேண்டும் என்கின்ற பற்றுதல் இல்லாதபோது, பிழைப்பதற்குக் காரணம் வேறு இல்லை. ஆக, பற்றும் தன்மையை திருவாய்மொழி (5-8-11) - கழல்களவையே சரணாகக் கொண்ட – என்றும், அனுஷ்டான நேரத்தில் திருவாய்மொழி (6-10-10) – அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேன் - என்றும் அருளிச்செய்தார்.

இப்படியாக அவனைப் பற்றுவதும் அவனுடைய திருவருளால் மட்டுமே கைகூடும் என்பதை திருவாய்மொழி (5-7-10) - நின் பாதமே சரணாகத் தந்தொழிந்தாய் – என்றும், திருவாய்மொழி (8-8-3) - அதுவுமவன தின்னருளே – என்றும் அருளிச்செய்தார். இப்படியாக நாம் சென்று பற்றுகின்ற ஈச்வரனின் சிந்தனையைத் திருவாய்மொழி (5-8-8) - களைவாய் துன்பங்களையாதொழிவாய் களைகண் மற்றிலேன் – என்றும், திருவாய்மொழி (5-10-11) - நாடொறும் ஏகசிந்தையனாய் - என்றும் அருளிச்செய்தார். இந்த உபாயத்தை மற்றவர்களுக்கு அருளிச்செய்யும்போது, திருவாய்மொழி (9-1-7) - சிற்றவேண்டா சிந்திப்பேயமையும் - என்று உபாயத்தின் சுலபமான தன்மையை அருளிச்செய்தார். மேலும் ப்ரபத்தியை வகைப்படுத்தும் இடத்தை, "ப்ரபத்தி என்பது பக்தியின் அங்கம் அல்ல, தானே நேரடியான உபாயமாக உள்ளது" என்று உணர்த்த எண்ணியவராக, திருவாய்மொழி (9-10-5) - சரணமாகும் – என்று தொடங்கி, திருவாய்மொழி (9-10-5) - மரணமானால் வைகுந்தங்கொடுக்கும் பிரான் – என, பேறு அனைத்தையும் கொடுப்பான் என்று அருளிச்செய்தார். இத்தகைய உபாயத்தை மட்டுமே நம்பி உள்ள ஒருவன் தனது பொழுதை எப்படிப் போக்குவான் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார். திருவாய்மொழி (9-4-9) - தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன் – என்பதன் மூலம், திருவாய்மொழியை வைத்துக் கொண்டே பொழுதைக் கழிப்பான் என்று அருளிச்செய்தார்.

மூலம் - இப்படி உபாயத்தை ஸ்வீகரித்து, இதுவே போதுபோக்காகத் திரியும் அதிகாரிக்கு பலவேஷமிருக்கும்படி என்னென்னில், ஜிதேந்த்ரியத்வம் ப்ரதமமாய் கைங்கர்யஸித்தி சரமமாயிருக்குமித்தனையும் உபாய பலமென்னுமிடத்தை அருளிச்செய்தார். ப்ரதமத்திலே இழியும்போது ஜிதேந்த்ரியனாய் கொண்டு இழிய வேண்டும் உபாஸனுக்கு. ஜிதேந்த்ரியத்வமும் உபாயபலம் இவ்வதிகாரிக்கு எங்ஙனேயென்னில் "என்னைத் தீமனங்கெடுத்தாய்", "மருவித்தொழும் மனமே தந்தாய்" என்று - ஜிதேந்த்ரியத்வம் அவனாலே என்னுமிடத்தைச்சொல்லி, ஜிதேந்த்ரியனானவாறே, பகவதநுபவத்துக்கு உபகரணமான பக்த்யாதிகள் தனக்குத்தானே உண்டாகிறதோ என்னில்; "மயர்வற மதிநலமருளினன்" என்று – பக்திரூபாந்ந ஜ்ஞாநத்தையும் தானே தந்தானென்கையாலே பக்தியுத்பக்தியும் அவனாலே என்னுமிடமும் சொல்லிநின்றது; ஆனால் உத்பந்நையான பக்திக்கு வர்த்தகர் ஆரென்னில்; "காதல் கடல் புரைய விளைவித்த காரமர்மேனி நங்கண்ணன்" என்று அவனே வர்த்தகனென்னுமிடஞ்சொல்லி, வ்ருத்திக்கு எல்லையேதென்னில், "அதனிற் பெரிய என்னவா" என்று தத்வத்ரயங்களையும் விளாக்குலை கொள்ளும்படி பெருகினபடி சொல்லி "என் அவாவறச் சூழ்ந்தாய்" என்று தம் திருவாயாலே அருளிச்செய்கையாலே சரீரஸம்பந்தத்தை அறுத்து, தேசவிசேஷத்திலே கொண்டு போய் ஸம்ச்லேஷித்துத் தலைக்கட்டினான் என்றதாயிற்று.

விளக்கம் - இப்படியாக இந்த உபாயத்தைக் கைக்கொண்டு இதனையே பொழுதுபோக்காக வைத்து வாழ்கின்ற அதிகாரியின் பலன் என்ன என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார். இந்தப் புலன்களை அடக்குதல் தொடங்கி எம்பெருமானின்

கைங்கர்யம் கிட்டுவது வரை உள்ள அனைத்தும் இந்த உபாயத்தின் பலன் என்று அருளிச்செய்தார். உபாசகர்கள் எம்பெருமானைப் பற்ற முயலும்போது ஐந்து புலன்களையும் அடக்கியவர்களாக இருத்தல் வேண்டும். ப்ரபத்தியின் அதிகாரிக்கு ஐந்து புலன்களையும் அடக்குதல் என்பது உபாயத்தின் பலன்களாகும். இதனை திருவாய்மொழி (2-7-8) - என்னைத் தீமனங்கெடுத்தாய் - என்றும், திருவாய்மொழி (2-7-7) - மருவித்தொழும் மனமே தந்தாய் – என்றும், புலன்களை அடக்குதல் என்பது அவனுடைய திருவருளால் கைகூடும் என்றார். ஐந்து புலன்களையும் அடக்கியவுடன் பகவத் அனுபவத்திற்கு அங்கமான பக்தி போன்றவைகள் தாமாகவே உண்டாகுமா என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார். மயர்வற மதிநலமருளினன் - என்ற பக்தியின் நிலையை எட்டிய ஞானத்தை அவனே அளித்தான் என்று கூறுவதன் மூலம், பக்தி முதலானவை ஏற்படுவது அவனுடைய திருவருளால் என்றார். ஆனாலும் முதலில் தோன்றிய பக்தி எப்படி வந்தது என்றால் திருவாய்மொழி (5-3-4) - காதல் கடல் புரைய விளைவித்த காரமர்மேனி நங்கண்ணன் - என்று அவனே வளர்த்தான் என்றார். அந்த பக்தி வளர்வதற்கு எல்லை எது என்றால் திருவாய்மொழி (10-10-10) - அதனிற் பெரிய என்னவா - என்று தத்வத்ரயங்களை தன்னுள்ளே அந்தர்பவிக்கும்படியான நின்ற நிலையை அருளிச்செய்தார். திருவாய்மொழி (10-10-10) - என் அவாவறச் சூழ்ந்தாய் - என்று தன்னுடைய திருவாயால் அருளிச்செய்ததால், சரீர தொடர்பை அறுத்து, பரமபதத்திலே கொண்டு போய், தன்னுடைய திருவடிகளில் சேர்த்தான் என்று அருளிச்செய்தார்.

மூலம் - ஆக இவ்வைந்து அர்த்தமுமே திருவாய்மொழியாலே ப்ரதிபாதிக்கிறது; அல்லாதவை ஆநுஷங்கிகஸித்தமாய் வந்ததித்தனை; எங்ஙனேயென்னில் – பரதத்வம் ஸ்ரீமந் நாராயணனென்றும், அநந்யார்ஹ சேஷத்வமே ஸ்வரூபமென்றும், குணாநுபவ ஜநித ப்ரீதிகாரித கைங்கர்யமே புருஷார்த்தமென்றும், அஹங்கார மமகாரங்கள் தத்விரோதியென்றும், தந்நிவ்ருத்திக்கும் கைங்கர்ய ஸித்திக்கும் ஸர்வஸுலபனான ஸர்வேச்வரன் திருவடிகளே உபாயமென்றும், ஜிதேந்த்ரியத்வம் தொடக்கமாக கைங்கர்ய பர்யந்தமாக உபாய பலமென்றும் சொல்லிநின்றது.

விளக்கம் - ஆக இந்த அர்த்த பஞ்சகத்தையே திருவாய்மொழியில் காணலாம். இவற்றின் இடையில் மேலும் பல கருத்துக்களும் வந்தன, எப்படி? பரம்பொருள் என்பவன் ஸ்ரீமந் நாராயணனே என்றும், வேறு ஒன்றில்லாத சேஷத்வமே ஸ்வரூபம் என்றும், ஸர்வேச்வரனின் குணங்களை அனுபவிப்பதன் மூலம் ஏற்படும் ப்ரேமையாலே செய்யப்படும் கைங்கர்யமே புருஷார்த்தம் என்றும், அஹங்காரம் மற்றும் மமகாரம் இதன் விரோதி என்றும், விரோதிகள் நீங்குவதற்கும் கைங்கர்யம் கிட்டுவதற்கும் அடைவதற்குச் சுலபமாக உள்ள ஸர்வேச்வரனின் திருவடிகளே உபாயம் என்றும், இந்த்ரியங்கள் வசப்படுதல் தொடக்கமாக கைங்கர்யம் வரை உள்ள பலவும் அந்த உபாயத்தின் பலன் என்றும் கூறப்பட்டது.

மூலம் - ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்துச்ச ப்ரத்யகாத்மந: ப்ராப்த்யுபாயம் பலம் ப்ராப்தேஸ் ததா ப்ராப்திவிரோதி ச வதந்தி ஸகலா வேதாஸ் ஸேதிஹாஸ புராணகா: முநயஸ்ச மஹாத்மாநோ வேதவேதார்த்த வேதிந: என்று ஸகலவேத தாத்பர்யம் இவ்வர்த்தபஞ்சகமென்னுமிடத்தைப் பெரியவங்கிபுரத்துநம்பி திருவாய்மொழிக்கு வாக்யார்த்தமாக அருளிச் செய்தார்.

விளக்கம் – ஹாரித ஸம்ஹிதை – ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்துச்ச ப்ரத்யகாத்மந: ப்ராப்த்யுபாயம் பலம் ப்ராப்தேஸ் ததா ப்ராப்திவிரோதி ச வதந்தி ஸகலா வேதாஸ் ஸேதிஹாஸ புராணகா: முநயஸ்ச மஹாத்மாநோ வேதவேதார்த்த வேதிந: – அடையத் தகுந்த பரமாத்மாவின் ஸ்வரூபம், அடைகின்ற ஆத்மாவின் ஸ்வரூபம், அடைவதற்கான உபாயம், அடைவதற்கான பலன், அடைவதைத் தடுக்கும் விரோதி என்னும் இவற்றை இதிஹாசம் மற்றும் புராணங்களுடன் கூடிய அனைத்து வேதங்களின் பொருளை அறிந்தவர்களாகிய முனிவர்கள் இதனையே கூறுகின்றனர் என்றது. ஆக அனைத்து வேதங்களும் கூறுவது இந்த அர்த்தபஞ்சகமே என்றும், இவையே திருவாய்மொழியின் பொருளாக உள்ளன என்றும் பெரியவங்கிபுரத்துநம்பி அருளிச் செய்தார்.

முதல் ச்ரிய:பதி ஸம்பூர்ணம்

இரண்டாம் ச்ரிய:பதி

குறிப்பு – கடந்த அவதாரிகையில் எம்பெருமான், ஜீவன், உபாயம், விரோதி மற்றும் பலன் ஆகிய அர்த்தபஞ்சகத்தையும், திருமந்திரத்தையும் திருவாய்மொழி கூறுவதாக அருளிச் செய்தார். இந்த அவதாரிகையில், திருவாய்மொழி த்வய மந்திரத்தைக் கூறுகிறது என்பதை அருளிச் செய்கிறார்.

மூலம் - ஸ்ரீய:பதியாய், அவாப்த ஸமஸ்தகாமனாய், ஸமஸ்த கல்யாண குணாத்மகனான ஸர்வேச்வரன் "மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்து" என்கிறபடியே ஐந்மபரம்பரைகளிலே தோள் மாறித் திரிகிற இவரை இவ்வர்த்தபஞ்சகத்தையும் விஸததமமாக அறியவல்லராம்படி முதலடியிலே நிர்ஹேதுகமாக விசேஷகடாக்ஷம் பண்ணியருளினான்.

விளக்கம் - மஹாலக்ஷ்மியின் நாயகனாய், அனைத்துவிதமான விருப்பங்களும் பூர்ணமாக நிறைவேறும்படி இருப்பவனாக, அனைத்துவிதமான கல்யாண குணங்களையும் கொண்டவனாய் இருக்கின்ற ஸர்வேச்வரன் – திருவாய்மொழி (2-6-8) – மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்து – என்னும்படி, தொடர்சியாக வரும் பல பிறவிகளில் மாறிமாறித்

தோன்றுகின்ற ஆழ்வாரை, அர்த்தபஞ்சகம் என்பதை அறிய வல்லராகும்படி முதலடியில், இவரிடமிருந்து எதனையும் எதிர்பாராமல், விசேஷமாகக் கடாக்ஷம் செய்தான்.

மூலம் - நம்மாழ்வர் திருவாய்மொழி ப்ரபந்தத்தாலே த்வய விவரணம் பண்ணுகிறார்; இதில் முதலிட்டு மூன்று பத்தாலே உத்தரார்த்தத்தை விவரிக்கிறார்; மேலிட்டு மூன்று பத்தாலே பூர்வார்த்தத்தை விவரிக்கிறார்; மேலிட்டு மூன்று பத்தாலே உபாயோப யோகியான குணங்களையும் ஆத்மாத்மீயங்களில் தமக்கு நசையற்றபடியையும், அவனோடு தமக்குண்டான நிருபாதிக ஸம்பந்தத்தையும் அருளிச் செய்தார்; மேலிற்பத்தாலே தாம் ப்ரார்த்தித்தபடியே பெற்றபடியைச் சொல்லித் தலைக்கட்டுகிறார்.

விளக்கம் - திருவாய்மொழி மூலம் நம்மாழ்வார் த்வயத்தின் பொருளை விவரிக்கிறார். இதில் முதல் இரண்டு பத்தின் மூலம் த்வய மந்திரத்தின் இரண்டாவது வரிக்கான பொருளை விவரிக்கிறார். அடுத்து உள்ள மூன்று பத்துக்களால், முதல் வரியின் பொருளை விவரிக்கிறார். அதற்கும் அடுத்த மூன்று பத்துக்களால், உபாயத்திற்கு ஏற்ற குணங்கள், ஆத்மா மற்றும் ஆத்மாவுடன் தொடர்புடைய பொருள்கள் மீது பற்றில்லாத தன்மை, எம்பெருமானுடன் தனக்கு இயற்கையாகவே உள்ள தொடர்பு ஆகியவற்றை அருளிச் செய்கிறார். பத்தாம் பத்தின் மூலம், தான் வேண்டியவற்றை அடைந்ததாகக் கூறி, நிறைவு செய்கிறார்.

மூலம் - இதில் முதற்பத்தாலே - "உயர்வறவுயர்நலமுடையவன் – அயர்வறுமமரர்களதி பதியவனவன் துயரறு சுடரடி தொழுதெழென் மனனே" என்று ஸமஸ்த கல்யாண குணாத்மகனாய், ஸஶ்ரிபோக்யனானவன் திருவடிகளில் கைங்கர்யமே புருஷார்த்த மென்று நிர்ணயித்து, உக்தமான அர்த்தத்துக்கும் வக்ஷ்யமாணமான அர்த்தத்துக்கு ப்ரமாணம் - "உளன் சுடர்மிகு சுருதியுள்" என்று நிர்தோஷமான ச்ருதியே ப்ரமாணம் என்றும், ஏவம்விதனாவன் ஆரென்ன, "வண்புகழ்நாரணன்" என்றும், "திருவுடையடிகள்" என்றும், "செல்வநாரணன்" என்றும் விசேஷித்து "தொழுதெழென் மனனே" என்று உபக்ரமித்து, "அயர்ப்பிலனலற்றுவன் தழுவுவன் வணங்குவனமர்ந்தே" என்று த்ரிவித கரணங்களாலும் அடிமை செய்து தலைக்கட்டுகையாலே பகவத் கைங்கர்யமே புருஷார்த்தம் என்று அறுதியிட்டார்.

விளக்கம் - முதல் பத்தால், (1-1-1) – உயர்வறவுயர்நலமுடையவன் அயர்வறுமமரர்களதி பதியவனவன் துயரறு சுடரடி தொழுதெழென் மனனே - என்று அனைத்துவிதமான கல்யாண குணங்களையும் உடையவனாகவும், நித்யசூரிகளுக்கு இனிமையாக உள்ளவனாகவும் இருக்கின்ற எம்பெருமானின் திருவடிகளில் கைங்கர்யம் செய்தலே

புருஷார்த்தம் என்று நிர்ணயித்தார். இதுவரை கூரியவற்றுக்கும், இனிக் கூற உள்ளதற்கும் ப்ரமாணம் எது என்றால் (1-1-7) - உளன் சுடர்மிகு சுருதியுள் – என்று தோஷங்கள் இல்லாத வேதங்களே ப்ரமாணம் என்றார். இத்தகைய தன்மைகளை உடையவன் யார் என்றால் (1-2-10) - வண்புகழ் நாரணன் – என்றும், (1-3-8) – திருவுடையடிகள் – என்றும், (1-10-8) - செல்வநாரணன் - என்றும் சிறப்பாகக் கூறினார். (1-3-10) - தொழுதெழென் மனனே - என்று தொடங்கி, (1-3-10) – அயர்ப்பிலனலற்றுவன் தழுவுவன் வணங்குவனமர்ந்தே – என்று மூன்று கரணங்களால் (வாக்கு, மனம், உடல்) கைங்கர்யம் செய்வது - என்று முடித்தார். இதன் மூலம், பகவத் கைங்கர்யமே புருஷார்த்தம் என்று உறுதியாகக் கூறினார்.

மூலம் - இரண்டாம் பத்தால் இந்த கைங்கர்யத்துக்கு விரோதியான ப்ரக்ருதி ஸம்பந்தத்தையுங் கழித்து, ஒளிக்கொண்ட சோதிமயமாய், இக்கைங்கர்யத்துக்கு தேசிகரான அடியார்கள் குழாங்களை உடன்கூடுவதென்று கொலோ என்று தாமும் ப்ரார்த்தித்து, "நலமந்தமில்லதோர் நாடு புகுவீர்" என்று பிறர்க்கும் உபதேசிக்கையாலே, "இவர்க்கு பரமபதத்திலே நோக்காயிருந்தது" என்று ஈச்வரன் பரமபதத்தைக் கொடுக்கப்புக, "எம்மா வீட்டுத் திறமும் செப்பம்" என்று எனக்கு அதிலொரு நிர்பந்தமில்லை; "தனக்கேயாகவெனைக் கொள்ளுமீதே" என்று உனக்கேயாயிருக் குமிருப்பே எனக்கு வேண்டுவதென்று இப்புருஷார்த்தத்தை ஓடவைத்தார்.

விளக்கம் - இரண்டாம் பத்து மூலம் இந்தக் கைங்கர்யத்துக்கு விரோதியான உலகத் தொடர்பை நீக்கி, (2-3-10) - ஒளிக்கொண்ட சோதிமயமாய் – என்று இக்கைங்கர்யத்துக்கு ஏற்றவர்களான (2-3-10) – அடியார்கள் குழாங்களை உடன் கூடுவதென்று கொலோ – என்று கூறுவதால், தானும் அதனையே வேண்டினார். (2-8-4) – நலமந்தமில்லதோர் நாடு புகுவீர் - என்று மற்றவர்களுக்கு இதனையே உபதேசிப்பதால், "இவருக்குப் பரமபதமே குறிக்கோளாக உள்ளது", என்று எண்ணிய ஈச்வரன், பரமபதத்தை அளிப்பதற்கு முன்வந்தான். ஆனால் ஆழ்வார், (2-9-1) - எம்மா வீட்டுத் திறமும் செப்பம் - என்று கூறி, "எனக்கு பரமபதம் மீது ஆசையில்லை, (2-9-4) - தனக்கேயாகவெனைக் கொள்ளுமீதே – என்று, உனக்கே இருக்கின்ற வாழ்க்கையே எனக்கு வேண்டியது", என்று புருஷார்த்தத்தை நிர்ணயித்தார்.

வ்யாக்யானம் - மூன்றாம் பத்தால், இவருக்கு கைங்கர்யத்திலுண்டான ருசியையும் த்வரையையும் கண்ட ஈச்வரன், கைங்கர்யத்துக்கு ஏகாந்தமான திருமலையில் நிலையைக் காட்டிக் கொடுக்கக்கண்டு, "வழுவிலாவடிமை செய்யவேண்டும் நாம்" என்று பாரித்து, பாரித்தபடியே பாகவத சேஷத்வ பர்யந்தமாக வாசிகமாக அடிமைசெய்து தலைக் கட்டுகிறார்.

விளக்கம் – மூன்றாம் பத்தால் இவருக்குக் கைங்கர்யத்தில் இருக்கின்ற ருசியையும் வேகத்தையும் கண்ட எம்பெருமான், கைங்கர்யத்துக்கு ஏகாந்தமாகத் தான் திருமலையில் நிற்கும் நிலையைக் காண்பித்தான். இதனைக் கண்டு (3-3-1) - வழுவிலாவடிமை செய்யவேண்டும் நாம் – என்று விழுந்து, விழுந்தபடியே பாகவதர்களுக்கு அடிமையாக, அவர்களுக்கு அடிமை செய்து முடித்தார்.

வ்யாக்யானம் - நான்காம் பத்தால், இப்புருஷார்த்தத்துக்கு உபாயம் திருநாரணன்தாளென்றும், "குடிமன்னு மின் சுவர்க்கம்", "எல்லாம் விட்ட இறுகல் இறப்பு", "ஐங்கருவிகண்டவின்பம் தெரிய அளவில்லாச் சிற்றின்பம்" என்று தாமும் அநுஸந்தித்தார். அஞ்சாம் பத்தால் இந்த இஷ்டப்ராப்திக்கும், அநிஷ்ட நிவ்ருத்திக்கும் "ஆறெனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்" என்று – தன் திருவடிகளையே உபாயமாகத் தந்தான் என்றார்.

விளக்கம் – நான்காம் பத்தால் புருஷார்த்தத்துக்கு உபாயம் (4-1-1) – திருநாரணன் தாள் – என்றும், புருஷார்த்தத்துக்கு விரோதி (4-1-9) - குடிமன்னு மின் சுவர்க்கம் – என்றும், (4-1-10) - எல்லாம் விட்ட இறுகல் இறப்பு – என்றும், ஐச்வர்ய கைவல்யங்களே விரோதி என்றும் மற்றவர்களுக்கு உபதேசித்து, (4-9-10) - ஐங்கருவிகண்டவின்பம் தெரிய அளவில்லாச் சிற்றின்பம் - என்று தனக்கும் அவையே விரோதி என்று அருளிச்செய்கிறார். ஐந்தாம் பத்தால், விரும்பியவற்றை அடைவதற்கும் விருப்பம் இல்லாதவை நீங்குவதற்கும் (5-7-10) - ஆறெனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய் – என்று அவன் தனது திருவடிகளையே உபாயமாக அளித்தான் என்றார்.

வ்யாக்யானம் - அவன் தந்த உபாயத்தை கடகரை முன்னிட்டு பெரியபிராட்டியார் புருஷகாரமாக "அலர்மேல் மங்கையுறைமார்பா - உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேன்" என்று ஸ்வீகரித்தார் ஆறாம் பத்தால்.

விளக்கம் - ஆறாம் பத்தால், அவன் தந்த உபாயத்தை அவனிடம் சேர்ப்பவர்களை முன்னிட்டு, பெரியபிராட்டியாரை புருஷகாரமாகக் கொண்டு (6-10-10) - அலர்மேல் மங்கையுறைமார்பா - உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேன் – என்று ஏற்றுக்கொண்டார்.

வ்யாக்யானம் - ஏழாம் பத்தால், இப்படி ஸித்தோபாய ஸ்வீகாரம் பண்ணியிருக்கச் செய்தேயும், சடக்கென பலியாமையாலே விஷண்ணராய், "கடல்ஞாலங்காக்கின்ற மின்னுநேமியினாய்" என்று தொடங்கி உபாயோபயோகியான குணங்களைச் சொல்லிக் கூப்பிட, "கூராராழி வெண்சங்கேந்தி - வாராய்" என்று இவர் ஆசைப்பட்டபடியே வெள்ளைச்சுரிசங்கொடாழி ஏந்தி வந்த இது மாநஸாநுபவமாத்ரமாய் பாஹ்ய ஸம்ஸ்லேஷம் கிடையாமையாலே, விச்லேஷித்தபடியை அருளிச்செய்தார்.

விளக்கம் - ஏழாம் பத்தால் இப்படி ஸித்தோபாயமாக உள்ள எம்பெருமானை இவர் ஏற்றுக் கொண்டபோதிலும், அந்த உபாயம் சட்டென்று உடனே பலிக்காமையால் துன்பம் கொண்டார். ஆகவே (7-1-2) - கடல்ஞாலங்காக்கின்ற மின்னுநேமியினாய் - என்று தொடங்கி, உபாயத்திற்கான குணங்களைக் கூறி அவனை அழைத்தார். (6-9-1) கூராராழி வெண்சங்கேந்தி வாராய் - என்று இவர் ஆசைப்பட்டபடி, (7-3-1) – வெள்ளைச்சுரிசங்கொடாழி ஏந்தி – என்னும்படியாக எம்பெருமான் காட்சி அளித்தான். ஆனால் இந்த அனுபவம் மனதால் மட்டுமே கிட்டியதாலும், அவனை உடலால் அணைத்துக் கொள்ள முடியாமையாலும், தனது துயரத்தைக் கூறினார் (இவை பாமரு, ஏழை என்னும் திருவாய்மொழிகள்).

வ்யாக்யானம் - எட்டாம் பத்தால், கீழ்ப் பிறந்த ஸம்ச்லேஷம் பாஹ்ய ஸம்ச்லேஷ யோக்யமல்லாமையாலே "உமருகந்துகந்த உருவம் நின்றுருவமாகி உன்றனக் கன்பரானார் அவருந்தமர்ந்த செய்கை உன் மாயை" என்று, "இப்படி ஆச்ரிதாதீந ஸ்வரூப, ஸ்தித்யாதிகள் உடையவன் நமக்குத் தன்னைக் காட்டி மறைக்கைக்கு அடி, ஆத்மாத்மீயங்களில் ஏதேனும் நசையுண்டாகவேணும்", என்று அதிசங்கை பண்ணி, அவற்றில் நசையற்றபடியே அருளிச்செய்தார்.

விளக்கம் - எட்டாம் பத்தால், மேலே கண்ட மனக்காட்சி (இதனை ஆழியெழ, கற்பார் இராமபிரானை போன்றவற்றில் கூறினார்) வெளியில் புறக்கண்களில் இவர் விரும்பியபடி கிட்டாமல் போனதால் (8-1-4) - உமருகந்துகந்த உருவம் நின்றுருவமாகி உன்றனக் கன்பரானார் அவருந்தமர்ந்த செய்கை உன் மாயை – என்று அடியார்களுக்குச் சொந்தமான ஸ்வரூபம் முதலானவற்றை இவன் வைத்துக் கொண்டு காண்பிக்காமல் மறைக்கிறானே, இதற்குக் காரணம் - ஆத்மாவிலும் ஆத்மா உடன் தொடர்புடைய பொருள்களிலும் பற்று நீங்க வேண்டும் என்று எண்ணினார். ஆகவே அவற்றில் பற்றல்லாத தன்மையை (8-2-7) அருளிச்செய்தார்.

வ்யாக்யானம் - ஒன்பதாம் பத்தால், "நீர் என்றிய அதிசங்கை பண்ணிப்படுகிறீர் இப்படி?" என்று தன்னுடைய நிருபாதிக பந்தத்தையும் காட்டி, "நான் நாராயணன், ஸர்வசக்தியுக்தன், உம்முடைய ஸர்வாபேக்ஷிதங்களையும் செய்து தலைக்கட்டுகிறோம்", என்று அருளிச்செய்ய, "சீலமெல்லையிலான்" என்று அவனுடைய சீலகுணங்களிலே ஆழங்காற்பட்டார். பத்தாம் பத்தால் ஆழ்வாருடைய ஆற்றாமையைக் கண்டு திருமோகூரில் தங்குவேட்டையாக வந்து தங்கி, இவருக்கு அர்ச்சிராதிகதியையும் காட்டிக்கொடுத்து, இவர் ப்ரார்த்தித்தபடியே "என்னவாவறச்சூழ்ந்தாய்" என்று இவர் திருவாயால் அருளிச்செய்யும்படி பேற்றைப் பண்ணிக்கொடுத்தபடியை அருளிச்செய்தார்.

விளக்கம் – ஒன்பதாம் பத்தால், "நீவீர் ஏன் இப்படிச் சந்தேகம் கொள்கிறீர்? (இது ஓராயிரமாய் என்னும் பாசுரம்)", என்று எம்பெருமான் வியந்து, ஆழ்வாரிடம் தனக்கு உள்ள இயல்பான தொடர்பைக் காட்டினான். மேலும் அவன் அவரிடம், "நான்

நாராயணன், அனைத்து சக்தியையும் உடையவன், உம்முடைய அனைத்து விருப்பங்களையும் நாம் முடித்து தருகிறோம்", என்று அருளிச்செய்தான். இதனைக் கண்ட ஆழ்வார் (9-3-11) – சீலம் எல்லையிலான் - என்று அவனது எளிமை குணத்தில் சிக்கி நின்றார். பத்தாம் பத்தால், ஆழ்வாரின் ஆற்றாமையைக் கண்ட எம்பெருமான் திருமோகூரில் வந்து தங்கி, இவருக்கு அர்ச்சிராதி மார்க்கத்தையும் காண்பித்து, ஆழ்வார் விண்ணப்பித்தபடி (10-10-10) - என்னவாவறச்சூழ்ந்தாய் – என்று இவரது திருவாயாலேயே அருளிச்செய்யும்படியான பேற்றையும் அளித்தான் என்று அருளிச் செய்தார்.

இரண்டாம் ச்ரிய:பதி ஸம்பூர்ணம்

மூன்றாம் ச்ரிய:பதி

குறிப்பு – திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி, திருவாய்மொழி ஆஜிய நான்கு பிரபந்தங்களிலும் ஆழ்வாருக்கு உள்ள நிலை வேறுபாட்டை பரதனின் நிலையுடன் உவமையாகக் கூற எண்ணினார். மேலும் திருவாய்மொழியானது பக்தி யோகத்தின் மேன்மையைக் கூறுகிறது என்று இதில் அருளிச் செய்கிறார்.

வ்யாக்யானம் - ச்ரிய:பதியாய், அவாப்த ஸமஸ்தகாமனாய், ஸமஸ்த கல்யாண குணாத்மகனான ஸர்வேச்வரன், "மாறி மாறிப் பல பிறப்பு பிறந்து" என்கிறபடியே, ஐந்மபரம்பரைகளிலே தோள்மாறி நித்யஸம்ஸரியாய்ப் போந்த இவரை - "அடிமையடைந்து உள்ளந்தேறி ஈறிலின்பத் திருவெள்ளம் யான் மூழ்கினன்" என்று தம் திருவாயாலே அருளிச் செய்யலாம்படி முதலடியிலே விசேஷ கடாக்ஷத்தைப் பண்ணியருளினான். முதல் தன்னிலே சித்ஸ்வரூபமாதல், அசித்ஸ்வரூபமாதல், ஈச்வர ஸ்வரூபமாதல் அறியாதே யிருக்கிற இவர்க்கு அசிதம்சம் த்யாஜ்யமென்னுமிடத்தையும், சேதனன் உபாதேயன் என்னுமிடத்தையும், தான் உபாதேயதமன் என்னுமிடத்தையும் அவன் தானே காட்டிக் கொடுக்கக் கண்டு, அவனோட்டை அநுபவத்துக்கு இத்தேஹஸம்பந்தம் விரோதியாயிருக்கையாலே, "த்வதநுபவ விரோதியான இத்தேஹஸம்பந்தத்தை அறுத்துத் தந்தருளவேணும்", என்று அர்த்தித்தார் திருவிருத்தத்தில்; ஸம்ஸார ஸம்பந்தமற்று ஒரு தேசவிசேஷத்திலே போனால் அநுபவிக்கக் கடவ தன்னுடைய மேன்மையையும், நீர்மையையும், வடிவழகையும் பரப்பற ஏழு பாட்டாலே அநுபவிக்கலாம்படி இங்கே இருக்கச்செய்தே ஒரு தசாவைசத்யத்தைப் பண்ணிக் கொடுக்க, அவ்வழகை அநுபவித்தார் திருவாசிரியத்தில்; இப்படி அநுபவித்த விஷயத்திலே விஷயாநுரூபமான ஆசை கரைபுரண்டபடியைச் சொன்னார் திருவந்தாதியில்; ஆமத்தையறுத்துப் பசியை மிகுத்துச் சோறிடுவாரைப் போலே தமக்கு ருசியைப் பிறப்பித்தபடியையும், அந்த ருசிதான் பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகளாய்க்

கொண்டு பக்வமானபடியையும், பின்பு ப்ரக்ருதி ஸம்பந்தமும் அற்றுப் பேற்றோடே தலைக்கட்டினபடியையும் சொல்லுகிறது திருவாய்மொழியில்.

விளக்கம் - மஹாலக்ஷ்மியின் நாயகனாய், அனைத்துவிதமான விருப்பங்களும் பூர்ணமாக நிறைவேறும்படி இருப்பவனாக, அனைத்துவிதமான கல்யாண குணங்களையும் கொண்டவனாய் இருக்கின்ற ஸர்வேச்வரன் – திருவாய்மொழி (2-6-8) – மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்து – என்னும்படி, தொடர்சியாக வரும் பல பிறவிகளில் மாறிமாறித் தோன்றுகின்ற ஆழ்வாரை, (2-6-8) - அடிமையடைந்து உள்ளந்தேறி ஈறிலின்பத் திருவெள்ளம் யான் மூழ்கினன் – என்று தன்னுடைய வாயாலேயே ஆழ்வார் கூறும்படியாக முதலடியிலேயே, இவரிடமிருந்து எதனையும் எதிர்பாராமல், விசேஷமாகக் கடாக்ஷம் செய்தான். இவருக்குச் சித்தின் ஸ்வரூபம், அசித்தின் ஸ்வரூபம், ஸர்வேச்வரனின் ஸ்வரூபம் ஆகியவை என்றால் என்ன என்பதே அறியாமல் இருந்தபோது - அசித் கைவிடத்தக்கது, சித் ஏற்றுக்கொள்ளத்தக்கது, தான் (எம்பெருமான்) ஏற்றுக் கொள்ளத்தக்க அனைத்திலும் உயர்ந்தவன் போன்ற பலவற்றையும் உணர்த்தி, ஆழ்வாருக்குத் தானே ஞானத்தை காட்டிக் கொடுத்தான். அவனுடைய அனுபவத்தை அனுபவிப்பதற்குத் தடையாக உள்ள இந்த சரீரத்தை அறுக்க வேண்டும் என்று ஆழ்வார் வேண்டினார். இதனை திருவ்ருத்தத்தில் வேண்டினார். ஸம்ஸார தொடர்பு நீங்கி ஒரு திவ்ய தேசத்துக்குச் சென்றால் அனுபவிக்கக்கூடிய தன்னுடைய மென்மை, எளிமை, திருமேனி அழகு ஆகியவற்றை ஆழ்வார் இருந்த இடத்திலேயே அனுபவிக்கும்படி எம்பெருமான் செய்து கொடுத்தான். இதனைச் சுருக்கமாக ஏழு பாசுரங்களால் எம்பெருமானின் அழகைத் திருவாசிரியத்தில் அனுபவித்தார். இப்படியாக அனுபவித்த விஷயத்தில், அந்த அனுபவத்திற்குத் தகுதியான ஆசை கரைபுரண்டு ஓடியதைத் திருவந்தாதியில் அருளிச்செய்தார். பசியின்மையைப் போக்கி, பசியை அதிகப்படுத்தி, சோறு இடுபவர்கள் போன்று, தனக்கு ருசியை எம்பெருமான் பிறப்பித்ததையும், அந்தருசியானது பரபக்தி-பரஜ்ஞான-பரமபக்தி எனப் பக்குவமானது என்றும், சரீர தொடர்பு அற்று பேறு பெற்றதையும் திருவாய்மொழியில் அருளிச்செய்தார்.

வ்யாக்யானம் - கைங்கர்ய மநோரதம் பண்ணிக்கொண்டு வரக்கொள்ள, கைகேயி ராஜந் என்ற சொற்கேட்டு ஸ்ரீபரதாழ்வான் பட்ட பாடுபோலே இருக்கிறதாயிற்று திருவிருத்தத்தில் நிலை; அவன் திருச்சித்திரகூடத்திலே பெருமாள் எழுந்தருளியி ருந்தாரென்று கேட்டு ஏபிச்ச ஸசிவைஸ்ஸார்த்தம் என்கிறபடியே – என்னொருவன் கண்ணில் கண்ணநீர் பொறுக்கமாட்டாதவர் இத்தனைபேர் ஆறாமை கண்டால் மீளாதொழிவரோ? சிரஸா யாசிதோ மயா என்னபிமதம் தம் தலையாலே இரந்து செய்யக்கடவ அவர், நான் என் தலையாலே மறுப்பரோ? ப்ராது: நான் தம் பின் பிறந்தவனல்லேனோ? சிஷ்யஸ்ய பின் பிறந்தவனென்று கூறுகொள்ள இருக்கிறேனோ? மந்த்ர ஸம்பந்தமும் தம்மோடேயன்றோ? தாஸ்ஸ்ய சிஷ்யனாய் க்ரய விக்ரயார்ஹனன்றிக்கேயிருக்கிறேனோ? ப்ரஸாதம் கர்த்துமர்ஹதி ஆன பின்பு என்பக்கல்

ப்ரஸாதத்தைப் பண்ணியருளாரோ என்று மநோரதித்துக் கொண்டு போகிறபோதை தரிப்புப்போலே திருவாசிரியத்தில் நிலை; ஸ்ரீநந்திக்ராமத்திலே ராமாகமநகாங்க்ஷயா என்கிறபடியே பதினாலாண்டும் ஆசை வளர்த்துக் கொண்டிருந்தார்போலே இருக்கிறது திருவந்தாதியில்; மீண்டெழுந்தருளி திருவபிஷேகம் பண்ணியருளி, அவனும் ஸ்வரூபாநுரூபமான பேறு பெற்றுப் போலேயிருக்கிறது இவர்க்குத் திருவாய்மொழியில் பேறு.

விளக்கம் - இராமன் மனம் மகிழும்படி அவனுக்குக் கைங்கர்யம் செய்யவேண்டும் என்ற ஆவலுடன் பரதன் அயோத்திக்கு ஓடிவந்தான். ஆனால் கைகேயி பரதனை, "ராஜன்", என்று அழைத்தவுடன், பரதன் துடித்த நிலையில் ஆழ்வார் திருவிருத்தத்தில் துடித்தார். திருச்சித்திரக்கூடத்தில் இராமன் எழுந்தருளி உள்ளான் என்ற செய்தியைப் பரதன் அறிந்தான். அவன் உடனே, "என்னுடைய கண்ணில் இப்படி வேதனை நீர் வடிவதைக் கண்டாலே பெறுக்காத இராமன், இத்தனை பேர் துடிப்பதைக் கண்டவுடன் அயோத்தி திரும்பாமல் இருப்பானா? எனக்கு விருப்பமானவற்றைத் தனது தலையாலே செய்யும் இராமன், என் தலை வணங்கிக் கேட்பதை மறுப்பானோ? நான் அவன் பின் பிறந்தவன் அல்லனோ? பின் பிறந்தவன் என்று கூறும்படியாக உள்ளேனோ? மந்திரத்தொடர்பு அவனுடன் உள்ளது அன்றோ? சிஷ்யனாய் கொடுத்து வாங்கலுக்கு தகுதி இல்லாமல் உள்ளேனோ? என் பக்கம் கடாக்ஷிக்காமல் இருப்பானே ?," என்று போகும் வழி முழுவதும் யோசித்து கொண்டே சென்ற நிலையை போன்றே ஆழ்வாரின் நிலை திருவாசிரியாத்தில் இருந்த்து. ந்ந்தி க்ராமத்தில் இருந்து படி 14 ஆண்டுகள் கழித்ஹ்டு இராமன் த்ரும்புவான் என்று 14 ஆண்டுகல் பரதன் அசையைவளர்த்தபடி இருந்த நிலை ஆழ்வாருக்கு த்ருவந்தாதியில் இருந்த்து. இராமன் அயோதிக்கு மீண்டும் திரும்பி பட்டாபிஷேகம் செய்து கொள்ள பரதன் தன்னுடைய ஸ்வரூபத்தை பேறு பெற்றது போன்று த்ருவய்மொழியில் ஆழ்வாரின் நிலை இருந்த்து

வ்யாக்யானம் - திருவாய்மொழிக்காக ஸங்க்ரஹம் முதல் திருவாய்மொழி; முதல் திருவாய் மொழியினுடைய ஸங்க்ரஹம் முதல் மூன்று பாட்டு; முதல் மூன்று பாட்டினுடைய ஸங்க்ரஹம் முதல் பாட்டு; முதல் பாட்டினுடைய ஸங்க்ரஹம் முதலடி. என்போல் என்னில்; ருசோ யஜூம்ஷி ஸாமாநி ததைவாதர்வணாநி ச ஸர்வமஷ்டாக்ஷராந்தஸ்ஸ்தம் யச்சாந் யதபி வாங்மயம் என்கிறபடியே ஸகலவேத ஸங்க்ரஹம் திருமந்திரமாய், அதினுடைய ஸங்க்ரஹம் ப்ரணவமாய், அதினுடைய ஸங்க்ரஹம் அகாரமானாப்போலே. மற்றும் பாரத ராமாயணாதிகளையும் ஸங்க்ஷேப விஸ்தரங்களாலே செய்தார்களிறே.

விளக்கம் - திருவாய்மொழியின் சுருக்கம் முதல் திருவாய்மொழி; முதல் திருவாய்மொழியின் சுருக்கம் முதல் மூன்று பாசுரங்கள்; முதல் மூன்று பாசுரங்களின்

சுருக்கம் முதல் பாசுரம்; முதல் பாசுரத்தின் சுருக்கம் அதன் முதல் வரி ஆகும். இது எப்படி என்றால் – ருசோ யஜூம்ஷி ஸாமாநி ததைவாதர்வணாநி ச ஸர்வமஷ்டாக்ஷரா ந்தஸ்ஸ்தம் யச்சாந் யதபி வாங்மயம் – ருக், யஜுர் , ஸாமம், அதர்வணம் மற்றும் ஒளி மற்றும் ஒலி உருவமாக உள்ள அனைத்தும் எட்டு எழுத்துக்கள் கொண்ட திருமந்திரத்தில் அடக்கம் – என்னும்படி, அனைத்து வேதங்களின் சுருக்கம் ப்ரணவம் ஆகும். மேலும், ப்ரணவத்தின் சுருக்கம் "அ" என்ற எழுத்து என்பது போல் ஆகும். இது போன்று இராமாயணம், மஹாபாரதம் ஆகியவற்றைச் சுருக்கியும் விவரித்தும் கூறியது காண்க.

மூன்றாம் ச்ரிய:பதி ஸம்பூர்ணம்

ஈடு மஹாப்ரவேசம் ஸம்பூர்ணம்

1. உயர்வற வுயர்நலமுடையவன் யவனவன்
மயர்வற மதிநலமருளினன் யவனவன்
அயர்வறு மமரர்க ளதிபதி யவனவன்
துயரறு சுடரடி தோழுதெழென் மனனே.

பொருள் - என்னுடைய மனமே! தேவர்கள் போன்ற அனைத்துவிதமான பொருள்களின் மேன்மைகள் உயர்ந்தது இல்லை என்று கூறும்படியாக, மேலும்மேலும் உயர்ந்தபடி இருக்கின்ற நற்குணங்களை உடையவன் எவனோ, அவன் என்னிடம் இருந்த விபரீதமான ஞானம் என்னும் அறியாமையை நீக்கினான்; அவனே மறதி என்பதே இல்லாத நித்யசூரிகளின் தலைவனாக உள்ளான்; அப்படிபட்ட அவனுடைய திருவடிகள் அனைத்து துயரங்களையும் நீக்குகின்றன. ஒளி வீசும் அந்தத் திருவடிகளைப் பிடித்துக் கொண்டு ஸம்ஸாரத்தைக் கடப்பாயாக.

அவதாரிகை – "தான் ஸமஸ்த கல்யாண குணாத்மகனாயிருக்கிற இருப்பைக் காட்டி உபகரித்தான். அக்குணங்களும் தன்னைப்பற்றி நிறம் பெற வேண்டும்படியாயிருக்கிற திவ்யாத்ம ஸ்வரூபவைலக்ஷண்யத்தைக் காட்டி உபகரித்தான். இப்பேற்றுக்கு என்பக்கல் சொல்லலாவதொன்றுமின்றிக்கேயிருக்க, நிர்ஹேதுகமாகத் தானே உபகாரகனானான்; ஸ்வஸ்வரூபாபந்நராயிருக் கிறவர்களுக்கும் அவ்வருகாயிருக்கிற இருப்பைக் காட்டி

உபகரித்தான்; தன்னுடைய திவ்ய விக்ரஹவைலக்ஷண்யத்தைக் காட்டி உபகரித்தான்" என்று அவன் பண்ணின உபகாரங்களடையச் சொல்லி, "இப்படி உபகாரகனானவன் திருவடிகளிலே நித்யகைங்கர்யத்தைப் பண்ணி உஜ்ஜீவிக்க வாராய்" என்று தம் திருவுள்ளத்தோடே கூட்டுகிறார்.

விளக்கம் - எம்பெருமான் அனைத்துவிதமான கல்யாண குணங்களுக்கும் தான் இருப்பிடமாக உள்ளதைக் காண்பித்து அருள் புரிந்தான். அப்படிப்பட்ட குணங்களும் தன்னைப் போன்றே இருக்கின்றன என்பதை விளக்குகின்ற தன்னுடைய திவ்யமான ஸ்வரூபத்தின் மேன்மையைக் காண்பித்து அருளினான். இப்படிப்பட்ட பேற்றுக்கு என்னிடம் சொல்லக்கூடிய அளவிற்கு நல்ல செயல்கள் எதுவும் இல்லாதபோதும், எந்தவிதமான காரணமும் இல்லாமல் எனக்கு உதவி செய்பவனானான். பாவங்கள் அற்ற தன்மை முதலானவற்றை அடைந்துள்ள நித்யசூரிகளுக்கு உபாயமாக உள்ள தன்னுடைய இருப்பைக் காட்டி உதவினான். தன்னுடைய திவ்ய திருமேனியை அதன் மேன்மையுடன் காண்பித்து உதவினான். இப்படியாக அவன் செய்த உதவிகளை விவரமாகக் கூறி – இப்படிப்பட்ட நன்மை செய்பவனின் திருவடிகளில் என்றும் கைங்கர்யம் செய்து பிழைக்க வருவாயாக என்று தன் திருவுள்ளத்திற்கு உபதேசித்தார்.

அவதாரிகை – "ஆறு கிண்ணகமெடுத்தால் நேர்நின்ற மரங்கள் பறியுண்டுபோய்க் கடலிலே புகும்; நீர்வஞ்சி தொடக்கமானவை வளைந்து பிழைக்கும். அது போலே பகவத் குணங்களினுடைய, எடுப்பிருந்தபடி கண்டோமுக்கு எதிரே நானென்று பிழைக்க விரகில்லை; அவன் திருவடிகளிலே தலை சாய்த்துப் பிழைக்க வாராய் நெஞ்சே!" என்கிறார். "உயர்வறவுயர்நலமுடையவன் துயரறு சுடரடி தொழுதெழுப்பாராய் (நெஞ்சே)" என்கிறார்.

விளக்கம் - ஆற்றில் வெள்ளம் வந்தால் வளைந்து கொடுக்காத மரங்கள் அடியுடன் எடுக்கப்பட்டு கடலை அடைந்து விடும், நீர் வஞ்சிக் கொடி முதலான தாவரங்கள் வளைந்து கொடுத்துப் பிழைத்து கொள்ளும். இது போன்று எம்பெருமானின் குணங்களைக் கண்ட நமக்கு "நான்" என்று அஹங்காரமாகக் கூறிப் பிழைக்க வழி இல்லை. ஆகவே அவன் திருவடிகளில் தலை சாய்த்து பிழைக்க வாராய் – என்கிறார்.

அவதாரிகை – அஹமஸ்யாவரோ ப்ராதா குணைர்தாஸ்ய முபாகத: என்னுமாபோலே இளையபெருமாளை "நீர் இவர்க்கென்னாவீர்" என்ன; "பெருமாளும் ஒருபடி நினைத்திருப்பர்; நானும் ஒருபடி நினைத்திருப்பேன்" என்றார்; "அவர் நினைத்திருக்கும்படியென்? நீர் நினைத்திருக்கும்படியென்?" என்ன, "அவர்தம் பின்பிறந்தவன் என்றிருப்பர்; நான் அவர் குணங்களுக்குத் தோற்று அடியேனாயிருப்பன்" என்றாரிறே; அப்படியே இவரும் "உயர்வற உயர்நலமுடையவன் துயரறு சுடரடி தொழுதெழப்பாராய் நெஞ்சே" என்கிறார்.

விளக்கம் – லக்ஷ்மணனிடம், "நீ இராமனுக்கு என்ன உறவு?", என்றனர். அதற்கு அவன், "என்னைப் பற்றி இராமன் ஒரு உறவுமுறையில் எண்ணலாம், நான் வேறு ஒரு உறவுமுறையில் எண்ணலாம்", என்றான். இதற்கு, "நீ எப்படி நினைத்துள்ளாய்? அவர் எப்படி நினைத்துள்ளார்?", என்றனர். இதற்கு இவன், "இராமன் என்னை தன் பின்னே பிறந்தவன் என்று எண்ணுவான், நான் அவனுடைய குணங்களுக்குத் தோற்று அவன் அடிமையாக உள்ளேன் என எண்ணுவேன்", என்றான். இது போன்றே இவரும் "உயர்வற உயர்நலமுடையவன் துயரறு சுடரடி தொழுதெழப்பாராய் நெஞ்சே" என்கிறார்.

அவதாரிகை – இவர் தாம் முற்பட குணங்களிலே இழிவானென் என்னில்; தாமகப்பட்ட துறை அதுவாகையாலே, இவரை குணத்தை இட்டாயிற்று வணங்குவித்தது.

விளக்கம் - எம்பெருமானார் கத்யத்தில் - அகில ஹேய ப்ரத்யநீயக – என்று ஸ்வரூபத்தை முதலில் கூறியது போன்று கூறாமல், இங்கு முதலில் குணங்களைக் கூறுவது ஏன் – காரணம் இவர் சிக்கிக்கொண்டது அவனது குணங்களில் ஆகும். வில்லைக் கயிற்றைக் கொண்டு வணங்கச் செய்வது போன்று இவரைத் தனது குணங்களை வைத்து வணங்கச் செய்தான்.

வ்யாக்யானம் - (உயர்வர இத்யாதி) - பகவதாநந்தத்தைப் பேசப்புக்க வேதங்கள் மநுஷ்யாநந்தம் தொடங்கி ப்ரஹ்மாநந்தத்தளவும் சென்று பின்னையும் அவ்வருகே உத்ப்ரேக்ஷித்துக்கொண்டு சென்று, பின்னையும் பரிச்சேதிக்கமாட்டாதே யதோ வாசோ நிவர்த்தந்தே என்று மீண்டவனவிறே; இது ஆநந்தகுணமொன்றிலுமிறே; குணங்கள்

எல்லாம் இப்படியேயிறே இருப்பது; இக்குணங்கள் எல்லாம் தமக்கு நிலமாய்ப் பேசுகிறாரிறே இவர்.

விளக்கம் - வேதங்கள் ஸர்வேச்வரனின் ஆனந்தத்தைக் குறித்துப் பேசத் தொடங்கின. அப்போது மனிதர்களின் ஆனந்தம் தொடங்கி, நான்முகனின் ஆனந்தம் வரை கூறிக் கொண்டே சென்றன. அதன் பிறகு அளவிட்டுக் கூற இயலாமல் தடுமாறி நின்றன. தைத்திரீய உபநிஷத் – யதோ வாசோ நிவர்த்தந்தே - வாக்கும் மனமும் திரும்பின - என்று அவனது ஆனந்தத்தைப் பற்றிக் கூற இயலாமல், தொடங்கிய இடத்திற்கே வந்தன. இந்த நிலை ஆனந்தம் என்ற ஒரு குணத்தைக் கூறுவதற்கு மட்டுமே ஆனது. இவனது அனைத்துக் குணங்களும் இப்படியே உள்ளன. வேதங்களால் கூட எல்லை காண இயலாதபடி உள்ள இந்தக் குணங்கள் அனைத்தும், தனக்கு அறிய இயல்வதாகக் கூறுகிறாரே என்றால் – வேதங்களால் எல்லை காண முடியாதவற்றையும் அறியக்கூடிய வகையில் ஆழ்வாரின் ஞானம் இருந்தது என்று கருத்து.

வ்யாக்யானம் - (உயர்வு) – வருத்தம். எல்லார்க்கும் உயர்த்தியுண்டாம்போது வருத்தமுண்டு; அப்படி வருந்தவேணுமோ? என்றால், உயர்வற உயராநிற்கும். இத்தைப் பற்றவிறே ஆளவந்தார் அருளிச்செய்த சந்தை. பகவத் வ்யதிரிக்த ஸமஸ்தவஸ்துகதமான ஸர்வப்ரகாரத்தாலுமுண்டான உச்சராயத்தை – உயர்வென்கிறது. (அற) - இன்றியிலேயொழிய. இத்தால் அத்யந்தா பாவத்தைச் சொல்லுகிறதன்று; பின்னை என்சொல்லுகிறதென்னில்; தன்னுடைய உச்ச்ராயத்தையும் இவற்றையும் பார்த்தால் ஆதித்ய ஸந்நிதியில் நக்ஷத்ராதிகளைப் போலவும், மேரு சிகரத்திலே நின்றவனுக்குக் கீழுள்ள ஸர்ஷபாதிகள் இருக்குமா போலவும், உண்டாயிருக்கச்செய்தே இல்லை யென்னலாம்படி இருக்கை.

விளக்கம் – உயர்வு என்றால் வருத்தம் என்று பொருள். வருத்தத்திற்குக் காரணம் என்ன என்றால், மற்றவர்களுக்கு உயர்வு ஏற்படும்போது கடுமையான முயற்சி காரணமாக வருத்தம் கொள்வது இயல்பு. ஆனால் இப்படி வருத்தமே இல்லாமல் உயர்ந்து நிற்கின்ற ஸ்வபாவம் உடையவன் இவன். இதனைக் கருத்தில் கொண்டே ஆளவந்தார் - ஸ்வாபாவிக – என்று அருளிச்செய்தார். எம்பெருமானுடைய வேறுபட்ட அனைத்து விதமான வஸ்துக்களையும், அனைத்து வகையாலும் வணங்குகின்ற மேன்மையை

உயர்வு என்றார். (அற) – இந்த மேன்மை இல்லாத, அதாவது மற்ற தெய்வங்களுக்கு மேன்மை இல்லை, உயர்வு இல்லை என்று கூறவில்லை. வேறு எதனைக் கூறுகிறார்? எம்பெருமானின் மேன்மையையும் மற்ற வஸ்துக்களின் மேன்மையையும் பார்த்தால், சூரியன் முன்பாக உள்ள நட்சத்திரம், மேரு மலையின் மேலே உள்ளவனுக்குக் கீழே இருக்கின்ற கடுகு ஆகியவை இருந்தும் இல்லை என்று கூறலாம்படியான நிலையை அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் - இப்படி அல்லாதவற்றை இல்லையென்னலாம்படி பண்ணினால், தனக்கோரெல்லை உண்டாயிருக்கும்மோவென்னில், (உயர்) - காலதத்வமுள்ளதனையும் அநுபவியாநின்றாலும் அவ்வருகாய்க் கொண்டு வாங்மநஸ்ஸுக்களால் பரிசேதிக்க வொண்ணாதபடி உயராநிற்கும். ஆனால் ஸர்வேக்ஷயாந்தா நிசயா: பதநாந்தாஸ் ஸமுச்ச்ரயா: ஸம்யோகாவிப்ரயோகாந்தா: மரணாந்தஞ்ச ஜீவிதம் - என்கிறபடியே இருக்கிறதோவென்னில், அன்று, இயத்தாராஹித்யத்தைச் சொன்னபடி.

விளக்கம் – இப்படி மற்றவர்களின் உயர்வு எதுவும் இல்லை என்னும்படிச் செய்தால், இவனுக்கு ஓர் எல்லை இருக்குமோ? இல்லை, காலம் உள்ளவரை அனுபவித்தாலும் அதன் அப்பாற்பட்டு, வாக்காலும் மனதாலும் அளக்க இயலாதபடி உயர்ந்து நிற்கும். ஆனால் இராமாயணம் - ஸர்வேக்ஷயாந்தா நிசயா: பதநாந்தாஸ் ஸமுச்ச்ரயா: ஸம்யோகாவிப்ரயோகாந்தா: மரணாந்தஞ்ச ஜீவிதம் – செல்வம் அழியும், உயர்வு இறங்கும், சேர்க்கை பிரியும், வாழ்வு சாகும் – என்று கூறியது போன்று இவனுடைய உயர்வும் தாழுமோ? அல்ல, இவ்வளவு என்று அளவிட்டுக் கூற இயலாதபடி இருக்கும்.

வ்யாக்யானம் - இப்படி கரைக்கட்டாக் காவேரி போலே பரந்திருந்தால் இப்பரப்பெல்லாம் ப்ரயோஜநமாயிருராதே காடுபட்டுக்கிடக்குமோவென்னில்; (நலம்) - கண்டிடமெங்கும் பயிர்பட்டிருக்கும் நிலம் போலே எங்குமொக்க உபாதேமாயிருக்கும். நலமென்று ஆநந்தகுணமொன்றையும் சொல்லுகிறதென்னுதல்; குணஸமூஹத்தைச் சொல்லுகிற தென்னுதல்; ஆநந்தாவஹமான விபூதியைப் பற்றச் சொல்லுகிறதென்னுதல்.

விளக்கம் – கரையில் அடங்காத காவேரி போன்று குணங்கள் இப்படிப் பரந்து விரிந்தால், எதற்கும் பயனில்லாமல் போய்விடுமோ என்னும் சந்தேகம் எழலாம். அப்படி அல்ல.

கண்ட இடம் எங்கும் பயிர் விளைந்து காணப்படும் நிலம் போன்று, அனைத்து குணங்களும் ஏற்கக் கூடியதாகவே இருக்கும். இங்கு நலம் என்பது ஆனந்தம் என்பதை மட்டும் கூறுவது அல்ல, அவனுடைய குணங்களின் கூட்டம் முழுவதையும் கூறுகிறார். ஆனந்தம் ஏற்படுவதற்குக் காரணமாக உள்ள விபூதிகளைக் கூறுவதாகவும் கொள்ளலாம்.

வ்யாக்யானம் - (உடையவன்) இக்குணங்கள் தன்னை அஸ்தி என்று விடுமளவன்றிக்கே இவற்றையிட்டு நிரூபிக்க வேண்டும்படியாய் இருக்கும். அதாவது – ஆகந்துகமன்றிக்கே ஸ்வரூபாநுபந்தியாய் இருக்கும் என்றபடி. ஆழ்வான், பிள்ளைப் பிள்ளையைப் பார்த்து "நிர்குணமென்பார்மிடற்றைப் பிடித்தாற்போலே ஆழ்வார் நலமுடையவன் என்றபடி கண்டாயே" என்று பணித்தான்.

விளக்கம் – இந்தக் குணங்கள் அனைத்தையும் கொண்டவன் என்னும்படி கூறுவதோடு நிற்காமல், இவனைக் கொண்டே அந்தக் குணங்களின் தன்மைகளை நிரூபிக்க வேண்டும்படியாக உள்ளவன். இவை, இவனுக்கு இடையில் வந்து சேராமல் இயல்பாகவே இருப்பவையாகும். கூரத்தாழ்வான், பிள்ளை பிள்ளையைப் பார்த்து, "எம்பெருமான் நிர்குணம் (குணங்கள் அற்றவன்) என்று கூறுபவர்களின் கழுத்தைப் பிடித்தது போன்று ஆழ்வார் 'நலம் உடையவன்' என்று கூறியது கண்டாயா?", என்றார்.

வ்யாக்யானம் - இத்தால் ஸமஸ்தகல்யாண குணாத்மகோஸௌ என்றபடி. வர்ஷாயுதை: இத்யாதி. தாதூநாமிவ சைலேந்த்ரோ குணாநாமாகரோ மஹாந், பஹவோ ந்ருப கல்யாணகுணா: புத்ரஸ்ய ஸந்தி தே, ஸ்வாபாவிகாநவதிகாதிசய அஸங்க்யேய கல்யாணகுணகண: என்று இதுக்கு ஆளவந்தார் அருளிச்செய்யும் சந்தை.

விளக்கம் – ஸமஸ்தகல்யாண குணாத்மகோஸௌ – அனைத்து குணங்களையும் தனது இயல்பாகவே கொண்டவன் – என்றும், வர்ஷாயுதை: - கண்ணனின் குணங்களை பதினாறாயிரம் வருடங்கள் கூறினாலும் இயலாது – என்றும், தாதூநாமிவ சைலேந்த்ரோ குணாநாமாகரோ மஹாந் – தாதுக்களுக்கு இருப்பிடமாக இமயமலை உள்ளது போன்று நற்குணங்களுக்கு இருப்பிடமாக இராமன் உள்ளான் – என்றும், பஹவோ ந்ருப கல்யாணகுணா: புத்ரஸ்ய ஸந்தி தே – உனது புத்திரனான இராமனுக்குப் பல நற்குணங்கள் உள்ளன - என்றும் கூறியது காண்க. இதனையே ஆளவந்தார் ஸ்தோத்ர

ரத்நத்தில் (11) - ஸ்வாபாவிகாநவதிகாதிசய அஸங்க்யேய கல்யாணகுணகண: - இயற்கையாக உடையதும், எண்ணிக்கை அற்றதுமான கல்யாண குணங்களைக் கொண்டவன் – என்றார்.

வ்யாக்யானம் - இப்படி குணங்கள் கரைபுரண்டிருந்தால், இக்குணங்களாலே தனக்கு நிற மாம்படி இருக்குமோ திவ்யாத்ம ஸ்வரூபமென்னில்; அங்ஙனிராது; அஸ்வரூபத்தைப் பற்றி குணங்களுக்கு நிறம் பெற வேண்டும்படி இருக்கும் என்று ஸ்வரூப வைலக்ஷண்யத்தைச் சொல்லுகிறது (யவன்) என்று. யதா ஸைந்தவகந: என்கிற ப்ரமாண ப்ரஸித்தியைப்பற்ற "யவன்" என்கிறார். இத்தால் குணநிரபேக்ஷமான ஸ்வரூப ப்ரஸித்தியைச் சொல்லுதல் குணவிசிஷ்டமான ஸ்வரூப வைலக்ஷணயத்தைச் சொல்லுதல். (அவன்) இதுக்கவ்வருகே ஓர் உபகாரத்தைச் சொல்ல நினைத்துக் கீழ் நின்ற நிலையை அமைத்து மேலே தோள்படி கொள்ளுகிறார்.

விளக்கம் – இவ்விதம் இவனுக்கு குணங்கள் கரை புரண்டு இருப்பதால் அந்த குணங்களால் மட்டுமே மேன்மை பெறும்படியாக எம்பெருமான் உள்ளானோ என்ற சந்தேகம் எழலாம். அப்படி அல்ல; இவனுடைய ஸ்வரூபத்தை பற்றி நின்றே குணங்கள் மேன்மை அடைகின்றன என்று ஸ்வரூபத்தின் மேன்மையை (யவன்) என்பதன் மூலம் அருளிச்செய்கிறார். யதா ஸைந்தவகந: – உப்புக்கட்டி உள்ளும் வெளியிலும் உப்பாகவே உள்ளதுபோல் எம்பெருமான் ஞானமயமாகவே உள்ளான் – என்ற ப்ரமாணம் கூறுவதற்கு ஏற்ப "யவன்" என்கிறார். யவன் என்னும் பதம் மூலம் குணங்களை நம்பி இருக்காத எம்பெருமானின் ஸ்வரூப மேன்மையைக் கூறுகிறார். குணங்களுடன் கூடி இருக்கின்ற ஸ்வரூபத்தையும் கூறுகிறார். (அவன்) – இதற்கு மேல் ஓர் உபகாரத்தைக் கூற எண்ணி, கீழே கூறப்பட்ட இவனது கல்யாண குணங்களை மேடையைப் போன்று அமைத்து, அதன் மேலே தோள்படி கொள்ள எண்ணுகிறார் (தோள்படி – ஒருவன் தோளைப் பிடித்து மேலே செல்ல நினைத்தல்).

வ்யாக்யானம் - அந்த உபகாரம்தான் ஏது என்னில்; (மயர்வற) ஜ்ஞாநாநுதயம், அந்யதா ஜ்ஞாநம், விபரீதஜ்ஞாநம் என்கிற இவை வாஸநையோடே போம்படியாக. "ஜ்ஞாநாநுதயமாவது - தேஹாத்மாபிமாநம். அந்யதாஜ்ஞாநமாவது – தேவதாந்தர சேஷமென்றிருக்கை விபரீதஜ்ஞாநமாவது - ஸ்வதந்த்ரமாகவும் ஸ்வபோக்யமாகவும்

நினைத்திருக்கிற கேவலனுடைய ஜ்ஞாநம்" என்று நம்பிள்ளை அருளிச் செய்வர். தம் வாயாலே "மயர்வற" என்று சொல்லாம்படிகாணும் அவன்தான் இவர்க்கு அஜ்ஞாநத்தை வாஸனையோடே போக்கினபடி.

விளக்கம் - அப்படி அவன் செய்த உபகாரம் தான் என்ன என்றால்: ஞானம் தோன்றுதல், மற்றவற்றைக் குறித்து ஞானம், தேஹமே ஆத்மா என்னும் விபரீத ஞானம் போன்றவை வாசனையுடன் நீங்கும்படியாகச் செய்தான். "ஞானானுதயம் என்றால் உடலையே ஆத்மாவாக நினைத்தல்; அந்யதா ஞானம் என்றால் மற்ற தெய்வங்களுக்கு தன்னை அடிமையாக எண்ணுதல்; விபரீத ஞானம் என்றால், தான் சுதந்திரமானவன் என்றும் ஆத்மாவுடன் அனுபவிப்பதே இன்பம் என்றும் எண்ணுகின்ற கைவல்ய நிஷ்டனின் ஞானம்" - என்று நம்பிள்ளை அருளிச்செய்தார். அதனை இவர் திருவாயாலேயே மயர்வற என்று கூறும்படியாக எம்பெருமான் இவருக்கு அறியாமையை வாசனையுடன் நீக்கினான்.

வ்யாக்யானம் - (மதிநலம்) – "ஜ்ஞாநபக்திகளிரண்டையும் தந்தான்" என்று நிர்வஹிப்பாருமுண்டு; அன்றிக்கே, "நலமான மதியைத் தந்தானென்றாய், முளைக்கும் போதே வயிரம் பற்றி முளைக்கும் பதார்த்தம்போலே பக்திரூபாபந்ந ஜ்ஞாநத்தைத் தந்தானென்கிறார் என்று பட்டர் அருளிசெய்யும்படி. கர்மஜ்ஞாநாநுக்ருஹீதையான பக்தி ஸ்தாநத்திலே பகவத் ப்ரஸாதமாய், அநந்தரம் கைங்கர்யத்துக்குப் பூர்வக்ஷண வர்த்தியான பக்தியாயிற்று இவரது.

விளக்கம் – ஞானம் மற்றும் பக்தி ஆகிய இரண்டையும் அளித்தான் என்று இதற்குச் சிலர் பொருள் கூறுவர். ஸ்வாமி பராசரபட்டர், "நலமான மதி தந்தான். முளைக்கும்போதே வைரம் பாய்ந்தது போன்று கருங்காலி முதலான மரங்கள் இருக்கின்றன. இது போன்று பக்தியின் உருவத்தை அடைந்த ஞானத்தை அளித்தான்", என்று அருளிச் செய்தார். கர்மத்தாலும் ஞானத்தாலும் ஏற்படுவது பக்தியாகும். அப்படிப்பட்ட பக்தியின் நிலையில் எம்பெருமானின் கடாக்ஷம் நின்றது. அதன் பின்னர் கைங்கர்யத்திற்கு ஏற்றபடி உள்ள பக்தி இவருக்கு முன்பே உண்டானது.

வ்யாக்யானம் – "ஆழ்வார் ப்ரபந்நரோ? பக்திநிஷ்டரோ?" என்று எம்பாரை சிலர் கேட்க, "ஆழ்வார் ப்ரபந்நர்; பக்தி இவர்க்கு தேஹயாத்ராசேஷம்" என்று அருளிச்செய்தார்; என்போலவென்னில்; நாமுமெல்லாம் ப்ரபந்நராயிருக்கச்செய்தே, ஆண்டாறு மாஸத்துக்கு ஜீவநம் தேடுகிறாப்போலே; உண்ணுஞ்சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணனிறே இவர்க்கு.

விளக்கம் – எம்பாரிடம் சிலர் "ஆழ்வார் ப்ரபந்நரா? அல்லது ப்ரபத்தி வழியில் நின்ற பக்தி நிஷ்டரா?", என்று கேட்டனர். அதற்கு எம்பார், "ஆழ்வார் ப்ரபந்நரே ஆவார். ஆனால் இவரது உடல் உயிருடன் கூடி நிற்பதற்கு உணவு அவசியம் இல்லாமல், பக்தியே காரணமாக உள்ளது", என்று அருளிச்செய்தார். எப்படி என்றால் – நாம் ப்ரபந்நர்களாக இருந்தாலும் ஆறு மாதத்திற்கோ அல்லது ஒரு வருடத்திற்கோ தேவையான பொருள்களை தேடி வைத்துக் கொள்கிறோம். ஆனால் இவரோ அதனைச் செய்யாமல் (6-7-1) – உண்ணும்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணனே – என்று இருந்தார்.

வ்யாக்யானம் - (அருளினன்) - நிர்ஹேதுகமாக அருளிக் கொண்டு நிற்கக்கண்டவித்தனை; எனக்கு அருளினனென்னாதொழிந்தது பகவத் விஷயீகாரத்துக்கு முன்பு நம்மை அஸத்கல்பராக நினைத்திருக்கையாலே. (அருளினன்) - இத்தால் அர்த்திக்கவன்றிக்கே முலைக்கடுப்பாலே தரையிலே பீச்கவாரைப்போலே அருளிக்கொண்டு நிற்கக்கண்ட வித்தனை; தாது: ப்ரஸாதாந்மஹிமாநமீஸம் என்கிறபடியே நிர்ஹேதுகமாக அருளிக்கொண்டு நிற்கக்கண்ட இத்தனை. இத்தலையில் நினைவின்றிக்கேயிருக்க வந்து அருளினவன், தன்னருள் கொள்வாரில்லாதானெருவனோவென்னில்; (அயர்வறும் அமரர்களதிபதி) - தானருளாதவன்று ஸத்தையின்றிக்கே இருப்பாரை ஒரு நாடாகவு டையவன்; அயர்வாகிறது - விஸ்ம்ருதி; அதின்றிக்கே இருப்பவர்கள், ப்ராகபாவத்தைப் பற்றச் சொல்லுகிறது; ப்ரத்வம்ஸாபாவமுண்டிறே முக்தர்க்கு.

விளக்கம் – (அருளினான்) - எந்தவிதமான காரணமும் இல்லாமல் அருளினான். எம்பெருமான் தனக்கு இவ்விதம் கடாக்ஷம் செய்வதற்கு முன்பு, தான் ஒரு இல்லாத பொருளாகவே தன்னை ஆழ்வார் எண்ணினார். ஆனால் "எனக்கு அருளினான்" என்று அருளிச்செயவில்லை என்பது காண்க. ஏன்? ஆழ்வார் அவனது அருளைப் பெறுவதற்கு எந்தவிதமான முயற்சியும் செய்யாமல் உள்ளபோதும், தாயானவள் தன்னுடைய

ஸ்தனத்தின் பாரம் தாங்காமல் தாய்ப்பாலைத் தரையில் பீய்ச்சுவது போன்று தானாகவே அருள்செய்தபடி அவன் நின்றான் என்று கருத்து. தைத்திரீய நாராயணவல்லீ – தாது: ப்ரஸாதாந்மஹிமாநமீஸம் - யார் ஒருவனை எம்பெருமான் எந்தவிதமான காரணமும் இல்லாமல் கடாக்ஷிக்கிறானோ அவன் துன்பங்கள் நீங்கியவன் - என்று கூறியது. ஒருவன் விரும்பாவிட்டாலும் எம்பெருமான் அருளும்போது அதனை அவன் ஏற்று கொள்ளாமல் இருப்பானோ? (அயர்வறும் அமரர்கள் அதிபதி) – தான் அருளாதபோது ஜீவனே இல்லாதது போன்று உள்ள நித்யஸூரிகளை ஒரு நாடாகக் கொண்டவன், அயர்வு என்றால் மறதி; அந்த மறதி இல்லாமல் உள்ளவர்கள். மறதி இருந்து, அதன் பின்னர் அந்த மறதி நீங்கியவர்கள் முக்தர்கள். ஆனால் மறதியே இல்லாதவர்கள் நித்யஸூரிகள்.

வ்யாக்யானம் - (அமரர்கள்) - பகவதநுபவ விச்சேதத்தில் தாங்களுளரன்றிக்கே இருக்குமவர்கள். ந ச ஸீதா த்வயா ஹீநா ந சாஹமபி ராகவ என்கிறபடியே. (அமரர்கள்) த்ரிபாத்விபூதியோகத்தைப் பற்றச் சொல்லுகிறது. பரமஸாம்யாபந்நராயிருக்கையாலே ஓலக்கமிருந்தாலாயிற்று அவர்களுக்கும் அவனுக்கும் வாசியறியலாவது; பிராட்டி மாராலேயாதல், ஸ்ரீகௌஸ்துபாதிகளாலேயாதல் சேஷியென்றறியுமத்தனை. ஆனால் இப்படியிருக்கிற அவர்கள் பலராய், தானொருவனானால், இவர்களை அநுவர்த்தித்துக் கொண்டு தன்னுடைய சேஷித்வமாம்படி இருக்குமோ? என்னில், (அதிபதி) அவர்களுக்கும் தொட்டுக்கொள், தொட்டுக்கொள் என்னவேண்டும்படி ஆனைக்குக் குதிரை வைத்து அவ்வருகாயிருக்குமென்னுதல்; ஸ்வாமி வாசகமென்னுதல்.

விளக்கம் – (அமரர்கள்) - அமரர்கள் என்பதன் மூலம் மரணம் அற்றவர்கள் என்பதைக் குறிக்கவில்லை. எம்பெருமானின் அனுபவம் தடைபட்டால், தங்களை உள்ளவர்களாகவே இவர்கள் எண்ணுவதில்லை. இராமாயணம் – ந ச ஸீதா த்வயா ஹீநா ந சாஹமபி ராகவ - லக்ஷ்மணன் இராமனிடம், "உன்னைப் பிரிந்து சீதையும் பிழைக்க மாட்டாள், நானும் பிழைக்கமாட்டேன்", என்றான். ஸத்யலோகம்வரை உள்ள அனைத்து உலகங்களும் காற்பங்காகவும், பரமபதம் முக்கால் பங்காகவும் உள்ளதைக் கூறுகிறது. பரமபதத்தில் இருப்பவர்கள் அனைத்து வகையிலும் எம்பெருமானைப் போன்றே இருந்தாலும், அரச சபையின் நிர்வாகம் குறித்தே அவனுக்கும் அவர்களுக்கும் வேறுபாடு அறிய இயலும் என்பதால் "அமரர்கள் அதிபதி" என்றார். அரச சபை கூடாத நேரத்தில், இவனை எப்படி

அறிய இயலும் என்றால் - பெரியபிராட்டி, கௌஸ்துபம் ஆகியவற்றைக் கொண்டு இவனே எஜமானன் என்று அறியும்படி உள்ளவன். இவர்கள் இப்படி பல பேராக இருப்பதனாலும், தான் ஒருவனாக மட்டுமே இருப்பதாலும், அவர்கள் இருப்பதன் காரணத்தால் மட்டுமே இவன் எஜமானனாக இருக்கின்ற நிலையைப் பெறுகிறானோ என்றால், (அதிபதி) - அவர்களுக்குத் தொட்டுக்கொள், தொட்டுக்கொள் என்னும்படி யானைக்குக் குதிரை போன்று இருப்பான். யானையின் வேகத்தை அறிய முயல்பவர்கள், முன்னே குதிரையை நடத்தி, பின்னே யானைச் செல்லும்படிச் செய்வர். யானை தனது துதிக்கையால் குதிரையைத் தொடும்படி நீட்டி, ஆனால் தொட இயலாமல் இருக்கும். இது போன்றே நித்யஸூரிகளுக்கும் அப்பாற்பட்டவன். அதிபதி என்றால் தலைவன் என்றும் கொள்ளலாம்.

வ்யாக்யானம் - இதுக்கு அவ்வருகே விக்ரஹவைலக்ஷண்யம் சொல்ல ஒருப்பட்டு, கீழ் நின்ற நிலையைக் குலுக்கி "அவன்" என்று அவ்வருகே போகிறார். (துயரறு) "துயரறுக்கும்" என்று முன்புள்ள முதலிகள் அருளிச்செய்யும்படி; ஸமஸ்த துக்காபநோதந ஸ்வபாவமான திருவடிகள் ஸகலாத்மாக்களுடையவும் துக்கத்தைப் போக்குகையே ஸ்வபாவமான திருவடிகள். "துயரறு சுடரடி" என்று எம்பெருமானார் அருளிச்செய்யும்படி; வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருசம் பவதி துக்கித: என்றால் துக்கநிவ்ருத்தியும் அவனதாய் இருக்குமிறே. இவர் துயரறத் தான் துயர்தீர்ந்தனாயிருக்கை. இத்தால் இவர் மயர்வற, அவன் துயரற்றபடி.

விளக்கம் - அடுத்து விக்ரஹத்தின் மேன்மையைக் கூற உத்தேசித்து, கீழே நின்ற நித்ய விபூதி யோக அனுபவத்தை, விக்ரஹ அனுபவத்திற்கும் ஏற்றபடி செய்து "அவன்" என்று அவ்வருகே செல்கிறார். (துயரறு) – "துயர் அறுப்பவன்" என்று முன்னோர்கள் அருளிச் செய்வர். அனைத்துவிதமான துன்பங்களையும் போக்குதலே தன்னுடைய இயல்பாக கொண்டத் திருவடிகள்; அனைத்துவிதமான ஆத்மாக்களின் துக்கத்தை நீக்குவதே இயல்பாகக் கொண்ட திருவடிகள். எம்பெருமானார், "அடியார்களின் துயரத்தால் தனக்குத் துன்பம் ஏற்படுவதால், அவர்கள் துன்பம் நீங்கினால் தனது துன்பம் நீங்குவதாகக் கொள்பவன்" என்றார். துன்பம் விலகுதல் அடியவர்களுக்காக உள்ளபோது, தனக்காக இவன் கொள்வது எப்படி என்றால், இராமாயணம் – வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருசம் பவதி துக்கித: - இராமன் தனக்குக் கீழே உள்ள மக்களுக்குத் துன்பம் வந்தால் தானும்

துன்பத்தை அடைந்தவனாகிறான் - என்றபடி ஆகும். இது போன்று ஆழ்வாரின் துன்பம் நீங்கியவுடன் தன்னுடைய துன்பத்தை நீங்கப் பெற்றான். ஆக இவர் மயர்வற மதிநலம் பெறும்போது, அவனுக்குத் துயரம் நீங்கியது.

வ்யாக்யானம் - (சுடரடி) நிரவதிக தேஜோரூபமான திவ்யமங்கள விக்ரஹத்தைச் சொல்லுகிறது. (சுடர்) பஞ்ச சக்திமயமான புகரைச் சொல்லுகிறது. (அடி) சேஷபூதன் சேஷி பக்கல் கணிசிப்பது திருவடிகளையிறே. ஸ்தநந்தயப்ரஜை முலையிலே வாய் வைக்குமாபோலே இவரும் "உன் தேனே மலருந் திருப்பாதம்" என்கிற திருவடிகளிலே வாய் வைக்கிறார். (தொழுது) - நித்யஸம்ஸாரியாய்ப்போந்த இழவெல்லாம் தீரும்படி ஸ்வரூபாநுரூபாமான வ்ருத்தியிலே அந்வயித்து. (எழு) அஸநேவ ஸ பவதீ என்னும் நிலை கழிந்து, ஸந்தமேநம் ததோ விது: என்கிறவர்கள் கோடியிலே எண்ணலாம்படியாக உஜ்ஜீவிக்கப் பார். அடியிலே தொழாமையால் வந்த ஸங்கோசம் தீரும்படி அடியிலே தொழுது உஜ்ஜீவி என்கிறார்.

விளக்கம் – (சுடர் அடி) – எல்லையற்ற ஒளிமயமான திவ்யமங்கள விக்ரஹத்தைக் கூறுகிறார். (சுடர்) - பரமேஷ்டி, புமான், விச்வம், நிருவ்ருத்தி மற்றும் ஸர்வம் ஆகிய ஐந்து சக்திகளால் கொண்ட மகிழ்வைக் கூறுகிறார். (அடி) – அடியவன் எஜமானனான எம்பெருமானிடம் ஆசைப்படுவது திருவடிகளைக் குறித்தே ஆகும். தாய்ப்பால் பருகும் குழந்தைகள் தாயின் ஸ்தனத்தில் வாய் வைப்பது போன்று இவர், (1-1-5) – உன் தேனே மலரும் திருப்பாதம் - என்று எம்பெருமானின் திருவடிகளில் வாய்வைக்கிறார். (தொழுது) – நித்யஸம்ஸாரியாக நின்றதால் உண்டான துன்பம் அனைத்தும் தீரும்படி ஆத்மாவின் தன்மைக்கு ஏற்ற தொழிலான தொழுதலில் ஈடுபட்டு. (எழு) – தைத்திரீய ஆனந்தவல்லீ – அஸந்நேவ ஸ பவதி – அவனை உள்ளபடி அறியாதவன் இல்லாதவன் ஆகிறான் - என்ற நிலை நீங்கி, ஸந்தமேநம் ததோ விது: – அவனை அறிந்தவன் உள்ளவன் ஆகிறான் – என்று எண்ணுபவர்கள் கூட்டத்தில் உன்னையும் (தனது மனதிடம் கூறுகிறார்) எண்ணலாம்படியாக நின்று, பிழைக்கும் வழியைப் பார்ப்பாயாக. முன்பு திருவடியில் தொழாமல் நின்றதால் வந்த தோஷம் நீங்கும்படியாகத் திருவடிகளைத் தொழுது பிழைப்பாய் என்றார்.

வ்யாக்யானம் - (என் மனனே) இப்போதாயிற்று தம்மைக் கண்டது; "அருளினான்", என்று நின்ற இத்தனையிறே முன்பு. இருவர் கூடப் பள்ளியோதி இருந்தால், அவர்களிலே ஒருவனுக்கு உத்கர்ஷமுண்டானால், மற்றையவன் தனக்கு அவனோடே ஒரு ஸம்பந்தத்தைச் சொல்லிக் கொண்டு கிட்டுமாபோலே. மந ஏவ மநுஷ்யாணாம் காரணம் பந்தமோக்ஷயோ: என்கிறபடியே நெடுநாள் பந்தஹேதுவாய்ப் போந்தது – இப்போது முந்துற்ற நெஞ்சாய் முற்பட்டு நிற்கிறபடியாலே, அத்தோடே தமக்கொரு ஸம்பந்தத்தை ஆசைப்பட்டு "என் மனனே" என்கிறார். பாட்டை முடியச்சொல்லி "அவன்" என்ன அமையாதோ? அடிதோறும் சொல்லுகிற இதுக்குக் கருத்து என்னென்னில்; இவர்தம் இத்திருவாய்மொழி தன்னில் ஈச்வரத்வமாயிற்று ப்ரதிபாதிக்கிறது; அந்த ஈச்வரத்வத்துக்கு ஓரோ குணங்களே நிரபேக்ஷமாகப் போந்திருக்கையாலே சொல்லுகிறது. "உயர்வறவுயர் நலமுடையவன் – யவன், அவன் மயர்வற மதிநலமருளினன்" என்று இங்ஙனே வாக்யைக வாக்யாபாவத்தாலே யோஜிக்கவுமாம்.

விளக்கம் – (என் மனனே) - இப்போதுதான் தன்னை உணர்ந்தவர் ஆகிறார். "அருளினன்" என்று முன்பு இருந்தார். ஒரு பள்ளியில் படித்த இருவரில் ஒருவன் உயரும்போது, மற்றவன் அவனுடன் தனது தொடர்பைக் கூறியபடி அவனை நெருங்குவதைக் காணலாம். இது போன்று – மந ஏவ மநுஷ்யாணாம் காரணம் பந்தமோக்ஷயோ: - மனம் என்பதே மனிதர்களின் பந்தத்திற்கும் மோக்ஷத்திற்கும் ஏதுவாக உள்ளது – என்னும்படி, முன்பு தனக்குப் பந்தம் உண்டாவதற்குக் காரணமாக இருந்த மனமே, இப்போது அவனை எண்ணுகிற செயலில் தன்னை விட முன்னே நிற்பதால் உயர்வு பெற்றதாகிறது என்கிறார். ஆக இந்த மனதுடன் தொடர்பு வைத்துக் கொள்ள ஆசைப்பட்டு "என் மனனே" என்று கூறுகிறார். பாசுரத்தை முடிக்கும்போது "அவன்" என்று கூறியிருந்தால் போதுமானதாக இருந்திருக்கும். ஆனால், ஒவ்வோர் அடியிலும் "அவன்" என்ற பதத்தை அமைத்ததன் காரணம் என்ன? இதன் காரணம் - இந்தத் திருவாய்மொழியில் எம்பெருமானின் ஈச்வரத் தன்மையைக் கூறுகிறார். அந்த ஈச்வரத் தன்மைக்கு ஒவ்வோர் அடியிலும் கூறப்பட்ட தன்மை மாத்திரமே போதுமானதாக உள்ளதாலும், வேறு குணங்கள் கூற வேண்டாமல் உள்ளதாலும் இவ்விதம் அமைத்தார். அதாவது, உயர்வர.....யவன்; அவன் மயர்வு அற.... அருளினன்; மயர்வு..... யவன்; அவன் அயர்வு ... - என்று இப்படியே படிக்கவேண்டும்.

வ்யாக்யானம் - அன்றிக்கே "உயர்வற உயர்நலமுடையவன் யவன், அவன் துயரறு சுடரடி தொழுதெழென் மனனே" என்று வாக்யபேதம் பண்ணி யோஜிக்கவுமாம். நம: புரஸ்தாதத ப்ருஷ்டதஸ்தே என்னுமாபோலே. ஆனால் "உயர்வறவுயர் நலமுடையவன் – அயர்வறும் அமரர்களதிபதி – மயர்வற மதிநலமருளினன்" என்ன வேண்டியிருக்க; "உயர்வற உயர்நலமுடையவன்" என்ற அநந்தரம் "அயர்வறும் அமரர்களதிபதி" என்று அவ்வளவும் போகமாட்டாமை உபகார ஸ்ம்ருதியாலே "மயர்வற மதிநலமருளினன்" என்கிறார்.

விளக்கம் – அல்லது, உயர்வற உயர்நலமுடையவன் யவன், அவன் துயரறு சுடரடி தொழுதெழென் மனனே; மயர்வற ... யவன்; அவன் துயரறு ... மனனே - என்று தனித்தனியாகவும் கொள்ளலாம். இவ்விதம் கொண்டால் கீதை (11-40) - நம: புரஸ்தாதத ப்ருஷ்டதஸ்தே – கண்ணா! உனக்கு முன்பக்கமும் வணக்கம், பின்பக்கமும் வணக்கம் – என்று அர்ஜுனன் கூறுவது போல், இவர் பலமுறை வணக்கம் கூறுவதாகிறது. ஆனால் உயர்வற உயர்நலம் உடையவன், அயர்வறும் அமரர்கள் அதிபதி என்று அவனது தன்மைகளை முதலில் கூறி, அதன் பின்னர் மயர்வற ... என்று அவன் செய்த உதவியைக் கூறவேண்டும் அல்லவோ? ஆனால், அப்படிச் செய்யாமல் உயர்வற.... என்பதற்குப் பின்னர் அவனுடைய உதவி ஞாபகம் வந்து விட்டதால், மயர்வற என்று அருளிச்செய்து, அதன் பின்னர் அயர்வறும் என்றார்.

வ்யாக்யானம் – குணமில்லை, விக்ரஹமில்லை, விபூதியில்லை என்று சொல்லுகின்றவர்கள் எல்லாரும் நிரஸ்தர் இப்பாட்டாலே. அவர்களை எதிரிகளாக்கிச் சொல்ல வேண்டாவிறே; ஸ்வபக்ஷத்தை ஸ்தாபிக்கவே பரபக்ஷம் நிரஸ்தமாமிறே; நெற்செய்யப் புல் தேயுமாபோலே தன்னடையே நிரஸ்தராவர்களிறே அவர்கள்.

விளக்கம் - இதன் மூலம், எம்பெருமானுக்குக் குணம் மற்றும் விக்ரஹம் இல்லை, விபூதி இல்லை என்று கூறும் அனைவரும் மறுக்கப்பட்டனர். அவர்களை எதிரிகளாக்கிக் கூற வேண்டாம். தங்களது மதத்தை நிலை நாட்டவே இப்படி மற்ற மதங்களை அவர்கள் மறுத்தனர். வயலில் நெல் படுக்கப்படுக்கத் தரையில் முளைத்த புல் தேய்வது போன்று அவர்கள் தாங்களாகவே அழிவார்கள்.

வ்யாக்யானம் – "உயர்வற உயர்நலமுடையவன் - அயர்வறும் அமரர்களதிபதி" என்கையாலே ப்ராப்யவேஷம் சொல்லிற்று; "மயர்வற" என்கையாலே விரோதி போனபடி சொல்லிற்று; "அருளினன்" என்கையாலே அவனே ஸாதநமென்றது; "தொழுதெழு" என்கையாலே ப்ராப்திபலமான கைங்கர்யத்தைச் சொல்லிற்று. "என் மனனே" என்கையாலே பரிஸுத்தாந்த:கரணனே அதிகாரி என்னுமிடம் சொல்லிற்று.

விளக்கம் - "உயர்வற உயர்நலமுடையவன் - அயர்வறும் அமரர்களதிபதி" என்பதன் மூலம், அடையப்படும் இறைவனின் தன்மை கூறப்பட்டது. "மயர்வற" என்பதன் மூலம் அவனை அடைவதைத் தடுக்கும் விரோதி நீக்கம் கூறப்பட்டது. "அருளினன்" என்பதன் மூலம் அவனே உபாயம் எனப்பட்டது. "தொழுது எழு" என்பதன் மூலம் அவனை அடைவதற்குப் பலனான கைங்கர்யம் கூறப்பட்டது. "என் மனமே" என்பதன் மூலம் தூய்மையான உள்ளம் கொண்டவனே அதிகாரி என்பது உணர்த்தப்பட்டது. இப்படியாக அர்த்தபஞ்சகத்தை இங்கு அருளிச்செய்தார்.

1.1.2 மனனகமலமற மலர் மிசையெழுதரும்
மனனுணர்வளவிலன் பொறியுணர் வவையிலன்
உனனுணர்முழுநல மெதிர் நிகழ்கழிவினும்
இனனிலனெனனுயிர் மிகுநரையிலனே.

பொருள் - யோகாப்யாஸம் முதலானவற்றால் மனதில் உள்ள அவித்யை, காமம் மற்றும் க்ரோதங்கள் கழிந்த பின்னர், மலர்ந்து எழுகின்ற, மனதின் யோக ஞானத்தால் அறியப்படும் ஆத்மாவின் தன்மையைக் கொண்டவன் அல்லன்; இந்திரியங்களால் அறியப்படுகின்ற பொருள்களின் தன்மையை உடையவன் அல்லன்; ஞானம் மற்றும் ஆனந்தமயமாக உள்ளவன்; எதிர்காலம், நிகழ்காலம், கடந்தகாலம் ஆகிய முக் காலங்களிலும் தன்னைப் போன்ற ஒருவரையோ அல்லது தன்னைவிட உயர்ந்தவரையோ கொண்டிருக்காதவன் - இப்படிப்பட்ட அவனே நான் உயிர் வாழ்வதற்குக் காரணமாக உள்ளவன் ஆவான்.

அவதாரிகை – யதோ வா இமாநி இத்யாதி ச்ருதி ப்ரக்ரியையாலே கார்யாகாரமான ஜகத்தைப் பிடித்து ஜகத்காரணவஸ்து உபாஸ்யமென்னுதல், அன்றிக்கே, ஸ்வரூபத்தை

முற்படச் சொல்லிப் பின்னை விபூதியிலே போருதல் செய்யாதே முற்பட குணங்களிலே இழிவானென்னென்னில்; ஸர்வேச்வரன் தம்மை வசீகரித்தது குணங்களைக் காட்டியாகையாலே தாம் அகப்பட்ட துறையிலே முற்பட இழிந்து பேசினார். அக்குணங்கள்தான் ஸ்வரூபத்தைப் பற்றியல்லதிராமையாலே அவற்றுக்கு ஆச்ரயமான ஸ்வரூபத்தை "அவன்" என்று ப்ரஸங்கித்தார் முதற்பாட்டில்; அங்கு ப்ரஸ்துதமான திவ்யாத்மஸ்வரூபம் ஹேய ப்ரத்யநீகதையாலும் கல்யாண குணகதாநதையாலும் சேதநாசேதந விலக்ஷணமாயிருக்குமென்று அந்த ஸ்வரூபத்தை அநுபவிக்கிறார் இப்பாட்டில்.

விளக்கம் – தைத்திரீய ப்ருகுவல்லீ - யதோ வா இமாநி – யார் ஒருவனிடம் இருந்து இவை அனைத்தும் உண்டானதோ அவனே பரம்பொருள் - என்று உபநிஷத் கூறியபடி, காரிய வடிவில் உள்ள உலகத்தை முதலில் கூறி, அதற்குக் காரணமான எம்பெருமானே த்யானிக்கத் தக்கவன் என்று கூறுவது ஒருவிதம் ஆகும். அல்லது எம்பெருமானின் ஸ்வரூபத்தை முதலில் கூறி, அதன் பின்னர் அவனால் படைக்கப்பட்ட அனைத்தையும் கூறுதல் இரண்டாவது விதமாகும். இந்த இரண்டு வழிகளிலும் ஈடுபடாமல் முதலில் குணங்களைப் பற்றி ஆழ்வார் ஏன் கூற வேண்டும்? ஸர்வேச்வரன் தன்னை வசப்படுத்தியது குணங்களைக் காண வைத்தே ஆகும். ஆகையால், தான் அகப்பட்ட அவற்றை முதலில் கூறுகிறார். அந்தக் குணங்கள் அவனது ஸ்வரூபம் இல்லாமல் இருக்க முடியாது என்பதால், அவை அண்டும் இடமாகிய ஸ்வரூபத்தை "அவன்" என்று முதல் பாசுரத்தில் அருளிச்செய்தார். அங்கு கூறப்பட்ட எம்பெருமானின் ஸ்வரூபம் தோஷங்களுக்கு எதிர்த்தட்டாகவும், கல்யாண குணங்களுக்கு இருப்பிடமாகவும், சேதனம் மற்றும் அசேதனங்களை விட வேறுபட்டதாகவும் உள்ளதால் அந்த ஸ்வரூபத்தை இந்தப் பாசுரத்தில் அனுபவிக்கிறார்.

வ்யாக்யானம் - (மனனகமித்யாதி) ஜீவாத்ம ஸ்வரூபத்தில் பகவத் ஸ்வரூபம் விலக்ஷணம் என்கிறார். ஆனால் "மனனகம்" என்று தொடங்கிச் சொல்லுகிற இதுக்குக் கருத்து என்னென்னில்; ஸ்வரூப வைலக்ஷண்யத்தை அநுபவிக்கிற இவருடைய ப்ரதிபத்தி க்ரமமிருக்கிறபடி. மனனென்றது – மனமென்றபடி. (அகம்) நிரவயவமாய் இருக்கிற மநஸ்ஸுக்கு ஓருள்ளும் புறம்புமில்லாமையாலே மனனகமென்றது – மநஸ்ஸிலே

என்றபடி. அன்றியே, பராகர்த்த விஷயமாயும், ப்ரத்யகர்த்த விஷயமாயும் போருகையாலே பராகர்த்தத்தைத் தவிர்ந்து, ப்ரத்யகர்த்த விஷயமானத்தை அகமென்கிறதாகவுமாம்.

விளக்கம் - (மனனகம்) - ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தை விட எம்பெருமானின் ஸ்வரூபம் வேறுபட்ட மேன்மை உடையது என்கிறார். ஆனாலும் ஜீவ ஸ்வரூபத்தை மனன்அகம், மலம்அற என்று பலவிதமான அடைமொழியுடன் வர்ணிக்க வேண்டுமா என்றால் – எம்பெருமாளின் ஸ்வரூபத்தை அதன் வேறுபட்ட தன்மையுடன் உணர்ந்து அனுபவிக்கும்படி இவருடைய அனுபவ முறை உள்ளது. மனன் என்றால் மனம் என்பதாகும். (அகம்) - உறுப்புகள் இல்லாமல் உள்ள மனதிற்கு உள்ளும் புறமும் இல்லாததால் மனனகம் – மனதிலே என்றார். அல்லது, மனம் வெளிப்பொருளிலும் உட்பொருளிலும் செல்லும் தன்மை உடையது; இவற்றில் வெளிப்பொருளில் சொல்லாது உட்பொருளில் மட்டுமே செல்லும் மனம் என்பதை உணர்த்தும் வகையில் அகம் என்றார்.

வ்யாக்யானம் – (மலமற) மனனகத்திலுண்டான மலமுண்டு - அவித்யாதிகள்; அவையற. அவையாவன காம: க்ரோதச்ச லோபச்ச ஹர்ஷமாநமதா குணா: விஷாதச்சாஷ்டம: ப்ரோக்த இத்யேதே மநஸோ மலா: ஆத்மஸ்வரூபமும் நித்யமாய், ஜ்ஞாநமும் நித்யமாகையாலே இத்தோஷம் ஸ்வரூபகதமுமல்ல ஜ்ஞாநகதமுமல்ல; ஆத்மாவினுடைய தர்மபூதஜ்ஞாநத்துக்கு உதயாஸ்தமயவ்யவஹாரம் பண்ணுகிறது, ஜ்ஞாந ப்ரஸ்ருதி த்வாரத்தைப் பற்றவாயிற்று; ஆக ஜ்ஞாந ப்ரஸ்ருதி த்வாரமான மநஸ்ஸைப் பற்றிக் கிடக்கிற தோஷமானது, யோகசாஸ்த்ரத்தில் சொல்லுகிற க்ரமத்திலே பாஹ்யவிஷய ப்ரவணமான நெஞ்சை ப்ரத்யக் விஷயமாக்கி யமநியமாதி க்ரமத்தாலே அநுஸந்திக்கப் புக்கவாறே கழியக்கடவது.

விளக்கம் - மனதில் தோஷங்கள் உண்டு. இவை அவித்யை முதலானவை ஆகும் (அவித்யாதி என்று ஆதிசப்தத்தால் கர்ம வாசனை ருசிகள் கூறப்படுகின்றன). அவை நீங்கும்படியாக. ஆத்மா அழியாதது; ஞானம் நித்யமானது; ஆகவே இந்தத் தோஷங்கள் ஆத்மாவையும் சேர்ந்தது அல்ல, ஞானத்தையும் சேர்ந்த்து அல்ல. ஆத்மாவின் தர்மபூத ஞானத்திற்கு தோற்றமும் மறைவும் உண்டாவது என்பது ஞானம் பரவுவதற்கு வழியாக உள்ள மனதால் ஆகும் (தர்மபூத ஞானம் என்றால் "நான் காண்கிறேன், நான் நடக்கிறேன்" என்ற அறிவு. அதாவது ஆத்மா தன்னைத்தானே அறிகின்ற ஞானம் எனலாம்). ஆக

ஞானம் ஏற்படுவதற்கு வழியாக உள்ள மனதைத் தோஷங்கள் பீடித்தபடி உள்ளன. இந்த தோஷங்கள் உலக விஷயங்களில் ஈடுபடவல்ல மனதை, யோக சாஸ்திரங்களில் கூறும்படி உட்பொருளை நோக்கும்படியாகச் செய்ய வேண்டும்; யமம் மற்றும் நியமம் ஆகியவற்றைக் கைக்கொண்டவுடன் அந்த தோஷங்கள் அழிந்துவிடும் (யமம், நியமம், ஆசநம், ப்ராணாயாம், ப்ரத்யாகாரம், தாரணை, த்யானம், சமாதி போன்றவை யோகத்தின் எட்டு அங்கங்களாகும்).

வ்யாக்யானம் - "அற" என்றது – அறவற என்றபடி. அநந்தரம், மலர் – விகஸிதமாய். மிசை - மேல் நோக்கி. எழுதரும் - கொழுந்துவிட்டு மேன்மெலேனக் கிளராநின்றுள்ள. மனனுணர்வுண்டு - மாநஸஜ்ஞாநம்; இப்படி விகஸிதமாய்க் கொழுந்து விட்டு மேன்மேலெனக் கிளராநின்றுள்ள மாநஸஜ்ஞாந கம்யமாயிருக்கும் ஆத்மா; அளவிலன் – அதினளவல்லன் ஈச்வரன். மாநஸஜ்ஞாநகம்யமாயிருக்கும் ஜீவாத்மஸ்வரூபம். பகவத் ஸ்வரூபம் அங்ஙனிராது என்றதுக்குக் கருத்து என்னென்னில்; ஏகேந்த்ரிய க்ராஹ்யத்வமும் இல்லை என்கை. பொன்னுக்கும் கரிக்கும் அத்யந்தம் வைஷம்யமுண்டா யிருக்கச் செய்தே, க்ரஹிக்கைக்கு ஸாமக்ரி ஒன்றாயிருக்குமிறே. அப்படி ஏகப்ரமாணகம்யத்வ ஸாம்யமுமில்லை என்கை.

விளக்கம் – "அற" என்பது அறவற - போகப்போக என்னும் பொருளில் வந்தது. அடுத்து, மலர் – மலர்ந்து என்னும் பொருளில் வந்தது. அடுத்து, மலர் - மலர்ந்து, மிசை - மேல் நோக்கி, எழுதரும் – கொழுந்து விட்டு மேலும் மேலும் நிற்கின்ற, மனன் உணர்வு உண்டு - மனஜ்ஞானம். அதாவது மலர்ந்து, கொழுந்து விட்டு, மேலும் மேலும் எழுகின்ற மனதின் அறிவால் அறியப்படும் ஆத்மா. அளவிலன் - அந்த ஆத்மாவின் அளவை உடையவன் அல்லன். ஜீவனின் தன்மை மனதின் அறிவால் உணரக்கூடியதாக இருக்கும். ஆனால் எம்பெருமானின் ஸ்வரூபம் இவ்விதம் அறிய இயலாது என்று ஏன் கூறவேண்டும்? காரணம், ஒரே இந்திரியங்களால் அறியக்கூடிய தன்மை இல்லை. அதாவது தங்கமும் கரியும் வேறாக இருந்தாலும் அவற்றை ஒரே கண் அறிந்து கொள்கிறது. அது போன்று இங்கு ஒரே ப்ரமாணம் மூலம் ஜீவனின் ஸ்வரூபத்தையும் எம்பெருமானின் ஸ்வரூபத்தையும் அறியவல்ல ஒப்புமை இல்லை.

வ்யாக்யானம் - ஆனால் மநஸா து விசுத்தேந என்று பரிசுத்தமான அந்த:கரணத்தாலே க்ரஹிக்கலாமென்னாநின்றதே, அத்தோடு விரோதியாதோவென்னில்; நேதி நேதி என்று க்ரஹிக்குமத்தனையல்லது ஈத்ருக்தயா, இயத்தயா, பரிச்சேதித்து க்ரஹிக்கப் போகாதென்கை. முதலிலே ஜ்ஞாநவிஷயம் அன்றென்னில் துச்சத்வம் வருமிறே. அணுத்ரவ்யத்தை க்ரஹிக்குமாபோலே விபுத்ரவ்யத்தை க்ரஹிக்கப்போகாது என்கை. (பொறியுணர்வவையிலன்) – பொறியென்று சக்ஷுராதிகரணங்கள். அவற்றால் அறியப்படும் பதார்த்தங்களின் படியல்லன். யமாத்மா ந வேத, யம் ப்ருதிவீ ந வேத என்கிறபடியே, இவ்வோபாதி ஜீவாத்ம ஸ்வரூபத்தில் விலக்ஷணனென்றதும் என்கை; ஜாத்யந்தன் பதார்த்த தர்ஸநம் பண்ணிற்றிலனென்பதும், கண்ணில் வைசத்யமுடையவனும் கண்டிலன் என்பதும்; காணாமைக்கு இருவருமொக்குமிறே. அப்படியே அசித் விலக்ஷணனென்றவோபாதி சித்விலக்ஷணனென்றதுவும் என்கைக்காகச் சொல்லுகிறது. இப்படி உபயவிலக்ஷணனாயிருக்குமாகில் அவனை ப்ரதிபத்தி பண்ணும்படி என்னென்னில், (இனன்) - ஏவம்விதன் என்னுமித்தனை. உக்தத்தைச் சொல்லவுமாம்; வக்ஷ்யமாணத்தைச் சொல்லவுமாம்.

விளக்கம் – ஆனால் மநஸா து விசுத்தேந - தூய்மையான மனதால் எம்பெருமான் அறியப்படுகிறான் - என்று வேதங்கள் கூறுகின்றதே, மேலே உள்ள கருத்துக்கு முரண்பாடு இல்லையோ? ப்ருஹத் உபநிஷத் கூறுவது போன்று - நேதி நேதி - அல்ல அல்ல – என்று மட்டுமே எம்பெருமானை அறிய முடியும் அல்லாது, இத்தனை அளவுள்ளவன் போன்ற ஞானத்தால் அறிய இயலாது. இப்படி தொடக்கத்திலேயே ஞானத்தால் அறிய இயலாது என்றால், அப்படி ஒரு பொருளே இல்லை என்றாகி விடுமே என்ற சந்தேகம் எழலாம். இதன் கருத்து - அணு அளவே உள்ள ஆத்மாவை அறிவது போன்று எங்கும் உள்ள எம்பெருமானை அறிய முடியாது என்பதாகும். (பொறியுணர்வவையிலன்) – பொறி என்றால் கண் முதலான உறுப்புகள். அவற்றால் அறியப்படும் உலக விஷயங்கள் போன்ற தன்மை கொண்டவன் அல்லன். யமாத்மா ந வேத - யாரை ஆத்மா அறியாதோ; யம் ப்ருதிவீ ந வேத – யாரை உலகம் அறியாதோ – என்னும்படி ஜீவாத்ம ஸ்வரூபத்தை விட மேன்மையானவன் ஆவான். பார்வை இல்லாதவன் பொருளைக் காண இயலாது. பார்வை உள்ள ஒருவனால் ஒரு பொருளை காண இயலவில்லை என்று வைத்துக்கொள்வோம். ஆக பார்க்காதவர்கள் என்ற ஒற்றுமை இருவரிடமும் உண்டு. இது போன்று கண்ணால் காணப்படும் பொருள்களை விட

எம்பெருமான் எப்படி வேறுபட்டுள்ளானோ, அது போன்று கண்ணால் காண இயலாத ஆத்மாவை விடவும் வேறுபட்டவன் ஆவான். இப்படி இரண்டு விதங்களிலும் வேறுபட்டால் அவனை எப்படி அறிவது? இனன் - இப்படிப்பட்டவன்; இதன் மூலம் அடுத்து உள்ள இரண்டு வரிகளைக் கூறுகிறார்.

வ்யாக்யானம் - எப்படிப்பட்டவன்? என்னில்; (உணர்முழுநலம்) உணர்வென்று – ஜ்ஞாநம். நலமென்று – ஆநந்தம். முழுவென்று - இரண்டிடத்திலும் அந்வயிக்கிறது. கட்டடங்க ஜ்ஞாநமுமாய் கட்டடங்க ஆநந்தமுமாயிருக்கும். இத்தால் ஸ்வரூபத்தில் அப்ராகாசமாயாதல், அநநுகூலமாயாதலிருக்குமிடமில்லை என்கை. அன்றிக்கே, ஆநந்தமாகிறதும் ஜ்ஞாநவிசேஷமாகையாலே ஆநந்தத்தைச் சொன்னபோதே ஜ்ஞாநத்தையும் சொல்லிற்றாய் வருமிறே; ஆகையாலே (இனனுணர் முழுநலம்) நேர்கோடுநேர் தன்னை அறியப்போகாமையாலே, என்றும் ஒக்க இனனாலே உபமாநத்தாலே அறியப்படுவதான முழுநலமாயிருக்கும்; யதா ஸைந்தவகந: என்கிறபடியே நிரதிசயாநந்தமாயிருக்கும். ஆநந்தோப்ரஹ்ம என்றும், ஆநந்தமய: என்றும் சொல்லக்கடவதிறே.

விளக்கம் – உணர்வு என்றால் ஞானம். நலம் என்றால் ஆனந்தம். முழு என்பதை இந்த இரண்டிலும் சேர்க்க வேண்டும். எல்லையற்ற ஞானம் மற்றும் எல்லையற்ற ஆனந்தம் உடையவனாக இருக்கிறான். இதன் மூலம் எம்பெருமானின் ஸ்வரூபத்தின் விளக்கம் அற்று இருத்தல், அறிய இயலாமல் இருத்தல் போன்றவை தள்ளப்படுகிறது. ஆனந்தமாக உள்ளதும், ஞானத்தை முன்னிட்டே என்பதால் ஆனந்தத்தை கூறும்போதே ஞானத்தையும் கூறியதாக ஆகிறதே. இதனால் கூறியது கூறல் என்ற தோஷம் அல்லவா? அல்ல. எப்படி நேருக்கு நேராக அவனை அறிய இயலாததால், எப்போதும் உபமானத்தால் அறியப்படுபவனாக இருப்பான். யதா ஸைந்தவகந: - எல்லையற்ற ஆனந்தமாய் உள்ளவன், ஆனந்தோ ப்ரஹ்ம - ஆனந்தமயமானது, ஆனந்தமய: என்று கூறியது காண்க.

வ்யாக்யானம் - (கடிசேர் நாற்றத்துள்ளாலை) கரியும், நாற்றமும், இரண்டும் – பரிமளம். ஆலையென்பது - மது, ஸர்வரஸத்துக்கும் உபலக்ஷணம், ஸர்வகந்தத்துக்கும் உபலக்ஷணம் - நாற்றம். "கடிசேர் நாற்றத்துள்ளாலை இன்பத்துன்பக்கழிநேர்மை ஒடியா

இன்பப் பெருமையோன்" என்று பூவில் கந்தத்தையும், மதுவில் ரஸத்தையும் பிடித்து, அவை தன்னிலும் அல்பாஸ்திரத்வாதி தோஷங்களைக் கழித்து, ஸ்திரமாக்கிச் சேர்த்துப் பார்த்தால் சிறிதொப்பாம் என்னுமாபோலே ஓருபமாநத்தாலே அறியில் அறியலாமத்தனை; தன்னையே இழிந்து அறியப்போகாது என்றபடி. (உணர்முழுநலம்) - முழுவுணர்வுமாய், முழுநலமுமாயிருக்கும்; கட்டடங்க ஜ்ஞாநமுமாய், கட்டடங்க ஆநந்தமுமாயிருக்கும். அநுகூல ஜ்ஞாநமேயாகிலும், ஆநந்தமாகிறது பிரித்து, வ்யவஹரிக்கக் கடவதாயிருக்குமிறே. (எதிர் நிகழ் கழிவினுமினனிலன்) - காலத்ரயத்திலும், இனனுண்டு – ஒப்பு, அதில்லாதான். சிதசிதீச்வர தத்வத்ரயமேயாயிற்று நம் தர்ஸநத்துக்கு உள்ளது; அதில் சிதசித் விலக்ஷணம் என்னுமிடம் முன்பே சொல்லிற்று. இங்குச் சொல்லிற்றாகிறது என்னென்னில்; "திரளவொப்பில்லையாகில், ஒருவகையாலே தான் ஒப்புண்டோவென்னில், அதுவும் இல்லையென்கிறது" என்று நிர்வஹிப்பாரும் உண்டு; அங்ஙன்றிக்கே, பட்டர் "ஸாதர்ம்ய த்ருஷ்டாந்தம் இல்லை என்றது முன்பு; வைதர்ம்ய த்ருஷ்டாந்தமில்லை என்கிறது இங்கு" என்று வைதர்ம்ய த்ருஷ்டாந்தத்துக்கு உதாஹரணம் ந பரேஷு மஹௌஜஸச் சலாதபகுர்வந்தி மலிம்லுசா இவ. (எனனுயிர்) இப்படி இருக்கிறவன் எனக்கு தாரகன். யஸ்யாத்மா சரீரம் என்கிறபடியே. இத்தைத் தனக்கு சரீரமாகக் கொண்டு, தான் சரீரியாய், தாரகனாயிருக்கும் என்னும் அர்த்தமுஞ் சொல்லவேண்டுவது ஒன்றிறே.

விளக்கம் – இங்கு திருவாய்மொழி (8-8-2) - கடிசேர் - என்ற பாசுரத்தை உபமான ப்ரமாணமாக அருளிச் செய்கிறார். கடி, நாற்றம் ஆகிய இரண்டும் வாசனை என்னும் பொருளை அளிக்கும். ஆலை என்றால் தேன் என்பதாகும். வாசனை, தேன் ஆகிய இரண்டும் அனைத்து நறுமணத்திற்கும், அனைத்துச் சுவைக்கும் எடுத்துக்காட்டாகும். மலரில் உள்ள நறுமணம், தேனில் உள்ள சுவை ஆகியவற்றை ஒன்றாக்கி அதில் உள்ள தோஷங்களை நீக்கிச் சேர்த்துப் பார்க்கும்போது வருகின்ற ஆனந்தம், அனைத்து நறுமணங்கள் மற்றும் சுவைகளின் ஆனந்தத்திற்கு சிறிய ஒப்பாகும். இது போன்று ஓர் உபமானத்தால் அறிய முயன்றால் சிறிது அறியலாம். தன்னையே இழிந்து அறியப் போகாது. (உணர் முழுநலம்) – முழு உணர்வும், முழு நலமுமாயும் இருக்கும். எல்லையற்ற ஞானமாகவும், எல்லையற்ற ஆனந்தமாயும் இருக்கும். ஞானம் மூலம் ஆனந்தம் உண்டானாலும், ஆனந்தம் மற்றும் ஞானம் என்று பிரிப்பதே வழக்கம் ஆகும். (எதிர் நிகழ் கழிவினுமினனிலன்) – மூன்று காலங்களிலும் தனக்கு ஈடு இல்லாதவன். நமது ராமானுஜ

மதத்தில் சித், அசித், ஈச்வரன் ஆகிய மூன்று பொருள்கள் கூறப்பட்டுள்ளன. இவற்றில் எம்பெருமானானவன் சித் மற்றும் அசித் ஆகியவற்றை விட வேறுபட்டவன் என்று முன்பே கூறினார். இங்கு கூறப்படுவது என்ன? பலவற்றையும் சேர்த்து இவனுக்கு வேறு ஈடு இல்லை என்றாலும், ஏதோ ஒன்றாவது ஒப்பாக உண்டோ என்றால் அதுவும் இல்லை என்று சிலர் பொருள் கூறுவார்கள். பட்டர் கூறுவது - ஸாதர்ம்ய த்ருஷ்டாந்தம் இல்லை என்றது முன்பு; வைதர்ம்ய த்ருஷ்டாந்தமில்லை - ஒத்த தர்மங்களை உடைய பொருள்களை எடுத்துக்காட்டாகக் கூறுவது இயலாது என்று முன்னர் கூறினார்; வேறுபட்ட தர்மங்களைக் கொண்ட பொருள்களை எடுத்துக்காட்டாகக் கூறுவது இயலாது என்று இப்போது கூறினார் - என்று அருளிச்செய்தார். இதற்கு உதாரணம் - ந பரேஷு மஹௌஜஸச் சலாதபகுர்வந்தி மலிம்லுசா இவ - சிறந்த வீரர்கள் விரோதி விஷயத்தில் திருடர்கள் போன்று வஞ்சனை செய்ய மாட்டார்கள் - என்பதாகும். இப்படி உள்ளவன் நான் உயிர் வாழக் காரணமாக உள்ளான். ச்வேதாஸ்வதர உபநிஷத் - யஸ்யாத்மா சரீரம் – யாருக்கு ஆத்மா சரீரமோ - என்றது. அதாவது ஆத்மாக்களைத் தனது சரீரமாகக் கொண்டு, தான் ஆத்மாவாகவும் தாரகனாகவும் இருப்பவன் என்னும் பொருளையும் கூறவேண்டியது ஆகும்.

வ்யாக்யானம் - (மிகுநரையிலனே) - மிக்காரை உடையனல்லன். தான் ஜீவாத்மாவை சரீரமாகக் கொண்டு தாரகனாய் நியாமகனாய் இருக்கிறாப்போலே, தன்னையும் நியமிக்கக் கடவதொரு வஸ்த்வந்தரம் உண்டோவென்னில்; தனக்கு மேற்பட்டாரை உடையனல்லன்; ந தத்ஸமச்சாப்யதிகச்ச த்ருச்யதே என்னுமாபோலே. "மனனகமலமற மலர்மிசை யெழுதரும் மனனுணர்வளவிலன், பொறியுணர்வவையிலன், எதிர் நிகழ் கழிவினுமினனிலன், மிகுநரையிலன், உணர்முழுநலம், இனன், என்னுயிர்" என்று அந்வயம். அன்றிக்கே, "என்னுயிரானவன் துயரறு சுடரடி தொழுதெழென் மனனே" என்று கீழ்ப்பாட்டோடே அந்வயம்.

விளக்கம் - தன்னை விட உயர்ந்தவர்களைக் கொண்டவன் அல்லன். இவன் ஜீவாத்மாவைத் தனது சரீரமாகக் கொண்டு அதன் தாரகனாய், நியமிப்பவனாய் உள்ளது போன்று இவனை ஏவுகின்ற ஏதேனும் ஒன்று உண்டா என்றால் – தனக்கு மேற்பட்ட யாரையும் கொண்டவன் அல்லன். ந தத்ஸமச்சாப்யதிகச்ச த்ருச்யதே – இவனுக்கு ஒப்பானவனும் மேம்பட்டவனும் காணப்படுவதில்லை. "மனனகமலமற மலர்மிசை

யெழுதரும் மனனுணர்வளவிலன், பொறியுணர்வவையிலன், எதிர் நிகழ் கழிவினுமினனிலன், மிகுநரையிலன், உணர்முழுநலம், இனன், என்னுயிர்" என்று சொற்களை வரிசைப்படுத்திப் பொருள் கொள்ளவேண்டும். அல்லது "என்னுயிரானவன் துயரறு சுடரடி தொழுதெழென் மனனே" என்று கடந்த பாசுரத்துடன் சேர்ந்துப் படிக்கவேண்டும்.

3. இலனது வுடையனி தெனநினை வரியவன்
நிலனிடை விசும்பிடை யுருவின நருவினன்
புலனொடு புலனல னொழிவிலன் பரந்தவந்
நலனுடை யொருவனை நணுகினம் நாமே

பொருள் – ஏதோ ஒன்றை எண்ணி அது இவனிடம் இல்லை, ஏதோ ஒன்றை எண்ணி அதனை உடையவன் என்று இருவிதமாகவும் நினைக்க இயலாதவன்; பூமி, ஆகாயம் போன்ற அனைத்து உலகங்களிலும் உள்ள சேதன, அசேதனங்கள் அனைத்தையும் உடையவன்; காண்கின்ற அனைத்துப் பொருள்களுமாக உள்ளவன்; அப்படி இருந்தாலும் அவற்றின் தோஷங்களால் தீண்டப்படாதவனாக இருப்பவன் - இப்படியாக அனைத்துப் பொருள்களையும் விட்டு நீங்காமல் எங்கும் பரவியுள்ள, சிறந்த குணங்களை உடைய ஒப்பற்ற ஸர்வேச்வரனை நாம் அடைகிறோம்.

அவதாரிகை – முதற்பாட்டிலே ப்ராதாந்யேந கல்யாணகுண யோகத்தையும், நித்ய விபூதி யோகத்தையும், விக்ரஹ வைலக்ஷண்யத்தையும் அநுபவித்து, அவற்றுக்கு ஆச்ரயமான திவ்யாத்ம ஸ்வரூபம் சிதசித் விலக்ஷணமுமாய், உபமாந ரஹிதமுமாய் இருக்குமென்று இரண்டாம் பாட்டாலே அருளிச்செய்து நின்றார்; அவற்றோடே சேர ஒரு கோர்வையாய்த் தோற்றுமிறே ததீயத்வாகாரத்தாலே லீலா விபூதியும் இவர்க்கு. நோபஜநம் ஸ்மரந்நிதம் சரீரம் என்னா நிற்கச்செய்தே ததீயத்வாகாரத்தாலே லீலா விபூதியும் உத்தேச்யமாகா நின்றதிறே முக்தனுக்கு; இவர்க்கும், கர்ம நிபந்தநமான ஆகாரமும் கிடக்கச்செய்தே மயர்வற மதிநலமருளப் பெற்றவராகையாலே ததீயத்வாகாரமும் தோற்றி அநுபவிக்கிறார். ராஜாக்களுக்கு நாடெங்குஞ் செல்லா நிற்கச்செய்தே மஹிஷிகளும் தாங்களுமாகச் சில பூந்தோட்டங்களைக் குட நீர் வார்த்து ஆக்குவதழிப்பதாய், லீலாரஸம் அநுபவிக்குமா போலே "திருவிண்ணகர் சேர்ந்த பிரான் பெய்த காவு கண்டீர் பெருந்தேவுடை மூவுலகு"

என்கிறபடியே ஸர்வேச்வரனும் பெரியபிராட்டியா ருமாகக் கடாக்ஷித்தபோது உண்டாய், இல்லையாகில் இல்லையாய் அவர்களுக்கு லீலாரஸ விஷயமாய் இருக்கிற லீலா விபூதியை அநுபவிக்கிறார்.

விளக்கம் – முதல் இரண்டு பாசுரங்களில் மிகவும் உயர்ந்த பொருள்களை கூறிவிட்டு இந்த பாசுரத்தில் தாழ்வான உலகங்களைப் பற்றி ஏன் கூறினார்? முதல் பாட்டில் சிறந்த குணம் கொண்ட தலைவனாக இருத்தல், நித்ய விபூதியைக் கொண்டவனாக இருத்தல், அனைத்தையும் விட வேறுபட்ட திருமேனியைக் கொண்டிருத்தல் ஆகியவற்றை அனுபவித்தார். இவற்றுக்கு இருப்பிடமான எம்பெருமான் சேதனம் மற்றும் அசேதனங்களின் ஸ்வரூபத்தில் இருந்து வேறுபட்டவன், ஒப்புயர்வு அற்றவன் என்று இரண்டாம் பாட்டில் அருளிச்செய்தார். அனைத்தும் அவனது உடைமை என்பதால் லீலா விபூதியான இந்த உலகமும், மேலே கூறப்பட்ட இரண்டுடன் ஆழ்வாருக்கு ஒன்றாகவே தோன்றியது. சாந்தோக்ய உபநிஷத் – நோ பஜநம் ஸ்மரந்நிதம் சரீரம் – இந்த உடலை எண்ணாமல் ஈச்வரனின் அனைத்துப் பக்கங்களிலும் முக்தன் சஞ்சரிக்கிறான் - என்றது. ஆக முக்தனுக்கு லீலாவிபூதியும் எளிதாகவேகிட்டுகிறது. ஆனால் ஆழ்வார் முக்தரோ என்றால் – இவர் கர்மம் காரணமாகச் சரீரம் எடுத்து நின்றாலும், மயர்வற மதிநலம் அருளப் பெற்றவர் என்பதால், ததீயத்வ ஆகாரம் (எம்பெருமானின் உடைமைப் பொருள் என்னும் நிலை) தோன்றி அனுபவிக்கிறார். ஆனால் இந்த உலகங்கள் முழுவதும் எம்பெருமானுக்கு உடைமை என்பதை எப்படி அறிவது? அரசன் ஒருவனுக்கு நாடு முழுவதும் ஆணை செல்லும் என்றாலும், தானும் தனது அரசிகளும் சேர்ந்து பூந்தோட்டங்கள் சிலவற்றைக் குடத்தில் நீர் ஊற்றி வளர்த்து அழிப்பதை விளையாட்டாகக் கொள்வர். இது போன்று (6-3-5) - திருவிண்ணகர் சேர்ந்த பிரான் பெய்த காவு கண்டீர் பெருந்தேவுடை மூவுலகு - என்னும்படி ஸர்வேச்வரனும் பெரிய பிராட்டியும் கண் குளிரப் பார்த்தால் உலகம் உண்டு என்பதும், அவ்விதம் பார்க்கவில்லை என்றால் உலகம் இல்லை என்பதுமாக அவர்களின் விளையாட்டிற்காக உலகம் இருப்பதால் எம்பெருமானின் உடைமை எனப்பட்டது

வ்யாக்யானம் - (இலனது உடையனிது என நினைவரியவன்) "அது இலன், இது உடையவன்" என நினைவரியவன். அநுபூதமாயிருப்பதொன்றைச் சொல்லி, அது இலனென்றவாறே அதொழிந்தத்தை உடையவனென்று தோற்றும்; ஒன்றைக் காட்டி

இத்தை உடையவன் என்றவாறே இதொழிந்தது இல்லையாய்த் தோற்றும்; "இலனது" என்றால் பரிச்சிந்ந விபூதிகனாம். "உடையனிது" என்றால் இதொழிந்ததில்லாமையாலே அல்பவிபூதிகனாம்; இரண்டு வழியாலுமாக ஐச்வர்யம் குறைந்து தோற்றும். (என) இப்படி இருக்குமென. (நினைவரியவன்) அநுபபந்தங்களைச் சேர்த்து நினைக்கலாமிறே; ஓர் ஊசி நிற்கிறதாகவும், அதின் மேலே கலசமிருக்கிறதாகவும், அதன் மேலே சாலிருக்கிறதாகவும், அதன் மேலே மஹாமேருவிருக்கிறதாகவும், இப்படி அநுபபந்தங்களைச் சேர்த்து நினைக்கலாமிறே. இப்படியேதான் மநோரதத்துக்கு விஷயமாயிருக்கு மோவென்னில் மநோரத ஸமயத்திலும் பரிச்சேதிக்க அரியனாயிருக்கும்.

விளக்கம் – (இலனது உடையனிது என நினைவரியவன்) – இன்னது இல்லாதவன், இன்னது உடையவன் என்று நினைக்க இயலாதவன். அனுபவிக்கக்கூடிய ஒவ்வொரு பொருளாகக் கூறி, அந்தப் பொருள் இல்லாதவன் என்று சொன்னால், அதனைத் தவிர வேறு பொருள்கள் உடையவன் என்றாகும்; ஒரு பொருளைக் காட்டி, அதனை உடையவன் என்றால், அந்தப் பொருள் தவிர்த்து மற்றது இல்லாதவன் என்றாகிவிடும். "இலன் அது" என்றால் ஓர் அளவிற்கு உட்பட்ட ஐச்வர்யத்தை உடையவன் என்றாகும்; "உடையன் இது" என்றால் அற்பமான ஐச்வர்யம் உடையவன் என்றாகும். ஆக இந்த இரண்டு வழிகளிலும் எம்பெருமானின் ஐச்வர்யம் குறைவாகத் தோன்றிவிடும். எனவே இலன் அது உடையன் இது என நினைவரியவன் என்றார். (நினைவு அரியவன்) – உலகில் உள்ள பொருள்களில் ஒன்று சேராதவற்றையும் கூட சேர்த்து நினைக்கக்கூடும், ஆனால் இவனை நினைக்க இயலாது. அதாவது ஓர் ஊசி நிற்கிறது, அதன் மேல் கலசம் இருக்கிறது, அதன் மேல் நெல் நிற்கிறது, அந்த நெல் மீது மேருமலை நிற்கிறது என்று சேராதவற்றையும் நினைக்கலாம். அது போன்று நினைப்பதற்கு இவன் விஷயமாக இருப்பானோ என்றால், மனதால் நினைப்பதற்கும் அரியவன் என்றார்.

வ்யாக்யானம் - ஆனால் இவனைச்வர்யத்தைப் பேசும்படி என்னென்னில் (நிலனித்யாதி) பதிம் விச்வஸ்ய என்னுமித்தனை. "நிலனிடை" என்கிற இது பாதாளத்தளவும் நினைக்கிறது. "விசும்பிடை" என்கிற இது – பரமபதத்துக்கு இவ்வருகுள்ளத்தையெல்லாம் நினைக்கிறது. (உருவினன்) உருக்களை உடையான். (அருவினன்) அருக்களை உடையான். "இனன்" என்ன, உடையவன் என்று காட்டுமோ என்னில்; "காராயின காளநன்மேனியினன்" என்றால் – மேனியை உடையவன் என்று காட்டுமாபோலே. ஆக

கீழ் மேலுண்டான சேதநாசேதநங்களை உடையான் என்றபடி. இத்தால் ப்ராதேசிகமான ஐச்வர்யம் உடையவர்களதன்று லீலாவிபூதி; ஸர்வாதிகனது என்கை.

விளக்கம் - ஆனால் இவனுடைய ஐச்வர்யத்தை எப்படிக் கூறுவது என்றால், (நிலன்) – தைத்திரீய நாராயணவல்லீ – பதிம் விச்வஸ்ய - இந்த உலகின் நாயகன் – என்னும்படி. "நிலனிடை" என்றால் பாதாளம் அளவு ஆகும். "விசும்பிடை" என்றால் பரமபதத்திற்கு இந்தப் பக்கம் உள்ள அனைத்தும் ஆகும். உருவினன் – சரீரங்களை உடையவன். ஆக எங்கும் உள்ள சேதனம் மற்றும் அசேதனங்களை உடையவன். அருவினன் என்பதில் உள்ள இனன் என்ற பதம் உடையவன் என்பதைக் கூறுமோ என்றால், (9-3-1) - காராயின காளநன்மேனியினன் - மேனியை உடையவன் என்பது போல் ஆகும். ஆக இதன் மூலம் அந்தந்த பகுதிகளை சேர்ந்தவர்களுக்குச் செல்வமாக லீலாவிபூதி இல்லை, அனைவருக்கும் மேம்பட்ட ஸர்வேச்வரனுடையது ஆகும்.

வ்யாக்யானம் - இப்படி ஸர்வத்தையும் உடையனாய், தான் போகத்திலே அந்யபரனாய்க் கோயிற்சாந்து பூசி, நித்ய விபூதியிலே இருக்குமோவென்னில்; (புலனொடு) இவை பட்டத்தைத் தானும் பட்டு உடன்கேடனாய் நின்று நோக்கும் என்கிறது, "புலன்" என்கிறது – புலப்படும் பதார்த்தங்களை. த்ருச்யதே ச்ரூயதேபி வா என்கிறபடியே ப்ரமாண கோசரங்களான பதார்த்தங்களை (ஓடு) தத்ஸ்ருஷ்ட்வா என்கிறபடியே இவற்றை உண்டாக்கி, ஜீவத்வாரா அநுப்ரவேஸித்து, பின்னை இவற்றுக்கு வஸ்துத்வ நாமபாக்த்வங்களுண்டாம்படி பண்ணி, அந்த:ப்ரவிஷ்டச் சாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா என்கிறபடியே ஸர்வாந்தராத்மாவாய் நிற்கும்படியைச் சொல்லுகிறது. ஆனால், பின்னை தான் ஸர்வாத்மாவாய் நின்றால் அசித்தினுடைய பரிணாமாதிகளாதல், சேதநருடைய ஸுகித்வ து:க்கித்வங்களாதல், தனக்கு ஸ்பர்சிக்கும்படி இருக்குமோ? என்னில் (புலனலன்) தந்தர்மாவல்லன். த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்த்யநச்நந்நந்யோ அபிசாகசீதி என்று தான் ஒட்டற்று நின்று விளக்காநிற்கும். (ஒழிவிலன் பரந்த) ஒரு வஸ்துக்கள் ஒழியாமே இப்படி வ்யாபித்திருக்கும் என்னவுமாம். அன்றியே காலபரமாக்கி, எக்காலத்திலும் எல்லா வஸ்துக்களிலும் வ்யாபித்திருக்கும் என்னவுமாம்.

விளக்கம் - இப்படி அனைத்தையும் உடையவனாய், இன்பத்தில் நின்று, சந்தன சாந்து அணிந்து பரமபதத்தில் தங்கி இருப்பானோ? என்றால் (புலனொடு) - இவை அனைத்தும் அனுபவிப்பதைத் தானும் அனுபவித்து, இவற்றுக்கு உண்டாகும் அனைத்தும் தனக்கே என்று எண்ணி நிற்பான். புலன் என்றால் புலன்களுக்குப் புலப்படும் விஷயங்கள். த்ருச்யதே ச்ரூயதேபி வா - பார்க்கப்படும், கேட்கப்படும் பொருள்கள் ஆகும். (ஓடு) - இவற்றை உண்டாக்கி, அவற்றின் ஜீவன் வழியாக உள்ளே நுழைந்து, அவை பொருள்கள் என்று விளங்க வைத்து, அவைகளுக்குப் பெயர் கொடுத்து, அந்த:ப்ரவிஷ்டச் சாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா - அனைத்து ஆத்மாக்களின் உள்ளே நுழைந்தும், அவைகளை நியமித்தும் - என்னும்படி அனைவருக்குள் ஆத்மாவாக நிற்கும்படியைக் கூறுகிறார். ஆனால் அனைத்திற்கும் ஆத்மாவாக நின்றால் அசித் போன்ற மாறுதல்களுக்கு உட்பட்டும், சேதனர்கள் போன்று இன்பதுன்பங்கள் தன்னை அடையும்படியும் இருப்பானோ என்றால், (புலனலன்) – தான் ஒட்டாமல் நிற்பவன். முண்டக உபநிஷத் - த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்த்யநச்நந்நந்யோ அபிசாகசீதி - ஒரே போன்ற தன்மை கொண்ட இவற்றில் ஒன்று பழங்களை உண்டபடி இருக்கின்றது, மற்றது பார்த்தபடி உள்ளது – என்றது காண்க. (இங்கு மரம் என்பது உடல் ஆகும். ஒரு பறவை = ஜீவாத்மா, இரண்டாம் பறவை = பரமாத்மா, பழம் = பலன். ஆக ஜீவன் மட்டும் அனுபவிக்கிறான்). (ஒழிவிலன்) – எந்த வஸ்துவும் தப்பாதபடி அனைத்திலும் வ்யாபித்து நிற்கிறான் அல்லது ஒழிவின்மை என்பது காலத்துடன் சேர்த்து, எக்காலத்திலும் அனைத்து வஸ்துக்களிலும் வ்யாபித்து நிற்கிறான்.

வ்யாக்யானம் - (அந்நலனுடையொருவனை) - கீழ் இரண்டு பாட்டாலும் சொன்ன குண விசிஷ்ட ஸ்வரூபத்தை நினைத்து "அந்நலனுடையொருவனை" என்கிறார். (நணுகினம்) "மயர்வறமதிநலமருளினன்" என்கிற ஜ்ஞாநமாத்ரம் அன்றிக்கே கிட்டப்பெற்றோம். (நாமே) இது பொய்யோ? கிந்து ஸ்யாச்சித்தமோஹோயம், இது ஏதேனும் ப்ரமஸ்வப்நாதிகளோ என்றாப்போலே. இவர் "ஈச்வரோஹம்" என்றால் அவனுக்கும் குடிவாங்கவேண்டும்படியாயிறே இருப்பது. அஹமென்றால் அவனளவிலே பர்யவஸிக்க வேண்டும்படியாயிருக்க, தேஹத்தளவிலேயாம் படியாகவிறே முன்பு போந்தது. மந்யே ப்ராப்தாஸ்ஸ்ம தம் தேசம் பரத்வாஜோ யமப்ரவீத் - கைகேயி "ராஜந்" என்று ஸம்போதிக்கும்படி பிறந்து, ஸ்ரீபரத்வாஜபகவான் "அவள் மகனாய்க் கீழ்வயிற்றுக்கழலை அறுக்க வருகிறானோ" என்று கச்சிந்ந துஷ்டோ வ்ரஜஸி என்னும்படியான நான், அவன்

சொன்ன ஆச்ரமத்திலே புகுந்தேனோ என்று சங்கியா நின்றேன் என்றானிறே. வாநராணாம் நராணாஞ்ச கதமாஸீத் ஸமாகம: "காட்டிலே வர்த்திக்கக்கடவ குரங்குகளுக்கும், நாகரீகரான சக்ரவர்த்தி பிள்ளைகளுக்கும் ஒரு சேர்த்தியுண்டானபடி எங்ஙனே?" என்ன, ராமஸுக்ரீவயோரைக்யம் தேவ்யேவம் ஸம்ஜாயத பெருமாளும் மஹாராஜரும் சேர்த்த சேர்த்தி, பின்னே பிறந்த இளையபெருமாள் நிற்க, அடியேன் அந்தப்புரகார்யத்துக்கு வரும்படியாகவிறே; நாமும் இங்ஙனே கூடிக்கொண்டு நிற்கக் கண்டேனித்தனை. (நாமே) இவ்வநுபவத்துக்குப் புறம்பான நாம், பகவத்கதாகந்தரஹித ரான நாம் (நாமே) இது பொய்யோ?

விளக்கம் - (அந்நலனுடையொருவனை) - கடந்த இரு பாசுரங்களில் கூறப்பட்ட குணங்களுடன் கூடிய எம்பெருமானின் ஸ்வரூபத்தை எண்ணி இவ்வாறு கூறுகிறார். (நணுகினம்) – மயர்வற மதி நலம் அருளினன் என்ற ஞானம் மட்டுமே அல்லாமல் அவனை அடையவும் செய்தோம். (நாமே) - இது உண்மையோ பொய்யோ? இது ஏதேனும் மயக்கமோ என்று சீதை நினைத்தது போன்று இருவரும் எண்ணுகிறார். இந்த ஐயத்தின் காரணம் என்ன? அதாவது மயர்வற மதிநலம் அருளப் பெருவதற்கு முன்பு ஈச்வரோஹம் – நானே ஈச்வரன் என்னும்படியாகத் தன்னை சுதந்திரமாக எண்ணினார். ஆகையால் தனக்கு இந்தத் தகுதி உள்ளதா என்று ஐயம் கொள்கிறார். அஹம் என்றால் எம்பெருமான் அளவில் சென்று முடிய வேண்டும் அல்லாது தன்னுடைய தேகத்து அளவில் அல்லவோ முன்பு நின்றார். மந்யே ப்ராப்தாஸ்ஸ்ம தம் தேசம் பரத்வாஜோ யமப்ரவீத் – பரதன், "கைகேயி என்னை அரசனே என்று அழைக்கும்படியாகப் பிறந்து விட்டேனே! அவளது மகனாக, இருக்கும் நான் கீழ் வயிற்றில் எழுந்த கட்டி போன்று, பரதன் வருகிறானே என்று கூறும் நிலையில் உள்ள நான், பரத்வாஜரின் ஆஸ்ரமத்தை அடைந்து விட்டேனோ?", என்று ஐயம் கொண்டான். அனுமனிடம் சீதை, "காட்டில் வசிக்கின்ற குரங்குகளுக்கும் நகரத்தில் வசிக்கின்ற சக்ரவர்த்தியின் புத்திரர்களுக்கும் எப்படிச் சம்பந்தம் உண்டானது?," என்றார். இதற்கு அனுமான், "இராமனும் சுக்ரீவனும் சேர்ந்த சேர்த்தி லட்சுமணன் இருக்கும்போது நான் அந்தபுரக் கார்யத்திற்கு ஆகும்படியாக இதோ ஆயிற்றே? இந்த சேர்த்திக்கான காரணத்தை நான் அறியேன் ", என்றான். (நாமே) - எம்பெருமானின் அனுபவத்திற்கு புறம்பான நாம்; அல்லது அவனுடைய திருநாமத்தின் வாசனையைக்கூட அறியாத நான்.

4. நாமவனிவனுவன் அவளிவளுவளெவள்
தாமவரிவருவர் அதுவிதுவுதுவெது
வீமவையிவையுவை அவைநலந்தீங்கவை
ஆமவையாயவை ஆய்நின்ற அவரே

பொருள் – ஆண்பாலில் தூரமாக உள்ளவன், அருகில் உள்ளவன், நடுவில் உள்ளவன்; பெண்பாலில் தூரமாக உள்ளவள், அருகில் உள்ளவள், நடுவில் உள்ளவள்; பலவின் பாலில் தூரமாக உள்ளவர், அருகில் உள்ளவர், நடுவில் உள்ளவர்; ஒன்றன் பாலில் தூரமாக உள்ளவை, அருகில் உள்ளவை, நடுவில் உள்ளவை; நல்ல பொருள்கள், தீய பொருள்கள், உண்டாகும் பொருள்கள், உண்டான பொருள்கள் – என்று பல பொருள்களும் எம்பெருமானே ஆவான்.

அவதாரிகை – கீழிற்பாட்டிலே ததீயத்வாகாரத்தாலே அவன் குணங்களோபாதி உத்தேச்யமாய்த் தோற்றுகையாலே லீலாவிபூதி யோகத்தை அநுபவித்தார்; இனி மேலிற் பாட்டுக்களெல்லாம் லீலாவிபூதி விஷயமாயிருக்கிறது. நித்யவிபூதியில் வந்தால் அவ்விபூதிபாவஜ்ஞமாய் அவனுடைய சந்தத்தைப் பின்செல்லுமதாய் இருக்கும்; "ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்ப" என்னும்படியாயிறே இருப்பது; கர்மநிபந்தநமான அசித்ஸம்ஸர்க்கத்தோடே கூடி ஈச்வர ஸங்கல்பத்தைப் பின்செல்லுமதாயிருக்கும் இந்த விபூதி. அந்த விபூதியில் வந்தால் அவ்விருப்புக்கண்டு உகக்குமதுக்கு அவ்வருகு ஒன்றுமில்லை; அந்யசேஷத்வ ஸ்வஸ்வாதந்த்ர்யங்கள் நடையாடுகிறது இவ்விபூதியிலேயாகையாலே, இரண்டையும் தவிர்த்து பகவததீநமென்று சொல்லவேண்டுவது இங்கேயாயிருந்தது.

விளக்கம் - கடந்த பாசுரத்தில் அனைத்தும் எம்பெருமானின் உடைமை என்னும் தன்மையால், அவன் குணங்களைப் போன்று தோற்றம் அளிப்பதால் லீலாவிபூதி யோகத்தை அனுபவித்தார். இனிவரும் பாசுரங்களில் எல்லாம் லீலாவிபூதி விஷயமாகவே கூறுகிறார். ஆனால் அவனது நித்யவிபூதியைப் பற்றி ஒரு பாசுரத்திலும், லீலா விபூதியினைப் பல பாசுரங்களிலும் அருளிச்செய்யக் காரணம் என்ன? நித்யவிபூதியில்

உள்ளவர்கள் அனைவரும் எம்பெருமானின் குறிப்பு அறிந்தவர்களாக, அவனது அபிப்ராயத்தைப் பின்பற்றுபவர்களாகவே இருப்பார்கள். திருவாய்மொழி (4-9-10) - ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்ப - என்னும்படியாக நித்யவிபூதி இருக்கும். அங்கு இருப்பவர்கள் எம்பெருமானைக் கண்டு உகப்பதற்கு மேலாக எதுவும் இல்லை. ஆனால் இந்த உலகில் உள்ளவர்கள் இருவினைகள் காரணமாக ஏற்படும் அசித் தொடர்பு கொண்டு, ஈச்வரனின் ஸங்கல்பத்தின் பின்னே செல்பவர்களாக இருப்பர். மற்ற தெய்வங்களுக்கு அடிமைப்படுதல், தான் சுதந்திரமானவன் என்று எண்ணுதல் போன்றவை இந்த உலகில் உண்டு. எனவே இந்த விபூதியைக் குறித்து பல பாசுரங்கள் கூறுகிறார்.

அவதாரிகை - இனி ஒரு மூன்று பாட்டாலே, இதினுடைய ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகள் பகவததீநமாயிருக்குமென்று, ஜகத்துக்கும் ஈச்வரனுக்கும் ஸம்பந்தம் சரீராத்மபாவம் என்று குத்ருஷ்டிகளை நிரஸித்து, சூந்யவாதியை நிரஸித்து, வ்யாப்தி ஸௌகர்யத்தைச் சொல்லி பலத்தைச் சொல்லித் தலைக்கட்டுகிறார். அதில் ஸ்வரூபம் அவனதீநமென்கிறார் இப்பாட்டில். அதாகிறபடி எங்ஙனேயென்னில் ஸ்ருஷ்டிகாலத்திலே வந்தவாறே இவற்றையுண்டாக்கி, ஜீவத்வாரா அநுப்ரவேஸித்து, வஸ்துத்வ நாமபாக்த்வங்களும் உண்டாம்படி பண்ணியும், இது அடங்கலும் அழிந்தவன்று சக்த்யவஸ்த ப்ரபைபோலே தன் பக்கலிலே ஸூக்ஷ்மரூபேண கிடக்கும்படி ஏறிட்டுக் கொண்டு தரித்தும், காரணதசையோடு கார்யதசையோடு வாசியறத் தன்னைப் பற்றி ஸ்வரூப ஸ்தித்யாதிகளாம்படி இருக்கையாலே ஸ்வரூபம் அவனதீநமென்கிறது. அதில், லோகத்தில் ஸகலபதார்த்தங்களையும் தனித்தனியே சொல்லி, "இதினுடைய ஸ்வரூபம் அவனாலே இதினுடைய ஸ்வரூபம் அவனாலே" என்னில், பணிப்படுமிறே ஜீவாநந்த்யத்தாலே; இனி ப்ரயோஜகத்திலே சொல்லிவிடுமன்று ப்ரதிபத்திக்கு விஷயமாகாது; ஆகையாலே, தேவாதிபதார்த்தங்களை நாலு மூன்று வகையாலே சேர்த்து, அவற்றினுடைய ஸ்வரூபம் அவனதீநம் என்கிறார்.

விளக்கம் - இந்தப் பாசுரம் தொடக்கமாக மூன்று பாசுரங்களால் இந்த உலகின் ஸ்வரூபம், இருப்பு, தொழில், தொழில் செய்யாமை ஆகிய அனைத்தும் எம்பெருமானுக்கு அடங்கியே உள்ளது என்று கூறுகிறார். எம்பெருமானுக்கும், உலகிற்கும் உள்ள தொடர்பு என்பது உடலுக்கும் ஜீவனுக்கும் உள்ளது போன்றது; வேதங்களுக்கு முரணாகப் பேசுபவர்களைக்

கண்டித்து, சூந்யவாதத்தை மறுத்து, எம்பெருமான் எங்கும் பரவியுள்ளதைக் கூறி இந்தப் பாசுரங்களின் பலனையும் கூறுகிறார். இந்தப் பாசுரம் மூலம் உலகில் உள்ள அனைத்தும் அவனுக்கு அடிமைப்பட்டவை என்கிறார். எப்படி என்றால் – ஸ்ருஷ்டி காலத்தில் இவற்றைப் படைத்து, அந்த உயிருக்குள் புகுந்து, அவற்றுக்குப் பொருளாகும் தன்மை மற்றும் பெயர் பெறுதல் ஆகியவற்றைச் செய்து, இவை அழிந்தபோது, நீறு பூத்த நெருப்பு போன்று தன்னிடத்தில் கண்களுக்குத் தோன்றாதபடி லயிக்குமாறு செய்கிறான். மேலும் காரண நிலை, காரிய நிலை என்று வேறுபாடு இல்லாமல், தன்னைப் பற்றிக்கொண்டே அவை ஸ்வரூபம் மற்றும் ஸ்திதி ஆகியவற்றைப் பெறுவதால், இவனது உடைமை என்கிறார். உலகத்தில் உள்ள ஒவ்வொரு பொருளையும் தனித்தனியே கூறி, "இது அவன் உடைமை; இதனுடைய ஸ்வரூபம் அவனாலே" என்று கூற முயன்றால், உயிர்கள் பலவாக இருப்பதால் மிகவும் விரிந்துவிடும்; சுருக்கமாகக் கூறினால் அருமை தெரியாது. எனவே தேவர்கள் உட்பட இருக்கும் பொருள்களை நான்கு, மூன்று வகையாகச் (பெண்பால் 3, ஆண்பால் 3, பலவின்பால் 3, ஒன்றன்பால் 1, அழியக்கூடியவை 1, நன்மை தீமை - 1, காலபேதம் – 1; ஆக 7) சேர்த்து அவற்றின் ஸ்வரூபம் அவனுக்கு உரிமை என்கிறார்.

வ்யாக்யானம் - (நாமவனித்யாதி) நானென்றும், நாமென்றும், யானென்றும், யாமென்றும், தந்தாமைச் சொல்லக்கடவது. ஸந்நிஹிதமென்ன, தூரஸ்தமென்ன, அதூரவிப்ரக்ருஷ்ட மென்ன, வினவப்படுகிறதென்ன. (அவளிவளுவளெவள்) ஸ்த்ரீலிங்க நிர்திஷ்ட வஸ்துக்களைச் சொல்லுகிறது. (தாம்) பாஹுமந்தவ்யரை. (அது) நபும்ஸகலிங்க நிர்திஷ்ட வஸ்துக்களைச் சொல்லுகிறது. (வீமவை) நச்வர பதார்த்தங்கள். (நலந்தீங்கு) நன்மை தீமை என்னுதல்; நன்றானவை, தீதானவை என்னுதல். (ஆமவை ஆயவை) கழிந்தவற்றிலும் வருமவற்றிலும் அடைப்புண்ணுமிறே வர்த்தமாநம். (ஆய்நின்ற) ஆய்நின்ற பதார்த்தங்கள்; இவற்றைப் பதார்த்தத்தளவிலே கொண்டபோது மேல் ஐக்யஞ் சொல்லப் போகாது; அசித்தும், அசிதபிமாநியான ஜீவனும், ஜீவாந்தர்யாமியான பரமாத்மாவுமான இஸ்ஸங்காதம் இத்தனைக்கும் வாசகாமாயிருக்கிறது இச்சப்தம். (அவர்) இவையாய் நிற்கிறார் அவர். இதம் ஸர்வம் ப்ரஹ்ம கலு என்னுமாபோலே. தத் த்வமஸி என்றாப்போலே இருக்கிறது.

விளக்கம் - (நாம் அவன்) – நான் என்றும், நாம் என்றும், யான் என்றும், யாம் என்றும் தன்னையே கூறுவது ஆகும். அருகில் உள்ளவன், தூரத்தில் உள்ளவன், நடுவில் உள்ளவன், வினவப்படுபவன். (அவளிவளுவளெவள்) - மேலே உள்ளது போன்று பெண்பாலால் உணரப்படும் பொருள்கள். (தாம்) - உயர்திணைக்கு உரியவர்கள். (அது) – ஒன்றன்பாலாக உணரக்கூடிய பொருள்கள். (வீமவை) – அழிகின்ற பொருள்கள். (நலம்) – நன்மை, தீமை, நன்றானவை, தீதானவை. (ஆமமவை ஆயவை) – இனி வரப்போகும் பொருள்கள், முன்பே இருக்கின்ற பொருள்கள். இவற்றின் நிகழ்காலமும் அடங்கும். (ஆய்நின்ற) – இப்படியாக நின்ற பொருள்கள். இந்தப் பொருள்களைக் கூறும்போது எம்பெருமானுடன் ஐக்யம் சொல்ல இயலாது, அதாவது எம்பெருமானே இவை என்று சொல்ல இயலாது. ஆகவே அசித், அந்த உடலை விரும்பும் ஜீவன், ஜீவனின் அந்தர்யாமியான பரமாத்மா ஆகிய அனைத்தும் சேர்த்துப் பொருள்கள் எனப்பட்டன. (அவர்) - இவையாக எம்பெருமான் நிற்கிறான். இதம் ஸர்வம் ப்ரஹ்ம கலு – இவை அனைத்தும் ப்ரஹ்மமாகவே உள்ளன – என்றும், தத்வம் அஸி – இது நீயாக உள்ளாய் – என்றும் கூறுவது போன்று ஆகும்.

வ்யாக்யானம் - முதற் பாட்டிலே கல்யாண குணயோகத்தையும் நித்யவிபூதி யோகத்தையும் விக்ரஹ வைலக்ஷண்யத்தையும் சொல்லி, இரண்டாம் பாட்டிலே ஸ்வரூப வைலக்ஷண்யத்தையும் சொல்லுற்று; தச்சப்தம் ப்ரக்ருத பராமர்சியாகையாலே "அவர்" என்று கல்யாணகுண விசிஷ்ட வேஷத்தைச் சொல்லி, "ஆய்நின்ற" என்று அசிஜ்ஜீவ விசிஷ்ட பரமாத்மாவைச் சொல்லி, ஸாமாநாதி கரண்யத்தாலே ஐக்யம் சொல்லுகிறது; ஆக, ஸ்த்ரீபுந்நபும்ஸக பேதத்தாலும், பூஜ்ய பதார்த்தங்கள் நச்வர பதார்த்தங்களென்கிற பேதத்தாலும், விலக்ஷணாவிலக்ஷண பேதத்தாலும், பூத பவிஷ்யத்வர்த்தமாந கால பேதத்தால் வந்த விசேஷங்களாலும் ஸகல சேதநா சேதநங்களையும் ஸங்க்ரஹித்து, அவற்றினுடைய ஸ்வரூபம் பகவததீநமென்றதாய்விட்டது.

விளக்கம் - முதல் பாசுரத்தில் திருக்கல்யாண குணங்களைக் கொண்டவன், நித்ய விபூதியை உடையவன், வேறுபட்ட திருமேனியை உடையவன் என்பதைக் கூறினார். இரண்டாம் பாசுரத்தில் அனைத்தையும் விட வேறுபட்டவன் என்று அருளிச்செய்தார். இந்தப் பாசுரத்தில் உள்ள "அவர்" என்ற பதம் சுட்டு ஆகையாலே "அவர்" என்று கல்யாண குணத்துடன் கூடிய எம்பெருமானின் தன்மையைக் கூறி, "ஆய் நின்ற" என்று உடல்

உயிருடன் கூடியுள்ள பரமாத்மாவைக் கூறி, ஸ்ரீபாஷ்யத்தின் ஸாமாநாதிகரணம் மூலம் ஐக்யம் சொல்லுகிறார். ஆக ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் என்னும் பேதங்கள்; மதிக்கத்தக்க பொருள், அழியும் பொருள் என்னும் பேதங்கள்; நன்மை, தீமை என்னும் பேதங்கள்; இறந்த, எதிர், நிகழ் காலபேததால் வரும் விசேஷங்கள், சேதனம் மற்றும் அசேதனம் என்னும் பேதங்கள் ஆகியவை போன்று அனைத்தையும் தொகுத்து அவற்றின் தன்மை எம்பெருமான் வசப்பட்டது என்றார்.

1-1-5 அவரவர் தமதம தறிவறி வகைவகை
அவரவ ரிறையவ ரெனவடி யடைவர்கள்
அவரவ ரிறையவர் குறைவில ரிறையவர்
அவரவர் விதிவழி யடையநின் றனரே.

பொருள் - மூன்று குணங்களின் வேறுபாடு காரணமாக உலக மக்களுக்கு ஞான வேறுபாடு உண்டாகுகிறது. இதனால் பல்வேறு மார்க்கங்களில் ஈடுபட்டு, அந்தந்த மார்க்கங்களில் உள்ள தேவதைகளை தங்களுக்கு இறைவனாக அடைவர்கள். அந்தத் தேவதைகள் அவர்களை அண்டி இருப்பவர்களுக்கு ஏற்ற பலன்களை குறைவற்று வழங்குகின்றன. இதன் காரணமாக அந்தத் தேவதைகளை வணங்குகின்ற மக்கள் விரும்பிய பலனை அடையும்படியாக, அந்த தேவதைகளின் அந்தர்யாமியாக இருக்கும் ஸர்வேச்வரனே அருள்கிறான்.

அவதாரிகை – ஸ்வரூபம் அவனதீநமானவோபாதி ஸ்திதியும் அவனதீநை என்கிறார். ஒருவன் ஒரு க்ருஹத்துக்குக் கடவனாயிருக்கும்; ஒருவன் ஒரு க்ராமத்துக்குக் கடவனாயிருக்கும்; ஒருவன் ஒரு ஜநபதத்துக்குக் கடவனாயிருக்கும்; ஒருவன் த்ரைலோக்யத்துக்குக் கடவனாயிருக்கும்; ஒருவன் சதுர்தசபுவநத்துக்கும் கடவனாயிருக்கும்; ஆக சதுர்தசபுவநத்துக்குக் கடவனானவனோடு, ஒரு க்ருஹத்துக்குக் கடவனானவனோடு வாசியற அவர்கள் ரக்ஷகராகிறதும், இவை ரக்ஷ்யமாய் உபகாரங் கொண்டதாகிறதும், ஸர்வேச்வரன் அந்தராத்மாவாய் நின்று நடத்துகையாலே; அவன் இப்படி நடத்திக் கொண்டு போராதவன்று இவர்கள் ரக்ஷகராக மாட்டார்கள் என்கிறார். ந ஸம்பதாம் ஸமாஹாரே விபதாம் விநிவர்த்தநே ஸமர்த்தோ த்ருச்யதே கச்சித் தம் விநா புருஷோத்தமம், நஹி பாலந ஸாமர்த்யம் ருதே ஸர்வேச்வரம் ஹரிம் எல்லா

நன்மைகளையும் பண்ணித்தர வல்லனாய் விரோதிகளையும் போக்க வல்லனானவனை யொழிய வேறொருவர் பக்கலில் இந்த ரக்ஷகத்வம் கிடவாது.

விளக்கம் – கடந்த பாசுரத்தில் அனைத்தும் அவனது உடமை என்பது போன்று இங்கு அனைத்தையும் காப்பாற்றுதலும் அவனுக்கே உரியது என்கிறார். ஒருவன் ஒரு வீட்டிற்கு உரியவனாக இருப்பான்; ஒருவன் ஓர் ஊருக்கு உரியவனாக இருப்பான்; ஒருவன் ஒரு நகரத்திற்கு உரியவனாக இருப்பான்; ஒருவன் மூன்று உலகங்களுக்கு உரியவனாக இருப்பான்; ஒருவன் பதினான்கு உலகங்களுக்கு உரியவனாக இருப்பான். பதினான்கு உலகங்களுக்கு உரியவனாக இருப்பவன், ஒரு வீட்டிற்கு உரியவனாக இருப்பவன் ஆகிய இருவருக்கும் எந்த வேறுபாடும் இல்லாமல் அவர்கள் காப்பாற்றுகின்றவர்களாக இருப்பதும், அவர்களால் காப்பாற்றப்படுதல் என்ற உதவிக்கான பொருள்கள் பெறுவதும் ஸர்வேச்வரன் அவர்களது அந்தர்யாமியாக நின்று வழி நடத்துவதால் ஆகும். இப்படி இவன் வழி நடத்தவில்லை என்றால், அவர்கள் காப்பாற்றுகின்றவர்கள் ஆக மாட்டார்கள் என்கிறார். அனைத்து நன்மைகளையும் அளிக்கவல்லவனாய், விரோதிகளை நீக்க வல்லவனாய் இருப்பவன் தவிர வேறு யாராலும் இந்தக் காக்கும் தொழில் இருப்பதில்லை. இதனை விஷ்ணுபுராணம் - ந ஸம்பதாம் ஸமாஹாரே விபதாம் விநிவர்த்தநே ஸமர்த்தோ த்ருச்யதே கச்சித் தம் விநா புருஷோத்தமம் - செல்வங்களைச் சேர்க்கின்ற தன்மை, ஆபத்துக்களை நீக்கும் தன்மை ஆகியவற்றில் புருஷோத்தமனைத் தவிர வேறு யாரும் காணப்படுவதில்லை – என்றும், தைத்திரீய நாராயணவல்லீ - நஹி பாலந ஸாமர்த்யம் ருதே ஸர்வேச்வரம் ஹரிம் - காப்பாற்றும் திறன் ஸர்வேச்வரான ஸ்ரீஹரியைத் தவிர வேறு யாருக்கும் இல்லை - என்றும் கூறியது காண்க.

அவதாரிகை – யத்வேதாதௌ ஸ்வர: ப்ரோக்தோ வேதாந்தே ச ப்ரதிஷ்டித, செப்பிலே கிடந்த ஆபரணத்தை வாங்கிப்பூண்டு, பின்னையும் அவ்வாபரணத்தை வாங்கிச் செப்புக்குள்ளே இட்டு வைக்குமாபோலே. ஆத்யந்த பீஜமாயிருக்கிறது யாதொன்று. தஸ்ய ப்ரக்ருதிலீநஸ்ய, அது தன்னுடைய ப்ரக்ருதியிலே லீநமாயிருக்கிறதாகிறது - அகாரம். அது ரக்ஷகனைக் காட்டுவதொன்றிறே. ய: பரஸ்ஸ மஹேச்வர: அதுக்கு வாச்யதயா பரனாயிருக்கிறான் யாவனொருவன், அவன் ஸர்வேச்வரனென்றதிறே.

விளக்கம் - செப்பு கலந்து செய்யப்படும் ஆபரணத்தை வாங்கி அணிந்து கொண்டு அந்த ஆபரணத்தை மீண்டும் செப்புப் பெட்டகத்திலேயே வைத்துக் காப்பது போன்று, வேதங்களைத் தொடங்கும்போதும் முழங்கும்போதும் கூறப்படும் பீஜம் ஆகிய ப்ரணவம் என்பதில் அகாரம் மறைந்துள்ளது. அந்த அகாரம் காக்கின்ற ஸர்வேச்வரனைக் கூறுகிறது. அதற்குப் பொருள் உள்ளவன் யாரோ அவனே ஸர்வேச்வரன் என்று உபநிஷத் கூறுகிறது.

வ்யாக்யானம் – (அவரவர்) தம்முடைய அநாதரமும், அவர்களுடைய வைவித்யமும் தோற்றுகிறது. (தமதமது) குணபேதத்தால் வந்த பலபேதத்தைச் சொல்லுகிறது. (அறிவறி) அதுக்கடியான ஜ்ஞாந பேதத்தைச் சொல்லுகிறது. (வகைவகை) மார்க்க பேதங்களாலே (தமதமதறிவறி வகைவகை) சேதந பேதத்தோபாதியும் போருமாயிற்று ருசி பேதங்களும். தந்தாமுடைய குணாநுகுணமாகப் புறம்பே ஆச்ரயிப்பாரும், ஆச்ரயணீயராய் இருப்பாருமாய் இருக்குமிறே. ரஜோ குண ப்ரசுரராய் இருப்பாரும், தமோகுண ப்ரசுரராய் இருப்பாரும் அளாவனான ஸத்வத்தை உடையராயிருப்பாருமாயிறே இருப்பது; அப்படியே குணாநுகுணமாகப் பிறந்த ஜ்ஞாநமும்.

விளக்கம் – (அவரவர்) – தமக்கு விருப்பம் இல்லாததும், அவர்களது பலவிதமான தன்மைகளும் கூறப்படுகிறது. (தமதமது) – குணங்களில் உள்ள வேறுபாடுகளால் ஏற்படும் பேதங்கள் கூறப்படுகிறது. (அறிவறி) – பலன்களில் வேறுபாடு ஏற்படுவதற்குக் காரணமான ஞான வேறுபாடுகள் கூறப்படுகின்றன. (வகைவகை) – வழிகளில் உள்ள வேறுபாடுகள். (தமதமதறிவறி வகைவகை) – இப்படியாக உள்ள உயிர்களில், அந்த உயிர்கள் நாடுகின்ற சுவைகளிலும் வேறுபாடு உள்ளது. அந்த வேறுபாட்டிற்கான காரணம் என்னவென்றால் மக்கள் ரஜோகுணம் மற்றும் தமோகுணம் ஆகிய குணங்கள் உள்ளவர்களாகவும், ஸத்வகுணம் கொண்டவர்களாகவும் இருப்பர்; அந்தக் குணங்களின் தகுதியாகப் பிறந்த ஞானத்தால் வேறுபாடு உண்டாகிறது.

வ்யாக்யானம் - அறிந்த அறிந்த வகைகளாலே. (அவரவரிறையவரென) அவ்வவர் ஆச்ரயணீயரென்று. (அடியடைவர்கள்) அவ்வவ தேவதைகள்தான் துராராத தேவதைகளாய், "ப்ரஜையை அறுத்துத்தா, ஆட்டை அறுத்துத்தா" என்னா நிற்கச் செய்தேயும், ஆச்ரயணாமாவது – அவற்றின் காலிலே குனியுமதுக்கு

அவ்வருகில்லையென்று இருக்கிறார் இவர் - ஸ்வகோஷ்டீ ப்ரஸித்தியாலே. ஓர் அஞ்ஜலி ஸாத்யவஸ்துவோடேயிறே தமக்கு வாஸநை. அஞ்ஜலி: பரமா முத்ரா க்ஷிப்ரம் தேவப்ரஸாதிநீ, க்ருதாபராதஸ்ய ஹி தே நாந்யத் பச்யாம்யஹம் க்ஷமம் அந்தரேணாஞ்ஜலிம் பத்த்வா லக்ஷ்மணஸ்ய ப்ரஸாதநாத். இளையபெருமாளுடைய ஜ்யாகோஷத்தைக் கேட்டு மஹாராஜர் கழுத்தில் மாலையை அறுத்துப் பொகட்டுக் காபேயமாய்ச் சில வ்யாபாரங்களைப் பண்ணி, அருகே நின்ற திருவடியைப் பார்த்து, "இவ்வளவில் நமக்குச் செய்யவடுப்பதேன்?" என்ன; "அபராத காலத்திலே அநுதாபம் பிறந்து மீண்டோமாய், எளியன சில செய்கிறோமல்லோம்; தீரக் கழிய அபராதம் பண்ணினபின்பு, இனி ஓரஞ்ஜலி நேராமற்போகாது" என்றானிறே. இப்படி குணாதிகனாய், ப்ராப்தனாயிருக்கிறவனோட்டை வாஸனையாலே "அடியடைவர்கள்" என்கிறார். மாமலர் நீர்சுடர் தூபங்கொண்டு தொழுதெழுதுமென்னுமிதுமிகையாயிறே இவர் பற்றின விஷயமிருப்பது.

விளக்கம் – எனவே அவரவர்களின் குணங்களுக்கு ஏற்ப அடைகின்றவர்களும் அடைய படுபவர்களும் உள்ளனர். (அவரவரிறையவரென) - அவரவர் அந்தத் தேவதைகளை அடையத் தகுந்தவர்கள் என்று எண்ணி. (அடியடைவர்கள்) – அவர்களின் திருவடியைப் பிடிப்பர். எம்பெருமானைத் தவிர அவர்கள் வேறான தேவதைகளாக, "மகனை எனக்கு அறுத்துக் கொடு, ஆட்டை அறுத்துக் கொடு" என்னும்படியாக உள்ளன. அவர்களது கால்களில் குனிவதற்கு மேலாக வேறு எதுவும் இருப்பதில்லை. பரத்வாஜ ஸம்ஹிதை - அஞ்ஜலி: பரமா முத்ரா க்ஷிப்ரம் தேவப்ரஸாதிநீ - இரு கரங்களையும் குவித்துச் செய்யும் அஞ்ஜலி என்பது எம்பெருமானின் திருவருளை உடனே பெற்றுத் தருகிறது - என்னும்படி ஓர் அஞ்ஜலி மூலமே அனைத்தையும் நமக்கு அளிக்கவல்ல பரம்பொருளோடு அல்லவோ நமக்குத் தொடர்பு உள்ளது? இப்படி உயர்ந்த குணங்கள் கொண்ட எம்பெருமானின் தொடர்பு காரணமாகவே "அடி அடைவர்கள்" என்று கூறினார்.

திருவாய்மொழி (9-3-9) - மாமலர் நீர்சுடர் தூபங்கொண்டு தொழுதெழுது – என்று அதனையும் மிகையாகவே நினைப்பவன் ஆழ்வார் கைக்கொண்ட எம்பெருமான் ஆவான். இராமனுக்கு உதவுவதாக வாக்களித்த சுக்ரீவன் காலதாமதம் செய்ய, இலட்சுமணன் கோபம் கொண்டு வில்லின் நாணை இழுத்து ஓசை எழுப்பினான். அந்த ஒலியைக் கேட்ட

சுக்ரீவன் கழுத்தில் அணிந்திருந்த மாலைகளை அறுப்பது போன்ற குரங்குகளுக்கே உரிய சேட்டைகளைச் செய்தபடி அருகில் நின்ற அனுமனிடம் "இப்போது நாம் என்ன செய்வது?", என்றான். உடனே அனுமன், "பல தவறுகளைச் செய்து, அதனால் அனுதாபம் ஏற்படும்படித் தப்பிப்போம் என்று நினைக்கும் அளவிற்கு எளிமையான தவறுகளை நாம் செய்யவில்லை. தகுந்த ப்ராயச்சித்தம் செய்தால் மட்டுமே கழியக்கூடிய தவறுகள் செய்து விட்டோம். இனி நேராக ஓர் அஞ்ஜலி செய்தாலொழிய இந்த அபராதம் நீங்காது", என்றான். இதனை - க்ருதாபராதஸ்ய ஹி தே நாந்யத் பச்யாம்யஹம் க்ஷமம் அந்தரேணாஞ்ஜலிம் பத்த்வா லக்ஷ்மணஸ்ய ப்ரஸாதநாத் – மிகுந்த பாவங்கள் கொண்ட உனக்கு இலட்சுமணன் முன்பாக நின்று, இரு கைகளையும் குவித்து, அவனது திருவருள் பெறுவதைவிட, அவனைச் சமாதானப்படுத்த வேறு வழியை நாம் காணவில்லை - என்றான்.

வ்யாக்யானம் – (அவரவரிறையவர் குறைவிலர்) ஆச்ரயிக்கிறவர்களுடைய இறையவரென்னுதல், அவ்வவ ஆச்ரயணீயரானவர்களென்னுதல். அவர்களுக்கு ஆச்ரயணீயரானவர்கள் அவர்களுக்குப் பலப்ரதாந சக்தராகைக்குக் குறையுடையரல்லர். அதுக்கடி என்னென்னில், (இறையவர்) பொதுவிலே "இறையவர்" என்கிறார்; அவர்களோடு, அவர்கள் ஆச்ரயிக்கிற தேவதைகளோடு, தம்மோடு வாசியற எல்லார்க்குமொக்க இறையவராகையாலே; பதிம் விச்வஸ்ய என்கிறபடியே எல்லார்க்குமொக்க ஸ்வாமியானவர். (அவரவர் விதிவழியடைய நின்றனரே) அவ்வவ ஆச்ரயணீயர் தந்தாமுடைய ஆகமாதிகளிலே விதித்து வைத்த ப்ரகாரங்களிலே அடையும்படியாக நம் இறையவர் அந்தராத்மாவாய் நின்றார். அன்றிக்கே, ஸர்வேச்வரன் காமநாதிகாரத்தில் அருளிச்செய்தபடியே அவர்கள் அடையும் படியாக என்னுதல். ஸர்வேச்வரன் இராமடமூட்டுவாரைப்போலே முகம் தோற்றாதே அந்தராத்மாவாய் நின்று நடத்துகையாலே அவர்களும் ஆச்ரயித்தார்களாய், இவர்களும் பலப்ரதாந சக்தராகிறார்களித்தனை; அவனை ஒழிந்தவன்று இவர்கள் ஆச்ரயிக்கவும் மாட்டார்கள்; அவர்கள் பலப்ரதாநம் பண்ணவும் மாட்டார்கள் என்கிறார். ஐயன்பாழியில் ஆனை போர்க்கு உரித்தாமன்றாயிற்று, அவ்வோ தேவதாமாத்ரங்களுக்குப் பலப்ரதாந சக்தி உள்ளது.

விளக்கம் – (அவரவரிறையவர் குறைவிலர்) - அண்டி நிற்கின்றவர்களுடைய தேவதைகள். அவர்கள் தங்களை அண்டிய மக்கள் வேண்டிய வரங்களை அளிப்பதில் எந்தவிதமான குறைவும் இல்லாதவர்கள் ஆவர். எப்படி என்றால், (இறையவர்) - பொதுவிலே இறைவன் என்றார். மற்ற தெய்வங்களை வணங்குபவர்கள், அவர்கள் வணங்கும் தேவதைகள், ஸர்வேச்வரனான தன்னை வணங்கும் மக்கள் போன்ற வேறுபாடு ஆராயாமல் அனைவருக்கும் ஒத்த இறைவன். தைத்திரீய நாராயணவல்லீ - பதிம் விச்வஸ்ய - உலகிற்கு பதியாக உள்ளவன் – என்னும்படி அனைவருக்கும் ஸ்வாமியாக உள்ளவன். (அவரவர் விதிவழியடைய நின்றனரே) - அந்த தேவதைகள் தங்களை அண்டிய மக்களுடைய ஆகம விதிகளின்படி, அவர்களின் உபாஸனையை ஏற்று, பலன்களை அளிக்கின்றன. இப்படியாக அந்தத் தேவதைகள் பலன்களை அளிக்கும்படியாக அந்த தேவதைகளின் அந்தர்யாமியாக நம் ஸர்வேச்வரன் நிற்கிறான். அல்லது ஸர்வேச்வரன் கீதையில் அருளிச்செய்தது போன்று (7-21 மற்றும் 7-22 காண்க) – அவர்களுடைய உயிரில் உயிராக நின்றான் எனலாம். அதாவது வீட்டைவிட்டு வெளியேறிவிட்ட மகன் இரவில் ஏதோ ஒரு சத்திரத்தில் தங்கும்போது, அவனது தாய் தனது முகம் அவனுக்குத் தெரியாமல் சோறு அளிப்பது போன்று, எம்பெருமான் அந்தர்யாமியாக நின்று வழிநடத்துவதால் வரங்களைக் கேட்டவர்களும் பெறுகிறார்கள், அந்த தேவதைகளும் வரம் கொடுக்கும் திறன் பெற்றவர்கள் ஆகின்றன. எம்பெருமானை விட்டு அந்தத் தேவதைகள் அகன்றால், யாரும் அந்தத் தேவதைகளைப் பற்றவும் மாட்டார்கள், அந்தத் தேவதைகளால் எந்தப் பலனும் அளிக்கவும் இயலாது.

1-1-6 நின்றன ரிருந்தனர் கிடந்தனர் திரிந்தனர்
நின்றில ரிருந்திலர் கிடந்திலர் திரிந்திலர்
என்றுமொ ரியல்வின ரெனநிலனை வரியவர்
என்றுமொ ரியல்வொடு நின்றவெம் திடரே.

பொருள் - நிற்றல், நிற்காமல் இருத்தல், கிடத்தல், கிடத்தல் இல்லாமை, திரிதல், திரிதல் இல்லாமை என ஒன்றுக்கு மேற்பட்ட பல சொற்களை உடையவன்; இதனால் எப்போதும் ஒரே போன்று ஸ்வபாவத்தை உடையவன் என்று நினைப்பதற்கு அரியவன்; இப்படி அவன் நினைப்பதற்கு அரியவன் என்ற ஸ்வபாவத்திலிருந்து எப்போதும் மாறாமல்

உள்ளான் என்னும்படியாக இருப்பவன்; வேதங்களால் இவனே பரம்பொருள் என்று உறுதியாகக் கூறப்பட்டவன் - இப்படிப்பட்டவனே எனது தலைவன் ஆவான்.

அவதாரிகை – லீலாவிபூதியினுடைய ஸ்திதியும் பகவத்ஸங்கல்பாதீநமென்கிறார் கீழ்; அதினுடைய ப்ரவ்ருத்திநிவ்ருத்தியும் பகவத்ஸங்கல்பாதீநமென்கிறார் இதில்.

விளக்கம் – இந்த உலகத்தின் காப்பாற்றுதல் என்பது எம்பெருமானுக்கு கீழ்ப்பட்டதே என்று கடந்த பாசுரத்தில் அருளிச்செய்தார். இந்த உலகத்தில் செயல்களைச் செய்வதும், செய்யாமையும் எம்பெருமானின் கீழ்ப்பட்டதே என்று இங்கு அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் – ஆக்ருதிவாசகசப்தம் வ்யக்தியிலே பர்யவஸித்து நிற்குமாபோலே ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளுக்கு வாசகமான சப்தமும்; அபர்யவஸாநவ்ருத்த்யா அவனளவிலே சென்றல்லது நில்லாது.

விளக்கம் - தொழில் செய்வது என்பது நிற்றல், இருத்தல், கிடத்தல் மற்றும் திரிதல் எனப்படும். தொழில் செய்யாமை என்பது நில்லாமை, இராமை, கிடவாமை மற்றும் திரியாமை எனப்படும். நின்றனர் என்று பன்மையாகக் கூறுவதால் எம்பெருமானைத் தவிர இருக்கின்ற மற்ற பொருள்களின் தொழில் செய்வது, செய்யாமை ஆகியவற்றைக் கூறுகிறார். ஒரு குறிப்பிட்ட ஜாதியைக் கூறும் சொல் அந்த ஜாதியை உடைய பொருள்களைக் கூறுவது போன்று, தொழில் செய்தல் மற்றும் செய்யாமை ஆகியவற்றைக் குறிக்கும் இந்தச் சொற்கள் எம்பெருமான் அளவு சென்று நிற்கும்.

வ்யாக்யானம் - அருணயா பிங்காக்ஷ்யா ஸோமம் க்ரீணாதி என்கிறவிடத்திலே குணவிசிஷ்ட வஸ்து தோற்றா நிற்கச்செய்தேயும், ஆருண்யாம் சத்திலே தாத்பர்யமாகிறாப்போலே, ப்ரவ்ருத்திநிவ்ருத்திகளுக்கு ஆச்ரயமான வஸ்துக்களினுடைய ஸ்வரூபமும் அவநதீநமென்று முன்னே சொல்லுகையாலே ப்ரவ்ருத்தி நிவ்ருத்த்யம்சக்திலே நோக்கு என்று சொல்லுவாரும் உண்டு; அப்போது ஸாமாநாதிகரண்யம் ஸித்தியாது; ஆக ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளுக்கு வாசகமான இச்சப்தம் - அவற்றுக்கு ஆச்ரயமான சேதநனைக் காட்டி, அவன் தனக்கு ஈச்வரனை ஒழிய ப்ருதக்ஸ்திதியாதல் உபலம்பமாதல் இல்லாமையாலே அவனளவும் காட்டுகிறது.

"ப்ரவ்ருத்தி அவனதீனையாகிறது வேணுமாகில்; நிவ்ருத்திக்கு அவன் வேணுமோ?" என்று எம்பாரைக் கேட்க "ஸ்வர்க்கத்தினின்றும் விழுகிற த்ரிசங்குவை சக்திமான் நிற்கச்சொல்ல நிற்கவேண்டிற்றுக் கண்டாயே; அப்படியே நிவ்ருத்திக்கு அவன் வேணுங்காண்" என்று அருளிச்செய்தார்.

விளக்கம் – அருணயா பிங்காசக்ஷயா ஸோமம் க்ரீணாதி - சிவந்த நிறம் உள்ளதும், பொன் போன்ற நிறம் கொண்ட கண்கள் கொண்டதும் ஆகிய பசுவைக் கொடுத்துவிட்டு சோமம் என்ற கொடியை வாங்குவானாக – என்று ஒரு வரி உள்ளது. இங்கு பசுவைக் கொடுத்துவிட்டு சோமக்கொடியை வாங்குதல் என்பது போன்று பொருள் தோன்றினாலும், அப்படிக் கொள்ளாமல் சிவந்த நிறத்துக்கு முக்கியத்வம் அளித்து, சிவந்த நிறம் உடைய பொருளைக் கொடுத்து சோமக்கொடியை வாங்கவேண்டும் என்பதே உரைக்கப்பட்டது. அதே போன்று இங்கும் தொழில் செய்தல், செய்யாமல் இருத்தல் என்பதற்கு உதவுகின்ற பொருள்கள் அவனுக்கு வசப்பட்டவை என்று நான்காம் பாசுரத்தில் கூறப்பட்டதால், இந்தப் பாசுரத்தில் அந்தப் பொருள்களே கூறப்பட்டன என்று சிலர் பொருள் கொள்வர். இவ்விதம் கொண்டால் "எம்திடர்" என்ற பதத்துடன் ஸாமாநாதிகரணம் பொருந்தாது. எனவே தொழில் செய்தல், செய்யாமை ஆகியவற்றைக் கூறுகின்ற இச்சொற்கள் அவை அண்டி நிற்கும் சேதனனைக் கூறி, அந்தச் சேதனனுக்கு எம்பெருமான் இல்லாமல் நிற்பது, தோன்றுவது இல்லை என்பதால் அந்தச் சொற்கள் எம்பெருமானையே காட்டுகின்றது என்று கொள்ளவேண்டும்.

எம்பாரிடம் ஒரு சிலர் "தொழில் செய்வதற்கு எம்பெருமானின் கடாக்ஷம் வேண்டும். ஆனால் தொழில் செய்யாமல் இருப்பதற்கும் அவன் கடாக்ஷம் வேண்டுமோ?", என்றனர். அதற்கு எம்பார், "ஸ்வர்க்கத்தில் இருந்து கீழே விழுகின்ற திரிசங்கு விழாமல் இருக்கவேண்டும் என்று சக்திமான் வேண்டியதைப் பார்த்தீர்களா? ஆக விழாமல் இருப்பதற்கு ஸர்வேச்வரனே வேண்டும் பாருங்கள்", என்று அருளிச்செய்தார்.

வ்யாக்யானம் – (என்றுமொரியல்வினரென நினைவரியவர்) - இப்படி அநேக ப்ரகாரராயிருக்கையாலே, காலதத்வமுள்ளதனையும் ஆராயாநின்றாலும், இன்ன படிப்பட்ட ஸ்வபாவத்தையுடையவரென்று நினைக்கவுங்கூட அரியவர். (என்று மொரியல்வொருநின்ற) - வ்ருஷல விவாஹ மந்த்ரம்போலே என்றும் ஓரியல்வொடு

நின்றவராவதென்னென்னில்; என்றும் ஒருபடிப்பட்ட ஸ்வபாவத்தையுடையவரென்று நினைக்க அரிதான நிலை என்றும் ஒருபடிப்பட்டிருக்கும் என்கை. (எந்திடர்) - அபௌருஷேயமன வேதப்ரதிபாத்யனாகையால் வந்த தார்ட்யத்தைச் சொல்லுகிறது. இப்படி ஸுத்ருட ப்ரமாண ஸித்தரான நிலை தம்முடைய லாபமாய்த் தோற்றுகையாலே எந்திடர் என்கிறார்.

விளக்கம் - (என்றுமொரியல்வினரென நினைவரியவர்) - இப்படி பலவகையினராக உள்ளதால் காலம் என்பது உள்ளவரை ஆராய்ந்தாலும், "இவன் இப்படிப்பட்ட ஸ்வரூபம் உடையவன்", என்று எண்ணுவதற்கு இயலாதவன் ஆவான். என்றும் வ்ருஷசல விவாகம் மற்றும் மந்திரம் போன்று என்னுவதற்கு அறியவன். (என்று மொரியல்வொருநின்ற) - வ்ருஷசல விவாஹ மந்திரம் = பாய்ந்திட்டுப் பாய்ந்திலேன், சொல்லிட்டுச் சொல்லிலேன் - என்று முந்தையது பிந்தையது மாறுபட்டது. இப்படி ஏன் கூறவேண்டும் என்றால், ஸர்வேச்வரன் இப்படிப்பட்ட ஸ்வபாவம் உடையவன் என்று எண்ணுவதற்குக் கூட அறியதாக உள்ள ஸ்வபாவம் கொண்டவன் என்பதால் ஆகும். (எம்திடர்) – மனிதர்களால் இயற்றப்படாத வேதங்களால் கூறப்படுபவன். இதனால் வந்த உறுதியின் தன்மையைக் கூறுகிறார். இப்படி உறுதியான ப்ரமாணத்தால் கூறப்பட்டவனுடைய நிலை தமக்கு லாபமாகத் தோன்றியதால் எம்திடர் என்றார்.

வ்யாக்யானம் - நின்றனரிருந்தனர் கிடந்தனர் திரிந்தனர் நின்றிலரிருந்திலர் கிடந்திலர் திரிந்திலரான இவையெல்லாம், என்றுமொரியல்வினரென நினைவரியவராய் என்றுமொரியல் வொடுநின்ற எந்திடரானவர்.

விளக்கம் - நின்றனர் இருந்தனர் கிடந்தனர் திரிந்தனர், நின்றிலர் இருந்திலர் கிடந்திலர் திரிந்திலர் என்றும், ஓர் இயல்வினர் என நினைவு அறியவராய் என்றும், ஓர் இயல்வோடு நின்ற எம்திடர் என்றும் படிக்கவேண்டும்.

1-1-7 திடவிசும் பெரிவளி நீர்நில மிவைமிசை
படர்பொருள் முழுவது மாயவை யவைதொறும்
உடன்மிசை யுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்
சுடர்மிகு சுருதியு ளிவையுண்ட சுரனே.

பொருள் – அனைத்துப் பொருள்களும் ஸ்தூலமாக உள்ள ஆகாயம், நெருப்பு, காற்று, நீர் மற்றும் நிலம் ஆகிய பஞ்சபூதங்களை மூல காரணமாகக் கொண்டு உருவாகின்றன. அந்தப் பொருள்கள் அனைத்தும் தானே ஆக உள்ளான். உடலில் மறைந்துள்ள உயிர் போன்று அந்தப் பொருள்கள் அனைத்திலும் மறைந்துள்ளான். இப்படியாக எங்கும் பரந்துள்ளான். உலகங்கள் அனைத்தையும் ப்ரளய காலத்தில் விழுங்கும் இவனே ஒளி மிகுந்த வேதங்களில் காணப்படுகிறான்.

அவதாரிகை – கீழ் ஸாமாநாதிகரண்யம் சொன்ன இது பாவிப்ரதிஸந்தாந ந்யாயத்தாலேயாய், அத்தால் பலித்த ஸம்பந்தம் சாரீராத்ம பாவமென்கிறாராதல்; அன்றியே கீழே ஸமாநாதிகரண்யத்தாலும் வையதிகரண்யத்தாலும் சொன்னார். அப்படி சொன்ன ஐக்யத்துக்கு நிபந்தநம் சரீராத்மபாவம் என்கிறாராதல். அநேந ஜீவேநாத்மநாநு ப்ரவிச்ய நாமரூபே வ்யாகரவாணி என்கிறபடியே த்ரிவ்ருத்க்ருதமான அசித்திலே ஜீவத்வாரா அநுப்ரவேசித்து வஸ்துத்வநாமபாக்த்வங்களுண்டாம்படி பண்ணி இவை "தான்" என்னலாம்படியிருந்தால் "ம்ருதாத்மகோ கட:" என்னும்படியிருக்கையன்றிக்கே அந்த: ப்ரவிஷ்டச்சாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா என்கிறபடியே ஸர்வேஷாமாத்மாவாய், இவற்றை நியமிக்குமிடத்தில் – இந்த சரீரத்துக்கு இந்த ஆத்மா தாரகனாய் நியாமகனாய் சேஷியாயிருக்கிறாப்போலே யஸ்யாத்மா சரீரம் யஸ்ய ப்ருதிவீ சரீரம் என்கிறபடியே தான் இரண்டுக்கும் தாரகனாய் நியாமகனாய் சேஷியாய் நின்று நடத்திக்கொண்டு போருமென்று கீழ்ச்சொன்ன ஸாமாநாதிகரண்யத்துக்கு நிபந்தநம் சரீராத்ம பாவமென்கிறார். வ்ருக்ஷத்தில் தேவதத்தன் நின்றான் என்றால் அங்கு சரீராத்ம பாவமில்லை. ஜாதிகுணங்கள் வ்யக்தியிலே கிடந்தது என்றால் அங்கு சரீராத்ம பாவமில்லை. விசிஷ்டத்திலேயிறே சரீராத்மபாவம் கொள்ளலாவது.

விளக்கம் - கடந்த பாசுரத்தில் ஸாமாநாதிகரண்யத்தைக் கூறினார். அங்கு அதனால் கிடைத்த சரீர-ஆத்ம தொடர்பை இங்கு அருளிச்செய்கிறார். அல்லது கடந்த பாசுரத்தில் ஸாமாநாதிகரணம், வையதிகரண்யம் கூறினார்; அந்த ஐக்யத்திற்குக் காரணம் சரீர-ஆத்ம பாவம் என்கிறார் என்றும் கொள்ளலாம். சாந்தோக்ய உபநிஷத் – அநேந ஜீவேநாத்மநாநு ப்ரவிச்ய நாமரூபே வ்யாகரவாணி - இந்த உயிர்கள் அனைத்தையும் உடலாகக் கொண்ட நான் அவற்றில் புகுந்து அவற்றின் நாமத்தையும் ரூபத்தையும் செய்கிறேன் - என்றது.

இதன்படி பஞ்சபூதங்களால் த்ரிவ்ருத்த கரணம் என்ற முறையில் உண்டாக்கப்பட்ட உடலுள் உயிர் மூலமாக உள்ளே புகுந்து, உயிர்கள் அனைத்தும் பொருள்களாக இருக்கும்படியும், அவற்றுக்குப் பெயர் முதலானவை ஏற்படும்படியாகச் செய்கிறான். அவை அனைத்தும் தானே என்னும்படி இருந்தாலும், "மண்ணே குடம்" என்று இருக்காமல், தைத்திரீய உபநிஷத் – அந்த: ப்ரவிஷ்டச்சாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா - அனைத்து உயிர்களுக்குள் புகுந்து அவைகளுக்குக் கட்டளை இட்டு நியமிப்பவனாய் ஆத்மாவாய் – என்னும்படி அனைத்தையும் நியமிப்பதன் மூலம் அனைத்தையும் ஆத்மாவாகத் தாங்கி நிற்கிறான். ப்ருஹத் உபநிஷத் – யஸ்யாத்மா சரீரம் யஸ்ய ப்ருதிவீ சரீரம் - யாருக்கு ஆத்மா சரீரமோ, யாருக்கு உலகம் சரீரமோ – என்னும்படி இந்த இரண்டிற்கும் தாரகனாய், நியமிப்பவனாய், சேஷியாய் நடத்திக்கொண்டு செல்கிறான் என்று ஸாமாநாதி கரண்யத்திற்குச் சரீர-ஆத்ம பாவமே காரணம் என்றார். "தேவதத்தன் மரத்தில் நிற்கிறான்" என்று கூறும்போது சரீர-ஆத்ம பாவம் வெளிப்படுவதில்லை. "ஜாதி குணங்கள் ஒரு வடிவில் உள்ளன" என்றால் சரீர-ஆத்ம பாவம் வெளிப்படுவதில்லை. ஆனால் "தாங்கி நிற்கும் பொருள், தாங்கப்படும் பொருள்" என்று கூறும்போது இந்த சரீர-ஆத்ம பாவம் வெளிப்படுகிறது.

வ்யாக்யானம் – (திடவிசும்பு) இதுதான் அல்லாதவற்றிலும் ஏறி, த்ருடமான எரி, த்ருடமான காற்றென்று கிடக்கிறதாகவுமாம்; அன்றிக்கே ஆத்மந ஆகாசஸ்ஸம்பூத என்று சொல்லுகிறபடியே அல்லாத பூதங்களுக்கு முன்னேயுண்டாய், அவை அழிந்தாலும் சில நாள் நிற்கக் கடவதாகையாலே த்ருடமான விசும்பென்னவுமாம்; அன்றிக்கே சத்வார்யேவ பூதாநி என்கிறவனை நிராகரிக்கிறாராகவுமாம். ஆக, பூதபஞ்சகங்களையும் சொல்லுகிறது.

விளக்கம் – "திடம்" என்பதை "விசும்பு" தவிர மற்றவற்றிலும் சேர்க்கவேண்டும். அதாவது, திடமான நெருப்பு, திடமான காற்று என்று மற்ற நான்கு பூதங்களுக்கும் கொள்ள வேண்டும். தைத்திரீய ஆனந்தவல்லீ – ஆத்மந ஆகாசஸ்ஸம்பூத – பரம்பொருளிடம் இருந்து ஆகாயம் தோன்றியது – என்பதற்கு ஏற்ப அனைத்து பூதங்களுக்கும் முன்பாக ஆகாயம் உண்டானது; மற்ற பூதங்கள் அழிந்தாலும், ஆகாயம் சிறிது காலம் மேலும் நீடிக்கும் என்பதால், திடமான ஆகாயம் என்று கூறியதாகக் கொள்ளலாம். அல்லது, சத்வார்யேவ பூதாநி – பூதங்கள் நான்கு – என்ற வாதாடும் அருக மதத்தை மறுக்கும்

விதமாக, ஐந்தாவது பூதமான ஆகாயத்தைத் திடம் என்று கூறுகிறார் எனவும் கொள்ளலாம். ஆக பஞ்சபூதங்களையும் கூறுகிறார் என்றே ஆகிறது.

வ்யாக்யானம் - (இவைமிசை படர் பொருள் முழுவதுமாய்) இவற்றை அடியாகக் கொண்டு மேல் விஸ்த்ருதமாகா நின்றுள்ள பதார்த்தங்களெல்லாவற்றையும் உண்டாக்கி. "ஆய்" என்றது ஆக்கி என்றபடி. "ஆய்" என்பானென்னென்னில் பஹுஸ்யாம் என்கிற தன் விகாஸமேயாகையால்; வைதிக நிர்தேசமிருக்கிறபடி.

விளக்கம் - பஞ்சபூதங்களை அடிப்படையாகக் கொண்டு காணப்படும் பொருள்கள் அனைத்தையும் உண்டாக்கி. "ஆய்" என்றால் "ஆக்கி" என்று பொருள். "ஆய்" என்று ஏன் கூறவேண்டும் என்றால், தைத்திரீய ஆனந்தவல்லீ (6-3) - பஹுஸ்யாம் – நான் பலவாக விரிகிறேன் - என்று கூறுவதற்கு ஏற்ப, ப்ரஹ்மத்தின் மலர்ச்சியே அனைத்தும் ஆவதால் ஆகும். இப்படியாகவே மறைமொழி உள்ளது.

வ்யாக்யானம் – (அவையவைதொறும்) அவ்வோபதார்த்தங்கள்தோறும். அவற்றிலே வ்யாபிக்குமிடத்தில் பல தூணுக்காக ஒரு உத்திரம் கிடந்தாப்போலேயன்றிக்கே ஜாதி வ்யக்திதோறும் பரிஸமாப்ய வர்த்திக்குமாபோலே எல்லாவற்றிலும் தனித்தனியே குறைவற வ்யாபித்து நிற்கும். இப்படி வ்யாபித்து நிற்குமிடத்தில் (உடல்மிசை உயிரென) இச்சரீரத்துக்கு ஆத்மா தாரகனாய் நியாமகனாய் சேஷியாயிருக்குமாபோலே, இச்சரீராத்மாக்களுக்குத் தான் தாரகனாய், நியாமகனாய், சேஷியாயிரும். (கரந்து) இப்படி இருக்கச்செய்தே யமாத்மா ந வேத என்கிறபடியே அந்யைரத்ருச்யனாயிருக்கும். (எங்கும் பரந்து) அந்தர்பஹிச்ச வ்யாபித்து.

விளக்கம் - (அவையவைதொறும்) - அந்தப் பொருள்கள் அனைத்திலும். அந்தப் பொருள்களில் நிற்கும்போது பல தூண்கள் மீது ஓர் உத்திரம் நிற்பது போன்று அல்லாமல், ஒவ்வொன்றிலும் அதன் குணங்கள் இருப்பது போன்று, தனித்தனியாக ஒவ்வொரு பொருளிலும் வ்யாபித்து நிற்கிறான். (உடல்மிசை உயிரென) - இப்படியாக வ்யாபிக்கும் இடத்தில், இந்த உடலுக்கு ஆத்மா என்பது தாரகனாக, நியமிப்பவனாக யஜமானனாக உள்ளது போன்று அனைத்து சரீர ஆத்மாக்களுக்கு அவனே தாரகனாக, நியமிப்பவனாக, சேஷியாக உள்ளான். (கடந்து) - இப்படி உள்ளபோதிலும் ப்ருஹத் உபநிஷத் – யமாத்மா

ந வேத – உயிர்களால் அறிய இயலாதபடி – என்று கூறுவதற்கு ஏற்ப மற்றவர்களால் காண இயலாதபடி இருப்பான். (எங்கும் பரந்து) - உள்ளும்புறமும் புகுந்து.

வ்யாக்யானம் - இதில் ப்ரமாணம் என்னென்னில் (உளன் சுடர்மிகு சுருதியுள்) அபௌருஷேயமாய் நிர்தோஷமாய் இருக்கிற வேதத்தாலே ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கும். ப்ரத்யக்ஷாதி ப்ரமாணங்கள் போலே ஹேத்வந்தரத்தாற் கழிக்கவொண்ணாத ஒளியை உடைத்தாயிருக்கை. (சுருதி) பூர்வபூர்வோச்சாரணாக்ரமத்தைப் பற்றி உத்தரோத்த ரோச்சார்யமாணத்வத்தைப் பற்றச் சொல்லுகிறது. இத்தால் முதற்பாட்டுத் தொடங்கி சொன்ன அர்த்தங்களுக்கெல்லாம் ப்ரமாணம் நிர்தோஷ ச்ருதி என்கிறது.

விளக்கம் - இப்படிக் கூறுவதற்கு ப்ரமாணம் என்னவென்றால் (உளன் சுடர்மிகு சுருதியுள்) – மனிதர்களால் செய்யப்படாததாக இருக்கின்ற வேதங்களால் கூறப்பட்டவன். ப்ரத்யக்ஷம் போன்ற ப்ரமாணங்கள் என்பதான காரணங்களால் தள்ள இயலாதபடி ஒளியை உடையவனாக இருத்தல். (சுருதி) - முன்னே பல அறிஞர்களும் கூறியதையே பின்னர் வந்தவர்களும் கூறியதை அருளிச் செய்கிறார். ஆக முதல் பாசுரம் தொடங்கி இதுவரை கூறப்பட்ட அனைத்திற்கும், தோஷங்கள் இல்லாத வேதங்களே ப்ரமாணங்கள் என்கிறார்.

வ்யாக்யானம் – (இவையுண்ட சுரன்) இவற்றை ஸம்ஹாரித்த தேவன். முன்பே ஸ்ருஷ்டி ஸ்திதிகள் அவனதீநமென்று சொல்லிற்று; ஸம்ஹாரம் வேறொரு சேதநாதீநமாகில் இது தன்னதல்லாமையால் வரும் ஐச்வர்யம் குறையுமிறே; அதுக்காக ஸம்ஹாரமும் அவனிட்ட வழக்கு என்கிறார். இத்தால் ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களை ப்ரஹ்மாதிகளே நடத்துகிறார்கள் என்கிற குத்ருஷ்டிகளை நிரஸிக்கிறார். "திடவிசும்பு" என்கிற இத்தால் அவைதிக மர்யாதையிலே நடக்கிற லோகாயதிகனை நிரஸிக்கிறார். "உடல் மிசையுயிர்" என்கிற இத்தால் ஸ்வரூபேண தாதாத்ம்யம் சொல்லுகிறவர்களை நிரஸிக்கிறார். "சுடர்மிகு சுருதியுள்" என்கையாலே நாராயணாநுவாகாதிகளில் சொல்லுகிற பரத்வம், லக்ஷ்மீஸம்பந்தம் இவையெல்லாவற்றையும் அங்கீகரித்தாராகிறார்.

விளக்கம் - (இவை உண்ட சுரன்) - இவற்றை ப்ரளய காலத்தில் அழித்த தேவன். முன்னர் படைத்தல், காத்தல் ஆகியவை எம்பெருமான் வசப்பட்டவை என்றார். அழித்தல் மட்டும்

வேறு ஒருவருக்கு வசப்பட்டது என்றால், இவனுக்கு இல்லாமை என்பதால், இவன் ஐச்வர்யத்திற்குக் குறை வரும். எனவே அழித்தலும் இவன் கட்டளைபடியே என்கிறார். இதன் மூலம் படைத்தலை நான்முகனும், அழித்தலைச் சிவனும் செய்கிறார்கள் என்ற குத்ருஷ்டிகளின் வாதங்களைத் தள்ளுகிறார். "திடவிசும்பு" என்பதன் மூலம் வேதங்களுக்குப் புறம்பாகப் பேசும் லோகாயதிகனைத் தள்ளுகிறார். "உடல் மிசை உயிர்" என்பதன் மூலம் ஸ்வரூபத்துடன் ஐக்கியம் கூறும் மதங்களைத் தள்ளுகிறார். "சுடர்மிகு சுருதியுள்" என்பதன் மூலம் நாராயண அனுவாகத்தில் கூறுகின்ற பரதத்வம், பிராட்டியார் தொடர்பு ஆகியவற்றை உறுதி செய்கிறார்.

1-1-8 சுராறி வருநிலை விண்முதல் முழுவதும்
வரன்முத லாயவை முழுதுண்ட பரபரன்
புரமொரு மூன்றெரித் தமரர்க்கு மறிவியந்து
அரனய னெனவுல கழித்தமைத் துளனே.

பொருள் – நான்முகன் உள்ளிட்ட தேவர்களாலும் அறித்து கொள்வதற்கு அரியதான தன்மைகளைக் கொண்ட மூலப்ரக்ருதி தொடக்கமாக உள்ள அனைத்து பொருள்களுக்கும் சிறந்த காரணமாகி, அவற்றை முழுவதுமாக அழிக்கும் பரம்பொருள்; சிவனாக நின்று திரிபுரங்களை அழித்து, உலகங்களையும் அழித்து, பின்னர் நான்முகனாக நின்று தேவர்களுக்கு ஞானத்தைப் புகட்டி, உலகம் அனைத்தையும் ஸ்ருஷ்டித்து, சிவன் மற்றும் நான்முகனுக்குள் உயிராக நிற்கிறான்.

அவதாரிகை - ச்ருதிஸித்தன் அவனே என்றும், ஸர்வ சரீரியாய் நிற்கிறான் அவனே என்றும் சொல்லா நின்றீர். அல்லாதாரும் ஓரோ கார்யங்களிலே அதிகரித்து, அவையும் நடத்தியன்றோ போருகிறது; ப்ரஹ்மா ஸ்ருஷ்டிக்குக் கடவனாய், ருத்ரன் ஸம்ஹாரத் துக்குக் கடவனாயன்றோ போருகிறது. இவற்றை ஒரு வ்யக்தியிலே ஏறிட்டால், நீர் பக்ஷபாதத்தாலே சொன்னீராகீரோ? என்ன; ஒரு வ்யக்தியில் பக்ஷபாதத்தாலே சொல்லுகிறேனல்லேன். ப்ரமாணகதிகளை ஆராய்ந்தால் அவை அவர்கள் பக்கலில் கிடவாமையாலே சொல்லுகிறேன் என்கிறார்.

விளக்கம் - ஆழ்வாரிடம், "வேதங்களால் கூறப்பட்டவன் அவனே என்றும், அனைத்துப் பொருள்களையும் சரீரமாகக் கொண்டு அவற்றின் ஆத்மாவாக நிற்பவன் அவனே என்றும் கூறினீர்கள். இந்த உலகில் பலரும் ஒவ்வொரு செயலில் நிலைநின்று அவற்றை நடத்தியபடி உள்ளனரே! இப்படி உள்ளபோது நான்முகன் ஸ்ருஷ்டி செய்வதற்கும், சிவன் அழித்தலுக்கும் காரணம் என்று ஆகிறதே? இவற்றை ஸர்வேச்வரன் ஒருவனே செய்கிறான் என்று நீவீர் பாரபக்ஷமாகக் கூறுகிறீர்கள் அல்லவோ?" என்று சிலர் கேட்டனர். இதற்கு ஆழ்வார், "நான் பாரபக்ஷமாகக் கூறுவில்லை. ப்ரமாணங்களை ஆராய்ந்தால் அந்தச் செயல்கள் அவர்களால் செய்யப்படுவதில்லை என்பது விளங்குகிறது", என்கிறார்.

வ்யாக்யானம் – (சுரரித்யாதி) ப்ரஹ்மாதிகளால் அறியவரிய ஸ்வபாவத்தை உடைத்தாயிருக்கிற விண்ணுண்டு - மூலப்ரக்ருதி; அது தொடக்கமாக உண்டான எல்லாவற்றுக்கும் வரிஷ்டமான காரணமாய். அக்ஷரமம்பராந்த த்ருதே: என்று அம்பராந்தம் என்று சொல்லக்கடவதிறே; கார்க்கிவித்யையிலே கஸ்மிந்நு கல்வாகாச ஒதச்ச ப்ரோதச்ச என்று ஆகாச சப்தத்தாலே மூலப்ரக்ருதியைச் சொல்லுகையாலே இவரும் ஆகாச சப்தத்தாலே மூலப்ரக்ருதியை அருளிச்செய்கிறார். ப்ரக்ருதி கார்யமான ஆகாச வாசி சப்தத்தையிட்டு, காரணமான மூலப்ரக்ருதியை உபசரிக்கிறது.

விளக்கம் - (சுரரித்யாதி) நான்முகன் முதலான தேவர்களாலும் அறிய இயலாத தன்மைகளைக் கொண்ட மூலப்ரக்ருதி தொடக்கமாக உள்ள முழுவதற்கும் சிறந்த காரணமானவன். ப்ரஹ்மசூத்திரம் – அக்ஷரமம்பராந்த த்ருதே: – ஆகாயத்திற்குக் காரணமான மூலப்ரக்ருதியை தரிப்பதால் அக்ஷரம் என்பது ப்ரஹ்மமே – என்றது. ப்ருஹத் உபநிஷத்தில் உள்ள கார்க்கிவித்யையில் - கஸ்மிந்நு கல்வாகாச ஒதச்ச ப்ரோதச்ச – ஆகாயம் என்பது யாரிடம் குறுக்குநெடுக்காக உள்ளது – என்றது. இங்கு ஆகாசம் என்ற பதம் மூலம் மூலப்ரக்ருதி கூறப்படுவது போன்று, இவரும் விண் என்ற பதம் மூலம் மூலப்ரக்ருதியைக் கூறுகிறார்.

வ்யாக்யானம் – (வரன் முதலாய்) காரணதசையிலும் ஸூக்ஷ்மரூபேண வ்யாபித்து, தன் மேலே ஏறிட்டுக்கொண்டு நோக்கியும், கார்யமாமளவிலே வந்தவாறே அவ்யக்தம், மஹாந், அஹங்காரமென்கிற இவற்றிலும் ஸூக்ஷ்மரூபேண வ்யாபித்தும், காரண

பரம்பரையோடு கார்யபரம்பரையோடு வாசியறத் தானே நின்று நடத்திக் கொண்டு போருகையாலே வரிஷ்டமான காரணமாய் என்கிறது. (அவை முழுதுண்ட) ஸம்ஹாரத்திலும் வந்தால் முழுக்க ஸம்ஹர்த்தாவாகிறானும் அவனே. யஸ்ய ப்ரஹ்ம ச க்ஷத்ரஞ்ச உபேபவத ஓதந: ம்ருத்யுர் யஸ்யோபஸேசநம் யாவனொருவனுக்கு ப்ரஹ்ம க்ஷத்ராத்மகமாயிருக்கிற இதெல்லாம் ஓதநமாயிருக்கிறது, யாவவொருவனுக்கு ம்ருத்யு உபாஸேசந கோடியிலே நிற்கிறான்; க இத்தா வேத யத்ர ஸ: அப்படியிருக்கிறவன் பெருமை ஒருவர்க்கும் அறிய நிலமோ? என்னாநின்றதிறே.

விளக்கம் - (வரன் முதலாய்) காரண நிலையில் கண்களுக்குப் புலப்படாத வடிவில் அனைத்துள்ளும் வ்யாபித்து, அவற்றைத் தன் மேல் ஏறிட்டு நோக்கியும், காரியம் ஆகும் அளவில் அவ்யக்தம், மஹான், அஹங்கார ஆகியவற்றில் ஸூக்ஷ்ம ரூபமாக வ்யாபித்தும், காரண காரிய வஸ்துக்களுக்கு வேறுபாடு இல்லாமல் தானே முன்னின்று நியமிப்பதால் "சிறந்த காரணம்" என்றார். (அவை முழுதுண்ட) அவற்றை அழிக்கும் காலத்தில் அவனே முழுவதும் அழிப்பவனாக உள்ளான். கட உபநிஷத் – யஸ்ய ப்ரஹ்ம ச க்ஷத்ரஞ்ச உபேபவத ஓதந: ம்ருத்யுர் யஸ்யோபஸேசநம் - யாருக்கு அந்தணரும் க்ஷத்ரியனும் உணவாக உள்ளார்களோ, யாருக்கு எமன் ஊறுகாயாக உள்ளானோ - என்றது. க இத்தா வேத யத்ர ஸ: – அப்படி உள்ளவனின் பெருமையை அறிவதற்கு யாருக்கு இயலும் – என்றது.

வ்யாக்யானம் - (பரபரன்) ப்ரஹ்மாதிகள் அதிகாரி புருஷர்களாயிருக்கையாலே நம்மைக் குறித்து அவர்கள் பரராயிருப்பதொன்றுண்டிறே. பர: பராணாம் என்கிறபடியே, அவர்கள் தங்களுக்கும் பரனாயிருக்குமவன். "மனிசர்க்குத் தேவர் போலத் தேவர்க்கும் தேவா" என்னக் கடவதிறே.

விளக்கம் – (பரபரன்) நான்முகன் முதலான தேவர்கள் அதிகாரி புருஷர்கள் என்பதால் நம்மை விட அவர்கள் மேலானவர்கள் என்று கூறுவது உண்டு. ஆனால் விஷ்ணு புராணம் – பர: பராணாம் - உயர்ந்தவர்களை விட உயர்ந்தவன் - என்னும்படி தேவர்களுக்கும் ஸர்வேச்வரன் மேலானவன் ஆவான். இதனையே திருவாய்மொழி (8-1-5) - மனிசர்க்குத் தேவர் போலத் தேவர்க்கும் தேவா – என்றது.

வ்யாக்யானம் - (புரமித்யாதி) ருத்ரன் த்ரிபுரதஹநம் பண்ணினானென்றும், (அமரர்க்கும் அறிவியந்து) அறிவை ஈந்து; அன்றிக்கே, வியத்தல் – கடத்தலும், கொடுத்தலு மாகையாலே அறிவைக் கொடுத்து என்னவுமாம்; ப்ரஹ்மா தேவர்களுக்கு ஜ்ஞாநப்ரதாநம் பண்ணினானென்றும் – ஒரு ப்ரஸித்தியுண்டிறே நாட்டிலே அவர்களுக்கு; அங்ஙனன்றே என்னில், அவற்றை ஆராய்ந்தால் விஷ்ணுராத்மா பகவதோ பவஸ்யாமித தேஜஸ: தஸ்மாத் தநுர்ஜ்யாஸம்ஸ்பர்சம் ஸ விஷேஹே மஹேச்வர: என்னா நின்றார்களிறே அத்தையடியறிவார். "நண்ணார் நகரம் விழ நனிமலை சிலை வளைவு செய்து அங்கழல் நிற அம்பது ஆனவனே" என்னா நின்றர்களிறே மயர்வற மதிநலமருளப் பெற்றவர்கள்; தான் பூட்டின நாணி தன் கழுத்தை அறுத்துக்கொண்டு போகாதொழியும்போது ஈச்வரன் அந்தராத்மாவாய் நிற்கவேணும். ப்ரஹ்மா தேவர்களுக்கு ஜ்ஞாநப்ரதாநம் பண்ணினாரெ ன்றொரு ப்ரஸித்தியுண்டு. அதுக்கடி ஆராய்ந்தால் யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் என்கிறபடியே அவனடியாயிருக்கும். (அரனித்யாதி) அரன் செய்தான், அயன் செய்தானென உலகழித்தமைத்துளன். ஏதௌ த்வௌ விபுத ச்ரேஷ்டௌ ப்ரஸாத க்ரோதஜௌ ஸம்ருதௌ ததாதர்சித பந்தாநௌ ஸ்ருஷ்டி ஸம்ஹார காரகௌ என்கிறபடியே ப்ரமாண கதிகளிருந்தபடியாலே ஏகதேச ஸ்ருஷ்டியும் ஏகதேச ஸம்ஹாரமுமே ப்ரஹ்மாதிகளுக்கு உள்ளது; அதுதானும் இவர்களுக்கு அந்தராத்மாவாய் நின்று ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களைப் பண்ணுகிறான் ஸர்வேச்வரனாகையாலே சொன்னேனத்தனை; ஒரு வ்யக்தியிலே பக்ஷபாதத்தாலே சொன்னேனல்லேன் என்று குத்ருஷ்டிகளை நிரஸிக்கிறார்.

விளக்கம் - (புரமித்யாதி) சிவன் திரிபுரம் எறித்தான் என்றும், (அமரர்க்கும் அறிவியந்து) தேவர்களுக்கு அறிவை அளித்தான் என்றும் கூறப்பட்டது. நான்முகன் தேவர்களுக்கு ஞானத்தை அளித்தான் என்றும் தேவலோகத்தில் கூறுவது உண்டு. அப்படி அல்லவோ நான்முகன் மற்றும் சிவனுக்குச் சிறப்பு கூறப்படுகிறது? இதனை ஆராய்வோம். மஹாபாரதம் - விஷ்ணுராத்மா பகவதோ பவஸ்யாமித தேஜஸ: தஸ்மாத் தநுர்ஜ்யாஸம்ஸ்பர்சம் ஸ விஷேஹே மஹேச்வர: – மிகுந்த ஒளியுடைய ருத்திரனுக்கு உயிராக விஷ்ணு உள்ளான்; இதனால் சிவன் வில்லைக் கொண்டு நாணைத் தொடுக்கும் ஆற்றல் பெற்றான் என்று வ்யாஸர் அருளிச்செய்தார். பெரியதிருமொழி (6-1-3) - நண்ணார் நகரம் விழ நனிமலை சிலை வளைவு செய்து அங்கழல் நிற அம்பது ஆனவனே - என்று மயர்வற நலம் அருளப் பெற்ற ஆழ்வார் கூறினாரே! ஆகவே, தான் தொடுத்த

வில்லானது தன்னுடைய கழுத்தையே அறுத்துக் கொண்டு போகாமல் இருப்பதற்கு ஸர்வேச்வரன் அந்தர்யாமியாக இருந்தால் மட்டுமே முடியும். நான்முகன் தேவர்களுக்கு ஞானம் அளிப்பதை சற்று ஆராய்வோம். ச்வேதாஸ்வதர உபநிஷத் – யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் - நாராயணன் உலகங்களைப் படைப்பதற்கு முன்பு நான்முகனை படைத்தான், அவனுக்கு வேதங்களைக் கற்பித்தான் – என்பதற்கு ஏற்ப நாராயணனை அந்தர்யாமியாகக் கொண்டு நான்முகன், நாராயணன் மூலமாகத் தேவர்களுக்கு ஞானம் அளித்தான் என்றே கொள்ளவேண்டும். (அரனித்யாதி) – "அரன் செய்தான், அயன் செய்தான்" என்று கூறும்படியாக உலகை அழித்தும், அமைத்தும் செய்தான். மஹாபாரதம் – ஏதௌ த்வௌ விபுத ச்ரேஷ்டௌ ப்ரஸாத க்ரோதஜௌ ஸம்ருதௌ ததாதர்சித பந்தாநௌ ஸ்ருஷ்டி ஸம்ஹார காரகௌ – நான்முகன், சிவன் இருவரும் தேவர்களில் தலைமை பெற்றவர்கள்; எம்பெருமான் சாந்தமுடன் இருந்தபோது நான்முகனும், கோபத்துடன் இருந்தபோது சிவனும் உண்டானார்கள். அவனால் காட்டப்பட்ட வழிகளின்படி இவர்கள் ஸ்ருஷ்டியும், ஸம்ஹாரமும் செய்கின்றனர் என்று ப்ரமாணங்கள் உள்ளன. ஆக ஸ்ருஷ்டியில் ஒரு பகுதியிலும், ஸம்ஹாரத்தில் ஒரு பகுதியிலும் மட்டுமே இவர்களுக்குச் செயல் உள்ளது. அவர்களது அந்தர்யாமியாக நின்று ஸ்ருஷ்டி மற்றும் ஸம்ஹாரத்தை ஸர்வேச்வரனே செய்கிறான். இதனால்தான் அவன் ஒருவனே இவற்றைச் செய்கிறான் என்று கூறினேன் அல்லாமல் பாரபக்ஷமாக அல்ல – என்று குத்ருஷ்டிகளை மறுக்கிறார்.

1-1-9 உளனெனி லுளனவ னுருவமிவ் வுருவுகள்
உளனல னெனிலவ னருவமிவ் வருவுகள்
உளனென விலனென விவைகுண முடைமையில்
உளனிரு தகைமையோ டொழிவிலன் பரந்தே

பொருள் – ஸர்வேச்வரன் உள்ளான் என்றால் உள்ளவன் ஆகிறான். அந்த நிலையில் உருவத்துடன் கொண்ட அனைத்து வஸ்துக்களும் அவனுடைய ஸ்தூலமான சரீரங்கள் ஆகின்றன. ஸர்வேச்வரன் இல்லை என்றாலும் உள்ளவனே ஆகிறான். அந்த நிலையில் இல்லாத பொருள்கள் அனைத்தும் அவனது ஸூக்ஷ்ம சரீரங்கள் ஆகின்றன. ஆகவே உளன் என்றும், இலன் என்றும் கூறப்படும் இவற்றைத் தனது குணமாகக் கொண்டவன்

என்றால் - உருவமும் அருவமும் ஆகிய ஸ்தூல ஸூக்ஷ்ம பொருள்களைக் கொண்டவனாக எங்கும் உள்ளான் - என்பதாகிறது.

அவதாரிகை - ஸர்வசூந்யவாதியை நிரஸிக்கிறார். நிரஸிக்கிறபடிதானெ ன்னென்னில், பாஷ்யத்திலே சூந்யவாதியை நிரஸித்த க்ரமத்திலே. இவ்வாழ்வார்தாம் அடியாக பாஷ்யகாரர்க்கு அவனை நிரஸிக்கலாம்; இவர்தாம் அவனை நிரஸிக்கைக்கு அடியென்னென்னில் அதுவும் இவ்வாழ்வார் தம் பக்கலிலே உண்டு. புறம்பே சிலர் ப்ரஹ்மாதிகள் பக்கலிலே ஈச்வரத்வ ப்ரதிபத்தியைப் பண்ணி, ப்ரமாணங்களையும் அதுக்கு ஈடாக நியமித்துக் கொண்டு வந்து தோற்ற, தாம் அங்கீகரித்தவனே ஸர்வஸ்மாத்பரனென்னும், ஜகத்து அவனுக்கு சரீரதயா சேஷமென்றும், தத்ப்ரதிபாதக ப்ரமாணம் வேதமென்றும் தம்முடைய மதத்தை உபந்யஸித்து நின்றார் கீழ். இவை இத்தனையும் இல்லை என்னும்போது பூர்வபக்ஷமாக இவற்றை அங்கீகரித்து அநுபாஷித்துக் கழிக்க வேணுமிறே; அதில் இவற்றை அங்கீகரித்து அநுபாஷித்து அவனால் இல்லை என்னப்போகாது. முதலிலே சூந்யமென்னில் ஸர்வ சூந்யவாதம் ஸித்தியாது. இனி உன்னைக் கேட்போம். நீதான், ஈச்வரனுளன் என்கிற சொல்லாலே அவனில்லாமையை ஸாதிக்கப் பார்க்கிறாயோ? இல்லை என்கிற சொல்லாலே இல்லாமையை ஸாதிக்கப் பார்க்கிறாயோ? என்ன; இங்ஙன் விகல்பிக்கைக்குக் கருத்தென்? என்ன, உளனென்கிற சொல்லாலே சொன்னால் உனக்கு அபிமதமான அபாவம் ஸித்தியாத ஓபாதி, இல்லை என்கிற சொல்லாலும் உனக்கு அநபிமதார்த்தமே காண் ஸித்திப்பது; ஆனபின்பு நீ இல்லை என்கிற சொற்கொண்டே அவன் உண்மையை ஸாதிப்பன். லோகத்தில் பாவாபாவ சப்தங்களுக்கு யாதொருபடி பொருள் கொள்ளுகிறோம். அப்படி கொள்ளில் நீ நினைக்கிற அர்த்தம் உன்னால் ஸாதிக்கப் போகாது. அங்ஙனே கொள்ளாயாகில் வாதந்தன்னில் உனக்கு அதிகாரமில்லை.

விளக்கம் – இங்கு அனைத்தும் சூந்யம் என்னும் வாதத்தைத் தள்ளுகிறார். எப்படி என்றால் ஸ்ரீபாஷ்யத்தில் எம்பெருமானார் தள்ளிய முறையில் இவரும் தள்ளுகிறார். இங்கு ஒரு கேள்வி எழலாம். இந்த ஆழ்வாரோ எம்பெருமானார் காலத்திற்கு முற்பட்டவராக இருப்பதால், ஆழ்வாரின் முறையைப் பின்பற்றி எம்பெருமானார் சூந்யவாதத்தை மறுத்தார் என்று கூறுவது சரி; ஆனால் இங்கு ஆழ்வார் அவனை எப்படி மறுத்தார்? ஆழ்வாருக்கு அதுவும் இயலும். எப்படி என்றால் - முன்பு ஒரு சிலர் நான்முகன்

உள்ளிட்ட தேவர்களுக்கு ஈச்வரத்வம் கற்பித்து, அதற்கு ஈடாக சிலர் ப்ராமணங்களையும் கொண்டு வந்து நின்றனர். அப்போது ஆழ்வார் தான் கூறிய ஸர்வேச்வரனே அனைவரிலும் மேம்பட்டவன் என்றும், அவனது சரீரமாக உலகம் இருப்பதால் அவனது அடிமை என்றும், தான் கூறுவதற்கு வேதங்களே ப்ரமாணம் என்றும் தன்னுடைய கருத்தை 7 மற்றும் 8-ஆம் பாசுரங்களில் அருளிச்செய்தார். ஆழ்வார் தனது மனதில், "மேலே கூறப்பட்ட பாசுரங்களில் உள்ள ப்ரமாணங்களை சூந்யவாதி மறுத்தான் என்றால், அவற்றை முதலில் கூறிவிட்டு, அதன் பின்னரே அவனால் மறுக்கமுடியும். ஆனால் அவற்றைக் கூறினான் என்றால், அவனுடைய சூன்யவாதம் இல்லாமல் போய்விடும். மாறாக முதலிலேயே இல்லை என்று அவன் சொல்லிவிட்டால் ஸர்வஸூந்யவாதம் இல்லாமல் போய்விடும்", என்று எண்ணினார். அடுத்து சூந்யவாதியிடம் ஆழ்வார், "நீ ஈச்வரன் உளன் என்பதன் மூலம் அவனது இல்லாமையையே உணர்த்த எண்ணுகிறாயா அல்லது இல்லை என்ற சொல் மூலம் அவனது இல்லாமையைக் கூற நினைக்கிறாயா?", என்றார். இதற்குச் சூந்யவாதி, "இப்படியாக இரண்டுவிதமாகக் கேட்பதற்கு என்ன கருத்து?", என்றான். இதற்கு ஆழ்வார், "உளன் என்பதன் மூலம் உனக்கு விருப்பமான 'ஈச்வரன் இல்லாமை' என்பது தோன்றாது; இல்லை என்பதன் மூலமும் உனக்கு விருப்பம் இல்லாத தன்மையை நீ அடைகிறாய். அதன் பின்னர் 'இல்லை' என்ற சொல்லைக் கொண்டே அவன் உண்மையைக் கூறிவிடுவான். இந்த உலகத்தில் உண்மை மற்றும் இன்மை ஆகிய சொற்களுக்கு எவ்விதமாகப் பொருள் கொள்கிறோம். அதே போன்று கொண்டால், நீ நினைக்கும் பொருள் உன்னால் நிரூபிக்க இயலாது. அப்படி நீ கொள்ளவில்லை என்றால் உனது வாதங்களில் அதிகாரம் இல்லை", என்றார் (இங்கு கூறப்பட்டதன் விளக்கம்: ஒரு பொருள் இங்கே உள்ளது, இப்போது உள்ளது, இப்படியாக இருக்கிறது என்பது பாவம் ஆகும். ஒரு பொருள் இங்கே இல்லை, இப்போது இல்லை, இப்படியாக இல்லை என்பது அபாவம் ஆகும். இப்படி இரண்டு விதங்களாலும் உண்மையே வெளிப்படுகிறது. ஆகவே உனது சூந்யவாதம் செல்லாது. இப்படிப் பொருள் கொள்ளாமல் வாதம் செய்தால் அந்த வாதமே சூந்யமாக உள்ளதால் அந்த வாதத்தில் அதிகாரம் இல்லை).

வ்யாக்யானம் – (உளனெனில்) ஈச்வரஸத்பாவம் முதலிலே இல்லை என்கிற நீ, அவன் உண்மைக்கு இசையாயிறே. நான் உளனென்கிறாப்போலே சொல்லில்தான் உளன். (அவனுருவம் இவ்வுருவுகள்) – ஈசிதவ்ய நிரபேக்ஷமாகவன்றிறே ஈச்வரன் உளனாவது;

யஸ்யாத்மா சரீரம், யஸ்ய ப்ருதிவீ சரீரம் என்கிறபடியே ஜகத்து அவனுக்கு சரீரதயா சேஷமாய் உண்டாம். உளனலன் என்பாயோ?, அப்போது அபாவதர்மியாய்த் தோற்றும்.

விளக்கம் – (உளனெனில்) - நான் உளன் என்று கூறுவது போன்று சொல்லில் தானே உளன். இறைவனது உண்மையை முதலிலே இல்லை என்றே கூறும் அவன் இறைவனின் உண்மைக்கு இசையமாட்டான் என்பதால் "உளன் எனில்" என்றார். (அவனுருவம் இவ்வுருவுகள்) - எம்பெருமான் உளன் என்றால் அவனால் நியமிக்கப்படும் உலகத்துடன் அவன் கூடியே இருத்தல் வேண்டும். அவன் உளன் என்னும்போது யஸ்யாத்மா சரீரம் – யாருக்கு ஆத்மா சரீரமோ, யஸ்ய ப்ருதிவீ சரீரம் - யாருக்கு உலகம் சரீரமோ - என்னும்படி இந்த உலகம் அவனுக்குச் சரீரமாக இருப்பதால் அவனுக்கு அடிமைப்பட்டதாய் உள்ளது. அவன் "உளன் அல்லன்" என்று கூறினால், அந்த "இல்லை" என்னும் தத்துவமாகவும் அவனே இருப்பான்.

வ்யாக்யானம் – (அவனருவம் இவ்வருவுகள்) – அப்போது நாஸ்திசப்தவாச்யமாய் அவஸ்தாந்தர பாக்காய்க் கொண்டு இவற்றின் உண்மை தோற்றும். "கடோஸ்தி" என்றால் வாயும் வயிறுமான ஆகாரம் தோற்றும். "கடோ நாஸ்தி" என்றால் நாஸ்தித்வ தர்ம விசிஷ்டமாய்த் தோற்றும், இங்கில்லை என்றதாகில் வேறோரிடத்திலே உண்டாம்; இப்போதில்லை என்றதாகில் வேறொரு கால விசேஷத்திலே உண்டாம்; எங்கும் எப்போது ஒரு ப்ரகாரத்தாலும் கடமில்லையென்னக் கூடாமையால் நிருபாதிக நிஷேதம் இல்லையிறே.

விளக்கம் – (அவனருவம் இவ்வருவுகள்) – அவன் அல்லன் என்று கூறும்போது, வேறு ஒரு தன்மையை அடைந்ததாகப் பொருள் உண்டாகிவிடும். எப்படி? குடம் உள்ளது என்றால் வாயும் வயிறுமாகக் குடம் தென்படும். குடம் இல்லை என்றால், இல்லை என்னும் தன்மையுடன் வேறு ஒரு வகையாகத் தோன்றும் அல்லவோ? அதாவது "இங்கு இல்லை" என்றால் வேறு இடத்தில் உண்டு; "இப்போது இல்லை" என்றால் வேறு ஒரு காலகட்டத்தில் உண்டு; எங்கும், எப்போதும், ஒருவகையான குடம் இல்லை என்று இல்லாததால் காலதேசத்துக்கு உட்படாத விலக்கு இல்லை அல்லவா?

வ்யாக்யானம் – (உளனென இலனென இவைகுணமுடைமையில்) – உளனாகிற இத்தையும், இலனென்கிற இத்தையும், இவையிரண்டையும் குணமாக உடையனாகையாலே, இவை இரண்டும் இரண்டு தர்மமாயிற்று. (உளனிருதகைமையொடு) – உளனென்கிற சொல்லாலும் இலனென்கிற சொல்லாலும் சொன்ன இரண்டு ஸ்வபாவத்தாலும் உளனானான். (ஒழிவிலன் பரந்தே) – நான் உளனென்கிற சொல்லாலே உண்மையை ஸாதித்தேன், நீ இலனென்கிற சொல்லாலே உண்மையை ஸாதித்தாய், ஆக இருவருமாக உண்மையை ஸாதித்தோம். இனி அவன் உளனானால் உளனாமாபோலே ஸவிபூதிகனாயே உளனாக அமையாதோ என்கிறார்.

விளக்கம் – (உளனென இலனென இவைகுணமுடைமையில்) – உளன் என்கிற இதனையும், இலன் என்கிற இதனையும் குணமாக ஈச்வரன் கொண்டதால் இவை இரண்டும் தர்மங்கள் ஆனது. (உளனிருதகைமையொடு) – உளன் என்ற சொல்லாலும், இலன் என்றசொல்லாலும் கூறப்பட்ட இரண்டு தன்மைகளையும் கொண்டவனாக உள்ளவன் ஆகிறான். (ஒழிவிலன் பரந்தே) – நான் "உளன்" என்ற சொல்லால் அவன் உள்ளதை நிரூபித்தேன்; நீ "இலன்" என்ற சொல்லால் அவன் உள்ளதை நிரூபித்தாய். ஆக நாம் இருவருமாகச் சேர்ந்து அவன் உள்ளதை நிரூபித்தோம். இனி அவன் உளன் என்றால் உளன் என்பது போன்று, விபூதியுடன் கூடிய உளனாக இருப்பது இயலாதோ?

10. பரந்தண் பரவையுள் நீர்தொறும் பரந்துளன்
பரந்தவண் டமிதென நிலவிசும் பொழிவறக்
கரந்தசி லிடந்தொறு மிடந்திகழ் பொருடொறும்
கரந்தெங்கும் பரந்துள னிவையுண்ட கரனே

பொருள் - உலகங்கள் அனைத்தையும் ப்ரளய காலத்தில் உண்டு காத்த எம்பெருமான், பரந்து காணப்படும் ஸமுத்திரத்தின் ஒவ்வொரு நீர் அணுக்குள்ளும், அவை ஒவ்வொன்றும் பரந்து நிற்கும் அண்டம் என்று கூறும்படியாக உள்ளான். இது போன்றே பூமி மற்றும் ஆகாயம் ஆகிய எங்கும் உள்ளான். ஸூக்ஷ்மமான உடல்களில் வசிக்கின்ற உயிர்களில் கண்களுக்கு புலப்படாமல் பரந்து நிற்கிறான்.

அவதாரிகை – ஜகத்தை சரீரதயா சேஷமாக உடையனாய், எங்கும் வ்யாபித்து, தாரகனாய், நியாமகனாய், சேஷியாய் இருக்கும் என்று கீழே சொன்னார்; இப்படி வ்யாபித்து நின்றால் அசித் ஸம்வர்க்கத்தாலே சேதநனுக்கு ஒரு ஸங்கோசம் பிறவா நின்றதிறே; அப்படியே அவனுக்கும் இவற்றோட்டை ஸம்ஸர்வர்க்கத்தாலே ஸங்கோசம் பிறக்குமோவென்னில்; அது செய்யாது; அஸங்குசிதமாக வ்யாபித்து நிற்கும் - என்று வ்யாப்தி ஸௌகர்யத்தை அருளிச்செய்கிறார்.

விளக்கம் – உலகத்தைத் தனது சரீரமாக கொண்டதால் அதனைத் தனது உடைமையாகக் கொண்டவனாகவும், எங்கும் வ்யாபித்தவனாகவும், அனைத்தையும் தாங்குபவனாகவும், அனைத்தையும் நியமிப்பவனாகவும், அனைத்துக்கும் எஜமானனாகவும் எம்பெருமான் உள்ளான் என்று மேலே கூறினார். இவ்விதம் எங்கும் பரவி நின்றால், அசித் வஸ்துக்களுடன் சேர்ந்த சேதனர்களுக்குக் குறை ஏற்படுவது போன்று இவனுக்கு இந்த உலகின் தொடர்பு காரணமாகக் குறைவு ஏற்படுமோ என்று சந்தேகம் எழலாம். அவ்விதம் தோஷம் உண்டாகாது; எந்தக் குறைவும் இல்லாமல் பூர்ணமாக வ்யாபித்து நிற்பான் என்று அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் – (பரந்து தண் பரவை இத்யாதி) – பரந்து குளிர்ந்திருந்துள்ள கடலில் ஜலபரமாணுக்கள்தோறும் வ்யாபித்திருக்கும். நீர்ச்செறிவாலே திரண்டு தோற்றுகிற இத்தனையிறே; பரமாணுஸங்காதமிறே. ஜ்யாயாநந்தரிக்ஷாத் என்கிற வஸ்து, ஜல பரமாணுக்களிலே வ்யாபியா நின்றால் அல்பாவகாசமாய் நெருக்குப்பட்டிருக்குமோ என்னில், (பரந்த அண்டமிதென) – அந்த ஜலபரமாணுக்கள் தான் பரந்த அண்டமிது எனவாயிற்று வ்யாபித்திருப்பது. ஓரண்டத்தைச் சமைத்து அதிலே ஓர் ஏகாகியை வைத்தாப்போலே இருக்கும்.

விளக்கம் – பரந்து குளிர்ந்து காணப்படும் கடல் நீரில் உள்ள ஒவ்வொரு நீர் அணுக்களுக்குள்ளும் நிறைந்து நிற்பான். ஆனால் நீரின் பரந்த அளவே கடல் என்பதாகும் என்பதால் – இங்கு நீர் என்று கூறியது நீரில் உள்ள அணுக்கள் என்றே கொள்ள வேண்டும். சாந்தோக்ய உபநிஷத் - ஜ்யாயாநந்தரிக்ஷாத் – ஆகாயத்திலும் உயர்ந்தவன் - என்று கூறப்படும் பரம்பொருள், நீரின் சிறிய அணுக்களில் உள்ளான் என்றால், அத்தனை சிறிய இடத்தில் இருப்பவனாகச் சிறியவனாக உள்ளானோ என்றால், இதற்கு விடை

கூறுகிறார். (பரந்த அண்டமிதென) - அந்த ஒவ்வொரு நீர் அணுவும் பரந்து நிற்கும் அண்டம் என்பது போன்று, அதற்குள் நிற்பான். ஓர் அண்டத்தை உருவாக்கி அதற்குள் ஒருவனைத் தனியே வைத்தது போன்று இருப்பான்.

வ்யாக்யானம் - இப்படி ஜலபரமாணுக்களிலே வ்யாபித்துவிடுமித்தனையோ என்னில், (நிலவிசும்பு ஒழிவற) பூம்யந்தரிக்ஷங்களிலும் அப்படியே. இவை மூன்றும் அஞ்சுக்குள் உபலக்ஷணமாய், அஞ்சாலும் ஆரப்தமான அண்டத்தளவும் நினைத்து, மேல் கார்யமான பதார்த்தங்களில் வ்யாபித்திருக்கும்படி சொல்லுகிறது. (கரந்த சிலிடந்தொறும்) இமையோடு இமை பொருந்தும் போதைக் காற்றிலே முடியும்படியான ஸூக்ஷ்மமான அல்பசரீரங்கள்தோறும். (இடந்திகழ் பொருள்தொறும்) அவ்வவ சரீரங்களிலே ஜ்ஞாநாநந்த லக்ஷணமாய்க் கொண்டு மிளிருகிற ஆத்மாக்கள் தோறும்.

விளக்கம் - ஆனால் இவ்விதம் தண்ணீரில் உள்ள அணுக்களில் மட்டுமே நிறைந்து நிற்பானோ என்றால், இதற்கு விடை அளிக்கிறார். (நிலவிசும்பு ஒழிவற) – பூமி மற்றும் ஆகாயத்திலும் அப்படியே நிற்கிறான். பூமி, ஆகாயம், நீர் என்பது ஐந்து பூதங்களுக்கும் சேர்த்தே கூறப்பட்டது என்று கொள்ளவேண்டும். ஆக பஞ்சபூதங்களால் ஆகிய அண்டத்தைக் கூறினார். அடுத்து அந்தந்த பூதங்களின் செயல்பாடுகளால் உண்டான பொருள்களில் எம்பெருமான் வ்யாபித்துள்ளதை அருளிச்செய்கிறார். (கரந்த சிலிடந்தொறும்) - கண்ணின் இமையோடு இமை மூடிக் கொள்கின்றபோது காற்று எழும் அல்லவா? அந்தக் காற்றின் வேகத்தில் பறக்கக்கூடிய அளவு கொண்ட சிறுதூசி எனப்படும்படியாக இருக்கும் சரீரங்களிலும் வ்யாபிப்பவன். (இடந்திகழ் பொருள்தொறும்) – அந்த சரீரங்களில் ஞானம் மற்றும் ஆனந்தத்துடன் ஒளிர்கின்ற ஆத்மாக்கள் ஒவ்வொன்றிலும்.

வ்யாக்யானம் - (கரந்து) வ்யாப்ய பதார்த்தங்களுக்குத் தெரியாதபடி, அந்யைரத்ருஷ்டனாய். (எங்கும் பரந்துளன்) சேதனன் சரீரத்திலே வ்யாபிக்கும்போது அதில் ஏகதேஸத்திலே நின்று ஜ்ஞாநத்தாலே எங்கும் வ்யாபிக்கக் கடவனாயிருக்கும்; அவன் அங்ஙனன்றிக்கே ஸ்வரூபத்தாலே எங்கும் வ்யாபித்திருக்கும் விபுத்வத்தை அவனுக்குச் சொல்லி, அணுத்வத்தை இவனுக்குச் சொல்லி, இதுக்குள்ளே அவன் குறைவற வ்யாபித்திருக்கும் என்றால் அது கூடுமோவென்னில், (இவையுண்ட கரனே) சிறு

வடிவைக் கொண்டு பெரியவற்றையெல்லாம் தன் வயிற்றிலே வைத்தால் "தயிருண்ட பொன் வயிறு இவ்வேழுலகுமுண்டும் இடமுடைத்தால்" என்கிறபடியே பின்னையும் அவ்வயிறே இடமுடைத்தாம்படி இருக்கவல்ல ஸர்வசக்தி, சிறியவற்றிலே குறைவற இருக்கமாட்டானோ என்கிறார். (கரன்) இப்படி ஸுத்ருட ப்ரமாணஸித்தன். "இவை யுண்ட கரன் பரந்த தண் பரவையுள் நீர்தொறும் பரந்த அண்டமிதெனப் பரந்துளன், நிலவிசும்பொழிவறப் பரந்துளன், கரந்த சில இடந்தொறும் இடந்திகழ்பொருள்தொறும் எங்கும் கரந்து பரந்துள்ளன்" என்று அந்வயம்.

விளக்கம் - (கரந்து) - தான் நிறைந்துள்ள பொருளுக்கே தான் அங்கு உள்ளது தெரியாதபடி மறைந்து நின்று. (எங்கும் பரந்துளன்) – உயிர் உடலில் நிறையும்போது அந்த உயிர் அந்த உடலில் ஓர் இடத்தில் மட்டுமே இருந்தாலும், ஞானத்தால் உடல் முழுவதிலும் நிறைந்திருக்கும். அது போன்று அல்லாமல், எம்பெருமான் தனது ஸ்வரூபத்தால் எங்கும் நிறைந்து நிற்பவன். ஆனால் எங்கும் உள்ளதை எம்பெருமானுக்குக் கூறி, அணுவின் தன்மையை ஜீவனுக்குக் கூறி, அந்த ஜீவனுக்குள் எம்பெருமான் குறைவற்று நிறைந்து இருப்பான் என்பது இயலுமா என்றால், இதற்கான விடையை அருளிச் செய்கிறார். (இவையுண்ட கரனே) – சிறிய உருவத்தைக் கொண்டு பெரியதாக உள்ள பலவற்றையும் தனது திருவயிற்றில் கொண்டாலும், பெரியதிருமொழி (11-5-3) - தயிருண்ட பொன் வயிறு இவ்வேழுலகுமுண்டும் இடமுடைத்தால் - என்னும்படி அந்தச் சிறிய வயிற்றில் இன்னமும் வைப்பதற்கு இடம் உள்ளபடி இருக்கின்ற சக்தி படைத்தவன். இப்படி இருக்கின்ற எம்பெருமான் சிறிய ஆத்மாவில் குறைவில்லாமல் இருக்கமாட்டானோ? (கரன்) - இவ்விதம் உறுதியான ப்ரமாணங்களால் கூறப்பட்டவன். இந்தப் பாசுரத்தின் பதங்களை "இவை யுண்ட கரன் பரந்த தண் பரவையுள் நீர்தொறும் பரந்த அண்டமிதெனப் பரந்துளன், நிலவிசும்பொழிவறப் பரந்துளன், கரந்த சில இடந்தொறும் இடந்திகழ்பொருள்தொறும் எங்கும் கரந்து பரந்துள்ளன்" என்று வரிசைப்படுத்திப் படிக்கவேண்டும்.

11. கடவிசும் பெரிவளி நீர்நில மிவைமிசை
வரனவில் திறல்வலி யளிபொறை யாய்நின்ற
பரனடி மேல் குருகூர்ச் சடகோபன் சொல்
நிரனிறை யாயிரத் திவை பத்தும் வீடே.

பொருள் - திடமன ஆகாயம், நெருப்பு, காற்று, நீர், பூமி ஆகியவற்றின் ஸ்வபாவமாக உள்ள ஓசை, தாஹகத்வம், பலம், குளிர்ச்சி மற்றும் பொறுமை ஆகியவையாக நின்ற ஸர்வேச்வரனின் திருவடிகள் மீது – திருக்குருகூரில் அவதரித்த நம்மாழ்வார் அருளிச்செய்த ஒன்றுக்கொன்று இசைகின்ற ஆயிரம் பாசுரங்களில் இந்தப் பத்து பாசுரங்களும் பரம்பதத்தை அளிக்கக்கூடியவை ஆகும்.

அவதாரிகை - நிகமத்தில் முதற்பாட்டிலே கல்யாணகுணயோகத்தையும், நித்ய விபூதியோகத்தையும் விக்ரஹவைலக்ஷண்யத்தையும் சொல்லி, இரண்டாம் பாட்டில் இவற்றுக்கு ஆச்ரயமான திவ்யாத்ம ஸ்வரூபம் சேதநாசேதந விலக்ஷணம் என்று, மூன்றாம் பாட்டிலே நித்யவிபூதியோபாதி ததீயத்வாகாரத்தாலே அவனுக்கு அந்தரங்கமாய்த் தோற்றுகிற லீலாவிபூதியோகத்தை அநுபவித்தார்; நாலாம் பாட்டிலே அந்த லீலாவிபூதியினுடைய ஸ்வரூபம் அவனதீநம் என்றார்; அஞ்சாம் பாட்டிலே அதினுடைய ஸ்திதியும் அவனதீனை என்றார்; ஆறாம் பாட்டிலே ப்ரவ்ருத்தி நிவ்ருத்தியும் பகவததீநம் என்றார்; ஏழாம் பாட்டிலே சரீரசரீரிகளுக்குண்டான லக்ஷணம் ஜகத்துக்கும் ஈச்வரனுக்கும் உண்டாகையாலே, இதுக்கும் அவனுக்கும் சொன்ன ஐக்யத்துக்கு நிபந்தநம் சரீராத்மபாவம் என்றார்; எட்டாம் பாட்டிலே குத்ருஷ்டிகளை நிரஸித்தார்; ஒன்பதாம் பாட்டிலே சூந்யவாதியை நிரஸித்தார்; பத்தாம் பாட்டிலே வ்யாப்திஸௌகர்யத்தை அருளிச்செய்தார்; இப்படிகளாலே அவனுடைய பரத்வத்தை நிஷ்கர்ஷித்தாராய் நின்றார் கீழ். இத்திருவாய்மொழியில் அந்வயித்தவர்களுக்குத் தாம் பெற்ற பேறே பேறேனு மிடத்தை அருளிச்செய்கிறார்.

விளக்கம் – முதல் பாசுரத்தில் எம்பெருமானுடைய திருக்கல்யாணகுணச்சேர்க்கை, நித்ய விபூதி கொண்ட தன்மை, விக்ரஹ வேறுபாடு போன்ற தன்மை ஆகியவற்றைக் கூறினார். இரண்டாம் பாசுரத்தில் அண்டும்படியாக உள்ள ஸர்வேச்வரன் உயிர்பொருள், உயிரற்ற பொருள் ஆகியவற்றைக் காட்டிலும் வேறுபட்ட தன்மை உடையவன் என்றார். மூன்றாம் பாசுரத்தில் பரமபதம் போன்று அவனுக்கு உரிமை கொண்ட தன்மையால் அவனுடைய அந்தரங்கமான லீலாவிபூதியின் சேர்க்கையைக் கூறினார். நான்காம் பாசுரத்தில் லீலா விபூதியில் உள்ள அனைத்தும் அவன் வசப்பட்டவை என்றார். ஐந்தாம் பாசுரத்தில் லீலா விபூதியின் இருப்பு என்பது அவன் வசப்பட்டது என்றார். ஆறாம் பாசுரத்தில் கர்மம் நிகழ்வதும், நிகழாமல் இருப்பதும் அவன் வசப்பட்டது என்றார். ஏழாம் பாசுரத்தில்

உடலுக்கும் ஆத்மாவுக்கும் உள்ள தொடர்பின் தன்மை, உலகிற்கும் எம்பெருமானுக்கும் உண்டு என்பதால், உலகிற்கும் எம்பெருமானுக்கும் கூறப்பட்ட ஐக்யத்தின் காரணம் சரீர ஆத்ம பாவம் என்றார். எட்டாம் பாசுரத்தில் குத்ருஷ்டிகளைத் தள்ளினார். ஒன்பதாம் பாசுரத்தில் சூர்யவாதியைத் தள்ளினார். பத்தாம் பாசுரத்தில் வ்யாப்தி ஸௌகர்யம் கூறினார். இப்படியாக எம்பெருமானின் பரத்வத்தை உறுதியாகக் கூறினார். இந்தத் திருவாய்மொழியில் தொடர்பு உடையவர்கள், தான் பெற்ற பேறே பெறுவர் என்று அருளிச் செய்கிறார்.

வ்யாக்யானம் - (கரவிசும்பு) கரமான விசும்பு; த்ருடமான விசும்பு என்றபடி. அன்றியே (கரவிசும்பு) கரந்த விசும்பு. அச்சமான விசும்பு என்னுதல். அத்ர க்ருத்ர: பததி என்று நிரூபிக்க வேண்டும்படியாயிருக்குமிறே. (எரி) தேஜஸ் தத்வம். (வளி) காற்று. (நீர்) ஜலம். (நிலம்) பூமி. (இவைமிசை) இவற்றின் மேலே உண்டான. (வரன்) வரனான – ச்ரேஷ்டமான. (நவில்...) வரிஷ்டமான சப்தம், அக்நியினுடைய தாஹகத்வசக்தி, காற்றினுடைய மிடுக்கு, ஜலத்தினுடைய தண்ணளி, பூமியினுடைய பொறை இப்படி ஸஸ்வபாவமான பூதபஞ்சகங்களையும் சொல்லி, இத்தாலே லீலாவிபூதியைச் சொல்லிற்றாய், ரஜஸ் தமஸ்ஸுக்களைக் கழித்து நிஷ்க்ருஷ்ட ஸத்வமேயாய் இருக்குமிறே நித்யவிபூதி; அதுக்கு இதுதானே உபலக்ஷணமாய், ஆக உபயவிபூதி யுக்தனாயிருக்கிற ஸர்வஸ்மாத்பரன் திருவடிகளிலே (இவை பத்தும் பரனடி மேல் வீடு) அவன் திருவடிகளிலே விடப்பட்டன – ஸமர்ப்பிக்கப்பட்டன. (குருகூர்ச்சடகோபன்) வால்மீகிர் பகவாந் ருஷி: என்னுமாபோலே ஆப்திக்கு உடலாக அருளிச்செய்கிறார்.

விளக்கம் – (கரவிசும்பு) உறுதியான ஆகாயம் அல்லது அச்சமான ஆகாயம் எனலாம். அச்சமான ஆகாயம் என்று ஏன் கூறினார்? இங்கு கழுகு பறக்கிறது என்று நிரூபிக்கபட வேண்டும்படியாக பெரிதாக உள்ளதால் ஆகும். (எரி) – தேஜஸ். (வளி) – காற்று; (நீர்) – தண்ணீர்; (நிலம்) - பூமி; (இவைமிசை) – இவற்றின் மீது உண்டான; (வரன்) - சிறந்த; (நவில்...) – ஓசை. அதாவது அக்னியின் சீறும் சக்தி, காற்றின் மிடுக்கு, நீரின் குளிர்ச்சி, பூமியின் பொறுமை ஆகியவற்றை ஸ்வபாவமாகக் கொண்ட பஞ்சபூதங்களைக் கூறி, அதனால் ரஜஸ், தமஸ் ஆகிய குணங்கள் நீங்கி, தூய்மையாக நித்யவிபூதி இருப்பதால் அதனையும் இங்கே கொள்ளலாம். இப்படியாக இரண்டு விபூதிகள் கூடிய திருவடிகளைக் குறித்து. (இவை பத்தும் பரனடி மேல் வீடு) - அவன் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டன.

(குருகூர்ச் சடகோபன்) – வால்மீகிர் பகவாந் ருஷி: - என்பது போன்று ஆப்திக்கு உடலாக அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் - நிரல் நிறை என்னுதல், நிரன் நிறை என்னுதல், நிரல் நிறை என்றபோது - சப்தங்களும் நிறைந்து அர்த்தங்களும் புஷ்கலமாயிருக்கை. நிரன் நிறை என்றபோது – நேரே நிறுத்தப்படுகை. ப்ரமாணைஸ்த்ரிபிரந்விதம் பாதபத்தோக்ஷர ஸமஸ்தந்த்ரீ லயஸமந்வித: என்கிறபடியே லக்ஷணங்களிற் குறையாமே எழுத்தும் சொல்லும் பொருளும் அந்தாதியும் க்ரமத்திலே நிறுத்தப்படுகை.

விளக்கம் - சொற்களும் பொருள்களும் நிறைவாக இருத்தல். இதனை நிறல் நிறல் என்று எடுத்துக்கொண்டால் நேராக நிறுத்தப்படுதல் என்பதாகும் இராமாயணம் - ப்ரமாணைஸ்த்ரிபிரந்விதம் பாதபத்தோக்ஷர ஸமஸ்தந்த்ரீ லயஸமந்வித: - நான்கு அடிகள் கொண்டதாகவும், ஒவ்வொரு அடியில் உள்ள எழுத்துக்களும் ஒத்ததாகவும், வீணையின் நாதம் அதற்கு ஏற்றதாக இருக்கின்ற இராமாயணம். இங்கு எழுத்து, சொல், பொருள் அந்தாதி ஆகியவை சரியாக நிறுத்தப்படுகின்றன.

வ்யாக்யானம் – (ஆயிரம்) காவ்யம் ராமாயணம் க்ருத்ஸ்நமீத்ருசை: கரவாண்யஹம் என்னுமாபோலே. மயர்வற மதிநலமருளிப் பெற்றவராகையாலே, மேலுள்ள தடையத் தோற்றா நின்றது. வாச: க்ரமவர்த்தித்வாத் அடைவே சொல்லுமத்தனையாகையாலே "ஆயிரம்" என்கிறது. அன்றிக்கே, ஆயிரமும் சொல்லியல்லது நிற்கவொண்ணாத விஷய ஸ்வபாவத்தாலே சொல்லுகிறாராதல். (இவை பத்தும் வீடே) இவை பத்தும் பரனடிமேல் விடப்பட்டனவென்னுதல்; அன்றிக்கே "இச்செய்யடைய நெல்" என்றால் நெல்லை விளக்குமதென்று காட்டுமாபோலே, இவை பத்தும் வீடென்றது – வீட்டை விளைக்கு மென்றபடியாய், மோக்ஷப்ரதமென்கிறாராதல்.

விளக்கம் – (ஆயிரம்) இரமாயணம் – காவ்யம் ராமாயணம் க்ருத்ஸ்நமீத்ருசை: கரவாண்யஹம் – நான்முகனின் அருள் பெற்ற வால்மீகீ இராமாயணத்தை நான் செய்யக் கடவேன் - என்று கூறியது போன்று, மயர்வற மதிநலம் அருளப் பெற்றதால் இவர்க்கு மேலே கண்ட அனைத்தும் வெளிப்பட்டது. தனது அனுபவங்கள் அனைத்தையும் கூற இயலாது என்பதால், கூறுவதை ஒன்றன்பின் ஒன்றாகக் கூற வேண்டும் என்பதால்,

ஆயிரம் என்றார். அல்லது ஆயிரமும் சொன்னால் அல்லாமல் நிற்க ஒண்ணாத பொருளின் தன்மை காரணமாக ஆயிரம் என்றார். (இவை பத்தும் வீடே) – இவை பத்தும் பரமாத்மாவின் திருவடியில் சமர்ப்பிக்கப்பட்டன. "இச்செய்யடைய நெல்" என்றால் நெல்லை விளக்கும் என்பது போன்று, "இவை பத்தும் வீடு" என்றால் மோக்ஷம் அளிக்கும் என்றும் கூறலாம்.

வ்யாக்யானம் - பகவத்ப்ரஸாதத்தாலே தமக்கு பரத்வஜ்ஞாநம் பிறந்தபடியையும், அந்த ஜ்ஞாநத்துக்குப் பலன் மோக்ஷம் என்னுமிடத்தையும், இப்ரபந்தத்தில் ஏதேனும் ஒருபடி அந்வயமுடையார்க்கும் பலம் நம்முடைய பலமென்னுமிடத்தையும் அருளிச்செய்கிறார்.

விளக்கம் – ஆக எம்பெருமானின் திருவருளால் தனக்குப் பரதத்வ ஞானம் பிறந்ததையும், அந்த ஞானத்தின் பலன் மோக்ஷம் என்பதையும், இந்தத் திருவாய்மொழியில் ஏதேனும் ஒன்றில் தொடர்பு கொண்டிருந்தாலும் அவர்கள் பெறும் பலன், தான் பெறும் பலன் என்பதையும் அருளிச்செய்தார்.

முதற்பத்தில் முதல் திருவாய்மொழி ஸம்பூர்ணம்

முதற்பத்தில் இரண்டாம் திருவாய்மொழி
வீடுமின் - அவதாரிகை

மூலம் - தத்வபரமாயும் உபாஸநபரமாயுமிறே மோக்ஷ சாஸ்த்ரந்தானிருப்பது; அதில் தத்வபரமாகச் சொல்ல வேண்டுவதெல்லாம் சொல்லிற்று கீழில் திருவாய்மொழியிலே; உபாஸநபரமாகச் சொல்லவேண்டுமவற்றுக்கொல்லாம் ஸங்ரஹமாயிருக்கிறது இத் திருவாய்மொழி. இத்திருவாய்மொழிதன்னை, ஆளவந்தார் அருளிச்செய்தாராகத் திருமாலையாண்டான் ப்ரபத்தி விஷயமாக்கி நிர்வஹித்து கொண்டு போந்து, எம்பெருமானாரும் அப்படியே அருளிச்செய்து கொண்டு போந்து, பாஷ்யம் தலைக்கட்டின பின்பு பக்தி விஷயமாக அருளிச்செய்து கொண்டு போருவர்; பின்பு எம்பாரும் அப்படியே அருளிச்செய்தார்.

விளக்கம் – மோக்ஷ சாஸ்த்ரமான ப்ரஹ்மசூத்திரம் ஸர்வேச்வரனின் தன்மைகள் குறித்து இரண்டு அத்தியாயங்களிலும் அவனை அடையும் வழி குறித்து இரண்டு அத்தியாயங்களிலும் இரு பகுதிகளாகக் கூறுகிறது. இவற்றில் எம்பெருமானைப் பற்றிக் கூற வேண்டிய அனைத்தையும் கடந்த திருவாய்மொழியில் அருளிச்செய்தார். அவனை அடையவேண்டிய வழிகள் குறித்துச் சுருக்கமாக இந்தத் திருவாய்மொழியில் அருளிச் செய்கிறார். அந்த உபாயம் என்னவென்றால் – இந்தத் திருவாய்மொழி ஆளவந்தார் ப்ரபத்தி உபாயமாகக் கொள்வார் என்று திருமாலையாண்டான் கூறுவார். எம்பெருமானாரும் அப்படியே அருளிச்செய்து கொண்டு ஸ்ரீபாஷ்யம் முடித்த அளவில் இதனை ஸாத்ய பக்தி விஷயமாக அருளிச்செய்தார். (ப்ரபத்தி என்பது வேதங்களில் உள்ள மிகவும் ரகசியமான உபாயம் என்பதால் அதனை அனைவருக்கும் வெளியிடக்கூடாது என்று திருவுள்ளம் பற்றி ப்ரபத்தியின் அங்கமாக அருளிச்செய்தார்). அவரைத் தொடர்ந்து எம்பாரும் இந்தத் திருவாய்மொழியை பக்தி விஷயமாகவே அருளிச்செய்தார்.

மூலம் - இவருடைய பக்திப்ரபத்திகள்தான் விகல்பிக்கலாயிறேயிருப்பது. “மயர்வறமதிநலமருளினன்” என்று இவர் தாம் பெற்றது பக்திரூபாபந்ந ஜ்ஞாநமாயிருந்தது; தாம் பெற்றது ஒன்று பிறர்க்கு உபதேசிப்பது ஒன்றுமாக வொண்ணாதே; அப்போது விப்ரலம்பக்கோடியிலேயாவரே. உபயபரிகர்மிதஸ்வாந்தஸ்ய என்கிறபடியே கர்மஜ்ஞாந ஸம்ஸ்க்ருதாந்த:கரணனுக்குப் பிறக்குமதிறே பரபக்தி; அந்த ஜ்ஞாநகர்மங்களினுடைய ஸ்தாநே பகவத்ப்ரஸாதமாய், அதடியாக அநந்தரம் விளைந்ததிறே இவருடைய பக்திதான்.

விளக்கம் – இங்கு ஒரு கேள்வி எழலாம் – ஒன்று பக்தி விஷயமாகக் கூறவேண்டும் அல்லது ப்ரபத்தி விஷயமாகக் கூறவேண்டும். இரண்டையும் விடுத்து, அவரவர்கள் நினைத்தபடி இந்தத் திருவாய்மொழிக்குப் பொருள் கூறுதல் சரியா? ஆழ்வாருக்குப் பக்தியும் ப்ரபத்தியும் வேறுபாடு இல்லாமல் உள்ளதைக் கணலாம், எம்பெருமானின் திருவுள்ளமே உபாயம் என்று கூறுவதைப் பார்த்தால் இவருக்கு ப்ரபத்தியே உள்ளது, பக்தி இல்லை எனலாம். எம்பெருமானின் பிரிவைத் தாங்க இயலாமல் ப்ரபத்தி செய்யும் ஆழ்வாரைக் கண்டால் இவருக்குப் பக்தியே உள்ளது, ப்ரபத்தி இல்லை எனலாம். இங்கு இவர் அருளிச்செய்வது எந்தவிதமான பக்தி என்று ஒரு கேள்விஎழலாம் (பக்தி = ஸாத்யபக்தி, ஸாதநபக்தி; ஸாதனபக்தி என்றால் மோக்ஷத்தினை அடைவதற்கு

உபாயமாகப் பக்தியை கொள்ளுதல்; ஸாத்யபக்தி என்றால் எம்பெருமானை உபாயமாகக் கொண்டு அதனால் கிட்டும் பலனான பக்தி) . மயர்வற மதிநலம் அருளினன் என்று ஆழ்வார் பெற்றது பக்தியின் நிலையை அடைந்த ஞானம் என்பதால் ஸாத்யபக்தியே ஆகும். ஆனால் இங்கு இவர் அருளிச்செய்வது ஆளவந்தார் முதலானவர்கள் கருத்தின்படி ஸாதனபக்தியாகும். அப்படி என்றால், தான் பெற்றது ஒன்று (ஸாத்யபக்தி) மற்றவர்களுக்கு உபதேசிப்பது வேறு ஒன்று (ஸாதநபக்தி) என ஆகிறது; அப்படி என்றால், உள்ளதை உள்ளவாறு கூறாமல் வேறு பொருள் உரைக்கின்ற விப்ரலம்பகர் ஆவார் அல்லாவோ? எனவே இங்கு ஸாத்யபக்தியே கூறுகிறார் என்று அமைகிறது. ஆனால் பக்தி என்பது ஆளவந்தார் அருளிச்செய்த ஆத்மஸித்தி என்பதன்படி – உபயபரிகர்மிதஸ்வாந்தஸ்ய – கர்மம் மற்றும் ஞானம் ஆகியவற்றால் அலங்கரிக்கப்பட்ட மனம் கொண்டவனுக்கு – என்னும்படி, கர்ம ஞானங்களால் தூய்மையானவனுக்கு மட்டுமே பக்தி என்பது உண்டாகும். சரி, ஆழ்வாருக்கு இப்படிப்பட்ட பக்தி எவ்விதம் உண்டானது? ஆழ்வாருக்குக் கர்ம ஞானங்களுக்குப் பதிலாக ஸர்வேச்வரனின் திருவருள் நின்றது; அதன் விளைவாக அவருக்குப் பக்தி உண்டானது.

மூலம் - இதுதான் வேதாந்த விஹிதையான பக்திதானேயானாலோவென்னில், ஸர்வேச்வரனருள இவர் பெற்றாராகிற ஏற்றம் போம்; அபசூத்ராதிகரண ந்யாயமும் ப்ரஸங்கிக்கும். ஆனபின்பு தாம் பெற்றத்தையே பிறர்க்கு உபதேசிக்கிறாராக அமையும். கீழில் திருவாய்மொழியிலே அவனுடைய பரத்வத்தை அநுபவித்து ஒரு பெரிய திருநாள் போலேயிறே போந்தது; இவர் இப்போது நெஞ்சொழிந்திருந்து பிறர்க்கு உபதேசிக்கிறபடி எங்ஙனேதான்? தாம் அநுபவித்த விஷயத்தை எல்லை கண்டோ, அன்றிக்கே தாம் அவ்விஷயத்தில் விரக்தராயோ என்னில்; விஷயமோவென்றால், "தனக்கும் தன் தன்மை அறிவறியான்" என்கிறபடியே அபரிச்சிந்த விஷயம்; கொள்ளமாளா இன்பவெள்ளமிறே. இனி, தம் அபிநிவேசமோவென்றால், "காதல் கடலின் மிகப்பெரிதால்" என்றும், "மண்திணி ஞாலமும் ஏழ் கடலும் நீள்விசும்பும் கழியப்பெரிதால்" என்றும், "சூழ்ந்ததனிற் பெரிய என்னவா" என்னும்படி பெருகியிருந்தது. ஆகிலும் ஒருகால் அபிநிவேசம் பிறந்தால் அப்படிப்பட்ட விஷயந்தானே காலாந்தரத்திலே விரக்தி பிறக்கக் காணா நின்றோம்; அப்படியே, சிலகாலம் அநுபவித்துப் பின்பு விரக்தி பிறந்ததோவென்னில்; அங்ஙனும் சொல்லவொண்ணாது; "எப்பொழுதும் நாள் திங்களாண்டூழியூழிதொறும் அப்பொழுதைக்கப்பொழுதென் ஆராவமுதம்" என்னும்படி நித்யாபூர்வமாயிருக்கும். இனி

ஆசார்யபதம் நிர்வஹிக்கைக்காக அன்று; க்யாதிலாப பூஜைகளுக்காக அன்று; ப்ரப்ரூயாத் என்றொரு விதி பரதந்த்ரராயன்று.

விளக்கம் – வேதாந்தங்களில் கூறப்பட்ட பக்தி இதுதானே என்றால், ஸர்வேச்வரனின் திருவருள் மூலமாகவே இவர் பக்தியை அடைந்தார் என்ற பெருமை நீங்கிவிடும்; மேலும், ப்ரஹ்மஸூத்திரத்தின் அபசூத்ராதிகரணம் கூறுகின்ற ஸிந்தாந்தம் முரணாகிவிடும் (இந்த அதிகரணம், நான்காம் வர்ணத்தினர் ஸாதநபக்தியைக் கைக்கொள்வதைத் தடுக்கிறது). ஆகவே இவ்விதம் கூற இயலாது. எனவே, தான் பெற்றதையே (ஸாத்யபக்தி) மற்றவர்களுக்கும் உபதேசிக்கிறார் என்று அமைகிறது. கடந்த திருவாய்மொழியில் எம்பெருமானுடைய பரத்வத்தை இவர் அனுபவிக்க ஒரு பெரியதிருநாள் போன்று காலம் கழிந்தது. ஆனால் இப்போது, தன்னுடைய உள்ளத்தை விட்டு மற்றவர்களுக்கு உபதேசம் செய்வதற்கு என்ன காரணம்? தான் அனுபவித்த விஷயத்தின் எல்லையைக் கண்டதன் காரணமாகவா? அல்லது அவ்விஷயத்தில் ஆசையற்றுப் போனதாலா? தான் முழுவதுமாக அறிந்த பொருள் என்றால், திருவாய்மொழி (8-4-6) – தனக்கும் தன் தன்மை அறிவறியான் – என்னும்படி அளவிற்கு அப்பாற்பட்ட பொருளாக அவன் உள்ளான். திருவாய்மொழி (4-7-2) – கொள்ளமாலா – என்பதும் காண்க. ஆக, அந்தப் பொருளின் எல்லையைக் கண்டதன் காரணமாக இவர் மற்றவர்களுக்கு உபதேசம் செய்யத் தொடங்கவில்லை என்றாகிறது. அப்படி என்றால், அந்தப் பொருளின் மீது ஆசையற்ற காரணத்தால் இவர் மற்றவர்களுக்கு உபதேசம் செய்யத் தொடங்கினாரா என்றால், திருவாய்மொழி (7-3-2) - காதல் கடலின் மிகப்பெரிதால் – என்றும், திருவாய்மொழி (7-3-8) – மண்திணி ஞாலமும் ஏழ் கடலும் நீள்விசும்பும் கழியப்பெரிதால் - என்றும், திருவாய்மொழி (10-10-10) – சூழ்ந்ததனிற் பெரிய என்னவா –என்னும்படி இவருக்கு அவன் மீது எப்போதும் ஆசை பெருகியே நின்றது. ஒரு பொருள் மீது ஒரு காலகட்டத்தில் ஆசை பிறந்தாலும், அந்த விஷயமே மற்றோரு காலகட்டத்தில் ஆசை நீங்கும்படி உள்ளதைக் காண்கிறோம். இவரும் எம்பெருமானைச் சிலகாலம் அனுபவித்து, அதன் பின்னர் அவன் மீது உள்ள ஆசை நீங்கப் பெற்றாரா? அப்படியும் கூற இயலாது; காரணம் திருவாய்மொழி (2-5-4) – எப்பொழுதும் நாள் திங்களாண்டூழியூழிதொறும் அப்பொழுதைக்கப்பொழுதென் ஆராவமுதம் – என்னும்படி இவர் அவன் மீது கொள்ளும் ஆசை எப்போதும் புதிதாகவே உள்ளது. மற்றவர்களுக்குத் தான் ஆசார்யனாக இருக்கவேண்டும் என்று ஆசார்யபதம் நிர்வஹிக்க எண்ணியே மற்றவர்களுக்கு உபதேசித்தார் என்றும் கூற இயலாது (ஏப்படி

இதனைக் கூற இயலும் என்றால்: "நீசனேன் நிறைவொன்றுமிலேன்" என்று தன்னைத் தாழ்வாகவே இவர் எண்ணுகிறார்; "கொள்ளென்று கிளர்ந்தெழுந்த பெருஞ்செல்வம் நெருப்பாக" என்று அவர்களது தக்ஷிணையைத் தனக்கு ஏற்றதாக இல்லை என அறிவிக்கிறார்; "ஓதவல்ல பிராக்கள்" என்று அவர்களையும் தனது எஜமானர்களாகவே எண்ணுகிறார்). புகழ், பொருள், பூஜை ஆகியவற்றை எண்ணியும் மற்றவர்களுக்கு உபதேசிக்கவில்லை. முண்டக உபநிஷத் (1-2-13) - ப்ரப்ருயாத் – குருகுலவாசம் செய்யாதவனுக்கு உபதேசிக்கக் கூடாது – என்னும்படி இருக்கின்ற விதிக்குக் கட்டுப்பட்டு மற்றவர்களுக்கு உபதேசித்தாரா என்றால் அதுவும் இல்லை.

மூலம் - ஆனால் இது பின்னை எத்தாலேயாவது என்னில்; ஸ்வாநுபவ ப்ரகர்ஷமிருக்கிறபடி. தாம் அநுபவித்த விஷயம் தனியே அநுபவிக்குமதன்றிக்கே இருந்தது; இனி, நமக்கு போதயந்த: பரஸ்பரத்துக்கு ஆளாவார் ஆர் என்று ஸம்ஸாரிகள் பக்கலிலே கண்வைத்தார்; தாம் பகவத் விஷயத்திலே ப்ரவணராயிருக்கிறார்போலே அவர்கள் சப்தாதி விஷயங்களிலே ப்ரவணராயிருந்தார்கள்; இவர்களநர்த்தம் பரிஹரித்தல்லது நிற்கவொண்ணாதாயிருந்தது; "ஒருவனுக்கு வைஷ்ணவத்வம் உண்டு, இல்லை என்னுமிடம் தனக்கே தெரியுங்காண்" என்று ஜீயர் பலகாலும் அருளிச்செய்வர் - பிறரநர்த்தம் கண்டால், "ஐயோ!" என்றிருந்தானாகில் "நமக்கு பகவத் ஸம்பந்தம் உண்டு" என்றிருக்க அடுக்கும்; "இத்தனையும் பட்டிடுவானுக்கு" என்றிருந்தானாகில் நமக்கு பகவத் ஸம்பந்தமில்லை என்றிருக்க அடுக்கும் – என்று.

விளக்கம் – ஆக என்ன காரணத்தால் உபதேசித்தார்? தான் அனுபவித்த பொருளில் மிகுந்த இன்பம் இருக்கின்ற காரணத்தினால் உபதேசித்தார். அந்தப் பொருள் தனியே அனுபவிக்கும்படியாக இல்லை. ஆகவே இதனை நாம் அனுபவிக்க நமக்குத் துணையாக இருப்பவர்கள் யார் என்று ஸம்ஸாரிகள் பக்கம் பார்த்தார். தான் பகவத் விஷயத்தில் உயிராக இருப்பது போன்று இவர்கள் உலகவிஷயங்களில் உயிராக இருந்ததைக் கண்டார். அவர்களது இந்தக் கேவலமான நிலையை பரிஹரித்து நீக்கினால் அல்லது தனக்குத் தாங்காது என்று எண்ணினார். இங்கு ஒரு கேள்வி எழலாம். இவர் எம்பெருமானிடம் ஈடுபாடு கொண்டபடி உள்ளார்; அப்படி உள்ளபோது மற்றவர்களைப் பற்றிய கவலை இவருக்கு எதற்கு, அவர்களை ஏன் பரிஹரிக்கவேண்டும்? இதற்கு விடை அருளிச்செய்கிறார். நஞ்சீயர், "ஒருவனுக்கு வைஷ்ணவம் உண்டா இல்லைய என்பது

வெளிப்படையாகத் தெரிந்துவிடும்", என்பார். எப்படி? அதாவது மற்றவர்களின் துன்பத்தைக் கண்டவுடன், "ஐயோ" என்று இரங்கினால் அவன் தனது மனதில், "நமக்கு பகவத் ஸம்பந்தம் உண்டு", என்று இருப்பது பொருத்தமே ஆகும். மாறாக, "இத்தனை துன்பம் அவனுக்கு வேண்டும்", என்று எண்ணினால், தனக்குப் பகவத் ஸம்பந்தம் இல்லை என அவன் எண்ணிக் கொள்ளலாம்.

மூலம் - இவர்களை இவர் மீட்கப் பார்க்கிற வழிதான் என்னென்னில்; இவர்கள் சேதநராயிருந்தார்கள்; சப்தாதி விஷயங்களில் வாசியறிந்து, தீயவை கழித்து, நல்லவை பற்றிப் போருகிறதொன்று உண்டாயிருந்தது. அவற்றினுடைய ஹேயதையையும், ஸர்வேச்வரனுடைய உபாதேயதையையும் இவர்களுக்கு அறிவித்தால் அவற்றை விட்டு இவனைப் பற்ற அடுக்குமென்று பார்த்து, ஸர்வேச்வரனுடைய நன்மையையும், இவர்கள் பற்றின விஷயங்கள் அல்பாஸ்திரத்வாதிதோஷதுஷ்டங்கள் என்னுமிடத்தையும் பற்றுமிடத்தில் வரும் அந்தராய பரிஹாரத்தையும், பற்றுமிடத்தில் இன்று புதிதாகச் செய்ய வேண்டுவதொன்றில்லை – பழைய ஸம்பந்தத்தை உணர அமையும் என்னுமிடத்தையும் பற்றுவார்க்கு அநுஸந்திக்கப்படும் மந்த்ரம் இன்னதென்னுமிடத்தையும், அவனுடைய பஜநீயதையையும் அருளிச்செய்யா நின்று கொண்டு, இதர விஷய வைராக்ய பூர்வகமாக பகவத் பக்தியைப் பண்ணி ஆச்ரயியுங்கோள் என்று பரோபதேச ப்ரவ்ருத்தராகிறார்.

விளக்கம் – இவர்களை மீட்பதற்கு செய்கின்ற வழி என்னவென்றால்: இவர்களுக்கு அறிவு உள்ளது; புலன்களின் இன்பங்களில் உள்ள வேறுபாடு அறிந்து, அவற்றில் உள்ள தீயவற்றை நீக்கி, நல்லவற்றைப் பற்றுகின்ற அறிவு உள்ளது; ஆகவே இவர்கள் பற்றுகின்ற பொருள்களின் தாழ்வையும், ஸர்வேச்வரனின் மேன்மையையும் இவர்களுக்கு உணர்த்தினால் போதுமானது. அவற்றை விட்டு இவனைப் பற்ற, இந்த உபதேசமே ஏதுவாகும் என்று எண்ணினார். ஆக, ஸர்வேச்வரனுடைய நன்மையையும், இவர்கள் பற்றியுள்ள உலகவிஷயங்கள் அற்பமானவை மற்றும் நிலையற்றவை என்றும், அவனைப் பற்றும்போது உண்டாகின்ற துயரங்கள் நீங்கும் தன்மையையும், அவனைப் பற்றும்போது புதிதாக ஏதும் செய்யவேண்டியதில்லை பழைய தொடர்பே அமையும் என்பதையும், பற்றுவார்கள் நினைக்கத் தகுந்த மந்திரம் இன்னது என்பதையும், அவனை வணங்கும் தன்மையையும் இந்தத் திருவாய்மொழியில் அருளிச்செய்கிறார். மற்ற பொருள்களில்

வைராக்யத்தைக் கைக்கொண்டு பகவத்பக்தியைச் செய்து அவனை அடையுங்கள் என்று உபதேசம் செய்யத் தொடங்குகிறார்.

வீடுமின் அவதாரிகை ஸம்பூர்ணம்

1-2-1 வீடுமின் முற்றவும் வீடு செய் தும் முயிர்
வீடுடை யானிடை வீடு செய்ம்மினே

பொருள் – உலகவிஷயங்களின் மீது இருக்கின்ற ஆசை முழுவதையும் கைவிடுங்கள். அப்படிச் செய்த பின்னர் உங்களுடைய உயிரைப் பரமபதத்தை உடையவனான எம்பெருமானிடம் சேர்த்துவிடுங்கள்.

அவதாரிகை – இதர விஷயங்களை விட்டு, உங்களுக்கு வகுத்த விஷயத்தைப் பற்றப் பாருங்கோள் என்கிறார்.

விளக்கம் – மற்ற விஷயங்களைக் கைவிட்டு, உங்களுக்காகவே இருக்கின்ற விஷயத்தைப் பிடிக்கப் பாருங்கள் என்று அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் - (வீடுமின்) "வீடுமின்" என்றொரு சொல்லாய்க் கிடக்கவுமாம்; விடுமின் என்றத்தை நீட்டி "வீடுமின்" என்று கிடக்கிறதாகவுமாம். முதலிலே "வீடுமின்" என்பானென் என்னில், சிறு ப்ரஜை, கையிலே ஸர்ப்பத்தைப் பிடித்துக்கொண்டு கிடந்தால், பொகட்டுக்கொடு நிற்கச் சொல்லி, பின்னை "ஸர்ப்பம்" என்பாரைப் போலேயும், ஒருவன் க்ருஹத்துக்குள்ளே கிடந்து உறங்கா நிற்க, நெருப்புப் பற்றிப் புறம்பே எரியா நின்றால் "புறப்பட்டுக்கொள்கிடாய்" என்று பின்பு "நெருப்பு" என்பாரைப் போலவும், முந்துற "விடுங்கோள்" என்கிறார். ஜந்மமரணங்களுக்கு நடுவேயிறே இவை தான் நோவுபடுகிறது. த்யக்த்வா புத்ராம்ச்ச தாராம்ச்ச என்றும், பரித்யக்தா மயா லங்கா என்றும், விடுகை முன்னாகவிறே முன்பு பற்றினவர்களும் பற்றிற்று.

விளக்கம் – (வீடுமின்) – "வீடுமின்" என்பதை ஒரு பன்மையான சொல் என்று கூறலாம். அல்லது, "விடுமின்" என்பது நீட்டப்பட்டு "வீடுமின்" என்று உள்ளதாகக் கொள்ளலாம்.

முதலில் "வீடுமின்" என்பது ஏன்? ஒரு சிறு குழந்தைத் தனது கையில் பாம்பைப் பிடித்துக் கொண்டு நின்றால், அதனை முதலில் பாம்பைக் கீழே போடும்படிக் கூறிவிட்டு, அதன் பின்னர் "பாம்பு" என்று கூறுவர் (அப்போதுதான் அந்தக் குழந்தை பயப்படாமல் இருக்கும்). ஒருவன் தனது வீட்டிற்குள் உறங்கிகொண்டிருக்கும்போது வெளியில் நெருப்பு பிடித்தது என்றால், "வீட்டை விட்டு வெளியே வா", என்று கூறி, அவன் வெளியே வந்த பின்னரே "நெருப்பு" என்று கூறுவார்கள். இது போன்றே இவரும் முதலில், "விடுங்கோள்" என்கிறார். இவர் விடும்படியாகக் கூறும்விதமாக உயிர்களுக்கு இருக்கின்ற தீமை எது என்றால், பிறப்பு இறப்புக்கு நடுவே அல்லவோ இவை துன்பத்தில் உள்ளன! இராமாயணம் யுத்தகாண்டம் (17-4) - த்யக்த்வா புத்ராம்ச்ச தாராம்ச்ச – எனது புத்திரர்களையும் மனைவியையும் கைவிட்டு இராமனைச் சரணம் அடைகிறேன் - என்றும், யுத்தகண்டம் (19-5) - பரித்யக்தா மயா லங்கா – என்னால் விடப்பட்டது இலங்கை – என்றும் கூறுவது போன்று, விடுவது என்பதை அல்லவோ முதலில் பற்றினார்கள்?

வ்யாக்யானம் – "வீடுமின்" என்கிற பன்மையால் சொல்லுகிறது என்னென்னில்; ஒருவன் தாந்தனாய் வந்து நிற்க, அவனுக்கு உபதேசிக்கிறாரன்றே; ஸம்ஸார வெக்காயம் எல்லார்க்கும் ஒத்திருக்கையாலே ஒருவரல்லா ஒருவருக்காகிலும் ருசி பிறக்குமோ என்று எல்லார்க்கும் உபதேசிக்கிறார். எத்தை விடுவதென்னில் (முற்றவும்) சண்டாளர் இருப்பிடத்தை ப்ராஹ்மணர்க்கு ஆக்கும்போது சில கூட்டிச் சில கழித்தன்றே கொள்ளுவது; அப்படியே, அஹங்கார மமகாரங்களாலே தூஷிதமானவற்றிலே, சில கூட்டிக்கொள்ளவொண்ணாதே; ஆகையாலே கட்டடங்க விடுங்கோள் என்கிறார்.

விளக்கம் – "வீடுமின்" என்று ஒரே சொல்லாகப் பன்மையில் கூறுவதன் கருத்து என்ன? அனைத்துப் புலன்களையும் வசப்படுத்திய ஒருவன் ஆழ்வார் முன்பாக வந்து நின்று கேட்க, அவனுக்கு மட்டும் இந்தப் பாசுரங்களை அவர் உபதேசிக்கவில்லை. ஸம்ஸாரவெப்பம் என்பது அனைவருக்கும் பொதுவாகவே இருப்பதால் யாராவது ஒருவருக்காவது பகவத் விஷயத்தின் மீது ருசி பிறக்குமோ என்ற ஆசையில்

உபதேசிக்கிறார். எதனை விடுவது என்ற கேல்விக்கு விடை தருகிறார். (முற்றவும்) – சண்டாளர்களின் இடுப்பிடத்தை அந்தணர்களுக்கு ஆக்கும்போது அங்குள்ள சிலவற்றை எடுத்துக்கொள்வதும், சிலவற்றைக் கழித்துக்கொள்வதும் செய்யமாட்டார்கள். அது போன்று அஹங்காரம் மமகாரம் ஆகியவற்றில் ஒரு சிலவற்றை மட்டும் எடுத்து, மற்றதை மட்டும் கைவிட இயலாது. ஆகவே அனைத்தையும் முழுவதுமாக விடுங்கள் என்கிறார்.

வ்யாக்யானம் - (வீடுசெய்து) "வீடுமின் முற்றவும்" என்றாராகில், திரிய "வீடுசெய்து" என்கிற இதுக்குக் கருத்தென்னென்னில்; மேலொரு பேறு பெறுவதிலும் இவற்றை விட்டு நிற்கும் நிலைதானே பேறாகப் போருகையாலே, விடுகையாகிற பேற்றைப் பெற்று என் கிறபடி; ராஜபுத்ரன் அழுகுசிறையிலே கிடந்தால், முடிசூடி ராஜ்யம் பண்ணுவதிலும் சிறைவிடுகைதானே ப்ரயோஜநமாயிருக்குமிறே.

விளக்கம் – (வீடுசெய்து) -மேலே "வீடுமின் முற்றமும்" என்று கூறி விட்டு, மறுமடியும் "வீடுசெய்து" என்று கூறுவதன் கருத்து என்ன? ஓர் அரசகுமாரன் சிறையில் இருந்தான் என்றால், அவன் முடிசூடி அரசை நடத்துவதைவிட அந்தச் சிறையை விட்டு வெளியே வருவதே அவனுக்கு முதலில் பெரும் பயனாக இருக்கும் அல்லவோ? இது போன்று மோக்ஷம் என்னும் மேன்மை அடைவதைவிட உலக விஷயங்களை விடுதல் என்பது முதற்கண் பெரும்பேறாக இருக்கையால் அத்தகைய விடுதல் என்னும் பேற்றை அடைந்து – என்கிறார்.

வ்யாக்யானம் - (உம்முயிர் வீடுடையானிடை) இதுக்குப் பலபடியாக அருளிச்செய்வர். யஸ்யாத்மா சரீரம், யஸ்ய ப்ருதிவீ சரீரம் என்கிறபடியே, உம் உயிரையும், அதினுடைய வீட்டையும் உடையவன் என்னுதல்; உம் உயிரை வீடாக உடையவன் என்னுதல்; உம் உயிரை விடுமிடத்தில் – ஸமர்ப்பிக்குமிடத்தில், உடையான் பக்கலிலே என்னுதல்; வீடுடையான் - பரமபதநிலயன் பக்கலிலே என்னுதல். (உம்முயிர்) அநித்யமான சரீரத்துக்கு நன்மை பார்க்கச் சொல்லுகிறேனோ? நித்யமான ஆத்ம வஸ்துவுக்கன்றோ நான் நன்மை பார்க்கச் சொல்லுகிறது; அது தானும் என்னுயிர்க்கோ? உம்முயிர்க்கன்றோ (உடையானிடை) பொதுவிலே உடையவன் என்கிறார். ருசி பிறந்து "அவன் ஆர்" என்றால், "வண்புகழ் நாரணன்" என்பாராக. அவன் உடையவனாய் உங்கள் ஸத்தையை நோக்கிக் கொண்டு போரா நிற்க, நீங்களும் "நான், என்னது" என்று அகலப்பாராதே,

உங்களை அவன் பக்கலிலே ஸமர்ப்பிக்கப் பாருங்கோள். அவன் உடையவனான பின்பு அவனோடு அவிவாதமே உங்களுக்கு வேண்டுவது.

விளக்கம் – (உம்முயிர்) – இதற்குப் பலவிதமாகப் பொருள் அருளிச்செய்வார்கள். ப்ருஹத் உபநிஷத் – யஸ்யாத்மா சரீரம்யஸ்ய ப்ருதிவீ சரீரம் , – யாருக்கு உயிர்கள் சரீரமோ, யாருக்கு உலகம் சரீரமோ – என்பது போன்று உன் உயிரையும் அதனுடைய வீடான சரீரத்தையும் கொண்டவன்; உனது உயிரைத் தனது சரீரமாகக் கொண்டவன்; உனது உயிரைச் சமர்ப்பிக்கும் இடத்தில் உடையவன்; பரமபதத்தை உடையவன் – என்று பல பொருள்கள் கூறுவர். (உம் உயிர்) – அழிந்து போகின்ற உடலுக்கு ஏற்ற நன்மையை நான் காணச் சொல்லவில்லை; நித்யமான ஆத்மாவுக்கு நன்மை தேடவே சொல்கிறேன். மேலும் எனது உயிருக்கா நான் நன்மை தேடும் வழியைக் கூறுகிறேன், உங்கள் உயிருக்கு அல்லவோ? (உடையானிடை) – பொதுவாக உடையவன் என்கிறான். இப்படி இவர் கூறுவதைக் கேட்டு ஆர்வம் எழுந்து ஆழ்வாரிடம், "அவன் யார்?", என்றால் அதற்கு ஆழ்வார் "வண்புகழ்நாரணன்" , என்பார். அவன் உடைமை கொண்டவனாக உங்களது ஆத்மாவையே பார்த்துக் கொண்டு நிற்கிறான். இதனைக் கண்ட பின்னரும் நீங்கள், "நான், எனது", என்று உங்கள் அஹங்காரம் மற்றும் மமகாரங்களால் அவனிடமிருந்து விலகிச் செல்ல முனையாமல், அவனிடம் உங்களைச் சமர்பிக்க முயலுங்கள். அவன் உடையவன் என்ற பின்னர், "அவன் நம்மை விட்டுச் சென்றாலும் நமக்கு எந்தப் பயனும் இல்லை, இழப்பும் இல்லை", என்று எண்ணாமல் இருப்பதே உங்களுக்கு வேண்டுவதாகும்.

வ்யாக்யானம் – யம: ப்ராதேசிகமான நியமநத்தை உடையவனை அன்று சொல்லுகிறது. ப்ரபவதி ஸம்யமநே மமாபி விஷ்ணு: என்று அவன் தன்னையும் நியமிக்குமவனாயிற்று இவன். வைவஸ்வத: - விவஸ்வானுடைய குலத்திலே பிறந்தவனென்னுதல்; ஆதித்யாந்தர வஸ்திதனென்னுதல். ராஜா - அவனைப்போலே "தஹ பச" என்கையன்றிக்கே எல்லார்க்கும் இனியனாயிருக்குமவனாயிற்று இவன். ய: - அந்தர்யாமி ப்ராஹ்மணாதிகளில் ப்ரஸித்தி. தவைஷ ஹ்ருதி ஸ்தித: - அவன் எங்குற்றான் என்ன, கண்டிலையோ? உன்னுடைய ஹ்ருதயத்திலே புகுந்து ஆட்சியில் தொடர்ச்சி நன்றென்றிருக்கிறான். ஆனால் செய்ய வேண்டுவதென் என்னில் தேந சேதவிவாதஸ் தே

- உடையவனாயிருக்கிறவனோடே உனக்கு அவிவாதமுண்டாகில் இத்தால் பேறு என் என்பாயோ, மா கங்காம் மா குரூந் கம: - ஒரு தீர்த்தம் தேடிப்போதல், புண்யக்ஷேத்ரம் தேடிப்போதல் செய்யவேண்டா; அஹங்கார மமகாரங்கள் கிடக்க ப்ராயசித்தம் பண்ணுகையாவது நிஷித்த த்ரவ்யத்தை உள்ளே வைத்து மெழுக்கூட்டினவோபாதியிறே. உடையவனுக்கும் உடைமைக்கும் தக்கபடியிறே ப்ராயச்சித்தமும்; உடையவன் ஸர்வேச்வரன்; த்ரவ்யங்களில் ப்ரதாநமான ஆத்ம த்ரவ்யத்தையிறே அபஹரித்தது; அபஹரித்த த்ரவ்யத்தைப் பொகட்டு ப்ராயச்சித்தம் பண்ண வேணுமே. பொகடுகிற த்ரவ்யம் தானாகையாலே, ப்ராயச்சித்தம் பண்ணுகைக்கு வேறு அதிகாரியுமில்லையே. ஆகையாலே நீங்களும் உடையவன் பக்கலிலே வீடு செய்ம்மினே. வீடு - ஸமர்ப்பிக்கை; அதாகிறது - இசைகை.

விளக்கம் – மனுஸ்ம்ருதி – யமோ வைவஸ்வதோ ராஜா யஸ்தவைஷ ஹ்ருதி ஸ்தித: தேந சேதவிவாதஸ் தே மா கங்காம் மா குரூந் கம: - என்று கூறியதை இங்கு காண்போம். யம: - யமன் முதலானவர்கள் போன்று அந்தந்த ப்ரதேசத்தை மட்டுமே நியமிக்கும் அதிகாரம் உடையவனை ஆழ்வார் இங்கு கூறவில்லை. விஷ்ணுபுராணம் – ப்ரபவதி ஸம்யமநே மமாபி விஷ்ணு: - என்னும்படி யமன் போன்றவர்களையும் நியமிப்பவனாக இவன் உள்ளான். வைவஸ்வத: - சூர்யமண்டலத்தில் இருந்து நியமிப்பவன் ஆவான். ராஜா – யமனைப் போன்று, "சுடு, பொசுக்கு", என்று கூறாமல் அனைவருக்கும் இனியவனாக உள்ளான். ய: - அந்தர்யாமி ப்ராஹ்மணத்தில் கூறப்பட்ட பெருமை உடையவனாக இருக்கிறான். தவைஷ ஹ்ருதி ஸ்தித: - இப்படிப்பட்டவன் எங்கே உள்ளான் என்றால், உனது மனதிலேயே உள்ளதைக் காணவில்லையா? உனது மனதிலே புகுந்து தொடர்ந்து ஆட்சி செய்வதையே தனக்கு நன்று என உள்ளான். அப்படிப்பட்ட அவனுக்கு நீ செய்ய வேண்டுவது என்ன? தேந சேதவிவாதஸ் தே - "அவன் நம்மை விட்டுச் சென்றாலும் நமக்கு எந்தப் பயனும் இல்லை, இழப்பும் இல்லை", என்று எண்ணாமல் இருந்தாலே போதுமானது. இப்படி எண்ணாமல் இருந்தால் கிட்டும் பேறு என்ன? மா கங்காம் மா குரூந் கம: - உயர்ந்த பேற்றினைத் தேடிப் புண்ணிய தீர்த்தங்களுக்கோ, புண்ணிய க்ஷேத்ரங்களுக்கோ செல்லவேண்டாம். "நான், எனது", என்ற எண்ணங்கள் நிறைந்து இருக்கும்போது ப்ராயச்சித்தம் செய்தல் என்பது மிகவும் தாழ்ந்த பொருளை உள்ளே வைத்து வெளியே மெழுகு பூசுவது போன்றதாகும். ஒரு பொருளை உடையவனுக்கும்,

அந்த உடைமையான பொருளுக்கும் ஏற்றபடி ப்ராயச்சித்தம் செய்யவேண்டும். இங்கு உடையவன் ஸர்வேச்வரன்; உடைமையான பொருள் என்பது மிகவும் உயர்ந்த பொருளான ஆத்மாவாகும். இப்படிப்பட்ட உயர்ந்த ஆத்மாவை அல்லவோ அஹங்காரத்தால் அபகரித்தது? அப்படி அபஹரித்த ஆத்மாவின் பொருட்டு ப்ராயச்சித்தம் செய்யவேண்டும். ஆனால் அபஹரிக்கபட்ட ஆத்மா தானாகவே உள்ளபோது ப்ராயச்சித்தம் செய்வதற்கு வேறு அதிகாரி யாரும் இல்லை. எனவே நீங்களே உங்கள் ஆத்மாவை உடையவனிடம் இசைந்து சமர்ப்பணம் செய்யுங்கள்.

2. மின்னின் நிலையில மன்னுயிராக்கைகள்
என்னு மிடத்திறை யுன்னுமின் நீரே.

பொருள் – நித்யமான ஆத்மாக்கள் தங்கியுள்ள சரீரங்கள் அனைத்தும், தோன்றி மறைகின்ற மின்னலைக் காட்டிலும் நிலையற்றதாகும். அதனை நீங்கள் சற்றே நினைத்துப் பாருங்கள்.

அவதாரிகை - பகவத் வ்யதிரிக்த விஷயங்களை விட்டு ஸர்வேச்வரனான எம்பெருமான் பக்கலிலே ஆத்மஸமர்ப்பணம் பண்ணப்பாருங்கோள் என்றார் முதற்பாட்டில்; பகவத் வ்யதிரிக்த விஷயங்களை விடச் சொல்லா நின்றீர். அநாதிகாலம் வாஸனை பண்ணிப் போந்தவற்றை இப்போதாக விடப்போமோ என்ன, அவற்றினுடைய தோஷ தர்சநம் பண்ணவே விடலாம் என்கிறார் இதில்.

விளக்கம் – எம்பெருமானைத் தவிர மற்ற உலகவிஷயங்களைக் கைவிட்டு, ஸர்வேச்வரனான எம்பெருமானிடம் ஆத்மஸமர்ப்பணம் செய்யுங்கள் என்று முதல் பாசுரத்தில் கூறினார். இதற்கு ஒரு சிலர், "எம்பெருமானைவிட வேறுபட்ட விஷயங்களைக் கைவிடும்படிக் கூறுகின்றிர்கள். ஆனால் எல்லையற்ற காலம் அவற்றின் பின்னே சென்றுவிட்டு இப்போது உடனே கைவிட இயலுமோ?", என்று சிலர் கேட்டனர். அதற்கு ஆழ்வார், " அந்த விஷயங்களில் உள்ள தோஷங்களை அறிந்து கொண்டால் அவற்றை உடனே கைவிடலாம்", என்று இந்தப் பாசுரத்தில் கூறுகிறார்.

வ்யாக்யானம் – (மின்னின் நிலையில) மின்னோபாதியும் நிலையுடைத்தல்ல. அல்பமாய் அஸ்திரமாயிருக்குமிறே அது. இதுவும் அஸ்திரமாயிருக்கச் செய்தேயும் ஸ்திர புத்தியைப் பிறப்பித்து, அநர்த்தத்தோடே தலைக்கட்டுவித்துவிடும். சந்தநப்ராந்தியாலே நாற்றம் குளிர்த்தி மென்மைகளைக் கொண்டு ஸர்ப்பத்தின் மேலே கையை வைத்துக் கொண்டு கிடந்து உறங்கா நின்றால், ஒரு தார்மிகன் "இது ஸர்ப்பங்கிடாய்" என்று அறிவித்தால், பின்னை அதில் நின்று கைவாங்கியல்லது நிற்கவொண்ணாதிறே. அப்படியே இதர விஷயங்களிலே போக்யதா புத்தி பண்ணிப்போருகிற இவனுக்கு, "இது அல்பம் அஸ்திரம்", என்று இதினுடைய தோஷ தர்சநத்தைப் பண்ணுவிக்கவே விடலாயிருக்குமிறே.

விளக்கம் (மின்னின் நிலையில) - – மின்னலைப் போன்று நிலையானது அல்ல. மின்னல் என்பதே மிகவும் அற்பமான, நிலையற்ற ஒன்றாகும். இந்தச் சரீரம் அது போன்று நிலையற்றதாக உள்ளபோதிலும், நிலையானது என்ற மயக்கத்தை உண்டாக்கி, துன்பத்தில் முடித்துவிடும். ஒருவன் சந்தனம் என்னும் மயக்கத்தால் – நாற்றம், குளிர்ச்சி, மென்மை ஆகியவற்றைக் கொண்ட பாம்பின் மீது கையை வைத்து உறங்கிக் கொண்டிருக்கிறான் என வைத்துக் கொள்வோம். அந்த வழியே செல்பவன் அவனிடம், "இது பாம்பு", என்று கூறிய பின்னர் உடனே அதிலிருந்து கையை எடுத்து விடுவான் அல்லவோ? இது போன்று உலகவிஷயங்களில் இன்பம் இருப்பதாக எண்ணி, அதன் பின்னே செல்லும் ஒருவனிடம், "இவை அற்பமானவை, நிலையில்லாதவை", என்று கூறி அதன் தோஷங்களை அவன் காணும்படி செய்தவுடன், அவை விடத்தக்கதாகத் தென்படும்.

வ்யாக்யானம் - (மன்னுயிராக்கைகள்) உயிர் மன்னுகிற ஆக்கைகள் என்னுதல், நித்யமான ஆத்மவஸ்து பரிக்ரஹிக்கிற தேஹங்களென்னுதல். திறந்து கிடந்த வாசல்கள் தோறும் நுழைந்து திரியும் பதார்த்தம் போலேயிறே இவன் திரிவது. மகிழலகொன்றே போல் மாறும் பல் யாக்கையிறே; ஓரலகுதானே காணிஸ்தாநத்திலே நிற்பது, கோடி ஸ்தாநத்திலே நிற்பதாமிறே. அப்படியே ஓராத்மாதானே கர்மபேதத்தாலே தேவாதி தேஹ பேதங்களைப் பரிக்ரஹிக்குமிறே. அன்றியே "உயிர்" என்கிற ஏகவசநம் ஜீவாநந்த்யத்துக்கு உபலக்ஷணமாய், ஆத்மாக்கள் பரிக்ரஹிக்கிற சரீரங்கள் என்னவுமாம்.

விளக்கம் (மன்னுயிராக்கைகள்) - – உயிர் தங்கியுள்ள சரீரங்கள்; நித்யமான ஆத்மா தங்கியுள்ள சரீரங்கள். திறந்து கிடக்கும் கதவுகளில் புகுந்து திரிகின்ற வஸ்துபோன்று (நாய்), இவன் திரிகிறான். முதல் திருவந்தாதி (49) - மகிழலகொன்றே போல் மாறும் பல் யாக்கை – என்பதைக் காண்க. மகிழ மரத்தின் விதையைக் கொண்டு கணித விளையாட்டு உண்டு. கணிதமேதை ஒருவன் அந்த விதையைக் கொண்டு காணிஸ்தானம் எனப்படும் தாழ்ந்த இடத்தையும் குறிப்பான், கோடிஸ்தானம் என்னும் உயர்ந்த இடத்தையும் குறிப்பான். இது போன்றே ஓர் ஆத்மா கர்ம வேறுபாடு காரணமாக தேவர்கள் முதலான பல சரீரங்களை எடுக்கிறது. உயிர் என்ற பதம் பல உயிர்களுக்குக் கூறப்பட்டதாக்க் கொள்ள வேண்டும். அதாவது பல ஆத்மாக்கள் இருக்கின்ற பல சரீரங்கள் என்றபடி ஆகும்.

வ்யாக்யானம் – (என்னுமிடத்து) பகவத்குணங்களைப் பரிச்சேதிக்கிலும் பரிச்சேதிக்கப் போகாதாயிற்று தோஷப்பரப்பு. இவ்விடையாட்டத்து என்றபடி. (இறையுன்னுமின்) இதிலே அல்பத்தை ஆராயுங்கோள். (நீரே) இது தனக்கு ஒரு ப்ரமாணாபேக்ஷையும் இல்லை. ஸதாசார்யோபதேசமும் வேண்டா.

விளக்கம் - (என்னுமிடத்து) – எம்பெருமானுடைய குணங்களை அளவிட்டுக் கூற முடிந்தாலும் கூறிவிடலாம். ஆனால் உலகவிஷயங்களின் தோஷங்களை எண்ணி அறிய இயலாது. (இறையுன்னுமின்) – இவற்றில் உள்ள அற்பங்களை நீங்களே ஆராய்ந்து பாருங்கள். (நீரே) – இப்படி இவை மிகவும் அற்பமாக உள்ளது என்று அறிவதற்கு எந்தவிதமான உயர்ந்த ப்ரமாணமோ அல்லது ஆசார்யனின் உபதேசமோ அவசியம் இல்லை.

1-2-3 நீர்நும தென்றிவை வேர்முதல் மாய்த்திறை
சேர்மின் உயிர்க்கத னேர்நிறை யில்லே

பொருள் – "நான், எனது" என்ற அஹங்காரம் மற்றும் மமகாரத்தை வேருடன் அடியோடு அழித்து, ஸர்வேச்வரனைச் சேர்வீர்களாக. அப்படிச் சேர்வதற்கு ஒப்பான செயலோ, அதனைவிட உயர்ந்த செயலோ வேறு ஏதும் இல்லை.

அவதாரிகை – "தோஷ தர்சநம் பண்ணவே விடலாமென்றீர்; காலம் அநாதி; மேல் அநந்தமாயிரா நின்றது; பற்றின காலமெல்லாம் வேணுமிறே விடுகைக்கும்" என்ன; த்யாஜ்யாம்சத்தைச் சுருங்க அருளிச்செய்கிறார்; ஸம்ஸாரபீஜம் இன்னதென்றும் அதுக்கு பேஷஜம் இன்னதென்றும் அருளிச்செய்கிறார்.

விளக்கம் – ஆழ்வாரிடம் ஸம்ஸாரிகள், "உலக விஷயங்களின் தோஷங்களை அறிந்தவுடன் அவற்றை விடவேண்டும் என்று கூறுகிறீர்கள். காலம் என்பதோ எல்லையற்றதாக உள்ளது. அந்தக் காலங்களில் செய்த கர்மங்களால் உண்டான வினைகள் அதிகமாகவே உள்ளன. ஆகவே பற்றின காலம் அளவே, அந்த வினைகளைக் கைவிடவும் வேண்டும் அல்லவா?," என்றனர். இதற்கு ஆழ்வார், கைவிடும் தன்மையைச் சுருக்கமாக அருளிச்செய்கிறார். ஸம்ஸாரத்திற்கு விதை இன்னது என்றும், அதற்கான மருந்து இன்னது என்றும் அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் - (நீர்நுமது) அநர்த்தகரமான அஹங்கார மமகாரங்கள். "நான், என்னது" என்னுமத்தைப் பிறர்க்கு உபதேசிக்கும்போது "நீர் நுமது" என்றிறே சொல்லுவது; "நான், என்னது" என்று தம் வாக்காலே சொல்லமாட்டாரே நாக்கு வேமென்று. "என் உடைமை" என்னுமது வேணுமாகில் தவிருகிறன்; "நான்" என்னுமது தவிரும்படி என்னென்னில்; இவன் அஹம் என்றால் ராவணாதிகள் நான் என்றாப்போலே பிறருடைய நானைத் தவிர்த்துக்கொண்டிறே இருப்பது. தேஹத்தில் அஹம்புத்தி பண்ணிப்போருமது தவிர வேணுமே.

விளக்கம் – (நீர்நுமது) - தவறான பாதைக்கு இட்டுச் செல்கின்ற "நான், எனது" என்னும் அஹங்கார மமகாரங்கள். "நான், எனது" என்பதை மற்றவர்களுக்கு உபதேசிக்கும்போது "நீர், நுமது" என்று அருளிச் செய்கிறார். அல்லது "நான், எனது", என்று தனது திருவாயால் கூறினால் நாக்கு வெந்துவிடும் என்று எண்ணி, "நீர் நுமது" என்று கூறுகிறார் எனவும் கூறலாம். "என்னுடைய உடைமை" என்று இருக்கின்ற எண்ணத்தை வேண்டுமானாலும் கைவிடலாம்; ஆனால், "நான்" என்பது உயிர், ஆத்மா போன்றவற்றைக் குறிக்கும் என்பதால் அதனைக் கைவிடுவது எப்படி? அஹம் என்பது இராவணன் முதலானோர் தங்களை ஸ்வதந்த்ரமானவர்கள் என்று எண்ணி, தாங்கள் ஸர்வேச்வரனுடையவர்கள்

என்பதைத் தவிர்க்கின்றனர் என இருப்பது போன்றதாகும். சரீரத்தில் அஹம் என்ற எண்ணம் சரீரமே ஆத்மா என இருப்பது ஆகும். இவற்றைக் கைவிடுவதே "நான்" என்பதைத் தவிர்ப்பது ஆகும் (தாங்கள் ஸ்வதந்த்ரமானவர்கள் என்னும் எண்ணம், சரீரமே ஆத்மா என்னும் எண்ணம் ஆகியவற்றைக் கைவிடுதல்).

வ்யாக்யானம் - (இவை வேர்முதல் மாய்த்து) இவை வேர்முதல் மாய்க்கையாவது என்னென்னில், இது அபுருஷார்த்தமென்னும் ப்ரதிபத்தியைச் சொன்னபடி. இரண்டு வ்ருக்ஷம் தன்னிலே சேர நின்றால், ஒன்றிலே துளைத்துப் பெருங்காயத்தை வைக்க, சில நாள் ஒன்று போலே நின்று, பின்னைப் பட்டுப்போகாநின்றதிறே. அப்படியே அஹங்கார மமகாரங்கள் த்யாஜ்யமென்றும் ப்ரதிபத்தி உண்டாக தன்னடையே ஸம்ஸாரம் அடியற்று நிற்கும். அநாத்மந்யாத்ம புத்திர்யா அஸ்வே ஸ்வமிதி யா மதி: அவித்யாதருஸம்பூதி பீஜமேதத் த்விதா ஸ்திதம் என்று ஸம்ஸாரபீஜமும் சொல்லி, அச்யுதாஹம் தவாஸ்மீதி ஸைவ ஸம்ஸாரபேஷஜம் என்று பரிஹாரமும் சொல்லிற்றிறே; ரக்ஷகனானவன் அவஸரப்ரதீக்ஷகனாயிருக்க, இவன் பக்கலிலே விலக்காமை உண்டானால் விரோதி, போகைக்குத் தட்டில்லை என்கை.

விளக்கம் – இவற்றை வேருடன் அழித்தல் என்றால் என்ன? உலகவிஷயங்களின் மீது உள்ள ருசி மற்றும் பற்றுதல் என்னும் ஆணிவேருடனும், மற்ற பக்கவேர்களுடனும் அழித்தல். இவை புருஷார்த்தம் அல்ல என இருத்தல். இரண்டு மரங்கள் ஒன்றாக நிற்கையில், ஒரு மரத்தில் துளை செய்து அதில் பெருங்காயத்தை வைக்க, சிலநாள்கள் ஒன்றாகவே நின்று பிறகு இரண்டுமே பட்டுப்போகின்றன. இதில் ஒரு மரம் அஹங்காரம் மற்றும் மமகாரம் என்றும், மற்றொரு மரம் ஆத்மா என்றும் கொள்ளவேண்டும். அஹங்காரம் மற்றும் மமகாரங்களைக் கைவிட வேண்டும் என்ற எண்ணம் உண்டாகும்போது ஸம்ஸாரம் அடியற்றுப் போய்விடும். விஷ்ணுபுராணம் – அநாத்மந்யாத்ம புத்திர்யா அஸ்வே ஸ்வமிதி யா மதிஅவித்யாதருஸம்பூதி பீஜமேதத் : த்விதா ஸ்திதம் – உயிர் இல்லாத சரீரத்தில் உயிர் என்ற எண்ணமும், தனது உரிமை அல்லாதவற்றில் தனது என்ற எண்ணமும் ஆகிய இவை இரண்டும் அறியாமை என்னும் மரம் முளைப்பதற்கு விதையாகக் கூறப்பட்டது – என்றது காண்க. மேலும் - அச்யுதாஹம் தவாஸ்மீதி ஸைவ ஸம்ஸாரபேஷஜம் – அடியார்களைக் கைவிடாதவனே! நான் உனது அடிமையாக உள்ளேன் என்ற அறிவு ஸம்ஸாரத்திற்கு ஏற்ற மருந்தாக உள்ளது – என்று

ஸம்ஸாரத்தை விலக்க வழி கூறியது காண்க. ரக்ஷகனாக உள்ள ஸர்வேச்வரன் நம்மை எப்போது காப்பாற்றுவோம் என்று எதிர்பார்த்தபடி நிற்கும்போது, நம்மிடம் "அவனை விலக்கக்கூடாது" என்ற எண்ணம் இருந்தால் நம்முடைய விரோதிகள் நீங்கத் தடையில்லை.

வ்யாக்யானம் - (இறை சேர்மின்) அப்ராப்த விஷயங்களை விட்டு வகுத்த சேஷியானவனைப் பற்றப் பாருங்கோள். "சேர்மின்" என்கிறார் காணும். கெடு மரக்கலம் கரை சேர்ந்தார்ப் போலே இருக்கையாலே ஸம்ஸாரிக்கு பகவத்ஸமாச்ரயணம். (உயிர்க்கு அதன் நேர் நிறை இல்லை) இத்தோடொத்த சீரியதில்லை என்னுதல்; நேரென்று - ஒப்பாய், நிறையென்று - மிகுதியாய், உயிர்க்கு இத்தோடொத்ததும் மிக்கதும் இல்லை என்றுமாம். ப்ரதமத்தில் – ஔஷதம் போலே ஸம்ஸாரிகளுக்கு பகவத் ஸம்பந்தம் ஹிதமுமாய், உதர்க்கத்தில் ப்ரியமுமாயிருக்கும். நித்யமாய் ஜ்ஞாநாநந்த லக்ஷணமான வஸ்துவுக்கு இத்தோடொக்கும் சீரியதில்லை. ஸம்ஸாரார்ணவமக்நாநாம் இத்யாதி. விஷ்ணுபோதம் இக்கரையும் அக்கரையும் ஒன்றாய் நின்று அவ்வருரு கடத்தும் ஓடம்.

விளக்கம் (இறை சேர்மின்) - – அடையத் தகாதவற்றை நீக்கி, நமக்கு இயற்கையாகவே எஜமானனாக உள்ள ஸர்வேச்வரனைப் பற்ற முயலுங்கள். ஸம்ஸாரத்தில் உள்ள ஒருவன் எம்பெருமானை அடைதல் என்பது மரக்கலத்தில் உள்ளவர்கள் (ஓடத்தில் உள்ளவர்கள்) கரை சேர்வது போன்று உள்ளதால் "சேர்மின்" என்று கூறினார். மரக்கலத்தைக் காற்று தள்ளிச் செல்வதைப் போன்று நம்மை பகவத் க்ருபை தள்ளிச் செல்லும் என்று கருத்து. (கு அதன் நேர் நிறை இல்லைஉயிர்க்) - உயிருக்கு இதனைப் போன்று ஒத்ததோ, இதனைக் காட்டிலும் உயர்ந்ததோ இல்லை. நேர் என்றால் ஒப்பு, நிறை என்றால் மிகுதி, ஆக உயிர்க்கு இதனைக் காட்டிலும் ஒத்ததும் மிக்கதும் இல்லை. ஸம்ஸாரத்தில் உள்ள ஜீவன்களுக்கு பகவத் ஸம்பந்தம் என்பது முதலில் மருந்து போன்று நன்மை அளிப்பதாக இருக்கிறது. அதனைத் தொடர்ந்து ப்ரியமாகவும் உள்ளது. என்றும் உள்ளதும், ஞானம் மற்றும் ஆனந்தமயமாக உள்ளதும் ஆகிய ஆத்மாவுக்கு பகவத்ஸம்பந்தத்தைவிட ஒத்ததும் மிக்கதும் வேறு இல்லை. ஸம்ஸாரார்ணவமக்நாநாம் - ஸம்ஸாரம் என்ற கடலில் உள்ளவர்களுக்கு விஷ்ணுவைவிட சிறந்த ஓடம் வேறு இல்லை. இந்தக் கரையும் அந்தக் கரையும் ஒன்றாக நின்று அக்கரைக்குக் கொண்டு செல்லும் ஓடம் இதுவே.

1-2-4 இல்லது முள்ளதும் அல்ல தவனுரு
எல்லையி லந்நலம் புல்குபற் றற்றே

பொருள் – ஸர்வேச்வரனின் ரூபம் என்பது அழிந்து போகின்ற உடல், அழியாத ஆத்மா ஆகியவற்றின் தன்மையைக் கொண்டது அல்ல; அது எல்லையற்ற ஆனந்தமயமானது. ஆகவே உலகவிஷயங்களின் மீது உள்ள ஆசையை நீக்கி நீ அவனைப் பற்றுவாயாக.

அவதாரிகை - விடுகிறவைபோலே அபோக்யமுமாய், ஸதோஷமுமாயிராதென்று பற்றப்படுகிற விஷயத்தினுடைய போக்யத்தை அருளிச்செய்கிறார்.

பொருள் – சித், அசித் வஸ்துக்கள் போன்று இன்பம் அற்றதாகவும், தோஷங்களுடன் கூடியதாகவும் இருக்காது என்று பற்றப்படுகின்ற விஷயமான ஸர்வேச்வரனின் இனிமையை அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் – (இல்லதும்) ப்ரமாணபோக்யமல்லாமையால் வரும் துச்சத்வத்தைப் பற்றவாதல், ப்ரதீதிமாத்ரமாய் பாதயோக்யமான மித்யாத்வத்தைப் பற்றவாதல் – "இல்லது" என்கிறதன்று; விநாசித்வத்தைப் பற்றச் சொல்லுகிறது. (உள்ளதும்) இல்லாதான வஸ்துவில் வ்யாவ்ருத்தியைப் பற்ற "உள்ளது" என்கிறது; யதஸ்தி யந்நாஸ்தி என்றும், ஸத்யஞ்சாந்ருதஞ்ச என்றும் சொல்லக்கடவதிறே சிதசித்துக்களை. அன்றியே ஆத்மாவுக்கு இருப்பிடமான சரீரத்தின் படியும், அத்தை இருப்பிடமாகவுடைய ஆத்மாவின் படியுமல்ல என்றுமாம். (அல்லதவனுரு) நச்வரமாயிருக்கிற அசித்தின் படியுமன்று; அசித்ஸம்ஸர்க்கத்தாலே "அஹம் ஸுகீ, அஹம் து:கீ" என்கிற சேதநன்படியுமன்று அவன் ஸ்வரூபம்.

விளக்கம் – (இல்லதும்) – ப்ரமாணங்கள் மூலம் அறிய இயலாததால், முயல்கொம்பு போன்று உலகில் இல்லாத தன்மை கொண்டதைப் பற்றவேண்டாம்; முத்துச்சிப்பி வெள்ளியாகத் தோன்றுவது போன்று கண்களால் கண்டு, அதன் பின்னர் ப்ரமாணங்கள் மூலம் இல்லை என்ற தன்மையையும் பற்றவேண்டாம் – இப்படியாகச் சூந்யவாதியும் மாயாவாதியும் கூறிய கருத்தின்படி "இல்லது" என்று ஆழ்வார் கூறவில்லை. தோன்றி மறையும் மின்னல் போன்று அழியும் தன்மை கொண்டதால் இல்லது என்று

அருளிச்செய்தார். (உள்ளதும்) – அழியக்கூடிய பொருளைக் காட்டிலும் இருக்கின்ற வேறுபட்ட தன்மையை கொண்ட உயிரை "உள்ளதும்" என்கிறார். விஷ்ணுபுராணம் – யதஸ்தி யந்நாஸ்தி – உள்ளது எனப்படும் உயிர், இல்லாதது எனப்படும் சரீரம் - என்றும், தைத்திரீய உபநிஷத் - ஸத்யஞ்சாந்ருதஞ்ச – ஸத்யம் என்று கூறப்படும் உயிரும், பொய்மை எனப்படும் சரீரமும் – என்றும் கூறியது காண்க. அல்லது ஆத்மாவிற்கு இருப்பிடமாகச் சரீரமும், சரீரத்தில் உள்ள ஆத்மாவும் "இல்லது, உள்ளது" எனப்பட்டது எனலாம். (அல்லதவனுரு)– அழிந்து போகின்ற சரீரத்தின் தன்மையும் அல்ல; சரீரத் தொடர்பால், "நான் சுகம் உடையன், நான் துன்பம் உடையவன்", என்னும்படி சேதனத் தன்மையும் கொண்டதாக அவன் ஸ்வரூபம் இல்லை.

வ்யாக்யானம் - ஆனால் எங்ஙனேயிருக்கும் என்னில், (எல்லையில் அந்நலம்) ஆநந்தமய: என்றும், "உணர்முழுநலம்" என்றும், "ஓடியாவின்பப் பெருமையோன்" என்றும், "சுடர்ஞானவின்பம்" என்றும், "ஸமஸ்த கல்யாண குணாத்மகோஸௌ" என்றும் சொல்லலாம்படி இருக்கும். (புல்கு) அங்கநாபரிஷ்வங்கம் போலே போக ரூபமாயிருக்குமிறே குணஜ்ஞாநமுடையவனுக்கு குணாதிக விஷயாநுபவம். (பற்றற்றே) அதுசெய்யுமிடத்தில் இருகரையனாகையன்றிக்கே புறம்புள்ள பற்று அற்றே புல்கு. பற்றிலார் பற்ற நின்றானிறே அவன்; ஆகையாலே பற்றற்றே புல்கவேணும்.

விளக்கம் – ஆகவே எப்படி இருக்கும் என்றால் – அருளிச்செய்கிறார். எல்லையில்) (அந்நலம் – ஆனந்தமய: என்றும், (1-1-2) - உணர்முழுநலம் – என்றும், (8-8-2) - ஓடியாவின்பப் பெருமையோன் – என்றும், (10-10-10) - சுடர்ஞானவின்பம் – என்றும், ஸ்தோத்ரரத்னம் - ஸமஸ்த கல்யாண குணாத்மகோஸௌ – அனைத்துவிதமான கல்யாண குணங்களையும் இயல்பாகவே உடையவன் – என்றும் கூறும்படி அவன் ஸ்வரூபம் இருக்கும். (புல்கு) - அவனது குணங்களைப் பற்றிய ஞானம் உள்ளவனுக்குக் குணங்களால் நிறைந்த எம்பெருமானின் அனுபவம் அங்கநாபரிஷ்வங்கம் (பெண்ணின் சேர்க்கை) போன்று போகரூபமாக இருக்கும். (பற்றற்றே)– அப்போது உலகவிஷயங்கள், பகவத்விஷயம் என்ற இரு கரையில் நிற்காமல் வெளிவிஷயங்களின் பற்றுகளை

அறுத்துப் பற்றவேண்டும். திருவாய்மொழி (7-2-7) - பற்றிலார் - என்னும்படி உள்ளவன் அவன். ஆகவே பற்றில்லாமல் புல்கவேண்டும்.

1-2-5 அற்றது பற்றெனி லுற்றது வீடுயிர்
செற்றது மன்னுறி லற்றிறை பற்றே.

பொருள் – உலகவிஷயங்களில் உள்ள ஆசை நீங்கியவுடன் உயிரானது மோக்ஷத்தைப் பெற்றதாகும் (கைவல்யம்). அத்தகைய ஆத்மப்ராப்தி என்னும் கைவல்ய மோக்ஷத்தை நீக்கி, நிலையாக நிற்கும்படியான பகவத் விஷயத்தைக் கிட்டுவதற்காக, மற்றவற்றைத் தவிர்த்து அவனையே பற்றுவாயாக.

அவதாரிகை - பற்றுமிடத்தில் வரும் அந்தராய பரிஹாரத்தையும் அருளிச்செய்கிறார்; இந்த்ரபதத்தைக் கோலுமவன் இவ்வருகுண்டான ஐச்வர்யத்தைக் கோலான்; ப்ரஹ்மபதத்தை ஆசைப்படுமவன் இவ்வருகுண்டான இந்த்ரபதத்திற் கண்வையான்; ஆத்மாநுபவத்தை ஆசைப்படுமவன் ஐச்வர்யாதிகளிற் கண்வையான்; ஸமஸ்த கல்யாண குணாத்மகனாய் நித்யமங்கள விக்ரஹ யுக்தனாயிருக்குமவனைப் பற்றுமவன் இவை இத்தனையிலும் காண்வையான். ஆக, இங்ஙன் வரும் அந்தராய பரிஹாரத்தை அருளிச் செய்கிறார்.

விளக்கம் – அவனைப் பற்றும்போது ஏற்படுகின்ற தடைகளை நீக்கும் தன்மையை அருளிச்செய்கிறார். இங்கு தடை என்பது கைவல்ய அனுபவம் (ஆத்ம அனுபவம்) ஆகும். அதனைத் தடை என்று ஏன் கூற வேண்டும்? இந்த்ரபதவியை அடைய எண்ணுபவன் வேறு தாழ்ந்த ஐச்வர்யங்களை விரும்பமாட்டான் ; ப்ரஹ்மபதத்தை அடைய எண்ணுபவன் இந்திரபதவியில் கண் வைக்கமாட்டான்; ஆத்மஅனுபவத்தில் ஆசை கொண்டவன் ஐச்வர்யத்தில் கண் வைக்கமாட்டான். அனைத்து திருக்கல்யாண குணங்களும் கொண்டவனும், திவ்யமான மங்களவிக்ரஹத்தை உடையவனும் ஆகிய எம்பெருமானைப் பற்றுபவன் மேலே உள்ள எதிலும் ஈடுபடமாட்டான். ஆக இங்கு தடையாக உள்ளதை அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் - (அற்றது பற்றெனில்) ப்ரக்ருதி ப்ராக்ருதங்களிலுண்டான பற்று அற்றது என்னுமளவிலே. (உற்றது வீடுயிர்) ஆத்மா மோக்ஷத்தை ப்ராபித்தது. விலக்ஷண ஜ்ஞாநத்தையும் ஸ்வரூபத்தையுமுடைய வஸ்துவுக்குத் திரோதாநத்தைப் பண்ணுகிற அசித் ஸம்ஸர்க்கமிறே; யோகாப்யாஸத்தாலே கழிந்தவாறே ஸ்வரூபம் ப்ரகாஸிக்கும்; அது நித்யமாய், ஜ்ஞாநாநந்த லக்ஷணமாயிருக்கையாலே "இது தன்னையே அநுபவிக்க அமையாதோ?" என்று தன்பக்கலிலே கால் தாழப்பண்ணும். (செற்றது) அத்தைச் செற்றது - அத்தை முகம் சிதறப் புடைத்து. (மன்னுறில்) மன்னவுறில். தன்னைப் பற்றினால் "இன்னமும் அதுக்கு அவ்வருகே ஒரு அநுபவமுண்டு" என்றிருக்க வேண்டாதபடியான நிலை புருஷார்த்தத்தைப் பற்றப் பார்க்கில். (அற்றிறை பற்றே) ஆச்ரயண காலத்திலே அவனுக்கு என்று அத்யவஸித்து, சேஷியான அவனைப் பற்றப் பாருங்கோள். அன்றியே, விபக்தியை மாறாடி, இறையைப்பற்றி இத்தை அறப் பார் என்னுதல். "மாற்பால் மனஞ்சுழிப்ப மங்கையர் தோள் கைவிட்டு" என்னுமாபோலே.

விளக்கம் – (அற்றது பற்றெனில்) – உடலும், உடல் தொடர்புடைய பொருள்களும் ஆகிய இவற்றில் உண்டான ஆசை நீங்கியது என்னும் நிலையில். (உற்றது வீடுயிர்) – ஆத்மா மோக்ஷத்தை அடைந்தது (கைவல்யத்தில் இச்சை பிறக்கும் என்று கருத்து). வேறுபட்ட ஞானம் மற்றும் ஸ்வரூபம் கொண்ட ஆத்மாவுக்கு உடல் தொடர்பு காரணமாக ஞானமறைவு உண்டாகிறது. யோகம் மூலம் அந்த மறைவு நீங்கியவுடன் ஸ்வரூபம் புலப்படும். அது நித்யமான, ஞானமயமான, ஆனந்தமயமான தன்மை கொண்டதால் "இந்த ஆத்மா தன்னையே அனுபவிக்க அமையாதோ" என்று தன்பக்கம் அகப்படுத்திக் கொள்ளும் (அதாவது கைவல்ய அனுபவத்தில் சிக்கிக் கொள்ளும்). செற்றது – அத்தகைய ஆத்மானுபவம் தலைதூக்க இயலாதபடி செய்து. (மன்னுறில்) – எம்பெருமானைப் பற்றினால், "இன்னமும் அதற்கு மேல் ஓர் புருஷார்த்தம் உண்டு" என்று கூற முடியாதபடி உள்ள நிலையான புருஷார்த்தத்தைப் பற்ற ஆசை மேலிடும்போது. (அற்றிறை பற்றே) – அவனை அடைகின்ற காலத்திலே அவனுக்கு என்று உறுதி செய்து, எஜமானனாக அவனையே பற்றியபடி இருக்க முயலவேண்டும். இதற்கு மூன்றாம்திருவந்தாதி (14) - மாற்பால் மனஞ்சுழிப்ப மங்கையர் தோள் கைவிட்டு – என்னும்படி எம்பெருமானைப் பற்றி மற்றவற்றை அறுக்கவேண்டும் எனலாம்.

1-2-6 பற்றில னீசனும் முற்றவும் நின்றனன்
பற்றிலை யாய்அவன் முற்றி லடங்கே

பொருள் – இந்த உலகில் உள்ள பல உயிர்களின் மீது பற்று கொண்டவன்; உலகத்துப் பொருள்கள் அனைத்துமாக ஸர்வேச்வரன் நிற்கிறான். ஆகவே நீயும் ஸம்ஸாரத் தொடர்பைக் கைவிட்டு அவனுடைய தொண்டுகளில் சேர்ந்து நிற்க முயல்வாயாக.

அவதாரிகை - பற்றுமிடத்தில் வரும் அந்தராயபரிஹாரம் சொன்னார் கீழ்; நீர் பரிஹாரம் சொல்லுகைக்கு அவாப்தஸமஸ்தகாமனாய், சேஷியாய் இருக்கிற அவன்தான் நமக்குக் கைப்புகுந்தானோ? என்ன; அவன் பக்கல் திருத்தவேண்டுவதொன்றில்லை, அவன் ஸங்கஸ்வபாவன் என்கிறார்.

பொருள் – கடந்த பாசுரத்தில் அவனைப் பற்றுதலுக்கு வரக்கூடிய தடைகளை நீக்குதல் குறித்து அருளிச்செய்தார். ஸம்ஸாரிகள் ஆழ்வாரிடம், "நீங்கள் பரிகாரம் சொல்லும்படி அனைத்து விருப்பமும் முழுவதுமாக பூர்த்தி அடைந்து நமக்குப் புகும்படி அவன் நிற்பானோ?" என்றனர். இதற்கு ஆழ்வார், "அவன் பக்கம் திருத்த வேண்டுவது ஏதும் இல்லை. அவன் பற்றுக்கு இருப்பிடமானவன்", என்கிறார்.

வ்யாக்யானம் - (பற்றிலன்) பற்றுண்டு – ஸங்கம். அத்தை வாஸஸ்தாநமாக உடையவன். பற்றிலான் என்னுமத்தை "பற்றிலன்" என்று குறைத்துக்கிடக்கிறது. "இன்னான் இங்குண்டோ?" என்றால், "இங்கில்லையவன், அகத்திலான்" என்னக்கடவதிறே. (ஈசனும்) ஈச்வரத்வம் கழற்றவொண்ணாமையாலே கிடக்குமித்தனை. இஸ்ஸங்கம் குணமாகைக்காகக் கிடக்கிறது, பயப்படுகைக்கு உடலன்று. பெரியவன் எளிமையிறே குணமாவது.

விளக்கம் – (பற்றிலன்) – அன்பை இருப்பிடமாகவே கொண்டவன். பற்றிலான் என்பது பற்றிலன் என்று மாறி உள்ளது. பற்றிலான் என்று ஒரு பதம் இந்த உலகினரால் கூறப்படுமோ என்றால், ஒருவன் மற்றொருவனிடம், "அந்த மனிதன் இங்கு உள்ளானா?" என்று கேட்க, "அவன் இங்கு இல்லை, அகத்தில் உள்ளவன்" என்று கூறுவது போல், பற்றிலான் என்பதும் கூறலாம். (ஈசனும்) – ஈச்வரத்தன்மையை அகற்ற இயலாமல்

உள்ளான். அப்படிப்பட்ட ஈச்வரத்தன்மை என்பது அவனை அண்டுபவர்களுக்கு அவனிடம் அச்சத்தை ஏற்படுத்தக்கூடுமே என்றால், அப்படி இல்லை – அவனது எளிமைத் தன்மையே அவனிடம் குணமாக உள்ளது.

வ்யாக்யானம் - ப்ரஸாதபரமௌ நாதௌ, தண்ணளியே இவர்களுக்கு விஞ்சியிருப்பது; மேன்மை கழற்றவொண்ணாமையாலே கிடந்த இத்தனை. இரண்டும் அவ்வாச்ரயகதமாயிருக்க, தண்ணளியே உள்ளதென்றறிந்தபடி என்னென்னில், மம கேஹமுபாகதௌ சேஷிகளாயிருப்பார்க்கு சேஷபூதரை அழைத்துக் கார்யங் கொள்ளலாயிருக்க, நெடுந்தெருவே போகிறவர்கள் நானிருந்த முடுக்குத் தெருத்தேடி வந்த போதே ப்ரஸாதமே விஞ்சியிருக்கும் என்னுமிடம் தெரிந்ததில்லையோ? தந்யோஹம் என்றுமொக்க ஸஞ்சரிக்கிற வழியிலே நிதியெடுப்பாரைப்போலே. அர்ச்சயிஷ்யாமி என்னுடைய ஸ்வரூபாநு ரூபமான வ்ருத்தியிலே அந்வயித்து அழித்துக்கெடுத்து ஜீவிக்கப் பாராநின்றேன். இத்யாஹ சூட்டுநன்மாலைகள் தூயனவேந்திநிற்பார் சொல்லக்கடவ பாசுரத்தை இவன் சொல்லுவதே என்று ருசி கொண்டாடுகிறான். மால்யோபஜீவந: பூவில் கண்வைத்துத் தொடுக்கில் சாபலம் பிறக்குமென்று கண்ணை மாற வைத்துத் தொடுத்து, பூவிற்று ஜீவிக்கும் அத்தனை புல்லியன் சொல்லும் வார்த்தையே ஈது என்கிறார்.

விளக்கம் – இவனது எளிமை என்பது இவனது குணமாகவே உள்ளது என்பதை நாம் எங்காவது உணரும்படிக் கூறப்பட்டதோ என்றால், விஷ்ணுபுராணம் (5-8) - ப்ரஸாதபரமௌ நாதௌ - என்பதில் காணலாம். இங்கு மதுராவிற்குக் கண்ணனும் பலராமனும் விஜயம் செய்தபோது அவர்கள் மாலை தொடுப்பவனின் இல்லத்திற்குச் சென்ற நிகழ்வு கூறப்படுகிறது. அவனைத் தேடிச் சென்ற அவர்கள் இருவருக்கும் குளிர்ச்சியே (எளிமை) அதிகமாக இருந்தது. அவர்களிடம் பரத்வமும் ஸௌலப்யமும் சமமாக இருந்தபோதிலும் எளிமையே வெளிப்பட்டது என்று அறிந்தது எப்படி? அந்த மாலைக்காரன், "எஜமானனாக உள்ளவர்கள் தங்களது அடிமைகளைத் தாங்கள் இருக்கும் இடத்திற்கு அழைத்துக் காரியம் செய்யும்படிப் பணிப்பார்கள். ஆனால் இவர்களோ ராஜவீதி வழியாக நடந்து செல்லும்போது, எனது வீடு உள்ள முட்டுச்சந்துக்குள் நுழைந்து என்னைத் தேடி வந்தபோதே இவர்களது எளிமை புலப்படுகிறதே", என்று வியந்தான். மேலும் அவன், "செல்கின்ற வழியிலே நிதி எடுப்பவர்கள் போன்று, என்னுடைய

ஸ்வரூபத்திற்கு எற்றதான அடிமைத்தொழிலில் என்னை ஈடுபடுத்தி, அவன் விருப்பத்தின்படி என்னை எடுத்துக் கொள்வதைக் கண்டு நின்றேன்," என்றான். அதாவது திருவிருத்தம் (21) - சூட்டுநன்மாலைகள் தூயனவேந்திநிற்பார் – என்னும் பாசுரத்தை இவன் கூறும்படியாக நின்றான் என்று வ்யாசபகவான் கொண்டாடுகிறார். அந்த மாலை தொடுப்பவன், தான் தொடுக்கும் மலர் மீது தனது கண்ணை வைத்துத் தொடுத்தால், கண்ணன் மீது உள்ள ஈடுபாடு குறைந்து மாலை மீது ஈடுபாடு உண்டாகிவிடும் என்று எண்ணி, தனது கண்ணை மாறவைத்துத் தொடுத்தான். இப்படியாக பூவை வைத்துப் பிழைக்கின்ற ஒருவன் கூறும் சொற்களே இவை என்கிறார்.

வ்யாக்யானம் - (முற்றவும் நின்றனன்) ஸமோஹம் ஸர்வபூஹேஷு என்கிறபடியே ஆச்ரயணீயத்வே ஸமனாய் நின்றான். இத்தாலே இருந்தபடி இருக்க, தான் எல்லார்க்கும் ஒத்திருக்கை. (பற்றிலையாய்) நீயும் பற்றிலையாய் – நீயும் பற்றையுடையையாய் - ஸங்கத்தையுடையையாய். (அவன் முற்றிலடங்கே) அஹம் ஸர்வம் கரிஷ்யாமி என்கிறபடியே அவனுடைய எல்லாக் கைங்கர்யத்திலும் அந்வயி.

விளக்கம் (முற்றவும் நின்றனன்) - – கீதை (9-29) ஸமோஹம் ஸர்வபூஹேஷு – அனைத்து உயிர்களுக்கும் நான் ஒத்தவன் – என்னும்படி அனைவரும் அடையும்படியாக, அனைவருக்கும் ஒரே போன்று உள்ளான். மற்ற உயிர்கள் தங்களது ஒழுக்கம், பிறப்பு மற்றும் ஞானம் ஆகியவற்றால் சிறிதும் மாறாமல் இருக்க தான் அனைவருக்கும் ஒத்தவனாக இருத்தல். (பற்றிலையாய்)– நீயும் அவனிடன் பற்றை உடையவனாக. (அவன் முற்றிலடங்கே)– அஹம் ஸர்வம் கரிஷ்யாமி – நான் அனைத்து அடிமைகளையும் செய்வேன் – என்னும்படி எம்பெருமானிடம் சேர்ந்து, அவனது அனைத்து கைங்கர்யங்களிலும் நிற்பாயாக.

வ்யாக்யானம் - அதாவா பட்டர் அருளிச்செய்யும்படி; (பற்றிலன் ஈசனும்) வாஸுதேவோஸி பூர்ண: என்கிறபடியே ஸம்ஸ்த கல்யாண குணாத்மகனாய், ஜ்ஞாநா நந்தாமல ஸ்வரூபனாய், திரைமாறின கடல்போலே, ஈசிதவ்யரான நித்யஸூரிகளை உடையனாய், பரமபத்த்திலே எழுந்தருளியிருக்கிறவனும் அவர்கள் பக்கல் பற்றுடைய வனல்லன். அவர்கள் பக்கல் பற்றுடையவனன்றிக்கேயிருந்தால் குறைபட்டிரானோ

என்னில் (முற்றவும் நின்றனன்) அவர்களெல்லாராலும் வரும் ஏற்றமும் இன்று ஆச்ரயிக்கிற இவனாலேயாம்படி நின்றான்.

விளக்கம் – இனி இந்தப் பாசுரத்திற்கு ஸ்வாமி பராசரபட்டர் அருளிச்செய்த கருத்து காண்போம். (பற்றிலன் ஈசனும்)– கீதை வாஸுதேவோஸி பூர்ண: - எங்கும் நிறைந்து பூர்ணமாக – வாஸுதேவனாக உள்ளாய் – என்னும்படி அனைத்துவிதமான திருக்கல்யாண குணங்களுடன் கூடியவனாக; ஞானம், ஆனந்தம், தோஷங்கள் இன்மை போன்ற வடிவு கொண்டவனாக; ஏவப்படும் நித்யசூரிகளைக் கொண்டவனாக; திரைமாறின கடல் போன்று பரமபதத்தில் எழுந்தருளி உள்ளவனாக இருக்கும் எம்பெருமான் விண்ணுலகில் உள்வர்களிடம் பற்றில்லாமல் உள்ளான். அவர்கள் பக்கம் பற்றுடையவனாக இல்லாமல் உள்ளபோது, குறைபாடு கொண்டவனாக உள்ளான் அல்லவோ என்ற சந்தேகம் எழலாம். அப்படி அல்ல, (முற்றவும் நின்றனன்) – அவர்களது எஜமானன் என்பதான தனது பெருமைகள் பலவும், இன்று வந்து அடைகிற ஜீவனாலே உண்டாகிறது என்னும்படி நிற்கிறான்.

வ்யாக்யானம் - த்வயி சிஞ்சித் ஸமாந்பந்நே கிம் கார்யம் ஸீதயா மம என்னுமாபோலே, இன்று ஆச்ரயித்ததொரு திர்யக்குக்கு ஒரு வாட்டம்வரில் நித்யாச்ரிதையான பிராட்டியாலும் கார்யமில்லை. அன்று ஈன்ற கன்றின் பக்கல் வாத்ஸல்யத்தாலே முன்னணைக் கன்றையும் கொம்பிலே கொள்ளுமாபோலே. (பற்றிலையாய்) விடவொண்ணாதாரை நீ ஒருதலையாக விட்டான் அவன். அவன் ஒரு தலையானால் விடலாமவற்றை விடத் தட்டென் உனக்கு? (அவன் முற்றிலடங்கே) அவனை எல்லாமாகப் பற்றப் பார்; வாஸுதேவஸ் ஸர்வம் என்கிறபடியே மாதா பிதா ப்ராதா நிவாஸ: சரணம் ஸுஹ்ருத் கதிர் நாராயண, ஏகைகபலலாபாய ஸர்வலாபாய கேசவ:

விளக்கம் – மேலே கூறியபடி தன்னை வந்து அண்டிய ஜீவனால் தனது பெருமை உண்டாகிறது என்று எம்பெருமான் உள்ளான் எனக் கூறுவதற்கு ஓர் உதாரணம் காட்ட இயலுமோ? த்வயி சிஞ்சித் ஸமாந்பந்நே கிம் கார்யம் ஸீதயா மம – என்றும் என்னை அண்டி நிற்கின்ற பிராட்டியாலும் எனக்குச் செயல் இல்லை, சுக்ரீவனுக்கு ஒரு துன்பம் வந்தால் – என்றது காண்க. அதாவது, தான் அப்போது ஈன்ற கன்றுக்கு ஆபத்து வரும் என்றால், பசுவானது தான் முன்னர் ஈன்ற கன்றைக் கூட தனது கொம்பாலே தள்ளிவிடும்

என்பது போன்று எம்பெருமான் உள்ளான். (பற்றிலையாய்) – கைவிட இயலாத நித்யசூரிகள் ஒரு பக்கம் நிற்க, நீ (இங்கு நீ என்று தனது மனதைக் கூறுகிறார்) ஒரு பக்கம் நிற்க, அவர்களை விட்டு உன்னைப் பற்றினான். இப்படி அவன் மாணிக்கத்தைக் கைவிட்டு கரியைப் பற்றியது போன்று, நித்யஸூரிகளை விட்டு உன்னைப் பற்றினான். இப்படி உள்ளபோது கரி போன்ற உலகவிஷயங்களை நீ கைவிட்டு மேலான மாணிக்கமான அவனைக் கைப்பிடிக்க என்ன தடை உள்ளது?(அவன் முற்றிலடங்கே) - அவனையே அனைத்துமாக, அனைத்துவிதமான பந்துவாகப் பற்றுவதற்கு முயல்வாயாக. வாஸுதேவ: ஸர்வம் - வாஸுதேவனேஅனைத்தும்; சுபால உபநிஷத் - மாதா பிதா ப்ராதா நிவாஸசரணம் ஸுஹ்ருத் கதிர் நாராயண : – தாய், தகப்பன், சகோதரன், வீடு, காப்பாற்றுபவன், நண்பன், கதி ஆகிய அனைத்தும் நாராயணனே ஆவான்; ஏகைகபலலாபாய ஸர்வலாபாய கேசவ: - ஒவ்வொறு சுற்றமும் ஒவ்வொரு லாபம் மற்றும் லாபம் அற்றதாக இருக்கும், ஆனால் அனைத்து லாபமாக கேசவனே உள்ளான்.

1-2-7 அடங்கெழில் சம்பத்து அடங்கக்கண்டு ஈசன்
அடங்கெழி லஃதென்று அடங்குக வுள்ளே.

பொருள் –அடக்க இயலாத அழகான செல்வங்கள் அனைத்தையும் பார்த்து, அது ஸர்வேச்வரனுடையது என்று எண்ணி அந்தச் செல்வத்துள் நீயும் ஒரு செல்வம் என்று அடங்குவாயாக.

அவதாரிகை - ஸங்கஸ்வபாவன் என்றார் கீழ்; அவன் ஸங்கஸ்வபாவனானாலும் அபரிச்சிந்நோபயவிதமஹாவிபூதியை உடையனாயிருந்தான் அவன்; இவன் அதிக்ஷுத்ரனாய் க்ஷுத்ரோபகரணனாயிருந்தான்; ஆனபின்பு அவனை இவனாலே கிட்டலாயிருந்ததோ? கடலிலே புக்க துரும்பானது இரண்டு தலையிலும் நினைவின்றிக்கேயிருக்கத் திரைமேல் திரையாகத் தள்ளுண்டு போந்து கரையிலே சேருகிறதில்லையோ? அப்படியே அவனுடைய ஐச்வர்யதரங்கமானது இவனைத் தள்ளாதோ என்னில்; இந்த ஐச்வர்யமெல்லாம் நமக்கு வகுத்த சேஷியானவனுடைய ஐச்வர்யம் என்று அநுஸந்திக்கவே, தானும் அதுவாய் அந்வயிக்கலாமிறே; ஆன பின்பு, ஸம்பந்த ஜ்ஞாநமே வேண்டுவது என்கிறார்.

விளக்கம் – அடியாரிடம் பற்றுதலுடன் இருப்பதையே தனது இயல்பாகக் கொண்டவன் என்று கூறினார். ஸர்வேச்வரன் பற்றுதலை இயல்பாகக் கொண்டவனாக உள்ளபோதிலும், அளவிட இயலாத லீலாவீபூதி மற்றும் நித்யவிபூதி ஆகியவற்றைக் கொண்டுள்ளான். ஆனால் சேதனனோ மிகவும் சிறியவனாக, மிகவும் சிறிய உபாயம் கொண்டவனாக உள்ளான். அப்படி உள்ளபோது, ஸர்வேச்வரனைச் சேதனரால் கிட்ட இயலுமோ? கடலில் விழுந்த துரும்பு ஒன்று, இரண்டு விதங்களிலும் (கடலுக்கும் தள்ளவேண்டும் என்ற எண்ணம் இல்லை, துரும்புக்கும் தள்ளப்போகிறது என்ற எண்ணம் இல்லை) கரை சேராமல் உள்ளபோதிலும், அலை மீது அலையாகத் தள்ளுண்டு கரையில் சேர்கிறது அல்லவோ? அது போன்று ஸர்வேச்வரனின் ஐச்வரிய அலை இவனைத் தள்ளாதோ என்றால் - இந்த ஐச்வர்யம் அனைத்தும் நமக்கு இயல்பாகவே எஜமானனாக உள்ள ஸர்வேச்வரனின் ஐச்வர்யம் என்று நினைத்தால், தானும் அதுவாகவே சேரலாம். ஆன பின்னர, ஸம்பந்த ஞானம் மட்டுமே வேண்டும் என்கிறார்.

அவதாரிகை - ஒரு வ்யாபாரி, ஸ்த்ரீ கர்ப்பிணியான ஸமயத்திலே அர்த்தார்ஜநம் பண்ண வேணுமென்று போவது; அவளும் பிள்ளை பெற்று, அவனும் பக்வனாய்த் தனக்கு தமப்பனாருடைய வ்யாபரமே யாத்ரையாய், அவனும் போய், இவரும் சரக்குப் பிடித்துக்கொண்டு வந்து ஒரு பந்தலிலே தங்குவது; அது இருவருக்கும் இடம் போராமையாலே அம்பறுத்து எய்யவேண்டும்படி விவாதம் ப்ரஸ்துதமான ஸமயத்திலே, இருவரையும் அறிவானெருவன் வந்து "இவன் உன் பிதா; நீ அவன் புத்திரன்" என்று அறிவித்தால், கீழ் இழந்த நாளைக்கு சோகித்து, இருவர் சரக்குமொன்றாய், அவன் ரக்ஷகனாய், இவன் ரக்ஷ்யமாய் அந்வயித்துவிடுமிறே.

விளக்கம் – ஒரு வியாபாரி தனது மனைவி கருவுற்று இருக்கின்ற காலத்தில் வெளியூர் சென்றான். அதன் பின்னர் அவள் பிள்ளை பெற்றாள். அந்த மகன் வளர்ந்து, தனது தந்தையின் தொழிலையே கைக்கொண்டு, தந்தை சென்ற ஊருக்கே புறப்பட்டான். அங்கு இருவரும் ஒருவரை ஒருவர் அறியாமல், ஒரே இருப்பிடத்தில் சரக்குகளுடன் வந்து தங்கினர். அங்கு இடம் போதாத காரணத்தினால் ஒருவரை ஒருவர் அம்பு எய்து போர் புரியும் அளவிற்குச் சண்டை செய்துகொண்டனர். அப்போது இந்த இருவரையும் அறிந்த ஒருவன் அங்கு வந்து, "இவன் உன் தந்தை, நீ அவன் புத்திரன்", என்று கூறினால் இருவரும் இத்தனை நாள் சந்திக்காமல் இருந்ததை எண்ணி வருந்தி, இருவரின்

சரக்குகளும் ஒன்றே எனக்கொண்டு, ஒருவன் காப்பாற்றுபவனாகவும், ஒருவன் காப்பாற்றப்படுபவனாகவும் மாறுவது இயல்பு அல்லவோ?

அவதாரிகை - ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே. ஜீவாத்மாவும் பரமாத்மாவும் தேஹமாகிற வ்ருக்ஷத்தைப் பற்றி இருந்தால், ஒருவன் கர்ம பலங்களை புஜியாநிற்கும்; ஒருவன் புஜிப்பித்து விளங்காநிற்கும். அவன் நியாமகன்; நாம் நியாம்யனென்னும் முறையறியவே பொருந்தலாமிறே. ராஜபுத்திரன் ஒரு உத்யாநத்தைக் கண்டு புக அஞ்சினால், "உன் தமப்பனது காண்" என்னவே, நினைத்தபடி புக்குப் பரிமாறலாமிறே; ஆனபின்பு, ததீயமென்னும் ப்ரதிபத்தியே வேண்டுவது; தானும் அதுக்குள்ளே ஒருவனாய் அந்வயிக்கலாம் என்கிறார்.

விளக்கம் – ஜீவனும் பரமாத்மாவும் தேஹம் என்ற மரத்தைப் பற்றி நிற்கும்போது ஒருவன் கர்மபலன்களை அனுபவித்தபடியும் (ஜீவன்), மற்றவன் அதனை நுகராமலும் இருப்பதைக் காணலாம். இதில் ஸர்வேச்வரன் நம்மை நியமிப்பவன், நாம் நியமிக்கப்படுபவர்கள் என்று இருக்கின்ற தன்மையை அறியலாம். ஓர் அரசகுமாரன் ஒரு தோட்டத்தைக் கண்டு அதற்குள் புகுவதற்கு அஞ்சுகிறான் என்று வைத்துக்கொள்வோம். அப்போது ஒருவன், "இது உன் தந்தையுடைய தோட்டம்", என்று கூற, ராஜகுமாரன் நினைத்தபடி நடந்துகொள்வான் அல்லவா? அதன்பின்னர் ராஜகுமாரனுக்கு, "இவை அனைத்தும் அரசனின் உடைமை என்ற எண்ணம் இருந்தாலும், தானும் அந்த உடைமையில் ஒருவன் என்ற எண்ணமும் இருக்கலாம்", என்கிறார். இங்கு அரசன் = ஸர்வேச்வரன், ராஜகுமாரன் = ஜீவாத்மா, வந்து உபதேசித்தவன் = ஆசார்யன் என்று கொள்ளவேண்டும்.

வ்யாக்யானம் - (அடங்கெழில் சம்பத்து அடங்கக் கண்டு) போகபூமியாய் இருக்கும் நித்யவிபூதி கர்மநிபந்தநமாக அவனாலே நியாம்யமாய் இருக்கும் இவ்விபூதி; அதில் ததீயமென்று அநுஸந்திக்கப் புக்கவாறே, கர்மநிபந்தநமான ஆகாரம் தோற்றாதே ததீயத்வாகாரமேயிறே தோற்றுவது. (அடங்கெழில் இத்யாதி) கட்டடங்க நன்றான ஸம்பத்தை எல்லாங் கண்டு, நமக்கு வகுத்த ஸ்வாமியானவனுடைய ஸம்பத்து இதெல்லாம் என்று அநுஸந்தித்து, அவ்விபூதிக்குள்ளே தானும் ஒருவனாய் அந்வயிக்கப்

பார்ப்பது; அப்போது சேக்ஷிக்கு அதிசயத்தை விளைத்தானாகலாமிறே. சேஷபூதனுடைய ஸ்வருபஸித்தி, சேஷிபக்கல் கிஞ்சித்காரத்தாலேயாயிருக்குமே.

விளக்கம் (அடங்கக் கண்டு அடங்கெழில் சம்பத்து) - – இன்பத்தின் எல்லையாக இருக்கின்ற நித்யவிபூதி, கர்மத்தின் வசப்பட்டு அவனுடைய நியமனத்தின் அடிப்படையில் இயங்கும் இந்த லீலாவிபூதி. இதனை, "ஸர்வேச்வரனின் உடைமை" என்று எண்ணினால் மட்டுமே கர்மம் காரணமான தன்மைகள் ஏற்படாது; அவனுடைய உடைமை என்ற எண்ணமே தோன்றும். (அடங்கெழில் இத்யாதி) – எல்லையற்ற செல்வங்கள் அனைத்தையும் கண்டு, "நமக்கு இயல்பான எஜமானனாக இருக்கு ஸர்வேச்வரனுடைய செல்வமே இவை அனைத்தும்", என்று எண்ணி, அந்தச் செல்வத்திற்குள் தானும் ஒருவன் சேரக்கூடும். இப்படிச் சேர்ந்தால் அந்த எஜமானனுக்கு ஓர் அதிசயத்தை அந்த அடிமை உண்டாக்கினான் என்றாகும். "எஜமானனுக்கு மேன்மையை உண்டாக்குவதன் மூலம் அந்த அடிமைக்கு என்ன பயன் உள்ளது?" என்று கேட்கலாம். அந்த அடிமைக்கு தன்னுடைய ஸ்வரூபத்தை பற்றிய ஞானம், அந்த அடிமைத்தனம் கிட்டுதல் போன்றதே பலனாக உள்ளன.

வ்யாக்யானம் - (அடங்குக உள்ளே) ஸ்வஸ்வாமிபாவ ஸம்பந்த ஜ்ஞாநமடியாகத் தானும் அவன் விபூதியிலே ஒருவனாய் அந்வயிக்கலாமிறே; ஸமுத்ரம் அபரிச்சிந்நமானாலும் அதினுள்ளில் ஸத்வங்களுக்கு வேண்டினபடி புகலாமிறே; அதுபோலே ஸம்பந்த ஜ்ஞாநமடியாகக் கிட்டலாம்; ஸம்பந்த ஜ்ஞாநமில்லாத த்ருணத்தையிறே கடல் கரையிலே ஏறத் தள்ளுவது. ஸம்பந்த ஜ்ஞாநம் பிறப்பிக்கையிறே கடகக்ருத்யம்.

விளக்கம் – (அடங்குக உள்ளே) எல்லையற்ற காலம் அவனுடைய விபூதிக்குளே அனைத்தும் அடங்கி உள்ளன. அப்படி உள்ளபோது இங்கு மீண்டும் "அடங்குக" என்று ஏன் கூறவேண்டும்? ஈச்வரனின் கீழ் ஏற்கனவே அடங்கியதாக உள்ளபோதிலும், அந்த அனைத்தையும் அவனே உடமையாகக் கொண்டவன் என்ற ஞானத்தின் அடிப்படையிலே நின்று அவன் கீழ் அடங்க வேண்டும். கடலானது எல்லையற்ற பொருள்களைத் தன்னுள்ளே கொண்டுள்ளது. ஆனால் ஏதோ ஒரு பொருள் தான் கடலுக்குச் சொந்தம் அல்ல என்று எண்ணினால், அதனை மட்டும் கரையில்

தள்ளிவிடுகிறது அல்லவோ? இப்படிப்பட்ட ஞானம் ஏற்பட வைப்பது யாருடைய செயல் என்றால் ஆசார்யனின் செயல் ஆகும்.

1-2-8. உள்ள முரைசெயல் உள்ளவிம் மூன்றையும்
உள்ளிக் கொடுத்துஇறை யுள்ளி லொடுங்கே

பொருள் – மனம், வாக்கு, உடல் ஆகிய மூன்றையும் நன்கு ஆராய்ந்து, அவற்றை உலக விஷயங்களில் இருந்து மீட்டு, ஸர்வேச்வரனிடம் சேர்ப்பாயாக.

அவதாரிகை - அவனுக்கு விபூதியாய் அந்வயித்தால், பின்னை தானும் தனக்கென்னச் சில கரணங்களும் என்று உண்டாய், பஜித்தானாகை அரிதாயிருந்ததே என்ன; பஜந ப்ரகாரத்தை அருளிச்செய்கிறார்.

விளக்கம் – "ஸர்வேச்வரனுக்கே உரிய செல்வங்களுள் தானும் ஒன்றாக இருந்தல் என்ற அறிந்த பின்னர், தனக்காகச் சிலவற்றை யாரும் காண இயலாதே! அப்படி இருந்தால் அல்லவோ அவனை வணங்க முடியும்?" என்ற கேள்வி எழலாம். ஸர்வேச்வரன் தனக்காக அளித்த மனம், வாக்கு மற்றும் உடல் ஆகியவற்றை அவனுக்காக ஆக்குதல் என்பதே வணங்குதல் ஆகும் என்று வணங்கும் முறையை அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் – (உள்ளமுரை செயல்) பாஹ்யவிஷயங்களிலே ப்ரவணமாகிற மநஸ்ஸை ப்ரத்யக்காக்கினவாறே பகவதநுஸந்தாநத்துக்கு உடலாமே. அவ்வநுஸந்தாநம் வழிந்து "பொங்கேழ் புகழ்கள் வாயவாய்" என்கிறபடியே சொல்லாய்ப் புறப்படுகைக்கு உடலாமிறே வாக்கு; குணைர்தாஸ்யமுபாகத: என்கிறபடியே திருவடிகளிலே விழுந்து ஸகல கைங்கர்யங்களும் பண்ணுகைக்கு உடலாயிருக்குமிறே உடம்பு. (உள்ள இம்மூன்றையும்) இவைதான் இன்றாக ஸம்பாதிக்க வேண்டாதே, சேஷியான தான் இவற்றை உண்டாக்கி வைத்தானே; இவையும் வேறே சிலவும் தேடவேண்டாவே; இங்கே "தாமுளரே", "நாவாயிலுண்டே" இத்யாதிகளை யோஜித்துக்கொள்வது; உள்ள இம்மூன்றையும் உள்ளுவது. "இவைதான் எதுக்காகக் கண்டது? இவைதான் இப்போது இருக்கிறபடியென்?" என்று ஆராய்ந்து பார்த்தால், அப்ராப்த விஷயங்களிலே ப்ரவணமாயிருக்கும். (கெடுத்து) கெடுப்பது அவற்றினின்றும் மீட்பது. (இறையுள்ளில்

ஒடுங்கே) பாழிலே மேட்டிலே பாய்கிற நீரைப்பள்ளத்திலே பயிரிலே பாய்ச்சுவாரை போலே ப்ராப்த விஷயத்திலே ஆக்கப் பார்ப்பது. ஒடுங்கென்னுதல்; ஒடுக்கென்னுதல்; மெல்லினமான ஙகரத்தை வல்லொற்றாக்கி ஒடுக்கென்று கிடக்கிறதாதல்.

விளக்கம் – (உள்ளமுரை செயல்) – உலக விஷயங்களின் மீது விருப்பத்தைச் செலுத்துகின்ற மனதை உட்பொருளை நோக்கும்படிச் செய்வது என்னும் செயல், ஸர்வேச்வரனை எண்ணுவதற்குக் காரணமாக உள்ளது. அந்த நினைவு பொங்கி வழிந்து, (8-10-4) - பொங்கேழ் புகழ்கள் வாயவாய் - என்று சொல்லாக வெளிவரும்போது வாக்கு காரணமாகிறது. இராமாயணம் – கிஷ்கிந்தாகாண்டம் (4-12) குணைர்தாஸ்யமுபாகத: - இராமனின் குணங்களில் அடிமையாகக் கிடக்கின்றேன் - என்னும்படி ஸ்ர்வேச்வரனின் திருவடிகளில் விழுந்து, அவனுக்கு அனைத்துவிதமான கைங்கர்யங்களும் செய்வதற்குக் காரணமாக உடல் உள்ளது. (உள்ள இம்மூன்றையும்)– இம்மூன்றையும் யாரும் தேடிச் சென்று சம்பாதிக்க வேண்டாதபடி, எஜமானனாகிய தானே அவற்றை உண்டாக்கியும் வைத்தான். இவற்றையும், வேறு சிலவற்றையும் தேடவும் வேண்டாம். இங்கு இரண்டாம் திருவந்தாதி (22) – தாமுளரே, முதல் திருவந்தாதி (95) - நாவாயிலுண்டே - ஆகியவற்றைக் கண்டு கொள்க. உள்ள இந்த மூன்றையும் ஆரய்ந்து. "இவை எதற்காக படைக்கப்பட்டன? இவை இப்போது எந்த நிலையில் உள்ளன?" என்று ஆராய்ந்து பார்த்தால், அவை உலக விஷயங்களில் சிக்குண்டு இருப்பதைக் காணலாம். (கெடுத்து) – கெடுப்பது = உலக விஷயங்களில் இருந்து அவற்றை மீட்பது. (இறையுள்ளில் ஒடுங்கே) - மேட்டிலே பாய்கின்ற நீரைப் பள்ளத்தில் உள்ள பயிரில் பாய்ச்சுபவர்கள் போன்று, அடையத்தக்க பொருளான அவன் விஷயத்தில் உனது கரணங்களை ஒடுக்குவாய். ஒடுங்கென்னுதல் = கரணங்களைக் கொண்டு அவனை அண்டுதல். ஒடுக்கென்னுதல் = கரணங்களை அவன் விஷயத்தில் நிலைநிறுத்தல்; ஒடுங்கு என்பது ஒடுக்கு என்று எப்படி மாறும் என்று கேட்கலாம். மெல்லினமான "ங" என்பதை வல்லொற்றாக மாற்றி, ஒடுக்கு எனலாம்.

வ்யாக்யானம் - (தாமுளரே) தந்தாமைத் தேடவேண்டாவே. (தம்முள்ளம் உள்ளுளதே) "எனக்குச் சற்றுப்போது பகவத் விஷயத்தை நினைக்கைக்கு நெஞ்சு தரவேணும்" என்று தனிசு வாங்கவேண்டாவே; தாமுளரானால் உண்டான நெஞ்சுமுண்டே, (தாமரையின் பூவுளதே) கைக்குட்டும் பூவுண்டாக்கி வைத்தானே. "கள்ளார்துழாய்" என்று அங்குத்தைக்கு அஸாதாரணமான திருத்துழாயைச் சொல்லி, அத்தோடக்க "கணவலர்"

என்று காக்கணத்தையும், ஆம்பலையும் சொல்லுகையாலே அங்குத்தைக்கு ஆகாததில்லை என்றபடி; ஆகையாலே தாமரையின் பூவுளதே என்றது - எல்லாப் புஷ்பங்களுக்கும் உபலக்ஷணமான இத்தனை. (ஏத்தும் பொழுதுண்டே) காலத்தை உண்டாக்கி வைத்தானே; அது தனிசு வாங்கவேண்டாவே. (வாமன்) இதெல்லாம் வேண்டுவது அவன் அவனல்லவாகிலன்றோ! தன் உடைமை பெறுகைக்குத் தான் இரப்பாளனாவான் ஒருவனாயிருந்தானே. (திருமருவுதாள்) அவனுடைய ஐச்வர்ய ப்ரகாசகமான திருவடிகளென்னுதல்; வடிவிணையில்லா மலர்கள் மற்றை நிலமகள் பிடிக்கும் மெல்லடி என்னுதல்.

விளக்கம் – கடந்த பத்தியில் கூறப்பட்ட இரண்டு பாசுரங்களுக்கு வ்யாக்யானம் அருளிச் செய்கிறார். (தாமுளரே) – தன்னைத்தானே உண்டாக்கிக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை அல்லவோ? (தம்முள்ளம் உள்ளுளதே) – "எனக்குச் சிறிது காலம் பகவத் விஷயத்தை எண்ணுவதற்கு ஏற்றபடி மனம் அமையவேண்டும்" என்று யாரிடமும் கடன் வாங்கவேண்டாதபடி; தாமே அவனை எண்ணியபடி இருந்தால் மனமும் அப்படியே ஆகும். (தாமரையின் பூவுளதே) – அவனது திருவடிகளில் சேர்ப்பதற்கான தாமரை போன்ற மலர்களைக் கைக்கு எட்டும்படியாக வைத்தான். பெரியதிருமொழி (11-7-6) – கள்ளார்துழாய் – என்னும் பாசுரத்தில் திருத்துழாயைக் கூறிவிட்டு அதன் பின்னர் காக்கணம்பூ, ஆம்பல், பில்வம், குமுதம், தாமரை போன்ற பலவற்றையும் கூறியது காண்க. ஆக அவனது திருவடிகளுக்கு ஆகாது என்னும்படியான மலர்கள் ஏதும் இல்லை. ஆகவே இங்கு தாமரை என்று உரைத்தது அனைத்து மலர்களையுமே குறிப்பதாக உள்ளது. (ஏத்தும் பொழுதுண்டே) – அவனைப் புகழ்வதற்கான நேரத்தையும் யாரிடமும் கடன் வாங்கவேண்டாம், அதனையும் அவனே அளித்துள்ளான். (வாமன்) – இவை அனைத்தையும் நாம் சென்று ஒருவரிடம் கடன் வாங்கவேண்டிய நிலை எப்போது என்றால், அவன் வாமனனாக தாழ வந்து நிற்காமல், தனது மேன்மையை எண்ணி உயரத்திலேயே நின்றபடி இருந்தால் மட்டுமே ஆகும். ஆனால் அவன் அப்படிச் செய்யவில்லையே! தனது உடைமையைப் பெறும்பொருட்டு தான் யாசகம் பெறுபவனாக இறங்கினான் அல்லவோ? (திருமருவுதாள்) – அவனது ஐச்வர்யம் நிரம்பிய ஒளிரும்படியான திருவடிகள். திருவாய்மொழி (9-2-10) - வடிவிணையில்லா மலர்கள் மற்றை நிலமகள் பிடிக்கும் மெல்லடி – என்றது காண்க.

வ்யாக்யானம் – (மருவுசென்னியரே) மருவுகை – சேருகை. இப்படிப்பட்ட திருவடிகளிலே சேருகைக்குத் தலை ஆக்கிவைத்தானே. (வாமன்) அமரர் சென்னிப்பூவான திருவடிகளை நித்யஸம்ஸாரிகள் தலையிலும் வைப்பான் ஒருவனாய் இருந்தானே. இப்படி இருக்கச் செய்தே (செவ்வே அருநரகம் சேர்வதரிது) இவர்கள் ஸம்ஸாரத்துக்கு விலக்கடி தேடிக்கொண்டு போகிறபடி எங்ஙனேயோ?

விளக்கம் - (மருவுசென்னியரே) மருவுதல் – சேர்தல். இப்படிப்பட்ட தனது திருவடிகளில் சென்று சேரும்படியாக நமது தலைகளை அவனே ஆக்கிவைத்தான். (வாமன்) – நித்யஸூரிகளுக்கு மட்டுமே ஏற்றதான தனது திருவடி மலர்களை நம் போன்ற நித்யஸம்ஸாரிகள் தலையிலும் படும்படியாகச் செய்தான். இப்படியாக இவன் உள்ளபோது, (செவ்வே அருநரகம் சேர்வதரிது) – இவனது திருவடிகளைப் பற்றாமல், அவற்றை உதறித் தள்ளி, தாமாகவே முயன்று எதற்கு நரகத்தை நாடிச் செல்கின்றார்களோ?

வ்யாக்யானம் – (நாவாயிலுண்டே) இது முன்னம் புறம்பு தேடிப் போகவேண்டாவே. (நமோ நாரணா என்று ஓவாதுரைக்கும் உரையுண்டே) ஸஹஸ்ராக்ஷரீ மாலாமந்த்ரம் போலேயிருக்கையன்றிக்கே, எட்டெழுத்தாய், நடுவே விச்சோதியாதே சொல்லலாம் திருநாமம் உண்டாக்கி வைத்தானே. (மூவாத மாக்கதிக்கண் செல்லும் வகையுண்டே) புநராவ்ருத்தியில்லாத ப்ராப்யத்தை உண்டாக்கி வைத்தானே. (என்னொருவர் தீக்கதிக்கண் செல்லும் திறம்) இங்ஙனே இருந்தபின்பு இவர் தண்ணிய வழிதேடிப் போகிறபடி எங்ஙனேயோ?

விளக்கம் - (நாவாயிலுண்டே) – அவனைத் துதிக்க அவசியமான நாக்கு என்பது வெளியிலே சென்று தேடவேண்டிய அவசியம் இல்லாதபடி அவரவர்களிடமே உள்ளது. (நமோ நாரணா என்று ஓவாதுரைக்கும் உரையுண்டே) – ஸஹஸ்ராக்ஷரீ மந்த்ரம் என்பது கூறுவதற்கு மிகவும் கடினமானது, மூச்சைப் பிடித்தபடி கூறவேண்டும்; அப்படி கடினப்பட்டு உரைக்கவேண்டாதபடி, எட்டே எழுத்துக்கள் கொண்டதாக, நடுவில் எந்தவிதமான பிரிவும் இல்லாதபடியான திருநாமத்தை உண்டாக்கி வைத்துள்ளானே! (மூவாத மாக்கதிக்கண் செல்லும் வகையுண்டே) – மீண்டும் திரும்புதல் இல்லாத இலக்காகிய மோக்ஷத்தை உண்டாக்கி வைத்துள்ளான். (என்னொருவர் தீக்கதிக்கண்

செல்லும் திறம்) – இப்படியாக உயர்ந்த மார்க்கம் உள்ளபோது அதனைத் தவிர்த்து தாழ்வான மார்க்கங்களில் இந்த உலகினர் ஈடுபடுவது ஏனோ?

1-2-9 ஒடுங்க வவன்கண் ஒடுங்கலு மெல்லாம்
விடும்பின்னு மாக்கை விடும்பொழு தெண்ணே

பொருள் - அந்த ஸர்வேச்வரனிடம் சென்று சேரும்போது ஆத்மாவின் ஞானச் சுருக்கங்களும், அந்தச் சுருக்கத்தின் காரணமான அறியாமையும் கழிந்துவிடும். அதன் பின்னர் உயிரானது உடலை விட்டு எப்போது நீங்கும் என்று எண்ணியபடி காத்திருப்பாயாக.

அவதாரிகை - ஸம்பந்தஜ்ஞாநம் உண்டாகவே தன் சிறுமை பார்த்து அகல வேண்டாவென்றும், பஜநமாவதுதான், அவன் தனக்காகத் தந்த கரணங்களை அவனுக்கு உறுப்பாகுகை என்றும் சொல்லி நின்றார் கீழ் இரண்டு பாட்டாலே; இது தன்னரசுநாடாய் ப்ராப்தவிஷயம் அவனல்லாமை பஜியாதிருக்கிறோமோ? பஜந விரோதிகள் கனக்கவுண்டாகையன்றோ நாங்கள் பஜியாதொழிகிறது என்ன; நீங்கள் அவனைக் கிட்டவே அவையடைய விட்டுபோமென்கிறார் இதில்.

விளக்கம் – ஸர்வேச்வரனுக்கும் தனக்கும் உள்ள தொடர்பு குறித்த ஞானம் உண்டானவுடன் தன்னுடைய சிறுமையைக் கண்டும், அவனுடைய மேன்மையைக் கண்டும் அவனைவிட்டு அகலவேண்டாம் என்றும்; அவனை வணங்குவது என்பது அவன் தனக்காக அளித்த உடல், வாக்கு, மனம் ஆகியவற்றை அவனுக்காகவே பயன்படுத்த வேண்டும் என்றும் கடந்த இரண்டு பாசுரங்களில் அருளிச்செய்தார். ஸம்ஸாரிகள் ஆழ்வாரிடம், "இது தானாகவே அவனை அடையத்தக்க பொருளாகும். அவன் எளிதில் கிட்டாமையால் வணங்காமல் உள்ளோமே. எங்களை வணங்கவிடாமல் தடுக்கின்ற விரோதிகள் அதிகமாக உள்ளதால் அல்லவோ நாங்கள் அவனை வழிபடாமல் உள்ளோம்", என்றனர். இதற்கு ஆழ்வார், "நீங்கள் அவனை நெருங்கும்போது அவை அவை உங்களை விட்டு அகன்றுவிடும்", என்கிறார்.

வ்யாக்யானம் - (ஒடுங்க அவன்கண்) ப்ரகாரபூதரான நீங்கள் ப்ரகாரியான அவன் பக்கலிலே சென்று சேர. (ஒடுங்கலுமெல்லாம் விடும்) ப்ராப்தத்தைச் செய்ய, அப்ராப்தமானாவை எல்லாம் தன்னடையே விட்டுப்போம். ஸ்வரூபாநு ரூபமானத்தைச் செய்யவே, ஸ்வரூப விரோதிகளடங்க விட்டுப்போம். "ஒடுங்கல்" என்கையாலே இது ஸ்வரூபத்தில் கிடப்பதொன்றல்ல, ஸ்வரூப விரோதியாய்க் கொண்டு வந்தேறி என்னுமிடம் தோற்றுகிறது; அன்றிக்கே "ஒடுங்கல்" என்கிற மெல்லொற்றை ஒடுக்கலென்று வல்லொற்றாக்கி இவனுக்கு ஸங்கோசத்தைப் பிறப்பிக்குமவை என்னுதல்.

விளக்கம் (ஒடுங்க அவன்கண்) - – ப்ரகாரமாக உள்ள நீங்கள் ப்ரகாரியாக உள்ள அவனிடம் சென்று சேரும்போது. (ஒடுங்கலுமெல்லாம் விடும்) - அதாவது செய்யத்தக்கதை நீங்கள் செய்யும்போது, உங்களிடம் உள்ள மற்ற அனைத்தும் தாமாகவே உங்களை விட்டு நீங்கிவிடும். ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு ஏற்றதை நீங்கள் செய்ய, ஸ்வரூபத்திற்கு விரோதிகளாக உள்ள அனைத்தும் விலகிவிடும். "ஒடுங்கல்" என்பதன் மூலம் இவை ஆத்மாவிற்கு இயல்பானவை அல்ல என்றும், ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு விரோதியாக வந்தன என்றும் அறியலாம். அல்லது "ஒடுக்கல்" என்ற பதமே "ஒடுங்கல்" என்று வந்ததாகக் கொண்டு, இவனுக்கு அவை ஞானச் சுருக்கத்தை உண்டாக்குவதாகும் எனலாம்.

வ்யாக்யானம் - (எல்லாம் விடும்) அவித்யாகர்மவாஸநாருசிகள் ஸவாஸநமாக விட்டுக் கழியும். "வானோ மறிகடலோ" இத்யாதி. "மாடே வரப்பெறுவராமென்றே வல்வினையார்" இத்யாதிகளை யோஜித்துக் கொள்வது. இவை போமாகில் பின் இவனுக்குக் கர்த்தவ்யம் ஏதென்னில் (பின்னுமாக்கை விடும்பொழுதெண்ணே) "உபாஸநத்தால் வந்த ராஜகுலங்கொண்டு பலன் தப்பாது; தன்னடையே வருகிறது" என்று ஆறியிருக்கையன்றிக்கே, "ஹேதுவான அவத்யாதிகள் கழிந்ததாகில் அவற்றின் கார்யமான இச்சரீரமும் ஒருபடி போய், தண்ணீர்த் துரும்பற்று ப்ராப்தி கைப்புகுந்ததாவது எப்போதோ?" என்று அதுக்கு விரல் முடக்கியிருக்குமித்தனை; காமிநியானவள் தன்னுடம்பில் அழுக்குக்கழற்றி, போகத்திலே அந்வயிக்க அவஸரப்ரதீக்ஷையாய் இருக்குமாபோலே, சரீராவஸாநத்தைப் பார்த்துக்கொண்டிருக்கை; "கொங்கைமேற் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்தொருநாள்தங்குமேல் என்னாவி தங்கும்" என்று அழுக்குக்

கழற்றி ஒப்பித்துப் பார்த்திருந்தாளிறே; அப்படி "அழுக்குடம்பு" என்கிற இவ்வழுக்குக் கழன்று, ப்ராப்யம் கைபுகுந்ததாவது எப்போதோ என்று பார்த்திருக்குமித்தனை; ம்ருத்யும் ப்ரியமிவாதிதிம் என்றிருக்குமித்தனை; க்ருதக்ருத்யா: க்ருதக்ருத்யராகிறர் ஸித்தஸாதந பரிக்ரஹம் பண்ணினவர்களிறே. விது: க்ருஷ்ணம் ப்ராஹ்மணாஸ் தத்வதோ யே தேஷாம் ராஜந் ஸர்வயஜ்ஞாஸ் ஸமாப்தா: அவனை உள்ளபடி அறிந்தவர்களிறே எல்லாவற்றையும் அநுஷ்டித்துத் தலைக்கட்டினார்களாகிறார். ஓர் அயநத்தினன்று குன்றத்து சீயர் எம்பெருமானார் ஸ்ரீபாதத்திலே புக அவருடைய சிறு பேரைச் சொல்லி "சிங்கப்பிரான்! இன்று அயநங்கிடாய்" என்ன திருவுள்ளத்திலே ஓடுகிறது இன்னதென்று அறியாமையாலே அவர் பேசாதிருக்க, "இத்தேஹ ஸமநந்தரத்திலே ப்ராப்தி கண்ணழிவற்ற பின்பு, நடுவு விரோதியாய்ச் செல்லுகிற நாளிலே ஓராண்டு கழியப்பெற்ற இது உனக்கு ஒன்றாய் இருந்ததில்லையோ?" என்று அருளிச்செய்தார். அன்றியே எம்பார் ஓர் உருவிலே (பின்னுமாக்கை விடும்பொழுதெண்ணே) என்று - இங்ஙனே காரணமானது கழிந்தபோதே கார்யமும் தன்னடையே கழிந்ததேயன்றோ; ப்ராப்தியும் இனி கைபுகுந்ததேயன்றோ; இனி சிந்தாவிஷயமுண்டோ? என்று அருளிச்செய்தார்.

விளக்கம் - (எல்லாம் விடும்)– அவித்யை, கர்மம், வாசனை, ருசி ஆகிய அனைத்தும் அடியுடன் நீங்கிவிடும். பெரியதிருவந்தாதி (54) - வானோ மறிகடலோ – பசுவின் கன்றை எறிகருவியாக எடுத்து, மேலே எரிந்து, விளாங்காயை உதிரவைதவனின் திருவடிகளைப் பற்றுவோமாக, இதனால் நம்முடன் நீண்ட நாட்கள் பழகி வந்த ஸம்ஸார கர்மங்களை நாம் நம் அருகில் காணாமல் நிற்கிறோம் – என்றது காண்க. பெரியதிருவந்தாதி (59) - மாடே வரப்பெறுவராமென்றே வல்வினையார் – போன்ற பாசுரங்களை இங்கு நினைவில் கொள்ளவேண்டும். இவை நீங்கியவுடன் ஒருவன் செய்யத்தக்க செயல்கள் எது என்றால்: (பின்னுமாக்கை விடும்பொழுதெண்ணே) – பக்தியினால் உண்டான ராஜகுலம் கொண்டு பலன் தப்பாது, தானாகவே வருகிறது - என்று இருக்காமல், காரணமான அறிவின்மை முதலானவை அழிந்தவுடன், அவற்றின் காரியமான இந்தச் சரீரமும் தடைகள் நீங்கி, பலன் கை புகுந்தது ஆவது எப்போது என்று அதற்கு விரல்முடக்கி இருக்கும். ஆனால் கைவல்யத்தில் ஆசைப்படுவது போன்று மோக்ஷ விருப்பம் கொள்ளாமல், உடல் நீக்கத்தை மட்டும் விரும்பி இருப்பது ஏன் என்றால் – இன்பத்தில் நாட்டம் கொண்ட ஒரு பெண் தன் உடலில் இருக்கின்ற அழுக்கை நீக்கித் தன்

கணவனுடன் சேரும் காலத்தை எதிர்நோக்கி இருப்பது போன்று, தன்னுடைய மோக்ஷத்திற்கு உறுப்பான உடலைக் கைவிடுதல் என்னும் காலத்தை எதிர்பார்த்து நிற்கிறான். நாச்சியார் திருமொழி (8-7) – கொங்கைமேற் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்தொருநாள்தங்குமேல் என்னாவி தங்கும் - என்னுடைய ஸ்தனத்தின் மீது பூசப்பட்ட குங்குமக்குழம்பு அழியும்படி புகுந்து ஒரு நாளாவது நின்றால் மட்டுமே எனது ப்ராணன் நிற்கும் - என்று அலங்கரித்ததன் மூலம் அழுக்கை அகற்றி நின்றாள். இது போன்று திருவிருத்தம் (1) - அழுக்குடம்பு - என்னும்படி இந்த உடலாகிய அழுக்கை நீக்கி மோக்ஷம் என்பது எப்போது என்று பார்த்திருத்தல். ஆனால் யமன் என்று ஒருவன் உள்ளபோது இப்படி உடலை விடுவதை எதிர்பார்த்தல் எப்படிப் பொருந்தும்? ம்ருத்யும் ப்ரியமிவாதிதிம் – பாவத்தைச் செய்த மனிதன் யமனைக் கண்டு அஞ்சுகிறான், நன்மை செய்தவன் யமனை விருந்தினனாகப் பார்க்கிறான் - என்றது காண்க. ஆனால் செய்யவேண்டிய அனைத்தையும் செய்து முடித்தவர்கள் அல்லவோ இப்படி இருக்கமுடியும் என்றால் – செய்யவேண்டியவற்றை செய்து முடித்தவரே ஆவார். விது: க்ருஷ்ணம் ப்ராஹ்மணாஸ் தத்வதோ யே தேஷாம் ராஜந் ஸர்வயஜ்ஞாஸ் ஸமாப்தா: - அரசனே! அனைத்து வேதங்களும், அனைத்து பொருள்களும், அனைத்து யாகங்களும் கண்ணனே என்று அறிகின்ற அந்தணர்கள் அந்த யாகங்களைச் செய்தவர்கள் ஆவர் - என்றதைக் காண்க. ஒருநாள் குன்றத்து சீயர் எம்பெருமானாரின் திருவடிகளில் வந்து வணங்கினார். அப்போது எம்பெருமானார் அவரிடம், "இன்று அயனம் (ஆறு மாதங்களின் முடிவு) என்று அறிந்தாயா?", என்றார். எம்பெருமானாரின் திருவுள்ளத்தில் இதன் மூலம் என்ன நினைத்தார் என்று அறியாமல் ஜீயர் திகைத்து நின்றார். உடனே எம்பெருமானார் அவரிடம், "உயிர் உடலை விட்டு நீங்குகின்ற அந்தக் காலத்தில், மோக்ஷ பலனுக்கு விரோதியாக இருந்த காலங்களில், இந்த அயனம் என்பது ஓர் ஆண்டு கழியப் பெற்ற மகிழ்வான நிலை என்பது விளங்கவில்லையோ?", என்று அருளிச்செய்தார். எம்பார் ஒரு முறை – பின்னுமாக்கை விடும்பொழுதெண்ணே – என்பதற்கு, இப்படியாகக் காரணமாவது கழிந்த பின்னர் காரியம் கழிந்தது அல்லவோ? மோக்ஷ பலன் இனி எனது அல்லவோ? - என்று அருளிச்செய்தார்.

1-2-10 எண்பெருக் கந்தலத்து, ஒண்பொரு ளீறில
வண்புகழ் நாரணன் திண்கழல் சேரே.

பொருள் – எண்ணிக்கையால் மிகுந்து இருக்கின்ற ஞானம் மற்றும் ஆனந்தம் போன்ற பலவற்றுக்கும் இருப்பிடமாய், ஞானமயமாய், அழிவற்ற புகழ்களை உடையவனான ஸ்ரீமந்நாராயணனின் உறுதியான திருவடிகளைப் பற்றுவாயாக.

அவதாரிகை - அழகிது; அப்படியே ஆகிறது; பஜநத்துக்கு ஆலம்பநமான மந்த்ரமேதென்ன; அது என்னதென்றும், அதினுடைய அர்த்தம் அநுஸந்தேயம் என்றும் சொல்லுகிறார். இது தன்னைப் புறம்புள்ளார் ஜபஹோமாதிகளாலே கார்யம் கொள்ளாநிற்பர்கள். நம்மாசார்யர்கள் "ஸ்வரூபாநுஸந்தாநத்துக்கு ஈடாயிருக்கிற இதினுடைய அர்த்தாநுஸந்தாநம் மோக்ஷஸாதநம்" என்று தாங்களும் அநுஸந்தித்து, தங்களைக் கிட்டினார்க்கு உபதேசித்துக்கொண்டு போருவர்கள். வேதங்களுக்கு இவ்வாழ்வார்க்கும், இம்மந்த்ரம் ப்ரஸ்துதமானவாறே, முன்பே சப்தத்தைச் சொல்லி, அநந்தரம் அர்த்தத்தைச் சொல்லுதல்; அன்றியே, முன்பே அர்த்தத்தைச் சொல்லிப் பின்பே சப்தப்ரயோகம் பண்ணுதல் செய்யக் கடவதொரு நிர்பந்தமுண்டாயிருக்கும்; அதுக்கு அடி – அர்த்தாநுஸந்தாநம் உத்தேச்யமாகையாலே; "யாவையும் யாவருந்தானாமமைவுடைய நாராயணன்" என்னுதல், "நாரணன் முழுவேழுலகுக்கும் நாதன்" என்னுதல் செய்வதொரு நிர்பந்தமுண்டு; அந்தர் பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ் ஸ்தித: என்னுதல், நாராயணபரோ ஜ்யோதி: என்னுதல் செய்யும் வேதம்.

விளக்கம் - ஸம்ஸாரிகள் ஆழ்வாரிடம், "நீங்கள் கூறுவது நன்றாகவே உள்ளது. அப்படியே செய்கிறோம். நாங்கள் வணங்குவதற்கு உதவியாக இருக்கக்கூடிய மந்திரம் என்ன?", என்றனர். அந்த மந்திரம் இன்னது என்பதையும், அதனுடைய பொருள் எப்போதும் நினைக்கப்பட வேண்டும் என்பதையும் அருளிச்செய்கிறார். மந்திரம் மட்டும் இருந்தால் போதாதோ, பொருளும் உணர வேண்டுமா என்றால் – இந்த மந்திரத்தை உபாஸகர்கள் ஜபம் மற்றும் ஹோமம் போன்றவைகளாலே கொள்வார்கள். நமது ஆசார்யர்கள், "ஆத்ம ஸ்வரூபத்திற்கு ஏற்றதாக உள்ள இந்த மந்திரத்தின் நினைவே மோக்ஷ உபாயம்", என்று உணர்ந்து, தாங்களும் அப்படியே இருந்து, மற்றவர்களுக்கும் உபதேசித்து வந்தனர்.

மேலும் வேதங்களுக்கும், ஆழ்வாருக்கும் இந்த மந்திரத்தைக் கூறும் வாய்ப்பு கிட்டும் போது முதலில் மந்திரத்தை அல்லது முதலில் பொருளைக் கூறி பின்னர் மந்திரத்தை கூறுதல் என்பதைச் செய்யலாம் என்று விதி உள்ளது. அதன் காரணம் - பொருளின் நினைவு முக்கியமானது எனபதால் ஆகும். தமிழ்மறை (1-3-3) – யாவையும் யாவருந்தானாமமைவுடைய நாராயணன் - என்றும், (2-7-2) - நாரணன் முழுவேழுலகுக்கும் நாதன் – என்றது. வேதங்கள் - அந்தர் பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ் ஸ்தித: - உள்ளும்புறமும் நாராயணனே நிறைந்து நிற்கிறான் - என்றும், நாராயணபரோ ஜ்யோதி :- நாராயணனே உயர்ந்த ஜோதி - என்றும் கூறியது.

வ்யாக்யானம் – (எண்பெருக்கந்நலம் இத்யாதி) இப்பாட்டாலே திருமந்த்ரத்தை ஸார்த்தமாக அருளிச்செய்கிறார். ஆழ்வான் இப்பாட்டளவும் வரப்பணித்து, இப்பாட்டளவிலே வந்தவாறே "இத்தை உந்தம் ஆசார்யர்கள் பக்கலிலே கேட்டுக் கொள்ளுங்கோள்" என்ன, பட்டரும் சீராமப்பிள்ளையும் எழுந்திருந்து போகப்புக்கவாறே, அவர்களை அழைத்து, "இன்னபோது இன்னார் இருப்பார், இன்னார் போவார் என்று தெரியாது, இருந்து கேளுங்கோள்" என்று திருமந்த்ரத்தை உபதேசித்து, இப்பாட்டை நிர்வஹித்து, "இப்பாட்டை இதுக்கு அர்த்தமாக நினைத்திருங்கோள்" என்று பணித்தான். எண்பெருக்கென்கிற இத்தாலே – ஜீவாநந்த்யத்தைச் சொல்லுகிறது. (நலத்து) இவ்வஸ்துக்கள் தான் ஜ்ஞாநகுணாச்ரயமுமாயிருக்கக் கடவதிறே. ப்ரணவத்தில் த்ருதீய பதமான மகாரத்தாலே ஜ்ஞாநகுணச்ரயமுமாய் ஜ்ஞாதாவுமாயிருக்குமென்று சொல்லிற்றிறே.

விளக்கம் - (எண்பெருக்கந்நலம் இத்யாதி) - இந்தப் பாசுரத்தில் திருமந்திரத்தை அருளிச்செய்கிறார். கூரத்தாழ்வானிடம் பட்டரும் சீராமப்பிள்ளையும் திருவாய்மொழி கேட்டுக் கொண்டிருந்த நேரத்தில் இந்தப் பாசுரம் வந்தவுடன் ஆழ்வான் அவர்களிடம், "இதனை உங்கள் ஆசார்யனிடம் கேட்டுகொள்ளுங்கள்", என்றார். உடனே பட்டரும் சீராமப்பிள்ளையும் எழுந்து செல்ல முயன்றபோது அவர்களை அழைத்த ஆழ்வான், "இருங்கள். இந்த காலத்தில் இவர் இருப்பார், இந்த காலத்தில் இவர் போவார் என்று யாருக்கும் தெரியாது. ஆகவே இருந்து கேளுங்கள்", என்று கூறி திருமந்திரத்தை உபதேசித்து, இந்தப் பாசுரத்தைக் கூறி, "இந்தப் பாசுரத்திற்கு இந்தத் திருமந்திரத்தையே

பொருளாக நினைத்திருங்கள்", என்று அருளிச்செய்தார். "எண்பெருக்கு" என்பதன் மூலம் உயிர்கள் பலவாக உள்ளதைக் கூறுகிறார். (நலத்து) - இந்த வஸ்துக்கள் அனைத்தும் ஞானத்திற்கு அண்டும் இடமாக உள்ளன என்கிறார். ப்ரணவத்தின் மூன்றாம் பதமான மகாரம் மூலம் ஞானத்திற்கு இருப்பிடமாகவும், ஞானமயமாகவும் உள்ள உயிர்கள் என்று கூறியதை ஒப்பு நோக்குக.

வ்யாக்யானம் - (ஒண்பொருள்) அசைதந்யம் அசித்துக்கு ஸ்வபாவமாக நிற்கச் செய்தே வஸ்து தான் ஜடமுமாயிருக்குமிறே – அஸம்ஜ்ஞாவத்தாயிருக்குமிறே; அங்ஙனன்றிக்கே, வஸ்து தான் ஸ்வஸ்மை ஸ்வயம்ப்ரகாசமுமாய், தர்மபூதஜ்ஞாநமானதுவும் விஷயங்களை க்ரஹித்துத் தன்னையும் அறிவிக்கக் கடவதாய் இருக்கும்; அத்தைப் பற்றச் சொல்லுகிறது. (ஈறில) என்கிற இது, கீழும் மேலும் அந்வயித்துக் கிடக்கிறது. ஈறிலவான ஒண்பொருளையும், ஈறிலவான வண்புகழையும் உடையனாகையாயிற்று - நாராயணானாகையாகிறது. பாவத்கமங்களகுணா ஹி நிதர்சநம் ந:, தன்னுடைய கல்யாணகுணங்களோபாதி நித்யமுமாய் ப்ரகாரமுமாய் இருக்கும் இவ்வஸ்து என்கைக்காக குணங்களை நிதர்சநமாகச் சொல்லுகிறது; நித்யரான த்ரிவித சேதநரையும், நித்யமான கல்யாணகுணங்களையுமுடையனாய் இருக்கையாயிற்று – நாராயணனாகையாவது. அவனுடைய (திண் கழல் சேரே) இப்படி ஸம்பந்தம் காதாசித்கமாகை தவிர்த்து நித்யமாயிற்ற பின்பு, ஸ்வரூப ஜ்நாநமுடையாரை அவன் ஒரு நாளும் விடானிறே. ஆச்ரிதரை ஒருகாலும் விட்டுக்கொடாத திண்மையைப் பற்ற "திண்கழல்" என்கிறது. (சேர்) – ஆச்ரயி. உன்னுடையதாய் உனக்கு வகுத்ததாயிருந்த பின்பு, நீ கடுக ஸ்வீகரி; "நம:" என்றபடி.

விளக்கம் (ஒண்பொருள்) - உயிர்களின் தன்மையை உணர்த்துவதற்கு நலம், கூர்மையான ஞானம் என்ற இரண்டின் ஏதேனும் ஒன்று மட்டுமே கூறினால் அமையாதோ என்றால் – உடலானது அறியாமைக்கு இருப்பிடமாக இருந்தால் பிற பொருள்களை அறிந்து கொள்ளும் ஆற்றல் இல்லாமல் போய்விடும்; அறிவு இல்லாததாக இருந்தால் தன்னை அறியும் ஆற்றலும் இல்லாமல் போய்விடும். உயிர் என்பது அவ்வாறு இல்லாமல் (உயிரை வஸ்து என்கிறார்) ஞானத்திற்கு இருப்பிடமாக உள்ளதால் தன்னை அறியவல்லதாய், மற்றதை அறியவல்ல ஞானம் கொண்டு (தர்மபூதஞானம்) மற்றவற்றை அறிந்து தெளிந்து, தன்னையும் உணர்த்தவல்லதாய் இருக்கும். இப்படியாக உள்ள தானாகவே

ப்ரகாசிக்கின்ற தன்மையைப் பற்ற. (ஈறில)- இது ஈறு இலவான ஒண்பொருள், ஈறு இலவான வண்பொருள் என்று படிக்கும்படி உள்ளது. இப்படி ஈறு இலவான ஒண்பொருளையும், ஈறு இலவான வண்புகழையும் உடையவன் ஆதலே நாராயணன் என்ற சொல்லுக்குப் பொருளாகும். அவனுடைய நற்குணங்கள் போன்றே ஆத்மாக்களும் நித்யமாக உள்ளன என்று உணர்த்த அவனது குணங்களைக் கூறுகிறார். இதனை ஸ்ரீவைகுண்டஸ்தவம் (35) - பாவத்கமங்களகுணா ஹி நிதர்சநம் ந: – நித்யராக உள்ள மூன்று வகைப்பட்ட சேதனர்களையும், நித்யமான குணங்களையும் கொண்டவன் – என்றது காண்க. (திண் கழல் சேரே) – அடியார்களை ஒரு நாளும் விட்டுக் கொடுக்காத தன்மையால் திண்கழல் என்றார். "இந்தத் தொடர்பு ஒரு நாளில் வந்தது அன்று, எப்போதும் உள்ளது", என்னும் ஞானம் உடையவர்களை அவன் ஒரு நாளும் கைவிடமாட்டான். (சேர்) – அடைவாயாக. உன்னுடையதாக, உனக்காகவே இருக்கின்ற அவனது திருவடி என்று அறிந்த பின்னர் நீ விரைவாகச் சென்று பற்றுவாயாக. இது "நம:" என்பதாகும்.

1-2-11 சேர்த்தடத் தென்குரு கூர்ச்சடகோபன் சொல்
சீர்த்தொடை யாயிரத்து ஓர்த்தவிப்பத்தே.

பொருள் - அழகான குளங்கள் சூழ்ந்த திருக்குருகூரில் அவதரித்த சடகோபன், ஸர்வேச்வரனின் புகழைத் தொடுத்து அருளிச்செய்த ஆயிரம் பாசுரங்களில் இந்தப் பத்தும் ஆராய்ந்து தொடுக்கப்பட்டவையாகும்.

அவதாரிகை – நிகமத்தில், முதற் பாட்டில் வ்யத்ரிக்த விஷயங்களை விட்டு ஸர்வேச்வரன் பக்கலிலே ஆத்மாவை ஸமர்ப்பிக்க இசையுங்கோள் என்றார்; இரண்டாம் பாட்டில் - வ்யத்ரிக்த விஷயங்களினுடைய தோஷதர்சனம் பண்ணவே விடலாம் என்றார்; மூன்றாம் பாட்டில் – த்யாஜ்யாம்சத்தைச் சுருங்க அருளிச்செய்தார்; நாலாம்பாட்டில் – பற்றப்படுகிற விஷயத்தினுடைய நன்மையை அருளிச்செய்தார்; அஞ்சாம் பாட்டில் – பற்றுமிடத்தில் வரும் அந்தராயபரிஹாரத்தை அருளிச்செய்தார்; ஆறாம் பாட்டில் – அவன் ஸங்கல்பவபாவன் என்றார். ஏழாம் பாட்டில் – ஸம்பந்த ஜ்ஞாநமுண்டாகவே பொருந்தலாம் என்றார்; எட்டாம் பாட்டில் – வேறு உபகரணம் தேடவேண்டா, அவன்

தந்த கரணங்களை அவனுக்காக்க அமையும் என்றார்; ஒன்பதாம் பாட்டில் – அப்படி செய்யவே பஜநவிரோதிகள் தன்னடையே விட்டுப்போம் என்றார். பத்தாம்பாட்டில் – பஜநத்துக்கு ஆலம்பநமான மந்த்ரமின்னதென்றார். இதுதான் வாய்வந்தபடி சொல்லிற்றொன்றல்ல; சேதநருடைய ஹிதத்துக்கு ஈடாக ஆராய்ந்து சொல்லப்பட்ட தென்னுதல்; அன்றிக்கே இதுதான் ஹிதமாயிருப்பதொன்றாகையாலே எப்போதுமொக்க ஓரப்படுவதொன்று என்னுதல்.

விளக்கம் – முதற் பாசுரத்தில் ஸர்வேச்வரனைக் காட்டிலும் வேறுபட்ட பொருள்களைக் கைவிட்டு, அவனிடம் ஆத்மாவைச் ஸமர்பிக்க வாருங்கள் என்றார்; இரண்டாம் பாசுரத்தில் – மற்ற விஷயங்களில் உள்ள தோஷங்களைக் கண்டு அவற்றைக் கைவிடலாம் என்றார். மூன்றாம் பாசுரத்தில், மற்றவற்றைக் கைவிடும் தன்மையைச் சுருக்கமாக அருளிச்செய்தார். நான்காம் பாசுரத்தில் – பற்றப்படும் பொருளான ஸர்வேச்வரனின் நன்மையை அருளிச்செய்தார். ஐந்தாம் பாசுரத்தில் – அவனைப் பற்றும்போது உண்டாகின்ற தடைகளை நீக்கும் உபாயத்தை அருளிச்செய்தார். ஆறாம் பாசுரத்தில் அவன் அன்பே வடிவானவன் என்றார். ஏழாம் பாசுரத்தில் ஸம்பந்த ஞானம் உண்டாகவே அவனுடன் பொருந்தலாம் என்றார்; எட்டாம் பாசுரத்தில் – வேறு கருவிகளைத் தேட வேண்டாம், அவன் தந்த மனம் போன்றவையே அவனுக்காக அமையும் என்றார். ஒன்பதாம் பாசுரத்தில் - அவ்விதம் செய்யும்போது அவனுடைய வழிபாட்டிற்குத் தடையாக உள்ள அனைத்தும் தானாகவே நீங்கும் என்றார். பத்தாம் பாசுரத்தில் வழிபாட்டிற்கு உபாயமான மந்திரம் இன்னது என்றார். இறுதியாக – இவை அனைத்தும் தனது வாய்க்கு வந்தபடி கூறப்பட்டவை அல்ல, சேதனர்களின் நன்மையே ஆராய்ந்து கூறப்பட்டவை என்கிறார். அல்லது இவை உயர்ந்த நன்மையை அளிப்பவை என்பதால் எப்போதும் ஒரே போன்று உரைக்கப்படுகின்றன என்கிறார்.

வ்யாக்யானம் – (சேர்த்தடம் இத்யாதி) "சேர்த்தடம்" என்கிற இத்தைச் சேர் தடமாக்கி, பொய்கைகளோடு பொய்கைகள் சேர்ந்திருக்கும்படியைச் சொல்லிற்றாகவுமாம். அன்றியே, "தென்குருகூர்" என்று – ஊர் ப்ரஸ்துதமாகையாலே, தடாகங்கள் சேர்ந்திருந்துள்ள தென்குருகூர் என்று – ஊருக்கு விசேஷணமாதல். அன்றிக்கே "சேர்"

என்கிற இது க்ரியாபதமாய்க்கிடத்தல். (தென்குருகூர்ச் சடகோபன் சொல்) ஹிதஞ்சொல்ல என்றிழிந்து, அஹிதத்தைச் சொல்லுவானொருவன் வார்த்தையன்று. ஆப்த தமரானவர் சொன்ன வார்த்தை என்கை. (சீர்த்தொடையாயிரம்) "எழுத்தசை சீர் பந்தம் அடிதொடை பாவினம்" என்று கவிக்கு அவயவமாய் இருப்பன சில உண்டு; அவற்றைச் சொல்லுதல். அன்றிக்கே உபாஸகாநுக்ரஹத்தாலே உபாஸ்யனுடைய கல்யாண குணங்களை தொடுத்த ஆயிரமென்னுதல். (ஆயிரத்தோர்த்த இப்பத்தே) ஆயிரத்திலும் வைத்துக் கொண்டு, சேதநர்க்கு ஹிதமாவது ஏதென்று நிரூபித்துச் சொல்லப்பட்டது என்னுதல். அன்றிக்கே சேதநர்க்கு ஹிததமமாயிருப்பதொன்றாகையாலே, எப்போதும் ஓரப்படுவதொன்று என்னுதல். ஓர்த்த இப்பத்தை நெஞ்சிலே சேர் – அநுஸந்தி. பரோபதேசம் பலரைக் குறித்து உபக்ரமிக்கையாலே, மேல் ஏகவசநமான இடம் ஜாத்யபிப்ராயம்.

விளக்கம் (சேர்த்தடம் இத்யாதி) - – "சேர்த்தடம்"என்பதைச் சேர் தடம் என்று கூறி, பொய்கைகளுடன் பொய்கைகள் சேர்ந்திருக்கும்படியைக் கூறினார் எனலாம். அல்லது பொய்கைகள் சேர்ந்துள்ள தென்குருகூர் என்று ஊருக்கு அடைமொழியாகக் கூறினார் எனலாம். அல்லது இப்பத்தையும் சேர் என்று கூறியதாகவும் கொள்ளலாம். (தென்குருகூர்ச் சடகோபன் சொல்)– இவை நன்மை சொல்லுதல் என்று தொடங்கி தீமையைக் கூறுபவனது சொற்கள் அல்ல. நம்பத் தகுந்தவனின் சொற்கள் ஆகும். (சீர்த்தொடையாயிரம்)– "எழுத்து, அசை, சீர், பந்தம், அடி, தொடை, பாவினம்" என்று ஒரு கவிக்கு உறுப்பாக சிலவற்றை யாப்பருங்கலக்காரிகை கூறுகிறது. அவற்றைக் கூறியதாகக் கொள்ளலாம். அல்லது ஸர்வேச்வரனின் திருவருளால் அவனுடைய கல்யாணகுணங்களைத் தொடுத்த ஆயிரம் என்று கூறலாம். (ஆயிரத்தோர்த்த இப்பத்தே) - ஆயிரம் பாசுரங்களில், இந்தப் பத்தும் சேதனர்களுக்கு நன்மை எது என்று நிரூபித்துக் கூறப்பட்டது எனலாம். அல்லது சேதனர்களுக்கு மிகுந்த நன்மை அளிக்கவல்லது என்பதால் எப்போதும் ஓதப்படுவது எனலாம். இந்த உபதேசம் பலரைக் குறித்துக் கூறுவதாகத் தொடங்குவதால், சேர் முதலான ஒருமை இடங்களை கூட்டத்தைக் குறிக்கின்ற ஒருமையாகக் கொள்ளவேண்டும்.

முதற்பத்து இரண்டாம் திருவாய்மொழி ஸம்பூர்ணம்

முதற்பத்து மூன்றாம் திருவாய்மொழி
பத்துடையடியவர் - ப்ரவேசம்

மூலம் - ஸர்வஸ்மாத்பரனென்றார் முதல் திருவாய்மொழியில். பரனாகையாலே பஜநீயனென்றார் இரண்டாம் திருவாய்மொழியில். "பஜியுங்கோள் என்று பலகாலும் அருளிச்செய்யாநின்றீர்; இருகைமுடவனை 'ஆனையேறு' என்றால் அவனாலே ஏறப் போமோ? அப்படியே ஸர்வேச்வரனாய் அவாப்தஸமஸ்தகாமனாயிருக்கிற அவனை இந்த க்ஷுத்ரனான ஸம்ஸாரி சேதநனாலே பற்றப்போமோ?" என்ன; "அவ்வானை தானே அவ்விருகை முடவனுக்கும் ஏறலாம்படி படிந்து கொடுக்குமன்று ஏறத்தட்டில்லையே; அப்படியே இஸ்ஸம்ஸாரி சேதநனுக்கு பஜிக்கலாம்படி அவன் தன்னைக் கொடுவந்து தாழவிட்டு ஸுலபனாமாகில் இவனுக்கு பஜிக்கத்தட்டில்லையே!" என்கிறார்.

விளக்கம் - முதல் திருவாய்மொழியில் அனைவரையும் விட, தனக்கு மேல் உயர்ந்தவன் என யாரும் இல்லாதபடி உயர்ந்தவன் என்றார். இரண்டாம் திருவாய்மொழியில் இவ்விதமாக அவன் உயர்ந்தவன் என்பதால், வழிபடத்தக்கவன் என்றார். இந்தத் திருவாய்மொழியில், அவன் உயர்ந்தவன் என்றாலும் அவனது ஸௌலப்யத்தை அருளிச்செய்கிறார் (ஸௌலப்யம் – எளிமை). ஸம்ஸாரிகள் ஆழ்வாரிடம், "அவனை வணங்குங்கள் எனப் பலமுறை நீங்கள் அருளிச்செய்தீர்கள். ஆனால் இரண்டு கையும் இல்லாத ஒருவனை யானை மீது ஏறு என்று கூறினால் அவனால் ஏற இயலுமா? அது போன்று ஸர்வேச்வரனாக, அனைத்து விருப்பங்களும் நிறையப் பெற்றவனாக இருக்கின்ற எம்பெருமானை அற்பமான ஸம்ஸாரிகளால் வணங்கிப் பற்ற இயலுமோ?", என்றனர். இதற்கு ஆழ்வார் அவர்களிடம், "அந்த யானை, அந்த இரண்டு கைகளும் இல்லாத முடவன் தன் மீது எளிதாக ஏறலாம்படியாக கீழே அமர்ந்து கொண்டால் ஏறுவதற்கு என்ன தடை உள்ளது. அது போன்று, ஸம்ஸாரிகள் வணங்கும்படியாகத் தன்னை எளியவனாக்கி, உங்கள் முன்பு வந்து நிற்கும் சுலபனாக எம்பெருமான் இருக்கும்போது அவனை வணங்குவதற்கு என்ன தடை உள்ளது", என்கிறார்.

மூலம் - அவதாரந்தன்னில் வந்தால், பாக்யஹீநர்க்கு ஸஜாதீய ப்ரதிபத்திபண்ணி அநர்த்தப்பட்டுப் போகவுமாய், பாக்யாதிகர்க்கு "அரியனெளியனாகப் பெற்றோமே!" என்று ஆச்ரயிக்கலாம்படி இரண்டுக்கும் பொதுவாயிறே யிருப்பது; "ஸர்வேச்வரன் அரியனென்றால் ஸம்ஸாரத்தில் ஆள் பற்றாதென்று அவனெளிமையை உபபாதித்துக் கொண்டு போந்தோம்; அதுதானே இவர்களுக்கு "இத்தனையெளியனோ" என்று விடுகைக்கு உடலாயிற்று; அவ்வெளிமைதானே ஆதரிக்கைக்கு உடலாயிற்றது

உமக்கொருவருக்குமேயிறே" என்று எம்பாரைப் பார்த்து உடையவர் அருளிச் செய்தருளினாராம்.

விளக்கம் - அனைவரும் அண்டி நின்று பிழைத்துக் கொள்ளும்படியாக அவதரித்து தாழ்வாக நின்றபோதிலும், ஒரு சிலர் அவனை ஏற்காமல் தள்ளிச் சென்று, பிழைக்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன? அவனுடைய அவதாரங்கள் – (இராமன், கண்ணன் போன்ற அவதாரங்களை) தங்களது வினைப்பயன் காரணமாகத் தங்களைப் போன்றே இவனும் சாதாரண மனிதன் என்று எண்ணி ஒதுக்குவதற்கும், அவனைப் பற்றி நன்கு அறிந்தவர்கள் இத்தனை அரியவனை இத்தனை எளியவனாகப் பெற்றோமே என்று எண்ணி அண்டுவதற்கும் பொதுவாக உள்ளன. எம்பாரைப் பார்த்த உடையவர், "ஸர்வேச்வரன் அடைவதற்கு அரியவன் என்று கூறினால், அவனை அடைவதற்கு ஸம்ஸாரத்தில் உள்ளவர்கள் தயங்கி ஒதுங்குவார்கள் என்று எண்ணியே அவனது எளிமையை நாம் விரிவாக உரைத்தோம். ஆனால் அப்படி உரைத்ததன் பலனாகவே இவர்கள் அவனை மிகவும் எளியவன் என்று உதாஸீனம் செய்கிறார்களே! அந்த எளிமை தானாகவே வந்து ஆதரிக்கும்படியாக உம்முடைய பிறவி இருந்தது", என்று அருளிச் செய்தார்.

மூலம் - சில தார்மிகர் ஏரிகல்லினால் சேற்றிலே தலையை நொழுந்திப் பட்டுப் போகாநிற்பர் சிலர். விடாயர் அதிலே முழுகி விடாய் தீர்ந்து போகாநிற்பார்கள்; விளக்கை ஏற்றினால் அதிலே விட்டிலென்று சில பதார்த்தங்கள் விழுந்து முடிந்துபோம்; சிலர் அதனொளியிலே ஜீவியாநிற்பார்கள். வேதநல் விளக்கிறே; இவன்தான் ஆயர் குலத்தினில் தோன்றுமணிவிளக்கிறே. வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்கிறே. அவன்தான் அன்றிய வாணனாயிரந்தோளும் துணியவன்று ஆழி தொட்டதும் இப்படி வந்து அவதரித்து ஸுலபனான நிலைதன்னிலேயிறே. அப்படியே சிசுபாலாதிகள், பூதநா சகட யமளார்ஜுநாதிகளுக்கு எதிரிட்டு முடியவுமாய், அநுகூலித்து உஜ்ஜீவிப்பார்க்கு உஜ்ஜீவிக்கவுமாயாயிற்று அவதாரந்தானிருப்பது.

விளக்கம் – தர்ம வழியில் நிற்கும் ஒரு சிலர் ஏரியில் தங்கள் தலையை நுழைக்காமல், மேலாக நின்றபடி தங்கள் தாகம் தீர்த்துச் செல்வர்கள்; அதிக தாகம் எடுத்தவர்கள் அதில் முழுகி தாகம் தீர்த்துச் செல்வர்கள்; விளக்கை ஏற்றும்போது அதில் சில விட்டில் பூச்சிகள் விழுந்து மடித்துவிடும்; அந்த விளக்கின் ஒளியில் ஒரு சிலர் பிழைத்து நிற்பார்கள். இப்படியாகவே இவனை அண்டுபவர்களும் அண்டாதவர்களும் உண்டு. ஆனால் ஸர்வேச்வரனை இப்படி ஏரியாகவும், விளக்காகவும் உருவகம் செய்யலாமா என்றால் -

பெரியதிருமொழி (4-3-8) - வேத நல் விளக்கு, திருப்பாவை (5) - ஆயர்குலத்தினில் தோன்றும் அணி விளக்கு, பெருமாள் திருமொழி (10-1) - வெங்கதிரோன் குலத்திற்கு ஓர் விளக்கு – என்றும் பலவிதமாகக் கூறுவதைக் காண்க. இது சரி, தீயவர்கள் கேடு பெற்றதும், நல்லவர்கள் பிழைத்ததும் இவனது எளிமையால் எங்காவது வெளிப்படுகிறதா? உண்டு, பெரியதிருமொழி (4-3-8) - அன்றியவாணன் ஆயிரம் – பாணாசுரனின் ஆயிரம் தோள்களும் அழியும்படியாகச் சக்கரத்தை எடுத்து வந்தது இந்த எளிமையால் அல்லவோ? அது போன்றே சிசுபாலன், பூதனை, சகடன், இரட்டை மரங்கள் முதலானவர்கள் இவனுடன் விரோதம் பூண்டு முடிவு பெற்றதும்; அக்ரூரர், மாலாகாரர், முதலானோர் இவனை அடைந்து பிழைத்ததும் இவனது எளிமையான அவதாரத்தால் அல்லவோ?

மூலம் - பலகாலும் "அவனை பஜியுங்கோள்" என்னாநின்றீர்; கண்ணாலே கண்டாலல்லது பஜிக்க விரகில்லை; பஜித்தாலல்லது காண விரகில்லை; ஆன பின்பு ஆச்ரயிக்கும்படி எங்ஙனேயென்ன; "தஸ்மிந் த்ருஷ்டே பராவரே" என்றும், "விசதே ததநந்தரம்" என்னும் சொல்லுகிறபடியே சில வருத்தத்தோடே காட்சியாய்த் தலைக்கட்டும் ஸாதந பக்தியையன்று இங்குச் சொல்லுகிறது. காண வேணுமென்னும் ஆசாலேசமுடையார்க்கு அவன் எளியனாம்படியையாயிற்று.

விளக்கம் - ஸம்ஸாரிகள் ஆழ்வாரிடம், "அவனை வணங்குங்கள் என்று கூறுகிறீர்கள். அவனைக் கண்ணால் கண்டால் அல்லவோ வணங்க இயலும். ஆனால் அவனோ வணங்கினால்தான் கண்ணில்படுவான். இப்படி உள்ளபோது அவனை எப்படி அண்டுவது?", என்றனர். முண்டக உபநிஷத் – தஸ்மிந் த்ருஷ்டே - நம்மை விட உயர்ந்தவர்களான நான்முகன், சிவன் முதலானவர்களையும் தனக்கு அடிமையாக வைத்துள்ள ஸர்வேச்வரனைப் பரபக்தி மூலம் பார்த்தவுடன் மனதில் உள்ள ஆசைகள் அழிகின்றன – என்றும், கீதை (18-55) - விசதே ததநந்தரம் - பரபக்தியால் என்னை அறிபவன் என்னையே அறிகிறான் - என்றும் கூறியபடி, மிகவும் கடினப்பட்டு உண்டாகின்ற பக்தியோகம் இங்கு கூறப்படவில்லை. அவனைக் காணவேண்டும் என்ற ஆசை சிறிது இருந்தாலும் கூட, அவர்களுக்கும் எளிமையாக உள்ள தன்மையே இங்கு கூறப்படுகிறது.

மூலம் - ஸர்வாதிகன் தாழநிற்குமன்று நிவாரகரில்லை. பஹூநி மே வ்யதீதாநி என்கையாலே அவதாரந்தன்னில் புரையில்லை; இச்சைதானேயுண்டே; இது தன்னை அவதார ரஹஸ்யத்திலே தானும் அருளிச்செய்தானிறே - ஜந்ம கர்ம ச மே திவ்யம் – என்று. "என்னுடைய ஜந்மங்கள் கர்மமடியாகவன்று, இச்சையடியாகவாயிருக்கும்; நாம் பிறவா நிற்கச்செய்தே பிறவாமையும் கிடக்கும்; தாழ நின்று நிலையிலே மேன்மையும்

கிடக்கும்; அப்ராக்ருத ஸம்ஸ்தாநத்தை இதர ஸஜாதீயமாக்கி வந்து பிறப்புதோம்; இவற்றிலே ஒன்றையறிந்தவர்களுக்குப் பின்னை ஜந்மமில்லை; நானும் பிறந்து அவர்களும் பிறக்கவேணுமோ ஈரிறையுண்டோ?" என்று அவன் சதுர்த்தாத்யாயத்திலே அருளிச்செய்தபடிகளை உபஜீவித்துக்கொண்டு "ராமக்ருஷ்ணாத்யவதாரங்களைப் பண்ணிக் கொண்டு ஸுலபனாம்; ஆனபின்பு ஆச்ரயணம் கூடும் ஆச்ரயியுங்கோள்", என்கிறார்.

விளக்கம் – ஆனால் மிகவும் உயர்ந்தவன் சிறிதே ஆசை உடையவர்களுக்குத் தாழ்வானோ என்றால் – அனைவரையும் நியமிக்கும்படி உள்ள அவன், தாழக்கூடாது என்று தடை செய்வதற்கு அவனுக்கு மேலே யாரும் இல்லையே? அனைத்தையும் ஆள்பவன் இந்தப் பூமியில் அவதரித்தான் என்பது பொய்யோ? கீதை (4-5) - பஹூநி மே வ்யதீதாநி - எனக்குப் பல பிறவிகள் கழிந்தது போன்று உனக்கும் பல பிறவிகள் கழிந்தன - என்றான். ஆக அர்ஜுனன் பிறந்தது பொய் இல்லை என்பதால், க்ருஷ்ணன் அவதரித்ததும் பொய்யல்ல என்றாகிறது. அர்ஜுனன் பிறவிக்குக் கர்மம் காரணம், க்ருஷ்ணனின் பிறவிக்கு என்ன காரணம் என்றால் – இந்த உலகின் மீது அவனுக்கு உள்ள ஆசையே ஆகும். இதனைத் தனது அவதார ரகசியத்தில், கீதை (4-9) - ஜந்ம கர்ம ச மே திவ்யம் – எனது பிறவிகளும் கர்மங்களும் தெய்வீகமானவை - என்று தானே அருளிச்செய்தான். அவனுடைய பிறவிகள் கர்மங்களால் வந்தது அல்ல; அவை ஆசையால், அவன் விருப்பத்தால் வந்தவை ஆகும். "நான் தாழ்வாக நின்ற நிலையிலும் எனக்கு மேன்மை ஓங்கியே இருக்கும். இந்த ப்ரக்ருதி தொடர்பு இல்லாத திருமேனியுடன் மற்ற பிறவிகளுடன் கலந்ததாக வந்து நான் பிறப்பேன். இவற்றில் ஏதேனும் ஒன்றை அறிந்தால் கூட அவர்களுக்கு வேறு பிறப்பு இல்லை. நானும் பிறந்து அவர்களும் பிறக்க வேண்டுமோ (அதாவது ஞானியைத் தன்னுடைய சரீரமாகவே கொள்கிறான். மீண்டும் பிறக்கவேண்டுமோ என்கிறான்)? ஞானிக்காக அல்லவோ நான் பிறந்தது – என்றான். ஆக அவன் நான்காவது அத்யாயத்தில் மேலே உள்ளபடி அருளிச்செய்ததை மனதில் கொண்டு, "ராமக்ருஷ்ண அவதாரங்களால் எளிமையாக உள்ளான். ஆகவே அடைவதற்குக் கூடும். நீங்கள் கீதையில் கூறியபடி நின்ற அவனை அடையுங்கள்", என்கிறார்.

மூலம் - அவதாரங்களை முன்னோட்டுக்கொண்டு, அவதாரங்களிலும் நீர்மைக்கு எல்லையான க்ருஷ்ணாவதாரத்திலே இழிந்து, அது தன்னிலும் பரத்வத்தோடு ஒக்கச் சொல்லலான நிலைகளைக் கழித்து, நவநீதசௌர்ய நகரக்ஷோபத்திலே அகப்பட்டு இளமணற்பாய்ந்து, "எத்திறம்" என்று மோஹித்துக் கிடக்கிறார்; பரத்வத்தை

அநுஸந்தித்தார், தெளிந்திருந்து பரோபதேசம் பண்ணினார்; ஸௌலப்யத்தை அநுஸந்தித்தார், "எத்திறம்" என்று மோஹித்து கிடக்கிறார்.

விளக்கம் - மற்றவர்களுக்கு உபதேசம் செய்கின்ற இவர் "எத்திறம்" (1-3-1) என்று ஐயத்துடன் கேள்வி எழுப்பக் காரணம் என்ன? இதன் காரணம், அவதாரங்களை ஆராய்ந்து பார்த்து, அந்த அவதாரங்களில் எளிமையின் உச்சத்தில் நிற்கின்ற க்ருஷ்ண அவதாரத்தில் ஈடுபட்டு, அதனைப் பரத்வத்துடன் ஒப்பாகக் கூறிய நிலைகள் கழிந்து, வெண்ணையைக் களவு செய்ததால் கோகுலத்தில் உண்டான பரபரப்பைப் பார்த்து, இரங்கிய மனத்துடன் "எத்திறம்" என்று மயங்குகிறார். ஆனால் பரத்வத்தைக் காட்டிலும் ஸௌலப்யத்தில் ஒருவர் ஈடுபட இயலுமோ என்றால் - பரத்வத்தை எண்ணினார், தெளிவாக நின்று மற்றவர்களுக்கு உபதேசம் செய்தார்; ஸௌலப்யத்தை எண்ணினார், "இது எப்படி" என்று மயங்கினார். ஆகவே ஸௌலப்யம் உயர்வே.

ப்ரவேசம் ஸம்பூர்ணம்

1-3-1. பத்துடைய யடியவர்க் கெளியவன் பிறர்களுக் கரிய
வித்தகன் மலர்மகள் விரும்பும்நம் அரும்பெற லடிகள்
மத்துறு கடைவெண்ணெய் களவினி லுரவிடை யாப்புண்டு
எத்திற முரலினோ டிணைந்திருந் தேங்கிய எளிவே.

பொருள் – பக்தியை உடைய அடியவர்களுக்கு எளியவனாகவும், பக்தி இல்லாத மற்றவர்களுக்கு அரியவனாகவும் இருக்கின்ற வியப்பான குணங்கள் கொண்டவன்; இந்த இரண்டு தன்மைகளால் மகிழ்ந்த தாமரை மலரை பிறப்பிடமாகக் கொண்ட மஹாலக்ஷ்மியால் விருப்பும்படியாக உள்ளவன்; அப்படிப்பட்ட மஹாலக்ஷ்மிக்கே அடைவதற்கு அரியவன்; இப்படிப்பட்ட நம்முடைய எஜமானன், மத்தினை உருட்டி கடையப்படுகின்ற வெண்ணையைக் களவு செய்தபோது, தன்னுடைய அழகான திருமார்பில் கயிற்றால் கட்டுண்டு, உரலுடன் உரலாகச் சேர்ந்து, அச்சத்துடன் குரலைக் கூட வெளியில் காட்டாமல் நின்ற தன்மை எப்படிப்பட்டது?

அவதாரிகை – முதற்பாட்டில், எம்பெருமானுடைய ஸௌலப்யத்தை உபதேசிக்கப் புக்கு அவனுடைய நவநீதசௌர்யசாரித்ரத்திலே அகப்பட்டு அழுந்துகிறார்.

விளக்கம் - எம்பெருமானுடைய ஸௌலப்யத்தை மற்றவர்களுக்கு உபதேசிக்கத் தொடங்கி, அவன் வெண்ணையைக் களவு கண்ட சரித்திரத்தில் அகப்பட்டுக் கொண்டு, அதிலேயே மூழ்கி விடுகிறார்.

வ்யாக்யானம் - (பத்து) பக்தி. பத்தென்று பக்தியைக் காட்டுமோவென்னில், "எட்டி னொடிரண்டெனுங்கயிற்றினால் மனந்தனைக்கட்டி" என்னக்கடவதிறே; ஆகையாலே பத்தென்று பக்தியைச் சொல்லுகிறதாய், அது தன்னிலும் பரபக்தியையன்று இங்குச் சொல்லுகிறது, பக்தியுபக்ரமமாத்ரத்தை. உபக்ரமமாத்ரனென்று இத்தை நியமிப்பாரார்? அதினுடைய சரமாவஸ்தையைக் காட்டினாலோ? என்னில்; அது ஒண்ணாது; இப்போது இங்கு சொல்லிக்கொண்டு போருகிற இது குணப்ரகரணமாகையாலும், ஸர்வேச்வரனுக்கு ஒரு உத்கர்ஷஞ்சொல்லுகை இப்போது இவர்க்கு அபேக்ஷிதமல்லாமையாலும், தந்தாமையொழியச் செல்லாதார்க்கு ஸ்நேஹிக்குமது அல்லாதார்க்கும் உண்டாகை யாலும், "மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந" என்னுமவனாகையாலும், உபக்ரமமாத்ரத்தையே சொல்லிற்றாகக்கடவது; ஆசாலேசமுடையார்க்குத் தன்னைக் கொடுப்பதாக பகவதுக்தியுண்டாயிருந்ததிறே. "எதிர்சூழல் புக்கு" என்றும், "என்னில் முன்னம் பாரித்து" என்றும் விலக்காமை தேடித் திரிகிறவனிறே. (உடை) இந்த அப்ரதிஷேதாத்வேஷ மாத்ரத்தைக் கனத்த உடைமையாகச் சொல்லுகிறது; "விண்ணுளாரிலுஞ் சீரியர்" என்று இங்கே பகவதநுபவம் பண்ணுவாரை நித்யஸூரிகளிற் காட்டில் கனக்க நினைத்திருக்கும் பகவதபிப்ராயத்தாலே சொல்லுகிறது. "இவர்கள் பக்கலிலே இம்மாத்ரமுண்டானால், பின்னை இவர்களுடைய பரத்துக்கெல்லாம் நானே கடவன்" என்றிருக்குமாயிற்று இவன்; ராவணபவநத்தை விட்டு ஆகாசத்திலே கிளம்பினபோதே ஸ்ரீவைஷ்ணவ லக்ஷ்மீ குடிகொண்டபடியிறே "அந்தரிக்ஷகதச்ஸ்ரீமாந்" என்றது; "லக்ஷ்மணா லக்ஷ்மி ஸம்பந்த:" என்றதிறே இளையபெருமாளை; இதிறே இவனுக்கு நிலைநின்ற ஐச்வர்யம். இத்தைப்பற்ற (உடை) என்கிறது. (அடியவர்க்கு) இதுவும் பகவதபிப்ராயத்தாலே "த்வயி கிஞ்சித் ஸமாபந்நே கிம் கார்யம் ஸீதயா மம" என்று, இன்று கிட்டிற்றொரு குரங்கை நித்யாச்ரிதையான பிராட்டிக்கு அவ்வருகாக நினைத்தானிறே. ஒரு திருவடி திருவநந்தாழ்வானல்ல இவனுக்கு சேஷபூதராய் அதிசயத்தைப் பண்ணுகிறவர்கள்; இவ்விலக்காமையுடையவர்களாயிற்று; உள்ள குணத்தை அநுபவித்திருக்குமித்தனையிறே அவர்கள்; குணம் நிறம் பெறுவது இவர்கள் பக்கலிலேயிறே.

விளக்கம் – (பத்து) – பக்தி. "பத்து" என்பது பக்தியைக் காட்டுமோ என்றால் திருச்சந்தவிருத்தம் (83) - எட்டினொடிரண்டெனுங்கயிற்றினால் மனந்தனைக்கட்டி - என்று கூறியது காண்க; அதாவது பத்து என்னும் பக்தியாகிற கயிற்றினால் மனதைக் கட்டி என்று பொருள். ஆகவே பத்து என்பது பக்தியை கூறுகிறது. அதுவும் இங்கு பரபக்தியைக் கூறவில்லை, பக்தியின் தொடக்கத்தையே கூறுகிறது (பரபக்தி = எம்பெருமான் பிரியும்போது துன்பமும், சேரும்போது இன்பமும் அடைவதாகும். பக்தியின் தொடக்கம் என்பது எம்பெருமானை விலக்காமை, அவனைப் பகைத்துக் கொள்ளாமை என்பதாகும்). பக்தியின் தொடக்கம் என்று இதனை நியமிப்பது யார்? அதனுடைய எல்லையான பரபக்தியை இங்கு கூறுவதாக ஏன் கொள்ளக்கூடாது? அப்படிக் கொள்ள இயலாது, ஏன்? இங்கு கூறப்படுவது ஸர்வேச்வரனின் எளிமை என்னும் குணப்ரகரணம் (குணத்தைப் பற்றிய context) என்பதாலும், ஸர்வேச்வரனுக்கு இந்த இடத்தில் ஏற்றத்தைக் கூறுவது இவரது எண்ணம் அல்ல என்பதாலும், தன்னையே நம்பி வந்து நின்றவர்களிடம் தானும் அன்புடன் இருத்தல் என்பது மனிதர்களுக்கும் உண்டு என்பதாலும், மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந - நண்பன் என்ற வேஷம் பூண்டு வந்திருந்தாலும் விபீஷணனை நான் ஏற்றுக்கொள்ளாமல் கைவிடமாட்டேன் - என்று கூறுபவன் என்பதாலும் இங்கு பக்தியின் தொடக்கமே கூறப்பட்டது எனலாம். மேலும் தன்னிடம் சிறிதளவு ஆசை இருந்தாலும் தன்னை அளிப்பதாக ஸர்வேச்வரனின் திருவுள்ளம் இருக்கிறது என்பதாலும், திருவாய்மொழி (2-7-6) - எதிர்சூழல் புக்கு - என்றும், திருவாய்மொழி (9-6-10) – என்னில் முன்னம் பாரித்து - என்றும் கூறியபடி தன்னை விலக்காமல் உள்ளவர்களைத் தேடுபவன் என்பதாலும் பக்தியின் தொடக்கத்தையே இங்கு உணரலாம். (உடை) - இந்த விலக்காமை மற்றும் பகையாமை என்பதை மட்டுமே கனமான உடைமையாக கூறுகிறார். அதாவது இதுவே உயர்ந்த செல்வம் என்று கருத்து. இவை உயர்ந்த செல்வம் ஆகுமா என்றால் - இங்கு எம்பெருமானிடம் பக்தியைச் செய்பவர்கள் நித்யசூரிகளை விட உயர்ந்தவர்கள் என்று ஸர்வேச்வரனே தனது மனதில் எப்போதும் நினைத்திருப்பதால் இவ்விதம் கூறலாம். அப்படி எம்பெருமான் நினைத்து இருப்பானோ? இதனைச் சரமச்லோகத்தை மனதில் வைத்து அருளிச்செய்கிறார். எம்பெருமான் தனது மனதில், "இவர்களிடம் விலக்காமை, பகையாமை மட்டுமே இருந்தால் போதுமானது, இவர்களுடைய பாரம் அனைத்திற்கும் நானே பொறுப்பு ஏற்பேன்", என்று எண்ணியபடி உள்ளான். மேலும் இலங்கையை விட்டு ஆகாயத்தில் புறப்பட்ட உடனே அல்லவோ விபீஷணனிடம் ஸ்ரீவைஷ்ணவ லக்ஷ்மி (ஞானம், பக்தி, வைராக்யம்) குடிக்கொண்டாள்? இதனை இராமாயணம் – அந்தரிக்ஷகதச்ஸ்ரீமாந் - ஆகாயத்தை அடைந்த செல்வந்தன் - என்றது. லக்ஷ்மணா லக்ஷ்மி ஸம்பந்த: - லக்ஷ்மணன் லக்ஷ்மியால் நிறையப் பெற்றான் – என்று அல்லவோ

லக்ஷ்மணன் கூறப்படுகிறான்? அடியார்கள் அல்லவோ இவனுக்கு நிலையாக உள்ள ஐச்வர்யம். இதனைப் பற்றியே "உடை" என்கிறார். (அடியவர்க்கு) - வெறும் விருப்பு மற்றும் வெறுப்புஇன்மை ஆகியவற்றை மட்டுமே கொண்டுள்ள ஒருவரை அடியவர் என்று கூறலாமா? இப்படிக் கூறுவதும் ஸர்வேச்வரனின் திருவுள்ளம் காரணமாகவே ஆகும். இராமாயணம் – த்வயி கிஞ்சித் ஸமாபந்நே கிம் கார்யம் ஸீதயா மம – அனுமனே! உனக்குச் சிறிது துன்பம் ஏற்பட்டாலும், அதன் பின்னர் கிட்டும் சீதையால் எனக்கு என்ன பயன் - என்று அன்று தன்னிடம் வந்தடைந்த ஒரு குரங்கிற்காக, என்றும் தன்னுடன் உள்ள பிராட்டியையும் அற்பமாக எண்ணினான் அல்லவோ? ஆகவே எம்பெருமானுக்கு அடியவர்களாக இருப்பவர்கள் அனுமன், ஆதிசேஷன் போன்று அதிசயம் செய்பவர்களாக இருக்கவேண்டும் என்று அவசியம் இல்லை. அவனை விலக்காமல் இருப்பவர்களே அடியவர்கள் ஆவர். இத்தனை மேன்மை அடியார்களுக்கு இருப்பதன் காரணம் என்ன என்றால் – இவனிடம் உள்ள குணங்களை அவர்கள் அல்லவோ அனுபவித்தபடி உள்ளனர்? அவர்களால் அல்லவோ இவனது குணங்கள் வெளிப்படுகின்றன?

வ்யாக்யானம் – (எளியவன்) அவர்கள் பாபத்தைப் போக்குதல், புண்யத்தைக் கொடுத்தல் தன்னைக் கிட்டலாம்படி இருத்தல் செய்கையன்றிக்கே தன்னை அவர்களுக்கு இஷ்ட விநியோகார்ஹமாக்கி வைக்கும்; தன்னையொழிந்ததொன்றைக் கொடுத்தல், தன்னை அழைத்துக்கொடுத்தல் செய்யான்; "இமௌ ஸ்ம முநிசார்த்தூல கிங்கரௌ ஸமுபஸ்திதௌ" என்கிறபடி "நான் உங்களடியான்; என்னை வேண்டினபடி ஏவிக் கார்யம் கொள்ளுங்கோள்" என்று நிற்கும். "பக்த்யா த்வநந்ய்யா ஸக்ய அஹமேவம் விதோர்ஜுந". பீஷ்மாதிகள் சொல்ல "பரம் ப்ரஹ்ம பரம் தாம" என்று, கனக்கக்கேட்டிருந்தடியாலே "நீ ஒருவன் பக்திக்கு எளியவனாவதென்?" என்ன, "ஒருவன் கருத்துக்கு ஒருவன் சிவந்திருக்கிறபடி கண்டாயே அப்படியே எனக்கு இது நிலைநின்ற ஸ்வபாவம்" என்றானிறே; "பக்தி க்ரீதோ ஜநார்தந: ஸார்வபௌமனான ராஜபுத்ரன் க்ஷாமகாலத்திலே அல்பத்ரவ்யத்துக்குத் தன்னை எழுதிக்கொடுத்தால், பின்னை தன் செல்வக்கிடப்புக் காட்டி மீட்க வெண்ணாதாப்போலே, ஸர்வேச்வரனும் பக்தி நிஷ்டனுக்குத் தன்னை அற விலை செய்து கொடுத்தால் பின்னை மேன்மைகாட்டி அகலமாட்டான்; கழுத்திலே ஓலையைக் கட்டி "தூது போ" என்னலாம்படி தன்னைக் கையாளாக்கி வைக்கும்.

விளக்கம் – (எளியவன்) - அவர்களது பாவங்களை அழித்தல், தன்னை அண்டும்படியாக அவர்களைச் செய்தல் போன்ற செயல்களை மட்டுமே இவன் செய்வதில்லை. அவர்கள் விரும்பியபடி தன்னை உபயோகப்படுத்தலாம்படி தன்னை ஆக்கிக்கொள்பவன்.

தன்னைத் தவிர வேறு ஏதேனும் ஒன்றை அளிக்கும்போதும், தான் உள்ள இடத்திற்கு அவர்களை அழைத்துக் கொடுப்பது என்பதைச் செய்யாமல், தானாகவே அவர்கள் இருக்கும் இடம் தேடிச்சென்று மேல் விழுவான். இராமாயணம் இமௌ ஸ்ம முநிசார்த்தூல கிங்கரௌ ஸமுபஸ்திதௌ – விச்வாமித்திரரே! நாங்கள் உம்மைச் சேர்ந்தவர்கள் – என்னும்படி, "நான் உங்கள் அடிமை, என்னை வேண்டியபடி நீங்கள் கட்டளை இட்டு, உங்கள் செயலைச் செய்து கொள்ளுங்கள்" - என்று அடியார்களிடம் நிற்பான். கீதை (11-54) - பக்த்யா த்வநந்ய்யா ஸக்ய அஹமேவம் விதோர்ஜுந – மற்ற இடங்களில் செல்லாத பக்தி மூலம் மட்டுமே காணலாம், பரம் ப்ரஹ்ம பரம் தாம - மேலான மோக்ஷத்தை உடையவன் – போன்ற பலவற்றை, இவனைக் குறித்து பீஷ்மர் முதலானவர்கள் கூறுவதை அர்ஜுனன் கேட்டு அறிவுடையவன் என்றாலும், க்ருஷ்ணனிடம், "நீ பக்திக்கு எளியவன் ஆவது ஏன்?", என்றான். இதற்கு க்ருஷ்ணன், "ஒருவன் கருப்பாகவும், ஒருவன் சிகப்பாகவும் உள்ளது அவர்கள் ஸ்வபாவம் போன்று, பக்திக்கு எளியவனாவது எனது ஸ்வபாவம்", என்றான். பக்திக்கு எளியவன் என்றாலும் சுதந்திரமானவன் என்பதால் ஒரு சில நேரங்களில் அரியவனாகவும் இருக்கலாமோ என்றால் – அனைத்தையும் ஆள்கின்ற அரசகுமாரன் ஒரு காலத்தில் சிறிய பொருளுக்கு அடிமைப்பட்டான் என்றால், தனது செல்வம் அனைத்தையும் காண்பித்தாலும் அதிலிருந்து மீளமாட்டான். அது போன்று ஸர்வேச்வரன் பக்தியில் நின்றவனுக்கு தன்னைச் சுத்தக்ரயம் (பத்திரம்) செய்து கொடுத்துவிட்டான் என்றால், அதன் பின்னர் தன்னுடைய மேன்மையை காண்பித்து ஒருநாளும் அவனைவிட்டு அகலமாட்டான்."தூது போ" என்று ஓலையின் எழுதி, அவன் கழுத்திலே கட்டி வைத்து அனுப்பினாலும் ஓடும்படியாக அவர்களுக்கு அடிமையாக நிற்பான்.

வ்யாக்யானம் - இவ்வெளிமை உகவாதார்க்கும் பொதுவாகிறதோ என்னுமித்தைப் பரிஹரிக்கிறதுமேல். (பிறர்களுக்கரிய வித்தகன்) பிறர்களாகிறார் -"இவனைக் கொண்டு கார்யம் கொள்ளோம்" என்றிருக்குமவர்கள். (வித்தகன்) விஸ்மயநீயன். இங்கு விஸ்மயநீயமென்னென்னில், யசோதாதிகளுக்கு பவ்யனான நிலை தன்னிலே பூதநா சகட யமாளார்ஜுநாதிகளுக்கு அநபிபவநீயனாயிருக்கை; இன்னமும் பள்ளி கொண்டருளா நிற்கச்செய்தே அர்ஜுநனும் துர்யோதனனும் கூட வர, அர்ஜுநனுக்குத் தன்னைக்கொடுத்து, துர்யோதநனுக்குப் பங்களத்தைக் கொடுத்து விட்டானிறே; நம்முடையவர்கள் எம்பெருமானையே உபாயமாகப் பற்றாநிற்க அல்லாதார் அசேதந க்ரியாக லாபங்களைப் பற்றுகிறார் போலேயிறே துர்யோதநன்நிலை; ராமாவதாரத்திலும் "ஹிமவாந் மந்தரோ மேரு:" இத்யாதி "சத்ருணாமப்ரகம்ப்யோபி லகுத்வமகமத் கபே:" ராவணன் ஸபரிகரனாய்க் கொண்டு எடுக்கப்புக்கவிடத்தில் நெஞ்சில் சாத்ரவத்தாலே எடுக்கமாட்டிற்றிலன்; திருவடி தனியனாயிருக்கச் செய்தேயும் நெஞ்சில் செவ்வையாலே

கருமுகைமாலைபோலே எடுத்து ஏறிட்டுக் கொண்டுபோனான். இங்ஙனன்றாகில் "ராவணனுக்குக் கனக்கவேணும்" என்றும், "திருவடிக்கு நொய்தாக வேணும்" என்றும் அன்று; வஸ்து ஸ்வபாவமிருக்கும்படியாயிற்று இது.

விளக்கம் - இவனுடைய எளிமை என்பது, இவன் மீது பக்தி இல்லாதவர்களுக்கும் பொதுவாக உள்ளதோ என்பதை மறுக்கிறார். (பிறர்களுக்கு அரிய வித்தகன்) - பிறர்கள் என்றால், "இவனைக் கொண்டு காரியம் கைக்கொள்ள மாட்டோம்", என்று உள்ளவர்கள். (வித்தகன்) – ஆச்சர்யப்படத்தக்கவன். ஆச்சரியப்படுதல் என்பது என்னவென்றால் யசோதை முதலானவர்களுக்கு எளிமையுடன் இருந்த அதே நிலையில் பூதனை, சகடாசுரன், இரட்டை மரங்கள் முதலானவர்க்கு அடைய முடியாதபடி இருத்தல் ஆகும். மேலும் சயனித்துக் கொண்டிருந்த நேரத்தில், அர்ஜுனனும் துரியோதனனும் ஒன்றாக வர, அர்ஜுனனுக்குத் தன்னையே அளித்து துரியோதனுக்குப் பதரை அளிப்பது போன்று தனது படையை அளித்தான் அல்லவோ? நம்முடைய முன்னோர்கள் எம்பெருமானை அடைவதற்கு அவனையே உபாயமாகப் பற்ற, மற்றவர்கள் தாங்கள் செய்யும் கர்மங்கள் பலன்களை அளிக்கும் என்று எண்ணி அந்தக் கர்மங்களையே பற்றுவது போன்று துரியோதனின் நிலை இருந்தது. இராமாவதாரத்தில் – ஹிமவாந் மந்தரோ மேரு: - இமயமலை, மந்த்ரமலை, மேருமலை ஆகியவற்றை ஒரு கையால் உயர்த்தும் வலிமை பெற்ற இராவணனால் தூக்க இயலாதபடி லக்ஷ்மணன் இருந்தான். சத்ரூணாமப்ரகம்ப்யோபி லகுத்வமகமத் கபே: - பகைவர்களால் தூக்க இயலாதபடி இருந்த லக்ஷ்மணன், தூய்மையான மனம் கொண்ட அனுமனால் எளிதாகத் தூக்கப்பட்டான் – என்றது காண்க. இராவணன் படைகளுடன் கூடியவனாக இருந்த போதிலும், தன்னுடைய நெஞ்சில் உள்ள பகையால் அஸ்திரத்தில் அடிபட்ட லக்ஷ்மணனைத் தனது கைகளால் எடுத்துச் செல்ல முற்பட்டு, முடியாமல் கைவிட்டான். ஆனால் சிறிய திருவடியான அனுமன் தனியனாய் இருந்தும், தன்னுடைய மனதில் லக்ஷ்மணன் மீது கொண்ட அன்பு காரணமாக மயங்கிக் கிடந்த லக்ஷ்மணனை, ஒரு மாலை போன்று மிகவும் எளிதாக எடுத்துக்கொண்டு இராமனிடம் சென்றான். இப்படிக் கொள்ளவில்லை என்றால் இராவணனுக்கு கனக்கவேண்டும் என்றும், அனுமனுக்கு எடையற்று இருக்க வேண்டும் என்றும் ஆகாது அல்லவோ? ஆக வஸ்துவின் தன்மை இப்படியாக இருக்கும்.

வ்யாக்யானம் – (மலர்மகள் விரும்பும்) இவ்விரண்டுக்கும் அடி, இவளுடைய சேர்த்தியிறே. புஷ்பத்தில் பரிமளம்போலே புஷ்பத்தை இருப்பிடமாகவுடையளாய், அதில் பரிமளந்தானொரு வடிவுகொண்டாப்போலே இருப்பாளாய்; நாட்டார் பரிமளத்தை விரும்புவர்களாகில், பரிமளந்தான் "தண்ணீர் தண்ணீர்" என்னப் பிறந்தவன். (நம்) "உளன்

சுடர்மிகு சுருதியுள்" என்கிற ப்ரமாண ப்ரஸித்தியைப் பற்றச் சொல்லுகிறது நாராயணாநுவாகாதிகளோடே சேர; "ஹ்ரிச்ச தே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ" என்னக் கடவதிறே; "உளன் சுடர்மிகு சுருதியுள்" என்று ச்ருதி வழியாலே அங்கீகரித்த லக்ஷ்மீ ஸம்பந்தத்தை வெளியிடுகிறார். (அரும்பெறலடிகள்) பெறுதற்கரிய ஸ்வாமிகள். (மலர்மகள் விரும்பும் நம் அரும்பெறலடிகள்) பெரியபிராட்டியார் விரும்பும்படி இருக்கைபோலே காணும் ஸர்வாதிக வஸ்துவுக்கு லக்ஷணம். "அப்ரமேயம் ஹி தத்தேஜ:" என்னக் கடவதிறே.

விளக்கம் - (மலர்மகள் விரும்பும்) - இந்த இரண்டு தன்மைகளுக்கும் அடியாக உள்ளது பிராட்டியின் சேர்த்தியே ஆகும். மலரில் இருக்கின்ற நறுமணம் போன்று மலரையே இருப்பிடமாக உள்ளவள். அந்த நறுமணமே ஒரு வடிவு கொண்டவள் போல் இருப்பவள்; உலகத்தினர் நறுமணத்தை விரும்புவார்கள் என்றால், அந்தப் பரிமளமான திருமகள் விரும்பும்படியாக இருப்பவன் அவன். (நம்) - திருவாய்மொழி (1-1-7) - உளன் சுடர்மிகு சுருதியுள் - என்கிற ப்ரமாணத்தை, நாராயண அனுவாகத்துடன் சேர்க்கவேண்டும். ஹ்ரிச்ச தே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ – உனக்குப் பூதேவியும் ஸ்ரீதேவியும் இரு பக்தினிகள் – என்பதாகும். அந்த லக்ஷ்மீ ஸம்பந்தத்தை தானும் திருவாய்மொழியில் (1-1-7) - உளன் சுடர்மிகு சுருதியுள் - என்று அருளிச்செய்கிறார். (அரும்பெறலடிகள்) – பெறுவதற்கரிய எஜமானன். (மலர்மகள் விரும்பும் நம் அரும்பெறலடிகள்) - அனைத்தையும் நியமிக்கின்ற வஸ்துவின் லக்ஷணம் என்பது, பெரியபிராட்டியார் விரும்புவது போன்று இருக்கவேண்டும். இராமாயணம் ஆரண்யகாண்டம் – அப்ரமேயம் ஹி தத் தேஜ: - என்றது காண்க.

வ்யாக்யானம் - (மத்துறு) கீழ்ச்சொன்ன எளிமையை உபபாதிக்கிறார் மேல். மந்தரத்தைப் பிடுங்கி கடலில் நடுநெஞ்சிலே நட்டு, நெருக்கிக் கடைந்து, வெளிகொடு வெளியே தேவர்களுக்கு அம்ருதத்தைக் கொடுத்துவிட்ட மஹாபாஹுகிடீர் இப்போது இடைச்சேரியிலே வந்து பிறந்து வெண்ணைய் களவுகாணப்புக்கு, கட்டுண்டு அடியுண்டு நின்றானென்கிறார். (மத்துறு கடை வெண்ணெய்) தயிர்ச்செறிவாலே மத்தாலே நெருக்கிக் கடையப்பட்ட வெண்ணை. கடை வெண்ணெய் என்றால் கால த்ரயத்திலுள்ளத்தையும் காட்டும். "முப்போதும் கடைந்தீண்டிய வெண்ணெய்" என்னக்கடவதிறே; இங்கு வர்த்த மாநத்திலே ஒரு ஸௌகர்யமுண்டாகையாலே, "கடையா நிற்கச்செய்தே, பசியராயிருக்குமவர்கள் சோறு சமையப் பற்றாமல் வெந்தது கொத்தையாக வாயிலிடுமாபோலே, கடையப் பற்றாமல் நடுவே அள்ளி அழுது செய்யும்படியைச்

சொல்லுகிறது" என்று பிள்ளான் பணிக்கும்படி. (களவினில்) கடைகிற பராக்கிலே நிழலிலே ஒதுங்கி சாபலத்தாலே அள்ளி அமுதுசெய்தான்போலே காணும். (களவினில்) களவிடையாட்டத்தில். உபக்ரமஸமயத்திலேகிடீர் அகப்பட்டது. (உரவிடையாப்புண்டு) உரம் என்று – மார்வு. (மார்விடையிலே என்றபடி) "பொன்பெயரோன்றனது உரம் பிளந்து" என்னக் கடவதிறே. பெரியபிராட்டியார் நெருக்க அணைக்கும் மார்வைக் கிடீர் கயிற்றாலே நெருக்கிக் கட்டக் கட்டுண்டது. அன்றியே, மிடுக்கையுடைய ருஷபம்போலே இருக்கிறவன் கிடீர் கட்டுண்டான். (உரலிடையாப்புண்டு) உதரவிடையாப்புண்டு. உதரம் என்கிற இத்தை "உரம்" என்று இடைக்குறைத்தலாய்க் கிடக்கிறது. தாமோதரன் என்று பிள்ளை பெற்றுப் பேரிடும்படியிறே கட்டுண்டது. "தாம்நா சைவோ தரே பத்த்வா ப்ரத்யபத்நாதுலூகலே" என்றும், "யதி சக்நோஷி கச்ச த்வமதிசஞ்சல சேஷ்டித இத்யுக்த்வாத நிஜம் கர்ம ஸா சகார குடும்பிநீ" என்றும் சொல்லுகிறபடியிறே எளியனாயிருக்கும்படி; தான் தாயான பரிவுதோற்ற இவனைக் களவிலே கண்டுபிடித்து, தாம்பாலே ஓருரலோடே அடுத்துக்கட்டி, மறுகண்ணியும் பொத்தி "துருதுக்கைத்தனமடித்துத் திரிந்த நீ வல்லையாகில் போய்க்காணாய்!" என்று உறுக்கி விட்டால் போகமாட்டாதேயிருக்கும்; "பராஸ்ய சக்திர் விவிதைவ சரூயதே" என்று ஓதப்படுகிற வஸ்து இவளுக்கு எளியதானபடியிறே இங்ஙனே சொல்லலாகிறது; "ஸம்ஸார பந்த ஸ்திதி மோக்ஷ ஹேது" வான தானிறே இப்படி கட்டுண்டிருக்கிறான். ப்ரஹ்மாதிகளைத் தன் ஸங்கல்பத்தாலே கட்டுவது விடுவதாகிறவனிறே இப்போது அபலை கையாலே கட்டுண்டிருக்கிறான்; "த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி" என்கிறபடியே நம்முடைய கட்டை அவிழ்க்கவிறே தான் கட்டுண்டிருக்கிறது. (உரலினோடு இணைந்திருந்து) "உரலுக்கு ஒரு வ்யாபாரக்ஷமதை உண்டாமன்று தனக்கு ஒரு வ்யாபாரக்ஷமதை உள்ளது" என்று தோற்ற இருந்தபடி. (ஏங்கிய) உரலிற் காட்டில் வ்யாவ்ருத்தி இத்தனையே காணும்! அழப்புக்கவாறே "வாய் வாய்" என்னுமே; பின்னை அழமாட்டாதே ஏங்கியிருக்குமித்தனை. எளிவுண்டு – எளிவந்தபடி. (எத்திறம்) பிரானே! இதென்ன ப்ரகாசம்! இன்னம் மேன்மை தரைகாணலாம்; நீர்மை தரைகாண வொண்ணாதாய் இருந்ததீ! "உயர்வற உயர்நலமுடையவன்" என்கிற மேன்மையிலே போவேன் என்கிறார்; நியாம்யனயிருக்கிற இருப்பில் நியந்தாவாய் இருக்கிற இருப்புப் பேசலாய் இருந்ததீ! பேசப்புக்க வேதங்களும் "யதோ வாசோ நிவர்த்தந்தே" என்றதும் மேன்மையிலேயிறே; நிலமன்றென் கைக்கும் நீலமன்றிறே நீர்மை. இத்தனை தாழ நில்லாமையாலே ஸம்ஸாரிகள் பக்கல் காணவொண்ணாது; பரத்வத்தில் இந்நீர்மை

இல்லை; இதென்ன ப்ரகாரம் என்கிறார். பெரியவன் தாழ்ச்சியாகையாலே பொறுக்க மாட்டுகிறிலர்.

விளக்கம் – (மத்துறு) - இதுவரை கூறப்பட்ட எளிமையை மேலும் விளக்குகிறார். மந்தர மலையைப் பிடுங்கி, கடலின் நடு இதயத்தில் நட்டு வைத்து, அதனை நன்றாக உறுத்தும் படியாகக் கடைந்து, வெளியே கொண்டு வந்த அமிர்தத்தைத் தேவர்களுக்குக் கொடுத்த வலிமையான தோள்களை உடையவன்; இப்படிப்பட்ட அவன் அன்றோ இன்று ஆய்ச்சேரியில் பிறந்து, வெண்ணையைக் களவு செய்து உண்டு, கயிற்றால் உரலுடன் கட்டுண்டு, மத்தால் அடிபட்டு நின்றான், என்கிறார். (மத்துறு கடை வெண்ணெய்) – அதிகமான தயிர் காரணமாக மத்தால் நெருக்கமாகக் கடையப்பட்ட வெண்ணெய். கடைவெண்ணெய் என்றால் முக்கால வினைத்தொகையாகும். பெரியாழ்வார் திருமொழி (3-1-5) - முப்போதும் கடைந்தீண்டிய வெண்ணெய் – என்பது காண்க. "மிகுந்த பசியுள்ளவர்கள் உணவு சமைக்கும்வரை பசி தாங்க இயலாமல், வெந்ததும் வேகாததுமாக வாயில் இடுவது போன்று, முழுவதுமாகக் கடையும்வரை பொறுத்துக்கொள்ளாமல் நடுவே அள்ளி உண்பதைக் கூறுகிறார்", என்று ஸ்வாமி திருக்குருகைப்பிரான் பிள்ளான் கூறுவார். (களவினில்) – தானும் கடைவதாகப் பாசாங்கு செய்து, விளக்கின் நிழலிலே மறைந்து நின்று, வெண்ணெயை அள்ளி அமுது செய்தான் போலே அவனைக் காணலாம். (களவினில்) – களவு செய்யும் நேரத்தில், களவு செய்யத் தொடங்கும்போதே அகப்பட்டுக் கொண்டான். (உரவிடையாப்புண்டு) – "உரம்" என்றால் மார்பு. ஆகத் திருமார்பில் கட்டப்பட்டு என்று கருத்து. பெரியதிருமொழி (4-2-7) - பொன்பெயரோன்றனது உரம் பிளந்து - என்பதில் "உரம்" என்பது மார்பு என்றானது காண்க. பெரியபிராட்டியார் இவனை நெருக்கமாக அணைத்துக் கொள்ளும் திருமார்பை அல்லவோ கயிற்றால் கட்ட, அதற்குக் கட்டுப்பட்டான்? அல்லது மிடுக்கை உடைய காளை போன்று உள்ளவன் கட்டுண்டான். (உரவிடையாப்புண்டு) – உதரவிடையாப்புண்டு. "உரம்" என்பதை "உதரம்" என்பதன் சுருக்கமாகக் கொண்டு, தாமோதரன் என்று தன்னைப் பிள்ளையாகப் பெற்ற யசோதை தனக்குப் பெயரிடும்படியாகக் கட்டுண்டான். அத்தனை வெண்ணெய் உண்டால் பிள்ளையின் வயிற்றில் ஜீரணம் ஆகாது என்று தாயின் பரிவு யசோதைக்கு வெளிப்பட, அவன் களவு செய்யும்போது கண்டு, சட்டென்று பிடித்துக் கொண்டாள். தாம்புக் கயிற்றால் ஓர் உரலுடன் அவனைச் சேர்த்துக் கட்டினாள். அவனிடம், "துறுதுறுப்பு வெளிப்படும்படியாக திரிந்த நீ, வல்லவன் என்றால் தப்பிச் செல் பார்க்கலாம்", என்று மிரட்டி விட்டுச் சென்றாள். அவனும் போகாமல் நின்றான். ச்வேதாஸ்வதர உபநிஷத் - பராஸ்ய சக்திர் விவிதைவ சரூயதே - எம்பெருமான் வல்லமை பலவிதமாகக் கேட்கப்படுகிறது - என்று ஓதுகின்ற பரம்பொருள், இவளுக்கு எளியவனாக

நின்றதால் இவ்விதம் கூறுகிறார். அனைவரையும் ஸம்ஸாரபந்தத்திலிருந்து மோக்ஷம் அளிக்கக் காரணமானவன் அல்லவோ இப்படிக் கட்டுப்பட்டு நிற்கிறான்? நான்முகன் முதலானவர்களைத் தன்னுடைய ஸங்கல்பத்தால் மட்டுமே கட்டுவதும் விடுவிப்பதும் செய்பவன் இங்கு ஒரு பெண் கையால் கட்டுண்டு நிற்கிறான். கீதை (4-9) - த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி – எனது அவதாரத்தை அறிகின்றவன் மீண்டும் பிறவி அடையாமல் என்னையே அடைகிறான் - என்பதற்கு ஏற்றபடி நம்முடைய கட்டை அவிழ்ப்பதற்காகவே தான் கட்டுண்டு நிற்கிறான். (உரலினோடு இணைந்திருந்து) - உரலுக்கு ஒரு தொழில் இருப்பது போன்று, தனக்கு எளியவனாக நிற்கும் தொழில் உள்ளது என்று நமக்கு விளக்கும்படியாக நிற்கிறான். (ஏங்கிய) - உரலை விட வேற்றுமை என்ன என்றால் = தூய்மையான இவனைக் கள்வன் என்று கூறினால், அதனைப் பொறுக்கமாட்டாமல் அழத் தொடங்குவான். அப்போது யசோதை, " வாய், வாய், வாயைத் திறக்காதே", என்று அதட்டியவுடன் மிகுந்த அச்சத்துடன் நிற்பான். அதன் பின்னர் அழாமல் விக்கியபடி நிற்பான். (எத்திறம்) – பெருமானே! உன்னுடைய எளிமையில் இது எந்தவிதம்! உன்னுடைய மேன்மையைக் கூட அறிந்துவிடலாம், ஆனால் உனது எளிமையை அறிய இயலாமல் நீ நின்றாயே! உயர்வற உயர்நலமுடையவன் - என்னும் மேன்மையில் போவேன் என்கிறார். ஏவப்படுகின்றவனாய் இருக்கின்ற நிலையில் ஏவுகின்றவனாய் இருக்கின்ற நிலை பேசும்படியாக இருந்தாயே! யதோ வாசோ நிவர்த்தந்தே - அவனது ஆனந்த குணத்தை அறிய இயலாமல் வாக்கும் மனமும் திரும்புகின்றன - என்று வேதங்களும் உன்னுடைய மேன்மையைக் கூறினவே அல்லாமல், எளிமையைக் கூற இயலவில்லையே! இந்த எளிமையைச் சாதாரண மக்களிடமும் காணலாமே என்றால் - பணிவாக நிற்பது என்பது ஸம்ஸாரிகளிடம் காண இயலாது. இந்த உலகத்தில் களவு செய்வாரும், கட்டப்பட்டவர்களும் பலர் உண்டு அல்லவோ? இவனிடத்தில் மட்டும் இதனை இத்தனை விசேஷமாகக் கொண்டு ஈடுபட வேண்டுமோ என்றால் – உயர்ந்தவன் தாழ்ந்த நிலையில் உள்ளதைப் பொறுத்துக் கொள்ள இயலவில்லை .

1-3-2. எளிவரு மியல்வினன் நிலைவரம் பிலபல பிறப்பாய்
ஒளிவரு முழுநலம் முதலில கேடில வீடாம்
தெளிதரு நிலைமைய தொழிவிலன் முழுவது மிறையோன்
அளிவரு மருளினோ டகத்தனன் புறத்தன னமைந்தே.

பொருள் – உயிரினங்களில் ஏற்றத்தாழ்வு காணாமையால் ஒரு நிலையும், விதியும் இல்லாத பலவகைப்பட்ட பிறப்புக்களை உடையவன்; தொடக்கமும் முடிவும் இல்லாமல் காணப்படும் நற்குணங்கள் ஒளிரும்படியாக வருதலை இயல்பாக உடையவன்; வீடு

எனப்படும் தெளிவான பரம்பதத்தை அளிக்கின்ற தன்மையிலிருந்து எப்போதும் நீங்காதவன்; அடியார்களுக்கு அகத்தனாய், அல்லாதார்க்குப் புறத்தனாய் இருப்பவன்; இப்படிப்பட்ட அவன் குளிர்ந்த பக்குவமான அருளோடு கூடி இருக்கிறான்.

அவதாரிகை - "எத்திறம்" என்று ஆறு மாஸம் மோஹித்துக்கிடந்தார் என்று ப்ரஸித்தமிறே; இவர் மோஹித்துக் கிடக்க – பெருமாளும் பிராட்டியும் பள்ளிகொண்டருளினவிடத்தை ஸ்ரீகுஹப்பெருமாள் நோக்கிக் கொண்டு கிடந்தாப்போலே ஸ்ரீமதுரகவி ப்ரப்ருதி ஸஜ்ஜநங்களடங்கலும், பலிதமான வ்ருக்ஷத்தைப் பக்ஷிஜாதங்கள் மொய்த்துக்கொண்டு கிடக்குமாபோலே இவரைச் சூழ்ந்து கிடந்தார்கள். "மந்யே ஸாபரணா ஸுப்தா ஸீதா அஸ்மிந் சயநோத்தமே", வழி நடந்த விடாயாலே ஆபரணங்கள் கழற்றாதேயாயிற்றுப் பள்ளிகொண்டது. "தத்ர தத்ர ஹி த்ருச்யந்தே ஸக்தா: கநகபிந்தவ:" பசியருகுத்தந்தாம் ஜீவநத்தைப் பகுந்து இடுவாரைப்போலே, அந்த ஸ்ரீபரதாழ்வானுக்குத் தாம் நோக்கிக் கொண்டு கிடந்த இடத்தைக் காட்டுகிறானிறே. அவ்விடத்தைக் கண்டவாறே "சத்ருக்நோ அநந்தரஸ்தித:" என்னும்படி அவ்விடத்தைக்காணா, மோஹித்துக் கிடந்தானாயிற்று ஸ்ரீபரதாழ்வான்; அப்படியே மோஹித்துக் கிடந்த இவர் "சிரேண ஸம்ஜ்ஞாம் ப்ரதிலப்ய சைவ விசிந்தயாமாஸ விசாலநேத்ரா" என்கிறபடியே அநுபவிதாக்கள் பாக்யத்தாலே காலமுணர்த்த உணர்ந்தார். நல்லார் நவில் குருகூரிறே; ஸத்துக்களடங்கலும் இவரைப் பற்றிப் படுகாடு கிடந்தது; உணர்ந்த அநந்தரம் "நான் இங்கு சொல்லிற்றென்" என்று கேட்டார்; "பத்துடையடியவர்க்கெளியவன்" என்று ப்ரஸக்தாநுப்ரஸக்தமாகச் சிலவற்றைச் சொல்லா, "எத்திறம்" என்று மோஹித்துக்கிடந்தீர்", என்றார்கள்; "தப்பச் சொன்னோம், அழித்து ப்ரதிஜ்ஞை பண்ணவேணும்" என்கிறார் இரண்டாம் பாட்டில். ஆவதென்னென்னில்; பரோபதேசம் பண்ணப்புக்குத் தாமநுபவித்தார் முதற்பாட்டில். இப்பாட்டுத் தொடங்கி பரோபதேசம் பண்ணுகிறார். கீழே ப்ரஸ்துதமான ஸௌலப்யத்தை ஸப்ரகாரமாக அருளிச்செய்கிறாரிதில்.

விளக்கம் – "எத்திறம்" என்ற பாசுரத்தை அருளிச்செய்த பின்னர், ஆழ்வார் ஆறு மாதங்கள் மயங்கிக் கிடந்தார். இவர் இப்படியாக மயங்கிக் கிடக்க – இராமனும், சீதையும் பள்ளி கொண்ட இடத்தில் குஹப்பெருமாள் நோக்கி நின்றபடி இருந்தது போன்று, ஆழ்வார் கிடந்த இடத்தில், பழங்கள் நிறைந்த மரங்களைப் பறவைகள் மொய்த்துக் கிடப்பது போல், மதுரகவி முதலானவர்கள் இவரைச் சூழ்ந்தபடி நின்றனர். குஹப்பெருமாள் நோக்கி நின்றதற்கு என்ன ப்ரமாணம் என்றால் – மந்யே ஸாபரணா ஸுப்தா ஸீதா அஸ்மிந் சயநோத்தமே - குஹப்பெருமாளின் ஆச்ரமத்தை விட்டு இராமன் புறப்பட்டு ஓர் இடத்தில் எழுந்தருளியிருந்தான்; அங்கு பரதன் எழுந்தருளினான். அவன் வருவதற்கு முன்பாக இடையில் இருபத்துஇரண்டு நாட்கள் கழிந்தன. அப்போது பரதன் கண்களில் குஹன் காவல் புரிந்து நின்ற இடத்தில் பொன்துகள்கள் கிடந்தது தெரிந்தது. அதாவது, நடந்து வந்த களைப்பு காரணமாக ஆபரணங்களைக் கழற்றாமலேயே சீதை சயனித்து

இருக்கவேண்டும், அந்த ஆபரணங்களின் துகள்கள் அங்கே இரைந்து கிடந்திருக்க வேண்டும், இதனையே குஹன் காவல் காத்து நின்றிருக்கலாம் என்று பரதன் எண்ணினான். அந்த இடத்திற்கு வந்த பரதனுக்கு, பசியுடன் உள்ள ஒருவருக்குத் தனது உணவை அளிப்பது போன்று, பரதனுக்கு தான் நோக்கி கொண்டிருந்த இடத்தை குஹன் காட்டினான். உடனே, தொட்டவுடன் விழுந்துவிடுவான் என்பது போன்ற நிலையில் இருந்து பரதன் விழுந்தான். அது போன்றே ஆழ்வாரும் மயங்கி கிடந்தார். இராமாயணம் - சிரேண ஸம்ஜ்ஞாம் ப்ரதிலப்ய சைவ விசிந்தயாமாஸ விசாலநேத்ரா - அனுமன் கூறியதைக் கேட்ட பரந்த கண்களை உடைய சீதை பல நாழிகைகள் கழித்து மயக்கம் தெளிந்து சிந்தித்தாள் – என்பது போன்று, பெரியோர்களுடைய நல்வினை காரணமாக இவருக்குக் காலம் உணர்த்தப்பட்டது. அது, திருவிருத்தம் (100) - நல்லார் நவில் குருகூர் – என்பதால், அங்கிருந்த பெரியவர்கள் அனைவரும் ஆழ்வாரையே பற்றி, வெட்டி வீழ்த்தப்பட்ட மரமாகக் கிடந்தனர். இப்படிப்பட்ட பெரியோர்களால் உணர்த்தப்பட்ட ஆழ்வார், "நான் இதுவரை என்ன கூறினேன்?", என்றார். இதற்கு அவர்கள், "பத்துடைய அடியவர்க்கு எளியவன் என்று தொடங்கி, அதனை விளக்கி, எத்திறம் என்று கூறிய பின்னர் உடனேயே மயங்கி விட்டீர்", என்றனர். உடனே ஆழ்வார், "மற்றவர்களுக்கு உபதேசம் செய்யத் தொடங்கி, தனக்கு உபதேசம் செய்து கொண்டோமே", என்று எண்ணியவராக அவர்களிடம், "தப்பு செய்துவிட்டேன்", எனக் கூறி, "அதற்கு ப்ராயச்சித்தம் செய்கிறேன்", என்றார். ஆக மற்றவர்களுக்கு உபதேசம் செய்யத் தொடங்கி, தானே அனுபவித்தார்; இந்தப் பாசுரம் தொடங்கி மற்றவர்களுக்கு உபதேசம் செய்கிறார். கடந்த பாசுரத்தில் கூறிய ஸௌலப்யத்தை வகைப்படுத்தி அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் - (எளிவருமியல்வினன்) எளிமையை இயல்வாக, ஸ்வபாவமாக உடையவன்; ஸ்நேஹிகளுக்கு ஸ்நேஹியாயிருக்குமென்னுமிது குற்றமன்றோ. எல்லார்க்கும் காதாசித்கமாக எளிமை கூடும்; இவனுக்கு எளிமை ஸ்வரூபனென்கிறார். (நிலைவரம்பில) "இன்ன அவதாரம், இன்ன சேஷ்டிதமென்றில்லை" என்று பூர்வாசார்யர்கள் நிர்வாஹம். பட்டர் இவ்விரண்டையும் நிலையில்லாமையிலே கொண்டு, "இனி வரம்பில்லாமையாவது - அவதரித்து எளியனாய் நின்று நிலைதன்னிலே பரத்வம் தோற்ற நிற்கிலும் நிற்கும்" என்று. ஸாரத்யவேஷத்தோடே தாழநிற்கச்செய்தே ஸ்ரீவிச்வரூபத்தைக் காட்டியும், தான் புத்ரார்த்தமாகப் போகாநிற்கச்செய்தே கண்டாகர்ணனுக்கு மோக்ஷத்தைக் கொடுத்தும், ஏழு திருநக்ஷத்திரத்திலே கோவர்தநகிரியை தரித்துக் கொண்டு நின்றும் செய்தவை. இத்தாற் சொல்லிற்றாயிற்றது - ஒன்றிலும் ஒரு நியதியில்லை; ரக்ஷணத்துக்கு உறுப்பாமத்தனையே வேண்டுவது; ஏதேனுமாகவமையும் இவனுக்கு என்கை.

விளக்கம் - (எளிவருமியல்வினன்) - எளிமையை தன்னுடைய இயல்பாகவே, ஸ்வபாவமாகவே உடையவன். தன்னிடத்தில் அன்புடையவர்களிடம் மட்டுமே அன்புடன் இருத்தல் என்பது ஒரு தோஷமாகிவிடும் என்பதால் அதனை மறுத்து, "எல்லாருக்கும் ஏதோ ஒரு காலகட்டத்தில் மட்டுமே எளிமை உண்டாகும், ஆனால் இவனுக்கு எளிமை என்பது ஸ்வரூபமாகவே இருக்கும்", என்கிறார். (நிலைவரம்பில) – "இன்ன அவதாரத்தில் இன்ன செயல் செய்வான் என்ற கட்டுப்பாடுகள் ஏதும் கிடையாது", என்று பூர்வாசார்யார்கள் கூறுவார்கள். ஸ்வாமி பராசரபட்டர் இவ்விரண்டையும் "நிலையில்லாமை" என்பதுடன் சேர்த்து, "வரம்பில" என்பதற்கு வேறு பொருள் அருளிச் செய்வார். அதாவது - அவதரித்து எளியனாய் நின்ற நிலையிலும், பரத்வம் வெளிப்படும்படியாகவே நிற்பான் - என்றார். தேரோட்டியாக தாழ்வாக நின்றபோதிலும் விச்வரூபத்தைக் காண்பித்ததும், தான் புத்திரபேற்றின் பொருட்டு போகாமல் நின்றபோதிலும் கண்டாகர்ணனுக்கு மோக்ஷத்தை அளித்தும், தனது ஏழு வயதில் கோவர்த்தன மலையைத் தாங்கிக்கொண்டு நின்றதும் இத்தன்மையாலே ஆகும். இதனால் அறியப்படுவது - ஒன்றிலும் ஒரு விதிமுறையும் இல்லை, இவை அனைத்தையும் காப்பதற்காகவே அவன் செய்வது ஏதேனுமாக இவனுக்கு அமையும் என்பதாகும்.

வ்யாக்யானம் - (பல பிறப்பாய்) தெளிவடைய தான் சொல்லும்போதும் "பஹூநி" என்னும். யதாபூதவாதியான வேதம் "பஹுதா விஜாயதே" என்னும். அவன் கொடுத்த அறிவுகொண்டு சொல்லுவார் "பல பிறப்பு" என்பர்கள். (பிறப்பாய்) "பரார்த்தமாகத் தாழநின்றோம்" என்று தன் பக்கலிலும் புரையின்றிக்கேயிருக்கை; "ஆத்மாநம் மாநுஷம் மந்யே", "அஹம் வோ பாந்தவோ ஜாத:"

விளக்கம் - (பல பிறப்பாய்) - தன்னைப் பற்றி தான் தெளிவாகக் கூறும்போது கீதை (18-55) - பஹூநி – பல பிறவி - என்று கூறுவான். உண்மையை மட்டுமே கூறும் வேதங்களும் - பஹுதா விஜாயதே - பல ஜாதிகளில் பிறக்கிறான் - என்று கூறுகின்றன. அவன் அளித்த அறிவைப் பெற்ற ஆழ்வார்கள் - பல பிறப்பு - என்பார்கள். (பிறப்பாய்) - மற்றவர்களுக்காகத் தாழ்வாப் பிறந்தோமே என்று தன்னிடம் எந்தவிதமான எண்ணமும் இல்லாததால் "பிறப்பாய்" என்கிறார். அவனுக்கு "நானே பரம்பொருள்" என்ற எண்ணம் சிறிதும் இல்லை என்பதை எப்படி அறியலாம்? இராமாயணம் - ஆத்மாநம் மாநுஷம் மந்யே - என்னை நான் மனிதனாகவே எண்ணுகிறேன் – என்றும், விஷ்ணுபுராணம் – அஹம் வோ பாந்தவோ ஜாத:" - நான் உங்களின் உறவினனாகப் பிறந்துள்ளேன் - என்றும் கூறுவதன் மூலம் அறியலாம்

வ்யாக்யானம் - (ஒளிவருமுழுநலம்) அபஹதபாப்மத்வாதிகள் ஜீவாத்மாவுக்குமுண்டிறே; இங்ஙனேயிருக்கச்செய்தே ஜந்மநிபத்தநமான திரோதாநம் பிறவாநின்றதிறே ஸ்வரூபத்துக்கு. அவனுக்கு ஜந்மத்தால் வரும் விகாராதிகளுண்டு; இவன் தன்னைத் தாழவிட்டுப் பிறக்கப்பிறக்க, கல்யாணகுணங்கள் புகர்பெற்றுவாராநிற்கும். "ஸ உ ச்ரேயாந் பவதி ஜாயமாந:" கர்மநிபந்தந ஜந்மமாகிலிறே பிறக்கப் பிறக்கப் புகர் அழிவது; அநுக்ரஹமடியாக வருகிற ஜந்மமாகையாலே புகர்பெற்றுவாராநிற்கும். "ஸ ஏவ ச்ரேயாந்" என்றபடி.

விளக்கம் – (ஒளிவருமுழுநலம்) – பாவங்கள் அனைத்தும் நீங்கிய தன்மை முதலானவை ஜீவாத்மாவுக்கும் உண்டு என்றாலும், ஜீவனுக்குப் பிறப்பு காரணமாக இறத்தல் முதலான தன்மைகள் உண்டு. மேலும் ஸம்ஸாரத்தில் உழல்வதால் சுகதுக்கங்களும் ஜீவனுக்கு உண்டு. ஆனால் எம்பெருமான் தன்னை எளிமையாகக் காண்பித்து, பிறவி எடுக்க எடுக்க, அவனது திருக்கல்யாண குணங்கள் மேன்மேலும் ஒளிர்ந்தபடியே இருக்கும். இருவருக்கும் பிறவி என்பது ஒன்றாகவே இருக்க, எம்பெருமானின் குணங்கள் மட்டும் ஓங்கி ஒளிர்வது ஏன்? காரணம் அவன் யஜுர்வேதம் கூறுவது போல - ஸ உ ச்ரேயாந் பவதி ஜாயமாந: - பிறந்தவனாய், உயர்ந்தவனாய் உள்ளான் - என்பதற்கு ஏற்ப உள்ளான். கர்மம் காரணமாகப் பிறவி எடுத்தால் மட்டுமே பிறவி எடுக்க எடுக்க ஒளி குறையும். ஆனால் மற்றவர்களுக்கு அநுக்ரஹம் செய்வதற்குக் காரணமாக உண்டாகும் பிறவியாக அவனது பிறப்புகள் உள்ளதால், அவனது திருக்கல்யாண குணங்கள் மேன்மேலும் ஒளிர்ந்தபடியே இருக்கும். ஸ ஏவ ச்ரேயாந் - அவனே உயர்ந்தவன் – என்றது காண்க.

வ்யாக்யானம் - அக்குணங்கள்தானிருக்கும்படியென்னென்றால் (முதலில கேடில) ஒருநாள் வரையிலே தோன்றி ஒருநாள் வரையிலே முடியுமவையன்றே; ஸ்வரூபாந்தர் கதமாயுள்ளன. (வீடாந்தெளி இத்யாதி) இக்குணம் "ஒளிவருமுழுநலம்" என்ற இதில் புகாதோவென்னில்; மோக்ஷப்ரதத்வமும் தனியே சொல்லவேண்டுவதொரு குணமாகையாலே சொல்லுகிறார். அவதாரத்துக்கு ப்ரயோஜநம் இதுவேயிறே. (வீடாமித்யாதி) மோக்ஷமாகிற தெளிவு - பரமபதம். அத்தைத்தரும் ஸ்வபாவம் என்றும் ஒத்திருக்குமவன்; அவன் இங்கே வந்து அவதரிக்கிலும் சோகமோஹங்களைப் பண்ணும் இவ்விடம்; இவன் அங்கே செல்லிலும் தெளிவைப்பண்ணும் அவ்விடம். "தெளிவிசும்பு" என்னக்கடவதிறே. (முழுவதுமொழிவிலன்) கீழ்ச்சொன்ன இரண்டையும் கூட்டிச் சொல்லுகிறார்.

விளக்கம் – அந்தக் குணங்கள் எப்படி இருக்கின்றன என்பதை அருளிச்செய்கிறார். (முதலில கேடில) – ஒருநாள் மலையின் அடிவாரத்திலே தோன்றி, அதே ஒருநாளில் மலையின் அடிவாரத்தில் முடியும் சூரியன் போன்றதல்ல இவனது குணங்கள் என்கிறார். அவை ஸ்வரூபத்துடன் சேர்ந்தவையாக உள்ளன. (வீடாந்தெளி இத்யாதி) – இது

மோக்ஷத்தை அளிக்கும் குணமாகும். இந்தக் குணம் "ஒளிவருமுழுநலம்" என்பதில் சேராதோ என்றால் – மோக்ஷத்தை அளிக்கின்ற குணமானது தனியே கூறப்படவேண்டும், இது அத்தகைய குணமாக உள்ளதால் இவ்விதம் தனித்துக் கூறுகிறார். இவன் திருஅவதாரம் செய்வதன் பலன் இதுவே அல்லவோ? (வீடாமித்யாதி) - மோக்ஷம் என்னும் தெளிவு = பரமபதம், அதனைத் தரும் ஸ்வபாவம் எப்போதும் இவனிடத்தில் உண்டு. அவன் இங்கு வந்து அவதரித்தாலும், இந்த பூமியானது சோகங்களையும் மயக்கங்களையும் உண்டாக்கியபடியே இருக்கும். இவன் பரமபதம் செல்லாவிட்டாலும், அந்த இடம் தெளிவாகவே இருக்கும். ஆகவேதான் திருவாய்மொழியில் (9-7-5) - தெளிவிசும்பு - என்றார். (முழுவதுமொழிவிலன்) – இதுவரை கூறிய திருக்கல்யாண குணங்களின் மேன்மை, மோக்ஷம் அளிக்கும் தன்மை ஆகியவற்றைச் சேர்த்து கூறுகிறார்.

வ்யாக்யானம் - (இறையோன்) மோக்ஷப்ரதத்வம் ஈச்வரனுக்கே உள்ளதொன்றிறே. அவதரிக்கச்செய்தே ஈச்வரத்வத்தில் குறையாதே நிற்கை. (அளிவருமருளினோடு) குளிர்ந்து பக்வமான அருளோடே. நிர்ஹேதுகமான அருளோடே. (அகத்தனன்) ஆச்ரிதர்க்கு, கழுத்திலே ஓலைகட்டி "தூதுபோ" என்னலாம்படியிருக்கும். (புறத்தனன்) அநாச்ரிதர்க்கு, அந்நிலை தன்னிலே கிட்டவொண்ணாதபடியிருக்கும். (அமைந்தே) இப்படி சமைந்து. "இறையோன் அளிவருமருளினோடகத்தனன் புறத்தனனாயமைந்து, முதலிலகேடிலவா மொளிவருமுழுநலம், வீடாந்தெளிதருநிலைமையது முழுவதுமொழி விலனாய், நிலைவரம்பில பலபிறப்பாய், எளிவருமியல்வினன்" என்று அந்வயம்.

விளக்கம் – (இறையோன்) – மோக்ஷத்தை அளிக்கும் தன்மை ஈச்வரனுக்கு மட்டுமே உள்ளது. அவன் பலவாறு அவதரித்தபோதிலும், தனது அந்த ஈச்வரத் தன்மையானது குறையாமல் நிற்பான். (அளிவருமருளினோடு) – குளிர்ந்து பக்குவமான அருளுடன். எந்தவிதமான காரணமும் இல்லாமல் செய்கின்ற கடாக்ஷம். (அகத்தனன்) - அடியார்கள் விஷயத்தில் பாண்டவர்கள் செய்தபடி, கழுத்திலே ஓலையைக் கட்டிவிட்டு "தூது போ" என்று கட்டளை இடலாம்படி எளிமையாக இருப்பான். (புறத்தனன்) - தன்னை அண்டாதவர்களிடம் அந்த நிலை தன்னிடம் கிட்டாமல் இருப்பான். (அமைந்தே) – இவ்விதம் அமைந்து.

படிக்கும் வரிசை - இறையோன் அளிவருமருளினோடகத்தனன் புறத்தனனாயமைந்து, முதலிலகேடிலவா மொளிவருமுழுநலம், வீடாந்தெளிதருநிலைமையது முழுவதுமொழி விலனாய், நிலைவரம்பில பலபிறப்பாய், எளிவருமியல்வினன்.

1-3-3. அமைவுடை யறநெறி முழுவது முயர்வற வுயர்ந்து
அமைவுடை முதல்கெடல் ஒடிவிடை யறநில மதுவாம்
அமைவுடைய யமரரும் யாவையும் யாவருந் தானாம்
அமைவுடை நாரணன் மாயையை யறிபவர் யாரே.

பொருள் – பலனுடன் கூடியுள்ள தர்ம மார்க்கங்கள் அனைத்திலும் உயர்ந்த பலனான ஸ்ருஷ்டி முதலான அனைத்தின் தொடக்கத்தின் எல்லையில் நிற்கின்றஅறிவும் ஆற்றலும் வாய்ந்த நான்முகன் முதலான தேவர்கள், அசேதன பொருள்கள், சேதன பொருள்கள் ஆகிய அனைத்தும் தானே ஆகும்படிப் பொருந்தி நிற்கின்ற நாராயணின் பிறவியின் தன்மையை யார் அறிவார்.

அவதாரிகை – எளியன் என்றார்; எளிமையை ஸப்ரகாரமாக அருளிச்செய்தார்; இவனுடைய அவதார ரஹஸ்யம் ஒருவர்க்கும் நிலமல்ல கிடீர் என்கிறார் இதில்.

விளக்கம் – முதல் பாசுரத்தில் எளியவன் என்றார். அடுத்த பாசுரத்தில் அந்த எளிமையை வகைப்படுத்தி அருளிச்செய்தார். இந்தப் பாசுரத்தில் அவனுடைய அவதார ரஹஸ்யம் என்பது யாராலும் அறியக்கூடியது அல்ல என்கிறார்.

வ்யாக்யானம் - (அமைவுடையறநெறி இத்யாதி) ஒரு தர்மத்தை அநுஷ்டியா நிற்கச்செய்தே, இப்போதே பலம் பெறதொழியிலும் ஒழியும்; இடையிலே சில விக்நங்கள் வரிலும் வரும்; அங்ஙனன்றிகே, சக்ரவர்த்தி, நாலாஹுதி பண்ணி நாலு ரத்நத்தை எடுத்துக் கொண்டாப்போலே பலத்தோடே ஸந்திப்பிக்கக்கடவ தர்மமார்க்கம் எல்லாவற்றாலும், "உயர்வறவுயர்நலமுடையவன்" என்று ஸர்வேச்வரன் குணங்களால் உயர்ந்திருக்குமாபோலே, "இதுக்கு இவனுக்கு அவ்வருகு ஒருவருமில்லை" என்னும்படி சமைந்திருக்கை.

விளக்கம் – (அமைவுடையறநெறி இத்யாதி) - ஒரு தர்மத்தை செய்யத் தொடங்கும்போதே பலன் இல்லாமல் நிற்கக்கூடும். தொடங்கி சில நாட்கள் கழித்து சில தடைகள் உண்டானாலும் உண்டாகலாம். அல்லது நான்கு யாகங்கள் செய்து, நான்கு இரத்தினங்களைப் பெற்ற தசரதசக்ரவர்த்தி போன்றும், பலனுடன் சேர்க்கவல்ல தர்ம வழிகள் அனைத்தாலும் " உயர்வறவுயர்நலமுடையவன்" என்று ஸர்வேச்வரன் தனது குணங்களால் உயர்ந்திருப்பது போன்று ஒரு சிலருக்கு, "இந்தத் தர்மத்தில் இவனுக்கு மேலாக யாரும் இல்லை" என்றும் அமையலாம்.

வ்யாக்யானம் - (அமைவுடை முதல் இத்யாதி) ப்ரஹ்மா ஜகத்ஸ்ருஷ்டி பண்ணினால் "ஸர்வேச்வரனோ!" என்று சங்கிக்கவேண்டும்படியிருக்கை. இப்படி சமைவையுடைத்தான ஸ்ருஷ்டி என்ன, அப்படியிருந்துள்ள ஸம்ஹாரமென்ன, இடையொடிவு என்ன, இடை – இடையிலே - நடுவே, ஒடிவு – ஸம்ஹாரம்; அவாந்தர ஸம்ஹாரம் என்றபடி; இவை (அறநிலமதுவாம்) இவை தங்களுக்கு நிலையிட்டுக்கொடுத்த ஸர்வேச்வரனையும் மறுத்துக் கேள்விகொள்ள வேண்டாதபடி மிகவும் விதேயமாம்படி சமைந்த ப்ரஹ்மாதிகளும். (யாவையும்) அசேதநங்களும். (யாவரும்) சேதநரும்.

விளக்கம் – (அமைவுடை முதல் இத்யாதி) - நான்முகன் உலகைப் படைத்தால் "ஸர்வேச்வரனோ" என்று ஐயம் கொள்ளும்படி இருத்தல். இப்படியாக இருக்கின்ற படைப்பு, அழித்தல், இடையிலே ஸம்ஹாரம் போன்றவை என்ன. (அறநிலமதுவாம்) – இப்படி இருக்கின்ற ஸ்ருஷ்டி, ஸம்ஹாரம் முதலான செயல்களை தங்களுக்கு ஏற்படுத்தி கொடுத்த ஸர்வேச்வரனையும் மறுத்துக் கேள்வி கொள்ள வேண்டாதபடி மிகவும் உரிமையாக சமைந்த நான்முகன் முதலான தேவர்கள். (யாவையும்) – அசேதனங்களும். (யாரும்) - சேதனங்களும்.

வ்யாக்யானம் - (தானாம் அமைவுடை நாரணன்) சேதநாசேதநங்களெல்லாம் தான் என்கிற சொல்லுக்குள்ளே ப்ரகாரமாய் அந்வயிக்கும்படியான சமைவையுடைய னாகையாலே நாராயணன் என்னும் திருநாமத்தையுடையவனுடைய. (மாயையை அறிபவர் யாரே) இவனுடைய அவதார ரஹஸ்யம் ஒருவர்க்கும் அறிய நிலமல்ல என்கிறார். ப்ரகாரியான தான் – ப்ரகாரமான வஸ்துவிலே ஒன்று, "என் மகன்" என்று அபிமாநிக்குபடி வந்து பிறந்த இவ்வாச்சர்யம் ஒருவர்க்கும் நிலமல்ல என்கிறார். (தானாம் அமைவுடை நாரணன்) ஒருவன் ஒருவனை "உனக்கு ஜீவநம் என்ன வேணும்" என்றால், தன் புத்ராதிகளையும் கூட்டிக்கொண்டு "எனக்கு கலநெல்லு வேணும்" என்னாநின்றானிறே; அப்படியே இவை அடங்கலும் தன் அஹம் சப்தத்துக்குள்ளே அடங்கி, தான் இவற்றுக்கு அபிமாநியாயிருக்கும்படியைச் சொல்லுகிறது.

விளக்கம் – (தானாம் அமைவுடை நாரணன்) – சேதனம் மற்றும் அசேதனம் ஆகிய அனைத்தும் "தான்" என்ற சொல்லுக்குள்ளே விசேஷணங்களாய் சேர்கின்ற சமைவை உடையவன் என்பதால் நாராயணன் என்னும் திருநாமத்தைக் கொண்டவன். இவனுடைய அவதார ரஹஸ்யம் என்பது யாராலும் அறிந்து கொள்ள இயலாத ஒன்று என்கிறார். ப்ரகாரியான க்ருஷ்ணன், ப்ரகரமான வஸ்துவில் ஒன்றான யசோதை "என் மகன்" என்று கூறும்படியாக வந்து பிறந்த இந்த ஆச்சர்யம் யாருக்கும் புரியாத ஒன்று என்கிறார். (தானாம் அமைவுடை நாரணன்) – ஒருவனிடம் ஒருவன், "உனக்கு ஒவ்வொரு மாதமும் பிழைப்பதற்கு என்னவேண்டும்", என்றால், அவன் தனது புத்திரர்கள் முதலானவர்களை அழைத்து வந்து ,"எனக்கு கலம் நெல் வேண்டும்", என்பான் அல்லவோ? அப்படியாகவே

இவை அனைத்தும் அடங்குவதும், தனது அஹம் என்ற பதத்திற்குள் அடக்கி, தான் இவற்றுக்கு அபிமானியாக உள்ள நிலை கூறப்படுகிறது.

வ்யாக்யானம் - (அறிபவர் யாரே) நித்யஸூரிகள் பரத்வாநுபவம் பண்ணுகையாலே அறியார்கள்; ஸம்ஸாரிகள் நாஸ்திகராகையாலே அறியார்கள்; ப்ரஹ்மாதிகள் தந்தாம் அறிவாலே அறியவிருக்கிறவர்களாகையாலே அறியார்கள்; மயர்வற மதிநலமருளப் பெற்றவர்கள் மோஹித்துக் கிடப்பர்கள்; ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனான தானும் "ஜந்ம கர்ம ச மே திவ்யம்" என்னுமாகையாலே ஒருவர்க்கும் நிலமல்ல என்கிறார்.

விளக்கம் - (அறிபவர் யாரே) - நித்யசூரிகள் பரத்த்வத்தை மட்டுமே அறிவதால், அவதார ரஹஸ்யம் அறியமாட்டனர். ஸம்ஸாரிகள் நாஸ்திகர்களாக உள்ளதால் அறியமாட்டார்கள். நான்முகன் உள்ளிட்ட தேவர்கள் தத்தமது அறிவால் அறிய முற்படுவதால் அறியமாட்டார்கள். மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்கள் இவனை எண்ணி மயங்குவதால் அறியமாட்டார்கள். அனைத்தும் தெரிந்த ஸர்வேச்வரனும் கீதையில் (4-9) - ஜந்ம கர்ம ச மே திவ்யம் - எனது பிறவியும் செயல்களும் திவ்யமானவை - என்பதால் அவனும் அவனது அவதார ரஹஸ்யம் அறியமாட்டான். ஆக இவனது அவதார ரஹஸ்யம் யாராலும் அறிய இயலாதது ஆகும் என்கிறார்.

1.3.4 யாருமோர் நிலைமைய னெனவறி வரியவெம் பெருமாள்
யாருமோர் நிலைமைய னெனவறி வெளியவெம் பெருமான்
பேருமோ ராயிரம் பிறபல வுடையவெம் பெருமான்
மேருமோ ருருவமு முளதில்லை யிலதில்லை பிணக்கே.

பொருள் - ஆயிரம் திருநாமங்களையும், அந்தத் திருநாமங்களுக்கு ஏற்றபடியான திருமேனியையும் உடையவன்; தங்களது முயற்சியால் காணவேண்டும் என்று எண்ணுபவர்கள் எத்தனை உயர்ந்தாலும், அவனை அடைய இன்னும் ஒரு படி மேலே செல்லவேண்டும் என்னும்படி அரியவன்; அவனது திருவருளால் அவனைக் காணவேண்டும் முயல்பவர்கள் எத்தனை தாழ்ந்தவர்கள் என்றாலும் அவர்களுக்கு எளியவன். ஆக ஒரு பெயரும் ஓர் உருவமும் கொண்டவனாக மற்றவர்களுக்கு அவன் இருப்பதில்லை, ஒரு பெயரும் ஓர் உருவமும் கொண்டு மட்டுமே அவன் அடியார்களுக்கு இருப்பதில்லை.

அவதாரிகை - இப்படியிருக்கிற அவதார ஸௌலப்யம் ஒருவர்க்கும் அறிய நிலமன்றோ என்னில், ஆச்ரிதர்க்கு அத்யந்த ஸுலபனாய் அநாச்ரிதர்க்கு அத்யந்த துர்லபனாயிருக்கும் என்கிறார்.

விளக்கம் – இப்படியாக உள்ள திவ்யமான அவதாரங்கள் யாருக்கும் எளியவனாக இல்லையே என்றால் – இவை அனைத்தும் அடியார்களுக்கு மிகவும் சுலபமாகவும் அடியார் அல்லாதார் அடைவதற்கு எட்டாத ஒன்றாகவும் இருக்கும் என்கிறார்.

வ்யாக்யானம் - (யாரும்) எத்தனையேனும் அதிசயத ஜ்ஞாநராயிருக்குமவர்களேயாகிலும், ஸ்வயத்நத்தாலே காணுமன்று "இன்னபடிப்பட்டிருப்பதொரு ஸ்வபாவத்தை யுடையவன்" என்று அறிய ஒண்ணாத என் ஸ்வாமியானவன். (யாரும்) இந்த யச்சப்தம் தாழ்ச்சிக்கு எல்லையிலே நிற்கிறது. ஜந்மவ்ருத்த ஜ்ஞாநங்களால் ஒரு அளவில்லையேயாகிலும் தானே காட்டக்காணுமவர்களுக்குத் தன் படிகளெல்லாம் அறியலாயிருக்கும். எங்கே கண்டோமென்னில், ஒரு குரங்கு, வேடச்சி, இடைச்சி இவர்களுக்கு எளியவனாயிருக்கக் கண்டோமிறே. (எம்பெருமான்) ஆச்ரிதர்க்கு எளியனாய் அநாச்ரிதர்க்கு அரியனான என் நாயன் நிலை இருந்தபடியென் என்று எழுதிக்கொடுக்கிறார். "நமோ நமோ வாங்மநஸாதிபூமயே நமோ நமோ வாங்மநஸைகபூமயே" என்றாப்போலே.

விளக்கம் – (யாரும்) – எத்தனை அதிசயிக்கத்தக்க ஞானம் உடையவர்களாக இருந்தாலும், தங்களது முயற்சியால் அவனைக் காண எண்ணுபவர்களால், "இவன் இப்படியாக இருக்கும் ஸ்வபாவம் கொண்டவன்" என்று உணர்ந்து கொள்ள இயலாதபடி என் ஸ்வாமி உள்ளான். (யாரும்) – இந்தப் பதம் தாழ்வின் எல்லையைக் குறிக்கிறது. பிறப்பு, ஒழுக்கம் மற்றும் ஞானம் ஆகியவற்றால் ஓர் அளவு இல்லாதபடி தாழ்வாக இருப்பவர்கள் என்றாலும், "அவனே நமக்கு அவனைக் காண்பிப்பான்" என்று அவர்கள் உள்ளபோது, தன்னைப் பற்றி அனைத்தையும் அவர்கள் அறியும்படியாக உணர்த்துவான். இதனை எங்கே கண்டோம் என்றால் - ஒரு குரங்கு (சுக்ரீவன்), ஒரு வேடச்சி (சபரி), ஓர் இடைச்சி (யசோதை) போன்ற இவர்களுக்கு எளியவனாக நிற்பதைக் கண்டோம் அல்லவா? (எம்பெருமான்) – அடியார்களுக்கு எளியனாக, மற்றவர்களுக்கு அரியவனாக என் தலைவன் நின்ற நிலை இருந்தபடி என்னே என்று எழுதிக்கொடுக்கிறார். ஸ்வாமி ஆளவந்தார் ஸ்தோத்ரரத்தினத்தில் - நமோ நமோ வாங்மநஸாதிபூமயே நமோ நமோ வாங்மநஸைகபூமயே - மனம், வாக்கு ஆகியவற்றுக்கு புலப்படாத உணக்கு வணக்கம்; மனம், வாக்கு ஆகியவற்றுக்குப் புலப்படுகின்ற உனக்கு வணக்கம், வணக்கம் – என்றது போன்று இவரும் உரைக்கிறார்.

வ்யாக்யானம் – (பேருமோர் ஆயிரம்) அநுபவிதாக்களுக்கு இழிந்த இடமெல்லாம் துறையாம்படி அநேகம் திருநாமங்களை உடையனாயிருக்கை. குணத்துக்கு வாசகமாயும் ஸ்வரூபத்துக்கு வாசகமாயும் வருமவற்றுக்கு ஓர் எல்லையில்லையிறே. "தேவோ நாமஸஹஸ்ரவாந்" என்கிறபடியே. (பிற பலவுடைய) அந்த நாமத்வாரா காணும் அநேகம் திருமேனிகளை உடையனாயிருக்கை. "பிற" என்ன திருமேனியைக் காட்டுமோவென்னில், "நாமரூபஞ்ச பூதாநாம்", "நாமரூபே வ்யாகரவாணி" என்று நாமத்தோடே சேர ரூபத்தையும் சொல்லக்கடவது. அவ்வளவேயல்ல; இவர்தாமும் இத்தை அநுபாஷிக்கிற இடத்திலே "பேருமோருருவமும்" என்று அருளிச்செய்து வைத்தார்.

விளக்கம் - (பேருமோர் ஆயிரம்) – அனுபவிக்கின்ற அடியார்களுக்கு அவர்கள் ஈடுபடுகின்ற குணங்கள் அனைத்தும் வெளிப்படும்படியான திருநாமங்களைக் கொண்டவன். குணம் பற்றி உள்ள திருநாமங்களுக்கும், ஸ்வரூபம் பற்றி உள்ள திருநாமங்களுக்கும் ஓர் எல்லை இல்லை என்பதால் இவ்விதம் கூறுகிறார். மஹாபாரதம் – தேவோ நாமஸஹஸ்ரவாந் – எம்பெருமானின் திருநாமங்கள் ஆயிரமாக உள்ளன – என்றது. (பிற பலவுடைய) – அந்தத் திருநாமங்களின் மூலமாகக் காணவல்ல பல திருமேனிகளைக் கொண்டவன். "பிற" என்ற சொல் இங்கு திருமேனியைக் குறிக்குமோ என்றால், விஷ்ணுபுராணம் (1-5-6) - நாமரூபஞ்ச பூதாநாம் – உயிர்களுக்குப் பெயர்களையும் உருவங்களையும் அளித்தான் - என்றும், சாந்தோக்ய உபநிஷத் (6-3) - நாமரூபே வ்யாகரவாணி - பெயர்களையும் உருவங்களையும் படைக்கிறேன் – என்று பல இடங்களில் பெயருடன் உருவமும் கூறப்பட்டதால், இங்கு "பிற" என்பது திருமேனியைக் குறிக்கிறது. மேலும் இதனை மீண்டும் இவர் கூறும்போது "பேரும் ஓர் உருவமும்" என்று அருளிச்செய்தார்.

வ்யாக்யானம் - (பேருமோருருவமும்) இவற்றிலே ஒரு திருநாமமும், ஒரு விக்ரஹமும். (உளதில்லை) அநாச்ரிதர்க்கு ஸ்தூல ப்ரதிபத்தியும் அரிதாயிருக்கும். (இலதில்லை) ஆச்ரிதர்க்கு எல்லாம் காண்கையாலே இலதில்லை. (பிணக்கே) ஆச்ரிதர் எல்லாம் காண்கையாலே மங்களாசாஸநம் பண்ணி நிற்பர்கள்; அநாச்ரிதர் இதை இல்லை என்றிருக்கையாலே முதலிலே கிட்டார்கள்; இரண்டுக்கும் நடுவே வஸ்து நித்யமாகப் பெற்றோமே என்று தாம் இனியராகிறார். அன்றியே, (பேருமோருருவமுமுளது) திருநாமமும், திருநாமத்துக்கு வாச்யமான திருமேனியும் நித்யம். (இலது இல்லை) (இல்லை பிணக்கே) இவ்விடையாட்டத்தில் விவாதம் வேண்டா என்கிறார்.

விளக்கம் – (பேருமோருருவமும்) – இவற்றில் ஒரு திருநாமமும், ஒரு திரு உருவமும். (உளதில்லை) - அடியார் அல்லாதாருக்கு இவை ஸ்தூலமாக எண்ணுவதற்குக் கூட கடினமாக இருக்கும். (இலதில்லை) - அடியார்கள் அனைவராலும் காண இயலும் என்பதால் இது "இலது இல்லை = அதாவது இல்லாமல் இல்லை". (பிணக்கே) – அடியார்கள் அனைவரும் காண்பதால் ஆராதித்து அண்டி நிற்பார்கள். அடியார்கள் அல்லாதார் "இந்த வஸ்து இல்லை" என்பதால் முதலில் சென்று கிட்டாமல் இருப்பார்கள். இவர்கள் இருவருக்கும் நடுவே நாம் நித்யமாகப் பெற்றோம் என்று ஆழ்வார் இனியர் ஆகிறார். அல்லது வேறுவிதமாகவும் பொருள் உரைக்கலாம். (பேருமோருருவமுளது) - திருநாமமும் அந்தத் திருநாமத்தின் பொருளான திருமேனியும் என்றும் உள்ளது; (இலது இல்லை) (இல்லை பிணக்கே) - அவை இல்லை என்பதே இல்லை என்ற விஷயத்தில் மேலும் விவாதம் வேண்டாம் என்கிறார்.

1.3.5 பிணக்கற வறுவகைச் சமயமும் நெறியுள்ளி யுரைத்த
கணக்கறு நலத்தன னந்தமி லாதியம் பகவன்
வணக்குடைத் தவநெறி வழிநின்று புறநெறி களைகட்டு
உணக்குமின் பசையற வவனுடை யுணர்வு கொண்டுணர்ந்தே.

பொருள் - வேதங்களுக்குப் புறம்பாக உள்ள ஆறு சமயங்களுக்கும் வைதீக சமயத்துடன் உள்ள பிணக்கு அறுகும்படியாக, வேதமார்க்கத்தினால் நன்கு ஆராய்ந்து அருளிச்செய்த எண்ணற்ற நற்குணங்களை உடையவன்; முடிவில்லாத முதல் என்பதால் நித்யமாக உள்ளவன்; தாழ்வுகளுக்கு எதிர்த்தட்டாக உள்ளவன்; கல்யாண ரூபமான ஞானம், சக்தி போன்றவற்றைக் கொண்டவன். இப்படிப்பட்ட எம்பெருமான் கூறிய வணக்கத்தைக் கொண்டு பக்தி மார்க்கத்தில் நில்லுங்கள்; அவன் அல்லாத விஷயங்களைத் தள்ளி, அவன் விஷயமான பக்திரூப ஞானத்தைக் கைக்கொள்ளுங்கள். உலகவிஷயங்களின் மீது உள்ள வாசனை உலர்ந்து போகும்படிச் செய்யுங்கள்.

அவதாரிகை – பலகாலும் பஜியுங்கோள் என்னாநின்றீர்; பஜநோபாயமிருக்கும்படியை அருளிச்செய்யீர் என்ன; இன்று நான் உபதேஸிக்க வேணுமோ? அவன்றான் ஸ்ரீகீதையிலே அருளிச்செய்த பக்திமார்க்கத்தாலே அவனை ஆச்ரயியுங்கோள் என்றார்.

விளக்கம் – ஸம்ஸாரிகள் ஆழ்வாரிடம், "அவனை வழிபாடு செய்யுங்கள் என்று பலமுறை கூறினீர்கள். அவனை வழிபாடு செய்யும் முறையை நீங்களே அருளிச்செய்யுங்கள்", என்றனர். இதற்கு ஆழ்வார் அவர்களிடம், "பக்தியைப் பற்றி இன்று நான் புதிதாக உபதேசிக்க வேண்டுமோ? அவன் தானே கீதையில் அருளிச் செய்த பக்தி மார்க்கத்தில் நின்று அவனை அண்டுங்கள்", என்கிறார்.

வ்யாக்யானம் - (பிணக்கற அறுவகைச்சமயமும்) வைதிக ஸமயத்துக்கும், பாஹ்யஷட் ஸமயங்களுக்கும் தன்னில் தான் உண்டான பிணக்கு அறும்படியாக. (நெறியுள்ளி உரைத்த) தான் சொல்லிற்றடைய வேதார்த்தமாயிருக்கச் செய்தே, தந்தாமுக்கு என்ன ஓர் அர்த்தம் போதியாதார் ஆராய்ந்து சொல்லுமாபோலே விசாரித்து அருளிச்செய்தான். அதுக்கு நினைவு என்னென்னில்; அஹ்ருதயமாகச் சொல்லிலும் நன்று சடக்கெனச் சொன்னால் "வாய்வந்தபடி சொன்னான் நிரூபியாதே" என்பர்களென்று ஆராய்ந்து சொன்னானாகச் சொன்னபடி.

விளக்கம் – (பிணக்கற அறுவகைச்சமயமும்) – வைதீக ஸமயத்துக்கும், லோகாயத, ஆர்ஹத, பௌத்த, நையாயிக, வைசேஷிக, ஸாங்க்ய, பாசுபதம் என்னும் ஆறு மதங்களுக்கும் உண்டாகின்ற பிணக்கு அறும்படியாக. (நெறியுள்ளி உரைத்த) – தான் கூறிய அனைத்தும் வேதத்தின் பொருளாக இருந்தாலும், பொருளின் உண்மை தன்மை தெளியாமல் இருந்த ஒருவன் அவற்றை ஆராய்ந்து சொல்லுவது போன்று, விசாரித்து அருளிச்செய்தான். இப்படி ஏன் கூறவேண்டும் என்றால், மனத்தோடு படாமல் கூறினாலும் நன்மை அளிக்கவல்லதாக இருந்தாலும் மக்கள் மீது கொண்ட அன்பின் காரணத்தால் சட்டென்று கூறினால், "இவன் நிரூபிக்காமல் வாய்க்கு வந்தபடி கூறினான்", என்பார்கள் என்பதால் "ஆராய்ந்து கூறினான்", என்றார்.

வ்யாக்யானம் - (கணக்கறு நலத்தனன்) எல்லையில்லாத குணத்தையுடையவனென்னுதல்; எல்லையில்லாத ஸ்நேஹத்தையுடையவனென்னுதல்; ஆர் இரக்கச் செய்தான்? தன் வாத்ஸல்யத்தாலே அருளிச்செய்தானித்தனையிறே. வாத்ஸல்யத்தாலே சொல்லிற்று எல்லாம் அர்த்தமாமித்தனையோ என்னில், (அந்தமில்லாதி) ஆப்ததமன். எல்லார்க்கும் உத்பத்தி விநாஸங்களாலேயிறே ஜ்ஞாநஸங்கோசம் பிறப்பது; இவனுக்கு அவை இல்லாமையாலே அகர்மவச்யன் என்கிறது.

விளக்கம் – (கணக்கறு நலத்தனன்) - எல்லை இல்லாத குணங்களை உடையவன். எல்லை இல்லாத ஸ்நேகத்தை உடையவன். யாராவது கேட்டா ஸ்ரீகீதையை அருளிச்செய்தான்? தன்னுடைய வாத்ஸல்யம் காரணமாக அல்லவோ அருளிச்செய்தான்? வாத்ஸல்யம் காரணமாக அருளிச்செய்தான் என்பதால் மட்டுமே, அவன் கூறிய அனைத்தும் உண்மையாகிவிடுமோ என்றால், (அந்தமில்) - அவன் நம்பத்தகுந்தவர்களில் மிகவும்

உயந்தவன். அனைவருக்கும் பிறப்பு, இறப்புகளால் அல்லவோ ஞானக்குறைவு ஏற்படுகிறது? இவனுக்கு அவை இல்லாத காரணத்தால் "கர்ம வசப்படாதவன்" என்றார்.

வ்யாக்யானம் - (அம்பகவன்) ஜ்ஞாநாதிகளால் அல்பம் உத்கர்ஷமுயுடையவன் பக்கலிலே பகவச்சப்தம் வர்த்தியாநின்றதிறே. "அந்யத்ர ஹ்யுபசாரத:". பகவச்சப்தம் முக்யமாக வசிப்பது இவன் பக்கலிலே; அல்லாதார் பக்கல் ஔபசாரிகம். (அம்பகவன் வணக்குடைத் தவநெறி வழிநின்று) "நமஸ்யந்தச்ச மாம் பக்த்யா" என்று பக்தி சரீரத்திலே நின்று அருளிச்செய்தானிறே. அங்கநாபரிஷ்வங்கம் போலே போகரூபமாயிறே இதுதானிருப்பது. (வணக்குடைத் தவநெறி வழி நின்று) வணக்கத்தையுடைய பக்திமார்க்கமாகிற வழியிலே நின்று. பக்தி சரீரத்திலே "மாம் நமஸ்குரு" என்கையாலே "வணக்குடை" என்கிறது. தபச்சப்தத்தாலே பக்தியைச் சொல்லிற்று, பக்தி ஜ்ஞாந விசேஷமாகையாலே. "யஸ்ய ஜ்ஞாநமயம் தப:" என்கிற ந்யாயத்தாலே என்னுதல்; இவனுடைய ப்ரேமமாத்ரத்தையே குவாலாக நினைத்திருக்கும் பகவதபி ப்ராயத்தாலேயாதல். (புறநெறிகளை கட்டு) புறநெறியாகிற களையைக் கடிந்து - பறித்து. கட்டல் – களைதல். பக்தி விஷயமானபோது, பலாந்தரத்திலே போம் விலக்கடிகளைத் தள்ளி என்றாகிறது; ப்ரபத்தி விஷயமானபோது, இதர ஸாதநங்களைத் தள்ளி என்றாகிறது.

விளக்கம் – (அம்பகவன்) – "பகவான்" என்றால் போதாதோ, அம்பகவான் என்று கூறவேண்டுமோ? இதற்கு விடை அளிக்கிறார். "பகவான்" என்னும் பதம் ஞானம் முதலானவை மூலம் அற்பமான மேன்மை பெற்ற மனிதர்களையும் குறிப்பதைக் காணலாம். ஆனால் பகவான் என்னும் பதம் முக்கியமாக இருப்பது இவன் பக்கம் மட்டுமே. மற்றவர்களுக்கு அந்தப் பதம் வெறும் புகழ்ச்சிக்காக மட்டுமே கூறப்படுகிறது. வ்யாக்யானத்தில் உள்ள "அல்லாதார்பக்கல்" என்பது நான்முகன் உள்ளிட்டவர்களைக் குறிக்கும். கீதையில் (9-14) – நமஸ்யந்தச்ச மாம் பக்த்யா - பக்தியால் என்னை வழிபடுகிறார்கள் - என்று பக்தியை பற்றிக் கூறும்போது அருளிச்செய்தான் அல்லவோ? காதலியுடன் இன்பமாக இருப்பது போன்று இது இன்பமாக இருக்கும் அல்லவோ? (வணக்குடைத் தவநெறி வழி நின்று) – வணக்கத்தை உடைய பக்தி மார்க்கத்தில் நின்று. கீதையில் (9-34) - மாம் நமஸ்குரு - என்னை வணங்குவாய் - என்பதால் வணக்குடை என்றார். தவம் என்ற சொல் மூலம் பக்தியைக் கூறுகிறார். அந்த பக்தி ஞானத்தின் விசேஷமாக உள்ளதால் கூறுகிறார். முண்டக உபநிஷத் - யஸ்ய ஜ்ஞாநமயம் தப: – தவம் ஞானமயமாக உள்ளதால் - என்றது காண்க. இவனுடைய அன்பு ஒன்றையே எம்பெருமான் பெரிய தவமாக நினைத்துள்ளான் என்று கருத்து. (புறநெறிகளை கட்டு) - மற்ற விஷயங்களில் ஈடுபடுவதான களைகளை நீக்கிக் கட்டல் = களைதல். பக்தி முதன்மையாகும்போது மற்ற காம்ய விஷயங்களைத் தள்ளுதல், ப்ரபத்தி விஷயமாகும் போது மற்ற உபாயங்களைத் தள்ளுதல்.

வ்யாக்யானம் - (உணக்குமின் பசையற) "ரஸவர்ஜம்" என்கிறபடியே பாஹ்ய விஷய ப்ராவண்யத்தை ருசிவாஸநைகளோடே விடுங்கோள். இதெல்லாம் என் கொண்டுதான்? என்னில். (அவனுடைய உணர்வு கொண்டுணர்ந்து) தத்விஷய ஜ்ஞாநத்தைக் கொண்டு என்னுதல். ததுக்த ஜ்ஞாநத்தைக் கொண்டு என்னுதல்; பக்தி மார்க்கத்தைக் கொண்டு என்னுதல். அவன் அருளிச்செய்த சரமச்லோகத்திற்படியைப்பற்றி நின்று என்னுதல்.

விளக்கம் - (உணக்குமின் பசையற) – கீதை (2-59) - ரஸவர்ஜம் - ருசி வாசனைகள் – என்னும்படி, மற்ற விஷயங்களில் உள்ள ஆசையை ருசி மற்றும் வாசனையுடன் கைவிட வேண்டும். எப்படி விடுவது என்றால், (அவனுடைய உணர்வு கொண்டுணர்ந்து) - அவனைப் பற்றிய ஞானத்தை கைக்கொண்டு, அதன் மூலம் விடவேண்டும்; அவன் மீது கொண்ட பக்தி மார்க்கத்தில் நின்று விடவேண்டும்; அவன் அருளிச்செய்த சரம ச்லோகத்தைப் பின்பற்றி நின்று மற்றவற்றை விடவேண்டும்.

1-3-6 உணர்ந்துணர்ந் திழிந்தகன் றுயர்ந்துரு வியந்தவிந் நிலைமை
உணர்ந்துணர்ந் துணரிலு மிறைநிலை யுணர்வரி துயிர்காள்
உணர்ந்துணர்ந் துரைத்துரைத் தரியய னரனென்னு மிவரை
உணர்ந்துணர்ந் துரைத்துரைத் திறைஞ்சுமின் மனப்பட்ட தொன்றே

பொருள் – உணர்தல் என்பதையே ஸ்வபாவமாக உடையவனாக, அணு அளவு உடையவனாக, பத்துத் திசைகளிலும் ஞானத்தால் நிறைந்தவனாக இருக்கின்றவனும்; உடலைக் காட்டிலும் வேறுபட்டுள்ள இந்த ஆத்மாவின் தன்மையைக் கேள்விகள் மூலம் உணர்ந்து, அதன் பின்னர் மனதால் உணர்ந்து, அதன் பின்னர் யோகத்தால் உணர்ந்தால் கூட நான்முகன் மற்றும் ருத்ரன் நடுவில் தன்னை மறைத்து நிற்கின்ற ஸர்வேச்வரனின் நிலையை அறிவது கடினமாகும். சேதனர்களாக உள்ளதால் விவேகம் கொண்டவர்களே! ஸ்ரீஹரி, நான்முகன், ருத்ரன் முதலானவர்களை அவர்களது குணங்கள் மற்றும் ஐச்வர்யம் மூலம் பலவிதமாக ஆராய்ந்து, அவர்கள் விஷயமான நூல்களையும் பலவிதமாக ஆராய்ந்து, அதன் பின்னர் உள்ளத்தில் ஈச்வரன் என்று யார் தோன்றுகிறானோ அந்தப் பொருளையே மனதால் எண்ணி, அவனுடைய குணங்களையே எண்ணி, அவனுடைய மந்திரம் மற்றும் திருநாமங்களைப் பலவிதமாக கூறி, உபாஸனை செய்யுங்கள்.

அவதாரிகை - அவதாரத்திலே ஆச்ரயியுங்கோள் என்று நின்றீர். "மத்யேவிரிஞ்சகிரிசம் ப்ரதமாவதார" என்கிறபடியே ப்ரஹ்மருத்ரர்கள் நடுவே அவதீர்ணனாய் நிற்கிற நிலையாய் இருந்தது ப்ரதமாவதாரம்; அதில் மூவரும் ஒத்த கார்யத்திலே அதிகரித்து நின்றார்கள்; இப்படி நிற்கையாலே "மூவரும் ப்ரதாநாரோ? மூவரிலே ஒருவன் ப்ரதாநனோ? மூவர்க்கும் அவ்வருகே ஒருவன் ப்ரதாநனோ?" என்று எங்களால்

விவேகிக்கப் போகாமையாலே ஆச்ரயணத்திலே அருமை கூடும்படியாயிருந்தது. ஆச்ரயணீய வஸ்துவை நிரூபித்துத் தரலாகாதோ நாங்கள் ஆச்ரயிக்கும்படி – என்ன; "காண்கிற தேஹமே ஆத்மாவென்று இருக்கும் நிலை தவிர்ந்து, தேஹாதிரிக்தமாயிருப்பதொரு ஆத்மவஸ்து உண்டென்று அறிகைதானே அரிது; வருந்தி அத்தை அறிந்தானேயாகிலும் ப்ரஹ்ம ருத்ராதிகளை சரீரமாகக் கொண்டு தான் சரீரியாய் நிற்கிற ஸர்வேச்வரன்படி தானே அறியப்போகாது; ஆன்பின்பு இவ்வழியே இழிந்து ஆச்ரயிக்கப் பாருங்கோள்" என்று, ஆச்ரயணீய வஸ்து இன்னதென்றும், ஆச்ரயிக்கும் ப்ரகாரம் இன்னதென்றும் அருளிச்செய்கிறார்.

விளக்கம் – "அவதாரங்களை வணங்குங்கள்", என்று கூறினீர்கள். ஸ்ரீரங்கராஜஸ்தவம் – மத்யேவிரிஞ்சகிரிசம் ப்ரதமாவதார – நான்முகனுக்கும் சிவனுக்கும் நடுவில் உள்ள முதல்வன் என்னும்படி, ப்ரஹ்மருத்திரர்கள் நடுவே அவன் அவதாரம் உள்ளது. அவர்கள் மூவரும் ஒத்த செயலில் ஈடுபட்டு நிற்கின்றனர். இப்படியாக உள்ளதால், "அவர்கள் மூவரும் முதன்மையானவர்களா? மூவரில் ஒருவன் மட்டுமே முதன்மையா? மூவருக்கும் மேலே இருக்கின்ற வேறு யாரோ ஒருவன் முதல்வனா?", என்ற சந்தேகம் எங்களுக்கு நீங்க இயலாமல் உள்ளது. ஆகவே நாங்கள் பற்றுவதற்கு ஏற்ற வஸ்து எது என்று நீங்களே நிருபித்து தர வேண்டும் - என்று ஸம்ஸாரிகள் ஆழ்வாரிடம் கேட்டனர். இதற்கு ஆழ்வார், "கண்களால் காணக் கூடிய சரீரமே ஆத்மா என்று அறிகின்ற புத்தியை நீக்கி, உடலைவிட வேறுபட்ட ஆத்மா ஒன்று உண்டு எனத் தெரிந்து கொள்வது அல்லவோ உங்களுக்குக் கடினமாக உள்ளது? அதனை மிகவும் கடினப்பட்டு அறிந்துகொண்டால் கூட, ப்ரஹ்மருத்திரர்களைச் சரீரமாகக் கொண்டு, அவர்களின் ஆத்மாவாக நிற்கும் ஸர்வேச்வரனை அறிந்து கொள்ளுதல் உங்களது சொந்த முயற்சியால் இயலாது. ஆகவே இதனை உணர்ந்து அவனை வணங்குங்கள்", என்றார். இப்படியாகப் பற்ற வேண்டிய வஸ்து இன்னது என்றும், அதனை வணங்க வேண்டிய முறை இன்னது என்றும் அருளிச் செய்கிறார்.

வ்யாக்யானம் - (உணர்ந்து) உணர்வு என்னாதே "உணர்ந்து" என்கையாலே, "ஜ்ஞப்திமாத்ரமே உள்ளது, ஜ்ஞாத்ரம்சமில்லை" என்கிற பக்ஷத்தைத் தவிர்க்கிறது. "உணர்ந்துணர்ந்து" என்கிற வீப்ஸைக்குக் கருத்து – "சைதந்யம் ஆகந்துகம்; முக்த்யவஸ்தையிலும் பாஷாணகல்பமாயிருக்கும்" என்கிற பக்ஷத்தைத் தவிர்த்து, சைதந்யம் நித்யமாயிருக்குமென்னுமிடத்தைச் சொல்லுகிறது. ஜ்ஞாத்ருத்வம் நித்யமா(யிருக்)கையாலே – "ஜ்ஞாநக்ரியாகர்த்ருத்வம் ஜ்ஞாத்ருத்வம். அதுதான் அநித்யம்" என்கிற க்ரியாவாதியையும் நிரஸிக்கிறது.

விளக்கம் – (உணர்ந்து) – "உணர்வு" என்று கூறாமல் "உணர்ந்து" என்று கூறுவதன் மூலம் யோகாசாரனின் தத்துவமான, "ஞானம் மட்டுமே உண்டு, ஞானத்தால் அறிகின்றவன் இல்லை", என்று வாதத்தை மறுக்கிறார். "உணர்ந்து உணர்ந்து" என்ற அடுக்குத்தொடர் மூலம் நையாயிக வைசேஷிகர்களின் வாதமான, "ஞானம் இடையில் வந்தது. மோக்ஷ நிலையிலும் அது கல் போன்று இருக்கும்", என்பதை மறுத்து, "ஞானம் நித்யமாக உள்ளது", என்பதைக் கூறுகிறார். "அறிந்து கொள்ளுதல்" என்னும் தன்மை நித்யமாக உள்ளதால், "அறியும் தன்மை அநித்யம்" என்கிற க்ரியாவாதியின் வாதத்தைத் தள்ளுகிறார்.

வ்யாக்யானம் - (இழிந்தகன்றுயர்ந்து) இச்சேதநந்தான் அணுபரிமாணனாயிருக்கச் செய்தேயும், ஈச்வர ஸ்வரூபத்தாலே எங்கும் வ்யாபித்திருக்குமாபோலே ஜ்ஞாநத்தாலே எங்கும் வ்யாபித்திருக்கும் என்கிறது. "பாதே மே வேதநா, சிரஸி மே வேதநா" என்றிருக்கும்படியைச் சொல்லுகிறது. (உருவியந்த இந்நிலைமை) உருவிற்காட்டில் வியந்து - வேறுபட்டிருக்கிற இந்நிலைமையுண்டு – இந்த ஆத்மாவினுடைய ஸ்வரூபம். அன்றியே, உருவு இயந்த, என்று பதபேதமானபோது, இயத்தல் கடத்தலாய், உருவிற்காட்டிலும் கடந்திருக்கும் – வேறுபட்டிருக்கும் என்னவுமாம்.

விளக்கம் - (இழிந்தகன்றுயர்ந்து) – இந்த ஜீவாத்மா அணுவின் அளவாக மட்டுமே உள்ளபோதிலும், எம்பெருமான் தனது ஸ்வரூபத்தால் எங்கும் வ்யாபித்துள்ளது போல் தனது ஞானத்தால் எங்கும் நிறைந்திருக்கும் என்கிறார். அதாவது உயிரானது ஞானத்தின் மூலம் உடல் முழுவதும் நிறந்திருக்கும். இதனால்தான் – பாதே மே வேதநா, சிரஸி மே வேதநா – கால் வலிக்கிறது, தலை வலிக்கிறது - என்கிறோம். (உருவியந்த இந்நிலைமை) – உருவத்தைக் காட்டிலும் வேறுபட்ட நிலைமை கொண்டது ஆத்மாவின் ஸ்வரூபம். இதன் மூலம் ஜடப்பொருளான சரீரத்தைக் காட்டிலும் வேறுபட்ட ஆத்மாவின் ஸ்வரூபம் உணர்த்தப்பட்டது. இதனை "உருவு இயந்த" என்று படிக்கும்போது, "இயத்தல்" என்பது கடந்திருத்தல் என்னும் பொருள் தரும்படி, "உருவத்தைக் காட்டிலும் கடந்திருப்பது ஆத்மா" என்றாகிறது.

வ்யாக்யானம் - ஆக இரண்டாலும் ஜடமான சரீரத்திற்காட்டில் வேறுபட்டிருக்கிற ஆத்மாவினுடைய ஸ்வரூபத்தை, கேவல ச்ரவண மநநாதிகளாலே ஸாக்ஷாத்கரிக்கக் கூடிலும்; தேஹாதிரிக்தமாயிருக்கிற ஆத்மாவினுடைய ஸ்வரூபத்தை யோகசாஸ்த்ரத்தில் சொல்லுகிற க்ரமத்தாலே இழிந்து வருந்தி ஒருபடி அறிந்தானானாலும். (இறைநிலை உணர்வரிது) ஸர்வேச்வரன் ப்ரஹ்மருத்ரர்களுக்கு அந்தராத்மாவாய் அவர்களை சரீரமாகக் கொண்டு தான் சரீரியாய் நிற்கிற நிலை அழியப்போகாது. (உயிர்காள்) சைதந்ய யோக்யமன்றிக்கே இருப்பதொன்றாய்த்தான் இழக்கப்பெற்றதோ? சேதநரான பின்பு அதின் கார்யம் பிறக்கப் பெற்றதில்லையே! அறிவுகேடராய் நீங்கள் பட்டதென்!

விளக்கம் – இத்தகைய ஆத்மாவின் ஸ்வரூபத்தைக் கேள்வி அல்லது மனனம் மூலம் ஒருவன் அறிந்து கொண்டாலும், அதாவது சரீரத்தை விட மாறுபட்ட ஆத்மாவின் ஸ்வரூபத்தை யோகசாஸ்த்ரங்களில் கூறப்பட்ட முறையின் மூலம் தன்னை வருத்திக் கொண்டு அறிந்து கொண்டாலும். (இறைநிலை உணர்வரிது) - ஸர்வேச்வரன் நான்முகன் மற்றும் ருத்திரனுக்கும் அந்தர்யாமியாக, அவர்களைச் சரீரமாக, தன்னை ஆத்மாவாக கொண்ட நிலையை அறியஇயலாது. (உயிர்காள்) - இதுவரை அறிவற்ற பிறவிகளை எடுத்த காரணத்தால், நீங்கள் அறிவை இழந்து விட்டீர்களோ? மனிதர்களாகப் பிறந்த பின்னரும் அறிவின் செயல்பாடு உங்களுக்கு ஏற்படவில்லையோ? இப்படி அறிவின்றி நின்றீர்களே!

வ்யாக்யானம் - எங்கள் அறிவும் அறியாமையும் கிடக்கிடீர், அறிந்த நீர் அருளிச்செய்யீர் நாங்களப்படி ஆச்ரயிக்க என்ன, அருளிச்செய்கிறார் மேல். (அரி அயன் அரனென்னும் இவரை உணர்ந்துணர்ந்து உரைத்துரைத்து) (உணர்ந்துணர்ந்து) ஒரு உணர்த்தி ஸ்வரூபபரம், ஒரு உணர்த்தி - ஸ்வபாவபரம். (உரைத்துரைத்து) – ஸ்வரூபபரமான ப்ரமாணங்களையும், ஸ்வபாவபரமான ப்ரமாணங்களையும். விரோதி நிரஸந சீலனாய் ரக்ஷகனாய் இருக்கும் ஒருவன்; ஒருவன் திருநாபீகமலத்திலே அவ்யவதாநேந பிறந்தவனாய் இருக்கும்; ஒருவன் ஸம்ஹாரம் ஒன்றுக்கே கடவனாய் இருக்கும்; இவர்களை ப்ரதிபாதிக்கிற ப்ரமாணங்களை ஆராய்ந்து பார்த்து, அவைதன்னைப் பலகாலும் சொல்லிப் பார்த்து "லிங்கத்துக்கே உத்கர்ஷம் தோற்றும்படியாய் இருப்பது ஒரு ப்ரபந்தம் பண்ணித் தரவேணும்" என்பாரைப்போலே, ஒரு வ்யக்தியிலே பக்ஷபதிக்கப் பாராதே, இவர்கள் ஸ்வரூப ஸ்வபாவங்களைப் பலகாலும் ஆராய்ந்து பார்த்து, கோல்விழுக்காட்டாலே உத்கர்ஷம் கிடந்த வ்யக்தியைப் பற்றப் பார்ப்பது. இப்படி ஆராய்ந்தவாறே ஒரு வஸ்துவே ப்ரதாநம் என்று உங்கள் நெஞ்சிலே தோற்றும். அவ்வஸ்துவை ச்ரவணமநநாதிகளாலே "கைப் புகுந்தது" என்று விச்வஸிக்கலாமளவும் ஆச்ரயிக்கப் பாருங்கோள்.

விளக்கம் - இதனைக் கேட்ட ஸம்ஸாரிகள், "எங்களது அறிவும் அறியாமையும் ஒரு பக்கம் இருக்கட்டும். அனைத்தும் அறிந்த நீங்கள் எங்களுக்கு அருளிச்செய்வீராக. நாங்கள் பற்றுவதற்கு ஏற்ற பொருளை அருளிச்செய்க", என்றனர். இதனைக் கேட்ட ஆழ்வார் அருளிச்செய்கிறார். (உணர்ந்துணர்ந்து) – இதில் உள்ள முதல் "உணர்ந்து" என்பது ஸ்வரூபத்தையும், அடுத்த "உணர்ந்து" என்பது ஸ்வபாவத்தையும் குறிக்கும். (உரைத்து உரைத்து) - என்பதில் முதல் "உரைத்து" என்பது ஸ்வரூபத்தின் ப்ரமாணங்களையும், இரண்டாவது "உரைத்து" என்பது ஸ்வபாவத்தின் ப்ரமாணங்களையும் குறிக்கும். மூவரில் ஒருவன் தீயவர்களை அழித்து, நல்லவர்களைக் காப்பதால் அரி என்னும் திருநாமம் கொண்டிருக்கிறான்; ஒருவன் திருநாபிக் கமலத்தில் தோன்றியதால் அயன் என்று அழைக்கப்படுகிறான்; ஒருவன் அழித்தல் மட்டுமே செய்வதால் அரன் எனப்படுகிறான். இவர்களைப் பற்றி விரிவாகக் கூறுகின்ற ப்ரமாணங்களை ஆராய்ந்து, அவற்றைப் பலமுறை சொல்லிப் பார்த்து, "லிங்கத்துக்கே உயர்வு தோன்றும்படியாக இருப்பது ஒரு ப்ரபந்தம் செய்து தரவேண்டும்", என்று கூறுபவர்கள் போன்று ஓர் உருவத்திலே சாயாமல் இருத்தல் வேண்டும். இந்த மூவருடைய ஸ்வரூபம் மற்றும் ஸ்வபாவங்களை நன்கு ஆராய்ந்து பார்த்து, தானாகவே வந்து உதவுவதால் ஒருவன் உயர்ந்தவன் என்று உங்களுக்குத் தோன்றும். அந்த வஸ்துவை கேள்வி மட்டும் மனனம் மூலம் உணர்ந்து, அவன் திருநாமங்களைப் பலமுறை உச்சரித்து வணங்குங்கள்.

1-3-7 ஒன்றெனப் பலவென வறிவரும் வடிவினுள் நின்ற
நின்றெழில் நாரணன் நான்முக னரனென்னு மிவரை
ஒன்றநும் மனத்துவைத் துள்ளிநும் மிருபசை யறுத்து
நன்றென நலஞ்செய்வ தவனிடை நம்முடைய நாளே.

பொருள் - ஒன்று எனவும், பல எனவும் அறிந்து கொள்வதற்கு அரிதான வடிவில் நிற்கின்ற சிறந்த குணங்களை கொண்டவன் நாராயணன் ஆவான். நான்முகன் மற்றும் சிவன் ஆகியவர்களை உங்கள் மனதில் ஒன்றாக வைத்து ஆராய்ந்து, அவர்கள் மீது நீங்கள் வைத்துள்ள பற்றுதலை நீக்குங்கள். உங்களது ஆயுள் உள்ளபோதே நாராயணனிடம் பக்தி செய்யுங்கள்.

அவதாரிகை - "அப்படியே செய்கிறோம்" என்று ஆறியிருந்தார்கள்; ஐயோ! நீங்கள், உங்களுடைய ஆயுஸ்ஸினுடைய ஸ்திதியும், இழக்கிற விஷயத்தின் நன்மையும் அறியாமையிறே ஆறியிருக்கிறது; நீங்கள் முடிந்துபோவதற்கு முன்னே நிர்ணயோபாயங்களாலே வஸ்து இன்னதென்று நிர்ணயித்து, நிர்ணீதனானவன் பக்கலிலே கடுக பக்தியைப் பண்ணப்பாருங்கோள் என்று கீழிற் பாட்டுக்கு சேஷமாயிருக்கிறது இப்பாட்டும். நீங்கள் மந்தாயுஸ்ஸுக்களாகையாலே கடுகச் செய்து கொடுநின்று, "செய்கிறோம்" என்னவேணும்; "செய்கிறோம்" என்று செய்யவெண்ணாது என்கிற இதுவே விசேஷம் கீழிற் பாட்டிற்காட்டில்.

விளக்கம் – ஆழ்வார் கூறியதைக் கேட்ட ஸம்ஸாரிகள், "அப்படியே செய்கிறோம்", என்று கூறிவிட்டு ஏதும் செய்யாமல் இருந்தனர். உடனே ஆழ்வார், "ஐயோ! நீங்கள் உங்களது ஆயுள் காலத்தின் நிலைமையையும், இழக்கின்ற பொருளினுடைய நன்மையையும் அறிந்து கொள்ளாமல் காலம் தாழ்த்துகின்றீர்களே! நீங்கள் மரணம் அடைவதற்கு முன்பாக, உறுதி செய்யப்பட்ட வழிகளால் அடையவேண்டிய பொருள் இன்னது என்று நிச்சயித்து, அப்படியாக நிச்சயம் செய்யப்பட்ட எம்பெருமான் அருகில் விரைவாகச் சென்று, பக்தியைச் செய்யப் பாருங்கள்", என்று கூறுவதாக கடந்த பாசுரத்தின் தொடர்ச்சியான பாசுரமாக இந்தப் பாசுரம் உள்ளது. நீங்கள் குறைவான ஆயுள் உடையவர்களாக இருப்பதால் விரைவாகச் செய்ய முடிவு செய்து, "இதோ செய்கிறோம்" என்று கூறவேண்டும்.

வ்யாக்யானம் - (ஒன்றென) மூவர் ப்ரதாநராய், மூவர்க்கும் மூன்று சரீரமுண்டாய்த் தோற்றுகையாலே, மூன்று சரீரத்திலும் ஒருவனே அதிஷ்டித்துக் கொண்டு நிற்கிறானோ? அன்றியே, மூன்றிலும் மூன்று சேதநர் அதிஷ்டித்துக் கொண்டு நிற்கிறார்களோ என்று அறிய அரிய வடிவுகளை உடையராய் நிற்கிற. "ஏகாத்மாதிஷ்டிதமோ? அநேகாத்மாதிஷ்டிதமோ" என்று அறிய அரிதான வடிவை உடையராய் நின்ற. (நன்றெழில் நாரணன்) அநந்யபரமான நாராயணாநுவாகாதிகளை நினைக்கிறார். எழிலென்று "அபஹதபாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண:" என்கிற புகரை நினைக்கிறது. (நன்றெழில்) ரூபஸ்ரீயைப் பார்த்தவாறே "கண்டவாற்றால் தனதே உலகென நின்றான்" என்கிறபடியே ஸர்வரக்ஷகன் இவனே என்னலாம்.

விளக்கம் – (ஒன்றென) – மூவரும் முதன்மையானவராக, மூவருக்கும் மூன்று சரீரம் உண்டு எனத் தோன்றுவதால், மூன்று சரீரத்திலும் ஒருவனே நிற்கிறானா அல்லது மூன்றிலும் மூன்று சேதனர்கள் நிற்கின்றனரா என்று அறிந்து கொள்வதற்குக் கடினமான வடிவங்களைக் கொண்டு நிற்கின்ற. ஓர் ஆத்மாவின் நிலையோ அல்லது பல

ஆத்மாக்களின் நிலையோ என்று அறிந்து கொள்வதற்கு அரிய வடிவை உடையவன். (நன்றெழில் நாரணன்) – அவனைத் தவிர வேறு எதனையும் கூறாத நாராயண அனுவாகத்தை எண்ணுகிறார், எழில் என்பதன் மூலம். ஸுபால உபநிஷத் – அபஹதபாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண: - தோஷங்கள் இல்லாதவனும் திவ்யமானவனும் நாராயணன் மட்டுமே - என்று கூறுகின்ற மேன்மையை நினைக்கிறார். (நன்றெழில்) – திருமேனியின் வடிவைப் பார்த்தபடியே திருவாய்மொழி (4-5-10) - கண்டவாற்றால் தனதே உலகென நின்றான் – என்பதால், அனைத்தின் ரக்ஷகனும் இவனே எனலாம்.

வ்யாக்யானம் - (நாரணன்) திருநாமத்தைப் பார்த்தவாறே தன்னையொழிந்ததடைய ப்ரகாரமாய்க் கொண்டு தான் ப்ரகாரியாய் இருப்பானெருவன் என்று தோற்றியிருக்கும். (நான்முகன்) ஒருவன் ஸ்ருஷ்டி காலத்திலே வந்தால் நாலு வேதங்களையும் உச்சரிக்கைக்கு நாலு முகத்தையுடையனாய் ஸ்ருஷ்டி கார்யம் ஒன்றிலும் அந்விதன் என்று தோற்றியிருக்கும். (அரன்) ஒருவன், ஸம்ஹர்த்ருத்வம் ஒன்றிலும் அந்விதன் என்று தோற்றியிருக்கும். "ஸ்ருஷ்டி ஸ்தித்யந்தகரணீம் ப்ரஹ்ம விஷ்ணு சிவாத்மிகாம் ஸ ஸம்ஜ்ஞாம் யாதி பகவாநேக ஏவ ஜநார்த்தந:" என்கிறபடியே ஸம்ஜ்ஞைகளில் வந்தால் ஒக்கவொடுக்கலாய் விஷ்ணு சப்தத்தோடு பர்யாயமான ஜநார்தந சப்தத்தையிட்டுத் தலைக்கட்டுகையாலே தானே ப்ரதாநன் என்று தோற்றும்படியாய் இருக்கும்.

விளக்கம் – (நாராயணன்) திருநாமத்தைப் பார்த்த உடனேயே தன்னைத் தவிர உள்ள அனைத்தையும் ப்ரகாரமாய்க் கொண்டு, தான் மட்டுமே ப்ரகாரியாய் இருக்கின்ற நிலை தோன்றும். (நான்முகன்) – ஒருவன் ஸ்ருஷ்டிகாலம் வந்தால் நான்கு வேதங்களையும் கூறுவதற்காக நான்கு முகத்தைக் கொண்டு, "படைத்தான்" என்ற செயலை மட்டுமே செய்பவனாக நிற்பவன். (அரன்) – ஒருவன் அழிக்கும் தொழில் மட்டுமே செய்பவன் என்று இருப்பவன். விஷ்ணுபுராணம் (1-2-23) – ஸ்ருஷ்டி ஸ்தித்யந்தகரணீம் ப்ரஹ்ம விஷ்ணு சிவாத்மிகாம் ஸ ஸம்ஜ்ஞாம் யாதி பகவாநேக ஏவ ஜநார்த்தந: - படைத்தல், காத்தல் மற்றும் அழித்தல் ஆகியவற்றைச் செய்கிற பெயர்களை, பகவான் எனப்படும் ஜநார்தனன் ஒருவனே பெறுகிறான் - என்னும்படி பெயர்களை ஒத்துப் பார்க்கும்போது விஷ்ணு என்ற சப்தத்துடன் ஒத்துப் போகின்ற ஜநார்த்தன சப்தம் கூறி முடிப்பதால், தானே முதன்மையானவன் என்று தோன்றும்படியாக உள்ளவன்.

வ்யாக்யானம் - இப்படி விஸத்ருச ஸ்வபாவராய் இருக்கிற இவர்களை (ஒன்றநும் மனத்து வைத்து) அவனையொழிந்த இருவரிலே ஒருவனுக்கு உத்கர்ஷம் வேணும் என்றாதல். நிர்ணயிப்பதற்கு முன்னே இவனுக்கு உத்கர்ஷம் வேணும் என்றாதல் பாராதே ஒரு படிப்பட உங்கள் நெஞ்சிலே வைப்பது. (உள்ளி) உள்ளுவது - ச்ருதி ந்யாயங்களாலே

ஆராய்வது. அவர்கள் ஸ்வரூப ஸ்வபாவங்களை இப்படி ஆராய்ந்தவாறே ஒரு வஸ்து ப்ரதாநமாய், இரண்டு அப்ரதாநமாய்த் தோற்றும்; தோற்றினவாறே (நும் இருபசை அறுத்து) அவ்விரண்டிலும் நீங்கள் பண்ணுகிற நசையைத் தவிருவது. வஸ்துகதமாய் வருவதொரு உத்கர்ஷம் இல்லை; நீங்கள் ஏறிடுகிற இவற்றைத் தவிருவது. (நன்றென நலஞ்செய்வதவனிடை) இப்படி நிர்ணீதனானவன் பக்கலிலே "இவன் நமக்கு கைப்புகுந்தான்" என்று உங்களுக்கேறத் தேற்றம் பிறக்கும்படி அநந்ய ப்ரயோஜநமான பக்தியைப் பண்ணப் பாருங்கோள். க்ரமத்திலே செய்கிறோம் என்றிருந்தார்கள் – (நம்முடை நாளே) கெடுவிகாள்! நம்முடைய ஆயுஸ்ஸின் நிலை அறிவிகோளே! கடுக ஆச்ரயிக்கப் பாருங்கள். "நம்முடை நாள்" என்னுங்காட்டில் - ஆயுஸ்ஸின் நிலையை அறிந்தபடி என்னென்னில், முன்பே "மின்னின் நிலையில" என்று அருளிச்செய்தாரிறே. ஒருவன் இரண்டு கதவையும் அடைத்துக் கொண்டு கிடந்து உறங்காநின்றால், நெருப்புப்பற்றி எரியாநின்றால் "அவிக்கிறோம்" என்று ஆறியிருக்கலாமோ? "நந்தந்த்யுதித ஆதித்யே நந்தந்த்யஸ்தமிதே ரவௌ ஆத்மநோ நாவபுத்யந்தே மநுஷ்யா ஜீவதக்ஷயம்" ஆதித்யோதயத்திலே வந்தவாறே "த்ரவ்யார்ஜநகாலம் வந்தது" என்று உகப்பர்கள்; அவன் அஸ்தமித்தவாறே "அபிமத விஷயங்களோடே ரமிக்கைக்குக் காலம் வந்தது" என்று உகப்பர்கள். சாலிலெடுத்த நீர்போலே தங்கள் ஆயுஸ்ஸு குறைகிறதென்று அறியாதிரா நின்றார்கள் என்னாநின்றதிறே.

விளக்கம் - இப்படியாக வேறுபட்ட தன்மைகளுடன் இருக்கின்ற இவர்களை. (ஒன்றநும் மனத்து வைத்து) – அவனைத் தவிர இருவரிலே ஒருவனுக்கு உயர்வு வேண்டும் என்றாதல். நிர்ணயிப்பதற்கு முன்னால் இவனுக்கு உயர்வு வேண்டும் என்பது காணாமல் ஒருபடிப்பட்ட உங்கள் நெஞ்சில் வைத்து. (உள்ளி) – உள்ளுதல் என்றால் ச்ருதி ந்யாயங்களில் ஆராய்தல். அவர்களது ஸ்வரூப ஸ்வபாவங்களை ஆராயும்போது ஒரு வஸ்து மட்டுமே முதன்மையாக, மற்ற இரண்டும் இரண்டாம் பக்ஷமாய்த் தோன்றும். (நும் இருபசை அறுத்து) – அப்படித் தோன்றினவுடன் அந்த இரு பொருள்களிலும் உள்ள ஈடுபாட்டைத் தவிர்த்து. அந்த இரு பொருள்களுக்கும் இயற்கையாக எந்த உயர்வும் இல்லை, நீங்களாகவே அவைகளுக்கு உயர்வு ஏற்படுத்துகிறீர்கள் என்கிறார். (நன்றென நலஞ்செய்வதவனிடை) – இப்படியாக நிர்ணயிக்கப்பட்டவன் அருகில் சென்று "இவன் நமக்குக் கைபுகுந்தான்" என்று உங்களுக்குத் தெளிவு பிறக்கும்படி, வேறு பலனை எதிர்பாராமல் பக்தியைச் செய்யுங்கள். ஸம்ஸாரிகள், "காலப்போக்கில் செய்கிறோம்", என்று இருந்தனர். (நம்முடை நாளே) – கெட்டீர்கள்! நம்முடைய ஆயுளின் நிலையை நீங்கள் அறிவீர்கள். விரைவாகச் சென்று அவனைப் பற்றுங்கள். "நம்முடை நாள்" என்று கூறுவதன் மூலம் ஆயுளின் நிலையை எவ்விதம் அறிந்தார் என்றால், திருவாய்மொழி (1-2-2) - மின்னின் நிலையில – என்றார் அல்லவோ? ஒருவன் இரண்டு கதவுகளையும் அடைத்தபடி உறங்கிக் கொண்டு இருக்கும்போது தீ பற்றினால் அதனைக் கண்டு, "அணைக்கிறோம்", என்று ஏதும் செய்யாமல் இருக்கலாமோ? இராமாயணம் –

நந்தந்த்யுதித ஆதித்யே நந்தந்த்யஸ்தமிதே ரவௌ ஆத்மநோ நாவபுத்யந்தே மநுஷ்யா ஜீவதக்ஷயம் - சூரியன் உதித்தவுடன் "பொருள் தேடும் காலம் வந்தது" என்று மகிழ்வார்கள்; அஸ்தமிக்கும் நேரத்தில், "குடும்பத்துடன் இன்பமாக இருக்கலாம்", என்று மகிழ்வர்; தங்களது ஆயுள் குறைவதை அறியாமல் உள்ளனர் – என்றது காண்க.

1-3-8 நாளுநின் றடுநம பழைமையங் கொடுவினை யுடனே
மாளும் ஓர் குறைவில்லை மனனக மலமறக் கழுவி
நாளுநந் திருவுடை யடிகள்தம் நலங்கழல் வணங்கி
மாளுமோ ரிடத்திலும் வணக்கொடு மாள்வது வலமே.

பொருள் - ஸர்வேச்வரன் இவனோ அல்லது யாரோ என்று மனதில் உள்ள சந்தேகம் என்னும் தோஷங்கள் நீங்கும்படியாக மனதைத் தூய்மையாக்கி, பெரியபிராட்டியின் நாயகனுடைய திருவடிகளை நாள்தோறும் வணங்குதல் வேண்டும். அப்படி வணங்கினால் எப்போதும் நம்முடன் நிலையாக நின்று வருத்துகின்ற நம்முடைய தீயவினைகள் உடனே அறுந்துவிடுகின்றன. நம்முடைய விருப்பமும் நிறைவேறுகின்றன. உடலை விட்டு உயிர் நீங்கும்போது அவனை வணங்கியபடி உயிரை விடுதல் சிறப்புடையதாகும்.

அவதாரிகை - ஒரு நாளாகிலும் முற்பட்டது உடலாக ஆச்ரயிக்கச் சொல்லாநின்றீர், அநாதிகாலம் நாங்கள் பண்ணிவைத்த பாபங்கள் விலக்காவோ? இனி காலந்தான் உண்டோ? என்ன; நீங்கள் ஆச்ரயணத்திலே ஒருப்படவே விரோதிகள் அடங்கலும் நசிக்கும்; ஸ்ரீய:பதிஸமாச்ரயணமாகையாலே காலம் கழிந்தது என்றிருக்கவும் வேண்டா; நீங்கள் தண்டு காலா ஊன்றி ஊன்றித் தள்ளி நடக்கும்போது அக்கோலோடே சாயவும் அமையும் என்கிறார்.

விளக்கம் – ஆழ்வாரிடம் ஸம்ஸாரிகள், "உடலை விட்டு உயிர் பிரிவதற்கு முன்பு ஒரு நாளாவது ஸர்வேச்வரனைப் பற்றும்படிக் கூறுகிறீர்கள். ஆனால் அப்படிப் பற்றவிடாமல் நீண்ட காலமாக நாங்கள் செய்து வந்த பாவங்கள் எங்களை விலக்காதோ? இனி அவனைப் பற்றுவதற்குக் காலம் உள்ளதோ?", என்றனர். இதற்கு ஆழ்வார், "நீங்கள் அவனைப் பற்றுவது என்று முடிவு செய்தவுடனேயே உங்கள் பாவங்கள் அனைத்தும் நீங்கிவிடும். பெரியபிராட்டியுடன் கூடிய அவனைப் பற்றப்போவதால் காலம் கழிந்து விட்டது என்றும் இருக்க வேண்டாம். பெரியதிருமொழி (1-3-5) - தண்டு காலா - என்றபடி நடக்கும்போது அந்தக் காலோடு சாய்வதும் அமையும்", என்கிறார்.

வ்யாக்யானம் – (நாளும் நின்றடும்) நாள்தோறும் இடைவிடாதே நின்று ஹிம்ஸிக்கக் கடவதான. ப்ரமாணுகதமான பாரிமாண்டல்யாதிகள் நித்யமாயிருக்கச்செய்தே நித்ய பரதந்த்ரமாயிருக்குமாபோலேவும், பகவத் ஸ்வரூபத்தோபாதி குணங்கள் நித்யமாயிருக்கச்

செய்தே நித்ய பரதந்த்ரமாயிருக்குமாபோலேவும், நித்ய வஸ்துவாய் நித்ய பரதந்த்ரமாய்ப் போராநிற்கச் செய்தே அசித்ஸம்ஸர்க்கமும் நித்யமாய்ப் போருகிறதிறே.

விளக்கம் - (நாளும் நின்றடும்) - ஒவ்வொரு நாளும் இடைவிடாமல் நின்றபடி வருத்துகின்ற. பரமாணுக்களைச் சேர்ந்த அதன் அளவு போன்றவைகள் என்றும் உள்ளவை என்றாலும் அவை மற்றவற்றைச் சார்ந்தே உள்ளது போன்றும்; எம்பெருமானின் ஸ்வரூபம் போன்ற அவனது குணங்கள் நித்யமாக உள்ளபோதிலும் அவை மற்றவர்களுக்காக உள்ளது போன்றும்; நித்யமாகவும் என்றும் மற்றவர்களுக்கு வசப்பட்டு இருக்கின்ற உயிர்க்கு, உடலின் தொடர்பு என்பது என்றும் இருக்கின்ற காரணத்தால் அந்தத் தொடர்பு காரணமாக உண்டாகின்ற வினைகளும் எப்போதும் இருக்கும் என்றார்.

வ்யாக்யானம் - (நம) "த்விஷந்த: பாபக்ருத்யாம்" என்கிறபடியே பிறரதாய் அசல்பிளந்தேறிட வந்ததல்ல; நெஞ்சுணர நாமே பண்ணிவைத்தவை. "அபூதபூர்வம் மம பாவி கிம் வா" எனக்கு, முன்பு அநுபவியாததாய், மேல் அநுபாவ்யமாயி ருப்பதொன்றுண்டோ? "ஸர்வம் ஸஹே" எல்லாம் பொறுக்கவல்லேன். "மே ஸஹஜம் ஹி துக்கம்" தன் காய்பொறாத கொம்புண்டோ என்று சொல்லலாம்படியாயிறே நாமே பண்ணிவைக்குமவை இருப்பது. (பழமை) - அதுதான் இன்று நேற்றன்றியே பழையதாயிருக்கை. (அம்) "அம்" என்று க்ரௌர்யத்தைப் பற்றிச் சொல்லுகிறது. (கொடு வினை) அநுபவவிநாச்யமாயிருக்கை. (உடனே மாளும்) ஆச்ரயணகாலத்திலே நசிக்கும். "யதேஷீகதூலமக்நௌ ப்ரோதம் ப்ரதூயேத ஏவம் ஹாஸ்யஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே", "மேருமந்தரமாத்ரோபி" என்று சொல்லுகிறபடியே. விரோதி போமளவேயோ? (ஓர் குறைவில்லை) மேலும் ஒரு விரோதங்கள் வாராது என்னுதல்; ஸர்வாபிமதங்களும் பூர்ணமாம் என்னுதல்.

விளக்கம் – (நம) சாட்யாயன சாகை - த்விஷந்த: பாபக்ருத்யாம் - நம்முடைய பாவங்கள் நமது விரோதிகளைச் சென்று அடைகின்றன என்னும்படி. அவை உண்மையில் மற்றவர்களால் நமக்கு வந்தது அல்ல, நம்முடைய மனம் அறிய நாமாகவே நமக்கு ஏற்படுத்திக் கொண்டவையாகும். ஸ்தோத்ரரத்னம் (25) - அபூதபூர்வம் மம பாவி கிம் வா – எனக்கு இதற்கு முன்பு அனுபவிக்காததாய், இனி அனுபவிக்கக் கூடியதாய் ஏதேனும் உண்டோ; ஸர்வம் ஸஹே – அனைத்தையும் பொறுத்துக்கொண்டேன்; மே ஸஹஜம் – தனது காயைச் சுமக்க இயலாத மரமும் உண்டோ? – என்பதற்கு ஏற்ப அனைத்து வினைகளும் நாமாகவே நமக்கு ஏற்படுத்திக் கொண்டதாகும். (பழமை) – அந்த வினைகள் "இன்று, நேற்று" என்பது போன்று இல்லாமல் பழையதாக உள்ளன. (அம்) – அந்த வினைகளின் கொடுமையைக் கூறுகிறார். (கொடுவினை) - அனுபவிக்காமல் கழிக்க இயலாத வினை. (உடனே மாளும்) – ஸர்வேச்வரனின் திருவடிகளைப் பற்றின

நேரத்திலேயே அழிந்துவிடும். சாந்தோக்ய உபநிஷத் (5-25) – யதேஷீகதூலமக்நௌ ப்ரோதம் ப்ரதூயேத ஏவம் ஹாஸ்யஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே - தீயில் இடப்பட்ட பஞ்சு எப்படி அழிகிறதோ அது போன்று, அவனுடைய பாவங்கள் அனைத்தும் நாசம் அடைகின்றன; விஷ்ணுதர்மம் - மேருமந்தரமாத்ரோபி – பாவத்தின் அளவானது மேரு மலை அளவு இருந்தாலும், கேசவன் என்ற மருந்தினால் கெட்ட நோய்கள் போன்று அழிகின்றன - என்பதைக் காண்க. (ஓர் குறைவில்லை) – மேலும் எந்தவிதமான குறையும் ஏற்படாது; விருப்பங்களும் நிறைவேறும்.

வ்யாக்யானம் – "கௌந்தேய ப்ரதிஜாநீஹி ந மே பக்த: ப்ரணச்யதி" அர்ஜுந: இவ்வர்த்தத்தில் நம்மை விச்வஸித்து ப்ரதிஜ்ஞை பண்ணு; நம்மைப் பற்றினவர்களுக்கு அநர்த்தம் வாராது காண்! பகவத்ஸமாச்ரயணம் பண்ணுகைக்கும் வினை கிடக்கைக்கும் "அக்நிநா ஸிஞ்சேத்" போலே என்ன சேர்த்தியுண்டு? அஸங்கதம். "துராசாரோபி" செய்யக்கடவதல்லாதவற்றைச் செய்து போருவது. "ஸர்வாசீ" அபோஜ்ய போஜநங்களைப் பண்ணுவது. "க்ருதக்ந:" உபகரித்த விஷயத்திலே அபகாரத்தைப் பண்ணுவது. "நாஸ்திக" வைதிக மர்யாதையை இல்லையென்று போருவது. "புரா" இதுதான் பழையதாய் போருவது. "ஸமாச்ரயேதித்யாதி" - இவன் அநுகூலிப்பது எப்போதோ? என்று ஏற்கவே அவஸரம் பார்த்திருக்கிறவனைப் பற்றி அநுகூலிக்குமாகில், பின்பு அவன் நிர்தோஷனாக ப்ரதிபத்தி பண்ணுவது என்தான்? என்னில், "ப்ரபாவாத் பரமாத்மந:" இவனைக் குறைய நினைக்கையாவது பகவத் ப்ரபாவத்தைக் குறைய நினைக்கையிறே. "ந வாஸுதேவ பக்தாநாமஸுபம் வித்யதே க்வசித்" என்னுமாபோலே.

விளக்கம் – கீதையில் (9-31) – கௌந்தேய ப்ரதிஜாநீஹி ந மே பக்த: ப்ரணச்யதி - அர்ஜுனா! என்னை நம்பி சபதம் எடுப்பாயாக. என்னைப் பற்றியவர்களுக்குத் துன்பம் ஏற்படாது என்று அறிவாயாக. ஸர்வேச்வரனை அடைவதற்கும், துன்பம் நம்மை தொடர்வதற்கும் "தீயால் நனைப்பது" என்பது போன்று தொடர்பு இல்லை என்பதே ஈச்வரனின் கருத்தாகும். மஹாபாரதத்தில் கூறியபடி செய்யக்கூடாதவற்றைச் செய்தல், உண்ணத் தகாதவற்றை உண்ணுதல், நன்றி செய்தவனுக்குத் தீமையைச் செய்தல், வேத நெறிகளே இல்லை என்று கூறுதல் ஆகிய பலவற்றை எப்போதும் ஒருவன் செய்தபடி இருக்கக்கூடும். இப்படிப்பட்டவனும், தன்னை எப்போது வந்து அடைவான் என்று எதிர்பார்த்தபடி இருக்கின்ற ஸர்வேச்வரனைச் சென்று பற்றினால், அப்படிப்பட்டவனைக் குற்றங்கள் நீங்கியவன் என்றே எண்ணவேண்டும். ஏன் என்றால், அப்படிப்பட்டவன் தோஷங்கள் நிறைந்தவன் என்று தொடர்ந்து எண்ணினால் ஸர்வேச்வரனின் மேன்மையைக் குறைவாக எண்ணுதல் என்றே பொருளாகும். ந வாஸுதேவ பக்தாநாமஸுபம் வித்யதே க்வசித் - வாஸுதேவனின் அடியார்களுக்கு எப்போதும் கேடு இல்லை - என்பதைக் காண்க.

வ்யாக்யானம் - இனி செய்யவேண்டுவதொன்றுண்டு. (மனனக மலமறக் கழுவி) ஸர்வேச்வரன் ப்ரஹ்மருத்ரர்கள் நடுவே கலசி நின்றால் "இவனோ கடவான், மற்றையவர்களோ?" என்று ஸம்சயிக்குமது தவிர்ந்து "ஸர்வேச்வரனே கடவான்" என்கிற அந்த:கரண ஸுத்தியுண்டாகவேணும். திருவடி தன்னாமம் மறந்தும் புறந்தொழாதொழியும் இத்தனையே வேண்டுவது. (நாளும்) அபர்வணி கடல் தீண்டலாகாது என்னுமாபோலே ஒரு நியதியில்லை. (நம் திருவுடையடிகள்தம்) ஸ்ரீமானான ஸ்வாமியானவனுடைய. இத்தால் நித்யயோகத்தைச் சொல்லுகிறது. "ஸர்வேச்வரனை ஆச்ரயித்தானாகில் அவன் பலப்ரதனாகிறான்; பிராட்டியைப் புருஷகாரமாகப் பற்ற வேண்டுகிறதென் என்று நஞ்ஜீயர் பட்டரைக் கேட்க, "நாளும் நம் திருவுடையடிகள் தம் நலங்கழல் வணங்கி" என்று அவள் முன்னாக ஆச்ரயிக்கவேணும் என்னா நின்றது கண்டீரே!" என்று அருளிச்செய்து, "அவனை ஆச்ரயிக்குமிடத்தில் இவன் குற்றம் பாராதே தன் நிழலிலே இவனை வைத்து, அவன் பக்கல் முகம் பெற்றவாறே குற்றத்தைப் பொறுப்பிக்கும் அவள் முன்னாகப் பற்றவேணும்". (நலங்கழல்) அவள் முன்னாகப் பற்றினாருடைய குற்றங்களைப் பாராதே கைக்கொள்ளும் திருவடிகள். "வணங்கி" என்றது வணங்க என்றபடி. "வணங்கி" என்கிற இது வினையெச்சமாய், வணங்க என்னும் அர்த்தமாயிருக்கும். வணங்க, நாளும் நின்றடும் நம் பழமையங்கொடுவினை உடனே மாளும், ஓர் குறைவில்லை. ஆனாலும், ஆச்ரயணத்துக்குக் காலம் தப்பி நின்றதே என்ன. (மாளுமோரிடத்திலும்) முடிகிற ஒரு க்ஷணத்திலும். (வணக்கொடு மாள்வது நலம்) "த்விதா பஜ்யேயமப்யேவம் ந நமேயம்" என்னாதே கிடக்கிற சீரைப்பாயைக் கவ்விக் கவிழ்ந்து கிடந்து சாவவும் அமையும். (வலமே) வரமென்னுதல், ச்ரேஷ்டமென்னுதல்; பலவத்தரமென்னுதல். அவனையும் ஆச்ரயித்து வேறு சிலர் பக்கலிலும் தலை சாய்க்க இராதே, முடிகிற சமயத்திலே ஆச்ரயிக்கவே, பின்னைப் பேற்றோடே தலைக்கட்டும். இத்தால், ஐந்மப்ரப்ருதி ஆச்ரயித்தாலும் பலமில்லை பகவத் வ்யதிரிக்தர் பக்கல்; ஆச்ரயணத்திலே உபக்ரமித்து முடிந்தாலும் பலம் தப்பாது பகவத் விஷயத்தில் என்கை.

விளக்கம் – அடுத்து நீங்கள் செய்ய வேண்டுவது ஒன்று உண்டு. (மனனக மலமறக் கழுவி) - நான்முகன் மற்றும் சிவன் ஆகியோரின் நடுவில் ஸர்வேச்வரன் கலந்து நிற்கும்போது உங்களுக்கு, "இவனோ ஸர்வேச்வரன், மற்றவர்கள் ஸர்வேச்வரனோ", என்ற சந்தேகமே உண்டாகக்கூடாது. "நாராயணனே ஸர்வேச்வரன்" என்று ஆழ்மனதில் உறுதியாக உதிக்கும் அளவிற்கு மனம் தூய்மை அடையவேண்டும். நான்முகன் திருவந்தாதி (68) – தன்னாமம் மறந்தும் புறந்தொழா - என்பதற்கு ஏற்ப அவனைத் தவிர மற்ற யாரையும் இறைவன் என்று எண்ணுவதே தவறாகும். (நாளும்) - மழைக்காலங்களில் கடலைத் தாண்டக்கூடாது என்பது போன்று இவனைத் தீண்டுவதற்கு எந்த விதிமுறையும் இல்லை.

(நம் திருவுடையடிகள்தம்) - பெரியபிராட்டியின் நாயகனான ஸ்வாமியுடைய. இதன் மூலம் நித்யயோகம் கூறப்படுகிறது. நஞ்ஜீயர் பட்டரிடம், "ஸர்வேச்வரனை அடைந்தால்

அவனே பலனை அளித்து விட்டுப்போகிறான். நடுவில் பெரியபிராட்டியிடம் சிபாரிசுக்குச் சென்று அவளை ஏன் துணையாகப் பற்றவேண்டும்?", என்றார். இதற்கு பட்டர், "அவனை அடையும்போது நமது குற்றங்களை அவன் காணாதபடி தனது நிழலில் பெரியபிராட்டி வைத்துக்கொள்கிறாள். அவன் நமக்கு நன்மை அளித்த பின்னரே நம்முடைய குற்றங்களைப் பொறுத்துக்கொள்கிறான். ஆகவே அவளை முன்னிட்டு அவனைப் பற்ற வேண்டும்", என்றார். (நலம் கழல்) - அவளை முன்னிட்டுப் பற்றியவர்களின் குற்றங்களை ஆராயாமல் ஏற்றுக்கொள்ளும் திருவடிகளை வணங்கி. இங்கு "வணங்கி" என்பதை "வணங்க" என்று படிக்கவேண்டும். அவனை நாம் வணங்க, எப்போதும் நம்மிடமே இருக்கின்ற பழமையான தீயவினைகள் உடனே அழிந்துவிடும். ஆயினும் அவனைப் பற்றுவதற்குக் காலம் கடந்ததே என்ற சந்தேகம் எழலாம். இதற்கு விடை அளிக்கிறார். (மாளுமோரிடத்திலும்) – உயிர் முடிகின்ற ஒரு நொடியிலும். (வணக்கொடு மாள்வது நலம்) இராமாயணம் - த்விதா பஜ்யேயமப்யேவம் ந நமேயம் இராமாயணம் – இராவணன் மால்யவானிடம், "நான் இரண்டு துண்டுகளாக வெட்டப்பட்டாலும் இராமனை வணங்க மாட்டேன்", என்பதைப் போன்று கூறாமல், சாகக் கிடக்கின்ற பாயில் அவனை வணங்கியபடி கவிழ்ந்து கிடந்து, உயிரை விடுவதும் நன்மையே ஆகும். (வலமே) - வரம் என்னுதல், உயர்ந்தது என்னுதல். அவனையும் பற்றி நின்று, வேறு சிலரது பக்கமும் சாயாமல் உயிர் முடிகின்ற சமயத்தில் அவனை அடைதல் மூலம் பெரும்பேற்றோடு முடிவு உண்டாகும். இதனால் - பிறந்தது முதலாக அவனைக் காட்டிலும் வேறுபட்ட தேவர்களை அடைந்தாலும் எந்தவிதமான பயனும் இல்லை, ஆனால் அவனை அடையும் விஷயத்தில் தொடங்கியவுடன் உயிர் முடிந்தாலும் பலன் தப்பாமல் கைகூடும் - என்கிறார்.

1-3-9 வலத்தனன் திரிபுர மெரித்தவ னிடம்பெறத் துந்தித்
தலத்தெழு திசைமுகன் படைத்தநல் லுலகமுந் தானும்
புலப்படப் பின்னும்தன் னுலகத்தி லகத்தனன் தானே
சொலப்புகி லிவைபின்னும் வயிற்றுள விவையவன் துயக்கே

பொருள் - எழுச்சி உடைய நான்முகன் தான் படைந்த சிறந்த உலகங்களுடன் அவன் திருநாபியில் அமர்ந்துள்ளான். திரிபுரம் எரித்த சிவனும் எம்பெருமானின் வலப்புறத்தில் உள்ளான். தன்னை அடியார்கள் காணவேண்டும் என்பதற்காகத் தான் படைத்த உலகத்திலே தானே வந்து அவதரித்தான். இவனுடைய குணங்களைப் பேசத் தொடங்கினால் பேசி முடிக்க இயலாது. இவை அனைத்தும் உங்களை மயக்குவதற்காகவே ஆகும்.

அவதாரிகை – கீழ் ப்ரஹ்மாதிகளுடைய அபரத்வமும், ஸர்வேச்வரனுடைய பரத்வமும் சொன்னார்; இப்பாட்டில் அவர்கள் தாங்கள் இவனைப் பற்றிய லப்த

ஸ்வரூபராயிருக்கிறபடியை அருளிச்செய்கிறார். ப்ரஹ்மாதிகளுக்கும் உத்பாதகனாய், அவர்களுக்கு ரக்ஷகனான ஸர்வேச்வரன் – அவர்கள் தங்களும் காலிடமாட்டாத பூமியிலே வந்து அவதரிக்கைக்கு ஹேதுவென்னென்னில்; அவன்தான் அருளிச்செய்து வைத்ததுவே ஹேது; பரித்ராணாய ஸாதூநாம் என்றானிறே. "ஆச்ரயிக்குமவர்களுக்கு இதிலே த்வரை பிறக்கைக்காகவும், ருசி ஜநகனாகைக்காகவும் வந்து பிறப்பன்; அதில் பலமாய் வருமதிறே துஷ்க்ருத்துக்களுடைய விநாஸம்" என்று அருளிச்செய்ததுவே ஹேது என்கிறார்.

விளக்கம் – 6 மற்றும் 7-ஆம் பாசுரங்களில் நான்முகன் முதலானவர்களுடைய பரத்வம் இல்லாத தன்மையையும், ஸர்வேச்வரனுடைய பரத்வத்தின் தன்மையையும் அருளிச் செய்தார். இந்தப் பாசுரத்தில் அவர்கள் ஸர்வேச்வரனைப் பற்றியதால் தங்களுடைய ஸ்வரூபத்தை அடைந்தார்கள் என்பதை அருளிச்செய்கிறார். "நான்முகன் உள்ளிட்ட பலருக்கும் காரணமாக உள்ளவனும், அவர்களது ரக்ஷகனாக உள்ளவனும் ஆகிய ஸர்வேச்வரன், அவர்கள் வந்து தோன்றாத பூமியில் ஏன் அவதரிக்க வேண்டும்?" என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார். கீதை (4-8) - பரித்ராணாய ஸாதூநாம் – என்னை அடைந்தவர்களைக் காப்பேன் – என்றான் அல்லவோ? தன்னை அண்டியவர்களுக்கு, தன்னை அடைவதற்கான வேகத்தை மேலும் பிறப்பிப்பதற்கும், தன் மீது ருசி பிறப்பிப்பதற்கும் வந்து பிறக்கிறான், அதன் பலனாக தீயவர்களின் நாசம் ஏற்படுகிறது என்பதே காரணம் என்றார்.

வ்யாக்யானம் – (வலத்தனன் திரிபுரமெரித்தவன்) - கீழில் பாட்டுக்குக் கீழ் இரண்டு பாட்டாலும் சொன்ன அர்த்தத்தை அநுபாஷிக்கிறார். திரிபுர தஹநத்தாலே ஸஞ்ஜாதாபிமாநியான ருத்ரன், திருமேனியில் வலவருகைப்பற்றி லப்த ஸ்வரூபனாயிருக்கும். "பச்யைகாதச மே ருத்ராந் தக்ஷிணம் பார்ச்வமாச்ரிதாந்" என்கிறபடியே. (இடம் பெறத்துந்தித் தலத்தெழு திசைமுகன் படைத்த நல்லுலகமும் தானும்) எழுச்சியையுடைய திசைமுகன் படைத்த லோகமும் தானும் அஸங்குசிதமாகத் திருநாபி கமலத்திலே இருக்கும். "ப்ரஹ்மாணமீசம் கமலாஸநஸ்தம்" என்கிறபடியே. இவை இவர்களுடைய ஸர்வப்ரகார ரக்ஷணத்துக்கும் உபலக்ஷணம். எழுச்சியாவது – சதுர்தச புவநத்துக்கும் நிர்வாஹகனான அளவுடைமை. ஈச்வரன் விரும்பி வந்து அவதரிக்கையாலே "நல்லுலகம்" என்கிறது.

விளக்கம் - (வலத்தனன் திரிபுரமெரித்தவன்) – 6, 7ஆம் பாசுரங்களில் கூறப்பட்ட பொருளைத் தொடர்கிறார். திரிபுரத்தை எரித்ததால் கர்வம் கொண்ட சிவன், எம்பெருமானுடைய திருமேனியின் வலது பாகத்தை அடைந்ததால் தனது ஸ்வரூபத்தைப்

பெறுகிறான். மோக்ஷதர்மம் – பச்யைகாதச மே ருத்ராந் தக்ஷிணம் பார்ச்வமாச்ரிதாந் - எனது வலது பாகத்தில் உள்ள பதினொரு ருத்ரர்களைக் காண்பாய் – என்றது. (இடம் பெறத்துந்தித் தலத்தெழு திசைமுகன் படைத்த நல்லுலகமும் தானும்) – எழுச்சி கொண்ட நான்முகன் படைத்த உலகங்களும் தானுமாக, இடம் குறைவு என்பதே இல்லாமல் உள்ள நிலை. கீதை – ப்ரஹ்மாணமீசம் கமலாஸநஸ்தம் - கமலம் என்னும் ஆசனத்திலே உள்ள நான்முகனையும் உன்னில் காண்கிறேன் - என்று அர்ஜுனன் கூறியது காண்க. இங்கு கூறிய அனைத்தும் இவர்கள் உள்ளிட்ட அனைவரையும் ஸர்வேஸ்வரன் காக்கிறான் என்று கருத்து. எழுச்சி என்றால் பதினாறு லோகங்களையும் நிர்வாகம் செய்யும் தன்மை. ஈச்வரனே விரும்பி அவதாரம் செய்வதால் நல்உலகம் எனப்பட்டது.

வ்யாக்யானம் - "ஏறாளுமிறையோனும் திசைமுகனும் திருமகளும் கூறாளும் தனியுடம்பன்" என்கிறபடியே, பிராட்டிக்கும் ப்ரஹ்மாதிகளுக்கும் ஒக்கத் திருமேனியிலே இடங்கொடுத்து வைத்தால், அந்தப்புரத்திலுள்ளவர்களென்று அவர்கள் இருப்பிடத்தில் இவர்களுக்கு நலியவொண்ணாதபடி கூறாகக் கொடுத்துவைக்கும். ஸர்வாபாச்ரயமாயிறே திருமேனிதான் இருப்பது. (இடம்பெற) ஸவிகாஸமாயிருக்கும். ருத்ரனுக்கும் இவ்வருகுள்ளார்க்கும் நிர்வாஹகனாய், சதுர்தசபுவந ஸ்ரஷ்டாவான சதுர்முகன் – தான் உண்டாக்கின நன்றான லோகமும் தானும் திருநாபிக் கமலத்தைப் பற்றி லப்த ஸ்வரூபனாயிருக்கும். "உந்தி" என்றும், "துந்தி" என்றும் - திருநாபிக்குப் பேர். (இடம் பெறத்துந்தி) "இடம்பெற, அத்து உந்தித்தலம்" என்றாய் பதம்; அதில், "அத்து" என்கிற பதம் – சாரியைச் சொல்லாய்ப் பொருளின்றியேபோய், "இடம் பெற உந்தித்தலம்" என்கிறது. "பூதலம்" என்னுமாபோலே. (திசைமுகன் படைத்த நல்லுலகமும் தானும் உந்தித் தலத்தனன்) ஸ்தநந்தயப்ரஜை தாய் முலையை அகலில் நாக்கு ஒட்டுமாபோலே, திருநாபீ கமலத்தை விடில் தன் ஸத்தை இல்லையாம்படியிருக்கை.

விளக்கம் – திருவாய்மொழி (4-8-1) - ஏறாளுமிறையோனும் திசைமுகனும் திருமகளும் கூறாளும் தனியுடம்பன் - என்னும்படி பிராட்டிக்கும் நான்முகன் முதலானவர்க்கும் தனது திருமேனியில் சமமான இடம் கொடுத்து வைக்கும்போதும், அந்தப்புரத்தில் உள்ளவர்கள் என்று அவர்களது இருப்பிடத்தில் இவர்கள் கலக்காதபடி தனது சரீரத்தை நேர்த்தியாகப் பிரித்துக் கொடுப்பான். அனைவரும் அண்டும்படியாக அல்லவோ இவன் திருமேனி உள்ளது? (இடம்பெற) – விசாலமாக. ருத்ரன் உள்ளிட்ட அனைவருக்கும் நிர்வாஹகனாக. பதினான்கு உலகங்களையும் படைத்த நான்முகன் தான் உண்டாக்கிய லோகமும், தானுமாக அமர்ந்த திருநாபிக் கமலத்தை உடையவன். உந்தி என்றும், துந்தி என்றும் திருநாபிக்குப் பெயராகும். (இடம்பெறத்துந்தி) – அத்து, உந்தித்தலம் போன்றவை

பதபேதங்கள். இதில் அத்து என்ற பதம் பொருள் இன்றி விலக, "இடம் பெற உந்தித்தலம்" என்றார். (திசைமுகன் படைத்த நல்லுலகமும் தானும் உந்தித் தலத்தனன்) - தாய்ப்பால் குடிக்கின்ற குழந்தை தாயின் ஸ்தனத்தை விட்டு வாயை எடுக்கும்போது நாக்கு உலர்ந்து விடுவது போன்று, திருநாபிக்கமலத்தை விட்டு நான்முகன் அகன்றால் தனது இருப்பு இல்லை என்னும்படி இருப்பான்.

வ்யாக்யானம் - இப்படி பின்னை ஸர்வகாலமும் இவர்களும் இருப்பார்களோ என்னில் - ஆபத்துக்களிலே திருமேனியிலே இடங்கொடுக்கும். அது மஹாகுணமாகையாலே ஆழ்வார்கள் எப்போதும் ஒக்க அருளிச்செய்துகொண்டு போருவர்கள். ஸாமந்தர்க்குப் புறம்பே நாடுகள் கனக்க உண்டாகிலும், மாளிகைக்குள்ளே செம்பாலே நாழியரிசியைத் தங்களுக்கு வரிசையாக நினைத்திருப்பர்களிறே; அப்படியே இவர்களும் திருமேனியில் பண்ணிவைக்கும் ப்ராப்தி விடார்களிறே. ஒரு கலகங்களில் அடையவளைந்தானுக்குள்ளே குடிவாங்கியிருந்து, காலம் தெளித்தவாறே புறம்பே புறப்பட்டாலும், "இவ்விடமின்னார் பற்று, இவ்விடமின்னார் பற்று" என்று பின்னும் ப்ராப்தி சொல்லி வைக்குமாபோலே.

விளக்கம் – இப்படியாக இவர்கள் எப்போதும் அவனுடைய திருமேனியில் இருப்பார்களோ என்ற கேள்வி எழலாம். ஆபத்து காலங்களில் அவன் தனது திருமேனியில் இடம் கொடுப்பான். ஆயினும் அது உயர்ந்த குணம் என்பதால் ஆழ்வார்கள் "எப்போதும்" என்று அருளிச்செய்வார்கள். சிற்றரசர்கள் பல நாடுகளைக் கொண்டுள்ளபோதிலும் தங்கள் மாளிகையில் உள்ள கால்படி செம்பில் இருக்கின்ற அரிசியை மேன்மையாக நினைப்பார்கள், அது போன்று இவர்களும் அவனது திருமேனியை அடைவதை விடமாட்டார்கள். எப்படி என்றால் மற்ற அரசர்கள் மூலம் கலகம் ஏற்படும் காலங்களில் அடையவளைந்தானுக்குள் (திருவரங்கத்தின் ஏழாம் ப்ரகாரம்) குடி புகுந்து, கலகம் நீங்கியவுடன் வெளியே புறப்பட்டாலும், இந்த இடம் இவருடைய இடம் என்று அங்கிருந்து சென்ற பின்னும் தம்முடைய இடத்தைக் கூறும்படி, அவன் தனது திருமேனியிலிருந்து ஆபத்து காலம் நீங்கியவுடன் வெளியேவிட்டாலும் அந்தத் திருமேனி தங்களுடையது என்று கூறும்படி எனக் கொள்ளவேண்டும்.

வ்யாக்யானம் - (பின்னும்) ப்ரஹ்மாதிகளுக்குத் தன் திருமேனியிலே இடங்கொடுத்ததுக்கு மேலே. (தன்னுலகத்திலகத்தனன்) தான் உண்டாக்கின ப்ரஹ்மாவாலே உண்டான லோகங்களிலே வந்து அவதரிக்கும். ப்ரஹ்ம ருத்ரர்களும் தன் திருமேனியில் ஏக தேசத்தைப் பற்றி லப்த ஸ்வரூபராம்படியிருக்கிறவன் அவர்களுங்கூடக்காலிட அருவருக்கிற ஸம்ஸாரத்திலே வந்து அவதரிக்கைக்கு ஹேது என்னென்னில் (புலப்பட) காணவாராய் என்றென்று கண்ணும் வாயும் துவர்ந்திருக்குமவர்களுக்குத் தன் ஸங்கல்பத்தாலே ஸம்விதாநம் பண்ணவொண்ணாதே; அவர்கள் சக்ஷுராதி,

கரணங்களுக்கு விஷயாமாகவேணும் என்று. ஏன்? ஸங்கல்பத்தாலே ஸம்விதாநம் பண்ணினால் என் செய்யும் என்னில், "மழுங்காத ஞானமே படையாக மலருலகில் தொழும்பாயார்க்களித்தால் உன் சுடர்ச்சோதி மறையும்" என்பர்கள். இது தனக்குத்தான் அடியென் என்னில்; (தானே) "ஆத்மமாயயா", "ஆத்மேச்சயா"; ஒரு கர்மம் ப்ரேரிக்கவன்று, இச்சையாலே.

விளக்கம் – (பின்னும்) - நான்முகன் உள்ளிட்ட பலருக்கும் தன்னுடைய திருமேனியில் இடம் கொடுத்த பின்னர். (தன்னுலகத்திலகத்தனன்) – தான் உண்டாக்கிய நான்முகனால் படைக்கப்பட்ட உலகங்களிலே வந்து அவதரிப்பான். ஆனால் நான்முகனும் சிவனும் தன்னுடைய திருமேனியில் இருக்கும்படியாக ஒரு இடத்தைக் கொடுத்து தங்களுடைய ஸ்வரூபம் கிட்டப்பெற்ற அவர்கள் கூட வந்து வசிப்பதற்கு அருவருப்பு கொள்ளுகின்ற இந்த ஸம்ஸார உலகத்தில் இவன் வந்து அவதரிக்க என்ன காரணம்? (புலப்பட) – திருவாய்மொழி (8-2-5) - காணவாராய் - என்று இருப்பவர்களுக்குத் தன்னுடைய நினைவால் மட்டுமே அவர்கள் விருப்புவதை அளிக்கக்கூடாது என்று எண்ணியவனாக, அவர்களது கண் முதலான புலன்களுக்கும் தான் விஷயமாக வேண்டும் என்று எண்ணுவதால் அவதரிக்கிறான். ஏன்? தன்னுடைய ஸங்கல்பம் மூலம் மட்டுமே அவர்கள் விரும்பியவற்றை அளித்தால் என்ன நடக்கும் என்றால், திருவாய்மொழி (3-1-9) - மழுங்காத ஞானமே படையாக மலருலகில் தொழும்பாயார்க்களித்தால் உன் சுடர்ச்சோதி மறையும் – இருந்த இடத்திலிருந்தபடியே காப்பாற்றினால், யானையைக் காக்க மடுவிற்கு ஓடிவந்தான் என்னும் உனது மேன்மை மறையும் - என்று கூறிவிடுவார்கள். இதற்கு ப்ரமாணம் என்ன? ஆத்மேச்சயா – தனது விருப்பம் காரணமாக. (தானே) – இவனுடைய பிறப்பு கர்மத்தினால் அல்லாமல் இச்சை காரணமாக நடப்பதால் ஆகும்.

வ்யாக்யானம் - (சொலப்புகில் இவை பின்னும் வயிற்றுள) அவன் இப்படி அவதரித்துப் பண்ணும் ரக்ஷணங்களில் ஏகதேசம்சொல்லில் சொல்லுமத்தனை; எல்லாம் சொல்லில் தலைக்கட்டப்போகாது. சொலப்புகில் உள்ளேயுள்ளேயாமித்தனை. அன்றியே, தன்னாலே ஸ்ருஷ்டரான ப்ரஹ்மாதிகளால் ஸ்ருஷ்டரானவர்களுக்கு "என் மகன்" என்று அபிமானிக்கலாம்படி வந்து பிறந்து, "உனக்கு ராஜ்யத்தைத் தந்தேன், அதுதன்னை வாங்கினேன் போ" என்றும், கையிலே கோலைக்கொடுத்து "பசுக்களின் பின்னே போ" என்றும் சொல்லலாம்படி எளியனாயிருக்கிற தான், இவர்களுக்கு ஓர் ஆபத்து வந்தால் இவர்களை வயிற்றிலே வைத்து நோக்கும்படியைச் சொல்லிற்றாகவுமாம். இப்படி இதுவே அர்த்தமென்னுமிடம் நீர் அருளிச்செய்தபோது தெரிந்து, அல்லாதபோது எங்களுக்குத்

தெரியாதபடியிராநின்றதீ! என்ன (இவை அவன் துயக்கே) "மம மாயா துரத்யயா" என்கிறபடியே அவன்தானே ப்ரக்ருதியாகிற விலங்கையிட்ட பாக்ய ஹீநரானவர்கள் தன் பக்கல் அணுகாதபடி பண்ணி, அவர்கள் அகலப்புக்கால் அவன் அநுமதிதாநம் பண்ணி; உங்கள் பக்கல் அவன் உதாஸீநனாயிருக்கையாலே தெரியாதொழிகிறது என்கிறார். துயக்கு – ஸம்சயம்.

விளக்கம் - (சொலப்புகில் இவை பின்னும் வயிற்றுள) – இப்படியாக அவன் அவதரித்துச் செய்கின்ற ரக்ஷணங்களில் ஒரு சிலவற்றை மட்டும் கூற இயன்றால் அது இயலும், ஆனால் அனைத்தையும் கூற முயன்றால் இயலாது. அப்படியும் கூற முயன்றால் உள்ளே உள்ளே சென்றுகொண்டே இருக்கும். மேலும் தன்னால் படைக்கப்பட்ட நான்முகன் மூலமாகப் படைக்கப்பட்டவர்கள் "என் மகன்" என்று கூறலாம்படியாக வந்து அவதரித்தால், "உனக்கு ராஜ்யத்தை அளித்தேன், அதனை நான் மீண்டும் வாங்கிக்கொண்டேன், நீ கானகம் செல்" என்றும், கையில் கோலைக் கொடுத்து, "பசுக்களின் பின்னே போ" என்றும் அதட்டும்படியாகத் தன்னை எளியவனாக நிறுத்திக்கொள்வான். இவர்கள் அனைவருக்கும் ஓர் ஆபத்து வந்தால், தன்னுடைய வயிற்றில் வைத்துப் பார்த்துக்கொள்ளும்படி யான தன்மையையும் உணர்த்தினார். "இப்படியாக நீங்கள் கூறியதற்கு இதுவே பொருள் என்று அருளிச்செய்தபோது புரிந்தது. அல்லாதபோது எங்களுக்கு விளங்கவில்லையே", என்று ஸம்ஸாரிகள் ஆழ்வாரிடம் கேட்டனர். இதற்கு விடை அளிக்கிறார். (இவை அவன் துயக்கே) – கீதை (7-14) - மம மாயா துரத்யயா - எனது மாயை என்பதைத் தாண்ட இயலாது - என்னும்படி அவன் தானாகவே மாயை என்னும் விலங்கை இட்டுப் புண்ணியம் செய்யாதவர்கள் தன் பக்கம் அணுகாதபடியும், தன்னைவிட்டு அதிகம் அகலாதபடியும் செய்கிறான். அவர்கள் அதையும் மீறி அகலும்போது அனுமதி அளிக்கிறான். இப்படியாக உங்கள் பக்கம் உதாஸீனனாக அவன் உள்ளதால் உங்களுக்கு விளங்கவில்லை.

1-3-10 துயக்கறு மதியில்நன் ஞானத்து ளமரரைத் துயக்கும்
மயக்குடை மாயைகள் வானிலும் பெரியன வல்லன்
புயற்கரு நிறத்தனன் பெருநிலங் கடந்தநல் லடிப்போது
அயர்ப்பில னலற்றுவன் தழுவுவன் வணங்குவ னமர்ந்தே

பொருள் – சந்தேகங்கள் சிறிதும் இல்லாத காரணத்தால் கலக்கம் அற்ற உள்ளத்தில் பிறந்த உயர்ந்த ஞானத்தைக் கொண்ட தேவர்களையும் மயங்க வைக்கின்ற திருஅவதாரங்கள் உடையவன்; கார்கால மேகம் போன்ற கருத்த நிறத்தை உடையவன்; பூமி முழுவதையும் மிகவும் எளிதாக அளந்த சிறப்பான திருவடித் தாமரைகளைக் கொண்டவன். இப்படிப்பட்ட அவனது திருவடிகளை நான் என்றும் மறக்காமல்,

அவற்றை அறிந்து எப்போதும் புலம்பியபடி உடலால் தழுவியபடி, தலையால வணங்கி நிற்பேன்.

அவதாரிகை - அவன் விமுகர்பக்கல் பண்ணுமவை கிடக்கிடீர்; அவன் காட்டின வழியே காணப்புக்க நாம் மநோவாக்காயங்களாலே நம் விடாய்கெடத் திருவுலகளந்தருளின் திருவடிகளை அநுபவிப்போம் என்று பாரிக்கிறார்.

விளக்கம் - எம்பெருமானிடம் முகம் காட்டாமல் நிற்பவர்களிடம் அவன் நடந்து கொள்வது ஒருபுறம் இருக்கட்டும். அவன் அவதாரம் செய்து தன்னுடைய திருவடிவின் அழகைக் காட்டினான்; அதனைக் காணப் புகுந்த நாம், நம்முடைய மனம் – உடல் – சொல் ஆகியவை கொண்டு, அவன் மீது கொண்ட தாகம் தீரும்படி உலகங்களை அளந்த திருவடிகளை அனுபவிப்போம் என்கிறார்.

வ்யாக்யானம் - (துயக்கறு மதியில்) துயக்கற்ற மதியையுடைய; ஸம்சய விபர்யயரஹிதமான மதியையுடையராகையாலே. (நன்ஞானத்துள் அமரர்) உள்-மனமும், இடமும், மேலும். இங்கு, மேலான அமரர் என்றபடி. நன்றான ஜ்ஞாநத்தையுடையரான அமரரையுங்கூட. (துயக்கும் மயக்குடை மாயைகள்) துயக்கு - மனந்திரிவு. அறிவு கெடும்படி தெரியாமையைப் பண்ணக்கடவதான குணசேஷ்டிதங்களோடு கூடின அவதாரங்கள். (வானிலும் பெரியன வல்லன்) ஆகாசத்தைப் பரிச்சேதிக்கிலும் பரிச்சேதிக்கப் போகாது. "அமரர்" என்கிறது – இந்த்ராதிகளை.

விளக்கம் - (துயக்கறு மதியில்) - சந்தேகம் ஏதும் இல்லாத புத்தியை உடையவர்கள். இப்படியாக சந்தேகம் ஏதும் இல்லாத புத்தியைக் கொண்டவர்கள் ஆதலால். (நன்ஞானத்துள் அமரர்) – உள் என்பது மனம், இடம், மேல் என்ற பல பொருளைத் தருவதாகும். இங்கு மேலான அமரர்கள் என்ற பொருளில் வந்தது. சிறந்த ஞானத்தைக்கொண்ட அமரரையும் கூட. (துயக்கும் மயக்குடை மாயைகள்) - அவர்களது அறிவு கலங்கும்படியாக, தெரியாமையை ஏற்படுத்தக்கூடிய குணங்களும் லீலைகளும் கூடிய அவதாரங்கள். (வானிலும் பெரியன வல்லன்) - ஆகாயத்தை அளவிட முயன்றாலும் அவனது அவதார ரஹஸ்யங்களை அளவிட இயலாது. இங்கு அமரர் என்பது இந்திரன் உள்ளிட்ட தேவர்கள் ஆவர்.

வ்யாக்யானம் - ரஜஸ்தமஸ்ஸுக்கள் மிக்கிருக்கச்செய்தே. ஸத்யம் தலையெடுத்தாலும் அப்படியே கனத்திருக்குமிறே அவர்கள் தங்களுக்கு; அப்போது, "நம் கார்யம் நம்மாற் செய்யப்போகாது, அவனே நம் கார்யத்துக்குக் கடவன்" என்றிரா, அநந்தரக்ஷணத்திலே எதிரிடாநிற்பர்கள்; தங்கள் இருப்பிடமும் இழந்து, ஸ்த்ரீகளும் பிடியுண்டு, எளிமைப்பட்டவளவிலே அத்தைப் பரிஹரித்துத் தரவேணுமென்று இரந்து, பின்னை இவனும் போய் நரகவதம் பண்ணி, சிறை கிடந்த ஸ்த்ரீகளையும் மீட்டுக் கொடுத்துப்

போராநிற்கச்செய்தே, புழைக்கடைக்கே நின்றதொரு பூண்டைப் பிடுங்கிக்கொண்டு போர, வஜ்ரத்தைக் கொண்டு தொடந்தானிறே. அன்றிக்கே, "நன் ஞானத்து உள் அமரர்" என்கிறது - நித்யஸூரிகளையாய், ஜ்ஞாநாதிகனான பெரியதிருவடியும் "தேவரீரையும் நாய்ச்சிமாரையும் வஹித்தேன் நானன்றோ" என்றாற்போலே சிவியார் சொல்லும் வார்த்தையைச் சொன்னானிறே.

விளக்கம் - ரஜோ மற்றும் தமோ குணங்கள் மிகுதியாக இருந்தால், ஸத்வகுணம் ஓங்கிய போதிலும் முதல் இரு குணங்களே ஓங்கி இருக்கும். அந்த ஸத்வகுணம் ஓங்கும்போது, "நம்முடைய செயல்கள் நம்மால் செய்யஇயலாது. நமது செயல்களை அவனே நிறைவேற்ற இயலும்", என்று இருப்பார்கள். ஆனால் அந்த நொடிக்கு அடுத்த நொடியிலேயே அவனை எதிர்த்து நிற்பார்கள். இப்படியாக அவனை எதிர்த்த இடம் உண்டோ என்பதை ஒரு நிகழ்வு மூலம் அருளிச்செய்கிறார். தேவர்கள் தங்களுடைய இருப்பிடத்தை இழந்து, தேவலோகப் பெண்களையும் பறிகொடுத்து, துன்பத்தில் நின்றபோது, அந்த துன்பத்தை நீக்கவேண்டும் என்று எம்பெருமானை வேண்டினர். அப்போது அவன் சென்று நரகாசுரனை அழித்து, சிறை பிடிக்கப்பட்ட பெண்களை மீட்டு வந்தான். அப்போது தேவர்களின் தோட்டத்தில் இருந்து ஒரு பாரிஜாதத்தை எம்பெருமான் பறித்து வர, அதனை எதிர்த்த இந்திரன் வஜ்ராயுதம் கொண்டு வந்தான் அல்லவோ? கருடன் எம்பெருமானிடம், "உம்மையும் பிராட்டியையும் தாங்குவது நான் அல்லவோ?" என்று பல்லக்கு தூக்குபவர்கள் போன்று ஞானம் அற்ற சொற்களைக் கூறினான் அல்லவா? இதனையே கருத்தில் கொண்டு "நன் ஞானத்துள் அமரர்" என்று நித்தியசூரிகளைக் குறித்துக் கூறியதாகவும் கொள்ளலாம்.

வ்யாக்யானம் - அவனுடைய ஆச்சர்யங்கள் நம்மால் பரிச்சேதிக்கப்போமோ? அது கிடக்கிடீர்; அவன் அநுக்ரஹத்தாலே காட்டின வடிவழகை அநுபவிப்போம் நாம் என்கிறார். (புயற்கருநிறத்தனன்) வர்ஷுகவலாஹகம்போலேயிருக்கிற திருமேனியை யுடையவன். (பெருநிலம் இத்யாதி) "மநோவாக்காயங்களாலே அநுபவிக்கப் பெற்றேன் என்கிறார்" என்று பிள்ளான் பணிக்கும்படி. "இவற்றாலே அநுபவிக்கப் பாரிக்கிறார்" என்று ஜீயர் அருளிச்செய்யும்படி. (பெருநிலம் கடந்த) பரப்பையுடைத்தான பூமியை அளக்கிற இடத்தில், வஸிஷ்ட சண்டாள விபாகமற எல்லார் தலையிலும் ஒக்கத் திருவடிகளை வைத்தான். இவர்கள் நன்மைதீமை பாராதே, தன்னுடைய சுத்தியே இவர்களுக்குமாம்படி பண்ணினான். (நல்லடிப்போது) "படிக்களவாக நிமிர்த்த நின்பாத பங்கயமே தலைக்கணியாய்" என்று ஆசைப்பட வேண்டும்படியிறே இருப்பது. "கதா புந:" என்று ப்ரார்த்தித்து கிடக்குமதிறே; செவ்விப்பூச்சூட ஆசைப்படுவாரைப்போலே. (அயர்ப்பிலன்) மறக்கக் கடவேனல்லேன். (அலற்றுவன்) அக்ரமமாகப் பேசக்கடவேன். (தழுவுவன்) "ஸுகாடம் பரிஷஸ்வஜே" என்னுமாபோலே, கட்டிக் கொள்ளக் கடவேன். (வணங்குவன்) நிர்மமனாய்த் திருவடிகளிலே விழக்கடவேன். (அமர்ந்தே) அநந்ய ப்ரயோஜநனாய் இப்படி செய்யக்கடவேன்.

விளக்கம் - அவனுடைய அதிசயத்தக்க ஆச்சர்யங்களை நம்மால் அளவிட்டு அறிய இயலுமோ? அது ஒருபுறம் இருக்கட்டும். அவன் தன்னுடைய அனுக்ரஹம் மூலம் நமக்கு காண்பித்த வடிவழகை நாம் அனுபவிப்போமாக என்கிறார். (புயற்கருநிறத்தனன்) - மழை பெய்கின்ற நீர் கொண்ட மேகம் போன்ற திருமேனியை உடையவன். (பெருநிலம் இத்யாதி) - இதற்குப் பொருளாக, "மனம், வாக்கு, உடலால் அனுபவிக்கபெற்றேன்", என்று திருக்குருகைப்பிரான்பிள்ளான் கூறுவார். இவற்றால் அனுபவிக்கப் பார்க்கிறார் என்று நஞ்ஜீயர் அருளிச்செய்வார். இந்த உலகத்தின் பரப்பை அளக்கும்போது வசிஷ்டர் மற்றும் சண்டாளர் என்னும் வேறுபாடு இல்லாமல், அனைவரது தலைகளிலும் ஒரே போன்று தனது திருவடிகளை வைத்தான். இவர்களது நன்மை தீமையை ஆராயாமல் தன்னுடைய தூய்மையை அவர்களுக்கு அளித்தான். (நல்லடிப்போது) - திருவாய்மொழி (9-2-2) - படிக்களவாக நிமிர்த்த நின்பாத பங்கயமே தலைக்கணியாய் - என்று ஆசைப்பட வேண்டும்படி அவன் திருவடிகள் உள்ளன. ஸ்தோத்ரரத்தினம் - கதா புந: - உனது திருவடிகள் எனது தலையை எப்போது அலங்கரிக்கும் - என்றதைக் காண்க. (அயர்ப்பிலன்) - மறக்கமாட்டேன். (அலற்றுவன்) - முறை தவறிப்பேசுவேன். (தழுவுவன்) – கெட்டியாக தழுவிக்கொள்வேன். (வணங்குவன்) - அஹங்காரம் இன்றி திருவடிகளில் விழுந்தேன். (அமர்ந்தேன்) – பலன்களை எதிர்பாராமல் இவ்விதம் செய்தேன்.

1-3-11 அமரர்கள் தொழுதெழ வலைகடல் கடைந்தவன் றன்னை
அமர்பொழில் வளங்குரு கூர்ச்சடகோபன் குற்றேவல்கள்
அமர்சுவை யாயிரத் தவற்றினு ளிவைபத்தும் வல்லார்
அமரரோ டுயர்விற்சென் றறுவர்தம் பிறவியஞ் சிறையே.

பொருள் - இந்திரன் முதலான தேவர்கள் வணங்கி நிற்க, அவர்களைப் போன்றே அலைகளும் பொங்கி வணங்கும் கடலைக் கடைந்தவனை, சோலைகள் சூழ்ந்த அழகான திருக்குருகூரில் அவதரித்த ஆழ்வாரின் கைங்கர்யங்கள் பொருந்திய சுவை கொண்ட ஆயிரம் பாசுரங்களில், இந்தப் பத்துப் பாசுரங்களைப் பொருளுடன் அறியவல்லவர்கள் நித்யசூரிகளுடன் ஒத்தபடி நின்று, தங்களது பிறவி என்னும் சிறையை நீங்கப்பெறுவர்.

அவதாரிகை – நிகமத்தில், இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவல்லார் முற்பட நித்யஸூரிகள் வரிசையைப் பெற்று, பின்னை ஸம்ஸாரமாகிற அறவைச்சிறை வெட்டி விடப் பெறுவர்கள் என்கிறார்.

விளக்கம் – நிறைவாக, இந்தத் திருவாய்மொழியைக் கற்பவர்கள் முதலில் நித்யசூரிகளின் வரிசையை அடைந்து, ஸம்ஸாரம் என்னும் சிறையை வெட்டி, விடைபெறுவர் என்கிறார்.

வ்யாக்யானம் - (அமரர்கள் தொழுதெழ) கவிழ்ந்து "உப்புச்சாறு கிளறுவதெப்போதோ?" என்று கிடக்கிற தேவஜாதியானது எழுத்துவாங்கும்படியாகவாயிற்று தோளும் தோள்மாலையுமாய் ஒரு கடல் ஒரு கடலை நின்று கடையுமாபோலே கடைந்தபடி. (தொழுதெழ) குணங்களுக்குத் தோற்று "தொழுதெழு" என்கிற தம் பாசுரமேயாய்விட்டது அழகுக்குத் தோற்ற அவர்களுக்கும் என்கிறார். (அமர்பொழில்) சேர்ந்த பொழில். (வளங்குருகூர்) வளப்பத்தையுடைத்தாய், ஸம்பத்தையுடைத்தான திருநகரி. (சடகோபன் குற்றேவல்கள்) இத்திருநகரிக்கு நிர்வாஹகரான ஆழ்வார் வாசிகமான அடிமை செய்தபடியாயிற்று இதுதான். பூர்ண விஷயத்தில் வாசிகமான வ்ருத்திக்கு மேற்படச் செய்யலாவதில்லையே. "தத்விப்ராஸோ விபந்யவ:" என்று நித்யஸூரிகளுக்கும் இதுவேயிறே வ்ருத்தி. (அமர் சுவையாயிரம்) – ரஸகநமாயாயிற்று ஆயிரந்தானிருப்பது. இத்தால் வாசிகமான அடிமை "முறை" என்று கார்யபுத்த்யா செய்யவேண்டா என்றபடி.

விளக்கம் - (அமரர்கள் தொழுதெழ) - திருவடிகளில் விழுந்து, "அமிர்தம் கடைவது எப்போதோ", என்று தேவஜாதியினர் அவனது திருநாமத்தைத் தங்களது மார்பில் எழுதிக் கொண்டு நின்றனர். இவன் தன்னுடைய தோளும் மாலையுமாக, ஒரு கடலே ஒரு கடலைக் கடைவது போல் நின்று கடைந்தான். (தொழுதெழ) - அவனது குணங்களுக்குத் தோற்றுப்போய் திருவாய்மொழி (1-1-3) - தொழுது எழு - என்று தான் பாசுரம் இட்டது போன்று, அவர்கள் இவனது அழகுக்குத் தோற்றதால் அவர்களுக்கும் "தொழுது எழு" என்று இட்டார். (அமர்பொழில்) – அழகு பொருந்திய சோலை. (வளங்குருகூர்) - சிறந்த வளப்பமும், செல்வமும் நிறைந்த ஆழ்வார்திருநகரி. (சடகோபன் குற்றேவல்கள்) – இந்த திருநகரிக்குத் தலைவரான நம்மாழ்வார் தனது சொற்களைக் கொண்டு கைங்கர்யம் செய்தபடி ஆயிற்று. ஆனால் இவ்விதம் சொற்களால் மட்டும் கைங்கர்யம் செய்வது போதுமோ என்றால், அனைத்தையும் முழுமையாக உடைய ஸர்வேச்வரன் விஷயத்தில் சொற்களைக் கொண்டு கைங்கர்யம் செய்ததைவிட உயர்ந்தது வேறு என்ன? ருக் வேதம் – தத்விப்ராஸோ விபந்யவ: - பரமபதத்தில் நித்யஸூரிகள் துதித்தபடி உள்ளனர் - என்பதற்கு ஏற்ப நித்யசூரிகளின் தொழிலும் இதுவே அல்லவோ? (அமர்சுவை ஆயிரம்) - சுவை நிறைந்ததாக உள்ள ஆயிரம் பாசுரங்கள். இதன் மூலம் சொற்களைக் கொண்டு செய்கின்ற கைங்கர்ய விதிமுறை என்னும் கார்ய புத்தியுடன் செய்யவேண்டாம் என்றபடி.

வ்யாக்யானம் – (அவற்றினுளிவை பத்தும்) "விண்ணவரமுதுண்ண அமுதில் வரும் பெண்ணமுதுண்ட" என்னுமாபோலே, அவைதன்னிலே ரஸகநமாயிருக்குமாயிற்று இத்திருவாய்மொழி. இவற்றை அப்யஸிக்கவல்லார், நித்யஸூரிகளோடொத்த உச்ச்ராயத்தை உடையராய், தங்களுடைய ஜந்மமாகிற விலங்கு அறப்பெறுவர்கள்.

இப்பத்தைக் கற்றபோதே இவனை நித்யஸூரிகளிலே ஒருவனாக நினைப்பிடும்; சரீரவிச்லேஷம் பிறந்தால் போய்ப்புகுமித்தனை; ராஜா ஒருவனுக்கு நாடிட்டால் க்ரமத்திலே போய்ப்புகுமித்தனையிறே. ராஜபுத்ரன் தலையிலே முடியை வைத்து, பின்னை விலங்கு வெட்டி விடுமாபோலே, நித்யஸூரிகளிலே ஒருவராம்படியான தரத்தைப் பெற்று, பின்னை ஸம்ஸார நிகளவிச்சேதத்தைப் பெறுவர்கள். அன்றியே, (அமரரோடுயர்வில் சென்று) ஆதிவாஹிகரோடே விரஜையிலே சென்று. (அறுவர் தம் பிறவியஞ்சிறையே) ஸூக்ஷ்ம சரீர விதூநநம் பெறுவர். "த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி" என்று அருளிச்செய்த அதுவே பலமாகக்கடவது.

விளக்கம் – (அவற்றினுளிவை பத்தும்) – பெரியதிருமொழி (6-1-2) - விண்ணவரமுதுண்ண அமுதில் வரும் பெண்ணமுதுண்ட - என்பதற்கு ஏற்ப ஆயிரம் திருவாய்மொழிகளில் இந்தத் திருவாய்மொழி சுவை நிறைந்ததாக இருக்கும். இவற்றைப் பொருளுடன் கற்க வல்லவர்கள் நித்யசூரிகளுடன் ஒத்த உயர்வை அடைந்தவர்களாக, தங்களது பிறவி என்னும் விலங்கு நீங்கப்பெறுவர். இந்தப் பத்துப் பாசுரங்களை கற்றவுடன் அவனை நித்யசூரிகளில் ஒருவனாக நினைப்பர், அதன் பின்னர் சரீரத்தில் இருந்து பிரிவு உண்டானவுடன் அவர்களிடமே போய்ச்சேருவான்; சிறையிலிருந்து மீட்கப்பட்ட ராஜகுமாரனின் தலையில் முதலில் மணிமகுடத்தை வைத்துவிட்டு, அதன் பின்னர் சிறையில் இருந்து வெளியே கொண்டு வருவது போன்று, நித்யசூரிகளின் வரிசையை முதலில் அளித்துவிட்டு, அதன் பின்னர் ஸம்ஸாரம் என்ற சிறையை ஸர்வேச்வரன் கழிப்பான். அல்லது அரசன் ஒருவனுக்கு ஒரு நாடு கிட்டினால், அவன் முறைப்படி அந்த நாட்டுக்குச் செல்வது உறுதி என்பது போன்று, இவனும் பரமபதம் செல்வான். அல்லது (அமரரோடுயர்வில் சென்று), அழைத்துச் செல்பவர்கள் பின்னே சென்று, விரஜா நதியை அடைந்து, (அறுவர் தம் பிறவியஞ்சிறையே) - ஸூக்ஷ்ம சரீரமும் நீங்கப்பெறுவர். கீதையில் (4-9) - த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி - என்னை அறிபவன் இந்தச் சரீரத்தை விட்டு வேறு சரீரம் எடுக்காமல் என்னையே அடைகிறான் - என்பதைக் காண்க.

வ்யாக்யானம் - முதற்பாட்டில் சுலபனென்றார்; இரண்டாம் பாட்டில் - கீழ் ப்ரஸ்துதமான ஸௌலப்யத்தை ஸப்ரகாரமாக அருளிச்செய்தார்; மூன்றாம்பாட்டில் – அவனுடைய அவதார ரஹஸ்யம் ஒருவருக்கும் அறிய நிலமல்ல என்றார். நாலாம்பாட்டில் - அப்படிகள்தான் ஆச்ரிதர்க்கு அறியலாம், அநாச்ரிதர்க்கு அறியப்போகாது என்றார்; அஞ்சாம்பாட்டில் – இப்படிப்பட்டவனை அவன் அருளிச்செய்த பக்திமார்க்கத்தாலே ஆச்ரயியுங்கோள் என்கிறார்; ஆறாம் பாட்டில் – ஆச்ரயணீய வஸ்து இன்னதென்றும், ஆச்ரயிக்கும் ப்ரகாரம் இன்னதென்றும் அருளிச்செய்தார். ஏழாம் பாட்டில் – நீங்கள் மந்தாயுஸ்ஸுக்களாகையாலே விளம்பிக்கவொண்ணாது, கடுக ஆச்ரயிங்கோள் என்றார்; எட்டாம் பாட்டில் – ஆச்ரயிக்கவே விரோதிகளடங்கலும் நசிக்கும் என்றார்; ஒன்பதாம்

பாட்டில் – ப்ரஹ்ம்மேசாநாதிகளுக்கும் காரணபூதனானவன் வந்து அவதரிக்கைக்கு ஹேது அருளிச்செய்தார்; பத்தாம் பாட்டில் - இப்படி ஸுலபனானவனை த்ரிவித கரணங்களாலும் அநுபவிக்கப் பாரித்தார்; இத்தை அப்யஸித்தார்க்குப் பலம் சொன்னார் நிகமத்தில்.

விளக்கம் - முதல் பாட்டில் மிகவும் எளியவன் என்றார். இரண்டாம் பாசுரத்தில் - இந்த ஸௌலப்யத்தை வகைப்படுத்தி அருளிச்செய்தார். மூன்றாம் பாட்டில், அவனுடைய அவதார ரஹஸ்யத்தை யாரும் எளிதாக அறியஇயலாது என்றார். நான்காம் பாசுரத்தில் – அந்தத் தன்மைகள் அவனது அடியார்க்கு மட்டும் அறியும்படியாகவும், அல்லாதவர்களுக்கு அறிய இயலாதபடியும் உள்ளனர். ஐந்தாம் பாசுரத்தில், இப்படிப்பட்டவனை அவன் அருளிச்செய்த பக்தி மார்க்கத்தின் மூலம் அடைவீர் என்றார். ஆறாம் பாசுரத்தில் அடையதக்க பொருள் இன்னது என்றார். ஏழாம் பாசுரத்தில் – அவனை விரைவாகச் சென்று அடையும்படி அருளிச்செய்தார். எட்டாம் பாசுரத்தில், அவனை அடைந்தவுடன் விரோதிகள் அடங்கி அழிந்துவிடுவர் என்றார். ஒன்பதாம் பாசுரத்தில் நான்முகன், சிவன் ஆகியோருக்குக் காரணமாக உள்ள அவன் அவதாரம் செய்வதற்கு என்ன காரணம் என்று அருளிச்செய்தார். பத்தாம் பாசுரத்தில் இப்படி எளிமையான அவனை வாக்கு, மனம் மற்றும் உடல் ஆகியவற்றால் அனுபவிக்கும்படியையும் அருளிச்செய்தார். இப்படியாக இறுதியில் இந்தத் திருவாய்மொழியைக் கற்பவர்களுக்கு பலன் அருளிசெய்தார்.

முதற்பத்து மூன்றாம் திருவாய்மொழி ஸம்பூர்ணம்

முதற்பத்து நான்காம் திருவாய்மொழி
அஞ்சிறைய ப்ரவேசம்

வ்யாக்யானம் - பரத்வத்தையும், பஜநீயதையையும், ஸௌலப்யத்தையும் அநுபவித்து ஹ்ருஷ்டராய்த் தாமாய்ப் பேசினார் கீழ்; இதில், தாமான தன்மை அழிந்து ஒரு பிராட்டி தசையை ப்ராப்தராய், ஹர்ஷத்தாலே சொல்லும் பாசுரம் போய் ஆற்றாமையாலே சொல்லும் பாசுரமாய்ச் செல்லுகிறது; "அயமபர: காரகநியம:" என்னுமாபோலே கீழ்ப்போந்த ரீதியொழிய வேறொன்றாயிறே இருக்கிறது.

முற்காலத்திலே அல்பம் விவக்ஷிதனாயிருப்பான் ஒருவன் "வீதராகராயிருப்பார் பரிக்ரஹித்துப் போருகிறதொன்றாய் இருந்தது; தத்வபரமாக அடுக்கும்" என்று இத்திருவாய்மொழியளவும் வர அதிகரித்து, இத்திருவாய்மொழியளவிலே வந்தவாறே

"இது காமுகவாக்யமாயிருந்ததீ" என்று கைவிட்டுப்போனானாம்; "நிதித்யாஸிதவ்ய:" என்று விதிக்கிற பகவத்காமமென்று அறிந்திலன் பாக்யஹாநியாலே.

"அயர்ப்பிலன் அலற்றுவன் தழுவுவன் வணங்குவன்" என்ற இது "அநுபவிக்கிறார்" என்று பிள்ளான் பணிக்கும் என்ற இது, இவருக்கு முனியே நான்முகனளவுமுள்ளது மாநஸாநுபவமாகையாலே அத்தோடே சேர விழுமிறே; "அநுபவிக்கப் பாரிக்கிறார்" என்கிறவிடம், இத்தோடே போரச் சேர்ந்திருக்கும். திருவுலகளந்தருளினவனுடைய திருவடிகளை அநுபவிப்பதாக ஒருப்பட்டுக் கட்டிக்கொண்டார். அது ஒரு கால விசேஷத்திலேயாய், தாம் பிற்பாடராய்த் தோற்றுகையாலே, துணுக்கென்று தாமான தன்மை அழிந்து, ஒரு பிராட்டி தசையை ப்ராப்தராய், ஹர்ஷத்தாலே சொல்லும் பாசுரம் போய், ஆற்றாமையாலே சொல்லும் பாசுரமாய்விட்டது.

விளக்கம் - ஸர்வேச்வரனின் முதன்மை, அவனை வணங்கும் தன்மை, அவனுடைய எளிமை ஆகியவற்றை அனுபவித்து மகிழ்ந்து தானாகவே கீழே கூறினார். இந்தத் திருவாய்மொழியில் தானான தன்மை எனப்படும் புருஷபாவம் நீங்கியவராக, நாயகி பாவத்தை அடைந்தவராக, மகிழ்ச்சியில் கூறுகின்ற நிலைமை மாறி, விரஹம் ஏற்பட்டவராக அருளிச்செய்கிறார். அயமபர: காரகநியம: - இது மற்றோரு காரகம் – என்பது போன்று மேலே கூறப்பட்ட நிலைமை வேறு என்று அறியவேண்டும்.

முன்பு ஒரு காலத்தில் அறிவு குறைந்த ஒருவன், "பற்று நீங்கிய ஞானிகளும் ஓதும்படியாக உள்ளது, உண்மையான பொருளை உள்ளது உள்ளபடி உரைப்பதாக உள்ளது" என்று பலரும் கூறுவதைக் கேட்டு, திருவாய்மொழியைப் பாடம் கேட்டான். இந்த நான்காம் திருவாய்மொழியைக் கற்கும்போது, "இது என்ன, காமம் நிறைந்தவைகள் கூறுவது போன்று உள்ளதே", என்று கூறி கற்காமல் சென்றானாம். அவன் நல்வினை இல்லாதவன் என்பதால், ப்ருஹத் உபநிஷத் – நிதித்யாஸிதவ்ய: - இறைவன் கேட்கத்தக்கவன் – என்று விதிக்கும் பகவத் காமம் பற்றி அறியாதவன் ஆனான்.

திருவாய்மொழி (1-3-10) - அயர்ப்பிலன் அலற்றுவன் தழுவுவன் வணங்குவன் – என்பதற்கு மனம், வாக்கு ஆகியவற்றால் அனுபவிக்க எண்ணுகிறார் - என்று நஞ்ஜீயர் அருளிச்செய்த பொருள், அதற்கு அடுத்த திருவாய்மொழிக்குப் பொருந்தும். "அனுபவிக்கிறார்" என்று திருக்குருகைப்பிரான்பிள்ளான் அருளிச்செய்த பொருளானது, இவ்வாழ்வாருக்கு "முனியே நான்முகனே" என்ற திருவாய்மொழி வரை உள்ளது மானஸ அனுபவம் என்பதால், அதற்குப் பொருந்தும். என்றாலும் இந்தத் திருவாய்மொழியைப்

பிரிவுத்துன்பம் காரணமாகக் கூறப்படும் பாசுரம் என்று உரைப்பதற்குக் காரணம் என்ன? உலகம் அளந்தவனுடைய திருவடிகளை அனுபவிப்பதற்காக ஈடுபட்டுக் கட்டிக் கொண்டார்; அவன் ஏதோ ஒரு காலத்தில் அதனைச் செய்ததையும், தான் காலத்தால் பிற்பட்டவர் என்று தோன்றியதாலேயும், பயம் காரணமாக புருஷபாவம் அழிந்து, நாயகி பாவத்தை அடைந்தவராய், மகிழ்ச்சியால் பாசுரம் உரைக்கின்ற நிலைமாறி, பிரிவுத்துன்பம் கூறும் பாசுரமாகிவிட்டது என்று கருத்து.

வ்யாக்யானம் – "ஆர்த்தோ வா யதி வா த்ருபத:" என்கிற விஷயத்தை அநுபவித்த இவர்க்கு இழவு வருகைக்கு ப்ரஸங்கம் என்னென்னில்; "ஆமத்திற்சோறு பாதகம்" என்னுமத்தாலே நிதாநஜ்ஞாரன பிஷக்குகள் போஜந நிரோதம் பண்ணுமாபோலே, மேல் வரும் அநுபவங்கள் ஸாத்மிக்கைக்காக நாலடி பேர நின்றான்; மருத்துவனாய் நின்ற மாமணிவண்ணனிறே.

அநந்தரம் கலங்கினார். மயர்வற மதிநலம் அருளப்பெற்றவரிறே இப்படி கலங்கினார். அவன்தானே கொடுத்த அறிவும் விச்லேஷத்தில் அகிஞ்சித்கரமாம்படியிறே அவனுடைய வைலக்ஷண்யம்; "தத் தஸ்ய ஸத்ருசம் பவேத்" என்றிருந்தவள்தானே வேண்யுத்க்ரதநாதிகளிலே ஒருப்பட்டாளிறே. "ஹம்ஸகாரண்ட வாகீர்ணாம் வந்தே கோதவரீம் நதீம்" என்றும், "அசோக சோகாபநுத சோகோபஹத்சேதஸம்" என்றுமிறே இவர்கள் வார்த்தையும்.

பிராட்டிமார் தசைதான் உண்டாகிறபடி எங்ஙனேயென்னில்; அநந்யார்ஹ சேஷத்வத்தாலும், அநந்யசரணத்வத்தாலும், அந்வயத்தில் தரித்து, வ்யதிரேகத்தில் தரியாதொழிகையாலும், ததேகபோகராகையாலும், அவன் நிர்வாஹகனாக இத்தலை நிர்வாஹ்யமாகையாலும், பிராட்டிமார் தசை உண்டாகத் தட்டில்லை. ஆனால் பிராட்டிதானாகப் பேசுவானென் என்னில்; தாமரை, திருவடிகளுக்குப் போலியாயிருக்க, "வையங்கொண்ட தடந்தாமரை" என்று தாமரையாகவே திருவடிகளைப் பேசுகிறாப்போலே, இங்கு பிராட்டியாகப் பேசுகிறது; முற்றுவமையிருக்கிறபடி.

ராஜர்ஷி, ப்ரஹ்மர்ஷியான பின்பு க்ஷத்ரியத்வம் பின்னாட்டிற்றில்லையிறே; எதிர்த்தலையில் பும்ஸ்த்வத்தை அழித்துப் பெண்ணுடை உடுத்தும்படியிறே அவனுடைய புருஷோத்தமத்வம் இருப்பது.

விளக்கம் - ஆனால் இராமாயணம் யுத்தகாண்டம் - ஆர்த்தோ வா யதி வா த்ருபத: - என்னைச் சரணம் அடைந்த பகைவன் ஆர்த்தன் என்றாலும், த்ருப்தன் என்றாலும் காக்கப்பட வேண்டியவன் - என்று கூறிய ஸர்வேச்வரனை அனுபவித்த இவருக்கு, அவனைப் பிரிந்த துன்பம் உண்டாவதற்குக் காரணம் என்ன? பசி இல்லாதபோது உண்ணப்படும் உணவானது அஜீர்ணத்தை உண்டாக்கும் என்பதால், அந்த உண்மையை அறிந்த மருந்துவர்கள் உணவைத் தள்ளுவது போன்று, இனி வரக்கூடிய அனுபவங்களை இவர் பொறுத்துக் கொள்ளுவதற்காக இவரை விட்டு நான்கு அடி தள்ளியே நின்றான். பெரியாழ்வார் திருமொழி (5-3-6) – மருத்துவனாய் - என்பதற்கு ஏற்ப இவன் அல்லவோ மருந்துவன்?

ஆயினும் இவர் ஏன் கலங்கினார்? மயர்வற மதிநலம் அருளப்பெற்றவர் என்பதால் கலங்குகிறார். அவன் தானாகவே ஞானத்தைக் கொடுத்தாலும், அந்த ஞானமானது அவனைப் பிரிகின்ற காலத்தில் பயன் இல்லாது போவது போன்று அல்லவோ அவன் மேன்மை உள்ளது? இராமாயணம் ஸுந்தரகாண்டம் – தத் தஸ்ய ஸத்ருசம் பவேத் – இராமனே வந்து என்னை மீட்டுச் செல்வான் என்றால் அந்தச் செயலே அவனுக்கு ஏற்றது - என்று கூறிய சீதைதான், அவனைப் பிரிந்து இருக்க இயலாமல், தனது சடையைக் கொண்டு தூக்கில் இட்டு இறக்க நினைத்தாள் என்பதை இங்கு சிந்திக்கவேண்டும். ஆனால் பறவைகளைத் தூதுவிடுதல் ஏற்றதோ என்பதற்கு விடை அளிக்கிறார். இராமாயணம் ஆரண்யகாண்டம் (49-39) - ஹம்ஸகாரண்ட வாகீர்ணாம் வந்தே கோதவரீம் நதீம் - அன்னப்பறவைகளும் நீர்காலங்களும் நிறைந்த கோதாவரியே உண்னை வணங்குகிறேன் – என்று சீதையும், இராமாயணம் ஆரண்யகாண்டம் (6-17) - அசோக சோகாபநுத சோகோபஹத்சேதஸம் - சோகத்தை விளக்குவதை இயல்பாக கொண்ட அசோக மரமே - என்று இராமனும் கூறுவது காண்க. ஆக தூது விடுதல் என்பது மரபே ஆகும்.

ஆயினும் பிராட்டிமார்களின் நிலை ஆழ்வாருக்கு உண்டாவது எப்படி என்று கேள்விக்கு விடை அளிக்கிறார். மற்ற யாருக்கும் அடிமையாகாமல் அவனுக்கு மட்டுமே அடிமையாக இருத்தல் (அநந்யார்ஹ சேஷத்வம்), ஸர்வேச்வரனுடைய திருவடிகளை மட்டுமே சரணம் என்று பற்றி இருத்தல் (அநந்ய சரணத்வம்), அவனுடன் கூடி இருக்கும்போது மட்டுமே உயிர் பிழைத்தல், அவனைப் பிரியும்போது பொறுத்துக் கொள்ளமுடியாமல் இருத்தல், அவன் காப்பாற்றுபவனாகவும் தான் காப்பாற்றப்படும் பொருளாக இருத்தல் போன்ற பல தன்மைகள் ஆழ்வாருக்கும் உண்டு என்பதால், ஆழ்வாருக்குப் பிராட்டியின் நிலை

ஏற்பட்டது. ஆனால் பிராட்டி தானாகப் பேசுவது எப்படி என்றால், திருவடிகளுக்குத் தாமரை உவமையாக இருக்க, திருவாய்மொழி (6-9-9) - வையம் கொண்ட தடந்தாமரை - என்று தாமரையாகவே திருவடிகள் கூறப்படுவது போன்று பிராட்டியாகப் பேசுகிறாள்.

ஆனாலும் இவர் ஆண் என்பதால் ஆண் தன்மை இவரிடம் கலவாமல் இருந்தது எப்படி என்ற கேள்விக்கு விடை அளிக்கிறார். விச்வாமித்ரர், ராஜரிஷி ஆன பின்னர் அரசனின் தன்மை அவருக்கு ஏற்படவில்லை. தனது எதிரில் நிற்பவர்களும், தன்னிடம் ஈடுபட்டவர்களும் ஆண்களாக இருந்தாலும், அவர்கள் அந்த நிலையை மறந்து பெண்களுக்கு ஏற்ற உடையை அணிவதற்குத் தயாராக நிற்பவர்கள் என்று சொல்லும்படியாக அல்லவா அவனது புருஷத்தன்மை உள்ளது? எனவே இவருக்கு மீண்டும் ஆண் தன்மை வராது.

வ்யாக்யானம் - கூடுமிடம் – குறிஞ்சி, அதுக்கு பூதம் ஆகாசம்; பிரியுமிடம் – பாலை, அதுக்கு பூதம் தேஜஸ்ஸு; ஊடலுக்கு ஸ்தாநம் – மருதம், அதுக்கு பூதம் வாயு; பிரிந்தார் இரங்குமிடம் – நெய்தல், அதுக்கு பூதம் ஜலம். பிரிந்தார் இரங்குவது நெய்தல் நிலத்திலே ஆகையாலே – பிராட்டி, தானும் தன் பரிகரமுமாக லீலோத்யாநத்திலே புறப்பட்டாளாய், தோழிமார் பூக்கொய்கையிலே அந்யபரைகளாக, நாயகனும் தன்னோராயிரம் பிள்ளைகளும் தானுமாக வேட்டைக்குப் புறப்பட்டு வர, ஏவுண்ட ம்ருகம், இவனை இந்த உத்யாநத்திலே தனியே கொண்டுவந்து மூட்டி, அது மறைய, தைவயோகத்தாலே இருவருக்கும் ஸம்ச்லேஷம் ப்ரவ்ருத்தமாய், கூட்டின தைவம் பிரிக்கப் பிரிந்து, "இனி இரண்டு தலையையும் அழித்தாகிலும் கிட்டவேணும்" என்னும் ஆற்றாமை பிறந்து, தன் பரிஸரத்திலுள்ளார் "எம்மில் முன் அவனுக்கு மாய்வர்" என்கிறபடியே தளர்ந்து, கால்நடை தருவாரில்லாமையாலே அப்பரிஸரத்திலே வர்த்திக்கிற சில திர்யக்குக்களைப் பார்த்து, "இவை வார்த்தை சொல்லமாட்டாது" என்னுமதறியாதே "இவற்றுக்குப் பக்ஷபாதம் உண்டாயிருந்ததாகையாலே கடுகப்போய் நம் கார்யம் செய்யவற்று" என்று கமநஸாதநமான பக்ஷபாதமே பற்றாசாக, ராவண மாயையால் வரும் அதிசங்கையுமில்லாமையாலே கண்ணால் கண்டவற்றையெல்லாம் தூதுவிடுகிறாள். "சக்ரவர்த்தித்திருமகன் திருவவதரித்தபின்பு வாநரஜாதி வீறுபெற்றாப்போலே காணும் ஆழ்வார்கள் திருவவதரித்து திர்யக்ஜாதி வீறுபெற்றபடி" என்று பட்டர் அருளிச்செய்வர்.

விளக்கம் - ஆயினும் அந்தப்புரத்தில் வசிக்கின்ற இந்தப் பிராட்டிக்கு பறவைகள் ஏது என்று கேள்வி எழலாம். இதற்கு விடை அளிக்கிறார். கூடுவதற்கு ஏற்ற இடம் குறிஞ்சி, அதற்கான பூதம் ஆகாயம்; பிரிவதற்கான இடம் பாலை, அதற்கான பூதம் நெருப்பு; ஊடலுக்கு ஏற்ற இடம் மருதம், அதற்கான பூதம் நீர் என்பது மரபு. இப்படியாகப் பிரிந்தவர்களுக்கு ஏற்ற இடம் நெய்தல் என்பதால், இந்தப் பிராட்டியானவள் தனது தோழிகளுடன் அந்தப்புரத்தில் உள்ள சோலைக்குப் புறப்பட்டாள். அங்கு சென்றவுடன் தோழிகள் அனைவரும் மலர் கொய்யும்விதமாக இவளைத் தனியே விட்டு, தாங்களும் தனித்தனியே பிரிந்தனர். அப்போது தன்னைப் போன்ற பிறப்பாலும், வளர்ப்பாலும், வயாதாலும், தோற்றத்தாலும் ஒத்துள்ள ஆயிரம் தோழர்களுடன் நாயகன் வேட்டைக்கு வந்தான். அப்போது இவனால் அம்பு தைக்கப்பட்ட விலங்கானது அந்தத் தோட்டத்திற்குள் வந்து மறைந்தது. இவனையும் அது மற்றவர்களிடமிருந்து பிரித்துத் தனியே கூட்டி வந்துவிட்டது. அதன் பின்னர் அந்த விலங்கு அங்கிருந்த புதர் ஒன்றில் மறைந்தது. அப்போது கடந்த பிறவியின் தொடர்ச்சியாக நாயகிக்கும் நாயகனுக்கும் சேர்க்கை உண்டாக, உடனேயே அப்படிச் சேர்த்த தெய்வம் பிரிந்தது. அப்போது, "நாம் இருவரும் அழிந்தாலும் சேரவேண்டும்", என்ற பிரிவாற்றாமை உண்டானது. அப்போது திருவாய்மொழி (9-9-5) – எம்மில் முன் அவனுக்கு மாய்வர் – என்பதற்கு ஏற்பத் தோழிகளை அவனுக்குத் தூது விட்டால், அவர்கள் அவனிடம் மயங்கி நின்றுவிடுவர் என்று நாயகி தவித்தாள். எனவே அங்கிருந்த சில விலங்குகளை நோக்கியவளாக, "இவை சென்று ஏதும் பேச வல்லவை அல்ல" என்பதை உணராதவளாய், "இந்தப் பறவைகள் பக்ஷபாதம் உள்ளவை என்பதால் விரைவாகச் சென்று நமது செயலை நிறைவேற்றும்", என்று எண்ணினாள் (இங்கு பக்ஷபாதம் என்பது சிலேடையாக உள்ளது: ஒரு தலையாகச் செயல்படுதல், சிறகை அடித்துச்செல்லுதல் என்னும் இரு பொருள் உண்டு; இவள் பக்கம் மட்டுமே அன்புடன் செல்லும் என்பதால் ஒரு தலையாகச் செயல்படுபவை என்றாள்). இப்படியாகப் பறந்து செல்வதற்கான பக்ஷபாதமே காரணமாக, இராவணன் மூலம் ஏற்படுத்தப்பட்ட மாயை போன்று ஏதும் இல்லாதவளாக, கண்ணால் காண்கின்ற அனைத்தையும் தூது விடுகிறாள் (அதாவது இராவணனால் ஏற்படுத்தப்பட்ட மாயமான் போன்று இங்கு ஏதும் இல்லை). "சக்ரவர்த்தித் திருமகனான இராமன் அவதாரம் செய்த பின்னர் வானரங்களுக்குத் தனிப்பெருமை உண்டானது போன்று, ஆழ்வார்கள் அவதரித்து அவர்கள் திருவாய்மொழி மூலமாக விலங்குகளுக்குப் பெருமை உண்டானது", என்று ஸ்வாமி பராசரபட்டர் கூறுவது காண்க.

வ்யாக்யானம் - இனி, இவர்க்கு யாத்ருச்சிக ஸம்ச்லேஷமாவது - அநாதிகாலம் இவரைத் தன்னோடே சேரவிடுகைக்கு அவஸர ப்ரதீக்ஷனாய்ப் போந்தவன் இவர் பக்கலிலே

அப்ரதிஷேதமுண்டாவதொரு அவகாசம் பெற்று, அவன் மயர்வற மதிநலமருளப் பெற்ற இது. இவர்க்கு விச்லேஷமாவது – அவன் கொடுத்த ஜ்ஞாநம் பேற்றோடே தலைக்கட்டப்பெறாமை. தூதுவிடுகைக்குப் பற்றாசுதான் ஏதென்னில்; தன் மேன்மையாலே இத்தலையில் தண்மை பாராதே வந்து கலந்தான்; கிட்டினவாறே தோஷ தர்சநத்தைப் பண்ணினான்; பிரிந்தவளவிலே "இதுவன்றோ இருந்தபடி" என்று அநாதரித்தான்; தோஷதர்சநம் பண்ணுமளவேயன்றிக்கே, தமக்கு அபராத ஸஹத்வம் என்றொரு குணமுண்டு நிரூபகமாயிருப்பதொன்று; அத்தை அறிவிக்க வருமென்று அந்த அபராதஸஹத்வம் பற்றாசாகத் தூதுவிடுகிறாள்.

விளக்கம் - ஆழ்வாருக்குத் தற்செயலாக உண்டான சேர்க்கை என்பது என்ன? எல்லையற்ற காலமாக இவரைத் தன்னுடன் சேர்த்துக் கொள்வதற்குக் காலம் பார்த்து ஸர்வேச்வரன் காத்திருந்தான். இவரிடம் வெறுப்பு இன்மை ஏற்பட்ட நேரம் பார்த்து இவருக்கு அனைத்து ஞானமும் அளித்தான். இதுவே இவருக்கு ஏற்பட்ட சேர்க்கை என்றானது. அப்படி அவன் அளித்த ஞானம் என்பது அவனை அடைதல் என்னும் பேற்றுடன் கூடாமல் இருந்த நிலையே பிரிதல் என்று ஆகிறது. இப்படியாகப் பிரிந்தவன் மீண்டும் வருவான் என்று எண்ணித் தூது விடக் காரணம் என்ன? தனது மேன்மையால் நாயகியின் தன்மைகள் எதனையும் ஆராயாமல் வந்து கலந்தான். அப்படி கலந்த பின்னரே இவளிடம் உள்ள தோஷங்களைக் கண்டான். ஆனால் குற்றங்களைப் பார்ப்பது மட்டுமே அல்லாமல், அத்தகைய குற்றங்களைப் பொறுத்துக்கொள்ளுதல் என்னும் தன்மை அவனிடம் உள்ளது என்பது பலராலும் நிரூபிக்கப்பட்ட ஒன்றாகும்; அதனால் அதனைத் தனக்கும் உலகத்தார்க்கும் உணர்த்தும்விதமாக மீண்டும் வருவான் என்பதைக் காரணமாக்கித் தூது விடுகிறாள்.

ப்ரவேசம் ஸம்பூர்ணம்

1-4-1 அஞ்சிறைய மடநாரா யளியத்தாய் நீயும்நின்
அஞ்சிறைய சேவலுமா யாவாவென் றெனக்கருளி
வெஞ்சிறைப்புள் ளுயர்த்தார்க்கென் விடுதூதாய்ச் சென்றக்கால்
வன் சிறையிலவன் வைக்கில் வைப்புண்டாலென் செய்யுமோ.

பொருள் – அழகான சிறகுகளும் மடப்பமும் கொண்ட நாரையே! தயை அளிக்கவல்ல இரக்க குணம் நிரம்பியவளே! நீயும், அழகான இறகுகள் கொண்டவனாகிய உனது ஆண்

நாயகனான சேவலுமாகச் சேர்ந்து எனது நிலையைக் கண்டு, "ஆகா, அந்தோ" என்று இரக்கம் கொள்ளவேண்டும். இப்படியாக எனக்குத் தயை செய்யும்விதமாக, அழகான இறகுகள் கொண்டவனாகிய கருடனைக் கொடியாகக் கொண்ட எனது நாயகனிடம் தூது செல்வீர்களாக. தூதுவனாகச் சென்றதால் உங்களை அவன் சிறைப்பிடிக்கமாட்டான். அப்படியே அவன் உங்களைச் சிறை வைத்தாலும், அதற்கு ஒப்புக்கொண்டு நீங்கள் அங்கேயே இருந்தால் உங்களுக்கு என்ன குறை ஏற்படப்போகிறது?

அவதாரிகை - தன் பரிஸரத்திலே வர்த்திப்பதொரு நாரையைப் பார்த்து, "என்றும் சேவலைக் கார்யம் கொள்ளுவார் பேடையை முன்னாகக் கார்யங்கொள்ளவேணும்" என்றிருக்கும் தம் வாஸநையாலே பேடையை முன்னிட்டுச் சேவலைப் பற்றி, நீ என் தசையை அறிவித்து என்னையும் அவனையும் சேர்க்கவேணும் என்கிறாள்.

விளக்கம் - தன்னுடைய இருப்பிடத்தில் உள்ள ஒரு நாரையை நோக்கிக் கூறுகிறாள். ஏன் சேவலிடம் கூறாமல் பெண் பறவையிடம் கூறுகிறாள்? பகவத்விஷயம் போன்று ஆசார்ய விஷயத்திலும் புருஷகாரம் என்பது அவசியம் என்ற காரணத்தினால் ஆகும். அதாவது "சேவலைத் தங்கள் கார்யத்திற்குப் பயன்படுத்த எண்ணுவோர் முதலில் பெண் பறவையைப் பிடிக்கவேண்டும்" என்பதற்கு ஏற்ப ஆகும். ஆகவே இவள் புருஷகாரம் பற்றி நன்கு உணர்ந்தவள் என்பதால் பேடையை முன்னிட்டு சேவலைப் பற்றி, "நீ சென்று எனது நிலைமையை உணர்த்தி, என்னையும் அவனையும் சேர்க்க உதவவேண்டும்", என்கிறாள்.

வ்யாக்யானம் - (அஞ்சிறைய) ப்ரஜை, தாயினுடைய அவயவங்களெல்லாம் கிடக்க முலையிலே வாய் வைக்குமாபோலே கமந ஸாதநமான சிறகிலேயாயிற்று முற்படக் கண் வைத்தது. நீர் பாய்ந்த பயிர்போலே பரஸ்பர ஸம்ச்லேஷத்தால் பிறந்த ஹர்ஷம் வடிவிலே தொடைகொள்ளலாம்படியிராநின்றது. சிறையென்று – சிறகு. ஆசார்யன் ஜ்ஞாநத்தை அநுமித்து சிஷ்யன் உபஸத்தி பண்ணுமாபோலே, சிறகிலே கண் வைக்கிறாள். (மட) ஏவிக் கார்யம் கொள்ளலாம்படி பவ்யதை தோற்ற இருந்தது. ஸம்ச்லேஷத்தாலே துவண்டு தூதுபோகைக்கு யோக்யமாம்படி இருக்கை. நாண், மடம், அச்சமென்று – ஸ்த்ரீத்வமாய், பிரிவில் வ்யஸநமறியும் தன் இனமான பேடையைப் பார்த்துச் சொல்லுகிறாள் என்றுமாம். (நாராய்) "அம்மே!" என்னுமாபோலே. (அளியத்தாய்) அவன் பொகட்டுப்போன ஸமயத்திலே ஆற்றாமை அறிவிக்கலாம்படி வந்து முகங்காட்டின

அநுக்ரஹ சீலதை இருந்தபடியென்; அளி - க்ருபை; க்ருபை பண்ணத்தக்கதாய் என்றபடி. "பம்பாதீரே ஹநுமதா ஸங்கத:" போலே; வழிபறிப்பார் கையிலே அகப்பட்டு நிற்க, தாய்முகத்திலே விழித்தாற்போலே. (நீயும்) "ஸ ப்ராதுச்சரணௌ காடம் நிபீட்ய ரகுநந்தந:, ஸீதாமுவாச" என்கிறபடியே – என்றும் சேவலைக் கார்யம் கொள்ளுவார் பேடையை முன்னிட்டுப்போலே காணும் கார்யம் கொள்வது. (நின்னஞ்சிறைய சேவலுமாய்) பேடையையிட்டாயிற்று சேவலின்பக்கல் ப்ரதிபத்தி; "ஸ்ரீய:பதி" என்னுமாபோலே. (நின்னஞ்சிறைய சேவலுமாய்) "பெண்ணணைந்த வடிவு" என்று தோற்றாநின்றதாயிற்று. அது இட்டவழக்கான நீயும், நீ இட்டவழக்கான சேவலுமாய். (ஆவாவென்று) "ஐயோ! ஐயோ!" என்று. மிதுநமாயிருக்கிறது - தன் ஆர்த்தி பரிஹரிக்கைக்கு என்றிருக்கிறாள். (எனக்கு) "ஏஹி பச்ய சரீராணி" என்று விரஹம் தின்ற தன் வடிவைக்காட்டுகிறாள். அவனோடே கலந்து பிரிந்து, "கண்ணாலே காணப்பெறுவது காண்" என்னும் அபேக்ஷையோடே இருக்கிற எனக்கு. (அருளி) இரப்புக்குச் செய்ததாகையன்றிக்கே உங்கள் பேறாக அருளி; தயை பண்ணுகைக்கு அத்தலை குறைவற்றாப் போலேயன்றோ தயாவிஷயமான இத்தலை குறைவற்றபடி. பகவத்விஷயத்திலும் உபகரிப்பார் ப்ரத்யுபகாரத்துக்கல்ல உபகரிப்பது; தங்கள் க்ருபையாலேயாயிற்று; உபயவிபூதி யுக்தனை அவர்கள் உபகரித்தால், அவனுக்கு ஸத்ருசமாக உபகரிக்கலாவதில்லையே இவனுக்கு. "விக்ராந்தஸ்த்வம் ஸமர்த்தஸ்தவம் ப்ராஜ்ஞஸ்த்வம் வாநரோத்தம" என்றாற் போலேயிறே இவள் இவற்றை ச்லாகித்தது.

விளக்கம் - (அஞ்சிறைய) - நாரையிடம் பல அழகான உறுப்புகள் உள்ளபோது சிறகை முதலில் ஏன் கூறவேண்டும்? சிறு குழந்தைகள் தங்களது தாயின் மற்ற அவயவங்கள் அனைத்தையும் தள்ளி, ஸ்தனங்களில் வாய்வைத்துப் பால் பருகுவது போன்று, பறப்பதற்கு உதவுகின்றதான சிறகை முதலில் கண்டாள். நீர் பாய்ந்த வயலானது மகிழ்ந்தபடி உள்ளது போன்று, சேவலுடன் கூடி நிற்கின்ற காரணத்தால் உண்டான மகிழ்ச்சி நாரையின் அழகிலே தெரிகிறது என்பதை உணர்த்த "அம்சிறை" என்றாள். சிறை என்றால் சிறகு. இது ஆசார்யனின் ஞானம் மற்றும் கர்மங்களைக் குறிக்கும். ஆசார்யனின் ஞானத்தைக் கருத்தில் கொண்டு சிஷ்யன் வணங்கி நிற்பது போன்று இவள் சிறகில் கண் வைத்தாள். இங்கு ஆசார்யன் = சேவல். (மட) – ஆசார்யனின் தயை போன்ற குணங்கள். நியமித்துக் கார்யத்தைச் சாதித்துக் கொள்ளலாம் என்னும்படியாக நின்ற நாரை. சேவலுடன் ஏற்பட்ட புணர்ச்சி காரணமாகத் துவண்டு போன சரீரம் கொண்டதால், தூது போக சகல அதிகாரமும் கொண்டபடி இருந்தல். நாணம், ஒடுக்கம், அச்சம் போன்றதான

பெண்களுக்கே உரிய குணங்களை எண்ணியவளாய், இங்கு மடப்பத்தை மட்டுமே உரைக்கிறாள். பிரிவு என்பதன் துன்பத்தை அறியவல்லதான தனது பெண் இனமான நாரையைப் பார்த்து உரைக்கிறாள். (நாராய்) – குழந்தையானது "அம்மா" என்று அழைப்பது போன்று இவளும் அழைக்கிறாள். (அளியத்தாய்) – அவன் என்னை விட்டு அகன்று சென்ற பின்னர் எனக்கு உண்டான பிரிவுத்துன்பத்தை வேறு யாரிடமாவது கூறி ஆறுதல் தேடிக்கொள்ளலாம் என்று எண்ணியபோது அல்லது பிரிவுத்துன்பத்தை அவனிடம் எப்படிச் சென்று தெரிவிப்பது என்று எண்ணியபோது நீ வந்து நிற்கிறாய். என்னே உனது அருளின் தன்மை? அளி என்றால் க்ருபை அல்லது அருள் என்று பொருள். எனக்கு அருள் செய்யத்தக்க தகுதியை நீ கொண்டுள்ளாய். இவள் நாரையைச் சந்தித்தது எப்படி இருந்தது என்றால் இராமாயணம் - பம்பாதீரே ஹநுமதா ஸங்கத: - பம்பையின் நதிக்கரையில் இராமன் அனுமானைச் சந்தித்தான் – என்பது போன்று இருந்தது. இவர்களது சந்திப்பு எப்படி இருந்தது என்று அருளிச்செய்கிறார். வழிபறிப்பாற் என்றால் பிராட்டியின் கண்ணிற்கும் முகத்திற்கும் உவமையாகக் கூறும்படி இருக்கின்ற செங்கழுநீர் மற்றும் தாமரை ஆகும். அவற்றைக் கண்டவுடன் மனம் பதறி நிற்கும்போது அவனே முன்னே வந்து நின்றது போல் இருந்தது என்கிறார். (நீயும்) – இராமாயணம் – ஸ ப்ராதுச்சரணௌ காடம் நிபீட்ய ரகுநந்தந:, ஸீதாமுவாச - தனது தமையனின் திருவடிகள் இரண்டையும் பிரித்தவனாகச் சீதையின் முன்னே லக்ஷ்மணன் உரைத்தான் - என்று கூறும்படியாக, சேவலைத் தனது செயலுக்கு உபயோகப்படுத்திக் கொள்வதற்காகப் பேடையை முதலில் காண்பர் என்றார். (நின்னஞ்சிறைய சேவலுமாய்) - பேடை மூலம் அல்லவோ சேவலின் மீது விச்வாசம் ஏற்படும். "ஸ்ரீய:பதி" என்று அவளை முன்னிட்டு அவனைப் பிடிப்பது போன்று எனக்கொள்க. (நின்னஞ்சிறைய சேவலுமாய்) – பெண்ணை அணைத்தபடி நின்றதால் உண்டான அழகு வெளிப்பட்டதால் "அஞ்சிறை" என்கிறார். எனது பிரிவாற்றாமையை வெளிப்படுத்த வந்த காரணத்தால் நீ அழகாகத் தோன்றுகிறாய், உன்னுடன் உள்ள காரணத்தால் சேவலும் அழகாகத் தோன்றுகிறது. (ஆவாவென்று) - "அந்தோ" என்று. இப்படி இரண்டுமாகச் சேர்ந்திருப்பதே தனது துக்கம் நீங்குவதற்கான பரிகாரம் என்கிறாள். (எனக்கு) - இராமாயணம் – ஏஹி பச்ய சரீராணி – அரக்கர்களால் துன்பப்படுத்தப்பட்ட தங்கள் சரீரங்களை முனிவர்கள் இராமனிடம் காண்பித்தனர் - என்பது போன்று விரஹதாபத்தால் தவிக்கும் தனது சரீரத்தைக் நாரையிடம் காண்பித்தாள். அவனுடன் முதலில் சேர்ந்திருந்து தற்போது பிரிந்து "கண்ணால் காண்பது எப்போதோ" என்ற விருப்பத்துடன் கூடியுள்ள எனக்கு. (அருளி) - இந்த உதவியை என் மீது கொள்ளும் இரக்கம் என்பதற்காகச் செய்யவேண்டாம், இந்த உதவி உங்களுக்குக் கிட்டக்கூடிய பேறு என்று எண்ணிச் செய்யவேண்டும். இப்படியாக என் மீது தயை காண்பிப்பதால் உங்களுக்கும் எந்தவிதமான குறையும் இல்லை, எனக்கும் குறையில்லை. இங்கு குறை அல்லது தோஷம் என்பது என்ன? நாரையின்

பக்கம் தோஷம் இல்லை எனறால் ஜோடியாக அவை உள்ளன என்பதாகும்; நாயகி பக்கம் தோஷம் இல்லை என்றால் ஆகிஞ்சந்யம் – கைம்முதல் இல்லாமை, அநந்யகதித்வம் – வேறு உபாயம் இல்லாமை போன்ற தகுதிகள் ஆகும். பகவத் விஷயத்தில் உபகாரம் செய்பவர்கள் எந்த ப்ரதிபலனும் எதிர்பார்க்கமாட்டார்கள். அவர்கள் அவ்விதம் உதவி செய்வது அவர்களுடைய க்ருபை காரணமாகவே ஆகும். நித்யவிபூதி மற்றும் லீலாவிபூதி ஆகிய இரண்டும் கொண்ட அவனுக்கு உதவி செய்யும்போது அவனுக்கு ஒத்த பொருளை இவர்களுக்கு மீண்டும் அளிக்க அவனிடம் வேறு பொருள் இல்லை என்பதால் ஆகும். நாரையை இவள் ஏன் கொண்டாடவேண்டும்? இராமாயணம் – விக்ராந்தஸ்த்வம் ஸமர்த்தஸ்தவம் ப்ராஜ்ஞஸ்த்வம் வாநரோத்தம - வானரர்களில் உத்தமனே! நீ மிகுந்த ஆற்றலும் அறிவும் உள்ளவன் – என்று சீதை புகழ்ந்தது போன்று இவளும் புகழ்ந்தாள்.

வ்யாக்யானம் - எங்களை இங்ஙன் கொண்டாடுகிறதென்? உன் தசையைக் கண்டு பொகட்டும் போனவன் எங்கள் வார்த்தை கேட்கப் புகாநின்றானோ? இனித்தான் "நிரஞ்ஜந பரமம் ஸாம்யமுபைதி" என்கிறபடியே அங்குள்ளார் பரம ஸாம்யாபந்நராயன்றோ இருப்பது. நாங்கள் அவனுக்கும் அவர்களுக்கும் வாசியறியும்படி என் என்றன்றோ நாங்களிருப்பது - என்று அவற்றுக்குக் கருத்தாக, மேல் வார்த்தை சொல்லுகிறாள். (வெஞ்சிறைப் புள்ளுயர்த்தார்க்கு) அவர்கள் பரம ஸாம்யாபந்நராய் இருக்கையாலே, தனக்கு வ்யாவர்த்தக விசேஷணமாகப் பெரியதிருவடியை த்வஜமாக உடையனாயிருக்கும்; விரோதியைப் போக்கிக்கொண்டு வருகைக்கு அங்கே நமக்கு ஆள் உண்டென்கிறாளாதல்; நிர்தயமாகப் பிரித்துக் கொண்டு போகையாலே, "அக்ரூர க்ரூரஹ்ருதய:" என்னுமாபோலே சொல்லுகிறாளாதல். (புள்ளுயர்த்தார்க்கு) புள்ளாலே வஹிக்கப்பட்டவர் என்னுதல்; புள்ளை த்வஜமாக உடையவர் என்னுதல். (என் விடு தூதாய்) அவன் ஆள் வரவிட இருக்கக்கடவ நானன்றோ விடுகிறேன்.

விளக்கம் – இவள் இப்படியாகப் புகழ்வதைக் கேட்ட நாரையானது இவளிடம் கூறத் தொடங்கியது. எங்களை ஏன் இப்படிப் புகழ்கிறாய்? உனது நிலையைக் கண்ட பின்னரும் இரக்கம் கொள்ளாமல் கிளம்பிச் சென்றவன், எங்கள் சொற்களை மட்டும் கேட்கவா போகிறான்? மேலும் முண்டக உபநிஷத் (3-1-8) – நிரஞ்ஜந பரமம் ஸாம்யமுபைதி - ப்ரக்ருதியின் தொடர்பு அற்று அவனைப் போன்று ஆகின்றனர் - என்பதற்கு ஏற்ப பரமபதத்தில் உள்ள அனைவரும் அவனைப் போன்றே இருப்பார்கள் அல்லவோ? அப்படி உள்ளபோது நாங்கள் அவனுக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வேறுபாட்டினைக் கண்டு பிடித்து அறிவது எப்படி? இப்படியாக நாரைகள் உரைக்கின்றன என்று எண்ணியவளாய்,

மேலே தொடர்கிறாள். (வெஞ்சிறைப் புள்ளுயர்த்தார்க்கு) - அவர்கள் அனைத்துவிதங்களிலும் தன்னை ஒத்தவர்களாக உள்ளபோதிலும், தனக்கு வேறுபாடு உண்டு என்று உணர்த்தும்விதமாகக் கருடனைத் தனது கொடியில் அவன் கொண்டிருப்பான். விரோதியை நீக்குவதற்கு நமக்கு அங்கேயும் உதவி செய்பவர்கள் உண்டு என்கிறாள். அக்ரூரர் போன்று அவனை யாரும் அழைத்துச் செல்லாமல் தானாகவே எந்தவிதமான இரக்கமும் இன்றிப் பிரிந்தவன் என்பதால், அக்ரூர: க்ரூரஹ்ருதய: - அக்ரூரர் அருள் இல்லாதவர் - என்று ஆய்ப்பெண்கள் போன்று உரைக்கிறாள். (புள்ளுயர்த்தார்க்கு) – கருடனால் தாங்கப்படுபவன். கருடனைத் தனது கொடியில் கொண்டவன். (என் விடு தூதாய்) – அவன் யாரையாவது என்னிடம் அனுப்பி என்னை அழைத்து வரும்படிக் கூறுவதை விடுத்து, நான் அல்லவோ தூதுவிடும் நிலையில் உள்ளேன்?

வ்யாக்யானம் - (விடு) "க்ரியதாம்" என்கிறபடியே நான் ஏவவன்றோ நீங்கல் போகிறது. பெருமிடுக்கரான பாண்டவர்கள் க்ருஷ்ணனைத் தூது விட்டாப்போலேயோ? அபலையாய் அத்யார்த்தையான நான் ஏவவன்றோ போகிறது. பரார்த்தமாகத் தூது போகை கிடைப்பதொன்றோ? (சென்றக்கால்) எனக்கு முன்னே உங்களுக்கு உத்தேச்யமன்றோ ஸித்திக்கப் புகுகிறது. உங்கள் போக்கு அடிக்கழஞ்சு பெறாதோ? (வன் சிறையில்) இவள்பாடு நின்றும் சென்றவற்றைச் சிறையிட்டு வைக்கிறானன்றே; இவர்களுக்கு முகம் கொடாதே அந்யபரனாகையிறே – இவர்களைச் சிறையிட்டு வைக்கையாவது. ராஜபுத்ரர்களுக்கு ப்ராப்த காலங்களிலே வெற்றிலை இடாதபோது மாந்துவர்களிறே. (என் விடு தூதாய்ச் சென்றக்கால் வன் சிறையில் அவன் வைக்கில்) நீங்கள் ஏதேனும் அவனுக்குத் தூது போகிறிகளோ, சிறை கட்டுதல், சிங்கவிளக்கெரித்தல் செய்யில் செய்வதென் என்று கூசுகைக்கு? எனக்குத் தூது போனரை "பரிஷ்வங்கோ ஹநூமத:" என்னுமாபோலே மார்பிலே அணைக்கும் காணுங்கோள். நான் அணைய ஆசைப்படுகிற மார்வன்றோ உங்களுக்குப் பரிசிலாகப் புகுகிறது. (அவன் வைக்கில்) – "வ்யஸநேஷு மநுஷ்யாணாம்" என்றிருக்குமவன் வைக்குமோ? சிரஸா வஹியானோ. (வைப்புண்டால் என் செய்யுமோ) அது பொல்லாதோ கிடைக்குமாகில்? பரார்த்தமாகச் சிறையிருக்கக் கிடைப்பதொன்றோ? ராவணன் தேவஸ்த்ரீகளைச் சிறையிட்டு வைக்க, தான் அவர்கள் காலில் விலங்கைத் தன்காலிலே கோத்துச் சிறை மீட்டவளிறே.

விளக்கம் - (விடு) - இராமாயணம் – க்ரியதாம் - இதனைச் செய் - என்று ஆணையிடலாம்படி நான் கூற அல்லவோ நீங்கள் செல்கிறீர்கள். க்ருஷ்ணன் தங்கள் பக்கம் உள்ளான் என்ற மிடுக்குடன் நின்ற பாண்டவர்கள் க்ருஷ்ணனைத் தூது அனுப்பியது போன்று எனது நிலை இல்லை; எந்த உதவியும், கைம்மாறும் இல்லாத நான் அல்லவோ உங்களை அனுப்புகிறேன்? (சென்றக்கால்) - இவ்விதம் நீங்கள் சென்றால் உங்களுக்கு அல்லவோ "அவனைச் சந்தித்தல்" என்ற பலன் கிட்டப்போகிறது? இதனால் உங்களுக்கு அளவற்ற மேன்மை கிட்டப்போகிறது. (வன் சிறையில்) - "அவனிடம் சென்றால் அவன் எங்களைச் சிறையில் வைத்துவிடுவான்", என்று நாரை கூறியது. அதற்கு இவள் அதனிடம், "நாயகிக்காகத் தூது வந்தவர்களைச் சிறை வைக்கமாட்டான்", என்றாள். இங்கு சிறைபிடித்தல் என்பது "முகம் காட்டிப் பேசாமல் இருந்தல்" என்பதாகும். அரசகுமாரர்களுக்கு வேண்டியபோது வெற்றிலை அளிக்காமல் இருந்தால் வருந்துவது போன்று, இப்படித் தூது சென்றவர்களை அவன் பாராமல் இருந்தால் வருந்துவார்கள். (என் விடு தூதாய்ச் சென்றக்கால் வன் சிறையில் அவன் வைக்கில்) - நீங்கள் என்ன அவன் அனுப்பியா யாரிடமாவது தூது செல்கிறீர்கள்? அப்படி அவன் தூது அனுப்பியிருந்தால், இராமன் அனுப்பிய அநுமனை ப்ரஹ்மாஸ்த்ரம் கொண்டு கட்டுதல் அல்லது வாலில் துணியைக் கட்டி தீ வைத்தல் போன்ற விபரீதங்கள் நிகழும். இங்கு நான் அல்லவோ தூது அனுப்புகிறேன்! ஆகவே அப்படி ஏதும் நிகழுமோ என்று ஏன் அஞ்சவேண்டும்? பரிஷ்வங்கோ ஹநூமத: - அனுமானை நான் இவ்விதம் அனைத்துக் கொள்வதாவது - என்று கூறுவது போன்று, தனது திருமார்பில் உங்களைச் சேர்த்து அணைத்துக்கொள்வான். நான் எந்தத் திருமார்பை அணைத்துக் கொள்ள ஆசைப்படுகிறேனோ அத்தகைய நிலை அல்லவோ உங்களுக்குப் பரிசாகக் கிடைக்கப் போகிறது? (அவன்) – இராமாயணம் – வ்யஸநேஷு மநுஷ்யாணாம் - மனிதர்களுக்குத் துன்பம் வந்தால் அது போன்று இரண்டு மடங்கு துன்பம் அவன் அடைகிறான் - என்பதற்கு ஏற்றபடி உள்ள அவன் உங்களைச் சிறையில் வைப்பானோ? மாட்டான். தனது தலையில் வைத்துக் கொண்டாடுவான். (வைப்புண்டால் என் செய்யுமோ) – அப்படியே அவன் சிறை வைத்தாலும், மற்றவர்களுக்காகச் சிறையில் இருப்பது போன்ற உயர்ந்த நிலை அனைவருக்கும் கிட்டாது அல்லவோ? இராவணன் தேவலோகப் பெண்களைச் சிறையில் வைக்க, அவர்கள் கால்களில் இருந்து விலங்குகளைத் தனது கால்களில் இட்டுக்கொண்டு அவர்களை விடுவித்த சீதையைப் பற்றி நீங்கள் அறிந்தது இல்லையோ என்கிறாள்.

1.4.2 என் செய்ய தாமரைக்கண் பெருமானார்க் கென்தூதாய்
என்செய்யு முரைத்தக்கா லினக்குயில்காள் நீரலிரே
முன்செய்த முழுவினையால் திருவடிக்கீழ்க் குற்றேவல்
முன்செய்ய முயலாதே னகல்வதுவோ விதியினமே.

பொருள் – கூட்டமாக நிற்கின்ற குயில்களே! செந்தாமரை போன்ற அழகான கண்களைக் கொண்ட எம்பெருமானிடம் எனக்காகத் தூது சென்று நான் கூறுவதை அவனிடம் உரைப்பதால் உங்களுக்கு என்ன குற்றம் உண்டாகப் போகிறது? நான் முன்பு செய்த வினைகளின் காரணமாக அவனது அழகான திருவடிகளின் அருகில் நின்று கைங்கர்யம் செய்வதற்குக் கடந்த பிறவியில் முயலாமல் இருந்தேன். இனியும் அவ்விதம் அகல்வது முறையாகுமோ?

அவதாரிகை – சில நாரைகளை, தூதுபோகவேணும் என்று இரந்தாள் கீழ்; அங்கு போனால் சொல்லும் பாசுரத்தைக் குயில்களுக்குச் சொல்லாநின்றாள். "அந்யதுபக்ராந்தமந்யதாபதிதம்" என்னும்படியாய் வந்து விழுந்தது; இத்தனையும் கலங்கிற்றிலளாகில், இவள் பிரிந்த விஷயத்துக்கும், நாட்டார் பிரிந்த விஷயத்துக்கும் வாசியன்றிக்கேயொழியுமே; இப்படி கலங்கப்பண்ணாதவன்று குணாதிகவிஷயத்துக்கு நமஸ்காரமாமித்தனையிறே.

விளக்கம் – கடந்த பாசுரத்தில் ஒரு சில நாரைகளை அழைத்து, அவற்றைத் தூது செல்லும்படி உரைத்தாள். அங்கு சென்றால் உரைக்கவேண்டிய செய்திகளைக் குயில்களிடம் கூறுகிறாள். அந்யதுபக்ராந்தமந்யதாபதிதம் - தொடங்கப்பட்ட விஷயம் ஒன்று, ஆனால் முடித்தது வேறு ஒன்று என்பதற்கு ஏற்ப இங்கு இவளது நிலைமை ஆனது (அதாவது நாரைகளில் தொடங்கி குயில்களில் முடித்தாள்). இப்படிச் செய்வது அறியாது கலங்கலாமோ என்றால், இவள் கலங்கவில்லை என்னும்போது இவளது ப்ரேமை மற்றும் இவள் எந்த விஷயத்தின் மீது ப்ரேமை கொண்டாளோ அதன் மேன்மை ஆகியவற்றுக்கு இழுக்கு என்றாகிவிடும். மேலும் இவள் கலங்கவில்லை என்றால், இவள் பிரிந்து தேடுகின்ற வஸ்து மற்றும் உலகில் உள்ளவர்கள் பிரிந்து தேடுகின்ற பொருள் ஆகியவற்றுக்கு இடையே எந்தவிதமான வேறுபாடும் இல்லாமல் போய்விடும். இவ்விதம் கலங்க வைக்காதபோது குணங்களால் உயர்ந்த ஸர்வேச்வரனுக்குப் பெருமை குறைவே

ஆகும். (அதாவது இவள் கலங்கவில்லை என்றால், அவனது அழகு மற்றும் குணங்கள் ஆகிய இரண்டிற்கும் இழுக்கு என்றார்).

வ்யாக்யானம் - (என்) பிரிந்த ஸமயத்திலும் "என்னுடையவன்" என்று சொல்லலாம்படி காணும் கலக்கிற ஸமயத்திலே அவன் இவளிட்ட வழக்காயிருந்தபடி. அன்றிக்கே, பிரிகிற ஸமயத்திலே – தான் வருமளவும் இவள் தரிக்கைக்காக "இது எங்கேயிருக்கிலென், எங்கே போகிலென், உன் சரக்கன்றோ" என்று சொல்லிப்போமே; அத்தாலேயாகவுமாம். (என் செய்ய தாமரைக்கண் பெருமானார்க்கு) ஸ்வாபாவிகமான ஐச்வர்யத்தாலும் சிவந்திருக்கும்; ஸ்வகீய வஸ்துக்கள்பக்கல் வாத்ஸல்யத்தாலும் சிவந்திருக்கும்; மதுபாநமத்தரைப்போலே இவளோட்டைக் கலவியாலும் சிவந்திருக்கும்; பிரிவாலே அரையாறுபட்டுச் சிவந்திருக்கும்; இவையெல்லாம் இவள் அனுபவித்தவளிறே. முதல் திருவாய்மொழியிலே ஐச்வர்யம்; மூன்றாம் திருவாய்மொழியில் வாத்ஸல்யம்; இத்திருவாய்மொழிலேயே கலவியும், பிரிவும். (பெருமானார்க்கு) பிரிகிறபோது கண்ணாலே நோக்கி அநந்யார்ஹையாக்கிப்போனபடி; ஸ்வாபாவிகமான ஐச்வர்யத்துக்குமேலே, இத்தலையில் ஒடுக்குமாட்டால் உண்டான ஐச்வர்யமுமுண்டாகையாலே இரட்டித்திருக்குமிறே.

விளக்கம் – (என்) - தன்னை மதிக்காமல் உதாஸீனம் செய்தவனை ஏன் "என்னுடையவன்" என்று உரைக்கவேண்டும் என்பதற்கான காரணத்தை இரண்டுவகையாக அருளிச் செய்கிறார். அவன் இவளுடன் சேர்ந்திருந்த காலத்தில் இவளது வசப்பட்டு நின்றான்; அதனை எண்ணியே பிரிந்த காலத்தில் இவள் "என்னுடையவன்" என்று அந்த அன்பின் தாக்கம் காரணமாக உரைக்கிறாள் - என்று கொள்வது முதல்வகை. தான் பிரிந்து செல்லும் போது இவள் துவண்டுவிடக்கூடாது என்பதற்காக அவன் இவளிடம், "உன்னுடையதான எனது இந்த சரீரம் எங்கே இருந்தால் என்ன? எங்கே சென்றால் என்ன? உன்னுடைய பொருளாக அல்லவோ இருப்பேன்" என்று கூறுகிறான்; இதனை எண்ணியே இவள் "என்னுடையவன்" என்று கூறியதாகக் கொள்வது இரண்டாவது வகை ஆகும். (என் செய்ய தாமரைக்கண் பெருமானார்க்கு) - பிரியும்போது திருக்கண்கள் சிவக்குமோ என்பதற்கு விடை அருளிச்செய்கிறார். இயற்கையாக உள்ள ஐச்வர்யம் காரணமாகச்

சிவந்திருக்கலாம்; தனக்கே உரிய பொருள்களின் பக்கம் எண்ணம் உள்ளதால் அவை மீது கொண்ட வாத்ஸல்யம் காரணமாகச் சிவக்கலாம்; மதுவைப் பருகுபவர்கள் போன்று இவளுடன் கொண்ட சேர்க்கை காரணமாகச் சிவக்கலாம்; அல்லது பிரிவு காரணமாகப் பாதி சிவந்திருக்கும். இவை அனைத்தையும் இவள் அனுபவித்தவள் ஆவாள். எங்கே அனுபவித்தாள் என்று கேள்வி கேட்கலாம்; விடை அளிக்கிறார். முதல் திருவாய்மொழியில் ஐச்வர்யம், மூன்றாம் திருவாய்மொழியில் வாத்ஸல்யம் அனுபவித்தாள். இந்தத் திருவாய்மொழியில் சேர்க்கை மற்றும் பிரிவு அனுபவித்தாள்; எப்படி என்றால் – "வெஞ்சிறைப்புள் உயர்த்தார்க்கு" என்பதில், நானும் அவனும் சேர்ந்துள்ளபோது கருடன் ஓடிவந்து, "அரசாங்கக் காரியம் பல உள்ளபோது, இப்படி ஒரு பெண்ணுடன் இருக்கலாமா?" என்று அவனை எடுத்துக்கொண்டு ஓடியபோது, கண்கள் சிவந்ததைக் கண்டாள். (பெருமானார்க்கு) - இதற்கு இரண்டுவிதமாகப் பொருள் உரைக்கலாம். திருக்கண்களின் பார்வை மூலம் மட்டுமே இவளைத் தனக்கு மட்டுமே உரிமை என்றாக்கி விட்டுச்சென்றான்; அல்லது, அவன் தன்னிடம் உள்ள ஐச்வர்யம் போதாது என்று இவளிடம் உள்ள குணங்கள் (அச்சம், மடம்) என்னும் ஐச்வர்யத்தையும் சேர்த்து எடுத்துக்கொண்டு போனதால், அவனது செல்வம் இரண்டு மடங்காக ஆனது என்றும் கொள்ளலாம்.

வ்யாக்யானம் - (என் தூதாய்) கடலேறி வடிந்தாப்போலேகாணும் கிடக்கிறது. அவனோடே கலந்து பிரிந்து வெறுந்தரையாயிருக்கிற எனக்குத் தூதாய். (என் செய்யும் உரைத்தக்கால்) உபயவிபூதியும் கண்டது உங்களுக்குக் கிஞ்சித்கரிக்க என்றிருக்கிறாள். (உரைத்தக்கால்) அவனைக் கொடுவந்து சேர்க்கைச் சொல்லுகிறேனோ? ஒரு உக்தி நேர்ந்தால் என் செய்யும்? (இனக்குயில்காள்) என்னைப்போலே தனியிருக்கிறிகளன்றே. (நீரலிரே) நீர்மைக்கு நீங்களன்றோ. நானும் அவனுமானபோது கேட்ட வார்த்தைக்கு ப்ரதிவசநம் பண்ணின நீங்கள், அவன் பிரிந்தவாறே வேறு சிலர் ஆனிகளோ? (முன்) தான் பாபம் பண்ணிப்போருகிற காலம் ஸாவதியோ? (செய்த) ஸங்கல்பித்து விட்டவளவயோ? (முழுவினை) அதுதன்னில் ஏதேனும் அகஞ்சுரிப்பட்டதுண்டோ? என்னால் பரிஹரிக்கலாதல், தம்மால் பரிஹரிக்கவொண்ணாதொழிதல் செய்யிலன்றோ எனக்கு இழக்க வேண்டுவது. திருக்கோட்டியூரிலே தெற்காழ்வான் கோளரியாழ்வானுக்குத் தீர்த்த துறையிலே சொன்ன வார்த்தை. "ஒரு முழுக்காலும் இரண்டு முழுக்காலும் போகாதுகாண்;

தெற்காழ்வார் கையில் திருவாழியாலே வினையை அறுத்துக்கொண்டு போகிலத்தனையொழிய ஒன்றிரண்டு முழுக்கால் போகாதுகாண் நான் பண்ணின பாபம்" என்று.

விளக்கம் - (என்தூதாய்) - எல்லையற்ற சேர்க்கை காரணமாக உண்டான இன்பங்கள் அனைத்தும் பிரிகின்றபோது கனவில் தோன்றும் அற்பகாலம் போன்று கழிகிறது; இப்படி அவனுடன் இத்தனை காலம் சேர்ந்திருந்து, இப்போது பிரிந்து, வெறும் தரையாய் உள்ள எனக்குத் தூதுவனாக. (என் செய்யும் உரைத்தக்கால்) – அவன் நித்யவிபூதி மற்றும் லீலாவிபூதி என்ற இரண்டையும் உங்களுக்கு அளிக்கக்கூடும். (உரைத்தக்கால்) - நான் அவனை இங்கு கொண்டுவந்து சேர்க்கச்சொல்கிறேனோ? எனது தூதுச்செய்தியை மட்டும் உரைக்கச் சொல்கிறேன். இதனால் உங்களுக்கு என்ன குறை ஏற்படப்போகிறது? (இனக்குயில்காள்) என்னைப் போன்று தனியாக வாடாமல், ஜோடியாக உள்ள குயில்களே! என்னைப் போன்று நீங்கள் தனியாகவா உள்ளீர்கள்? அல்லவே! (நீரலிரே) – எனக்கு அருள் செய்வதற்கு நீங்கள் அல்லவோ உள்ளீர்கள்? நானும் அவனுமாகச் சேர்ந்து இருந்த காலத்தில், எங்கள் பேச்சு அனைத்தையும் கேட்டபடி, அதற்கு ஏற்றபடி பதில் உரைத்த நீங்கள் இப்போது அவன் பிரிந்த பின்னர் என்னிடம் வேறு யாரோ போன்று உள்ளீர்களே! (முன்) - நான் பல பாவங்கள் செய்தபடி உள்ள காலமானது எல்லையுடன் கூடியதா? அல்ல. (செய்த) - அந்தப் பாவங்கள் என்னைத் தண்டித்தே தீருவது என்று ஸங்கல்பம் செய்துவிட்டன போலும். (முழுவினை) – அந்தப் பாவங்களில் ஏதேனும் சற்று குறைந்ததோ? நான் பாவங்கள் செய்த காலம் ஓர் எல்லைக்குள் அடங்கியிருந்து, அந்த எல்லைக்குள் நான் செய்த பாவங்களும் ஓர் எல்லைக்குள் அடங்கி இருந்தது என்றால் அல்லவோ அந்த வினைகளை என்னால் தீர்க்க இயலும்? இப்படிப்பட்ட கொடிய வினைகளை என்னால் தீர்க்க இயலும் என்ற அறிவு என்னிடம் இல்லையே! இதனால்தான் அவனிடம் செல்கிறேன். அவனும் இயலாது என்று கைவிட்டால் அல்லவோ நான் செய்வது அறியாமல் தவிப்பேன்! இங்கு திருக்கோட்டியூரில் தெற்காழ்வான் என்பவர் கோளரியாழ்வான் என்பவரிடம் உரைத்தவற்றை நோக்குக - புண்யதீர்த்தங்களில் ஒரு முழுக்கு அல்லது இரண்டு முழுக்கு என்று செய்வதால் நமது வினை கழியாது. இதோ, இந்தத் திருக்கோட்டியூரில் உறைகின்ற எம்பெருமான் தனது திருக்கரத்தில் உள்ள சக்கரத்தாழ்வானை எடுத்து எனது வினை என்பதை அறுத்தால் தவிர

ஒன்று அல்லது இரண்டுதரம் புண்ணிய தீர்த்தங்களில் முழுகி எழுவதால் அவை போகாது. அத்தனை பாவங்கள் நான் செய்துள்ளேன் - என்றார்.

வ்யாக்யானம் - (திருவடிக்கீழ்) ப்ராஹ்மணர் பிச்சேறினாலும் ஒத்துச் சொல்லுமாபோலே, இவர் பிராட்டியானாலும், முலையால் அணைக்க நினையார்; திருவடிகளிலே அணையத் தேடுமத்தனை. (குற்றேவல்) திருவடிகளிலே கிட்டி அந்தரங்கவ்ருத்தி பண்ண ஆசைப்படுமத்தனை. (திருவடிக்கீழ் குற்றேவல் முன்செய்ய முயலாதேன்) ஏற்கவே கோலாத நான் என்னுதல்; முன் – "க்ரியதாமிதி மாம் வத" என்கிறபடியே இன்னத்தைச் செய் என்று ஏவத் திருமுன்பே அடிமைசெய்ய முயலாதேன் என்னுதல். (அகல்வதுவோ விதி) திருவடிகளிலே அடிமைசெய்கைக்கு ஈடாக இருப்பதோரு ஸாதநாநுஷ்டாநம் என் தலையால் பண்ணாத நான் அகன்றே போமித்தனையோ. முதலில்லாதார் பலிசை இழக்குமித்தனையன்றோ? என்ன; முதலில்லாதாரன்றோ பலிசை இழப்பார்; அவன் தானே முதலாக இருக்கும் கோஷ்டியிறே இவர்கள் கோஷ்டி; "களை கண் மற்றிலேன்" என்றும், "உன் சரணல்லால்சரணில்லை" என்றும், "மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும் மற்றவை" என்றும், "நெறிவாசல் தானேயாய் நின்றானை" என்றும், "விழிக்கும் கண்ணிலேன் நின்கண் மற்றல்லால்" என்றும், "வாழும் சோம்பர்" என்றும் இப்படிகளிலேயிறே இவர்கள் கோஷ்டியில் வார்த்தைகளும் இருக்கும்படி.

விளக்கம் - (திருவடிக்கீழ்) – அவனைப் பிரிந்து இவள் வாடியபடி உள்ளபோதிலும் "அவனுடன் சேர்வது எப்போது" என்று உரைக்காமல், "கைங்கர்யம் செய்வது எப்போது" என்பது ஏன்? அந்தணர்கள் பித்துப்பிடித்தபோதிலும் வேதத்தை ஓதுவது போன்று, அவன் பிராட்டியாகத் தன்னை மாற்றியபோதிலும் தனது ஸ்தனம் கொண்டு அணைக்க எண்ணாமல், திருவடிகளையே பிடிக்க எண்ணுகிறாள். (குற்றேவல்) – திருவடிகளில் நிலை நின்று அந்தரங்கமாகக் கைங்கர்யம் செய்ய விரும்புகிறார். (திருவடிக்கீழ் குற்றேவல் முன்செய்ய முயலாதேன்) – கடந்த பிறவிகளில் இதற்காக எந்தவிதமான முயற்சியும் செய்யாத நான். இராமாயணம் ஆரண்யகாண்டம் (15-7) – க்ரியதாமிதி மாம் வத – இதனைச்செய் என்று எனக்கு ஆணை இடவேண்டும் - என்று இராமனிடம் லக்ஷ்மணன் உரைத்தது போன்று, "இதனைச் செய்" என்று கூறவேண்டும்படியாக அவன் முன்பாக ஏதும் செய்யாமல் நின்ற நான். (அகல்வதுவோ விதி) - அவனது திருவடிகளில்

நிலையாக நின்று கைங்கர்யம் செய்வதற்கு ஒத்ததாக உள்ள ஓர் உபாயத்தை எனது தலையால் செய்யாத நான் அவனைவிட்டு அகன்று செல்வது விதியின் காரணமாகவே ஆகும். பொருள் இல்லாதவர்கள் தொழிலை மட்டும் அல்ல, லாபத்தையும் இழப்பார்கள் அல்லவோ என்ற கேள்வி எழலாம். ஆனால் அவன் மட்டுமே தங்களது செல்வம் என்று எண்ணும் கூட்டம் அல்லவா இந்த ஆழ்வார்கள் கூட்டம், பின்னர் எவ்விதம் இழப்பு உண்டாகும்? கீழே உள்ள பல பாசுரங்கள் போல் அல்லவோ ஆழ்வார்களின் சொற்கள் இருக்கும்?

- திருவாய்மொழி (5-8-8) - களை கண் மற்றிலேன் – வேறு கதி இல்லை.
- பெருமாள் திருமொழி (5-1) – உன் சரணல்லால்சரணில்லை – உனது திருவடிகள் தவிர மற்ற உபாயம் ஏதும் எனக்கு இல்லை.
- பெருமாள் திருமொழி (5-7) - மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும் மற்றவை – ஆகாயத்தில் நீர் கொண்ட மேகங்களை மட்டுமே பயிர்கள் எதிர்நோக்கி நிற்கும், அவை தாமாகவே நிலத்தில் உள்ள நீரைத் தேடிச்செல்ல அறியாதவை போன்று நான் உள்ளேன்.
- முதல் திருவந்தாதி (4) - நெறிவாசல் தானேயாய் நின்றானை - உபாயமும் உபேயமும் தானே என்று நின்ற ஸர்வேச்வரனை.
- பெரியாழ்வார் திருமொழி (5-1-2) - விழிக்கும் கண்ணிலேன் நின்கண் மற்றல்லால் - உனது கடாக்ஷம் என்பதை நோக்குகின்ற கண்கள் தவிர நான் வேறு கண்களைக் கொண்டவன் அல்லேன்.
- திருமாலை (38) – வாழும் சோம்பர் – உன்னிடம் மனம் வைத்தவராக, தங்களது நன்மையில் சோம்பேறித்தனம் கொண்டவர்களாக.

வ்யாக்யானம் - (விதியினமே) விதியினன் என்றாய் - பாபத்தை உடையேனான நான் அகன்றே போமித்தனையோ? என்னுதல்; "இனம்" என்ற இத்தை, இன்னம் என்றாக்கி - "எங்கள் அபிமதம் பெறுகைக்கு எங்கள்பக்கல் ஒரு நன்மையில்லாத பின்பும் தாழ்க்குமித்தனையோ? என்கிறாள்" என்று பிள்ளை திருநறையூரரையர் பணிக்கும்படி. விதியினம் - பாவியோம் என்றபடி.

விளக்கம் - (விதியினமே) – இதனை "விதியினன்" என்பதன் திரிந்த வடிவமாகப் பொருள் கொண்டு உரைக்கிறார். பாவத்தை உடையதால் நான் அகல்கிறேனோ? "இனம்" என்பதை "இன்னம்" என்று கொள்ளவேண்டும். பிள்ளை திருநறையூரையர், "எங்களது விருப்பத்தை அடைவதற்கு எங்களிடம் எந்தவிதமான தகுதியும் இல்லை என்று அறிந்த பின்னரும் எங்களை ஒதுக்குதல் சரியோ?", என்று இவள் உரைப்பதாகக் கூறுவார். விதியின்மை என்றால் "பாவம் உடையவர்கள்" என்பதாகும்.

1-4-3 விதியினால் பெடைமணக்கும் மென்னடைய வன்னங்காள்
மதியினால் குறள்மாணா யுலகிரந்த கள்வர்க்கு
மதியிலேன் வல்வினையே மாளாதோ வென்றோருத்தி
மதியெல்லா முள்கலங்கி மயங்குமா லென்னீரே

பொருள் – உங்களது நல்ல வினைப்பயன் காரணமாகப் பெண் அன்னங்களுடன் சேர்ந்திருக்கிற அழகான நடையைக் கொண்ட அன்னப்பறவைகளே! தனது சாமர்த்யமான புத்தியால் மிகவும் சிறிய வடிவம் கொண்டு, ப்ரம்மச்சாரியாக உலகத்தை யாசித்துப் பெற்றான்; அந்த வஞ்சனையான செயல் புரிந்தவனிடம், "மதி இல்லாத எனது வல்வினை முடியாமல் உள்ளதோ, நீ அளித்த புத்தி அனைத்தையும் அடியுடன் இழந்து கலங்கி நிற்கிறேன்", என்பதைக் கூறுங்கள்.

அவதாரிகை – "அகல்வதுவோ?" என்றாப்போலே சொல்லுகிற பக்திவாதங்கள் நமக்குத் தெரியாது; "அவச்யமநுபோக்தவ்யம்" என்று சொல்லுகிறபடியே அநுபவித்தே அறவேணும் – என்று ஈச்வராபி ப்ராயமாகக் கொண்டு, "நான் பண்ணின பாபமேயோ அநுபவித்தாலும் மாளாதது என்று சொல்லுங்கோள்" என்று சில அன்னங்களை இரக்கிறாள்.

விளக்கம் – இவள் கடந்த பாசுரத்தில் கூறிய செய்திகளைக் குயில்கள் சென்று ஸர்வேச்வரனிடம் கூற அவன் அவளிடம் உரைக்குமாறு அந்தக் குயில்களிடம் சிலவற்றைக் கூறினான். அவையாவன – "அகல்வதுவோ" என்பது போன்று அவள் உரைக்கின்ற பக்தி உள்ளிட்ட உபகாரச் சொற்கள் நம்மால் அறிய இயலாது. அவச்யமநுபோக்தவ்யம் – செய்த வினைகளுக்கான பலன்களை அவசியம் அனுபவித்தே அந்த வினைகளைக் கழிக்கவேண்டும் - என்பதாகும். இதனைக் கேட்ட நாயகி

அன்னங்களிடம், "நான் செய்த பாவங்கள் பல உள்ளன. அவை எத்தனை அனுபவித்தாலும் கழியாது என்று அவனிடம் சென்று உரைப்பீர்களாக", என்று கூறுகிறாள்.

வ்யாக்யானம் - (விதியினால்) நீங்கள் சாஸ்த்ரம் சொல்லுகிறபடியே கலக்கையாலே, பிரிவின்றியே இருந்திகோள்; இவள் 'அடைவு கெடக் கலக்கையிறே எனக்குப் பிரிவு வந்தது', என்கிறாள். உங்களுடைய பாக்யத்தாலே என்னுதல், என்னுடைய பாக்யத்தாலே என்னுதல். அபிமத ஸம்ச்லேஷம் புண்யபலம், அபிமத விச்லேஷம் பாபபலம்; தங்களுடைய ஸுக்ருதத்தாலே அன்றியே இவை சேரவிருக்கிற இருப்பு இவள் பாக்யமாகவுமாம். பெருமாள் பிராட்டியைப் பிரிந்து கடலும் மலையும் அரித்துக்கொண்டு வாராநிற்கக் செய்தே, ராஜ்யதாரங்களை இழந்த மஹாராஜரைக்கண்டு, அவர் குறை தீர்த்தபின்பிறே தம் இழவில் நெஞ்சு சென்றது. அங்ஙனன்றிக்கே, இவை குறைவற்று இருக்கிற இதுதான் இவள் கார்யமாயிருக்குமிறே; நீர்மையுடையார்க்குத் தந்தாம் இழவிலும் பிறருடைய இழவிறே நெஞ்சில் முற்படப்படுவது. (பெடை மணக்கும்) பேடையோடே கலக்கும். (பேடையினுடைய கருத்தறிந்து) அத்தை உகப்பிக்கை.

விளக்கம் - (விதியினால்) - நீங்கள் சாஸ்த்ரங்களின் சொற்படி கலந்த காரணத்தினால் எந்தவிதமான பிரிவும் இன்றி உள்ளீர்கள். ஆனால் இவள் (தன்னையே கூறிக் கொள்கிறாள்) எந்தவிதமான நியமமும் இன்றி கலந்த காரணத்தினால் பிரிவு வந்தது. அல்லது அந்தணர்களுக்கு நியமங்கள் தேவை, விலங்குகளுக்கு அவை தேவை இல்லை என்று கருத்து. உங்களுடைய புண்ணியம் காரணமாக நீங்கள் சேர்ந்திருக்கும் நிலை உள்ளது, எனது பாவம் காரணமாகப் பிரிவு ஏற்பட்டது. தங்களுக்கு விருப்பமானவர்களுடன் சேர்ந்து இருப்பது புண்ணியத்தின் பலன், அவர்களை விட்டுப் பிரிவது பாவத்தின் பலனாகும். அல்லது அந்த அன்னங்கள் சேர்ந்திருப்பது தன்னுடைய புண்ணிய பலன் காரணமாகவே என்று உரைப்பதாகவும் கொள்ளலாம். இது எப்படி? சீதையைப் பிரிந்த இராமன் கடல், மலை போன்ற பல இடங்களிலும் அலைந்து வரும்போது, தன்னைப்போன்றே நாட்டையும் மனைவியையும் இழந்த சுக்ரீவனைக் காண்கிறான்; அவனது துன்பத்தை நீக்கிய பின்னர் அல்லவோ தனது துன்பத்தின் மீது மீண்டும் இராமனுக்குச் சிந்தனை சென்றது? அல்லது சுக்ரீவன் போன்று தங்கள் மனைவிமார்களை இழக்காமல் இவை உள்ளன என்பதால் எந்தவிதமான குறையும் இன்றி இருப்பதாக எண்ணி உரைக்கிறாள். இராமன் முதலில் தனது துன்பத்தை நீங்கிக்

கொண்டு, அதன் பின்னர் சுக்ரீவனின் துன்பத்தை நீக்கியிருக்கலாமே என்ற கேள்வி எழலாம். இதற்கு விடை அளிக்கிறார். நீர்மை கொண்டவர்களுக்கு தங்களது துன்பத்தைக் காட்டிலும் மற்றவர்கள் துன்பமே உள்ளத்தில் நிலைநிற்கும். (பெடை மணக்கும்) - இங்கு "மணக்கும்" என்றது காண்க. விலங்குகளுக்குத் திருமணம் என்பது ஏது என்றால், அவை சேர்தலையே இப்படி உரைக்கிறார். பேடையுடன் என்று கூறாமல், பெடை என்பது ஏன்? தன்னுடைய விருப்பத்தின் அடிப்படையில் அதனுடன் சேராமல், அதனுடைய விருப்பம் அறிந்து சேர்கிறது என்பதை உணர்த்துவதே ஆகும்.

வ்யாக்யானம் - (மென்னடைய அன்னங்காள்) இவ்வன்ன நடைகொண்டோ என் கார்யம் செய்யப் புகுகிறது? (மென்னடைய அன்னங்காள்) "ஸா ப்ரஸகலந்தீ" என்னுமாபோலே. இளையபெருமாளுடைய ஜ்யாகோஷம் செவிப்பட்ட அநந்தரம் மதுபாநத்தாலே வந்த கலக்கமும் தெளிந்து, கழுத்தில் மாலையையும் அறுத்துப்பொகட்டு, "இச்சீற்றத்துக்கு நாம் முன்னிற்கவொண்ணுது" என்று தாரையைப் புறப்படவிட, அவள், கலவியாலுண்டான பாரவச்யமடங்கலும் நடையிலே தோற்றப் புறப்பட்டாப்போலேயிராநின்றதாயிற்று இவற்றின் நடையும். இளையபெருமாளுடைய திருவுள்ளத்தில் சிவிட்குத் தாரையையிட்டு ஆற்றவேண்டிற்று காணும். "ஸா" ஒரு கலவியும் பிரிவும் வேண்டாதபடியான நடையழகை உடையவள். "ப்ரஸ்கலந்தீ" ஸம்ச்லேஷத்தால் உண்டான துவட்சியாலே தடுமாறி, அடிமேலடியாக இட்டு வந்தாள்; "மதவிஹ்வலாக்ஷீ" மதுபாநாதிகளாலே தழுதழுத்த நோக்கையுடையளாய் இருந்தாள்; "ப்ரலம்பகாஞ்சீகுணஹோமஸூத்ரா" அரை நூல்வடம் இழுப்புண்டு வரும்படி படுக்கையிற் கிடந்தபடியே பேணாதே வந்தாள். "ஸலக்ஷணா" ஸம்போக சிஹ்நங்கள் காணலாம்படி வந்தாள். "லக்ஷ்மண ஸந்திதாநம் ஜகாம" தாய்க்கு ஒளிப்பதுண்டோ என்று புறப்பட்டு வந்தாள். "தாரா" தாரையானவள். "இளையபெருமாள் திருவுள்ளத்தில் சிவிட்கு எத்தாலே ஆற்றலாம்" என்று மஹாராஜரும் திருவடியுமாக விசாரித்து, "வேறொன்றால் ஆற்றுமதல்ல, தாரையையிட்டு ஆற்றவேணும்" என்று தாரையை விடவிட்டார்கள். "நமிதாங்கயஷ்டி:" உருகுபதத்திலே வளைந்தவை நிமிர்க்க வொண்ணாதாப்போலே, இத்துவட்சி நிரூபகம் இவளுக்கென்று தோற்றும்படி இருந்தாள். அப்படிப்பட்ட நடையழகாலே அவரைத் துவக்கிக் காரியங்கொள்ளவற்று இவையும் என்றிருக்கிறாள்.

விளக்கம் – (மென்னடைய அன்னங்காள்) – இத்தகைய மெதுவான மெலிந்த நடையை இட்டுக்கொண்டா எனது செயலை நீங்கள் செய்யப் போகிறீர்கள்? (மென்னடைய அன்னங்காள்) - இவற்றின் நடை எப்படி இருந்தது என்று உரைக்கிறார். கிஷ்கிந்தா காண்டத்தில் இராமனை மறந்து, தனது இருப்பிடத்தில் இன்பமாக இருந்த சுக்ரீவனை எண்ணிய லக்ஷ்மணன் அவனது இருப்பிடத்திற்கு முன்பாக சீற்றத்துடன் நின்றான். அந்தச் சீற்றம் அறிந்த சுக்ரீவன் தனது மதுபான மயக்கம் தெளிந்தவனாக தனது கழுத்தில் அணிந்திருந்த மாலைகளை அறுத்துவிட்டு, "இந்த லக்ஷ்மணனிடம் சினத்திற்கு முன்பாக நாம் நிற்க இயலாது", என்று எண்ணினான். ஆகவே அவன் தாரையை முதலில் லக்ஷ்மணன் முன்பாக செல்லச்செய்தான். இயல்பாகவே வசீகரிக்கும் நடையைக் கொண்ட அவள், தனது சேர்க்கை காரணமாக மேலும் இன்பம் அடைந்ததால் அதிக வசீகரத்துடன் கூடியபடி நடந்தாள். அவளது நடையைப் போன்று இந்த அன்னங்களின் நடையும் இருந்தன. ஆனால் தான் செல்லாமல் தாரையை முதலில் செல்லவிட்டது சரியா? லக்ஷ்மணனின் சினத்திற்கு முன்பாக எண்ணெயை (தாரை என்பது சிலேடையாக) விட்டு ஆற்றும்படியாக நிலைமை இருந்தது (இனி வரும் சில வரிகளில் கிஷ்கிந்தா காண்டத்தின் இந்தப் பகுதி விவரிக்கப்படுகிறது. அதற்கான இராமாயண ச்லோகம் (33-37):

ஸா ப்ரஸ்கலந்தீ மதவிஹ்வலாக்ஷீ ப்ரலம்பகாஞ்சீகுணஹேமஸூத்ரா
ஸலக்ஷணா லக்ஷ்மண ஸந்நிதாம் ஜகாமச்தாரா நமிதாங்கயஷ்டி:

"ஸா" – தனது அழகான நடைக்குக் காரணமாக எந்தச் சேர்க்கையும் பிரிவும் அவசியம் இல்லாதபடி உள்ளவள்; "ப்ரஸ்கலந்தீ" - சேர்க்கையால் ஏற்பட்ட துவட்சி காரணமாகத் தடுமாறி அடிமேல் அடிவைத்து வந்தாள்; "மதவிஹ்வலாக்ஷீ" - மதுபானம் முதலானவை காரணமாகக் கலங்கிய பார்வை கொண்டவளாக இருந்தாள்; "ப்ரலம்ப காஞ்சீகுண ஹேமஸூத்ரா" - அரைநூல் வடம் இழுப்புண்டு வரும்படியாகப் படுக்கையில் இருந்து சரி செய்யாமல் வந்தாள்; "ஸலக்ஷணா" - சேர்க்கை நிகழ்ந்ததற்கான அடையாளங்கள் புலப்படும்படியாகவே வந்தாள்; "லக்ஷ்மண ஸந்நிதாம் ஜகாம" - இவ்விதம் அந்த அடையாளங்கள் மற்ற ஆண்களுக்குப் புலப்படும்படியாக வருவது சரியா என்ற கேள்விக்கு விடை தருகிறார். "தாய்க்கு ஒளிப்பது ஏதேனும் உண்டா?" என்றார். இவள் ஏன் இவ்விதம் வந்தாள் என்பதற்குக் காரணம் கூறுகிறார். லக்ஷ்மணனின் சீற்றத்தை எதன் மூலம் குறைக்க இயலும் என்று சுக்ரீவனும் அனுமனும் சிந்தித்து, "வேறு எதனாலும் தீர்க்க இயலாது, தாரை மூலமே முடியும்", என்று இவ்விதம் செய்தனர். இரும்பானது

உருக்கப்பட்டபோது வளைக்கப்பட்ட பின்னர், அதனை மீண்டும் நிமிர்த்த இயலாதது போன்று இந்தத் துவட்சி இவளது இயல்பானது என்பது போன்று இருந்தாள். அப்படிப்பட்ட வசீகரமான தனது நடை மூலம் லக்ஷ்மணனை மயக்கி, தான் கூறியபடி அவனைச் செய்ய வைப்பதாக உள்ளாள்.

வ்யாக்யானம் - (மதியினால்) அவர் சால தூரதர்சிகள்கிடிகோள்! "ராவணனைப்போலே தலையறுத்துவிடவொண்ணாதபடி ஔதார்யம் என்றொரு குணலேசத்தை ஏறிட்டுக் கொண்டிருந்தான்; இந்த்ரன் ராஜ்யத்தை இழந்து நின்றான்; இரண்டுக்கும் அவிருத்தமாகச் செய்யலாவதென்?" என்று, "கோஸஹஸ்ர ப்ரதாரம்" என்கிறபடியே கொடுத்து வளர்ந்த கையைக் கொண்டு நீரேற்று அவனுக்குக் கொடுத்த விரகர்க்கு. (குறள்) கோடியைக் காணி ஆக்கினாப்போலே, பெரிய வடிவழகைக் கண்ணாலே முகந்து அநுபவிக்கலாம்படி சிறுக்கினபடி. (மாணாய்) "உண்டு" என்று இட்டபோதோடு, "இல்லை" என்று தள்ளிக் கதவடைத்தபோதோடு வாசியற முகம் மலர்ந்துபோம்படி இரப்பிலே தழும்பேறின வடிவை உடையனானபடி. (உலகிரந்த) தன் லங்கல்பத்தாலே உண்டாக்கின லோகத்தை "கொள்வன் நான்" என்று இரந்த. (கள்வர்க்கு) "வஞ்சகர்க்கு" என்று திருமாலையாண்டான் நிர்வஹிக்கும்படி. எம்பெருமானார், "ஒன்றை நினைத்து ஒன்றைச் செய்தவர்க்கு" என்று அருளிச்செய்வர். மஹாபலியை வஞ்சித்ததும் என்னை வசீகரிக்கைக்காக. கீழ் தான் "பெருநிலங்கடந்த நல்லடிப்போது" என்றிறே ஆசைப்பட்டதும்; "உலகங்கொண்ட அடியன் அறிவருமேனி மாயத்தனாகிலும் கொடிய என்னெஞ்சம் அவனென்றே கிடக்கும்" என்றும், "அன்றோருகால் வையமளந்த பிரான் வாரானென்று ஒன்றோருகால் சொல்லாது உலகு" என்றுமிறே இவர் கிடப்பது. திருமங்கையாழ்வாரும் "முன்னம் குறளுருவாய் மூவடி மண் கொண்டளந்த மன்னன் சரிதைக்கே மாலாகி பொன்பயந்தேன்" என்று இவர்களெல்லாரும் ஈடுபடுவது இச்செயலுக்கிறே.

விளக்கம் - (மதியினால்) – அவன் மிகவும் தொலைவில் உள்ளவற்றை அறியும் திறன் கொண்டவன் ஆவான். இராவணன் போன்று எளிதாகத் தனது தலையை அறுத்துவிட இயலாதபடி கொடை என்ற குணத்தின் பின்னே மஹாபலி மறைந்து நின்றான்; ஆனால் இந்திரனோ அவனால் தனது பதவியை இழந்தான்; இந்நிலையில் இரண்டு பேருக்கும் ஏற்றபடி என்ன செய்வது என்று யோசித்தான். இராமாயணம் யுத்தகாண்டம் (21-77) – கோஸஹஸ்ர ப்ரதாரம் - ஆயிரம் பசுக்களை அளித்த கரங்கள் - என்று கூறுவதற்கு ஏற்ப, மற்றவர்களுக்கு அளித்து அளித்தே, நீண்ட தனது கரங்கள் கொண்டு யாசக நீர் பெற்று,

இந்திரனுக்குப் பதவியை மீட்டுக் கொடுத்த அறிவாளிக்கு. (குறள்) - பெரிய நிலப்பரப்பைத் தனது திருவடிக்குள் அடக்கி, அந்நிலம் மிகவும் சிறியது என்று காண்பித்தது போன்று, அவனது பெரிய திருமேனியை அனுபவிக்க ஏற்றபடி சிறியதாக அதனை மாற்றி, கண்களால் முழுவதுமாக அனுபவிக்கலாம்படி நின்றவன். (மாணாய்) - இந்த மஹாபலி "தருகிறேன்" என்று அளித்தபோது ஏற்பட்ட முகமலர்த்தியானது, ஆயர்பாடியில் கோபியர்கள், "வெண்ணெய் இல்லை" என்று விரட்டி கதவைத் தாளிட்டபோது ஏற்பட்ட முகமலர்த்தி போன்றே எந்தவிதமான வேறுபாடும் அற்று இருந்தது. ஆக, தான் ஒன்றைக் கேட்டுப் பெறுவதில் எந்தத் தயக்கமும் காட்டாமல் உள்ள திருமுகம் கொண்டவன் என்று கருத்து. (உலகிரந்து) - தன்னுடைய ஸங்கல்பம் மூலம் மட்டுமே உண்டாக்கிய இந்த உலகங்களைத் திருவாய்மொழி (3-8-9) – கொள்வன் நான் - என்பதற்கு ஏற்ப யாசகமாகக் கேட்டவன். (கள்வர்க்கு) – "தனது சிறிய திருவடியை முதலில் காண்பித்து, பின்பு அதனைப் பெரிதாக்கி அளத்தல் என்று செய்த வஞ்சனை உள்ளவனுக்கு", என்று திருமாலையாண்டான் அருளிச்செய்வார். "ஒன்றைச் செய்வதாகக் கூறிவிட்டு மற்றொன்றைச் செய்பவன்" என்று எம்பெருமானார் அருளிச்செய்வார். அந்த மஹாபலியை வஞ்சித்த செயல் என்பதும் என்னை வசீகரம் செய்வதற்கே ஆகும். ஆனால் இவர் இவனது அந்தச் செயலில் வசப்பட்டார் என்று எவ்விதம் கூற இயலும் என்ற கேள்விக்கு விடை அளிக்கிறார். இதனைக் கீழே உள்ள வரிகளில் காண்க:

- திருவாய்மொழி (1-3-10) - பெருநிலங்கடந்த நல்லடிப்போது
- திருவாய்மொழி (5-3-5) - உலகங்கொண்ட அடியன் அறிவருமேனி மாயத்தனாகிலும் கொடிய என்னெஞ்சம் அவனென்றே கிடக்கும்
- திருவாய்மொழி (5-4-10) - அன்றோருகால் வையமளந்த பிரான் வாரானென்று ஒன்றோருகால் சொல்லாது உலகு

திருமங்கையாழ்வாரும் தனது பெரியதிருமொழியில் (9-4-2) – முன்னம் குறளுருவாய் மூவடி மண் கொண்டளந்த மன்னன் சரிதைக்கே மாலாகி பொன்பயந்தேன் – என்று ஆழ்வார்கள் அனைவரும் மயங்கி நின்றது இந்தச் செயலில் அல்லவோ?

வ்யாக்யானம் - (மதியிலேன்) பிரிகிற ஸமயத்திலே, "போகாதேகொள்" என்றோனாகில் இப்பாடு படாதொழியலாயிற்றே; அறிவுகேடியானேன். (வல்வினையே மாளாதோ) இவளொரு தீர்க்க சிந்தயந்தியாயிற்று. எல்லைச்சதிரியாய் குருதர்சநத்திலே முடிந்தாளிறே

அவள். "தச்சித்தவிமலாஹ்லாதேத்யாதி" அவன் பக்கலிலே நெஞ்சை வைக்கையாலே, புண்யபலம் அநுபவித்தாள்; அந்நினைவின்படி அநுபவிக்கப் பெறாமையாலே பாபபலம் அநுபவித்தாள்; ஆகையாலே புண்யபாபங்கள் இரண்டும் அரை க்ஷணத்திலே அநுபவித்தாளிறே அவள். (ஒருத்தி) "ஒருத்தி" என்றால் அறியுமோ என்னில்; எய்தவன் கை உணராதோ? "இன்ன காட்டிலே மான்பேடை ஏவுடனே கிடந்து உறையாநின்றது" என்று ஊரிலே வார்த்தையானால், எய்தவன் கை உணராதோ? - "நீயன்றோ எய்தாய்" என்று சொல்லவேண்டாவிறே. (ஒருத்தி) ஸம்ஸாரவிபூதியிலுள்ள இவள் ஒருத்தியுமிறே; ஸம்ஸாரிகள் புறம்பே அந்யபரர்; நித்யஸூரிகளுக்கு விச்லேஷமில்லை; மற்றையாழ்வார்கள் இவருக்கு அவயவமாயிருப்பார்கள்.

விளக்கம் - (மதியிலேன்) – இதற்கு அன்னங்கள் இவளிடம், "உனக்கு அறிவு இருந்தால் இந்தப் பிரிவு ஏற்பட்டிருக்காது அல்லவோ?", என்றன. உடனே இவள், "அவன் என்னை விட்டுப் பிரியும்போது – போகாதே நில் – என்று நான் கூறியிருந்தால் இவ்விதம் துன்பம் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை", என்றாள். (வல்வினையே மாளாதோ) - சிந்தயந்தி என்பவள் ஆயர்பாடியில் இருந்த ஒரு கோபிகை ஆவாள். ராஸலீலையின்போது அனைத்து கோபிகைகளும் க்ருஷ்ணனிடம் ஓடிச் செல்ல, இவளால் தனது வீட்டில் உள்ளவர்கள் விடாத காரணத்தினால் செல்ல இயலவில்லை. ஆனால் க்ருஷ்ணனை மட்டுமே அப்போது த்யானித்தபடி இருந்து, தனது பாவங்கள் விலகப் பெற்று, மோக்ஷம் அடைந்தாள். சிந்தயந்தி என்றால் எப்போதும் சிந்தித்தபடி உள்ளவள் என்று பொருள். அவளைக் காட்டிலும் இவள் மேலும் ஆழமாகச் சிந்தித்தபடி உள்ளதால், "தீர்க்கசிந்தயந்தி" என்று கூறினார். தனது வீட்டில் அவர்களை மட்டுமே எல்லையாய்க் கொண்டு, மாமியார் முதலானவர்கள் பார்த்தபடியே இருந்து, அனைத்து பந்தங்கள் மற்றும் பாவங்கள் நீங்கப் பெற்று எம்பெருமானை அடைந்தாள். ஆனால் பக்தி மற்றும் ப்ரபத்தி போன்ற எதுவும் இன்றி முக்தி கைகூடப்பெற்றது எப்படி என்பதற்கு விடை அருளிச்செய்கிறார். ஸ்ரீவிஷ்ணுபுராணம் – தச்சித்தவிமலாஹ்லாதேத்யாதி – க்ருஷ்ணனையே எண்ணியபடி இருந்தால் புண்ணியபலமும், அவனை அடையப் பெறாமையால் பாவபலமும் அனுபவித்தாள் - என்று இப்படியாகக் கர்மபந்தத்தை அனுபவித்துக் கழித்தாள் என உரைக்கப்பட்டது. அதாவது புண்ணியபாவ பலன்கள் இரண்டையும் அரைக்ஷணத்தில் அனுபவித்தாள். (ஒருத்தி) - "ஒருத்தி" என்று கூறியவுடன் யார் தூதுவிட்டது என்று அறிந்து கொள்ள இயலுமோ என்ற கேள்வி எழலாம். பெயரை உரைக்கவில்லையே! அம்பைக் கண்டால், அதனை எய்தவன் யார் என்று அறிவது கடினமில்லை. இந்த இடத்தில் ஒரு

மிருகம் அம்புடன் கிடந்தது என்று காணும்போது, அந்த அம்பைக் குறிபார்த்துச் சரியாக ஏவியவன் யார் என்று உணர்வது கடினம் அல்லவே. "நீ அல்லவோ எய்தாய்" என்று உரைக்க எளிதே ஆகும். (ஒருத்தி) - இந்த ஸம்ஸார உலகில் அவனை எண்ணியபடியே உள்ளவள் இவள் ஒருவள் மட்டும்தானே, மற்ற ஸம்ஸாரிகள் அவனைப் பற்றி எண்ணமாட்டனர். நித்யஸூரிகள் அவனை எண்ணுவார்களே; அவர்களில் "ஒருத்தி" என்று கூறுவதாகக் குழப்பம் வாராதோ என்றால், அவர்களுக்கு பிரிவு இல்லை என்பதால் வராது. மற்ற ஆழ்வார்கள் அவனை எண்ணி வாடுவார்களே என்றால், அவர்கள் அனைவரும் இவரது உடல் உறுப்புக்களாகவே உள்ளதால், இவர் வாடுவது என்பது அவர்கள் உட்பட என்று கருத்து (பூதத்தாழ்வார் = தலை; பொய்கை, பேயாழ்வார் = திருக்கண்கள்; பெரியாழ்வார் = திருமுகம்; திருமழிசையாழ்வார் = கண்டம்; குலசேகரர், திருப்பாணாழ்வார் = திருக்கரங்கள், தொண்டரடிப்பொடியாழ்வார் = திருமார்பு; திருமங்கையாழ்வார் = திருநாபி; மதுரகவிகள், எம்பெருமானார் = திருவடிகள்).

வ்யாக்யானம் – (மதிகலங்கி) அறிவழிந்தாள் என்னுங்கோள். தன்னறிவு அழிந்தாளாகிலும் நாம் கொடுத்த அறிவு உண்டு என்றிருப்பர்; (மதியெல்லாம் கலங்கி) நாம் கொடுத்த அறிவு கொண்டு "தத்தஸ்ய ஸத்ருசம் பவேத்" என்றிராளோ என்றிருப்பர்; அறிவு தந்தார் தாமன்றோ என்று அறிவியுங்கோள். தாம் "மயர்வறுத்துத் தந்த ஜ்ஞாநப்பரப்பெல்லாம் கலங்குகைக்கு உடலாயிற்று என்னுங்கோள். மேலெழச் சிறிது கலக்கிற்றாகிலும், பின்னையும் நாம் கொடுத்த அறிவன்றோ? அப்படி கலங்குமோ என்பர். (மதியெல்லாம் உள்கலங்கி) தாம் தந்த "மயர்வறு மதிநலம்" மெல்லாம் அடிமண்டியோடே கலங்கிற்று என்னுங்கொள். அத்தனையோ நாம் இருந்தோம்; பின்பு நாம் போனவாறே அறிவு கொடுத்துக் கொள்ளுகிறோம் என்றிராமே - (மயங்குமால்) "மயங்கினாள்" என்னில், "இனிப்போனால் செய்வது என்?" என்றிருப்பர்; முடியும் தசையாயிற்று என்னுங்கோள். (என்னீரே) உங்கள் தலையில் பழியைத் துடைக்கப்பாருங்கோள்; அறிவித்தபின்பு வாராதொழிந்தால் அவனதன்றோ அவத்யம். ஆர்த்தத்வநி பொறுக்கமாட்டான், அறிவியுங்கோள். (என்னீரே) உங்களுக்கு ஸ்வரூபம்; அவனுக்கு குணம்; எனக்கு ஸத்தை; உங்களுக்கு ஒரு உக்தி.

விளக்கம் - (மதிகலங்கி) – "அறிவு இழந்தாள்" என்று கூறவேண்டும். ஆனால் இதனைக் கேட்கும் அவனோ, "தனது அறிவை மட்டும்தானே இழந்தாள். நாம் அவளுக்குக் கொடுத்த அறிவு அப்படியேதான் உள்ளது அல்லவோ?", என்று இருப்பான். (மதியெல்லாம் கலங்கி) - நாம் அவளுக்கு அளித்த அறிவு காரணமாக, இராமாயணம் ஸுந்தரகாண்டம் (9-30) – தத்தஸ்ய ஸத்ருசம் பவேத் - என்னை அவர் வந்து மீட்டுச் செல்வதே அவருக்கு ஏற்றதாகும் - என்றது போல் இருப்பாள், என்று எண்ணி அவன் இருந்துவிடுவான். பக்தியுடன் கூடிய அறிவை அல்லவோ அளித்தான்? இதனை அவனிடம் கூறுவீர்களாக. அவன் மயர்வற அளித்த ஞானம் அனைத்தும் சேர்ந்த காரணத்தினால் மட்டுமே இவ்விதம் எனது சரீரம் அவனை எண்ணிக் கலங்கக் காரணமாகிவிட்டது என்று கூறுங்கள். இதற்கு அவன் உங்களிடம், "நாம் அவளுக்கு அளித்த அறிவு என்பது சற்றே மேலோட்டமாகக் கலங்கலாம். ஆனாலும் அவ்விதம் முற்றிலுமாகக் கலங்காதே நிற்கும்", என்று உரைக்கக்கூடும். இதற்கு நீங்கள் அவனிடம், "நீவீர் அளித்த மயர்வற மதிநலம் என்பது அடியுடன் முற்றிலுமாகக் கலங்கிவிட்டது" என்று உரைப்பீர்களாக. இதனைக் கேட்ட அவன் "அவ்வளவுதானே! நாம் தாம் உள்ளோமே! நாம் பின்னர் ஒருநாள் அவளைச் சென்று சந்திக்கும்போது அந்த அறிவை மீண்டும் அளித்துவிட்டுப்போகிறேன்", என்று அங்கேயே இருக்கக்கூடும். (மயங்குமால்) - நீங்கள் அவனிடம், "ஆனால் அவள் மயங்கிவிட்டாள்", என்று உரைத்தால் அவன், "சரி, அப்படியாகில் இனி நான் சென்று என்னவாகப் போகிறது", என்று வராமல் இருந்துவிடக்கூடும். ஆகவே அவனிடம், அவளது வாழ்க்கை முடிந்துவிடும் நிலையில் உள்ளது", என்று கூறுங்கள். (என்னீரே) – நான் கூறுவதைச் சென்று உரைத்துவிட்டு உங்கள் மீது தூது செல்லவில்லை என்னும் பழி விழாமல் பார்த்துக் கொள்ளுங்கள். இவ்விதம் உரைத்த பின்னரும் அவன் வரவில்லையென்றால் அவனுக்கு அல்லவோ பழி உண்டாகும்? அவன் அடியார்களின் துன்ப ஓசையைப் பொறுக்கமாட்டான். நீங்கள் சென்று எனது செய்தியை உரைப்பீர்களாக. (என்னீரே) - இப்படியாகத் தூது செல்வதால் உங்களது ஸ்வரூபம் விளங்கும், அவனுடைய குணம் வெளிப்படும், எனக்கு அதுவே வாழ்வின் ஆதாரமாக அமையும்.

1-4-4 என்நீர்மை கண்டிரங்கி இது தகாதென்னாத
என்நீல முகில்வண்ணர்க் கென்சொல்லியான் சொல்லுகேனோ
நன்னீர்மை இனியவர்கண் தங்காதென் றொருவாய்ச்சொல்
நன்னீல மகன்றில்காள் நல்குதிரோ நல்கீரோ

பொருள் – நீலநிறம் கொண்டதான சக்ரவாகம் என்னும் பறவைகளே! என்னுடைய நிலையை நன்றாக உணர்ந்த பின்னரும், என் மீது இரக்கம் கொண்டு, என்னைப் பிரிந்து இருப்பது என்பதைச் செய்யக்கூடாது என அவன் எண்ணவில்லை. இப்படியாக உள்ள நீலமேகம் போன்ற நிறம் கொண்ட எனது தலைவனுக்கு நான் என்ன உரைக்கப் போகிறேன்? என்னுடைய நல்ல உயிரானது இனியும் தாமதம் செய்தால் என்னிடம் தங்கியிருக்காது என்ற சொல்லை அவனிடம் உரைப்பீர்களா? மாட்டீர்களா?

அவதாரிகை - "அநுபவித்தாலும் மாளாதது நான் பண்ணின பாபமேயோ?" என்று நின்றது கீழ்; இவள் அநுபவித்தாளோ பின்னை என்னில்; அவன் அரைக்ஷணம் தாழ்ந்து முகமும் மாறவைத்தபோதே எல்லாம் அநுபவித்தாவிறே. இவ்வளவிலே சில மகன்றில்கள் "நமக்குக் கிஞ்சித்கரிக்க நல்லவளவு" என்று, "நாங்கள் இங்குத்தைக்குச் செய்ய வேண்டுவதென்ன?" என்று வந்து முகம் காட்டிற்றினவாகக் கொண்டு அவற்றைப் பார்த்து, "என் தசையைக் கண்டு வைத்து இரங்காதே போனவனுக்கு நான் எத்தைச் சொல்லுவது?" என்று நிராசையாய், பின்னையும் சாபலத்தாலே, பலகால் சொல்லு மறுத்தார்க்குச் சொல்லுவாரைப்போலே, இத்தனையும் சொல்லவல்லிகளோ மாட்டிகளோ?" என்கிறாள்.

விளக்கம் - கடந்த பாசுரங்களில், "நான் எத்தனை அனுபவித்தாலும் எனது பாவபயன்கள் நீங்காமலேயே உள்ளன. அத்தனை பாவங்கள் என்னிடம் உள்ளனவே", என்றாள். இங்கு ஒரு சந்தேகம் எழலாம். இவள் பாவங்களின் பயன்களை அனுபவித்தது எப்படி என்று கேட்கலாம். இதற்கு விடை அளிக்கிறார். அவன் தனது திருமுகத்தைச் சற்றே மறைத்துக் கொண்டு, இவளது முகத்தைக் காணாமல் திருப்பி வைத்துக் கொண்டபோதே அனைத்து பாவபலன்களையும் இவள் அனுபவித்துக் கழித்தாள். அப்போது அங்கு நின்ற சில சக்ரவாகப் பறவைகள், "நாம் சிறிதாவது யாருக்கேனும் உதவ வாய்ப்பு உண்டானது", என்று எண்ணியபடி இருந்தன. இதனால் அவற்றை நீலமகன்றில் என்று கூறாமல் நன்னீலமகன்றில் என்றார். அவை அவளிடம் வந்து, "நாங்கள் உனக்குச் செய்ய வேண்டியது என்ன?", என்றன. அவற்றைப் பார்த்த நாயகி, "என்னுடைய இந்த நிலையைக் கண்டும் என் மீது இரக்கம் சொள்ளாமல் போனவனுக்கு நான் என்ன கூறுவது?'', என்று எந்தவிதமான ஆசையும் இல்லாதவள் போன்று முதலில் உரைத்தாள். ஆயினும் ஆசை தலைதூக்க, பலமுறை உரைத்தும் சொற்களைக் கேட்காதவர்களுக்கு மீண்டும் உரைப்பது போன்று, "இத்தனையும் கூறுவீர்களா? மாட்டீர்களா?", என்றாள்.

வ்யாக்யானம் - (என் நீர்மை கண்டு இரங்கி) என் நீர்மையுண்டு - என் ஸ்வபாவம் என்மார்தவம். (கண்டு இரங்கி இது தகாதென்னாத) இத்தைக்கண்டு தயைபண்ணி "நாம் பிரியுமது தகாது" என்னாதே பொகட்டுப்போனவர்க்கு. பட்டரை ஒரு தமிழன் "கேட்டு இரங்கி" என்னாதே "கண்டு இரங்கி" என்னைப் பெறுமோ?" என்ன, "அணைத்த கை நெகிழ்த்தவளவிலே வெளுத்தபடி கண்டால், பிரியத்தகாது என்றிருக்க வேண்டாவோ?". "இப்படி கூடுமோ?" என்னில், "புல்லி" இத்யாதி", "காதலர் தொடுவுழி" இத்யாதி. உனக்கு இத்தமிழ் போதாதோ? என்றார்.

விளக்கம் - (என் நீர்மை கண்டு இரங்கி) - என்னுடைய மென்மையான ஸ்வபாவம் கண்டு. நீர்மை என்பதற்கு துக்கமான நிலை என்றும் பொருள் உண்டு; அந்த நிலையைக் கண்ட பின்னரும். (கண்டு இரங்கி இது தகாதென்னாத) - இத்தகைய நிலைமையை நன்றாக அறிந்த பின்னரும் இரக்கம் கொண்டு, "நாம் இவளை விட்டுப் பிரிந்து செல்வது சரியல்ல", என்று எண்ணி என்னுடன் இருக்காமல், என்னை விட்டுப் பிரிந்து சென்றவர்க்கு. ஸ்வாமி பராசரபட்டரிடம் தமிழில் வல்ல ஒருவன், "இந்தப் பாசுரத்தில் நாயகன் பிரிந்து சென்று விடுகிறான். அதனால் அவன் அந்த வருத்தமும் கொள்ளவில்லை. மேலும் பிரிவின் காரணமாக வருந்துகின்ற நாயகியின் ஸ்வபாவத்தையும் அவன் கானவில்லை. இப்படி உள்ளபோது பாசுரத்தில் "கேட்டு இரங்கி" - தலைவியின் நிலையைக் கேள்விப்பட்டு இரக்கம் கொண்டு - என்று கூறாமல், "கண்டு இரங்கி" என்பது சரியா?", என்றான். இதற்கு பட்டர், "தன்னால் அணைக்கப்பட்ட நாயகியைத் தனது கையானது சற்றே நழுவவிட்டால், அந்தப் பிரிவு தாங்காமல் நாயகியின் உடல் வெளுக்கத் தொடங்கும். ஆகவே இதனைக் கண்ட தலைவன் – நான் பிரியக்கூடாது - என்று முடிவு செய்து விடுவான். இதனால்தான் "கண்டு இரங்கி" என்று கூறப்பட்டது", என்றார். உடனே அவன், "இப்படியும் உண்மையில் நிகழுமோ?", என்று வினவினான். இதற்கு பட்டர், "திருக்குறள் (1187) - புல்லிக்கிடந்தேன், குறுந்தொகை (399) – காதலர் தொடுவுழி - போன்றவற்றைக் காண்பாய். இத்தகைய தமிழ் உதாரணங்கள் உனக்குப் போதுமே", என்றார்.

வ்யாக்யானம் - (என் நீலமுகில்வண்ணர்க்கு என் சொல்லியான் சொல்லுகேனோ) இத்தசையிலும் "என்னுடையவன்" என்னும்படிகாணும் முகங்கொடுத்தபடி கலந்தபோது. அவர்க்கு நான் சொல்லிவிடுவது எத்தை" என்கிறாள். திருமுகம் மறுத்துப் போனவர்க்கு

எத்தைச் சொல்லுவது என்கிறாள் காணும். இங்ஙன் சொல்லுவானென்? என்னில்; கண்டு இரங்காதவரோ கேட்டு இரங்கப் புகுகிறார்? என்னுமத்தாலே. கண்டானோ பின்னை? என்னில்; ஏன், கண்டிலனோ? கலக்கிற ஸமயத்தில் கைநெகிழ்ந்தவிடமெல்லாம் வெளுக்கக்கண்டிருக்குமே. அன்றிக்கே, இவ்வளவிலே ஸந்நிஹிதனாய் என் தசையைக் கண்டு இதுக்கொரு போக்கடி பாராதே, உங்கள் பக்கலிலே கேட்டறிய இருக்கிறவர்க்கு என்னவுமாம்.

விளக்கம் – (என் நீலமுகில்வண்ணர்க்கு என் சொல்லியான் சொல்லுகேனோ) - தன்னிடம் இரக்கம் கொள்ளாமல் தன்னை விட்டு அகன்று சென்றவனை "என்னுடையவன்" என்று ஏன் கூறவேண்டும்? இப்படிப்பட்ட துன்பமான நிலையில் கூட "என்னுடையவன்" என்று கூறும்படியாக அல்லவோ அவன் என்னுடன் கலந்தபோது இருந்தான்? அப்படிப்பட்ட அவனுக்கு நான் எதனைக் கூறுவது என்கிறாள். திருமுகம் என்று இங்கு நயமாக உரைத்தது காண்க. திருமுகம் என்றால் பிராட்டியின் முகம் (திரு + முகம்), அதாவது நாயகியான என் முகத்தை உதாஸீனம் செய்துவிட்டுச் சென்றவன். இப்படிப்பட்டவனுக்கு நான் எதனைக் கூறுவது என்கிறாள். இப்படி ஏன் கூற வேண்டும் என்றால் - கண்ணால் எனது நிலையைக் கண்டு அறிந்த பின்னரும் இரக்கம் கொள்ளாமல் பிரிந்தவனோ காதால் கேட்டு எனது நிலையை உணரப்போகிறான் என்ற சந்தேகம் மேலிட்டதால் கூறினாள். ஆனால் இவளது நிலையை இவன் முன்பு பார்த்தானோ என்ற கேள்வி எழலாம். இதற்கு ஸ்வாமி பராசரபட்டரின் விளக்கம் - பார்க்கவில்லை என்று கூற இயலாது; எப்படி எனில், இவளுடன் சேர்ந்திருந்தபோது இவளை அணைத்திருந்த தனது திருக்கரம் நழுவும் நேரங்களில் இவளது உடல் வெளுத்துப் போவதைக் கண்டிருப்பான் – என்பதாகும். அல்லது "தன்னுடைய திருமேனியின் மேன்மையை அவனே அறிவான். அப்படிப்பட்ட தனது திருமேனியைப் பிரிந்தால் அவள் தாங்கமாட்டாள் என்று எண்ணி, ஆயினும் அதற்காக ஓடிவராமல் உங்கள் மூலம் எனது தூதுச் செய்தியைக் கேட்கின்ற அவனுக்கு" என்றும் பொருள் உரைக்கலாம்.

வ்யாக்யானம் - (என் நீர்மை) அவனை அநுபவிக்குமதிலும் அவனைப் பிரிந்து நோவுபடுகிற தன் ஸ்வபாவத்தைக் கட்டிக்கொண்டு கிடக்க அமைந்திராநின்றது காணும்; (கண்டிரங்கி) "எத்திறம்" என்னா, மோஹித்து உடம்பு வெளுத்துக் கிடக்கும்படி கண்டால் பிரியப்பொழுது என்றிருக்கவேண்டாவோ? (இது) தன் தசை தானும் தனக்கும் பேச்சுக்கு நிலமல்ல காணும். (என் நீல்முகில் வண்ணர்க்கு) அடியில் வடிவைக்காட்டிக்காணும்

அநந்யார்ஹமாக்கிற்று; இவ்வடிவில் புகர் அகவாயிலும் சிறிது உண்டாகப்பெற்றதில்லை. இல்லையோ? என்னில். யாமுடை ஆயன்தன் மனம் கல்லிறே. (என் சொல்லியான் சொல்லுகேனோ) என்ன பாசுரத்தையிட்டு எத்தை உங்களுக்கு நான் சொல்லிவிடுவது? நான் சொல்லிவிட இருக்கிறவன் நீங்கள் சொல்லுமளவையோ பார்த்திருக்கிறது. கண்டு இரங்காதவர்க்கு நான் எத்தைச் சொல்லுவதென்று நிராசையாய், பின்னையும் சாபலாதிஸயத்தாலே வார்த்தை சொல்லுகிறாள். திருமுகம் மறுத்தவன் கடையீட்டுக்குக் கேட்கப்புகுகிறானோ? ஸ்ரீகோபிமார் "அதவா கிம் ததாலாபை:" என்ற அநந்தரத்திலே, "அப்யஸௌ மாதரம் த்ரஷ்டும் ஸக்ருதப்யாகமிஷ்யதி" என்னுமாபோலே, "இக்க்ருஷ்ணன் பிதற்றொழிய வேறோன்றில்லையோ?" என்னா, "கலந்த நாமன்றோ வேண்டாதது; பெற்ற தாயைக் காணவாகிலும் இங்ஙனே ஒருகால் போதானோ" என்பர்களிறே. (நன்னீர்மை) நல்லுயிர். (இனி) ஆனவளவும் கால்கட்டிப் பார்த்தாள் போலே காணும். (அவர்கண் தங்காது) சேஷியான உம்முடைய பக்கலிலே தங்கில் தங்குமத்தனை. "ந சாஸ்ய மாதா" பெருமாள் பக்கல் குறையேயாய், தன் பக்கல் குறை தோற்றாதபடி பிராட்டி வார்த்தை அருளிச் செய்தவாறே, திருவடி, "நாமோதான் இங்கு நன்றாகச் செய்தோம்? பெருமாளைப் பிரிந்த அநந்தரம் முடிந்ததென்னும் வார்த்தை கேட்கப்பெற்றதில்லையே" என்ன; "மாதா" என்னும் "பிதா" என்னும் பலர்பக்கலிலே பாலிபாயக்கடவதான ஸ்நேஹத்தைப் பெருமாள் என் ஒருத்தி பக்கலிலும் ஒரு மடைசெய்து போந்தார்; அவர் இவ்வாற்றாமையாலே உண்ணாதுறங்காதொலிகடலை ஊடறுத்துக்கொண்டு வரக் கொள்ள, விடாயன் தண்ணீர்ப் பந்தலிலே வரக்கொள்ளச் சால் உருண்டு கிடந்தாப் போலே ஆகவொண்ணாது என்று நோக்கி இட்டுவைத்தேனத்தனை; அவரைக்கண்ட பிற்றைநாள் இருந்தேனாகில் காண் நீ இவ்வார்த்தை சொல்லுவது என்றாளிறே.

விளக்கம் - (என் நீர்மை) - "என்" என்று கூறுவதற்கு அடிப்படையாக உள்ள மமகாரம் கைவிடத்தக்கதாக உள்ளபோது, அவனைக் குறித்து உரைக்கையில் "என் நீர்மை" என்று கூறுவது பொருத்தமோ என்ற கேள்வி எழலாம். இதற்கு விடை அளிக்கிறார். அவனை அனுபவித்தபடி உள்ளபோது இருக்கின்ற தனது நிலையைக் காட்டிலும், அவனைப் பிரிந்து உள்ள காலத்தில் தனது ஸ்வபாவத்தைக் கூறியபடி உள்ளாள். (கண்டிரங்கி) - சேர்ந்திருந்த காலத்திலேயே, "இவனுடைய எளிமை எத்தன்மையது. இவ்விதம் உரலில் கட்டுண்டு அடிப்பட்டு நிற்கிறானே" என்று மயங்கியவள், பிரிகின்ற காலத்தில் எவ்விதம் இருப்பாள் என்று கூறவும் வேண்டுமா? ஆக, "சேர்ந்திருந்தபோது மயக்கம் அடைந்தவள்,

பிரிவதால் தாங்கமாட்டாள்", என்று எண்ணி அவன் பிரியாமல் இருக்கவேண்டாமா? (இது) - தன்னுடைய நிலைமை என்பது சொற்களால் கூற இயலாது என்பதை உணர்த்தினாள். (என் நீலமுகில்வண்ணர்க்கு) – முதலில் தனது திருமேனியின் வடிவைக் காண்பித்து என்னை தனக்கு மட்டுமே அடிமை என்று ஆக்கிக்கொண்டான். இவனுடைய திருமேனி நீலநிறமாக குளிர்ச்சியாக உள்ளபோதிலும், இவனது உள்ளத்தில் அத்தகைய குளிர்ச்சி சற்றும் இல்லையே! இவ்விதம் அவனிடம் குளிர்ச்சி இல்லை என்பதை இவள் எவ்விதம் அறிந்தாள்? திருவாய்மொழி (8-9-5) – யாமுடை ஆயன்தன் மனம் கல் – நமக்கு எளிதாக ஏவிப் பணிகொள்ளும்படியான சுலபனான க்ருஷ்ணனின் மனம் கல்லாகப் போனதே என்று உரைக்கப்போகிறாள். (என் சொல்லி யான் சொல்லுகேனோ) – என்ன சொற்களைக் கூறி நான் எதனை உங்கள் மூலமாக அவனுக்கு உணர்த்த இயலும்? என்னுடைய நிலைகுலைந்து, நான் தடுமாறியபடி இருக்கும்படிச் செய்துவிட்டு, இப்படியாக நான் தூது அனுப்பும் நிலையில் கொண்டு வந்துவிட்டவன், நீங்கள் சொல்லியா கேட்கப்போகிறான்? என்னுடைய நிலையைக் கண்டு இரக்கம் கொள்ளாமல் உள்ளவனுக்கு நான் எதனை உரைப்பது என்று இருந்தவள், அதன் பின்னர் ஆசை மேலிட உரைக்கிறாள். இதனைக் கேட்ட அந்தப் பறவைகள், "நாங்கள் கூறிய பின்னர் அவன் இரக்கம் கொண்டு வரவாய்ப்புள்ளதே", என்றன. இதற்கு அவள், "அரசன் அளித்த ஓலைக்கே பதில் தராமல் உள்ள ஒருவன், கணக்கன் அனுப்பும் ஓலைக்கா பதில் தரப்போகிறான்", என்றாள். இவ்விதமாக முதலில் அவனிடம் கோபம் கொண்டு மறுத்துவிட்டு, பின்னர் ஆசை காரணமாக அவனிடம் சொற்கள் உரைத்தவர்கள் வேறு யாரேனும் உண்டா என்பதற்கு விடை அளிக்கிறார். விஷ்ணுபுராணத்தில் கோபிகைகள் - அதவா கிம் ததாலாபை: - இந்த க்ருஷ்ணனை இடைவிடாமல் கொண்டாடியபடி, அவனைப் பற்றியே பிதற்றுவது தவிர வேறு வேலையே நமக்கு இல்லையோ – என்று கூறி, அவனைப் பற்றிப் ஏதும் பேசக்கூடாது என்று முடிவு செய்தனர். ஆனால் உடனேயே – அப்யஸௌ மாதரம் த்ரஷ்டும் ஸக்ருதப்யாகமிஷ்யதி – கலந்த நாம்தான் அவனுக்கு வேண்டாதவர்களானோம், பெற்ற தாயைக் காணவாவது ஒருமுறை வரமாட்டானா, அப்போது அவனைக் காண்போம் – என்று இளகியபடி நின்றனர். (நன்னீர்மை) - சிறந்த உயிர். (இனி) - முடிந்தவரை வருந்தியபடி தரிக்கப்பார்த்தாள். (அவர்கண் தங்காது) - அவளது உயிரானது அனைத்திற்கும் எஜமானனாகிய உமக்காகத் தங்காது, உம்முடைய உயிரானது நிற்பதாக இருந்தாலும், அவளது உயிர் தங்காது. நாயகனைப் பிரிந்தவுடனேயே மிகவும் துன்பமான நிலை ஏற்பட்டு எதனையும் செய்யத் தோன்றாத நிலையில் உயிர்தங்குவதற்கான யுக்திகள் செய்தனர் என்று கூறும்படியாக யாரேனும்

உண்டா என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார். இராமாயணம் ஸுந்தரகாண்டம் (36-30) – ந சாஸ்ய மாதா - இராமனுக்கு என்னைக் காட்டிலும் அவனது தாய், தந்தை, மற்றவர்கள் ஆகியோர் மீது அதிக ப்ரியம் இல்லை, ஆகவே அவன் வரும்வரை நான் பிழைத்திருப்பேன் - என்றது காண்க. இதன் மூலம் விரைவாக இராமன் வராத காரணத்தால் அவன் மீது குறை கூறி, தன்னிடம் எந்தவிதமான குறையும் இல்லை என்று சீதை அறிவித்த சொற்கள் காண்க. உடனே அனுமன், "ஆகா! இராமனைப் பிரிந்த பின்னர் உயிர் நீங்கியது போன்ற நிலையை நான் எங்கும் காண இயலவில்லையே", என்று சற்றே சீதையைக் குறை கூறும்படி உரைத்தான். இதற்குச் சீதை விடை தருகிறாள். தாய், தந்தை என்று தன்னுடைய அன்பானது பல இடங்களிலும் பிரிந்து சென்று விடாமல் என் ஒருவள் மீது மட்டுமே தன்னுடைய அன்பு பாயும்படிச் செய்தான். அப்படிப்பட்டவனுக்கு, எனது பிரிவுத் துன்பம் எல்லை மீற, உணவும் உறக்கமும் இன்றி அலைவீசுகின்ற கடலை அடைத்தபடி இங்கு வருவான். எனது உயிரை நான் ஏன் அவன் வரும்வரையில் பிடித்துக் கொள்ளவேண்டும் என்றால் – தாகம் எடுத்த ஒருவன் தண்ணீர்ப்பந்தல் உள்ளதைக் கண்டு ஓடி வர, அங்கு இருந்த நீர்த்தொட்டியானது கவிழ்ந்து கிடந்தால் ஏமாற்றம் அடைவான் அல்லவோ? அது போன்று இராமனின் கதி ஆகக்கூடாது என்பதால் உயிர் தரிக்கிறேன். அவனைக் கண்டவுடன் நான் இருந்தேன் என்றால் நீ கூறும் இந்தச் சொற்கள் பொருந்தும் – என்றாள்.

வ்யாக்யானம் - (ஒருவாய்ச்சொல்) ஒரு உக்தி நேர அமையும். "வாசா தர்மமவாப்நுஹி". (நன்னீலம் இத்யாதி) அவர் நீலமுகில் வண்ணராயிருந்தார்; நீங்களும் நீல மகன்றில்களாயிருந்திகோள்; செயலும் அவரைப்போலே ஆகிறதோ, இத்தனையும் செய்கிறிகளோ? முதல் வார்த்தையிலே பதின்கால் சொல் மறுத்தாரைச் சொல்லுமாபோலே சொல்லுகிறாளிறே ஆற்றாமையின் கனத்தாலே.

விளக்கம் - (ஒருவாய்ச்சொல்) - ஒரு சொல் கூறினால் போதுமானது. இராமாயணம் ஸுந்தரகாண்டம் (39-9) - வாசா தர்மமவாப்நுஹி - அனுமனே! உனது வாக்கு மூலம் நீ தர்மத்தை அடைவாயாக - என்று கூறுவது போன்று கொள்க. அவன் நீலமேகம் போன்ற நிறம் கொண்டிருந்தான், நீங்களும் அதே போன்று நீலநிறத்தில் உள்ள பறவைகளாக உள்ளீர்கள். நீங்கள் அவன் போல் இருந்துவிடுவீர்களோ? எடுத்தவுடனேயே மறுப்பு தெரிவிப்பவர்களுக்கு உரைப்பது போன்று இவைகளிடம் தனது பிரிவாற்றாமை காரணமாக உரைக்கிறாள். கூறுவீர்களா, மாட்டீர்களா - என்கிறாள்.

1-4-5 நல்கித்தான் காத்தளிக்கும் பொழிலேழும் வினையேற்கே
நல்கத்தா னாகாதோ நாரணனைக் கண்டக்கால்
மல்குநீர்ப் புனற்படப்பை யிரைதேர்வண் சிறுகுருகே
மல்குநீர்க் கண்ணேற்கோர் வாசகங்கொண் டருளாயே.

பொருள் - மிகுதியான தண்ணீரை உடைய தோட்டங்களில் உங்களுக்கு இரையாக உள்ள சிறிய மீன்களைத் தேடுகின்ற குருகே! ஏழு உலகங்களையும் தான் விரும்பியவனாக, அந்த உலகங்களுக்கு விருப்பம் அல்லாதவற்றை தானே நீக்கியவனாக நின்று காப்பாற்றும் ஸ்ரீமந்நாராயணனை நீங்கள் காண நேர்ந்தால், "எனக்குத் திருவருள் புரிந்தால் ஆகாதோ?", என்று கேளுங்கள். அதற்கு அவன் உங்களிடம் உரைக்கின்ற மறுமொழியைக் கேட்டு வந்து, மிகுதியான கண்ணீரால் நிரம்பிய கண்களைக் கொண்ட என்னிடம் கூற வேண்டும்.

அவதாரிகை - எங்களை விடீர்; முடிவார்க்கு வேண்டாவிறே; ஜீவிக்க நினைத்திருக்கிற தமக்குத் தாம் வேண்டாவோ? என்கிறாள். தம்முடைய நாராயணத்வம் ஒறுவாய்ப் போகாமே நோக்கிக் கொள்ளச் சொல்லும் என்கிறாள்.

விளக்கம் – கடந்த பாசுரங்களில், "நான் முடிவதற்கு முன்பாக வந்து எனக்கு உதவவேண்டும்", என்று பலமுறை விண்ணப்பம் செய்தாள். ஆயினும் அவன் வந்து தனது திருமுகத்தைக் காண்பிக்கவில்லை. உடனே இவள், "என்னுடைய இருப்பு என்பது இல்லாமல் போனால் போகட்டும். அவன் தன்னுடைய இருப்பை நிலைநாட்டிக் கொள்வதற்காகவாவது வரவேண்டாமா?" என்கிறாள். இதற்கு அந்தக் குருகுகள், "உன்னைக் காக்கவில்லை என்பதால் அவனது இருப்புக்குத் தாழ்ச்சி ஏற்படுமோ?", என்று கேட்டன. இதற்கு விடை அளிக்கிறாள், "நாராயணன் என்ற பெயருக்கு ஏற்பவும், அவனது 'அனைத்தையும் காப்பவன்' என்ற பெயருக்கு ஏற்பவும் அவன் வரவேண்டும். இல்லையென்றால், அவனது 'அனைத்தையும் காப்பவன்' என்ற நிலைக்குக் குறைபாடு ஏற்பட்டுவிடும். ஆகவே இந்தக் குறை ஏற்படாமல் பார்த்துக் கொள்ளும்படி உரைப்பீர்களாக". என்கிறாள்.

வ்யாக்யானம் - (நல்கி) விபூதிரக்ஷணம் பண்ணும்போது, கர்த்தவ்யபுத்த்யாவின்றிக்கே பேறு தன்னதாகக்கிடீர் ரக்ஷிப்பது. எனக்குத் தன்பக்கல் உண்டான வ்யாமோஹம் தனக்கு

விபூதியில் உண்டாயாயிற்று ரக்ஷிப்பது. (தான்) அபேக்ஷிப்பாரின்றிக்கேயிருக்கத் தானே ரக்ஷிக்குமவன். (பொழிலேழும்) கீழும் மேலும் ஒன்றாக நினைத்துச் சொல்லுகிறதாதல், ஸப்த த்வீபவதியான பூமியைச் சொல்லுகிறதாதல்; ஸ்வசரீர ரக்ஷணம் பண்ணுவது ஸ்நேஹபுரஸ்ஸரமாகவிறே. (நல்கித்தான் இத்யாதி) நாமரூப விபாகாநர்ஹமாய்க் கிடந்தவன்று ஆர் இருந்து அபேக்ஷிக்க இத்தை உண்டாக்கிற்று? சக்த்யவஸ்தப்ரபை போல் தான் என்கிற சொல்லுக்குள்ளேயாய் தன்னையிட்டு வ்யவஹரிக்க வேண்டினவன்று தன்மேலே ஏறிட்டுக்கொண்டு நோக்கினானாயிற்று. (காத்தளிக்கும்) காத்துக்கொடுக்கும் என்னுதல்; நோக்கி ரக்ஷிக்கும் என்னுதல்.

விளக்கம் – "நல்கித்தான் காத்தளிக்கும்" என்பதை இருவிதமாகப் பிரித்துப் பொருள் கொள்ளலாம். "பொழில் ஏழையும் தான் நல்கிக்காத்தளிக்கும்" என்பது முதல் வகையாகும். இவ்விதம் கொண்டால், அனைத்தையும் தானாகவே விரும்பி, அவற்றுக்கு விருப்பம் அல்லாதவற்றை விலக்கிக் காப்பது என்பதாகும். "பொழிலேழும் காத்துத் தான் நல்கி அளிக்கும்" என்று பிரிப்பது இரண்டாம் வகையாகும். அதாவது, ப்ரளயகாலத்தில் இந்த ஏழு உலகங்களையும் பாதுகாத்து, ஸ்ருஷ்டியின்போது மீண்டும் அளித்தல் என்பதாகும். இப்படியாக அனைத்தையும் காப்பாற்றும் போது, "இவற்றைக் காப்பது நமது கடமை" என்று எண்ணாமல், "இவற்றைக் காப்பது நமது பேறு" என்று எண்ணியபடி அல்லவா காக்கிறான்? எனக்கு அவன் மீது உண்டான ப்ரேமை போன்று, அவனுக்கு உலகங்களின் மீது ப்ரேமை உள்ளதால் காக்கிறான். (தான்) – தன்னை விரும்புபவர்கள் என்று யாரும் இல்லை என்றாலும் தானாகவே வலிய வந்து காப்பாற்றுகிறான். (பொழிலேழும்) – பொழில் என்றால் லோகங்கள். தமிழ் நிகண்டில் - பொழிலே சோலையும் உலகமும் புகழ்வர் - என்றது காண்க. இதற்கு இரண்டு பொருள் உரைக்கலாம். இந்த உலகம், கீழ் உலகம் ஆகியவற்றை ஒன்றாகக் கொண்டு, மேலே உள்ளதான ஆறு உலகங்களுடன் சேர்த்து ஏழு உலகம் என்பது ஒரு பொருள். மேலே உள்ள ஆறு உலகங்கள் = புவர்லோகம், சுவர்லோகம், மகர்லோகம், ஜனலோகம், தபோலோகம் மற்றும் ஸத்ய லோகம் ஆகும். அல்லது பூமியும், கீழே உள்ள ஏழு பாதாள லோகங்களும் கூறப்பட்டன எனலாம். அல்லது பூமியின் ஏழு தீவுகளைக் கூறுவதாகவும் கொள்ளலாம். ஏழு தீவுகள் = ஜம்புத்வீபம் உள்ளிட்டவை. ஆகவே இவன் இந்தப் பூமியை காப்பது என்பது, ஒருவன் தனது சரீரத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்ற ஆசை கொள்வது போன்று ஆகும். (நல்கித்தான் இத்யாதி) – நல்குதல் என்பது இங்கு கொடுத்தல் என்ற பொருளில் கொள்க. அதாவது ஸ்ருஷ்டியின் முன்பாக உருவம், பெயர் என்று பிரிக்க இயலாதபடி

அனைத்தும் ஒன்றாகக் கிடந்தன. அப்போது இவ்விதமாக இவை அனைத்தையும் மீண்டும் படைக்கவேண்டும் என்று யார் இவனிடம் விரும்பிக் கேட்டதால் இவன் படைத்தான்? யாரும் கேட்கவில்லை, தானாகவே செய்தான் என்று கருத்து. நீறுபூத்த நெருப்பு போன்று "தான்" என்பதற்குள்ளே அனைத்தையும் வைத்து, தன்னை வைத்து பேச வேண்டி நின்ற அன்று, தானே அளிப்பவன். (காத்தளிக்கும்) - இங்கு "காத்து" என்பதற்கும், "அளிக்கும்" என்பதற்கும் ஒரே பொருள் தோன்றுவதால் "கூறியது கூறல்" என்ற புநருக்தி தோஷம் ஏற்படுமோ என்ற சந்தேகத்தை நீக்குகிறார். அனைத்துடன் ப்ரியமாகப் பழகுகிண்ற காலத்தில் நமது விருப்பங்கள் தவிர மற்ற விருப்பம் அற்றவைகள் நிகழாமல் பார்த்துக்கொள்பவன் – இது "காத்து" என்பதாகும்; ஸ்ருஷ்டி காலத்தில் ஸம்ஹாரம் மற்றும் காப்பதைச் செய்பவன் – இது "அளிக்கும்" என்பதாகும். ஆக ப்ரளய காலத்தில் காப்பாற்றி, மீண்டும் அளிப்பான்; மற்ற காலங்களில் நம்மைப் பாதுகாத்து நிற்பான்.

வ்யாக்யானம் - (வினையேற்கே நல்கத்தானாகாதோ) இல்லாதவன்று உண்டாக்கினாய்; உண்டாக்கினதுக்குப் பலம் கர்மத்தை ஏறிட்டுக்கைவிடுகையோ? ஸ்வஜநரக்ஷணம் பண்ணலாகாதோ? நாட்டுக்கிட்ட நினைப்பு அந்த:புரத்துக்கு அரிதாக வேணுமோ? (வினையேற்கே) கடலிலே ஏற்றமிட்டுத் தண்ணீர் அரிதாம்படியான பாபத்தைப் பண்ணுவேனே! (நாரணனைக் கண்டக்கால்) ஜீவஸமூஹத்தினுடைய ஸ்வரூப ஸ்தித்யாதிகள் ஸ்வாதீநமாய், இவை ப்ரகாரமாகத் தாம் ப்ரகாரியாய், இவற்றிலே ஒன்று குறையிலும் தம் இழவாம்படி இருக்கையாலே, நாராயணன் என்று விருதூதித் திரிகிறவரைக் கண்டால், "இப்போ யோகரூடியோ என்றிருந்தோம்; மஹாவ்ருக்ஷத்தோ பாதியோ?" என்று கேளுங்கோள். (மல்குநீர் இத்யாதி) உன் செயல் பரார்த்தமாய் இருந்ததீ! பெருகா நின்றுள்ள நீரை உடைத்தான நீர்நிலம் உண்டு - கொடித்தோட்டம்; அதிலே, (இரைதேர்) பேடையின் வாய்க்கு அடங்குவது தேடாநின்றது. "புள்ளுப் பிள்ளைக்கிரை தேடும்" என்னக்கடவதிறே. கயல் உகளாநிற்கச்செய்தேயிறே பிள்ளை வாய்க்கு அடங்குவது தேடுகிறது.

விளக்கம் - (வினையேற்கே நல்கத்தானாகாதோ) – ஏதும் இல்லாதபோது அனைத்தையும் உண்டாக்கினாய். அப்படி உண்டாக்கிய பின்னர் எங்களுக்குக் கிடைத்த பலன் என்பது, எங்களது கர்மவினைகள் அனைத்தையும் காரணமாகக் காட்டி எங்களை நீ கைவிடுவதுதான் போலும். உன்னுடைய மக்களை நீ காப்பாற்ற வேண்டாமா? அரசன்

ஒருவன் பொதுவாக நாட்டிற்கு இட்ட சட்டமானது அந்தப்புரத்திலும் பொருந்தும் அல்லவோ? (வினையேற்கே) - கடலில் ஏற்றம் வைத்து இறைத்தபோதிலும் வேண்டிய நீர் கிட்டவில்லை எனபவனின் நிலை போன்று அனைத்தையும் காக்கவல்ல அவனைப் பெற இயலாதபடி, எத்தனை கழித்தாலும் தீராமல் எனது பாவங்கள் உள்ளனவே! (நாரணனைக் கண்டக்கால்) – அனைத்து உயிர்களின் ஸ்வரூபம், அவற்றின் இருப்பு போன்றவை தனது கட்டுப்பாட்டில் கொண்டவனாக; இவை ப்ரகாரமாகவும், தான் ப்ரகாரியாகவும் உள்ளவனாக; இவற்றில் ஏதேனும் சற்றே குறைந்தாலும், தனக்கு இழப்பு நேர்ந்தது என்று உள்ளவனாக; "நானே நாராயணன்" என்று தனது பெயரை கூறிக்கொண்டு செல்பவனை நீங்கள் எங்காவது காணும்போது, "உமக்கு நாராயணன் என்னும் திருநாமம் உமது செயல்களின் காரணமாக, அஸாதாரணமான திருநாமமோ என்று இத்தனை காலம் எண்ணி ஏமாந்தோம்; ஆனால் சுள்ளி ஒன்றுக்கு மஹாவ்ருக்ஷம் என்று பெயர் இருப்பது போன்றுதான் உமக்கும் இந்தத் திருநாமம் உள்ளது போலும்", என்று கூறுங்கள். (மல்குநீர் இத்யாதி) மிகுந்த நீரைக் கொண்டதான கொடித்தோட்டத்தில். (நிரைதேர்) – உனது பேடையின் வாயில் புகும் அளவிற்குச் சிறிதாக உள்ள மீன்களைத் தேடியபடி உள்ள குருகே! பெரியதிருமொழி (5-1-2) – புள்ளுப்பிள்ளைக்கிரை தேடும் - என்ற பாசுரம் இங்கு ஒப்பு நோக்குக. மீன்கள் பல தாவித் திரிகின்றபோதிலும், தன்னுடைய சிறிய குருகின் வாயில் புகும் அளவிற்கு உள்ள மீனை மட்டுமே தேடுகிறது.

வ்யாக்யானம் - (வண் சிறுகுருகே) குருகு - வண்டானம்; கொய்யடிநாரை. வண்மை – அழகும் ஔதார்யமும். கைப்பட்ட இரை தன் மிடற்றுக்குக் கீழ் இழித்தாதாயிற்று. நான் உபவாஸக்ருசையாயிருக்க நினையாதிருக்கும் அவனைப்போலன்றே உன் ஔதார்யம். (சிறுகுறுகே) கார்யகாலத்தில் ப்ருஷதம்சகமாத்ரமாக வேண்டா. தூது போகைக்குச் சிரமம் செய்திருப்பாரைப்போலே இருந்தது உன் வடிவில் லாகவம். (மல்குநீர்க் கண்ணேற்கு) இதுவும் ஒரு நீர்நிலம் இருக்கிறபடி பாராய். இரைதேடுகிற இத்தைவிட்டு இத்தைப் பார்க்குமோ என்னில், பார்க்குமிறே; இங்கேயும் சேலும் கயலும் உண்டாகையாலே. (மல்குநீர்க்கண்ணேற்கு) தனக்கு நிரூபகம் கண்ணநீர்போலேகாணும். அதாவது - கலவியில் ஆநந்தாச்ரு, பிரிவில் சோகாச்ரு. (ஓர் வாசகங்கொண்டு) நேரே உடம்பைத் தரவேணும் என்று சொல்லமாட்டாளே, "மறுப்பரோ" என்னும் பயத்தாலே. மறுக்கும் வார்த்தையும் அமையும் இத்தலைக்கு; அவர்பக்கலுள்ளது ஒன்றாமத்தனையே வேண்டுவது; "தாரான் தரும் என்றிரண்டத்தில் ஒன்றதனை" என்றிறே மற்றும் பிராட்டிமார் பாசுரம். "மெய்ம்மை சொல்லி முகம்நோக்கி விடைதான் திருமேல் மிகநன்று"

என்றும், "பாவி நீ என்றொன்று சொல்லாய்" என்றுமிறே இருப்பது. (அருளாயே) அவை திர்யக்குக்களாகவுமாம், தான் ஜநககுல ஸுந்தரியாகவுமாம், உபகரிகிறது பகவத் விஷயமானால் இங்ஙனல்லது சொல்லவொண்ணாது. "நம்பி ஏறுதிருவுடையான் தாஸர் திருநாட்டுக்கு நடந்தார்" என்று பட்டர்க்கு விண்ணப்பஞ்செய்ய, துணுக்கென்று எழுந்திருந்து, "அவர் ஸ்ரீவைஷ்ணவர்களுடன் பரிமாறும்படிக்கு, திருநாட்டுக்கு எழுந்தருளினார் என்னவேணுங்காண்" என்று அருளிச்செய்தார்.

விளக்கம் - (வண் சிறுகுருகே) – வண்மை என்றால் அழகு மற்றும் தாராள மனப்பான்மை என்று இரு பொருள் உண்டு. இதற்கு வண்மை உள்ளதாக ஏன் கூறவேண்டும்? தன்னுடைய இரையானது அலகில் சிக்கியபோதிலும், தான் தனது கழுத்துக்குக் கீழே அந்த இரையைக் கொண்டு செல்லாமல் தனது பேடைக்காக வைத்துள்ள தன்மையே அதன் ஔதார்யம் ஆகும். ஆனால் இவன் செய்வது என்ன? நான் இங்கு உண்ணாமல் அவனை எண்ணி வாடும்போதிலும் அவன் என்னை எண்ணவில்லை. ஆனால் நீ உனது பேடைக்காக இரையை விழுங்காமல் காக்கிறாய்; ஆக உனது தாராளம் என்பதைப்போல் அவனது தாராள மனம் இல்லை. (சிறுகுருகே) - சரியான நேரத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் பூனை போன்று உனது செயல் இருக்கவேண்டாம்; தூது செல்லும்போது மிகுந்த ஈடுபாடு உடையவர்கள் போன்றே உனது செயல் இருப்பதாக. (மல்குநீர்க் கண்ணேற்கு) – எனது கண்களில் கண்ணீர் பெருகி நின்றபடி, நீர்ப்பரப்பு போன்று உள்ளதை நீ கண்டாயா? ஆனால் தனது இரையைத் தேடுவதை நிறுத்திவிட்டு இவளை அந்தக் குருகுகள் பார்க்குமோ என்ற சந்தேகம் எழலாம்; நிச்சயம் பார்க்கும். ஏன்? இவளது கண்களும் மீன்களைப் போன்று அல்லவோ உள்ளன, ஆகையால் அவை நிச்சயம் பார்க்கும். (மல்குநீர்க் கண்ணேற்கு) - தன்னுடைய சோகத்தை நிரூபிக்க இவளது கண்ணீரே சாட்சியாகக் கொண்டிருக்கிறாள். அவனுடன் சேர்ந்துள்ளபோது ஆனந்தக்கண்ணீரும், பிரிந்து நிற்கும்போது துக்கக்கண்ணீரும் விட்டபடி உள்ளாள். (ஓர் வாசகங்கொண்டு) - "நேராக வந்து நிற்கவேண்டும்" என்று உரைக்காமல், "ஒரு வார்த்தை கூறுங்கள்" என்றாள். ஏன்? அவன் "வரமாட்டேன்" என்று மறுத்தால் என்ன செய்வது என்னும் பயத்தால் ஆகும். அவன் "வரமாட்டேன்" என்று மறுக்கின்ற வார்த்தையும் கூட இவள் ஏற்பாள் – காரணம், அவன் "வருகிறேன்" என்றால் தனது உயிர் தரிப்பாள். "மாட்டேன்" என்றால் முடிந்துவிடத் தயாராக உள்ளாள். அவன் ஏதும் கூறாமல் இருப்பதால் மட்டுமே துன்பமாக உள்ளாள். ஆகவே "மாட்டேன்" என்பதும் இவளுக்கு

ஏற்புடையதே ஆகும். சிறியதிருமடல் - தாரான் தரும் என்றிரண்டத்தில் ஒன்றதனை – என்றது காண்க. மேலும் கீழே உள்ள வரிகள் காண்க:

- நாச்சியார் திருமொழி (13-9) – மெய்ம்மை சொல்லி முகம்நோக்கி விடைதான் திருமேல் மிகநன்று – "உன்னை நான் ஏற்கிறேன்" என்று தனது திருமார்புடன் சேர்ந்துக் கொண்டான் என்றால் நல்லது; அப்படி அல்லாமல் "நீ எனக்கு வேண்டாம்" என்று எனது முகம் பார்த்து உரைத்தால், எனது முடிகின்ற செயலுக்கு அனுமதி வழங்கினான் என்பதால் மிகவும் நன்று.

- திருவாய்மொழி (4-7-3) – பாவி நீ என்றொன்று சொல்லாய் - உன்னை என்னால் காண இயலாதபடி பாவம் செய்துள்ளேன். அதனை உரைக்கும்விதமாக, "நீ பாவம் செய்தவன்" என்றாவது என் முன்பாக வந்து குற்றம் உரைத்தாலும் நான் உன்னைக் காண்பேனே.

(அருளாயே) – சீதை போன்று இவளும் பறவைகளைப் பார்த்து "அருளாய்" என்கிறாள்; இதன் காரணம் அந்தப் பறவைகள் மூலம் தனக்குக் கிட்டப்போவது பகவத் விஷயம் என்பதால், அவை மிகவும் உயர்ந்தவை ஆகும்; எனவே "அருளாய்" என்று மரியாதையாக உரைக்கிறாள். ஸ்வாமி பராசரபட்டரிடம் வந்த ஒருவர், "நம்பி ஏறுதிருவுடையான் தாஸர் திருநாட்டுக்கு நடந்தார்" என்று உரைத்தார். உடனே திகைத்துப்போன பட்டர், "அவர் திருநாட்டிற்கு எழுந்தருளினார் என்று கூறுங்கள், காரணம் அங்குள்ள ஸ்ரீவைஷ்ணவர்களுடன் சேர்வதற்காகச் சென்றார் அல்லவோ", என்றார். இதன் மூலம் இங்குள்ள தனது தாழ்ச்சியையும், அங்குள்ளவர்களின் மேன்மையையும் வெளிப்படுத்துகிறார். ஆகவே பகவத் விஷயம் அத்தனை உயர்ந்தது என்றபடி.

1-4-6 அருளாத நீரருளி யவராவி துவராமுன்
அருளாழிப் புட்கடவீ ரவர்வீதி யொருநாளென்று
அருளாழி யம்மானைக் கண்டக்கா லிதுசொல்லி
அருளாழி வரிவண்டே யாமுமென் பிழைத்தோமே.

பொருள் – வட்டமான வரிகள் கொண்ட வண்டே! அருட்கடலான ஸர்வேச்வரனை (அல்லது தயை வடிவான சக்கரத்தாழ்வானைக் கொண்ட எம்பெருமானை) நீ காண

நேர்ந்தால் அவனிடம், "சற்றும் திருவருள் செய்யாத நீவீர் திருவருள் புரிந்து, நாயகியின் உயிரானது பிரிவதற்கு முன்பாக, அருள் வடிவமான கருடனை அவள் உள்ள இருப்பிடம் வழியாக இன்று ஒருநாள் செலுத்துவீராக", என்று கூறவேண்டும். அதனையும் அவன் செய்யவில்லையென்றால், நாங்கள் செய்த குற்றம் என்ன?

அவதாரிகை – "எங்கள் ஆற்றாமை பரிஹரித்திலராகிலும், தம்முடைய நாராயணத்வம் ஒறுவாய்ப்போகாமே நோக்கிக்கொள்ளச் சொல்லுங்கோள்" என்று நின்றது கீழ்; இதுக்கு அவர்க்கு மறுமாற்றம் – "நம்முடைய நாராயணத்வமும் அழியவமையும், தரமல்லாதாருடன் கலந்து வரும் அவத்யத்திற்காட்டில்" என்றிறே; நமக்கு அவத்யம் வாராமே, எங்கள் ஸத்தையுங்கிடக்கைக்கு ஒரு வழியுண்டு; தாம் அழகு செண்டேறப் புறப்படுதல், ஆனைக்கு அருள் செய்யப் புறப்படுதல் செய்வன சில உண்டிறே; அப்போது எங்கள் தெருவே போனால், நமக்கு ஸ்வரூப ஹாநி வாராது; நாங்களும் ஜாலகரந்த்ரத்தாலே கண்டு ஜீவித்துக்கிடப்புதோம்; இப்படி அவிருத்தமாகச் செய்யலான பின்பு அத்தைச் செய்யச் சொல்" என்று ஒரு வண்டை இரக்கிறாள்.

விளக்கம் – "என்னுடைய பிரிவாற்றாமை என்னும் துன்பத்தை நீங்கும் பொருட்டு அவன் வரவில்லை என்றாலும், தன்னுடைய நாராயணத்வம் என்ற தன்மை குறைந்து போகாமல் இருப்பதற்காகவாவது எங்களை வந்து பார்க்கவேண்டும்", என்று கடந்த பாசுரத்தில் உரைத்தாள். இதனைக் கேட்ட ஸர்வேச்வரன் அந்தக் குருகுகளிடம், "தரம் அல்லாதவர்களுடன் கலப்பதன் காரணமாக உண்டாகும் தாழ்ச்சி என்பதைக் காட்டிலும் நம்முடைய நாராயணத்வம் அழிந்தால் ஏதும் பாதகம் இல்லை", என்று பதில் உரைத்தான். இதற்கு இவள் பதில் உரைக்கிறாள் - "அவனுக்கு எந்தவிதமான தாழ்வும் ஏற்படாமல், எங்களது வாழ்விற்கு வழி செய்யும் மார்க்கம் ஒன்று உள்ளது. அவன்தான் அவ்வப்போது தனது அழகை அனைவருக்கும் காண்பித்து, அனைவரின் மனதும் கலையும்படியாகச் செய்வதற்காக அவ்வப்போது வீதிகளில் செல்வது வழக்கம் அல்லவோ? அல்லது யானைக்கு அருள் செய்யப் புறப்படுதல் போன்ற செயல்களைச் செய்வதற்காகச் செல்பவன் அல்லவோ? அவ்விதம் அவன் செல்லும்போது எங்களது இருப்பிடம் வழியாகச் சென்றால் அவனுடைய மேன்மைக்கு எந்தவிதமான தாழ்வும் ஏற்படாது; நாங்களும் ஜன்னல்கள் மூலமாக அவனைக் கண்டு, எங்களது உயிரை நிலைநிறுத்திக் கொள்வோம். இவ்விதம் மாறுபாடு இல்லாதபடி உரைப்பாயாக" - என்று ஒரு வண்டிடம் தூது போகும்படியாக உரைக்கிறாள்.

வ்யாக்யானம் - (அருளாத நீர்) "ஏதத்வ்ரதம் மம" என்று அருளுகைக்கு ஸங்கல்பித்திருக்குமாப்போலே, அருளாமைக்கு ஸங்கல்பித்திருக்கிற நீர். "மயர்வறமதிநலமருளினன்" என்று நெஞ்சுருகிக் கிடக்குமவர் "அருளாத நீர்" என்கிறது - என்ன தசாவிசேஷம் என்று அறிகிறிலோம். "அருளாத நீர்" என்று – ஒரு திருநாமம் சாற்றுகிறாள். அன்றிக்கே, தயாவிஷயம் பெறாமையாலே தயை குமரிருந்து தயை பண்ணாதிருக்கிற நீர், தயைக்கு விஷயம் போருமிடத்திலே தயை பண்ணி என்னவுமாம். (அருளி) அருளே நிரூபகமான ஸ்வரூபம் உம்மது; நிர்தயர்க்கும் "ஐயோ!" என்ன வேண்டும் தசை அவளது; அருளாதொழியும்படி எங்ஙனே? (அவராவி துவராமுன்) பின்னையும் அருளத் தவிரீரிறே; அது அஸத்ஸமமாவதற்கு முன்னே அருளப்பாரும். அவளுடைய ப்ராணன் பசையற உலருவதற்கு முன்னே அருளப்பாரும். "ஜீவந்தீம் மாம் யதா ராமஸ்ஸம்பாவயதி கீர்த்திமாந்" என்னுமாபோலே.

விளக்கம் - (அருளாத நீர்) - இராமாயணம் யுத்தகாண்டம் (18-33) – ஏதத்வ்ரதம் மம – என்னை அண்டியவனைப் பாதுகாத்தல் என்பது எனது விரதம் ஆகும் - என்று கடாக்ஷம் செய்வதற்கு நீவிர் ஸங்கல்பித்து வைத்தது போன்று, ஒரு சிலரைக் கடாக்ஷிக்கமாட்டேன் என்றும் ஸங்கல்பம் வைத்துள்ளீர் போலும். மயர்வறமதிநலமருளினன் - என்று தனது உள்ளம் உருகி நிற்பவர் "அருளாத நீர்" என்னும்படியான சொற்கள் உரைப்பது எதனால் என்று அறிய இயலவில்லை! "அருளாத நீர்" என்ற புதியதான திருநாமம் ஒன்றை எம்பெருமானுக்குச் சூட்டுகிறாள். அல்லது "அருளாத நீர் அருளி" என்று கூறுவதற்கு வேறு ஒரு பொருள் உரைக்கலாம். அதாவது கடாக்ஷம் பெறுவதற்கான தகுதி படைத்த உயிர்கள் கிட்டாமையால், கடாக்ஷம் செய்வது எப்படி என்று தெரியாமல், அந்த அனுபவம் பெறாமல் நிற்கும் நீவீர், கடாக்ஷம் செய்வதற்கான தகுந்த வாய்ப்பு கிட்டிய இப்போது இவளுக்குத் தயை செய்யவேண்டியதானே - என்றும் கொள்ளலாம். (அருளி) – "இவன் கடாக்ஷம், தயை நிரம்பியவன்" என்று அந்தத் தன்மைகள் கொண்டே நிரூபிக்கும்படியாக உனது ஸ்வரூபம் உள்ளது; எந்தவிதமான கருணை என்பதும் இல்லாதவர்களால் கூட, "ஐயோ பாவம்" என்று இரக்கம் கொள்ளும்படியாக இவளது நிலை உள்ளது; இப்படி இருக்க நீவீர் கருணை காட்டாமல் உள்ளது எப்படிப்பொருந்தும்? (அவராவி துவராமுன்) - ஆகவே அருள்வதற்குத் தவறவேண்டாம். அவளது உயிர்பிரிந்து அவள் "உயிரற்றவள்" என்ற நிலைக்கு வருவதற்கு முன்பாக கருணையுடன் கடாக்ஷிக்கவேண்டும். அவளது ப்ராணன் பிரிந்து செல்வதற்கு முன்பாக அருளவேண்டும்.

இராமாயணம் ஸுந்தரகாண்டம் (3-10) - ஜீவந்தீம் மாம் யதா ராமஸ்ஸம்பாவயதி கீர்த்திமாந் - மிகுந்த கீர்த்தி நிரம்பிய இராமன் "நான் பிழைத்திருக்கவேண்டும்" என்ற நிலையை எனக்கு அளித்து என்னைக் கௌரவிக்கும்விதமாக நீ அவரிடம் எனது நிலையை உரைப்பாயாக - என்றது காண்க.

வ்யாக்யானம் - "நாங்கள் சொல்லுமத்தனையேயோ வேண்டுவது? அவனருளப்புகா நின்றனோ?" என்ன; நீங்கள் அறிவிக்குமத்தனையே வேண்டுவது; கொடுவருவாரும் அங்கே உண்டு. (அருளாழிப்புள்) அருட்கடலான புள்ளு. "வெஞ்சிறைப்புள்" என்றாள் கொண்டுபோனபடியாலே; இப்போது வரவுக்கு உடலாகையாலே "அருளாழிப்புள்" என்கிறாள். (கடவீர்) அநுகூலர் கண்டு வாழுகைக்கும் ஸுகஸ்பர்சத்தாலுமாகப் போகாதே பிசுகிச்சுழியா நிற்குமிறே; அசேதநமான ரதத்தோபாதி வடிவம்பாலே தாக்கி நடத்தவேணுமாயிற்று. எங்கேதான்? என்னில் (அவர் வீதி) அவள் தெருவிலே. அங்ஙனே ஒண்ணுமோ? ஒரு தெருவிலே பலகால் போகப்புக்கவாறே "இது வெறுமனன்று" என்றிரார்களோ? என்னில்; (ஒருநாள்) நாங்கள் ஜீவித்துக் கிடக்கைக்கு ஒருநாள் போகவமையும்.

விளக்கம் – இதனைக் கேட்ட அந்த வண்டுகள், "நாங்கள் சென்று இத்தனை உரைக்கவேண்டுமா? அதன் பின்னரும் அவன் வரவில்லை என்றால் என்ன செய்வது?", என்றன. இதற்கு இவள், "நீங்கள் இவ்விதம் உரைத்தாலே போதுமானது. அதன் பின்னர் எனது நிலையை அவனுக்கு உணர்த்தி, அவனை இங்கு கொண்டு வருபவர்கள் அவனிடம் பலர் உள்ளனர்", என்று கூறத் தொடங்கினாள். (அருளாழிப்புள்) – அருட்கடலான கருடன். திருவாய்மொழியில் (1-4-1) – வெஞ்சிறைப்புள் – என்று எம்பெருமானைத் தன்னிடம் இருந்து பிரித்து அழைத்துப் போனதால் உரைத்தாள்; இப்போது அவனது வருகைக்கு வழி செய்யவேண்டும் என்பதால் "அருளாழிப்புள்" என்றாள். (கடவீர்) - ஆனால் அந்தக் கருடன் வேகமாக அவனை அழைத்துவருவானா என்றால், அவ்விதம் செய்யமாட்டான். வழி நெடுக அவன் மீதும், எம்பெருமான் மீதும் அன்பு கொண்டவர்கள் பார்த்து ரசிப்பதற்காகவும், ஸர்வேச்வரனின் திருமேனி தன் மீது பட்டபடி உள்ள சுகத்தை மேலும் அனுபவிப்பதற்காகவும் வேகமாகப் பறக்காமல், மந்தமாக வட்டமிட்டபடி வருவான். ஆகவே உயிரற்ற தேர் ஒன்றை உந்துமரம் கொண்டு தள்ளி வருவது போன்று அவனது வேகமாக நடத்திக்கொண்டு வரவேண்டும் என்று உரைப்பீர்களாக. "எங்கு கொண்டு வரவேண்டும்?", என்று வண்டுகள் வினவ, பதில் உரைக்கிறாள். (அவர் வீதி) –

நாயகி உள்ள வீதி வழியாக. இதனைக் கேட்ட வண்டுகள், "அப்படி அவன் வருவது பொருந்துமோ? ஒரு வீதி வழியாகப் பலமுறை அவன் சென்றபடி இருந்தால் காண்பவர்கள் - இவன் காரணம் இன்றி வரவில்லை - என்று கண்டுபிடித்து விடுவார்களே", என்றன. இதற்கு விடை அளிக்கிறாள். (ஒரு நாள்) – அவன் அன்றாடம் வரவேண்டாம், நாங்கள் பிழைக்கும்விதமாக ஒரு நாள் வந்தாலே போதுமானது.

வ்யாக்யானம் – (அருளாழி அம்மானை) பெரிய திருவடியும் மிகை; "தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல் என்னடியார் அது செய்யார்" என்னும்படி அருட்கடலானவனிறே. அன்றிக்கே, திருவடி ஒருவனுமாயிருந்ததோ? அங்கு கையாளாயுள்ளாரடைய நம் பரிகரமன்றோ; அருளை நிரூபகமாகவுடைய திருவாழியைக் கையில் உடையவன். அருளார் திருச்சக்கரமிறே. ஸர்வேச்வரனுக்கும் கைக்குரியாப்பை வாங்குவது இங்கேயிறே; ஸர்வேச்வரன் பக்கல் அருள் மறுத்தாலும் அருள் கூடுகட்டி நிற்கும் இடமிறே.

விளக்கம் – (அருளாழி அம்மானை) - க்ருபையின் ஸமுத்திரமாகவே உள்ள ஸர்வேச்வரனை. பெரியதிருவடியான கருடன் கூட அவசியம் இல்லை என்கிறாள். இப்படி சிபாரிசு செய்பவர்களும் அவசியம் இல்லாதபடி தானாகவே க்ருபை உள்ளவனோ என்ற சந்தேகம் எழ, விடை அளிக்கிறாள். பெரியாழ்வார் திருமொழி (4-9-2) – தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல் என்னடியார் அது செய்யார் – "உமது அடியார்கள் தவறு செய்தனர்" என்று ஸ்ரீரங்கநாச்சியாரே யார் மீதாவது குற்றம் சுமத்தினாலும், "எனது அடியார்கள் அப்படிப்பட்டவர்கள் அல்லர்", என்று ஸ்ரீரங்கநாதன் மறுத்து, அவள் கூறுவதை ஒதுக்கிவிடும்படியாக க்ருபை உள்ளவன். அல்லது, சக்கரத்தாழ்வான் பக்கம் உரைப்பதாகவும் கொள்ளலாம். பெரியதிருவடி மட்டும் அல்ல, அவனது திருக்கரத்தில் உள்ளவர்களும் நமக்கு உதவி செய்பவர்கள் ஆவர். க்ருபையை வெளிப்படுத்தும்விதமாக உள்ள சக்கரத்தாழ்வானைத் திருக்கரத்தில் கொண்டவன். க்ருபைக்குச் சக்கரம் நிரூபகமாக இருக்குமோ என்றால், திருவிருத்தம் (33) – அருளார் திருச்சக்கரம் – என்றது காண்க. ஏதேனும் பொருள் இல்லாதவர்கள் ஒரு பொருளை ஒரு கரண்டி அளவு கடன் வாங்குவது போன்று ஸர்வேச்வரனுடைய க்ருபை சற்றே குறைந்தாலும், க்ருபையைச் சற்றே கடன் வாங்குவது சக்கரத்தாழ்வானிடம் அல்லவோ? ஸர்வேச்வரனிடம் ஏதோ சில

காரணங்களால் தயை இல்லாமல் போனாலும், தயை தங்கியிருப்பது சக்கரத்தாழ்வானிடம் அல்லவோ?

வ்யாக்யானம் - (இது சொல்லியருள்) இத்தனையும் சொல்லியருளவேண்டும். ஏதென்னில், "அருளாழிப்புட்கடவீர் அவர்வீதி ஒருநாள்" என்கிற வார்த்தையைச் சொல்லியருள வேண்டும். (ஆழி வரிவண்டே) ச்ரமஹரமாய் அழகிதான வண்டே என்னுதல், வடிவு சிறுத்திருக்கச்செய்தே காம்பீர்யம் பெருத்திருக்கிறபடியைச் சொல்லுதல். ஆழி - என்று – வட்டமாய், சுழலப் பறக்கிற வண்டே என்னுதல். கடகருடைய ஆத்மகுணத்தோபாதி, ரூபகுணமும் உத்தேச்யம் என்கை. (யாமும் என் பிழைத்தோமே) நாங்கள் என்ன தப்புச்செய்தோம்? தாம் பிரிந்து துவளவிட்டுவைத்தாற்போலே, நாங்களும் க்ரமத்திலே பெறுகிறோம் என்று ஆறிருந்தோமோ? திர்யக்கின் காலிலே விழுவாரும், தூது விடுவாரும் தாமாயிருக்கிற அத்தலை இத்தலையாயும் வாராதிருக்கிற தம்மதோ குற்றம். எங்களதோ?

விளக்கம் - (இது சொல்லியருள்) - இத்தனையும் நீ அவனிடம் கூறுவாயாக. எதனைக் கூறவேண்டும் என்றால், "அருளாழிப்புட்கடவீர் அவர் வீதி ஒருநாள்" என்பதை ஆகும். (ஆழி வரிவண்டே) - காண்பவர்களின் துன்பத்தை நீக்கும்படியாக அழகுடன் கூடிய வண்டு. கருடன் போன்றும், மற்ற புருஷகாரங்கள் போன்றும் உயர்ந்த வண்டு. ஆழி என்றால் வட்டமாகச் சுழன்று பறக்கும் வண்டு. ஸர்வேச்வரனுடன் நம்மைச் சேர்த்து வைக்கின்ற ஆசார்யனின் ஆத்மகுணத்தைப் போன்றே இதன் ரூபகுணங்கள் உள்ளன. (யாமும் என் பிழைத்தோமே) - அப்படி அவன் என்னைக் காணாமல் உள்ளதற்கு நாங்கள் என்ன தவறு இழைத்தோம்? தான் சீதையை விட்டுப் பிரிந்து அவளைத் துன்பத்தில் ஆழ்த்தி "விரைவாகச் சென்று மீட்போம்" என்று நின்றது போன்றா நாங்களும் நின்றோம்? அவள் பொருட்டு விலங்கினமான சுக்ரீவனின் தயையை நாடுவதும், அனுமானைத் தூது விடுவதும் அவன் செய்கையாக இருந்தது. இப்படி எங்களது நிலையை அவன் முன்பு ஒரு காலத்தில் அடைந்திருந்தபோதிலும், இப்போது அதனை உணராமல், இங்கு வராமல் நின்றால் எங்களது குற்றமா, அவனது குற்றமா?

1-4-7 என்பிழைகோப் பதுபோலப் பனிவாடை யீர்கின்றது
என்பிழையே நினைந்தருளி யருளாத திருமாலார்க்கு
என்பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கென் றொருவாய்சொல்
என்பிழைக்கு மிளங்கிளியே யான்வளர்த்த நீயலையே.

பொருள் – உனது அழகான ரூபம் போன்றவற்றால் எனது நினைவுகளைத் தூண்டிவிட்டு, எனது எலும்புகளைச் செதுக்குகின்ற அழகான கிளியே! எனது பருவம் மற்றும் இளமை ஆகியவற்றுக்கு ஈடாக நான் வளர்த்த கிளி நீ அல்லவோ? இப்போது வீசும் வாடைக் காற்றானது எனது எலும்பில் துளை ஏற்படுத்தி, அந்தத் துளையினுள் நூல் இழை ஒன்றைக் கோர்ப்பது போன்று துன்புறுத்துகிறது. என்னுடைய குற்றங்களை மட்டுமே ஆராய்பவனாகவும், தன்னிடம் உள்ள தோஷங்களைக் காணாதவனாகவும், என்பக்கம் அருளாதவனாகவும் உள்ள மஹாலக்ஷ்மியின் நாயகனிடம் நீ சென்று, "அனைத்திற்கும் ஸ்வாமியாக உள்ள உன்னுடைய பொறுமையையும் சோதிக்கும்படி அவள் என்ன குற்றம் செய்தாள்?", என்று ஒரு கேள்வி கேட்கவேண்டும்.

அவதாரிகை - "தந்தாமுடைய அபராதத்தைப் பாராதே, 'அருளாழிப்புள் கடவீர் அவர் வீதி' என்று சொல்லுமித்தனையோ வேண்டுவது?" என்று அவர்க்குக் கருத்தாக, "எங்கள் குற்றம் ஒன்றுமேயோ பார்ப்பது? தம்முடைய அபராத ஸஹத்வம் பார்க்கக் கடவதன்றோ? என்று சொல்" என்று தன் கிளியை இரக்கிறாள்.

விளக்கம் - கடந்த பாசுரத்தில் இவள் விடுத்த செய்தியை வண்டுகள் அவனிடம் உரைத்தன. அதற்கு அவன், "அவரவர்கள் தங்களுடைய குற்றங்களை ஆராய்வதே இல்லை. அதனை விடுத்து - அருள் ஆழிப்புள் கடவீர் அவர் வீதி – என்று நான் அவர்கள் வீதியின் வழியே வரவேண்டும் என்பது எப்படிப் பொருந்தும்?", என்றான். இதனைக் கேட்ட நாயகி, "என்னுடைய குற்றத்தை மட்டுமே ஆராய்ந்தபடி இருந்தால் சரியா? தன்னுடைய அபராதங்களையும் அவன் காணவேண்டாமா?", என்று அவனிடம் உரைக்குமாறு கிளியிடம் கூறுகிறாள்.

வ்யாக்யானம் - (என்பிழை கோப்பது போல) எலும்பும் நரம்புமேயாம்படி சரீரந்தான் போர க்ருசமாயிற்று. எலும்பைத் தொளைத்து, அதிலே மூர்த்தமாயிருப்பதொன்றை வ்யாபரிப்பித்தாப்போலேயாயிற்றுப் பனிவாடை ஈர்கின்றது. நஞ்சூட்டின

வாடையானதிருக்கிறபடி. "பம்போபவநமாருதம்" என்று நாயகனுக்கு இருக்குமாபோலே இராநின்றது காணும் இவ்வாடை இவளுக்கு. "பத்மஸௌளகந்திகவஹம்" கலம்பகன் சூடுவாரைப்போலே தாமரைஓடை, செங்கழுநீரோடைகளிலே சென்றுபுக்கு, "பூவிலிழியில் அதில் வெக்கை தட்டும்" என்று மேலெழநின்று அரிமிதியான பரிமளத்தைக் கொய்துகொண்டு வாரநின்றது. "சிவம்" கலப்பற்றுப் பசுந்தென்றலாய் இராநின்றது. அதாவது, புறம்பே சிலர்க்கு உடம்பு கொடுத்துச் சுணங்கழியாதே தாய்த்தலைத் தென்றலாய் இருக்கை. "சோகவிநாசநம்" நம்மை இனி ப்ராணனோடே வைத்து நலியாது போலே இருந்தது. "தந்யா:" காற்று வாராநின்றது என்றால், ஏகாந்தஸ்தலந்தேடிப் படுக்கை படுக்கிறவர்களும் சிலரே! "லக்ஷ்மண ஸேவந்தே" இது எப்போதோ வருவது என்றிருப்பர்கள். "பம்போபவநமாருதம்" – "ஆகரத்தில் தெருப்பு" என்னுமாபோலே.

விளக்கம் - (என்பிழை கோப்பது போல) – இதனை "என்பு + இழை" என்று பிரித்துப் பொருள் கொள்க. என்பு என்றால் "என்னுடைய எலும்பு" என்று பொருள். எலும்பைச் சென்று துளைக்கவேண்டும் என்றால் முதலில் வெளியில் உள்ள சதை போன்றவற்றைத் துளைத்த பின்னர் அல்லவோ எலும்புவரை செல்ல இயலும், இதனை ஏன் கூறவில்லை என்ற சந்தேகம் ஏற்பட, விடை அளிக்கிறார். எனது சரீரம் எலும்பும் நரம்புமாக உள்ளது. இதனால் நேரடியாகக் காற்று எலும்பில் புக இயன்றது. எலும்பில் துளையிட்டு, அந்தத் துளியில் மிகவும் கடினமான ஒரு கயிற்றைக் கோர்ப்பது போன்று செய்கிறது. வாடை என்று கூறாமல் பனிவாடை என்று ஏன் கூறவேண்டும்? நஞ்சு ஊட்டிய காற்று என்று கூறுகிறார். இராமாயணம் கிஷ்கிந்தா காண்டம் (1-105) – பம்போபவநமாருதம் - பம்பா நதிக்கரையில் இருந்து வீசும் காற்று - இராமனுக்கு எவ்விதம் துன்பமாக இருந்ததோ அது போன்று இந்தக் காற்று இவளுக்கு உள்ளது. இங்கு இராமாயணம் கிஷ்கிந்தா காண்டம் (1-105) – பத்மஸௌகந்திகவஹம் சிவம் சோகவிநாசநம் தந்யா லக்ஷ்மண ஸேவந்தே பம்போபவநமாருதம் - என்ற ச்லோகத்திற்கான வ்யாக்யானம் அருளிச்செய்கிறார். இந்த ச்லோகத்தில் இராமன் லக்ஷ்மணனிடம், "லக்ஷ்மணா! பம்பா நதியில் உள்ள தாமரை மற்றும் செங்கழுநீர் ஆகிய மலர்களின் நறுமணத்தைச் சுமந்து வரும் இந்தக் காற்றானது மிகவும் தூய்மையானது; அனைவரது துன்பத்தையும் விலக்கவல்லது; இதனை அனுபவிப்பவர்கள் கொடுத்து வைத்தவர்கள்", என்று உரைக்கிறான். இதனை இவர் வ்யாக்யானம் செய்கிறார். கலம்பகன் என்றால் பலவிதமான மலர்கள் கொண்டு தொடுக்கப்பட்ட கதம்பம் என்பதாகும். கதம்பமாலை சூடியபடி உள்ளவர்கள் போன்று இந்தக் காற்று தாமரை மற்றும் செங்கழுநீர் மலர்கள் உள்ள ஓடைகளில் புகுந்து வருகிறது.

ஆனால் அந்த மலர்களின் உள்ளே புகுந்து வந்தால், அந்த மலர்களின் உள்ளே இருக்கின்ற வெப்பமானது தன் மீது பட்டு, தான் தனது குளிர்ச்சியை இழந்துவிடுவோம் என்று எண்ணுகின்ற அந்தக் காற்று மலர்களின் மீது மேலாகப் பட்டபடி வந்துவிடுகிறது. அப்போது அந்த மலர்களின் மீது வண்டுகளால் மிதிக்கப்பட்ட மகரந்தத்துகள்கள் உள்ளதால், அந்த துகள்களின் பரிமளத்தைச் சுற்றி வளைத்து எடுத்துக்கொண்டு வருகிறது, "சிவம்" என்றால் எந்தவிதமான கலப்பும் இல்லாத தூய்மையான காற்றாக உள்ளது என்று பொருள். அதாவது வேறு யாருக்கும் தனது சரீரத்தைத் தொடும் வாய்ப்பு அளிக்காதபடியும், இதனால் தனது மேன்மையை இழக்காதபடியும், இங்குதான் முதலில் உண்டானது என்று கூறும்படியும் வீசுகின்ற தென்றல் காற்று - என்று கருத்து. "சோகவிநாசநம்" – எனது உயிரான சீதையைப் பிரிந்து வாடும் துன்பத்திற்குச் சற்றே ஆறுதல் அளிப்பதாக உள்ளது. "தந்யா:" காற்று வரவிலை என்று தனியான இடம் தேடிச் சென்று ஓய்வு எடுப்பவர்கள் சிலரே ஆவர். "லக்ஷ்மண" – ஒரு சிலர் மட்டுமே இது எப்போது வீசும் என்று இருப்பர்.

வ்யாக்யானம் - இப்படி மஹிஷியானவள் வாடைக்கு இடைந்து நோவுபடாநிற்க, இத்தைப் பரிஹரிக்கைக்கு அவர், கடலடைப்பது படைதிரட்டுவதாகிறபடி. நாயக நாயகிகள் ஒருவரை ஒருவர் பிரிந்தவாறே, அந்தரஜாதி காலிலே துகையுண்பதே இப்படி. (என்பிழையே நினைந்தருளி) நான் படுகிற க்லேசம் போராது என்று கீழாண்டைச்சிகை வாசியாநின்றார். "அவிஜ்ஞாதா" வாகை தவிர்ந்து. "ஸஹஸ்ராம்ஸு" என்கிறபடியே இப்போது தோஷத்தில் ஸர்வஜ்ஞராயாயிற்று இருக்கிறது. (அருளாத திருமாலார்க்கு) "ந கச்சிந்நாபராத்யதி" என்பாரும் அருகேயிருக்க, எங்கள் குற்றம் பார்த்து அவள்பக்கல் முகம்பெற இருக்கிறாரே! – என்று நஞ்சீயர் அருளிச்செய்யும்படி. "நான் இப்படி நோவுபட வேண்டுகிறது - அவனுக்கு அவள் முகங்கொடுத்து அங்கே துவக்குகையிறே என்று இன்னாதாகிறாள்" என்று பிள்ளான் பணிக்கும்படி. உறவுள்ள இடத்திலேயிறே வெறுப்புள்ளதும்.

விளக்கம் - இப்படியாகத் தனது மனைவி தன்னைப் பிரிந்து வாடைக்காற்றால் துன்பத்துடன் இருக்க, அந்தத் துன்பத்தை நீக்கும்விதமாக இவன் கடல் கடந்து செல்லப் படை திரட்டினான். நாயகனும் நாயகியும் ஒருவரை ஒருவர் பிரிய நேரிட்டால் தாழ்ந்த இனத்தின் கால்களில் விழுவதான காற்றால் வருத்தம் கொள்ளுதல் போன்றவை நிகழ்வது இயல்பே ஆகும். அந்தரம் என்றால் ஆகாயம், ஜாதி என்றால் பிறப்பு, காலில்

என்றால் "காற்றால்" என்று பொருள். (என்பிழையே நினைந்தருளி) - இப்படியாக நான் துன்பப்படுவது போதாது என்று எண்ணியவனாக, பழைய கணக்கில் உள்ள பாக்கிக் கடன் தொகையை ஆராய்வது போன்று, எனது குற்றங்களையும் ஆராய்ந்தபடி உள்ளான். முன்பு அடியார்களின் தோஷங்கள் குறித்த விஷயங்களில், ஸஹஸ்ரநாமம் – அபிஜ்ஞாதா - ஏதும் அறியாதவன் போன்று நின்றவன், அடியார்களின் குணவிஷயங்களில் அவர்கள் தனக்காக ஒன்று செய்தாலும் "ஸஹஸ்ராம்ஸு" - பலமடங்கு அவர்கள் தனக்காகச் செய்தனர் என்று கொண்டாடியவன், இப்போது செய்வது என்ன? நமது குற்றங்களை ஆராய்வதில் அனைத்தும் தெரிந்தவன் என்ற தன்மையுடன் உள்ளான். (அருளாத திருமாலார்க்கு) இதற்கு இங்கு இருவிதமாகப் பொருள் உரைக்கப்படுகிறது. இராமாயணம் யுத்தகாண்டம் (116-45) – ந கச்சிந்நாபராத்யதி – தவறு செய்யாதவர்கள் யார் உள்ளனர் - என்று கூறும் தன்மை கொண்ட பெரியபிராட்டி அவன் அருகில் உள்ளபோது, எனது குற்றங்களைக் கண்டு என்னை ஒதுக்கி, அவள் பக்கம் தனது திருமுகத்தை வைத்தபடி இருந்தால் என்ன ஆகும்? இதனால் அவள் தனது திருமுகம் காண்பிக்காமல் போய்விட்டால் என்ன செய்வது என்ற அச்சம் அவனுக்கு இல்லையே - இது ஸ்வாமி நஞ்சீயர் கூறும் கருத்தாகும். ஸ்வாமி திருக்குருகைப்பிரான்பிள்ளான் கூறுவது - நான் இங்கு துன்பப்படுவதற்குக் காரணம், அவனுக்கு அவள் திருமுகம் காண்பித்து மயக்கத்தில் உள்ளதால் ஆகும் என்று வெறுத்துக்கூறுகிறாள் – என்பதாகும். ஆனால் பெரியபிராட்டியை இவ்விதம் உரைப்பது சரியா என்றால், உறவு உள்ள இடத்தில் அல்லவோ வெறுப்பைக் காட்ட இயலும்?

வ்யாக்யானம் - அருளாதொழிகிறதென்? என்றால் "தந்தாம் குற்றம்பாராதே அருளச்சொல்லுமித்தனையோ வேண்டுவது" என்று சொல்ல நினைத்தாராகில், நீங்கள் தான் இங்ஙனே சொல்லுங்கோள் – "என் பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கு" என்னுங்கோள். என் குற்றத்தைப் பார்த்து தமிக்க நினைத்தாராகில், தம் பொறையாகிற நேர்த்தரவைக் காட்டுங்கோள். ஸ்வாமிகளான தம் பொறை வயிறு நிறைய எங்களால் குற்றஞ்செய்யப்போமோ? என்னுங்கோள். ஆச்ரயத்துக்குத் தக்கபடியன்றோ எல்லாம்; நாங்கள் குற்றஞ்செய்வது எங்கள் அளவிலே; தாம் பொறுப்பதும் தம் அளவிலேயன்றோ. (திருவடியின் தகவினுக்கு என்பிழைத்தாள்) "தேவரீர் க்ருபைக்குத் தண்ணீர்த் துரும்பாக ஏதேனும் ப்ரதக்ஷிண நமஸ்காராதிகள் பண்ணிற்றுண்டோ?" என்று நம்பிள்ளை அருளிச்செய்யும்படி.

விளக்கம் – நீங்கள் அவனிடம் சென்று, "ஏன் அவளுக்குக் கருணை காண்பிக்கவில்லை?", என்று கேட்டவுடன் அவன் உங்களிடம், "அவரவர்களின் குற்றத்தைத் தாங்களே ஆராய்ந்து பார்க்காமல் நான் கருணை செய்யவில்லை என்று கூறுவது எப்படிப் பொருந்தும்? அதனையும் மீறியா என்னிடம் வேண்டுவது?", என்று உரைக்கக்கூடும். உடனே நீங்கள் அவனிடம், "உம்முடைய பொறுமைக்கு அப்படி என்ன குற்றம் அவள் செய்தாள்?", என்று கேளுங்கள். எனது குற்றங்களை ஆராய்ந்து என்னைத் தண்டிக்க எண்ணியபடி இருந்தான் என்றால், அவனுடைய க்ஷமை என்பதான "குற்றம் பொறுத்துக் கொள்வோம்" என்ற ஆணைச்சீட்டைக் காண்பிப்பீர்களாக. அவனுடைய க்ஷமை என்பதான குணத்திற்கு வயிறு நிரம்பும்படியான அளவிற்கு என்னால் குற்றம் செய்ய இயலுமா என்று கேளுங்கள். அவரவர்களின் ஸ்வரூபத்தின் அளவிற்கே எல்லாம் இருக்கும்; எங்கள் அளவிற்கு நாங்கள் குற்றம் செய்கிறோம், அவன் அளவிற்கு அவன் பொறுத்துக்கொள்வது என்பதே சரியானது அல்லவா? (திருவடியின் தகவினுக்கு என்பிழைத்தாள்) - இதற்கு ஸ்வாமி நம்பிள்ளை கூறும் விளக்கம் என்னவென்றால், "உன்னுடைய கருணை என்பதைத் தடுக்கும் விதமாக நான் ப்ரதக்ஷணம் செய்வது, நமஸ்கரிப்பது முதலான உன்னைத் தவிர வேறு எந்த உபாயத்தையும் கைக்கொள்ளவில்லை அல்லவோ?" - என்பதாகும்.

வ்யாக்யானம் – (தகவினுக்கு) "ஆந்ருசம்ஸ்யம் பரோ தர்ம:" என்று சொல்லும்படி இருக்கும் நிலைக்கு என் பிழைத்தாள் – என்ன தப்புசெய்தாள்? "கிம் கோபமூலம்" என்றாளிறே தாரை. ராஜபுத்திரர்களை நாலு மாஸம் மின்னுக்கும் இடிக்கும் இரையாக்கித் தாங்கள் போகப்ரவணாராயிருந்தவற்றை ஒன்றையும் புத்தி பண்ணாதே, உம்முடைய கோபத்துக்கு அடியென் என்றாளிறே, அவர்கள் பொறையை நினைத்திருந்த கனத்தாலே. "மநுஜேந்த்ரபுத்ர" அறுபதினாயிரமாண்டு, செய்தார் செய்த குற்றங்களைப் பொறுத்துச் சேரவிட்டு ஆண்டு கொண்டு போந்தான் உங்கள் தமப்பனார்; அவன் வயிற்றிலே பிறந்து குற்றம் செய்தோமென்று தலையறுக்க வந்து நின்றீர் நீர். அழகிதாயிருந்தது உம்முடைய போக்கு! "கஸ்தே ந ஸந்திஷ்டதி வாங்நிதேசே" சாஸ்த்ரவச்யமன்றிக்கே, கண்டதிலே கடுகச் சாபலத்தைப் பண்ணி மீளமாட்டாத திர்யக்குக்குளை, நீரே "இழந்த போகங்களை புஜிப்பது" என்று சேர்த்துவிட்டு, நீர்சொல்லிற்றுச் செய்தனவென்று தலையறுக்க வந்து நின்றீர். இப்படி சொல்லலாம்படியிறே இவர் பொறையிருப்பது. (ஒருவாய் சொல்) "ஒருவாய்" என்றது – ஒரு வார்த்தை என்றபடி. "சொல்" என்றது சொல்லு என்றாய் ஒருவார்த்தை சொல்லு என்றபடி.

விளக்கம் - (தகவினுக்கு) – இராமாயணம் ஸுந்தரகாண்டம் (38-40) – ஆந்ருசம்ஸ்யம் பரோ தர்ம: - "துன்பத்தில் உள்ளவர்களுக்குத் தயை செய்வதே உத்தமம் என்று நீவிர் கூற நான் முன்பு கேட்டேன்" என்று சீதை அனுமனிடம் இராமனுக்கு விடுக்கும் செய்தியில் உரைக்கிறாள். இது போன்று மற்றவர்கள் எனக்காகச் சொல்லி அனுப்பும்படியான நிலையில் நான் உள்ளதற்கு என்ன தவறு செய்தேன் என்று கேட்பீர்களாக. "அவள் என்ன தவறு செய்தாள்?", என்று கேளுங்கள். இராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம் (33-40) – கிம் கோபமூலம் – கோபத்திற்கு என்ன காரணம் – என்று தாரை வினவுவது போன்று நானும் கேட்கிறேன். அரசகுமாரர்களான இராமனுக்கும் லக்ஷ்மணனுக்கும் "உதவுவேன்" என்று வாக்குறுதி கொடுத்துவிட்டு, அதன் பின்னர் நான்கு மாதங்கள் அவர்கள் இடியிலும் மின்னலிலும் துன்பப்படுவதை மறந்து, தானும் சுக்ரீவனும் இன்பத்தில் இருந்ததன் காரணமாக அல்லவோ லக்ஷ்மணன் இப்போது கோபமாக வந்துள்ளான் என்பதை எண்ணாமல் தாரையானவள் லக்ஷ்மணனிடம், "உமது கோபத்துக்கு காரணம் என்ன?", என்று ஏன் கேட்டாள்? இதன் காரணம் - அவள் இராமலக்ஷ்மணர்களின் பொறுமை எந்த அளவிற்கு உண்டு என்பதை அறிந்தவள் என்பதால் ஆகும். இப்போது இவன் எனது பிழைகளைக் காரணம் காட்டி, எனக்கு முகம் காட்ட மறுக்கிறான். இவனது பொறுமை எப்படி உள்ளது என்பதற்கு உதாரணம் கூறுகிறாள். தாரை லக்ஷ்மணனிடம், "தனது நாட்டில் உள்ளவர்கள் செய்த பலவிதமான குற்றங்களைப் பொறுத்துக்கொண்டு அறுபதினாயிரம் ஆண்டுகள் உமது தந்தையான தசரதன் அனைவரையும் காத்து வந்தார். அப்படிப்பட்ட அவருக்குப் புத்திரனாகப் பிறந்துவிட்டு, நாங்கள் குற்றம் செய்து விட்டோம் என்று கூறிக்கொண்டு, எங்கள் தலைகளைக் கொய்ய நீவீர் வந்துள்ளீரே! மிகவும் நன்றாக உள்ளது உங்கள் செய்கை! சாஸ்த்ரங்களின் ஈடுபாடு இல்லாதபடியும், எதனைக் கண்டாலும் அதில் ஈடுபாடு கொண்டு அதிலிருந்து மீண்டும் வராதபடியும் சபலத்துடன் கூடிய குரங்குகளான எங்களிடம் நீங்கள் வாலியைக் கொன்ற பின்னர், " இழந்துபோன இன்பங்களை அனுபவியுங்கள்", என்று கூறினீர்கள்; ஆனால் இப்போது நீங்கள் உரைத்தபடியே செய்து கொண்டிருக்கிற எங்களை அழிக்கவந்து நிற்கிறீர்கள். இதுவோ உங்கள் பொறுமை", என்றாள். இது போன்றே இவளும் உரைக்கிறாள். (ஒரு வாய்) - ஒரு சொல் என்று பொருள்.

வ்யாக்யானம் - (என்பிழைக்கும் இளங்கிளியே) மௌக்த்யத்தாலும், ஸ்நிக்தமான பணிதியினாலும், வடிவில் பசுமையாலும், வாயில் பழுப்பாலும், நாயகனுக்கு ஸ்மாரகமாய், எலும்பை இழைக்கிற கிளி என்னுதல். என் பிழைக்கும் - என் தசையை

அறிவித்தால் என்ன தப்புண்டாம்? (யான் வளர்த்த நீயலையே) ஸ்ரீய:பதியாய், தான் தோன்றியாயிருப்பார் செய்வதை வயிற்றில் பிறந்தாரும் செய்வரோ? (கலந்து பிரிந்தார் செய்வதை வளர்ந்தவர்களும் செய்வர்களோ? (யான் வளர்த்த நீயலையே) அவன்தான் இப்படிச் செய்ய வேண்டிச் செய்தானோ? என்னோட்டை ஸம்பந்தம் அன்றோ அவன் இப்படிச் செய்தது; அப்படி, என்னோட்டை ஸம்பந்தம் உனக்கும் உண்டான பின்பு, நீ நலியச் சொல்லவேணுமோ? (யான் வளர்த்த நீயலையே) எனக்குத் தக்காப்போலேயன்றே நீயுமிருப்பது; உனக்குக் குறையோ?

விளக்கம் - (என்பிழைக்கும் இளங்கிளியே) - இளமையாகவும், அன்பான சொற்களாலும், தோற்றத்தில் பசுமையாக உள்ளதாலும், வாயானது அழகான சிவப்பாக உள்ளதாலும் எனது நாயகனின் நினைவுகளை எனக்குத் தனது உருவம் வழியாக அதிகமாக்குகின்ற கிளி. இப்படியாக எனது எலும்புகளைச் சிதைக்கும் கிளியே! இங்கு "என்பிழைக்கும்" என்பதை "என் + பிழைக்கும்" என்று கொண்டால், எனது நிலையை அவனிடம் சென்று உரைத்தால் உனக்கு என்ன குற்றம் உண்டாகப்போகிறது? என்று பொருள் கொள்ளலாம். (யான் வளர்த்த நீயலையே) – பெரியபிராட்டியின் நாயகனாக, ஸ்வதந்த்ரனாக உள்ள அவன் செய்வது போன்று வயிற்றில் பிறந்தவர்கள் செய்வார்களா? முன்பு கலந்து இப்போது பிரிந்தவன் செய்வதை என்னால் வளர்க்கப்பட்டவர்களும் செய்வார்களோ? (யான் வளர்த்த நீயலையே) – அவன் இவ்விதம் செய்யவேண்டும் என்று செய்தான் அல்லன்; என்னுடைய தொடர்பு அல்லவோ அவனை இப்படிச் செய்யவைத்தது. இப்படியாக உள்ள என்னுடைய தொடர்பு கிட்டியவுடன் நீயும் மாறுவாயோ? (யான் வளர்த்த நீயலையே) – அவன் போல் அல்லாமல், எனக்கு ஏற்றபடி நீ இருப்பதால் உனக்கு என்ன குறை உண்டாகப் போகிறது?

1-4-8 நீயலையே சிறுபூவாய் நெடுமாலார்க் கென்தூதாய்
நோயெனது நுவலென்ன நுவலாதே யிருந்தொழிந்தாய்
சாயலொடு மணிமாமை தளர்ந்தேன்நான் இனியுனது
வாயலகி லின்னடிசில் வைப்பாரை நாடாயே.

பொருள் - சிறியதான நாகணவாய்ப்பறவையே! "அடியார்கள் மீது கொண்ட அளவுகடந்த வாத்ஸல்யம் காரணமாக அவர்கள் மீது பெரும்பித்துப் பிடித்தது போன்று எப்போது உள்ள ஸர்வேச்வரனிடம் எனது விரஹம் உள்ளிட்ட துன்பங்களைக் கூறுவாயாக", என்று நான் உன்னிடம் கூறினேன். ஆனால் நீ அவ்விதம் செய்யாமல் இங்கேயே தங்கிவிட்டாய்.

இதனால் மிகுந்த ஒளியுடன் கூடியதான எனது நிறத்தை நான் இழந்தேன். ஆக இனி உனக்குச் செய்வது ஏதும் இல்லை. உனது அழகான வாயின் பிளவிற்குள் இனிமையான உணவை யார் ஊட்டுவார்களோ அவர்களைத் தேடிச் செல்வாயாக.

அவதாரிகை – முன்பு இவள் வார்த்தை சொல்லிக் கொண்டாடுகையாலே தரித்திருந்த பூவையானது இவள் உறாவப்புக்கவாறே தானும் உறாவப்புக்கது; அத்தைப்பார்த்து, "முன்பே என் தசையை அறிவி" என்ன, செருக்கடித்திருந்தாய்; நானோ முடியாநின்றேன்; இனி உன்னை ரக்ஷிப்பாரைத் தேடப்பாராய்" என்கிறாள். பூவை என்பது நாகண வாய்ப்புள். அதாவது ஒரு பக்ஷிவிசேஷம்.

விளக்கம் – "நோய் எனது நுவல்" என்று இவள் தனது பிரிவாற்றாமை உள்ளிட்ட துன்பங்களை நாயகனிடம் உரைக்கும்படி இந்தப் பறவையிடம் முன்பு கூறினாள். அதனை எண்ணியபடி இருந்தபோது இந்த பறவை நன்றாகவே இருந்தது. ஆனால் இவள் இப்போது சோர்வடையும்போது, தானும் சோர்வு அடைந்தது. இதனைக் கண்ட இவள் அந்தப் பறவையிடம், "முன்பே அவனிடம் சென்று எனது நிலையைக் கூறுமாறு உன்னிடம் உரைத்தேன். அப்போது நீ செல்லாமல் களிப்புடன் இருந்தாய்; நானோ இயலாமல் இருந்தேன். இனி உன்னை யார் காப்பாற்றுவார்களோ அவர்களை நீயே தேடிக்கொள்வாயாக", என்கிறாள்.

வ்யாக்யானம் - (நீயலையே) "என் தசையை அறிவிக்கவேணும்" என்ன, அறிவியாதே இருந்த உன்னாலே வந்ததன்றோ இது. அறிவித்தால் வாராதேயிருந்தானாகிலிறே அவனுக்குக் குறையாவது. பகவல்லாபம் சேர்ப்பாராலே என்றிருக்கிறாள். அவ்யவதாநேந ஸம்பந்தம் எம்பெருமானோடேயாயிருக்க, ஆசார்யனை விருப்புகிறது பண்ணின உபகாரத்தைப் பற்றவிறே. "ஆததீத யதோ ஜ்ஞாநம் தம் பூர்வமபிவாதயேத்" என்னாநின்றதிறே. (சிறு பூவாய்) உன் பருவம் நிரம்பாமையிறே நம் கார்யத்தைக் கெடுத்தது. (நெடுமாலார்க்கு) அவர்க்கு வ்யாமோஹத்தை உண்டாக்கிக் கொடுவர வேணும் என்றிருந்தாயல்லையே. (என் தூதாய்) எனக்கு அவர் பக்கல் வ்யாமோஹந்தான் இல்லாமை இருந்தாயுமன்றே.

விளக்கம் – (நீயலையே) - "எனது நிலையை அவனிடம் சென்று கூறுவாயாக" என்று நான் உன்னை விண்ணப்பித்தேன். ஆனால் நீ செய்யவில்லை. இப்போது நான் தளர்ந்தபடி

இருத்தல் போன்ற நிலைமை என்பது நான் கூறியபடி நீ செய்யாமல் இருந்ததால் வந்தது அல்லவோ? இதனைக் கேட்ட அந்தப் பறவை, "என்னால்தான் இந்த நிலைமை என்று எப்படிக் கூறுகிறாய்? அழைத்த பின்னரும் வராமல் நின்ற குற்றம் அவனுடையது அல்லவோ?", என்றது. அதற்கு இவள், "நீ சென்று உரைத்த பின்னரும் வராமல் இருந்தான் என்றால் நான் அவனுக்குத் தோஷமாகும்", என்றாள். இவள் ஏன் அந்தப் பறவையை இத்தனை விரும்பி உரைக்கிறாள்? ஒருவனுக்கு நேரடியாக ஸர்வேச்வரனுடன் உறவுமுறை உண்டு; ஆனாலும் அவன் - ஆததீத யதோ ஜ்ஞாநம் தம் பூர்வமபிவாதயேத் - எந்த ஆசார்யனிடமிருந்து ஞானம் பெற்றானோ அந்த ஆசார்யனை முதலில் வணங்கவேண்டும் - என்பதற்கு ஏற்ப, ஆசார்யன் செய்த உதவிக்காக அவரை விரும்புதல் வேண்டும். இது போன்று இவளும் பகவத்ஸம்பந்தம் உண்டாகித்தர வல்லதாக இருப்பதால் அந்தப் பறவையை விரும்புகிறாள். (சிறு பூவாய்) – உனது பருவம் நிரம்பாத காரணத்தால் அல்லவோ நான் கூறியதை நீ செய்யவில்லை. (நெடுமாலார்க்கு) – மிகுந்த மயக்கத்தில் உள்ளவன். அவனுக்கு என் மீது காதல் மயக்கத்தை ஏற்படுத்தி, என்னிடம் அழைத்துவர வேண்டும் என்று நீ எண்ணவில்லையே. (என் தூதாய்) – எனக்கு அவன் மீது மிக்க காதல் எப்போதும் உள்ளது.

வ்யாக்யானம் - (நோயெனது) "ஸ்ரீபரதாழ்வான் நோய்" என்றால் சாதுர்த்திகமாயிராதே. "ஜடிலம்" நல்ல மாலை வந்தால் "பிள்ளை பரதன் மயிருக்காயிருந்தது" என்றாயிற்று சக்ரவர்த்தி வாய்விடுவது; அவனாயிற்று சடைபுனைந்திருக்கிறான். "சிரவஸநம்" நல்ல பரிவட்டங்கண்டால் "இது பிள்ளைக்காம்" என்று வாய்விடுவர்கள்; அவனன்றோ மரவுரி உடுத்திருக்கிறான். "ப்ராஞ்ஜலிம்" அவர்கள் இரந்து கொடுக்கப்பெறுமவன், தன் அபிமதத்துக்குத்தான் இரப்பாளனாயிருந்தான். "பதிதம்புவி" - அங்கே பரதமாரோப்ய - என்னும் நிலை பெற்றதில்லை. "படுக்கை உறுத்தும்" என்று மடியிலே கண்வளருமவனாயிற்று தரைக்கிடை கிடக்கிறான். "ததர்ச ராமோ துர்தர்சம்" வைத்தகண் வாங்காதே கண்கொண்டிருக்கும் பெருமாளுக்கும் கண்வைக்கவொண்ணாதபடி இருக்கிறவனை. "யுகாந்தே பாஸ்கரம் யதா" பெருமாள் ஒருவர்க்கும் கண்வைக்கவொண்ணாமையே யன்றிக்கே, "ஜகதுபஸம்ஹாரம் பிறக்கப்புகுகிறதோ" என்னும்படி இருந்தான். (நோயெனது நுவலென்ன) "என் தசையை அங்கே சென்று சொல்" என்ன, சொல்லாதே இருந்தொழிந்தாய். நுவலாதே இருந்தாய் என்னுதல், நுவலாதே ஒழிந்தாய் என்னுதல் செய்ய அமையாதோ? இரட்டிப்பு என்? என்னில்;

"வந்தொழிந்தான், போயொழிந்தன்" என்னக்கடவதிறே; வழக்கச்சொல்லிருக்கிறபடி. இரண்டு தர்மியையும் ஒரு உக்திமாத்ரத்தாலே நோக்கலாயிருக்கவன்றோ நீ ஆறியிருந்தது!

விளக்கம் – (நோயெனது) – பரதனுக்கு உண்டான நோய் என்பது சாதுர்த்திகம் அல்ல; சாதுர்த்திகம் என்றால் இரண்டுநாள் விட்டு, மூன்று நாள்களுக்கு ஒருமுறை ஏற்படும் ஜுரம். அவனுடைய நோய் இராமனைப் பிரிந்த பிரிவாற்றாமை, அது போன்றே இவளுடையதும் ஆகும். இங்கு இராமனைப் பிரிந்து பரதன் துன்பத்தைக் கூறுவதான ச்லோகத்தை வ்யாக்யானம் செய்கிறார். அந்தச் ச்லோகம் இராமாயணம் அயோத்யாகாண்டம் (100-1) – ஜடிலம் ஸீரவஸநம் ப்ராஞ்ஜலிம் பதிதம் புவி ததர்ச ராமோ துர்தர்சம் யுகாந்தே பாஸ்கரம் யதா - நீண்ட சடை முடியைத் தரித்தவனாகவும், மரவுரியை அணிந்தவனாகவும், கைகளைக் கூப்பியவனாகவும், எளிதில் அடையாளம் காணஇயலாதவனாகவும், இந்த யுகம் முடியும்போது தரையில் கிடக்கின்ற சூரியன் போன்றவனாகவும் கீழே கிடந்த பரதனை இராமன் நோக்கினான் – என்பதாகும். இதன் வ்யாக்யானம் அருளிச்செய்கிறார். (ஜடிலம்) – நல்லதொரு மலர்மாலை கட்டப்பட்டு வந்தால் அதனைக் காணும் தசரதன், "ஆகா! இது பரதனின் அழகான தலைமுடிக்காக வந்தது", என்பானாம்; அப்படிப்பட்ட பரதன் இப்போது சடைமுடியுடன் உள்ளான். (ஸீரவஸநம்) - நல்ல ஆடையைக் கண்டால் "இது பிள்ளைக்கு" என்று உரைப்பார்கள்; அப்படிப்பட்ட பரதன் மரவுரி தரித்துள்ளான். (ப்ராஞ்ஞலிம்) - மற்றவர்கள் இவனிடம் கேட்க வாரிவாரிக் கொடுப்பவன், இப்போது தனது விருப்பம் நிறைவேறும் பொருட்டு இராமனிடம் இரைபவனாகக் கிடக்கிறான். (பதிதம் புவி) – படுக்கையில் படுக்க வைத்தாலும் பரதனின் மென்மையான திருமேனிக்கு உறுத்தும் என்று தசரதன் அவனைத் தனது மடி மீது படுக்கவைப்பானாம், அப்படிப்பட்ட பரதன் தரையில் கிடக்கிறான். (ததர்ச ராமோ) - எப்போதும் பரதனை வைத்த கண் மாற்றாமல் பார்த்துக் கொண்டிருக்கும் இராமனாலும் அடையாளம் கண்டு கொண்டு காண இயலாதபடி உள்ளான். (யுகாந்தே பாஸ்கரம் யதா) – இராமன் யாருக்கும் கண் வைக்க ஒண்ணாமை மட்டும் அல்லாமல், "இந்த உலகமே அழியப்போகிறதோ" என்று நின்றான் – என்பது அந்த இராமாயண ச்லோக வ்யாக்யானம் ஆகும். (நோயெனது) - "என்னுடைய நிலைமையை அவனிடம் சென்று கூறுவாயாக", என்று நான் முன்பு உன்னை விண்ணப்பித்தபோதும், நீ அவ்விதம் கூறாமல் விட்டாய். நுவல்தல் என்றால் சொல்லுதல் என்பதாகும், "நுவலாதே இருந்தாய்" அல்லது "நுவலாதே ஒழிந்தாய்" என்று இருவிதத்தில் கூறியிருக்கலாம்; இதனை விடுத்து

"நுவலாதே இருந்து ஒழிந்தாய்" என்று ஏன் கூறவேண்டும்? "வந்து ஒழிந்தான், போய் ஒழிந்தான்" என்று கூறுவது போன்று "இருந்தொழிந்தாய்" என்பதை ஒரே சொல்லாகக் கொண்டார். சொல் என்பது "திசைச்சொல், செய்யுட்சொல் மற்றும் வழக்கச்சொல்" என்று மூன்றுவிதமாக உள்ளது. இங்கு "இருந்தொழிந்தாய்" என்பது வழக்கச்சொல் என்றார். "இரண்டு தர்மி" என்பது தன்னையும், நாயகனையும் குறிப்பதாகும். அதாவது தானும் நாயகனும் சேர்ந்து இருத்தல் என்பதை ஒரு வார்த்தை மூலமாகவே நீ செய்திருக்கலாம், ஆனால் அதனைச் செய்யாது விடுத்தாய் – என்கிறாள்.

வ்யாக்யானம் - அதுக்கு இப்போது வந்ததென்? என்ன (சாயலோடு மணிமாமை தளர்ந்தேன் நான்) ஸமுதாய சோபையோடே நிறத்தில் பௌஷ்கல்யமும் இழந்தேன். "இனிப்போய் அறிவிக்கிறேன்" என்று த்வரிக்கப்புக்கது; கதே ஜலே ஸேதுபந்தம் போலே இனி அறிவித்தால் என்ன லாபமுண்டு? (இனி உனது இத்யாதி) "இனி உனக்கு ரக்ஷகரைத் தேடப்பாராய்; அவன் வந்தாலும் போன நிறத்தை மீட்கப்போகாது" என்றிருக்கிறாள். பெரியதிருமலைநம்பி தம்முடைய அந்திம தசையிலே தமக்கொரு வெண்ணெய்க்காடும் பிள்ளையாயிற்றுத் திருவாரதநம், அவர் திருமுன்பில் திருத்திரையை வாங்கச்சொல்லி, "சாயலோடு மணிமாமை தளர்ந்தேன் நான், இனியுனது வாயலகில் இன்னடிசில் வைப்பாரை நாடாயே" என்றாராம்.

விளக்கம் – இதனைக் கேட்ட அந்தப் பறவை, "சரி! நான் சென்று உரைக்கவில்லை. அதனால் இப்போது என்ன?", என்று கேட்க, இவள் விடை அளிக்கிறாள். (சாயலோடு மணிமாமை தளர்ந்தேன் நான்) சாயல் என்றால் லாவண்யம் அல்லது உடலில் வீசும் ஒருவிதமான ஒளி; மாமை என்றால் நிறம். அதாவது எனது உடல் ஒளி மட்டும் அல்லாமல் நிறத்தில் உள்ள தன்மையும் இழந்தேன். இதனை கேட்ட அந்தப் பறவை, "இப்போது உடனே சென்று அவனிடம் உரைக்கிறேன்", என்று விரைவாகப் புறப்பட முனைந்தது. உடனே இவள் அந்தப் பறவையிடம், "தண்ணீர் முழுவதும் சென்று விட்ட பின்னர் அணை கட்டுபவர்கள் போன்று, இனி நீ சென்று என்ன பயன் ஏற்படப்போகிறது?", என்று தொடர்ந்தாள். (இனி உனது இத்யாதி) - இனி நீ சென்று உன்னைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்பவர்கள் யார் என்று பார்த்துக் கொள்வாயாக. அவன் இனி என்னைத் தேடி வந்தாலும், இழந்த எனது நிறம் போன்றவற்றை மீண்டும் கொண்டு வர இயலாது. இங்கு பெரியதிருமலைநம்பி குறித்த நிகழ்வு ஒன்றைக் கூறுகிறார். அந்த ஆசார்யன்

"வெண்ணெய்க்கு ஆடும் பிள்ளை" என்பதான க்ருஷ்ண விக்ரஹத்தை ஆராதனை செய்து வந்தார். தனது அந்திம காலத்தில் ஆராதனம் செய்ய உடலில் வலு இல்லாமல், அவன் முன்பாக வணங்கி - சாயலோடு மணிமாமை தளர்ந்தேன் நான், இனியுனது வாயலகில் இன்னடிசில் வைப்பாரை நாடாயே - நான் எனது உடலில் மிகுந்த தளர்ச்சி கொண்டுவிட்டேன், இனி உனக்குத் திருவாராதனம் செய்பவர்கள் யார் என்று நீயே தேடிக் கொள்வாயாக - என்று உரைத்தாராம்.

1-4-9 நாடாத மலர்நாடி நாடோறும் நாரணன்றன்
வாடாத மலரடிக்கீழ் வைக்கவே வகுக்கின்று
வீடாடி வீற்றிருத்தல் வினையற்ற தென்செய்வதோ
ஊடாடு பனிவாடா யுரைத்தீரா யெனதுடலே.

பொருள் - அவருக்கும் எனக்கும் நடுவில் ஆடியபடி உள்ள குளிர்ந்த வாடைக்காற்றே! தேடிப்பிடிப்பதற்கு மிகவும் அரியதாக உள்ள மலர்களைக் கொண்டு வந்து, அன்றாடம் ஸ்ரீமந்நாராயணனின் அழகான வாட்டம் இல்லாதபடி எப்போதும் மலர்ந்துள்ள திருவடிகளில் வைத்து வணங்குவதற்காக மட்டுமே அவன் இந்த உலகில் உள்ள உயிர்களைப் படைத்தான். இப்படி உள்ளபோது அவனைப் பிரிந்து தனியாக வாழ்வதாக எண்ணிக் கொண்டு, நல்வினை அற்றதான செயல்களைச் செய்வதன் மூலம் என்ன பலன் கிட்டும்? இதனை நீ (காற்றிடம் கூறுகிறார்) அவனிடம் சென்று உரைப்பாயாக. அவனிடமிருந்து எந்த விடையும் வரவில்லை என்றால், எனது சரீரத்தைப் பிளப்பதற்கு நீ வருவாயாக.

அவதாரிகை - "சாயலோடு மணி மாமை தளர்ந்தேன் நான்" என்று இருக்கிற ஸமயத்திலே ஒரு வாடை வந்து உடம்பிலே பட்டது; இதினுடைய தோற்றரவிருந்தபடியாலே வெறுமனன்று; மஹராஜருடைய மிடற்றோசையில் தெளிவைக் கேட்டுத் தாரை, "பூர்வக்ஷணத்திலே வாலி கையாலே நெருக்குண்டு போனவர், இப்போது இப்படி தெளிந்து வந்து அறை கூறுகிற இது வெறுமனல்ல; இதுக்கு ஓர் அடி உண்டு" என்றாற்போலே, இவளும் "இவ்வாடைக்கு ஓர் அடி உண்டாக வேணும்" என்று பார்த்து, "ராஜாக்கள் ராஜத்ரோஹம் செய்தவர்களை நலிகைக்கு வேற்காரரை வரவிடுமாபோலே நம்மை நலிகைக்காக ஸர்வேச்வரன் இவ்வாடையை வரவிட்டானாகவேணும்" என்று பார்த்து, வேற்காரர் கொடுபோய் நலியப்புக்கவாறே "நிதியுண்டு" என்பாரைப்போலே, நான் சொல்லுகிற வார்த்தையை நீ அங்கே சென்று அறிவித்தால், "அத்தலையால் வரும்

நன்மை வேண்டா" என்று இருந்தானாகில், அவச்யம் வந்து என்னை முடிக்கவேணும் என்று அவ்வாடையை இரக்கிறாள்.

விளக்கம் – "சாயலோடு மணி மாமை தளர்ந்தேன் நான்" என்று கூறியபடி, தளர்ச்சியுடன் இருத்தபோதே இவள் மீது வாடைக்காற்று வந்து பட்டது. அந்தக் காற்றானது சாதாரண ஒன்றாக இவளுக்குத் தோன்றவில்லை, அதற்கு ஈச்வர ஸம்பந்தம் உண்டு என்றே எண்ணினாள். எப்படி என்பதைக் ஓர் உதாரணத்தால் காட்டுகிறார். இராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம் (15-11) - த்வயா தஸ்ய நிரஸ்தஸ்ய பீடிதஸ்ய விசேஷத: இஹைத்ய புநராஹ்வாநம் சங்காம் ஜநயதீவ மே - வாலியிடம் தாரை, "உங்களால் தோற்கடிக்கப்பட்டு ஓடிய சுக்ரீவன், மீண்டும் வந்து யுத்தம் செய்ய அழைக்கிறான் என்றால், இதில் ஏதோ மர்மம் உள்ளதாக என் மனதில் தோன்றுகிறது", என்றாள் – என்ற ச்லோகத்தின் கருத்தை இங்கு கூறுகிறார். சுக்ரீவனின் பலமான அறைகூவலில் உள்ள தொனியினைக் கேட்ட தாரை, "முன்பு வாலியின் கையால் அடிப்பட்டுச் சென்றவன், இப்போது இவ்விதம் மிகவும் தெளிவாக அறைகூவல் விடுப்பது என்பது வெறும் செயலாகத் தோன்றவில்லை. இதன் பின்னர் ஏதோ உள்ளது", என்றாள். இதே போன்று இவளும், "இந்த வாடைக்காற்று வீசுவதன் பின்னால் ஏதோ உள்ளது, ஈச்வரனே இந்தக் காற்று வீசவேண்டும் என்று ஸங்கல்பித்தான் போன்று உள்ளது. ராஜதுரோகம் செய்தவர்களை துன்புறுத்துவதற்கு அரசர்கள் தங்களது ஈட்டி ஏந்திய காவலர்களை அனுப்புவது போன்று, என்னைத் துன்புறுத்த இந்தக் காற்றை ஈச்வரன் அனுப்பினான் போலும்," என்றாள். அவ்விதம் வரும் காவலர்களிடம், "இதோ என்னிடம் செல்வம் உள்ளது, இதனை எடுத்துக்கொள்ளுங்கள்", என்று அவர்களைத் தாழவைக்க எண்ணுவது போன்று இவளும் காற்றிடம், "நான் கூறுவதை அவனிடம் உரைப்பாயாக", என்றாள். "செல்வம் உள்ளது" என்று கூறுபவர்கள் போன்று இவள் இரு பயன்களை உரைக்கிறாள் – தூயமலர்களைத் திருவடியில் இடுதல் அல்லது சரீரத்தை அறுத்தல் - என்பதாகும். இதனைச் சென்று அவனிடம் உரைத்த பின்னரும், "அவளால் எந்த நன்மையும் நமக்கு இல்லை", என்று அவன் இருந்தான் என்றால், மீண்டும் நீ அவசியம் என்னிடம் வந்து, எனது உயிரைப் பறிப்பாயாக என்று வேண்டுகிறாள்.

வ்யாக்யானம் - (நாடாத மலர் நாடி) "ஆத்ம புஷ்பத்தைச் சொல்லுகிறது" என்பாரும் உண்டு. அங்ஙனன்றிக்கே, ஜீயர் "எண்டிசையுமுள்ள பூக்கொண்டு" என்கிறபடியே, தேட அரிய புஷ்பங்கள் எல்லாம் தேடி – என்று அருளிச்செய்வர். இதுதான் ஒருநாள் தேடி

விடுகையன்றிக்கே, (நாடோறும்) விச்சேதியாதபடி. கிஞ்சித்கரித்து ஸ்வரூபம் பெறும் வஸ்துவுக்கு விச்சேதம் ஸ்வரூபஹாநியிறே. (நாரணன்) நித்யபரிசர்யை பண்ண வேண்டும்படி ஸர்வஸ்வாமியானவன். (வாடாத மலரடிக்கீழ்) செவ்விமாறாத பூப்போலேயிருக்கிற திருவடிகளின் கீழே. ஸ்வரூபஹாநியானாலும் விடவொண்ணாதபடி நிரதிசய போக்யமுமான திருவடிகள். (வைக்கவே) சேர்க்கவே. (வகுக்கின்ற) உண்டாக்கிற்று. "ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாய" போலே. இப்படி வகுத்ததுமாய், ஸுலபமுமாய், நிரதிசய போக்யமுமான திருவடிகளிலே ஸர்வவித கைங்கர்யங்களையும் பண்ணவாயிற்று இத்தையுண்டாகிற்று. சேஷபூதனுக்கு கிஞ்சித்கரித்து ஸ்வரூப ஸித்தியானாற்போலே சேஷிக்கும் கிஞ்சித்கரிப்பித்துக்கொண்டிறே ஸ்வரூபஸித்தி. இப்படியிருக்க, (வீடாடி வீற்றிருத்தல் வினையற்றதென் செய்வதோ) வீடென்று - விடுகை. அதாவது – விச்லேஷிக்கை. ஆடுகை - அவகாஹிக்கை. வீற்றிருக்கையாவது – விச்லேஷத்திலே மூர்த்தாபிஷிக்தையாயிருக்கை. வினையறுகையாவது - நல்வினையறுகை.

விளக்கம் – (நாடாத மலர் நாடி) – "நாடாத" என்றால் தேடினாலும் எளிதில் கிட்டாத என்று பொருள். மலர் என்றால் எவ்விதமாகவாவது தேடிக் கண்டுபிடித்து விட இயலும், ஆகவே தேடினாலும் எளிதாகக் கிட்டாத ஆத்மபுஷ்பம் என்பது கூறப்படுகிறது. ஆத்மாவை மலர் என்பது எப்படி? ஈச்வரனுக்கு மலர்களைச் சமர்ப்பிப்பது போன்று ஆத்மாவைத் திருத்தி அவனிடம் சேர்ப்பதால் அவன் உகப்படைவதாகக் கூறினார். இங்கு ஸர்வேச்வரன் உகப்படைகிறான் என்பதைக் கீழே உள்ள ஸ்ரீமத்பகவத்கீதை ச்லோகங்கள் மூலம் அவனே உரைப்பதைக் காண்க (இந்தக் கீதை வரிகள் ஈட்டில் இல்லை, இவை ஈட்டிற்கான அரும்பத உரையிலிருந்து எடுக்கப்பட்டன):

- (18-68) - ய இதம் பரமம் குஹ்யம் மத்பக்தேஷ்வபிதாஸ்யதி பக்திம் மயி பராம் க்ருத்வா மாமேவைஷ்யத்ய ஸம்சய: - இத்தகைய உயர்ந்த ரஹஸ்யத்தை எனது பக்தர்களிடம் நான் உரைப்பேன். என்னிடம் உயர்ந்த பக்தி கொண்டவன் என்னையே அடைவான் என்பதில் சந்தேகம் இல்லை.

- (18-69) - ந ச தஸ்மாந் மநுஷ்யேஷு கச்சிந்மே ப்ரியக்ருத்தம: பவிதா ந ச மே தஸ்மாதந்ய: ப்ரியதரோ புவி: - மனிதர்களில் அவனைக் காட்டிலும் எனக்கு

இனிமையாக உள்ளவன் யாரும் இல்லை. அவனைவிட எனக்கு உகந்தவர்கள் வேறு யாரும் இல்லை.

ஸ்வாமி நஞ்ஜீயர் இங்கு திருவாய்மொழி (4-7-8) - எண்டிசையுமுள்ள பூக்கொண்டு - என்று உரைத்தபடி தேடுவதற்கு அரியதாக மலர்கள் அனைத்தையும் தேடி - என்று அருளிச்செய்வார். இது ஒருநாள் மட்டுமே தேடி, அடுத்த நாளில் இருந்து விடக்கூடியது அல்ல, (நாடோறும்) – அன்றாடம் செய்யப்படவேண்டும் - என்கிறார், இடைவிடாதபடி என்கிறார். மிகவும் அரும்பாடுபட்டு தன்னுடைய ஸ்வரூபத்தை உணர்ந்த இந்த ஆத்மாவிற்கு, சற்று இடைவெளி இருந்தாலும் ஸ்வரூபத்திற்கு இழுக்கு ஆகும். (நாரணன்) - இப்படிப்பட்ட ஆத்மஸ்வரூபம் இருக்கும் விதம்தான் எப்படி என்ற கேள்விக்கு பதில் அளிக்கிறார். அன்றாடம் கைங்கர்யம் செய்யும்படியாக, அனைத்திற்கும் ஸ்வாமியாக உள்ளவன். (வாடாத மலரடிக்கீழ்) – அழகும் மலர்ச்சியும் சற்றும் மாறாத மலர்கள் போன்றுள்ள அவனது திருவடிகளின் கீழே. ஸ்வரூபத்திற்கு இழுக்கு ஏற்பட்டாலும், விட இயலாத எல்லையற்ற இன்பம் சூழ்ந்த திருவடிகள். (வைக்கவே) – சேர்ப்பதற்காகவே. (வகுக்கின்று) - உண்டாக்கிற்று. இராமாயணம் அயோத்யாகாண்டம் (40-5) – ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாய – சுமித்திரை லக்ஷ்மணனிடம், "நீ இராமனுடன் கானகத்தில் வசிக்கவே வந்தாய்", என்று கூறுவது போன்று, நாம் சென்று சேர்வதற்காகவே உள்ள திருவடிகள். அனைத்துவிதமான கைங்கர்யம் செய்வதால் சேதநன் ஒருவனுக்கு ஸ்வரூபலாபம் கிட்டுவது போன்று, ஸர்வேச்வரனுக்கும் ஸ்வரூபலாபம் கிட்டுகிறது. இப்படி உள்ளபோது, (வீடாடி வீற்றிருத்தல் வினையற்றதென் செய்வதோ) – வீடென்று = விடுதல் அல்லது பிரிதல். ஆடுகை = மூழ்கியபடி இருத்தல். வீற்றிருக்கை = அவனைப் பிரிந்து முடிசூடியிருத்தல். வினைஅறுகை = நல்வினை அழிதல்.

வ்யாக்யானம் - இப்படி பாக்யஹாநியால் விச்லேஷத்திலே அபிக்ஷேகம் பண்ணித் தம்மைப் பிரிந்திருக்கிற இப்பொல்லாத இருப்புண்டு, இது என் செய்யக்கடவதோ? என்னுதல்; அன்றிக்கே, தம்மையும் பிரிந்து, தம்மோடு ஒரு ஸம்பந்தத்தையிட்டு பந்துக்களும் கைவிட, அவர்களையும் விட்டு, வேறுபட்டிருக்கிற இவ்வஸ்து, என்செய்யக் கடவதோ? என்னுதல். "எமராலும் பழிப்புண்டிங்கென்? தம்மாலிழிப்புண்டு" என்னக் கடவதிறே. (ஊடாடு பனி வாடாய்) வேற்காரர் அங்குத்தை வார்த்தையை இங்கே சொல்லி, இங்குத்தை வார்த்தையை அங்கே சொல்லித் திரியுமாபோலே, அங்கோடு

இங்கோடாய்த் திரியாநின்றதாயிற்று. ஊடென்று – உள்ளாய், ஆடுகை – ஸஞ்சரிக்கையாய், அங்கே அந்தரங்கமாக ஸஞ்சரிக்கை. அன்றிக்கே, ஸம்ச்லேஷ ஸமயத்திலே கிட்டி வர்த்தித்துப்போந்த நீ என்னுதல். (உரைத்து) "நித்யகைங்கர்யத்துக்கு இட்டுப்பிறந்த வஸ்து இப்படியிருக்கக்கடவதோ?" என்று அறிவித்தால் "அத்தலையால் வரும் கைங்கர்யமும் நமக்கு வேண்டா" என்றிருந்தானாகில், அவச்யம் வந்து அவனோட்டைப் பிரிவுக்குச் சிளையாத என் உடலை முடித்துவிடவேணும் – என்று காலைப் பிடித்து வேண்டிக்கொள்ளுகிறாள்.

விளக்கம் – இப்படியாக நல்வினை இல்லாத காரணத்தினால், பிரிவில் மூழ்கியபடி, பிரிந்திருக்கிற இருப்பு என உண்டு, இது பிரிவை முடிக்குமோ அல்லது உயிரை முடிக்குமோ? அல்லது வேறு பொருள் உரைக்கலாம் - தன்னையும் பிரிந்து, தன்னுடன் ஒரு ஸம்பந்தம் கொண்டுள்ள உறவினர்களும் கைவிட, அவர்களையும் விட்டுப்பிரிந்து நிற்கும் உயிர் என்ன கதியாகுமோ? திருவாய்மொழி (9-7-2) – எமராலும் பழிப்புண்டிங்கென்? தம்மாலிழிப்புண்டு – என்று இவரே கூற உள்ளார். (ஊடாடு பனி வாடாய்) – அரசனின் காவல்காரர்கள், அரசன் கூறியதை இங்கு வந்து உரைத்து, இங்கு உள்ளவர்கள் கூறுவதை அரசனிடம் சென்று கூறுவது போன்று, நீயும் அங்கும் இங்குமாகச் செல்வாய். ஆடுகை என்பதை ஸஞ்சாரம் செய்தல் என்று பொருள் கொண்டு, "அங்கு அந்தரங்கமாக நீ ஸஞ்சரிப்பாய்", எனலாம். அல்லது "அவனுடன் கூடியிருந்த காலத்தில் என்னை அடைந்து ஸஞ்சரித்த நீ", என்றும் பொருள் கொள்ளலாம். (உரைத்து) - நீ அவனிடம் சென்று, "உன்னுடைய நித்யமான கைங்கர்யத்திற்காக உண்டான அவனது ஆத்மா இவ்விதம் தவித்தபடி இருப்பது சரியா, தவிக்க வைப்பது சரியா?", என்று கேட்பாய். இதற்கு அவன் உன்னிடம், "அந்த ஆத்மாவால் வருகின்ற கைங்கர்யங்கள் நமக்குத் தேவையில்லை", என்று உரைத்தான் என்றால், நீ வேகமாக என்னிடம் வந்து, அவனுடைய பிரிவை அடைந்த பின்னரும் சலிக்காமல் உள்ள எனது உடலை முடித்து விடுவாயாக - என்று வாடைக்காற்றின் காலைப்பிடித்து வேண்டி நிற்கிறாள்.

1-4-10 உடலாழிப் பிறப்புவீ டுயிர் முதலா முற்றுமாய்
கடலாழி நீர்தோற்றி அதனுள்ளே கண்வளரும்
அடலாழி யம்மானைக் கண்டக்கா லிதுசொல்லி
விடலாழி மடநெஞ்சே வினையோ மென்றாமளவே.

பொருள் – ஆழமாகவும், எனக்கு பவ்யமாகவும் உள்ள எனது நெஞ்சமே! இந்தச் சரீரத்திலே வட்டம் போன்று மாறிமாறிப் பிறக்கின்ற இந்த ஸம்ஸார ஸ்தலம், மோக்ஷம், இவைகளை அனுபவிக்கின்ற ஆத்மா ஆகியவற்றுக்குத் தலைவன்; அனைத்தும் தன் கட்டுப்பாட்டில் இயங்கும்படி உள்ளவன்; அனைத்தையும் உண்டாக்கி, அவற்றைக் காக்கும் பொருட்டு ஆழமான நீரைக் கொண்ட திருப்பாற்கடலை உண்டாக்கி, அதற்குள் கண்வளர்ந்தபடி உள்ளவன்; தனது அடியார்களின் விரோதிகள் விஷயத்தில் சக்கராயுதம் கொண்டவன் – இப்படிப்பட்ட ஸர்வேச்வரனை நீ காணும்போது, வளர்ந்தபடி உள்ள எனது துயரத்தை அவனிடம் உரைத்து, பிரிவுக்குக் காரணமான பாவங்கள் நிரம்பிய நான் அவனுடன் இணையும்வரை அவனை விடாமல் இருப்பாயாக.

அவதாரிகை - "அல்லாதாற்றையெல்லாம் விட்டு, நெஞ்சைத் தூது விடுகிறாள்" என்பாரும் உண்டு. அப்போது, விடல் என்றது - அவனை விடாதேகொள் என்கை. அன்றிக்கே, கீழ்ற்பாட்டில் "வைக்கவே வகுக்கின்று" என்று கைங்கர்யம் ப்ரஸ்துதமானவாறே, தாய்முலையை நினைத்த கன்றுபோலே திருவுள்ளம் பதறி சரீரத்தை விட்டுப்போகப் புக்கது; நம் கார்யம் ஓர் அறுதி பிறக்குமளவும் நீ என்னை விடாதே கொள் என்னுதல்.

விளக்கம் - இந்தத் திருவாய்மொழி முழுவதும் தூதுச்செய்திகள் உள்ளதாக இருப்பதால் பறவைகளைக் குறித்து உரைப்பதாக உள்ளது. ஆயினும் மனதைக் குறித்து உரைப்பதாக இந்தப் பாசுரம் மட்டும் உள்ளதை இரண்டு விதமாகக் கூறுகிறார். இதனையே "அல்லாத" என்றும், "அன்றிக்கே" என்றும் தொடங்கும் வாக்கியங்கள் (மேலே உள்ள அவதாரிகையின் மூலம் காண்க) உணர்த்துகின்றன. அவனுக்கு ஏற்காதவற்றையும், அவனை அடையத் தடையாக உள்ளவற்றையும் கைவிட்டு, அவனிடம் தனது நெஞ்சத்தைத் தூது விடுகிறாள் என்று சிலர் உரைப்பர். இவ்விதம் கொண்டால் "விடல்" என்று பாசுரத்தில் உள்ள பதத்திற்கு "அவனை விடாமல் பிடித்துக்கொள்" என்று பொருள். அல்லது மற்றோரு பொருளும் உரைக்கலாம். கடந்த பாசுரத்தில் "வைக்கவே வகுக்கின்று" என்று கைங்கர்யம் குறித்துக் கூறப்பட்டவுடன், பசித்தவுடன் தாயின் ஸ்தனங்களை எண்ணும் குழந்தையைப் போன்று, தனது திருவுள்ளமானது பதற்றம் அடைந்து, சரீரத்தை விட்டு அகன்று, அவனை அடையத் துடித்தபடி நின்றது. ஆகையால் இவள் தனது நெஞ்சத்திடம், "நமது செயல்கள் ஒரு உறுதியான நிலைக்கு வரும்வரை நீ என்னையும் விடாமல் இரு, அவனையும் விடாமல் இரு", என்கிறாள்

வ்யாக்யானம் - (உடலாழிப் பிறப்பு) உயிரினுடைய உடலாழிப்பிறப்பு. ஆத்மாவினுடைய ஸஹஜமான பிறப்பு. வீடு முதலா முற்றுமாகைக்காக - மோக்ஷாதி புருஷார்த்தங்களைப் பெறுகைக்காக. சரீரத்தினுடைய வட்டமான பிறப்பு. அன்றிக்கே, ஆழியென்று கடலாய், அத்தால் காம்பீர்யமாய், அஸங்க்யேயமான ஜந்மமென்னுதல். வீடு - மோக்ஷம். ஸ்ருஷ்டிக்கு ப்ரயோஜநம் மோக்ஷமாகையாலே சொல்லுகிறது.

விளக்கம் – (உடலாழிப் பிறப்பு) - ஆத்மாவினுடைய சரீரத்தின் சுழற்சியான பிறவிகள். மோக்ஷம் உள்ளிட்ட புருஷார்த்தங்களைப் பெறுவதற்காக. அல்லது ஆழி என்பதைக் கடல் என்று பொருள் கொள்ளலாம். இவ்விதம் கொண்டால் "எல்லையற்ற பிறவிகள்" என்று கொள்க. வீடு என்றால் மோக்ஷம். ஏன் மோக்ஷத்தை மட்டும் முதலில் உரைக்க வேண்டும் என்றால், படைப்பின் பயனே மோக்ஷம் அடைவது என்பதால் ஆகும்.

வ்யாக்யானம் – அன்றிக்கே, (வீடுயிர்) ஜந்மங்கள்தோறும் உண்டான சரீரஸ்தமான ஆத்மாக்கள். உயிர் தொடக்கமாக மற்றுமுண்டான கார்யஜாதத்தை உண்டாக்குகைக்காக. (ஆய்) "பஹு ஸ்யாம்" என்கிறபடியே, தன் விகாஸமே ஆகையாலே. (கடலாழி நீர் தோற்றி) ஆழி நீர் – ஆழிய நீர். "அப ஏவ ஸஸர்ஜாதௌ" என்கிறபடியே மிக்க ஜலத்தையுடைத்தான ஏகார்ணவத்தையுண்டாக்கி, இவ்வருகுண்டான ஸ்ருஷ்ட்யாதிகளுக்காக அங்கே வந்து கண்வளர்ந்தருளும். (அடலாழி அம்மானை) – ஸ்ருஜ்ய பதார்த்தங்களுக்கு விரோதிகளாயிருப்பாரை அழியச் செய்கைக்காக ஆசிலே வைத்த கையும் தானுமாயாயிற்றுக் கண்வளர்ந்தருளுவது. (கண்டக்கால்) என்னிலும் உனக்கன்றோ பேறு முற்பட்டிருக்கிறது. "சந்த்ரே த்ருஷ்டி ஸமாகம:" போலே கண்டாரைக் காணுமித்தனையிறே தனக்கு. (இது சொல்லி) "வைக்கவே வகுக்கின்று" என்கிற வார்த்தையைச் சொல்லி என்னுதல்; ஸ்ருஷ்டிக்கு ப்ரயோஜநம் – "விசித்ரா தேஹஸம்பத்திரீச்வராய நிவேதிதம்" என்கிறபடியே, தேவர் திருவடிகளிலே ஸர்வ கைங்கர்யங்களையும் பண்ணுகையன்றோ என்கை. "விடல்" என்கிற பதம் – மேலே அந்வயிக்கிறது. (ஆழி மடநெஞ்சே) அளவுடையையாய், பவ்யமான நெஞ்சே என்னுதல்; சுழன்று வருகிற பேதை நெஞ்சே என்னுதல். (வினையோம் ஒன்றாமளவும் விடல்) ஸ்ருஷ்டிக்கு ப்ரயோஜநம் அங்கே அவரைக்கிட்டி அடிமை செய்கையாயிருக்க, பிரிகைக்கீடான பாபத்தைப் பண்ணின நாம் அவரோடே சேருமளவும் நீ அவரை விடாதேயொழியவேணும்.

விளக்கம் – அல்லது, (வீடுயிர்) - பிறவிகள் என்று பல உண்டாகின்ற சரீரத்தை இருப்பிடமாக உடைய ஆத்மாக்கள். உயிர்கள் தொடங்கி மேலும் பலவாக உள்ள தேவர்கள் உள்ளிட்ட ஜீவர்களை உண்டாக்கும்விதமாக, தைத்திரீய ஆனந்தவல்லீ (6-91) – பஹு ஸ்யாம் - நான் பலவாகக் கடவேன் - என்று அந்த ப்ரஹ்மம் ஸங்கல்ப்பித்தது. (கடலாழி நீர் தோற்றி) – மிகுதியாக நீரைக் கொண்டதான திருப்பாற்கடலை உண்டாக்கி. மநுஸ்ம்ருதி (1-8) – அப ஏவ ஸஸர்ஜாதௌ - தண்ணீரையே முதலில் படைத்தான் - என்று கூறியது காண்க. இப்படியாகத் தன்னால் படைக்கப்பட்ட அனைத்திற்காகவும், திருப்பாற்கடலை உண்டாக்கி, அந்தத் திருப்பாற்கடலில் வந்து கண்வளர்கிறான். (அடலாழி அம்மானை) - தன்னால் படைக்கப்பட்ட உயிர்களுக்கு விரோதிகளாக உள்ள அனைத்தையும் அழிக்கும் பொருட்டு ஆயுதத்தின் கைப்பிடியிலே எப்போதும் ஒரு திருக்கரத்தை வைத்தபடி கண்வளர்கிறான். (கண்டக்கால்) – என்னைக் காட்டிலும் எனது நெஞ்சமான உனக்கு அல்லவோ அவனை முதலில் காணக்கூடிய வாய்ப்பு உள்ளது? இராமாயணம் யுத்தகாண்டம் - சந்த்ரே த்ருஷ்டி ஸமாகம: - சீதையால் காணப்பட்ட சந்த்ரன் – என்று சீதையால் காணப்பட்ட நிலவு என்பதால் அதனைக் கண்டு மகிழ்வது போன்று, அவனைக் கண்டவர்களைத் தான் கண்டாலே போதுமானதாக உள்ளது. (இது சொல்லி) – இப்படி அவனைக் காணும்போது அவனுக்காகவே இந்த அவயவங்கள் உள்ளன போன்றதான சொற்களை அவனிடம் உரைத்து. ஸ்ருஷ்டிக்குப் பயன் என்ன என்பதை விஷ்ணுதத்வம் - விசித்ரா தேஹஸம்பத்திரீச்வராய நிவேதிதம் - அவனுக்காகக் கைங்கர்யங்களைச் செய்வதற்காகவே இந்த விசித்ரமான உடலும் அவயவங்களும் உள்ளன – என்று கூறுகிறது. ஆக அவனது திருவடிகளில் நிலைநின்று, அனைத்துவிதமான கைங்கர்யங்களையும் செய்தபடி உள்ளதே படைப்பின் பயன் அல்லவோ? (ஆழி மடநெஞ்சே) - அளவு என்றால் ஞானத்தைக் குறிக்கும். ஆக ஞானம் நிரம்ப உள்ளதாக, எனக்கு வசப்பட்ட நெஞ்சமே! என்னையே சுழல்கின்ற மடநெஞ்சமே! ஒரே நெஞ்சத்தை எப்படி அறிவுள்ளதாகவும், அறிவற்றதாகவும் உரைக்கிறார்? அவனைப் பற்றி நின்று, விடாமல் உள்ளபோது அறிவுள்ள நெஞ்சம் என்றும்; தன்னைப் பற்றி நின்று, விடாமல் இருந்தால் மடநெஞ்சம் என்றும் கொள்க. (வினையோம் ஒன்றாமளவும் விடல்) – ஸ்ருஷ்டியின் பயன் விஷ்ணுதத்வம் கூறியது போன்று, அங்கு சென்றும் அவனிடம் சரண் புகுந்து, அவனுக்குக் கைங்கர்யம் செய்தலே ஆகும். இப்படி உள்ளபோது எனது மிகுதியான பாவங்கள் காரணமாக அவனைப் பிரிந்து நான் நிற்கிறேன். நான் மீண்டும் அவனைச் சென்று சேரும்வரை நீயாவது அவனை விடாமல் பற்றிக் கொள்வாயாக.

1-4-11 அளவியன்ற வேழுலகத் தவர்பெருமான் கண்ணனை
வளவயல் சூழ் வண்குருகூர்ச் சடகோபன் வாய்ந்துரைத்த
அளவியன்ற வந்தாதி யாயிரத்து ளிப்பத்தின்
வளவுரையால் பெறலாகும் வானோங்கு பெருவளமே.

பொருள் – எல்லையைக் கடந்ததாக ஏழுவகையாக இருக்கின்ற உலகத்தில் உள்ள அனைவருக்கும் ஸ்வாமியாக உள்ள க்ருஷ்ணனை, வளமான வயல்களால் சூழப்பட்டதான அழகான ஆழ்வார்திருநகரிக்குத் தலைவராகிய நம்மாழ்வார், தனது ஞானம் மற்றும் ப்ரேமை ஆகியவற்றால் நிரம்பப் பெற்றவராக இந்தத் திருவாய்மொழியை அருளிச்செய்தார். சரியான இலக்கண ஈதியில் அமையப் பெற்ற அந்தாதியான ஆயிரம் பாசுரங்களில், ஆழ்வாரின் நாயகி பாவங்களை வெளிப்படுத்துவதான இந்தப் பத்து பாசுரங்களின் இனிமையான சொற்கள் மூலமாக மட்டுமே பரமபதம் சென்று, அங்கு மிகவும் உயர்ந்த கைங்கர்யங்கள் கிட்டப்பெறலாம்.

அவதாரிகை – நிகமத்தில், இத்திருவாய்மொழியில் சப்தமாத்ரத்தை அப்யஸிக்கவே அமையும் திருநாட்டைப் பெறுகைக்கு என்கிறார்.

விளக்கம் – இறுதியாக உள்ள இந்தப் பாசுரத்தில், இந்தத் திருவாய்மொழியில் உள்ள சொற்களைக் கற்பதன் மூலமே பரமபதம் பெறலாம் என்கிறார்.

வ்யாக்யானம் - (அளவியன்ற) "வியந்த" என்கிற இது "வியன்ற" என்று கிடக்கிறது. தவ்வுக்கு றவ்வாய், வியத்தல் – கடத்தலாய், அளவைக் கடந்திருக்கும் என்றபடி. அபரிச்சேத்ய மஹிமனாகை. இத்தால் இத்தசையில் முகங்காட்டுகைக்கீடான ஜ்ஞாநாதி குணபூர்ணன் என்கை. (ஏழுலகத்தவர் பெருமான்) நாராயணத்வம் விகலமாகாதபடி ஸர்வேச்வரனானான். ஏழுலகத்தவர் என்னவே – தாமும் அதிலே அந்தர்பூதரிறே. (கண்ணனை) இவ்வளவிலே வந்து முகங்காட்டிற்றிலன் என்கிற குற்றந்தீர வந்து முகங்காட்டுகையாலே ஆச்ரித ஸுலபனானான். பத்துடை அடியவரில் க்ருஷ்ணாவதாரத்தில் அநுபவிக்கப்பாரித்து, அது கிடையாமையாலே தூது விட்டாராகையாலே இங்கு முகங்காட்டினான் க்ருஷ்ணன் என்னவுமாம். இத்தால் - அவனுடைய மேன்மையும் ஸௌலப்யமும் நிலைநின்றது, இவர்க்கு முகங்காட்டின பின்பாயிற்று என்றபடி.

விளக்கம் - (அளவியன்ற) - "வியந்த" என்பதே "வியன்ற" என்னும் மாற்றம் அடைந்தது. "த" என்பதற்கு "ற" என்று வந்தது. "வியத்தல்" என்றால் கடந்து நிற்பது, அதாவது அளவு கடந்து இருத்தல், அளவற்ற மேன்மைகளை கொண்டவன். அளவற்ற மஹிமைகள் கொண்டவன் என்பதால், இந்த நிலையில் தனது முகம் காட்டுவதற்கு ஈடாக உள்ள ஞானம் உள்ளிட்ட பல குணங்களை முழுமையாகக் கொண்டவன். (ஏழுலகத்தவர் பெருமான்) – நாராயணன் என்ற திருநாமத்திற்கு, அனைவருக்கும் எஜமானன் என்றே கருத்து. இப்படி உள்ளபோது இவரை மட்டும் கைக்கொள்ளாமல் இருந்தால், அதாவது ஒருவர் குறைந்தாலும், அனைவருக்கும் "எஜமானன்" என்பது பொருந்தாது அல்லவோ என்ற சந்தேகம் எழலாம். ஆக, இவரைக் கைக்கொண்ட பின்னரே தனது பெயருக்கு ஏற்றபடி, நாராயணத்வம் அகன்றுவிடாதபடி, ஸர்வேச்வரன் ஆனான் என்கிறார். ஏழு உலகில் உள்ளவர்களைக் கைக்கொண்டவன் என்று கூறினால் இவரையும் கைக்கொண்டான் என்று எவ்விதம் கூறலாம் என்றால், இவரும் அதில் அடங்கியவர் என்பதால் ஆகும். (கண்ணனை) - கண்ணன் என்பது இருபொருள் கொண்டதாகும். கண்களுக்கு இலக்காக உள்ளவன், பெயர்ச்சொல் என்று இரு பொருள் கொள்க. இந்த இரண்டையும் ஒன்றாக உரைக்கிறார். இங்கு வந்து திருமுகம் காண்பிக்கவில்லை என்னும் குற்றம் தீரும்படி முகம் காண்பிப்பதால் அடியார்களுக்கு எளிதாகக் கிட்டுபவன். ஆனால் "பத்துடை அடியவர்" என்பதில் க்ருஷ்ணாவதாரத்தை அனுபவிக்க எண்ணினார்; ஆனால் அங்கு அது கிட்டவிலை, ஆகவே தூது விட்டார்; இதனால் இங்கு க்ருஷ்ணன் திருமுகம் காண்பித்தான் என்றும் கூறலாம். ஆக இவருக்குத் தனது திருமுகத்தைக் காண்பித்த பின்னரே க்ருஷ்ணனின் மேன்மையும் ஸௌலப்யமும் அவனிடம் நிலையாக நின்றன என்று கருத்து.

வ்யாக்யானம் – (வளவயல்) "அகாலபலிநோ வ்ருக்ஷா:" என்கிறபடியே திருநகரியும் தளிரும் முறியுமாயிற்று. (வாய்ந்துரைத்த) வாய்கை - கிட்டுகை; அதாவது பாவபந்தத்தை உடையராகை; நெஞ்சு பிணிப்புண்டு சொன்னதாயிருக்கை. (அளவியன்றவந்தாதி) அபரிச்சேத்ய வஸ்துவுக்கு வாசகமாகையாலே தானும் அபரிச்சிந்நமாய், ஒருவராலும் சலிப்பிக்கவொண்ணாதாய் இருக்கிற ஆயிரத்துள் இப்பத்தினுடைய நன்றான உரையாலே. (வானோங்கு பெருவளம் பெறலாகும்) பால்குடிக்க நோய் தீருமாபோலே, இத்திருவாய்மொழியில் இனிய சொல்லாலே பெறலாம். ஸ்வயம்ப்ரயோஜநமான இத்தாலே ஸம்ஸாரத்தில் ஸங்குசிதமான நிலைபோய், பரமபதத்திலே போய், ஸ்வஸ்வரூபத்தைப் பெற்று விஸ்த்ருதனாகையாகிற நிரவதிக ஸம்பத்தைப் பெறலாம்.

விளக்கம் - (வளவயல்) - இராமாயணம் யுத்தகாண்டம் - அகாலபலிநோ வ்ருக்ஷா: - அங்கு இருந்த மரங்கள் அனைத்தும் சரியான பருவகாலம் இல்லாதபோதிலும் வலிமையுடன் இருந்தன - என்று கூறுவது போன்று ஆழ்வார்திருநகரியானது எப்போதும் தளிரும் மொட்டும் நிரம்பியே இருந்தது. (வாய்ந்துரைத்த) – வாய்கை என்றால் கிட்டுகை. நெஞ்சம் அவனிடம் கட்டுண்டு இருந்த நிலை. (அளவியன்றவந்தாதி) – எல்லையற்ற பல மேன்மைகள் பொருந்திய வஸ்துவைப் பற்றி உரைக்கப்படும் சொற்கள் என்பதால், அந்தச் சொற்களும் மேன்மையுடன் கூடியவையே ஆகின்றன. யாராலும் சலித்துத் தள்ளக் கூடியதாக இல்லாதவை. இப்படி உள்ள ஆயிரம் பாசுரங்களில் இந்தப் பத்துப் பாசுரங்களின் சிறந்த கருத்து காரணமாக, (வானோங்கு பெருவளம் பெறலாகும்) – பால் குடிக்க நோய் விலகுவது போன்று, இந்தத் திருவாய்மொழியின் இனிமையான சொற்கள் மூலமே பெறலாம். எதனை? மற்ற எதுவும் அவசியம் இன்றி, தானே பலனாக உள்ள இந்தத் திருவாய்மொழி மூலமாக, ஸம்ஸாரத்தில் ஞானம் சுருங்கிச் சிக்கித் தவிக்கின்ற தாழ்வான நிலையானது நீங்கி, பரமபதத்தை அடைந்து, தனது ஆத்மஸ்வரூபத்திற்கு ஏற்றாப்போல ஞானம் விரிவடைந்து நிற்பது என்ற எல்லையற்ற செல்வத்தை அடையலாம்.

வ்யாக்யானம் - முதற்பாட்டில், ஒரு நாரையைத் தூதுவிட்டாள்; இரண்டாம் பாட்டில் அங்குப் போனால் சொல்லும் பாசுரத்தைச் சில குயில்களுக்குச் சொன்னாள்; மூன்றாம் பாட்டில் "நான் பண்ணின பாபமேயோ மாளாததென்று சொல்லுங்கொள்" என்று சில அன்னங்களை இரந்தாள்; நாலாம் பாட்டில், சில மகன்றில்களைப் பார்த்து, "என் தசையை அங்கே சென்று சொல்லவல்லிகளோமாட்டிகளோ?" என்றாள்; அஞ்சாம் பாட்டில், சில குருகுகளைப் பார்த்து, "தன்னுடைய நாராயணத்வம் ஒருவாய்ப்போகாமே நோக்கிக் கொள்ளச் சொல்லுங்கோள்" என்றாள்; ஆறாம் பாட்டில் ஒரு வண்டைக் குறித்து, "தம்முடைய நாராயணத்வத்துக்கு ஒரு ஹாநி வராமே எங்கள் ஸத்தையுங் கிடக்கும்படி இத்தெருவே எழுந்தருளச்சொல்" என்றாள்; ஏழாம் பாட்டில் ஒரு கிளியைக் குறித்து, "இத்தலையில் அபராதத்தையே பார்க்குமத்தனையோ? தம்முடைய அபராத ஸஹத்வத்தையும் ஒருகால் பார்க்கச்சொல்" என்றாள்; எட்டாம் பாட்டில், தான் உறாவினவாறே முன்கையிலிருந்த பூவையும் உறாவ, "நானோ முடியாநின்றேன்; நீ உனக்கு ரக்ஷகரைத் தேடிக்கொள்" என்றாள்; ஒன்பதாம் பாட்டில் ஒரு வாடையைக் குறித்து, "என் தசையை அங்கே சென்று அறிவித்தால், அவன் 'நமக்கு அவள் வேண்டா'

என்றானாகில் என்னை வந்து முடிக்க வேணும்" என்று இரந்தாள். பத்தாம் பாட்டில், தன் நெஞ்சைக் குறித்து "நம் கார்யம் ஓரறுதி பிறக்குமளவும் நீ அவனை விடாதே கொள்" என்று போக விட்டாள்; நிகமத்தில் இத்திருவாய்மொழியை அப்யஸித்தார்க்குப் பலஞ்சொல்லித் தலைக்கட்டினார்.

விளக்கம் - முதல் பாசுரத்தில் ஒரு நாரையைத் தூதுவிட்டாள். இரண்டாம் பாசுரத்தில் அவனிடம் சென்றால் உரைக்கவேண்டிய சொற்களைச் சில குயில்களிடம் கூறினாள். மூன்றாம் பாசுரத்தில், "தான்" செய்த பாவங்கள் விலகாது என்று அவனிடம் உரைக்குமாறு சில அன்னங்களை வேண்டிக்கொண்டாள். நான்காம் பாசுரதத்தில் சில மகன்றில் பறவைகளைப் பார்த்து, "என்னுடைய நிலைமையை அங்கு உரைப்பீர்களா? மாட்டீர்களா?", என்று வினவினாள். ஐந்தாம் பாசுரத்தில் சில குருகுகளிடம், "தன்னுடைய நாரயணத்வம் என்ற தன்மை வீணாகப் போய்விடாமல் பார்த்துக்கொள்ளும்படி உரையுங்கள்", என்றாள். ஆறாம் பாசுரத்தில் ஒரு வண்டிடம், "நாரயணன் என்ற பெயருக்கு உள்ள மேன்மைக்கு ஒரு தோஷமும் ஏற்படாமலும், எங்கள் உயிர் தங்கும்படியும் நாங்கள் வசிக்கின்ற இந்த வீதி வழியே எழுந்தருளும்படிக் கூறுங்கள்", என்றாள். ஏழாம் பாசுரத்தில் ஒரு கிளியிடம், "என்னுடைய தோஷங்களை மட்டும் பார்த்தபடி உள்ளானே! யாருடைய தோஷத்தையும் பார்க்காமல் பொறுத்துக் கொள்கின்ற தன்னுடைய குணத்தைச் சற்றே பார்க்கச் சொல்வாயாக", என்றாள். எட்டாம் பாசுரத்தில் தான் வாடியது போன்ற தன் முன்னங்கையில் அமர்ந்திருந்த பறவையும் வாட அதனிடம், "நான் அவனது பிரிவாற்றாமை காரணமாக முடியும் நிலையில் உள்ளேன். ஆகவே உன்னைக் காப்பவராக வேறு யாரையாவது தேடிக்கொள்வாயாக", என்றாள். ஒன்பதாம் பாசுரத்தில் வாடைக்காற்றிடம், "என்னுடைய நிலையை நீ அவனிடம் கூறு. அப்போது அவன் உன்னிடம் 'அவளது உதவியும் அவளும் நமக்கு வேண்டாம்" என்று கூறினான் என்றால், மீண்டும் என்னிடம் வந்து என்னை முடிப்பாயாக", என்றாள். பத்தாம் பாசுரத்தில் தனது நெஞ்சத்திடம், "நாம் அவனை அடைவதான செயலானது உறுதியுடன் நடைபெறும் காலம்வரை நீ அவனை விடாமல் பற்றிக்கொள்", என்றாள். இறுதியாக இந்தப் பாசுரம் மூலம், இந்தத் திருவாய்மொழியைப் பொருளுடன் உணர்ந்து கற்க வல்லவர்க்கு உண்டாகக்கூடிய பலன்கள் கூறி நிறைவு செய்கிறார்.

வ்யாக்யானம் - முதற்பாட்டில், ஆசார்யனுடைய ஜ்ஞாந வைபவத்தை அருளிச்செய்தார்; இரண்டாம்பாட்டில் மதுரபாஷியாயிருக்கும் என்றார்; மூன்றாம் பாட்டில் ஸாராஸார

விவேகஜ்ஞனென்றார்; நாலாம் பாட்டில், விக்ரஹ ஸௌந்தர்யத்தை அநுஸந்தித்தார்; அஞ்சாம் பாட்டில் நினைத்தது கிட்டுமளவும் சலியாத சுத்தஸ்வபாவன் என்றார்; ஆறாம் பாட்டில் பகவதேகபோகனாயிருக்கும், ரூபவானுமாய் க்ருபாவானுமாய் கம்பீர ஸ்வபாவனுமாய் இருக்கும் என்றார்; மதுகரமிறே; ஏழாம் பாட்டில் தான் ஸர்வஜ்ஞனாகிலும் ஆசார்யர்கள் பக்கல் கேட்ட வார்த்தையல்லது அருளிச்செய்யான் என்று, அவனுடைய ஆப்திமை அநுஸந்தித்தார்; எட்டாம் பாட்டில், ஆசார்யனுடைய தேஹயாத்ரையே இவனுக்கு ஆத்மயாத்ரை என்றார்; ஒன்பதாம் பாட்டில் ஆசார்ய ஸம்பந்த மாத்ரமே ஸத்தாதாரகம், இதர ஸ்பர்சம் ஸத்தாபாதகம் என்றார். பத்தாம் பாட்டில், ஆக இப்படி ஜ்ஞாநவானுமாய், மதுரபாஷியாய், ஸாராஸாரவிவேகஜ்ஞனுமாய், தர்சநீயனுமாய், சுத்தஸ்வபாவனுமாய், க்ருபாகாம்பீர்யங்களையும் உடையனாய், சிரோபாஸிதஸத் வ்ருத்தஸேவ்யனுமாய், லோக பரிக்ரஹம் உடையனுமாய், ஸச்சிஷ்யனாகையாலே ஏவம்பூதனான ஆசார்யனுடைய தேஹயாத்ரையே தனக்கு ஆத்மயாத்ரையாய், இதரஸ்பர்சமும் தனக்கு பாதகமாய், இப்படி ஸதாசார்ய ஸேவை பண்ணுகையாலே பகவத் கைங்கர்யத்திலே ப்ரவணமாய், "நின்னிடையேனல்லேன் என்று நீங்கி - ஓர் கோலநீல நன்னெடுங்குன்றம் வருவதொப்பான நாண்மலர்ப் பாதமடைந்தது தம் திருவுள்ளம்" என்று தலைக்கட்டினார்.

விளக்கம் - முதல் பாசுரத்தில் ஆசார்யனுடைய ஞானத்தின் மேன்மையை உரைக்கிறார். ஆசார்யஹ்ருதயம் (150) – சேர்ப்பாரைப் பக்ஷிகளாக்கி, ஜ்ஞாந கர்மங்களைச் சிறகென்று - என்று கூறுவது போன்று சிறகுகளை ஞானம் மற்றும் அநுஷ்டானம் என்று உரைத்தார். இரண்டாம் பாசுரத்தில், இனிமையாகப் பேசுபவன் என்றார். மூன்றாம் பாசுரத்தில் ஸாரம் எது, ஸாரம் அற்றது எது என்று பகுத்து அறியவல்லவன் என்றார். நான்காம் பாசுரத்தில் அழகான திருமேனியின் வடிவழகை உரைத்தார். ஐந்தாம் பாசுரத்தில் "எண்ணியது கிட்டும்வரை சற்றும் தளராத தூயமனம் கொண்டவனாக இருப்பான்" என்றார். ஆறாம் பாசுரத்தில் பகவானை மட்டுமே அனுபவித்தபடி உள்ள தன்மையை உரைத்தார்; இதன் காரணமாக அழகாகவும், கருணை உள்ளவனாகவும், கம்பீர ஸ்வபாவம் கொண்டவனாகவும் இருப்பான் என்றார். ஏழாம் பாசுரத்தில், தான் அனைத்தும் அறிந்தவன் என்றபோதிலும் ஆசார்யர்களிடம் கேட்ட கருத்துக்கள் அல்லாமல் வேறு எதனையும் உரைக்கமாட்டான் என்றார். எட்டாம் பாசுரத்தில் ஆசார்யனின் தேஹயாத்ரை என்பதையே தனது ஆத்மயாத்ரையாகக் கொள்வான் என்றார். ஒன்பதாம் பாசுரத்தில் இவனுடைய இருப்பு என்பதற்கு ஆசார்யனின் தொடர்பே அவசியம், மற்ற அனைவரின்

ஸம்பந்தமும் பாதகம் என்று அருளிச்செய்தார். பத்தாவது பாசுரத்தில் இவ்விதமாக ஞானம் உள்ளவனும், இனிமையாகப் பேசுபவனும், ஸாரம் ஸாரம் அற்றது ஆகியவற்றைப் பகுத்து அறியவல்லவனும், காண்பதற்கு இனிமையாக உள்ளவனும், தூய்மையான ஸ்வபாவம் கொண்டவனும், கருணை மற்றும் பெருமிதம் உள்ளவனும், எல்லையற்ற காலமாக ஆராதனை செய்து வரக்கூடிய பெரியவர்களால் வணங்கப்படுபவர்களால் வணக்கப்படுபவனும், உயர்ந்த குணம் கொண்ட சிஷ்யன் என்பதால் இப்படிப்பட்ட ஆசர்யனின் தேஹயாத்ரை என்பதே தனது ஆத்மயாத்ரை என்று கொண்டவனும், மற்றவர்களின் உறவுமுறை என்பது தனக்குப் பாதமாக உள்ளதாக எண்ணுபவனும், உண்மையை உள்ளபடி அறிந்த ஆசார்யனின் தொண்டு காரணமாகப் பகவத் கைங்கர்யத்தில் எப்போது ஈடுபட்டவனும் ஆகிய தன்னுடைய திருவுள்ளமானது திருவாய்மொழி (8-2-10) - நின்னிடையேனல்லேன் – என்பதற்கு ஏற்ப, "நான் இனி உனக்கு அல்லேன்" என்று என்னை விட்டு விலகி, "சக்ரத்தாழ்வாரையும் ஸ்ரீபாஞ்சஜந்யம் என்ற சங்கையும் தனது திருக்கரத்தில் ஏந்தியவனும், பரந்த சுடர்களை உடைய சூரியனுடன் பால் போன்று வெண்மையான சந்த்ரனைத் தனது கொடிமுடிகளில் கொண்டவனும், ஈடு சொல்ல இரண்டாவது என்று கூற முடியாதபடி உள்ளவனும், காண்பவர்கள் களைப்பை நீக்குபவனும், நீலநிறம் உடையவனும், அடியார்களுக்கு வந்து தோற்றம் அளிப்பவனும் ஆகிய ஸர்வேச்வரனின் பொருந்திய தாமரை போன்ற திருவடிகளை அடைந்தது", என்றார்.

முதற்பத்து நான்காம் திருவாய்மொழி ஸம்பூர்ணம்

முதற்பத்து ஐந்தாம் திருவாய்மொழி – "வளவேழுலகு"
ப்ரவேசம்

மூலம் - ஸர்வேச்வரன் ஸர்வஸ்மாத்பரனாகையாலே அவனை ஆச்ரயிப்பார்க்கு ஒரு குறையில்லை என்றார்; அந்த ஆச்ரயணந்தான் புருஷோத்தமனை ஆச்ரயிக்கிறதாகையாலே பலத்தோடே வ்யாப்த்மாயல்லதிராது என்றார்; பஜிப்பார்க்காகத் தான் அவதரித்து ஸுலபனாகையாலே பஜிக்கத்தட்டில்லை என்றார்; ஸுலபனானவன் தான் அபராதஸஹனாகையாலே பலத்தோடே வ்யாப்தமாயல்லதிராது என்றார்; அயோக்யதாநு ஸந்தாநம் பண்ணி அகலுவாரையும் தன் செல்லாமையைக் காட்டிப் பொருந்த விட்டுக்கொள்ளும் சீலவான் என்கிறார் இதில்.

விளக்கம் – "ஸர்வேச்வரன் ஸர்வஸ்மாத்பரன்" என்பது தொடங்கி, "பக்திரூபாந்த ஜ்ஞாநமிறே" என்பது முடிய உள்ள அனைத்தும் முதல் திருவாய்மொழி தொடக்கமாக உள்ள பலவும் சுருக்கமாகக் கூறும்படியாக உள்ளது. இவற்றில் "ஸர்வேஸ்வரன் ஸர்வஸ்மாத்பரன்" என்பது தொடக்கமாக உள்ள ஐந்து வாக்கியங்கள் மூலமாக முதல் ஐந்து திருவாய்மொழியில் வெளிப்பட்ட ஐந்து குணங்களை அருளிச்செய்யகிறார். ஸர்வேச்வரன் அனைவரையும் விட உயர்ந்தவன் என்று காரணத்தினால் அவனை அண்டியவர்களுக்கு எந்தக் குறையும் இல்லை என்று முதல் திருவாய்மொழியில் கூறினார். இத்தகைய பற்றுதல் என்பது புருஷோத்தமனை என்ற காரணத்தினால், இது பலனுடன் கூடியே உள்ளது என்று இரண்டாம் திருவாய்மொழியில் அருளிச்செய்தார். தன்னை ஆராதிப்பவர்களுக்கு மிகவும் எளியவனாக உள்ளதால், அவனை ஆராதிப்பவர்களுக்குக் குறை இல்லை என்று மூன்றாம் திருவாய்மொழியில் உரைத்தார். எளிமையாக உள்ள ஒருவன் மட்டுமே தவறுகளைப் பொறுத்துக் கொள்ளக்கூடியவன் என்பதால் இவன் பலன்களுடன் கூடியே இருப்பான் என்று நான்காம் திருவாய்மொழியில் உரைத்தார். தங்களது தாழ்வான எண்ணங்களைக் காரணமாகக் காண்பித்துத் தன்னைவிட்டு அகன்று செல்ல எண்ணுபவர்களிடம், தான் அவர்களை விட்டு அகலாமல் உள்ளதை உணர்த்தி, தன்னிடம் நிலைநிறுத்தும் சீலம் நிரம்பியவன் என்று ஐந்தாம் திருவாய்மொழியான இதில் உரைக்கிறார்.

மூலம் - கீழ் கலங்கித் தூதுவிட்டவிடம் ப்ரேமகார்யம்; இங்கு அகலப்பார்க்கிறவிடம் ஜ்ஞாந கார்யம்; "மயர்வற மதிநலமருளினன்" என்று பக்திரூபாபந்த ஜ்ஞாநமிறே இவர்தாம் பெற்றது. தூதப்ரேஷண வ்யாஜத்தாலே தம்முடைய ஆற்றாமையை அறிவித்த அநந்தரம், "இவரை இங்ஙனே நோவுபடவிட்டோமாகாதே!" என்று பிற்பாட்டுக்கு தொந்து ஆனைக்கு உதவ வந்து தோற்றினாற்போலே அரைகுலையத் தலைகுலைய வந்து தோற்றினான். அவனுக்கு வைலக்ஷண்யத்தையும், தம்முடைய ஸ்வரூபத்தையும் கண்டார்; "தார்மிகன் வைத்த தண்ணீர்ப்பந்தலை அழிப்பாரைப்போலே, நித்யஸூரிகளுக்கு அநுபாவ்யமான வஸ்துவை நாம் கிட்டி தூஷிக்கப் பார்ப்போமல்லோம், அகலுமித்தனை" என்று பார்த்தார். "அகன்றால் ஜீவிக்கல்லரோ?" என்னில்; முடியுமித்தனையே; சேஷிக்கு அதிசயத்தை விளைக்கத் தேடுமவர்கள் தந்தாம் விநாசம் பாரார்களிறே; பெருமாளுக்கும் தேவதூதனுக்கும் மந்த்ரம் ப்ரவ்ருத்தமான ஸமயத்திலே, துர்வாஸர், "என்னை உள்ளே புகவிடவேணும்" என்ன, "இவனைத் தகைந்து பெருமாளுக்கு அவத்யத்தை விளைப்பதில், நாம் அகன்று முடியவமையும்" என்று

பார்த்து, அவனைப்புகவிட்டு "யதி ப்ரீதிர் மஹாராஜ யத்யநுக்ராஹ்யதா மயி! ஜஹி மாம் நிர்விசங்கஸ்த்வம் ப்ரதிஜ்ஞாமநுபாலய" என்று விடைகொண்டாரிறே இளையபெருமாள்; "த்யஜேயம் ராகவம் வம்சே பர்த்துர்மா பரிஹாஸ்யதி" என்று விடைகொண்டாளிறே பிராட்டி. அப்படியே இவரும்.

விளக்கம் – இங்கு ஒரு சந்தேகம் எழலாம்; ஸர்வேச்வரனிடம் ஆழ்ந்த காதல் கொண்டு கடந்த திருவாய்மொழியில் தூதுவிட்டவர், இப்போது அவனை விட்டு ஏன் விலகிச் செல்லவேண்டும்? அங்கு தூதுவிட்டது ப்ரேமையின் செல்பாடு, இங்கு அவனை விட்டு அகலச்செல்வது ஞானத்தின் செயல்பாடு என்கிறார். இந்த இரண்டுமே இவருக்கு உள்ளதா என்றால், திருவாய்மொழி (1-1-1) – மயர்வற மதிநலம் அருளினன் - என்பதற்கு ஏற்ப, பக்தியின் நிலையை எட்டிய ஞானத்தை அல்லவா இவர் பெற்றார்! கடந்த திருவாய்மொழியில் தூது விடுகின்ற செயல் என்பதன் மூலம் தனது பிரிவாற்றாமைத் துன்பத்தை மறைமுகமாக வெளிப்படுத்தினார். இதனைக் கண்ட ஸர்வேச்வரன், "ஆஹா! இவரை இத்தனை துன்பம் அடையும்படி நாம் செய்து விட்டோமே!", என்று தனது செயலை எண்ணி வருந்தினான். யானைக்கு உதவும் பொருட்டு ஓடி வந்தது போன்று தனது ஆடைகள் நழுவ, அழகான தலைமுடி காற்றில் ஆட, இவர் முன்பாக ஓடிவந்தான். அப்போது ஆழ்வார் அவனது மேன்மைகளையும், தன்னுடைய தாழ்வான தன்மைகளையும் ஆராய்ந்து அறிந்தார். உடனே தனது மனதில் ஆழ்வார், "நல்லவன் ஒருவன் பலருக்கும் உதவும்படியாக வைத்த தண்ணீர்ப்பந்தலை அழிக்கும் செயல் போன்று, நித்யஸூரிகளால் எப்போதும் அனுபவிக்கப்பட்டபடி உள்ள இந்த ஸர்வேச்வரனை நாம் அண்டி நின்று அவனுக்குத் தோஷம் ஏற்படுத்திவிடுவோம்; ஆகவே அவனை விட்டு அகல்வதே சிறந்தது", என்று எண்ணியவராக நின்றார். ஆனால் அவனை விட்டு அகன்ற பின்னர் இவரால் உயிர் பிழைத்து இருக்கமுடியுமோ என்றால், இயலாது. ஆக உயிர் பிரியவே செய்யும். அப்படி என்றால் ஏன் அகலவேண்டும் என்று கேட்கலாம். தங்களது எஜமானனுக்கு மேன்மை ஏற்படுத்தவேண்டும் என்று எண்ணி, தங்களது உயிர் அழிவதையும் சிலர் பொருட்படுத்தாமல் இருப்பது உண்டு என்பதால், இவரும் அப்படியே செய்ய எண்ணினார். இவ்விதம் யாரேனும் இதற்கு முன்னர் இவ்விதம் இருந்தார்களா என்ற கேள்விக்கு உதாரணம் காண்பிக்கிறார்.

குறிப்பு – இங்கு வால்மீகி இராமாயண உத்தர காண்டத்தின் 104, 105 மற்றும் 106 ஆகிய ஸர்க்கங்களில் உள்ள விஷயங்களும், ஸர்க்கம் 48ல் உள்ள விஷயமும் கூறப்படுகின்றன.

இவற்றைப் புரிந்து கொள்ளும்விதமாக இந்த ஸர்க்கங்களில் உள்ள சில ச்லோகங்களும் நிகழ்வுகளும் கீழே உள்ளன. அதன் பின்னர் வ்யாக்யான விளக்கம் தொடரும்.

1. வ்யாக்யான மூலத்தில் உள்ள "பெருமாளுக்கும் தேவதூதனுக்கும் மந்த்ரம்" என்பது என்ன? உத்தரகாண்டம் ஸர்க்கம் 104ல் நான்முகன் இராமனுக்கு அனுப்பிய செய்தியை ஒரு தேவதூதன் இராமனிடம் வந்து உரைக்கிறான். இந்தச் செய்தியில் - (உத்தரகாண்டம் 104-113) - ஸ த்வம் மநோமய: புத்ர: பூர்ணாயுர் மாநுஷேஷ்விஹ கால: அயம் தே நரச்ரேஷ்ட ஸமீபமுவர்த்திதும் - இராமா! நீ தசரதனுக்கு உன்னுடைய திருவுள்ளத்தின் ஸங்கல்பம் காரணமாக மட்டுமே பிறந்தாய். இந்த உலகில் நீ மனித உருவில் இருப்பதற்கான காலம் முடிந்துவிட்டது. நீ மீண்டும் எங்களுடன் வந்து இருப்பதற்கான காலம் வந்துவிட்டது – என்று கூறப்படுகிறது.

2. இவ்விதமாக இராமனும், அந்த தேவதூதனும் பேசிக் கொண்டிருக்கும்போது அரண்மனை வாயிலில் துர்வாஸ முனிவர் இராமனைத் தரிசிக்கும் பொருட்டு வந்தார். அவர் லக்ஷ்மணனிடம் (உத்தரகாண்டம், 195-2) - ராமம் தர்சய மே சீக்ரம் – நான் உடனடியாக இராமனைக் காணவேண்டும் - என்றார். அப்போது லக்ஷ்மணன் அவரிடம், இராமன் முக்கியமான விஷயங்கள் குறித்து தேவதூதன் ஒருவனிடம் பேசிக் கொண்டிருப்பதாகவும், சற்று காத்திருக்கும்படியும் உரைத்தான். இதனால் சீற்றம் கொண்ட துர்வாஸர் லக்ஷ்மணனை எரித்து விடுவது போன்று நோக்கியவராக, தன்னை உள்ளே விட மறுத்தால் அங்கு உள்ள அனைத்தையும், அனைவரையும் சபித்துவிடுவேன் என்று கூறினார். இதனைக் கேட்ட லக்ஷ்மணன் தனது மனதில் (உத்தரகாண்டம்,105-9) – ஏகஸ்ய மரணம் மே அஸ்து மா பூத் ஸர்வவிநாசநம் - நான் மட்டும் மடிந்து விடுவதே நலம், மற்றவர்கள் பிழைத்திருக்கட்டும் - என்று எண்ணினான். இதனையே வ்யாக்யான மூலத்தில் "இவனைத் தகைந்து" என்பதில் காண்க.

3. தேவதூதனின் செய்தியால் இராமன் தனது சகோதரனான லக்ஷ்மணன் உள்ளிட்டவர்களைப் பிரிவது குறித்த துன்பத்தில் ஆழ்ந்தான். இதனை அறிந்த லக்ஷ்மணன் (உத்தரகாண்டம், 106-4) – யதி ப்ரீதிர் மஹாராஜ யத்யநுக்ராஹ்யதா மயி! ஜஹி மாம் நிர்விசங்கஸ்த்வம் ப்ரதிஜ்ஞாமநுபாலய - என்ற வாக்கியத்தை உரைத்தான். இதனைக் கீழே உள்ள விளக்கத்தில் காண்க.

4. உத்தரகாண்டம், 48வது ஸர்க்கத்தில் லக்ஷ்மணன் இராமனின் கட்டளைக்கு ஏற்ப சீதையைக் கங்கையின் கரையில் விடுவதற்காக அழைத்துச் செல்கிறான். அப்போது அவன் கூறுகின்ற சொற்கள் கீழே விளக்கத்தில் உள்ளன.

விளக்கம் (தொடர்கிறது) - இராமனுக்கும் தேவதூதனுக்கும் இடையே ஸம்பாஷணைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அங்கு வந்த துர்வாஸர் லக்ஷ்மணனிடம், "என்னை உள்ளே செல்ல அனுமதிப்பாய்" என்றார். உடனே லக்ஷ்மணன் தனது மனதில், "இவரை விரோதம் செய்து கொண்டு இராமனுக்குத் தாழ்ச்சியை ஏற்படுத்துவதைக் காட்டிலும் நாம் அகன்று சென்று முடிவதே சிறந்தது", என்றுஎண்ணினான். இதனால் அவரை உள்ளே போகச்செய்தான். அதன் பின்னர் இராமனிடம் உத்தரகாண்டம் (106-4) - யதி ப்ரீதிர் மஹாராஜ யத்யநுக்ராஹ்யதா மயி! ஜஹி மாம் நிர்விசங்கஸ்த்வம் ப்ரதிஜ்ஞாமநுபாலய - இராமா! உனக்கு என்னிடம் அன்பு இருக்கும் என்றால், எனக்கு க்ருபை செய்யவேண்டும் என்ற எண்ணம் உள்ளது என்றால், எந்தவிதமான தயக்கமும் இன்றி என்னை விடவேண்டும் - என்று கூறி இராமனிடமிருந்து லக்ஷ்மணன் விடை பெற்றான் அல்லவோ? சீதையும் உத்தரகாண்டம் (48-4) – த்யஜேயம் ராகவம் வம்சே பர்த்துர்மா பரிஹாஸ்யதி – லக்ஷ்மணா! எனது தலைவனான இராமனின் குலத்திற்குப் புத்திரவாரிசு இல்லாமல் போய்விடும் என்ற ஒரே காரணத்தினால்தான் நான் இப்போது இந்தக் கங்கையில் விழாமல் உள்ளேன் - என்று உரைத்தது காண்க. இது போன்றே ஆழ்வாரும் ஸர்வேச்வரனை விட்டுத் தனது தாழ்வை எண்ணியும், அவனது உயர்வை எண்ணியும் அகல முயற்சிக்கிறார்.

மூலம் - ஊருணியிலே கள்ளியை வெட்டியெறிவாரைப்போலவும், அம்ருதத்திலே நஞ்சைக் கலந்தாற்போலவும், நித்யஸூரிகளுக்கு அநுபாவயமான வஸ்துவை, நாம் புக்கு அழிக்கையாவதென்" என்று இவர் அகலப்புக, "இவரை இழந்தோமாகாதே" என்று ஈச்வரன், "ஆழ்வீர்! அகலப்பார்த்தீரோ" என்ன; "அடியேன் அகலப்பார்த்தேன்" என்ன; "நீர், நமக்கு அவத்யம் வருமென்றன்றோ அகலப்பார்த்தது; நீர் அகலவே இவ்விஷயம் அதிக்ருதாநிகாரமாகாதே!" என்று நமக்கு ஆள் பற்றாது; இப்படி தண்ணியராக நினைத்திருக்கிற நீரொருவரும் நம்மைக் கிட்டவே, "ஸர்வாதிகாரம்" என்று தோற்றும்; ஆனபின்பு நீர் அகலுமதுகாணும் நமக்கு அவத்யம்; இனித்தான், நமக்கு ஆகாதாரில்லை

என்னுமிடம் பண்டே அடிபட்டுக்காணும் கிடப்பது" என்று, "நாம் குணா குண நிரூபணம் பண்ணாதே எல்லார் தலையிலும் நம் காலை வைத்தோம் கண்டீரே" என்று தான் திருவுலகளந்தருளின ஸௌலப்யத்தைக் காட்ட, "ஆகில் கிட்டுவோம்" என்று பாரா, "ஒரு குணாதிக்யமேயோ வேண்டுவது? நம்மால் வரும் குணமும் அவனுக்கு வேண்டா" என்று அகலப்புக; "உம்மால் வரும் நான்தான் வேணுமோ வேண்டவோ?" என்று, "நீர் அயோக்யரென்று அகலுமதிலும் ஸம்ச்லேஷிக்கிறது திருவாய்ப்பாடியில் வெண்ணெயோபாதி நமக்குத் தாரகங்காணும்; இனி நீர் அகலில் திருவாய்ப்பாடியில் வெண்ணெய் விலக்கினார் புக்க லோகம் புகுவீர் கிடீர்; நீர் அகலுமது நமக்கு ஸத்தா ஹாநி" என்று, "மித்ரபாவேந ஸம்ப்ராப்தம்" என்று, "அவன்பக்கலுள்ளது போட்கனாகவுமாம்; நாம் அவனை விடில் உளோமாகோம்" என்று சேர்த்துக் கொண்டாற்போலவும், "பந்துவதம்பண்ணி ஜீவிக்கப்பார்க்கிறிலேன்" என்று அர்ஜுனனை, "கரிஷ்யே வசநம் தவ" என்னப்பண்ணினாற்போலவும், தம்மை வருந்தி இசைவித்து ஸம்ச்லேஷோந்முகனானபடியே ஸம்ச்லேஷித்துத் தலைக்கட்டினான் என்கிறார்.

விளக்கம் - "ஊர் மக்கள் பருகும் குளத்தில் கள்ளிச் செடியை வெட்டி வீசுவது போன்றும், அமிர்தத்தில் நஞ்சைக் கலப்பது போன்றும் உள்ள செய்கையாகவே நித்யஸூரிகளால் அனுபவிக்கப்படும் உயர்ந்த வஸ்துவை நாம் அண்டி நிற்பது உள்ளது", என்று ஆழ்வார் எண்ணினார். இப்படி அவனை நாம் அழிக்கக்கூடாது என்று எண்ணியவராக அவனை விட்டு அகல்வதற்கு முயற்சி செய்தார். இதனைக் கண்ட ஸர்வேச்வரன், "ஆஹா! இவரை இழக்கும் நிலை உண்டானதே", என்று தவித்தவனாக இவரிடம், "ஆழ்வாரே! நம்மை விட்டு விலக எண்ணினீரோ?", என்றான். இதற்கு இவர், "ஆம்! அடியேன் விலகிக்செல்ல எண்ணினேன்", என்றார். இதனைக் கேட்ட ஸர்வேச்வரன், "நமக்குத் தாழ்வு உண்டாகலாம் என்று எண்ணி நீவீர் நம்மை விட்டு விலக எண்ணினீர். ஆனால் இதனைக் காணும் மக்கள் – ஞானம் போன்ற பல இருந்தால் மட்டுமே இவனை அண்ட இயலும் போலும் – என்று எண்ணியவர்களாக அவர்களும் நம்மை அண்டமாட்டனர். ஆக நமக்கு வேறு யாரும் கிட்டமாட்டனர். ஆனால் உம்மைத் தாழ்ந்தவர் என்று எண்ணிக் கொண்டிருக்கிற நீவிர் எம்மை அணுகி நின்றால் - இந்த ஸர்வேச்வரன் அனைவராலும் கிட்டுவதற்கான தன்மை கொண்டவன் - என்று உலகம் எண்ணத் தொடங்கும். ஆகவே நீவிர் நம்மை விட்டு விலகினால் மட்டுமே நமக்குத் தாழ்வு ஏற்படும். எமக்கு வேண்டாதவர்கள் யாரும் இல்லை என்பது அனைவராலும் முன்பே அறியப்பட்ட ஒன்று

அல்லவோ? நாம் எந்தவிதமான குணங்களையும் ஆராயாமல் அனைவரின் தலை மீது ஒரே போன்று நமது திருவடியை திரிவிக்ரமனாக வைத்தோம் அல்லவோ? இதனை நீரும் அறிவீர்", என்று பலவிதமாக உரைத்து, தான் இந்த உலகம் அனைத்தையும் அளந்த எளிமையை வெளிப்படுத்தினான். இதனைக் கேட்ட ஆழ்வார் மனம் நெகிழ்ந்தவராக, "சரி, நாம் அவனிடம் செல்வோம்", என்று எண்ணினார். ஆயினும் உடனே தனது திருவுள்ளத்தில், "நம் போன்றவர்களின் குண மேன்மையோ இவனுக்குத் தேவை? நம்மால் வருகிற மேன்மை என்பது அவனுக்கு இழுக்கே ஆகும் என்பதால், அது இவனுக்கு வேண்டாம்", என்று எண்ணி அகல முயற்சித்தார். இதனைக் கண்ட ஸர்வேச்வரன், "உம்மால் நமக்கு ஏற்படக்கூடிய மேன்மை என்பதை மட்டும்தானே நீவிர் கூடாது என்று எண்ணுகிறீர். ஆனால் உம்மால் வருகின்ற நாம்தான் உமக்கு வேண்டுமோ வேண்டாமோ? நம்மை அடைவதற்கான தகுதி உமக்கு இல்லை என்று நீவிர் எண்ணிக் கொண்டு நம்மை விட்டு அகன்றாலும், நாம் உம்மையே சேருவோம். ஏன் என்றால் திருவாய்ப்பாடியில் கிட்டுகின்ற வெண்ணெய் என்பது நமக்கு எப்படி இருப்பாக உள்ளதோ அது போன்று நீவிரும் நமக்கு உள்ளீர். இத்தனை கூறியபோதும் நம்மை விட்டு நீவிர் அகல்வது என்று முடிவு செய்தால், நமக்குப் பிடிக்காதவற்றைச் செய்தவர் ஆவீர் (இதனையே "வெண்ணெய் விலக்கினார் புக்கலோகம் புகுவீர்" என்றார்). நீவிர் நம்மை விட்டு அகன்று செல்லுதல் என்பது நம்முடைய இருப்புக்கு கேட்டையே உண்டாக்கும்," என்றான். மேலும் கீழே உள்ள நிகழ்வுகளை உரைக்கிறார்:

- இராமாயணம் யுத்தகாண்டம் (18-3) - மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் – விபீஷணன் நட்புணர்ச்சியுடன் வந்தவன் என்றாலும், வஞ்சனையுடன் கூடியவன் என்றாலும் நான் அவனை ஏற்கவில்லை என்றால் எனக்கு இருப்பு இல்லை.

- "எனது உறவினர்களைக் கொன்றுவிட்டு நான் வாழ எண்ணவில்லை" என்று உரைத்த அர்ஜுனனை கீதை (18-13) - கரிஷ்யே வசநம் தவ - உனது சொற்படி நான் நடக்கிறேன் – என்று கூற வைத்தான்.

இது போன்றே தன்னைத் தனது பக்கம் (ஆழ்வாரைத் தன் பக்கம்) சேர்ந்துக் கொள்வதற்கு மிகவும் முயற்சிகள் மேற்கொண்டு, தான் விரும்பியபடியே சேர்ந்துக்கொண்டான் என்று உரைக்கிறார்.

வளவேழுலகு ப்ரவேசம் ஸம்பூர்ணம்

1-5-1 வளவேழுலகின் முதலாய வானோ ரிறையை அருவினையேன்
களவேழ் வெண்ணைய் தொடுவுண்ட கள்வா வென்பன் பின்னையும்
தளவேழ் முறுவல் பின்னைக்காய் வல்லானாயர் தலைவனாய்
இளவே றேழும் தழுவிய எந்தா யென்பன் நினைந்துநைந்தே.

பொருள் – பகவத்போகத்திற்கு ஈடாக உள்ள மேன்மைகளை கொண்டவர்களும், ஏழுலகிற்கும் முதன்மையானவர்களும் ஆகிய நித்யஸூரிகளின் ஸ்வாமியான ஸர்வேச்வரனை - எத்தனை அனுபவித்தாலும் கழிப்பதற்கு இயலாமல் உள்ளதாகிய பாவங்கள் கொண்ட நான், எனது தாழ்வான சிந்தனைகளைக் கொண்ட மனதினால் எண்ணியபடி, அந்த நினைவுகளின் காரணமாக உடல் தளர்ந்து, "களவு மிகவும் பிரபலமாகும்படி வெண்ணெயைக் களவு செய்தவனே! என்று கூறி அழைப்பேன். இதற்கும் மேலே, "முல்லை அரும்புகள் வெளிப்படும்படியாக அழகான புன்முறுவல் கொண்ட நப்பின்னை பிராட்டியின் பொருட்டு உன்னை வளர்த்த மேன்மையான ஆயர்களுக்குத் தலைவனாய் நின்று, இளமையின் காரணமாகச் செருக்குடன் திரிந்த ஏழு எருதுகளையும் தழுவி அழித்த எனது ஸ்வாமியே!", என்று கூறுவேன்.

அவதாரிகை - நித்யஸூரிகளுக்கு அநுபாவ்யனானவனை என்னுடைய மநோ வாக்காயங்களாலே தூஷித்தேன் என்கிறார்.

விளக்கம் - நித்யசூரிகளால் எப்போதும் அனுபவிக்கப்பட்டபடி உள்ள ஸர்வேச்வரனை எனது மனம், வாக்கு, செயல் போன்ற பலவற்றாலும் புகழ்தல் என்ற செயல் மூலமாக நிந்தித்தேன் என்று கூறுகிறார்.

வ்யாக்யானம் - (வளவேழுலகு இத்யாதி) வளவிதான ஏழுலகு என்று லீலாவிபூதியாய், "வானோரிறை" என்கையாலே நித்யவிபூதியைச் சொல்லிற்றாய், "இப்படி உபயவிபூதி நாதனைக்கிடீர் நான் அழிக்கப்பார்த்தது" என்கிறார். "வளவியனாய், ஏழுலகுக்கும் முதலாய், வானோரிறையாயிருக்குமவனை" என்று அவன் தனக்கே விசேஷணமாகவுமாம்; "வளவியராய், ஏழுலகுக்கும் முதலாயிருக்கிற வானோர்" என்று, நித்யஸூரிகளுக்கு விசேஷணமாகவுமாம். இவர்கள் வளவியராகையாவது - பகவதநுபவத்தில் குசலராகை. அஸ்த்ரபூஷணாத்யாயத்திலே, "ஸ்ரீகௌஸ்துபத்தாலே

ஜீவ ஸமஷ்டியை தரிக்கும்" என்றும், "ஸ்ரீவத்ஸத்தாலே ப்ரக்ருதி ப்ராக்ருதங்களை தரிக்கும்" என்றும் சொல்லாநின்றதிறே.

விளக்கம் - (வளவேழுலகு இத்யாதி) – "வளம்" என்ற பதம் ஏழு உலகம், ஸர்வேச்வரன், நித்யஸூரிகள் ஆகிய மூவரின் மேன்மையையும் உணர்த்துவதாகும். வளவேழ் என்பதன் மூலம் அவனுக்கு உட்பட்டதான மேன்மை கொண்ட லீலாவிபூதியான இந்த ஏழு உலகங்களைக் கூறினார். "வானோரிறை" என்பதன் மூலம் நித்யவிபூதி கூறப்பட்டது. இப்படியாக இரண்டிற்கும் நாயகனாக உள்ள ஸர்வேச்வரனை அல்லவோ நான் எனது சொற்கள் மூலம் அழிக்கப்பார்த்தேன் என்கிறார். "வளவியனாய், ஏழு உலகிற்கும் முதன்மையாக உள்ளவனாய், நித்யஸூரிகளின் தலைவனாய் உள்ள அவனை" என்பதன் மூலம் ஸர்வேச்வரனின் தனித்தன்மைகள் கூறப்பட்டன. "வளவியராய், ஏழு உலகிற்கும் முதன்மையாக உள்ளவர்கள்" என்பதால் நித்யஸூரிகளின் தனித்தன்மைகள் உரைக்கப்பட்டன. நித்யஸூரிகள் வளப்பம் நிறைந்தவர்களாக இருத்தல் என்றால் பகவத் அனுபவத்தில் ஆழ்ந்த ஈடுபாடும் வலிமையும் கொண்டிருத்தல் என்பதாகும். இங்கு ஒரு கேள்வி எழக்கூடும். ஸர்வேச்வரனுக்கு உலகைப்படைத்தல் உள்ளிட்ட பல மேன்மைகள் தனித்தன்மைகளாக உள்ளன, ஆனால் இது போன்று நித்யஸூரிகளுக்கு உலகைப் படைத்தல் போன்ற தன்மைகள் இல்லாதபோது அவர்களையும் இங்கு ஸர்வேச்வரனுக்குச் சரிசமமாகக் கூறுவது ஏன் ? இதற்கு ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் உள்ள அஸ்த்ரபூஷண அத்யாயத்தில் கூறப்பட்ட கருத்தை அருளிச்செய்கிறார். ஸர்வேச்வரன் தனது கௌஸ்துபம் மூலம் உயிர்களின் கூட்டத்தை தரிக்கவைக்கிறான் என்றும், தனது ஸ்ரீவத்ஸம் மூலம் இந்த உலகையும் இதிலிருந்து உண்டான அனைத்தையும் தரிக்கவைக்கிறான் என்றும் அதில் கூறப்பட்டது. இதனால் நித்யஸூரிகளை இங்கு உரைத்தது சரியே ஆகும்.

வ்யாக்யானம் - (வானோரிறையை) தேசிகராகையாலே துறையறிந்தே இழிவர்கள். "ஸ்வாமி" என்றேயாயிற்று இவர்களுக்கு ப்ரதிபத்தி. "வானோரிறையைக் கள்வாவென்பன்" என்னவாயிறு நினைத்தது; தொடங்கின வாக்யம் பூரிப்பதற்கு முன்னே தன்மை அநுஸந்தித்து "அருவினையேன்" என்கிறார். தார்மிகனாயிருப்பானொருவன் ரஜஸ்தமஸ்ஸுக்களாலே அபிபூதனாய், க்ருஹத்திலே அக்நிப்ரக்ஷேபத்தைப்பண்ணி, ஸத்வம் தலையெடுத்தவாறே அநுதபிக்குமாபோலே அநுதபிக்கிறார். (அருவினையேன்) இப்போது "அருவினையேன்" என்கிறது – "கள்வா" என்கைக்கு அடியான ப்ரேமத்தை.

அத்தை "அருவினை" என்கிறார், "அநிஷ்டாவஹம் பாபம்" என்றிருக்குமவராகையாலே. (களவேழ் இத்யாதி) களவிலே வேழ்க்கையுடையனாய், அபிநிவிஷ்டனாய் என்னவுமாம்; அன்றிக்கே, களவு எழும்படி – களவு ப்ரஸித்தமாம்படி என்னவுமாம். "களவு ப்ரஸித்தமாம்படி, வெண்ணெயைக் களவு கண்டு அமுது செய்த க்ருத்ரிமனே!" என்பன். இத்தால், பரிவுடைய யசோதைப்பிராட்டி சொல்லும் பாசுரத்தைக்கிடீர் சொல்லிற்று என்கை. என்பன் என்றது – சொன்னேன் என்றபடி.

விளக்கம் - (வானோரிறையை) - இந்த உலகிற்குக் காரணமாக அவனை உரைத்த பின்னர், நித்யஸூரிகளின் தலைவன் என்று தொடர்ந்து கூறுவதன் காரணம் என்ன? நித்யஸூரிகள் அனைத்தும் அறிந்தவர்கள் என்பதால், தாங்கள் எதில் ஈடுபடுகிறோம் என்பதை முற்றிலுமாக அறிந்த பின்னரே ஈடுபடுபவர் என்பதால் ஆகும். "ஸ்வாமி" என்பதே இவர்களுடைய நினைவாக உள்ளது. "வானோர் இறையைக் கள்வா என்பன்" என்று இவர் கூற எண்ணினார்; ஆனால் சட்டென்று அந்த வாக்கியத்தை முடிப்பதற்கு முன்பாகத் தன்னை எண்ணியவராக "வானோர் இறையை அருவினையேன்" என்று உரைத்தார். தர்மத்தின் வழியில் நின்றபடி இருந்த ஒருவன், ரஜோ மற்றும் தமோ குணங்கள் காரணமாக மற்றொருவன் வீட்டிற்குத் தீயை வைத்துவிடுகிறான் என்று வைப்போம்; அதன் பின்னர் ஸத்வகுணம் மீண்டும் ஓங்கி நிற்கும்போது வருத்தம் கொள்வது போன்று இவரும் வருந்துகிறார். (அருவினையேன்) - "அருவினையேன்" என்று கூறுவது "கள்வா" என்று உரைப்பதற்குக் காரணமாக உள்ள ப்ரேமையை ஆகும். ஆனால் பகவத்ப்ரேமையை "அருவினை" என்று கூறுவது எப்படிப் பொருந்தும் என்று கேட்கலாம்; அதாவது ப்ரேமையை "பாவம்" என்று எவ்விதம் கூறினார் என்று கேட்கலாம். அநிஷ்டாவஹம் பாபம் – பாவம் என்பது விருப்பம் அல்லாதவற்றை அளிப்பதாகும் – எம்று கூறுவர். இங்கு இவர் ஸர்வேச்வரனை விட்டு அகன்று செல்ல எண்ணுகிறார். ஆனால் இவர் அவன் மீது கொண்ட ப்ரேமை இவ்விதம் அகன்று செல்லவிடாமல் ட்டுக்கிறது. ஆக இந்த ப்ரேமை என்பது தனது விருப்பதிற்கு மாறாகத் தன்னைத் திருப்புவதால், ப்ரேமையை "பாவம்" என்று கூறுகிறார். (களவு) - இங்கு களவேழ் என்பதை களவு + வேழ் என்றும், களவு + எழு என்றும் இருவிதமாகப் பிரிக்கலாம். முதல் பொருளில் – வெண்ணெய்க் களவில் மிகுந்த நாட்டம் கொண்டவனாக என்று பொருள் கொள்க. இரண்டாவது பொருளில் – களவு என்பது மிகவும் பிரபலமாகும்படிச் செய்தவன் என்று பொருள் கொள்க. "களவு செய்ததை அனைவரும் அறியும்படியாகவே செய்து, அவ்விதம் திருடிய வெண்ணெயை உண்ட வஞ்சகனே" என்று கூறுவேன். இங்கு

க்ருத்ரிமன் – வஞ்சகன் என்று நிந்திக்கிறாரோ என்னும் ஐயம் எழலாம். இதனை நீக்க – இதன் மூலம் க்ருஷ்ணனிடம் மிகுந்த பரிவுடைய யசோதை உரைக்கும் சொற்களை அல்லவோ கூறினேன் என்கிறார். "என்பன்" என்றால் "உரைத்தேன்" என்பதாகும். அதாவது ஸர்வேச்வரனின் ஆத்மாவைத் திருடியதால் தன்னைக் கள்வன் என்று கூறிக்கொள்ளாமல், அனைத்து உலகங்களிலும் உள்ள அனைத்தும் அவனுக்குச் சொந்தமாக உள்ளபோது மற்றவர்கள் வீட்டில் இருந்து வெண்ணெய் திருடியதால் கள்வன் என்று கூறியது தவறு என்று நொந்து கொள்கிறார்.

வ்யாக்யானம் - (பின்னையும்) அதுக்குமேலே. (தளவு இத்யாதி) பரிவுடைய யசோதைப் பிராட்டிக்கு மறைத்தவற்றையும் வெளியிடும்படி அபிமதையான நப்பின்னைப்பிராட்டி பாசுரத்தையும் சொன்னேன். (தளவேழ் முறுவல்) நப்பின்னைப்பிராட்டியுடைய தந்தபங்க்தியைக் கண்டவாறே முல்லையரும்பு ஸ்ம்ருதிவிஷயமாகை நெஞ்சிலே; கவயத்தைக் கண்டவாறே க்ருஹத்தில் கோ ஸ்ம்ருதி விஷயமாமாபோலே. "பல்லுக்குத் தோற்றபனிமுல்லை" என்னக்கடவதிறே. (பின்னைக்காய்) நப்பின்னைப் பிராட்டியுடைய ஸ்மிதத்திலே தோற்று அவளுக்குத் தன்னை இஷ்ட விநியோகார்ஹமாக்கினான். (வல்லானாயர் தலைவனாய்) "க்ருஷ்ணாச்ரயா: க்ருஷ்ணபலா: க்ருஷ்ணநாதாச்ச பாண்டவா:" என்னுமாபோலே, அவனைப் பற்றி நாட்டையழித்துத் திரியும் மிடுக்கைப் பற்ற "வல்லானாயர்" என்னவுமாம்; அன்றிக்கே, ஆனாயர் வலிய தலைவனாய்; அதாவது – உடம்பிருக்கத் தலைகுளித்தும், தலையிருக்க உடம்பு குளித்துமிறே திரிவது; கார்த்திகை புதியதுக்குக் குளித்தார்களாகில் இவன் அதுவும் செந்யாதே இடைத்தனத்திலே ஊன்றி நிற்கும்படியைச் சொல்லுதல். இப்படியிருக்கிலல்லது பெண்கொடார்களிறே இடையர்; "குலேந ஸத்ருசீ" என்னக்கடவதிறே; "துல்யசீலவயோவ்ருத்தாம்" என்று இரண்டு தலையும் குறைவற்றிருக்க, எருதுகளை முன்னிட்ட வன்னெஞ்சர் என்னவுமாம். (இளவேறு) ம்ருத்யுஸமமாயிருந்துள்ள ருஷபங்கள் ஏழையும் ஊட்டியாக ஒருகாலே தழுவினான். அநந்தரம் அவளை லபிக்கையாலே அவள் முலையிலே அணைந்தாற்போலேயிருக்கையாலே "தழுவி" என்கிறது. (எந்தாய் என்பன்) எருதேழடர்த்த செயலுக்குத் தோற்று நப்பின்னைப்பிராட்டி சொல்லும் பாசுரத்தைச் சொன்னேன். உக்திமாத்ரமேயோ? (நினைந்து) நெஞ்சாலும் தூஷித்தேன். அவ்வளவோ – (நைந்தே) பிறர் அறியும்படி சிதிலனாய், காயிகத்தாலும் தூஷித்தேன். வளவேழுலகு இத்யாதிக்கு "அயர்வறுமமரர்கள் அதிபதி" என்றேன்; "எத்திறம்" என்றேன்; பிராட்டிமார் தசையை ப்ராப்தனாய்த் தூதுவிட்டேன் - என்று அவற்றுக்கு அநுதபிக்கிறார். "நினைந்து

நைந்து வளவேழுலகின் முதலாய வானோரிறையைக் களவேழ் வெண்ணெய் தொடுவுண்ட கள்வா என்பன்; பின்னையும், தளவேழ் முறுவல் பின்னைக்காய் வல்லானாயர் தலைவனாய் இளவேறு ஏழுந்தழுவிய எந்தாய் என்பன் அருவினையேன்" என்று அந்வயம்.

விளக்கம் - (பின்னையும்) – இவ்விதம் யசோதை கூறியது போன்று மட்டும் நான் கூறவில்லை, இதற்கும் மேல் தவறாக உரைத்துவிட்டேன் என்கிறார். அது என்ன? (தளவு இத்யாதி) - தன் மீது மிகுந்த பாசமும் பரிவும் கொண்டவளான யசோதையிடம் கூட வெளிக்காட்டாத ப்ரேமையை வெளிப்படுத்திய இடமாகிய, அன்புக்கு உரியவளான நப்பின்னைப்பிராட்டி பாசுரத்தையும் உரைத்தேன் என்கிறார். (தளவேழ் முறுவல்) – கானகத்தில் திரிகின்ற பசு போன்றதான ஒருவகை விலங்கைக் காணும்போது தனது வீட்டில் உள்ள பசுக்களின் நினைவு தோன்றுவது போல், நப்பின்னையின் தந்தம் போன்ற அழகான பல வரிசையைக் கண்டவுடன் முல்லை மொட்டுக்களின் நினைவு வருகிறது என்கிறார். பற்களின் அழகுக்கு முன்பாக முல்லை மொட்டுக்கள் அழகு இழந்து விடுகின்றன. இதனையே யாப்பருங்கலக்காரிகையின் உரையில் – பல்லுக்குத் தோற்றபனிமுல்லை - என்றது காண்க. இப்படியாக உள்ள அவளது புன்முறுவலுக்குத் தோற்றுப்போய், தன்னை அவள் அவளுடைய விருப்பத்திற்கு ஏற்றபடி எது வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம்படியாக ஒப்படைத்துக் கொண்டவன். (வல்லானாயர் தலைவனாய்) – மஹாபாரதம் த்ரோணபர்வம் – க்ருஷ்ணாச்ரயா: க்ருஷ்ணபலா: க்ருஷ்ணநாதாச்ச பாண்டவா: - க்ருஷ்ணனின் திருவடிகளையே பற்றும் இடமாகக் கொண்டனர், அவனையே தங்கள் வலிமை என்று கொண்டனர், அவனையே தங்களது ஸ்வாமியாகக் கொண்டனர் - என்றது காண்க. இதற்கு ஏற்றபடி க்ருஷ்ணனைத் துணையாகக் கொண்ட காரணத்தினால் மிடுக்குடன் திரிவதால் "வல்லானாயர்" என்றார். அல்லது "வல்லான் ஆயர் தலைவனாய்" என்பதை "ஆன் ஆயர் வல் தலைவன்" என்று கொண்டு, வலிமையைத் தலைவனுக்குக் கூறலாம். எப்படிப்பட்ட காய்ச்சல் என்றாலும் தலைக்கும் சேர்த்து நீராடுதலே சிறந்தது என்று உள்ளபோது இந்த ஆயர்கள் தலைக்குக் குளிக்கும்போது உடல் நனையாமலும், உடலோடு மட்டும் நீராடி தலையை முழுகாமலும் இருப்பர். ஆனால் இவர்கள் அனைவரும் கார்த்திகை மாதத்திலும், புதிதாக நெல்லை அறுவடை செய்யும்போது அவற்றைத் தங்கள் தெய்வங்களுக்குப் பொங்கல் வைப்பதற்காக முற்றிலுமாக நீராடுவர். இவர்கள் அனைவரும் இவ்விதம் நீராடியபோதிலும் இவன் அது போன்று செய்யாமல் இடையர் குலத்தில் ஆழ்ந்தவன்

போன்று காட்டிக்கொண்டபடி நிற்பான். ஏன் என்றால், இவ்விதம் செய்யவில்லை என்றால் அவர்கள் குலத்தில் வந்த நப்பின்னைப் பிராட்டியை மணம் முடித்துத் தர மாட்டார்கள் என்பதால் ஆகும். ஸுந்தரபாஹுஸ்தவம் (7) – குலேந சத்ருசீ - உம்முடைய குலத்துடன் ஒத்துள்ள நப்பின்னை - என்றது காண்க. ஸுந்தரகாண்டம் – துல்யசீலவயோவ்ருத்தாம் - சரியான வயது மற்றும் ஒழுக்கம் கொண்ட சீதைக்கு இராமன் ஏற்றவன், கறுத்த கண்கள் கொண்ட சீதை இராமனுக்கு ஏற்றவள் – என்பது போன்று க்ருஷ்ணனும் நப்பின்னையும் ஒருவருக்கு ஒருவர் ஏற்றவர்களாக உள்ளபோதிலும் எருதுகளை க்ருஷ்ணன் முன்பாக ஏவிய வலிமையான நெஞ்சம் கொண்டவர்கள் என்பதால் வன்மையான ஆயர் என்றார். (இளவேறு) - மரணத்தைக் கொண்டு வருகின்ற யமன் போன்றதான ஏழு எருதுகளின் கழுத்துக்கள் அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்துத் தழுவினான். இங்கு "தழுவி" என்று ஏன் கூறவேண்டும்? இதன் பின்னர் நப்பின்னை பிராட்டியை அடையப்போவதால், அவளுடைய ஸ்தனங்களில் அணைத்துக் கொள்வது போன்றுள்ள எண்ணத்தில் இருந்ததால் "தழுவி" என்றார். (எந்தாய் என்பன்) – ஏழு எருதுகளையும் அடங்கிய செயலைக் கண்டு மயங்கி நின்று, நப்பின்னை பிராட்டியின் பாசுரத்தையும் கூறிவிட்டேன். அது மட்டுமோ செய்தேன்? (நினைந்து) – உள்ளத்தாலும் தூஷித்தேன். அது மட்டுமோ, (நைந்தே) - பிறர் காணும்படி எனது சரீரத்தாலும் தூஷித்தேன் [அதாவது அறிவற்ற மூடர்கள் என்று ஆயர்களை இந்த உலகம் பொதுவாக உரைக்கும். அவர்களின் தலைவன் என்று உன்னை நப்பின்னை கூறலாம், ஆனால் நான் கூறினால் இகழ்வது போன்று அல்லவோ, இது தூஷிப்பது அல்லவோ – என்கிறார்]. இந்தப் பாசுரத்திற்கு வேறுவிதமாகவும் பொருள் உரைக்கலாம் "வானோர் இறையை" என்பதன் மூலம் முதல் திருவாய்மொழியான "மயர்வறும்" என்று உரைத்ததையும்; "கள்வா" என்பதன் மூலம் மூன்றாம் திருவாய்மொழியான "எத்திறம்" என்று உரைத்ததையும்; "ஏறேழுந்தழுவிய" என்பதன் மூலம் "அஞ்சிறை மடநாராய்" என்று பிராட்டிமார் நிலையில் உரைத்ததையும் எண்ணி எண்ணி வருந்துகிறார் - என்றும் கொள்ளலாம். இந்தப் பாசுரத்தில் உள்ள சொற்களை - நினைந்து நைந்து வளவேழுலகின் முதலாய வானோரிறையைக் களவேழ் வெண்ணெய் தொடுவுண்ட கள்வா என்பன்; பின்னையும், தளவேழ் முறுவல் பின்னைக்காய் வல்லானாயர் தலைவனாய் இளவேறு ஏழுந்தழுவிய எந்தாய் என்பன் அருவினையேன் – என்ற வரிசையில் படித்து பொருள் கொள்க.

1.5.2 நினைந்து நைந்துள் கரைந்துருகி இமையோர் பலரும் முனிவரும்
புனைந்த கண்ணி நீர்சாந்தம் புகையோ டேந்தி வணங்கினால்
நினைந்த வெல்லாப் பொருள்கட்கும் வித்தாய் முதலில் சிதையாமே
மனஞ்செய் ஞானத்துன் பெருமை மாசூணாதோ மாயோனே.

பொருள் – வியக்கவைக்கின்ற பல குணங்கள் மற்றும் செயல்கள் கொண்டவனே! நான்முகன் உள்ளிட்ட தேவர்களும், ஸநகர் உள்ளிட்ட மஹரிஷிகளும் உன்னுடைய குணங்களைத் தங்கள் உள்ளத்தில் நினைந்து, அதனால் சரீரம் நிலைகுலைந்து மனம் நிலைதடுமாறி, தண்ணீர்ப்பண்டம் போன்று உருகுகின்றனர்; இத்தகைய ப்ரேமை மாற்றங்களுடன் தொடுக்கப்பட்ட மாலைகள், நீர், சந்தனம், அகிற்புகை போன்ற பலவற்றையும் ஏந்தி வருகின்றனர். இவ்விதம் இவர்கள் செய்தால் நிகழ்வது என்ன? இவர்களது இந்தச் செயல்கள் மூலம் கண்ணால் காண்பது மட்டும் அல்லாமல், மனதால் எண்ணப்படுகின்ற வஸ்துக்களுக்கும் காரணமாக உள்ளவனும், சற்றும் மாறுதல் அடையாமல் உள்ளவனும், மனதால் எண்ணப்படும் ஸங்கல்ப வடிவமாகவே உள்ள ஞானம் கொண்டவனும் ஆகிய உனது மேன்மைகள் தாழ்ச்சி அடையாதோ?

அவதாரிகை - "நெஞ்சாலே நினைந்தும், வாயாலே பேசியும், நைந்தும், தப்பச்செய்தேன்" என்றார் கீழ்; "தப்பச்செய்தேன் என்றவிடம் தப்பச்செய்தேன்" என்கிறார் இதில். "சண்டாளன் 'ஓத்துப்போகாது' என்றுதான் சொல்லப்பெறுமோ? அப்படியேயன்றோ நான் அயோக்யன் என்று அகலுகையும்; ப்ரேமார்த்ரசித்தரான ப்ரஹ்மாதிகளன்றோ அதுதான் சொல்லப்பெறுவர்; நான் "தப்பச்செய்தேன்" என்று அகலுமதில், கிட்டி நின்று பரிமாறுவது நன்றன்றோ" என்று கீழ் நின்ற நிலையையும் நிந்தித்துக்கொண்டு அகலுகிறார்.

விளக்கம் - கடந்த பாசுரத்தில் "நெஞ்சால் நினைத்தபடி இருந்தும், வாயால் பேசியபடி இருந்தும், உடல் உருகியும் நான் தவறு செய்தேன்", என்று உரைத்தார். இந்தப் பாசுரத்தில் "நான் கடந்த பாசுரத்தில் தவறு செய்தேன் என்று கூறியது தவறு" என்று உரைக்கிறார். எப்படி? தாழ்ந்த பிறவி எடுத்த ஒருவன் "எனக்கு வேதம் தெரியாது" என்று கூறுவது பொருந்துமோ? அதாவது வேதங்களை ஓதுவதற்கு அவனுக்கு அதிகாரமே இல்லை என்று உள்ளபோது, "வேதம் தெரியாது" என்று கூறுவதே சரியானது அல்ல. இது போன்றே, தான் ஸர்வேச்வரனை விட்டு அகல்வது என்கிறார். ப்ரேமையால் முழுவதுமாக நிரப்பப்பட்ட நான்முகன் உள்ளிட்டவர்கள், இது போன்று சொன்னால் பொருந்தும்; நான் கூறினால் பொருந்தாது. "தவறு செய்துவிட்டேன்" என்று கூறி அகலுவதைக் காட்டிலும், "அருகில் சென்று தன்னை அளித்தல் நல்லது அல்லவோ" என்று தான் நின்ற நிலையை எண்ணியபடி நிந்தித்துக்கொண்டு அகல்கிறார்.

வ்யாக்யானம் - (நினைந்து இத்யாதி) ப்ரஹ்மாதிகள், ஸமாராதநத்துக்கு ஒருப்படும்போது, திருமாலை தொடக்கமான உபகரணங்களைச் சமைத்துக் கொண்டாயிற்று இழிவது. (நினைந்து) "நாம் இவற்றையும் கொண்டு சென்றால் நம்மை குளிரக் கடாக்ஷிக்கக் கடவேனே; 'மாமக்ரூரேதி வக்ஷ்யதி' என்கிறபடியே நம்மை அவன் வினவக்கடவனே" என்று இங்ஙனே முந்துற நினைப்பார்கள். (நைந்து) அநந்தரம், தரித்திருக்கமாட்டாதே சிதிலாந்த:கரணராவர்கள். (உள்கரைந்து) நையுமது ஸ்தூலம் என்னும்படி உள்கரைவர்கள். (உருகி) பின்னை ஓரவயவியாக்கி எடுக்கவொண்ணாதபடி மங்குவர்கள். இப்படி படுகிறவர்தாங்கள் ஆர்? என்றால் (இமையோர் பலரும் முனிவரும்) ப்ரஹ்மாதிகளும் ஸநகாதிகளும், இவர்கள் ரஜஸ்தமஸ்ஸுக்களாலே அபிபூதரானபோது பண்ணும் துர்மாநம் கனத்திருக்குமா போலேயாயிற்று, ஸத்வம் தலையெடுத்தபோது பகவத்குணாநுபவம் பண்ணி சிதிலராம்படியும். இப்படி ப்ரேமஸ்வபாவராகையாலே திருமாலை தொடுக்குப்போது தொடங்கி, "அவன் இத்தைக் கண்டருளக்கடவனே! சாத்தியருளக்கடவனே!" என்று ஸாதாரணமாகத் தொடுத்த மாலை, ஸமாராதநோந் முகனானவன் ச்ரமம் ஆறுகைக்கு அர்க்யங் கொடுக்கைக்காக உண்டாக்கின ஜலம், அநந்தரம் சாத்தியருளுவதாகச் சமைத்த சந்தநாதிகள், தூபங்கண்டருள உண்டாக்கின அகிற்புகை, இவை தொடக்கமானவற்றை தரித்துக்கொண்டு வந்து, நிர்மமராய்த் திருவடிகளிலே விழுவர்கள். (ஏந்தி வணங்கினால்) அவன் இவைகொண்டு கார்யங் கொள்ளுமதிலும் "அவனுக்கு" என்று தரிக்குமதுவே பேறாயிருக்கும் இவர்களுக்கு; "சூட்டுநன்மாலைகள் தூயனவேந்தி" என்னுமாபோலே, அவன்தான் இவை கொண்டு கார்யங்கொள்ளுமதிலும், இவர்கள் தரித்துக்கொண்டு நிற்கக் காணுமதுவே பேறாக நினைத்திருக்கும்; பாவபந்தம் இரண்டு தலைக்கும் உண்டிறே. "வணங்கினால் உன் பெருமை மாசூணாதோ" என்கை.

விளக்கம் - (நினைந்து இத்யாதி) - நான்முகன் உள்ளிட்டவர்கள் ஸர்வேச்வரனின் திருவாராதனத்திற்குக் குழுமும்போது மாலை உள்ளிட்ட பலவிதமான பூஜைக்கேற்ற வஸ்துக்களுடன் சேர்வார்கள். இவ்விதம் அவர்கள் கொண்டு செல்லும்போது தங்களது மனதில், "நாம் இவற்றை எடுத்துச் சென்றால் நம்மைக் குளிர்ந்து நோக்குவான் அல்லவோ?", என்று சொன்னபடி இருப்பர். மேலும் விஷ்ணுபுராணத்தில் – மாமக்ரூரேதி வக்ஷ்யதி - குற்றம் இல்லாத அக்ரூரரே - என்று க்ருஷ்ணன் நம்மை அழைத்துச் செல்வான் என்று எண்ணியபடி அக்ரூரர் சென்றதாக உரைத்தது போன்று இவர்கள், "நம்மை

அவ்விதமே நலம் விசாரிப்பான்" என்று எண்ணியபடி செல்வர். (நைந்து) –இவ்விதம் எண்ணிய உடனேயே அவனது திருக்கல்யாணகுணங்களை நினைத்தவர்களாக, உடல் தடுமாறி உடைந்த மனம் கொண்டவர்களாக நிற்பர். (உள்கரைந்து) - தங்கள் உள்ளம் கரைந்து நிற்பார்கள். (உருகி) அதன் பின்னர் தங்களது சரீரம், உள்ளம் போன்ற பலவற்றையும் சேர்த்து எடுக்க இயலாதபடி ஒடுங்கி நிற்பர். இவ்விதம் உள்ள நிலையை அடைபவர்கள் யார்? (இமையோர் பலரும் முனிவரும்) - நான்முகன் உள்ளிட்ட தேவர்களும், ஸநகர் உள்ளிட்ட மஹரிஷிகளும் ஆவர். இவ்விதம் உள்ளம் உருகுதல் போன்ற நிலை முனிவர்களுக்குப் பொருந்தும், ஆனால் கர்வம் கொண்ட தேவர்களுக்குப் பொருந்துமோ என்ற கேள்விக்கு விடை அளிக்கிறார். ரஜோ மற்றும் தமோகுணம் ஓங்கும்போது இவர்களுக்கு எந்த அளவு கர்வம் தலை தூக்கி நிற்குமோ, அதே அளவு ஸத்வம் தலை தூக்கும்போது பகவத்குணத்தை பற்றிய சிந்தனை இவர்களைக் குலைக்கும்படியாக ஓங்கி நிற்கும் என்று கருத்து. இவ்விதம் ப்ரேமை மிகுதியாக உள்ளவர்கள் என்பதால், மாலையைத் தொடுக்கும்போது தங்கள் மனதில், "இவன் இதனை ஏற்றுக்கொள்வான். தனக்கு ஏற்ற மாலைகள் என்று அணிந்து கொள்வான்", என்று எண்ணியபடியே தொடுப்பார். இப்படியாகத் தொடுக்கப்பட்ட மாலைகளை ஆராதனை செய்யும்போது அவனுக்கு ஏற்படும் சிரமம் நீங்கும் விதமாக அளிக்கப்படும் அர்க்யம் என்ற நீர், அதன் பின்னர் பூசிக்கொள்வதற்காக உள்ள சந்தனம் உள்ளிட்ட சாந்துக்குழம்புகள், தூபம் காண்பிப்பதற்காக உண்டாக்கப்பட்ட அகிற்புகை போன்ற பலவற்றையும் கொண்டு வருவார். தாங்கள் கொண்டு வந்த பலவற்றையும் அவன் ஏற்றுக் கொள்கின்ற நீர்மை குணத்தைக் கண்டு, தங்கள் அஹங்காரம் அனைத்தையும் கைவிட்டவர்களாக, அவன் திருவடிகளில் விழுவார்கள். (ஏந்தி வணங்கினால்) – அவன் இவற்றை ஏற்றுக் கொள்ளுதல் என்பதைக் காட்டிலும், "அவனுக்கு என்று உள்ள மாலைகள்" என்று எண்ணுவதே இவர்கள் தாங்கள் பெற்ற பேறு என எண்ணுவர்கள். திருவிருத்தம் (21) – சூட்டுநன் மாலைகள் தூயனவேந்தி - என்று கூறுவதற்கு ஏற்ப அவனுக்குச் சூட்டுவதற்குத் தகுதியான மாலைகள்; தாங்கள் தொடுத்த மாலை என்னும் மமதை, இதனால் என்ன பயன் கிட்டும் என்று எண்ணியபடி இருத்தல் என்பதான புழு, தலைமுடி, துரும்புகள் போன்ற எதுவும் இல்லாமையால் தூய்மையாக உள்ள மாலைகள். இதனை இவர்கள் அவனுக்கு அணிவித்தவுடன், "இதனை நாம் அணிந்து கொண்டு நிற்பதைக் காண்பதால் அவர்கள் தரித்திருப்பர். அதனைக் காண்பதே நமக்குப் பேறு", என்று எண்ணியபடி ஸர்வேச்வரனும் உள்ளான். இப்படியான ஸம்பந்தம் இரண்டு

பக்கமும் உண்டு. இதன் மூலம், "இதனை இவன் அணிந்து கொள்வதால் நமக்கு இன்னன்ன பயன் அளிப்பான்", என்று எண்ணாமல் அவன் அணிவது மட்டுமே பயன் என்று எண்ணுதல் உணர்த்தப்பட்டது.

வ்யாக்யானம் - (நினைந்த இத்யாதி) மேலே, "மனஞ்செய் ஞானம்" என்று ஸங்கல்பரூப ஜ்ஞாநத்தைச் சொல்லாநிற்கச்செய்தே, "நினைந்த" என்கிற இதுக்குக் கருத்தென்ன? என்னில், தேவாதிகார்யமாய்க் கொண்டு விஸ்த்ருதமான தடங்கலும் அழிந்து, "ஸதவே" என்று வ்யாஹரிக்கவேண்டும்படியான அன்று, புத்ரபௌத்ராதிகளோடே ஜீவித்தவன் அவர்களை இழந்து தனியனானால் தன் தனிமையை அநுஸந்தித்து வெறுக்குமா போலவும், தேசாந்தரகதனான புத்ரனை மாதாபிதாக்கள் நினைக்குமாபோலவும், இவற்றினுடைய இழவை அநுஸந்திப்பதொரு அநுஸந்தாநனம் உண்டு; அத்தைச் சொல்லுகிறது. (நினைந்த எல்லாப் பொருட்கட்கும் வித்தாய்) "நினைத்தல் – கலத்தலும், கூடலுமாய், ஸதவஸ்தமாய்த் தன்னுடனே கூடிக்கிடக்கிற ஸகலபதார்த்தங்களுக்கும் காரணமாய்" என்று பிள்ளையமுதனார் நிர்வஹிப்பர். அன்றியே இப்படி தன் திருவுள்ளத்தாலே விஷயீகரிக்கப்பட்ட ஸகலபதார்த்தங்களுக்கும் காரணமாய். (முதலில் சிதையாமே) அவற்றை உண்டாக்கச்செய்தே தானான தன்மையில் குறை வாராதபடி இருக்கும். ம்ருத்பிண்டம் கடசராவாதி கார்யமானவாறே விசிஷ்டாகாரம் நசிக்கும்; இங்கு அதில்லை; நாட்டில் கார்யங்களை உண்டாக்குவதான காரணத்தின்படியல்ல இவன்படி இருக்கிறது.

விளக்கம் - (நினைந்த இத்யாதி) அடுத்த வரியில் "மனஞ்செய் ஞானம்" என்ற ஸங்கல்ப ரூபமாகவே உள்ள ஞானத்தை உரைக்க உள்ளார்; அப்படி உள்ளபோது இங்கு "நினைந்த" என்று ஏன் கூறவேண்டும்? பல்வேறு செயல்களைச் செய்வதற்காக தேவர்கள், மனிதர்கள் என்று பலவாகப் பிரிந்து பரவி நிற்கும் அனைத்து வஸ்துக்களும் ப்ரளய காலத்தில் "ஸத் ஏவ = ஸத் மட்டுமே உள்ளது" என்று கூறுவதற்கு ஏற்ப அவனில் லயித்து விடுகின்ற காலத்தில் இவன் அவற்றை எண்ணுவதாகிற நினைவு கொள்வது உண்டு என்பதைக் காட்டுகிறார். இது எப்படி உள்ளது என்றால் - புத்திரன் மற்றும் பேரன் ஆகியவர்களுடன் வாழ்ந்த ஒருவன் அவர்களை இழந்து தனியாக நிற்கும்போது தனது தனிமையை எண்ணி வெறுப்பது போன்றும், தனது இருப்பிடத்தை விட்டு வேறு ஓர் ஊருக்குச் சென்ற புத்திரனை தாய், தந்தையர் எண்ணியபடியே இருப்பது போன்றும் – ஆகும். (நினைந்த எல்லாப் பொருட்கட்கும் வித்தாய்) - "கலப்பதும், கூடுவதும் நிகழ்வதால்

ஸத் என்ற நிலையில் உள்ள தன்னுள்ளே கூடுகின்ற அனைத்து வஸ்துக்களும் காரணமாக உள்ளவனாய்" என்று இதற்குப் பிள்ளைஅமுதனார் பொருள் உரைப்பார். அல்லது தனது திருவுள்ளத்தால் எண்ணப்பட்ட அனைத்து வஸ்துக்களுக்கும் காரணமாக. (முதலில் சிதையாமே) - அவற்றைத் தன்னிலிருந்து உண்டாக்கும்போது, தான் தனது தன்மையில் எந்தவிதமான குறையும் இன்றி உள்ளவன். அதாவது சேதனம், அசேதனம் என்பதாக மாற்றம் அடைகின்ற தன்மைகள் ஏதும் பரம்பொருளிடம் இல்லை. அதாவது ஒரு மண்குவியல் பானையாக மாறும்போது, பானை உருவான அதே நேரத்தில் மண்குவியல் அழிந்துவிடுகிறது. இங்கு அது போன்று பரம்பொருள் ஆவதில்லை. இந்த உலகத்தில் பெரும்பாலான காரியங்களை உண்டாக்குவதான காரணங்கள், அதன் பின்னர் மறைந்து விடுவது போன்று இவன் இருப்பதில்லை.

வ்யாக்யானம் - ஆனால் பின்னை, ஸங்கல்பமோ ஜகத்காரணம், ஸூக்ஷ்ம சிதசித் விசிஷ்ட ப்ரஹ்மமன்றோ? என்னில், ஆனாலும் காரணமாம்போது ஸங்கல்ப பூர்வகமாக வேணும்; ஸங்கல்பவிசிஷ்டம் காரணமானாலும், "பஹூ ஸ்யாம்" என்கிற ஸங்கல்ப ப்ராதாந்யத்தாலே சொல்லுகிறது. இப்படியிருக்கிற ஸங்கல்பரூப ஜ்ஞாநத்தையுடைய உன் பெருமையுண்டு – உன் வைலக்ஷண்யம். அது – இவர்கள் வணங்கினால் மாசூணாதோ? "தன் ஸங்கல்பத்தாலே ஸகலபதார்த்தங்களையும் உண்டாக்கும்படியான வைலக்ஷண்யத்தை உடையவனுக்கு, அவனாலே ஸ்ருஜ்யரான நாம் ஸ்பர்சித்த த்ரவ்யம் அங்குத்தைக்கு அர்ஹமோ?" என்று தந்தாமுடைய அயோக்யதையை அநுஸந்தித்து அகலுகைக்கு அதிகாரம் உள்ளது அவர்களுக்கன்றோ; அதுக்குத்தான் நான் ஆர்? (மாயோனே) ப்ரஹ்மாதிகளையும் க்ஷுத்ரமநுஷ்ய ஸ்தாநத்திலே ஆக்கவல்ல உன்னுடைய ஆச்சர்யமான வைலக்ஷண்யமிருந்தபடியென்!

விளக்கம் - இவனது ஸங்கல்பத்தால் அனைத்தையும் படைக்கிறான் என்றால் அந்த ஸங்கல்பமா உலகின் காரணமாக உள்ளது? அல்லவே; ஸூக்ஷ்மமாகவும் ஸித்தாகவும் அஸித்தாகவும் உள்ள ப்ரஹ்மம் அல்லவோ உலகின் காரணமாக உள்ளது என்ற சந்தேகம் எழலாம். இதற்கு விடை அளிக்கிறார். ஆயினும் ப்ரஹ்மம் காரணம் ஆகின்றபோது, ஸங்கல்பத்தை முன்னிட்டே அப்படி ஆகவேண்டும்; ஸங்கல்பத்தைக் கொண்டவனாகிய ப்ரஹ்மம் காரணமானாலும் ஏன் ஸங்கல்பரூப ஞானத்திற்கே இப்படிப்பட்ட காரணத்வம் கூறப்பட்டது என்பதற்கு விடை அளிக்கிறார். தைத்திரீய ஆநந்தவல்லீ (6) – பஹுஸ்யாம் – நான் பலவாகக்கடவேன் – என்று அவனது ஸங்கல்பத்தின் முதன்மை காரணமாக

இவ்விதம் கூறப்பட்டது. இப்படியாக ஸங்கல்பரூப ஞானத்தைக் கொண்டவனாகிய உன்னுடைய மேன்மை என்பது, இவர்கள் உன்னை வணங்கினால் அழுக்கு அடையாதோ? "தன்னுடைய ஸங்கல்பம் மூலம் மட்டுமே அனைத்தையும் உண்டாக்கவல்ல அவனுக்கு, அவனால் படைக்கப்பட்ட நம்மால் தொடப்பட்டதான மாலை போன்ற வஸ்துக்கள் அளிக்கத்தக்கதோ?", என்று தங்களுடைய தாழ்வை எண்ணி அவனை விட்டு அகலும் தகுதி அவர்களுக்கு உள்ளது. எனக்கு அந்தத் தகுதியும் இல்லை. (மாயோனே) – நான்முகன் போன்ற தேவர்களைக் கூட ஒரு நொடியில் மனிதர்கள் போன்று மாற்றவல்ல உனது வியக்கத்தக்க மேன்மை எத்தகையது!

பொருள் கொள்ளவேண்டிய வரிசை - நினைந்து எல்லாபொருள்கட்டும் வித்தாய் முதலிற்சிதையாமே மனஞ்செய்ஞானத்து உன் பெருமை, இமையோர் பலரும் முனிவரும் நினைந்து நைந்து உள்கரைந்து உருகிப்புனைந்த கண்ணி நீர் சாந்தம் புகையோடு ஏந்தி வணங்கினால் மாசூணாதோ மாயோனே – என்று படிக்கவேண்டும்.

1.5.3 மாயோனிகளாய் நடைகற்ற வானோர் பலரும் முனிவரும்
நீயோனிகளைப் படையென்று நிறைநான்முகனைப் படைத்தவன்
சேயோ னெல்லா வறிவுக்கும் திசைகளெல்லாம் திருவடியால்
தாயோன் எல்லா வெவ்வுயிர்க்கு தாயோன் தானோ ருருவனே.

பொருள் – வியக்கவைக்கின்ற பல குணங்கள் மற்றும் செயல்கள் கொண்டவனே! நான்முகன் உள்ளிட்ட தேவர்களும், ஸநகர் உள்ளிட்ட மஹரிஷிகளும் உன்னுடைய குணங்களைத் தங்கள் உள்ளத்தில் நினைத்து, அதனால் சரீரம் நிலைகுலைந்து, மனம் நிலைதடுமாறி, தண்ணீர்ப்பண்டம் போன்று உருகுகின்றனர்; இத்தகைய ப்ரேமை மாற்றங்களுடன் தொடுக்கப்பட்ட மாலைகள், நீர், சந்தனம், அகிற்புகை போன்ற பலவற்றையும் ஏந்தி வருகின்றனர். இவ்விதம் இவர்கள் செய்தால் நிகழ்வது என்ன? இவர்களது இந்தச் செயல்கள் மூலம் கண்ணால் காண்பது மட்டும் அல்லாமல், மனதால் எண்ணப்படுகின்ற வஸ்துக்களுக்கும் காரணமாக உள்ளவனும், சற்றும் மாறுதல் அடையாமல் உள்ளவனும், மனதால் எண்ணப்படும் ஸங்கல்ப வடிவமாகவே உள்ள ஞானம் கொண்டவனும் ஆகிய உனது மேன்மைகள் தாழ்ச்சி அடையாதோ?

அவதாரிகை – ”நினைந்தும் பேசியும் நைந்தும் தப்பச்செய்தேன்” என்றார் முதற்பாட்டில்; ”தப்பச்செய்தேன் என்றவிடம் தப்பச்செய்தேன்” என்றார் இரண்டாம் பாட்டில்; “நீர் நம்முடைய மேன்மையைப் பார்த்து அங்ஙன் நெகிழப் போகாதே; நான் தாழ நின்று எல்லாரோடும் பொருந்தும் சீலகுணத்தையும் ஒருகால் பாரீர்” என்று திருவுலகளந்தருளின சீலகுணத்தைக் காட்டிக்கொடுக்க, அத்தை அநுஸந்தித்து அகலமாட்டாதே அணுகவும் மாட்டாதே, நடுவே நின்று அணாவாய்த்துக்காலம் கழிக்கிறார். அப்படி காலம் கழிக்கவல்லரோ அவனையொழிய? என்னில்; சீர்கலந்த சொல்நினைந்து போக்கும்போது போக்கவல்லரே; சீலகுணா நுஸந்தாநத்தாலே போக்கலாமிறே.

விளக்கம் - “நினைந்தும் பேசியும் நைந்தும் தப்பச்செய்தேன்” என்று முற்பாசுரத்தில் உரைத்தார். “தப்பச்செய்தேன் என்றவிடம் தப்பச்செய்தேன்” என்று இரண்டாம் பாசுரத்தில் உரைத்தார். இப்படியாகக் கூறியபடியும், தனது தாழ்வை எண்ணியபடியும் அவனை விட்டு அகன்று செல்ல முயன்றார். இதனைக் கண்ட ஸர்வேச்வரன் ஆழ்வாரிடம், “நீவீர் இப்படியாக நம்முடைய மேன்மைகளைக் கண்டு மட்டும் அகன்று செல்ல எண்ணுவது சரியாகுமோ? நாம் அனைவருடனும் அவர்களுக்கு ஏற்றபடி இறங்கி வந்து, அனைவருடனும் பொருந்தி நிற்கும்படியான எளிமையுடன் இருந்த குணத்தையும் ஒரு நிமிடம் ஆராயவேண்டமோ?”, என்றான். இப்படியாக, தான் உலகம் அனைத்தையும் அளந்த எளிமையை ஆழ்வாருக்கு நினைவுபடுத்தினான். இதனை உணர்ந்தவுடன் அவனை விட்டு அகலவும் இயலாமல், அருகில் செல்லவும் துணியாமல் நடுவில் நின்று கொண்டு காலம் கழிக்கிறார். அவன் அல்லாமல் இவரால் காலம் கழிக்க இயலுமோ? பெரியதிருவந்தாதி (86) – சீர்கலந்த – அழகு, எளிமை போன்ற பலவிதமான குணங்களை வெளிப்படுத்தவல்ல அவனது திருநாமங்களை உச்சரித்துக்கொண்டு, தப்பிக்க இயலாதபடி சூழ்ந்துள்ள பாவங்களின் பலன்களை போக்கிக்கொள்ளவில்லை என்றால் எதனை எண்ணி இந்தக் காலத்தை கழிப்பார்கள் – என்று கேட்பதற்கு ஏற்ப, இங்கு ஆழ்வார் அவனுடைய எளிமை போன்ற குணங்களை எண்ணியபடி காலத்தைக் கழிப்பார்.

வ்யாக்யானம் – (மாயோனிகள் இத்யாதி) மஹாயோநிகளாய் – விலக்ஷணமான ஜந்மங்களையுடையராய். தந்தாமுடைய அதிகாராநுரூபமான மர்யாதைகளுண்டு - ஸ்ருஷ்டியாதிகள் அவற்றில் வந்தால் அறிவித்த ஸர்வேச்வரன் பக்கல் இருகால் மட்டுச்சென்று கேள்வி கொள்ள வேண்டாதபடி கற்றிருப்பாரான வானோர் பலரும் முனிவருமான யோநிகளை; அவர்களாகிறார் – ”ஸப்தர்ஷிகள், தசப்ரஜாபதிகள்,

ஏகாதசருத்ரர்கள், த்வாதசாதித்யர்கள், அஷ்டவஸுக்கள் என்று இப்படி சொல்லப்பட்டிருந்துள்ள ஜந்மங்களையுடையரானவர்களை நீ படை" என்று முந்துற சதுர்முகனை உண்டாக்கினவன்; "யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம்" என்கிறபடியே ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்து, "இவ்வருகு உண்டான கார்யவர்க்கத்தை உண்டாக்கு" என்று விட்டால், ஸர்வேச்வரனைக் கேள்வி கொள்ள வேண்டாதபடி துப்பரவுடைய னாகையாலே பூர்ணனான சதுர்முகனைப் படைத்தவன். (சேயோன் எல்லா அறிவுக்கும்) அவ்யவதாநேந தன் பக்கலிலே பிறந்து, தான் ஒதுவிக்க ஓதி, அவற்றாலே ஜ்ஞாநத்தில் குறைவற்றிருக்கிற ப்ரஹ்மாதிகளுடைய ஜ்ஞாநத்துக்கும் தூரஸ்தனாயிருக்கும்.

விளக்கம் - (மாயோனிகள் இத்யாதி) - வேறுபட்டதான பிறவிகளைக் கொண்டவர்களாக, தங்கள்தங்கள் பிறவிகளுக்கு ஏற்ற அதிகாரங்கள் கொண்டவர்களாக, அந்த அதிகாரங்கள் ஸ்ருஷ்டி செய்தல் போன்றவையாகக் கொண்டவர்கள். அப்படிப்பட்ட அதிகாரங்களுக்கு உரிய கடமைகளைச் செய்யும்போது, அந்த அதிகாரத்தை அளித்த ஸர்வேச்வரனிடம் எந்த ஒரு சூழ்நிலையிலும் சென்று "இதனைச் செய்வது எப்படி" என்று மீண்டும் கற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லாதபடி கற்றவர்களான தேவர்கள், முனிவர்கள் பலரும் ஆவர். அவர்கள் யார் என்றால் - ஸப்தரிஷிகள் என்னும் ஏழு முனிவர்கள், பத்து ப்ரஜாபதிகள், பதினோரு ருத்திரர்கள், பன்னிரண்டு ஆதித்யர்கள் மற்றும் எட்டு வசுக்கள் ஆவர். "இப்படிப்பட்ட பிறவிகள் கொண்டுள்ளவர்களை நீ படைப்பாயாக", என்று அவர்களின் படைப்பிற்கு முன்னே நான்முகனைப் படைத்தான் - என்று கூறுகிறார். இதன்படி முதலில் நான்முகனை படைத்தான். அதன் பின்னர், இங்கு அனைத்தையும் செய்யக்கூடிய அனைத்தையும் உருவாக்குவாய் என்றால், அதன் பின்னர் மீண்டும் எந்த ஒரு சந்தேகமும் ஸர்வேச்வரனிடம் சென்று கேட்க வேண்டிய அவசியம் இல்லாதபடி மிகவும் சாமர்த்யமும் பரிபூர்ணமான ஞானமும் கொண்ட நான்முகனைப் படைத்தவன் என்று கருத்து. (சேயோன் எல்லா அறிவுக்கும்) – தன் மூலமாகப் படைத்து, தான் அவர்களுக்கு ஓத வேண்டிய அனைத்தையும் ஓதி, இதன் காரணமாகத் தங்களது ஞானத்தில் எந்தவிதமான குறையும் இல்லாமல் உள்ள நான்முகன் போன்றவர்களின் ஞானத்திற்கும் எட்டாதபடி இருப்பவன்.

வ்யாக்யானம் – (திசைகளெல்லாம் திருவடியால் தாயோன்) எத்தனையேனும் அதிசயித ஜ்ஞாநரானவர்களுடைய ஜ்ஞாநத்துக்கு தூரஸ்தனாயிருந்து வைத்து, தானே தன்னைக் கொடுவந்து காட்டுமன்று வருத்தமறக் கொடுவந்து காட்டும். திக்குக்களோடே கூடின

பூமிப்பரப்படைய திருவடிகளாலே தாவி அளந்து கொண்டவன். "நாய்ச்சிமார் தொடும்போதும் பூத்தொடுமாபோலே கூசித்தொடும் திருவடிகளைக் கொண்டு கிடீர் காடும் ஓடையும் அளந்து கொண்டது!" என்று ஆச்சர்யப்படுகிறார். குணாகுண நிரூபணம் பண்ணாதே எல்லார் தலையிலும் திருவடிகளைக் கொடுவந்து வைக்கைக்கு நிபந்தநமென்? என்னில் (எல்லா எவ்வுயிர்க்கும் தாயோன்) ஸகல ப்ராணிகளுக்கும் தாய் போலே பரிவனாகை. எல்லா எவ்வுயிர்க்கும் என்கிறது - உத்கர்ஷாபகர்ஷம் பாராதே பரிவனாகை. (தானோருருவனே) ஒருவர்க்கும் நிலமல்லாத மேன்மையையும் அநுஸந்தித்தார்; அப்படிப்பட்டவனுடைய நீர்மையையும் அநுஸந்தித்தார்; "இவனும் ஒருபடியையுடையவனாயிருக்கிறானே!" என்று வித்தராகிறார். கடுநடையிட்டோ டுகிறவர், இவன் சீலகுணத்தை அநுஸந்தித்துக் கால் தாழ்கிறார்.

விளக்கம் - (திசைகளெல்லாம் திருவடியால் தாயோன்) – திருவடி என்றால் அழகான பாதங்கள் அல்லது திரு என்று பெரியபிராட்டியைக் கூறுவதாகக் கொண்டு, அவளும் மிகவும் கூச்சத்துடன் தொடுகின்ற மென்மையான திருவடிகள். ஆக எத்தனை அதிகமான ஞானம் உள்ளவர்களின் அறிவுக்கும் எட்டாதபடி உள்ள இவன், தானே தன்னைக் கொண்டு வந்து காண்பிக்கத் திருவுள்ளம் பற்றும்போது, எந்தவிதமான தடையும் இன்றி தன்னைக் காண்பித்துக் கொள்வான். இந்தப் பூமிப்பரப்பு முழுவதுமாகத் தனது திருவடிகள் மூலம் ஆக்கிரமித்து அளந்தான். அவனது தேவிமார்கள் அவனுடைய திருவடிகளை வருடும்போது, "இத்தனை மென்மையான திருவடிகள், நம்முடைய கைகள் பட்டால் நோகுமோ", என்று எண்ணியபடி, மிகவும் மெதுவாக, ஒரு மலரைத் தொடுவது போன்று மென்மையாக வருடுகின்றனர்; இப்படிப்பட்ட மென்மையான திருவடிகள் கல்லும்காடும் நிறைந்த உலகங்களை அளந்ததே என்று வியந்துபோகிறார். இந்த உலகில் உள்ளவர்களின் குணம் என்ன, குணம் அற்ற தன்மை என்ன என்பதான எதனையும் ஆராய்ந்து பார்க்காமல், அனைவரது தலைகளிலும் படும்படியாகத் தனது திருவடிகளை வைக்க என்ன காரணம் உள்ளது என்ற கேள்விக்கு விடை அளிக்கிறார். (எல்லா எவ்வுயிர்க்கும் தாயோன்) - அனைத்து உயிர்களிடமும் அவற்றின் தாய் எத்தனை பரிவு காண்பிப்பாளோ அதனைக் காட்டிலும் பன்மடங்கு மேலான பரிவு உள்ளதால் இவ்விதம் செய்தான். "எல்லா எவ்வுயிர்க்கும்" என்றால் உயிர்களுக்கு இடையே உயர்வுதாழ்வு ஆராயாமல் அனைவரிடமும் ஒரே போன்ற பரிவுடன் இருத்தல். (தானோருருவனே) – யாராலும் எளிதில் அறிய இயலாதபடி உள்ள இவனது மேன்மையை உரைத்தார் (சேயோன்), அப்படிப்பட்ட ஸர்வேச்வரனாக உள்ள அவனுடைய எளிமையை உரைத்தார் (தாயோன்). இப்படி இரண்டும் ஒன்றாக உள்ளது போன்ற ஒரு தன்மையைக்

கொண்டுள்ளானே என்று வியந்து போகிறார். அவனைவிட்டு மிகவும் வேகமாகத் தனது தாழ்மை காரணமாக அகன்று செல்ல எண்ணியவர், அவனுடைய எளிமையைக் கண்டு வியந்து, கால் பின்வாங்க நின்றார்.

1.5.4 தானோ ருருவே தனிவித்தாய்த் தன்னில் மூவர் முதலாய
வானோர் பலரும் முனிவரும் மற்றும் மற்றும் முற்றுமாய்,
தானேர் பெருநீர் தன்னுள்ளே தோற்றி அதனுள் கண்வளரும்
வானோர் பெருமான் மாமாயன் வைகுந்தன் எம்பெருமானே.

பொருள் – நான்முகன் போன்ற யாரும் இன்றி ஒருவனே ஆக நின்ற அவன், ஒரு உருவமே கொண்டவனாக, தனியாக, வித்தாக இவ்விதம் மூன்றுவிதமான காரணமாகவே உள்ள தன்னுடைய ஸங்கல்பத்தின் மூலமாக நான்முகன், சிவன், இந்திரன் ஆகிய மூவரையும் உண்டாக்கினான். இந்த மூவர் தொடக்கமாக உள்ள தேவர்கள், முனிவர்கள், மனிதர்கள், விலங்குகள் மற்றும் பல பொருள்கள் ஆகிய அனைத்தும் உண்டாவதற்காகத் தானாகவே, ஒப்பில்லாத ஒரு பெரிய ஸமுத்திரத்தை உண்டாக்கினான். அதில், தான் கண்வளர்ந்தபடி உள்ளான். இப்படியாக உள்ளவனும், பரமபதத்தின் நாயகனும், நித்யஸூரிகளின் தலைவனும், ஆச்சர்யம் ஏற்படுத்தவல்ல செயல்களைச் செய்தபடி உள்ளவனும் ஆகிய அவன் எனக்கு ஸ்வாமி ஆவான்.

அவதாரிகை - "அவன்படி இதுவாயிருந்தது; இனி நீர் செய்யப்பார்த்ததென்?" என்ன; "நாம் அகலப் பார்த்தால் உடையவர்கள் விடுவர்களோ" என்கிறார். "அத்யந்த நிரபேக்ஷனாயிருந்து வைத்து, ஸ்ருஷ்ட்யாத்யநேக யத்நங்களைப் பண்ணி என்னைத் தனக்காக்கிக் கொண்ட குணங்களாலே என்னை விஷயீகரித்தவன், இனி நான் "அல்லேன்" என்னிலும் தன்னுடைய ஸௌசீல்ய குணத்தாலே என்னை விடான்" என்று ஸமாஹிதராகிறார்.

விளக்கம் - கடந்த பாசுரத்தில் ஆழ்வார் கூறியதைக் கேட்ட சிலர் ஆழ்வாரிடம், "அவனது செய்கை மிகவும் எளிமையுடன் கூடியதாக இருந்தது என்று உரைத்தீர். இப்போது நீவிர் அவனை விட்டு அகலப் பார்க்கிறீரா அல்லது அவனிடம் செல்ல முயல்கிறீர்களா?", என்றனர். இதற்கு ஆழ்வார், "நான் அகல எண்ணினாலும், என்னைத் தனது உடைமையாகக் கொண்ட அவன் என்னை விடுவானோ?", என்கிறார். தனது மனதில்,

“அவனுக்கென்று எந்தவிதமான வேண்டுதல்களும் இல்லை. ஆனாலும் படைத்தல் போன்ற பலவிதமான முயற்சிகளைச் செய்து, அவற்றின் மூலமாக என்னைத் தனக்காகவே ஆக்கிக் கொண்டான். இவை போதாது என்று என்னைத் தனது திருக்கல்யாணகுணங்களால் ஈடுபடுத்திக்கொண்டான். நானாகவே அகன்று செல்கிறேன் என்று உரைத்தாலும், தனது ஸௌசீல்ய குணத்தால் (தாழ்வாக புத்தி உள்ளவர்களுடனும் நன்றாகப் பழகுதல் என்பது சீலம்; இத்தகைய கலத்தல் என்பதைத் தனது பேறாக எண்ணுதல் ஸௌசீல்யம்) என்னை அவன் விடமாட்டான்”, என்று எண்ணியபடி சமாதானம் அடைந்தார்.

குறிப்பு - தொடர்ந்து வ்யாக்யானம் படிப்பதற்கு முன்பாக மூன்றுவிதமான காரணம் என்பது பற்றி அறியவேண்டும். இதனை அடையவளைந்தான் அரும்பத உரையில் உள்ளபடி விளக்குவோம். இந்த உலகில் அனைத்து கார்யங்களும் ஏற்படக் காரணமாக உள்ள அனைத்தும் நிமித்தகாரணம், உபாதாநகாரணம் மற்றும் ஸஹகாரிகாரணம் என்று மூன்று வகைப்படும். ஒரு மண் பானை உள்ளது என்று வைத்துக்கொள்வோம். அந்தப் பானைக்கு மண் என்பது உபாதானக் காரணம், பானையைச் செய்கின்ற குயவன் நிமித்த காரணம், பானையைச் செய்ய உதவும் சக்கரம் போன்றவை ஸஹகாரி காரணம் ஆகும். ஆனால் இந்த உலகின் உற்பத்தி என்ற கார்யத்தில் ப்ரஹ்மமே மூன்றுவிதமான காரணங்களாகவும் உள்ளது. எப்படி? ப்ரஹ்மம் ஸூக்ஷ்மமாகவும், சித்தாகவும், அஸித்தாகவும் பரிணமிக்கும்போது உபாதாநக் காரணமாக உள்ளது; ஸங்கல்பம் என்பதன் மூலம் நிமித்த காரணமாக உள்ளது; ஞானம், சக்தி போன்றவை ஸஹகாரி காரணமாக உள்ளது. இதனையே இங்கு “தானோர் உருவே தனி வித்தாய்” என்று அருளிச்செய்கிறார் . அதாவது “தான் வித்து, ஓர் வித்து, தனி வித்து” என்று கொள்க. இங்கு “தான்” என்பது வேறு உபாதாநக் காரணம் இல்லை, “ஓர்” என்பது வேறு ஸஹகாரி காரணம் இல்லை, ”தனி” என்பது வேறு நிமித்த காரணம் இல்லை என்பதை உணர்த்துவதாக உள்ளன.

வ்யாக்யானம் - (தானோருருவே தனிவித்தாய்) ”ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீதேகமேவாத்விதீயம்” இங்கே அத்விதீயபதங்கள் மூன்றுண்டாயிருந்தது; இவற்றால் கொள்ளுகிற விநியோகமென்? என்னில்; ஸ்ருஷ்டியை ப்ரஸங்கிக்கையாலே காரண விஷயமாய்க் கிடக்கிறன. த்ரிவிதகாரணமும் தானே என்கை. “தான்” என்கிற இத்தால் –

உபாதாநாந்தரமில்லை என்கை. "ஓர்" என்கிற இத்தால் - ஸஹகார்யாந்தரமில்லை என்கை. "தனி" என்கிற இத்தால் - நிமித்தாந்தரமில்லை என்கை. "உரு" என்று - அழகு; அழகிய த்ரிவிதகாரணமுமாய்.

விளக்கம் - (தானோருருவே தனிவித்தாய்) - சாந்தோக்ய உபநிஷத் (6-2-1) – ஸத் ஏவ ஸோம்ய இதம் அக்ர ஆஸீத் ஏகம் ஏவ அத்விதீயம் – தொடக்கத்தில் இந்த ஸத் என்பது மட்டுமே இருந்தது; இரண்டாவது என்று ஏதும் இல்லாமல் இது மட்டுமே இருந்தது - என்றது காண்க. இங்கு "ஸத் ஏவ" என்பதால் ஸஹகாரி காரணம், "ஏக ஏவ" என்பதால் உபாதாநக் காரணம், "அத்விதீயம்" என்பதால் நிமித்த காரணம் ஆகிய மூன்றும் ப்ரஹ்மமே எனப்பட்டது. இந்த ச்ருதியில் உரைக்கப்பட்டது போன்று பாசுரத்திலும் மூன்று பதங்கள் உள்ளன. அவை முறையே "ஓர், தான், மற்றும் தனி" என்கிறார். இந்தச் சொற்களின் பயன் என்ன? இந்தச் சொற்கள் "தத் தேஜ: அஸ்ருஜத, ஸ ஈக்ஷத லோகாந்து ஸ்ருஜா இதி" என்ற ச்ருதி வரிகளில் கூறப்பட்டது போன்று ஸ்ருஷ்டியைப் பற்றி உரைக்கின்றன; எப்படி என்றால், பாசுரத்தில் "மற்றும் மற்றும் முற்றுமாய்" என்றது காண்க. மூன்றுவிதமான காரணமும் தானே என உள்ளான். மூன்றுவிதமான காரணம் என்றால் – ஸூக்ஷ்ம, சித், அசித் என்றுள்ள உபாதானக் காரணம், ஸங்கல்ப ரூபமாக உள்ள நிமித்தகாரணம், ஞானம் மற்றும் சக்தி போன்றதான ஸஹகாரிகாரணம் – என்பதாகும். "தான்" என்பதன் மூலம் வேறு உபாதானக் காரணம் இல்லை என்பதும், "ஓர்" என்பதால் வேறு ஸஹகாரி காரணம் இல்லை என்பதும், "தனி" என்பதால் வேறு நிமித்த காரணம் இல்லை என்பதும் கூறப்பட்டது. உரு என்றால் அழகு. ஆகவே அழகான மூன்று காரணங்களாக என்று கருத்து. அழகு என்பது என்னவென்றால் ஸௌந்தர்யம்; அதாவது ஸூக்ஷ்ம, சித், அசித் என்று பலவாக நின்றபோதிலும் எந்தவிதமான மாறுபாடும் அடையாத தன்மை.

வ்யாக்யானம் - (தன்னில் மூவர் முதலாய) இக்ஷ்வாகு வம்ச்யர் நடுவே வந்து அவதரித்து அவர்களோடே எண்ணலாம்படி இருக்குமாபோலவும், யாதவர்கள் நடுவே வந்து அவதரித்து அவர்களோடொக்க எண்ணலாம்படி இருக்குமாபோலவும், ப்ரஹ்மாதிகள் நடுவே அவர்களோடொக்கச் சொல்லலாம்படி அவதரித்து, ஸ்வேந ரூபேண நின்று பாலநத்தைப் பண்ணி, அவர்களுக்கு அந்தராத்மாவாய் நின்று ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களைப் பண்ணிப் போருகையாலே தன்னோடு கூடின மூவர் தொடக்கமான

என்னுதல்; அன்றியே, "தன்னில்" என்றது - தன்பக்கலிலே என்றபடியாய், தன்னுடைய ஸங்கல்பரூப ஜ்ஞாநத்திலே "மூவர் முதலாய" ஸேந்த்ர: என்கிற இந்த்ரனையும் கூட்டிச் சொல்லுதல். (வானோர் பலரும்) ப்ரஹ்மாதிகள் தொடக்கமான தேவர்களையும். (முனிவரும்) ஸநகாதிகளையும். (மற்றும்) ஸ்தாவரங்களையும். (மற்றும்) ஜங்கமங்களையும். (முற்றுமாய்) அநுக்தமான எல்லாவற்றையும் உண்டாக்குகைக்காக.

விளக்கம் - (தன்னில் மூவர் முதலாய) - மஹாவிஷ்ணுவாகிய தன்னுடன் கூடிய மூவர் தொடக்கமாக. அல்லது தனது ஸங்கல்பம் என்பதால் நான்முகன், ருத்ரன் மற்றும் இந்த்ரன் ஆகியோரின் காரணமாக உள்ளவன். அனைத்திலும் உயர்ந்த இவன், அவர்களுடன் ஒன்றாக வரிசைப்படுத்தப்பட்டால், இவனது உயர்வுக்குத் தாழ்வு ஏற்படாதோ என்ற கேள்வி எழலாம். இதற்கு விடை அளிக்கிறார். இக்ஷ்வாகு குலத்தில் இராமனாக அவதாரம் செய்து அவர்களில் ஒருவன் என்று கூறலாம்படி வந்தது போன்றும், யாத்வர்களின் குலத்தில் க்ருஷ்ணனாக அவதாரம் செய்து அவர்களில் ஒருவன் என்று கூறலாம்படி வந்தது போன்றும், நான்முகன் போன்றவர்களின் நடுவே அவர்களுடன் சேர்த்துக் கூறலாம்படி வந்தான். இப்படியாகத் தனது உருவத்துடன் நின்று காப்பாற்றும் செயலைச் செய்தான். நான்முகன் மற்றும் ருத்ரன் ஆகியவர்களின் அந்தர்யாமியாக நின்று, தானே ஸ்ருஷ்டி மற்றும் ஸம்ஹாரங்களைச் செய்தான். இதன் காரணமாகவே "தன்னுடன் கூடின மூவர் தொடக்கமாக" என்று உரைக்கப்பட்டான். அல்லது "தன்னில்" என்பதைத் "தன்னுடைய ஸ்வரூப ஞானம்" எனலாம். இவ்விதம் கொண்டால் "மூவர் முதலாய" என்பதற்கு நாராயணாநுவாகம் – ஸேந்த்ர: - என்று கூறுவதற்கு ஏற்ப இந்த்ரன் உள்ளிட்ட மூவர் என்று கொள்ளவேண்டும். (வானோர் பலரும்) – நான்முகன் தொடக்கமாக உள்ள தேவர்களையும். (முனிவரும்) - ஸநகர் உள்ளிட்ட பல முனிவர்களையும். (மற்றும்) - நிலையாக உள்ள மரம் போன்ற பலவற்றையும். (மற்றும்) - அங்கும் இங்கும் நகர்கின்ற உயிர்கள் அனைத்தையும். (முற்றுமாய்) – மேலும் இங்கு கூறப்படாத மஹத் உள்ளிட்ட அனைத்தையும் படைப்பதற்காக.

வ்யாக்யானம் - (தானோர் இத்யாதி) இப்படி ஸ்ருஷ்ட்யுந்முகனான தான், தனக்குக் கண் வளர்ந்தருளுகைக்குப் போரும்படியான பரப்பையுடையத்தான ஏகார்ணவத்தைத் தன் பக்கல் நின்றும் உண்டாக்கி அதனுள் கண்வளரும். இப்படி ஏகார்ணவத்திலே தனியே சாய்ந்தருளுகிறவன்தான் ஆர் என்னில், (வானோர் பெருமான்) நித்யஸூரிகளுக்கு

நாதனானவன். (மாமாயன்) ஆச்சர்யங்களான குணசேஷ்டிதங்களை உடையவன். (வைகுந்தன்) ஸ்ரீவைகுண்டத்தைக் கலவிருக்கையாக உடையவன். (எம்பெருமானே) அவன் என் நாயனே. உடைமை தப்பிப்போகப்புக்கால், உடையவர்கள் ஆறியிருப்பர்களோ? பெறுகைக்கு ஈடாக ஏற்கவே நோன்பு நோற்று வருந்தி ப்ரஜையைப் பெற்ற தாயானவள், அவன் நடக்கவல்லனான ஸமயத்திலே "தேசாந்தரம் போவேன்" என்றால், விட்டு ஆறியிராளிறே; அப்படியே நெடுநாள் தன் வாசியறியாதே போந்த எனக்கு அறிவைத் தந்து தன்னை உள்ளபடி அறிவித்தவன், தான் தந்த அறிவைக் கொண்டு நான் அகன்றுபோகப் புக்கால், அவன் விட்டு ஆறியிருக்குமோ?

விளக்கம் - (தானோர் இத்யாதி) "தானோர் உருவே" என்பது தொடங்கி "முற்றுமாய்" என்பது முடிய வ்யஷ்டி ஸ்ருஷ்டி பற்றி உரைத்தார். "தானோர் பெருநீர் தன்னுள்ளே தோற்றி" என்பதன் மூலம் ஸமஷ்டி ஸ்ருஷ்டி பற்றி உரைக்கிறார். இப்படியாகப் படைத்தல் என்பதில் குறிக்கோள் கொண்ட அவன், தான் கண் வளர்வதற்கு ஏற்ற தகுதியைக் கொண்டதான பரப்பை உடைய ஒரு ஸமுத்திரத்தை உண்டாக்கி, அதில் கண்வளர்கிறான். இப்படியாப் பெரிய ஸமுத்திரம் ஒன்றில் தனியாகச் சயனித்துக் கண்வளர்பவன் யார் என்று கேள்விக்கு விடை அளிக்கிறார். (வானோர் பெருமான்) - நித்யஸூரிகளின் நாதன். (மாமாயன்) – வியக்க வைக்கின்ற குணங்கள் மற்றும் செயல்கள் கொண்டவன். (வைகுந்தன்) – ஸ்ரீவைகுண்டத்தில் தனது உள்ளம் எப்போதும் பொருந்தியபடி உள்ளவன். அல்லது ஸ்ரீவைகுண்டத்தைத் தான் கொலு இருக்கின்ற இடமாகக் கொண்டவன். (எம்பெருமான்) - அவன் எனது நாயகன். தங்களுக்குச் சொந்தமான ஒரு பொருள் தங்களை விட்டு அகன்று செல்வதைப் பார்த்துக்கொண்டு யாரேனும் ஏதும் செய்யாமல் நிற்பார்களோ? அப்படி இவன் ஆழ்வார் அகல்வதைக் கண்டு பொறுத்துக் கொள்ளாமல் உள்ளதற்குக் காரணம் என்ன என்பதை உரைக்கிறார். பிள்ளையைப் பெற்று எடுக்கும்போது உண்டாகின்ற பிரசவ வேதனைக்கு ஒப்பான வேதனைகளை, "இந்தப் பிள்ளை பிறக்கவேண்டும்" என்று எண்ணி, அதற்கான நோன்புகளை இயற்றும்போது ஒரு தாய் அனுபவித்தாள் என்று வைத்துக்கொள்வோம். அப்படிப் பெற்றெடுத்த பிள்ளை நன்றாக நடக்கின்ற பருவம் வந்தவுடன், "நான் வேறு ஊருக்குப் பிழைக்கச் செல்கிறேன்", என்று கூறினால் அவனைப் போகவிட்டு, தான் ஏதும் செய்யாமல் அந்தத் தாய் இருப்பாளோ? இது போன்றே, நீண்ட காலமாக என்னைப் பற்றி நான் சரிவர அறியாதபோது, எனக்கு என்னைப் பற்றி அறிகின்ற அறிவையும் அளித்து, தன்னைப் பற்றியும் எனக்கு உள்ளதுஉள்ளபடி உணர்த்திய அவன் – தான் எனக்கு

அளித்த அறிவையே காரணம் காண்பித்து, தன்னை விட்டு அகன்று செல்ல எண்ணும் என்னைக் கண்டு ஏதும் செய்யாமல் இருப்பானோ?

1-5-5. மானேய் நோக்கி மடவாளை மார்வில் கொண்டாய் மாதவா
கூனே சிதைய வுண்டைவில் நிறத்தில் தெறிந்தாய் கோவிந்தா
வானார் சோதி மணிவண்ணா மதுசூதா நீ யருளாய் உன்
தேனே மலரும் திருப்பாதம் சேருமாறு வினையேனே.

பொருள் – மானின் பார்வையை ஒத்ததான பார்வையைக் கொண்ட பெரியபிராட்டியை உனது திருமார்பில் எப்பொதும் வைத்தபடி உள்ளாய். இதனால் மாதவன் என்ற திருநாமம் பெற்றவனே! கூனி என்று அழைக்கப்பட்டவளான மந்தரையின் (அல்லது குப்ஜை) முதுகில் இருக்கின்ற கூன் என்ற வளைவு நீங்கும்படியாக உண்டை வில் கொண்டு அடித்தவனே! அறிவில்லாத பசுக்களைக் காப்பாற்றுவதே பெரும்பேறு என்று கொண்டு அவற்றைக் காத்த கோவிந்தா! சிறந்த ஞானம் உள்ளவர்களால் நிரப்பப்பட்ட பரமபதத்தை நிரப்பும்படியாக ஒளி வீசும் மாணிக்கம் போன்றவனே! உனது அடியார்களின் விரோதியான மது என்ற அசுரனை அழித்தவனே! உனது தேன் நிரம்பிய தாமரை போன்ற அழகான திருவடிகளை, அனைத்து பாவங்களும் சூழ்ந்தவனாகிய நான் வந்து அடையும்படியாக நீயே க்ருபை செய்யவேண்டும்.

அவதாரிகை - ஆபிமுக்யம் பண்ணின அநந்தரம், "க்ரியதாம் இதி மாம் வத" போலே ஏவி அடிமைகொள்ளவேணும் என்று ப்ரார்த்திக்கிறார் என்னுதல்; இவர் ஆபிமுக்யம் பண்ணச் செய்தே அவன் முகங்காட்டாதே அல்பம் விளம்பிக்க, அது பற்றாமை "அருளாய்" என்கிறார் என்னுதல்.

விளக்கம் - இந்தப் பாசுரத்தின் அவதாரிகை இரண்டுவிதமாகப் பொருள் அளிப்பதாகும். தானாகவே ஈடுபாடு கொண்ட பின்னர் எம்பெருமானிடம் வருகிறார்; அப்போது இராமாயணம் ஆரண்யகாண்டம் (15-7) - க்ரியதாம் இதி மாம் வத – லக்ஷ்மணா! இந்த இடத்தில் பர்ணசாலை அமைப்பாய் – என்று இராமன் லக்ஷ்மணனுக்குக் கட்டளை இட்டு தனக்கான கைங்கர்யத்தை ஏற்றுக்கொள்ளுவது போன்று, தன்னையும் கட்டளை இடவேண்டும் என்று விண்ணப்பம் செய்வதாகக் கொள்க. மற்றொரு பொருள்: இவர் அவனை உணர்ந்துகொண்டு அண்டிய பின்னரும், அவன் இவருக்குத் தனது

திருமுகத்தைக் காண்பிக்காமல், மறுமொழி உரைக்காமல் இருப்பதைக் காண்கிறார்; இதனால் ஏற்படும் காலதாமதத்தைப் பொறுத்துக் கொள்ள இயலாமல் "அருளாய்" என்று விண்ணப்பம் செய்கிறார்.

வ்யாக்யானம் - (மானேய் இத்யாதி) அருளுவிப்பாரும் அருகே உண்டாயிருக்க, "எனக்கு அருளாய்" என்று ப்ரார்த்திக்க வேண்டுகிறதென்? (மானேய் நோக்கி) மானேய்ந்த நோக்கையுடையளாய். ஏய்கை – பொருந்துகை. மானேடு ஒத்த நோக்கை – கண்ணையுடையளாய். (மடவாளை) ஆத்மகுணோபேதையாயிருக்கிற பெரிய பிராட்டியாரை. காரியப்பாடறக் கண்ணாலே அவனை ஒருகால் நோக்கினால், ஒருபாட்டம் மழைவிழுந்தாற்போலே குளிரும்படியாயிற்று நோக்கிருப்பது. அன்றிக்கே, (மடவாள்) மடப்பமாவது - துவட்சியாய், அவன்தான் கண்ணாலே இவளை நோக்கினால் "தெய்வவண்டு துதைந்த எம்பெண்மையம்பூ" என்கிறபடியே, வண்டாலே ஆத்தஸாரமான பூப்போலேயாயிற்று இவளிருப்பது.

விளக்கம் - (மானேய் இத்யாதி) - இதற்கு இரண்டு பொருள்: மான் போன்ற கண்கள் கொண்டவள் அல்லது போன்ற பார்வை உடையவள். இங்கு ஒரு சந்தேகம் எழலாம். சேதநர்களுக்கு ஏற்ற புருஷகாரத்தை அளிப்பதை மட்டுமே தனது செய்கையாக உடைய பெரியபிராட்டியார் அவனது திருமார்பில் எப்போதும் வீற்றுள்ளபோது அவன் க்ருபை செய்யாமல் போவானோ; அப்படி உள்ளபோது இவர் "எனக்கு அருளாய்" என்று ஏன் கேட்கிறார்? (மானேய் நோக்கி) – மான் போன்ற பொருந்திய பார்வை கொண்டவள். மான் போன்ற கண்கள் கொண்டவள். (மடவாளை) மடப்பம் என்பதற்குப் பெண்மைத் தன்மை என்று கொள்க; அதாவது ஸர்வேச்வரன் தனது திருக்கண்களால் இவளைக் காணும்போதே இவள் துவண்டு விடக்கூடியபடி மென்மையானவள் என்று கொள்க. ஸ்ரீரங்கநாதனின் படைப்புகள் அனைத்தும் ஸ்ரீரங்கநாச்சியாரின் பார்வை காரணமாக மட்டுமே பயனுள்ளவை ஆகின்றன என்று ஸ்ரீகுணரத்நகோசத்தில் ஸ்வாமி பராசரபட்டர் அருளிச்செய்கிறார். இவ்விதம் அவளது பார்வை என்பது காரணகார்யத்துடன் கூடியதாகும். ஆனால் இது போன்று எந்தவிதமான காரணகாரியமும் இல்லாமல் அவனை இவள் அன்புடன் நோக்கினாள். அல்லது, (மடவாள்) மடப்பம் என்பதைத் துவளுதல் என்று கொண்டும் பொருள் உரைக்கலாம்; அவன் இவளைத் தனது கண்களால் நோக்கினால் என்ன ஆகிறது என்று அருளிச்செய்கிறார் எனலாம். இங்கு ஒரு கேள்வி எழலாம். அவன் இவளை நோக்கியது குறித்து எங்கு கூறப்பட்டுள்ளது என்று கேட்கலாம்.

"மானோய் நோக்கி" என்று அவளைப் பற்றி உரைக்கும்போதே இது புலப்படுகிறது; அதாவது மான் போன்ற பார்வை கொண்ட இவள் துவள்வது என்பது, அவன் பார்ப்பதால் மட்டுமே நிகழ்கிறது என்று ஆகிறது. அவன் இவளை நோக்கும்போது திருவாய்மொழி (9-9-4) - தெய்வவண்டு துதைந்த எம்பெண்மையம்பூ - என்பதற்கு ஏற்ப, வண்டாய் ரசம் முழுவதும் பருகப்பட்ட மலர் போன்று இவள் நிலை உள்ளது. இங்கு ஸ்ரீகுணரத்ந கோசத்தில் உள்ள ச்லோகம் (45) – புஷ்பாவளீ இவ ரஸிக ப்ரமர உபபுக்தா த்வம் தேவி நித்ய அபிநந்தயஸே முகுந்தம் - ஸ்ரீரங்கநாச்சியாரே! உயர்ந்த மலர்மாலை போன்றுள்ள நீ உனது நாயகனான ஸ்ரீரங்கநாதன் என்னும் வண்டால் எப்போதும் அனுபவிக்கப்பட்டபடி உள்ளாய்; இப்படியாக அவனை எப்போதும் மகிழவைத்தபடி உள்ளாய் - என்பதை ஒப்பு நோக்குக.

வ்யாக்யானம் - (மார்பிற்கொண்டாய் மாதவா) மாம்பழத்தோடு ஒரு ஸம்பந்தமின்றிக்கே யிருக்கச்செய்தே அப்பேரை தரிக்குமாபோலேயிறே இவனையொழிய ஸ்ரீமான் என்னும் பேரை தரிக்கிறவர்கள். அங்ஙனன்றிக்கே, "விஷ்ணு வக்ஷஸ்ஸ்தலஸ்தயா" என்கிறபடியே, அவள் திருமார்பிலே நித்யவாஸம் பண்ணுகையாலே "மாதவன்" என்னும் திருநாமம் உடையவனே.

விளக்கம் - (மார்பிற்கொண்டாய் மாதவா) - மாம்பழத்துடன் எந்தவிதமான தொடர்பும் இல்லாத ஒரு பூச்சியை மாம்பழஉண்ணி என்று அழைப்பது வழக்கம் ஆகும். இது போன்று "ஸ்ரீ" என்பவளான பெரியபிராட்டியுடன் எந்தவிதமான தொடர்பும் அற்ற சிலரை "ஸ்ரீமான்" என்று கூறுவர். இவர்கள் போன்று அல்லாமல், எப்போதும் அவளைத் தனது திருமார்பில் தரித்தபடி உள்ளவன் என்பதால் மாதவன் என்றார். அல்லது ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-9-104) – விஷ்ணு வக்ஷஸ்ஸ்தலஸ்தயா - விஷ்ணுவின் திருமார்பில் உள்ள தயையாகிய மஹாலக்ஷ்மி - என்று கூறுவதற்கு ஏற்ப, அவள் நித்யவாசம் செய்யும் இடமாக இவனது திருமார்பு உள்ளதால் "மாதவன்" என்ற திருநாமம் கொண்டவனே என்கிறார்.

வ்யாக்யானம் - (கூனே சிதைய) அவள் அருகின்றிக்கேயொழியவானால்தான் உன்னைக் கிட்டினார்க்கு அவத்யம் வருமோ? "கூன் சிதைய" என்றது இவளுடைய அல்லாத அவயவங்களுக்கு ஒரு வாட்டம் வாராதபடி நிமிர்த்த அத்தைப்பற்ற. வநவாஸஹேது பூதையான குப்ஜையைச் சொல்லிற்றாய், பால்யத்திலே சுண்டுவிற்கொண்டு திரியா

நிற்கப் பெருமாள் லீலாரஸம் அநுபவித்தார் என்று உண்டு; அத்தைப்பற்றிச் சொல்லிற்றாகவுமாம். அப்போது "கோவிந்தா" என்கிறது பூமிக்கு ரக்ஷகனானவன் என்கிறது.

விளக்கம் - (கூனே சிதைய) - அந்த மஹாலக்ஷ்மி அருகில் இல்லாமல் அகன்று சென்றால் மட்டுமே உன்னை அடைந்தார்க்குத் துன்பம் உண்டாகுமோ? " கூன் சிதைய" என்பதன் மூலம் இவளது (மதுரா நகரத்தில் க்ருஷ்ணனை சந்தித்த குப்ஜை என்னும் கூனி - இவள் கம்சனுக்கு மாலை தொடுப்பவள்; அல்லது இராமாயணத்தில் வருகின்ற மந்தரை என்னும் கூனி - இவள் கைகேயியின் வேலைக்காரி ஆவாள்), சரியாக இல்லாதபடி இருக்கின்ற உறுப்புகளுக்கு எந்தவிதமான துன்பமும் நேராதபடி நிமிர்த்தியதை உரைக்கிறார். இங்கு க்ருஷ்ணனாக வந்தபோது குப்ஜையின் கூன் நிமிர்த்தப்பட்டதை உரைப்பதாகக் கொண்டால், "உண்டைவில் நிறத்தில்" என்பதற்கு, "சுண்டுவில்லை நிமிர்த்துவது போன்று மிகவும் எளிதாக குப்ஜையின் கூன் விழுந்த முதுகை நிமிர்த்தினான்" என்று கொள்க. இங்கு இராமனாக வந்து மந்தரையின் கூன் மீது வில்லால் அடித்ததை உரைப்பதாகக் கொண்டால் "உண்டைவில் நிறத்தில்" என்பதற்கு "அவள் கூன் துன்பப்படும்படியாக மர்மத்திலே அடித்தாய்" என்று கொள்க. இங்கு இராமனாக வந்துபோது உள்ள நிகழ்வைக் கூறுவதாக இருந்தால் "கோவிந்தா" என்பதற்குப் பதில் "காகுத்தா" என்று அல்லவோ கூறவேண்டும் என்ற கேள்வி எழலாம். இங்கு "கோ" என்றால் பூமியைக் குறிப்பதாகக் கொண்டு, "பூமியின் ரக்ஷகனே" என்று இராமனை உரைப்பதாகக் கொள்க.

வ்யாக்யானம் - அன்றிக்கே, தீம்புசேருவது க்ருஷ்ணனுக்கேயாகையாலே "போம்பழியெல்லாம் அமணன் தலையோடே" என்னுமாபோலே, அவன் தலையில் ஏறிட்டுச்சொல்லுதல்; அதுவுமன்றிக்கே, சாந்திட்ட கூனிதன்னையே சொல்லிற்றாய், வருத்தமறச் சுண்டுவில் நிமிர்க்குமாபோலே நிமிர்த்தவன் என்னுதல். தெறிக்கையாகிறது - க்ரியையாய், நிமிர்த்தாய் என்றபடி. க்ருஷ்ணனுக்கு வில்லுண்டோ பின்னை? என்னில்; வேலிக்கோல் வெட்டி விளையாடு வில்லேற்றித் திரியுமிறே. "தருமம் அறியாக் குறும்பனைத் தன் கைச்சார்ங்கமதுவே போல்" என்று வில்லுண்டாகவே அருளிச்செய்து வைத்தாளிறே. (கோவிந்தா) திர்யக்குகளோடும் பொருந்துமவனல்லையோ நீ?

விளக்கம் - அல்லது, அனைத்து உயர்ந்த குணங்களையும் தன்னிடம் கொண்ட இராமனைப் பற்றி உரைக்கும்போது, "மந்தரையைத் துன்புறுத்தினான்" என்று கூற மனம் இல்லாமல், அனைத்து வம்புகளையும் தன் மீது தானாகவே ஏற்றிக்கொள்வதற்காகவே வந்த க்ருஷ்ணன் மீது, இந்தப் பொல்லாத செயலையும் ஏற்றிக் கூறிவிடலாம் என்பதால் "கோவிந்தா" என்று உரைத்தாகக் கொள்க. இங்கு "போம்பழியெல்லாம் அமணன் தலையோடே" என்றால் என்ன? ஓர் அந்தணன் வீட்டில் திருடுவதற்காக ஒரு திருடன் அவனுடைய வீட்டின் சுவர் ஏறிக் குதிக்க முனைந்தான். ஆனால் அந்தச் சுவர் அன்றுதான் கட்டப்பட்டது என்பதால், அது சரிந்து விழ, அதில் அந்தத் திருடன் இறந்து போனான். உடனே அந்தத் திருடனின் உறவினர்கள் அந்தணனின் வீட்டிற்கு வந்து, "அவன் இறந்து போனதற்காக நீ நஷ்டஈடு தரவேண்டும்", என்றனர். இதனை அந்தணன் ஏற்காத காரணத்தினால் இரு பிரிவினரும் அரசசபைக்குச் சென்றனர். அந்த அரசன் மூடனாக இருந்த காரணத்தினால் அவன் அந்த அந்தணனிடம், "நீ சுவரை ஈரமாக வைத்த காரணத்தினால்தான் அவன் இறந்தான். ஆகவே நீ நஷ்டஈடு அளித்தே தீரவேண்டும்", என்றான். உடனே அந்தணன், "இது பற்றி எனக்கு ஏதும் தெரியாது, அந்தச் சுவரை அமைத்த கூலிக்காரனைக் கேட்கவேண்டும்", என்றான். அந்தக் கூலிக்காரனை அழைத்து அவனிடம், "நீதானே ஈரமான சுவர் அமைத்தாய், ஆகவே நீயே நஷ்டஈடு அளிக்கவேண்டும்", என்று அரசன் கூறினான். உடனே அந்தக் கூலிக்காரன், "அந்தச் சுவரில் தண்ணீர் விட்ட சித்தாள் அதிகமான தண்ணீரை விட்டான் போலும். ஆக இதில், நான் செய்வது என்ன", என்றான். உடனே தண்ணீர்க்காரணை அழைத்துக் கேட்க அவன், "எனக்குப் பானையை அளித்த குயவன் பெரியபானையாக அளித்துவிட்டான். அதனால்தான் அதிகமான தண்ணீர் சேர்ந்தது", என்றான். உடனே குயவனை அழைத்துக் கேட்க அவன், "நான் பானை செய்யும்போது ஒரு தாசி அங்கும்இங்கும் அலைந்தபடி இருந்தாள். அவளைப் பார்த்தபடியே நான் பானை செய்ததால் அது பெரிதாகிவிட்டது", என்றான். அடுத்து தாசியை அழைத்துக் கேட்க அவள், "என்னால் தவறு ஏற்படவில்லை. என்னுடைய துணியை நான் வண்ணான் ஒருவனிடம் சலவைக்கு அனுப்பினேன். அவன் அதனைச் சரியான நேரத்தில் தராத காரணத்தினால் அங்குமிங்கும் அலைந்தபடி இருந்தேன்", என்றாள். அடுத்து வண்ணானை அழைத்துக் கேட்க அவன், "என்னால் அல்ல, நான் துணி துவைக்கின்ற கல்லில் வஸ்திரம் அணியாத திகம்பரச்சாமி ஒருவன் அமர்ந்துகொண்டு, அங்கிருந்து எழ மறுத்தான். அவன் சென்ற பின்னரே நான் துணிகளைத் துவைத்தேன். இதனால் தாமதம் ஆனது", என்றான். இறுதியாக அந்தத் திகம்பரச்சாமியைத் தேடிக்கொண்டு வந்து, "நீதான் இத்தனைக்கும் காரணம், ஆகவே

நஷ்டஈடு தரவேண்டும்", என்று அரசன் கூறினான். அவன் மௌனச்சாமியாராக இருந்ததால் ஏதும் பேசாமல் நிற்க அரசன், "இவன் உண்மைக்குச் சாட்சி இல்லை என்று உள்ளான். ஆகவே இவன்தான் இத்தனைக்கும் காரணம்", என்று தீர்ப்பு கூறி அவன் தலையை அறுத்தான். ஆக பழி ஓர் இடம், பாவம் ஓர் இடம் என்பது போன்று க்ருஷ்ணன் மீது அனைத்து வம்புகளையும் ஏற்றுகின்றனர் என்று கருத்து. இங்கு க்ருஷ்ணனுக்குச் சாந்து அளித்த குப்ஜை என்ற கூனியையே கூறினார் என்று கொண்டு, அவளது துன்பம் நீங்கும்படியாச் சுண்டுவில்லை நிமிர்த்துவது போன்று எளிதாக நிமிர்த்தினான் என்று கொள்க. தெறிந்தாய் என்பது நிமிர்ந்தாய் என்பதாகக் கொள்க. ஆனால் திருப்பாவையில் (1) - கூற்வேல் கொடுந்தொழிலன் – என்று கூறுவதற்கு ஏற்ப உள்ள நந்தகோபரின் புத்திரனாகிய க்ருஷ்ணனுக்கு வில் உண்டோ என்ற சந்தேகத்திற்கான விடையை அருளிச்செய்கிறார். பெரியாழ்வார் திருமொழி (2-6-1) – வேலிக்கோல் வெட்டி - வேலிகளில் கட்டப்பட்ட குச்சிகளை வளைத்துக் கட்டி, அவற்றையே வில் போன்று செய்து விளையாடியவன் – என்பதால் க்ருஷ்ணனிடம் வில் உண்டு என்றாகிறது. அல்லது நாச்சியார் திருமொழியில் (14-6) - தருமம் அறியாக் குறும்பனைத் தன் கைச்சார்ங்கமதுவே போல் – என்று அவன் திருக்கரத்தில் வில் உண்டு என்பதாகவே அருளிச்செய்தாள் அல்லவோ? (கோவிந்தா) - பசுக்களுடன் சேர்ந்து நிற்பவன் அல்லவோ?

வ்யாக்யானம் - (வானார் சோதிமணிவண்ணா) அதுக்கிடக்க; "பக்தாநாம்" என்னும் வடிவு படைத்தவனல்லையோ? குப்பியில் மாணிக்கம்போலே த்ரிபாத்விபூதியிலும் அடங்காதே விம்மும்படியாயிற்று வடிவில் புகரிருப்பது. (மதுசூதா) அங்வடிவை அநுபவிப்பார்க்கு வரும் விரோதியைப் போக்குவாயும் நீயன்றோ; மதுவாகிற அஸுரனைப் போக்கினாற் போலே என் விரோதியைப் போக்கினவனே! (உன் தேனே மலரும் திருப்பாதம்) இவை ஒன்றுமில்லையானாலும் அடியில் உன் போக்யதையைப் பார்த்தால்தான் விடப்போமோ? "விஷ்ணோ: பதே பரமே மத்வ உத்ஸ:" என்னக்கடவதிறே; இவர், பெருநிலங்கடந்த நல்லடிப்போதிறே ஆசைப்பட்டது; இவர் ஆசைப்பட்டபடியே "திசைகள் எல்லாம் திருவடியால் தாயோன்" என்று அத்திருவடிகளையே காட்டிச்சேரவிட்டான். "உன் தேனே மலரும் திருப்பாதம்" என்று அத்தையே அபேக்ஷிக்கிறார். (சேருமாறு வினையேனே) கலத்திலிட்ட சோற்றை விலக்குவாரைப்போலே, நீ வந்து கிட்டக்கொள்ள அகலுகைக்கடியான பாபத்தைப் பண்ணின நான் சேருமாறு அருளவேணும். தாம் இசைந்த பின்பும் கிடையாமையாலே "வினையேன்" என்கிறார்.

விளக்கம் - (வானார் சோதிமணிவண்ணா) - விண்ணில் பூர்ணமாக உள்ள தேஜஸ் மற்றும் காண்பவர் களைப்பை நீக்கும் நிறம் ஆகியவற்றைக் கொண்டவனே! இது தவிர ஜிதந்தே ஸ்தோத்ரம் (5) - பக்தாநாம் – அடியார்களுக்காகவே வடிவம் கொண்டவன் - என்பதற்கு ஏற்ப உள்ளவன் அல்லவோ? பொன்பாத்திரத்தில் வைக்கப்பட்ட மாணிக்கத்தின் ஒளி எப்படி அந்தப் பாத்திரத்தில் அடங்காமல் உள்ளதோ, அது போன்று உனது வடிவம் மூன்று பாதங்களாக உள்ள உலகங்களில் அடங்காமல், ஆசை காரணமாக ஓங்கி அடங்காமல் நிற்கிறது. (மதுசூதா) - இப்படியாக உள்ள உனது வடிவத்தை கண்டு அகன்று செல்லாமல், அதனை அனுபவித்தபடி நிற்பவர்களின் விரோதிகளைப் போக்குபவனாக உள்ளவன் நீயே அல்லவோ? மது என்ற அசுரனை அழித்தது போன்று, "உன்னை விட்டு அகலவேண்டும்" என்று தோன்றிய எனது எண்ணம் என்னும் விரோதியை அழித்தவனே! (உன் தேனே மலரும் திருப்பாதம்) – தேன் போன்ற இனிமையான திருவடிகள் அல்லது தேன் போன்ற இனிய நீரைக் கொண்ட கங்கையின் வெள்ளத்தைக் கொண்ட திருவடிகள். இந்த இரண்டுமே இல்லையென்றாலும் உனது இனிமையைக் கண்ட பின்னர் விடுவோமோ? இனிமைக்கு ப்ரமாணம் என்ன என்றால் விஷ்ணுஸூக்தம் - விஷ்ணோ: பதே பரமே மத்வ உத்ஸ: – த்ரிவிக்ரமனாக நின்ற ஸர்வேச்வரனின் திருவடிகளில் இருந்து அமிர்தம் வெள்ளமாகப் பாய்கிறது – என்பதே ஆகும். இங்கு திடீரென்று த்ரிவிக்ரம அவதாரம் பற்றி உரைப்பது ஏன்? இவர் திருவாய்மொழி (1-3-10) – பெருநிலம் - என்பதற்கு ஏற்ப அவனது திருவடிகள் மீது அல்லவோ ஆசை வைத்தார்? இவர் விரும்பியபடியே "திசைகள் எல்லாம் திருவடியால் தாயோன்" என்பதற்கு ஏற்றபடி, தனது திருவடிகளையே இவருக்குக் காண்பித்து, தன்னை விட்டு அகலாதபடி, தன்னிடம் சேரும்படிச் செய்துகொண்டான். "உன் தேனே மலரும் திருப்பாதம்" என்று அதனையே விரும்புகிறார். (சேருமாறு வினையேனே) - பாத்திரத்தில் இடப்பட்ட உணவைத் தள்ளுபவர்கள் போன்று, நீயே வலியவந்து என்னை அடைகிறாய்; அதனை ஏற்காமல் உன்னை விட்டு நான் அகல எண்ணுவது என்பது, எனது பாவங்களின் காரணமாகவே ஆகும்; இத்தகைய பாவங்களை நான் என்னிடத்தில் வைத்துள்ளபோதும், உன்னை அடையும்படிச் செய்யவேண்டும். இப்படியாகத் தான் அகல்வதில்லை என்று முடிவு செய்த பின்னரும் அவனது திருவடிகள் கிட்டவில்லை என்பதால் "வினையேன்" என்கிறார்.

1-5-6. வினையேன் வினைதீர் மருந்தானாய் விண்ணோர் தலைவா கேசவா
மனைசேராயர் குலமுதலே மாமாயனே மாதவா
சினையேய் தழைய மராமரங்களேழு மெய்தாய் சிரீதரா
இனியா யினைய பெயரினா யென்று நைவ னடியேனே.

பொருள் – தீயவினைகள் நிறைந்தவனாகிய எனது தீயவினைகள் அனைத்தையும் போக்கவல்ல மருந்தாக உள்ளவனே! நித்யஸூரிகளின் தலைவனே! நித்யஸூரிகள் போன்று அல்லாமல், உன்னிடம் பலனை எதிர்பார்த்து நிற்பவர்களான நான்முகன் மற்றும் ருத்திரன் ஆகியவர்களின் இருப்புக்குக் காரணமாக உள்ளதால் கேசவன் எனப்படுபவனே! மனையோடு சேர்ந்த ஆயர்பாடியின் தலைவனே! மிகவும் வியப்பை ஏற்படுத்தும்படியான பல செய்கைகள் கொண்டவனே! மஹாலக்ஷ்மியை எப்போதும் கொண்டுள்ள காரணத்தால் மாதவன் எனப்படுபவனே! கிளைகள் பலவும், அவற்றில் தழைகள் பலவும் என்றிருந்த மராமரங்கள் ஏழினையும் ஒரே அம்பினால் எய்தவனே! இந்த வீரத்தின் காரணமாக வீரலக்ஷ்மி என்ற ஐச்வர்யத்தை தரித்துள்ளவனே! இப்படியாகப் பல ஸ்வபாவங்கள் கொண்டவனே! பல திருநாமங்கள் உடையவனே! இப்படியாகக் கூறியபடியே உன்னுடன் எப்போதும் தொடர்புடைய நான் உருகி நிற்பேன்.

அவதாரிகை - இவர் ஆபிமுக்யம் பண்ணினவாறே, அவன் அல்பம் தாழ்த்தான்; இவர் என்னை இழந்தாய் கிடாய் என்கிறார்.

விளக்கம் – கடந்த பாசுரத்தில் இவர் "கைங்கர்யம் செய்வேன்" போன்றதான சொற்களைக் கூறியது கேட்ட ஸர்வேச்வரன் தனது நிலையில் இருந்து சற்றே தாழ்ந்து வந்தான். ஆழ்வாரோ, "என்னை நீ இழந்தாயே", என்கிறார்.

வ்யாக்யானம் - (வினையேன் இத்யாதி) உன்னைப் பார்த்தல், என்னைப் பார்த்தல் செய்ய வேண்டாவோ? (வினையேன் வினை) சேதநர் எல்லார்க்குமுள்ள வினைபோலல்ல வாயிற்று இவரது; "பகவத்ஸம்ச்லேஷம் பெறவேணும்" என்றிறே அவர்கள் இருப்பது; அகலநினைக்கிற இதுள்ளது இவர் ஒருவர்க்குமிறே. (தீர்மருந்தானாய்) "நான் கிட்டுகை அத்தலைக்கு அவத்யம்" என்று அகலுகைக்கு அடியான வினையைப் போக்கும் மருந்தானவனே! வினையைப் போக்கிற்று எங்குநின்றும் வந்து? என்னில்; (விண்ணோர் தலைவா) நித்யாநுபவம் பண்ணாநிற்கச்செய்தே, "நான் அயோக்யன்" என்று அகல வேண்டாதார்க்கு நியந்தாவாயிருக்கும் இருப்பில் நின்றும் வந்தாயிற்று. (கேசவா) அதுக்கு

இவ்வருகே ஒரு பயணம் எடுத்துவிட்டபடி. "ஆவாம் தவாங்கே ஸம்பூதௌ தஸ்மாத் கேசவ நாமவாந்" என்கிறபடியே. (மனைசேராயர் குலமுதலே) அந்நிலையில் நின்றும் இவ்வருகே போந்து கிட்டினபடி. பஞ்சலக்ஷம் குடியாகையாலே, மனையோடு மனை சேர்ந்த என்னுதல்; ஆயர்மனைகளிலே வந்து சேர்ந்து, அவர்கள் குலத்துக்கு முதலானவன் என்னுதல். அன்றிக்கே, நாலு மூங்கிலைக் கொண்டுபோய், தங்குமிடத்திலே வளைத்துத் தங்குகையாலே சொல்லிற்றாதல். (மாமாயனே) இடைக்குலத்திலே வந்து பிறந்து, அவர்கள் ஸ்பர்சித்த த்ரவ்யமே தாரகமாய், அதுதான் களவுகண்டு புஜிக்கும்படியாய், அதுதான் தலைக்கட்டமாட்டாதே வாயதுகையதாக அகப்பட்டுக் கட்டுண்டு அடியுண்டு நிற்கும் நிலை. இவ்வெளிமைக்கு அடி சொல்லுகிறது, (மாதவா) அவளோட்டைச் சேர்த்தி.

விளக்கம் - (வினையேன் இத்யாதி) – "உன்னைப்பார்த்தல்" என்பது "மருந்தானாய்" என்று தொடங்கி, "இனையாய்" என்பது முடிய உள்ள பதங்களைக் குறித்து உரைப்பதாகும். அதாவது எனது தாழ்மையை எண்ணி உன்னை விட்டு அகன்று செல்ல முயன்ற எனது வினையைப் போக்கியவனே என்று கருத்து. "என்னைப்பார்த்தல்" என்பது, வேறு புகலிடம் இல்லாதவனாகிய என்னை என்று கருத்து. "வினையேன்" என்பதன் மூலம் அஜ்ஞானமும், எந்தத் திறனும் அற்றவன் என்பதும் கூறப்பட்டது என்பதால் "என்னைப் பார்த்தல்" என்கிறார். (வினையேன்) - இவருடைய வினை என்பது மற்றவர்களின் வினை போன்று இல்லை. அவர்களின் சிந்தனை அனைத்தும் "எம்பெருமானைச் சேரவேண்டும்" என்றே உள்ளது. இவரது வினை எப்படி உள்ளது என்றால், அவனை விட்டு அகலவேண்டும் என்று அல்லவோ உள்ளது? இப்படியாக உள்ள வினை இவருக்கு மட்டுமே உள்ள்து. (தீர்மருந்தானாய்) – "நான் அவனைச் சென்று அடைந்தால், என்னைப் போன்ற ஒருவனை தனது அருகில் சேர்த்துக் கொண்டதன் காரணமாக அவனுக்குத் தாழ்வு மட்டுமே ஏற்படும்" என்று எண்ணினார். இவ்விதம் எண்ணுவதற்குக் காரணம் தன்னுடைய வினைப்பயனே ஆகும் என்கிறார். இத்தகைய வினைப்பயனை நீக்கி, அவனை அண்டும்படியாகச் செய்வதற்கு ஏற்றதான சீலகுணம் என்ற மருந்தாக உள்ளவனே என்கிறார். வினையைப் போக்குவதற்காக எங்கிருந்து வந்தான் என்ற கேள்விக்கு விடை அளிக்கிறார். (விண்ணோர் தலைவா) – தங்களுடைய தாழ்மை போன்றவற்றை எண்ணி அகல எண்ணாமல் எப்போதும், அவன் அருகில் நின்றபடி அனுபவித்துக் கொண்டுள்ள நித்யஸூரிகளின் நடுவில் இருந்து புறப்பட்டு, "நான் அயோக்யன்" என்ற எண்ணத்துடன் அகல எண்ணுகிறவர்களைத் தனது சீலகுணம் மூலம் நியமித்து, தன்னிடம் அகப்படுத்திக் கொள்ள இங்கு வந்தான். (கேசவா) - கேசவன் என்ற

பதம் நான்முகன் மற்றும் ருத்ரன் ஆகியோரைப் படைத்த ப்ரத்யும்நனைக் கூறுவதாகக் கொள்ளலாம். இதற்கு ப்ரமாணமாக ஹரிவம்சத்தில் உள்ள - ஆவாம் தவாங்கே ஸம்பூதௌ தஸ்மாத் கேசவ நாமவாந் - என்பதைக் காட்டுகிறார். இதன் பொருள் – க என்பது நான்முகனின் பெயர், அனைத்தையும் ஏவியபடி உள்ளவன் என்பதால் எனக்கு ஈசன் என்று பெயர், நாங்கள் இருவரும் உனது திருமேனியில் இருந்து தோன்றியதால் உனக்குக் கேசவன் என்ற திருநாமம் எற்பட்டது - என்பதாகும். அல்லது திருப்பாற்கடலில் சயனித்தபடி உள்ளவன் என்றும் பொருள் கொள்ளலாம். நான்முகன், ருத்ரனைப் படைக்கும் எண்ணம் கொண்டவனாகத் திருப்பாற்கடலில் சயனித்தவன். (மனைசேராயர் குலமுதலே) - அப்படிப்பட்ட இடத்தில் இருந்து இங்கே வந்து, இப்படியாகப் பல முயற்சிகளை இவன் செய்தது ஏன் என்றால், தன்னை அவனுடன் சேர்த்துக் கொள்வதற்காகவே ஆகும் என்கிறார். "மனைசேர்" என்பதற்கு ஊருக்கு விசேஷம், க்ருஷ்ணனுக்கு விசேஷம், ஆயர்களுக்கு விசேஷம் என்று மூன்று பொருள் உரைக்கலாம். குலம் என்பது மூன்று ஊரையும் வம்சத்தையும் குறிக்கும். ஐந்து லக்ஷம் குடி என்பதால் அவர்களுடைய இருப்பிடம் சேர்ந்து நின்றவனே என்றார் – இதன் மூலம் ஊர் விசேஷம் கூறப்பட்டது. அவர்களுடைய வீட்டிற்குச் சேர்தல் – இங்கு "அவதாரம் செய்து" என்று கூறாமல், "சேர்தல்" என்றதன் காரணம் என்ன? இவன் திருவதாரம் செய்தது மதுராவில் என்பதாலும், அங்கிருந்து புறப்பட்டு இங்கு வந்து சேர்ந்தான் என்பதாலும் ஆகும். எங்கு சென்றபோதிலும் அங்கு நான்கு மூங்கில்களை வளைத்துக் கட்டி, மனை அமைத்துத் தங்குவர் என்பதால் "மனைசேர் ஆயர்" என்று ஆயர்களுக்கு விசேஷமாக உரைக்கப்பட்டது. (மாமாயனே) – இப்படியாக உள்ள ஆயர்களின் வம்சத்தில் வந்து பிறந்து, அவர்கள் கைகளால் தீண்டப்பட்ட வெண்ணெய் என்பதையே தனக்கு உயிர் வாழ்வதற்கு ஏற்ற பொருளாகக் கொண்டான்; அதனையும் அவர்கள் அறியாமல் களவு செய்து உண்டான். அத்தகைய களவு என்பது பூர்த்தியாகாமல், திருடிய கையும் உண்ட வாயுமாக அகப்பட்டுக் கொண்டு, அவர்களால் கட்டுப்பட்டு, அவர்களிடம் அடி வாங்கியபடி நிற்கிறான். இப்படி இவன் எளிமையாக நின்றதன் காரணம் என்ன என்றால், (மாதவா) என்கிறார். அதாவது பெரியபிராட்டியின் சேர்த்தி காரணமாகவே ஆகும். இதன் மூலம் க்ருஷ்ணனின் விசேஷம் கூறினார்.

வ்யாக்யானம் - (சினையேய் இத்யாதி) மஹாராஜரை விச்வஸிப்பித்துக் கார்யம் செய்தபடி; சினையென்று பணை; ஏய்கை - நெருக்குகையாய், பணைகளொடு பணைகள் நெருங்கித் தழைத்து, நினைத்தபடி இலக்குக்குறிக்கவொண்ணாதபடி நின்ற மராமரங்கள்

ஏழையும் எய்தவனே! இத்தால் – ஆச்ரிதர் தன்னுடைய ரக்ஷணத்திலே, சங்கித்தால் சங்காநிராகரணம் பண்ணி ரக்ஷிக்குமவன் என்றபடி. (சிரீதரா) மராமரங்கள் எய்கைக்கு இலக்குக்குறித்து நின்றபோதை வீரலக்ஷ்மியைச் சொல்லுகிறது. (இனையாய்) ஏவம்விதமான குண சேஷ்டிதங்களை உடையவனே! (இனைய பெயரியனாய்) குணசேஷ்டிதங்களுக்கு வாசகங்களான திருநாமங்களை உடையவனே! (என்று நைவன்) "காணவேணும், கேட்கவேணும்" என்னமாட்டதே நையாநின்றேன். (அடியேனே) ஆருடைமை அழிகிறது? உடையவர்கள் தங்கள் வஸ்துவை வேணுமாகில் நோக்கிக்கொள்ளுகிறார்கள் என்கிறார். இது ஏதேனும் ஸ்வதந்ர வஸ்துவாய்ப்படுகிறதோ? பிறர்க்கு உரித்தாய் அழிகிறதோ? உன்னால் ரக்ஷிக்கவொண்ணாமே அழிகிறதோ? என்னால் ரக்ஷிக்கலாய் அழிகிறதோ?

விளக்கம் - (சினையேய் இத்யாதி) - சுக்ரீவனுக்கு நம்பிக்கை உண்டாகும்படியாகச் செய்த செயல். சினை என்றால் பணை, அதாவது கிளை. ஏய்கை என்றால் நெருங்கியபடி. கிளைகளுக்குக் கிளைகளாகப் புணர்ந்து நின்ற மரங்கள். எப்படிக் குறி வைத்து எய்தாலும், அந்தக் குறிக்குத் தப்பிவிடக்கூடியபடி நின்ற எழு மரங்களையும் எய்தவன் என்கிறார். இப்படியாக இவன் செய்வது ஏன்? இவனது அடியார்கள், "இவன் நம்மைக் காப்பாற்றுவானோ, கைவிடுவானோ" என்று தன் மீது சந்தேகம் கொண்டால், அத்தகைய சந்தேகத்தை உடனேயே தீர்த்துவைக்கும் விதமாகச் செயல்கள் செய்து காப்பவன் என்று கருத்து. (சிரீதரா) – மராமரங்கள் ஏழினையும் எய்தபோது ஏற்பட்ட வீரலக்ஷ்மியின் சேர்த்தியை உரைக்கிறார். (இனைய பெயரியனாய்) இப்படியாகப் பலவிதமான குணங்கள் நிறைந்த உனது அந்தக் குணங்கள் வெளிப்படும்படியான திருநாமங்கள் உடையவனே! (என்று நைவன்) – "செயல்களைக் காணவேண்டும், திருக்கல்யாண குணங்கள் பற்றிக் கேட்கவேண்டும்" என்று கூறவேண்டியது இருக்க, எனது பாவ வினைகளின் காரணமாக கரைந்து நிற்கிறேனே! (அடியேனே) - யாருடைய சொத்து இப்படி அழிகிறது? உன்னுடையது அல்லவோ? தங்களுடைய உடைமை பறி போகப் போகிறது என்றால், அந்த உடைமையின் உரிமையாளர்கள் பதறிவிட்டுப்போகின்றனர் என்கிறார். இப்படியாக உள்ள உயிர்கள் ஏன் அழிகின்றன - தாங்கள் சுதந்திரமானவர்கள் என்ற எண்ணத்தால் அழிகிறதா? ஸர்வேச்வரன் அன்றி மற்றவர்களுக்கு அடிமை என்று எண்ணுவதால் அழிகிறதா? நீ வந்து காக்கவில்லை என்பதால் அழிகிறதா? தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ள முயல்வதால் அழிகிறதா?

1-5-7 அடியேன் சிறிய ஞானத்தன் அறிதலார்க்கு மரியானை
கடிசேர் தண்ணத் துழாய்க்கண்ணி புனைந்தான் றன்னைக் கண்ணனை
செடியா ராக்கை யடியாரைச் சேர்தல் தீர்க்கும் திருமாலை
அடியேன் காண்பா னலற்றுவன் இதனின் மிக்கோ ரயர்வுண்டே.

பொருள் - எத்தனை ஞானம் நிரம்பியவர்களாக உள்ளபோதிலும், அவர்களாலும் அறிந்து கொள்வதற்கு மிகவும் அரியவனாக உள்ளான்; நறுமணமும், குளிர்ச்சியும் நிரம்பிய அழகான துளசிமாலைகள் அணிந்தவன்; அனைவராலும் அடையப்படும்படியாக நின்ற க்ருஷ்ணன்; தன்னைச் சரணம் என்று புகுந்தவர்களுடைய சரீரத் தொடர்பு என்பதை முற்றிலுமாக நீக்கவல்ல பெரியபிராட்டியின் நாயகன் – இப்படியாக உள்ள ஸர்வேச்வரனை, மிகவும் அற்பமான அறிவு கொண்டவனாகிய நான் காணவேண்டும் என்று இடைவிடாமல் புலம்பியபடி உள்ளேன். இப்படியும் ஒரு அறியாமை உள்ளதோ?

அவதாரிகை – "நைவன்" என்றார்; இவரை நையக்கொடுக்க மாட்டாமையாலே வந்து முகங்காட்டினான்; அவனைப் பார்த்து, "நம்மால் வரும் குணாதியமும் இவனுக்கு வேண்டா?" என்று அகலுகிறார்.

விளக்கம் – கடந்த பாசுரத்தில் "நைவன்" என்றார். ஆனால் இவர் இவ்விதம் துன்பம் அடைந்து வருவதை அவனால் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. இதனால் ஓடோடி வந்து தன்னைக் காண்பித்தான். தன்னை இவருக்குக் காண்பித்தான் என்பதற்கு என்ன ப்ரமாணம் என்றால், "அடியேன் சிறிய ஞானத்தன்" என்று இவர் அகல எண்ணுவதால், அவன் வந்து தனது திருமுகம் காட்டியிருக்கவேண்டும் என்றாகிறது. அவனைப் பார்த்த ஆழ்வார் தனது திருவுள்ளத்தில், "அயோக்யரான நம்மை தன்னிடம் சேர்த்துக் கொள்வதால் இவனுக்கு ஏற்படக்கூடிய - ஸர்வாதிகாரன் – என்ற தாழ்ச்சி ஏற்பட வேண்டாம்", என்று எண்ணி அகல்கிறார்.

வ்யாக்யானம் – (அடியேன் சிறிய ஞானத்தன்) ஸம்ஸாரிகளில் அறிவுகேடர் ஸர்வஜ்ஞர் என்னும்படிகிடீர், என் அறிவுகேடு. "அல்லேன்" என்று அகலுகிற இவர் "அடியேன்" என்கிறது வாஸனையாலே; அன்றிக்கே "அடியேன்" என்கிறது அடிமைக்கு இசைந்தன்று; ஜ்ஞாநாநந்தங்களோபாதி நீரூபகமாக சேஷத்வத்தை ப்ரதிபத்தி பண்ணியிருக்கையாலே, "அஹம்" என்றவோபாதி "அடியேன்" என்கிறார். (சிறிய ஞானத்தன்) அத்யல்ப

ஜ்ஞாநத்தையுடையவன். (அறிதலார்க்கும் அரியானை) எத்தனையேனும் அதிசயத ஜ்ஞாநராயிருப்பார்க்கும் அறியப்போகாதவனாயிற்று அவன்; ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனான தனக்கும் அறியப்போகாது; தனக்கும் தன் தன்மை அறிவரியானிறே. தம: ப்ரகாசங்களுக்குள்ள சேர்த்திபோருங்கிடீர் எனக்கு அவனுக்கும். (கடிசேர்) அறிவரிய வஸ்துவுக்கு அடையாளம் திருத்துழாய்மாலை; நாட்செல்ல நாட்செல்ல, பரிமளமேறி வாரா நின்றுள்ள திருத்துழாய் மாலையைப் புனைந்தவனை. (கண்ணனை) அறிவரியனாயிருந்துவைத்து, இடையர்க்கும் இடைச்சிகளுக்கும் தன்னை எளியனாக்கி வைத்தவனை.

விளக்கம் – (அடியேன் சிறிய ஞானத்தன்) - ஸம்ஸாரத்தில் உள்ளவர்களில் மிகவும் அறிவற்ற நிலையில் உள்ளவர்களைப் பார்த்து, "இவர்கள் அனைத்தும் அறிந்தவர்கள்" என்று நான் கூறும்படியாக எனது அறிவின்மை உள்ளது. கடந்த சில பாசுரங்களில் அவனுக்கு ஏற்ற கைங்கர்யம் செய்யத் தகுதி பெற்றவன் அல்லன் என்று தன்னைக் கூறிக் கொண்டு, அவனை விட்டு அகல முயன்றார்; அப்படி உள்ளபோது "அடியேன்" என்று தன்னைக் கூறிக் கொள்வது எப்படிப் பொருந்தும் என்ற கேள்விக்கு விடை அளிக்கிறார். இதற்கு இரண்டுவிதமான சமாதானம் உரைக்கப்படுகிறது. அடிமையாக இருப்பதற்குத் தனக்கு எந்தவிதமான தகுதியும் இல்லை என்றபோதிலும், நீண்ட பிறவிகளாக தொடர்ந்து வருகின்ற வாஸனை காரணமாக இவ்விதம் உரைத்தார் என்று ஒரு சமாதானம் கொள்க. அடுத்த சமாதானம் - அடியேன் என்று பதமானது இங்கு அடிமைத்தொழில் செய்யும் தகுதி கொண்டவன் என்ற பொருளில் கூறப்படவில்லை; ஜீவனுக்கு ஞானம், ஆனந்தம் போன்ற குணங்கள் இருப்பது போன்று, சேஷத்வன் என்பதான ஒரு குணமும் உள்ளதை இவர் அறிந்தவர் என்பதால் "நான்" என்பதையே "அடியேன்" என்றார். (சிறிய ஞானத்தன்) - மிகவும் அற்பமான ஞானத்தை உடையவன். (அறிதலார்க்கும் அரியானை) - அனைவராலும் வியக்கும்படியான ஞானத்தை ஒருவர் கொண்டிருக்கக்கூடும்; அத்தகைய ஒருவராலும் அறிய இயலாதவன் ஆவான். அனைத்தும் அறிந்தவன் என்றபோதிலும், தன்னைப் பற்றி தானே முழுவதுமாக அறியாதவன். திருவாய்மொழி (8-4-6) – தனக்கும் தன் தன்மை அறிவு அறியான் - என்றது காண்க. தான் அவனிடம் சேர்தல் என்பது இருளுக்கும் ஒளிக்கும் உள்ள சேர்த்தி போன்றாகிவிடும் என்கிறார். தாழ்ந்த விஷயங்கள் அனைத்தாலும் அளவிட இயலாதவனாக நான் உள்ளேன்; உயர்ந்த ஞானம் கொண்ட பலராலும் அளவிட இயலாதபடி அவன் உள்ளான். (கடிசேர்) - நாட்கள் செல்லச்செல்ல

அதிகமான நறுமணம் வீசுவதான துளசிமாலையை அணிந்தவன். யாராலும் அறிய இயலாத அந்த வஸ்துவை அடையாளம் காண்பிக்கக்கூடியது எது என்றால், இந்த துளசி மாலையே என்கிறார். (கண்ணனை) – அனைவராலும் அறிவதற்கு மிகவும் அரியவனாக உள்ளபோதிலும் இடையர்களுக்கும், இடைச்சிகளுக்கும் தன்னை மிகவும் எளியவனாக ஆக்கிக்கொண்டவன்.

வ்யாக்யானம் – (செடியார் இத்யாதி) செடி – பாபம். ஆர்தல் – மிகுதி; பாபம் மிக்கிருக்கிற சரீரம். நோயெலாம் பெய்ததோராக்கையிறே. "ஜராமரண மோக்ஷாய மாம் ஆச்ரித்ய யதந்தியே" என்று, அவனையே உபாயமாகப் பற்றி, தூறு மண்டின சரீரத்தை அறுத்துக் கொள்ளும் அடியாருண்டு – கேவலர். அவர்களுக்கு அத்தைத் தவிர்த்துக் கொடுக்கும் ஸ்ரீமானை. அவர்கள் பின்னை அடியாரோ? என்னில் "அடியாராவார் அவர்களே" என்றிருக்கிறார். என்றிய? என்னில் சேஷிக்கு அதிசயத்தை விளைக்குமவர்களிறே சேஷ பூதராகிறார்; என்னைப்போலே கிட்டி அவனுக்கு அவத்யத்தை விளைக்கப்பாராதே, ஸம்ஸார ஸம்பந்தத்தை அறுத்துக்கொண்டு கடக்க நிற்கிறவர்களிறே.

விளக்கம் - (செடியார் இத்யாதி) - செடி என்றால் பாவம் என்று பொருள். ஆர்தல் என்றால் மிகுதியான என்று பொருள். அதாவது பாவங்கள் மிகுதியாக உள்ள சரீரம். சரீரத்தில் உள்ள பாவங்களை நம்மால் காண இயலாது அல்லவோ? எனவே பாவங்களின் விளைவாக உண்டாகக்கூடிய நோய் என்பதை உணர்ந்து, நோய் மிகுதியாக உள்ள சரீரம் என்று கொள்க. இதனைப் பெரியதிருமொழி (9-7-7) - நோயெலாம் பெய்தது ஓர் ஆக்கை - என்றது காண்க. நோய் அனைத்தையும் தன்னுடன் சேர்த்துக் கொண்ட சரீரம். அடுத்து மற்றொரு பொருள் உரைக்கிறார். செடி என்றால் தூறு என்று பொருள் ஆகும். தூறு மண்டுதல் என்றால் அவித்யை போன்றவை ஆகும். தூறு மண்டுதல் - மாறிமாறி உண்டாகின்ற பல பிறவிகள். கீதை (7-25) – ஜராமரண மோக்ஷாய மாம் ஆச்ரித்ய யதந்தியே - வயோதிகம் மற்றும் மரணம் ஆகியவற்றிலிருந்து விடுபடுவதற்காக என்னை அண்டி நிற்கின்றனர் - என்று கூறியது போன்று, அவனைச் சரணம் அடைந்து தங்களது சரீரத்தை அறுத்துக் கொள்பவர்கள் உண்டு. இவர்களைக் கைவல்யாதிகள் என்பர். அவர்களுக்கு அந்தச் சரீரத்தைத் தவிர்த்துக் கொடுக்கின்ற ஸ்ரீமாந். ஆனால் அவனது கைங்கர்யத்தை எண்ணாமல், தங்களைப் பற்றி எண்ணும் அவர்களை "அடியார்கள்" என்பது சரியா என்றால், தங்களது எஜமானனுக்கு மேன்மையை ஏற்படுத்துவதால்

அடியார்களே ஆவர் என்று கருத்து. அவர்கள் சிறந்தவர்கள் என்று ஏன் கூறவேண்டும் என்ற கேள்விக்கு விடை அளிக்கிறார். "என்னைப் போன்று அவனை அண்டி நின்று அவனுக்குத் தாழ்வை ஏற்படுத்தாமல், தங்களது ஸம்ஸார தொடர்பை மட்டும் அறுத்தால் போதும் என்று எண்ணியபடி உள்ளதால், என்னை விட அவர்கள் உயர்ந்தவர்கள்", என்கிறார்.

வ்யாக்யானம் - உமக்கு இப்போது வந்ததென்? என்ன (அடியேன் காண்பானலற்றுவன்) "அடியேன்" என்பது "காணவேணும்" என்பதாகாநின்றேன் நான். (இதனின் மிக்கோர் அயர்வுண்டே) ஸம்ஸாரியான நாளில் அறிவே நன்றாயிருந்ததிறே. அது நன்றானபடி என்னென்னில்; அப்போது கடக்கநின்று பகவத் தத்வத்தைக் குறியழியாமே வைத்தேன்; இப்போதன்றோ நான் கிட்டி அழிக்கப்பார்த்தது; இதிற்காட்டில் அறிவுகேடு உண்டோ?

விளக்கம் - இவரது நிலையைக் கண்ட ஸர்வேச்வரன், "சரி, உமக்கு இப்போது நான் செய்ய வேண்டுவது என்ன?", என்று கேட்பதாகத் திருவுள்ளம் கொண்டு, மேலே தொடர்கிறார். (அடியேன் காண்பானலற்றுவன்) – அடியேன் என்று புலம்பியபடி நிற்பேன், உன்னைக்காணவேண்டும் என்று புலம்புவேன் என்றபடி. அதாவது எனது தொடர்பு என்பது அவனுக்குத் தாழ்வை உண்டாக்கிவிடும் என்ற நிலை உள்ளபோதிலும், அவனுடன் ஸம்பந்தம் வேண்டும் என்று இருப்பேன். நான் நோக்கினால் கூட அவனுக்குத் தாழ்வு ஏற்படும் என்னும்போது, அவனைக் காணவேண்டும் என்கிறேன். இதனைக் காட்டிலும் அறிவுக்கேடு ஏதேனும் உண்டோ என்கிறார். (இதனின் மிக்கோர் அயர்வுண்டே) - ஸம்ஸாரத்தில் உள்ளவர்கள் உலகவிஷயங்களை மட்டுமே நாடியபடி உள்ளபோது, இத்தகைய அறிவு ஏற்பட்டது என்பது நல்லதுதானே என்று கேட்கலாம். அப்படி அல்ல, ஸம்ஸாரிகளில் ஒருவராக நின்றபோது, அறிவு நன்றாகவே இருந்தது எனலாம். எப்படி எனில், அப்போது பகவத் விஷயத்தை நான் இலக்காக்கிக் கொண்டு, அவனுக்கு என்னுடன் ஸம்பந்தம் ஏற்படுத்தி, அவனுக்குத் தாழ்ச்சி ஏற்படும்படிச் செய்யவில்லை. ஆனால் இப்போது அவனை அண்டி நின்று அவனை அழிக்கப் பார்க்கிறேன். இதனைக் காட்டிலும் அறிவுக்குக் கேடு வேறு உள்ளதோ என்று நைச்சியாநுஸந்தானத்தின் எல்லைக்கே செல்கிறார்.

1-5-8 உண்டா யுலகேழ் முன்னமே யுமிழ்ந்து மாயை யாற்புக்கு
உண்டாய் வெண்ணெய் சிறுமனிச ருவலை யாக்கை நிலையெய்தி
மண்டான் சோர்ந்த துண்டேலும் மனிசர்க் காகும் பீர்சிறிதும்
அண்டா வண்ணம் மண்கரைய நெய்யூண் மருந்தோ மாயோனே!

பொருள் – அனைவருடனும், எப்போதும், அனைத்துவிதங்களிலும் கலந்து பழகியபடி உள்ளபோதிலும் எந்தவிதமான தாழ்மையும் உண்டாகாதபடி உள்ளவனே! முன்பு ஒரு காலத்தில் அனைத்து உலகங்களையும் உட்கொண்டாய். அதன் பின்னர் அவற்றை வெளியே உமிழ்ந்தாய். அற்பமாகப் பெறுகின்ற தாழ்வான இந்த மனித சரீரத்தின் நிலையை நீ உனது லீலையால் பெற்றுக்கொண்டு, மாயமான விளையாட்டுக்களால் ஆயர்பாடியில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் புகுந்து, அங்கிருந்த வெண்ணெயை உண்டாய். நீ முன்பு உட்கொண்ட மண்ணின் சிறுபகுதிகள் இன்னமும் உனது திருவயிற்றில் தங்கியிருந்து, சிறிய குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய சோகை என்று நோய் சற்றும் ஏற்படாதபடி, அந்த மண்ணானது கரைந்து போவதற்காக நீ உட்கொண்ட வெண்ணெய் சரியான மருந்து ஆகாது அல்லவோ?

அவதாரிகை - இவர் இப்படி அகலப்புக்கவாறே, "இவர் துணிவு பொல்லாதாயிருந்தது; இவரைப் பொருந்தவிடவேணும்" என்று பார்த்து, "வாரீர் ஆழ்வீர்! திருவாய்ப்பாடியில் வ்ருந்தாந்தங் கேட்டறியீரோ?" என்ன, "அடியேன் அறியேன்" என்றார், அது கேட்கையிலுண்டான ச்ரத்தையாலும், "அவன்தான் அருளிச்செய்யக் கேட்கவேணும்" என்னும் ச்ரத்தையாலுமாக; "முன்பொரு காலத்திலே பூமியை எடுத்து வயிற்றிலே வைத்தோம்; பின்பு அது தன்னை வெளிநாடு காண உமிழ்ந்தோம்; அதில் ஏதேனும் சேஷித்ததுண்டாகக் கருதி, திருவாய்ப்பாடியில் வெண்ணெயை விழுங்கினோம்காணும்" என்ன, "அது இதுக்குப் பரிஹாரமாகச் செய்தாயோ? அது ஒரு கால விசேஷத்திலே; இது ஒரு காலவிசேஷத்திலே" என்ன, "ஆனால் நாம் இது ஏதுக்காகச் செய்தோம்?" என்ன, "ஆச்ரித ஸ்பர்சமுள்ள த்ரவ்யம் உனக்கு தாரகமாகையாலே செய்தாயத்தனை" என்ன; "ஆனால், அவ்வெண்ணெயோபாதி உம்மோட்டை ஸம்ச்லேஷமும் நமக்கு தாரகங் காணும்; ஆன பின்பு நீர் உம்மைக்கொண்டு அகலுவீராகில், திருவாய்ப்பாடியிலே வெண்ணெய் விலக்கினார் புக்க லோகம் புகுவீர்கிடீர்" என்றான். அவன் கருத்தைத் தாமறிந்தமை தோற்ற அநுபாஷிக்கிறார் இப்பாட்டில்.

விளக்கம் - ஆழ்வார் இப்படியாகத் தன்னை விட்டு அகல முற்பட எண்ணியதை ஸர்வேச்வரன் நோக்கினான். தனது மனதில், "இவரது துணிவு மிகவும் அதிகமாகவே உள்ளது. இவரை நம்மிடம் பொருந்தியே நிற்கச்செய்யவேண்டும்", என்று எண்ணினான். ஆழ்வாரிடம், "ஆழ்வாரே! திருவாய்ப்பாடியில் நாம் வெண்ணெய் களவு செய்த நிகழ்ச்சிகள் பற்றி நீவீர் அறிவீரோ?", என்றான். இதற்கு ஆழ்வார், "நான் அதனைப் பற்றி ஏதும் அறியாதவன்", என்றார். ஏன் இவ்விதம் உரைத்தார்? அந்த விவரங்களைக் கேட்பதில் உண்டான அளவு கடந்த ஆசையாலும், அவற்றை அவனது திருவாய் மலர்ந்து அவனே அருளிச்செய்யவேண்டும் என்று எண்ணியதாலும் ஆகும். ஸர்வேச்வரன் அவரிடம், "முன்பு ஒரு காலத்தில் இந்த உலகங்களை எடுத்து நம்முடைய வயிற்றில் வைத்துக்கொண்டோம். அதன் பின்னர் அவற்றை மீண்டும் உமிழ்ந்தோம். அப்படிச் செய்தபோது அந்த உலகங்களில் இருந்த மண் துகள்கள் சிறிதளவு நம்முடைய வயிற்றில் தங்கிவிட்டது என்று எண்ணி, அவற்றை நீக்குவதற்காக திருவாய்ப்பாடியில் நாம் வெண்ணெய் உண்டோம்", என்றான். நோய் ஏற்பட்ட காலத்தில் உண்டால் அல்லவோ மருந்து பயன்படும்; ஏதோ ஒரு காலத்தில் உட்கொண்ட மண்ணுக்கு, அதற்குப் பின்னர் உட்கொண்ட நவநீதம் மருந்தாகாது என்று திருவுள்ளம் பற்றியவராக ஆழ்வார், "அந்த வெண்ணெயை மண்ணுக்குப் பரிகாரமாக உட்கொண்டாயோ! அது ஒரு காலகட்டம், இது இது ஒரு காலகட்டம் அல்லவோ?", என்று வியந்து உரைத்தார். உடனே அவன், "அப்படி என்றால் நாம் வெண்ணெய் உண்டதற்கு வேறு என்ன காரணம், நீவிர் உரைப்பீராக", என்றான். இதற்கு ஆழ்வார், "அடியார்களின் கைகள் பட்ட வெண்ணெய் உனக்கு ஏற்ற பொருளாக உள்ளதால் நீ உண்டாய்", என்றார். இதனைக் கேட்ட ஸர்வேச்வரன், "ஆனால் அந்த வெண்ணெய் போன்றே உம்முடைய சேர்க்கையும் நமக்கு அவசியம் வேண்டியதாகிறது. ஆனால் நான் இவ்விதம் உரைத்த பின்பும் நீவீர் உம்முடைய தாழ்வைக் காரணம் காட்டி நம்மை விட்டு விலகிச் சென்றீர்கள் என்றால், திருவாய்ப்பாடியில் நமக்கு வெண்ணெய் தர மறுத்தவர்கள் நிலையை அடைவீர் (நமக்கு விருப்பம் இல்லாதவற்றைச் செய்தவர் ஆவீர்)", என்று உரைத்தான். அவன் கருத்தை, தான் உணர்ந்ததாக அவனுக்கு உணர்த்தும்விதமாகத் தொடர்கிறார்.

வ்யாக்யானம் - (உண்டாய் உலகேழும் முன்னமே) லோகங்களேழையும் எடுத்து வயிற்றிலே வைத்தாய் முன்பொரு காலத்திலே. (உமிழ்ந்து) பின்னை அதுதன்னை வெளிநாடு காண உமிழ்ந்து. (மாயையால் புக்கு உண்டாய் வெண்ணெய்) "மாயா வயுநம் ஜ்ஞாநம்" என்கிறபடியே இச்சாபர்யாயமாயிருக்கிற ஜ்ஞாநத்தாலே புக்கு உண்டாய்

வெண்ணெய். அது செய்யுமிடத்தில் சக்கரவர்த்தித் திருமகனாய்ப்புக்கு "வெண்ணெய் அமுதுசெய்ய" என்றால் கொடார்களே. (சிறுமனிசர் இத்யாதி) க்ஷுத்ரரான மனுஷ்யர்களுடைய ஹேயமான சரீரத்தினுடைய நிலையை, அப்ராக்ருத திவ்ய ஸம்ஸ்தாநத்துக்கு உண்டாக்கிக் கொண்டு வந்தாயிற்று இப்படி செய்தது. "கறையினார் துவருடுக்கை" என்கிறபடியே இடையரளவிலே தன்னை அமைத்துவந்து கிட்டியிறே வெண்ணெய் அமுது செய்தது; "ஸபலம் தேவி ஸஞ்ஜாதம் ஜாதோஹம் யத் தவோதராத்" என்னாநிற்கச்செய்தேயிறே, "நைஷ கர்ப்பத்வமாபேதே ந யோந்யாம்வஸத் ப்ரபு:" என்கிறது.

விளக்கம் - (உண்டாய் உலகேழும் முன்னமே) – ஏழு உலகங்களையும் ப்ரளய காலத்தில் எடுத்து உனது வயிற்றில் வைத்துக்கொண்டாய். (உமிழ்ந்து) – அதன் பின்னர் அவற்றைக் காண எண்ணி மீண்டும் உமிழ்ந்தாய். (மாயையால் புக்கு உண்டாய் வெண்ணெய்) – நிகண்டுவில் – மாயா வயுநம் ஜ்ஞாநம் – மாயை,வயுநம் மற்றும் ஞானம் ஆகியவை ஒரே பொருள் கொண்டவை - என்பதற்கு ஏற்ப உனது விருப்பத்தினைத் தொடர்ந்து வந்த ஞானம் காரணமாக வெண்ணெயை உட்கொண்டாய். இங்கு ஞானம் என்பது என்ன? ஸர்வேச்வரனின் வியக்க வைக்கும் ஞானம் கூறப்பட்டது. எப்படி? வெண்ணெயை உட்கொள்ளவேண்டும் என்ற எண்ணம் வந்தது, ஆனால் சக்ரவர்த்தித் திருமகனான இராமனாக வந்தபோது இவ்விதம் "வெண்ணெய் களவு செய்யவேண்டும்" என்றால் யாரும் அளிக்கமாட்டார்கள் என்று உணர்ந்தான்; ஆகவே அற்பமான மனிதர்களின் தாழ்வான சரீரத்தின் நிலையை, அவனுடைய திவ்யமான திருமேனிக்கு உண்டக்கிக் கொண்டு, க்ருஷ்ணனாக வந்து இவ்விதம் செய்தான். இதனால் அவனது ஞானம் என்பது சாமர்த்ய வடிவாக வெளிப்பட்டது காண்க. திருவாய்மொழி (4-2-4) - கறையினார் துவருடுக்கை – என்று கூறுவதற்கு ஏற்ப உள்ள ஆயர்களின் இடையே தன்னை அமைத்துக்கொண்டு வெண்ணெய் உட்கொண்டான். அதாவது காட்டில் பழங்களை பறிப்பதன் காரணமாக அவற்றின் சாறு படிந்து இறுகிப்போன ஆடை, பசுக்களை மேய்ப்பதற்கான கழி, பசுக்களிடம் பால் கறக்க உதவும் வஸ்துக்கள், இடுப்பில் கட்டப்பட்ட மணி போன்றவற்றுடன் நின்றான். இங்கு ஒரு சந்தேகம் எழலாம். ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் (5-8-14) – ஸபலம் தேவி ஸஞ்ஜாதம் ஜாதோஹம் யத் தவோதராத் - தேவகியே! நீ உனது முற்பிறவியில் செய்த நல்வினை இப்போது பலனை அளித்துள்ளது; நான் இதன் காரணமாகவே உனது கர்ப்பத்தில் உண்டானேன் - என்று உள்ளது காண்க. இவ்விதம் உரைத்தபோது, இரத்தமும் எலும்பும் கூடியதான இந்த

உலகில் தோன்றிய சரீரம் என்றே ஆகிறது; அப்படி உள்ளபோது மேலே வ்யாக்யானத்தில் – அப்ராக்ருத திவ்ய - இந்த உலகில் காணப்படாத திவ்யமான சரீரத்துடன் - என்று எப்படிக் கூறமுடியும் என்று கேட்கலாம். மஹாபாரதத்தில் – நைஷ கர்ப்பத்வமாபேதே ந யோந்யாம்வஸத் ப்ரபு: – க்ருஷ்ணன் கர்ப்பவாசம் செய்கின்ற நிலையை அடையவும் இல்லை, யோநியில் வசிக்கவும் இல்லை – என்று கூறப்படுவதால், எந்தவிதமான தோஷமும் இல்லை என்பதே இந்தக் கேள்விக்கான பதிலாகும்.

வ்யாக்யானம் - இக்ஷ்வாகுவம்ச்யரிலே ஒருவன் யாகம் பண்ணாநிற்க, பிபாஸை வர்த்தித்தவாறே மந்தரபூதமான ஜலத்தைப் பாநம் பண்ண, கர்ப்பமுண்டாயிற்றது, சுக்ல சோணீத ரூபத்தாலே பரிணதமாயன்றிறே; சக்த்யதிசயத்தாலே இப்படி கூடக் கண்ட பின்பு, "ஸர்வசக்திக்குக் கூடாததில்லை" என்று கொள்ளத்தட்டில்லையிறே. மண்ணை அமுதுசெய்தது - அதின் ஸத்தைக்காக; வெண்ணை அமுதுசெய்தது - உன் ஸத்தைக்காக. (மண்தான் இத்யாதி) பூமியைத் திருவயிற்றிலே வைத்து உமிழ்ந்தபோது சேஷித்தது ஏதேனும் மண் உண்டாகிலும், பிற்பட்ட மநுஷ்யர்க்கு அத்யல்பமும் சேஷியாதபடி நெய்யமுதுசெய்தது அதுக்கு மருந்தோ? ஒன்றும் சேஷியாதபடி அமுதுசெய்யிலோ மருந்தாவது? அன்றிக்கே, "பீர்" என்று வைவர்ண்யமாய், மண்ணிலே சிறிது சேஷித்தால் மநுஷ்யர்க்கு வரக்கடவதான வைவர்ண்யம் சிறிதும் வாராதபடி நெய்யூண் மருந்தோ? அன்றிறே. "ஆனால் எதுக்காகச் செய்தோம்?" என்னில், (மாயோனே) ஆச்ரிதஸ்பர்சமுள்ள த்ரவ்யத்தாலல்லது தாரணமில்லாதபடியான ஆச்ரிதவ்யாமோஹத்தாலே செய்தாயித்தனை யன்றோ?

விளக்கம் - இது போன்று கர்ப்பவாசம் இல்லாமல் குழந்தை பிறக்குமோ என்ற சந்தேகத்திற்கு விடை அளிக்கிறார். இக்ஷ்வாகு குலத்தில் வந்த யுவநாச்வன் என்பவன் யாகம் செய்து கொண்டிருந்தபோது தாகம் எடுத்த காரணத்தினால் மந்த்ரங்கள் மூலம் தூய்மை செய்யப்பட்ட தண்ணீரைப் பருகினபோது கர்ப்பம் ஏற்பட்டது. அப்போது பிறந்தவன் மாந்தாதா என்பவன் ஆவான். ஆக அவன் தாயின் தொடர்பு இன்றி, தந்தை மூலம் மட்டுமே பிறந்தான். மந்திரங்களின் வலிமையே இவ்விதம் உள்ளபோது, ஸர்வசக்தியாக உள்ள ஸர்வேச்வரனுக்குச் செய்ய இயலாதது என்று ஏதும் இல்லை என்று கூறுவதில் எந்தக் குறையும் இல்லை. மண்ணை உட்கொண்டது அதனைக் காப்பதற்காக, வெண்ணெய் உட்கொண்டது உன்னைக் காப்பதற்காக. (மண்தான் இத்யாதி) – இந்தப் பாசுரத்தை "முன்னமே உலகேழும் உண்டுமிழ்ந்தாய்; சிறுமனிசர் உவலையாக்கை நிலை

எய்தி மாயையால் புக்கு வெண்ணெய் உண்டாய்; மண்தான் சோர்ந்ததுண்டேலும், மண் கரைய மனிசர்க்காகும் நெய் பீர் சிறிதும் அண்டாவண்ணம் ஊண் மருந்தோ" என்று சொற்களை மாற்றி அமைத்துக்கொண்டு பொருள் அருளிச்செய்கிறார். முன்பு பூமியைத் திருவயிற்றிலே வைத்து, அதன் பின்னர் உமிழ்ந்தபோது வயிற்றில் சிறிதளவு மண் மீதம் இருந்தால் அல்லவோ மருந்து தேவை; அப்படியே சிறிதளவு மண் இருந்தது என்றே வைத்துக்கொள்வோம், அப்படி என்றாலும் மனிதர்க்குச் சற்றும் மீதம் இல்லாதபடி நெய் உட்கொண்டது அந்த மண்ணிற்கான மருந்தாகுமோ? அல்லது இந்தப் பாசுரத்தை "மாயோனே, முன்னமே உலகேழும் உண்டாய், உமிழ்ந்து, சிறுமனிசர் உவலையாக்கை நிலை எய்தி, மாயையால் புக்கு வெண்ணெய் உண்டாய்; மண்தான் சோர்ந்ததுண்டேலும், மனிசர்க்காகும் பீர் சிறிதும் அண்டாவண்ணம் மண் கரைய நெய்யூண் மருந்தோ" என்று சொற்களை வேறுவிதமாக மாற்றி அமைத்துக்கொண்டு பொருள் உரைக்கிறார். ஒரு காலத்தில் ஸர்வேச்வரனாக நின்று மண்ணை உண்டதற்கு, பின்னர் வேறு ஒரு காலத்தில் மனிதனாகப் பிறந்து வெண்ணெய் உட்கொண்டாலும், முன்னர் எப்போதோ உண்ட மண்ணில் சிறிதளவு வயிற்றில் தங்கியபோதிலும், மனிதர்களுக்கு ஏற்படுகின்ற சோகை என்பது உனக்கு உண்டாகுமோ? அப்படியே ஏற்பட்டாலும், அதற்கு வெண்ணெய் மருந்தோ? அல்லவே! இதனைக் கேட்ட ஸர்வேச்வரன், "ஆயினும் நாம் ஏன் செய்தோம்", என்று கேட்க, விடை அளிக்கிறார். (மாயோனே) – வியக்க வைக்கின்ற குணங்களும் செயல்களும் கொண்டவனே! அடியார்களால் தீண்டப்பட்ட பொருள்கள் அல்லாமல் உனக்கு இருப்பு இல்லை என்னுபடியாக அவர்களிடம் கொண்ட பெருமயக்கம் காரணமாக அல்லவோ இவ்விதம் செய்தாய்?

1-5-9. மாயோம் தீய வலவலைப் பெருமா வஞ்சப் பேய்வீயத்
தூய குழவி யாய்விடப்பா லமுதா வமுது செய்திட்ட
மாயன் வானோர் தனித்தலைவன் மலராள் மைந்தன் எவ்வுயிர்க்கும்
தாயோன் தம்மா னென்னம்மா னம்மா மூர்த்தியைச் சார்ந்தே.

பொருள் – மிகவும் கொடிய மனம் கொண்டவளாகவும், பலவாறு பிதற்றியபடி வந்தவளும், எல்லையற்ற வஞ்சனை நிறைந்தவளும் ஆகிய பூதனை என்ற அரக்கி மாய்ந்து போகும்படி, தூய்மையான சிறுகுழந்தையாக வந்து, விஷம் கலந்து பாலானது அமிர்தமாகும்படியாகப் பருகிய வியக்க வைக்கும் செயல்கள் நிறைந்தவன்; நித்ய ஸூரிகளுக்குத் தலைவன் என்று வேறு யாரும் இல்லாதபடியாக, தான் மட்டுமே

தலைவன் என்று உள்ளவன்; தாமரை மலரைத் தனது பிறப்பிடமாகவும், இருப்பிடமாகவும் கொண்டுள்ள பெரியபிராட்டிக்கு இன்பமாக இருக்கும்படியான இளமை கொண்டவன்; அனைத்து உயிர்களுக்கும் வாத்ஸல்யம் நிறைந்த தாயாக நிற்பவன்; தனக்குத் தானே தலைவனாக உள்ளவன்; நான் அவனை விட்டுச் சற்றும் அகலாமல் உள்ளதற்குக் காரணமான பெருமை வாய்ந்த திருமேனி கொண்டவன் - இப்படியாக உள்ள ஸர்வேச்வரனை நான் அடைந்துவிட்டேன். இனி நாங்கள் இருவரும் (நானும் அவனும்) எப்போதும் பிரியமாட்டோம்.

அவதாரிகை - "திருவாய்ப்பாடியில் யசோதாதிகள் வெண்ணெயோபாதி தாரகங்காணும் நீர் தண்ணிதாக நினைத்திருக்கிற உடம்பு" என்றான்; "பாவபந்தமுள்ளவர்களுடைய வெண்ணெய் உனக்கு தாரகம்; அதில்லாத என்னோட்டை ஸ்பர்சம் உனக்கு நஞ்சு" என்றார்; "நஞ்சோதான்? நஞ்சானமை குறையில்லையே?" என்றான் அவன்; இவரும் "இது நஞ்சே; இதுக்கொரு குறையில்லை" என்றார்; "ஆனால், பூதனையுடைய நஞ்சு தாரகமான நமக்கு ஆகாததில்லைகாணும்" என்றான்; என்னப் பொருந்துகிறார். அன்றிக்கே, "பூதனையை முடித்தாற்போலே, 'நான் அல்லேன்' என்று அகலப்புக்க என் நிர்பந்தத்தைப் போக்கினான்" என்பாரும் உண்டு.

விளக்கம் – கடந்த பாசுரத்தில் ஆழ்வாரிடம் ஸர்வேச்வரன், "ஓய் ஆழ்வாரே! திருவாய்ப்பாடியில் யசோதை உள்ளிட்டவர்களின் வீடுகளில் உள்ள வெண்ணெய் என்பது நமக்கு எத்தனை தாரகமோ (உயிர் பிழைக்க உதவும் பொருள்), அது போன்று நீவிர் தாழ்வாக எண்ணியிருக்கும் உமது சரீரமும் நமக்கு உள்ளது என்பதை அறிவீரோ!", என்றான். இதற்கு ஆழ்வார் அவனிடம், "உன்னுடன் மிகவும் ப்ரியமான ஸம்பந்தம் கொண்டவர்களின் வெண்ணெய் மட்டுமே உனக்குத் தாரகமாக இருக்கும்; அத்தகைய தன்மை இல்லாத என்னுடைய ஸம்பந்தம் உனக்கு விஷமாகவே இருக்கும்", என்றார். இதனைக் கேட்ட அவன், "உம்முடைய தொடர்பு நஞ்சு என்றா உரைக்கிறீர்? நஞ்சாக இருந்தாலும் நமக்கு எந்தவிதமான தோஷமும் இல்லை", என்றான். உடனே ஆழ்வார், "எனது தொடர்பு உனக்கு விஷமே ஆகும், இந்த தொடர்பின் நச்சுத்தன்மை உனக்கு ஏற்படும் என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை", என்றார். இதனைக் கேட்ட அவன், "ஆனால் பூதனை நமக்கு அளித்த விஷமானது, நமக்கு ஆகாத வஸ்துவாக மாறவில்லை என்பதை நீவிர் உணரவேண்டும்", என்றான். இதனைக் கேட்டவுடன் ஆழ்வார் நகராமல் அவனுடன் நிற்கிறார். அல்லது, "பூதனையை நீ முடித்தது போன்று 'நான் நிற்கமாட்டேன்'

என்று எண்ணி அகல முனைந்த என்னுடைய சிந்தனையைப் போக்கினான்", என்றும் பொருள் உரைப்பர்.

வ்யாக்யானம் - (மாயோம்) "பிரிகையாவது விநாசம்" என்று இருக்கையாலே இனி அகன்று மாயக்கடவோமல்லோம் என்கிறார். நானும் என்னோடு ஸம்பந்தமுடையாரும் முடியக்கடவோமல்லோம். அன்றியே, இரண்டு தலையையும் அழித்துக் கொள்ளக் கடவோமல்லோம். (தீய இத்யாதி) "ஸ்தந்யம் தத்விஷஸம்மிச்ரம் ரஸ்யமாஸீத் ஜகத்குரோ:" என்கிறபடியே ஜகத்துக்கு வேர்ப்பற்றானவனை முடிக்கப் பார்த்த நெஞ்சில் தீமையையுடையளாய், யசோதைப் பிராட்டியைப்போலே பரிவு தோற்ற ஜல்பித்துக் கொண்டு வருவாளாய், ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனானவனும் "தாய்" என்று ப்ரமிக்கும்படி தோற்றின மஹாவஞ்சகையான பூதனை முடியும்படியாக. (தூய குழவியாய்) ஐச்வரமான மேன்மையும் நடையாடா நிற்கச்செய்தே, அது தோற்றாதபடி கலப்பற்ற பிள்ளைத் தனத்தை உடையனாய். இவனுக்குப் பிள்ளைத்தனத்தில் குறையில்லையாகில், அதின் கார்யம் காணாதொழிவானென்? என்னில், (விடப்பாலமுதா) விஷம் அம்ருதமாம் முஹூர்த்தத்திலேயாயிற்று பிறந்தது. தர்மியை வேறாக்கவொண்ணாமையாலே விரோதித்த ஆஸுரப்ரக்ருதிகள் முடிய ப்ராப்தம். (மாயன்) விஷம் அம்ருதமாம்படி அமுது செய்து தன்னைத்தந்து நம்மை உண்டாக்கின ஆச்சர்யபூதன். "எனக்குமல்ல, பிறர்க்குமல்ல, அவனுக்கே" என்று அவள் அநந்யார்ஹமாக்குகையாலே அம்ருதமாயிற்று.

விளக்கம் – (மாயோம்) - "பிரிதல் என்றால் அழிவு" என்று உள்ளதால் இனி நாங்கள் இருவரும் பிரிந்து, அதனால் எங்களது ஸ்வரூபம் அழியும் என்ற நிலை இன்றி, ஒன்றாகவே இருப்போம் என்கிறார். நானும், எனது தொடர்பு உடையவர்களும் அவனது ஸம்பந்தம் நீங்கப் பெறுவதால் உண்டாகின்ற "அழிதல்" என்ற நிலையை அடையமாட்டோம். அல்லது "மாயோம்" என்பதை "நானும் அவனும்" என்று பொருள்படும்படியாகக் கொண்டு, "நானும் அவனும் பிரிந்து சென்று எங்களது ஸ்வரூபத்தை அழித்துக் கொள்ளமாட்டோம்", என்றும் கொள்ளலாம். (தீய இத்யாதி) – ஹரிவம்ஸத்தில் – ஸ்தந்யம் தத்விஷஸம்மிச்ரம் ரஸ்யமாஸீத் ஜகத்குரோ: – பூதனையை அழித்து, இந்த உலகிற்குக் குருவாக நின்ற க்ருஷ்ணனுக்கு, அவளுடைய ஸ்தனங்களில் பெருகிய விஷத்துடன் கூடிய பால் என்பது அமிர்தமாகவே இருந்தது - என்று கூறியது காண்க. இதன்படியே, இந்த உலகில் காரணமாக உள்ளவனை அழிக்கப் பார்த்தவளும்,

தனது உள்ளத்தில் தீமை நிரம்பியவளும், யசோதையைப் போன்று பாசத்தையும் பரிவையும் வெளிப்படுத்தும்படி அன்பு கலந்த வார்த்தைகளைப் பேசியபடி வந்தவளும் ஆகிய பூதனை. அலவலை என்றால் பலவிதமான சொற்கள். "பெருமாவஞ்சம்" என்றால் மிகவும் வஞ்சனை நிறைந்தவளாக என்று பொருள். அந்த வஞ்சத்தின் எல்லையானது காண இயலாதபடி இருந்ததை அடுத்து அருளிச்செய்கிறார். மற்றவர்கள் யாரும், எதனையும் இவனுக்கு அறிவுறுத்த வேண்டாதபடி, தானாகவே அனைத்தையும் அறிந்தவன் க்ருஷ்ணன்; அப்படிப்பட்டவன் கூட இந்தப் பூதனை தனது உண்மையான தாயோ என்று எண்ணி வியக்கும்படியாக ஒரு தோற்றம் கொண்டிருந்தாள். இப்படிப்பட்ட வஞ்சகம் நிறைந்த பூதனை முடியும்படியாகச் செய்தவன். (தூய குழவியாய்) - ஸர்வேச்வரனுக்கு மட்டுமே உள்ள மேன்மை வெளிப்படும்படியாக க்ருஷ்ணன் இருந்தான்; ஆனால் அதனை மிகவும் கடினப்பட்டு மறைத்து, அது புலப்படாதபடி, சற்றும் தனது மேன்மை கலக்காத குழந்தைத்தனம் கொண்டவனாக நின்றான். இவனுக்குக் குழந்தைத்தனம் மட்டுமே மேலிட்டது, ஈச்வரத்தனம் வெளிவரவில்லை என்றால் அந்த விஷத்தின் காரியமான மரணம் ஏற்பட்டிருக்கவேண்டுமே என்ற கேள்வி எழலாம். இதற்கு விடை அளிக்கிறார். (விடப்பாலமுதா) - விஷமானது அமிர்தமாகும்படியாக உள்ள முஹூர்த்த காலத்தில் இவன் பிறந்ததால் மரணம் ஸம்பவிக்கவில்லை. அதாவது பூதனை உள்ளிட்டவர்கள் மரணம் அடைந்தது இவனது ஈச்வரத்தன்மையால் அல்ல; இவன் அவதரித்த முஹூர்த்தத்தின் வலிமையால் ஆகும் என்று கருத்து. "தர்மியை" என்பதன் கருத்து என்ன? சற்றும் ஸர்வேச்வரத்தனம் இல்லாமல் சிறுபிள்ளைத்தனம் மட்டுமே நிறைந்தவன் என்றபோதிலும் க்ருஷ்ணனும் பரமபதநாதனும் வெவ்வேறு என்று கூற முடியாது; எனவே அந்த வஸ்துவின் ஸ்வரூபம் காரணமாக பூதனை மடிந்தாள் என்று பொருள். தர்மம் செய்பவனை விட்டுத் தர்மம் பிரியாமல் உள்ளது போன்று, க்ருஷ்ணனிடம் உள்ள ஸர்வேச்வரத்தன்மை பிரியாமல் உள்ளதால் அவனிடம் விரோதம் செய்த அசுரப்பிறவிகள் மடிந்தனர் என்று கருத்து. (மாயன்) - விஷம் நிறைந்த பால் அமிர்தமாக மாறும்படியாக அதனைப் பருகி, தன்னை நமக்கு அளித்து, நம்முடைய ஈர்ப்பு என்பதை நிலைநிறுத்துகின்ற வியக்கவைக்கும் செயல் கொண்டவன். பூதனையின் விஷம் கலந்த பால் எவ்விதம் அமிர்தமானது? அவள் பாலை க்ருஷ்ணனுக்குப் புகட்டியபோது, "அந்த நஞ்சு கலந்த பால் எனக்கு வேண்டாம், மற்றவர்களுக்கு வேண்டாம், இது அவனுக்கு மட்டுமே" என்று அவனைத் தவிர்த்து அதனை வேறு யாருக்கும் அளிக்க எண்ணாத காரணத்தினால் அமிர்தம் ஆனது.

வ்யாக்யானம் - பூதனையுடைய விஷம் அம்ருதமாம்படி அமுது செய்தவன்தான் ஆர்? என்னில்; (வானோர் தனித்தலைவன்) அயர்வறும் அமரர்களுக்குத் தனித் தலைவனானவன். (மலராள்மைந்தன்) அவர்கள் பரிந்து பரிசர்யை பண்ண, பெரியபிராட்டியாரும் தானுமாயிருக்குமவன். "தேவிமாராவார் திருமகள் பூமி ஏவ மற்றமரராட் செய்வார்" என்கிறபடியே. (மைந்தன்) அவளுக்கு மிடுக்கானவன்; அவளோட்டைச் சேர்த்தியாலே நித்யமான நவயௌவநத்தை உடையவன் என்னுதல். அவளோட்டைச் சேர்த்தியாலே அழகிய மணவாளப் பெருமாளாய் இருக்கிறான் என்னுதல். (எவ்வுயிர்க்கும் தாயோன்) ஸகலாத்மாக்களுக்கும் தாய்போல் பரிவனானவன். (தம்மான்) ஸர்வேச்வரன். (என்னம்மான்) நான் தன்னை அகன்று முடிந்து போகாதபடி நோக்கினவன். நித்யஸூரிகளும் மற்றுமுள்ள ஸகலாத்மாக்களும் ஒரு தட்டும், நான் ஒரு தட்டுமாம்படி என்பக்கலிலே விசேஷ கடாக்ஷத்தைப் பண்ணினவன் என்றுமாம். (அம்மா மூர்த்தியைச் சார்ந்தே) விலக்ஷணமான திருமேனியையுடைய அம்மஹாபுருஷனைக் கிட்டி மாயக்கடவோமல்லோம்.

விளக்கம் - இவ்விதம் பூதனையின் விஷம் நிறைந்த பாலானது அமிர்தம் என்று மாறும்படியாகச் செய்தவன் யார் என்ற கேள்விக்கு விடை அளிக்கிறார். (வானோர் தனித்தலைவன்) - அயர்வில்லாத நித்யஸூரிகளின் தனித்தலைவன். தனித்தலைவன் என்றால் "இவன் போன்று இரண்டாவது ஒருவன் உண்டு" என்று கூற இயலாதபடி, இரண்டாவதாக யாரும் இல்லாதவன். (மலராள் மைந்தன்) - நித்யஸூரிகள் சேர்ந்து நின்று இடைவிடாது கைங்கர்யம் செய்ய, அவற்றை ஏற்றபடி பெரியபிராட்டியாருடன் வீற்றுள்ளவன். திருவாய்மொழி (8-1-1) - தேவிமாராவார் திருமகள் பூமி ஏவ மற்றமரராட் செய்வார் – என்று கூறியபடி, இவனுக்கு ஏற்ற எல்லையற்ற ஸம்பத்ரூபமான மஹாலக்ஷ்மியும், அனைத்து விபூதிகளுக்கும் அபிமான தேவதையாக உள்ள பூமிப்பிராட்டியும் அருகில் கொண்டவன். (மைந்தன்) - பெரியபிராட்டிக்கு ஏற்ற யௌவநம் உடையவன். அவளுடன் இவன் இருக்கின்ற சேர்த்தியைப் பெற்றதன் காரணமாக எப்போதும் இளமையுடன் உள்ளவன். அவளுடன் உள்ளதால் அழகியமணவாளன் என்னும் திருநாமம் பெற்ற திருவரங்கன். (எவ்வுயிர்க்கும் தாயோன்) - அனைத்து ஆத்மாக்களுக்கும் தாயாகவே இருந்து அவற்றுக்காக இரக்கம் கொண்டு நிற்பவன்; மிகுந்த பரிவைக் கொண்டவன். (தம்மான்) - ஸர்வேச்வரன். (என்னம்மான்) - நான் அவனை விட்டு அகன்று சென்று, அதனால் எனது ஸ்வரூபம் அழிந்துவிடாதபடி, அதாவது நாம் அகலாதபடி பார்த்துக் கொண்டவன். அனைத்து நித்யஸூரிகள், அனைத்து

உயிர்கள் ஆகிய பலவற்றையும் ஒரு திருக்கரத்திலும், என்னை மட்டுமே ஒரு திருக்கரத்திலும் வைத்துப் பாதுகாக்கும்படியாக என்னிடம் மிகவும் சிறப்பான கடாக்ஷம் செய்பவன். (அம்மா மூர்த்தியைச் சார்ந்தே) – இங்கு மூர்த்தி என்ற பதம் இரு பொருள் கொண்டதாகும்; அழகான திருமேனி, மஹாபுருஷன் என்பதாகும். மஹாபுருஷன் என்பது புருஷஸூக்தத்தில் - மேதாஹமேஹம் புருஷம் மஹாந்தம் - என்பதற்கு ஏற்ப உள்ளது. இப்படிப்பட்ட மென்மையான திருமேனியைக் கொண்டவனை, மஹாபுருஷனை நான் அடைந்தேன். இனி நாங்கள் இருவரும் பிரிந்து எங்கள் ஸ்வரூபம் அழியும் நிலையை அடையமாட்டோம்.

1-5-10. சார்ந்த விருவல் வினைகளும் சரித்து மாயப் பற்றறுத்து
தீர்ந்து தன்பால் மனம்வைக்கத் திருத்தி வீடு திருத்துவான்
ஆர்ந்த ஞானச் சுடராகி யகலம் கீழ்மே லளவிறந்து
நேர்ந்து வுருவா யருவாகு மிவற்றி னுயிராம் நெடுமாலே.

பொருள் – பரிபூர்ணமாக விளங்குகின்ற ஞானத்தில் ஒளியாகி; பக்கவாட்டிலும், கீழும் மேலும் என்றுள்ள பத்து திசைகளின் அளவு அனைத்தையும் கடந்தவனாக; மிகவும் ஸூக்ஷ்மமாக உள்ள சித் மற்றும் அசித் ஆகியவற்றின் அந்தராத்மாவாக; என்னிடம் எல்லையற்ற வாத்ஸல்யம் கொண்டவனாக; என்னுடன், எப்போதும் என்னைவிட்டு அகலாமல் நின்று, புண்ணியம் மற்றும் பாவம் ஆகியவற்றால் என்னைச் சூழ்கின்ற இருவிதமான கர்மங்களையும், அவற்றின் வினைப்பயன்களையும் ஏதும் மிஞ்சாமல் தள்ளுபவனாக; அறியாமையை ஏற்படுத்தவல்ல புலன் விஷயங்களை நீக்குபவனாக; மற்ற எதிலும் நாட்டம் கொள்ளச் செய்யாமல், தனக்கு மட்டுமே உரியவனாக நான் உள்ளபடியும், தன்னிடத்தில் மட்டுமே எனது மனதை வைக்குபடியும் என்னைத் திருத்தி ஏற்றுக் கொள்பவனாக - இப்படியாக உள்ள ஸர்வேச்வரன், எனக்கு அளிக்கத் தயாராக வைத்துள்ள பரமபதத்தை நன்றாக அலங்கரித்து வைப்பான்.

அவதாரிகை - இவரை இப்படி இசைவித்துவைத்து, ஒரு புதுமை செய்ய வேண்டாதபடியான பரமபதத்தைக் கோடிக்கத் தொடங்கினான்.

விளக்கம் – இப்படியாக இவரைத் தன்பக்கம் சேர்த்துக் கொண்ட அவன், "நான் அயோக்யன்" என்று கூறி விலகிச் செல்ல இயலாத இடமாக உள்ளதும், எந்தவிதமான

புதுமைகளும் செய்யவேண்டாமல் இருப்பதும் ஆகிய பரமபதத்தை இவருடைய வருகைக்காக அலங்கரிக்கத் கொடங்கினான்.

வ்யாக்யானம் - (சார்ந்த இரு வல் வினைகளும் சரித்து) – "திலதைலவத் தாருவஹ்நிவத்" என்கிறபடியே பிரிக்கவொண்ணாதபடி பொருந்திக் கிடக்கிற புண்யபாபரூப கர்மங்களையும் சரித்து, ஸர்வசக்தியான தான் போக்குமன்றும் போக்கவொண்ணாதபடி சதசாகமாகப் பணைத்த வினைகளை,விரகர் நெடுஞ்சுவர் தள்ளுமாபோலே போக்கி. (மாயப் பற்றறுத்து) ருசிவாஸனைகளையும் கழித்து. (தீர்ந்து) தான் க்ருதக்ருத்யனாய் என்னுதல்; அன்றிக்கே, (தீர்ந்து தன்பால் மனம் வைக்கத் திருத்தி) "அல்லேன்" என்று அகலாதே தனக்கே தீர்ந்து, தன்பக்கலிலே நெஞ்சை வைக்கும்படி திருத்தி. (வீடு திருத்துவான்) கலங்காப் பெருநகரத்துக்கும் ஒரு புதுமை பிறப்பியாநின்றான். (ஆர்ந்த ஞானச்சுடராகி) பரிபூர்ண ஜ்ஞாநப்ரபனாய். (அகலம் கீழ்மேல் அளவிறந்து) பத்து திக்கிலும் வ்யாபித்து. (நேர்ந்த உருவாய் அருவாகும் இவற்றினுயிராம்) அதிஸூக்ஷ்மமான சேதநா சேதனங்களுக்கும் ஆத்மாவாயிருக்கிற. அன்றிக்கே, நேர்ந்த – கிட்டின; அதாவது ப்ரத்யக்ஷ பரித்ருஷ்டமான ப்ரக்ருத்யாத்மாக்களுக்கும் ஆத்மாவாய் என்றுமாம். (நெடுமால்) இப்படியிருக்கிற நெடுமால் வீடு திருத்துவானானான். வ்யாப்தியும் இவரைப் பெற்றபின்பு புதுக்கணித்தது என்னுதல்; அன்றியே, ஒருவனைப் பிடிக்க நினைத்து ஊரை வளைவாரைப்போலே, இவரைத் திருத்துகைக்காக வ்யாப்தனாயிருந்தான் என்னுதல். (நெடுமாலே) முனியே நான்முகனளவும் அவன் பண்ணின உபகாரத்தைச் சொல்லுகிறது. அவன் தெளிந்துவந்து கொடுபோகப்பற்றாமே கூப்பிடுகிறாரிறே நடுவெல்லாம்.

விளக்கம் - (சார்ந்த இரு வல் வினைகளும் சரித்து) - ஸ்ரீரங்ககத்யத்தில் – திலதைலவத் தாருவஹ்நிவத் - எள்ளில் இருந்து பிரிக்கமுடியாத எண்ணெய் போன்றும், மரக்கட்டையில் இருந்து பிரிக்க இயலாத நெருப்பு போன்றும் - என்று கூறுவதற்கு ஏற்ப, பிரிக்க இயலாதபடியாகப் பொருந்தியுள்ள புண்ணியம் மற்றும் பாவம் என்ற வடிவில் உள்ள கர்மங்களை நீக்கி. ஸர்வசக்தியான இவன் இந்த வினைகளைப் போக்க எண்ணும் நேரத்தில், அவனாலும் போக்க இயலுமோ என்று சந்தேகம் கொள்ளும்படியாக நூறு கிளைகளாகப் பிரிந்த மரம் போன்றுள்ள பல வினைகள். அவற்றை, வலிமை மிகுந்தவர்கள் எத்தனை நீண்ட சுவராக இருந்தாலும் எளிதாகச் சரித்துவிடுவது போன்று, போக்குகிறான். (மாயப் பற்றறுத்து) – அந்த வினைகள் சேதநனை வஞ்சித்து உலக

விஷயங்களில் சிக்க வைப்பதால் மாயப்பற்று எனப்படுகின்றன; அவற்றை அதன் ருசி மற்றும் வாஸனை ஆகிய இரண்டுடன் நீக்கி. (தீர்ந்து) - இதற்கு இரண்டுவிதமாகப் பொருள் உரைக்கலாம். தான் செய்யவேண்டியது அனைத்தும் செய்து முடித்தவனாக நின்றான் என்பது ஒரு பொருள். அல்லது, (தீர்ந்து தன்பால் மனம் வைக்கத் திருத்தி) "நான் அயோக்யன்" என்று எண்ணி ஆழ்வார் அகன்று செல்லாமல், தனக்காகவே அவர் இருக்கும்படி, தன் பக்கம் மட்டுமே ஆழ்வார் தனது மனதை நிலையாக வைக்கும்படிச் செய்து. (வீடு திருத்துவான்) – கலங்காப் பெருநகரம் என்றால் மாற்றம் ஏதும் அடையாத பரமபதம். மாற்றமே அடையாத அந்தப் பரமபதத்தை இவர் வருவதற்காகப் புதுப்பித்தான் என்று கருத்து. (ஆர்ந்த ஞானச்சுடராகி) - பரிபூர்ணமான ஞானம் கொண்டவனாக. (அகலம் கீழ்மேல் அளவிறந்து) - ஸூக்ஷ்மமாக உள்ள சித் மற்றும் அசித் ஆகியவற்றில் பரவி நின்றபோதும், பத்துத் திசைகளிலும் வ்யாபித்து நிற்பவன். (நேர்ந்த உருவாய் அருவாகும் இவற்றினுயிராம்) – மிகவும் ஸூக்ஷ்மமாக உள்ள சேதனம் மற்றும் அசேதனம் ஆகிய அனைத்திற்கும் ஆத்மாவாக உள்ள அல்லது ப்ரத்யக்ஷமாக இங்கு தென்படக்கூடிய அனைத்து ஆத்மாக்களுக்கும் ஆத்மாவாக உள்ளவன். (நெடுமால்) – அனைத்தையும் நியமிக்கும் ஸர்வாதிகன். ஆழ்வாரிடம் மிகுந்த மயக்கம் கொண்டவன். மேலே உள்ளபடி இருக்கின்ற அவன் பரமபதத்தை அலங்கரிப்பவன் ஆனான். "சார்ந்த" என்று தொடங்கி "மனம் வைக்கத்திருத்தி" என்பது முடிய உள்ள வரிகளின் மூலம் ஆழ்வாரைத் தன்பக்கம் நிலைநிற்குமாறு திருத்தினான் என்பது கூறப்பட்டது; அதன் பின்னர் "ஆர்ந்த ஞானச்சுடராகி" என்று தொடங்கி "நெடுமால்" என்பது முடிய உள்ள வரிகளில் இவருக்காகப் பரமபதத்தைப் புதுப்பித்தவன் ஆனான் என்பது கூறப்பட்டது - இதனை இவ்விதம் பொருள் கொண்டவராக "ஸர்வேச்வரனின் எங்கும் பரவியபடி உள்ள நிலையானது இவரைப் பெற்ற பின்னரே முழுமை அடைந்து அழகு பெற்றது" என்கிறார். [அதாவது, இவரைப் பெறவில்லை என்றால், எங்கும் ஸர்வேச்வரன் பரவி உள்ளான் என்னும் கருத்து, இவரிடம் அவன் பரவி நிற்காத காரணத்தால் முரணாகிவிடும் அல்லவோ]. இவ்விதம் பொருள் கொள்ளும்போது "தீர்ந்து" என்பதற்கு "தனக்காகவே தீர்ந்து" என்று பொருள். அல்லது "என்னைத் தன்பக்கம் சேர்ந்துக் கொள்வதற்காகவே ஆர்ந்தஞானம் என்று தொடங்கி, இவற்றின் உயிரான நெடுமால், சார்ந்த இரு வல்வினைகளும் என்று தொடங்கி, தன்னிடம் மனம் வைக்கத் திருத்தி, தீர்ந்து, வீடு திருத்துவான் ஆனான்" என்று வரிசைப்படுத்திக் கொண்டால் – ஒருவனைப் பிடிப்பதற்காக ஊரையே வளைத்துக் கொண்டு நிற்பது போன்று எங்கும் பரவி நின்றான்

என்று கொள்ளலாம். இவ்விதம் கொண்டால் "தீர்ந்து" என்பது செய்யவேண்டிய அனைத்தையும் செய்துவிட்டு நின்றான் என்ற பொருள் தரும். (நெடுமாலே) - இந்தத் திருவாய்மொழியின் இறுதியிலேயே ஸர்வேச்வரன் இவருக்காகப் பரமபதத்தை அலங்கரித்து அங்கு அழைத்துக் கொள்ளத் திருவுள்ளம் கொண்டான் என்றால், இந்தத் திருவாய்மொழியை இவர் முழுவதுமாக முடிக்கும்படிச் செய்து, உலகிற்கு மிகவும் பெரிய உபகாரத்தைச் செய்தவன் என்பது எவ்விதம் ஏற்பட்டது என்று கேட்கலாம். அதாவது ஈச்வரன் இவரிடம் உள்ள அன்பின் மிகுதி காரணமாகப் பரமபதத்தை அலங்கரித்தான்; ஆனால் அதில் காலதாமதம் ஏற்பட்டது; அந்தத் தாமதத்தை பொறுக்க இயலாமல் இவர் "முனியே நான்முகனே" என்று இறுதியான திருவாய்மொழியில் அழைக்க, நடுவில் உள்ள அத்தனையும் உலகின் உபகாரமாக அமைந்தன. சரி! இவரோ அனைத்தும் அறிந்தவர்; ஆகவே, தனக்காகச் ஸர்வேச்வரன் பரமபதத்தை அலங்கரிக்கும் செயலில் ஈடுபட்டுள்ளான், அதனால்தான் தாமதம் ஆகிறது என்று இவர் அறிவார்; அப்படி உள்ளபோது அவனை அழைத்தது ஏன் என்று கேட்கலாம். இவருடைய திருமேனி மீது அவனுக்கு ஏற்பட்ட ஆசை காரணமாக அவன் செய்வது அறியாமல் நிற்கிறான், அவனைச் சுயநினைவிற்கு கொண்டு வருவதற்காக இந்தத் திருவாய்மொழி தொடங்கி, இறுதித் திருவாய்மொழி முடிய பலவிதமாக அழைக்கிறார்; அவன் மயக்கம் தெளியாமல் உள்ளதால் இறுதியில் சற்றே உரத்த தொனியில் "முனியே நான்முகனே" என்று அழைக்கிறார். "நடுவெல்லாம்" என்றால் முந்நீர்ஞாலம் போன்ற திருவாய்மொழிகளில் இவ்விதம் அழைக்கிறார் என்று பொருள்.

1-5-11. மாலே! மாயப் பெருமானே! மாமாயனே! யென்றென்று
மாலே யேறி மாலருளால் மன்னு குருகூர்ச் சடகோபன்
பாலேய் தமிழர் இசைகாரர் பத்தர் பரவு மாயிரத்தின்
பாலே பட்ட இவைபத்தும் வல்லார்க் கில்லை பரிவதே.

பொருள் - அனைத்தையும் நியமிக்கவல்ல, சேஷித்வரூபமான ஸ்வரூபத்தில் எப்போதும் உயர்த்தியை உடையவனே! ஸம்ஸாரிகளையும் நித்யஸூரிகளின் நடுவில் வைக்கக் கூடிய வியக்கவைக்கும் குணங்கள் கொண்டவனே! எல்லையற்ற விபூதிகளையும் லீலைகளையும் கொண்டவனே! – இப்படியாக சேஷித்வம், சரணம் அடையத் தக்கவனாக இருத்தல், அடையப்படும் இலக்காக இருத்தல் ஆகிய தன்மைகளின் மேன்மையைக் கொண்டுள்ளவன் என்று கூறினார்; அவனை விட்டு தனது தாழ்மையால்

அகலுவோம் என்று உரைத்தார்; எல்லையற்ற வாத்ஸல்யம் கொண்டவனாகிய ஸர்வேச்வரனின் எல்லையற்ற கருணை காரணமாக அவனிடம் சேர்ந்தார். இப்படிப்பட்ட நம்மாழ்வாருடைய பால் போன்ற இனிமையானதும்; தமிழ் அறிந்தவர்கள், இசையை அறிந்தவர்கள், இதன் பொருள் உணர்ந்த காரணத்தினால் பக்தியில் நிலைநின்றவர்கள் ஆகியவர்களால் கொண்டாடப்படுவதும் ஆகிய திருவாய்மொழி என்ற ஆயிரம் பாசுரங்களில், "கடலில் முத்து கிட்டியது" என்று கூறுவது போன்று ஏற்பட்ட, ஸர்வேச்வரனின் சீலத்தை உணர்த்தவல்ல இந்தப் பத்துப் பாசுரங்களையும் பொருள் உணர்ந்து உரைக்கவல்லவர்களுக்கு "நான் தாழ்ந்தவன்" என்று எண்ணி, அவனை விட்டு அகல்கின்ற துன்பநிலை ஏற்படாது.

அவதாரிகை - நிகமத்தில், இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவல்லார்க்கு, அவன் வரக்கொள்ள அயோக்யதாநுஸந்தாநம் பண்ணி அகன்று இவர் பட்ட க்லேசம் படவேண்டா என்கிறார்.

விளக்கம் - இறுதியாக இந்தத் திருவாய்மொழியை, இதன் பொருள் உணர்ந்து உரைக்கவல்லவர்கள் பெறும் பயனை உரைக்கிறார். ஸர்வேச்வரன் தானாகவே அவர்கள் முன்பு வந்து நிற்கும்போது, "நான் அயோக்யன்" என்று தனது தாழ்வை எண்ணி, அகன்று சென்று, அதனால் எவ்விதம் துன்பப்பட்டாரோ அந்த நிலையை அவர்கள் அடைய மாட்டார்கள் என்று உரைக்கிறார்.

வ்யாக்யானம் - (மாலே) ஸ்வரூபத்தால் வந்த விபுத்வம். (மாயப்பெருமானே) குணத்தால் வந்த விபுத்வம். (மாமாயனே) சேஷ்டிதங்களால் வந்த ஆதிக்யம். (என்றென்று மாலேயேறி) ஏவம்விதமான வைலக்ஷண்யத்தை அநுஸந்தித்து, "நான் அயோக்யன்" என்று அகலும்படி பிச்சேறி. (மாலருளால் மன்னுகுருகூர்ச்சடகோபன்) தன்னை முடித்துக் கொள்வதாகக் கழுத்திலே கயிற்றையிட்டுக் கொண்டவனையறுத்து விழவிடுவாரைப் போலே, அகன்று முடியப்புக இவரைப் பொருந்த விட்டுக்கொள்ள, அவனருளாலே பொருந்தின ஆழ்வார். பிடிதோறும் நெய்யொழியச் செல்லாத ஸுகுமாரரைப்போலே, நின்றநின்ற நிலைகள்தோறும் அவனருளொழிய நடக்கமாட்டார்.

விளக்கம் – (மாலே) - இங்கு உள்ள "மாலே", "மாயப்பெருமானே", "மாமாயனே" என்ற பதங்கள் திருவாய்மொழி (1-5-1)ல் காணப்படும் "வானோர் இறையை", "வெண்ணெய்

தொடுவுண்ட" மற்றும் "இளவேறேமுந்தழுவிய" என்பதை விளக்குவதாக உள்ளன. (மாலே) – ஸ்வரூபம் காரணமாக ஏற்பட்ட ஸ்வாமித்வம். (மாயப்பெருமானே) – வியக்க வைக்கின்ற பல குணங்களால் ஏற்பட்ட உயர்த்தி. (மாமாயனே) – செயல்கள் மூலம் ஏற்பட்ட மேன்மை. இவனுடைய லீலைகள் அனைத்தும் காண்பவர்களின் மனதிற்கு ஆறுதல் அளிப்பதாகவும், வியக்கவைப்பதாகவும் உள்ளது. (என்றென்று மாலேயேறி) – இப்படியாக அவனிடம் காணப்படும் பலவிதமான மேன்மையைக் கருத்தில் கொண்டவராக, "இத்தனை உயர்ந்த அவன் முன்பாக நான் தாழ்ந்தவன்" என்று அகன்று செல்ல முனையும்படியாகப் புத்தி தடுமாறி. (மாலருளால் மன்னுகுருகூர்ச்சடகோபன்) - தர்மனை நிந்தனை செய்த காரணத்தினால் தற்கொலை செய்து கொள்ள முனைந்த அர்ஜுனனை க்ருஷ்ணன் காப்பாற்றினான் என்பதை மஹாபாரதம் கர்ணபர்வத்தில் காணலாம். இதே போன்று தன்னை மாய்த்துக் கொள்வதற்காகக் கழுத்தில் சுருக்கு மாட்டிக் கொண்டு இறக்கப் போகும் ஒருவனை, அந்தக் கயிற்றை அறுத்துக் காப்பாற்றுவது போன்று, இவர் அவனை விட்டு அகன்று செல்ல எண்ணியபோது, தன்னிடம் அவன் சேர்த்துக்கொண்டான். இப்படியாக அவன் கருணை காரணமாகவே அவனிடம் நிலைநின்ற ஆழ்வார். ஒவ்வொரு கைப்பிடி அளவு உணவு உட்கொள்ளும் போதும் நெய்யை அதில் சேர்த்துக் கொள்ளாமல் உண்ணுவதில்லை என்றுள்ள செல்வந்தர்கள் வீட்டில் இருக்கின்றவர்கள் போன்று, தன்னுடைய ஒவ்வொரு செயலிலும் அவனுடைய கருணை என்பது இல்லாமல் இவர் செயலாற்றமாட்டார். "பிடிதோறும்" என்பதை "ஒவ்வொரு செயலிலும்" என்று கொள்க. அதாவது திருவாய்மொழி (1-1-1) – மயர்வற மதிநலம் அருளினன் - என்பதில் ஞானம் மற்றும் பக்தி ஏற்பட்டது அவன் அருளால் மட்டுமே என்றார்; (1-4-6) – அருளாத நீர் அருளி – என்பதில் அவன் தன்னிடம் வருதல் அவன் அருளால் மட்டுமே - என்றார். "நான் உனக்கு ஏற்றவன் அல்லன்" என்று கூறும் தன்னைச் சேர்த்துக் கொண்டதும் அவன் அருளால் மட்டுமே என்றார். ஆக அவனைச் சேர்ந்துள்ள நிலை, பிரிந்துள்ள நிலை, தான் அயோக்யன் என்று கூறி அகல எண்ணும் நிலை என்று அனைத்திலும் அவன் அருளையே இவர் கண்டார்; அவன் அருள் இன்றி இவர் ஏதும் செய்வதில்லை.

வ்யாக்யானம் - (பாலேய் தமிழர்) பால்போலே இனிய தமிழையுடையவர்கள். (இசைகாரர்) இயலுக்கு இசைய இசையிடவல்லவர்கள். ஸ்ரீமதுரகவிகளையும் நாதமுனிகளையும் போலே இருக்குமவர்கள். (பத்தர்) பகவத் குணாநுபவத்தில் இவர் தம்மைப் போலே, "காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்" என்று இருக்குமவர்கள். ஆழ்வான் ஓர் உருவிலே - ஸ்ரீபராங்குசநம்பியை "பாலேய் தமிழர்" என்கிறது; "இசைகாரர்"

என்கிறது – ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையரை; "பத்தர்" என்கிறது பிள்ளையுறங்கா வில்லிதாஸரை என்று பணித்தானாம். "பாலேய் தமிழர்" என்கிறது முதலாழ்வார்களை; "இசைகாரர்" என்கிறது திருப்பாணாழ்வாரை; "பத்தர்" என்கிறது பெரியாழ்வாரை - என்று ஆளவந்தார் அருளிச்செய்வர். இயலறிவார் இசையறிவார் பகவத்குணவித்தராயிருப்பார்; இவர்கள் (பரவும்) இவர் அகலுகை தவிர்ந்து பாடினபின்பு உண்டான லோக பரிக்ரஹத்தைச் சொல்லுகிறது. (ஆயிரத்தின் பாலே பட்ட) "கடலிலே முத்துப்பட்டது" என்னுமாபோலே ச்லாக்யமான ஆயிரத்தின் நடுவே பட்ட இத்திருவாய்மொழி வல்லார்க்கு. (இல்லை பரிவது) பரிவதில்லை. அஞ்சிறைய மடநாரையிலே தூதுவிட்டு, அவன் வந்து ஸம்ச்லேஷோந்முகனானவாறே "அயோக்யன்" என்று அகன்று படும் துக்கமில்லை.

விளக்கம் - (பாலேய் தமிழர்) - பால் போன்று இனிமை கொண்ட தமிழை உடையவர்கள். (இசைகாரர்) - இயலுக்கு ஏற்றபடி இசையைச் சேர்க்க வல்லவர்கள். இவர்கள் யார் என்றால் ஸ்ரீமதுரகவியாழ்வார் மற்றும் ஸ்வாமி நாதமுனிகள் போன்றவர்கள். (பத்தர்) - ஸர்வேச்வரனின் குணங்களில் ஈடுபட்டுள்ள இவரைப் போன்றவர்கள். பெரியதிருவந்தாதி (34) - காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும் – ஸர்வேச்வரனுடைய சீலம் போன்ற குணங்களைக் கேட்டவுடன், கால்கள் நடக்க இயலாமல் தடுமாறுகின்றன, நெஞ்சம் தடுமாறியது, கண்கள் அப்படியே நிலைத்தன - என்பது போன்று உள்ளவர்கள். ஸ்வாமி கூரத்தாழ்வார் ஒருமுறை, "பாலேய் தமிழர்" என்று ஸ்ரீபராங்குசநம்பியையும், "இசைகாரர்" என்று ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையரையும், "பத்தர்" என்று பிள்ளை உறங்காவில்லிதாஸரையும் கூறினார். இதே போன்று ஸ்வாமி ஆளவந்தார், "பாலேய் தமிழர்" என்று முதலாழ்வார்களையும், "இசைகாரர்" என்று திருப்பாணாழ்வாரையும், "பத்தர்" என்று பெரியாழ்வாரையும் உரைத்தார். ஆக இயல்அறிவார்கள், இசை அறிவார்கள், பகவத் குணங்களில் ஈடுபட்டு உள்ளவர்கள் ஆகியவர்கள், (பரவும்) – இவர் அவனை விட்டு அகன்று செல்லாமல், அவனைக் குறித்து உரைத்த திருவாய்மொழியை உலகம் ஏற்றுக்கொண்டதை உரைக்கிறார். இவர் தனது திருவுள்ளத்தில், "இப்படிப்பட்ட உயர்ந்த வஸ்துவை, என்னுடைய உள்ளத்தால் நினைத்தபடியும், வாயால் உரைத்தபடியும் நான் தூஷிக்கமாட்டேன்", என்றும்; இவனை விட்டு அகல்வது என்றும் எண்ணினார். அவ்விதம் அகன்று சென்றால் இந்தத் திருவாய்மொழிக்குப் பின்னர் மற்ற பாசுரங்கள் தோன்றாமல் நின்றுவிடும் அல்லவோ? இதனை உணர்ந்த இயல் அறிபவர்கள், இசை அறிபவர்கள், பத்தர் ஆகியவர்கள் தவித்துப்போயினர். இதனைக் கண்ட ஆழ்வார்,

“இவ்விதம் இவர்களுக்கு நாம் உபகாரம் செய்கிறோமே”, என்று மகிழ்ந்து உரைக்கிறார். ஆயிரம் பாசுரங்களை அருளிச் செய்வதற்கு முன்பாகவே, “பத்தர் பரவும் ஆயிரம்” என்பது எவ்விதம் பொருந்தும் என்று கேட்கலாம். இவர் அனைத்தும் அறிந்தவர் என்பதால், திருவாய்மொழி முழுவதும் அருளிச்செய்த பின்னர் ஏற்படக்கூடிய “உலகம் இதனை ஏற்றது” என்ற நிலையை இப்போதே அறிவார் என்று கருத்து. (ஆயிரத்தின் பாலே பட்ட) – “கூறியது” என்று உரைக்காமல் “பட்டது” என்று உரைத்தது ஏன்? “பட்டது” என்றால் “உண்டானது” என்று பொருள். அதாவது கடலில் முத்து உண்டாவது போன்று உண்டான இந்தத் திருவாய்மொழி; அதனைப் போன்று திருவாய்மொழி என்ற கடலில் உள்ள ஆயிரம் பாசுரங்களுக்கு நடுவில் உண்டான இந்தத் திருவாய்மொழியைக் கற்பவர்களுக்கு. (இல்லை பரிவது) – “அஞ்சிறைய மடநாராய்” என்ற திருவாய்மொழி மூலம் தூதுவிட்டார். இதனைக் கண்ட அவன் ஓடிவந்து இவருடைய சேர்க்கைக்காக நின்றான். ஆனால் அப்போது “நான் அயோக்யன்” என்று அகல எண்ணி, அதனால் மிகுந்த துயரம் கொண்டார். இந்தத் திருவாய்மொழியைக் கற்பவர்களுக்கு அப்படிப்பட்ட துன்பம் ஏதும் இல்லை என்கிறார்.

வ்யாக்யானம் – முதற்பாட்டில், “அயோக்யன்” என்று அகன்றார்; இரண்டாம்பாட்டில், அகலுகைக்கு தானும் அதிகாரியல்லேன் என்றார்; மூன்றாம்பாட்டில், சீல குணத்தைக் காட்டித் துவக்கத் துவக்குண்டார்; நாலாம்பாட்டில், அகலவொட்டுவர்களோ உடையவர்கள்? என்கிறார்; அஞ்சாம்பாட்டில், உடைய உன் திருவடிகளைக் கிட்டும்படி பார்த்தருள வேணுமென்கிறார்; ஆறாம்பாட்டில், அவன் அரைக்ஷணம் தாழ்க்க, முடியப் புகாநின்றேன் என்றார்; ஏழாம்பாட்டில் அவ்வளவில் அவன் வரக்கொள்ள, அயோக்யன் என்று அகன்றார்; எட்டாம்பாட்டில், ”திருவாய்ப்பாடியில் வெண்ணெயோபாதி உம்மோட்டை ஸம்ச்லேஷம் தாரகம்” என்றான் அவன்; ஒன்பதாம்பாட்டில், ”அப்படி அல்ல, இது நஞ்சு” என்ன, ”நஞ்சு தானே நமக்கு தாரகம்” என்றான்; பத்தாம்பாட்டில், தம்மை இசைவித்துப் பரமபதத்தைக் கோடிக்கத் தொடங்கினான் என்கிறார்; நிகமத்தில், கற்றார்க்குப் பலஞ்சொல்லித் தலைக்கட்டினார்.

விளக்கம் - முதற்பாசுரத்தில், “நான் அயோக்யன்” என்று உரைத்து, அகன்று சென்றார். இரண்டாம் பாசுரத்தில், “அவ்விதம் அகல்வதற்குக்கூட எனக்குத் தகுதி இல்லை”, என்றார். மூன்றாம் பாசுரத்தில், அவன் தனது சீல குணத்தை இவருக்கு உணர்த்தி தன்னுடன்

ஸம்பந்தம் ஏற்படுத்திக் கொள்ள முயன்றபோது, இவரும் அவ்விதம் சேர்ந்தார். நான்காம் பாசுரத்தில், "பொருளின் மீது உடைமை உள்ளவர்கள் தங்களிடம் வந்து சேர்ந்த பொருள் அதன் பின்னர் தங்களைப் பிரிந்து செல்லவிடுவார்களோ?", என்றார். ஐந்தாம் பாசுரத்தில், "உனது திருவடிகளை நான் கிட்டும்படியாக நீ என்னை கடாக்ஷிக்கவேண்டும்", என்றார். ஆறாம் பாசுரத்தில், அவன் வருவதற்கு அரைநொடி தாமதம் செய்யவே, "இதோ, நான் முடியப்போகிறேன்", என்றார். ஏழாம் பாசுரத்தில், "திருவாய்பாடியில் உள்ள வெண்ணெய் நமக்கு எவ்விதம் தாரகமாக உள்ளதோ அதுபோன்று உம்முடைய தொடர்பும் நமக்கு உள்ளது", என்று ஸர்வேச்வரன் உரைக்கிறான். ஒன்பதாம் பாசுரத்தில், "அவ்விதம் அல்ல, என்னுடைய சரீரம் நஞ்சு போன்றது", என்று உரைக்க ஸர்வேச்வரன், "நஞ்சுதானே நமக்குத் தாரகமாக உள்ளது", என்கிறான். பத்தாம் பாசுரத்தில் தன்னை அவன் பக்கம் இணைத்துக்கொண்டு, தனக்காகப் பரமபதத்தை அலங்கரிக்கத் தொடங்கினான் என்கிறார். இறுதியாக, இந்தத் திருவாய்மொழியைக் கற்பவர்களுக்கு ஏற்படும் பலனை உரைக்கிறார்.

திருவாய்மொழி முதற்பத்து ஐந்தாம் திருவாய்மொழி ஸம்பூர்ணம்

முதற்பத்து ஆறாம் திருவாய்மொழி
பரிவதில் ப்ரவேசம்

வ்யாக்யானம் - முதல் திருவாய்மொழியிலே, அவன் ஸர்வஸ்மாத்பரனாயிருக்கிறபடியைத் தாம் அநுபவித்தார்; இரண்டாம் திருவாய்மொழியிலே, இப்படி பரனானவனை பஜியுங்கோள் என்கிறார்; அநந்தரம், பஜநத்துக்குறுப்பாக அவனுடைய ஸௌலப்யத்தை அருளிச் செய்தார்; அதுக்குறுப்பாக அவனுடைய அபராதஸஹத்வத்தை அருளிச்செய்தார்; அதுக்குறுப்பாக சீலவானென்றார். இவையெல்லாம் உண்டானாலும் பசையில்லையிறே பரிமாற்றத்திலே அருமை தட்டியிருக்குமாகில் என்ன; அது வேண்டா, ஸ்வாரதன் என்கிறார்.

விளக்கம் - கீழே உள்ள ஐந்து திருவாய்மொழிகளில் பல குணங்களை அருளிச்செய்தார். இந்தத் திருவாய்மொழியில் ஸ்வாராதனை அல்லது ஸ்வாராதத்வம் என்பதான "ஆராதனை செய்வதற்கு எளியவன்" என்பதை, கேள்விபதில் முறையில் விளக்குகிறார். முதல்

திருவாய்மொழியில் அனைவரையும் விட ஸர்வேச்வரன் மிகவும் உயர்ந்தவனாக உள்ளதை அனுபவித்தார்; இரண்டாம் திருவாய்மொழியில் இவ்விதம் உயர்ந்தவனாக உள்ள அவனை வழிபடுங்கள் என்றார்; அடுத்து, அவ்விதம் வழிபடுவதற்கு ஏற்றபடி உள்ள அவனது எளிமை (ஸௌலப்யம்) உள்ளது என்றார்; வழிபடுவதற்கு ஏற்றபடி உள்ள அனைத்தையும் பொறுத்துக் கொள்கின்ற தன்மையை அடுத்ததாக அருளிச்செய்தார்; அதற்கு ஏற்றபடியாக உள்ள அவனது சீல குணத்தை அடுத்து அருளிச்செய்தார். இவை அனைத்தும் இருந்தாலும், ஆராதனை செய்வதற்கு மிகவும் அரிய வஸ்துவாக இருந்தால் எந்தப் பயனும் இல்லை அல்லவோ என்று கேட்க, "அந்த ஐயம் வேண்டாம், எளிமையாக ஆராதிக்கத்தக்கவன்", என்கிறார்.

வ்யாக்யானம் - கீழில் திருவாய்மொழியிலே, "அயோக்யன்" என்று அகன்ற இவரைப் பொருந்த விட்டுக்கொண்ட இதுக்கு ஒரு ப்ரயோஜநம் கண்டிலோமீ! பொருந்தவிட்டுக் கொள்ளுகிறதுதான் ஒரு பரிமாற்றத்துக்கிறே. அதில், க்ஷேத்ரனான இவனாலே க்ஷேத்ரோபகரணங்களைக்கொண்டு ஸர்வேச்வரனை ஆச்ரயித்துத் தலைக்கட்டப் போகாமையாலே, ஸர்மஸாரியான இவனாலே நேர்கொடு நேராய் ஆச்ரயித்துத் தலைக்கட்டவெண்ணாதபடி அவாப்த ஸமஸ்தகாமனாயிருக்கையாலும், இவனிட்டது கொண்டு த்ருப்தனாக வேண்டாதபடி பரிபூர்ணனாகையாலும், இவ்விரண்டுக்கும் அடியாக ஸ்ரீய:பதியாயிருக்கையாலும், இவன் அவனை ஆச்ரயிக்கை என்றொரு பொருளில்லையீ என்ன? அது வேண்டா, அப்படிகளடைய ஆச்ரயணத்துக்கு உறுப்பு, இவன் தன் ஸ்வரூப லாபத்துக்கு உறுப்பாகக் கிஞ்சித்கரிக்கும் இதுதான் தன்பேறாக நினைத்திருக்கும்; இதுக்கு மேற்படத் தனக்கு வேறான்று தேடவேண்டாதபடி எல்லாம் கைப்புகுந்திருப்பானொருவனாகையாலும், இவன் இட்டது கொண்டு த்ருப்தனாக வேண்டாதபடி பரிபூர்ணனாயிருக்கையாலே, இவன்பக்கல் பெற்றதுகொண்டு முகங்காட்டுகைக்கு உடலாயிருக்கையாலும், ஸ்ரீய:பதியாகையாலே ஸுசீலனாயிருக் கையாலும், இதர ஸமாச்ரயணம்போலே பகவத்ஸமாச்ரயணம் அருமைப்பட்டிராது. இனி, இதுதன்னிலே இழியவே, விரோதிகளடங்கலும் நசிக்கும்; ஆச்ரயணாந்தான் க்லேச ரூபமாயிருக்கையன்றியே போகரூபமாயிருக்கும்; இவனுக்கு வருந்தி ஒன்றும் தேடவேண்டாதபடி பெற்றது உபகரணமாயிருக்கும்; பகவத்ஸமாச்ரயணமாகையாலே ப்ரத்யவாய ப்ரஸங்கமில்லை; த்ரவ்யநியதி, காலநியதி, அதிகாரிநியதி இல்லை; இப்படி யிருக்கையாலே ஆச்ரயணம் ஸுகரம்; ஆச்ரயியுங்கோள் என்கிறார்.

விளக்கம் - கீழில் உள்ள திருவாய்மொழிகளில் இவர் தன்னை "அயோக்யன்" என்று கூறிக்கொண்டார்; அதனால் நம்மை விட்டு அகல முனைந்தார்; அப்படிப்பட்ட இவரை (இவரை என்றதன் மூலம் உலகில் உள்ள அனைத்து சேதநர்களும் கூறப்படுகின்றனர்) நாம் நம்முடன் சேர்த்துக்கொண்டோம்; இதனால் நமக்கு என்ன பயன் வந்தது - என்று ஸர்வேச்வரன் சிந்தித்தான். ஆனால் இவரைத் தன்னுடையவர் என்று சேர்த்துக் கொண்டதன் மூலம், தன்னைத் தாழ்ந்தவர் என்று எண்ணிய ஆழ்வாரை சேர்த்துக் கொண்டதால், இதனைக் காணும் அனைவரும் இவனுடைய ஸௌசீல்ய குணத்தைக் கண்டு வியந்து, இவனிடம் அண்டி நிற்பர்கள் என்பதே பயன் அல்லவோ என்று கூறலாம். அப்படி உள்ளபோது ஸர்வேச்வரனின் திருவுள்ளத்தில், "நமக்கு என்ன பயன் வந்தது" என்ற சந்தேகம் ஏன் எழுந்தது? மிகவும் தாழ்ந்த இந்த மக்களால், மிகவும் அற்பமான பொருள்கள் மூலம், ஸர்வேச்வரனாகிய நாம் நம்முடைய ஸௌசீல்ய குணத்தை வெளிப்படுத்துவதன் மூலம் ஆராதிக்கப்படுவோம் என்றும், நம்மை இவர்கள் அண்டுவார்கள் என்றும் எண்ணினான். ஆனால் அவ்விதம் இவன் எண்ணம் கைகூடாமல் போகவே இவ்விதம் சந்தேகம் கொண்டான். இதற்கு ஒரு சமாதானம் உரைக்கக்கூடும்; அதாவது ஸம்ஸாரியான சேதநன் ஸர்வேச்வரனை முற்றிலுமாக அண்டி நின்று அவனுக்கு ஏற்றபடியான வஸ்துக்களைச் சமர்ப்பிக்க எண்ணலாம்; ஆனால் அத்தகைய செயல் ஏன் நிறைவேறுவது இல்லை என்றால் - ஸர்வேச்வரன் பரிபூர்ணன் என்றும், நாம் அளித்தா அவனுக்கு ஏதேனும் சேரப்போகிறது என்றும் - ஸம்ஸாரிகள் எண்ணிக் கொள்வதால் ஆகும்; மேலும் ஸம்ஸாரிகளான நாம் இடுவதைக் கொண்டு அவன் திருப்தி அடையவேண்டிய அவசியம் அவனுக்கு இல்லை, அவன் அனைத்தும் உள்ளவன் என்று எண்ணுவதால் ஆகும்; மேலும் இந்தத் தன்மைகள் (பரிபூர்ணன், அவாப்தஸமஸ்தகாமன்) ஸர்வேச்வரனுக்கு எப்படி உண்டானது என்றால், பெரியபிராட்டியின் நாயகனாக உள்ளதால் என்னும்போது ஆகும் – என்று எண்ணுகிறார்கள். இவ்விதம் அவர்கள் எண்ணுவது சரியே அல்லவோ? அப்படி உள்ளபோது அவர்கள் ஸர்வேச்வரனுக்குத் தங்களால் இயன்றவற்றை அளித்து, அவனை அண்டி நிற்பதற்கு இயலாத அல்லவோ? இதற்கு விடை அளிக்கிறார். அவன் அனைத்தையும் நிரம்பப் பெற்றவன்; அனைத்து விருப்பங்களும் கைக்கூடப்பெற்றவன்; பெரியபிராட்டியின் நாயகன் போன்ற பல தன்மைகளைக் கொண்டதன் காரணமாகவே பலராலும் அண்டுவதற்கு ஏற்றவனாக உள்ளான் என்றே கொள்ளவேண்டும், ஏன்? சேதநன் தனது ஸ்வரூப லாபத்திற்காக இவ்விதம் தொண்டுகள் செய்வான்; இவற்றை ஸர்வேச்வரன் தனது பேறு என்று எண்ணியிருப்பான். ஸர்வேச்வரனுடைய - அனைத்தையும் கொண்டவன், அனைத்து

விருப்பங்களும் நிறைவேறப் பெற்றவன், பெரியபிராட்டியின் நாயகன் என்னும் தன்மைகள் - எவ்விதம் அவனை அண்டுவதற்கு ஏற்றவனாகச் செய்கின்றன என்ற கேள்விக்கு விடை அளிக்கிறார். தன்னிடம் அனைத்தும் உள்ளதால், அவற்றைக் காட்டிலும் தனக்கு வேறு ஏதும் வேண்டாதபடி உள்ளதால், அவர்கள் அளிப்பது அற்பமான இருந்தாலும் ஏற்பான்; அனைத்தும் பரிபூர்ணமாக உள்ளவன் என்பதால், அவர்கள் இட்டதை ஆராய்ந்து பார்த்த பின்னரே திருப்தி அடையவேண்டாதபடி, முதலிலேயே மனநிறைவுடன் உள்ளான்; ஆகவே அவர்கள் அளித்ததை மட்டுமே கொண்டு தன்னை வெளிப்படுத்துகிறான்; பெரியபிராட்டியின் நாயகனாக உள்ளதால் அவளுடைய ப்ரஜைகளான சேதநர்களிடம் ஸௌசீல்யம் வெளிப்படுகிறது. ஆகவே மற்ற தெய்வங்களை அண்டுவது போன்று மிகவும் கடினப்பட்டு ஸர்வேச்வரனை அடைய வேண்டிய அவசியம் இராது. இதனையே (1-6-1) - புகைபூவே என்று உரைக்க உள்ளார்.

இப்படியாக உள்ள இவனை அண்டினால் என்ன பயன் என்பதை அடுத்து அருளிச் செய்கிறார். விரோதிகள் அடங்கி, வினை அழிந்துபோகும் என்பதை (1-6-10) – கடிவார் தீய வினைகள் நொடியாருமளவைக்கண் – என்பதிலும், (1-6-8) – வல்வினை மாள்வித்து - என்பதிலும் கூறுகிறார்; மற்ற தெய்வங்களை அடைவது போன்று வருத்தம் இல்லாமல் சுகமாக இருக்கும் என்பதை (1-6-5) – உள்கலந்தார்க்கோரமுது - என்றும், (1-6-6) – அமுதிலுமாற்றவினியன் - என்றும் உரைக்கிறார்; இவனுக்கு அளிப்பதற்காக மிகவும் முயற்சிகள் செய்து, எதனையும் தேடி அளிக்கவேண்டிய அவசியம் இல்லாமல், கையில் கிட்டியதை அளிக்கலாம் என்பதை (1-6-1) – புரிவதுவும் புகைபூவே - என்கிறார்; ஸர்வேச்வரனாகிய இவனை அண்டுவதற்கு, இவன் ஸர்வேச்வரன் என்பதால் வணங்கும் முறைகளில் ஏதேனும் அபசாரம் ஏற்படுமோ என்ற அச்சம் தேவையில்லை என்கிறார். அதாவது கீதையில் (2-40) – நேஹாபிக்ரமநாச: அஸ்தி ப்ரத்யவோயோ ந வித்யதே - என்றது காண்க. இன்னகாலம், இன்னபொருள், இன்ன மனிதர்கள் மட்டுமே இவனை வழிபடுவதற்கு ஏற்றவை என்பது போன்ற கட்டுப்பாடுகள் ஏதும் இல்லை. இன்னவஸ்து என்ற விதிமுறை இல்லை என்பதைத் திருவாய்மொழி (1-6-5) – கொள்கைகொளாமை இலாதான் – என்பதை திருவுள்ளத்தில் கொண்டு உரைத்தார். காலக்கட்டுப்பாடு ஏதும் இல்லை என்பது - ப்ராதர்நிசி ததா ஸந்த்யா மத்யாஹ்நாதிஷு ஸம்ஸ்மரந் நாராயணமவா ப்நோதி ஸத்ய: பாபக்ஷயம் நர: - விடியற்காலை, சாயங்காலம், நடுப்பொழுது, நடுஇரவு என்று எப்போதும் நாராயணனை நினைத்தபடி உள்ளவர்களின் பாவம் அழிகிறது - என்பதை மனதிற்கொண்டு உரைக்கப்பட்டது. அதிகாரி நியமம் இலலை என்பது (1-6-2) –

முதுவே முதல்வனுக்கு எதுவேதென்பணி என்னாததுவே ஆட்செய்யுமீடே – என்பதைக் கொண்டு ஆகும். இப்படியாக உள்ளதால் அவனை அடைவது மிகவும் எளிது, ஆகவே அவனை அண்டுங்கள் என்கிறார்.

வ்யாக்யானம் – "த்வதங்க்ரிமுத்திச்ய" அல்லாத ஆச்ரயணீயரிற்காட்டில் இவனுக்கு உண்டான வ்யாவ்ருத்தியும், இவன் பக்கல் சேஷபூதனுக்கு இழியும் துறை திருவடிகளென்னுமிடமும் சொல்லுகிறது. "கதாபி" காலநியதியை விதிக்கிற கர்மத்திற் காட்டில் வ்யாவ்ருத்தி. "கேநசித்" அதிகாரிநியதியை விதிக்கிறவற்றிற்காட்டில் வ்யாவ்ருத்தி. "யதாததா" க்ரம நியதியை அபேக்ஷித்திருக்கும் கர்மங்களில் வ்யாவிருத்தி. "வா", "அபி" என்கையாலே விகல்ப ஸமுச்சயங்களில் ஒன்றே ஆகக்கடவது என்கிற கர்மத்திற்காட்டில் வ்யாவ்ருத்தி. "ஸக்ருத்" தீர்க்கஸத்ராதிகளில் வ்யாவிருத்தி. "க்ருத" ஆதிகர்மணிக்தவாய், உத்யோகமாத்ரத்திலே பலமாகச் சொல்லுகிறது. "அஞ்ஜலி:" வித்தவ்யயா ஸஹகாரி ஸாத்யமான அச்வமேதாதிகளில் வ்யாவ்ருத்தி. "ததைவ" தேசாந்தரே காலாந்தரே நின்று பலிப்பனவாகச் சொல்லுகிற கர்மங்களில் வ்யாவ்ருத்தி. "முஷ்ணாதி" - "இவன்தான் தொடர்ந்து பிடிக்கும்" என்று இவனை அறியாமே போம் என்கை. "சும்மெனாதே கைவிட்டோடித் தூறுகள் பாய்ந்தன" என்கிறபடியே. "அசுபாநி" ஒரு கர்மம் ஒரு பாபத்தைப் போக்குவதாகச் சொல்லுகிற அதில் வ்யாவ்ருத்தி. "அசேஷத:" வாஸனை கிடக்கப் போக்கும் கர்மங்களில் வ்யாவ்ருத்தி. "சுபாநி" ஒரு ஸுக்ருதம் ஒரு பலத்தைப் பலிப்பதாகச் சொல்லுவதில் வ்யாவ்ருத்தி. "புஷ்ணாதி" தீமையைப் போக்கி விடுமளவன்றிக்கே, அது போனவிடமெங்கும் நன்மையாலே நிறைக்கும். "ந ஜாது ஹீயதே" பலத்தைக் கொடுத்துத் தான் நசித்துப்போமதில் வ்யாவ்ருத்தி.

விளக்கம் – இவனை அண்டுவது எளியது என்பதற்கான ப்ரமாணம் காண்பிக்கிறார். இந்த ப்ரமாணம் கீழே உள்ள ஸ்தோத்ரரத்னம் (28) ஆகும்:

த்வத் அங்க்ரிம் உத்திச்ய கதாபி கேநசித்
யதா ததா வாபி ஸக்ருத் க்ருத: அஞ்ஜலி:
ததைவ முஷ்ணாதி அசுபாநி அசேஷத:
சுபாநி புஷ்ணாதி ந ஜாது ஹீயதே

இதன் பொருள் - உனது திருவடிகளைப் பற்றி யாராவது ஒருவன், ஏதாவது ஒரு காலத்தில், எந்தவிதத்திலாவது ஒருமுறை அஞ்ஜலி செய்தான் என்றால், அந்த அஞ்ஜலியானது அவனது பாவங்களை அப்போதே மீதம் இல்லாமல் நீக்குகிறது,

நன்மைகளை எப்போதும் குறையவிடாமல் வளரச்செய்கிறது – என்பதாகும். இதனை விளக்குகிறார். மற்ற தெய்வங்களைக் காட்டிலும் இவனுக்கு உள்ள வேற்றுமையையும் இவனது அடியார்கள் இவனிடம் வந்து சேரும் இடமாக இவனது திருவடிகளே உள்ளன என்பதையும் கூறுகிறார். அதாவது ஸ்தோத்ரரத்னத்தில் (25) – நாத, (26) – மஹேச - என்று பலவிதமாகக் கூறி வந்த ஸ்வாமி ஆளவந்தார், இவ்விதமாக இவனே எஜமானனாக உள்ளான் என்பதை வெளிப்படுத்தும்விதமாக (28) – த்வத் - என்று தொடங்கும் இந்த ச்லோகத்தை அருளிச்செய்தார். மற்ற தெய்வங்கள் அப்ராப்தர்களாக, இவன் மட்டுமே கேட்டதை அளித்து தன்னையும் அளிக்கும் ப்ராப்தனாக உள்ளதால் உயர்ந்தவன் என்று கருத்து. அவனது மற்ற திவ்ய அவயவங்கள் பல உள்ளபோது, ஸ்தோத்ரரத்னத்தில் திருவடிகள் பற்றிக் கூறப்பட்டதால், "இவன் பக்கல்" என்று அருளிச்செய்கிறார். அடுத்து உள்ள பல வரிகளில் மேலே உள்ள ஸ்தோத்ரரத்ன ச்லோகத்தில் காணப்படும் கருத்துக்களை விவரிக்கிறார். உபநிஷத்தில் – வஸந்தே வஸந்தே ஜ்யோதிஷா யஜேத – வஸந்த காலங்களில் ஜ்யோதிஷோமம் செய்யக்கடவன் – என்பதைத் திருவுள்ளம் பற்றியவராக, கதாபி - ஒரு நாளாவது - என்று ஸ்தோத்ரரத்னத்தில் (28) கூறியதை உரைக்கிரார்; அதாவது சில கர்மங்களுக்குச் சில காலநியமங்களை விதிக்கின்ற கர்மங்களைக் காட்டிலும் இவன் திருவடிகளில் செய்கின்ற அஞ்ஜலி என்னும் கர்மம் வேறுபட்டது என்று கருத்து. "கேநசித்" - யார் ஒருவனாலாவது – இதன் மூலம் மற்ற கர்மங்களை இயற்றுவதற்கான அதிகாரிகள் பற்றிய தகுதிகள் கூறப்பட்டு, அந்த அதிகாரிகளுக்கும், அஞ்ஜலி செய்கின்ற இந்த அதிகாரிக்கும் உள்ள வேற்றுமை கூறப்பட்டது; அதாவது இங்கு இவனது திருவடிகளைப் பற்றி, அஞ்ஜலி செய்வதற்கு இன்ன அதிகாரி என்ற நியமம் இல்லை என்று கருத்து. "யதா ததா" – எந்தவிதத்திலாவது - இதன் மூலம் இன்ன கர்மங்களை, இன்ன முறையில்தான் செய்யவேண்டும் என்று உரைக்கின்ற விதிமுறைகளிற்காட்டில், ஸர்வேச்வரனின் திருவடிகளைப் பற்றிக் கொண்டு, அஞ்ஜலி செய்யும் செயலுக்கு வேறுபாடு உள்ளது என்பது கூறினார்; இதற்கு "இப்படித்தான் செய்யவேண்டும்" என்று விதிமுறை இல்லை. "வா, அபி" என்பதன் மூலம் "இந்தக் கர்மத்தைச் செய்யவேண்டும் அல்லது அந்தக் கர்மத்தைச் செய்யவேண்டும்" என்று கூறப்படும் விகல்பநியமம், "இந்த அனைத்துக் கர்மங்களையும் ஒன்றாக, ஒரே தொகுப்பாகச் செய்யவேண்டும்" என்பதான ஸமுச்சய நியமம் போன்ற விதிகளுக்குட்பட்ட கர்மங்களைக் காட்டிலும் அஞ்ஜலி செய்வதான இந்தக் கர்மம் வேறுபட்டது என்று உணர்த்தப்பட்டது. "ஸக்ருத்" என்றால் ஒருமுறை என்று பொருள்; இதன் மூலம் பலகாலமாக இயற்றப்படவேண்டிய தீர்க்கஸத்ரம் போன்ற யாகங்களுக்கும் இதற்கும் இடையே உள்ள வேறுபாடு உணர்த்தப்பட்டது. "க்ருத:" என்றால் "செய்யப்பட்ட" என்று பொருள்; அதாவது இந்தக் கர்மத்தைச் செய்த உடனேயே பலன்

கூறப்படுகிறது. “அஞ்ஜலி” என்பதன் மூலம் மிகுந்த பொருட்செலவு மற்றும் சரீரத்தை வருத்தி இயற்றப்படுகின்ற அச்வமேத யாகம் போன்றவற்றுக்கும் இதற்கும் இடையே உள்ள வேறுபாடு காட்டப்பட்டது. “ததைவ” என்றால் “அப்போதே” என்று பொருள்; இதன் மூலம் இன்ன இடம், இன்ன காலம், இன்ன சரீர அதிகாரி என்பது போன்றதான விதிகளுக்கு உட்பட்டுள்ள கர்மத்திற்கும் இதற்கும் வேறுபாடு காட்டப்பட்டது.

”முஷ்ணாதி” என்றால் போக்குதல் என்று பொருள்; ஒருவன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அவனிடம் உள்ள வஸ்துவை எடுத்தால், அவன் துரத்தி வந்து மீண்டும் எடுத்துக்கொள்வான் அல்லவா; அது போன்று அல்லாமல் இந்தக் கர்மம் மூலம் இவனது பாவங்கள், இவன் அறியாமலேயே போக்கப்படுகின்றன; அதாவது பாவம் போகிறது என்றால் இவன் ஓடிவந்து பிடித்துக்கொள்வான் என்பதால், இவன் அறியாதபோது போகின்றன; பெரியாழ்வார் திருமொழி (5-4-3) – சும் என்னாதே கைவிட்டு ஓடித் தூறுகள் பாய்ந்தனவே - இவன் பாவங்கள் மூச்சு விடாமல் ஓடிச்சென்று காடுகளில் புகுந்தன – என்பது போன்று ஆகும். “அசுபாநி” என்றால் ”பாவங்களை” என்று பொருள்; ஏன் பன்மையில் கூறினார்? மற்ற கர்மங்கள் அனைத்தும் அந்தந்த கர்மங்களை இயற்றிய பின்னர் அந்தந்த கர்மத்தால் போகக்கூடிய ஏதேனும் ஒரு பாவத்தை மட்டுமே போக்குவதாக உள்ளன; ஆனால் இந்தக் கர்மம் அனைத்துப் பாவங்களையும் போக்கும் என்பதால் வந்த வேறுபாட்டைப் பன்மையால் காட்டுகிறார். பன்மையால், மோக்ஷத்திற்கு விரோதியாக உள்ள புண்ணியத்தையும் போக்கும் என்கிறார். “அசேஷத:” என்றால் “மீதம் இல்லாமல்” என்று பொருள்; அதாவது பாவங்கள் ஏதும் மீதம் இல்லாமல், அவற்றின் வாஸனையுடன் அழிகின்றன. ”சுபாநி” என்றால் “நன்மைகள்” என்று பொருள்; அதாவது நன்மையை அளிக்கவல்ல ஜ்யோதிஷ்டோமம் போன்ற கர்மங்கள் ஏதேனும் ஒரு பலனை மட்டுமே அளிக்கின்றன; ஆக அந்தக் கர்மங்களைக் காட்டிலும் அனைத்து நன்மைகளையும் அளிக்கவல்ல இதற்கு உள்ள வேறுபாடு காண்பித்தார். “புஷ்ணாதி” என்றால் வளரச்செய்கிறது என்று பொருள்; அதாவது தீமைகளைப் போக்குவதுடன் மட்டுமே நின்றுவிடுவதில்லை. அந்தத் தீமைகள் அகன்ற பின்னர் அவை விட்டுச்சென்ற வெற்றிடம் எங்கும் நன்மைகளால் நிரப்பப்படும் என்று கருத்து. “ந ஜாது ஹீயதே” என்றால் எப்போதும் குறையாமல் உள்ளது என்று பொருள்; மற்ற தெய்வங்கள் வரங்களை அளித்துவிட்டு தாங்கள் அழிந்துவிட வழி தேடுவது போன்று இங்கு இல்லை; தன்னிடம் அஞ்ஜலி செய்தவனுக்கு எத்தனை அளித்தாலும் ”இவனுக்குக் குறைவாக அளித்தோமோ” என்று எண்ணியபடியே ஸர்வேச்வரன் உள்ள நிலை; மஹாபாரதம்

உத்யோகபர்வம் – ருணம்ப்ரவ்ருத்தம் - திரௌபதி என்னைக் கோவிந்தா என்று அழைந்த கூக்குரல் என்பது, வளர்ந்த கடன் போன்று எனது இதயத்தை விட்டு அகலாமல் உள்ளது – என்றது காண்க.

வ்யாக்யானம் – "பத்ரம் புஷ்பம் இத்யாதி" த்ரவ்யதாரதம்யம் பார்ப்பதில்லை; இடுகிறவன் நெஞ்சில் ஈரமேயாயிற்று பார்ப்பது. "அச்நாமி" இப்படி தரப்பட்டவற்றை மநோரதபதத்துக்கும் அவ்வருகானவை கைப்புகுந்தாற்போலே நினைத்திருப்பன் என்னுதல்; அவன் கலங்கித் தருமாபோலே நானும் கலங்கி அடைவுகெட விநியோகம் கொள்ளுவன் என்னுதல். "அந்யத் பூர்ணாதபாம் கும்பாத் இத்யாதி:", "ந சேச்சதி" இவனுடைய உத்யோகமாத்ரத்திலே வயிறு நிறையுமாயிற்று அவனுக்கு. "யா க்ரியாஸ் ஸம்ப்ரயுக்தாஸ்ஸ்யு:" அபிமத விஷயத்தின் பரிமாற்றம்போலே எல்லாம் உத்தேச்யமாய்த் தோற்றம். "ஏகாந்த கதபுத்திபி:" இதொன்றுமே வேண்டுவது. "தாஸ்ஸர்வா:" அவற்றில் ஒன்றும் விட்டுப்பிடியான். "சிரஸா ப்ரதிக்ருஹ்ணாதி" இவன் காலாலே பொகட்ட வற்றையும் அவன் தலையாலே சுமக்கும். "தேவ:" காலாலே கொள்ளப்பிறந்தவன். "ஸ்வயம்" செல்வக்கிடப்பு உண்டென்னா, மஹிஷீஸ்வேதத்துக்கு ஆளிடவொண்ணாதே. ஆக, இப்படிகளாலே அவனுடைய ஸ்வாராததையைச் சொல்லுகிறார் இத்திருவாய்மொழியிலே.

விளக்கம் - கீதை (9-86) - பத்ரம்புஷ்பம் – பச்சை இலை, மலர், பழம், நீர் போன்ற இவற்றை யார் அன்புடன் எனக்கு அளிக்கிறானோ - என்பதற்கு ஏற்ப, அளிக்கப்படும் வஸ்துவின் ஏற்றத்தாழ்வுகளை இவன் ஆராய்வதில்லை; அளிப்பவன் உள்ளத்தில் இருக்கின்ற தன்மை எப்படிப்பட்டது என்று மட்டுமே பார்க்கிறான். இந்த ச்லோகத்தில் உள்ள "அச்நாமி" என்ற பதம் காண்க. "அசு வ்யாப்தௌ" என்றும், "அச போஜநே" என்றும் இந்தத் தாதுவிற்குப் பொருள் உண்டு. "அசுவ்யாப்தௌ" என்று கொள்ளும்போது வ்யாப்தி என்பது கூறப்பட்டு, அதனால் அபரிச்சேத்யம் (அளவுபடாத தன்மை) கூறப்பட்டது; பக்தர்கள் அளிப்பது சிறியதாகவே இருந்தாலும் அதற்கு அளவுபடாத தன்மை உள்ளதாகவே நான் கொள்கிறேன் - என்று கருத்து. "அச போஜநே" என்று கொண்டால், பெரும்பசியுடன் உள்ளவனுக்கு நாம் சிறிய அளவு கொடுத்தாலும் அதனைப் பெரிதாக எண்ணுவான்; மேலும் நாம் அளிப்பதை மீதம் வைக்காமல் உண்பான்; இதனைக் கருத்தில் கொண்டு இங்கு, அடியார்கள் அளிப்பது சிறிதாக இருந்தாலும்

ஏற்பதாகக் கொள்ளவேண்டும். அடியார்கள் அன்பு காரணமாகக் கலங்கியபடி அளிப்பவற்றை, ஸர்வேச்வரனும் அந்த அன்பினால் கலங்கியபடியே ஏற்கிறான். மஹாபாரதம் – அந்யத் பூர்ணாதபாம் கும்பாதந்யத் பாதாவநேஜநாத் அந்யத் குசல ஸம்ப்ரச்நாத் ந சேச்சதி ஜநாதந: - க்ருஷ்ணன் தனக்கு அளிக்கப்படும் பூர்ணகும்பத்தைக் காட்டிலும் வேறு எதனையும் விரும்பாதவன்; அவனுடைய திருவடியைக் கழுவுவதற்கு வைக்கப்படும் நீரே போதுமானது - என்று ஸஞ்சயன் கூறுவது காண்க. (**குறிப்பு** - வெளியில் இருந்து வரும் விருந்தினர்களுக்கு, அவர்கள் தங்கள் கால்களைக் கழுவுவதற்கு வைக்கப்படும் நீர் என்பதற்கு மிகுந்த ஏற்றம் உள்ளது. இதனையே இங்கு கூறுகிறார்). ஆக ஒருவன், தான் ஸர்வேச்வரனுக்கு ஆராதனை செய்யவேண்டும் என்று எண்ணி, அதற்காக முயற்சி செய்த உடனேயே, ஸர்வேச்வரன் நிறைவு அடைகிறான் என்று கருத்து. மஹாபாரதம் மோக்ஷதர்மம் – யா: க்ரியாஸ் ஸம்ப்ரயுக்தாஸ்ஸ்யு: ஏகாந்த கத புத்திபி: தாஸ்ஸர்வா: சிரஸா தேவ: ப்ரதிக்ருஹ்ணாதி வை ஸ்வயம் – தன்னைத் தவிர்த்து வேறு எந்தவிதமான பலனையும் எதிர்பாராமல் உள்ளவர்களால் தூய்மையான மனதுடன் செய்யப்படும் செயல்கள் அனைத்தையும் ஸர்வேச்வரன் தனது தலையால் ஏற்கிறான் - என்பது காண்க. இந்த வரி இங்கு விளக்கப்படுகிறது. இப்படிப்பட்டவர்கள் செய்யும் அனைத்தும், ஒருவனுக்குத் தனது விருப்பத்திற்கு ஏற்றவளான மனைவி செய்யும் பணிவிடைகள் இன்பம் அளிப்பது போன்று, ஸர்வேச்வரனுக்கு இன்பம் அளிப்பதாகவே அமைகிறது. ஏகாந்த – தன்னிடம் மட்டுமே புத்தியை வைத்தபடி - என்பதை மட்டுமே அவன் எண்ணுகிறான். தாஸ்ஸர்வா - அவர்கள் அளிப்பதை ஒன்றைக்கூட விடாமல் ஏற்கிறான்; அதாவது ஒன்றை விட்டு மற்றதைப் பிடித்தல் செய்யமாட்டான். சிரசா - பக்தன் தன்னுடைய திருவடிகளில் ஸமர்ப்பித்த துளசியை ஸர்வேச்வரன் தனது தலைமுடியில் ஏற்றுக்கொள்கிறான். தேவ: - அனைவருக்கும் ஸ்வாமியாக, தனது திருவடிகளால் அனைவரையும் ஏற்பவன். ஸ்வயம் – தானாகவே ஏற்கிறான்; மிகுந்த செல்வம் ஒருவனிடம் உள்ளபோதிலும், தனது மனைவியின் வியர்வையை அனுபவிக்க வேலைக்காரன் ஒருவனை வைக்கமாட்டான் அல்லவோ? அது போன்று இவன் அளிப்பதை ஸர்வேச்வரன் தானாகவே வலிய வந்து ஏற்கிறான். இப்படியாக அவன் எளிதில் ஆராதிக்கத்தக்கவன் என்பதை இந்தத் திருவாய்மொழியில் கூறுகிறார்.

ப்ரவேசம் ஸம்பூர்ணம்

1-6-1 பரிவதி லீசனைப் பாடி
விரிவது மேவ லுறுவீர்
பிரிவகை யின்றிநன் னீர்தூய்ப்
புரிவது வும்புகை பூவே.

பொருள் – துக்கம் போன்ற தாழ்ந்தவற்றுக்கு எதிர்த்தட்டாக உள்ளவனும், அனைத்துவிதமான திருக்கல்யாணகுணங்களும் பரிபூர்ணமாக நிரம்பியவனும் ஆகிய ஸர்வேச்வரனை, "அவனை அனுபவித்தல்" என்பதால் பிறந்த ப்ரீதீ காரணமாக ஸாமகான முறைப்படி அவனைப் பாடி, உங்களது ஸ்வரூபத்தின் மலர்ச்சியை அடைவதில் குறிக்கோள் கொண்டவர்களே! உங்களுக்கான பயன் இன்னது என்று மனதில் அதனை மட்டுமே வைத்துக்கொண்டு, அந்தக் குறிக்கோளை அவன் மூலமாக அடைந்த பின்னர் அவனைவிட்டு அகன்று செல்பவர்கள் போன்று இல்லாமல், எந்தவிதமான பயனையும் எதிர்பாராமல், தூய்மையான நீரை உங்களுடைய ப்ரேமத்துடன் கூடியபடி அவனுக்கு அளிப்பீர்களாக; மேலும் ஏதேனும் ஒரு தூபம் அல்லது மலரை அளிப்பீர்களாக.

அவதாரிகை - எம்பெருமான் பரிபூர்ணனாகையாலே ஸ்வாராதன் என்கிறார்.

விளக்கம் – ஸர்வேச்வரன் அனைத்தும் நிரம்பியவன் என்பதால் எளிதில் ஆராதிக்க ஏற்றவன் என்று அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் - (பரிவது) து:க்கமாகவுமாம், பக்ஷபாதமாகவுமாம். (இல்) இல்லென்பது இல்லாமை. இத்தால் துக்கமில்லை என்னுதல். பக்ஷபாதமில்லை என்னுதல். துக்கமாவது - "நாம் இடுகிறவை அவன் கொள்ளுமோ கொள்ளானோ?" என்று ஆச்ரயிக்கிற இவன் நெஞ்சிலே துக்கமுண்டாமன்று, ஆச்ரயணீயனுக்கு து:க்கமாமிறே; அன்றிக்கே, பக்ஷபாதமானபோது - ஒருவன் குருவாக த்ரவ்யத்தைக் கொடுத்தால் அவன் பக்கலிலே பக்ஷபதித்திருக்குமாகில், "துஷ்ப்ராபன்" என்று ஆச்ரயணீயனுக்கு ஹேயமிறே. இவையில்லாதபடி இருக்கையாலே ஹேப்ரத்யநீகனென்றபடி.

விளக்கம் - (பரிவது) – பரிவது என்றால் துக்கம் அல்லது பாரபக்ஷம் என்று பொருள். இல் என்றால் இல்லாத என்று பொருள்; அதாவது துக்கமும், பாரபக்ஷமும் இல்லாத என்று பொருள் கொள்ளவேண்டும். தோஷங்கள் அனைத்திற்கும் எதிர்த்தட்டாக உள்ள

ஸர்வேச்வரனுக்குத் துக்கம் என்பதன் தொடர்பு உண்டோ? அப்படி இருந்தால் அல்லவோ "துக்கம் இல்லை" என்று மறுத்துக் கூறவேண்டும்? இதற்குச் சமாதானம் உரைக்கிறார். இங்கு துக்கம் என்றால் "நாம்அவனுக்கு அளிக்கின்ற வஸ்துக்களை அவன் ஏற்பானோ அல்லது ஏற்கமாட்டானோ" என்று அவனுக்கு ஏதேனும் அளிப்பவனின் மனதில் துக்கம் எற்படலாம்; உடனேயே, "ஆகா! நாம் எளிதாக ஆராதிக்கப்படும் வஸ்துவா இல்லையா என்ற சந்தேகத்தை இந்தச் சேதநன் மனதில் நாம் ஏற்படுத்திவிட்டோமே", என்று ஸர்வேச்வரனுக்கு உண்டாகவல்ல துக்கம் கூறப்பட்டது. அப்படிப்பட்ட துக்கமும் ஏற்பட வேண்டிய அவசியம் இல்லாதபடி உள்ளவன் என்பதை "பரிவது இல்" என்கிறார். அடுத்து பக்ஷபாதம் என்பது என்ன? ஒருவன் ஸர்வேச்வரனுக்கு அதிகமான காணிக்கைகளை அளிக்கிறான் என்றும், ஆகவே அவனிடம் மட்டுமே ஸர்வேச்வரன் அதிகமாக அன்புடன் உள்ளான் என்றும் வைத்துக்கொள்ளோம்; இதனால் அவனுக்கு "பாரபக்ஷம் உள்ளவன்" என்ற தோஷம் ஏற்படும் அல்லவோ? இத்தகைய தோஷம் அற்றவன் என்பதை "பரிவது இல்" என்கிறார். இவ்விதம் இரண்டு தோஷங்களும் இல்லாத காரணத்தினால் ஹேயப்ரத்யநீகன் – தாழ்வு அல்லது தோஷங்களுக்கு எதிர்த்தட்டாக உள்ளவன் - என்கிறார்.

இனி "பரிவதில்" என்பதற்கு அரும்பத உரைகளில் உள்ள விளக்கம் காண்போம். "பரிவதில் ஈசனை" என்பதை ப்ராப்யத்தைத் திருவுள்ளதில் கொண்டு உரைத்ததாகவும் (ப்ராப்யம் என்றால் அடையவேண்டிய இலக்கு அல்லது உபேயம் = ஸர்வேச்வரன்) அல்லது ப்ராபகத்தைத் திருவுள்ளதில் கொண்டு உரைப்பதாகவும் (ப்ராபகம் = உபாயம் = ஸர்வேச்வரன்) கூறலாம். "பரிவதில் ஈசன் பாடி விரிவது மேவலுறுவீர்" என்பது ப்ராப்ய கருத்தாகவும், "பரிவதில் ஈசனைப் பிரிவகையின்றிப் புரிவதுவும் நன்னீர் தூய்ப் புகைபூவே" என்பது ப்ராபக கருத்தாகவும் கொள்க. அதாவது முதலாவதாகக் கூறப்பட்டதில் "அவனை அடைந்து, பாடி, ஆத்மஸ்வரூபம் கிட்டப் பெறுவீர்கள்", என்பதால் ப்ராப்யம் கூறப்பட்டது; "அவனைப் பிரியாமல் இருக்கும் உபாயங்களாக தூபம் சேர்த்தல், மலர்கள் இடுதல் ஆகியவை செய்யவேண்டும்", என்பதால் ப்ராபகம் கூறப்பட்டது. "பரிவதில்" என்பதை ப்ராப்யமாகக் கொள்ளும்போது அந்தப் பதம் "அனைத்து ஸம்ஸாரிகளிடம் உள்ள தோஷங்கள் அனைத்திற்கும் எதிர்த்தட்டாக உள்ளவன்" என்பது உணர்த்தப்பட்டது. "பரிவதில்" என்பதை ப்ராபகமாகப்

கொள்ளும்போது, "அவனை அண்டுவதற்கு ஏற்றபடி துக்கம் மற்றும் பாரபக்ஷம் இல்லாதவன்" என்பது உணர்த்தப்பட்டது.

வ்யாக்யானம் - தரதமவிபாகம் பாராதேயிருக்கைக்கு அடியென்னென்னில் (ஈசனை) வகுத்த ஸ்வாமியாகையாலே. ஹேப்ரத்யநீகதை புக்கவிடத்தே கல்யாணகுணங்களும் புகுமிறே; ஆக, ஹேப்ரத்யநீகதையும் கல்யாணகுண யோகமும் சொல்லிற்றாயிற்று. (ஈசனை) புறம்பே ஒருவனுக்கு ஒருவன் விருந்திடும்போது, நெடுநாள் பச்சை தேடி விருந்திட்டால், "இவன் உண்டு என்ன குறை சொல்லப்புகுகிறானோ?" என்று நெஞ்சாறலோடே தலைக்கட்டவேண்டிவரும். புத்ரன் பிதாவுக்கு விருந்திட்டால், உண்டாகில் உள்ள குறை தமப்பனதாய், நெஞ்சாறல் படவேண்டாதிருக்குமிறே. அப்படிப்பட்ட ஸம்பந்தத்தைப் பற்ற "ஈசன்" என்கிறது.

விளக்கம் - இப்படியாக ஏற்றத்தாழ்வுகள் பாராமல் அவன் உள்ளதற்கு என்ன காரணம் என்றால், (ஈசனை) – அதாவது அனைவருக்கு ஏற்ற ஸ்வாமியாக உள்ளதால் ஆகும் என்கிறார். தோஷங்களுக்கு எதிர்த்தட்டாக உள்ளவன் என்றால், திருக்கல்யாண குணங்கள் நிறைந்தவன் என்பது தானாகவே புலப்படும் அல்லவோ? எனவே தாழ்வுகளுக்கு எதிர்த்தட்டாக உள்ளதையும், திருக்கல்யாண குணங்கள் நிறைவாக உள்ளதையும் அருளிச்செய்தார். (ஈசனை) - உலகத்தில் ஒருவனுக்கு மற்றொருவன் உணவு இடுகிறான் என்று வைத்துக்கொள்வோம். இதற்காக நீண்டநாள் தேடி அலைந்து, எளிதில் கிட்டாத ஒரு உணவுப் பொருளை அவனுக்கு அளிப்பதாகவும் கொள்வோம். ஆயினும் உணவு அளிப்பவன் தனது மனதில், "இந்த உணவை உண்ட பின்னர் என்ன குறை கூறப்போகிறானோ?", என்று உள்ளம் தடுமாறியபடியே நிற்பான் அல்லவோ? ஆனால் ஒரு மகன் தனது தந்தைக்கு உணவு இடுகிறான் என்று வைத்துக்கொள்வோம்; அப்போது அந்த விருந்தில் ஏதாவது குற்றம் குறை இருந்தாலும், அதற்காக வருந்த வேண்டாதபடி அல்லவோ அங்கு உறவுமுறை உள்ளது? இது போன்று உள்ள தன்னுடைய ஸ்வாமியின் தொடர்பைக் கூறுவதாக "ஈசனை" என்றார்.

வ்யாக்யானம் - (பாடி) ஸர்வேச்வரனைக் கிட்டினால், வாங்நியதியோடே நிற்கையன்றிக்கே, ஹர்ஷத்துக்குப் போக்குவிட்டுப் பாடி. (பாடி விரிவது மேவலுறுவீர்) "ஏதத் ஸாம காயந்நாஸ்தே" என்று பாடி, விஸ்த்ருதராகையாகிற பேறு பெற வேண்டியிருப்பீர்! பேறு கனத்திருந்தது; நாங்கள் செய்யவேண்டுவது என்னென்னில்,

(பிரிவகையின்றி) பிரிகையாகிற வகையின்றி – "இமையோர் பலரும் முனிவரும் புனைந்த கண்ணி நீர் சாந்தம் புகையோடு ஏந்தி வணங்கினால் உன்பெருமை மாசுணாதோ?" என்று அகல வகையிட்டுக்கொண்டு அகலாதே. (நல் நீர்) ஏலாதி ஸம்ஸ்காரமு மின்றிக்கேயிருக்கை. கேவல ஜலமும் அமையும் (தூய்) "யதா ததா வாபி". (புரிவதுவும்) இவன் அவனுக்கு அருட்கொடையாகக் கொடுக்குமதுவும். (புகை பூவே) அகிற்புகை, கருமுகைப்பூ என்று விசேஷியாமையாலே, ஏதேனும் புகையும், எதேனும் பூவும் அமையும்".

விளக்கம் - (பாடி) - ஸர்வேச்ரனைக் கிட்டி நின்றவுடன், அவையடக்கம் காரணமாக வாய் திறக்கக்கூடாது என்ற விதி உள்ளபோதிலும், அவனை அடைந்த மகிழ்ச்சி காரணமாக வாய்விட்டுப் பாடியபடி. (பாடி விரிவது மேவலுறுவீர்) - ஏதத் ஸாம காயந்நாஸ்தே – பரமபதத்தில் வேண்டிய சரீரத்தை எடுத்தபடி, வேண்டிய அன்னங்களை உட்கொண்டபடி ஸாமவேதத்தைப் பாடிக்கொண்டு – என உள்ளது போன்று இங்கும் உள்ளான். ஆத்ம ஸ்வரூபம் பற்றிய ஞானம் விரிவடைதல் என்னும் பேறு அடைய வேண்டும் என்று வேண்டி நிற்பவர்களே! இதனைக் கேட்டவர்கள், "ஆழ்வீர்! நீங்கள் கூறுவது போன்று உண்மையாகவே இது பெரிய பேறு ஆகும். இதனைப் பெற நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்றனர். இதற்கு விடை அளிக்கிறார். (பிரிவகையின்றி) - தாழ்வான பலன்களைப் பெற்று, அதன் பின்னர் அவனை விட்டு அகன்று செல்லாமல். அதாவது, திருவாய்மொழி (1-5-2) – இமையோர் பலரும் முனிவரும் புனைந்த கண்ணி நீர் சாந்தம் புகையோடு ஏந்தி வணங்கினால் உன்பெருமை மாசுணாதோ - என்று கூறிக்கொண்டு அவனை விட்டு அகன்று செல்லாமல். (நல் நீர்) – நல்நீர் என்றால் தூய்மையான நீர். ஏலக்காய் போன்ற வஸ்துக்கள் கலக்க வேண்டாதபடி, தானாகவே தூய்மையாக உள்ள நீர். சாதாரண தண்ணீரே போதுமானது. (தூய்) - விரும்பியபடி தூவி. (புரிவதுவும்) - இவன் ஸர்வேச்வரனுக்குத் தயையுடன் அளிப்பவைகள். (புகை பூவே) – அகிற்புகை, கருமுகைப்புகை என்று விசேஷமாகப் பெயரிட்டுக் கூறாத காரணத்தினால், ஏதோ ஒரு தூபமும், ஏதோ ஒரு மலரும் அவனுக்கு ஏற்புடையதே என்றாகிறது.

வ்யாக்யானம் – "செதுகையிட்டுப் புகைக்க அமையும், கண்டகாலி இடவும் அமையும்" என்று பட்டர் அருளிச்செய்யும்படி. இத்தை பட்டர் அருளிச்செய்தவாறே "ந கண்டகாரிகாபுஷ்பம் தேவாய விநிவேதயேத்" என்னாநின்றதே! என்று நஞ்ஜீயர் கேட்க, "அவனுக்கு ஆகாது என்கிறதல்ல, பறிக்கிற ஆச்ரிதன் கையிலே முள்பாயும்

என்றதுக்காகத் தவிர்த்ததுகாணும்!" என்று அருளிச்செய்தார். "கள்ளார்துழாயும் கணவலரும் கூவிளையும், முள்ளார் முளரியுமாம்பலும்" என்று விஸஜாதீயங்களைச் சேர எடுக்கிறது கண்டீரே, த்ரவ்ய தாரதம்யம் பார்ப்பதில்லை என்கைக்காக; "புள்ளாயோரேனமுமாய்ப் புக்கிடந்தான்" - "அப்ராக்ருத த்ரவ்யம் வேணும்" என்று இருந்தானாகில், ஸ்ரீவைகுண்டத்தில் இராானோ? வாராஹகல்பம் பாராநிற்கச்செய்தே "ஸ்ரீவராஹநாயனார்க்கு முத்தக்காசை அமுதுசெய்விப்பது" என்று கிடந்ததாய், "இதென்ன மெய்ப்பாடுதான்!' என்று நஞ்ஜீயர் போர வித்தராய் அருளினார். "உள்ளாதாருள்ளத்தை உள்ளமாக் கொள்ளோமே" – "இப்படி அநுஸந்தியாதாருடைய ஹ்ருதயத்தை ஹ்ருதயமாக நினைத்திரோம் நாங்கள் பதின்மரும்" என்று என்று தம்மையொழிந்த ஆழ்வார்களையும்.

விளக்கம் - இந்த இடத்தைக் குறித்து ஸ்வாமி பராசரபட்டர் விளக்கும்போது, "இன்ன வஸ்து மூலம் தூபப்புகையை எழுப்பவேண்டும் என்ற விதிமுறை இல்லை. தச்சர்கள் செதுக்கித் தள்ளுகின்ற சராய்த் துண்டுகள் மூலமோ அல்லது கண்டகாலி என்னும் மலர் ஆகிய எதன் மூலமாவது உண்டாகும் தூபத்தை அவனுக்குக் காண்பிக்கலாம்", என்று அருளிச்செய்தார். இதனைக் கேட்ட ஸ்வாமி நஞ்ஜீயர் - ந கண்டகாரிகாபுஷ்பம் தேவாய விநிவேதயேத் - ஸர்வேச்வரனுக்கு கண்டகாலி மலரைச் சார்த்தக்கூடாது - என்று கூறியதைச் சுட்டிக் காண்பித்து, இந்த மலர் மூலம் ஏற்படும் புகையைக் காண்பிக்கலாமோ என்றார். அதற்கு பட்டர், "கண்டகாலி மலரைச் சார்த்தக்கூடாது என்று சாஸ்த்ரம் கூறியதன் காரணம், அந்த மலர் ஸர்வேச்வரனுக்கு ஏற்புடையது அல்ல என்ற காரணத்தால் அல்ல; அந்த மலரைப் பறிக்கும்போது அந்தச் செடியில் உள்ள முள் அடியார்களின் கைகளில் குத்திவிடும் என்ற காரணத்தினால்தான் தவிர்க்கப்பட்டது", என்று விடை அளித்தார். பெரியதிருமொழி (11-7-6) - கள்ளார்துழாயும் கணவலரும் கூவிளையும், முள்ளார் முளரியுமாம்பலும் - என்றது காண்க. இங்கு கணவலர் என்பது காகணம் என்ற மலர், கூவிளை என்பது வில்வம், முள்ளார்முளரி என்றால் தாமரை, ஆம்பல் என்றால் குமுதம் என்பதாகும்; ஆக ஸர்வேச்வரனுக்கு ஏற்புடைய துளசி மாலையுடன் மற்ற பலவற்றையும் சேர்த்து எடுத்து திருமங்கையாழ்வார் இட்டது காண்க. இதன் மூலம் தனக்கு அளிக்கப்படும் வஸ்துக்களின் ஏற்றத்தாழ்வுகளை ஸர்வேச்வரன் ஆராய்வதில்லை என்றாகிறது. பெரியதிருமொழி (11-7-6) - புள்ளாயோரேனமுமாய்ப் புக்கிடந்தான் – அவன் ப்ரக்ருதி தொடர்புடைய பொருள் ஏதும் வேண்டாம், இந்த உலகத்தின் தொடர்பு இல்லாத பொருள் மட்டுமே வேண்டும் என்று கூறுபவன் என்றால் ஸ்ரீவைகுண்டத்திலேயே இருந்திருப்பான் அல்லவோ, புள்ளாய் ஏனமாய் அவதாரம்

செய்திருபானோ? ஸ்வாமி நஞ்ஜீயர் வராஹபுராணத்தைப் பார்த்துக் கொண்டு வரும்போது, "ஸ்ரீவராகநாயனார்க்குக் கோரைக்கிழங்கை உண்பதற்கு அளித்து", என்பதைக் கண்ணுற்றார்; உடனே அவர், "ஆகா! இந்தக் கூற்று உண்மையே", என்று கொண்டாடினார். பெரியதிருமொழி (11-7-6) - உள்ளாதாருள்ளத்தை உள்ளமாக் கொள்ளோமே - இவ்விதம் அவனிடம் கொள்கின்ற ப்ரேமை மற்றும் நட்பால் ஆகாதது ஏதுவும் இல்லை என்று எண்ணாதவர்களின் இதயங்களை, பதின்மர் என்று போற்றப்படும் நாங்கள் இதயமாகவே ஏற்பதில்லை," என்று திருமங்கையாழ்வர் தன்னைத் தவிர உள்ள பதினோரு ஆழ்வார்கள் உட்பட உரைத்தார்.

1-6-2 மதுவார் தண்ணந் துழாயான்
முதுவேத முதல்வனுக்கு
எதுவே தென்பணி என்னா
ததுவே ஆட்செய்யுமீடே.

பொருள் – ஸர்வேச்வரத்தன்மையை மறைமுகமாக விளக்கும்படியாக, தேன் பொருந்திய குளிர்ச்சியான துளசிமாலையைத் தரித்தவன்; மிகவும் பழமையான வேதங்களால் உணர்த்தப்படுபவன். இப்படிபட்ட ஸர்வேச்வரனுக்கு ஏற்றபடியாகச் செய்யக்கூடிய கைங்கர்யம் எது? இப்படிப்பட்ட கைங்கர்யங்களில் நான் செய்யத்தக்கவை எவை? இது போன்று ஆராயாமல், அனைத்திலும் ஈடுபாட்டுடன் உள்ள நிலையே அடிமைத்தொழில் செய்வதற்கான தகுதியாகும்.

அவதாரிகை – ஆச்ரயிக்குமவனுக்கு த்ரவ்யத்தில் குறை பார்த்து அகலவேண்டா என்றார் முதற்பாட்டில்; "நான் அதிகாரியல்லேன்" என்று அகலவேண்டா என்கிறார் இதில்.

விளக்கம் - அவனை அண்டுகிற அடியார்கள் தாங்கள் அவனுக்கு அளிக்கின்ற பொருள்களின் குறையைக் கண்டு அவனைவிட்டு அகலவேண்டிய அவசியம் இல்லை என்று முதல் பாசுரத்தில் அருளிச்செய்தார். "நான் அவனை அண்டக்கூடிய தகுதி கொண்ட அதிகாரி அல்லன்" என்று எண்ணி அவனைவிட்டு அகலவேண்டாம் என்று இந்தப் பாசுரத்தில் உரைக்கிறார்.

வ்யாக்யானம் - (மதுவார்தண்ணந்துழாயான்) "புரிவதும் புகை பூவே" என்றது கீழ்; இதில் "மதுவார் தண்ணந்துழாயான்" என்று தொடங்கிற்று; இது சேரும்படி என்னென்ன;

"பூவாகில் மதுவோடே கூடியல்லதிராமையாலே சேரும்" என்று சொல்லுவார்கள் தமிழர்; "வதுவார் தண்ணந்துழாயான்" என்று பாடமானபோது போரச்சேரும்; வதுவையென்று - மணம். ஆர்தல் - பூர்ணம். வதுவை "வது" என்று கடைக்குறைத்தலாய், நறுநாற்றத்தையுடைய துழாய் என்றுமாம். இது தமிழர் போரச்சேரும் என்பர்.

விளக்கம் - (மதுவார்தண்ணந்துழாயான்) - கடந்த பாசுரத்தின் இறுதியில் "புரிவதுவும் புகை பூவே" என்று முடித்தார். இந்தப் பாசுரத்தினை "மதுவார் தண்ணந்துழாயான்" என்று தொடங்குகிறார். அந்தாதி வகையில் அமைந்துள்ள இந்த ப்ரபந்தத்தில் கடந்த பாசுரத்தின் இறுதிச் சொல்லான "பூவே" என்பதைக் கொண்டு அல்லவோ அடுத்த பாசுரமான இந்தப் பாசுரத்தைத் தொடங்கியிருக்க வேண்டும்; ஆனால் இவர் "மதுவார் தண்ணந்துழாயான்" என்று தொடங்கியது எவ்விதம் பொருந்தும் என்று கேட்கலாம். அதாவது இயலிசை அந்தாதிகளுக்கு இது பொருந்தவில்லை என்று தோன்றினாலும், பொருளிசை அந்தாதிக்கு ஏற்புடையதாகவே உள்ளது. எப்படி? கடந்த பாசுரத்தில் உள்ள "பூவே" என்பதற்கும், அந்தப் பூவுக்கும் இங்கு தொடங்கப்பட்ட "மது" என்னும் தேனுக்கும் தொடர்பு உள்ளதால் ஆகும். இதற்கு ப்ரமாணம் - பூவாகில் மதுவோடே கூடியல்லதிராமையாலே சேரும் - மலர்கள் என்றால் தேனுடன் கூடாமல் இருப்பதில்லை - என்று தமிழர்கள் கூறுவதே ஆகும். இங்கு "மதுவார்" என்பதற்குப் பதிலாக "வதுவார்" என்றும் சிலர் கொள்வர். இப்படிக் கொண்டால், கடந்த பாசுரத்தின் இறுதியில் உள்ள "பூவே" என்பதன் வகாரம் [வ என்னும் எழுத்து] கொண்டு இந்தப் பாசுரத்தைத் தொடங்குவதால் அந்தாதி பொருந்துகிறது. "போரச்சேரும்" என்றால் பொருளிசை அந்தாதியும், இயலிசை அந்தாதியும் பொருந்தும் என்று வைத்துக்கொண்டு ஆராய்ந்தால் "புரிவதுவும்" என்பதில் முடிகின்ற மகாரம் உடல் எழுத்தாக உள்ளதால், அதனைக் கொண்டு "மதுவார்" என்று தொடங்கியது இயலிசை அந்தாதிக்குப் பொருந்தும் என்றார். இதனைப் போன்று வேறு எங்காவது உள்ளதா என்றால், திருவிருத்தம் (1) - அடியேன் செய்யும் விண்ணப்பமே - என்பதில் உள்ள "செய்யும்" என்பதை உடல் எழுத்தாகக் கொண்டு, அடுத்த பாசுரம் "செங்கழுநீர்" என்று [செய்யும் என்பதில் உள்ள "செ" என்னும் எழுத்து கொண்டு] தொடங்கியது காண்க. வதுவார் என்று தொடங்குவதாகக் கொண்டால், பரிமளம் மிக்க மாலையை உடையவன் என்று பொருள். வதுவை என்றால் மணம், ஆர்தல் என்றால் பூர்ணமாக உள்ள நிலை. வதுவை என்பதே இங்கு கடை எழுத்து குறைந்து "வது" என்று உள்ளது. அதாவது மிகுந்த பரிமளம் கொண்ட துளசி என்றும் கொள்ளலாம். மது என்பது

தேனைக் குறிப்பது போன்று, வது என்பதும் தேன் என்ற பொருளுக்குப் பொருந்தும் என்பர் தமிழர்.

வ்யாக்யானம் - (மதுவார் இத்யாதி) ஒரு வாடல் மாலையைக் கொண்டுவந்து திருக்குழலிலே வளையமாக வைத்தால், திருக்குழலோட்டை ஸ்பர்சத்தாலே செவ்வி பெற்று, மது நிரம்பி, சினையாறுபட்டு, வார்ந்து வெள்ளமிடாநிற்கும். (முதுவேத முதல்வனுக்கு) இவ்வொப்பனை அழகு பேசும்போது, இன்னமும் பாசிபூத்த வேதமே பேச வேண்டாவோ? நித்யமாய் அபௌருஷேயமான வேதப்ரதிபாத்யனாயுள்ளவனுக்கு, வேதமுதல்வனாகையவது, "சாஸ்த்ரயோநித்வாத்" என்கிறபடியே வேதப்ரதிபாத்யன் என்கை. "மதுவார் தண்ணந்துழாயான்" என்கையாலே ஸர்வாதிகன் என்றதாயிற்று. "முதுவேத முதல்வன்" என்கையாலே பரிபூர்ணன் என்றதாயிற்று; இரண்டும் ஸ்வாராதன் என்கைக்கு உறுப்பாகிறது.

விளக்கம் – (மதுவார் இத்யாதி) - ஒரு மெலிந்த துளசி மாலையைக் கொண்டு வந்து இவனது அழகான கேசத்திலே வளையமாக வைத்தால், அந்தக் கேசத்தின் தொடுதல் காரணமாக, அந்த வாடிய மாலை மிகுந்த அழகைப் பெற்றுவிடும்; மேலும் நீர்வரத்து அதிகமானால் ஆறு கர்ப்பம் அடைவது போன்று, வாடிய அந்தத் துளசிமாலையில் தேன் நிரம்பி நின்று காணப்படும். இவ்விதம் வாடிய துளசி மீண்டும் செழிப்பதற்கு ஏதேனும் ப்ரமாணம் உள்ளதா என்றால் அரும்பத உரைக்காரர் விடை அருளிச்செய்கிறார். இராமாயணம் அயோத்யா காண்டம் (59-8) – பரிம்லாநா - இராமனைப் பிரிந்த காரணத்தினால் பிழியப்பட்ட மரங்கள் வாடி நின்றன - என்பதும், யுத்தகாண்டம் (127-17) – ஸர்வே சாபி மதுஸ்ரவா: - (இராமன் திரும்புகையில்) தேன் பெருகி நின்றன – என்பதும் காண்க. மேலும் பெரியாழ்வார் திருமொழி (3-6-10) – மரங்கள் நின்று மதுதாரைகள் பாயும் – என்றும், பெரியதிருவந்தாதி (39) - தழைக்கும் துழாய் – என்றும் கூறியது காண்க. ஆகவே ஸர்வேச்வரனைத் தீண்டியபடி உள்ளபோது துளசிமாலைகள் தேன் நிறைந்து காணப்படுவதும், அவனைவிட்டு அகல நேர்ந்தால் வாட்டம் கொள்வதும் இயல்பே என்று கருத்து. (முதுவேத முதல்வனுக்கு) – பழைய வேதம். முதன்மை என்றால் நாயகத்வம் மற்றும் காரணத்வம்; அதாவது வேதங்களின் நாயகனாகவும், காரணமாகவும் உள்ளான். இவனது இத்தகைய அழகைக் குறித்து மிகவும் புராதனமாக உள்ள வேதங்களும் முழுங்க வேண்டாமோ என்றால், அவையும் முழங்கியபடியே உள்ளன என்கிறார். என்றும்

உள்ளதாகவும், மனிதர்களால் செய்யப்படாததாகவும் உள்ள வேதங்களால் பரக்கப் பேசப்படுபவன். "வேதமுதல்வன்" என்றால் வேதங்கள் ஏற்படக் காரணமாக உள்ளவன். அதாவது, வேதங்களை உண்டாக்கியவன் என்ற பொருள் அல்லவோ தோன்றுகிறது; அந்த வேதங்களால் பேசப்படுபவன் என்பதை அந்தப் பதம் உணர்த்தாது அல்லவோ என்ற சந்தேகம் எழலாம். இதற்கான விடை அளிக்கிறார். ப்ரஹ்மசூத்திரம் (1-1-3) – சாஸ்த்ரயோநித்வத் - வேதங்களால் மட்டுமே அறியப்படுபவன் - என்று கூறுவதற்கு ஏற்ப வேதங்களால் கூறப்படுபவன் என்று கருத்து. " மதுவார் தண்ணந்துழாயான்" என்பதன் மூலம் இவனுக்கு உள்ள அவாப்த ஸமஸ்தகாமத்வம் என்பதைக் கூறினார். இதனையே ஸர்வாதிகன் என்றார். வக்ஷஸ் ஸ்தல்யாம் துளஸி கமலா கௌஸ்துபைர் வைஜயந்தீ ஸர்வேசத்வம் கதயதிதராம் - திருமார்பில் உள்ள துளசிமாலை, பெரியபிராட்டியார், கௌஸ்துபமணி, வைஜயந்திமாலை போன்றவை இவனது ஸர்வேச்வரத் தன்மையை உணர்த்துகின்றன என்பதற்கு ஏற்ப துளசிமாலை என்பது அனைத்து வல்லமையும் படைத்தவன் என்பதற்கு லக்ஷணம் ஆகும். "முதுவேத முதல்வன்" என்றால் பரிபூர்ணன் என்று கருத்து. இந்தப் பதம் எவ்விதம் பரிபூர்ணத் தன்மையை உணர்த்தும் என்றால், உபநிஷத் வாக்கியங்களான – பூர்ணஸ்ய பூர்ணமாதாய, ஸர்வமிதம் அப்யாத்த: அவாக்யநாதர: - போன்றவை ஸத்யகாமத்வம் மற்றும் ஸத்யஸங்கல்பங்களை உணர்த்துவதால் ஆகும். இந்த இரண்டும் (மதுவார் - ஸமஸ்தகாமத்வம், முதுவேத முதல்வன் - பரிபூர்ணன்), இவன் அடைவதற்கு ஏற்றவன், ஆராதனைக்கு எளியவன் என்பதை உணர்த்துகின்றன.

வ்யாக்யானம் - (எதுவேது இத்யாதி) முதுவேத முதல்வனுக்கு எது பணி? என் பணி ஏது? என்னாததுவே, ஆட்செய்கைக்கு அதிகாரமாவது; "நித்யஸூரிகளன்றோ அவனுக்கு ஈடான அடிமை செய்யவல்லார், நான் செய்யுமது ஏது?" என்று தன்னைக் கொண்டு கைவாங்காதொழியுமதுவே, அன்றிக்கே "முதுவேத முதல்வனுக்கு எது பணி? ஏது என் பணி?" என்னாததுவே – "இது அவனுக்கீடன்று" என்று சிலவற்றை விடாதே, ஸகல கைங்கர்யத்திலும் அந்வயிக்குமதுவே, ஆட்செய்கைக்கு அதிகாரமாவது என்னுதல்.

விளக்கம் - (எதுவேது இத்யாதி) - இப்படிப்பட்ட வேதமுதல்வனுக்குச் செய்யவேண்டிய கைங்கர்யங்கள் எவை? இவற்றில் என்னால் செய்யத்தக்க கைங்கர்யங்கள் எவை என்று ஆராய்ச்சி செய்யாமல், அவனுக்குக் கைங்கர்யம் செய்தல்வேண்டும் என்கிறார்; இத்தகைய அதிகாரமோ தகுதியோ நமக்கு எப்படி ஏற்படுகிறது என்று கேள்விக்கு விடை

அளிக்கிறார். "நித்யஸூரிகள் மட்டுமே அவனுக்கு ஏற்ற அனைத்து கைங்கர்யங்களும் செய்யவல்லவர்கள்; இதில் அயோக்யனாகிய நான் செய்வது என்ன?" என்ற எண்ணம் உண்டாகாமல், அவனைவிட்டு அகலாமல் நின்று கைங்கர்யம் செய்தலே அந்தக் கைங்கர்யங்களுக்கான அதிகாரத்தை அளிக்கிறது என்று கருத்து. அல்லது இங்கு வேறு விதமாகவும் பொருள் உரைக்கலாம். "முதுவேத முதல்வனுக்கு ஏற்ற கைங்கர்யம் எது? நான் செய்யக்கூடியது எது?" என்று ஆராய்ந்து, "இந்தச் செயல்கள் அவனது மேன்மைக்கு ஈடாகாது" என்று சிலவற்றைக் கைவிட்டுவிடாமல், அனைத்துவிதமான கைங்கர்யங்களிலும் ஈடுபட்டு நிற்கின்ற நிலையே கைங்கர்யத்திற்கு ஏற்ற அதிகாரம் அளிக்கிறது என்று பொருள் உரைக்கலாம். அதாவது விமானம், மண்டபம், ப்ரகாரம் போன்றவற்றை அவனுக்கு அமைத்துக் கொடுத்தல் என்பதே அவனது மேன்மைக்கு ஏற்ற கைங்கர்யங்கள் ஆகும்; நான் செய்வதான இரண்டு மலர்களைத் தொடுப்பது, ஒரு விளக்கு ஏற்றுவது போன்றவை அவனுக்கு ஈடாகுமா என்று ஏற்றத்தாழ்வு ஆராயாமல் செய்வதே கைங்கர்யத்திற்கு அதிகாரம் என்பதை அரும்பத உரைக்காரர் அருளிச்செய்கிறார். இந்தப் பாசுரத்தை – மதுவார் தண்ணந்துழாயான் முதுவேத முதல்வனுக்குப் பணி எது? என்பணி ஏது? என்னாததுவே ஆட்செய்யும் ஈடே – என்ற வரிசையில் படித்து பொருள் கொள்ளவேண்டும்.

1-6-3 ஈடு மெடுப்புமி லீசன்
மாடு விடாதென் மனனே
பாடுமென் நாவவன் பாடல்
ஆடுமெ னங்கம ணங்கே

பொருள் – ஒருவனிடம் குற்றம் குறை உள்ளது என்று காரணம் காண்பித்து அவனை ஏற்காமல் விடுதல், ஒருவனிடம் நற்குணங்கள் பலவும் உள்ளன என்பதற்காக அவனை ஏற்றுக்கொள்ளுதல் என்பதான பாரபக்ஷம் இல்லாத ஸர்வேச்வரனின் அண்மை என்பதை எனது மனம் எப்போதும் விடுவதில்லை. எனது நாக்கு எப்போதும் அவன் பாடல்களையே பாடும். எனது சரீரம் அவனது விருப்பத்திற்கு ஏற்ப ஆடியபடி இருக்கு (அல்லது தெய்வ ஆவேசம் வந்தது போன்று ஆகிவிடும்).

அவதாரிகை - அவனுடைய இஸ்வபாவத்தை அநுஸந்தித்து, தாம் அதிகாரித்த கார்யத்தை மறக்கும்படி தம்முடைய மநோவாக்காயங்களுக்கு அவன்பக்கலிலே உண்டான ப்ராவண்யத்தை அருளிச்செய்கிறார்.

விளக்கம் - கடந்த இரண்டு பாசுரங்களில் மற்றவர்களுக்கு உபதேசம் செய்தார். இந்தப் பாசுரத்திலும், அடுத்த பாசுரத்திலும் சட்டெனத் தனக்கு (தனது மனதிற்கு) உபதேசம் செய்வது போன்று உரைக்கிறார். அடுத்த பாசுரத்திற்கு அடுத்த பாசுரம் தொடங்கி மீண்டும் மற்றவர்களுக்கு உபதேசிக்கத் தொடங்குகிறார். இவ்விதம் மாற்றிமாற்றி உபதேசிப்பதற்கான காரணத்தை இங்கு உரைக்கிறார். ஸர்வேச்வரனுடைய "எளிதில் ஆராதிக்கப்படுபவனாக உள்ள தன்மை" என்பதை எண்ணியபடி உள்ளார். இதனால், தான் செய்து கொண்டிருந்த "மற்றவர்களுக்கு உபதேசம்" என்ற செயலை இவர் மறந்து; தனது மனம், சொல் மற்றும் சரீரம் ஆகிய மூன்றுக்கும் அவன்பக்கம் ஏற்பட்ட காதல் பெருக்கினை இங்கு அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் - (ஈடும் எடுப்புமில் ஈசன்) சிலரை உபேக்ஷித்தல், சிலரை ஸ்வீகரித்தல் செய்யாத ஸர்வேச்வரன்; ஸம்பந்தம் ஸர்வ ஸாதாரணமாயிருக்கையாலே சிலரை விடப்போகாதிறே. "தேவாநாம் தாநவாநாஞ்ச ஸாமாந்யமதிதைவதம்" என்று ஸ்வீகரிக்குமவனோடு உள்ள ஸம்பந்தம் விடுமவன் பக்கலிலும் உண்டிறே. (ஈசன் மாடு விடாது என் மனனே) ஒரு ஸாதநபுத்த்யா கிட்டிற்றாகிலிறே பலம் கைப்புகுந்தவாறே விடுவது. நான் அதிகரித்த கார்யத்துக்கு எனக்கு நெஞ்சு ஒழிகிறதில்லை. "நாவியலாலிசை மாலைகளேத்தி"யன்றோ, மநஸ்ஸஹகாரம் வேணுமோ உமக்கு? உம்முடைய அஹ்ருதயமான உக்தி அமையாதோ எங்களுடைய ஹிதத்துக்கு என்ன, (பாடும் என் நா அவன் பாடல்) என்னுடைய வாகிந்த்ரியமும் மநஸ்ஸு அதிகரித்த காரியத்திலே அதிகரித்தது. ஆனால் உம்முடைய ஹஸ்தமுத்ரை அமையாதோ எங்களுக்கு அர்த்தநிச்சயம் பண்ணுகைக்கு? என்ன, (ஆடும் என் அங்கம் அணங்கே) அதுவும் அவ்விஷயத்திலே ப்ரவணமாயிற்று.

விளக்கம் - (ஈடும் எடுப்புமில் ஈசன்) - ஈடு என்றால் விட்டுவிடுதல், தள்ளுதல் என்று பொருள். எடுப்பு என்றால் எடுத்துக் கொள்ளுதல் என்று பொருள். அதாவது சிலரை மட்டும் தள்ளிவிட்டு, சிலரை மட்டும் ஏற்றுக்கொண்டு என்பதான செயல்களைச் செய்யாத ஸர்வேச்வரன். அனைவரையும் ஏற்றுக்கொள்வதற்கான காரணம் என்னவென்றால் "ஈசன்" என்பதால் ஆகும். ஸர்வேச்வரனுக்கும் மற்றவர்களுக்கும் இடையே உள்ள ஸம்பந்தம் என்பது இயற்கையாகவே, சர்வசாதாரணமான நிகழ்வாகவே உள்ளதால் அவன் சிலரை மட்டும் தள்ளுதல் என்பது பொருந்தாது. ஜிதந்தே ஸ்தோத்ரம் (1-1)

தேவாநாம் தாநவாநாஞ்ச ஸாமாந்யமதிதைவதம் - தேவர்களுக்கும் தலைவர்களுக்கும் நீயே தெய்வம் - என்பதற்கு ஏற்ப, அனைவரையும் தன்னுடையவர்கள் என்று கொள்கின்ற அவனுடனான ஸம்பந்தம் என்பது, யாரைத் தள்ளக்கூடும் என்று எண்ணுவார்களோ அவனுக்கும் உண்டு என்றே ஆகிறது. (ஈசன் மாடு விடாது என் மனனே) – அவனை இனி விடமாட்டேன் என்கிறார். அப்படி அவனைவிடாமல் உள்ளதற்கு என்ன காரணம் என்றால், தானாகவே வந்த பயன் என்பதே காரணம் என்கிறர். அதாவது ஏதோ ஒரு பலனை எதிர்பார்த்து அவனை நான் அண்டியிருந்தால், அந்தப் பலன் கைகூடிய பின்னர் அவனைவிட்டு அகன்றிருப்பேன்; ஆனால் இங்கு அவ்விதம் இல்லை என்கிறார். ஈசன் மாடு என்பது என்ன? மாடு என்பதற்கு பொன், பக்கம், செல்வம் என்று பொருள் உண்டு. ஆக, ஈசன் மாடு என்றால் ஈசன் பக்கம் = ஈசனிடத்தில் என்பதாகும். "நான் அதிகரித்த கார்யம்" என்றால் "ஸர்வேச்வரன் ஆராதிப்பதற்கு எளியவன்" என்று இவர் ஸம்ஸாரிகளுக்கு உபதேசிக்கத் தொடங்கிய செயலாகும். இதனைச் செய்வதற்கு இவரது மனம், வாக்கு போன்றவை இவர் வசப்பட்டதாக இருத்தல் வேண்டும். ஆனால் இங்கு தனது மனம் ஸர்வேச்வரனிடத்தில் நிலைநின்று, எடுத்த காரியத்தை நிறைவேற்ற இயலாமல் செய்கிறது என்கிறார். இதனைக் கேட்ட ஸம்ஸாரிகள், "திருவாய்மொழி (4-5-4) – நாவியலாலிசை மாலைகளேத்தி - என்று அல்லவோ நீவிர் உரைக்க உள்ளீர்? எங்களுக்கு ஏற்ற உபதேசம் செய்ய மனதின் துணை உங்களுக்குத் தேவையா? உங்களுடைய மனதின்கண் படாத உமது சொற்கள் போதுமானது அல்லவோ?", என்றனர். இதற்கு விடை அளிக்கிறார், (பாடும் என் நா அவன் பாடல்) - என்னுடைய வாக்கு என்பதும், மனம் எதில் சென்று அகப்பட்டதோ அதிலேயே ஈடுபட்டபடி நின்றது - என்றார். இதற்கு ஸம்ஸாரிகள், "போகட்டும், உம்முடைய ஆசார்ய ஞானமுத்திரை உள்ளதே! அதன் மூலம் நாங்கள் அறியவேண்டிய பொருளை உணர்ந்து கொள்கிறோம்", என்றனர். இதற்கு விடை அளிக்கிறார், (ஆடும் என் அங்கம் அணங்கே) - அதுவும் அவன் விஷயத்தில் ஈடுபட்டுவிட்டது என்கிறார். அணங்கு என்றால் தேவலோகப்பெண்கள், அதாவது அப்ஸரஸ் போன்று ஆடும் என்று கருத்து. இந்தப் பாசுரத்தை – என்மனன் ஈடும் எடுப்புமில் ஈசன் மாடு விடாது; என் நா அவன் பாடல் பாடும்; என் அங்கம் அணங்கென ஆடும் – என்ற வரிசையில் படித்து பொருள் கொள்ளவேண்டும்.

1.6.4 அணங்கென வாடுமெ னங்கம்
வணங்கி வழிபடு மீசன்
பிணங்கி யமரார் பிதற்றும்
குணங்கெழு கொள்கையி னானே.

பொருள் - தெய்வ ஆவேசம் வந்தது போன்று ஆடியபடி உள்ள என்னுடைய சரீரம், வணங்கி ஆராதிக்கும்படியாக உள்ள ஸர்வேச்வரன் எப்படிப்பட்டவன் என்றால் - அவனை எப்போதும் அனுபவித்தபடி உள்ளவர்களாகிய நித்யஸூரிகள், அவனது குணங்களை தாங்கள் தாங்கள் அனுபவித்த விதத்தை "நான் முதலில் கூறுவேன், நான் முதலில் கூறுவேன்" என்று தங்களுக்குள் விவாதம் செய்தபடி பிதற்றுகின்ற எண்ணற்ற திருக்கல்யாண குணங்களைக் கொண்டவன் ஆவான்.

அவதாரிகை - தம்முடைய மநோவாக்காயங்களுக்கு அவன்பக்கல் உண்டான ப்ராவண்யம் காதாசித்கமாய் விடுகையன்றிக்கே, நித்யஸூரிகளைப்போலே யாத்ரையானபடி சொல்லுகிறார்.

விளக்கம் - தன்னுடைய மனம், சொல் மற்றும் சரீரம் ஆகிய மூன்றுக்கும் அவன் பக்கம் ஏற்பட்ட காதல்பெருக்கு என்பது குறித்து கடந்த பாசுரத்தில் அருளிச்செய்தார். இங்கு அப்படிப்பட்ட காதல்பெருக்கானது ஒரு காலகட்டத்தில் தோன்றி, வேறு ஒரு காலத்தில் மறைந்துவிடுவது என்று இல்லாமல், நித்யஸூரிகள் போன்று எப்போதும் நிலைப்பதை உரைக்கிறார்.

வ்யாக்யானம் – "அணங்கென ஆடும் என் அங்கம் வணங்கி வழிபடும் ஈசன் பிணங்கி அமரர் பிதற்றும் குணம் கெழு கொள்கையினான்" கிடீர் என்னுதல்; "பிணங்கி அமரர் பிதற்றும் குணம் கெழு கொள்கையினானான ஈசனை அநுபவித்து, அணங்கு என ஆடும் என் அங்கம் வணங்கி வழிபடும்" என்னுதல்; தைவாவிஷ்டம் என்னலாம்படி ஆடுகிற என் அங்கம், வணங்கி அதுதானே யாத்ரையாய்ச் செல்லும்படியிருக்கிற ஈசன்.

விளக்கம் – இந்தப் பாசுரத்தில் உள்ள பதங்களை இரண்டுவிதமாக வரிசைப்படுத்திக் கொண்டு, இரண்டுவிதமாகப் பொருள் கொள்வது உண்டு. முதல் வரிசையில் – அணங்கென ஆடும் என் அங்கம் வணங்கி வழிபடும் ஈசன் பிணங்கி அமரர் பிதற்றும் குணம் கெழு கொள்கையினான் - என்று கொள்ளவேண்டும். இவ்விதம் கொண்டால்

மேலே பாசுரத்தினைத் தொடர்ந்து கூறப்பட்ட பொருள் ஏற்படுகிறது. "குணம் கெழு கொள்கையினான்" என்றால் உயர்ந்த திருக்கல்யாண குணங்கள் வந்து சேர்வதற்கு இருப்பிடமாக உள்ளான் என்று பொருள். இரண்டாவது வரிசையில் - பிணங்கி அமரர் பிதற்றும் குணம் கெழு கொள்கையினானான ஈசனை அநுபவித்து, அணங்கு என ஆடும் என் அங்கம் வணங்கி வழிபடும் – என்று படிக்கவேண்டும். இவ்விதம் கொண்டால் - தாங்கள் தாங்கள் அனுபவித்த அவனது குணங்களை "நான் முந்தி, நான் முந்தி" என்று போட்டி போட்டுக்கொண்டு நித்யஸூரிகள் தங்களுக்குள் விவாதம் செய்தபடி உள்ளனர்; இப்படிப்பட்ட குணங்கள் கொண்ட ஸர்வேச்வரனை, தெய்வ ஆவேசம் வந்தது போன்றுள்ள எனது சரீரம் வணங்கி வழிபடும் – என்று பொருள் உரைக்கலாம். அரும்பத உரையில் – பிணங்கி அமரர் பிதற்றும் குணம் கெழு கொள்கையினானான ஈசனை, என் அங்கம் வணங்கி வழிபடும், அணங்கு என ஆடும் – என்று மூன்றாவது வரிசை கூறப்பட்டது. இதன்படி ஸர்வேச்வரனை எனது சரீரம் வணங்கி வழிபடும்; அதன் காரணமாக ஆவேசம் வந்தது போன்று ஆடும் - என்பதாகும். அதாவது தெய்வ ஆவேசம் வந்ததோ என்று கூறலாம்படியாக ஆடுகின்ற எனது சரீரம் அவனை வணங்கி, அதுதானாகவே அவன் பின்னே எப்போதும் நின்றபடி இருக்கின்றவாறு செய்யும் ஸர்வேச்வரன்.

வ்யாக்யானம் - (பிணங்கி அமரர் பிதற்றும்) தாந்தாம் அனுபவிக்கிற குணங்களுக்கு ஏற்றஞ்சொல்லப்புக்கு, எதிரி சொல்லுகிற குணங்களுக்கு ஏற்றம் சொல்லித் தலைக்கட்டுகை. தாந்தாம் அகப்பட்ட குணங்களைச் சொல்லி, "நான் முந்துறச்சொல்ல, நான் முந்துறச்சொல்ல" என்று பிணங்கி நித்யஸூரிகள் ஜ்வரஸந்நிபதிதரைப்போலே அடைவுகெடக் கூப்பிடுகிற குணங்கள் வந்து சேருகைக்கு ஆச்ரயமானவன். ரத்நாகரம் போலே குணங்கள் சேருகைக்கு ஆச்ரயமாயுள்ளானென்னுதல்; இக்குணங்கள் வந்து கெழுமுகையை ஸ்வபாவமாக உடையவன் என்னுதல். ஸர்வஜ்ஞரானவர்கள் படுகிற பாடு என்னுடைய கரணங்களுக்கும் உண்டாகாநின்றது கிடீர் என்கிறார்.

விளக்கம் - (பிணங்கி அமரர் பிதற்றும்) - ஸர்வேச்வரனை மட்டுமே அனுபவித்தபடி உள்ள நித்யஸூரிகளிடையே இது போன்ற விவாதம் ஏற்படுமோ – என்று சந்தேகத்திற்கு விடை அளிக்கிறார். அதாவது ஒவ்வொரு நித்யஸூரியும் தான் அனுபவித்த அவனது குணத்தின் மேன்மை பற்றி உரைக்க எண்ணுவார்; ஆனால் அதனை மறந்து தனது எதிரே நிற்பவர் எந்தக் குணத்தின் உயர்த்தியைக் கூறுகிறாரோ அதனைக் கூறியபடி நிற்பார்

என்று கருத்து. தாங்கள் எந்தக் குணத்தில் ஈடுபட்டு அவனிடம் சிக்குண்டு நிற்கிறார்களோ அந்தக் குணத்தை உரைத்தபடி, "நான் முதலில் உரைப்பேன், நான் முதலில் உரைப்பேன்" என்று தங்களுக்குள் விவாதம் ஏற்பட்டு நிற்கின்றனர். ஜுரம் ஏற்பட்டவர்கள் போன்று பிதற்றியபடி உள்ளனர். மேலும் ஒரு குணம் பற்றி உரைக்க எண்ணும்போது, வேறொரு குணம் பற்றி உரைப்பார்கள். இப்படியாக அவர்களைத் தடுமாற வைக்கும்படியாகப் பல குணங்கள் வந்து சேர்வதற்கு ஏற்ற கொள்கலமாக உள்ளவன் என்கிறார். கடல் போன்று குணங்கள் வந்து சேர்வதற்கு ஏற்ற இருப்பிடமாக உள்ளவன் என்கிறார். இப்படிப்பட்ட பல குணங்களும் வந்து சேர்வதற்கு ஏற்றபடியான ஸ்வபாவம் கொண்டவன் என்று கருத்து. ஆக அனைத்தும் அறிந்தவர்களான நித்யஸூரிகள் எவ்விதம் என்ன செய்வது என்று அறியாமல் தவிக்கிறார்களோ அது போன்ற நிலை என்னுடைய மனம், வாக்கு மற்றும் சரீரம் ஆகியவற்றுக்கும் ஏற்பட்டது என்கிறார்.

1.6.5 கொள்கைகொ ளாமையி லாதான்
எள்க லிராக மிலாதான்
விள்கைவிள் ளாமை விரும்பி
உள்கலந் தார்க்கோ ரமுதே

பொருள் - ஒருவனிடம் உள்ள குணங்களை ஆராய்ந்து ஏற்றுக்கொள்ளுதல், ஒருவனிடம் குணங்கள் இல்லை என்று அவனை ஏற்காமல் தள்ளுதல் ஆகிய தன்மைகள் இல்லாதவன்; கைவிடுதல் என்பதற்குக் காரணமான வெறுப்பு, ஏற்றுக் கொள்ளுவதற்கு காரணமான விருப்பு ஆகிய இரண்டும் இல்லாதவன்; மற்ற பலன்களை அடையவேண்டும் என்று எண்ணி தன்னை விட்டு அகன்று செல்லுதல் என்பதையும், எந்தப் பலனையும் எதிர்பாராமல் தன்னை மட்டுமே எண்ணியபடி தன்னை விடாமல் இருத்தல் என்பதையும் ஆராய்ந்து தன்னுள் கலந்தவர்களுக்கு அமிர்தம் போன்று உள்ளவன் ஆவான்.

அவதாரிகை - திரியட்டும் தாம் அதிகரித்த கார்யத்திலே போந்து, ஸர்வேச்வரன், தன் பக்கலிலே சிலர் வந்து கிட்டினால் "இவர்கள் ப்ரயோஜநாந்தரத்தைக் கொண்டு அகலுவர்களோ? நம்மையே ப்ரயோஜநமாகப் பற்றுவர்களோ?" என்று ஆராய்ந்து, தன்னையே ப்ரயோஜநமாகப் பற்றினவர்களுக்குத் தானும் நிரதிசய போக்யனாயிருக்கும் என்கிறார்.

விளக்கம் - இந்தத் திருவாய்மொழியின் முதல் இரண்டு பாசுரங்கள் மூலம் மற்றவர்களுக்கு உபதேசம் செய்யத் தொடங்கினார். அப்போது அவன் பக்கம் இவரது மனம், வாக்கு, சரீரம் ஆகியவை மிகவும் ஈடுபட்டு நிற்க, தனது மனதிற்கு உபதேசம் செய்யும் பொருட்டு அடுத்த இரண்டு பாசுரங்களை அருளிச்செய்தார். இப்போது மீண்டும், தான் முதலில் தொடங்கிய "மற்றவர்களுக்கு உபதேசம்" என்னும் செயலில் இறங்குகிறார். தன்னுடைய பக்கம் வந்து நிற்பவர்களைக் காணும் ஸர்வேச்வரன் தனது திருவுள்ளத்தில், "இவர்கள் தங்களுக்கு வேண்டியதான மற்ற பலன்கள் கிட்டியவுடன் நம்மைவிட்டு அகன்று விடுவார்களா? அல்லது நம்மைப் பெறுவது என்பதே தங்களுடைய பயன் என்று எண்ணி இருப்பார்களா?", என்று எண்ணுகிறான். அவனைப் பெறுவதே பயன் என்று இருப்பவர்களுக்குத் தானும் எல்லையற்ற இனிமையை அளிப்பவனாக உள்ளான் என்கிறார்.

வ்யாக்யானம் - (கொள்கை கொளாமை இலாதான்) "இவன் ஜந்மவ்ருத்த ஜ்ஞாநங்களால் உயந்தானொருத்தன், இவனை அந்தரங்கவ்ருத்தி கொள்வோம்; இவன் அவற்றால் தாழ்ந்தானெருவன், இவனைப் புறந்தொழில் கொள்வோம்" என்னுமவை இல்லாதான். வ்ருத்தி கொள்ளும்போது இல்லையாகில், திருவுள்ளத்தாலேதான் நினைத்திருக்குமோ? என்னில், (எள்கல் இராகம் இலாதான்) திருவுள்ளத்தாலே சிலரை இகழ்ந்திருத்தல், சிலரை ஆதரித்தல் செய்யான். "ஈடும் எடுப்புமில் ஈசன்" என்றவிடம் ஸ்வீகார ஸமயத்தில் குறை பாராான் என்றது. இங்கு பரிமாற்றத்தில் தரமிட்டுக் கொள்ளான் என்கை.

விளக்கம் - (கொள்கை கொளாமை இலாதான்) - இந்த மனிதன் தன்னுடைய பிறவி, செயல்கள் மற்றும் ஞானம் ஆகியவற்றால் மிகவும் உயர்ந்தவனாக உள்ளான், ஆகவே நம்முடைய அந்தரங்கமான கைங்கர்யத்திற்கு இவனை ஏற்றுக்கொள்வோம்; அந்த மனிதன் இவற்றால் தாழ்ந்தவனாக உள்ளான், ஆகவே அவனை நம்முடைய புறத் தொழில்கள் செய்யும்படி வைத்துக்கொள்வோம் - என்பதான ஏற்றத்தாழ்வு காணாதவன் ஆவான். தன்னுடைய செயலில் இது போன்ற ஏற்றத்தாழ்வுகளை ஸர்வேச்வரன் காண்பிப்பதில்லை, ஆனால் தனது திருவுள்ளத்தில் இது போன்று எண்ணுவானோ என்ற சந்தேகம் ஏற்படலாம். இதற்கு விடை அளிக்கிறார். (எள்கல் இராகம் இலாதான்) - எள்கல் என்றால் தள்ளுதல், இராகம் என்றால் ஆதரித்தல். தன்னுடைய திருவுள்ளத்தில் சிலரை மட்டும் ஒதுக்கி வைத்தல், சிலரை மட்டும் ஏற்றுக்கொள்ளுதல் என்பதைச் செய்யாதவன் ஆவான். இங்கு ஒரு சந்தேகம் ஏற்படுகிறது. திருவாய்மொழி (1-6-3) – ஈடும் - என்பதில்

இதே கருத்தை இவர் உரைத்தார், இங்கு மீண்டும் உரைக்கிறார். அப்படி என்றால் "கூறியது கூறல்" என்ற புநருக்தி தோஷம் ஏற்பட்டுவிடுமே என்ற சந்தேகம் எழலாம். இதனை அடுத்து தீர்த்து வைக்கிறார். அதாவது "ஈடும் எடுப்பும் இல் ஈசன்" என்று கூறும்போது, "அடியார்களிடம் எந்தவிதமான ஏற்றத்தாழ்வும் பாராமல், தன் மீது ஆசை கொண்டவர்களைத் தனக்கு அடிமையாக ஏற்றுக்கொள்பவன்", என்பது கூறப்பட்டது. ஆனால் இந்தப் பாசுரத்தில் அவர்களிடமிருந்து கைங்கர்யங்களை கொள்ளும்போது, எந்தவிதமான ஏற்றத்தாழ்வுகளும் ஆராயாமல் இருப்பான் என்பது கூறப்பட்டது.

வ்யாக்யானம் - (விள்கை இத்யாதி) இதொன்றுமே பார்ப்பது. விள்கை - ப்ரயோஜநங்களைக் கொண்டு விடுகை. விள்ளாமை - அநந்யப்ரயோஜநனாகை. விரும்பி - ஆதரித்து. உள்கலந்தார்க்கு - இவனையே ப்ரயோஜநமாகப் பற்றி இவனுடனே ஒரு நீராகக் கலந்தவர்களுக்கு. (ஓரமுதே) - அத்விதீயமான அம்ருதமாயிருக்கும்; ஆராவமுதிறே.

விளக்கம் - (விள்கை இத்யாதி) - விள்கை என்றால் தன்னைவிடுதல், விள்ளாமை என்றால் தன்னைவிடாமல் இருத்தல். விள்கை என்றால் மற்ற பயன்களைக் கருத்தில் கொண்டு ஸர்வேச்வரனைக் கைவிடுதல். விள்ளாமை என்றால் ஸர்வேச்வரன் தவிர மற்ற எதனையும் எதிர்பாராமல் இருத்தல். அவன் இதனை மட்டுமே ஆராய்ந்து பார்க்கிறான். உள்கலந்தார்க்கு என்றால் இவனை மட்டுமே தங்களது பயன் என்று கொண்டு, அவனுடன் ஒரு நீராகக் கலந்து நிற்பவர்களுக்கு. (ஓரமுதே) – இரண்டாவது அமிர்தம் என ஒன்று உள்ளது என்று கூற இயலாதபடி ஒப்பற்ற அமிர்தமாக இருப்பவன். திருவாய்மொழி (5-8-1) - ஆராவமுதே - என்றது காண்க.

1.6.6 அமுத மமரர்கட் கீந்த
நிமிர்சுட ராழி நெடுமால்
அமுதிலு மாற்ற வினியன்
நிமிர்திரை நீள்கட லானே.

பொருள் – தேவர்களுக்கு எப்போதும் உயிருடன் இருப்பதற்கான மருந்தாகிய அமிர்தத்தை அளித்தவன்; எப்போதும் வளர்ந்தபடி இருக்கின்ற சுடருடன் கூடிய சக்கரத்தாழ்வானைக் கொண்டவன்; எல்லை ஏதும் இல்லாத பெருமைகளை உடையவன்;

இப்படிப்பட்ட அவன், தன்னுடைய ஸ்பர்சம் காரணமாக ஓங்கி வளர்கின்ற அலைகளையும், தனது பெருமைக்கு ஈடான பரப்பளவையும் கொண்டதான திருப்பாற்கடலில் கண் வளர்கிறான். அவன் அந்தக் கடலில் தோன்றும் அமிர்தத்தைக் காட்டிலும் மிகவும் இனிமையானவன் ஆவான்.

அவதாரிகை – "அவன்படி இதுவாயிருக்க, அவனை விட்டு ப்ரயோஜநத்தைக் கொண்டு அகலுவதே!" என்று ப்ரயோஜநாந்தரபரரான தேவர்களை நிந்திக்கிறார்.

விளக்கம் – "எல்லையற்ற இன்பத்தை அளிக்கவல்லவனாக அவன் உள்ளபோது, அவனையே பலன் என்று அடைவதை விடுத்து, மற்ற பலன்களைக் கைக்கொண்டு அகல்கின்றார்களே", என்று மற்ற பலன்களை விரும்பிய தேவர்களை நிந்திக்கிறார்.

வ்யாக்யானம் – (அமுதம் அமரர்கட்கு ஈந்த) "என்ன பரமோதாரனோ?" என்கிறார். "நீ வேண்டா, எங்களுக்குச் சாவாமைக்குப் பரிஹாரம் பண்ணித் தரவேண்டும்" என்றவர்களுக்கு அவர்கள் உகந்த பதார்த்தத்தைக் கொடுத்துவிடுவதே! அவர்கள் ப்ரயோஜநத்தை அருவருத்து, தாம் உகந்த ப்ரயோஜநத்துக்கு உண்டான வ்யாவ்ருத்தி சொல்லுகிறார். (நிமிர் சுடராழி நெடுமால்) இவருடைய அம்ருதம் இருக்கிறபடி. நால்தோளமுதிறே இவர்க்கு அமுது; "அமுதென்றும் தேனென்றும் ஆழியானென்றும்" என்று கையும் திருவாழியுமாயிறே இருப்பது இவருடைய அம்ருதம். இவர்கள் ப்ரயோஜநத்தைத் தலைக்கட்டிக் கொடுக்கையாலே உண்டான புகர் திருவாழியிலே தோற்றும்படி இருக்கை. (நெடுமால்) "நம்பக்கலிலே கொள்ளப்பெற்றோமே வேறொரு ப்ரயோஜநமாகிலும்!" என்று பண்ணின வ்யாமோஹாதிசயம்.

விளக்கம் - (அமுதம் அமரர்கட்கு ஈந்த) – "ஈந்த" என்ற பதத்தை இட்டதற்கான விளக்கம் அளிக்கிறார்; இதனை "என்ன பரம உதாரனோ" என்பதன் மூலம் கூறுகிறார். அதாவது, யாராவது தன்னிடம் ஏதேனும் வேண்டி நின்றதையே காரணமாகக் கொண்டு, அவர்களுக்கு வேண்டியதைக் கொடுப்பவன் என்றபடி. "உயர்ந்த வள்ளல் தன்மைக்கு என்ன சான்று?", என்ற கேள்விக்கு விடை அளிக்கிறார். இவனிடம் தேவர்கள், "எங்களுக்கு நீ வேண்டாம்; நாங்கள் அழியாமல் இருப்பதற்கான வழிமுறைகளை நீ ஏற்படுத்தித் தந்தால் மட்டுமே போதுமானது", என்று கேட்டனர்; இவர்களுக்கும், அவர்கள்

விரும்பிய பொருளை அளிக்கிறான். தேவர்கள் இவன் மூலமாக அடைகின்ற பயனை அருவருத்தபடி, தான் அவனிடம் மகிழ்ந்த பலனுக்கு உள்ள வேறுபாட்டை அருளிச் செய்கிறார். (நிமிர் சுடராழி நெடுமால்) - நிமிர்சுடர் என்றால் மேன்மேலும் ஓங்கி வளர்கின்ற தேஜஸ்; அதாவது வளர்கின்ற சுடர் கொண்ட சக்கரத்தாழ்வானை உடையவன். இதுவே ஆழ்வாருக்கு அமிர்தமாக உள்ளது. திருவாய்மொழி (4-10-9) - நால் தோள் அமுதே - என்பது அல்லவோ இவருக்கு அமிர்தமாக உள்ளது? இரண்டாம் திருவந்தாதி (85) - அமுதென்றும் தேனென்றும் ஆழியானென்றும் - என்று கூறுவதற்கு ஏற்ப இவனது திருக்கரமும் சக்கரத்தாழ்வானும் சேர்ந்து இருக்கின்ற இருப்பு அல்லவோ இவருக்கு அமிர்தமாக உள்ளது? தேவர்கள் தன்னிடம் விரும்பிய பலனை அவர்களுக்கு அளித்துவிட்டோம் என்பதால் ஏற்பட்ட மகிழ்வு என்பது, சக்கராயுதத்தில் வெளிப்பட்டபடி உள்ளது. (நெடுமால்) – "தேவர்களாகிய இவர்கள் வேறு ஒரு பலனைப் பெற்றனர் என்றபோதிலும், அந்தப் பலனையும் நம்மிடமிருந்து பெறும்படியாகச் செய்தோமே", என்று இவர்கள் பக்கம் மோகத்துடன் உள்ளவன்.

வ்யாக்யானம் - (அமுதிலும் ஆற்றவினியன்) இவர்கள் வாசியறிவர்களாகில் இவனைக்கிடீர் பற்ற அடுப்பது? நம்பி திருவழுதிநாடுதாஸர், "இத்தேவஜாதி வெறும் மறையோ? உப்புச்சாறு கிளறுவது எப்போதோ? என்று கவிழ்ந்து பார்த்துக்கிடப்பதே, இவன் அழகையும் போக்யதையையும் விட்டு!" என்பராம். ஆற்ற இனியன் - மிகவும் இனியன். (நிமிர்திரை நீள்கடலானே) "அஸந்நிஹிதன்" என்றுதான் விடுகிறார்களோ? அவ்வம்ருதம் படுகிற கடலிலேகீடீர் அவன் சாய்ந்தருளிற்று. தன் வாசியறியாதிருப்பார்க்கும் எழுப்பிக் கார்யங்கொள்ளலாம்படி கண்வளர்ந்தருளுகிறவன். "தாளும் தோளும் முடிகளும் சமனிலாத பலபரப்பி" என்கிறபடியே கண்வளர்ந்தருளுகைக் கீடான பரப்பையுடைத்தாய், ஸ்வஸந்நிதாநத்தாலே திரைக்கிளப்பத்தையுடைத்தான கடலிலேயாயிற்று சாய்ந்தருளிற்று. "மாலும் கருங்கடலே! என் நோற்றாய்" என்னக் கடவதிறே.

விளக்கம் - (அமுதிலும் ஆற்றவினியன்) - தேவர்கள் நல்லதுகெட்டது குறித்து வேறுபாடு அறிபவர்கள் என்றால், இவனை அல்லவோ பற்றியபடி நிற்கவேண்டும்? ஆனால் இவர்களோ இவனது மேன்மையை அறிந்து கொள்ளாமல், எல்லையற்ற இன்பமாக உள்ள இந்த ஆராவமுதனை விடுத்து, மற்ற பலன்களைக் கைக்கொண்டனரே என்று,

தான் அருளிச்செய்த கருத்திற்கு மற்றவர் கூறும் ஆதரவைக் காட்டுகிறார். ஸ்வாமி நம்பி திருவழுதிநாடுதாஸர், "இந்த தேவர்கள் இனம் என்பது வெறும் காட்டுமான்கள் போன்றதே ஆகும் [மரை என்றால் காட்டுமான், தவளை, காட்டுப்பசு என்று பல பொருள் உண்டு]. நிமிர் சுடராழி என்பதற்கு ஏற்ப உள்ள இவனது அழகு மற்றும், அமுதிலும் ஆற்ற இனியன் என்பதற்கு ஏற்ப உள்ள இவனது இனிமை ஆகியவற்றை ஒதுக்கிவிட்டு, இவன் எப்போது நமக்கு இந்த அமிர்தத்தைக் கடைந்து கொடுப்பான் என்று கவிழ்ந்து பார்த்தபடி உள்ளனரே!", என்பார். ஆற்ற இனியன் என்றால் மிகவும் இனிமையானவன். (நிமிர்திரை நீள்கடலானே) – நிமிர் திரை என்றால் கொந்தளித்தபடி உள்ள அலைகள். இவன் நமக்கு அருகில் இல்லை என்று எண்ணி அவனை விடுகிறார்களோ? அந்த அமிர்தம் வெளிப்படும் அதே கடலில் தன்னுடைய மேன்மை, மற்றவர்களுக்கும் தனக்கும் இடையே உள்ள வேறுபாடு ஆகியவற்றை அறியாமல் உள்ளவர்கள் கூட தன்னை போகநித்திரையில் இருந்து எழுப்பிக் காரியம் சாதித்துக் கொள்ளலாம் என்பது போன்று கண்வளர்கிறான். திருவாய்மொழி (8-10-8) – தாளும் தோளும் முடிகளும் சமனிலாத பலபரப்பி - குளிர்ந்த நீர் கொண்ட கடலைப் படைத்து, தன்னுடைய ஈடில்லாத திருவடிகள், திருத்தோள்கள், திருமுடிகள் ஆகியவற்றைப் பரப்பி - என்று கொண்டதாகவும், தன்னுடைய ஸம்பந்தம் காரணமாக ஓங்கி எழுகின்ற அலைகளைக் கொண்டதாகவும் உள்ள திருப்பாற்கடலில் சயனித்துள்ளான். முதல்திருவந்தாதி (19) – மாலும் கருங்கடலே! என் நோற்றாய் – இந்த உலகங்கள் அனைத்தையும் தனது திருவயிற்றில் வைத்தபடி, ஓர் ஆலந்தளிரில் கண்வளர்ந்தவனும், திருச்சக்கரத்தாழ்வானைக் கொண்டவனும், அழகான கறுத்த திருமேனி மற்றும் சிவந்த திருக்கண்கள் கொண்டவனும், அடியார்களிடம் எப்போதும் மயக்கத்துடன் உள்ளவனும் ஆகிய ஸர்வேச்வரன் கண்வளர்கின்ற இடத்தில், அனைத்துக் காலங்களிலும் அவன் திருமேனியின் அழகை அனுபவித்தபடி, அந்தத் தொடுதல் காரணமாக மயங்கியபடி, அவன் திருமேனியை ஒத்த நிறத்தைக் கொண்டபடி இருக்கின்ற கடலே! இப்படிப்பட்ட பேறு பெறுவதற்கு நீ என்ன உபாயத்தைக் கைக்கொண்டாய்? அதனை என்னிடம் கூறமாட்டாயா? நானும் அதனைக் கைக்கொள்வேனே - என்று கூறுவது காண்க.

குறிப்பு - இந்தப் பாசுரத்தை – அமரர்கட்கு அமுதம் ஈந்த, நிமிர் சுடராழி நெடுமால், நிமிர்திரை நீள் கடலான், அமுதிலும் ஆற்றவினியன் - என்று வரிசைப்படுத்திப் பொருள் கொள்ளவேண்டும்.

1.6.7 நீள்கடல் சூழிலங் கைக்கோன்
தோள்கள் தலைதுணி செய்தான்
தாள்கள் தலையில் வணங்கி
நாள் கடலைக் கழிமினே.

பொருள் – நீண்ட கடலால் சூழப்பட்ட இலங்கையின் அரசனாகிய இராவணனின் இருபது தோள்கள் மற்றும் பத்துத்தலைகள் ஆகியவற்றைத் துண்டித்தான். அப்படிப்பட்ட ஸர்வேச்வரனின் திருவடிகளைத் தலையால் வணங்கி, காலம் என்ற கடலைக் கடப்பீர்களாக.

அவதாரிகை – அவன் நிரதிசயபோக்யன் என்றீர்; அவனை ப்ராபிக்குமளவும் நடுவு காலக்ஷேபம் பண்ணும்படியென் என்ன; அதுக்கன்றோ மனத்துக்கினியானுடைய குணங்களிருக்கிறது என்கிறார்.

விளக்கம் - ஸம்ஸாரிகள் ஆழ்வாரிடம், "ஸர்வேச்வரன் எல்லையற்ற இன்பம் அளிப்பவன், இனிமையானவன் என்று கூறினீர். அவனை நாங்கள் சென்று அடையும் காலம் வரை இடையில் உள்ள காலத்தை எவ்விதம் போக்குவது?", என்று கேட்டனர். இதற்கு ஆழ்வார், "அதற்காக அல்லவோ, திருப்பாவை (12) மனத்துக்கு இனியான் – என்பதான சக்ரவர்த்தித்திருமகனாகிய இராமனின் திருக்கல்யாண குணங்கள் உள்ளன! அவற்றை எண்ணியபடி பொழுதைக் கழிப்பீர்களாக", என்கிறார்.

வ்யாக்யானம் - (நீள்கடல் சூழ் இலங்கைக்கோன் இத்யாதி) "பரந்த கடலை அகழாகவுடைத்தாய், அதுதானும் மிகையாம்படியான அரணையுடைத்தாயிருந்துள்ள லங்கைக்கு நிர்வாஹகனல்லேனோ" என்னும் துரபிமாநத்தாலே "சக்ரவர்த்தித்திருமகன்" என்று மதியாதே எதிரிட்ட பையலுடைய. (தோள்கள் தலை துணிசெய்தான்) "அகப்படாதவன் அகப்பட்டான், தப்பாமல் கொன்றுவிடுவோம்" என்று பாராதே, தோளைக் கிழித்துத் தலையைச் சரித்துப் போதுபோக்காக நின்று கொன்றபடி. அவனுடைய வீரசரிதங்களைக் கொண்டு திருவடியைப்போலே போதுபோக்கி. (நாள் கடலைக் கழிமினே) அவனுடைய போக்யதை நெஞ்சிலே பட்டால், அவனை ப்ராபிப்பதற்கு முன்பு நடுவுபட்ட நாள் ஒரு கடல்போலே தோற்றுமாயிற்று. அன்றிக்கே,

சக்ரவர்த்தித்திருமகனை ஆச்ரயித்து, ஸம்ஸார துரிதத்தைக் கழித்துக்கொள்ளுங்கோள் என்கிறாராதல்.

விளக்கம் - (நீள்கடல் சூழ் இலங்கைக்கோன் இத்யாதி) – "நீண்டு விரிந்துள்ள கடல் என்பதையே அகழி போன்று கொண்டதாகவும், அதனையும் விடப் பெரிதான அரண்களைக் கொண்டதாகவும் உள்ள இலங்கை. இப்படிப்பட்ட இலங்கையின் அதிபதி நானே ஆவேன்", என்ற தீய அகங்காரம் காரணமாக, "சக்ரவர்த்தித்திருமகன்" என்றும் மதிக்காமல், ஸர்வேச்வரனாகிய இராமனை எதிர்த்த பையல். அதாவது இராவணனுடைய. (தோள்கள் தலை துணிசெய்தான்) - "யாரிடமும் சிக்காதவன் நம்மிடம் அகப்பட்டான், சட்டென்று இவன் தப்பிவிடாமல் கொல்வோம்", என்று எண்ணவில்லை. மாறாக அவன் தோள்களை வீழ்த்தி, தலையை அறுத்து, பொழுது போக்காக நின்று கொன்றான். இப்படிப்பட்ட இராமனின் வீரசரிதங்களை, அனுமன் எவ்விதம் அவனையே எண்ணியபடி பொழுதைக் கழிக்கிறானோ அது போன்று பொழுதைப் போக்கி. (நாள் கடலைக் கழிமினே) – ஸர்வேச்வரனின் இனிமை என்பது நம்முடைய உள்ளத்தில் நிலைநின்றது என்றால்; அவனை அடைவதற்கு நடுவில் உள்ள ஒவ்வொரு நாளும் ஒரு கடல் போன்று நீண்டதாகவே இருக்கும் என்கிறார். அதாவது ஒருநாள் என்பது ஒரு கடல் போன்று நீண்டு. அல்லது வேறுவிதமாகவும் பொருள் உரைக்கலாம். சக்ரவர்த்தித் திருமகனான இராமனை அண்டி நின்று ஸம்ஸாரம் என்ற கடலைக் கழிப்பீர்களாக; இராமனின் திருவடிகளை ஆச்ரயித்தல் என்றால் அவனது சரிதங்களை எண்ணியபடி பொழுதைப் போக்குதல் என்று கருத்து.

1.6.8 கழிமின் தொண்டீர்கள் கழித்துத்
தொழுமின் அவனைத் தொழுதால்
வழிநின்ற வல்வினை மாள்வித்து
அழிவின்றி யாக்கம் தருமே.

பொருள் – உலகியல் விஷயங்கள் மீது சபலத்துடன் உள்ளவர்களே! உங்களது அவ்விதமாக பற்றுதல்களை நீக்கிக் கொள்வீர்களாக. அவற்றை நீக்க, சக்ரவர்த்தித் திருமகனை வணங்குங்கள். அவனை வணங்கியவுடன் – எல்லையற்ற காலமாகத் தொடர்ந்து வருவதும், அனுபவித்தாலும் கழிக்க இயலாததும் ஆகிய தீயவினைகள் அனைத்தையும் "அவை இல்லை" என்று ஆக்குவீர்களாக. அதன் பின்னர் "மீண்டும்

திரும்புதல்" என்பது இல்லாத நித்யமாக உள்ள மோக்ஷத்தை அளித்து, அங்கு செய்யப்படும் கைங்கர்யம் என்ற உயர்ந்த செல்வத்தையும் அவன் அளிப்பான்.

அவதாரிகை - சக்ரவர்த்தித்திருமகனுடைய வீரசரிதத்தை அநுஸந்தித்து இதர விஷய ப்ராவண்யத்தைத் தவிரவே, அவன்தானே ப்ரதிபந்தகங்களைப் போக்கி நித்ய கைங்கர்யத்தைத் தந்தருளுமென்கிறார்.

விளக்கம் - சக்ரவர்த்தித் திருமகனின் வீரசரிதங்களை எப்போதும் எண்ணியபடி இருந்து, மற்ற உலக விஷயங்களின் மீது உள்ள ஈடுபாட்டை நீக்கினால் போதுமானது. அப்படிப்பட்டவர்கள் தன்னை வந்தடைய உள்ள தடைகளை விலக்கி, கைங்கர்யச் செல்வத்தைத் தானே அளிப்பான் என்கிறார்.

வ்யாக்யானம் - (கழிமின்) பாஹ்யவிஷயங்களிலுண்டான ருசியைக் கழியுங்கோள். கழிக்கையாவது "பொல்லாது" என்றிருக்கை. இந்த ருசியைப் பூண்கட்டிக்கொள்ளத் தேடுகிறவர்கள் கழிக்கச் சொன்னால் கழியார்களிறே; பகவத்விஷயத்திலே சாபலமுடையீர்! கழிக்கப் பாருங்கோள். (கழித்துத் தொழுமின்) "அவனைத் தொழா நிற்கச் செய்தே இதுவும் க்ரமத்தாலே கழிகிறது" என்று இராதே அவச்யம் கழித்தே தொழுங்கோள். "கழிமின்" என்றுவைத்து, "கழித்து" என்றது - இதரவிஷயங்களில் விரக்திதானே ப்ரயோஜநமாகப் போருமென்கை. "தொழுமின்" என்றுவைத்து, "தொழுதால்" என்கிறது – கரும்பு தின்னக் கூலிபோலே, மேல் ஒரு பலமில்லையே யாகிலும் தொழுகைதானே பலம் போருமென்கை.

விளக்கம் - (கழிமின்) – அவனத்தவிர, உலக விஷயங்கள் மீது உண்டாகின்ற ஈடுபாட்டைத் தள்ளுங்கள். "கழிக்கை" என்றால், உலக விஷயங்கள் தகாதவை, "பொல்லாதவை" என்று இருத்தல் ஆகும். இப்படிப்பட்டவற்றை அனுபவித்தே தீருவது என்று சபதம் செய்தபடி உள்ளவர்களிடம் "கழியுங்கள்" என்று உரைத்தால், அவர்கள் அவ்விதம் செய்யமாட்டார்கள்; ஆகவே பகவத் விஷயத்தில் மட்டும் ஊற்றம் உடையவர்களே! நீங்கள் கழிக்கப் பாருங்கள். (கழித்துத் தொழுமின்) – இதனைக் கேட்ட ஸம்ஸாரிகள், "அவனை நாங்கள் வணங்கியபடியே இருக்கிறோம்; அப்போது இத்தகைய விஷயங்களில் உள்ள ஈடுபாடு என்பது தானாகவே கழிந்துவிடும்; எதற்காக தனியாக நாங்கள் முயற்சி செய்யவேண்டும்?", என்றனர். இதற்கு ஆழ்வார், "இப்படி நீங்கள்

காத்திராமால், கழிக்க முயற்சி செய்து, அவனைத் தொழுவீர்களாக", என்றார். "கழிமின்" என்று கூறிவிட்டு, மீண்டும் ஏன் "கழித்து" என்று உரைக்கிறார்? மற்ற பொருள்களின் மீது ஏற்படும் பற்றற்ற தன்மை என்பதே பலனாக இருக்கும் என்பதால், மீண்டும் இவ்விதம் கூறுகிறார். "தொழுமின்" என்று கூறிவிட்டு மீண்டும் ஏன் "தொழுதால்" என்கிறார்? கரும்பு தின்னக்கூலி போன்று ஒரு பலன் ஏற்படவில்லை என்றாலும், தொழுது நிற்பது என்பதே பலனாக உள்ளது என்பதை உணர்த்தவே இவ்விதம் இரண்டாவது முறையாக அருளிச் செய்தார்.

வ்யாக்யானம் – இப்படிச்செய்தால், (வழிநின்ற வில்வினை மாள்வித்து) "இவ்வாத்மாவுக்கு ஸ்வரூபாநுபந்தியோ" என்னும்படி பொருந்தியிருக்கிற ப்ரபலகர்மங்களை வாஸநையோடே போக்கி. வழிநின்ற வல்வினை – நடுவே நின்று பகவத்ப்ராப்தியை நிரோதிக்கிற கர்மம் என்றுமாம். (அழிவின்றி ஆக்கம் தருமே) "ந ச புநராவர்த்ததே" என்கிறபடியே அபுநராவ்ருத்தி லக்ஷண மோக்ஷத்தைத் தரும்.

விளக்கம் – இவ்விதம் செய்தால் கிட்டுவது என்ன? (வழிநின்ற வில்வினை மாள்வித்து) – "இந்தக் கொடிய தீயவினைகள் அனைத்தும் ஆத்மாவுடன் எப்போதும் அதன் ஸ்வரூபத்துடன் இணைந்தே உள்ளனவோ?", என்று எண்ணும்படியாகப் பொருந்தியுள்ள கர்மங்களை, அவற்றின் வாசனையுடன் நீக்கி. "வழி நின்ற வல்வினை" என்பதற்கு "ஸர்வேச்வரனை அடையவிடாமல் நடுவில் நின்று கொண்டு தடுக்கின்ற கர்மங்கள்" என்றும் பொருள் உரைக்கலாம். (அழிவின்றி ஆக்கம் தருமே) - ஆக்கம் என்றால் மோக்ஷமாகிய செல்வம். சாந்தோக்ய உபநிஷத் – ந ச புநராவர்த்ததே - மீண்டும் திரும்புவதில்லை - என்று உரைக்கிறபடியே, மீண்டும் இந்த உலகிற்குத் திரும்புதல் என்பதே இல்லாத தன்மை கொண்டதான மோக்ஷம் அளிப்பான்.

குறிப்பு - இந்தப் பாசுரத்தை – தொண்டீர்கள் கழிமின், கழித்து அவனைத் தொழுமின், தொழுதால் என்று தொடங்கி ஆக்கம் தரும் - என்று வரிசைப்படுத்திப் பொருள் கொள்ளவேண்டும்.

1.6.9 தரும வரும் பயனாய
திருமகளார் தனிக்கேள்வன்
பெருமையுடை பிரானார்
இருமைவினை கடிவாரே.

பொருள் – அனைத்துவிதமான தர்மங்களும் ஒன்றாகச் சேர்ந்தபோதிலும் கிடைப்பதற்கு அரியதான பயன்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து ஒரு வடிவம் எடுத்தனவோ என்று கூறும்படியாக உள்ள பெரியபிராட்டியாரின் ஈடில்லாத நாயகன்; இப்படிப்பட்ட பெரியபிராட்டியாருடன் உள்ளதால் மேன்மையுடன் விளங்கும் ஸர்வேஸ்வரன்; அவன் நம்முடைய இருவினைப் பயன்களை அளிக்கின்ற கர்மங்களை நீக்குவான்.

அவதாரிகை – தன்னைப் பற்றின மாத்ரத்திலே, இப்படி விரோதிகளைப் போக்கி இப்பேற்றைத் தரக்கூடுமோ? என்னில், வெறும் அவன்படியையோ பார்ப்பது? அருகே இருக்கிறார்படியையும் பார்க்கவேண்டாவோ? "ந கச்சிந் நாபராத்யதி" என்பாரன்றோ அருகிருக்கிறார் என்கிறார்.

விளக்கம் – இவ்விதம் தன்னை ஒருவர் பற்றியவுடனேயே அவரது தடைகள் அனைத்தையும் நீக்கி, உயர்ந்த புருஷார்த்தத்தையும் அளிப்பானோ என்ற கேள்வி எழலாம். இதற்கு விடை அருளிச்செய்கிறார். "அவனது தன்மையை மட்டுமோ நீங்கள் பார்ப்பது? இதனால்தான் இந்தக் கேள்வி உங்களுக்கு எழுகிறது. அவனது அருகில் யார் உள்ளார்களோ அவர்களது தன்மையையும் ஆராயவேண்டாமோ? அவன் அருகிள் உள்ள பெரியபிராட்டியாரின் தன்மை எப்படிப்பட்டது என்றால் இராமாயணம் யுத்தகாண்டம் (116-43) - பாபாநாம் வா சுபாநாம் வா வதார்ஹாணாம் ப்லவங்கம கார்யம் கருணமார்யேண ந கச்சிந்நாபராத்யதி – நல்லவழியில் நடக்கும் ஒருவன் (தன் முன்னே உள்ளவர்கள்) பாவியாக இருந்தாலும், நல்லவர்களாக இருந்தாலும், கொலை செய்தவனுக்கு ஏற்றவனாக இருந்தாலும் அவர்களிடம் கருணையுடந்தான் நடந்து கொள்வான்; காரணம் இந்த உலகில் குற்றம் செய்யாதவர்கள் என்று யாருமே இல்லை - என்று அனுமனிடம் சீதை எடுத்துரைத்தது காண்க. இப்படிப்பட்ட பெரியபிராட்டி அல்லவோ அவன் அருகில் உள்ளாள்?", என்கிறார்.

வ்யாக்யானம் - (தரும்) இவ்வர்த்தத்தில் ஸம்சயமில்லை. (அவ்வரும் பயனாய) பெறுதற்கரிதாக சாஸ்த்ரங்களிலே ப்ரஸித்தமாக ப்ரயோஜநரூபமானவற்றை. அன்றிக்கே, தர்மத்தினுடைய பரமப்ரயோஜநந்தான் வடிவு கொண்டாப் போலேயிருக்கிற பெரியபிராட்டியாருக்கு வல்லபனாகையாலே அத்விதீய நாயகனாயிருக்கிறவன் என்றுமாம். "அப்ரமேயம் ஹி தத்தேஜ:" என்கிறபடியே ஸ்ரீய:பதியாகையாலே வரும் ஏற்றமுள்ளது இவன் ஒருவனுக்குமிறே.

விளக்கம் – கடந்த பாசுரத்தின் இறுதியில் "தரும்" என்று உரைத்து, இங்கு மீண்டும் "தரும்" என்பதன் மூலம், இந்த அர்த்தத்தில் எந்தவிதமான சந்தேகம் இல்லை என்கிறார். (அவ்வரும் பயனாய) – பயனாக என்றால் பயன்களை என்று கருத்து. இங்கு "திருமகளார் தனிக்கேள்வன் பெருமையுடைய பிரானார் இருமை வினை கடிந்து, அவ்வரும் பயனாய தரும்" என்று படிக்கவேண்டும். "அவ்வரும் பயன்" என்பதில் உள்ள "தத்" என்ற பொருளானது, சரீரத்தைப் போக்குதல் தொடங்கி கைங்கர்யம் செய்வது முடிய உள்ள பயன்களைக் குறிக்கும். பெறமுடியாததாக சாஸ்த்ரங்களில் உரைக்கப்பட்ட உயர்ந்த புருஷார்த்தங்கள் அனைத்தையும் அளிப்பான் என்று கருத்து. அல்லது பாசுரத்தில் காணப்படும் வரிசையில் பதங்களை எடுத்துக்கொண்டு - தர்மத்தின் உயர்ந்த பலன் என்பதே ஒரு வடிவம் எடுத்து போன்று உள்ள பெரியபிராட்டியாரின் நாயகன் – என்று கொள்ளலாம். பெரியபிராட்டியாரின் நாயகனாக உள்ளதால், இந்த லோகத்திற்கு இவனைத் தவிர இரண்டாவதாக ஒரு நாயகன் உண்டு என்று கூற இயலாதபடி, தனியாக உள்ள நாயகன் என்ற பெருமை கொண்டவன். இப்படிப் பெரியபிராட்டியாரின் ஸம்பந்தத்தால் மட்டுமே ஈடில்லாத தனிநாயகன் என்ற நிலை ஏற்படுமோ என்ற கேள்விக்கு அடுத்து விடை அருளிச்செய்கிறார். இராமாயணம் ஆரண்யகாண்டம் (39-18) – அப்ரமேயம் ஹி தத்தேஜோ யஸ்ய வா ஜநகாத்மஜா – ஜனகனின் புத்ரியாகிய சீதை யாருடைய பத்தினியோ, அவனது வலிமை ஈடில்லாதது – என்று கூறுவது காண்க; ஆக பெரியபிராட்டியாரின் நாயகன் என்பதால் வரும் மேன்மை இவன் ஒருவனுக்கு மட்டுமே உள்ளது என்றாகிறது.

வ்யாக்யானம் - லக்ஷ்மீபதியாகையாலே வந்த மேன்மையையுடைய உபாகாரகரானவர். (பிரானார்) ஆச்ரிதாநுக்ரஹமே ஸ்வரூபமாயுள்ளவர். (இருமை வினை கடிவாரே) பேர்வாசியேயாம்படி நாம் பண்ணி வைத்த இருவகைப்பட்ட கர்மங்களையும்

போக்குவார். புண்யபாபங்களுக்குத் தன்னில் தான் வைஷம்யமுண்டேயாகிலும், மோக்ஷவிரோதித்வாத் த்யாஜ்யமாகை நின்றனவிறே.

விளக்கம் - மஹாலக்ஷ்மியின் நாயகனாக உள்ளதால் வந்த மேன்மையைக் கொண்டவன்; இதனால் எனக்கு அனைத்துவிதமான உதவிகளையும் செய்தபடி உள்ளவன். (பிரானார்) - அடியார்களுக்கு அனுக்ரஹம் செய்தல் என்பதைத் தனது இயல்பாகவே கொண்டுள்ளவன். (இருமை வினை கடிவாரே) – புண்ணியம், பாவம் என்ற வேறுபாட்டுடன் கூடியதான நாம் செய்த இரண்டுவிதமான கர்மங்களையும் நீக்குவான். பாவத்தைக் காட்டிலும் புண்ணியம் ஏற்புடையது அல்லவோ என்றால், அது மோக்ஷத்திற்குத் தடையாக உள்ள ஸ்வர்க்கத்தை அளித்துவிடும் என்பதால் அதுவும் தள்ளத்தக்கதே ஆகும். இங்கு அரும்பத உரைக்காரர் ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த ஸ்ரீவரதராஜ பஞ்சாசத்தில் (29) உள்ள ச்லோகத்தைக் காண்பிக்கிறார்; அந்த ச்லோகம் - ஸத்யஸ் த்யஜந்தி வரத த்வயி பத்தபாவா: பைதாமஹாதிஷு பதேஷ்வபி பாவபந்தம் கஸ்மை ஸ்வதேத ஸுகஸஞ்சரணோத்ஸுகாய காராக்ருஹே கநகச்ருங்கலயா அபி பந்த: - வரதனே! உன்னிடம் ஈடுபாட்டுடன் உள்ள மனம் கொண்டவர்கள், நான்முகன் உள்ளிட்டவர்களின் பதவியைப் பிடிக்கின்ற அல்லது அவர்களின் லோகங்களின் வாழ்கின்ற ஆசை என்னும் பற்றுதலை விட்டுவிடுகின்றனர்; சுகமாகத் திரிவதில் விருப்பம் கொண்ட ஒருவனுக்குச் சிறையில் உள்ள பொன்விலங்கு எவ்விதம் இன்பம் தரும் - என்பதாகும். புண்ணியம் மற்றும் பாவம் ஆகிய இரண்டிற்கும் வேறுபாடு உண்டு என்றபோதிலும், மோக்ஷத்தின் தடைகள் என்ற தன்மையில் இரண்டும் ஒத்தவையே ஆகும் என்கிறார்.

1-6-10. கடிவார் தீய வினைகள்
நொடியாரும் அளவைக்கண்
கொடியாவடு புள்ளுயர்த்த
வடிவார் மாதவனாரே.

பொருள் – அடியார்களின் விரோதிகளை அழியும்படிச் செய்யும் கருடனைத் தனது கொடியில் கொண்டவன்; கொடியதான தீயவினைகளை ஒரு நொடி அளவில் நீக்குபவன்; எழிலான திவ்யமங்கள திருமேனி கொண்டவன்; மஹாலக்ஷ்மியின் நாயகன் – நமது வினைகளைப் போக்குவான்.

அவதாரிகை - இப்படி அவனும் அவளுமாகக் குற்றங்களைப் போக்குவது எத்தனை காலங்கூடி? என்னில், தன் திருவடிகளிலே தலைசாய்ந்தவளவிலே என்கிறார்.

விளக்கம் - இவ்விதம் அவனும் பெரியபிராட்டியாரும் சேர்ந்து நின்று நம்முடைய குற்றங்கள் அனைத்தையும் எத்தனை காலத்தில் போக்குவார்கள்? மிகுந்த தாமதம் ஆகுமோ என்று கேட்கலாம். இதற்கு விடை அளிக்கிறார் - அப்படித் தாமதம் ஆவதில்லை; தன்னுடைய திருவடியில் சரணம் என்று புகுந்த உடனேயே நிகழ்கிறது என்கிறார்.

வ்யாக்யானம் – (கடிவார் தீய வினைகள்) காலதத்வமுள்ளதனையும் தன்னால் போக்கிக் கொள்ளவொண்ணாத கொடிய பாவங்களைப் போக்குவார் "வழிநின்ற வல்வினை மாள்வித்து" என்கிறவிடத்தில் ஆச்ரயித்த மாத்ரத்திலே பாபங்களை போக்கும் என்றார். "இருமை வினைகடிவார்" என்கிறவிடத்தில் அவன் தானானதுக்கு மேலே பிராட்டியும் கூட இருக்கையாலே போக்கும் என்றார். எவ்வளவில் போக்குவது? என்னில் க்ஷண காலத்திலே என்கிறர் இதில்.

விளக்கம் - (கடிவார் தீய வினைகள்) - காலம் என்ற தத்வம் உள்ளவரை வாழ்ந்து அனுபவித்துக் கழிக்க முயன்றாலும் கழிக்க இயலாமல் உள்ள நம்முடைய தீய பாவங்களைப் போக்குவான்; அதாவது நம்மால் நாமாகவே முயன்று போக்கிக் கொள்ள இயலாத பாவங்களை அவன் போக்குவான். திருவாய்மொழி (1-6-8) – வழிநின்ற வல்வினை மாள்வித்து, (1-6-9) – இருமை வினை கடிவார், (1-6-10) – கடிவார் - என்பதான மூன்று பாசுரங்களுக்கும் உள்ள வேறுபாடுகளை அடுத்து உரைக்கிறார். "வழி நின்ற" என்னும் பாசுரத்தில் – தன்னை அண்டியவர்கள் விஷயத்தில் இவ்விதம் தீவினைகளைப் போக்குவான் - என்றார். "இருமை வினை கடிவார்" என்ற பாசுரத்தில் – தானாக மட்டும் போக்காமல், பெரியபிராட்டியும் சேர்ந்து புருஷகாரமாக உள்ளதால் போக்குவான் - என்றார். எத்தனை விரைவாகப் போக்குவான் என்றால், ஒரு நொடிப்பொழுதில் போக்குவான் என்று இந்தப் பாசுரத்தில் உரைக்கிறார்.

வ்யாக்யானம் - (நொடியாரும் அளவைக்கண்) நொடிநிறையும் அளவிலே. (கொடியா அடு புள் உயர்த்த வடிவார்) தூரத்திலே காணவே ப்ரதிபக்ஷம் மண்ணுண்ணும்படியான பெரியதிருவடியை த்வஜமாக எடுக்கையை ஸ்வபாவமாக உடையவர் என்னுதல்; வடிவார்

- ஆர்ந்த வடிவையுடையவர், அழகிய வடிவை உடையவர் என்னுதல், "வடிவார்மா" என்று நாய்ச்சியார்க்கு விசேஷணமாதல். வடிவிலே ஆர்ந்திருக்கிறவள் என்னுதல்; அழகிய வடிவையுடையவள் என்னுதல்; வடிவிலே பொருந்தியிருக்கிறவள் என்னுதல்.

விளக்கம் – (நொடியாரும் அளவைக்கண்) - ஒரு நொடிப்பொழுது முடிவடைவதற்கு முன்பாகவே. (கொடியா அடு புள் உயர்த்த வடிவார்) – "வடிவார்" என்ற பதத்தை ஸர்வேச்வரனுக்கு அடைமொழியாகவும், பெரியபிராட்டிக்கு அடைமொழியாகவும் கொள்ளலாம். முதலில் ஸர்வேச்வரனுக்கு அடைமொழியாகக் கொண்டு இரண்டு விதமாகப் பொருள் உரைக்கிறார். முதல் பொருள் - இவனைத் தூரத்தில் காணும்போதே எதிரிகள் மண்ணைக் கவ்வும்படியாக பெரியதிருவடியாகிற கருடனைத் தனது கொடியாகக் கொள்கின்ற ஸ்வபாவம் உடையவன் – என்பதாகும். இரண்டாம் பொருள் – மிகவும் அழகான வடிவு கொண்டவன்; ஆர்ந்த வடிவு - என்பதாகும். அடுத்து "வடிவார்" என்பதைப் பெரியபிராட்டிக்கு அடைமொழியாகக் கொண்டு பொருள் உரைக்கிறார். ஸர்வேச்வரனின் அழகுக்குப் பொருந்தியபடி உள்ளாள் என்பதாகும். அழகான வடிவைக் கொண்டவள் என்று கருத்து. இங்கு பொருந்துதல் என்றால் அகலாமல் இருத்தல் என்றும் கருத்து.

வ்யாக்யானம் - (மாதவனார்) பிராட்டி அருகேயிருந்து போக்குவிக்கவாயிற்றுப் போக்குவது. "ஒருதலை ஜந்மம்; ஒருதலை மரணம்; நடுவே ஆதிவ்யாதிகள்; இவை செய்த குற்றங்களைப் பார்க்கக்கடவதோ? குற்றங்கண்டுவிடில் விபூதியாக விடவேண்டாவோ? பொறுத்தருளீர்" என்றால், அவளுக்காக, "பொறுத்தோம்" என்னுமித்தனை.

விளக்கம் – (மாதவனார்) மா என்றால் பிராட்டி, தவன் என்றால் நாயகன்; ஆக மாவுக்கு நாயகன், பிராட்டிக்கு நாயகன். ஸர்வேச்வரன் சுதந்திரமானவன் என்றுள்ளபோது அவள் அவனை மாற்றி கடாக்ஷிப்பது எப்படி என்று உரைக்கிறார். பெரியபிராட்டியார் ஸர்வேச்வரனிடம், "ஒரு பக்கம் பார்த்தால் பிறப்பு, மற்றொரு பக்கம் மரணம், நடுவில் உள்ள வாழ்க்கையில் எண்ணற்ற உடல் நோய்கள் உள்ளன. இப்படி உள்ளபோது இவன் செய்த குற்றங்களை ஆராய்வது சரியா? குற்றங்களை மட்டுமே ஆராய்ந்து ஒருவனைக் கைவிடுதல் என்றால், உலகம் முழுவதையும் கைவிடவேண்டிய நிலையே ஏற்படும். ஸ்ரீகுணரத்னகோசம் (52) - இஹ ஜகதி நிர்தோஷ: க: - இந்த உலகில் குற்றம் செய்யாதவர்கள் யார் - என்றது காண்க. ஆகவே இவர்களைப் பொறுத்துக் கொண்டு

அனுக்ரஹம் செய்யவேண்டும்", என்கிறாள். இதனைக் கேட்ட அவன், "இவளுக்காகப் பொறுத்துக்கொண்டோம்", என்கிறான்.

குறிப்பு – இங்கு கருடனைக் கூறியது ஏனென்றால், பெரிய திருவடியான அவனை எவ்விதம் ஸர்வேச்வரன் கைக்கொள்கிறானோ அது போன்று பெரியபிராட்டியாருடன் கூடியபடி நின்று நம்மைக் கைக்கொள்வான் என்று ஆறாயிரப்படியில் உள்ள கருத்து நோக்குக.

1-6-11. மாதவன் பாற்சடகோபன்
தீதவமின்றி யுரைத்த
ஏதமிலாயிரத்திப்பத்து
ஓதவல்லார் பிறவாரே.

பொருள் – மஹாலக்ஷ்மியின் நாயகனான ஸர்வேச்வரன் குறித்து, தனது (ஸர்வேச்வரன்) மேன்மையை எண்ணி உதாசீனம் செய்தல் மற்றும் அடியார்களின் தோஷங்களைப் பார்த்துக் கைவிடுதல் போன்ற குற்றங்கள் அற்றவன் என்பதை உரைக்கும்விதமாக அமைந்துள்ள, தோஷம் ஏதும் இல்லாத ஆயிரம் பாசுரங்கள் கொண்டதான திருவாய்மொழியில் உள்ள இந்தப் பத்துப் பாசுரங்களை ஆழ்வார் அருளிச்செய்தார். இதனை ஆசார்யன் மூலமாக நன்கு உணரவல்லவர்கள் ஸம்ஸாரத்திற்கு மீண்டும் திரும்பமாட்டார்கள்.

அவதாரிகை - நிகமத்தில், இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவல்லவர்கள் ஸம்ஸாரத்தில் வந்து பிறவார் என்கிறார்.

விளக்கம் – இறுதியாக இந்தத் திருவாய்மொழியைக் கற்கவல்லார்கள் ஸம்ஸாரத்தில் வந்து பிறக்கமாட்டனர் என்கிறார்.

வ்யாக்யானம் - (மாதவன் இத்யாதி) "தீதும், அவமும், ஏதமும்" என்று மூன்றாய், இம்மூன்றையும் ப்ரதிபாத்யனுக்கும் வக்தாவுக்கும் ப்ரபந்தத்துக்குமாக்கி, "இவை இல்லாமையைச் சொல்லுகிறது" என்று நிர்வஹிப்பாருமுண்டு. பட்டர் அங்ஙனன்றிக்கே, "ஏதமில்லாயிரம்" என்று ப்ரபந்த லக்ஷணஞ் சொன்னபோதே, த்ரிவித தோஷராஹித்யமுஞ் சொல்லிற்றாம்; இனி, தீதும் அவமுமாவது செய்வதென்? என்னில்; "சடகோபன்

மாதவன்பால் தீது அவமின்றி உரைத்த" என்றாகக்கடவது என்று அருளிச்செய்தார். அதாவது தீதாவது; "நான் ஸ்ரீய:பதியல்லேனோ!" என்று தன் மேன்மையைப் பார்த்துக் கடக்கவிருக்குமது. அவமாவது – "ஆச்ரயிக்கிறவன் நித்யஸம்ஸாரியன்றோ!" என்று இவன் சிறுமையைப் பார்த்துக் கைவிடுமது. இவையில் இல்லாமையைச் சொன்ன இப்பத்து என்றபடி. ஆயிரத்திலும் இந்தப் பத்தையும் அப்யஸிக்கவல்லவர்கள் பிறவார்; பிறவார் – பிறக்கை சுட்டியிறே, "மாத்ருஸம்ரக்ஷணம் அழகிது" என்னுமோபாதி, "பகவத் ஸமாச்ரயணம் எளிது" என்று உபதேசிக்கவேண்டுகிறது; இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவல்லவர்கள் உபதேச நிரபேக்ஷமாக, ஸம்ஸார ஸம்பந்தமற்று பகவத நுபவமே யாத்ரையாம்படியிருக்கிறவர்களோடே கூடி அநுபவிக்கப் பெறுவர்கள் என்கிறார்.

விளக்கம் – (மாதவன் இத்யாதி) - "தீது இன்றி இருக்கிற மாதவன்பால், அவமின்றி இருக்கிற சடகோபன் உரைத்த ஏதமில் ஆயிரத்து இப்பத்து ஓதவல்லார் பிறவார்" என்று படிக்கவேண்டும். இங்கு தீது, அவம் மற்றும் ஏதம் ஆகிய மூன்றும் "குற்றம்" என்னும் பொருள் அளிப்பதாகும். இதனை ப்ரபந்தத்தால் உரைக்கப்படுபவன், ப்ரபந்தத்தை உரைத்தவர், ப்ரபந்தம் ஆகியவற்றுக்கு ஏற்றிப் பொருள் கொள்ளவேண்டும். அதாவது ப்ரபந்தத்தால் உரைக்க்ப்படும் ஸர்வேச்வரன் தோஷம் அற்றவன், ப்ரபந்தம் உரைத்த ஆழ்வார் தோஷம் அற்றவர், இந்தத் திருவாய்மொழி தோஷம் அற்றது என்று கொள்ள வேண்டும். ஸ்வாமி பராசரபட்டர் இந்தப் பாசுரத்தை "சடகோபன் மாதவன்பால் தீதவமின்றி உரைத்த ஏதமில் ஆயிரத்து இப்பத்து ஓதவல்லார் பிறவார்" என்று வரிசைப்படுத்திப் பொருள் உரைப்பார். அதாவது, "ஏதும் இல் ஆயிரம்" என்று இந்த ப்ரபந்தத்தின் தோஷம் அற்ற தன்மை உரைக்கப்பட்டபோதே மேலே கூறப்பட்ட மூன்றுவிதமான தோஷங்களும் இல்லை என்பது தெளிவாக உரைக்கப்படுகிறது; ஆகவே தனியாக உரைக்கவேண்டிய அவசியம் இல்லை", என்றார். இதனைக் கேட்ட சிலர், "அப்படியென்றால், பாசுரத்தில் உள்ள தீது மற்றும் அவம் ஆகியவற்றின் பொருள் என்ன?", என்றனர். அதற்குப் பட்டர், "சடகோபன் மாதவன்பால் தீதவமின்றி உரைத்த ஏதமில் ஆயிரத்து இப்பத்து ஓதவல்லார் பிறவார் - என்று பாசுரத்தைப் படிக்கவேண்டும்", என்றார். இதன் கருத்து - "தீது" என்றால் ஸர்வேச்வரன் "நான் பெரியபிராட்டியாரின் நாயகன் அல்லவோ" என்று தனது மேன்மையை எண்ணி அடியார்களைக் கைவிடுதல்; "அவம்" என்றால் "நம்மை அண்டுபவன் நித்யஸம்ஸாரி அல்லவோ", என்று எண்ணி

ஒதுக்குதல்; இந்த இரண்டு தோஷங்களும் அற்றவன் என்பதை விளக்கும்படியாக உரைத்த பாசுரங்களே இவை - என்பதாகும். (பிறவார்) – சாதாரண பலன் போன்று பிறப்பு முதலானவற்றை மட்டும் கூறுவது ஏன்? இத்தகைய பிறப்பு என்பது கைங்கர்யத்தை அடையவிக்கும் காரணமாக அமையும் என்பதால் இவ்விதம் உரைக்கிறார். "தாயைப் பேணுதல் அழகு" என்பது போன்று "ஸர்வேச்வரனை அடைதல் எளிது" என்கிறார். இந்தத் திருவாய்மொழியைக் கற்பவர்கள், எந்தவிதமான உபதேசமும் இல்லாமல், ஸம்ஸார ஸம்பந்தம் அற்றவர்களாக, பகவத் அனுபவமே வாழ்க்கைப்பாதை என்று உள்ளவர்களுடன் நின்று அனுபவிப்பர் என்கிறார்.

வ்யாக்யானம் - முதற்பாட்டில், ஆச்ரயிக்குமவனுக்கு த்ரவ்ய நியதில்லை என்றார்; இரண்டாம்பாட்டில், அதிகாரி நியதியில்லை என்றார்; மூன்றாம்பாட்டில், தம்முடைய கரணத்ரயமும் பகவத்விஷயத்திலே ப்ரவணமானபடியை அருளிச் செய்தார்; நாலாம் பாட்டில், நித்யஸூரிகளைப்போலே அதுதானே யாத்ரையாயிற்று என்றார்; அஞ்சாம் பாட்டில், தன்னையே ப்ரயோஜநமாகப் பற்றினார்க்கு அவன் நிரதிசய போக்யபூதன் என்றார். ஆறாம்பாட்டில், "இப்படி போக்ய பூதனானவனைவிட்டு ப்ரயோஜநத்தைக் கொண்டு அகலுவதே!" என்று ப்ரயோஜநாந்தரபரரை கர்ஹித்தார்; ஏழாம்பாட்டில் இவனையே ப்ரயோஜநமாகப் பற்றினார்க்குக் காலக்ஷேபம் இன்னதென்றார்; எட்டாம் பாட்டில், ப்ராப்தி விரோதிகளையும் அவன்தானே போக்குமென்றார்; ஒன்பதாம்பாட்டில், "இது கூடுமோ?" என்று சங்கையாக, "வெறும் அவன்படியையோ பார்ப்பது, அருகிருக்கிறார்படியையும் பார்க்கவேண்டாவோ?" என்றார்; பத்தாம்பாட்டில், "இவர்கள் எத்தனை காலங்கூடி விரோதிகளைப் போக்குவது?" என்ன, க்ஷணகாலத்திலே என்றார்; நிகமத்தில், இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவே ஸம்ஸரிக்கவேண்டா என்றார்.

விளக்கம் - முதல் பாசுரத்தில் ஸர்வேச்வரனைப் பற்றுகிறவர்கள் இன்ன வஸ்துவுடன் சென்று மட்டுமே அவனைப் பற்றவேண்டும் என்ற விதிமுறை ஏதும் இல்லை என்றார். இரண்டாம் பாசுரத்தில் இன்னவர்கள் மட்டுமே அவனைப் பற்றலாம் என்ற விதிமுறை இல்லை என்கிறார். மூன்றாம் பாசுரத்தில் தனது மனம், வாக்கு, சரீரம் ஆகிய மூன்றும் அவன் விஷயத்தில் நிலையான அன்பு கொண்டதைக் கூறுகிறார். நான்காம் பாசுரத்தில் இப்படிப்பட்ட நிலையான அன்பு என்பதே நித்யசூரிகள் போன்று யாத்திரை ஆனது என்றார். ஐந்தாம் பாசுரத்தில் தன்னை மட்டுமே பலன் என்று உள்ளவர்களுக்கு எல்லையற்ற இன்பம் உள்ளவனாக இருப்பதைக் கூறினார். ஆறாம் பாசுரத்தில்,

“இவ்விதம் இவன் இனிமையுடன் உள்ளபோது, இவனை நாடாமல் மற்ற பலன்களை நாடுகிறார்களே”, என்று தேவர்களை நிந்தித்தார். ஏழாம் பாசுரத்தில், இவன் மட்டுமே பலன் என்று உள்ளவர்களுக்குப் பொழுதைக் கழிக்கின்ற முறை இன்னது என்கிறார். எட்டாம் பாசுரத்தில், தன்னை அடைவதில் தடையாக உள்ள இடையூறுகளை அவன் தானாகவே விலக்குவான் என்கிறார். ஒன்பதாம் பாசுரத்தில், “இது போன்று அவன் தானாகவே தடைகளை விலக்குவானோ” என்னும் சந்தேகம் எழ - அவனது தன்மையை மட்டுமா பார்ப்பது, அவன் அருகில் உள்ள பெரியபிராட்டியாரின் தன்மையையும் பார்க்க வேண்டாமோ”, என்றார். பத்தாம் பாசுரத்தில், “இப்படியாக ஸர்வேச்வரனும் பெரியபிராட்டியாரும் சேர்ந்தபடி நமது தடைகளை எப்போது நீக்குவர்?”, என்ற கேள்விக்கு, “நொடிப்பொழுதில்” என்றார். இறுதியாக இந்தத் திருவாய்மொழியைக் கற்பவர்கள் மீண்டும் ஸம்ஸாரத்தை அடைவதில்லை என்கிறார்.

திருவாய்மொழி முதற்பத்து ஆறாம் திருவாய்மொழி ஸம்பூர்ணம்

திருவாய்மொழி முதல் பத்து ஏழாம் திருவாய்மொழி
பிறவித்துயர் ப்ரவேசம்

வ்யாக்யானம் - கீழில் திருவாய்மொழியிலே ஸ்வாரதனென்றார்; அதில் சொன்ன ஆச்ரயணந்தான் போகரூபமாயிருக்கும் என்கிறார் இதில். பகவத் ஸமாச்ரயணமாகிறது தான், இதுக்கு இட்டுப்பிறவாத ஸர்வேச்வரனுக்கு ஆசைப்படும்படி போக ரூபமாயிருப்பதென்றிறே. “அச்ரத்ததாநா: புருஷா:” விச்வாஸ பூர்வக த்வரா ரஹிதரானவர்கள். “அஸ்ய தர்மஸ்ய” என்றானிறே, தனக்கும் இனிதாயிருக்கையாலே. ”பரந்தப” விரோதி வர்க்கத்தை உதறவல்லாய் நீயன்றோ. “அப்ராப்ய மாம் நிவர்த்தந்தே” செய்த குற்றங்களையடையப் பொறுத்துத் தங்களை நல்வழிப்போக்கும் என்னை விட்டு, தந்தாமுடைய விநாசத்தைச் சூழ்ப்பதான ஸம்ஸாரத்தை விரும்பி அவ்வழியே போகா நிற்பார்கள். இதுதான் இருந்தபடி பாராய் என்கிறான்.

விளக்கம் – கடந்த திருவாய்மொழியில் ஸர்வேச்வரன் ஆராதிப்பதற்கு மிகவும் எளியவன் என்று அருளிச்செய்தார். அந்தத் திருவாய்மொழியில் கூறப்பட்ட ஆராதனை என்பது இன்பமயமாகவே இருக்கும் என்பதை இந்தத் திருவாய்மொழியில் அருளிச்செய்கிறார். ஸர்வேச்வரனை அனுபவித்தல் என்பது இன்பமாக இருக்கும் என்று கூறுவது சரி,

அவனை ஆராதிப்பது என்பதும் இன்பமாக இருக்குமோ என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார் "பகவத் ஸமாச்ரயணம்" என்று தொடங்கி. அதாவது ஸர்வேச்வரன் தன்னுடைய மேன்மையை தானே பார்க்கிறான்; அதனைக் கண்டு அதிசயம் அடைந்தவனாக, தனக்குத்தானே அடிமை செய்து கொள்ளவேண்டும் என்று விரும்பும்படியாக இந்த பகவத் ஆராதனை என்பது உள்ளது - என்று கருத்து. இங்கு அரும்பத உரையில் ஸ்ரீரங்கராஜஸ்தவம் (2-54) - வடதளமதிசய்ய ரங்கதாமந் சயித இவார்ணவதர்ணக: பதாப்ஜம் அதிமுகமுதரே ஜகந்திமாதும் ந்யததித வைஷ்ணவ போக்யலிப்ஸயா வா – திருவரங்கனே! அழகாக சயனித்துள்ள கடலின் குட்டியோ என்று காண்பவர்கள் வியக்கும்வண்ணம் ஆலிலை மீது சயனித்து, தாமரை போன்ற சிறிய திருவடிகளை, திருஉதடுகளில் வைத்தபடி இருந்தாய். இதன் காரணம் என்ன? உனது திருவயிற்றில் உள்ளடக்கிய உலகங்களை மீண்டும் அளப்பதற்காகவா (அல்லது) ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு மிகவும் மதுரமாக உள்ள உனது திருவடிகளின் இனிமையை சுவைக்க வேண்டும் என்பதற்காகவா? - என்று கூறப்பட்டது காண்க. அவனுக்கும் ஆசைப்படும்படியாகவே அவனது ஆராதனம் இருக்கும் என்பதை ஸ்ரீமத்பகவத்கீதையில் அவனே அருளிச்செய்தவை மூலம் விளக்குகிறார். இங்கு ஸ்ரீமத்பகவத்கீதையின் (9-3) ச்லோகத்தை விளக்குகிறார். இந்த ச்லோகம் - அச்ரத்ததாநா: புருஷா தர்மஸ்ய அஸ்ய பரந்தப அப்ராப்ய மாம் நிவர்த்தந்தே ம்ருத்யு ஸம்ஸார வர்த்மநி - பக்தியோகத்தின் மீது நம்பிக்கை இல்லாத மனிதர்கள் என்னை வந்து அடைவதில்லை; ஆகவே அவர்கள் மீண்டும் மீண்டும் மரணம் உண்டாகக்கூடிய ஸம்ஸாரத்தில் சிக்குகின்றனர் – என்பதாகும். அச்ரத்தாதாநா: புருஷ: - விச்வாசத்தை முன்னிட்டு என்னை வந்து அடையவேண்டும் என்ற வேகம் இல்லாதவர்கள்; அஸ்ய தர்மஸ்ய - இத்தகைய தர்மத்தை. இங்கு பக்தியோகம் என்பதான தர்மம் தனக்கும் இனிமையாக உள்ளதால் "அஸ்ய" என்றான். பரந்தப - விரோதிகளின் கூட்டத்தை அழிக்கவல்லவன்; விரோதி என்பது புலன்களின் விரோதிகள் அல்லது இந்த்ரியங்கள் என்பதாகும். அல்லது விரோதி என்பதை ப்ராப்ய விரோதி, ப்ராபக விரோதி எனலாம்; உபாயத்தைத் தடுக்கும் விரோதி, உபாயத்திற்கு விரோதி என்று கருத்து. அப்ராப்ய - அவர்கள் செய்த குற்றங்கள் அனைத்தையும் பொறுத்துக்கொண்டு, அவர்களை நல்லவழியில் கொண்டு செல்லும் என்னை விடுத்து, தங்களுடைய நாசத்தை ஏற்படுத்தவல்ல ஸம்ஸாரத்தை விரும்பி, அதன் பின்னே செல்வர். ம்ருத்யு என்றால் மரணம்; மரணத்தை விளைவிக்கவல்ல ஸம்ஸாரம். "இதுதான் இருந்தபடி பாராய்" என்றால் இப்படியாக உரைக்கப்பட்ட "அஸ்ய தர்மஸ்ய" என்பதான "தன்னுடைய ஆராதனை" என்னும் நிலை உள்ளதைக் காண்பாய் என்பதாகும்.

வ்யாக்யானம் – "ப்ரத்யக்ஷாவகமம்", "ந மாம்ஸ சக்ஷுரபிவீக்ஷதே தம்" என்கிற நான் ப்ரத்யக்ஷ பூதனானவன். "தர்ம்யம்" நம்மைக் காண்கை ஒருதலையானால் அதர்ம்யமானாலும் மேல்விழவேணும், இது அங்ஙனன்றிக்கே, தர்மாதநபேதமுமா யிருக்கும். "ஸுஸுகம் கர்த்தும்" ஸமர்த்தவ்ய விஷய ஸாரஸ்யத்தாலே தானும் போகரூபமாயிருக்கும். "அவ்யயம்" கோலின பலங்களைக் கொடுக்கச் செய்தேயும் ஒன்றும் செய்யாதோமாய் நம் நெஞ்சிலே கிடக்கையாலே தான் முதலழியாதே கிடக்கும்.

விளக்கம் – அடுத்து கீதையின் ச்லோகம் (9-3) என்பதையும் வ்யாக்யானம் செய்கிறார். இந்த ச்லோகம் – ராஜ வித்யா ராஜகுஹ்யம் பவித்ரம் இதம் உத்தமம் ப்ரத்யக்ஷாவகமம் தர்ம்யம் ஸுஸுகம் கர்த்தும் அவ்யயம் - இந்தப் பக்தியோகம் என்பது வித்யைகளில் சிறந்ததாகவும், ரகசியங்களில் உயர்ந்ததாகவும், பாவங்களை நீக்குவதில் சிறந்ததாகவும், என்னையே நேரில் காண்பிக்கவல்லதாகவும், என்னை அடைய வைக்கின்ற உபாயத்துடன் கூடியதாகவும், கடைப்பிடிப்பதற்கு இனிமையாகவும், அழியாமல் உள்ளதாகவும் இருக்கிறது – என்பதாகும். ப்ரத்யக்ஷாவகமம் என்றால் என்ன? அவகம்யத இதி அவகம: - எது அறியப்படுகிறதோ அது அவகம் எனப்படுகிறது; ப்ரத்யக்ஷமான ஒரு விஷயத்தைக் கொண்டது எந்த ஞானமோ, அந்த ஞானம் ப்ரத்யக்ஷாவகமம் ஆகிறது. அரும்பத உரையில் – ப்ரத்யக்ஷபூத: அவகமோ யஸ்ய தத் ஞானம் ப்ரத்யக்ஷாவகமம் – என்றது காண்க. "தர்ம்யம்" - மிகவும் உயர்ந்த புருஷார்த்தமாகிய இந்த பகவத் விஷயத்தைப் பெறுவதற்குச் செய்யக்கூடாத செயல்களைச் செய்வதும் ஏற்புடையதே; ஆனால் அப்படி அல்லாமல் தர்மத்திலிருந்து வழுவாத வழியாக இந்த பக்தி யோகம் உள்ளது. ஸுஸுகம் – அநுஷ்டிக்கும்போது மிகவும் இன்பமாக இருக்கக்கூடியது இந்த பக்தியோகம். அவ்யயம் - நாம் விரும்பிக்கேட்ட பலன்களை அளித்த பின்னரும், ஏதும் செய்யவில்லையே என்ற எண்ணத்துடன் ஸர்வேச்வரன் உள்ளான் என்பதால், இந்த பக்தியோகம் என்பது எப்போதும் அழியாமல் தொடர்ந்தபடியே இருக்கும். இங்கு "செய்யாதோமாய் நம் நெஞ்சில்" என்பது ஸர்வேச்வரன் கூறுவதாக உள்ளதாகும். இவ்விதம் கூறிய இடத்திற்கு ஏதேனும் ப்ரமாணம் உண்டா என்பதற்கு அரும்பத உரையில் மஹாபாரதம் உத்யோகபர்வம் (47-39) - ருணம் ப்ரவ்ருத்தமிவ மே ஹ்ருதயாந்லாப ஸர்ப்பதி – திரௌபதி "கோவிந்தா" என்று அழைத்தது வட்டியுடன் வளர்ந்த கடன் போன்று என்று நெஞ்சைவிட்டு அகலாமல் உள்ளது - என்றது காண்க.

வ்யாக்யானம் - ஸ்ரீய:பதியாய், ஸமஸ்தகல்யாண குணாத்மகனாய், ஸகலாத்மாக்களுக்கும் சேஷியாய், நிரதிசயாநந்தயுக்தனாய், "ஏஷ ஹ்யேவாநந்தயாதி" என்கிறபடியே தன்னைக் கிட்டினாரையும் ஆநந்திப்பிக்கக் கடவனாய்; மோக்ஷதசையில் அநுபவம் இனிதாகிறதும் அவனைப் பற்றி வருகையாலேயிறே; அப்படியே ஆச்ரயணமும் அவனைப் பற்றி வருகையாலே போகரூபமாயிருக்குமிறே. இப்படி ஸாதநஸமயமே தொடங்கி இனிய விஷயத்தைப் பற்றா நிற்கச்செய்தே, அவனை விட்டு க்ஷுத்ர ப்ரயோஜநத்தைக் கொண்டு அகலுவதே! என்று கேவலரை நிந்தியாநின்று கொண்டு, இத்தையொழியில் தாம் உளராகாதபடி தமக்கு இனிதாயிருக்கையாலே இவ்வாச்ரயணத்தினுடைய இனிமையைச் சொல்லித் தலைக்கட்டுகிறார்.

விளக்கம் - பெரியபிராட்டியாரின் நாயகனாய் (1-7-8: பின்னை நெடும்பணைத் தோள் மகிழ்பீடுடை), அனைத்து திருக்கல்யாண குணங்களும் பொருந்தியவனாய் (1-7-10: நிகரிலவன் புகழ்), அனைத்து ஆத்மாக்களுக்கும் எஜமானனாய் (1-7-5: நாதனை,1-7-2: எப்பால் எவர்க்கும் நலத்தால் உயர்ந்து உயர்ந்து அப்பாலவன்), எல்லையற்ற ஆனந்தத்துடன் கூடியவனாய், தான் மட்டும் ஆனந்தத்துடன் இருப்பதுடன் நிற்காமல், தன்னை அடைந்தவர்களுக்கும் ஆனந்தத்தை அளிப்பவனாய் ஸர்வேச்வரன் உள்ளான். மோக்ஷ நிலையில் உண்டாகின்ற அனுபவம் இனிமையாக உள்ளதாலும், அவனைப் பற்றுவதாலேயே ஏற்படுவதாலும், இங்கு அவனை ஆராதிப்பதும் இன்பமாகவே இருக்கும் என்று கருத்து. இவ்விதம் அவனை அண்டுவதற்கு ஏதுவாகவல்ல உபாயங்கள் என்பதைக் கைக்கொண்டு, இனிமையாக உள்ள அவனைப் பற்றுவதற்குப் பதிலாக மற்ற தெய்வங்களின் பின்னே செல்கிறார்களே - என்று முதல் பாசுரத்தில் நிந்திக்கிறார். இப்படியாக உள்ளபோது திருவாய்மொழி (1-7-6) - யான் ஒட்டுவேனோ - நான் அவனை விடுவேனோ - என்பதற்கு ஏற்ப தனக்கு இந்த ஆராதனை மிகவும் இனிமையாக இருந்ததைக் கூறி நிறைவு செய்கிறார்.

1.7.1 பிறவித் துயரற ஞானத்துள் நின்று
துறவிச்சுடர் விளக்கம் தலைப்பெய்வார்
அறவனை ஆழிப்படை யந்தணனை
மறவியை யின்றி மனத்து வைப்பாரே.

பொருள் – பிறப்பு என்பதால் ஏற்படவல்ல பலவிதமான துன்பங்கள் நீங்குவதற்காக ஆத்ம அவலோகநம் என்று கூறப்படும் கைவல்ய உபாஸநம் செய்தபடி, அனைத்துவிதமான துன்பங்களும் அற்றவனாகவும், தானாகவே ப்ரகாசிக்கும்படி உள்ளவனாகவும் இருக்கின்ற ஆத்மாவின் நிலையை அடையவேண்டும் என்று கைவல்யார்த்திகள் எனப்படும் சிலர் முயல்கின்றனர். இப்படிப்பட்டவர்களும் - தர்மமே வடிவமாக உள்ளவனும், சக்ரத்தாழ்வானைக் கொண்டவனும், மிகவும் தூய்மையானவனும் ஆகிய ஸர்வேச்வரனை, தாங்கள் எண்ணுகிற பயனை அடைவதற்கு மறக்காமல், ஆனால் அந்தப் பயனை அடையும் பொருட்டு த்யானித்தபடி உள்ளனரே! இது என்ன செயல்!

அவதாரிகை - இப்படி நிரதிசய போக்யனானவனை விட்டு, ப்ரயோஜநாந்தரத்தைக் கொண்டு அகலுவதே என்று கேவலரை நிந்திக்கிறார்.

பொருள் – இவ்விதமாக எல்லையற்ற இன்பத்தை அளிக்கவல்லவனும், இனிமையாகவும் ஆகிய இவனை விடுத்து, தாழ்ந்த மற்ற பலன்களை வேண்டி நின்று, அவை கிட்டியவுடன் இவனை விட்டு அகன்று செல்கிறார்களே என்று நிந்தனை செய்கிறார்.

வ்யாக்யானம் - (பிறவித்துயரற ஞானத்துள் நின்று) "ஜராமரண மோக்ஷாய" என்று இருப்பாருமுண்டு கேவலர்; அவர்களைச் சொல்லுகிறது.

விளக்கம் - (பிறவித்துயரற ஞானத்துள் நின்று) - "பிறவித்துயர் அற" என்றால் "பிறப்பினால் ஏற்படும் துன்பங்கள் விலகும் பொருட்டு" என்று பொருள். இத்தகைய ஒரே பலனை மட்டும் எண்ணியபடி சிலர் இருக்கக்கூடும். இவர்களைக் கேவலர் என்று உரைத்தார். கேவலர்கள் இத்தகைய குறிக்கோள் மட்டுமே உள்ளவர்கள் என்பதற்கு ப்ரமாணம் என்ன என்று காட்ட, ஸ்ரீமத் பகவத்கீதையில் உள்ள வரியை உரைக்கிறார். கீதை (7-29) - ஜரா மரண மோக்ஷாய – பிறப்பு மற்றும் இறப்பு ஆகியவற்றில் இருந்து விடுபடுவதற்காக என்னை அடைந்து - என்று அவனே உரைத்ததைக் கூறுகிறார். இப்படியாக உள்ள கேவலர்கள் பற்றி உரைக்கிறார். இந்தப் பாசுரத்தின் பொருளும், இந்த கீதா ச்லோகத்தின் பொருளும் ஒத்து இருக்கிறது. எப்படி? பிறவித்துயரற = ஜராமரண மோக்ஷாய; ஞானத்துள் நின்று துறவிச் சுடர்விளக்கம் தலைப்பெய்வார் = தே ப்ரஹ்ம தத்

விது:; ஆழிப்படை அந்தணனை மனத்து வைப்பார் = மாம் ஆச்ரித்ய. ஆக இந்த ச்லோகத்தில் கூறப்பட்டவர்களையே இந்தப் பாசுரம் உரைக்கிறது.

வ்யாக்யானம் - ஐச்வர்யார்த்திக்கும், ஆத்மப்ராப்தி காமனுக்கும், பகவத் ப்ராப்தி காமனுக்கும் ஒக்குமாயிற்று ஸர்வேச்வரனை உபாஸிக்கையும், அந்திம ஸ்ம்ருதியும்; இனி, பேற்றில் தாரதம்யம் வருகிறபடி என்னென்னில் – உபாஸந ஸமயத்திலே சிறுகக் கோலுகையாலே, அதாவது அவனளவும் செல்லாதே நடுவே வரம்பிட்டுக்கொள்ளுகை. அத்தையிறே "வரம்பொழிவந்து" என்கிறது. அது தனக்கு அடி அவர்கள் ஸுக்ருத தாரதம்யம்; "சதுர்விதா பஜந்தே மாம் ஜநாஸ்ஸுக்ருதிந: அர்ஜுந" என்று அருளிச் செய்தானிறே. ஸுக்ருதத்துக்கு அநுரூபமாகவாயிற்று புருஷார்த்தங்களில் ருசி பிறப்பது; ருச்யநுகுணமாகவாயிற்று உபாஸிப்பது; உபாஸநாநுகுணமாக இருக்கக்கடவது பலம்.

விளக்கம் - ஆனால், இவ்விதம் தாழ்ந்த பலனை அடைய எண்ணும் கேவலனும் அந்தப் பலனை அடைவதற்காக உயர்ந்த ஸர்வேச்வரனை அடையவேண்டுமா, ஏதாவது தாழ்ந்த தேவதையே அந்தப் பலனை அளிக்காதோ என்ற கேள்விக்கு "ஐச்வர்யார்த்தி" என்று தொடங்கி விடை அளிக்கிறார். ஐச்வர்யார்த்தி = செல்வத்தை விரும்புபவன், ஆத்ம ப்ராப்திகாமன் = கைவல்யத்தை விரும்பும் கேவலன், பகவத்ப்ராப்திகாமன் = ஸர்வேச்வரனுக்குக் கைங்கர்யம் செய்வதை விரும்புபவன் ஆகிய மூவருக்குமே ஸர்வேச்வரனை உபாஸித்தலும் மற்றும் உயிர் பிரியும்போது ஸர்வேச்வரனின் நினைவு ஏற்படுதலும் ஒத்ததாகவே அவசியமாகிறது. சரி, அனைவரும் அவனையே உபாஸிக்கும்போது இவர்களின் பலன்களில் எவ்விதமாக வேறுபாடு உண்டாகிறது என்று கேட்கலாம். இதற்கு விடை அளிக்கிறார். உபாஸனத்தின்போது தாழ்வான பலன்களை மட்டுமே வேண்டுகையால், இவ்விதம் பலன்களில் வேறுபாடு ஏற்படுகிறது; அதாவது அவனது மேன்மையைக் கண்டவுடன் அவனிடம் ஓடிச்சென்று பற்றிக் கொள்ளாமல், நடுவில் தடுப்பு ஏற்படுத்திக் கொள்ளுதல். இதனையே திருப்பல்லாண்டில் (4) – வரம்பொழி வந்து - என்றார். இவ்விதம் அவர்கள் தங்கள் முன்பாக ஒரு தடுப்பை ஏற்படுத்தி வைத்துக்கொள்ள என்ன காரணம் என்றால், அவர்கள் பூர்வஜன்மங்களில் செய்த நல்வினைகளில் உள்ள ஏற்றத்தாழ்வுகளே ஆகும். இவ்விதம் ஏற்றத்தாழ்வு உள்ளதால் அவர்கள் தங்கள் முன்பாக ஒரு தடுப்பை உண்டாக்கிக் கொள்கின்றனர் என்பதற்கு ஏதேனும் ப்ரமாணம் உள்ளதா என்ற கேள்வி எழலாம். இதற்கு கீதை (7-16) – சதுர்விதா பஜந்தே மாம் ஜநாஸ்ஸுக்ருதிந: அர்ஜுந - நான்குவிதமான நல்வினைகள்

கொண்டவர்கள் என்னை உபாஸிக்கின்றனர் - என்றுள்ள அவனது வாக்கியத்தை உரைக்கிறார். இத்தகைய நல்வினைகளுக்கு ஏற்பவே அந்தந்த புருஷார்த்தங்களில் ஆர்வம் உண்டாகும். அந்தந்த ஆர்வத்திற்கு ஏற்றபடியே உபாஸனை என்பது கைகூடும். அந்தந்த உபஸனைக்குத் தகுதியாகவே பலன் உள்ளது.

வ்யாக்யானம் - (பிறவித்துயர் இத்யாதி) இவனைப் பற்றி இப்பேற்றைப் பெற்றுப் போவதே! என்கிறார். "பிறவி" என்கிற இத்தால் ஜந்மம் தொடக்கமாக உண்டான மற்ற ஐந்து விகாரங்களையும் நினைக்கிறது. ஆக, ஜந்மஜராமரணாதி ஸாம்ஸாரிக ஸகல துரிதங்களும் போம்படியாக. "இந்நின்ற நீர்மையினி யாமுறாமை" என்று இவர்தாமும் கழிக்கிறதாயிரா நிற்கச்செய்தே, இவர்களை நிந்திக்கிறதுக்குக் கருத்து என்னென்னில், இவர்க்கு விரோதி போமது ஆநுஷங்கிகமாய், பகவதநுபவம் உத்தேச்யமாயிருக்கும்; அவர்களுக்கு துக்கநிவ்ருத்திதானே உத்தேச்யமாயிருக்கும். (ஞானத்துள் நின்று) இவ்வநுஸந்தாநம் அவ்வருகே போகாநிற்கச்செய்தேயும், ஆத்மஜ்ஞாநமாத்ரத்திலே கால் ஊன்ற அடியிட்டாயிற்று நிற்பது. "துறவி" என்கிற இது துறக்கையைச் சொன்னபடி. "பிறவித்துயரற" என்றதினுடைய பலரூபமான ப்ரக்ருதி விநிர்முக்த வேஷத்தை. "சுடர் விளக்கம் தலைப்பெய்வார்" என்கிற இது - "ஞானத்துள் நின்று" என்ற அதினுடைய பலரூபமாயிருக்கிறது. ஸம்ஸார தசையில் கர்மமடியாக வரக்கடவ ஸங்கோச மில்லையிறே; மோக்ஷ தசையில் விகஸிதமாயிருக்குமிறே. ஜ்ஞாநகுணகமுமாய், ஜ்ஞாதாவுமாயிறே வஸ்துதான் இருப்பது. "பிறவித்துயரற ஞானத்துள் நின்று" என்றது உபாஸநமானால், துறவிச் சுடர்விளக்கம் தலைப்பெய்கை பலமாயிருக்குமிறே.

விளக்கம் – (பிறவித்துயர் இத்யாதி) - இப்படிப்பட்ட இவனை வணங்கி நின்று கைவல்யம் என்ற சாதாரண பலனைப் பெற்றுச் செல்கிறார்களே! தன்னுடைய திருவடிகளில் ஒருவன் தலைவணங்கி நின்றால், அவனுக்குத் தன்னுடைய கைங்கர்யம் என்ற உயர்ந்த பலனை அளிக்கத் தயாராக ஸர்வேச்வரன் உள்ளான்; இவ்விதமாக உள்ளபோது அற்பமான இன்பமாக உள்ள ஆத்ம அனுபவம் என்ற தாழ்ந்த பலனை மட்டும் பெற்றுச் செல்கிறார்களே என்கிறார். பிறவி என்ற பதம் பிறப்பு என்பதை மட்டுமே குறிக்கவில்லை; பிறப்பு தொடக்கமாக உள்ள ஐந்துவிதமான மாற்றங்களையும் குறிக்கிறது; இவையாவன வளர்தல், தேய்தல், அழிதல் போன்றவையாகும். ஆக பிறப்பு மற்றும் மரணம் போன்ற அனைத்துவிதமான துன்பங்களும் நீங்கும்படியாக. திருவிருத்தத்தில் (1) – இந்நின்ற

நீர்மை இனி யாம் உறாமை - என்று இவரே அருளிச்செய்தார்; இதன்படி இத்தகைய துன்பங்களை நீக்கவேண்டும் என்று இவரே வேண்டி நின்றார் அல்லவோ? இப்படி உள்ளபோது மற்றவர்களை இவர் ஏன் நிந்திக்கவேண்டும்? இதற்கு விடை அளிக்கிறார். இவருக்கு இந்தப் பிறவி நீக்கம் என்பது முக்கியம் அல்ல, ஸர்வேச்வரனை அடைந்து, அவனுக்குக் கைங்கர்யம் செய்தல் என்பதே குறிக்கோள் ஆகும். ஆனால் மற்றவர்களுக்கு துன்பத்தின் நீக்கம் என்பது மட்டுமே குறிக்கோள் ஆகும். (ஞானத்துள் நின்று) - இப்படியாக உள்ள உபாஸனை என்பது ஸர்வேச்வரனிடம் கொண்டு செல்லும் என்ற போதிலும் இவர்கள் அவ்விதம் செல்லாமல், ஆத்மாவைப் பற்றிய ஞானத்தில் மட்டுமே நிலைத்தவர்களாய் உள்ளனர். துறவி என்றால் சரீரத்தைத் துறத்தல் என்பதைக் குறிக்கும். ப்ரக்ருதியின் தொடர்பு நீங்குதல் என்பதே இங்கு துறவி எனப்படுகிறது. "ஞானத்துள் நின்று" என்றால் - ஞானஸ்வரூபமாகவே உள்ள ஆத்மஸ்வரூபத்தில் நிலைத்து நின்று - என்று பொருள். இப்படி உள்ளதன் பலன் என்ன என்பதை "சுடர் விளக்கம் தலைப்பெய்வர்" என்றார். இப்படிப்பட்ட பலனை அடைதல் என்பது மோக்ஷ நிலையில் மட்டும்தானோ? இப்படிப்பட்ட பலன் ஸம்ஸார நிலையில் கிட்டாதோ? இதற்கு விடை அளிக்கிறார். இத்தகைய ஆத்மப்ராப்தி என்பது ஸம்ஸார நிலையில் ஏற்பட்டாலும், கர்மங்களின் காரணமாக அதற்குக் குறைவு ஏற்பட வாய்ப்புண்டு. ஆனால் மோக்ஷ நிலையில் இது போன்று இல்லை என்பதால் மலர்ந்து காணப்படும். இந்த ஆத்மவஸ்து ஞானத்தைக் குணமாகக் கொண்டும், தானே அறிபவனாகவும் உள்ளது அல்லவோ? பிறப்பால் ஏற்பட்ட அனைத்துவிதமான துன்பங்களும் நீங்கவேண்டும் என்று ஆத்ம ஞானத்தில் நிலை நிற்பதே உபாஸனை என்று கொண்டால் – சரீரத் தொடர்பு நீங்கி ஆத்மஸ்வரூபத்தை அடையவேண்டும் என்று உள்ளவர்கள் அதனை அடைந்து விலகுதல் என்பது பலனாகிறது.

வ்யாக்யானம் - (பிறவி இத்யாதி) "ஸம்ஸாரிக ஸகல துக்கங்களும் போகவேணும்" என்று ஆத்மஜ்ஞாநத்திலே ஊன்ற நின்று ப்ரக்ருதி விநிர்முக்தமான ஆத்மஸ்வரூபத்தை ப்ராபிக்க வேண்டியிருப்பார். (அறவனை) அவர்கள் படியையும், பலம் கொடுக்கிறவன் படியையும் பாரா, "என்ன பரமோதாரனோ!" என்கிறார். ஏதேனுமொரு ப்ரயோஜநத்துக்கும் தன்னையே அபேக்ஷிக்குமத்தனையாகாதே வேண்டுவது. "எங்களுக்கு நீ வேண்டா, க்ஷுத்ரப்ரயோஜநம் அமையும்" என்று இருக்கிறவர்களுக்கும் அத்தைக் கொடுத்து விடுவதே! என்ன தார்மிகனோ! என்கிறார்.

விளக்கம் – (பிறவி இத்யாதி) – "ஸம்ஸாரத்தில் சிக்கியுள்ளதால் ஏற்படுகின்ற அனைத்துவிதமான துன்பங்களும் நீங்கவேண்டும்" என்று எண்ணியபடி ஆத்மஞானத்தில் நிலை நிற்பர்; ப்ரக்ருதியின் தொடர்பிலிருந்து நீங்கியதான ஆத்மஸ்வரூபத்தை அடையவேண்டும் என்றிருப்பார்கள். (அறவனை) - அறவன் என்றால் தார்மிகன். இப்படி மற்ற பலன்களை வேண்டி நிற்கும் இவர்களின் தன்மையையும், தன்னையே அளிப்பதற்குத் தயாராக உள்ள அவனது தன்மையையும் ஆராய்ந்து, "என்ன பரம உதாரனோ" என்கிறார்; அதாவது இத்தனை தாராள குணமா என்று வியக்கிறார். ஒருவன் விரும்புகின்ற பலன் எதுவாக உள்ளபோதிலும் அதனைப் பெறுவதற்குக்கூட ஸர்வேச்வரனாகிய தன்னை விரும்புகின்ற தன்மையை மட்டுமே ஸர்வேச்வரன் நாடுகிறான்; அதாவது இவர்கள் தன்னை ஒதுக்கி, மற்றவற்றை நாடுகிறார்களே என்ற எண்ணம் இன்றி, இதனைப் பெறுவதற்காகவாவது தன்னை நாடினார்களே என்று உதவுகிறான். இப்படியாக அவன் தன்னையே தருவதற்குத் தயாராக உள்ளபோதிலும், "எங்களுக்கு நீ வேண்டாம், நாங்கள் விரும்பும் தாழ்ந்த பலனே போதுமானது" என்று சிலர் வேண்டுகின்றனர்; அவர்களுக்கு அப்படியே அளிக்கிறானோ; இது என்ன தார்மீக தன்மையோ – என்கிறார்.

வ்யாக்யானம் - (ஆழிப்படை அந்தணனை) ஆத்ம அநுபவ விரோதியைப் போக்குகைக்குப் பரிகரமான திருவாழியைக் கையிலேயுடையவன்; அந்தணனென்று சாணிச்சாற்றோபாதி "சுத்தன்" என்று கொண்டார்களித்தனை; போக்யதையில் நெஞ்சு சென்றதில்லை. "சுத்திகுணவிசிஷ்டன்" என்றாயிற்று அவர்கள் அநுஸந்திப்பது. "கையுந் திருவாழியுமான அழகைக் கண்டால் அதிலே கால் தாழாதே, தங்கள் ப்ரயோஜநத்துக்கு உறுப்பான சுத்திமாத்தரத்தையே பற்றுவதே!" என்கிறார்.

விளக்கம் - (ஆழிப்படை அந்தணனை) - ஆத்ம அனுபவத்தின் விரோதியைப் போக்குவதற்கு ஏற்றதான சக்கரத்தாழ்வானைத் திருக்கரத்தில் கொண்டவன். கைவல்யத்தை மட்டுமே விரும்புபவர்கள், "இவன் சாணிச்சாறு போல தூய்மையானவன், அல்லது தூய்மைப்படுத்தவல்லவன்" என்று மட்டுமே கொண்டார்கள்; அவனது இனிமையைக் கண்டு அவனை அனுபவிக்க முயலவில்லையே என்று வருந்துகிறார். "தூய்மையாக்கவல்ல குணத்துடன் கூடியவன்" என்று மட்டுமே அவர்கள் இவனைக் காண்பது. இவனது திருக்கரமும், அதில் உள்ள திருச்சக்கரமும் ஒன்றுக்கொன்று பொருந்தி நிற்கும் அழகைக் கண்டவுடன், அகன்று செல்ல இயலாமல் கால்கள் தடுமாறவேண்டும்;

இதனை விடுத்து தங்களது பயனைப் பெறுவதற்கு உதவுகின்ற இவனது தூய்மையாக்கும் தன்மையை மட்டுமே பற்றுகிறார்களே என்கிறார்.

வ்யாக்யானம் - (மறவியையின்றி) இவர்க்குக் கையுந் திருவாழியுமான அழகைக் கண்டால் முன்னடி தோற்றாது; "சக்கரத்தண்ணலே" என்றால், பின்னைத் தரைப்படுமித்தனையிறே இவர்; திருமங்கையாழ்வாரும் "ஆழியோடும் பொன்னார் சார்ங்கமுடைய அடிகளை இன்னாரென்று அறியேன்" என்று உத்தேச்ய வஸ்துவையும் மறக்கும்படி கலங்குவர். பிள்ளாய்! நல்லத்தை மறக்கப் பண்ணாநிற்க, இவ்விஷயம் தீயத்தை மறவாதொழிவதே! (மறவியையின்றி) அவனுடைய போக்யதையுங் கண்டு வைத்து, தங்கள் புருஷார்த்தத்தை மறவாதே ஆச்ரயியா நிற்பர்கள். மறவியை - மறப்பை; மறப்பின்றிக்கே; மறவாதே மனத்துவைப்பாரே.

விளக்கம் – (மறவியையின்றி) – சரி, இவர் அவர்களை நிந்திக்கிறாரே, இவர் அவனை மறந்துவிடுவாரோ என்றால், கையும் திருவாழியுமாக ஒன்றுக்கொன்று பொருந்தி நிற்கும் அழகைக் கண்டவுடன் இவருக்கு அடுத்த அடி வைக்க இயலாது. திருவாய்மொழி (4-7-10) - சக்கரத்தண்ணலே - என்று உரைத்தவுடன் மயக்கம் அடைந்து கீழே விழும்படி இவர் உள்ளார். திருமங்கையாழ்வார் பெரியதிருமொழியில் (10-10-9) – ஆழியோடும் பொன்னார் சார்ங்கமுடைய அடிகளை இன்னாரென்று அறியேன் - ஸர்வேச்வரன் என்பதை உணர்த்தவல்ல சக்கரத்தாழ்வானும், இனிமையான சார்ங்கம் என்ற வில்லையும் கொண்ட இவன் தேவனோ அல்லது மனிதனோ என்று அறிய இயலவில்லையே - எனக் கூறினார்; அதாவது கண் எதிரே நிற்கும் வஸ்துவையும் மறந்து போகும்படியாகக் கலங்குவார். உயர்ந்த ஸர்வேச்வரன், அவனது திருக்கரங்கள், சக்கரத்தாழ்வான் போன்ற பலவற்றையும் மறைக்க வேண்டாதபடி உள்ளபோது, ஒரு சில அபாக்யசாலிகள் கைவல்யத்தை மறக்காமல் உள்ளனரே! (மறவியையின்றி) - அவனுடைய இனிமை என்பதை அனுபவித்த பின்னரும் தாங்கள் வேண்டி நிற்கும் புருஷார்த்தமான கைவல்யம் என்பதை மறக்காமல் அதனையே அண்டி நிற்பர்கள். மறவியை - மறத்தலை, மறத்தல் இல்லாமல்; மறந்து போகாமல் தங்கள் மனதில் எப்போது வைத்திருப்பார்கள்.

வ்யாக்யானம் - உபாஸகபரமானால், சுடர் விளக்கம் - குணப்ரகாசகமான விக்ரஹமாகக் கடவது. அவனுடைய போக்யதையை அநுஸந்தித்து வைத்தும், பின்னையும் இந்நிலை

குலையாதே நிற்பதே! இவ்வரிய செயலைச் செய்கைக்குத் திண்ணியராவதே இவர்கள்! "பிறவித் துயரற ஞானத்துள் நின்று துறவிச் சுடர்விளக்கந் தலைப்பெய்வார், மறவியை யின்றி, அறவனை ஆழிப்படை அந்தணனை மனத்து வைப்பாரே" இத்யந்வய:

விளக்கம் – இந்தப் பாசுரத்தை, கைவல்யத்தை விரும்பும் மனிதர்கள் நிலையில் வைத்து இதுவரை பொருள் உரைக்கப்பட்டது. இதனையே பகவத் உபாஸகர்களின் நிலையில் வைத்தும் பொருள் உரைப்பார்கள். உபாஸக என்றால் பகவானை அடையவேண்டும் என்ற ஆசை கொண்ட பக்தி. இவ்விதம் கொண்டால் இந்தப் பாசுரத்தின் பொருள்: ஸம்ஸாரத்தில் உழல்வதால் விளைகின்ற அனைத்துவிதமான துன்பங்களும் நீங்கும் விதமாக பகவத் ஞானத்தில் நிலையாக நின்று, ப்ரக்ருதியின் தொடர்பு நீங்கப்பெற்று, திருக்கல்யாண குணங்கள் எப்போதும் வெளிப்பட்டபடி உள்ள ஸர்வேச்வரனின் திருமேனியை அனுபவிக்க வேண்டும் என்று உள்ளவர்கள் - உபாஸனம் என்னும் தர்மத்தை நிர்வாகம் செய்பவனும், அறியாமை என்ற இருளை நீக்கவல்லதான சக்கரத்தாழ்வானைக் கொண்டவனும், மிகவும் தூய்மை உடையவனும் ஆகிய ஸர்வேச்வரனை, பிரிதல் என்பதே இல்லாமல் நிரந்தரமாகச் சேர்ந்து இருக்கவேண்டும் என்ற பலனையும் தங்கள் நெஞ்சில் நிலை நிறுத்துவார்கள். இவ்விதம் பொருள் கொண்டால், சுடர்விளக்கம் என்பது திருக்கல்யாண குணங்களை விளங்க வைக்கின்ற அவனது திருமேனி என்றாகிறது. இப்படியாக அவனையும் அவனது இனிமையையும் அனுபவித்த பின்னரும், சாஸ்த்ர விதிமுறைக்கு உட்பட வேண்டியுள்ளதே என்றிருப்பார்கள். அவனது ஸௌந்தர்யம் போன்றவற்றில் நிலைதடுமாறி, தங்கள் உடல் மற்றும் உள்ளம் ஆகிய அனைத்தும் சிதறிப் போனவர்களுக்கு, சாஸ்த்ரங்கள் கூறியபடி இருக்கின்ற வழிமுறைகளில் த்யானம் செய்வது கடினமாக இருக்கும் அல்லவோ? இப்படிப்பட்ட கடினமான செயலைச் செய்யும்படியாக இவர்கள் கடினமாக உள்ளனரே! "ஆழிப்படை அந்தணனை மறவியையின்றி" என்ற பதங்களை ஆராய்ந்தால் "மறந்து போகாமல் இருத்தல்" என்ற மனோபாவம் ஸர்வேச்வரனுக்கு உள்ளதாக அல்லவோ பொருள் வருகிறது; பின்னர் வ்யாக்யானத்தில் "தங்களுடைய பலனை மறக்காமல்" என்று ஏன் உரைக்கவேண்டும்; இவ்விதம் மந்தபுத்தி கொண்ட சிலர் கேட்கலாம். இதனால் "பிறவித்துயர்" என்று தொடங்கி வரிசைப்படுத்துகிறார்; அந்த வரிசை – பிறவித் துயரற ஞானத்துள் நின்று துறவிச் சுடர்விளக்கந் தலைப்பெய்வார், மறவியை யின்றி, அறவனை ஆழிப்படை அந்தணனை மனத்து வைப்பாரே - என்பதாகும்.

1.7.2 வைப்பாம் மருந்தாம் அடியரை வல்வினைத்
துப்பாம் புலனைந்தும் துஞ்சக்கொடானவன்
எப்பா லெவர்க்கு நலத்தா லுயர்ந்துயர்ந்து
அப்பாலன் எங்களாயர் கொழுந்தே.

பொருள் – தன்னுடைய அடியார்களை மிகவும் கொடுமையான கர்மங்களுடைய மிடுக்கான வழிகளில் அவர்களுடைய ஐந்து இந்த்ரியங்களாலும் அகப்பட்டு அழியும்படியாக விடாதவன்; அவர்களுக்குப் புருஷார்த்தமான செல்வமும், அவர்கள் தன்னை அடைவதற்குத் தடையாக உள்ள விரோதிகளை நீக்கவல்ல மருந்தும் என்று உள்ளவன்; மனிதர்கள் தொடங்கி நான்முகனின் ஆனந்தம் முடிய அனைத்து இடங்களிலும் இருக்கின்ற சேதநர்களைக் காட்டிலும் ஆனந்தத்தால் மிகுந்தவன்; வாக்கு, மனம் போன்ற எதற்கும் எளிதில் எட்டாமல் உள்ளவன்; எங்களுக்கே உரிய அவன் ஆயர்களின் தலைவன் ஆவான்.

அவதாரிகை - ஸர்வேச்வரனை ஆச்ரயித்து க்ஷுத்ர ப்ரயோஜநத்தைக் கொண்டு போவதே என்று கேவலரை நிந்தித்தான். அவன் தன்னையே பற்றியிருக்குமவர்களுக்கு, அவன் தானிருக்கும்படி சொல்லுகிறார் இப்பாட்டில்.

விளக்கம் - கடந்த பாசுரத்தில், "ஸர்வேச்வரனை அடைந்த பின்னரும் அவர்களிடம் தாழ்வான பலனை மட்டுமே வேண்டிப் பெற்றுக்கொண்டு அவனை விட்டு அகன்று செல்கிறார்களே", என்று கேவலர்களை நிந்தனை செய்தார். இந்தப் பாசுரத்தில், அவனை மட்டுமே பற்றிருப்பவர்கள் விஷயத்தில் அவன் இருக்கின்ற விதத்தை அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் - (வைப்பாம்) ஆடறுத்து பலியிட்டு, அரைப்பையாக்கி, இஷ்ட விநியோகார்ஹமாம்படி க்ஷேமித்து வைக்கும் நிதிபோலே, இவனுக்கு நினைத்த வகைகளெல்லாம் அநுபவிக்கலாம்படி தன்னை இஷ்டவிநியோகார்ஹமாக்கி வைக்கும் என்றிட்டு ப்ராப்யத்வம் சொல்லுகிறது. (மருந்தாம்) - ஆனாலும் க்ஷுத்ர விஷயங்களையும் உண்டறுக்க மாட்டாத ஸம்ஸாரி சேதநனுக்கிறே ஸர்வாதிகனான தன்னை விஷயமாக்குகிறது; இவன் தன்னை அநுபவிக்கும்படியென்? என்னில் - அக்குறைகள் வாராதபடி அநுபவ விரோதிகளைப் போக்கித் தன்னை யநுபவிக்கைக்கு ஈடான சக்தி யோகத்தையும் கொடுத்துத் தன்னையும் கொடுக்குமென்று அவனுடைய ப்ராபகத்வம் சொல்லுகிறது. "ய ஆத்மதா பலதா:" என்கிறபடியே. ஆக ப்ராப்யத்வமும் ப்ராபகத்வமும் சொல்லிற்று. இப்படி செய்வது ஆர்க்கு? என்னில் – (அடியாரை) "ந நமேயம்" என்னும்

நிர்ப்பந்தம் தவிர்ந்தார்க்கு; அவனைப் பற்றி ஒரு ப்ரயோஜநத்தைக் கொண்டு அகலாதே, அவன் தன்னையே பற்றி அவன் படிவிட ஜீவித்திருப்பாரை வலிய வினைகளிலே கொண்டுபோய் மூட்டுகைக்கீடான ஸாமர்த்தயத்தை யுடைத்தான இந்த்ரியங்கள் ஐந்தாலும் துஞ்சக்கொடான் என்னுதல். அஞ்சிலும் புக்குத் துஞ்சக்கொடான் என்னுதல். துப்பென்று - ஸாமர்த்த்யம்.

விளக்கம் – (வைப்பாம்) - வைப்பு என்றால் நிதி என்று பொருள். ஆடு அறுத்துப் பலியிட்டுப் பணப்பையாக மாற்றி, தான் விரும்பும் எந்தக் காலத்திலும் பயன்படுத்த ஏதுவாக சேமித்து வைக்கின்ற நிதி போன்று, ஒருவன் தான் எண்ணிய விதங்களில் எல்லாம் அனுபவிக்கலாம்படியாக ஸர்வேச்வரன் தன்னைத்தானே ஆக்கிக்கொண்டு நிற்கிறான். இப்படியாக அடையத்தக்க பொருளான ஸர்வேச்வரனின் தன்மை உரைக்கப்பட்டது. (மருந்தாம்) - ப்ராப்யம் என்பதான பேறு குறித்துக் கூறப்பட்டவுடன், ப்ராபகமான உபாயம் குறித்துக் கூறுகிறார். தாழ்வான விஷயங்களைக் கூட எளிதாக அனுபவிக்க இயலாத ஸம்ஸாரத்தில் உள்ள சேதநர்களுக்கு அல்லவோ அனைத்தையும் நியமிக்கவல்ல ஸர்வேச்வரன் தன்னை விஷயமாக்கிக் கொள்கிறான்? இப்படி உள்ளபோது அவர்கள் இவனை எவ்விதம் அனுபவிக்கிறார்கள்? இதற்கு விடை அளிக்கிறார். அது போன்ற குறைகள் ஏதும் வராமல் விலக்கி, தன்னை அவர்கள் அனுபவிக்கத் தடையாக உள்ள விரோதிகள் அனைத்தையும் நீக்கி, தன்னை அவர்கள் அனுபவிப்பதற்குத் தேவையான சக்தியையும் அளிக்கிறான். இப்படியாகவே அவனது ப்ராபகத்தன்மை (அவனை அடைவதற்கான உபாயத்தின் தன்மை) உள்ளது. இவ்விதம் தன்னையும் கொடுத்து, தன்னை அனுபவிப்பதற்கான சக்தியையும் அளிப்பதை உணர்த்தும் ப்ரமாணம் ஏதேனும் உண்டா என்பதற்கு விடை அளிக்கிறார். யஜுர் – ய ஆத்மாதா பலதா யச்ய விச்வ உபாஸதே ப்ரசிஷம் யஸ்ய தேவ: - ஸர்வேச்வரன் தன்னை அளிக்கிறான், தன்னுடைய உபாஸனத்திற்கு ஏற்ற வலிமையையும் அளிக்கிறான் - என்றது காண்க. ஆக இவ்விதமாக ப்ராப்யம் மற்றும் ப்ராபகம் ஆகியவை பற்றி இங்கு இதுவரை உரைக்கப்பட்டது. இவ்விதமாக அவன் யாருக்குக் செய்கிறான் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார். (அடியாரை) - அடியார்க்கு என்று பொருள். அதாவது அடியார்க்கு வைப்பாம், மருந்தாம் என்று படிக்கவேண்டும். இராமாயணம் யுத்தகாண்டம் – ந நமேயம் – தலை அறுந்து விழுந்தாலும் வணங்கமாட்டேன் - என்று இராவணன் கூறியது போன்ற தன்மையைத் தவிர்த்தபடி உள்ளவர்களுக்கு. அடியார் என்பதற்கு இந்தப் பொருளானது அவன் மீது த்வேஷம் பாராட்டாதவர்கள் என்று கருத்து.

இதே பதத்திற்கு வேறு எந்தப் பயனையும் எண்ணாதவர்கள் என்றும் பொருள் கொள்ளலாம். இதனைக் கருத்தில் கொண்டு அடுத்து உரைக்கிறார். அவனைப் பற்றி நின்று, ஏதேனும் ஒரு அற்பமான பலன் கிட்டியவுடன் அவனைவிட்டு அகன்று சென்று விடாமல் அவனை மட்டுமே பற்றி நிற்கை. இவர்கள் அவனது திருமேனியை மட்டுமே பற்றி நின்று ஜீவனம் செய்பவர்கள் ஆவர். இப்படிப்பட்ட அடியார்களை மிகவும் வலிய வினைகளில் கொண்டு சென்று கிட்ட வைக்கின்ற சாமர்த்யம் ஐந்து இந்த்ரியங்களுக்கு உண்டு; ஆகவே இவ்விதம் அவர்கள் அழிந்து போகாமல் தடுப்பவன். அல்லது அந்த இந்த்ரியங்களின் விஷயங்களில் சிக்காதபடி தடுப்பவன். துப்பு என்றால் சாமர்த்யம் என்று பொருள்.

வ்யாக்யானம் - "அவன்" என்கிறது, எவனைப் பற்ற? அவன்தான் இப்படி செய்ய எங்கே கண்டோம் என்னில்; அத்தை உபபாதிக்கிறது மேல், (எப்பால் இத்யாதி) – ஸ்த்தாந விசேஷங்களாலும் மநுஷ்யாதி பேதங்களாலும் வரக்கடவன சில உயர்த்திகளுண்டிறே; பூமி போலன்றிறே ஸ்வர்க்கம், மநுஷ்யர்களைப் போலல்லவிறே தேவர்கள். எப்பால் – எல்லாவிடத்திலும் என்றபடி. பாலென்றது இடம். "அப்பால், இப்பால்" என்னக் கடவதிறே; அவ்விடம், இவ்விடம் என்றபடியிறே. எல்லாவிடத்திலும் உண்டான எல்லார்க்கும். (நலத்தால்) ஆநந்தத்தாலே மேலே மேலே போய். பின்னையும் அது தன்னைச் சொல்லப்புக்கால் "யதோ வாசோ நிவர்த்தந்தே" என்று மீளவேண்டும்படியன ஆநந்த ப்ராசுர்யத்தையுடையவன். சதகுணிதோத்தர க்ரமத்தாலே அப்யஸ்யமாந மாகாநின்றுள்ள நிரதிசயாநந்தயுக்தன்; "ஆநந்தமய" என்னக்கடவதிறே. (எங்கள் ஆயர் கொழுந்தே) இப்படி ஸர்வாதிகனானவன் இதர ஸஜாதீயனாய் வந்து அவதரித்தது தன்னை ஆச்ரயித்தார் விஷய ப்ரவணராய் முடியும்படி விட்டுக்கொடுக்கவோ? தான் சோக மோஹங்களை அநுபவிக்கிறது – தன்னைப் பற்றினார் சோக மோஹங்களை அனுபவிக்கைக்காகவோ? மேன்மைக்கு எல்லையானவன் தாழ்வுக்கு எல்லையாயிற்றது இவர்களை அநர்த்தப்பட விடவோ?

விளக்கம் - "எப்பால் எவர்க்கும் நலத்தால் உயர்ந்துயர்ந்து அப்பால் அவன்" என்பதில் உள்ள "அவன்" என்ற பதம் யாரைக் குறிக்கிறது? அப்படிப்பட்ட அவன் இந்தச் செயல்களைச் செய்தமை எங்கே காணலாம் போன்ற கேள்விகளுக்கு விடை அருளிச் செய்கிறார். "எவனைப்பற்ற" என்ற கேள்விக்கு "எப்பால்" என்பதும், "எங்கே செய்யக் கண்டோம்" என்று கேள்விக்கு "ஆயர்கொழுந்து" என்பதும் காண்க. அதாவது அவன்

இந்த்ரியங்கள் மூலமும், உலகவிஷயங்கள் மூலமும் தனது அடியார்கள் நழுவாதபடி காக்கிறான் என்பதை எங்கே கண்டோம் என்பதற்கு விடை அளிக்கிறார். (எப்பால் இத்யாதி) - அனைத்து இடங்களிலும் உள்ள அனைவருக்கும். ஸ்வர்க்கலோகம் போன்ற இடங்களில் உள்ள மேன்மை காரணமாகவும், மனிதன் தேவன் போன்ற வேறுபாடுகள் ஒரு சிலருக்கு ஒரு சில உயர்த்திகள் ஏற்படலாம். பூமியைப் போன்று உள்ளது அல்ல ஸ்வர்க்கம்; தேவர்கள் மனிதர்களைப் போன்று உள்ளவர்கள் அல்லர். "பால்" என்றால் இடம், எப்பால் என்றால் அனைத்து இடங்களிலும். "அப்பால், இப்பால்" என்றால் "அந்த இடம், இந்த இடம்" என்று கூறுவது காண்கிறோம். அனைத்து இடங்களிலும் இருக்கின்ற அனைவருக்கும். (நலத்தால்) - ஆனந்தத்தால் மேலே மேலே செல்பவன். அந்த ஆனந்தத்தை உணரவோ உரைக்கவோ முனைந்தால் தைத்திரீய ஆனந்தவல்லீ (1-9) யதோ வாசோ நிவர்த்தந்தே - அவனை அடைய இயலாமல் வாக்கும் மனமும் திரும்பின - என்ற நிலையே ஆகிறது; இப்படியாக வாக்கும் மனமும் திரும்பிவிடும்படியான ஆனந்தத்தின் மிகுதியைக் கொண்டவன். சதகுணித தோத்தர க்ரமம் என்பது என்ன? மனிதர்களின் ஆனந்தத்தை விட தேவர்களின் ஆனந்தம் நூறு மடங்கு அதிகம்; தேவர்களின் ஆனந்தத்தை விட இந்த்ரனின் ஆனந்தம் நூறு மடங்கு அதிகம்; அவனது ஆனந்தத்தை விட சிவனின் ஆனந்தம் நூறு மடங்கு அதிகம்; அவனது ஆனந்தத்தை விட நான்முகனின் ஆனந்தம் நூறு மடங்கு அதிகம்; இப்படியே சென்றபடி ப்ரஹ்மத்தின் ஆனந்தத்தை உணர்க. இவ்விதம் மேன்மேலும் உயர்த்தியபடி சென்றாலும் அடைய இயலாதபடி எல்லையற்ற ஆனந்தத்தை எப்போதும் கொண்டவன். இவ்விதம் கூறுவதற்கு ப்ரமாணம் என்ன? தைத்திரீய ஆநந்தவல்லீ - தஸ்மாத் வா ஏதஸ்மாத் விஜ்ஞாநமயாத் அந்யோந்தர ஆத்மாநந்தமய: - என்பதாகும். இவ்விதம் அவன் ஆனந்தமயமான நின்றதை எங்கு கண்டோம் என்பதற்கு விடை உரைக்கிறார். (எங்கள் ஆயர் கொழுந்தே) - இவ்விதம் அனைத்தையும் நியமனம் செய்கின்ற ஸர்வேச்வரன் மற்ற பலருடன் ஒத்து இருக்கும்படியாக அவர்கள் குலத்தை எடுத்தும் பிறந்தான். இதற்குக் காரணம் தன்னை அடைந்தவர்கள் ஐந்து புலன்களின் பிடியில் சிக்கித் தவிக்கும்படியாக கைவிடுவதற்காகவோ? தான் பலவிதமான சோகங்களையும் மயக்கங்களையும் அனுபவித்ததற்குக் காரணம், தன்னைப் பற்றியவர்கள் அவ்விதம் சோகம் மற்றும் மயக்கங்களை அனுபவிக்கவோ? மேன்மையின் எல்லையாக உள்ள அவன் தாழ்வுக்கு முகம் கொடுத்து அவதரித்தது, இவர்கள் தாழ்வை அனுபவிப்பதற்காகவோ? இல்லை என்று கருத்து.

வ்யாக்யானம் - (எங்கள் ஆயர் கொழுந்தே) க்ருஷ்ணன் திருவவதரித்த ஊரிலுள்ளாரோடே தமக்கொரு ப்ராக்ருத ஸம்பந்தம் தேட்டமாயிருக்கிறபடி. அன்றியே (எங்கள்) அவதாரம்தான் ஆச்ரிதார்த்தமாயிருக்குமிறே. நவநீத சௌர்ய நகரக்ஷோபம் பழையதாக எழுதிக் கிடக்கச் செய்தேயும் "எத்திறம்" என்றார் இவரேயிறே. (ஆயர் கொழுந்தே) இடையர் தங்களுக்குத் தான் ப்ரஹ்மாதிகள் கோடியிலேயாம்படி அவர்களில் ப்ரதாநனானவன் துஞ்சச்கொடான்.

விளக்கம் - (எங்கள் ஆயர் கொழுந்தே) - க்ருஷ்ணன் அவதாரம் செய்த மதுரா நகரத்தில் உள்ளவர்களுடன் தனக்கு ஒரு ஸம்பந்தம் கிட்டவேண்டும் என்ற ஆசையில் "எங்கள் ஆயர்" என்றார். அல்லது, அடியார்களுக்காகவே எடுக்கப்பட்ட அவதாரமும், அவன் வெண்ணெயைக் களவு செய்தல் போன்ற லீலைகள் முன்னர் நடந்ததாக உள்ளபோதிலும் இவரை மிகவும் ஈர்ப்பதால் "எங்கள்" என்று கூறுவதாகவும் கொள்ளலாம். அதாவது தனக்காக என்று இருப்பதாகவும் கொள்ளலாம். இவன் வெண்ணெயைக் களவு செய்து உண்பதால் அந்த நகரமே கலங்கிப் போனது என்ற விவரம் பழையதாக உள்ளபோதிலும், இவர் அந்தச் செய்கையை உரைக்கும்போது "எத்திறம்" என்று மயங்கினார். (ஆயர் கொழுந்தே) - நான்முகன் உள்ளிட்ட தேவர்களுக்கு தான் எவ்விதம் முதல்வனாக உள்ளானோ அது போன்றே ஆயர்களின் இடையே அவர்களது தலைவனாக நிற்கும் பெருமையே மிகவும் பெருமை என்று எண்ணுகிறான். இங்கு ஆயர் கொழுந்து என்றால் ஆயர்களின் தலைவன் என்று பொருள்.

1.7.3 ஆயர் கொழுந்தாய் அவரால் புடையுண்ணும்
மாயப் பிரானை என் மாணிக்கச்சோதியை
தூயவமுதைப் பருகிப் பருகி என்
மாயப்பிறவி மயர்வறுத்தேனே.

பொருள் - இடையர்களின் தலைவனாக இருந்தபடி, வெண்ணெய் போன்றவற்றைக் களவு செய்து உண்பதற்காக அவர்களிடம் அடியுண்டு, அதனால் அழுவது போன்ற வியக்க வைக்கும் செயல்களைச் செய்பவன்; மாணிக்கம் போன்று ஒளிர்கின்ற தனது தன்மையை எனக்கு வெளிப்படுத்தியவன்; தூய்மையான அமிர்தம் போன்றவன்; இப்படிப்பட்ட ஸர்வேச்வரனை நான் இடைவிடாமல் அனுபவித்தபடி நின்றேன்; பால் பருகியபடி

உள்ளவனுக்கு பித்தம் தெளிவது போன்று, ப்ரக்ருதியின் விளைவால் உண்டாகின்ற இந்தப் பிறவியில் ஏற்படும் அஜ்ஞானத்தை நான் போக்கிக்கொண்டேன்.

அவதாரிகை - ப்ரயோஜநாந்தரபரரான கேவலரை நிந்தித்தார்; அநந்யப்ரயோஜநர் திறத்தில் அவனிருக்கும்படி சொன்னார். நீர் இவ்விரண்டு கோடியிலும் ஆர்? என்ன, "நான் ப்ரயோஜநாந்தரபரனல்லேன், அநந்ய ப்ரயோஜநனாய் அவனைப் பற்றினேன்" என்று நேர்கொடுநேரே சொல்லவும் மாட்டாரே; அவனை அநுபவியாநிற்க, விரோதி தன்னடையே போய்க்கொடு நின்றவன் நான்" என்கிறார்.

விளக்கம் - அவனைத்தவிர மற்ற பலன்களை நாடுகின்ற மனிதர்களை முதல் பாசுரத்தில் நிந்தித்தார். மற்ற பயன் ஏதும் கருதாமல் தன்னை மட்டுமே நாடுகின்ற மனிதர்களிடம் இவன் நடந்து கொள்ளும் விதத்தைக் கடந்த பாசுரத்தில் அருளிச்செய்தார். ஒரு சிலர் ஆழ்வாரிடம், "இந்த இருவகையான் பிறவிகளில் நீவிர் எப்படிப்பட்டவர்?", என்றனர். இதற்கு ஆழ்வார், "நான் மற்ற பயன்களைக் கருதுபவன் அல்லன். மற்ற பலன்கள் எதனையும் எண்ணாமல் அவனைப் பற்றினேன்", என்று நேரடியாகப் பதில் உரைக்கவில்லை. இவ்விதம் உரைத்தால் தற்புகழ்ச்சியாகிவிடும். ஆகவே அவர்களிடம், "நான் அவனை அனுபவித்தபடி இருந்தேன். இதனால் அவனை அடையத் தடையாக இருந்த எனது விரோதிகள் தாமாகவே கழிந்து சென்றன. இப்படிப்பட்டவன் அடியேன்", என்கிறார்.

வ்யாக்யானம் - (ஆயர் கொழுந்தாய்) இடையர்க்கு ப்ராதாநனாயிருக்கும் இருப்புச் சொல்லிற்றுக்கீழ்; இங்கு அவர்களில் ஏகதேசஸ்தனாயிருக்கும்படி சொல்லுகிறது. அதாவது அவர்கள் வேராக, தான் கொழுந்தாயிருக்குமவன் என்கிறது. இடையர் காட்டிலே பசுக்களின் பின்னே திரிந்து, அவர்களுக்கு அடி கொதித்தால் வாடுவது க்ருஷ்ணன் முகமாயிருக்கை; வேரிலே வெக்கை தட்டினால் கொழுந்திறே முற்பட வாடுவது. (அவரால் புடையுண்ணும்) அவனால் என்னுதல், அவளால் என்னுதல் செய்யாமையாலே திருவாய்ப்பாடியில் பஞ்சலக்ஷம் குடியிலும் இவனை நியமிக்க உரியரல்லாதார் இல்லை. "மத்தாலே ஓரடி அடிப்பார்கள் போலே காணும்" என்று பட்டர் அருளிச்செய்யும்படி. (மாயப்பிரானை) அவாப்த ஸமஸ்தகாமனான ஸர்வேச்வரன், தனக்கு ஒரு குறையுண்டாய் வந்து அவதரித்து, ஆச்ரித ஸ்பர்சமுள்ள த்ரவ்யத்தாலல்லது

தரியாதானாய், அதுதான் நேர்கொடு நேரே கிடையாமையாலே களவு காணப்புக்கு, தலைக்கட்டமாட்டாதே, வாயது கையதாக அகப்பட்டுக் கட்டுண்டு அடியுண்டு நிற்கும் நிலையை அநுஸந்தித்து, "மாயப்பிரானை" என்கிறார்.

விளக்கம் - (ஆயர் கொழுந்தாய்) - கடந்த பாசுரத்தில் ஆயர்களின் தலைவனாக உள்ளதைக் கூறினார். இங்கு மீண்டும் அதனையே உரைத்தால் "கூறுவது கூறல்" என்ற புநருக்தி தோஷம் ஏற்படுமே என்ற சந்தேகத்தை நீக்குகிறார். இங்கு அவர்களில் ஒருவனாக இருக்கின்ற இருப்பைக் கூறுகிறார். அங்கு ப்ராதாந்யம் கூறப்பட்டது; இங்கு பாரதந்த்ர்யம் கூறப்பட்டது - அதாவது அங்கு அனைவரையும் தன்வசப்படுத்தல் கூறினார்; இங்கு இவன் அனைவரின் வசப்பட்டதைக் கூறுகிறார். அவர்கள் வேர் போன்றும், இவன் கொழுந்து போன்றும் நிற்கும் நிலை. இடையர்கள் காடுகளில் திரியும்போது அங்குள்ள வெப்பம் காரணமாகஅவர்களது கால்கள் உஷ்ணத்தில் தகிக்கும்; அப்போது அவர்கள் முகம் வாடுவதற்கு முன்பாக க்ருஷ்ணனின் முகம் வாடுகிறது. அவர்களுக்கு வந்த துன்பத்தைத் தன்னுடையதாகவே எண்ணும் தன்மையை "ஆயர்கொழுந்து" என்ற பதம் காட்டுமோ என்றால் விடை அளிக்கிறார். வேரில் வெப்பம் அதிகரிக்கும்போது கொழுந்துகள் அல்லவோ முதலில் வாடிவிடும்? (அவரால் புடையுண்ணும்) - திருவாய்ப்பாடியில் உள்ள ஐந்துலக்ஷம் குடிகளிலும் உள்ளவர்கள் யாராக இருந்தாலும் அவர்களில் க்ருஷ்ணனை நியமிக்க உரிமை இல்லாதவர்கள் என்று யாருமே இல்லை. இதனால்தான் "அவனால், அவளால்" என்று கூறாமல் பொதுவாகப் பன்மையில் "அவரால்" என்றார்; அதாவது "அவர்களால்" என்று பொருள். பராசரபட்டர், "மரத்தால் (அதாவது மரத்தால் செய்யப்பட்ட மத்து) கொண்டு ஓர் அடி அடிப்பார் போலே", என்பார். (மாயப்பிரானை) - தனது அனைத்து விருப்பங்களும் எப்போதுமே நிறைவேறப் பெற்றவனாகிய ஸர்வேச்வரனுக்கு ஒரு குறை ஏற்பட, அதன் காரணமாக அவன் இங்கு க்ருஷ்ணனாக வந்து அவதரித்தான். அது என்ன குறை? அடியார்களின் கைகளால் தீண்டப்பட்ட பொருள் அல்லாமல் வேறு எதனையும் தரிக்க இயலாத நிலை ஆகும். அப்படிப்பட்ட வெண்ணெய் அவனுக்கு எளிதாக நேரடியாகக் கிட்டாமையால், களவு செய்து உண்ண முயற்சித்தான். அந்த முயற்சியானது சரிவர முடியாமல், கையிலும் வாயிலும் வெண்ணெயுடன் அகப்பட்டுக்கொண்டான். இதன் பலனாக ஆய்ச்சிமார்களால் கட்டி வைக்கப்பட்டு, அவர்களிடம் அடியுண்டு நிற்கும் நிலையை எண்ணி "மாயப்பிரான்" என்கிறார்.

வ்யாக்யானம் - (என் மாணிக்கச்சோதியை) ஆச்ரிதர் கட்டி அடிக்க அடிக்க, களங்கமறக் கடையுண்ட மாணிக்கம் போலே திருமேனி புகர் பெற்று வருகிறபடி. கட்டின அளவுக்கு வெட்டென்றிருக்குமவன், கட்டியடிக்கப் புக்கால் புகர் பெறச் சொல்லவேணுமோ? "கண்ணியார் குறுங்கயிற்றால் கட்ட வெட்டென்றிருந்தானிறே". (என்) அப்புகரை எனக்கு முற்றூட்டாக்கினவன். (தூய அமுதைப் பருகிப் பருகி) தேவர்கள் அதிகாரிகளாய், ப்ரஹ்மச்சர்யாதி நியமங்கள் வேண்டி, ஸக்ருத் ஸேவ்யமாயிருக்குமிறே அது; ஸர்வாதிகாரமுமாய், ஒரு நியதியும் வேண்டாதே, ஸதாஸேவ்யமுமான அம்ருதமிறே இது. (என் இத்யாதி) ஆச்சர்யமான ஜன்மமடியாக உண்டான அஜ்ஞானத்தை வாசனையோடே போக்கினேன். ஜன்மத்துக்கு ஆச்சர்யமாவது ஒருபடிப்பட்டிராமை. "மயர்வறுத்தேன்" என்கிறது – "இந்நின்ற நீர்மை இனி யாம் உறாமை" என்று அபேக்ஷித்தபடியே பலாநுபவம் தம்மதாகையாலே அருளிச்செய்கிறார்.

விளக்கம் - (என் மாணிக்கச்சோதியை) - அங்குள்ள அடியார்கள் இவனைக் கட்டி வைத்து அடிக்க அடிக்க, களங்கம் அனைத்தும் நீங்கும்படியாகக் கடையப்பட்ட மாணிக்கக்கல் எவ்விதம் பிரகாசிக்குமோ அது போன்று இவனது திருமேனி ஒளிர்ந்தது. ஆனால் அடியுண்டால் இவ்விதம் திருமேனி ஒளிவீசுமோ? இதற்கு விடை அளிக்கிறார். கட்டி வைத்தபோதே மிகவும் உகப்புடன் இருந்தான்; அத்துடன் அடிக்கவும் பெற்றால் ஒளிர்ந்ததைக் கூறவும் வேண்டுமோ? அவன் இவ்விதம் இருந்தானோ என்றால், பெரிய திருமொழி (5-9-7) – கண்ணியார் குறுங்கயிற்றால் கட்ட வெட்டென்றிருந்தான் - என்றது காண்க. (என்) – அப்படிப்பட்ட அந்த ஒளிர்தலை எனக்குப் பூர்ணமான உணவாகவே ஆக்கியவன். (தூய அமுதைப் பருகிப் பருகி) தேவர்கள் மட்டுமே அதனைப் பெறும் உரிமையும் அதிகாரமும் கொண்டவர்களாக, ஆனால் அவர்களும் அதனைப் பெறுவதற்குப் பிரம்மச்சர்யம் போன்ற விரதங்களைக் கடைப்பிடித்தால் மட்டுமே கிட்டக்கூடியதாக உள்ள அமிர்தம் அது; ஆனால் எந்தவிதமான நியமங்களும் இன்றி, அனைவராலும் அள்ளிப் பருகும்படியாக, எப்போதுமே கிட்டவல்ல அமிர்தமாக இவன் உள்ளான். (என் இத்யாதி) – வியக்க வைக்கும் பிறவி காரணமாக ஏற்படுகிண்ற அறிவின்மை அனைத்தையும் வாசனையுடன் நீக்கினேன். பிறவிக்கு வியக்க வைக்கும் தன்மை என்னவென்றால் மனிதன், தேவன் போன்ற எத்தகைய சரீரத்தையும் எடுக்கவல்ல நிலை. (மயர்வு அறுத்தேன்) - அவன்தான் இவரது அறியாமைகளை நீக்கினான்; இப்படி உள்ளபோது இவர் தாமாகவே அவற்றை நீக்கிக்கொண்டது போன்று "மயர்வு

அறுத்தேன்" என்று கூறலாமோ? இதற்கு விடை அளிக்கிறார். திருவிருத்தத்தில் (1) இந்நின்ற நீர்மை இனி யாம் உறாமை – என்று வேண்டினார்; அதற்கேற்ற பலனை அடைந்தவுடன், அந்தப் பலனை அனுபவிப்பது தானாகவே உள்ளதால் இவ்விதம் "அறுத்தேன்" என்று கூறிக்கொள்கிறார்.

1.7.4 மயர்வற வென்மனத்தே மன்னினான் தன்னை
உயர்வினையே தரும் ஒண்சுடர்க் கற்றையை
அயர் விலமரர்கள் ஆதிக்கொழுந்தை என்
இசைவினை யென்சொல்லி யான்விடுவேனோ

பொருள் – என்னுடைய அறியாமை என்னை விட்டு முற்றிலுமாக நீங்கும்படி என் மனதில் எப்போதும் வாசம் செய்பவன்; உயர்ந்த ஞானம், பக்தி போன்றவற்றை மட்டுமே எப்போதும் எனக்கு அளிப்பவன்; எப்போதும் தேஜோமயமாக உள்ளவன்; மறதி என்பதே இல்லாத நித்யஸூரிகளின் முதல் தலைவன்; தன்னை வந்து அடையும்படியாக, என்னுடைய சம்மதத்தைத் தானாகவே ஏற்படுத்திக் கொண்டவன் – இப்படிப்பட்ட ஸர்வேச்வரனைப் பற்றி அறிந்த நான், அவனை இனிமேல் ஏதேனும் காரணம் காண்பித்து விடுவேனோ?

அவதாரிகை – "இந்நின்ற நீர்மை இனி யாமுறாமை" என்று அடியிலே நீர் அபேக்ஷித்தபடியே உம்முடைய அபேக்ஷிதம் தலைக்கட்டிற்றே; இனி இவ்விஷயத்தை விட்டுப் பிடிக்குமித்தனையன்றோ? என்ன; நான் என்ன ஹேதுவாலே விடுவேன்? என்கிறார்.

விளக்கம் - ஆழ்வாரிடம் சிலர், "திருவிருத்தத்தில் (1) – இந்நின்ற நீர்மை இனி யாமுறாமை - என்று நீங்கள் வேண்டினீர். உம்முடைய விருப்பம் நிறைவேறியது என்பதைக் கடந்த பாசுரத்தில் - மாயப்பிறவி மயர் அறுத்தேன் - என்று உரைத்தீர். இனி நீங்கள் சற்று ஓய்ந்து, அவனை விட்டுப் பிடிக்கலாம் அல்லவோ," என்றனர். இதற்கு ஆழ்வார், "நான் என்ன காரணம் கூறி அவனை விடுவேன்", என்கிறார்.

வ்யாக்யானம் - (மயர்வற) அஜ்ஞாநமானது வாஸனையோடே போக. (என்மனத்தே மன்னினான் தன்னை) - "இன்னமும் மயர்வு குடிகொள்ளவொண்ணாது" என்று

என்னுடைய ஹ்ருதயத்திலே புகுந்து ஸ்த்தாவர ப்ரதிஷ்டையாக இருந்தவனை. செடிசீய்த்துக் குடியேற்றின படைவீடுகள் விடாதேயிருக்கும் ராஜாக்களைப்போலே. "புறம்பேயும் ஒரு கந்தவ்யபூமியுண்டு" என்று தோற்ற இராமை. இப்படியிருந்து செய்கிறதென்? என்னில் – (உயர்வினையே தரும்) ஜ்ஞாந விஸ்ரம்ப பக்திகளைத் தாராநின்றான் என்னுதல்; யமாதிகள் தலையிலே அடியிடும்படியான உத்கர்ஷத்தைத் தாராநின்றான் என்னுதல். (தரும்) தந்து சமைந்தானாயிருக்கிறிலன்; "காதல் கடல் புரைய", "காதல் கடலின் மிகப்பெரிதால்", "நீள்விசும்பும் கழியப்பெரிதால்", "சூழ்ந்த தனிற்பெரிய".

விளக்கம் - (மயர்வற) - அறியாமை என்பது அதன் வாசனையுடன் நீங்கும்படி. (என் மனத்தே மன்னினான் தன்னை) - என்னுடைய மனதில் எப்போதும் அந்த அறியாமை மீண்டும் வந்து புகாது என்று கூறும்படியாக என் இதயத்தில் வந்து புகுந்தான். அப்படிப் புகுந்து, அசையாத தாவரங்கள் போன்று நிலையாக நின்றுவிட்டான். இந்த இடத்தை விட்டு வெளியே போக ஏற்ற இடம் உள்ளதோ என்று எண்ணாமல், அப்படியே என் உள்ளத்தில் நின்றான். சரி, இப்படி நின்றபடி அவன் செய்வது என்ன? (உயர்வினையே தரும்) – வினை என்றால் செயல்கள், கர்மங்கள். உயர்வினை என்றால் உயர்ந்த செயல்கள். அவை என்ன? திருமந்திரமான "ஓம் நமோ நாராயணாய" என்பதையே உயர்ந்த செயல் என்கிறார். ஞானம் என்பது ப்ரணவத்தால் கூறும் அடிமைத்தனம் பற்றிய தெளிவு; விஸ்ரம்பம் என்றால் "நம:" என்பதால் கூறப்படும் கருத்து; பக்தி என்றால் நாராயண பதத்தின் மூலம் கூறப்படும் அடிமைப் பேற்றை பெறுவதில் உள்ள வேகம் - என்று கருத்து; இவற்றை அளிக்கிறான் என்கிறர். இதற்கு மற்றொரு பொருளையும் உரைக்கிறார். யமன் முதலானவர்களின் தலையில் கால்கள் வைக்கும்படியான மேன்மையை அளிக்கிறான். (தரும்) - இவற்றை அளித்த பின்னர் "இவருக்கு அளித்தவை போதும்" என்று திருப்தி அடைந்தானா என்றால், இல்லை என்கிறார். இதனால்தான் "தந்து" என்று கூறாமல் "தரும்" என்று கூறுகிறார். மேன்மேலும் பக்தியை அதிகரிப்பானோ என்பதறக்குக் கீழே உள்ள வரிகளை ப்ரமாணம் காண்பிக்கிறார்:

- திருவாய்மொழி (5-3-4) - காதல் கடல் புரைய
- திருவாய்மொழி (7-3-9) - காதல் கடலின் மிகப்பெரிதால்
- திருவாய்மொழி (7-3-8) - நீள்விசும்பும் கழியப்பெரிதால்
- திருவாய்மொழி (10-10-10) - சூழ்ந்த தனிற்பெரிய

வ்யாக்யானம் - (ஒண்சுடர்க்கற்றையை) இத்தால், எனக்கு உபகரித்தானாயிருக்கை யன்றியே, "தான் உபகாரம் கொண்டான்" என்னுமிடம் வடிவில் புகரிலே தோற்ற இராநின்றான் என்னுதல்; தம்மை வசீகரித்த அழகைச் சொல்லிற்றாகவுமாம்; "தேஜஸாம் ராசிமூர்ஜிதம்" என்னுமாபோலே. இப்படி தன் பேறாக உபகரித்தவன், தன் உபகாரம் கொள்வாரில்லாதானொருவனோ? என்னில், (அயர்வில் அமரர்கள் ஆதிக்கொழுந்தை) தான் உபகரியாதவன்று, தங்கள் ஸத்தைக் கொண்டு ஆற்றமாட்டாதாரை ஒரு நாடாக உடையவன். பகவதநுபவ விஸ்ம்ருதிக்கு ப்ராகபாவத்தையுடையராய், அவ்வநுபவத்துக்கு விச்சேத சங்கையின்றிக்கே, தாங்கள் பலராயிருக்கிறவர்களுக்கு தாரகாதிகளெல்லாம் தானேயாயிருக்கிறவனை. (என் இசைவினை) நான் "அல்லேன்" என்று அகலாதபடி என் இசைவு தானாய்ப் புகுந்தவனை. (என்சொல்லி யான் விடுவேனோ) "சிறிது மயர்வு கிடந்தது" என்று விடவோ? "மயர்வைப்போக்கி, தான் கடக்க இருந்தான்" என்று விடவோ? "எனக்கு மேன்மேலென நன்மைகளைப் பண்ணித் தந்திலன்" என்று விடவோ? "வடிவழகில்லை" என்று விடவோ? "மேன்மை போராது" என்று விடவோ? "இப்பேற்றுக்கு க்ருஷி பண்ணினேன் நான்" என்று விடவோ? எத்தைச் சொல்லி நான் விடுவது? என்கிறார்.

விளக்கம் - (ஒண்சுடர்க்கற்றையை) – இப்படியாக எனக்கு உயர்வினைத் தந்து, எனக்கு உபகாரம் செய்ததைத் "தனக்குக் கிடைத்த பேறு" என்று எண்ணியபடி உள்ளான்; இவ்விதம் தான் உபகாரம் செய்ததால் பெற்ற பேறானது தன்னுடைய திருமேனியில் வெளிப்படும்படி ஒளி வீசியபடி நின்றான். அல்லது எல்லையற்ற தேஜஸ்ஸுடன் கூடிய தனது திருமேனியைக் காண்பித்து, எனக்கு "நான் அவனது அடிமை" என்ற ஞானத்தை ஏற்படுத்தி, என்னை வசீகரித்தான் என்றும் பொருள் கொள்ளலாம். ஸ்ரீவிஷ்ணு புராணம் (1-9-68) – தேஜஸாம் ராசிமூர்ஜிதம் - வலிமையுடன் கூடிய ஒளிப்பிழம்பு போன்றவன் – என்றது காண்க. இவ்விதம் தன்னுடைய பேறு என்றே உதவிகளைச் செய்தபடி உள்ள அவன், தன்னுடைய உதவிகளை ஏற்றுக் கொள்ள யாரும் இன்றி இருக்கிறானோ என்று கேள்விக்கு விடை அளிக்கிறார். (அயர்வில் அமரர்கள் ஆதிக்கொழுந்தை) – "பகவத் அனுபவம்" என்ற நிலைக்கு, எப்போதும் மறதி என்ற சந்தேகம் சிறிதும் அற்றவர்களாக பலராக உள்ள நித்யஸூரிகளுக்குத் தாரகம் போன்ற பலவும் தானாகவே உள்ளவன். தான் உபகாரம் செய்யாதபோது, தங்களது ஆத்மாவைக் கொண்டு மட்டுமே தங்கள் ஆற்றாமையை போக்கிக் கொள்ள இயலாத நித்யஸூரிகள் நிறைந்த ஒரு நாட்டையே கொண்டவன். (என் இசைவினை) - "நான் ஏற்றவன் அல்லன்" என்று கூறி நான்

அகலாதபடி, என்னுடைய இசைவுக்கும் அந்தர்யாமியாய் நின்றபடி உள்ளவன். (என்சொல்லி யான் விடுவேனோ) - "சிறிதளவு மறதி எனக்கு நின்றது" என்று கூறி அவனை விட இயலுமோ?". "என்னுடைய மறதியை நீக்கி, தான் கடக்க இருந்தான்" என்று கூறி அவனை விட இயலுமோ? "எனக்கு மேன்மேலும் நன்மைகள் ஏதும் செய்யவில்லை", என்று கூறி விட இயலுமோ? "தான் எனக்குச் செய்த உதவிகளுக்கு பிரதி உதவி எதிர்பார்த்து நின்றான்", என்று கூறி விட இயலுமோ? "அவனுடைய திருமேனி அழகாக இல்லை", என்று கூறி விட இயலுமோ? அவனுடைய மேன்மைக்குக் குறையுள்ளது என்று விட முடியுமோ? "இந்தப் பேற்றுக்கு நான் சொந்த முயற்சிகள் பல செய்தேன் (அவன் குறைவாகவே செய்தான்)", என்று கூறி விட இயலுமோ? எதனைக் காரணம் கூறி நான் அவனை விடுவது என்கிறார். அவனிடம் ஏதேனும் ஒரு சிறிய குறை இருந்தால் அல்லவோ விடுவது என்கிறார் .

1.7.5 விடுவேனோ வென்விளக்கை என்னாவியை
நடுவே வந்து உய்யக்கொள்கின்ற நாதனை
தொடுவே செய்து இளவாய்ச்சியர் கண்ணினுள்
விடவே செய்து விழிக்கும் பிரானையே.

பொருள் – என்னுடைய ஸ்வரூபம் உட்பட அனைத்தையும் விளக்கிக் காண்பிக்கவல்ல விளக்கு போன்றவனும், என் ஆத்மாவாக உள்ளவனும், சரியான தருணம் பார்த்து நடுவே வந்து என்னுடைய அஹங்காரம் போன்றவற்றால் நான் அழிந்து விடாதபடி பிழைக்க வைக்கின்ற ஸ்வாமியும், கபடமான செயல்களையே செய்தபடி இளமையான பருவம் கொண்ட இடைப்பெண்களின் கண்களில் விஷமத்தனத்தையே செய்து கண்களுடன் கண்கள் கலக்கும்படிச் செய்த எனக்கு உபகாரகனும் ஆகிய ஸர்வேச்வரனை நான் விடுவேனோ?

அவதாரிகை - திருவாய்ப்பாடியில் இடைப்பெண்கள் க்ருஷ்ணனை விட்டு பரமபதத்தை விரும்புமன்றன்றோ நான் இவனை விட்டுப் புறம்பே போவது என்கிறார்.

விளக்கம் – கடந்த பாசுரத்தில் ஸர்வேச்வரனை நான் என்ன குறை கூறிவிடுவேன் என்றார். இதனைக் கேட்ட சிலர் ஆழ்வாரிடம், "திருவாய்மொழி (1-5) – வளவேழ் உலகு – என்பதில் அவனை விட்டு அகல்வேன் என்று நீர் கூறினீர். இப்படிப்பட்ட விஷயத்தைக் கண்டவுடன் நீங்கள் அகல்வீர்களோ?", என்றனர். இதற்கு விடை அளிக்கிறார். திருவாய்பாடியில் உள்ள இடைப்பெண்கள் க்ருஷ்ணனை விட்டு அகன்று பரமபதம்

செல்வதற்கு விருப்பம் கொண்டால், அப்படிப்பட்ட நாளில் அல்லவோ நான் அவனை விட்டு அகல்வேன் என்கிறார்.

வ்யாக்யானம் - (விடுவேனோ என் விளக்கை) ஸ்வவிஷயமான அஜ்ஞாநாந்தகாரம் போம்படி நிர்ஹேதுகமாகத் தன்னுடைய ஸ்வரூப ரூப குண விபூதிகளை எனக்கு ப்ரகாசிப்பித்தவனை. "என் விளக்கை" என்பானென்? அல்லாதார்க்கும் ஒவ்வாதோ? என்னில், இவரைப் போலே அல்லாதார்க்கு ஸ்நேஹமில்லையே; ஸ்நேஹமுண்டாகிலிறே இவ்விளக்கும் ப்ரகாசிப்பது. விளக்காவது தன்னையுங் காட்டி, பதார்த்தங்களையுங் காட்டுவதொன்றிறே. இவர்க்குத் தன்னையும் காட்டி ஸ்வஸ்வரூபத்தையும் விரோதி ஸ்வரூபத்தையுமிறே காட்டிக் கொடுத்தது. (என் ஆவியை இத்யாதி) "தானொருவன் உளன்" என்னும் அறிவாதல், தன்பக்கல் அபேக்ஷையாதல் இன்றிக்கே, ப்ரக்ருதி வச்யனாய் உருமாய்ந்து போந்த என் ஆத்மாவை. (நடுவே வந்து) நிர்ஹேதுகமாக வந்து. விஷயப்ரவணனாய்ப் போகாநிற்க நடுவே வந்து மீட்டவித்தனை. (உய்யக்கொள்கின்ற) கொண்டு விட்டிலன்; மேன்மேலெனக் கொள்ளா நிற்கிறவித்தனை. "அஸந்நேவ ஸ பவதி" என்கிறபடியே அஸத்கல்பனான என்னை "ஸந்தமேநம் ததோ விது:" என்னப் பண்ணினான். "என் ஆவி" என்று உம்மாதாகச் சொன்னீர்; உம்முடைய ஆத்மாவை அவன் வந்து உய்யக் கொள்ள நிபந்தநமென்? என்ன, (நாதனை) ஆருடைய வஸ்து அழியப்புக்கது? "நான்" என்று ஒருவனுண்டோ? உடையவனாகையாலே செய்தான்.

விளக்கம் - (விடுவேனோ என் விளக்கை) - தன்னுடைய விஷயமாக ஏற்படக்கூடிய அறிவின்மை என்ற இருள் நீங்கும்படி, என்னிடம் எந்தவிதமான பிரதி உபகாரத்தையும் எதிர்பாராமல், தனது ஸ்வரூப ரூப குண விபூதிகளைக் கொண்டு நன்கு உணர்த்தியவனை. "என் விளக்கு" என்று ஏன் கூறவேண்டும்? இவன் மற்றவர்களுக்கும் ஏற்புடையவன்தானே? இதற்கு விடை அளிக்கிறார். இவரைப் போன்ற பக்தி மற்றவர்களுக்கு இல்லையே! பக்தி இருந்தால் அல்லவோ இந்த விளக்கு அவர்களுக்கு ப்ரகாசிக்கிறது? விளக்கு என்றால் தன்னையும் காண்பித்துக் கொடுத்து, மற்ற பொருள்களையும் காண்பித்துக் கொடுப்பது ஆகும். இதனை – தீபஸ்ய தமோநிவர்த்தகத்வம் பதார்த்த ப்ரகாசகத்வம் - விளக்கிறகு இருளை நீக்குதலும், பொருள்களை வெளிப்படுத்துதலும் ஸ்வபாவம் – என்பர். இவருக்கு ப்ராப்ய ஸ்வரூபம் (பேற்றின் ஸ்வரூபம்), உபாய ஸ்வரூபம் ஆகிய இரண்டையும் காண்பித்துக் கொடுத்து,

ஆத்மஸ்வரூபத்தையும் தன்னை அடையத்தடையாக உள்ள விரோதியின் ஸ்வரூபத்தையும் காண்பித்துக் கொடுத்தான். இங்கு அர்த்தபஞ்சகம் வெளிப்படுவது காண்க. (என் ஆவியை இத்யாதி) "தான் ஒருவன் உள்ளோம்" என்பதான ஞானம் தன்னுடைய பக்கம் இல்லாமல், இந்த ப்ரக்ருதியால் வசப்பட்டு ஸ்வரூப நாசம் அடைந்து நிற்கும் என் ஆத்மாவை. (நடுவே வந்து) – என் பக்கம் எந்தவிதமான கைம்மாறும் எதிர்பார்க்காமல் வந்து. இந்த உலகில் உள்ள பொருள்களின் மீது ஆசை கொண்டபடி நான் அவற்றின் பின்னே செல்ல, சரியான நேரம் பார்த்து வந்து என்னை மீட்டான். (உய்யக்கொள்கின்ற) - அஹங்காரம் போன்றவற்றால் அழிந்து போகாதபடி காப்பாற்றிய நாதனை . என்னை இவ்விதம் காப்பாற்றியவுடன் அப்படியே விட்டுவிடவில்லை. மேலும் மேலும் என்னை ஆட்கொண்டான். தைத்திரீய ஆநந்தவல்லீ (6) – அஸந்நேவ ஸ பவதி – ப்ரஹ்மத்தை இல்லை என்பவன், இல்லாதவனே ஆகிறான் - என்னுபடியாக இருந்த என்னை, தைத்திரீயம் - ஸந்தமேநம் ததோ விது: - ப்ரஹ்மத்தை உள்ளது என்பவன், உள்ளவன் ஆகிறான் - என்று கூறுவதற்கு ஏற்ப, இந்தப் பூமியில் உள்ள ஒரு வஸ்துவாக ஆக்கினான். "என் ஆவி" என்று அவனை நீவிர் உம்முடையதாகவே கூறிக்கொள்கிறீர். உம்முடைய ஆத்மாவை அவன் வந்து பிழைக்க வைக்க அவனுக்கு என்ன கட்டாயம் உள்ளது என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார். (நாதனை) – யாருடைய வஸ்து அழிந்தபடி உள்ளது? இந்த உலகில் "நான்" என்று கூறிக்கொள்ளும்படியாக சுதந்திரமானவர்கள் உள்ளார்களோ? இந்த ஆத்மா அவனுக்கு உடைமை என்பதால் இவ்விதம் செய்தான் என்கிறார்.

வ்யாக்யானம் – ஆரேனும் பேற்றுக்கு ஆரேனும் யத்நம் பண்ணுவார்களோ என்ன, திருவாய்ப்பாடியில் பெண்கள் பேற்றுக்கு யத்நம் பண்ணினார் ஆர்? (தொடுவே செய்து) ஆராய்ச்சிப்படும் செயல்களைச் செய்து. ஓரிடத்திலே போய்க் களவு கண்டு அங்கே அகப்படுமே; "கள்ளனைக் காணவேணும்" என்று இருப்பாருமுண்டே. இவனாலே புண்பட்டவர்கள் எல்லாரும் காணவருவர்களே; புருஷர்களுக்கும் வ்ருத்தைகளுக்கும் ஒரு பயமில்லை; அருகே நின்றார்க்குத் தெரியாமே பருவம் நிரம்பின இடைப்பெண்கள் கண்ணுக்குள்ளே விடும்படியைச் செய்து விழிக்கும் – தூது விடும்படியைச் செய்து விழிக்கும். "தூது விடுகையாகிற செயலைச் செய்து என்னுதல்; விடருடைய செயலைச் செய்து என்னுதல். "தூது செய் கண்கள்" என்னக்கடவதிறே; அதுவாதல் - தூர்த்தருடைய வ்யாபாரங்களைப் பண்ணுதல். "தவாஸ்மி , தாஸோஸ்மி" என்றாப்போலே சொல்லுகை.

(பிரானையே) அந்நோக்காலே இடைப்பெண்களை அநந்யார்ஹைக ளாக்கினாற்போலே என்னையும் அநந்யார்ஹமாக்கிவிட்டவனை விடுவேனோ?

விளக்கம் - ஒருவர் பெறக்கூடிய பேற்றுக்கு மற்றவர்கள் முயற்சி செய்வார்களோ என்று கேட்கலாம். இதற்கு விடையாக - திருவாய்ப்பாடியில் இடைப்பெண்களுடைய பேற்றுக்கு முயற்சி செய்தவன் யார்? இவன் அல்லவோ என்கிறார். (தொடுவே செய்து) - தொடுவு என்றால் களவு என்று பொருள். இதற்கு ஏன் ஏகாரம் கூறினார்? அதாவது தொடுவு என்று கூறாமல் தொடுவே என்றது காண்க; ஒரு சிலர் வெண்ணெய் அளித்தாலும் ஏற்க மாட்டான் என்று உணர்த்தவே இவ்விதம் ஏகாரம் அமைத்தார். ஆராய்ச்சிப்படும் செயல்கள் என்பது என்ன? களவு என்பதை ஆராய்ச்சிப்படும் செயல் என்கிறார். ஆராய்ச்சி என்பது, "யார் இப்படிப்பட்ட வெண்ணெய் களவுச் செயல்கள் செய்வது" என்று கூடி நின்று பேசுவது எனலாம். இந்த ஆராய்ச்சி ஏற்பட்டால் அல்லவோ இடைப்பெண்கள் ஒரே இடத்தில் திரண்டு நிற்பார்கள. அதாவது இடையர்கள் அனைவரும் சேர்ந்து, "நமது பெண்கள் மீது க்ருஷ்ணன் பார்வை படக்கூடாது", என்று அறையில் பூட்டி வைக்க; அவர்கள் அனைவரையும் அடையும் பொருட்டு, அவர்களும் திரண்டு வரும்படியாக ஏதேனும் ஒரு செயலைச் செய்தலே ஆராய்ச்சிப்படும் செயல் என்பதாகும். இதனை எவ்விதம் செய்கிறான்? ஓர் இடத்தில் சென்று களவு செய்வான்; அங்கே வேண்டுமென்றே அகப்பட்டுக் கொள்வான்; "கள்ளன் யார் என்று அறிய வேண்டும்", என்று ஆசை கொண்டவர்கள் பலர் இருப்பார்கள் அல்லவோ? இப்படியாக இவனால் களவு மூலம் பாதிக்கப்பட்டவர்கள் வருவார்கள். அல்லது புண்பட்டவர்கள் - இவனுடைய லீலைகளுக்கு அடிமையானவர்கள்; இவனைப் பிரிந்து துக்கத்தில் உள்ளவர்கள் – வருவார்கள். இப்படியாக வருகின்ற ஆயர்களுக்கும் வயதான பெண்களுக்கும் க்ருஷ்ணனைப் பிரிந்துவிடுவோமோ என்ற காரணத்தால் பிறக்கும் பயம் கிடையாது, வருத்தமோ ஈடுபாடோ கிடையாது. ஆனால் அங்கு பயப்பட்டபடி உள்ளது ஆயர்பெண்களே ஆவர். இவர்களது அருகில் உள்ளவர்களுக்குத் தெரியாமல், பருவம் நிரம்பிய அந்த இளம்பெண்களின் கண்களுக்குள் இவன் தனது தூதுச் செய்தியை விட்டு, விழித்தபடி நிற்பான். அல்லது அந்தப் பெண்கள் தங்கள் கண்களால் தனக்குத் தூதுச் செய்தி விடும்படியாக விழிப்பான். தீய ஒழுக்கம் கொண்ட காமுகர்களின் செயலைச் செய்து என்றும் உரைப்பார்கள். திருவாய்மொழி (9-10-9) - தூது செய் கண்கள் - என்று உரைக்கப்போகிறார். இப்படியாகத் தூது விடும் செய்கைக்கு ஏற்ற செயல்கள்

என்னவென்றால் போலியான செயல்கள் செய்வோர் போன்ற செயல்களைச் செய்தல். (பிரானையே) - இப்படிப்பட்ட பார்வை மூலம் அந்த ஆய்ச்சிப் பெண்களைத் தன் வசப்படுத்தி தனக்கு மட்டுமே உரிமையாக்கிக் கொண்டது போன்று, என்னையும் தனக்காகவே ஆக்கிக்கொண்டவன் என்கிறார். இப்படிப்பட்டவனை விடுவேனோ என்கிறார்.

1.7.6 பிரான் பெருநிலங் கீண்டவன் பின்னும்
விராய் மலர்த்துழாய் வேய்ந்த முடியன்
மராமர மெய்த மாயவன் என்னுள்
இரானெனில் பின்னையா னொட்டுவேனோ?

பொருள் – எனக்கும் இந்த உலகிற்கும் உபகாரங்கள் பல செய்தபடி உள்ளவன்; இந்த உலகத்தை வராஹனாய் நின்று எடுத்தவன்; மலர்களுடன் கூடியதான துளசிமாலையைக் கொண்டு நன்கு அலங்கரிக்கப்பட்ட திருமுடியை உடையவன்; சுக்ரீவனுக்கு நம்பிக்கை ஏற்படுவதற்காக மராமரங்களை அம்புகளால் சாய்த்தவன்; வியக்கவைக்கும் செயல்கள் கொண்டவன் - இப்படிப்பட்ட அவன் என்னிடம், "உன் நெஞ்சத்தில் இனி நான் இருக்கமாட்டேன்", என்று கூறி என் நெஞ்சை விட்டுப் பிரிய முயன்றால், அதற்கு நான் உடன்படுவேனோ என்கிறார்.

அவதாரிகை - இப்போது "விடோம் என்கிறீரித்தனைப் போக்கிப் பின்னையும் நீரல்லீரோ, உம்முடைய வார்த்தையை விச்வஸிக்கப்போமோ?" என்ன; "அவனாலே அங்கீக்ருதனான நான் அவனை விடுவேன்னோ?" என்றார் கீழிற்பாட்டில்; "உம்மை அவன்தான் விடில் செய்வதென்?" என்ன; "தன் குணசேஷ்டிதங்களாலே என்னைத் தோற்பித்து என்னோடே கலந்தவனை நான் விட ஸம்வதிப்பேனோ?" என்கிறார் இதில்.

விளக்கம் - ஆழ்வாரிடம் சிலர், "இப்போது நீவிர் அவனை விடுவேனோ, மாட்டேன் என்று உரைக்கிறீர்கள். ஆனால் வளவேழுலகு என்ற திருவாய்மொழியில் அகல்வேன் என்றீர்கள். உங்களுடைய சொற்களை நாங்கள் எவ்விதம் நம்புவது?", என்றனர். இதற்கு ஆழ்வார், "அவனால் அங்கீகாரம் செய்யப்பட்ட நான் அவனை விடுவேனோ?", என்று கடந்த பாசுரத்தில் உரைத்தார். இதற்கு அவர்கள், "நீவிர் விடவேண்டாம். உம்மை அவன் விட்டால் என்ன செய்வீர்?", என்றனர். இதற்கு ஆழ்வார், "தன்னுடைய குணங்கள் மற்றும்

வியக்கவைக்கும் செயல்கள் ஆகியவற்றால் என்னைத் தோற்கடித்து, என்னுடன் கலந்து நிற்கின்ற அவனை நான் போவதற்குச் சம்மதிப்பேனோ?", என்கிறார்.

வ்யாக்யானம் - (பிரான்) நிலா, தென்றல், சந்தநம் பிறர்க்கேயாயிருக்குமாபோலே, தன் படிகளையடையப் பிறர்க்காக்கி வைக்குமவன். ஸர்வவிஷயமாகவும் ஆச்ரித விஷயமாகவும் பண்ணும் உபகாரத்தை நினைத்து "பிரான்" என்கிறது. அத்தை உபபாதிக்கிறது மேல்; (பெருநிலம் கீண்டவன்) ஸர்வவிஷயமாகப் பண்ணும் உபகாரம். ப்ரளயங் கொண்ட பூமியை நீருக்கும் சேற்றுக்கும் இறாயாத வடிவைக் கொண்டு எடுத்தாற்போலே, ஸம்ஸார ப்ரளயங்கொண்ட என்னை எடுத்தவன். (பின்னும் விராய் மலர்த்துழாய் வேய்ந்த முடியன்) ஒப்பனையோடேயாயிற்று ப்ரளயத்தில் முழுகிற்று. நெருங்கத் தொடையுண்டு, பரிமள ப்ரசுரமாய், செவ்வி பெற்றிருந்துள்ள திருத்துழாய் மாலையாலே சூழப்பட்ட திருவபிஷேகத்தை உடையவன். விரையை, "விராய்" என்று நீட்டிக்கிடக்கிறது. அன்றியே, மலர் விரவின திருத்துழாய் என்றுமாம்.

விளக்கம் – (பிரான்) - மற்றவர்களுக்கு என்றே உள்ளவன். நாராயணன், வாஸுதேவன் என்று மற்றவர்களுக்காக அவன் உள்ளான். சந்த்ரன், தென்றல்காற்று, சந்தனம் போன்றவை மற்றவர்களுக்காக மட்டுமே உள்ளது போன்று, தனது செய்கைகள் அனைத்தையும் மற்றவர்களுக்காகவே உடையவன். குறிப்பிட்டவர்களுக்காக என்று மட்டுமே அல்லாமல் அனைவருக்காகவும், தனது அடியார்களுக்காகவும் செய்கின்ற உதவிகளை எண்ணியே "பிரான்" என்கிறார். இதனை மேலும் விளக்குகிறார். (பெருநிலம் கீண்டவன்) - அனைவரின் விஷயங்களிலும் செய்யும் உபகாரம். ப்ரளயத்தில் சிக்கிய பூமியை நீருக்கு இரையாகாதபடி, தன்னுடைய மேன்மைக்கு வராஹ அவதாரம் எடுத்தால் பங்கம் ஏற்படுமோ என்று எண்ணி பின்வாங்காதபடி, வராஹ அவதாரம் எடுத்து வெளியே மீட்டது போன்று, ஸம்சாரம் என்ற ப்ரளயத்தால் சூழப்பட்ட என்னையும் எடுத்தவன். (பின்னும் விராய் மலர்த்துழாய் வேய்ந்த முடியன்) – நெருக்கமாகத் தொடுக்கப்பட்ட வாசனை மிகுந்த அழகுடன் கூடியதான துளசிமாலையால் சூழப்பட்ட திருமுடி கொண்டவன். இப்படிப்பட்ட அலங்காரத்துடன் அல்லவோ அவன் ப்ரளயத்தில் மூழ்கி பூமியை எடுத்தான்? மலர் விராய் என்பதற்கு மலர்கள் நிறைந்த துளசி எனலாம்.

வ்யாக்யானம் - (மராமரம் எய்த மாயவன்) ஆச்ரித விஷயமாக உபகரிக்கும்படி. மஹாராஜர், வாலி மிடுக்கையும் பெருமாள் ஸௌகுமார்யத்தையும் அநுஸந்தித்து, "நீர் வாலியைக் கொல்ல மாட்டீர்" என்ன, "நான் வல்லேன்" என்று மழுவேந்திக் கொடுத்துக் கார்யம் செய்யும் வ்யோமோஹத்தையுடையவன். (என்னுள் இரான் என்னில்) இப்படி ஆச்ரிதரை விஷயீகரித்து அவர்கள் பேற்றுக்குத் தான் க்ருஷி பண்ணுமவன், என்னுள் இரான் எனில்; "எனில்" என்கையாலே விட ஸம்பாவநையில்லை என்கை. (பின்னை யான் ஒட்டுவேனோ) "எப்ரகாரத்தாலும் இரேன்" என்னுமாகில், பின்னை, நான் அவன் போக்கை இசைவேனோ? என்னுடைய கர்மபாரதந்த்ர்யம்போலே அவனுடைய ஆச்ரித பாரதந்த்ர்யத்துக்கும் ஏதேனும் கண்ணழிவுண்டோ? என் இசைவின்றிக்கே இருக்க, அவனாலே போகப்போமோ? அன்றியே, "நான் தொங்குவேனோ?" என்று பிள்ளான் பணிக்கும்படி.

விளக்கம் - (மராமரம் எய்த மாயவன்) - தன்னை அடைந்தவர்களுக்கு உபகாரம் செய்தபடி இருத்தல். சுக்ரீவன் வாலியின் மிடுக்கு மற்றும் இராமனின் மென்மை ஆகியவற்றை ஆராய்ந்த பின்னர் இராமனிடம், "நீவிர் வாலியைக் கொல்லமாட்டீர்", என்றான். இதற்கு இராமன், "நான் செய்யவல்லவன்", என்று கார்யம் செய்து கொடுக்கும்படி அடியார்களிடம் மயக்கம் கொண்டவன். (என்னுள் இரான் என்னில்) – இப்படியாக அடியார்களைத் தன் பக்கம் சேர்த்துக் கொண்டு, அவர்களது பேறுக்காகத் தான் முயற்சிகள் செய்கின்ற அவன் எனது நெஞ்சத்தில் இருக்கமாட்டேன் என்று கூறினால். "எனில்" என்ற பதம் மூலம் அவன் என்னை விடுவதற்கு எந்தவிதமான காரணமும் இல்லை என்பது உணர்த்தப்பட்டது. (பின்னை யான் ஒட்டுவேனோ) - "எந்த வகையிலும் நான் இருக்கமாட்டேன்" என்று அவன் கூறினால், நான் அவனது செய்கைக்குச் சம்மதிப்பேனா? நான் கர்மங்களில் வசப்பட்டிருப்பது போன்று, அவன் அடியார்களிடம் வசப்பட்டிருப்பதற்கு ஏதேனும் குறை ஏற்படுமா? அப்படி ஏற்பட்டால் அல்லவோ அவன் அகல்வது? ஆகவே எனது சம்மத்தம் இல்லாமல் உள்ளபோது, அவனால் சுதந்திரமாக என்னை விட்டு அகல இயலுமோ? அல்லது இவ்விதம் ஆன பின்னர் நான் தரிப்பேனோ?

1.7.7 யானொட்டி யென்னுள் இருத்துவ மென்றிலன்
தானொட்டி வந்து என் தனிநெஞ்சை வஞ்சித்து
ஊனொட்டி நின்று என்னுயிரில் கலந்து இயல்
வானொட்டுமோ இனியென்னை நெகிழ்க்கவே?

பொருள் – "நான் ஒப்புக்கொண்டு எனது மனதில் ஸர்வேச்வரனை இருக்கச்செய்வேன்", என்று எண்ணவில்லை. அப்படி அல்லாதபோது தானாகவே வந்து, எனது மனதில் இருப்பேன் என்று ப்ரதிஜ்ஞை செய்தான். இதனால் ஸ்வதந்த்ரமாகத் திரிந்த எனது மனதை நான் அறியாதபடி வசப்படுத்தினான். அதன் அடிப்படையாகவே எனது சரீரத்தில் பொருந்தி நின்றான். பின்னர் எனது ஆத்மாவில் மெதுவாகக் கலந்தான். இதன் மூலம் தனது இருப்பை அடைந்ததாக எண்ணியபடி உள்ள அவன், "நான் அவனை விட்டுச்செல்கிறேன்", என்றால் விடுவானோ?

அவதாரிகை – "குணத்ரயவச்யராய்ப் போந்தீர்; காதாசித்கமாக 'அவனை விடேன்' என்கிறீர்; உம்முடைய வார்த்தையை விச்வஸிக்கப்போமோ?" என்ன; நான் "அவனை விட்டாலும், அவன்தான் என்னை விடான்" என்கிறார்.

விளக்கம் – ஆழ்வாரிடம் ஒரு சிலர், "நீவிர் மூன்று குணங்களுக்கும் அகப்பட்டவராக உள்ளீர்கள். ஒரு காலகட்டத்தில் - அவனை நான் விடமாட்டேன் – என்கிறீர்கள். உம்முடைய சொற்களை நாங்கள் எப்படி நம்புவது?", என்றனர். இதற்கு ஆழ்வார், "நான் அவனை விட்டு அகன்று செல்ல முயன்றாலும், அவன் என்னை விடமாட்டான்", என்கிறார்.

வ்யாக்யானம் - (யான் இத்யாதி) இசைவு என்னாலே வந்ததாகிலன்றோ விடுகையும் என்னாலே வந்ததாவது. "ஆழ்வீர்! நாம் உம்முடைய பாடே இருப்போம்" என்றால், "ஒட்டேன்" என்பரே; "ஆகில் இங்கே இருக்கக் கடவோம்" என்று ப்ரதிஜ்ஞை பண்ணியாயிற்று வந்திருப்பது. நான் இசைந்து "என்னுடைய ஹ்ருதயத்திலே இருக்கவேணும்" என்றிலேன். (தானொட்டி வந்து) "அத்ய மே மரணம் வாபி தரணம் ஸாகரஸ்ய வா" என்று, 'இத்தை முடித்தல் கடத்தல் செய்யுமதுக்கு மேற்பட இல்லை' என்றாப்போல், ப்ரதிஜ்ஞை பண்ணியாயிற்றுப் புகுந்தது.

விளக்கம் – (யான் இத்யாதி) - "அவனை நான் மனதில் நிலை நிறுத்துவேன்" என்னும் இசைவு என்பது என்னில் இருந்து முதலில் வெளிப்பட்டது என்றால் அல்லவோ, அவனை விடல் என்பதும் என் மூலமாகத் தொடங்கும்? இவர் முன்பு ஒப்புக்கொள்ளாமல் இருந்தார் என்றால்தான், அவன் இவரது மனதில் நிலை நிற்பது என்று சபதம் செய்தபடி வரவேண்டும் அல்லவோ? மனதில் வருவதற்கு வழிவிட்ட ஒருவரிடம், "நான் வந்தே தீருவேன்", என்று கூறவேண்டிய அவசியம் இல்லையே! ஆகவே இங்கு ப்ரதிஜ்ஞை செய்தான் என்று கூறப்பட்டதால், தான் முன்பு ஒப்புக்கொள்ளாமல் இருந்ததைக் காண்பிக்கிறார் "ஆழ்வீர்" என்று தொடங்கி. ஸர்வேச்வரன் தனது திருவுள்ளத்தில், "ஆழ்வீர்! நாம் வந்து உம்முடைய மனதில் புகுந்து அங்கேயே இருப்போம் என்று கூறினால் இவர் மாட்டேன் என்று கூறிவிடுவாரே", என்று எண்ணினான். இதனால், "இங்கே இருக்கக் கடவோம்", என்று ப்ரதிஜ்ஞை செய்தபடி வந்தான் என்கிறார். நான் ஒப்புக்கொண்டு, "எனது இதயத்தில் எப்போதும் இருக்கவேண்டும்", என்று கூறவில்லை. (தானொட்டி வந்து) - தானாகவே ஒரு சபதம் செய்தபடி வந்து. இங்கு ப்ரதிஜ்ஞை செய்தமைக்கு ஓர் உதாரணம் காண்பிக்கிறார். இராமாயணம் யுத்தகாண்டம் (21-8) – அத்ய மே மரணம் வாபி தரணம் ஸாகரஸ்ய வா – நான் இப்போது மரணம் அடையவேண்டும் அல்லது இந்த ஸமுத்திரத்தைக் கடக்கவேண்டும் என்று இராமன் ஸங்கல்பம் செய்தான் – என்ற வரிக்கு ஏற்ப, ஆழ்வாரை அடைந்தே தீருவது என்று ஸங்கல்பம் செய்தான் என்று கருத்து.

வ்யாக்யானம் - (என் தனி நெஞ்சை) தன்னாலும் திருத்தவொண்ணாதபடி ஸ்வதந்த்ரமாய், அவிதேயமான நெஞ்சை . (வஞ்சித்து) தன்னுடைய சீலாதி குணங்களாலும் வடிவழகாலும் தனக்கு விதேயமாம்படி பண்ணி. பின்னைச் செய்ததென்? என்னில் – (ஊனொட்டி நின்று என் உயிரில் கலந்து) "சரீரத்தைப் பற்றி நிற்கிற என்னுயிரிலே கலந்து" என்கிறார் என்பாருமுண்டு; அன்றிக்கே, "அபிமத விஷயத்தில் அழுக்கு உகப்பாரைபோலே என்னுடைய சரீரத்தைப் பற்றி நின்று பின்னை என் பக்கலிலே விலக்காமை பெற்றவாறே என் ஆத்மாவோடே வந்து கலந்தான்" என்று ஜீயர் அருளிச்செய்யும்படி. (இயல்வான்) இப்படியை ஸ்வபாவமாக உடையவன் என்னுதல்; இப்படி எதிர் சூழல் புக்கு உத்ஸஹித்தவன் என்னுதல். (ஒட்டுமோ இனி என்னை நெகிழ்க்கவே) இப்படி நிர்ஹேதுகமாக என்னை விஷயீகரித்தவன், நான் தன்பக்கலில் நின்றும் நெகிழ்ந்து போவேன்" என்றால் அவன் இசையுமோ? எனக்கு ஜ்ஞாநம் பிறக்கைக்கு க்ருஷிபண்ணி,

பிறந்த ஜ்ஞாநம் பலிக்குமளவாகக் கொண்டு. நான் அகன்று போவேன் என்றால் அவன் ஸம்வதிக்குமோ?

விளக்கம் – (என் தனி நெஞ்சை) - அவன் தானாகவே வலிய வந்து திருத்த முயன்றாலும், மற்றவர்களுக்கு எளிதில் வசப்பட்டாமல், சுதந்திரமாகத் திரிந்தபடி உள்ள எனது நெஞ்சத்தை. (வஞ்சித்து) - தன்னுடைய சீலம் போன்ற திருக்கல்யாண குணங்களாலும், தனது வடிவழகாலும் வசீகரம் செய்து, தனக்கு வசப்படும்படியாகச் செய்தான். அதன் பின்னர் என்ன செய்தான்? (ஊனொட்டி நின்று என் உயிரில் கலந்து) – "சரீரத்தைத் தாங்கி நிற்பதான எனது உயிருடன் கலந்து", என்று சிலர் பொருள் உரைப்பார்கள். இதற்கு நஞ்ஜீயர், "தனக்குப் பிடித்தமான விஷயங்களில் உள்ள அழுக்கையும் விரும்புவது உண்டு அல்லவோ? இது போன்று அழுக்கான எனது சரீரத்தைப் பற்றி நின்றான்; அப்போது நான் அவனை விலக்கவில்லை; இதனால் என் ஆத்மாவுடன் கலந்தான்", என்பார். (இயல்வான்) - இவ்விதம் செல்வதைத் தனது ஸ்வபாவமாகவே கொண்டுள்ளவன். (ஒட்டுமோ இனி என்னை நெகிழ்க்கவே) - இப்படியாக என்னிடமிருந்து எதனையும் எதிர்பார்க்காமல், தானாகவே வலிய வந்து என்னை எடுத்துக் கொண்டவன்; "அவனிடமிருந்து நான் விலகிச் செல்வேன்", என்று கூறினால் என்னை விட்டுவிடுவானோ? எனக்கு பகவத்ஞானம ஏற்படுவதற்கு முயற்சி செய்தான்; அத்தகைய ஞானம் எனக்குப் பிறந்து, அந்த ஞானம் பலன் அளிக்கத் தொடங்கும்போது, "நான் அகன்று செல்கிறேன்", என்று கூறினால் அவன் சம்மதம் தெரிவிப்பானோ?

1.7.8 என்னை நெகிழ்க்கிலும் என்னுடை நன்நெஞ்சந்
தன்னை அகல்விக்கத் தானும் கில்லான் இனி
பின்னை நெடும்பணைத்தோள் மகிழ்பீடுடை
முன்னையமரர் முழுமுதலானே.

பொருள் - அவனால் அளிக்கப்பட்ட ஞானம் மற்றும் ப்ரேமை ஆகியவற்றை உடையவனாக, அவனைத் தவிர வேறு யாரிடமும் செல்லாதவனாக நான் உள்ளேன். இப்படிப்பட்ட என்னை அவன் பிரிந்தாலும், தன்னால் வஞ்சகமாகக் கவரப்பட்டதான எனது உள்ளத்தைத் தன்னிடம் இருந்து பிரிப்பதற்கு, அனைத்து ஆற்றலும் கொண்டவனாகிய அவனால் இயலாது. எப்படி என்றால் – நப்பின்னை பிராட்டியின் நீண்ட மூங்கில் போன்ற தோள்களால் அணைக்கப்பட்ட மகிழ்ச்சி என்ற மேன்மை

கொண்டவனும், அனைத்திற்கும் பூர்வர்களாக உள்ள நித்யஸூரிகளின் இருப்பு போன்ற அனைத்திற்கும் முதன்மையாக உள்ளவனும் என்பதால் ஆகும்.

அவதாரிகை – "நான் விடேன், அவன் விடான்" என்றாற்போலே சொல்லுகிறதென்? இனி அவன்தான் "பிரிப்பேன்" என்னிலும் தன்னுடைய கல்யாண குணங்களிலே அகப்பட்ட என் நெஞ்சை அவனாலும் பிரிக்கப்போகாது என்கிறார்.

விளக்கம் – "நான் விடமாட்டேன், அவன் விடமாட்டான்" என்று தொடர்ந்து கூறியபடி ஏன் இருக்கவேண்டும்? அவன் தானாகவே "பிரிப்பேன்" என்று முடிவு செய்தால் கூட, அவனுடைய திருக்கல்யாண குணங்களில் ஈடுபட்ட எனது நெஞ்சத்தை, அவனாலும் பிரிக்க இயலாது என்கிறார்.

வ்யாக்யானம் - (என்னை நெகிழ்க்கிலும்) மயர்வற மதிநலமருளப் பெற்ற என்னைத் தானே அகற்ற அரிது; இவ்வரிய செயலைச் செய்யிலும். (என்னுடை நன்னெஞ்சம் தன்னை அகல்விக்க) "நெஞ்சே! இயற்றுவாய் எம்மொடு நீ கூடி" என்றும், "தொழுதெழு என் மனனே" என்றும் சொல்லலாம்படி தன் பக்கலிலே அவகாஹித்த நெஞ்சந்தன்னை அகல்விக்க. (தானும் கில்லான்) ஸர்வசக்தியென்னா, எல்லாஞ்செய்யப்போமோ? என்? செய்து போந்திலனோ இது நெடுங்காலம்? என்ன, (இனி) அவனும் இனிமேலுள்ள காலம் மாட்டான். "இனி" என்கிற உரப்பு எத்தைப் பற்ற? என்னில், அத்தைச் சொல்லுகிறது மேல். (பின்னை இத்யாதி) நப்பின்னைப்பிராட்டி புருஷகாரமாக, நித்யஸூரிகள் ஓலக்கமிருக்க அடிமைபுக்கு அந்த:புர பரிகரமான வஸ்துவை அகற்றப்போமோ? நப்பின்னை பிராட்டியுடைய நெடிதாய்ச் சுற்றுடைத்தாய்ப் பசுமையையுடைத்தான மூங்கில் போலேயிருக்கிற தோளோடே அணைகையால் வந்த பெருமையையுடையனாய், "யத்ரர்ஷய: ப்ரதமஜா யே புராணா:" என்கிறபடியே பழையராயிருந்துள்ள நித்யஸூரிகளுடைய ஸ்வரூப ஸ்திதியாதிகள் தன் அதீநமாம்படியிருக்கிறவன், தானும் கில்லான். "ஹர்யருக்ஷகண ஸந்நிதௌ" என்கிறபடியே அவர்கள் ஸந்நிதியிலே ப்ரதிஜ்ஞை பண்ணிற்று; நப்பின்னைப் பிராட்டி புருஷகாரம் எங்ஙனே அகற்றும்படி?

விளக்கம் - (என்னை நெகிழ்க்கிலும்) - அவனால் மயர்வற மதிநலம் அருளப் பெற்ற என்னை, தானாகவே அவனால் அகற்ற இயலாது. பெரிய திருவந்தாதி (1) - நெஞ்சே!

இயற்றுவாய் எம்மொடு நீ கூடி – என்றும், திருவாய்மொழி (1-1-1) - தொழுதெழு என் மனனே – என்றும் கூறுவதற்கு ஏற்ப, அவனுடைய பக்கம் உள்ளே புகுந்து நிற்கின்ற எனது மனதை அகலும்படிச் செய்வதற்கு. (தானும் கில்லான்) - "அவன் அனைத்து சக்தியும் கொண்டவன் ஆயிற்றே, அவனால் இதனைச் செய்துவிட இயலாதோ", என்று சிலர் கேட்டனர். இதற்கு ஆழ்வார், "அனைத்து சக்தியும் கொண்டவனாக இருந்தால் மட்டும் என்ன? இதனை அவனால் செய்து விட இயலுமோ?", என்றார். இதற்கு அவர்கள், "அவன்தான் இத்தனை காலம் செய்தானே! உம்மை இப்படி ஸம்ஸாரத்தில் வைத்தான் அல்லவா?", என்றனர். இதற்கு ஆழ்வார் விடை அளிக்கிறார். (இனி) - இனிமேல் வரப்போகும் காலங்களில் அவ்விதம் செய்யமாட்டான். இனிச் செய்யமாட்டான் என்ற உறுதியான எண்ணம் எவ்விதம் ஏற்பட்டது? இதற்கு விடை அளிக்கிறார். (பின்னை இத்யாதி) – நப்பின்னைப் பிராட்டியைப் புருஷகாரமாக நான் பற்றியுள்ளேன். நித்யஸூரிகளின் சபையில் அவன் வீற்றுள்ளபோது, அவனுடைய அந்தரங்கக் கைங்கர்யம் செய்கின்ற வஸ்துவான என்னை அகற்ற இயலுமோ? நப்பின்னைப் பிராட்டியின் நீண்டதாகவும், அகன்றதாகவும், பசுமையான மூங்கில் போன்றதாகவும் உள்ள திருத்தோள்களை அணைப்பதால் இவனுக்கு மிகுந்த பெருமை ஏற்படுகிறது. யஜுர்வேதம் – யத்ரர்ஷய: ப்ரதமஜா யே புராணா: - ஞானம் கொண்டவர்களும், முன்னரே தோன்றியவர்களும் ஆகிய நித்யஸூரிகள் எங்கு உள்ளனரோ, அத்தகைய பரமபதத்தில் – என்பதற்கு ஏற்ப மிகவும் பழையராக இருக்கின்ற நித்யஸூரிகளின் ஸ்வரூபம் மற்றும் இருப்பு போன்றவற்றைத் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளவன் – இப்படிப்பட்டவனாக உள்ள அவனாலும் இயலாது என்று கருத்து. இராமாயணம் ஸுந்தரகாண்டம் (11-32) - ஹர்யருக்ஷகண ஸந்நிதௌ - பழைமையான வானர வீரர்களின் நடுவே நின்று சபதம் செய்தான் – என்று கூறுவது போன்று, நித்யஸூரிகளின் நடுவே இருந்தபடி இவன் சபதம் செய்துள்ளான். இப்படி உள்ளபோது நப்பின்னைப் பிராட்டியின் புருஷகாரம் எவ்விதம் என்னை அகற்றும் என்றும் பொருள் உரைக்கலாம்.

1.7.9 அமரர் முழுமுதல் ஆகியவாதியை
அமரர்க்கமுதீந்த ஆயர்கொழுந்தை
அமர வழும்பத் துழாவியென்னாவி
அமரத் தழுவிற்று இனியகலுமோ

பொருள் – நித்யஸூரிகளின் ஸ்வரூபம், இருப்பு மற்றும் செயல்பாடுகள் போன்ற அனைத்திற்கும் காரணமாக உள்ள தலைவனை, அமரர்கள் விரும்பிய அமிர்தத்தை அவர்களுக்கு அளித்தவனை, தன்னுடன் உறவு கொண்டிருந்த ஆயர்களின் நாயகனை எனது ஆத்மாவானது மிகவும் நெருக்கமாகச் சென்று, இனி யாராலும் பிரிக்க இயலாது என்று உள்ளபடியாக மகிழ்வுடன் கலந்தது. இனி பிரிவதற்கு விதி ஏதும் உண்டோ?

அவதாரிகை - "தானும் கில்லான்" என்கிற ப்ரஸங்கந்தான் என்? ஏகத்ரவ்யம் என்னலாம்படியான இத்தை எங்ஙனே பிரிக்கும்படி? என்கிறார்.

விளக்கம் - கடந்த பாசுரத்தில், "தானும் கில்லான்" என்று உறுதியாக உரைத்தமைக்கு என்ன காரணம்? அவனும் இந்த ஆத்மாவும் "ஒரே பொருள்" என்று கூறலாம்படியாகக் கலந்து நின்றபின் எவ்விதம் பிரிப்பது என்கிறார்.

வ்யாக்யானம் - (அமரர்முழுமுதலாகிய) நித்யஸூரிகளுடைய ஸ்வரூப ஸ்திதியாதிகள் தன் அதீநமாம்படி இருக்கிறவனை. (ஆதியை) இது தொடங்கி லீலாவிபூதி விஷயமாயிருக்கிறது. தன்பக்கல் பாவபந்தம் ஸத்தாப்ரயுக்தமன்றிக்கே இருக்கிறவர்களுக்கும் தன்னை வழிபடுகைக்கு உறுப்பாகக் கரணகளேபரங்களைக் கொடுக்குமவனை. (அமரர்க்கு அமுது ஈந்த) அவன் கொடுத்த கரணங்களைக் கொண்டு, "எங்களுக்கு நீ வேண்டா, உப்புச்சாறு அமையும்" என்பார்க்குக் கடலைக் கடைந்து அம்ருதத்தைக் கொடுக்குமவனை. (ஆயர்கொழுந்தை) "அவ்வம்ருதம் வேண்டா, நீ அமையும்" என்பார்க்காக வந்து அவதரித்துத் தன்னைக் கொடுக்குமவனை.

விளக்கம் - (அமரர்முழுமுதலாகிய) - நித்யஸூரிகளின் ஸ்வரூபம், இருப்பு போன்ற அனைத்தும் தனது கட்டுப்பாட்டில் உள்ளதாகச் செய்கிறவனை. (ஆதியை) – இதுவரை நித்யவிபூதி விஷயமாக உரைத்து வந்தார். இனி லீலாவிபூதி விஷயமாக உரைக்கத் தொடங்குகிறார். தன்னுடனான ஸம்பந்தத்தை எப்போதும் கொண்டுள்ள ஆத்மாவைப் பிரிக்க இயலாது என்று அறியாமல் உள்ள இந்த உலகினருக்கு, தன்னை ஆராதிப்பதற்கு ஏற்றதான உடல் உறுப்புகளை அளிப்பான். (அமரர்க்கு அமுது ஈந்த) - அவன் அளித்த சரீரம் போன்றவற்றை வைத்துக்கொண்டு, "எங்களுக்கு நீ வேண்டாம், அமிர்தம் மட்டுமே போதுமானது" என்று கூறுபவர்களுக்குக் கடலைக் கடைந்து அமிர்தத்தை அளிப்பவன்;

(ஆயர்கொழுந்தை) - அப்படிப்பட்ட அமிர்தம் ஏதும் வேண்டாம். நீ மட்டுமே எங்களுக்குப் போதும் என்று உள்ளவர்களுக்காக, அவர்கள் நடுவே அவதரித்தவன்; இப்படியாகத் தன்னையே கொடுப்பவன்.

வ்யாக்யானம் - (அமர இத்யாதி) இப்படி உபயவிபூதியுக்தனாயிருக்கிறவனைக் கிட்டிச் செறிந்து எங்கும் புக்கு அநுபவித்து, என்னுடைய ஆத்மாவானது ஏகத்ரவ்யம் என்னலாம்படி கலந்தது. (இனி அகலுமோ) இரண்டு வஸ்துவாகிலன்றோ பிரிக்கலாவது; ப்ரகாரப்ரகாரிகளுக்கு ஏகத்வபுத்தி பிறந்தால் பிரிக்கப்போமோ? ஜாதிகுணங்களோபாதி த்ரவ்யமானதுக்கும் நித்யததாச்ரயத்வம் உண்டாகில் பிரிக்கப்போமோ?

விளக்கம் - (அமர இத்யாதி) - இப்படியாக உபயவிபூதிகளைக் கொண்டவனை அண்டிச் சென்ற எனது ஆத்மாவானது, அவனை முற்றிலுமாக அனுபவித்து, அவனும் எனது ஆத்மாவும் ஒரே பொருள் என்று கூறலாம்படியாகக் கலந்து நின்றது. (இனி அகலுமோ) – இரண்டு பொருள்கள் தனித்தனியே காணப்பட்டால் அல்லவோ பிரிக்க இயலும்? ஜாதி, குணங்கள் போன்று இருந்தால் பிரிக்க இயலாது; ஆனால் உயிரையும் சரீரத்தையும் பிரிக்க இயலாது என்று கூறுவது போன்று உரைப்பது சரியா என்று கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார். ஜாதி மற்றும் குணங்கள் போன்று ஆத்மாவுக்கும் இயல்பாகவே உள்ள சேஷசேஷி ஞானம் காரணமாக ஏற்படும் கைங்கர்ய அனுபவங்கள் என்பது நீங்கிய பின்னர் தரித்திருத்தல் என்பது கூடாது அல்லவோ, ஆகவே பிரிக்க இயலாது என்கிறார்.

1-7-10. அகலில் அகலும் அணுகிலணுகும்
புகலு மரியன் பொருவல்ல னெம்மான்
நிகரி லவன்புகழ் பாடி இளைப்பிலம்
பகலுமிரவும் படிந்து குடைந்தே.

பொருள் - அவனைத் தவிர மற்ற பயன்களில் ஈடுபட்டு அவனைவிட்டு அகன்று செல்ல முயன்றால், செய்வது அறியாமல் தானும் நம்மை விட்டுச் சென்று விடுகிறான். எந்தப் பலனும் எதிர்பாராமல் அவனை மட்டுமே பலனாகக் கொண்டு அவனை அண்டி நின்றால், அவர்களுடன் நீர் போன்று கலந்து நிற்கிறான். மற்றவர்களுடைய வசப்பட்டவர்களுக்கு அரிதாக உள்ளவனாய், அவனைத் தவிர்த்து யாருக்கும் வசப்படாமல் உள்ளவர்களால் தடையில்லாமல் அணுகக் கூடியவனாக உள்ளான். இப்படிப்பட்ட சில குணங்களால்

எனக்கு ஸ்வாமியாக, இது போன்று வேறு யாரும் இல்லாதபடி ஒப்பற்றவனாக இருக்கின்ற அவனது புகழை, பகலும் இரவும் என எப்போதும் விடாமல் உள்ளே புகுந்து, எங்கும் கலந்து பாடி ஓய்வின்றி இருப்போமாக.

அவதாரிகை – என்னோடு கலந்த எம்பெருமானுடைய குணங்களைக் கால தத்வமுள்ளதனையும் அனுபவியாநின்றாலும் த்ருப்தனாகிறிலேன் என்கிறார்.

விளக்கம் – என்னுடன் கலந்து நிற்கின்ற ஸர்வேச்வரனின் திருக்கல்யாண குணங்களை, காலம் என்னும் தத்துவம் உள்ளவரை நான் அனுபவித்தபடி இருப்பேன். அப்படி இருந்தாலும் மனநிறைவு கொள்ளாதவனாகவே இருப்பேன் என்கிறார்.

வ்யாக்யானம் – (அகலில் அகலும்) இவன் அகன்றபடியே நிற்கில், "யதி வா ராவண: ஸ்வயம்" என்கிற சாபலமும் கிடக்கச்செய்தே கண்ணநீரோடே கைவாங்கும். "த்விதா பஜ்யேயமப்யேவம் ந நமேயம்" என்னும் நிர்ப்பந்தத்தோடே நிற்கில் முடித்தேவிடும். (அணுகில் அணுகும்) தன் பக்கலிலே ஆபிமுக்கியம் பண்ணினால், "ஆக்யாஹி மம தத்த்வேந" என்னும்; இளையபெருமாள் நிற்க, நாலடி வர நின்றவனையிறே "ராஜகார்யம் செய்யும்படி சொல்லீரோ" என்றது; "ராக்ஷஸாநாம் பலாபலம்" இவனை ராக்ஷஸ ஜாதீயனாக நினைக்கையின்றிக்கே, இக்ஷ்வாகு வம்ச்யனாகவே புத்திபண்ணி, "ராக்ஷஸருடைய பலாபலம் சொல்லீரோ" என்றாரிறே. இத்திருவாய்மொழியில் முதற்பாட்டு – "அகலில் அகலும்" என்கிறவிடம் சொல்லிற்று. இரண்டாம்பாட்டு – "அணுகில் அணுகும்" என்கிறவிடம் சொல்லிற்று.

விளக்கம் – (அகலில் அகலும்) - இராமாயணம் யுத்தகாண்டம் (18-34) – யதி வா ராவண: ஸ்வயம் - இராவணனே ஆனாலும் அழைத்து வா - என்று கூறும்படியான ஆசை ஸர்வேச்வரனுக்குத் தன்னை விட்டு அகன்று செல்லும் ஒருவன் மீது உண்டு. இவனை விட்டு ஒருவன் அகன்றபடி உள்ளான் என்று வைத்துக்கொள்வோம். அப்போது, இவனும் அவனை விட்டு தனது திருவுள்ளத்தில் ஆழ்ந்த கனத்துடன் விலகுகிறான். ஆனால் இராமாயணம் யுத்தகாண்டம் (36-11) – த்விதா பஜ்யேயமப்யேவம் ந நமேயம் - இரண்டு துண்டுகளாக வெட்டப்பட்டாலும் இராமனை வணங்கமாட்டேன் – என்பது போன்று ஒருவன் உறுதியுடன் நின்றால், அவனை முடித்தேவிடுகிறான். "இவன் அகன்றபடியே நிற்கும்" என்பதற்கு வேறு ஒரு பொருளும் உரைக்கலாம். தன்னை ஒருவன் அண்டி நின்ற

பிறகும் மற்ற பலன்களை எதிர்பார்த்தான் என்றால், அந்தப் பலன்களை அளித்துவிட்டு, "மற்ற பலன்களை எதிர்பாராமல் நம்மிடம் வரும் ஒருவனை நாம் பெறவில்லையே" என்று வருத்தம் கொண்டு பின்வாங்குகிறான் என்றும் உரைக்கலாம். (அணுகில் அணுகும்) - தன்னுடைய பக்கம் ஒருவன் ஆராதித்து நின்றால், அவனிடம் இரமாயணம் யுத்தகாண்டம் (19-6) – ஆக்யாஹி மம தத்த்வேந – அரக்கர்களின் பலம், பலவீனம் குறித்து எனக்கு உள்ளது உள்ளபடி உரைப்பாய் - என்று கேட்பான். லக்ஷ்மணன் அருகில் நிற்கும்போது, தன்னை நோக்கி நான்கு அடி வந்த விபீஷணனிடம் அல்லவோ, "நம்முடைய செயல் முடியும்படி உரைப்பாய்", என்றான்? விபீஷணனை ராக்ஷஸன் என்று எண்ணாமல் இக்ஷ்வாகு குலத்தில் வந்தவனாகவே எண்ணி, "ராக்ஷஸர்களின் பலம் பலவீனம் பற்றி உரைப்பாய்", என்றான். இந்தத் திருவாய்மொழியின் முதற்பாசுரத்தில் - அகலில் அகலும் - என்பது உரைக்கப்பட்டது. இந்தத் திருவாய்மொழியின் இரண்டாம் பாசுரத்தில் – அணுகில் அணுகும் - என்பது உரைக்கப்பட்டது.

வ்யாக்யானம் - (புகலும் அரியன்) அர்ஜுநனும் துர்யோதநனும் கூடவரச்செய்தே, அர்ஜுநனுக்குத் தன்னைக் கொடுத்து, துர்யோதநனுக்குத் தன்னையொழிந்த பங்களத்தைக் கொடுத்து விட்டானிறே. உகவாதார்க்குக் கிட்ட அரியனாயிருக்கும். (பொருவல்லன்) ஆச்ரிதர் தன்னைக் கிட்டுமிடத்தில் தடை உடையனல்லன். "யத்ர க்ருஷ்ணௌ ச க்ருஷ்ணா ச ஸத்யபாமா ச பாமிநீ" புத்ரர்களுக்கும் புகவொண்ணாத ஸமயத்திலேயிறே ஸஞ்ஜயனை அழைத்துக் காட்சி கொடுத்தது. பொரு என்று ஒப்பாய், ஒப்பாவது நேர் நிற்குமதாய், அத்தால் தடையைச் சொல்லிற்றாய், தடை உடையனல்லன் என்கை. (எம்மான்) இஸ்ஸ்வபாவங்களைக் காட்டி என்னை அநந்யார்ஹனாக்கினவன். (நிகரிலவன் புகழ் பாடியிளைப்பிலம்) அவனுடைய ஒப்பில்லாத கல்யாண குணங்களைப் பாடி, ஒரு காலமும் விச்சேதிக்க க்ஷமனாகிறிலேன். இப்படி விடுகைக்கு க்ஷமனன்றிக்கே யொழிகிறது காலம் ஸாவதியாயோ? என்னில், (பகலும் இரவும்) ஸர்வகாலமும். ஆனால் விஷயத்தைக் குறைய அநுபவித்தோ? என்னில் (படிந்து குடைந்தே) எங்கும் கிட்டி அநுபவியா நிற்கச் செய்தே விடமாட்டுகிறிலேன்.

விளக்கம் - (புகலும் அரியன்) - தன்னிடம் ப்ரியமானவர்களிடம் தானும் ப்ரியமாக உள்ளதும், ப்ரியம் அற்றவர்களுக்கு அரியவனாக உள்ளதும் ஆகிய அதிசயத்தை உதாரணம் மூலம் காண்பிக்கிறார். அர்ஜுனனும் துரியோதனனும் ஒன்றாகவே

க்ருஷ்ணனைக் காண வந்தனர். அப்போது அர்ஜுனனுக்குத் தன்னையே கொடுத்து, துரியோதனுக்குச் சக்கை போன்ற தனது கூட்டத்தை அளித்தான் அல்லவோ? உகவாதவர்களுக்குக் கிட்ட இயலாதபடி அரியவனாகவே உள்ளான். (பொருவல்லன்) – அடியார்கள் தன்னை அண்டுவதற்கு எந்தவிதமான தடையும் இல்லாதவன். மஹாபாரதம் உத்யோகபர்வம் - யத்ர க்ருஷ்ணௌ ச க்ருஷ்ணா ச ஸத்யபாமா ச பாமிநீ - எந்த இடத்தில் க்ருஷ்ணனும், அர்ஜுனனும், திரௌபதியும், ஸத்யபாமாவும் உள்ளார்களோ அந்த இடத்தில் – புத்திரர்களாலும் புக இயலாதபடி உள்ள நேரத்தில் அல்லவோ ஸஞ்ஜயனை அழைத்துத் தன்னைக் காண்பித்தான்? பொரு என்றால் ஒப்பு, ஒப்பு என்றால் நேரே நிற்பதாக; இதன் மூலம் தடையை உரைத்து, அந்தத் தடையை உடையவன் அல்லன் என்கிறார். (எம்மான்) – இப்படிப்பட்ட தன்னுடைய ஸ்வபாவங்கள் பலவற்றை எனக்குக் காண்பித்து, "அவனை விட்டால் எனக்கு வேறு கதியில்லை" என்று உரைக்கும்படியாக ஆக்கினான். (நிகரிலவன் புகழ் பாடியிளைப்பிலம்) - அவனுடைய ஒப்பற்ற திருக்கல்யாண குணங்களைப் பாடி, ஒருபோதும் அவனைப் பிரிந்து நிற்கப் பொறுமை அற்றவன் ஆகிறேன். இளைப்பிலம் என்றால் திருப்தி அடையமாட்டோம் என்று பொருள். இது போன்று அனைத்து காலங்களிலும் இருப்பீரோ? இதற்கு விடை அருளிச்செய்கிறார். (பகலும் இரவும்) – அனைத்து காலங்களிலும் இருப்பேன். சரி, ஆனால் இந்த விஷயத்தைக் குறைய அனுபவிப்பீர்களோ என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார். (படிந்து குடைந்தே) – படிந்து என்றால் உட்புகுந்து அனுபவித்தல். எங்கும் புகுந்து இந்த விஷயத்தை அனுபவித்தபோது விடமாட்டேன் என்கிறார். பாசுரத்தில் உள்ள பதங்களை - அகலில் அகலும் அணுகில் அணுகும் புகலும் அரியன் பொருவல்லன் எம்மானானவனுடைய நிகரில் புகழைப் பகலும் இரவும் படிந்து குடைந்து பாடி இளைப்பிலம் - என்று வரிசைப்படுத்திப் பொருள் கொள்ளவேண்டும்.

1-7-11. குடைந்து வண்டுண்ணும் துழாய் முடியானை
அடைந்து தென்குருகூர்ச் சடகோபன்
மிடைந்த சொல்தொடை ஆயிரத்திப்பத்து
உடைந்து நோய்களை ஓடுவிக்குமே.

பொருள் - வண்டுகள் உள்ளே புகுந்து மதுவைப் பருகும்படியான துளசி மாலையை முடியிலே கொண்ட ஸர்வேச்வரனைக் குறித்து, அனைத்துவிதங்களிலும் பற்றி நின்ற தாராளமனம் கொண்டவரான ஆழ்வாரின், நெருக்கமான சொற்களின் தொடைகளைக்

கொண்ட ஆயிரம் பாசுரங்களில் இந்தப் பத்துப் பாசுரங்கள், அஹங்காரம் போன்ற பல நோய்களை நிலைகெட்டு ஓடும்படிச் செய்யவல்லவதாகும்.

அவதாரிகை – நிகமத்தில், இத்திருவாய்மொழி தானே இது கற்றவர்களுடைய ப்ராப்தி ப்ரதிபந்தகங்களை உந்மூலிதமாக்கும் என்கிறார்.

விளக்கம் – இறுதியாக இந்தத் திருவாய்மொழியானது தன்னைக் கற்றவர்களின் பலத்திற்குத் தடையாக உள்ள அனைத்தையும் தானே வேருடன் அழிக்கவல்லதாகும் என்கிறார்.

வ்யாக்யானம் – (குடைந்து இத்யாதி) மதுபாநம் பண்ண இழிந்த வண்டுகளானவை பெருங்கடலிலே இழிந்தாரைப்போலே உள்ளே உள்ளே இடங்கொண்டு புஜியா நிற்குமத்தனை போக்கி, மது வற்றிக் கைவாங்க ஒண்ணாதபடியிருக்கிற திருத்துழாய் மாலையாலே அலங்க்ருதமாயிருக்கிற திருவபிஷேகத்தையுடையவனைக் கவிபாடிற்று. (அடைந்த தென்குருகூர்ச் சடகோபன்) அம்மதுவிலே படிந்த வண்டுகள் விடமாட்டாதாப் போலே, பகவத்விஷயத்தை விடமாட்டாத ஆழ்வாராயிற்று அருளிச்செய்தார். (மிடைந்த சொற்றொடை) அநுபவ ஜநித ப்ரீதியாலே பிறந்தவையாயிருக்கச் செய்தேயும், சொற்கள்தான் "நாம் இங்குத்தைக்குக் கிஞ்சித்கரித்தோமாக வேணும்" என்று, "என்னைக் கொள், என்னைக் கொள்" என்று மேல்விழுந்தன. ஆயிரத்திலும் வைத்துக் கொண்டு இப்பத்தையும் அப்யஸிக்க வல்லவர்களுக்கு, ஐச்வர்ய கைவல்யங்கள் புருஷார்த்தம் என்கைக்கு அடியான பாபங்கள் ஓடிப்போம். (நோய்களை உடைந்தோடுவிக்கும்) இவனை விட்டுப் போம்போதும் திரளப் போகப்பெறாது. "வள்ளலே! உன் தமர்க்கென்றும் நமந்தமர் கள்ளர்போல்" என்கிறபடியே இருவர் ஒருவழி போகப்பெறார்கள். இப்பாபங்கள் ஆச்ரயாந்தரத்தில் கிடந்தாலும் மறுமுட்டுப்பெறாதபடி உடைந்தோடும்.

விளக்கம் - (குடைந்து இத்யாதி) – மதுவைப் பருகும் எண்ணத்துடன் வந்த வண்டுகள் பெரிய மதுக்கடலில் விழுந்தது போன்று உள்ளே உள்ளே சென்று, மதுவைப் பருகியபடி நிற்கும். எங்கு? எத்தனை பருகினாலும் வற்றாதபடி இருக்கிற திருத்துழாய் மாலையில் ஆகும். இப்படிப்பட்ட திருத்துழாய் மாலையால் அலங்கரிக்கப்பட்ட திருமுடியைக் கொண்டவனைக் குறித்துப் பாடியது. (அடைந்த தென்குருகூர்ச் சடகோபன்) – அந்த மதுவைப் பருகத் தொடங்கிய வண்டுகள் திருத்துழாயை விடாமல் உள்ளது போன்று பகவத்விஷயத்தை விடாமல் உள்ள ஆழ்வாரால் அருளிச்செய்யப்பட்டது. (மிடைந்த

சொற்றொடை) - மிடைகை என்றால் மீண்டும் மேன்மேலே நெருங்குதல் என்று பொருள். இவர் பாசுரத்தில் அமைக்கும் சொற்கள் அனைத்தும் பகவத் ப்ரேமை காரணமாக உண்டான அன்பினால் வெளிப்பட்டவை என்றபோதிலும் அவை இவரிடம், "நம்மை இந்த இடத்தில் இட்டு, சொற்களான நாங்களும் கைங்கர்யம் செய்தபடி எங்களை ஆக்கவேண்டும், என்னை இடவேண்டும், என்னை இடவேண்டும்", என்று ஒவ்வொரு பதமும் போட்டியிட்டபடி வந்தன என்று கருத்து. ஆயிரம் பாசுரங்களில், இந்தப் பத்துப் பாசுரத்தைப் பொருள் உணர்ந்து கற்கவல்லர்களுக்கு, செல்வம் – கைங்கர்யம் - தாழ்ந்த புருஷார்த்தம் என்பவைகளுக்கு அடிப்படையாக உள்ள பாவங்கள், அதாவது தாழ்ந்த புருஷார்த்தங்கள் மீது கொண்டுள்ள ஆசை ஓடிவிடும். (நோய்களை உடைந்தோடுவிக்கும்) – அவை இவனை விட்டுச் செல்லும்போது கூட்டமாகப் போகாமல், "படை உடைந்தது, ஒருவன் உடைத்தான்" என்ற வசனத்திற்கு ஏற்றபடியும், பெரியதிருமொழி (8-10-7) - வள்ளலே! உன் தமர்க்கென்றும் நமந்தமர் கள்ளர்போல் – தாராள மனம் கொண்ட பெருமாளே! உனது அடியார்களைக் கண்டால் யமனின் தூதர்கள் கிட்டாமல் இருப்பதே உனது தாராள குணத்தின் வெள்ளமோ - என்பதற்கு ஏற்ப இருவரும் ஒரே வழியில் செல்ல முடியாதபடி இருத்தல். அதாவது இந்தப் பாவங்கள், இவன் ஸர்வேச்வரனை அண்டி நின்ற பின்னரும் தொடர்ந்து இருந்தாலும், அவை ஒன்றுக்கும் உதவாதபடி சிறுசிறு துகள்களாகவே கிடக்கும் என்று கருத்து.

வ்யாக்யானம் – முதற்பாட்டில், கேவலரை நிந்தித்தார்; இரண்டாம் பாட்டில், அநந்ய ப்ரயோஜநர் திறத்திலிருக்குபடியைச் சொன்னார்; மூன்றாம் பாட்டில், இவ்விரண்டு கோடியிலும் நீர் ஆர்? என்ன, "உன்னை அநுபவியா நிற்க விரோதி கழிந்தவன் நான்" என்கிறார்; நாலாம் பாட்டில் "என்னை இவ்வளவாகப் புகுர நிறுத்தினவனை என்ன ஹேதுவாலே விடுவது" என்கிறார்; அஞ்சாம் பாட்டில், திருவாய்ப்பாடியில் பெண்கள் க்ருஷ்ணனை விடுமன்றன்றோ நான் அவனை விடுவது" என்றார்; ஆறாம் பாட்டில், "அவன்தான் விடிலோ" என்ன, "அவன் போக்கை இசையேன்" என்றார்; ஏழாம் பாட்டில், "நீர்தாம் விடிலோ?" என்ன, "அவன் என்னைப் போகவொட்டான்", என்றார்; எட்டாம் பாட்டில், "இந்நாள்வரை போகவிட்டிலனோ?" என்ன, "நப்பின்னைப்பிராட்டி புருஷகாரமாகப் பற்றின என்னை இனி அவனாலும் விடவொண்ணாது" என்றார்; ஒன்பதாம் பாட்டில், "இப்ரஸங்கந்தான் என்? ஒரு நீராகக் கலந்ததை ஒருவராலும் பிரிக்க வொண்ணது", என்கிறார்; பத்தாம் பாட்டில், "அவனுடைய கல்யாண குணங்களை ஸர்வ

காலமும் அநுபவித்து ச்ரமமுடையேன் அல்லேன்" என்றார்; இத்திருவாய்மொழியை அப்யஸித்தார்க்குப் பலஞ்சொல்லித் தலைக்கட்டினார்.

விளக்கம் - முதல் பாசுரத்தில் கேவலர்களை நிந்தித்தார். இரண்டாம் பாசுரத்தில் மற்ற பயன் கருதாமல் உள்ளவர்களிடம் அவன் இருக்கும் விதத்தை உரைத்தார். மூன்றாம் பாசுரத்தில், "இந்த இரண்டுவிதமான மனிதர்களில் நீவிர் யார்", என்ற கேள்விக்கு, "உன்னை அனுபவித்து நிற்க எனது விரோதிகள் கழியப் பெற்றவன்", என்றார். நான்காம் பாசுரத்தில், "என்னை இந்த அளவு செய்தவனை என்ன காரணம் காண்பித்து அகலுவேன்", என்றார். ஐந்தாம் பாசுரத்தில், "திருவாய்ப்பாடியில் உள்ள இடைப்பெண்கள் க்ருஷ்ணனை விடத்துணிந்தால் அல்லவோ நான் ஸர்வேச்வரனை விடத் துணிவேன்", என்றார். ஆறாம் பாசுரத்தில், "அவன் உம்மை விட்டால் என்ன செய்வீர்", என்பதற்கு, "அவன் போக்கை இசையமாட்டேன்", என்றார். ஏழாம் பாசுரத்தில், "நீர் அவனை விட்டால் என்ன செய்வீர்", என்று கேட்க, "அவன் என்னைப் போகவிட மாட்டான்", என்றார். எட்டாம் பாசுரத்தில், "இதுநாள்வரை ஸம்ஸாரத்தில் போக விட்டானே", என்பதற்கு, "நப்பின்னைப்பிராட்டியைப் புருஷகாரமாகப் பற்றிய என்னை அவனாலும் கைவிட இயலாது", என்றார். ஒன்பதாம் பாசுரத்தில், "இத்தனை பேச்சு எதற்கு? ஒரே நீராகக் கலந்த பொருள்களை யாராலும் பிரிக்க இயலாது", என்றார். பத்தாம் பாசுரத்தில், "அவனது திருக்கல்யாண குணங்களை அனைத்து காலங்களிலும் அனுபவித்தபடி இருந்து வருத்தம் உடையவன் என்றே ஆகமாட்டேன்", என்றார். இந்தத் திருவாய்மொழியைக் கற்பவர்களுக்கு ஏற்படக்கூடிய பலனை உரைத்து, நிறைவு செய்கிறார்.

திருவாய்மொழி முதற்பத்து ஏழாம் திருவாய்மொழி ஸம்பூர்ணம்

முதற்பத்து எட்டாம் திருவாய்மொழி
ஓடும்புள் ப்ரவேசம்

வ்யாக்யானம் - கீழில் திருவாய்மொழியிலே நிரதிசய போக்யனென்றார். இதில் அவனுடைய ஆர்ஜவகுணம் சொல்லுகிறார். ஸௌலப்யமாவதென்? ஸௌசீல்யமாவதென்? ஆர்ஜவமாவதென்? என்னில்: ஸௌலப்யமாவது ஸ்ரீவைகுண்டம்

கலவிருக்கையாக உடையவன், அங்கு நின்றும் ஸம்ஸாரி சேதநர் நின்ற இடத்தே வந்து அவதரித்து எளியனாகை. ஸௌசீல்யமாவது - இப்படித் தாழவிட்டால், "சிறியாரளவில் நம்மைத் தாழவிட்டோமே" என்று தன் திருவுள்ளத்திலும் இன்றிக்கேயிருக்கை. இனி ஆர்ஜவ குணமாவது - இப்படி பொருந்தினால், நினைவும் சொலவும் செயலும் ஒருபடிப்பட்டிராதே பலவகைபட்ட சேதநரோடு தான் பரிமாறுமிடத்தில், அவர்கள் போன வழி தனக்கு வழியம்படி, தான் அவர்களுக்குச் செவ்வியனாய்ப் பரிமாறுகை. "குணவாந்" என்று ஸௌசீல்ய குணத்தைச் சொல்லாநிற்கச் செய்தாரிறே. "ருஜு:" என்று ஆர்ஜவ குணத்தைப் பிரிய அருளிச்செய்தாரிறே. "இத்திருவாய்மொழிதான் ஸர்வேச்வரனுடைய ஐச்வர்யத்தைச் சொல்லுகிறது" என்பாருமுண்டு; அன்றிக்கே, ஈச்வரத்வ லக்ஷணம் சொல்லுகிறது" என்பாருமுண்டு. அன்றிக்கே, "கீழே, 'பாடியிளைப்பிலம்' என்றார்; அப்படியே பாடி அநுபவிக்கிறார்" என்பாரும் உண்டு. "ஆர்ஜவகுணம் சொல்லுகிறது" என்று பட்டர் அருளிச்செய்யும்படி. "பத்தர், முக்தர், நித்யர்" என்று சேதநர்க்கு ஒரு த்ரைவித்யம் உண்டிறே. த்ரிவித சேதநரோடும் பரிமாறுமிடத்தில், அவர்கள் தன் நினைவிலே வரும்படி பண்ணுகையன்றிக்கே, நீரேறா மேடுகளிலே விரகாலே நீர் ஏற்றுவாரைப் போலே தன்னை அவர்களுக்கு ஈடாக அமைத்துப் பரிமாறும் என்னும் அவ்வழியாலே இவனுடைய ஆர்ஜவ குணம் சொல்லுகிறார்.

விளக்கம் - கடந்த திருவாய்மொழியில் ஸர்வேச்வரன் எல்லையற்ற இன்பம் கொண்டவன் என்றார். இந்தத் திருவாய்மொழியில் அவனுடைய ஆர்ஜவ குணத்தை உரைக்கிறார். ஆர்ஜவம் என்றால் எண்ணுவது, உரைப்பது, செய்வது என்ற மூன்றும் வெவ்வேறாக முரண்பட்டபடி இல்லாமல், மூன்றும் ஒன்றுக்கொன்று பொருந்தி, ஒரே போன்று இருப்பதாகும். இதனை (1-8-1) - புள்ளேறி ஓடும், (1-8-1) - தண்துழாய் சூடும், (1-8-11) – நீர் புரைவண்ணன் – போன்றவற்றைத் திருவுள்ளத்தில் கொண்டு உரைக்கிறார். ஸௌலப்யம், ஸௌசீல்யம், ஆர்ஜவம் என்பவை என்ன? "பத்துடை அடியவர்" திருவாய்மொழியில் ஸௌலப்யம், வளவேழுலகு என்பதில் ஸௌசீல்யம் உரைத்தார். எல்லாம் ஒரே போன்றுதானே உள்ளது, இவற்றுக்கு இடையே என்ன வேறுபாடு உள்ளது என்று எழக்கூடிய சந்தேகத்தை நீக்க அருளிச்செய்கிறார். ஸௌலப்யம் என்றால் – ஸ்ரீவைகுண்டத்தை தான் வீற்றுள்ள சபையாக இவன் கொண்டுள்ளபோதிலும், அங்கிருந்து புறப்பட்டு, ஸம்ஸாரிகள் உள்ள இடத்தில் அவதாரம் செய்து, அவர்கள் அளவிற்கு தான் எளியவனாக நிற்பது ஆகும். ஸௌசீல்யம் என்றால் – இந்த அளவிற்கு

எளியவனாக வந்து நின்ற பின்னர், "இவர்கள் இத்தனை தாழ்ந்தவர்கள் ஆயிற்றே. இவர்கள் அளவிற்கு நாம் நம்மைத் தாழ்மையாக்கிக் கொண்டுவிட்டோமே", என்று தனது மனதில் எண்ணாமல் இருத்தல் ஆகும். அல்லது தாழ்ந்தவர்களுடன் வேறுபாடு இன்றி கலந்து பழகுவது சீலம், அப்படிக் கலப்பது தனக்குப் பயன் உள்ளதாக இருக்கிறது என்று எண்ணுவது ஸௌசீல்யம் என்றும் உரைக்கலாம். ஆர்ஜவம் என்றால் – எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றும் ஒத்துப் போகாமல் உள்ள சேதநர்கள் மத்தியில் இவன் கலந்து பழகுகிறான்; அப்போது தனது ஸ்வரூப ரூப குண விசேஷங்களை சுருக்கிக்கொண்டும், தன்னை அவர்களுக்கு ஏற்றவனாகக் காண்பித்துக் கொண்டும் உள்ளான்; அதாவது அவர்கள் செல்லும் வழியில் தன்னை மாற்றிக் கொண்டு செல்லுதல் ஆகும். ஸௌசீல்யம் மற்றும் ஆர்ஜவம் ஆகிய இரண்டிற்கும் இடையே வேறுபாடு உண்டு என்பதை ஸ்வாமி ஆளவந்தாரின் ச்லோகங்கள் மூலம் காண்பிகிறார். ஸ்தோத்ரத்னத்தில் (18) – வசீ வதாந்யோ குணவாந் ருஜு: - என்று உரைத்தமை காண்க; அதாவது குணவாந் என்று முதலில் ஸௌசீல்ய குணத்தை உரைத்து, தொடர்ந்து ருசு: என்று ஆர்ஜவ குணத்தையே உரைத்தார். இந்தத் திருவாய்மொழி, ஸர்வேச்வரனுடைய பரத்வத்தை உரைக்கிறது என்று சிலர் கூறுவர். அல்லது பரத்வத்துக்கான இலக்கணத்தை உரைக்கிறது என்று சிலர் கூறுவர். அல்லது "பாடி இளைப்பிலம்" என்று கடந்த திருவாய்மொழியில் உரைத்தார்; அது போன்றே பாடி அனுபவிக்கிறார் என்றும் சிலர் பொருள் கொள்வர். இந்தத் திருவாய்மொழி ஆர்ஜவ குணத்தை உரைக்கிறது என்று ஸ்வமி பராசரபட்டர் உரைப்பார். எப்படி? பத்தர், முக்தர், நித்யர் என்றுள்ள மூன்றுவிதமான சேதநர்களுடன் தான் கலந்து நிற்கும்போது, அவர்கள் தன்னுடைய நிலையில் வரும்படிச் செய்யாமல், நீரானது தகுந்த கருவிகள் மூலம் மேடான இடத்திற்கு ஏறுவது போன்று, தன்னை அவர்களுக்கு ஈடாகப் பரிமாறிக் கொள்ளுவதால் ஆர்ஜவகுணம் கொண்டவன் என்கிறார்.

1-8-1. ஓடும் புள்ளேறி சூடுந்தண் துழாய்
நீடு நின்றவை ஆடும் அம்மானே.

பொருள் – இயல்பாகவே நமக்கு ஸ்வாமியாக உள்ளவன், பெரிய திருவடியான கருடன் மீது உலாவியபடி இருப்பான்; களைப்பை ஆற்றுகின்ற துளசிமாலையை அணிந்தபடி இருப்பான்; காலம் என்ற தத்வம் உள்ளவரை நிலையாக உள்ள வஸ்துக்களுக்குள் கலந்து நிற்பான்.

அவதாரிகை - நித்யவிபூதியிலுள்ளாரோடே செவ்வியனாய்ப் பரிமாறும்படி சொல்லுகிறது; அவர்களுக்குச் செவ்வைக்கேடு இல்லையிறே; அவர்கள் பலராய் ருசி பேதமுண்டானால் அவர்கள் நினைவு அறிந்து பரிமாறவே அங்கும் ஆர்ஜவகுணம் ஏறுமிறே.

விளக்கம் - நித்யவிபூதியில் உள்ளவர்களுடன் செல்வியனாகக் (செம்மை என்பது ஆர்ஜவத்தின் தமிழ்ச் சொல்லாகும்; அதாவது அந்த குணம் கொண்டவனாக) கலந்து நிற்கிறான் என்பதை உரைக்கிறார். ஆனால் அங்குள்ள யாருக்கும் செவ்வைக்கேடு (எண்ணம், செயல், சொல் ஆகியவை ஒத்துப் போகாமல் இருத்தல்) என்பது இல்லையே! அப்படி உள்ளபோது அங்கு ஏன் இவனது ஆர்ஜவகுணம் வெளிப்படவேண்டும் என்ற கேள்விக்கு விடை அளிக்கிறார். அவர்கள் பலராக உள்ளதால், அவர்களுக்குள்ள ருசியில் பேதம் உண்டு; எனவே அவர்களின் எண்ணம் அறிந்து கலப்பதற்கு ஆர்ஜவகுணம் அவசியம் தேவை என்றாகிறது.

வ்யாக்யானம் - (ஓடும் புள்ளேறி) புள்ளேறி ஓடும்; பெரிய திருவடியை மேற்கொண்டு ஸஞ்சரியா நிற்கும். மஹிஷிக்கு ஸ்தந பரிரம்பணம்போலே, தன்னை மேற்கொண்டு நடத்துவது அபேக்ஷிதமாயிருக்குமிறே வாஹநத்துக்கு; பெரியதிருவடியை மேற்கொள்ளுமதுதான் அவ்விபூதியிலுள்ளார்க்குக் காட்சி கொடுக்கைக்கும், அவனுடைய ஸ்வரூப லாபத்துக்காகவுமாயிருக்குமிறே. "த்வதங்கரி ஸம்மர்த்தகிணாங்கசோபிநா". காமிநியானவளுக்கு போக சிஹ்நங்கள் தாரகமாமோபாதி, திருவடிகள் உறுத்துகையால் வந்த தழும்பு இவனுக்கு தாரகமாயிருக்குமிறே.

விளக்கம் - (ஓடும் புள்ளேறி) - பெரியதிருவடியான கருடன் மீது ஏறிச் செல்வான். இதன் மூலம் ஆர்ஜவகுணம் வெளிப்படுவது எப்படி? பெரியதிருவடி ஸர்வேச்வரனிடம், "இப்போது அடியேன் மீது அமர்ந்து கொண்டு ஸஞ்சாரம் செய்யவேண்டும்", என்று கூறினால், அதனை மறுத்துப் பேசாமல், "அப்படியே ஆகட்டும்", என்று ஏறிக் கொள்ளுதல் ஆர்ஜவமே ஆகிறது. ஆனால் இவன் ஏறி அமர்தல் என்பது வாகனத்திற்குச் சுமை என்ற துன்பமே ஆகும் அல்லவோ என்று கேட்கலாம். இதற்கு விடை அளிக்கிறார். மனைவியை அணைத்துக் கொள்ளுதல் அவளுக்கு இன்பம் அளித்தல் போன்று, தன் மீது ஸர்வேச்வரன் எழுந்தருளுதல் என்பது வாகனமாகிய கருடனுக்கு விருப்பமான ஒன்றே ஆகும். ஆனால் பெரியதிருவடி மீது எழுந்தருளுதல் என்பது நித்யஸூரிகளுக்குக் காட்சி

கொடுக்க அல்லவோ என்று கேட்கலாம். இதற்குச் சமாதானம் உரைக்கிறார். அவன் மீது எழுந்தருளுதல் என்பது பரமபதத்தில் உள்ள நித்யஸூரிகளுக்குக் காட்சி கொடுக்க மட்டும் அல்லாமல், கருடனின் ஸ்வரூப லாபத்திற்கும் ஆகும். ஸ்தோத்ரரத்னம் (41) – த்வதங்கரி ஸம்மர்த்தகிணாங்கசோபிநா - ஸர்வேச்வரனின் திருவடிகளால் அழுத்தப்பட்ட தழும்பு தன் மீது உள்ளதைக் கண்டு மகிழ்ந்து – என்று உரைத்தது காண்க. இதனால், காமத்தில் விருப்பம் கொண்ட ஒரு பெண்ணிற்குத் தனது ஸ்தனங்களில் ஏற்பட்ட தழும்புகள் எவ்விதம் தாரகமாக இருக்குமோ அது போன்று, ஸர்வேச்வரனுடைய திருவடிகளின் உராய்தல் காரணமாக ஏற்படும் தழும்புகள் கருடனுக்குத் தாரகமாக உள்ளன என்று கருத்து.

வ்யாக்யானம் - (சூடும் தண்டுழாய்) "இப்போதே பறித்துத் திருக்குழலிலே வளையமாக வையாதொழியில் செவ்வியழியும்" என்னுமளவிலே அப்போதே பறித்துத் திருக்குழலிலே வைக்கும். இதுக்குச் சைதந்யமுண்டோ? என்னில்; "சிந்மயைஸ் ஸ்வப்ரகாசைச்ச" என்னக் கடவதிறே. சில சேதநர் புள்ளாயும் துழாயாயும் அங்குத்தைக்கு உறுப்பாய் வர்த்திக்கிற படியிறே. விரோதி சைதந்யமே கழிந்தது; ராஜஸந்நிதியில் வர்த்திப்பார் கூனர் குறளராய் வர்த்திக்குமோபாதியிறே; கர்மநிபந்தநமாகப் பரிக்ரஹித்த சரீரங்களுமன்றே; இச்சையாலே பரிக்ரஹிக்கிற இத்தனையிறே. இவ்விபூதியில் திர்யக்ஸ்தாவரங்களாமவை கர்மத்தாலேயாயிருக்கும்; அங்கு ஸ்வேச்சாதீநமாயிருக்கும் பரிக்ரஹித்த சரீரங்கள். ஸம்ஸாரிகளுக்கன்றோ ருசிபேதமும் செவ்வைக்கேடும் உள்ளது; நித்யஸூரிகளுக்கு விஷயம் ஒன்றாகையாலே ருசி பேதமில்லை; செவ்வைக் கேடுமில்லையே; அவர்களுடன் செவ்வையனாய்ப் பரிமாறுகையாவதென்? என்னில்; எல்லார்க்கும் விஷயம் ஒன்றேயாகிலும், அவ்விஷயந்தன்னில் வ்ருத்தி பேதத்தாலே ருசி பேதமுண்டாம்.

விளக்கம் – (சூடும் தண்டுழாய்) – துளசியை அந்த நொடியில் பறித்து, சட்டென்று தனது திருக்குழலில் வைத்துக் கொள்ளவில்லை என்றால் அழகு இழந்துவிடும் என்பதை உணர்ந்து, பறித்தவுடன் தனது திருக்குழலில் வைத்துக்கொள்வான். ஆனால் இவ்விதம், "பறித்தவுடன் சூடிக்கொள்ளவில்லை என்றால் அழகு குலைந்துவிடும்" என்னும் அறிவு துளசிக்கு உண்டா என்று கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார். பௌஷ்கர ஸம்ஹிதை - சிந்மயைஸ் ஸ்வப்ரகாசைச்ச – ஸர்வேச்வரனின் மாலைகள், ஆபரணங்கள், வஸ்த்ரங்கள் போன்ற பலவும் அவனது திருமேனிக்கு ஏற்றபடியாக, ஞானத்துடன் கூடியவையாக, எதன் துணையும் அவசியம் இன்றி தாங்களாகவே ப்ரகாசிக்கின்றன - என்று கூறியது காண்க. இவ்விதம் கொண்டால், துளசி போன்றவையும் நித்யஸூரிகள் என்றாகிறது;

நித்யஸூரிகள் தாவரம், விலங்கு முதலானவை போன்று உள்ளதற்கு என்ன காரணம் என்ற கேள்விக்கு விடை அளிக்கிறார். ஒரு சில நித்யஸூரிகள் பறவை, துளசி போன்று அங்கு உள்ளதற்குத் தேவையான தன்மையுடன் உள்ளனர். இவ்விதம் தாவரம், விலங்கு போன்ற சரீரங்களை எடுத்துக்கொண்டால், ஸர்வேச்வரனால் பயன்படுத்தப்படவில்லை என்னும்போது அவர்களின் ஞானம் போன்றவை கழிந்துவிடாதோ, அசேதன சரீரம் எடுக்கும்போது அறிவு அதிகரிக்குமோ என்று சந்தேகங்கள் எழலாம். இதற்கான விடையை அருளிச்செய்கிறார். அவனுக்கு சேர்ந்தபடி இன்பம் அனுபவிக்கவல்ல நிலைக்கு விரோதியாக உள்ள அறிவு மட்டும் கழிந்துவிடுகிறது; ஆனால் அந்த இன்பத்தை அனுபவிக்க ஏற்றதாக உள்ள ஞானம் அப்படியே உள்ளது என்கிறார். அரச சபையில் கூனர்களும், வாமனர்களும் உள்ளது போன்று ஆகும். துளசி, கருடன் போன்ற வடிவில் சரீரம் கொண்டது கர்மங்களின் காரணமாக அல்லவே, விருப்பத்தின் காரணமாகவே ஆகும். இந்தப் பூமியில் மட்டுமே அனைத்து சரீரங்களும் கர்மத்தின் காரணமாக ஏற்பட்டதாக உள்ள; அங்கு அனைத்து சரீரங்களும் அவரவர்களின் இச்சையால் எடுக்கப்பட்ட வடிவமே ஆகும். ஆனால் ஸம்ஸாரிகளுக்கு மட்டுமே ருசியில் வேறுபாடும், எண்ணம் – சொல் - செயல் ஆகியவற்றில் முரணாக உள்ள நிலையும் காணப்படுகிறது; நித்யஸூரிகள் அனுபவிக்கும் விஷயம் ஒன்று மட்டுமே என்பதால் அவர்களது ருசியில் வேறுபாடு இருக்காது, அவர்களது எண்ணம் – சொல் - செயல்களில் முரண்பாடுகளும் இருக்காது; இப்படி உள்ளபோது அவர்களுடன் இவ்விதம் செம்மையுடன் கலந்து பழகவேண்டிய அவசியம் என்ன? அங்கு அனைவரும் அனுபவிக்கின்ற விஷயம் ஒன்றாக உள்ளபோதிலும், அவர்கள் செய்யும் கைங்கர்யத்தின் வகைகள் பலவாக உள்ளதால், ருசியில் வேறுபாடு உள்ளது என்றாகிறது.

வ்யாக்யானம் - (நீடுநின்று) கர்மாநுகூலமாகிலிறே அநித்யமாவது; ஸ்வரூபாநுரூபமான பரிமாற்றமாகையாலே இதுதான் நித்யமாயிருக்கும். அவனுக்கு இவர்களை ஒழியச் செல்லாது; இவர்களுக்கு அவனையொழியச் செல்லாது. (அவை) "புள்" என்றும், "துழாய்" என்றும் சொல்லுகையாலே "அவை" என்கிறது. (ஆடும்) அவற்றொடே பரிமாறும் என்னாதே அவை ஆடுமென்கிறது - ஸர்வேச்வரனுக்கு அவர்களோடு அணையுமது, விடாயர் மடுவிலே புக்கு ஆடினாற்போலேயிருக்கையாலே. (அம்மானே) நித்யஸூரிகளோடு நித்யஸம்ஸாரிகளோடு வாசியறும்படி ஸர்வாதிகனாயிருந்து வைத்து, இப்படி பரிமாறும்.

விளக்கம் - (நீடுநின்று) - கர்மங்களின் காரணமக வந்த எதுவும் அழிந்துவிடும்; ஆனால் ஸ்வரூபத்திற்கு ஏற்றபடியாக வந்த பரிமாற்றம் என்பதால் நித்யமாக இருக்கும். அவர்களுக்கு இவனை விட இயலாது, இவனாலும் அவர்களை விட இயலாது. (அவை) - நித்யஸூரிகளை "அவை" என்று அஃறிணையில் உரைக்கலாமோ என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார். "புள்", "துழாய்" என்று கூறியதால் "அவை" என்று உரைத்தார். (ஆடும்) - "அவர்களுடன் கலந்து பழகி நின்றான்" என்று கூறாமல், "ஆடும்" என்று ஏன் கூறினார்? மிகுந்த தாகம் எடுத்தவர்கள் தண்ணீர் நிறைந்த மடுவில் புகுந்து குதிப்பது போன்று இவனுக்கு அவர்களுடன் கலப்பது உள்ளதால், "ஆடும்" என்றார். (அம்மானே) – நித்யஸூரிகள், நித்யஸம்ஸாரிகள் என்று அனைவரிடமும் ஏற்றத்தாழ்வு காணாமல் ஒரே போன்று பழகுகிறான்; அனைவரிடமும் ஏற்றத்தாழ்வு பாராமல் ஒரே போன்று பழகுகிறான்; அனைத்தையும் நியமிப்பவனாக உள்ளபோதிலும், இவ்விதம் பழகுவதால் "அம்மான்" என்றார்.

1-8-2. அம்மானாய்ப் பின்னும், எம்மாண்புமானான்
வெம்மாவாய் கீண்ட செம்மாகண்ணனே.

பொருள் – அனைவருக்கும் ஸ்வாமியாகிய அவன், கொடிய குதிரையின் வாயைப் பிளந்தான். சிவந்த, பெரிய கண்களைக் கொண்டவனாகிய க்ருஷ்ணன் அனைத்து மேன்மைகளையும் கொண்டிருந்தாலும், அனைத்து அவதாரங்களிலும் அழகுடையவன் ஆவான்.

அவதாரிகை - இப்பாட்டு, நித்யவிபூதியில் நின்றும் வந்து அவதரித்து விரோதிகளைப் போக்கி ஸம்ஸாரிகளுடன் செவ்வையனாய்ப் பரிமாறும்படி சொல்லுகிறது.

விளக்கம் - நித்யவிபூதியில் இருந்து வந்து, இங்கு அவதரித்து, ஸம்ஸாரிகளின் விரோதிகளை நீக்கி, அவர்களுடன் செம்மையுடன் பழகும் தன்மையை உரைக்கிறார்.

வ்யாக்யானம் – (அம்மானாய்) இப்படி ஸர்வாதிகனாயிருந்து வைத்து. (வெம்மாவாய் கீண்ட செம்மா கண்ணன் பின்னும் எம்மாண்புமானான்) வெவ்விதான மாவுண்டு - கேசி, அதினுடைய வாயைக் கிழித்துப் பொகட்ட. கேசி, வாயை அங்காந்து கொண்டு வந்து தோற்றினபோது கண்ட ஸ்ரீநாரதபகவான் "ஜகதஸ்தமிதம்" என்று கூப்பிட்டுக் கொண்டு

வந்து விழுந்தானிறே; அவனுக்குத் தத்காலத்தில் பிறந்த பயம்; அவன் பட்டுப்போகச் செய்தேயும், ஸ்ம்ருதிஸமயத்திலே அஞ்சுகிறார் இவர். (செம்மாகண்ணனே) விரோதி போகையால் வந்த ப்ரீதியாலே சிவந்து மலர்ந்த திருக்கண்களையுடைய க்ருஷ்ணன். (பின்னும் எம்மாண்புமானான்) அவ்வவதாரத்திலே பர்யவஸிக்கையன்றிக்கே அதுக்கு மேலே அநேகாவதாரங்களைப் பண்ணினான். "பஹூநி" என்கிறபடியே. மாண்பு என்று அழகு; பரத்வத்திலும் மநுஷ்யத்வே பரத்வத்தால் வந்த அழகைச் சொல்லுகிறது.

விளக்கம் - (அம்மானாய்) - இப்படியாக அனைவரையும் நியமிப்பவனாக உள்ளவன். (வெம்மாவாய் கீண்ட செம்மா கண்ணன் பின்னும் எம்மாண்புமானான்) – கொடியகேசி; அந்தக் குதிரையின் வாயைக் கிழித்து எறிய. கேசியின் வாயைத் திறந்தபடி கொண்டு வந்து நின்றபோது, நாரதர் – ஜகத் அஸ்தமிதம் – உலகமே அழியப்போகிறது - என்று அச்சத்துடன் வந்து நின்றார். அந்த நேரத்தில் நாரதருக்கு ஏற்பட்ட பயம் என்பது, அந்த அசுரன் அழிந்த பின்னரும் அந்த நிகழ்வு பற்றி எண்ணிய ஆழ்வாருக்கு இப்போது ஏற்பட்டது. (செம்மா கண்ணனே) – அடியார்களின் விரோதியை அழித்ததால் ஏற்பட்ட மகிழ்ச்சி என்பதன் காரணமாகச் சிவந்து மலர்ந்த திருக்கண்கள் கொண்ட க்ருஷ்ணன். (பின்னும் எம்மாண்புமானான்) - அந்த அவதாரத்துடன் நின்றுவிடாமல் மேலும் பல திரு அவதாரங்கள் செய்தான். கீதை (4-5) - பஹூநி – நான் பலவாகப் பிறக்கிறேன் - என்பதற்கு ஏற்ப ஆகும். மாண்பு என்றால் அழகு; அதிமாநுஷ செயல்களால் ஏற்பட்ட ஸௌலப்யம் போன்றவை இவனுடைய பரத்வத்தைக் காட்டிலும் உயர்ந்தே காணப்படும்; அதன் மூலம் ஏற்பட்ட அழகை உரைக்கிறார்.

1-8-3 கண்ணாவான் என்றும் மண்ணோர் விண்ணோர்க்கு
தண்ணார் வேங்கட விண்ணோர் வெற்பனே

பொருள் – நித்யஸூரிகள் எப்போதும் வணங்கியபடி நிற்கும் குளிர்ந்த திருவேங்கடமலையில் உள்ளவன்; எப்போதும் இந்தப் பூமியில் உள்ளவர்களுக்கும் விண்ணோர்களுக்கும் கண் ஆவான்.

அவதாரிகை - இரட்டை ப்ரஜை பெற்ற மாதாவானவள் இருவர்க்கும் முலை கொடுக்கப் பாங்காக நடுவே கிடக்குமாபோலே, நித்யஸூரிகளுக்கும் ஸம்ஸாரிகளுக்கும் ஒக்க முகங்கொடுக்கைக்காகத் திருமலையிலே நின்றருளின நீர்மையை அருளிச்செய்கிறார்.

விளக்கம் - இரட்டை குழந்தைகளைப் பெற்றெடுத்த தாயானவள் அந்த இருவருக்கும் தாய்ப்பால் கொடுக்கும் விதமாக, அதற்கு ஏற்றபடி இருவருக்கும் நடுவில் கிடப்பாள். இதே போன்று நித்யஸூரிகள் மற்றும் ஸம்ஸாரிகள் ஆகிய இருவருக்கும் ஒத்தபடி திருமுகம் காண்பித்துக் கடாக்ஷிக்கும் பொருட்டு, திருமலையில் நின்று அருளும் நீர்மையை அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் - (கண்ணாவான்) நிர்வாஹகனாவான் என்னுதல்; கண்ணாகைக்காக என்னுதல்; கண்ணாமவன் என்னுதல். "சக்ஷுர் தேவாநாமுத மர்த்யாநாம்" என்கிற ச்ருத்யர்த்தத்தை அருளிச்செய்கிறார். (மண்ணோர் விண்ணோர்க்கு என்றும் கண்ணாவான்) நித்யஸூரிகளோடு ஸம்ஸாரிகளோடு வாசியில்லையாயிற்று தங்கள் காரியம் தாங்கள் செய்து கொள்ளமாட்டாமைக்கு. (தண்ணார் வேங்கடம்) "குளிர் அருவி வேங்கடம்" என்னுமாபோலே. அவனுக்கு ரக்ஷ்யம் பொறாமையால் வரும் தாபத்தையும் ஆற்றவற்றாயிருக்கை. (விண்ணொர்வெற்பனே) அவன் இரண்டு விபூதியிலுள்ளார்க்கும் முகங்கொடுக்க வந்து நின்றானோயாகிலும், திருமலைதான் நித்யஸூரிகளதாயிற்று. "வானவர் நாடு" என்னுமாபோலே. (விண்ணோர்வெற்பு) என்கிறார். கானமும் வானரமுமான இவற்றுக்கு முகங்கொடுத்துக் கொண்டு நிற்கிற நீர்மையை அநுஸந்தித்து, "இது என்ன நீர்மை!" என்று ஈடுபட்டிருக்கையாலே அவர்களதே திருமலையென்கிறார்.

விளக்கம் - (கண்ணாவான்) - இதற்கு இரண்டு பொருள் உரைக்கலாம். "கண் ஆவான்" என்பதைப் பெயர்ச்சொல்லாகக் கொண்டால், நித்யஸூரிகள் மற்றும் ஸம்ஸாரிகள் ஆகிய இருவருக்கும் நிர்வாஹகன் என்று பொருள்; அல்லது காப்பாற்றுபவன் என்றும் கொள்க. இதனை வினைச்சொல் என்று கொண்டால், இந்த வரியானது யஜுர்வேதம் – சக்ஷுர் தேவாநாமுத மர்த்யாநாம் – தேவர்களுக்கும் இங்கு உள்ளவர்களுக்கும் கண் போன்றவன் என்ற பொருளைத் தருவதாக உள்ளது. (மண்ணோர் விண்ணோர்க்கு என்றும் கண்ணாவான்) - தங்களது காரியத்தைத் தாங்களாகவே செய்து கொள்ளும் திறமை என்பது இல்லை என்னும் நிலையானது, நித்யஸூரிகள் மற்றும் ஸம்ஸாரிகள் ஆகிய இருவருக்குமே எந்தவிதமான வேறுபாடும் இல்லாமல் உள்ளது. (தண்ணார் வேங்கடம்) - நாச்சியார் திருமொழி (8-3) - குளிர் அருவி - குளிர்ந்த ப்ரவாஹங்கள் கொண்ட திருமலை. ஸர்வேச்வரனுக்குத் தன்னால் எந்த உயிரையும் காப்பாற்ற இயலவில்லையே என்ற ஆதங்கம் ஏற்படுகிறது, ஸம்ஸாரிகளுக்குத் தங்களைக் காப்பாற்ற அவன் இன்னமும்

வரவில்லையே என்ற ஆதங்கம் ஏற்படுகிறது; இந்தத் திருமலையானது இவர்கள் இருவரின் துன்பங்களையும் போக்குவதாக உள்ளது. இதனை நினைத்த உடனேயே தீர்கின்றன என்று கருத்து. (விண்ணொர்வெற்பனே) – இப்படியாக அவன் சிரமங்களைத் தீர்ப்பவனாக உள்ளான். யாருடைய சிரமம் என்று கேட்கலாம். இதற்கு விடை அளிக்கிறார். அவன் நித்யவிபூதி, லீலாவிபூதி என்ற இரு இடங்களிலும் உள்ளவர்களுக்காகத் திருமலையில் வந்து நின்றபோதிலும், திருமலை நித்யஸூரிகளுடையதே என்கிறார். திருவாய்மொழி(3-9-9) – வானவர் நாடு – என்பது போன்று ஆகும். "விண்ணோர் வெற்பு" என்று கூறலாமோ என்னும் கேள்விக்கு நான்காம் திருவந்தாதி பாசுரத்தை உரைக்கிறார். அந்தப் பாசுரம் (47) – கானமும் – பூத்துக் குலுங்கும் மரங்கள், பலவிதமான் இரத்தினக்கற்கள், எங்கும் நீர் நிறைந்த அருவிகள், நீர் புரண்டு ஓடும் காடுகள், அந்த நீரைக் கண்டு அச்சம் கொண்டு மரத்தில் தாவித்தாவி ஏறும் குரங்குகள் என்பதாக உள்ள திருமலை என்கிறார். இங்கு – மண்ணோர் விண்ணோர்க்கு என்றும் கண்ணாவான், தண்ணார் வேங்கட விண்ணோர் வெற்பன் - என்று வரிசைப்படுத்திக் கொள்க. அதாவது, மேலே நான்காம் திருவந்தாதியில் உள்ளபடி அனைவருக்கும் ஒத்தபடி காட்சி அளிப்பதைக் கண்ட நித்யஸூரிகள், "இது என்ன நீர்மையோ!", என்று வியந்து நின்று அவனிடம் ஈடுபடுகின்றனர். இதனால் திருமலை அவர்களுடையதே என்கிறார்.

1-8-4. வெற்பை ஒன்றெடுத்து ஒற்கமின்றியே
நிற்கும் அம்மான்சீர் கற்பன் வைகலே

பொருள் - இந்திரன் பெய்வித்த கல்மழையின் மூலம் தன்னால் காப்பாற்றப்பட வேண்டிய ஆயர்கள் துன்பம் அடையாதபடி, ஒரு மலையை எடுத்து, எந்தவிதமான தளர்ச்சியும் இல்லாமல் நின்ற ஸர்வேச்வரனின் "துன்பம் வரும்போது துணையாக நிற்கும்" கீர்த்தியை காலம் உள்ளவரை நான் கூறுவேன்.

அவதாரிகை - அவனுடைய ஆர்ஜவகுணம் தம்மளவிலே பலித்தபடியை அருளிச் செய்கிறார்.

விளக்கம் – அவனுடைய ஆர்ஜவகுணம் என்பது தன்பக்கம் வெளிப்பட்டதை அருளிச் செய்கிறார்.

வ்யாக்யானம் – (வெற்பை ஒன்று எடுத்து) பசுக்களும் இடையரும் தொலையும்படி வர்ஷிக்கப் புக்கவாறே, அதுக்கு ஈடாயிருப்பதொன்றையிட்டு ரக்ஷிக்கப்பற்றாமையாலே, தோற்றிற்றொரு மலையையெடுத்துப் பரிஹரித்தானாயிற்று. இப்படி ஏழு பிராயத்தின் பாலன் ஒருபடிப்பட மலையை எடுத்து தரித்துக்கொண்டு நின்றவிடத்தில், இளைப்பு உண்டாயிற்றில்லையோ? என்னில், (ஒற்கம் இன்றியே நிற்கும்) ஒற்கமாவது ஒடுங்குதல்; அதாகிறது இளைப்பு. ஏழுநாள் ஒருபடிப்பட மலையைத் தரித்துக் கொண்டு நின்றவிடத்தில் இளையாமைக்கு ஹேது என்னென்னில், அவன் ரக்ஷணத்தைப் பகிர்ந்து கொள்வாரில்லாமையாலே இளைப்பில்லை; தாதுக்ஷயம் பிறவாவிடில் இளைப்பில்லையிறே; உண்கிற சோற்றிலே மணலைத் தூவுகை இல்லாவிட்டால் இளைப்பில்லையிறே. (அம்மான்) வகுந்த ஸ்வாமியாகையாலே. ஸ்வாபாவிக ஸம்பந்தத்தாலே இளைப்பின்றிக்கே நின்றான். ப்ரஜா ரக்ஷணத்தில் மாதாவுக்கு இளைப்பு உண்டாகாதிறே.

விளக்கம் – (வெற்பை ஒன்று எடுத்து) - காப்பாற்றுவதற்கு ஏற்றபடியாக உள்ள திவ்யமான ஆயுதங்கள் எடுத்துக் காப்பாற்றாமல், தன் முன்பாக நின்ற ஒரு மலையை எடுத்துக் காப்பாற்றியதற்குக் காரணம் என்ன என்பதை அருளிச்செய்கிறார். பசுக்களும், இடையர்களும் துன்பம் அடையும்படியாக அடைமழை பெய்தது. அந்த மழைக்கு ஈடாக இருக்கும் எதனையாவது எடுத்துக் காப்பாற்றவதும் சட்டென்று கிட்டாமையால், கண் முன்பே தோன்றிய ஒரு மலையை எடுத்து நின்றான். இவ்விதம் ஏழு வயதே நிரம்பிய ஒரு பாலகன், பெரிய மலை ஒன்றை எடுத்து நின்றபோது அவனுக்கு எந்தவிதமான சிரமமும் ஏற்படவில்லையா என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார். (ஒற்கம் இன்றியே நிற்கும்) - ஒற்கம் என்றால் ஒடுங்குதல், அதாவது தளர்ச்சி அடைதல். ஏழுநாட்கள் ஒரு பெரிய மலையை எடுத்து ஒரே இடத்தில் நின்றபடி உள்ளபோது, தளர்ச்சி அடையாமல் இருந்தமைக்கு என்ன காரணம் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார். இந்த இடத்தில் அவன் செய்கின்ற செயலுக்கு உதவி செய்யத்தக்கவர்கள் யாரும் இல்லாத காரணத்தால் களைப்பு இன்றி நிற்க வேண்டியதாயிற்று; இந்திரனின் உணவை, தான் பறித்த காரணத்தால் அவனுக்கு உதவும் பொருட்டு களைப்பு இன்றி நின்றான். (அம்மான்) - அனைவருக்கும் இயற்கையாகவே ஸ்வாமியாக உள்ளதால், ஸ்வபாவமாகவே ஸம்பந்தம் உள்ள காரணத்தால் களைப்பு ஏற்படாமல் நின்றான். ஸ்வபாவத்திலேயே

ஸம்பந்தம் இருந்தாலும், களைப்பு ஏற்படாமல் இருக்குமோ என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார். தன்னுடைய குழந்தையைக் காப்பாற்றும் செயலில் தாய்க்குக் களைப்பும், சிரமமும் ஏற்படுமோ?

வ்யாக்யானம் - (சீர் கற்பன்) அவன் மலையையெடுத்து ரக்ஷ்யவர்க்கத்தை நோக்கின நீர்மையை அநுஸந்தித்து, அவனுடைய கல்யாணகுணங்களை அந்த குணப்ரேரிதனாய் அப்யஸிப்பன். "குணைர் தாஸ்யமுபாகத" என்னுமாபோலே, (வைகலே) ஒருகால் இத்தைச் சொல்லி, பின்னை என் காரியத்துக்குப் போமவனல்லேன்; நித்யஸூரிகளைப் போலே எனக்கும் இதுவே யாத்ரையாயிருக்கும்; "விபந்யவ:" இறே.

விளக்கம் – (சீர் கற்பன்) - அவன் கோவர்த்தன மலையை எடுத்து, தன்னால் காப்பாற்றப்பட வேண்டியவர்களை நோக்கிய நீர்மையை எண்ணுவேன்; அந்தக் கல்யாண குணங்களை, அந்தக் குணங்களில் மயங்கியவனாக எப்போதும் எண்ணுவேன்; இராமாயணம் அயோத்யாகாண்டம் (3-19) - குணைர் தாஸ்யமுபாகத - இராமனின் குணங்களில் அடிமைப்பட்டேன் – என்று கூறுவது போன்று இவரும் நின்றார். (வைகலே) – ஒருமுறை இதனை உரைத்த பின்னர், எனது செயல்களைப் பார்த்தபடியே அவனை விட்டு அகலமாட்டேன். நித்யஸூரிகள் போன்று நானும் அவனை எண்ணியபடியே இருத்தலையே தொழிலாகக் கொள்வேன். ருக்வேதம் - விபந்யவ: - எப்போதும் துதித்தபடி உள்ளனர் - என்றது காண்க.

1-8-5 வைகலும் வெண்ணெய் கைகலந்துண்டான்
பொய்கலவாது என் மெய்கலந்தானே

பொருள் - எப்போதும் வெண்ணெயைத் தனது இரண்டு திருக்கரங்களாலும் உண்ட ஸர்வேச்வரன், எந்தவிதமான பொய்யும் இல்லாமல், என்னுடைய சரீரத்தில் மெய்யாகவே கலந்து நின்றான்.

அவதாரிகை - நீர் அவன் குணங்களை அப்யஸியா நின்றீராகில், அவன்தான் செய்கிறதென்? என்னில்; நான் அவனைவிட்டு அவன் குணங்களை விரும்புகிறாப்போலே அவனும் என்னை விட்டு என்னுடைய தேஹத்தை விரும்பா நின்றான் என்கிறார்.

விளக்கம் – ஆழ்வாரிடம் சிலர், "நீவீர் அவனது திருக்கல்யாண குணங்களை எப்போதும் எண்ணியபடியும், கற்றபடியும் உள்ளீர்? இதற்குப் பதில் அவன் உமக்கு என்ன செய்தான்?", என்றனர். இதற்கு ஆழ்வார், "நான் அவனை விடுத்து, அவனுடைய திருக்கல்யாண குணங்களைப் பெரிதும் விரும்புவது போன்று, அவன் என்னை விட்டு எனது சரீரத்தை விரும்பிக் கலந்தான்", என்கிறார்.

வ்யாக்யானம் - (வைகலும்) "கற்பன் வைகலே" என்று எனக்கு அவன் குணம் என்றும் தாரகமாகயிருக்கிறாப்போலே, ஆச்ரித ஸ்பர்சமுள்ள த்ரவ்யம் என்றுமொக்க தாரகமாயிருக்குமாயிற்று அவனுக்கு. (வெண்ணெய் கைகலந்து உண்டான்) வெண்ணெயில் உண்டான ஆதரத்தாலே இடக்கையாலும் வலக்கையாலும் வாங்கி அமுது செய்தான்; அன்றியே, "தாரார் தடந்தோள்கள் உள்ளளவும் கைநீட்டி" என்கிறபடியே "கை நிறையுந்தனையும் வயிறு நிறையும்" என்னும் மௌக்த்யத்தாலே திருக்கைகள் உள்ளளவும் கலந்து அமுதுசெய்தான் என்னுதல்; "கள்ளன்" என்று சிலுகிட்டவாறே அவர்கள் தங்களோடே கலந்து அமுதுசெய்தான் என்னுதல். "ஸர்வாதிகனானவன் நித்ய ஸம்ஸாரியாய்ப் போந்தவனுடைய தேஹத்தைத் திருவாய்ப்பாடியில் வெண்ணெயோபாதி ஆதரித்தான்" என்றால், இது கூடுவதொன்றோ? என்னில், (பொய்கலவாது என் மெய் கலந்தானே) "அவ்வெண்ணெயில் பண்ணின விருப்பத்தில் பொய்யில்லாதாப்போலே கிடீர் என் உடம்புடன் கலந்த கலவியிலும் பொய்யில்லாதபடி" என்கிறார். (என்மெய்) அவன் மேல்விழ மேல்விழத் தாம் இறாய்த்தமை தோற்றுகிறது. "அழுக்குடம்பு" என்று நான் அநாதரிக்கிற சரீரம் இவனுக்கு ஆதரணீயமாவதே என்கிறார்.

விளக்கம் – (வைகலும்) - அவனுடைய திருக்கல்யாண குணங்கள் என்பதே நான் உயிர் வாழத் தேவையானது என்றுள்ளது போன்று, அடியார்களின் கைகளால் தீண்டப்பட்ட வெண்ணெய் என்பதே அவன் உயிர் தரிக்கத் தேவையாக உள்ளது. (வெண்ணெய் கைகலந்து உண்டான்) - ஆய்ச்சிமார்களின் கைகளால் தீண்டப்பட்ட வெண்ணெய் என்பதால், அதன் மீது உள்ள ஆசையால், இடக்கையாலும் வலக்கையாலும் மாறிமாறி எடுத்து உண்டான். சிறிய திருமடல் (52) – தாரார் தடந்தோள்கள் உள்ளளவும் கைநீட்டி - தான் அணிந்திருந்த மாலையானது பானையின் உள்ளே அழுந்தும்படி, பானையின் அடிவரைத் தனது திருக்கரத்தை விட்டான் என்று கூறியது காண்க. ஏன் இவ்விதம் செய்தான்? வெண்ணெய்க்குள் எந்த அளவு கையை விடுகிறோமோ அந்த அளவு தனது வயிறு நிறையும் என்று சிறுபிள்ளைத்தனமாக எண்ணி இவ்விதம் செய்தான். ஸ்வாமி

நஞ்ஜீயர் ஸ்வாமி பராசரபட்டரிடம், "இவன் மாலை அணிந்திருந்த திருத்தோள்கள் முழுவதுமாக பானைக்குள் விட்டான் என்பதை எப்படி அறிந்தார்?", என்றார். இதற்குப் பட்டர், "இவன் தனது தோள்களில் பூசியுள்ள சாந்தை, வெண்ணெய்ப் பானையின் விளிம்பில் யசோதை கண்டாள்", என்று அருளிச்செய்தார். அதாவது தனது திருக்கரம் செல்லும் அளவு முடிய பானைக்குள் செலுத்தி, எடுத்து உண்டான். கலகம் செய்கிறான் என்று கூறுவதற்கு ஏற்ப தன்னேராயிரம் பிள்ளைகள் கூட நிற்க, அவர்களுடன் சேர்ந்து கலந்து உண்டான். "ஸர்வேச்வரனாகிய அவன் நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகன்; அப்படிப்பட்டவன், நித்யஸம்ஸாரியாக உள்ள ஆழ்வாரின் சரீரத்தை, திருவாய்ப்பாடியில் கிட்டிய வெண்ணெய் அளவிற்கா விரும்பினான்?", என்று சிலர் கேட்கலாம். அது பொருந்துமோ எனலாம். இதற்கு விடை அளிக்கிறார். (பொய்கலவாது என் மெய் கலந்தானே) – அந்த வெண்ணெய் மீது அவன் கொண்ட ஆசை என்பது எவ்விதம் பொய் கலக்காமல் இருந்ததோ, அது போன்று அவன் எனது சரீரத்தில் கலந்தமை என்பது பொய் கலவாதது ஆகும் என்கிறார். (என்மெய்) - அவன் என் மீது மேன்மேலும் விழுந்தபடி இருந்தான்; நான் தொடர்ந்து பின்வாங்கியபடி இருந்தேன் - என்கிறார். திருவிருத்தம்(1) அழுக்குடம்பு - என்பதற்கு ஏற்ப, நானே வெறுத்து ஒதுக்கும் எனது சரீரம் இவனால் விரும்பப்படுவதாக ஆனதே என்று வியக்கிறார். வைகலும் வெண்ணெய் கைகலந்து உண்டான்; உண்டவன் என் மெய் கலந்தான்; இதில் பொய் கலவாது – என்று வரிசைப்படுத்திக் கொள்க.

1-8-6 கலந்தென்னாவி நலங்கொள் நாதன்
புலன்கொள் மாணாய் நிலங்கொண்டானே

பொருள் – நீருடன் நீர் கலந்து ஒரே நீராக நிற்பது போன்று எனது சரீரத்துடன் கலந்து, என்னுடைய ஆத்ம ஸ்வருபத்திற்கு உரியதான அடிமைத்தனம் என்னும் நன்மையை தனக்குப் பலனாகக் கொண்டான். இப்படிப்பட்ட என்னுடைய எஜமானனாகிய ஸர்வேச்வரன் அனைத்து இந்த்ரியங்களையும் தன்பக்கம் இழுக்கவல்ல வாமன ப்ரம்மசாரியாக நின்று பூமியைத் தன்னுடையதாக்கிக் கொண்டான் (இங்கு நிலம் என்பது அனைத்து உலகங்களையும் குறிப்பதாகும்).

அவதாரிகை - இப்படிக் கலந்து செய்ததென்? என்ன, "தேஹத்தளவிலே விரும்பி விட்டிலன்; என் ஆவி நலத்தையும் கொண்டான்" என்கிறார்.

பொருள் - ஒன்றாகக் கலந்து அவன் செய்தது என்ன என்று கேட்க, "சரீரத்தை மட்டும் விரும்பி அவன் நின்று விடவில்லை. என்னுடைய உயிரின் நன்மையையும் கைக் கொண்டான்", என்கிறார்.

வ்யாக்யானம் - (கலந்து இத்யாதி) என்னோடே ஒரு நீராகக் கலந்து, பின்னை என் ஆத்மாவினுடைய நற்சீவனைக் கொண்டான். அவ்வளவேயோ? (நாதன்) "என்னையாளுங்கொண்டு" என்கிறபடியே, நான் எனக்கு உரியேனாயிருக்கிற இருப்பையும் தவிர்த்தான். இப்படி அகப்பட்டார் நீரேயோ என்ன, மஹாபலியும் அகப்பட்டான்; ஆவிநலம் கொடுத்திலன்; கழஞ்சு மண் கொடுத்தானித்தனை. ஸர்வேந்த்ரியாபஹார க்ஷமமான வேஷத்தைப் பரிக்ரஹித்து, அவன் "என்னது" என்று அபிமாநித்திருக்கிற பூமியை அபஹரித்தான்.

விளக்கம் – (கலந்து) - என்னுடன் ஒன்றாக, நீருடன் நீர் கலப்பது போன்று கலந்தான். எனது ஆத்மாவின் இனிமையையும் கைக்கொண்டான். ஸௌசீல்யம் போன்ற தனது அகக்குணங்களைக் காண்பித்து எனது அக இந்த்ரியங்களை வசப்படுத்தினான்; ஸௌந்தர்யம் போன்ற தனது புறத்தன்மைகள் மூலம் எனது புற இந்த்ரியங்ளைத் தன் வசப்படுத்திக் கொண்டான். அது மட்டுமே அல்ல. (நாதன்) - திருநெடுந்தாண்டம் (25) – என்னையாளுங்கொண்டு - என்பதற்கு ஏற்ப நான் எனக்காக இருக்கும் நிலை என்பதையும் மாற்றினான்; நான் அவனுக்காக உள்ளபடிச் செய்தான். "இப்படி நீர் மட்டும்தான் அவனிடம் அகப்பட்டீரோ?", என்று கேட்க விடை அளிக்கிறார். மஹாபலியும் அகப்பட்டான். அவன் தனது ஆத்மாவின் நன்மையை நாடிக் கொள்ளவில்லை; சிறிதளவும் மண் கொடுக்கவில்லை; அனைத்து இந்த்ரியங்களையும் அபகரிக்கவல்லதான திருஅவதாரத்தைக் கைக்கொண்டு, மஹாபலி "தன்னுடையது" என்று எண்ணியிருந்த பூமியை அவனிடமிருந்து அபகரித்தான் .

1-8-7 கொண்டான் ஏழ்விடை உண்டான் ஏழ்வையம்
தண்தாமஞ்செய்து என் எண் தானானானே

அவதாரிகை – ஆவிநலம் கொண்டுவிட்ட அளவேயோ? நித்யவிபூதியில் பண்ணும் ஆதரத்தையும் என்பக்கலிலே பண்ணினான் என்கிறார்.

விளக்கம் - தனக்கு விருப்பமான விஷயத்தை அடையவிடாமல் தடுத்த விரோதிகளான ஏழு எருதுகளின் ப்ராணனைக் கொண்டவன்; ப்ரளய ஆபத்தின்போது ஏழு உலகங்களையும் தனது திருவயிற்றில் வைத்துக் காப்பாற்றியவன்; ஸம்ஸாரிகளுக்கு இன்பம் அளிக்கவல்ல இடமான பரமபதத்தின் மீது எந்த அளவு விருப்பம் கொண்டுள்ளானோ அந்த அளவு விருப்பத்தை என் மீதும் வைத்தான்; நான் அங்கு சென்று அவனை அனுபவிக்க எண்ணியது போன்று, அவன் இங்கு வந்து என்னை அனுபவிக்கிறான்.

வ்யாக்யானம் – (கொண்டான் ஏழ்விடை) "இன்ன படைவீட்டைக் கொண்டான்" என்னுமாபோலே, நப்பின்னைப் பிராட்டியோட்டை ஸம்ச்லேஷத்துக்கு ப்ரதிபந்தகமான வ்ருஷபங்கள் ஏழையும் ஜயித்தான். (உண்டான் ஏழ்வையம்) ப்ரளயாபத்தில் பூமி தன் வயிற்றிலே புகாவிடில் தரியாதாப்போலே, தான் என்பக்கலிலே புகுந்தல்லது தரியாதானாய்க் கலந்தான். தனக்கு ஸ்நேஹிகளாயிருப்பார்க்குச் செய்யுமதும் செய்தான். தான் பண்ணும் ரக்ஷணம் விலக்காதார்க்குச் செய்யுமதும் செய்தான். அதுக்குமேலே, (தண் தாமம் செய்து) தட்பத்தையுடைத்தான தாமமுண்டு – பரமபதம்; அதில் பண்ணும் விருப்பத்தையும் என்பக்கலிலே பண்ணினான். தத்விபூதிகனாக என்னை ஆதரித்து என்றுமாம். (என் எண்தான் ஆனானே) நான் மநோரதித்தபடியே எனக்குக் கைப்புகுந்தான் என்னுதல்; அன்றிக்கே, என் மநோரதத்தைத் தான் கைக்கொண்டான் என்னுதல்; அதாவது மாக வைகுந்தம் காண்பதற்கிறே இவர் ஏகமெண்ணுவது; "கண்ணன் விண்ணூர் தொழவே சரிகின்றது சங்கம்" என்று நான் ஸ்ரீவைகுண்டத்தேறப் போகவேணும்" என்றும், "அங்கே அநுபவிக்கவேணும்" என்றும் ஆசைப்பட, அவன் "திருநகரியேறப் போக வேணும், ஆழ்வாரை அநுபவிக்க வேணும்" என்று பாரியாநின்றான்.

விளக்கம் - (கொண்டான் ஏழ்விடை) - "இந்த ராஜ்யத்தை வென்றான்" என்று கூறுவதற்குப் பதிலாக, "இந்த ராஜ்யத்தை (வெற்றி) கொண்டான்" என்று கூறுவது வழக்கம். இதனைப் போன்று இவரும் "ஏழ்விடை கொண்டான்" என்கிறார். நப்பின்னை பிராட்டியுடன் தான் சேர்வதற்குத் தடையாக இருந்த ஏழு எருதுகளையும் வென்றான்.

(உண்டான் ஏழ்வையம்) - ப்ரளயத்தின்போது ஏற்பட்ட ஆபத்து காலத்தில் பூமியைத் தனது திருவயிற்றில் வைத்துக் கொள்ளவில்லை என்றால், தான் உயிர் தாங்குவது கடினம் என்பது போன்று தவித்தான்; அதனைப் போன்றே தான் என்னிடம் கலக்கவில்லை என்றால் உயிர் தாங்குவது கடினம் என்று தவித்து என்னுள் கலந்தான். தனக்கு ஏற்ற சிநேகிதிகள் அனைவருக்கும் தான் என்ன செய்யவேண்டுமோ அவற்றைச் செய்தான்; அவர்களுடைய விரோதியைப் போக்கியது போன்று எனது விரோதியையும் போக்கினான். அவர்கள் ப்ரளயத்தின்போது அழிந்துவிடாதபடி காப்பாற்றியது போன்று, அவனைப் பிரிந்து நான் அழிந்துவிடாதபடி தனது குணங்களை வெளிப்படுத்திக் காப்பாற்றினான். மேலும் என்ன செய்தான்? (தண் தாமம் செய்து) – மிகுந்த குளிர்ச்சியான இடம் உண்டு என்றால் அது பரமபதமே ஆகும். அதில் அவன் வைத்துள்ள விருப்பத்தை என் மீதும் வைத்தான். அல்லது இந்த உலகில் உள்ள என்னை அந்தப் பரமபதத்தில் உள்ளவன் என்றே எண்ணிக் கலந்தான். (என் எண்தான் ஆனானே) - நான் விரும்பியபடியே என்னுள் கலந்தான். அல்லது எனது எண்ணம் போன்றே, தான் என்னுள் கலக்கவேண்டும் என்ற எண்ணத்தை அவன் கைக்கொண்டான். திருவாய்மொழி (9-8-7) - மாக வைகுந்தம் - பரமாகாசம் என்று போற்றப்படும் ஸ்ரீவைகுண்டத்தைக் காண்பதற்காகவே எனது நெஞ்சம் இரவும்பகலும் ஒரே போன்று நின்றது - என்று கூறுவதற்கு ஏற்ப, ஸ்ரீவைகுண்டத்தைக் காண்பது என்பதே இவரது ஆசையாக உள்ளது. திருவிருத்தத்தில் (47) – "கண்ணன் விண்ணூர் தொழவே சரிகின்றது சங்கம் - க்ருஷ்ணனின் இருப்பிடமான பரமபதத்தை எப்போதும் வணங்கி அனுபவிக்கவேண்டும் என்று எண்ணியபடி உள்ளதால் உடல் இளைத்து, எனது வளைகள் கழன்று விழுகின்றன - என்பதற்கு ஏற்ப, "ஸ்ரீ வைகுண்டத்திற்குச் சென்று சேரவேண்டும், அவனை அனுபவிக்க வேண்டும்" என்று நான் தவித்தபடி உள்ளேன்; அவனோ, "ஆழ்வார் திருநகரியைச் சென்று சேரவேண்டும், ஆழ்வாரைக் கலந்து அனுபவிக்கவேண்டும்", என்று தவித்தபடி உள்ளான் என்கிறார்.

1-8-8 ஆனான் ஆனாயன் மீனோடேனமும்
தான் ஆனான் என்னில் தானாய சங்கே

பொருள் – பசுக்களைக் காப்பாற்றும்விதமாக அவன் இடையனாக நின்றான். மீனாகவும், வராகமாகவும் அவதரித்தான். இவற்றை என்னிடம் கொண்ட அன்பினால் செய்தான்.

அவதாரிகை - என்னைச்சுட்டி அவன் பிறந்த பிறவிகளுக்கு ஒரு முடிவில்லை என்கிறார்.

விளக்கம் – என்னைக் காரணம் காண்பித்து, எனக்காக என்று உரைத்து, அவன் எடுத்த பிறவிகளுக்கு எண்ணிக்கையே இல்லை என்கிறார்.

வ்யாக்யானம் - (ஆனான் ஆனாயன்) இடையனாய்ப் பிறந்து, முடிசூட இராதே ஜாத்யுசிதமான கோரக்ஷணத்திலே அதிகரித்தான்; இடையனாய்ப் பிறந்த மெய்ப்பாடு. அவ்வளவிலேதான் விட்டானோ? (மீனோடு ஏனமும் தான் ஆனான்) கீழே க்ருஷ்ணாவதாரத்தைச் சொன்னார்; அது அயர்வறும் அமரர்கள் அதிபதியாயிருந்த வோபாதியிறே இவ்வவதாரங்களைப் பற்ற; ஸர்வாதிகனான தான் இவற்றோடு வைஜாதீயனானான்; அவன் க்ரமத்திலே பிறக்கச்செய்தே, அநுஸந்தாநத்தில் பதற்றத்தால் ஏககாலத்திலே இரண்டு அவதாரம் போலேயிருக்க அருளிச்செய்கிறார். (ஆனான்) வடிவும் செயலும் சொல்லும் தஜ்ஜாதீயர்க்கு அடுத்தவையாயிருக்கை. இவைதான் வித்யாவதாரங்கள். இதுக்கு அடி என்னென்னில், (என்னில் தானாய சங்கே) என்பக்கல் தனக்கு உண்டான ஸங்காதிசயத்தாலே என்னுதல்; என்னைக் குறித்து, தான் ஆனவை - தன் அவதாரங்கள், சங்கே – மஹாஸங்க்யை என்னுமத்தனை. அங்ஙனன்றிக்கே, சங்கே – மஹாஸங்க்யையளவோ? முடிவுண்டோ? "பஹுஶநி" என்னுமித்தனை.

விளக்கம் - (ஆனான் ஆனாயன்) – பசுக்களைக் காப்பாற்றும் ஆயன் அவன் ஆனான் என்று கருத்து. பசுக்களின் நாதன் இடையனாகப் பிறந்து, அந்தக் குலத்திற்கு ஏற்ப பசுக்களைக் காப்பாற்றி நின்றான். இது இடையனாகப் பிறந்த காரணத்தினால் ஆகும். அத்துடன் நின்றானா என்றால், இல்லை என்கிறார். (மீனோடு ஏனமும் தான் ஆனான்) - முதலில் க்ருஷ்ணாவதாரத்தை உரைத்தார். அவன் அயர்வறும் அமரர்களின் அதிபதியாக உள்ளபோதிலும், அனைத்தையும் நியமிப்பவன் என்ற காரணத்தினால், தன்னால் நியமிக்கப்படும் மீன் போன்றவைகளாகவும் அவதாரம் கொள்ள விருப்பம் கொண்டான். ஆகவே அவற்றை ஒத்த பிறவிகள் எடுத்தான். அவன் மீன், வராகம் போன்ற அவதாரங்களை ஒன்றாக எடுக்காமல் வரிசையாக, ஒன்றன் பின் ஒன்றாக எடுத்தான்; ஆனாலும் இவர் ஏன் "மீனோடு ஏனம்" என்று ஒன்றாக அவதாரம் செய்தது போன்று உரைக்கிறார்? அவதார விஷயத்தில் ஆழ்ந்த அனுபவம் செய்துவிட்டதால், பதற்றம்

அடைந்து, நிலைதடுமாறி ஒரே சமயத்தில் இரண்டு அவதாரங்களையும் எடுத்தது போன்று உரைத்தார். (ஆனான்) - இவன் வடிவம், செயல், சொல் ஆகியவை அந்தந்த பிறவிக்கு மேலோங்கியே உள்ளன. மத்ஸ்யம், கூர்மம் மற்றும் க்ருஷ்ண அவதாரங்கள் மூலம் மிகப் பெரிய சாஸ்த்ரங்கள் வெளிப்பட்டதால் இவை வித்யா அவதாரங்கள் ஆகும். எப்படி? மத்ஸ்ய அவதாரத்தில் மநு போன்றவர்களுக்கு உபதேசம் செய்தான்; வராக அவதாரத்தில் ஸ்ரீபூமாதேவிக்கு உபதேசம் செய்தான்; க்ருஷ்ணனாக நின்று ஸ்ரீமத் பகவத்கீதையை உபதேசித்தான். இந்த அவதாரங்களைக் காணும்போது அயர்வறும் அமரர்கள் அதிபதியாக நின்றது க்ருஷ்ணாவதாரத்தில் மட்டுமே வெளிப்படுவதால் அதனை முதலில் அருளிச்செய்தார். இந்த அவதாரங்களை இவன் ஏன் எடுத்தான்? (என்னில் தானாய சங்கே) – என்னிடம் அவனுக்கு ஏற்பட்ட அளவு கடந்த அன்பு காரணமாகவே ஆகும் என்கிறார். இப்படியாக என் பொருட்டு அவன் எடுத்த அவதாரங்கள் கோடி, மஹாகோடி, சங்கம், மஹாசங்கம் என்று பலவாகும். அல்லது அந்த அவதாரங்களுக்கு முடிவு உள்ளதோ? கீதையில் (4-5) – பஹூநி - நான் பலவாகிறேன் – என்றான் அல்லவோ?

1-8-9 சங்கு சக்கரம் அங்கையில் கொண்டான்
எங்கும் தானாய் நங்கள் நாதனே

பொருள் – அனைத்து இடங்களிலும் தன்னுடைய அவதாரங்கள் காரணமாக, மிகவும் அருகில் உள்ளவனாகவே இருக்கின்ற நம்முடைய ஸர்வேச்வரன் தனது அழகான திருக்கரங்களில் சங்கு மற்றும் சக்கரம் ஆகியவற்றைத் தரித்துள்ளான்.

அவதாரிகை - இப்படி அவதரிக்குமிடத்தில் ஐச்வரமான சிஹ்நங்களோடே வந்து அவதரிக்கும் என்கிறார்.

விளக்கம் - இப்படியாக அவன் அவதாரம் செய்யும்போது, ஸர்வேச்வரனுக்கு அடையாளம் இவை என்று திகழ்கின்றதான அடையாளங்களுடனேயே அவதரிக்கிறான்.

வ்யாக்யானம் – (சங்குசக்கரம் அங்கையில் கொண்டான்) சிலரை வரீகரிக்க நினைத்தவர்கள், கையில் மருந்து கொண்டு திரியுமாப்போலே, அவதாரங்கள்தோறும் திவ்யாயுதங்களோடே வந்து அவதரிக்கும். திவ்யாயுதங்கள் எல்லாம் அவதாரங்களிலும்

உண்டோ? என்னில், எங்கும் உண்டு; ராஜாக்கள் கறுப்புடுத்துப் புறப்பட்டால், அந்தரங்கர் அபேக்ஷித தசையிலே முகங்காட்டுகைக்காகப் பிரியத் திரிவர்கள்; அது போலே தோற்றாதேயும் நிற்பர்கள். "கூராராழி வெண்சங்கேந்தி வாராய்" என்னும் இவர்களுக்கு அப்படியேயிறே தோற்றுவது. (சங்குச் சக்கரம்) வெறும்புறத்திலே ஆலத்தி வழிக்கவேண்டும் கையிலே திவ்யாயுதங்களை தரித்தான். (எங்கும் தானாய்) தேவமநுஷ்யாதி பேதங்கள்தோறும் தான் வந்து அவதரித்து உளனாய். அன்றிக்கே, ஒருவனைப் பிடிக்க நினைத்து ஊரை வளைவாரைப்போலே, தம்மை விஷயீகரிக்கைக்காக வ்யாபித்தபடியைச் சொல்லுதல். (நங்கள் நாதனே) நம்மை எழுதிக் கொள்ளுகையே ப்ரயோஜநமாக.

விளக்கம் - (சங்குசக்கரம் அங்கையில் கொண்டான்) - ஒரு சிலரை வசீகரம் செய்ய எண்ணுபவர்கள் தங்கள் கைகளில் மாயமருந்துகள் கொண்டு அலைவது போன்று, இவன் தனது ஒவ்வொரு அவதாரத்திலும் திவ்யமான ஆயுதங்களுடனேயே அவதரிக்கிறான். அனைத்து அவதாரங்களிலும் இத்தகைய ஆயுதங்கள் கொண்டுள்ளானோ என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார். அரசர்கள் நகரசோதனைக்காக மாறுவேடம் பூண்டு இரவில் செல்வது உண்டு. அந்த நேரத்தில் அரசனின் அந்தரங்கமான ஊழியர்களும் மாறுவேடம் இட்டுத்திரிவர். ஆனால் அவர்கள் அரசனின் அருகில் இருக்கமாட்டார்கள். என்றாலும் அரசன் விரும்பியவுடன் சட்டென்று அங்கு வந்து நிற்பர். அது போன்றே அவதாரங்களில் இவனுடைய ஆயுதங்கள் மறைந்து நிற்கும், தேவைப்பட்டால் வெளிப்படும் என்கிறார். திருவாய்மொழி (6-9-1) - கூராராழி வெண்சங்கேந்தி வாராய் - அடியார்களின் விரோதிகளை அழிக்கும்போது கூர்மையான திருச்சக்கரமும், அடியார்களுக்கு இன்பமாக உள்ள பரிசுத்தமான நிறம் கொண்ட பாஞ்சஜந்யத்தையும் கொண்டு - என்று கூறுவதற்கு ஏற்ப அல்லவோ உள்ளான்? (சங்குச் சக்கரம்) - இவன் வெறும் திருக்கரங்களுடன் காட்சி அளிக்கும்போதே கண் எச்சில் பட்டுவிடக்கூடாது என்று ஆரத்தி எடுக்கலாம்படி உள்ளான், ஆனால் இப்போது அந்த அழகுடன் திவ்யாயுதங்களின் அழகும் சேர்ந்துள்ளது என்கிறார். (எங்கும் தானாய்) - தேவர்கள், மனிதர்கள் என்றுள்ள வேறுபாடுகள் ஒவ்வொன்றிலும் தான் வந்து அவதரித்தான். அல்லது ஒருவனைப் பிடிப்பதற்காக ஊரையே சுற்றி வளைப்பது போன்று, ஆழ்வாராகிய தான் ஒருவனைப் பற்றுவதற்காக அனைத்து அவதாரங்கள் மூலம் எங்கும்

வ்யாபித்தான் என்று உரைப்பதாகக் கொள்ளளாம். (நங்கள் நாதனே) – நம்மைத் தனக்கு என்று அடிமையாக்கிக் கொள்வதையே அவதாரங்களின் பலன் என்றுள்ள ஸர்வேச்வரன்.

1-8-10 நாதன் ஞாலங்கொள் பாதன் என்னம்மான்
ஓதம்போல் கிளர் வேத நீரனே

பொருள் – அனைவருக்கும் இயல்பாகவே எஜமானனாக உள்ளான்; அப்படிபட்ட எஜமானத் தன்மையை நிலைநாட்டும்விதமாக, அனைத்து உலகிலும் எந்தவிதமான ஏற்றத்தாழ்வும் ஆராயாமல் எங்கும் பரந்து தனது திருவடியை த்ரிவிக்ரமனாக நின்று வைத்தான். இதனால் எனக்கு எஜமானன்; ஸமுத்திரம் போன்று கிளர்ந்து எழுகின்ற வேதங்கள் முலம் கூறப்படும் நீர்மையை உடையவன்.

அவதாரிகை - அவன் நீர்மையைப் பேசப்புக்கு, "நம்மால் பேசப்போமோ? கடல் கிளர்ந்தாற்போலே வேதமே பேசவேண்டாவோ?", என்கிறார்.

விளக்கம் - அவனுடைய நீர்மையைப் பேச முற்படுகிறார். சட்டென்று தனது திருவுள்ளத்தில், "இவனது நீர்மை குறித்து நம்மால் பேசி முடிக்கமுடியுமோ? இதனை, கடல் பொங்கி எழுவது போன்றுள்ள வேதங்கள் அல்லவோ பேசவேண்டும்?", என்கிறார்

வ்யாக்யானம் - (நாதன்) ஸர்வநியந்தாவானவன். (ஞாலம்கொள் பாதன்) வசிஷ்ட சண்டாள விபாக ரஹிதமாக எல்லார் தலைகளிலும் திருவடிகளைப் பரப்பினவன். (என் அம்மான்) இம்மேன்மையையும், நீர்மையையும் காட்டி என்னை அநந்யார்ஹம் ஆக்கினவன். அதவா, (நாதன்) முதற்பாட்டில் சொன்ன சேஷத்வத்தை உடையவன். (ஞாலம்கொள் பாதன்) இரண்டாம் பாட்டில் சொன்ன அவதார ஸௌலப்யத்தை உடையவன். (என் அம்மான்) எனக்குக் கிட்டலாம்படி திருமலையிலே வந்து என்னை அடிமை கொண்டவன். மூன்றாம்பாட்டில் "கண்ணாவான்" என்றத்தை நினைக்கிறார். (ஓதம் இத்யாதி) இவனுடைய இந்நிலைமைகளைப் பேசும்போது கடல் கிளர்ந்தாற் போலே கிளராநின்றுள்ள வேதத்தால் ப்ரதிபாதிக்கப்பட்ட நீர்மையையுடையவன். நீர்மையாவது ஆர்ஜவகுணம்.

விளக்கம் – (நாதன்) - அனைவரையும் நியமிப்பவன். (ஞாலம்கொள் பாதன்) - வசிஷ்டன், சண்டாளன் என்று எந்தவிதமான வேறுபாடுகளையும் எண்ணாமல் அனைவரது தலைகளிலும் தனது திருவடிகளை ஒரே போன்று பரப்பியவன். (என் அம்மான்) – இப்படி அனைத்தையும் நியமிக்கவல்ல மேன்மை மற்றும் அனைவரையும் கைக்கொண்ட நீர்மை ஆகியவை மூலம் என்னைத் தனக்கு மட்டுமே உரிமை என்று ஆக்கிக் கொண்டான். அல்லது வேறுவிதமாகவும் பொருள் உரைக்கலாம். (நாதன்) - முதற்பாசுரத்தில் கூறப்பட்டபடி எஜமானத்தன்மை கொண்டவன். (ஞாலம்கொள் பாதன்) – இரண்டாம் பாசுரத்தில் கூறப்பட்டபடி அவதாரங்கள் என்னும் ஸௌலப்யம் கொண்டவன். (என் அம்மான்) - எனக்கு எளிதில் அடையலாம்படியாகத் திருமலையில் நின்று என்னை அடிமை கொண்டவன். (ஓதம் இத்யாதி) இவனுடைய இத்தகைய உயர்ந்த நிலைகள் குறித்து உரைக்கும்போது, கடல் பொங்கி எழுவது போன்று நிற்கும் வேதங்கள் மூலம் உரைக்கப்படும் நீர்மை உடையவன்.

1-8-11 நீர்புரைவண்ணன் சீர்சடகோபன்
நேர்தல் ஆயிரத்து ஓர்தல் இவையே

பொருள் – நீரின் தன்மையை ஒத்துள்ள தன்மை கொண்டவனாகிய ஸர்வேச்வரனுடைய ஆர்ஜவ குணத்தைக் குறித்து நம்மாழ்வார் இந்தப் பாசுரங்களை அருளிச்செய்தார். ஆயிரம் பாசுரங்களில் இந்தப் பத்து பாசுரங்கள், ஆராய்ந்து அறியத்தக்கவை ஆகும்.

அவதாரிகை – நிகமத்தில், இத்திருவாய்மொழி, எல்லாத் திருவாய்மொழியிலும் அவனுடைய ஆர்ஜவகுணத்தை ஆராய்ந்து சொன்ன பத்து என்கிறார்.

விளக்கம் - அனைத்து திருவாய்மொழிகளிலும், இந்தத் திருவாய்மொழியானது அவனுடைய ஆர்ஜவத்தை நன்றாக ஆராய்ந்து உரைக்கப்பட்ட பத்தாகும் என்று கூறி முடிக்கிறார்.

வ்யாக்யானம் - (நீர்புரை வண்ணன்) ஆக இத்திருவாய்மொழியில் சொல்லிற்றாயிற்று ஸர்வேச்வரனுடைய ஆர்ஜவகுணமாயிற்று. நீரோடு ஒத்த ஸ்வபாவத்தை உடையவனுடைய ஆர்ஜவ குணத்தையாயிற்று சொல்லிற்று. ஆர்ஜவகுணமாவது –

ஸம்ஸாரிகள் விலங்கிப்போனது தனக்கு வழியாம்படி தான் செவ்வையனாகை. (சடகோபன் நேர்தல்) இவைதான், இவ்வர்த்தத்தைக் கடக்க நின்று ஒருவன் கவி பாடுகையன்றிக்கே, இவ்வார்ஜவகுணத்துக்கு இலக்கான ஆழ்வார் அருளிச்செய்தவை. (ஆயிரத்து ஓர்தல் இவையே) ஆயிரத்திலும் வைத்துக்கொண்டு ஓர்ந்து அருளிச் செய்யப்பட்டவை. அதாவது ஸம்ஸாரிகளுடைய செவ்வைக் கேட்டையநுஸந்தித்து அத்தால் இழக்க வேண்டாதபடி அவனுடைய ஆர்ஜவகுணத்தை அநுஸந்தித்து அருளிச் செய்யப்பட்டவை. அன்றிக்கே, ஸம்ஸாரிகளுக்கு ஓரப்படுமவை என்னுதல். "ஆயிரத்திலும் சடகோபன் நீர்புரை வண்ணனுடைய சீரை நேர்ந்த இவை ஓர்தல்" என்று அந்வயம்.

விளக்கம் - (நீர்புரை வண்ணன்) - இந்தத் திருவாய்மொழியில் ஸர்வேச்வரனுடைய ஆர்ஜவகுணம் உரைக்கப்பட்டது. நீரின் தன்மையை ஒத்த குணத்தைக் கொண்டவனின் ஆர்ஜவகுணம் உரைக்கப்பட்டது. இங்கு கூறப்பட்ட ஆர்ஜவகுணம் என்பது என்ன? ஸம்ஸாரிகள் ஒதுங்கியபடியே சென்ற வழியே தனக்குச் செல்வதற்கு ஏற்ற வழி என்றுள்ள ஸ்வபாவம் ஆகும். (சடகோபன் நேர்தல்) – இந்தப் பாசுரங்கள், இப்படிப்பட்ட அர்த்தத்தை உணராமல் நிற்கும் ஒருவன் கூறியது அல்ல, இந்த ஆர்ஜவகுணத்தில் சிக்குண்ட ஆழ்வார் அருளிச்செய்தவை ஆகும். (ஆயிரத்து ஓர்தல் இவையே) – ஆயிரம் பாசுரங்களில் ஆராய்ந்து உரைக்கப்பட்டவை. ஸம்ஸாரிகளின் தன்மை இழப்பைக் கண்டு தானும் அவர்கள் போன்று ஆகிவிடாதபடி, ஸர்வேச்வரனின் ஆர்ஜவகுணத்தை எண்ணி அருளிச் செய்யப்பட்டவை ஆகும். "ஆயிரத்திலும் சடகோபன் நீர்புரை வண்ணனுடைய சீரை நேர்ந்த இவை ஓர்தல்" என்று வரிசைப்படுத்துக.

வ்யாக்யானம் - முதற்பாட்டில், நித்யவிபூதியிலுள்ளரோடு செவ்வையனாய்ப் பரிமாறும்படியை அருளிச்செய்கிறார். இரண்டாம் பாட்டில், லீலாவிபூதியிலுள்ளாருடன் செவ்வையனாய்ப் பரிமாறும்படியை அருளிச்செய்தார். மூன்றாம் பாட்டில் இரண்டு விபூதியிலுள்ளார்க்கும் முகங்கொடுக்கைக்காகத் திருமலையிலே நிற்கிறபடியை அருளிச்செய்தார். நாலாம் பாட்டில், அவ்வார்ஜவகுணம் தம்மளவிலே பலித்தபடியை அருளிச்செய்தார். அஞ்சாம் பாட்டில், "நான் அவன் குணங்களை விரும்புமாபோலே அவனும் என் தேஹத்தை விரும்பாநின்றான்" என்றார். ஆறாம் பாட்டில், "என்னுடைய தேஹத்தினளவன்றிக்கே, என்னுடைய ஆத்மாவையும் கைக்கொண்டான்", என்றார்.

ஏழாம் பாட்டில், "அவ்வளவுமல்ல, நித்யவிபூதியில் பண்ணும் ஆதரத்தை என்பக்கலிலே பண்ணினான்", என்றார். எட்டாம் பாட்டில், "என்னைச் சுட்டி அவன் பிறந்த பிறவிகளுக்கு முடிவில்லை", என்றார். ஒன்பதாம் பாட்டில், "இப்படிப் பிறந்த பிறவிகள் தோறும் தன் ஐச்வர்யத்தோடே வந்து அவதரித்தான்", என்றார். பத்தாம் பாட்டில், "அவனுடைய ஆர்ஜவகுணத்தைப் பேசும்போது வேதமே பேசவேணும்", என்றார். நிகமத்தில், "இத்திருவாய்மொழி ஸம்ஸாரிகளுக்கு எப்போதும் ஒக்க அநுஸந்திக்கபடும்", என்றார்.

விளக்கம் - முதல் பாசுரத்தில் நித்யஸூரிகளுடன் செம்மையுடன் பழகும் தன்மையை உரைத்தார். இரண்டாம் பாசுரத்தில் இந்த உலகில் உள்ளவர்களுடன் செம்மையுடன் பழகுவதை உரைத்தார். மூன்றாம் பாசுரத்தில் அந்த உலகில் உள்ளவர்கள், இந்த உலகில் உள்ளவர்கள் ஆகிய இருவருக்கும் தனது திருமுகத்தைக் காண்பிக்க எண்ணி திருமலையில் நின்றதை உரைத்தார். நான்காம் பாசுரத்தில் இவனுடைய இப்படிப்பட்ட ஆர்ஜவகுணம் தன் விஷயத்தில் வெளிப்பட்டதைக் கூறினார். ஐந்தாம் பாசுரத்தில், தான் அவனுடைய குணங்களை விரும்புவது போன்று, அவன் தனது சரீரத்தை விரும்பியபடி உள்ளதைக் காண்பித்தார். ஆறாம் பாசுரத்தில், "எனது சரீரம் மட்டும் அல்லாமல், ஆத்மாவையும் கைக்கொண்டான்", என்றார். ஏழாம் பாசுரத்தில் - தனக்கு மிகவும் விரும்பமான பரமபதத்தின் மீது அவன் கொள்ளும் ஈடுபாட்டை என் மீதும் கொண்டான் - என்றார். எட்டாம் பாசுரத்தில் – என்னைக் காரணம் காண்பித்து அவன் எடுத்த அவதாரங்களுக்கு எல்லையே இல்லை – என்றார். ஒன்பதாம் பாசுரத்தில் – இப்படியாக உள்ள அனைத்து அவதாரங்களிலும் அவன் தனது ஸர்வேச்வரத்தன்மை என்பது சற்றும் குறையாமல் வந்தான் - என்றார். பத்தாம் பாசுரத்தில் - அவனுடைய ஆர்ஜவகுணத்தைப் பற்றி வேதங்கள் மட்டுமே முற்றிலும் கூற இயலும் – என்றார். இறுதியாக - இந்தத் திருவாய்மொழி ஸம்ஸாரிகளால் எப்போதும் ஆராய்ந்து கொள்ளப்படும் – என்றார்.

திருவாய்மொழி முதற்பத்து எட்டாம் திருவாய்மொழி ஸம்பூர்ணம்

முதற்பத்து ஒன்பதாம் திருவாய்மொழி
இவையும் ப்ரவேசம்

மூலம் - கீழில் திருவாய்மொழியில், அவனுடைய ஆர்ஜவகுணாநுஸந்தாநம் பண்ணினார்; இப்படி அநுஸந்தித்தார் விஷயத்தில் ஸர்வேச்வரன் இருக்கும்படியை அருளிச்செய்கிறார் இதில். ஸர்வேச்வரனாய், ஸ்ரீய:பதியாய், பரமரஸிகனாயிருக்கிறவன், ஆழ்வார் பக்தியிலே துவக்குண்டு இவரோடே ஏகரஸனாயிருந்தான்; ஆழ்வாராகிறார் - கீழில் ஆர்ஜவகுணாநுஸந்தாநத்தாலே அவன் பக்கலிலே பெரிய விடாயையுடையரானார்; "இது நமக்கு நல்ல வாய்ப்பாயிருந்தது" என்று பார்த்து, அர்ஜுனன் விபூதிச்ரவணத்தாலே "விபூதிமானாவனனைக் காணவேணும்" என்று அபேக்ஷிக்க, அதுக்கு உறுப்பாக "திவ்யம் ததாமி தே சக்ஷு:" என்கிறபடியே திவ்யசக்ஷுஸ்ஸைக் கொடுத்து வைச்வரூப்யத்தைக் காட்டினாப்போலே, இவர்க்கு தன்னை அநுபவிக்கைக்கீடான விடாயைப் பிறப்பித்துத் தன்னை அநுபவிப்பிக்கிறான். நித்யவிபூதியிலுள்ளாரோடு பரிமாறுமாபோலே பரிமாறக் கோலி; அதாவது பிராட்டிமாரோடு பரிமாறுவது, மஹிஷிகளான முறையாலே; திருவடியோடு பரிமாறுவது, வாஹநமான முறையாலே; திருவனந்தாழ்வானோடு பரிமாறுவது, படுக்கையான முறையாலே; இப்படி அவர்களோடு ஓரோ முறையாலே பரிமாறும் பரிமாற்றமெல்லாம் இவரொருவரோடு பரிமாறுகிறானாய், அதுதன்னை, குளப்படியிலே கடலை மடுத்தாற்போலேயன்றிகே, பொறுக்கப் பொறுக்கப் பரிமாற, இவரும் அவனை ஸர்வேந்த்ரியத்தாலும் ஸர்வகாத்ரத்தாலும் யதாமநோரதம் அநுபவித்து, அவ்வநுபவ ஜநித ப்ரீதியாலே அவனைப் பேசி அநுபவிக்கிறார்.

விளக்கம் - கடந்த திருவாய்மொழியில் ஸர்வேச்வரனின் ஆர்ஜவ குணத்தை எண்ணியபடி இருந்தார். இப்படியாக அவனுடைய ஆர்ஜவகுணத்தை எண்ணியபடியே உள்ளவர்கள் விஷயத்தில் ஸர்வேச்வரன் எவ்விதமாக உள்ளான் என்பதை இந்தத் திருவாய்மொழியில் அருளிச்செய்கிறார். இரண்டு பக்கமும் காதல் ஏற்பட்டதால் உண்டாகும் இன்பம் என்பது மிகவும் இனிமையான ஒன்றாகும் என்பதைத் திருவுள்ளம் பற்றியவராக, ஸர்வேச்வரனுக்கு ஆழ்வார் மீது உண்டான விருப்பத்தையும், ஆழ்வாருக்கு அவன் மீது உண்டான விருப்பத்தையும் ஒருசேர அருளிச்செய்கிறார். அதாவது, ஸர்வேச்வரனாகவும், ஸ்ரீய:பதியாகவும், அனைத்தையும் ஆதரித்தபடியும் உள்ள எம்பெருமான் ஆழ்வாரின் பக்தியில் ஈடுபட்டவனாக, அவருடன் கலந்து இனிமையில் ஒன்றானான். ஆழ்வாரின்

நிலைமை எப்படி இருந்தது என்றால், இதுவரை அவனுடைய ஆர்ஜவ குணத்தில் நிலை நின்றதால், அதிகமான தாகம் எடுத்தவன் தண்ணீரை எதிர்நோக்குவது போன்று, அவன் விஷயத்தில் இருந்தார். யுத்தபூமியில் க்ருஷ்ணன் கீதையை உபதேசித்தபடி நின்றபோது அர்ஜுனன் தனது மனதில், "இவனைப் பற்றி முற்றிலுமாக அறிய இதுவே சிறந்த வாய்ப்பாக உள்ளது", என்று எண்ணினான்; ஆகவே அவன் க்ருஷ்ணனிடம், "இந்த உலகத்தையே உருவமாகக் கொண்டவனை நான் காணவேண்டும்", என்றான். இதனை அவன் கீதையில் (11-3) – ஏவமேதத்யதாத்த த்வம் ஆத்மாநம் பரமேச்வர த்ரஷ்டும் இச்சாமி தே ரூபம் ஐச்வரம் புருஷோத்தம – பரமேச்வரனே! புருஷோத்தமா! உன்னைப் பற்றி நீ உரைத்தபடி உன்னுடைய ஸர்வேச்வர ரூபத்தை நான் காண விரும்புகிறேன் - என்று வேண்டி நின்றான். அதற்கு ஏற்றபடி கீதை (11-8) – திவ்யம் ததாமி தே சக்ஷு: – உனக்கு நான் ஞானக்கண்களை அளிக்கிறேன் - என்று கூறியதற்கு ஏற்ப, திவ்யமான கண்களை அர்ஜுனனுக்கு அளித்து, உலகமே தனது உருவமாக இருக்கின்ற ரூபத்தைக் காண்பித்தான்.

இது போன்றே ஆழ்வாருக்குத் தன்னை அனுபவிப்பதற்கு ஏற்றதான பக்தி ரூபத்துடன் கூடிய ஞானத்தை ஏற்படுத்தி, தன்னை அனுபவிக்கும்படிச் செய்கிறான். அதாவது நித்யவிபூதியான பரமபதத்தில் உள்ளவர்களுடன் தான் கலந்து நிற்பது போன்று ஆழ்வாருடனும் தான் கலந்து நிற்க எண்ணியவனாக, தன்னை அவர் அனுபவிக்கும்படிச் செய்தான். அவன் பிராட்டிகளுடன் கலந்து நிற்பது, அவர்கள் தன்னுடைய பட்ட மஹிஷிகள் என்பதால் ஆகும்; அவன் கருடனுடன் கலந்து நிற்பது, தன்னுடைய வாகனம் என்பதால் ஆகும்; அவன் ஆதிசேஷனுடன் கலந்து நிற்பது, தன்னுடைய படுக்கை என்பதால் ஆகும். இவ்விதம் அவர்கள் ஒவ்வொருடனும், ஒவ்வொரு காரணத்தினால் கலந்து நிற்கும் அவன், அந்த அனைத்துக் காரணங்களையும் சேர்த்து இவருடன் பழகுகிறான். மாடு முதலானவற்றின் குளம்பு பதிந்த சிறிய பள்ளத்தில் கடலைக் கொண்டு வந்து புகுத்துவது போன்ற சிரமமான செயல் போல அல்லாமல், தன்னை அவருக்குப் பொறுக்கலாம்படியாகச் சிறுகச்சிறுகப் பரிமாறினான். இவரும் அவனைத் தனது அனைத்து இந்த்ரியங்களாலும் (இந்த திருவாய்மொழியில் - நெஞ்சில் உளான், நாவில் உளான், கண்ணில் உளான் – என்றது காண்க), அனைத்து உறுப்புக்களாலும் (ஒக்கலையான், தோளிணையான், நெற்றியுளான், உச்சியுளான் - என்பது காண்க) தான்

விரும்பியபடி அனுபவித்தார். அந்த அனுபவம் காரணமாக ஏற்பட்ட ப்ரீதியால் அவனுடைய குணங்களைப் பேசி மேலும் அனுபவிக்கிறார்.

1-9-1 இவையு மவையு முவையும் இவரு மவரு முவரும்
யவையும் யவருந் தன்னுள்ளே ஆகியு மாக்கியுங் காக்கும்
அவையுள் தனிமுதலெம்மான் கண்ணபிரானென் னமுதம்
சுவையன் திருவின் மணாளன் என்னுடைச் சூழலுளானே.

பொருள் - அருகில் உள்ள பொருள்களும், தூரத்தில் உள்ள பொருள்களும், நடுவில் உள்ள பொருள்களும், அருகில் உள்ள சேதனர்களும், தொலைவில் உள்ள சேதனர்களும், அனைத்து அசேதனங்களும், அனைத்து சேதனர்களும் ப்ரளயகாலத்தில் தனக்குள்ளே இருக்கும்படியாக வைத்துக் காப்பாற்றுகிறான்; பின்னர் அவற்றை மீண்டும் படைத்து, ரக்ஷிக்கிறான். அவை அனைத்திற்கும் அவனே அந்தர்யாமியாகவும் உள்ளான். அவற்றுக்கான உற்பத்திக்கு ஈடில்லாத காரணமாக உள்ளான். எனக்குத் தலைவனாகவும் உள்ளான். இவனே க்ருஷ்ணனாகவும் அவதரித்து தனது எளிமையைக் காண்பித்தான். எனக்கு அமிர்தம் போன்று இனிமையாக உள்ளான். இப்படிப்பட்டவனும், பெரியபிராட்டியாரின் நாயகனும் ஆகிய அந்த ஸர்வேச்வரன் என்னுடைய அருகில் எப்போதும் உள்ளான்.

அவதாரிகை - ஸ்ருஷ்ட்யாதி ஹேதுபூதனுமாய், ஸர்வாந்தராத்மாவுமான க்ருஷ்ணனாவன் என்னுடைய பர்யந்தத்தை விட்டுப்போகமாட்டாதபடியானான் என்கிறார். அவனுடைய குணாநுபவத்தோடு விபூத்யநுபவத்தோடு வாசியில்லையிறே இவர்க்கு. முதல் திருவாய்மொழியிலே பரக்க அநுபவித்த இத்தை விசதமாயிருக்கையாலே திரள அநுபவிக்கிறார்.

விளக்கம் - படைத்தல் போன்ற அனைத்து செயல்களுக்கும் காரணமாக உள்ளவனும், அனைத்திற்கும் அந்தர்யாமியாக உள்ளவனும் ஆகிய க்ருஷ்ணன் என்னுடைய அருகிலிருந்து அகன்று செல்லவே இயலாதபடி ஆனான் என்கிறார். அவனுடைய மேன்மை, குணம் போன்றவற்றை அனுபவித்தபடி உள்ள இவர், அவனுடைய செல்வங்கள் குறித்து உரைத்து, அவற்றை அனுபவிப்பது ஏன் என்ற கேள்விக்கு விடை

அருளிச்செய்கிறார். அதாவது அவனுடைய குணங்களை அனுபவிப்பதற்கும், செல்வங்களை அனுபவிப்பதற்கும் இவருக்கு எந்தவிதமான வேறுபாடும் தோன்றுவதில்லை. முதல் திருவாய்மொழியில் (1-1-4), சுருக்கமாக அனுபவித்த இவற்றை இங்கு வெளிப்படையாக விவரித்து அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் - (இவையும் அவையும் இத்யாதி) சித்வர்க்கத்தையும் அசித்வர்க்கத்தையும் திரளச் சொல்லுகிறது. (தன்னுள்ளேயாகவும்) "இவையுமவையும்" என்று இங்ஙனே பிரித்து வ்யவஹரிக்கவொண்ணாதபடி "ஸதேவ" என்கிறபடியே தான் என்கிற சொல்லுக்குள்ளேயாம்படி தன்மேலே ஏறிட்டுக்கொண்டு தரிக்கும்படியைச் சொல்லுகிறது. (ஆக்கியும்) "பஹுஸ்யாம்" என்கிறபடியே தன்பக்கலிலேநின்றும் பிரிந்து, நாமரூப விபாகார்ஹமாம்படி பண்ணியும். (காக்கும்) ஸ்ருஷ்டமான பதார்த்தங்களை ஈரக்கையாலே தடவி ரக்ஷிக்கும்படி. (அவையுள் தனிமுதல்) ஸ்ருஷ்டமான பதார்த்தங்களிலே, இவை ப்ரவிருத்தி நிவ்ருத்த்யாதிகளுக்கு யோக்யமாம்படி அந்தராத்மாவாய் நிற்கும் நிலையைச் சொல்லுகிறது. இது பின்னை, "ஆக்கியும்" என்று ஸ்ருஷ்டியைச் சொன்னபோதே சொல்லிற்றாகாதோ? என்னில்; "ததநுப்ரவிச்ய" என்று இவற்றினுடைய வஸ்துத்வ நாமபாக்த்வங்களுக்காகப் பண்ணும் அநுப்ரவேசத்தைச் சொல்லுகிறது அங்கு; இங்கு இவற்றுக்குச் சொல்லும் வாசக சப்தம் தன்னளவிலே பர்யவஸிக்கும்படியாக நிற்கும் நிலையைச் சொல்லுகிறது.

விளக்கம் – (இவையும் அவையும் இத்யாதி) - சித் மற்றும் அசித் கூட்டத்தை ஒரே கூட்டமாக உரைக்கிறார். (தன்னுள்ளேயாகவும்) - இவை, அவை என்று சித் மற்றும் அசித் கூட்டத்தில் உள்ளதைப் பிரித்துக் காண்பிக்க இயலாதபடி, சாந்தோக்ய உபநிஷத் (6-2) - ஸத் ஏவ – ஸத் என்பது மட்டுமே இருந்தது – என்று கூறுவதற்கு ஏற்ப, "தான்" என்ற பதத்திற்குள் அனைத்தும் உள்ளன என்று கூறலாம்படி, அனைத்தையும் அவன் தன் மேலே ஏறிட்டுக்கொண்டு நின்ற நிலையைக் கூறினார். அதாவது ஸம்ஹாரம் செய்யும்போது அவை அனைத்தும் தன்னுள்ளே நிற்கும்படிச் செய்து - என்று கருத்து. (ஆக்கியும்) - ஸ்ருஷ்டி செய்து. தைத்திரீய உபநிஷத் – பஹுஸ்யாம் – நாம் பலவாகக் கடவேன் – என்று கூறுவதற்கு ஏற்ப தன்னிடத்திலிருந்து அவற்றைப் பிரித்து, அவைகளுக்குப் பெயர் மற்றும் உருவங்களில் வேறுபாடுகள் ஏற்படும்படியாகச் செய்து. (காக்கும்) – தான் ஸ்ருஷ்டித்த அனைத்தையும் தனது ஈரக்கையால் காக்கிறபடி.

களைத்துப் போனவர்களின் சிரமத்தைப் போக்கும்விதமாக தனது திருக்கரத்தால் ஸ்பர்சித்தல். (அவையுள் தனிமுதல்) - தான் உண்டாக்கிய பொருள் அனைத்தும் செயல்கள் செய்தபடி இருத்தல், செயல்கள் ஏதும் செய்யாமல் இருத்தல் ஆகியவையாக மாற்றம் அடையும்படி அவற்றின் அந்தர்யாமியாக நிற்பதைக் கூறுகிறார். இப்படியாக இவன், அவற்றின் அந்தராத்மாவாக நிற்கும் நிலை என்பது - அநேந ஜீவேநாத்மநாநுப்ரவிச்ய நாமரூபே வ்யாகரவாணி – என்பதற்கு ஏற்ப "ஆக்கியும்" என்ற பதம் மூலம் கூறப்பட்டதான ஸ்ருஷ்டி செய்யும்போதே கூறப்பட்டது அல்லவோ என்று கேட்கலாம். இதற்குச் சமாதானம் உரைக்கிறார். தத் அநுப்ரவிச்ய – அவற்றுள் புகுந்தான் - என்பதற்கு ஏற்ப, அந்தந்த வஸ்துக்கள் இன்ன பெயர், இன்ன ரூபம் கொண்டவை என்று பிரித்து உணர்த்துவதற்காக அவற்றுள் புகுந்ததை "ஆக்கியும்" என்ற பதம் கூறியது; ஆனால் அவற்றை உணர்த்தும் பதங்கள் தன்னளவில் வந்து நிற்கும்படியான ஸர்வேச்வரத் தன்மையுடன் கூடிய நிலை இங்கு கூறப்பட்டது.

வ்யாக்யானம் - (எம்மான்) தன் விபூதி விஷயமாகத் தனக்கு உண்டான ஓரத்தைக் காட்டி என்னை அநந்யார்ஹமாக்கினவன். (கண்ணபிரான்) இப்படியிருக்கிறவன்தானே க்ருஷ்ணன் என்கையும், அவன்தான் கண்ணுக்குத் தோற்றி நின்று உபகரிக்குமென்கையும். (என் அமுதம்) தேவர்கள் அதிகாரிகளாம் அம்ருதத்தில் வ்யாவ்ருத்தி. (சுவையன்) அவ்வம்ருத்தத்துக்கு போக்த்ருத்வமில்லையே. சுவையன் - பரமரஸிகன். இந்த ரஸிகத்வத்துக்கு ஊற்றுவாய் சொல்லுகிறது. (திருவின் மணாளன்) இவருடைய அம்ருதம் ஒரு மிதுனமாயிற்று. (என்னுடைச் சூழலுளானே) பெரியபிராட்டியார் "அகலகில்லேனிறையும்" என்னப்பிறந்தவன், என் பரிஸரத்திலே வர்த்திக்கை தன் பேறாக வர்த்தியா நின்றான். "யஸ்ய ப்ரஸாதே ஸததம் ப்ரஸீதேயுரிமா: ப்ரஜா: ஸ ராமோ வாநரேந்தரஸ்ய ப்ரஸாதமபி காங்க்ஷதே" என்கிறபடியே; "லோகநாத: புரா பூத்வா ஸுக்ரீவம் நாதமிச்சதி". தம்மையொழிந்தார்க்கெல்லாம் நாதரானவர் ஸுக்ரீவனை நாதனாக இச்சியா நின்றார். கிடைப்பது, கிடையாதொழிவது, தாம் முந்துற முன்னம் இச்சியா நின்றார்.

விளக்கம் - (எம்மான்) தன்னுடைய நித்யவிபூதி, லீலாவிபூதி என்பதான விபூதி விஷயங்களில் தனக்கு ஏற்பட்ட பக்ஷபாதத்தைக் காண்பித்தபடி என்னைத் தனக்கு மட்டுமே உரியவன் என்று ஆக்கிக்கொண்டான். (கண்ணபிரான்) - இப்படி உள்ளவன்

யார் என்றால் க்ருஷ்ணன். அல்லது கண்ணபிரான் என்பதற்குக் கண்களுக்குப் புலம்படும்படியாக நின்று உதவிகள் செய்பவன் என்றும் கொள்ளலாம். (என் அமுதம்) - தேவர்களுக்கு மட்டுமே உரிமையுள்ளதான அமிர்தத்தில் உள்ள வேறுபாடு. (சுவையன்) அந்த அமிர்தத்திற்கு என்ன வேறுபாடு என்றால், அதில் சுவையை அனுபவிக்கும் தன்மை இல்லை; அதாவது அந்த அமிர்தம் எதனையும் அனுபவிக்கும் திறன் பெற்றது அல்ல. ஆனால் இந்த அமிர்தமான ஸர்வேச்வரன் பரமரசிகன் ஆவான். இந்தச் சுவைக்கு ஓர் தொடக்கம் உள்ளது. எது? (திருவின் மணாளன்) - இவர் அனுபவிக்கும் அமிர்தம் ஒன்றல்ல, ஒரு ஜோடி என்றானது. (என்னுடைச் சூழலுளானே) - பெரியபிராட்டியார் திருவாய்மொழியில் (6-10-10) – அகலகில்லேன் - என்று கூறுவதற்கு ஏற்ப வந்து அவதரித்தவன், என்னுடைய அருகில் வாழ்வது என்பதையே தனது பேறாகக் கொண்டுள்ளான். "திருவின் மணாளன்" என்பதன் மூலம் அவனுடைய ஸர்வேச்வரத் தன்மையையும், "என்னுடையச் சூழல் உளானே" என்பதன் மூலம் அவனுடைய ஸௌலப்யத்தையும் உணர்த்தியது எதனைப் போன்று உள்ளது என்பதற்கு உதாரணம் காண்பிக்கிறார். இராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம் (4-21) – யஸ்ய ப்ரஸாதே ஸததம் ப்ரஸீதேயுரிமா: ப்ரஜா: ஸ ராமோ வாநரேந்தரஸ்ய ப்ரஸாதமபி காங்க்ஷதே - எந்த இராமனின் கடாக்ஷம் காரணமாக இந்த மக்கள் அனைவரும் எப்போதும் தெளிவான மனதுடன் உள்ளார்களோ, அப்படிப்பட்ட இராமன் சுக்ரீவனின் அருளை தூய்மையான மனதுடன் விரும்புகிறான் – என்றும், கிஷ்கிந்தா காண்டம் (4-18) – லோகநாத: புரா பூத்வா ஸுக்ரீவம் நாதமிச்சதி - தன்னைத் தவிர்த்து உளள அனைத்திற்கும் நாதனாக உள்ள இராமன், சுக்ரீவனைத் தனது நாதனாக எண்ணுகிறான் - என்றும் கூறுவதற்கு ஏற்ப இங்கு அனைத்துமாக உள்ள ஸர்வேச்வரன் தன் அருகில் உள்ளதையே விரும்பி நிற்கிறான் என்கிறார்.

1.9.2 சூழல் பலபல வல்லான் தொல்லையங் காலத்துலகை
கேழலொன் றாகியிடந்த கேசவனென்னுடை யம்மான்
வேழ மருப்பை யொசித்தான் விண்ணவர்க் கொண்ணலரியான்
ஆழ நெடுங்கடல் சேர்ந்தான் அவனென்னருகலிலானே

பொருள் - தன்னுடைய அடியார்களைத் தன் பக்கம் வசீகரம் செய்வதற்கு ஏற்ற சூழ்ச்சியாக எடுத்துக்கொண்ட அவதாரங்கள் பலவற்றையும் தன்னுடைய இச்சையால்

செய்தவன்; மிகவும் பழையதாகவும், அழகானதாகவும், வராஹ கல்பத்தின் தொடக்கத்தில் இருந்ததும் ஆகிய இந்தப் பூமியை வேறு ஈடில்லாத வராஹ அவதாரம் கொண்டு, தனது பற்களால் எடுத்தவன்; என்னுடைய ஸ்வாமியாகவும், க்ருஷ்ணனாகவும் வந்து அவதரித்து, தன்னை எதிர்த்த குவலயாபீடம் என்ற யானையின் கொம்பை ஒடித்தவன்; மிகுந்த ஞானம் கொண்ட தேவர்களுக்கும் எண்ணுதற்கு அரியவன்; அடியார்களுக்கு உதவுவதற்காக நீண்ட திருப்பாற்கடலில் எப்போதும் கண் வளர்ந்தபடி உள்ளவன் - இப்படிப்பட்ட ஸர்வேச்வரன் என் அருகில் எப்போதும் உள்ளவன் ஆனான்.

அவதாரிகை – என் பரிஸரத்திலே வர்த்தித்தவன், அது ஸாத்மித்தவாறே, என் அருகே வந்து நின்றான் என்கிறார்.

விளக்கம் – என்னுடைய சுற்றுப்புறங்களில் வசித்தபடி இருந்தவன், அதனை நான் பொறுத்துக் கொண்டவுடன் என் அருகில் வந்து நின்றான் என்கிறார்.

வ்யாக்யானம் - (சூழல் பலபல வல்லான்) இப்போது சூழலென்கிறது அவதாரத்தை. அவதாரத்தை "சூழல்" என்பானென்? என்னில்; சேதநரை அகப்படுத்திக் கொள்ளுமதாகையாலே. ஜாதிபேதத்தையும், அவாந்தர பேதத்தையும் பற்ற (பலபல) என்கிறது. (வல்லான்) கர்ம நிபந்தநமாகப் பிறக்குமவனுக்கும் முடியாத பிறவிகளைப் பிறக்கவல்லான். கர்மம் செய்யவல்லதன்றிறே, அநுக்ரஹம் செய்யவல்லது. அவற்றிலே ஒரு சூழல் சொல்லுகிறார், (தொல்லை) வாராஹகல்பத்தின் ஆதியிலே. (அம்காலத்து) தன் வடிவைக் கண்ணுக்கு இலக்காக்கின காலமிறே; அத்தைப் பற்ற அம் காலம் என்கிறார். (உலகை) ஒரு திருவடி திருவநந்தாழ்வானுக்காகத்தான் இப்படிப் படப்பெற்றதோ? ஸங்கல்பத்துக்கும் பாத்தம் போராத பூமிக்காகக் கிடீர்! (கேழல் ஒன்றாகி) தன் மேன்மையோடு அணைந்திருப்பதொரு வடிவைத்தான் கொள்ளப்பெற்றதோ? (ஒன்றாகி) பின்பு ஸர்வசக்தியான தானே "இவ்வடிவைக் கொள்ள" என்னிலும் ஒண்ணாதபடி அத்விதீயமாயிருக்கிறபடி. பூமி, ப்ரளயத்திலே அகப்பட்டவாறே, நீருக்கும் சேற்றுக்கும் இறாயாத வடிவைக் கொண்டவித்தனை அவன்தான்; அது அவன் கொண்ட வடிவாகையாலே அழிவுக்கிட்ட வடிவு தனக்கே ஆலத்தி வழிக்கவேண்டியிருக்கும்; பன்றியாம் தேசிறே. (இடந்த) அஜ்ஜாதிக்காக உள்ளதொரு குணமாயிற்றுச் செருக்கு; ஸ்ரீய:பதி அவ்வடிவைக் கொண்டால் சொல்லவேண்டாவிறே. அண்டபித்தியிலே சேர்ந்த

பூமியைப் புக்கு எடுத்துக்கொண்டு ஏறினான். (கேசவன்) ப்ரசஸ்த கேசவன். அப்போதைத் திருமேனியும் உளைமயிருமாய் நின்ற நிலை. (என்னுடை அம்மான்) ஸம்ஸார ப்ரளயங் கொண்ட என்னை எடுத்தவன். (வேழ மருப்பை ஒசித்தான்) குவலயா பீடத்தினுடைய மருப்பை அநாயாஸேந முறித்தவன். அப்படியே என்னுடைய மதக்களிறு ஐந்தினையும் சேரி திரியாமல் பண்ணினவன்; விரோதி நிரஸந சீலனென்றபடி. (விண்ணவர்க்கு எண்ணல் அரியான்) தனியே குவலயாபீடத்தோடே பொருதவன், ப்ரஹ்மருத்ராதிகள் மநோரதத்துக்கும் அவ்வருகானவன். (ஆழ நெடுங்கடல் சேர்ந்தான்) அந்த ப்ரஹ்மாதிகள் கூக்குரல் கேட்கத் திருப்பாற்கடலிலே சாய்ந்தருளினவன். ஆழம் உறுத்தாமைக்கு. நெடுமை - தாளும் தோளும் முடிகளும் சமனிலாத பலபரப்பி வேண்டினபடி கண்வளர்ந்தருளுகைக்கு. (அவன் என் அருகலிலானே) அவர்களைப் போலே எனக்கு அதூரவிப்ரக்ருஷ்டமாகவும் நிற்கிறிலன்.

விளக்கம் - சூழல் என்ற பதம் அவதாரத்தைக் கூறுவதாக உள்ளது. அவதாரத்தை ஏன் சூழல் என்று கூறவேண்டும்? சூழ்ச்சியால் அடியார்களைத் தன் வசப்படுத்திக் கொள்வதால் சூழல் என்கிறார். அகப்படுத்திக் கொள்ளுதல் என்றால் வசீகரித்துக் கொள்ளுதல். ஜாதி வேறுபாடு மற்றும் ஒரே ஜாதியில் உள்ள வேறுபாடு ஆகியவற்றையும் காட்ட "பலபல" என்றார். இங்கு ஜாதி என்பது விலங்கு, தேவன், மனிதன் என்று பலவாக அவதார எடுத்ததைக் குறிக்கும். அவாந்தர பேதம் என்றால் விலங்கு ஜாதியில் பல விலங்குகளாக அவதாரம் எடுத்த நிலை – மச்சம், கூர்மம் போன்றவை; மனிதர்களில் பலவாக அவதாரம் எடுத்த நிலை – பரசுராமன், வாமனன் போன்றவை. (வல்லான்) - கர்மங்களின் விளைவால் பிறக்கும் உயிர்களால் எடுக்க இயலாத பிறவிகளையே இவன் எடுப்பான். ஆனால் கர்மங்களால் பீடிக்கப்பட்டவனுக்கு அல்லாமல், கர்மங்களால் பீடிக்கப்படாமல் உள்ளவனுக்கு இவ்விதம் பல ஜன்மங்கள் ஏற்படுமோ என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார். அதாவது, கர்மங்களின் காரணமாக ஏற்படுகின்ற ஜன்மங்கள் என்பவையே அவனுக்கு அவதாரங்களாக உள்ளன என்றால், அந்தக் கர்மங்கள் நீக்கியவுடன் இவன் அவதாரங்களும் நின்றுவிடும்; ஆனால் இவனுடைய அநுக்ரஹம் என்பது நித்யமாக உள்ளதால் இவனது அவதாரங்களும் தொடர்ந்தபடியே இருக்கும் என்கிறார். அதில் ஒரு அவதாரத்தை இங்கு உரைக்கிறார். (தொல்லை) - வராஹ கல்பத்தின் தொடக்கத்தில். (அங்காலத்து) – இதனை அம்காலம் – அழகான காலம் என்று பிரிக்கவேண்டும். காலத்துக்கு அழகு உண்டா என்ற சந்தேகம் எழலாம். தன்னுடைய

வடிவத்தை அனைவரது கண்களில் படும்படி ஸர்வேச்வரன் வராஹமாக நின்று செய்ததால் அந்தக் காலத்துக்கு அழகு ஏற்பட்டது. இதனால் அம்காலம் என்கிறார். (உலகை) - கருடன், ஆதிசேஷன் ஆகியவர்களுக்காகவோ இவ்விதம் செய்தான்? அல்ல. துளைத்து எடுக்கவேண்டும் என்ற இவனுடைய ஸங்கல்பத்திற்கு ஏற்ற தரம் இல்லாத பூமியைக் காப்பாற்றுவதற்காக அல்லவோ இப்படி ஓர் அவதாரம் செய்தான்! (கேழல்) - தன்னுடைய மேன்மையுடன் சேர்ந்து விளங்கும் அளவிற்குத் தகுதியான ஒரு வடிவத்தை எடுத்துக்கொண்டான். (ஒன்றாகி) - பின்னர் ஒரு காலத்தில், தானே மீண்டும் இதே வடிவம் கொள்ள எண்ணினாலும் இயலாதபடியான, "இதனைப் போன்று இரண்டாவதாக ஏதும் இல்லை" என்று கூறும்படியான வடிவம் எடுத்தான். இந்தப் பூமியானது ப்ரளயத்தில் சிக்குண்டபோது, இதில் உள்ள நீர் மற்றும் சேறு ஆகியவற்றால் மாற்றம் அடைந்து விடாதபடியான வடிவத்தைக் கொண்டான். இது அவனே தன்னுடைய இச்சையால் கொண்ட வடிவம் என்பதாலும், அடியார்களின் ஆபத்து நீக்குவதற்காக எடுத்த வடிவம் என்பதாலும் ஆலத்தி வழிக்கவேண்டும்படியாக, மிகுந்த அழகுடன் உள்ள வடிவம் என்று கருத்து. இப்படிப்பட்ட ஓர் அழகு இந்த வராஹ வடிவத்துக்கு உண்டோ என்றால் நாச்சியார் திருமொழி (11-8) – பன்றியாம் தேசு - என்றது காண்க. (இடந்த) – "எடுத்து" என்று கூறாமல் "இடந்த" என்று கூறியது, செருக்கின் செயல் என்பதால் அதனை விவரிக்கிறார். பன்றியின் ஜாதிக்கு கர்வம் என்பது ஒரு குணம் ஆகும்; மேலும் அந்த வடிவத்தை மஹாலக்ஷ்மியின் நாயகன் எடுத்தால் செருக்கைப் பற்றி மேலும் கூறவேண்டாம் அல்லவோ? மஹாலக்ஷ்மியின் நாயகன் என்பதே கர்வம் ஏற்படக் காரணமாகிவிடும். அத்துடன், இந்த வடிவம் வேறு சேர்ந்துகொண்டது என்கிறார். அண்டத்தின் அடியில் சென்று சேர்ந்து விட்ட பூமியை மீண்டும் எடுத்துக்கொண்டு மேலே வந்தான். (கேசவன்) - "கேழலாய் இடந்தவன்" என்று கூறும்போதே "ஈச்வரன்" என்பது தெளிவாக உள்ளபோது கேசவன் என்று ஏன் தனியாகக் கூறினார்? அந்த வராஹத்தின் பிடரிமுடியின் அழகையும் உரைக்கிறார். அந்தத் திருமேனியும் பிடரிமுடியுமாக நின்ற நிலை. (என்னுடைய) - இப்படியே ஸம்ஸார ப்ரளயத்தில் சிக்குண்டு கிடந்த என்னை எடுத்தவன். (வேழ மருப்பை ஒசித்தவன்) குவலயாபீடம் என்ற கம்சனின் யானையுடைய தந்தங்களை மிகவும் எளிதாக முறித்தவன். இது போன்றே முதல்திருவந்தாதி (47) – மதக்களிறு ஐந்தினையும் சேரி – என்று கூறுவதற்கு ஏற்ப பார்க்கின்ற விஷயங்களில் எல்லாம் கட்டுக்கு அடங்காமல் பாய்ந்து திரிகின்ற ஐந்து புலன்களையும் தடுத்தவன். விரோதிகளை அழிப்பவன் என்று கருத்து. (விண்ணவர்க்கு எண்ணல் அரியான்) – தனி

ஒருவனாக நின்று குவலயாபீடத்துடன் போர் செய்தவன். நான்முகன் போன்றவர்களின் சிந்தனைக்குக் கூட எட்டாதவன். (ஆழ நெடுங்கடல் சேர்ந்தான்) – அப்படிப்பட்ட நான்முகன் போன்றவர்களின் கூக்குரலுக்குச் செவி சாய்க்கும்விதமாகத் திருப்பாற்கடலில் கண்வளர்பவன். அவனது மென்மையான திருமேனிக்கு உறுத்தாதபடி ஆழமாக விளங்கிய திருப்பாற்கடல். இதனையே "ஆழ" என்றார். நெடுமை என்றால் ஈடில்லாத திருவடிகள், திருத்தோள்கள், திருமுடி ஆகியவற்றைப் பலவாக விரித்து நான்முகன் முதலானவர்கள் வேண்டியபடி கண்வளர்பவன். (அவன் என் அருகலிலானே) - ஆனால் அவர்களுக்கு உள்ளது போன்று தூரத்தில் இல்லாமல் எனக்கு மிகவும் அருகில் உள்ளவன்.

1-9-3 அருகலிலாய பெருஞ்சீர் அமரர்களாதி முதல்வன்
கருகிய நீலநன்மேனிவண்ணன் செந்தாமரைக்கண்ணன்
பொருசிறைப் புள்ளுவந்தேறும் பூமகளார்தனிக்கேள்வன்
ஒருகதியின் சுவை தந்திட்டு ஒழிவிலன் என்னோடுடனே

பொருள் – எந்தவிதமான தோஷங்களும் இன்றி, நித்யமாக எல்லையற்ற திருக்கல்யாண குணங்களைக் கொண்டவன்; நித்யஸூரிகளுக்குக் காரணமாக உள்ள முதல்வன், கறுத்த நீலமணி போன்றதான திருமேனி நிறம் கொண்டவன்; அந்த நிறத்திற்கு ஒத்துள்ள சிவந்த தாமரை போன்ற திருக்கண்கள் கொண்டவன்; மகிழ்ச்சி காரணமாக அடித்துக் கொள்ளும்படியான சிறகுகளைக் கொண்ட கருடனைத் தனது வாகனமாக விரும்பி ஏற்றுக்கொள்பவன்; பெரியபிராட்டியின் ஈடில்லாத நாயகனான ஸர்வேச்வரன் – இப்படிப்பட்டவன், என்னுடன் ஒரு வழி மூலமாக ஏற்படும் இனிமையை மட்டும் அளித்துவிட்டு, என்னிடமிருந்து நகர்ந்து விடுபவன் அல்லன்; அதாவது பலவிதங்களிலும் எனக்கு இன்பத்தை அளித்தபடி உள்ளான்.

அவதாரிகை - திருவடி, திருவநந்தாழ்வான், பிராட்டிமார் தொடக்கமானாரோடு ஓரோ வகையாலே பரிமாறுமவன், என்னளவில் ஓரோ வகையில் பரிமாறி விடமாட்டுகிறிலன் என்கிறார்.

விளக்கம் – கருடன், ஆதிசேஷன், பெரியபிராட்டியார் ஆகியோருடன் ஒவ்வொரு விதமாகக் கலந்து நிற்பவன், என்னுடன் ஒரே போன்று அல்லாமல் அனைத்து விதமாகவும் கலந்து பரிமாறி, என்னைவிட்டு அகலாமல் உள்ளான் என்கிறார்.

வ்யாக்யானம் – அருகல் – குறைகை; கேடு. இல் என்பது இல்லாமை; குறைவின்றிக்கே. ஆய – ஆன; நன்றான. ஹேயப்ரத்யநீகமுமாய்க் கல்யாணைகதாநமுமான நிரவதிக குணங்களையுடையனுமாய், அக்குணங்களை நித்யஸூரிகளை ஸதாநுபவம் பண்ணுவிக்குமவனுமாய், அவர்கள் ஸத்தாதிகள் தன் அதீநமாம்படியிருக்கிறவன். (கருகிய நீல நன்மேனி வண்ணன்) கறுத்து நெய்த்துப் பேச்சுக்கு அவிஷயமாம்படி விலக்ஷணமான திருமேனியில் நிறத்தையுடையவன். விலக்ஷணமான திருமேனியில் கறுத்து நெய்த்த நிறத்தையுடையவன்; அவர்களை ஸதாநுபவம் பண்ணி வைக்கும்போது படிவிடும்படி. (செந்தாமரைக் கண்ணன்) அகவாயில் குணங்களுக்கு ப்ரகாசகங்களான திருக்கண்களை யுடையவன். (பொருசிறைப் புள் உவந்தேறும்) ஸர்வேச்வரன் பெரிய திருவடியை மேற்கொள்ளுவதாக நினைத்து "வா" என்றழைத்தால், அவனுடைய அங்கீகாரத்தால் உண்டான ஹர்ஷத்தாலே பெருக்காறு சுழித்தாற்போலே சுழித்துத் தன்னில்தான் பொராநின்றுள்ள சிறகையுடையனாய்க் கொண்டாயிற்றுத் தோற்றுவது. அவனும் "நாம் இவனை மேற்கொள்ளப்பெற்றோமே" என்று திருவுள்ளத்தில் ப்ரீதியோடேயாயிற்று மேற்கொள்ளுவது. (பூமகளார் தனிக்கேள்வன்) புஷ்பத்தில் பரிமளம் வடிவு கொண்டாற் போலேயிருப்பாளாய் போக்யதைக வேஷையான பெரியபிராட்டியார்க்கு வல்லபன் என்றால், இப்படிப்பட்ட ஐச்வர்யத்துக்கு இரண்டாம் விரலுக்கு ஆளில்லாதபடி இருக்கிறவன். (ஒரு கதியின் இத்யாதி) அவர்களோடு பரிமாறுமாபோலே ஒருவழியால் வந்த ரஸத்தைத் தந்து விடுகிறிலன் என்னளவில்; நித்யஸூரிகள் எல்லார் பக்கலிலும் பண்ணும் ஆதரத்தை என் பக்கலிலே பண்ணா நின்றான். (உடனே) "இவன் ஒரு விபூதிமான், அந்யபரன்" என்று தோற்ற இருக்கிறிலன். நித்யவிபூதியில் கேள்வியும் இங்கேயிருந்தேயாமித்தனை. "தண்டாமம் செய்து" என்று நித்யவிபூதியில் பண்ணும் விருப்பத்தைப் பண்ணினானென்றார் கீழில் திருவாய்மொழியில்; இதில் அவ்விபூதியிலு ள்ளாரோடு பரிமாறும்படியை என்னொருவனோடு பரிமாறினான் என்கிறார்.

விளக்கம் - அருகல் என்றால் குறை அல்லது தோஷம். அல்லது அருகல் என்றால் அநித்யம் என்றும் கொள்ளலாம். இங்கு குறைவு என்பதே இல்லாத குணங்கள் கொண்டவன்

என்கிறார். குணத்துக்குத் தோஷம் என்னவென்றால், ஒரு குணத்தை அனுபவித்தவுடன் அதில் த்ருப்தி ஏற்பட்டது என்றால், அது குறைவுள்ள தோஷம் ஆகும். இப்படி இல்லாமல் எல்லையற்ற இன்பம், த்ருப்தி ஏற்படுத்தாத குணங்கள் கொண்டவன். ஹேயப்ரத்யநீகம் என்றால் தள்ளப்படவேண்டியவைகளில் இருந்து மாறுபட்டதும், எல்லையற்றதும் ஆகிய கல்யாண குணங்களை உடையவன் என்று கருத்து. அந்தக் குணங்களை நித்யஸூரிகள் எப்போதும் அனுபவித்தபடி இருக்குமாறு செய்பவன். அவர்களுடைய இருப்பு மற்றும் செயல்பாடுகள் ஆகியவை தன்னுடைய ஏவலுக்கு ஏற்றபடியாக உள்ளவன். (கருகிய நீல நன்மேனி வண்ணன்) - "கருகிய, நீலம், நல்" ஆகிய மூன்று பதங்களையும் இவனுடைய திருமேனியின் நிறத்துக்கு விசேஷணம் என்று உரைக்கிறார். கருமையாகவும், வேறுபட்டு உள்ளதால் சொற்களால் விவரித்துக் கூற இயலாதபடியும், வேறுபட்டு உள்ளதான திருமேனி நிறம் கொண்டவன். அல்லது அனைத்தையும் விட வேறுபட்டதான திருமேனியில் கருமையாக, பளபளப்பான நிறம் கொண்டவன் என்று உரைக்கலாம். இதன் மூலம் நித்யஸூரிகள் தன்னை அனுபவிக்கும்படிச் செய்யும்போது, அவர்கள் தங்களுடைய இருப்பையே இவன் அதீனமாக்கும்படி செய்பவன். இங்கு படிவிடுதல் என்றால் ஜீவனத்தை விடுதல் என்று பொருள். (செந்தாமரைக் கண்ணன்) - வெளிப்படாமல் உள்ளே இருக்கின்ற பல குணங்களும் வெளிப்படும்படியாக, அவற்றை வெளிப்படுத்தும் திருக்கண்கள் கொண்டவன். (பொருசிறைப் புள் உவந்தேறும்) - இதம் மூலம் கருடனைத் தனது வாகனமாகக் கொண்டதால் ஏற்பட்ட மகிழ்வு கூறப்பட்டது. ஸர்வேச்வரன் கருடனின் மீது எழுந்தருளும் பொருட்டு அவனை "வா" என்று அழைத்தால், ஸர்வேச்வரனின் அங்கீகாரம் காரணமாக ஏற்படுகின்ற மகிழ்ச்சியை, வெளிப்படுத்தும்விதமாக, தன்னில் உள்ள பெரிய சிறகுகளை விரித்து நிற்கும் நிலை. ஸர்வேச்வரனும் கருடன் இவ்விதம் வந்து நிற்பதைக் கண்டு, "நாம் இவனை நமது அடியனாக அடைந்தோமே" என்று திருவுள்ளத்தில் மிகுந்த பூரிப்புடன் அவன் மீது எழுந்தருள்கிறான். (பூமகளார் தனிக்கேள்வன்) - மலர் ஒன்றில் நறுமணம் வடிவு கொண்டது போன்றுள்ள பெரியபிராட்டி. இவனுக்கு இனிமையாக உள்ளதே வடிவாகக் கொண்ட பெரியபிராட்டியாரின் நாயகன், இப்படியாக இவளைச் செல்வமாக பெற்ற நிலை மற்றொருவனுக்கு உண்டு என்று இரண்டாம் விரலைக் காண்பித்து எண்ண இயலாதபடி உள்ளவன். (ஒரு கதியின் இத்யாதி) - "அமரர்கள்" என்று வரிசைப்படுத்திப் பொருள் உரைக்கிறார். கருடன், பெரியபிராட்டியர் போன்றவர்களுடன் கலந்து பழகும்போது ஒவ்வொரு விதமாகப் பழகுகிறான். ஆனால் என்னிடம் பழகும்போது

நித்யசூரிகள் அனைவரிடமும் செய்கின்ற விருப்பத்தை என் ஒருவனிடம் செய்தான். (உடனே) – "இவன் ஒரு பெரிய செல்வத்துக்கு அதிபதி, இவன் வேறு எதனையும் காணமாட்டான் போலும்", என்றெல்லாம் அனைவரும் கூறும்படியாக என்னுடனே உள்ளான். நித்யவிபூதியை இவன் ஆள்வதும் இங்கே லீலாவிபூதியில் இவர் பக்கம் அமர்ந்தபடியே செய்கிறான். திருவாய்மொழி (1-7-7) – தண்டாமம் செய்து – நித்யவிபூதியில் செய்கின்ற விருப்பத்தைத் தன்னிடம் செய்தான் - என்று முன்பு உரைத்தார். இந்தத் திருவாய்மொழியில், அந்த நித்யவிபூதியில் உள்ளவர்களிடம் செய்யும் விருப்பத்தை என்னிடம் வைத்தான் என்கிறார். "அருகலிலாய என்று தொடங்கி, பூமகளார் தனிக்கேள்வன் என்னோடுடன் ஒரு கதியின் சுவை தந்திட்டு ஒழிவிலன்" என்று படிக்கவேண்டும்.

1-9-4 உடனமர் காதல் மகளிர் திருமகள் மண்மகளாயர்
மடமகள் என்றிவர் மூவராளு முலகமும் மூன்றே
உடனவை யொக்க விழுங்கி யாலிலைச் சேர்ந்தவ னெம்மான்
கடல்மலி மாயப் பெருமான் கண்ணனென் னொக்கலை யானே

பொருள் – அவர்களுடன் இவன் கூடியிருந்தால் மட்டுமே தரிக்கும்படியான காதலைக் கொண்ட பிராட்டிமார்கள் மஹாலக்ஷ்மி, பூமாதேவி மற்றும் நப்பின்னை ஆகிய மூவரும் ஆவர். தன்னால் ஆளப்படுவதும் காக்கப்படுவதும் ஆகிய லோகங்கள் மூன்றாக உள்ளது. ப்ரளய காலத்தில் இந்த அனைத்து உலகங்களையும் எந்தவிதமான வேறுபாடும் இன்றி ஒரே நேரத்தில் உட்கொண்டு, ஆலிலை மீது கண் வளர்ந்தவன்; எனக்குத் தலைவனாக உள்ளவன்; கடலைக் காட்டிலும் பரந்த மாயச்செயல்களையும், உயர்ந்த குணங்களையும் கொண்டவன் – இப்படிப்பட்டவனாகிய க்ருஷ்ணன் எனது இடுப்பிலே வந்து அமர்ந்துள்ளான்.

அவதாரிகை – மேன்மை அது; அகடிதகடநா ஸாமர்த்யம் அது; இப்படி இருக்கிறவன், யசோதைப் பிராட்டி மருங்கிலே இருக்குமாபோலே என் மருங்கிலே வந்திருக்கை தனக்குப் பெறாப்பேறாக நினைத்திரா நின்றான் என்கிறார்.

விளக்கம் - இவனுடைய மேன்மையையும், மற்ற யாராலும் செய்ய இயலாதவற்றைச் செய்பவன் என்ற திறமையையும் முதலில் கூறுகிறார். அதன் பின்னர் இப்படிப்பட்டவன் யசோதைப் பிராட்டியாரின் இடுப்பில் எவ்விதம் அமர்ந்தானோ அது போன்று தனது இடுப்பில் வந்து அமர்வதைத் தான் பெற்ற பேறு என்று நினைத்து, வந்து அமர்ந்தான் என்கிறார்.

வ்யாக்யானம் - (உடனமர் காதல் மகளிர்) உடனே அமரவேண்டும்படியான காதலை உடைய பிராட்டிமார்; "அகலகில்லேன் இறையும்" என்றாயிற்று இவர்களிருப்பது. அவர்கள் ஆரென்னில், (திருமகள்) ஸர்வேச்வரனுக்கு ப்ரதாந மஹிஷியாய், பட்டத்துக்கு உரியவளாய், "ந கச்சித் ந அபராத்யதி" என்றிருக்கும் பெரியபிராட்டியார். (மண்மகள்) முதலிலே "குற்றம் பார்க்கக்கடவதோ" என்று அவனுக்குப் பொறைக்கு உவாத்தாய், பொறை விளையும்படியான ஸ்ரீபூமிப்பிராட்டி. (ஆயர் மடமகள்) அநுபவ ஸுகம் தானாய், தன் வடிவழகாலே துவக்கித் திருவுள்ளத்தில் குற்றம்படாதபடி இருக்கும் நப்பின்னைப் பிராட்டி. திருமகள் - அவன் ஐச்வர்யம்; மண்மகள் - அது விளையும் பூமி; ஆயர் மடமகள் - அத்தை புஜிக்கிற போக்தாவானவள் என்றுமாம். (இவர் மூவர்) மேன்மைக்கும் புருஷகாரத்துக்கும் தனித்தனியே அமைந்திருக்கிற இவர்கள் மூவர். (ஆளும் உலகமும் மூன்றே) அவர்களுடைய படுக்கைப்பற்று இருக்கிறபடி. த்ரிவித சேதநரையுஞ் சொல்லுதல்; கீழும், மேலும், நடுவுமான லோகங்களைச் சொல்லுதல்.

விளக்கம் – (உடனமர் காதல் மகளிர்) - ஸர்வேச்வரனை விட்டு ஒரு நொடி கூடப் பிரியாமல் அணைத்தபடி இருக்கவேண்டும் என்னும்படியான காதல் கொண்ட பிராட்டிமார்கள். திருவாய்மொழி (6-10-10) - அகலகில்லேன் இறையும் – என்பதற்கு ஏற்ப இவர்கள் உள்ளார்கள். இவர்கள் யார்? (திருமகள்) – ஸர்வேச்வரனுடைய மேன்மை மற்றும் புருஷகாரம் ஆகியவற்றுக்கு முதன்மையாக உள்ளவள், அவனுடன் பட்டத்து மஹிஷியாக உள்ளவள். இராமாயணம் யுத்தகாண்டம் (116-45) – ந கச்சித் ந அபராத்யதி - இந்த உலகில் குற்றம் செய்யாமல் யார்தான் உள்ளார்கள் – என்று கேட்டபடி உள்ள பெரியபிராட்டியார். (மண்மகள்) – "குற்றம் பார்க்கலாமோ" என்று அவன் யாருடைய குற்றத்தையும் காணாமல், அவனுக்குப் பொறுமை ஏற்பட உபதேசிப்பவளாக, அவனுக்குப் பொறுமை ஏற்படும்படியாகச் செய்பவளாக உள்ள பூமாதேவி. (ஆயர் மடமகள்) - தனது வடிவழகால் அவனை மயக்கி, அவன் திருவுள்ளத்தில் யாரைக் குறித்தும் குற்றம் ஆராயாமல் அவன் இருக்கும்படியாகச் செய்யும் நப்பின்னைப்பிராட்டி. இங்கு

அரும்பத உரையில் ஸ்வாமி தேசிகன் அருளிச்செய்த ஸ்ரீதயாசதகம் ச்லோகங்கள் மூன்றும் ப்ரமாணங்களாக் காட்டப்பட்டுள்ளன. அவையாவன

(6) – ஸமஸ்தஜநநீம் வந்தே சைதந்ய ஸ்தந்ய தாயிநீம் ச்ரேயஸீம் ஸ்ரீநிவாஸஸ்ய கருணாமிவ ரூபிணீம் - ஞானம் என்னும் தாய்ப்பாலை அளிப்பவளும், உயர்ந்தவளும், ஸ்ரீநிவாஸனின் கருணை என்பதே வடிவு கொண்டது போன்று உள்ளவளும், அனைத்து உலகிற்கும் தாயாக உள்ளவளும் ஆகிய பெரியபிராட்டியாரை நான் வணங்குகிறேன்.

(7) வந்தே வ்ருஷகிரீசஸ்ய மஹிஷீம் விச்வதாரிணீம் தத்க்ருபாப்ரதிகாதாநாம் க்ஷமயா வாரணம் யயா - ஸ்ரீநிவாஸனின் கருணை என்பதற்கு ஏற்படுகின்ற தடைகளை விலக்குதல் என்பது எந்தப் பூமாதேவியால் நிகழ்கிறதோ, உலகத்தைத் தாங்கி நிற்பவளும், ஸ்ரீநிவாஸனின் மஹிஷியும் ஆகிய அந்தப் பூமாதேவியை வணங்குகிறேன்.

(8) நிசாமயது மாம் நீளா யத் போகபடலைர் த்ருவம் பாவிதம் ஸ்ரீநிவாஸஸ்ய பக்ததோஷேஷ்வதர்சநம் - யாருடைய மயக்கும் கண் பார்வை காரணமாக அடியார்களின் தோஷங்கள் விஷயத்தில் ஸ்ரீநிவாஸனுக்குப் பார்வை இல்லாமை என்பது உறுதியாக உள்ளதோ, அந்த நப்பின்னை என்னை கடாக்ஷிக்கவேண்டும்.

ஆக நமது அபராதங்களுக்காக நமக்குத் தண்டனை அளிக்கத் தயாராக உள்ளவனைத் தடுத்து, தண்டனை அளிக்காமல் காப்பாற்றும் பெரியபிராட்டியார்; தண்டிக்கும் எண்ணமே தோன்றாமல் செய்கின்ற பூமிப்பிராட்டியார்; நமது அபராதங்களை அவன் காணாமல் மறைத்துவிடும் நப்பின்னைப் பிராட்டியார் - என்று கருத்து. மேலும் திருமகள் அவன் ஐச்வர்யம் என்றும், பூமாதேவி அத்தகைய ஐச்வர்யம் ஏற்படும் பூமி என்றும், ஆயர் மடமகள் - அத்தகைய ஐச்வர்யத்தை அனுபவிப்பவள் என்றும் கொள்ளலாம். (இவர் மூவர்) - அவனுடைய மேன்மை மற்றும் புருஷகாரத்துக்குத் தனித்தனியாக உள்ள இவர்கள் மூவர். (ஆளும் உலகமும் மூன்றே) - அந்த மூன்று பிராட்டிகளின் தனம் கூறப்பட்டது. அதாவது கீழ், மேல், நடுவில் உள்ள மூன்று உலகங்கள் என்று பொருள். அல்லது மூன்றுவிதமான சேதநர்கள் – பத்தர், முத்தர், நித்யர் என்றும் கொள்ளலாம்.

வ்யாக்யானம் - (உடன் அவை ஒக்க விழுங்கி) அவற்றில் ஒன்றும் பிரிகதிர்ப்படாதபடி ஏககாலத்திலே தன் திருவயிற்றிலே வைத்து; விபூதித்வயமும் ரக்ஷ்யவர்க்கமென்றால், திருவயிற்றிலே வைக்குமது, ப்ரளயத்துக்குக் கர்மீபவிக்கும் எல்லையிலேயாகிறது. (ஆலிலைச் சேர்ந்தவன்) ஸகலலோகங்களையும் வயிற்றிலே வைத்து ஒரு பவனான ஆலந்தளிரிலே சாய்ந்தருளினவன். அகடிதகடநா ஸாமர்த்யத்தை உடையவன். (எம்மான்) அச்செயலாலே என்னை எழுதிக்கொண்டவன். பத்ராலம்பநம் பண்ணிக்கீடீர் அடிமைகொண்டது! கீழில் அகடிதகடநா ஸாமர்த்யத்துக்கு மேலே ஒரு அகடிதகடநா ஸாமர்த்யமாயிற்று இது. "ந நமேயம்" என்று இருந்த என்னை அநந்யார்ஹமாக்கினபடி. (கடல் இத்யாதி) திருப்பாற்கடலிலே குறைவற வந்து வர்த்திப்பானாய், ஆச்சர்யமான சேஷ்டிதங்களையுடைய ஸர்வேச்வரன். அன்றிக்கே, கடலிற்காட்டில் மிக்க ஆச்சர்யத்தையுடைய ஸர்வேச்வரன் என்றுமாம். (கண்ணன்) அந்த ஆச்சர்யங்களெல்லாம் தன்பக்கலிலே காணலாம்படி யிருக்கிற க்ருஷ்ணன். (என் ஒக்கலையானே) யசோதைப் பிராட்டி மருங்கிலே இருக்குமாபோலே என் மருங்கிலே இராநின்றான்.

விளக்கம் - (உடன் அவை ஒக்க விழுங்கி) - ப்ரளயம் ஏற்பட்ட காலத்தில் அந்த மூன்று உலகங்களையும் விழுங்கி. அவற்றில் ஒன்று கூட தப்பி விடாதபடி தனது வயிற்றில் ஒரே நேரத்தில் வைத்துக் காப்பாற்றினான். இங்கு "அவை" என்பது பத்தர், முக்தர் மற்றும் நித்யர் ஆகிய மூன்று சேதநர்களையும் குறிக்குமோ என்ற சந்தேகத்திற்கு விடை அலிக்கிறார். அதாவது நித்யவிபூதி மற்றும் லீலாவிபூதிஆகிய இரண்டுமே தன்னால் காக்கப்படுகின்றவை என்றபோதிலும், ப்ரளய காலத்தில் மோக்ஷத்தில் உள்ள நித்யர் மற்றும் முக்தர் ஆகிய இருவரும் ஆபத்து இன்றி உள்ளதால், இங்கு உள்ள பத்தர்களைக் குறிப்பதாகக் கொள்க. (ஆலிலைச் சேர்ந்தவன்) - அனைத்து உலகங்களையும் தனது திருவயிற்றில் வைத்து, ஆலந்தளிரில் கண் வளர்ந்தவன். யாராலும் செய்ய முடியாத செயல்கலையும் மிகவும் எளிதாகச் செய்து முடிக்கும் திறன் கொண்டவன். (எம்மான்) - இப்படிப்பட்ட செயல்கள் மூலம் என்னைத் தனது அடிமையாக்கிக் கொண்டான். அடிமை சாஸநம் எழுதிக் கொடுத்தது போன்று, அந்த ஆலந்தளிரின் மூலம் என்னை அடிமையாக்கினான். அனைத்து உலகங்களையும் விழுங்கிய செயல் அகடிதகடநா ஸாமர்த்தியம் என்றால், என்னை இவ்விதம் அடிமையாக்கியது என்பது அடுத்த அகடிதகடிநா ஸாமர்த்தியம் என்கிறார். இது எப்படி ? இராமாயணம் யுத்தகாண்டம் (36-11) - ந நமேயம் - யாருக்கும் தலைவணங்கமாட்டேன் - என்றிருந்த இராவணன் போன்று

இருந்த என்னை, தன்னைத் தவிர வேறு யாருக்கும் வசப்படாதவன் என்று மாற்றினான். (கடல் இத்யாதி) - கடல் என்றால் திருப்பாற்கடலில் என்று பொருள். அல்லது திருப்பாற்கடலைக் காட்டிலும் என்றும் பொருள். அல்லது திருப்பாற்கடலில் எந்தவிதமான குறையும் இன்றி கண்வளர்கின்ற, வியக்க வைக்கும் லீலைகள் கொண்ட ஸர்வேச்வரன்; அல்லது அந்தத் திருப்பாற்கடலைக் காட்டிலும் மிகுந்த வியப்பை அளிக்கவல்ல ஸர்வேச்வரன். (கண்ணன்) - அந்த வியப்புகள் அனைத்தையும் தன்னிடம் காணலாம்படியாக உள்ள க்ருஷ்ணன். (என் ஒக்கலையானே) – யசோதையின் இடுப்பில் அமர்ந்துள்ளது போன்று எனது இடுப்பிலும் அமர்ந்துள்ளான்.

1-9-5 ஒக்கலை வைத்து முலைப்பாலுண்னென்று தந்திட வாங்கி
செக்கஞ் செகவன்று அவள் பாலுயிர் செகவுண்ட பெருமாள்
நக்கபிரானோடு அயனுமிந்திரனும் முதலாக
ஒக்கவும் தோற்றிய வீசன் மாயனென் நெஞ்சினுளானே

பொருள் - ஈச்வரன் என்று ப்ரஸித்தி பெற்ற ருத்ரன், யோநி மூலம் பிறப்பு இல்லாமல் தோன்றிய அஜன் என்று ப்ரஸித்தி பெற்ற நான்முகன், தன்னை அனைத்து ஐச்வர்யங்களும் நிரம்பியவனாக எண்ணியுள்ள இந்த்ரன் போன்றவர்களையும், மற்ற அனைத்து பொருள்களையும் ஒரே காலத்தில் உண்டாக்கிய ஸர்வேச்வரன்; யசோதையைப் போன்று தனது இடுப்பில் எடுத்து வைத்துக்கொண்டு, "இந்தத் தாய்ப்பாலைப் பருகுவாயாக" என்று அதட்டியபடி பூதனை அளித்த பாலைப் பருகி, "இந்த க்ருஷ்ணனை அழிக்கவேண்டும்" என்ற எண்ணத்துடன் வந்த பூதனையின் நினைவானது அவளுடன் சேர்ந்து முடியும்படியாக அவளுடைய உயிரையும் பாலுடன் சேர்த்து வாங்கியவன்; இப்படியாகப் பலவிதமான வியக்கவைக்கும் செயல்களை உடைய அந்த மாயன் என்னுடைய இதயத்திற்குள் வந்து தங்கிவிட்டான்.

அவதாரிகை - விரோதிநிரஸநசீலனாய் ஸர்வஸ்ரஷ்டாவானவன் வந்து என்னுடைய ஹ்ருதயஸ்த்தனானான் என்கிறார்.

விளக்கம் - அனைத்து விரோதிகளையும் போக்கவல்லவனும், அனைத்து பொருள்களின் படைப்பிற்குக் காரணமாக உள்ளவனும் ஆகிய ஸர்வேச்வரன் எனது இதயத்தில் அமர்ந்தவன் ஆனான் என்கிறார்.

வ்யாக்யானம் - (ஒக்கலை வைத்து) பரிவுடைய யசோதைப் பிராட்டியைப் போலே தூக்கி எடுத்து மருங்கிலே வைத்து. (முலைப்பாலுண்ணென்று) "முலைக்கண் நெறித்து க்லேசப்படா நின்றேன்; உண்" என்று உறுக்கிக் கொடுக்க. (தந்திட) "அஸ்மாந் ஹந்தும்" என்னுமாபோலே, அந்நஞ்சு தமக்குக் கொடுத்தாற்போலே யிருக்கையாலே "தந்திட" என்கிறாராதல்; தருகை - கொடுக்கையாய் வழங்குகையாலே, "தந்திட" என்கிறாராதல். (வாங்கி) அவள் முலைகொடாவிடில் தரியாதாளாய்க் கொடுத்தாற்போலே, இவனும் முலையுண்ணாவிடில் தரியாதானாய் உண்டபடி. (செக்கம் செக) "செக்கம்" என்று மரணமாய், அவள் கோலின மரணம் அவள் தன்னோடே போம்படி என்னுதல்; அன்றிக்கே, செக்கம் என்று சிவப்பாய், அத்தால் நினைக்கிறது சீற்றத்தையாய், அவள் சீறின சீற்றம் அவள் தன்பக்கலிலே பலிக்கும்படி என்னுதல். "இலங்கை செந்தீயுண்ணச் சிவந்து" என்று சிவப்பைச் சீற்றமாக ப்ரயோகித்ததிறே. அன்றியே, செக்கஞ்செக என்றது – செக்கச்சிவக்க என்றாய், முலைகொடுத்த உபகார ஸ்ம்ருதியாலே திருவதரத்தில் பழுப்புத் தோற்ற ஸ்மிதம் பண்ணினபடியாதல். (அன்று) ஜகதுபஸம்ஹாரம் பிறக்கப் புக்க அன்று. தனி இடத்திலே இவள் நலிய வந்த அன்று. (அவள் பாலுயிர்) அவள்பால் என்றது அவளிடத்து என்றபடி. அவளுடைய ஹேய சரீரத்தைப் பற்றி நிற்கிற உயிர். (செக) முடியும்படி. அன்றிக்கே, அவள் பாலையும் உயிரையும் முடியும்படி என்னுமாம். "முலையூடுயிரை வற்ற வாங்கியுண்ட வாயான்" என்னக்கடவதிறே. முலையால் நினைக்கிறது பாலையிறே அங்கு. "முலையுண்டான்" என்றால் முலைப்பாலுண்டான் என்றபடியிறே. (உண்ட பெருமான்) அவள் முலை உண்டு அவளை முடித்து, ஜகத்துக்கு ஒரு சேஷியைத் தந்தவன்; "ஸ்தந்யம் தத்விஷஸம்மிச்ரம் ரஸ்யமாஸீஜ்ஜகத்குருரோ:" என்கிறபடியே.

விளக்கம் – (ஒக்கலை வைத்து) - அவன் மீது மிகுந்த பாசமும் பரிவும் கொண்டவளான யசோதை போன்று அவனைத் தூக்கி எடுத்து, தனது இடுப்பிலே வைத்துக்கொண்டாள். "தாய்ப்பால் கொடுத்தல்" என்னும்போதே "இடுப்பில் வைத்துக் கொடுத்தல்" என்பது தெளிவாக இருக்க, "ஒக்கலை" என்று தனியாக ஏன் கூறினார்? பரிவு என்பதை வெளிப்படுத்தவே ஆகும். (முலைப்பாலுண்ணென்று) – "எனது ஸ்தனங்களில் வைத்து நிற்கிறேன், பாலைப் பருகுவாயாக", என்று அதட்டினாள். (தந்திட) – இங்கு "கொடுத்திட" என்று கூறாமல், "தந்திட" என்று ஏன் கூறினார்? இராமாயணம் யுத்தகாண்டம் (17-5) -

அஸ்மாந் ஹந்தும் - "இராமனைக் கொல்ல வருகிறான்" என்று கூறுவதற்குப் பதிலாக, இராமனைக் கொன்றால் தங்களைக் கொன்றதற்குச் சமானம் என்று உணர்ந்த சுக்ரீவன், "நம்மைக் கொல்ல வருகிறான்" – என்று உரைத்தது காண்க. இது போன்றே இங்கும் க்ருஷ்ணனுக்கு அளிக்கப்பட்ட விஷமானது தனக்குத்தானே அளித்துக் கொண்டது போன்று இருந்ததால் "தந்திட" என்றார். "அவள் தர வாங்கினான்" என்று அல்லவோ பொதுவாகக் கூறப்படும்? இதனை அடியொட்டி "தருவது" என்பது "கொடுப்பது" என்பதுடன் ஒத்துப்போவதால் "தந்திட" என்றார். (வாங்கி) - தனது ஸ்தனங்களில் உள்ள விஷப்பாலை அவனுக்கு அளிக்காமல் இவளால் பொறுத்துக் கொள்ள இயலாது என்பது போன்று, இவளது ஸ்தனங்களில் உள்ள விஷப்பாலைப் பருகாமல் பொறுத்துக் கொள்ள இயலாது என்று இவன் உள்ளான். "செக்கம்" என்றால் மரணம். அதாவது அவள் விரும்பி வந்த மரணம் என்பது அவளுக்கே ஏற்படுவதாகச் செய்து. அல்லது "செக்கம்" என்றால் சிவப்பு; அதாவது சீற்றத்தால் வந்த சிவப்பு; அவள் சீறின சீற்றம் என்பது அவள் பக்கமே திரும்பி முடியும்படி என்று கருத்து. பெரிய திருமொழி (8-6-6) – இலங்கை செந்தீயுண்ணச் சிவந்து – என்ற வரியில், சீற்றம் என்பதைச் சிவப்பாக உரைத்தமை காண்க. அல்லது செக்கஞ்செக = செக்கஞ்சிவக்க என்று கொள்ளலாம்; தனக்குத் தாய்ப்பால் கொடுத்து நின்ற உதவி காரணமாக, அந்த உபகாரத்தை எண்ணியவனாய், தனது அழகாகச் சிவந்த உதடுகளில் புன்முறுவல் வெளிப்பட்டபடி நின்றதைக் கூறுகிறார். அரும்பத உரையில் உள்ள பெருமாள் திருமொழி பாசுரம் இங்கு அனுபவிக்கத்தக்கது. பெருமாள் திருமொழி(7-7) – மழலை மென்னகை இடையிடை அருளா வாயிலே முலையிருக்க என் முகத்தே - எனது ஸ்தனங்களில் தாய்ப்பாலைப் பருகும்போது அவ்வப்போது தனது வாயை எடுத்து, என்னுடைய தாய்ப்பால் மேலும் சுரக்கும்படியாக தனது மழலைச் சிரிப்பை உதிர்த்தபடி – என்றது காண்க. (அன்று) - இந்த உலகிற்கு நன்மையைச் செய்யவேண்டும் என்பதற்காக க்ருஷ்ணனாக அவதாரம் செய்த அன்று. அல்லது தனியாக உள்ள ஓர் இடத்திலே இவள் உயிர் நீங்குவதற்காக வந்த நாளில் என்றும் கூறலாம். (அவள்பாலுயிர்) – "அவள் பால்" என்றால் "அவளிடம் உள்ள" என்று பொருள். அவளுடைய தாழ்வான சரீரத்தைப் பற்றியபடி நிற்கின்ற அவளது உயிர். (செக) - முடியும்படியாக அல்லது அவளது பால் மற்றும் உயிர் ஆகிய இரண்டுமே முடியும்படியாக. பாலையும் உயிரையும் சேர்த்து வாங்கியதற்கு ப்ரமாணம் காட்டுகிறார். பெரிய திருமொழி (1-3-1) - முலையூடுயிரை வற்ற வாங்கியுண்ட வாயான் – என்பது காண்க. முலை என்று கூறும்போது பால் அல்லவோ நினைக்கப்பட்டது. "முலை உண்டான்" என்றால் "முலைப்பால் உண்டான்"

என்று பொருள். (உண்ட பெருமான்) - அவளுடைய ஸ்தனங்களில் உள்ள பாலையும் உயிரையும் பருகி, அவளை முடித்து, இந்த உலகிற்கு ஒரு எஜமானனாகத் தன்னை அளித்தான். இதற்கு ப்ரமாணம் ஸ்ரீவிஷ்ணுபுராணம் – ஸ்தந்யம் தத்விஷஸம்மிச்ரம் ரஸ்யமாஸீஜ்ஜகத்குருரோ: - ஸ்தனங்கள் வழியே பெருகும் விஷம் கலந்த பாலைப் பருகி, அவளது உயிரை முடித்து, இந்த உலகிற்குக் குருவாகத் தன்னைத் தந்தவன் – என்பதாகும்.

வ்யாக்யானம் - (நக்கபிரான் இத்யாதி) ஸ்வகோஷ்டிக்கு உபகாரகனாக ப்ரஸித்தனாயிருக்கிற ருத்ரனோடே கூட, அவனுக்கும் ஜநகனான சதுர்முகனும், அவனுக்கும் இவ்வருகான இந்த்ரனும் தொடக்கமாக இவ்வருகுள்ளோர் எல்லாரையும், அத்திக்காயில் அறுமான்போலே ஒன்றாக அரும்பிக்கும்படி பண்ணின ஸர்வேச்வரன். (மாயன்) ஸ்ருஷ்டமான ஜகத்திலே அநுப்ரவேசம் முதலான ஆச்சர்யத்தையுடையவன்; ஸர்வசரீரியாயிருக்கிற ஸர்வேச்வரன். (என் நெஞ்சினுளானே) என் சரீரத்தில் ஏகதேசத்தைப் பற்றி நின்றான்.

விளக்கம் - (நக்கபிரான் இத்யாதி) - தனது கூட்டத்திற்கு உபகாரனாக ப்ரஸித்தி பெற்ற ருத்ரன், அந்த ருத்ரனுக்குத் தந்தையான நான்முகன், அவனுடன் உள்ள இந்த்ரன் தொடக்கமாக, இந்தப் பூமியில் உள்ளவர்கள் அனைவரையும் படைத்தவன். எப்படிப் படைத்தான் என்று கூறுகிறார். அத்திக்காயில் ஒரே நேரத்தில் பல கொசுக்கள் ஓசை எழுப்பியபடி உள்ளது போன்று படைத்தான். (மாயன்) - தான் ஸ்ருஷ்டித்த இந்த உலகில் தொடர்ந்து ப்ரவேசித்தபடி இருத்தல் போன்ற வியப்பான செயல்களைச் செய்பவன். அனைத்துவிதமான உயிர்களையும் தனது சரீரமாகவே கொண்ட ஸர்வேச்வரன். (என் நெஞ்சினுளானே) – என்னுடைய சரீரத்தில் ஓர் இடத்தைப் பற்றியபடி நின்றான். மார்பைப் பற்றியபடி நின்றான் அல்லது அவதாரிகையில் கூறுவதற்கு ஏற்ற இதயத்தைப் பற்றியபடி இருந்தான். பெரிய திருமொழி (2-4-7) - நெஞ்சிடந்தான் - என்றது காண்க.

1-9-6 மாயனென் னெஞ்சினுள்ளான் மற்றும் யவர்க்குமதுவே
காயமும் சீவனும் தானே காலு மெரியு மவனே
சேய னணியன் யவர்க்கும் சிந்தைக்கும் கோசரமல்லன்
தூயன் துயக்கன் மயக்கன் என்னுடைத் தோளிணையானே

பொருள் – எனது நெஞ்சத்தில் வசிக்கின்ற வியக்க வைக்கும் செயல்கள் செய்கின்ற ஸர்வேச்வரன் வேறு யாருக்கும் இவ்விதம் செய்வானோ? அனைத்து சரீரங்களும் ஆத்மாக்களும் தானேயாகவும், வாயு மற்றும் அக்னி போன்றவை தானேயாகவும், அடியார்கள் அல்லாதவர்களால் அறிய இயலாதவனாகவும், அடியார்களுக்கு எளிதாக அறியலாம்படி உள்ளவனும், எந்த அளவு ஞானம் கொண்டிருந்தாலும், தங்களுடைய சுயமுயற்சி என்பதால் நினைத்துப் பார்க்கவும் எட்டாதவனும்; அடியார்கள் அல்லாதவர்களுக்குத் தன்னைப் பற்றி சந்தேகமும் விபரீதமும் நிரம்பிய ஞானத்தை அளிப்பவனும் ஆகிய ஸர்வேச்வரன் எனது இரண்டு தோள்களிலும் எப்போதும் வசிப்பவன் ஆனான்.

அவதாரிகை - ஸர்வாந்தராத்மாவானவன் என் தோளைப் பற்றி வர்த்தியா நின்றான் என்கிறார்.

விளக்கம் - அனைத்திற்கும் அந்தர்யாமியாக உள்ள ஸர்வேச்வரன் எனது தோள்களைப் பற்றியபடி உள்ளான் என்கிறார்.

வ்யாக்யானம் – (மாயன் என் நெஞ்சினுள்ளான்) இதென்ன பெறாப்பெறு! ஆச்சர்யமான குணசேஷ்டிதங்களை உடையவன் என்னுடைய ஹ்ருதயஸ்தனானான். இது என்ன சேராச்சேர்த்தி? (மற்றும் யவர்க்கும் அதுவே) மற்றும் ஆரேனும் நான் பெற்ற பேறு பெற்றாருண்டோ? நீர் பெற்ற பேறுதான் என்னென்னில், (காயம் இத்யாதி) இது என்கிறார் மேல். (காயமும் சீவனும் தானே) தேவமநுஷ்யாதி சரீரங்களும், அவ்வவ சரீரஸ்தமான ஆத்மாக்களும் அவனிட்ட வழக்கு. (காலும் எரியும் அவனே) காற்றும், தேஜஸ்தத்வமும் இரண்டும் அஞ்சுக்கும் உபலக்ஷணமாய், பூதபஞ்சகமும் அவனிட்ட வழக்கு.

விளக்கம் - (மாயன் என் நெஞ்சினுள்ளான்) - இது என்ன கிட்டுவதற்கு அறிய பேறு! வியக்க வைக்கும் பல லீலைகளைக் கொண்டவன் எனது இதயத்தில் வந்தான். இது என்ன சேர இயலாத ஒரு சேர்த்தியாக உள்ளதே! (மற்றும் யவர்க்கும் அதுவே) – இது போன்று நான் பெற்ற பேற்றை வேறு யாரேனும் அடைந்தார்களோ? இதனைக் கேட்ட ஒரு சிலர் ஆழ்வாரிடம், “நீர் பெற்ற பேறுதான் என்ன?”, என்றனர். இதற்கு விடை அருளிச்

செய்கிறார். (காயமும் சீவனும் தானே) – தேவர்கள், மனிதர்கள் என்று பலவிதமான சரீரங்கள் எடுத்தாலும், அந்தந்த சரீரங்களில் அந்தந்த ஆத்மாக்கள் நிலைப்பது என்பது, அவன் கட்டளைக்கு ஏற்றபடியாகவே உள்ளது. (காலும் எரியும் அவனே) - காற்றும், தேஜஸ்ஸும் அவன் நியமனப்படி உள்ளன. காற்று மற்றும் தேஜஸ் ஆகிய இரண்டின் மூலம் பஞ்சபூதங்கள் அனைத்துமே உரைக்கப்பட்டன என்று கொள்ளவேண்டும். அதாவது, பஞ்சபூதங்கள் அனைத்துமே அவன் நியமனப்படி உள்ளன.

வ்யாக்யானம் - (சேயன்) ஸ்வயத்நத்தாலே காண்பார்க்கு தூரஸ்தனாயிருக்கும். (அணியன்) அவனாலே அவனைக் காண்பார்க்குக் கைப்புகுந்து அணீயனாயிருக்கும். (யவர்க்கும் சிந்தைக்கும் கோசரமல்லன்) தூரஸ்தனாம்படிக்கு எல்லை சொல்லுகிறது. எத்தனையேனும் அதிசயித ஜ்ஞாநராயிருக்குமவர்களுக்கும் கண்ணுக்கு விஷயமாகாமையே யன்றிக்கே, மநோரதத்துக்கும் அவிஷயமாயிருக்கும். (தூயன்) இப்படியிருக்கிறவன், யசோதாதிகளுக்கு "யதி சக்நோஷி" என்னலாம்படியிருக்கும். (துயக்கன் மயக்கன்) உகவாதார்க்கு ஸமசய விபர்யயங்களைப் பிறப்பிக்கும். (துயக்கன் மயக்கன்) துயக்கு – மனந்திரிவு. "அருவினையேன்" என்று அகன்ற என் மநஸ்ஸைத் திரியவிட்டு; "உன் தேனே மலரும் திருப்பாதம் சேருமாறு" என்னும்படி. திரியவிட்டு என்னுடனே கலந்தவன். மயக்கம் - கலத்தலும், கூடலும். (என்னுடைத் தோளிணையானே) என்னளவில் அங்ஙனன்றிக்கே, திருவடி திருத்தோளிலே இருக்குமாபோலே இராநின்றான்.

விளக்கம் - (சேயன்) – தன்னுடைய சுயமுயற்சியால் அவனை அறிய முயல்பவர்களுக்கு அவன் எட்டாதவனாகவே உள்ளான். (அணியன்) - அவனது உதவி கொண்டு, அவனை அறிய முயற்சி செய்பவர்களுக்கு அவன் மிகவும் அருகில் உள்ளான். (யவர்க்கும் சிந்தைக்கும் கோசரமல்லன்) – அவன் எட்டாமல் இருப்பதற்கான எல்லை உரைக்கப்படுகிறது. கண்களால் காண முடியாமல் மட்டும் அல்ல, சிந்தையாலும் எட்டாத தூரத்தில் உள்ளவன் என்கிறார். வியக்க வைக்கும் எல்லையற்ற ஞானம் கொண்டிருந்தாலும், அவர்களுடைய கண்களுக்கு மட்டும் அல்லாமல், சிந்தனையாலும் அறிவதற்கு இயலாதவன் ஆவான். (தூயன்) – இப்படியாக உள்ளவன் யசோதை போன்றவர்களுக்கு ஸ்ரீவிஷ்ணுபுராணம் (4-6-15) - யதி சக்நோஷி – உன்னால் முடிந்தாலும் என் கண்களில் இருந்து மறைவாகச் செல்ல இயலாது – என்னும்படி

உள்ளான். (துயக்கன் மயக்கன்) - தன்னை அண்டாதவர்களுக்கு தன்னைக் குறித்த சந்தேகம், விபரீதமான எண்ணங்கள் ஆகியவற்றை ஏற்படுத்திவிடுவான். இங்கு அரும்பத உரையில் காட்டப்பட்ட ஒரு நிகழ்வை உரைப்பது பொருத்தமாகும். ஸ்வாமி பராசரபட்டரின் திருமாளிகைக்கு சாஸ்த்ரங்களின் ஞானம் கொண்ட ஒரு அந்தணன் அன்றாடம் வந்து செல்வான். அவனைக் கண்டவுடன் பட்டர் மிகுந்த ஆர்வமும் ஈடுபாடும் வெளிப்படுத்தாமல் மேலோட்டமாக, "வந்தாயா, போகிறாயா" என்று மட்டுமே உரைப்பார்; ஆனால் அங்கு வருகின்ற சாஸ்த்ர ஞானம் அற்ற ஸ்ரீவைஷ்ணவன் ஒருவனிடம் மிகுந்த ஈடுபாட்டுடன் அன்றாடம் வரவேற்று மகிழ்வார். இதனைக் கண்ட ஒருவர் பட்டரிடம், "ஸ்வாமி! உம்முடைய கோஷ்டிக்கு வருகின்ற அந்த சாஸ்த்ரியை மேலோட்டமாக உபசரிக்கிறீர். ஆனால் அந்த ஸ்ரீவைஷ்ணவர் வந்தால் மிகுந்த ஈடுபாட்டுடன் உபசரிக்கிறீர். இந்த வேறுபாடு ஏன்?", என்றார். இதற்குப் பட்டர், "நாளை அவர்கள் மீண்டும் வரும்போது உமக்கு விடையை உணர்த்துகிறேன்", என்றார். மறுநாள் சாஸ்த்ரி முதலில் வந்து பட்டரை வணங்க, பட்டரும் அவனிடம், "நீர் யாரை பரத்வம் என்று எண்ணுகிறீர்?", என்றார். இதற்கு அவன், "ஒரு சில ப்ரமாணங்கள் நான்முகனே பரத்வம் என்றும், ஒரு சில ப்ரமாணங்கள் விஷ்ணுவே பரத்வம் என்றும், ஒரு சில ப்ரமாணங்கள் ருத்ரனே பரத்வம் என்றும் கூறுகின்றன. இவற்றில் எது உண்மை என்று நம்மால் உரைக்க இயலாது அல்லவோ?", என்றான். அதன் பின்னர் அங்கு வந்து ஸ்ரீவைஷ்ணவரிடம் பட்டர் அதே கேள்வியைக் கேட்டார். இதற்கு அந்த ஸ்ரீவைஷ்ணவர், "ஸ்ரீய:பதியான ஸ்ரீமந்நாராயணனே பரத்வம் என்று நீவிர் எப்போதும் அருளிச்செய்வீரே! அதனைத் தவிர வேறு ப்ரமாணம் ஏதும் நான் அறியேன்", என்றார். உடனே பட்டர் அவரிடம், "நீவிர் தஞ்சமாக எதனை எண்ணியுள்ளீர்?", என்றார். இதற்கு அந்த ஸ்ரீவைஷ்ணவர், "நீவிர் எப்போதும் எம்பெருமானார் திருவடிகளே உபாயமும் உபேயமும் என்று கூறுவீர்கள் அல்லவோ? அவற்றையே நமக்கும் தஞ்சம் என்று நாம் கொண்டுள்ளோம்", என்று கூறினார். அதன் பின்னர் தன்னிடம் கேட்ட அந்த நபரிடம் பட்டர், "இருவருக்கும் உள்ள வேறுபாடு அறிந்தீரோ? அவரை வணங்கவா அல்லது இவரை வணங்கவா?" என்றார். அதாவது அந்த சாஸ்த்ரிக்கு உண்டான சந்தேகம் போன்ற நிலையை உண்டாக்கிவிடுவான் என்று கருத்து. (துயக்கன் மயக்கன்) – துயக்கு என்றால் மனக்கலக்கம். திருவாய்மொழி (1-5-1) - அருவினையேன் – என்று கூறிக் கொண்டு அவனை விட்டு அகன்று செல்ல முயன்ற என் மனதை மாற்றி; திருவாய்மொழி (1-5-5) - உன் தேனே மலரும் திருப்பாதம் சேருமாறு – என்று கூறும்படியாகச் செய்தவன்.

இப்படியாக மாற்றிய பின்னர் என்னுடன் கலந்தவன். மயக்கம்- கலத்தலும், கூடலும். (என்னுடைத் தோளிணையானே) – எனக்கு அது போன்ற மயக்கங்களையும், சந்தேகங்களையும் உண்டாக்காமல், பெரியதிருவடியின் திருத்தோள்களில் வீற்றிருப்பது போன்று என் தோள்களிலும் அமர்ந்தான்.

1-9-7 தோளிணை மேலும் நன்மார்பின் மேலும் சுடர்முடி மேலும்
தாளிணை மேலும் புனைந்த தண்ணந் துழாயுடை யம்மான்
கேளிணை யொன்றுமிலாதான் கிளரும் சுடரொளி முர்த்தி
நாளணைந் தொன்று மகலா னென்னுடை நாவினுளானே

பொருள் – அனைத்தையும் காக்கவல்லதான திருத்தோள்கள், கண்டவர்களின் சிந்தனையைக் கவரும் திருமார்பு, தானே எஜமானன் என்பதை வெளிப்படுத்துகின்ற ஒளியுடன் கூடிய திருமுடி, தனது அடியார்கள் பற்றுகின்ற திருவடிகள் ஆகியவற்றின் ஸர்வேச்வரன்; தனக்கு இணையாக எதனையும் கூற இயலாதபடி உள்ளவன்; இயல்பாகவே ஒளியுடனும் கூடிய திருமுடி, தனது அடியார்கள் பற்றுகின்ற திருவடிகள் ஆகியவற்றில் அழகும் குளிர்ச்சியும் கூடியதான திருத்துழாயைக் கொண்டுள்ள ஸர்வேச்வரன்; தனக்கு இணையாக எதனையும் கூற இயலாதபடி உள்ளவன்; இயல்பாகவே ஒளியுடன், திருத்துழாய் காரணமாக மேலும் ஒளிர்ந்து, அவன் என்னை நாள்தோறும் அடைந்து கிட்டி நின்று, என்னை விட்டு அகலாமல், எனது நாக்கில் எப்போதும் அமர்ந்தபடி உள்ளான்.

அவதாரிகை - நான் உகந்தபடியே அலங்கரித்துக்கொண்டு வந்து என் நாவிலே கலந்தான் என்கிறார்.

விளக்கம் – நான் விரும்பியபடியே தன்னை நன்றாக அலங்கரித்துக் கொண்டு வந்தான்; அப்படியே வந்து எனது நாக்கில் அமர்ந்தான் என்கிறார்.

வ்யாக்யானம் - (தோளிணையித்யாதி) அபிமதவிஷயம் இருந்தவிடத்துக்குப் போவார், அவர்கள் உகந்தபடியே பூசிப் புலர்த்தி ஒப்பித்துக் கொண்டு போமாபோலே, ஆழ்வார் உகந்தபடியே திருத்துழாய் மாலையாலே அலங்க்ருதனாய் வந்தானாயிற்று. இவர் உகப்பதும் அதுவே, அவன் கொடுப்பதும் அதுவேயிறே. புள்ளூர்தி கள்ளூரும் துழாய்க்

கொயல்வாய் மலர்மேல் மனத்தை உடையராயிருப்பார்; திருத்தாயார் சொல்லும்போது "வண்டு திவளும் தண்ணந்துழாய் கொடீர்" என்னும். இவர்தாம் "விரைமட்டலர் தண்டுழாய்" என்னும், கண்ணன் கழல்துழாய் பொன்செய் பூண் மென்முலைக்கு என்று மெலியும்; அவனும் "தன் மன்னுநீள் கழல்மேல் தண்டுழாய் நமக்கன்றி நல்கான்" என்று இவர்க்கல்லது கொடான். (தோளிணை மேலும்) "ஸுகாடம் பரிஷஸ்வஜே" என்கிறபடியே அணைக்கக் கணிசிக்கிற திருத்தோள்களிலும்.

விளக்கம் - (தோளிணையித்யாதி) தங்களால் காதலிக்கப்படும் பெண்கள் உள்ள இடத்திற்குச் செல்லும் ஆண்கள், அந்தப் பெண்கள் விரும்புவது போன்று தங்களை அலங்கரித்துக் கொண்டு செல்வது வழக்கம்; இது போன்றே ஸர்வேச்வரனும் ஆழ்வார் உள்ள இடத்திற்குச் செல்லும்போது, அவர் விரும்பியபடியே திருத்துழாயால் அலங்கரித்துக் கொண்டு சென்றான். இவர் விரும்புவதும் துளசியே, அவன் அளிப்பதும் துளசியே ஆகும். இவருக்கு துளசி மீது விருப்பம் உள்ளது என்பதற்கு என்ன ப்ரமாணம்? திருவிருத்தம் (24) - புள் ஊர்தி கள் ஊரும் துழாய்க் கொயல்வாய் மலர்மேல் மனம் - பெரிய திருவடியை நடத்தும் க்ருஷ்ணனுடைய துளசியுடன் கூடிய மலர்மாலையில் நெஞ்சத்தை வைத்து – என்றது காண்க. நாயகியின் தாயானவள் இவளைப் பற்றி உரைக்கும்போது திருவாய்மொழி (2-4-5) - வண்டு திவளும் தண்ணந்துழாய் கொடீர் – வண்டுகள் எப்போதும் மொய்க்கின்றதான துளசியைக் கொடுப்பிர்களாக - என்றே உரைப்பாள். ஆழ்வாரும் கீழே உள்ள வாக்கியங்கள் மூலம் திருத்துழாயை விரும்பி நிற்கிறார்:

- திருவாய்மொழி (2-4-9) – விரைமட்டலர் தண்டுழாய் - பரிமளம் மற்றும் மது ஆகியவை நிறைந்த துளசி
- திருவாய்மொழி (4-2-10) - கண்ணன் கழல்துழாய் பொன்செய் பூண் மென்முலைக்கு – க்ருஷ்ணனின் திருவடியில் வைக்கப்பட்டிருந்த திருத்துழாயை எனது ஸ்தனங்களில் பொன் ஆபரணம் போன்று இட்டு.

ஸர்வேச்வரனும் திருவாய்மொழி (6-8-6) – தன் மன்னுநீள் கழல்மேல் தண்டுழாய் நமக்கன்றி நல்கான் – தன்னுடையதும், தனது அடியார்கள் உள்ள இடம் தேடி செல்கின்ற திருவடிகளின் மீது மண்டிக் கிடக்கின்றதும், காண்பவர்கள் களைப்பை நீக்குகின்றதும்

ஆகிய துளசியை நமக்கு அல்லாமல் மகிழ்வுடன் வேறு யாருக்கும் அளிக்கமாட்டான் - என்பதற்கு ஏற்ப அணைத்துக்கொள்ள விரும்பும் திருத்தோள்களிலும்.

வ்யாக்யானம் – (நன் மார்பின் மேலும்) அணிப்பிக்கும் அவளிருக்கிற திருமார்பிலும். (சுடர்முடி மேலும்) அணைத்துக்கொண்டு நின்று மேல் நோக்கிப் பார்த்தவாறே, தன்னுடைய சேஷித்வ ப்ரகாசகமாயிருக்கிற திருவபிஷேகத்திலும். (தாளிணை மேலும் புணைந்த தண்ணந்துழாயுடை அம்மான்) தன்னுடைய சேஷித்வத்தை ஸ்திதிப்பிக்கிற திருவடிகளிலும் சாத்தின திருத்துழாயையுடைய ஸர்வேச்வரன். தோளிணை இத்யாதிகளுக்கு பட்டர் "வீரராயிருப்பார் முற்பட ஆயுதத்துக்கு இடுவர்கள்; அப்படியே திருத்தோள்களுக்கு இட்டான்; ப்ரணயிகளாயிருப்பார் அநந்தரம் அபிமதவிஷயத்துக்கு இடுவர்கள். அப்படியே பெரியபிராட்டியார் எழுந்தருளியிருக்கிற கோயில் கட்டணத்துக்குக் கொடுத்தான்; ஆயுதத்துக்கும் அபிமதவிஷயத்துக்கும் இட்டால், பின்னைத் தந்தாம் விநியோகம் கொள்ளுமித்தனையிறே; ஆகையாலே தான் சூடினான்; சேஷம் பின்னை அடியாரிறே கைக்கொள்ளுவார்; ஆகையாலே திருவடிகளுக்குச் சாத்தினான்; ஆபத்துக்கு உதவுவார் அடியாரிறே. தளர்ந்தும் முறிந்தும் சகடவசுரர் உடல் வேறாப் பிளந்து வீயப்பொருவார் அடியாரிறே; நம்முடைய ஆபத்துக்களுக்குத் திருவடிகளே துணையானாற்போலே காணும் அவனுடைய ஆபத்துக்களுக்கும் திருவடிகளே துணையானபடி" என்று அருளிச்செய்வர்.

விளக்கம் - (நன் மார்பின் மேலும்) புருஷகாரமாக, அடியார்களுடைய அணைப்பை ஏற்றுக் கொள்ளும்படிச் செய்யும் பெரியபிராட்டியார் உள்ள திருமார்பிலும். (சுடர்முடி மேலும்) – அவனை அப்படியே கட்டி அணைத்துக்கொண்டு, மேலே நிமிர்ந்து பார்த்தால், தனது எஜமானத்தன்மையை வெளிப்படுத்தும்படி ஒளி வீசும் திருமுடியிலும். (தாளிணை மேலும் புணைந்த தண்ணந்துழாயுடை அம்மான்) - தன்னுடைய ஸர்வேச்வரத்தன்மையை நிலை நாட்டும்படியாக உள்ள திருவடிகளிலும் சாற்றப்பட்ட திருத்துழாய் கொண்ட ஸர்வேச்வரன். இந்த இடத்தில் ஸ்வாமி பராசரபட்டர் அருளிச்செய்த கருத்தைக் காண்பது உசிதமானது. அவர் அருளிச்செய்தது - உலகில் வீரர்களாக உள்ளவர்கள் தங்களுடைய ஆயுதங்களுக்கு முதலில் அலங்காரம் செய்வர்; இது போன்று இவன் தனது திருத்தோள்களுக்கு முதலில் துளசியால் அலங்காரம் செய்தான். காதலர்களாக உள்ளவர்கள் தங்களுடைய காதலிகள் உள்ள இடத்திற்கு அலங்காரம் செய்வர்; அது

போன்று இவன் பெரியபிராட்டியார் எழுந்தருளியுள்ள அந்தப்புரமான திருமார்பில் துளசியைக் கொண்டு அலங்கரித்தான். ஆயுதம் மற்றும் காதலுக்கு உரியவர்கள் ஆகியோருக்கு அளித்த பின்னர், தங்களை அலங்கரித்துக் கொள்வர் அல்லவோ; அது போன்று தனது திருமுடியில் துளசியை வைத்துக்கொண்டான். மீதம் உள்ளதை அடியார்கள் கைக்கொள்வர் அல்லவோ; ஆகவே தனது அடியார்களின் இடமான திருவடிகளில் துளசியைச் சேர்த்துக்கொண்டான். ஆபத்துக் காலத்தில் உதவுவது திருவடிகள் அல்லவோ? திருவாய்மொழி (6-9-4) – தளர்ந்தும் முறிந்தும் சகடவசுரர் உடல் வேறாப் பிளந்து வீயப்பொருவார் – சகடாசுரனின் உடலானது உருமாறி, முறிந்து, பிளந்து போகும்படியாகத் திருவடிகள் மூலம் செயலாற்றியவனே - என்பதற்கு ஏற்ப அசுரனை அழித்துக் காப்பாற்றியது திருவடிகள் அல்லவோ? இங்கு ஒரு கேள்வி எழலாம். அவனுடைய திருவடிகள் நம்முடைய ஆபத்து காலங்களில் துணை நிற்கிறதே அல்லாமல் அவனுக்குத் துணையாக ஆகுமோ? இதற்கு ஸ்வாமி பராசரபட்டர், "நமக்கு அவனுடைய திருவடிகள் எவ்விதம் துணையாக உள்ளனவோ அது போன்று அவனுடைய ஆபத்து காலங்களிலும் துணையாக நிற்கும்", என்றார்.

வ்யாக்யானம் - (கேள் இணை ஒன்றும் இலாதான்) "கேள்" என்று இத்தை கேழ் என்றாக்கி, அதாவது ஒப்பாய், இணையென்றும் ஒப்பாய், திரளவும் தனித்தனியும் ஒப்பில்லாதான் என்னுதல்; அன்றிக்கே, "கேள்" என்று உறவாய், சேர்ந்த ஒப்பில்லாதான் என்னுதல். (கிளரும்) ஆற்றுப்பெருக்குப்போலே மேல்மேலெனக் கிளரா நிற்பதாய், நிரவதிக தேஜோரூபமான திவ்யமங்கள விக்ரஹத்தை உடையவன். "சுடர்" என்றும், "ஒளி" என்றும் பர்யாயம். இரண்டாலும் – மிக்க ஒளி என்றபடி. ஒளி - பேரழகு. (மூர்த்தி) கீழ்ச்சொன்ன ஒப்பனை மிகையாம்படியான வடிவையுடையவன். (நாள் அணைந்து) நாள்தோறும் வந்து கிட்டுமத்தனையல்லாது கால்வாங்க மாட்டுகிறிலன். (என்னுடை இத்யாதி) என்னுடைய ஸ்துதி விஷயமானான் என்னுதல்; அன்றிக்கே, "வாசி திஷ்டந்" என்கிறபடியே, என்னுடைய வாகிந்த்ரியத்துக்கு விஷயமானான் என்னுதல்.

விளக்கம் - (கேள் இணை ஒன்றும் இலாதான்) – "கேள்" என்பதை "கேழ்" என்று படித்து, "ஒப்பாய்" என்று கொள்ளலாம். "இணை" என்பதும், "ஒப்பாய்" என்றே பொருள் தருவதாகக் கொண்டு, "எந்தவிதத்திலும் ஒப்பற்றவன்" என்று கொள்க. அல்லது "கேள்" என்றால் உறவு என்று கொண்டு, சேர்ந்த ஒப்பில்லாதவன் என்றும் கொள்க. (கிளரும்) -

நதியின் ப்ரவாஹம் போன்று மேலும்மேலும் பெருகியபடி, எல்லையற்ற தேஜோமயமான திவ்யமங்கள திருமேனி கொண்டவன். சுடர், ஒளி ஆகிய இரண்டும் ஒரே பொருளை அளிப்பவை ஆகும். இந்த இரண்டையும் ஒன்றாகக் கூட்டி "மிகுதியான ஒளி" என்று கொள்க. ஒளி என்றால் பேரழகு என்றும் கூறலாம். (மூர்த்தி) - இதுவரை கூறப்பட்ட அழகு அத்தனையும் குறைவே என்று கூறும்படியான வடிவு கொண்டவன். (நாள் அணைந்து) – அன்றாடம் என்னிடம் வந்து கிட்டி நிற்கிறான்; ஒருநாள் கூட, ஒரு நொடியும் அகலவில்லை. (என்னுடை இத்யாதி) - எனது ஸ்துதிகளுக்குப் பொருளானான். அல்லது வாசி திஷ்டந் - வாக்கில் காணப்படுகிறான் - என்பதற்கு ஏற்ப என்று வாக் என்ற இந்த்ரியத்துக்கு விஷயம் ஆனான்.

1-9-8 நாவினுள் நின்று மலரும் ஞானக்கலைக்களுக்கெல்லாம்
ஆவியுமாக்கையும் தானே அழிப்போடளிப்பவன் தானே
பூவியல் நால்தடந் தோளன் பொருபடை யாழிசங்கேந்தும்
காவிநன் மேனிக் கமலக்கண்ணன் என் கண்ணினுளானே

பொருள் – நாக்கில் தோன்றுகின்ற, ஞானத்தை அளிக்கின்ற, அனைத்து கலைகளின் உயிராக உள்ள அர்த்தம் மற்றும் அவற்றின் சரீரமாக உள்ள சப்தம் ஆகிய இரண்டும் தான் விதித்தது போன்று வைப்பவன் (அல்லது தானாகவே உள்ளவன்); அந்தக் கலைகளின் உற்பத்தி மற்றும் அழிவு ஆகிய இரண்டும் தனக்கு வசப்பட்டபடி உள்ளவன்; மலர் போன்ற மென்மையுடன் கூடிய நான்கு அகன்ற திருத்தோள்கள் கொண்டவன்; தனது திருத்தோள்களில் தன்னுடைய அடியார்களின் விரோதிகளை நீக்கும்விதமாகப் போர் செய்கின்றதான சக்கரம் மற்றும் சங்கு ஆகியவற்றைக் கொண்டவன்; கருநெய்தல் போன்று அழகான திருமேனி கொண்டவன்; தாமரை போன்று மலர்ந்த திருக்கண்கள் கொண்டவன்; இப்படிப்பட்டவன் தனது மொத்த அழகுடன் என் கண்களுக்குள் உள்ளான்.

அவதாரிகை - ஸகலவித்யாவேத்யனான ஸர்வேச்வரன், ப்ரமாணங்களாலே காணக்கடவ வடிவை என் கண்ணுக்கு விஷயமாக்கினான் என்கிறார்.

விளக்கம் - அனைத்துவிதமான வித்யைகள் மூலம் அறியப்படுபவனாகிய ஸர்வேச்வரன், தகுந்த ப்ரமாணங்கள் மூலம் அறியக்கூடியதான தனது திருவுருவத்தை, தனது கண்களுக்கு விஷயம் ஆக்கினான் என்கிறார்.

வ்யாக்யானம் – (நாவினுள் இத்யாதி) ஜிஹ்வாக்ரத்திலே விகஸியா நின்றுள்ள ஜ்ஞாந ஸாதநமான வித்யா விசேஷங்களுக்கெல்லாம். (ஆவியும் ஆக்கையும் தானே) ஆவி என்கிறது அர்த்தத்தை, ஆக்கையென்கிறது சப்தத்தை. "இவ்வர்த்தத்தை இச்சப்தம் காட்டக்கடவது" என்று நியமித்துவிட்டான் அவனாயிற்று. ஆக, சப்தார்த்த ஸம்பந்தம் அவனிட்ட வழக்காயிற்று. (அழிப்போடு அளிப்பவன் தானே) மந்தமதிகளான சேதநருடைய ப்ரதிபத்தி தோஷங்களாலும், லேகக தோஷங்களாலும், பாட பேதங்களாலும் இவை உருமாயுமளவிலே ஸம்ஹரித்தும், அபேஷித்த ஸமயத்திலே ஸ்ருஷ்டித்தும் போருகிறான் தானே. "அல்லாத ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களைச் சொல்லுகிறது" என்பாருமுண்டு.

விளக்கம் - (நாவினுள் இத்யாதி) - நாக்கின் நுனியில் மலர்வதான ஞானத்திற்குச் சாதனமாக உள்ள அனைத்துவிதமான வித்யைகளுக்கெல்லாம். (ஆவியும் ஆக்கையும் தானே) - ஆவி என்பது பதங்களின் பொருள், ஆக்கை என்பது அந்தப் பதங்களின் ஒலி; அதாவது "இந்த அர்த்தத்தை, இந்தச் சொல் கூறக்கடவது", என்று நியமித்தான். ஆகவே ஒரு சொல் ஏற்படுத்தும் ஓசை மற்றும் அந்தச் சொல் அளிக்கின்ற அர்த்தம் ஆகிய இரண்டிற்கும் இடையே உள்ள ஸம்பந்தம் அவனால் உண்டாக்கப்பட்டது என்றாகிறது. (அழிப்போடு அளிப்பவன் தானே) - ஒரு வித்யையை ஏன் அழிக்கவேண்டும் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார். மந்தமான புத்தி கொண்ட மனிதர்களின் நினைவாற்றலில் ஏற்படக்கூடிய குற்றம், எழுதும்போது ஏற்படக்கூடிய குற்றம், பாடபேதங்கள் மூலம் ஏற்படும் குற்றம் ஆகியவை காரணமாக ஒரு வித்யையின் கருத்தே ஒரு காலகட்டத்தில் மாறி விடக்கூடும்; இப்படியாக உள்ள நிலை ஒரு வித்யைக்கு உண்டாகும்போது, அந்த வித்யையை அவன் அழித்துவிடுகிறான்; இதே போன்று அந்த வித்யையை, தான் விரும்பும் காலகட்டத்தில் மீண்டும் ஸ்ருஷ்டி செய்கிறான். இதற்கு - உலகைப் படைத்து, அழித்தல் - என்றும் சிலர் பொருள் உரைப்பர்.

வ்யாக்யானம் - (பூவியல் இத்யாதி) பூவாலல்லது செல்லாதபடி ஸுகுமாரமாய், கல்பகதரு பணைத்தாற்போலே, நாலாய்ச் சுற்றுடைத்தாயிருக்கிற திருத்தோள்களை உடையவன். பூவியல் – பூவாலே அலங்க்ருதமான தோள் என்னுதல்; பூவையொழியச் செல்லாத ஸௌகுமார்யத்தை உடையவன் என்னுதல். (பொரு படை) பணைத்துப் பூத்த கல்பக தருபோலேயாயிற்று - யுத்தத்துக்குப் பரிகரமான திவ்யாயுதங்களைத் தரித்தால் இருக்கும்படி. பொருபடை – யுத்த ஸாதநங்களானவை. (காவி நன்மேனி)

அவ்வாயுதங்களாலே விரோதியைப் போக்கி அநுபவிக்கும் வடிவழகு. (நன்மேனி) காவி - வடிவழகுக்கு உபமாநமாக நேர்நில்லாமையாலே "நன்மேனி" என்கிறார். (கமலக்கண்ணன் என் கண்ணினுளானே) இவர் கண்வட்டமொழியப் புறம்பே போனால் கண்வட்டக் கள்ளனாமே. பெருவெள்ளத்திலே ஒரு சுழி போலே திருக்கண்கள். (என் கண்ணினுளானே) ப்ராக்ருத விஷயங்களை அநுபவித்துப் போந்த என் கண்ணுக்குத் தன்னை விஷயமாக்கினான்.

விளக்கம் - (பூவியல் இத்யாதி) - மலர்களைக் காட்டிலும் மென்மையுடன் கூடியதாய், கற்பகமரம் போல நான்கு சுற்றுகளுடன் கூடியதான திருத்தோள்கள் கொண்டவன். பூவியல் என்றால் மலர்களால் அலங்கரிக்கப்பட்டத் திருத்தோள்கள் என்று பொருள். மலர்களின் தன்மையையுடைய திருத்தோள்கள். (பொரு படை) - ஸர்வேச்வரனின் திருக்கரங்களில் உள்ளபோது மலர்களின் தன்மையைக் கொண்டவையாகவும், யுத்தம் ஏற்படும்போது ஆயுதங்களை எடுக்கக்கூடியவையாகவும் உள்ள திருத்தோள்கள். (காவி நன்மேனி) - காவி என்றால் நெய்தல் மலர். அந்த ஆயுதங்கள் மூலம் அடியார்களின் விரோதிகளைப் போக்கி, தன்னை அனுபவிக்கச் செய்யும்படியான வடிவழகு. (நன்மேனி) - காவி என்பது அவனது வடிவழகைச் சரியாக விளக்கவல்ல உபமானமாக இல்லாத காரணத்தால் "நன்மேனி" என்றார். (கமலக்கண்ணன் என் கண்ணினுளானே) - இவரது கண் பார்வையில் இருந்து அகன்று செல்ல நெரிட்டால், தன்னை விரும்பியவனுடைய சொல்லை மறுத்தால் அவன் கண் முன்பு மீண்டும் வருவதற்கு அச்சம் கொண்டவன் போன்று, இவன் அஞ்சியபடி உள்ளான். அவனுடைய அழகான திருமேனி என்பதான ஒரு பெரிய வெள்ளத்தில் உண்டாகின்ற ஒரு சிறிய சுழி போன்ற திருக்கண்கள் கொண்டுள்ளான். (என் கண்ணினுளானே) – இந்த உலக விஷயங்களை மீண்டும் மீண்டும் அனுபவித்தபடி நின்றிருந்த எனது கண்களுக்குத் தன்னை இலக்காக்கினான்.

1-9-9 கமலக்கண்ணனென் கண்ணினுள்ளான் காண்ப னவன் கண்களாலே
அமலங்களாக விழிக்கும் ஐம்புல னுமவன் மூர்த்தி
கமலத் தயன்நம்பி தன்னைக் கண்ணுத லானோடும் தோற்றி
அமலத் தெய்வத்தோ டுலக மாக்கி என்நெற்றியுளானே

பொருள் - தாமரை போன்ற கண்கள் கொண்ட க்ருஷ்ணன் எனது பார்வையில் எப்போதும் உள்ளான். முதலில் அவனைக் காணாத நான் இப்போது காண்கிறேன்; எப்படி என்றால் அவன் தனது திருக்கண்கள் மூலம் எனது அறியாமை போன்ற தாழ்வுகள் நீங்கும்படியாகக் கடாக்ஷித்தான். இதன் காரணமாக எனது ஐந்து புலன்களும் அவனுக்கு

மட்டுமே அடிமையாகி நின்றன. தாமரையில் தோன்றியவனும், ஞானம் போன்ற பலவற்றைக் கொண்டவனுமாகிய நான்முகன், நெற்றிக்கண் கொண்ட சிவன் போன்றவர்களைப் படைத்தான்; குற்றங்கள் அற்ற தேவர்களையும், அனைத்து லோகங்களையும் படைத்தான் – இப்படிப்பட்ட ஸர்வேச்வரனாகிய க்ருஷ்ணன் எனது நெற்றியில் எப்போதும் உள்ளான்.

அவதாரிகை - கண்ணில் நின்ற நிலை ஸாத்மித்தவறே, என் நெற்றியிலே வந்து நில்லாநின்றான் என்கிறார்.

விளக்கம் - எனது கண்களில் நின்ற நிலையை நான் பொறுத்துக் கொண்டவுடன், எனது நெற்றியில் வந்து நின்றான் என்கிறார்.

வ்யாக்யானம் - (கமலக்கண்ணன் என் கண்ணினுள்ளான்) புண்டரீகாக்ஷனானவன் என் கண்ணுக்கு விஷயமானான். "ந சக்ஷுஷா க்ருஹ்யதே" என்கிற மர்யாதை குலைந்தது. அவன் அவ்வடிவை உம்முடைய கண்ணனுக்கு விஷயமாக்கினானாகில், நீர் பின்னைச் செய்ததென்? என்னில், (காண்பன்) நானும் கண்டு அனுபவியாநின்றேன். இவ்விலக்ஷண விஷயத்தை நீர் கண்டு அநுபவிக்கவல்லீரானபடி எங்ஙனே? என்ன (அவன் இத்யாதி) அவன் தன் திருக்கண்களாலே, என் தோஷமெல்லாம் கழிந்து நான் காணவல்லேனாம்படி குளிரக் கடாக்ஷியா நின்றான்; ஆனாலும், இந்த்ரியங்கள் என்று சில உண்டே காட்சிக்கு ப்ரதிபந்தகங்கள், அவை செய்ததென்? என்ன, (ஐம்புலனும் அவன் மூர்த்தி) காட்சிக்கு ப்ரதிபந்தகங்களான ச்ரோத்ராதிகளும் அவனிட்ட வழக்காம்படி அவனுக்கு சரீரவத் விதேயமாய் அங்கே படையற்றன. (கமலத்தயன் இத்யாதி) திருநாபீகமலத்திலே அவ்யவதாநேந பிறந்து, எல்லாரிலும் விஸஜாதீயமான ஜந்மத்தையுடையனாய், தனக்கு இவ்வருகுள்ளவற்றை உண்டாக்குமிடத்தில் ஸர்வேச்வரனைக் கேள்வி கொள்ள வேண்டாதபடி நிரபேக்ஷனான சதுர்முகனை லலாடநேத்ரனான ருத்ரனோடே உண்டாக்கி, அவ்வளவில் பர்யவஸியாதே, ஸத்வப்ரசுரரான தேவதைகளோடே லோகங்களை உண்டாக்கினவன். "நெய்யுண்ணி" என்னுமாபோலே, "ஆக்கி" என்றது ஆக்கும் ஸ்வபாவனென்றபடி. (என் நெற்றியுளானே) கர்மாநுகுணமாக ஜகத்தை ஸ்ருஷ்டித்துவிட்டான்; ப்ரயோஜந நிரபேக்ஷமாக என் நெற்றியிலே புகுந்து நின்றான்.

விளக்கம் - (கமலக்கண்ணன் என் கண்ணினுள்ளான்) - தாமரை போன்ற கண்கள் கொண்ட க்ருஷ்ணன் எனது பார்வைக்கு இலக்கானான். இதனால் – ந சக்ஷுஷா க்ருஹ்யதே - ஸர்வேச்வரன் பார்வைக்கு இலக்காகமாட்டான் என்ற ப்ரமாணத்தின் மீது இருந்த மரியாதை நீங்கியது. இதனைக் கேட்ட சிலர் ஆழ்வாரிடம், "அவன் உமது

கண்களுக்கு தனது வடிவழகை இலக்காக்கி நின்றான். நீவீர் என்ன செய்தீர்?", என்றனர். இதற்கு விடை அளிக்கிறார். (காண்பன்) – நானும் அவனைக் கண்டு அனுபவித்தேன். இதற்கு அவர்கள், "இவ்விதம் மேன்மையாக உள்ள ஒரு வஸ்துவை நீர் கண்டு அனுபவிக்கும்படியான திறன் உமக்கு எப்படி வந்தது?", என்றனர். இதற்கு விடை அளிக்கிறார். (அவன் இத்யாதி) – அவன் தனது தாமரை போன்ற திருக்கண்களால் எனது அறியாமை போன்ற தோஷங்கள் அனைத்தும் நீங்கப்பெற்று, நான் அவனைக் காணலாம்படியாக, எனக்குக் குளிர்ந்து கடாக்ஷித்தான்; இதன் மூலம் நான் அவனைக் கண்டேன். இதற்கு அவர்கள், "ஆனாலும் காண்பது என்ற செயலுக்குத் தடை ஏற்படுத்தும் மற்ற இந்த்ரியங்கள் உள்ளது அல்லவா? அவை என்ன செய்தன?", என்றனர். இந்தக் கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார். (ஐம்புலனும் அவன் மூர்த்தி) – காட்சிக்குத் தடையாக உள்ள காது போன்ற மற்ற இந்திரியங்கள் அனைத்தும் அவன் வசப்பட்டு, அவனுடைய சரீரத்துக்கு உரிமை உடையவை போன்று, அவனிடம் சரணம் புகுந்தன. (கமலத்தயன் இத்யாதி) - அவனுடைய திருநாபிக்கமலத்தில் நேராகத் தோன்றி, அனைவரைக் காட்டிலும் மேன்மையான பிறவியைக் கொண்டவனாகவும், தனக்கு வேண்டியவை அனைத்தும் அளித்து உண்டாக்கிய ஸர்வேச்வரனிடம் ஏதும் கேட்டுத் தெளிய வேண்டாதபடியான ஞானம் கொண்டவனும் ஆகிய நான்முகன்; இவனை நெற்றியில் கண் கொண்ட ருத்ரனோடு படைத்தான். அது மட்டும் அல்லாமல், ஸத்வ குணங்கள் மேலோங்கி உள்ள தேவர்களுடன் அனைத்து உலகங்களையும் படைத்தான். "ஆக்கி" என்றால் ஆக்கும் ஸ்வபாவம் கொண்டவன் என்று பொருள். (என் நெற்றியுளானே) – அவரவர்களின் கர்மங்களுக்கு ஏற்றபடியும், கர்மங்களை இயற்றும் விதமாகவும் உலகங்களைப் படைத்தான்; எந்தவிதமான எதிர்பார்ப்பும் இன்றி எனது நெற்றியில் வந்து நின்றான்.

1-9-10 நெற்றியுள் நின்றென்னை யாளும் நிரைமலர்ப் பாதங்கள் சூடி
கற்றைத்துழாய் முடிக் கோலக்கண்ணபிரானைத் தொழுவார்
ஒற்றைப் பிறையணிந்தானும் நான்முகனும் இந்திரனும்
மற்றை யமரருமெல்லாம் வந்தென துச்சியு ளானே

பொருள் – என்னுடைய நெற்றியில் எப்போதும் நின்று, என்னை அடிமை கொண்டபடி உள்ள க்ருஷ்ணனின் திருவடிகளில் அடியார்கள் இட்ட மலர்கள் பரவி உள்ளன; தனது திருமுடியில் மிகவும் அழகாக திருத்துழாயை அவன் அணிந்துள்ளான். இப்படியாக உள்ள க்ருஷ்ணனை – ஒற்றைப் பிறையைத் தலையில் அணிந்துள்ள சிவபெருமான், நான்முகன் இந்த்ரன் மற்றும் அனைத்து தேவர்கள் வந்து தொழும்படி உள்ளனர். இப்படிப்பட்ட க்ருஷ்ணன் எனது தலை மீது இருப்பவன் ஆனான்.

அவதாரிகை - ப்ரஹ்மாதிகள் தன்னைப் பெறுகைக்கு அவஸர ப்ரதீக்ஷராய்த் தடுமாறும்படி இருக்கிறவன் தான் என்னைப் பெறுகைக்கு அவஸரம் பார்த்து வந்து என் உச்சியுளானான் என்கிறார்.

விளக்கம் - நான்முகன் போன்ற பல தேவர்களும் அவனைக் கிட்டுவதற்குத் தகுந்த காலம் பார்ப்பவர்களாக, தடுமாறியபடி உள்ளனர்; இப்படிப்பட்ட அவன் என்னை அடைவதற்குத் தகுந்த காலம் பார்த்தவனாக வந்து எனது தலை உச்சியில் நின்றான் என்கிறார்.

வ்யாக்யானம் - (நெற்றி இத்யாதி) நெற்றியுள் நின்று என்னை அடிமை கொள்ளுகிற. (நிரை மலர்ப்பாதங்கள் சூடி) மலரை நிரைத்தாற்போலே இருக்கிற திருவடிகளை சிரஸா வஹித்து. (கற்றைத்துழாய் இத்யாதி) ஒரு வாடல் மாலையைக் கொண்டு வந்து திருமுடியிலே வைத்தாலும், திருக்குழலின் ஸ்பர்சத்தாலே செவ்வி பெற்றுத் தழையா நிற்கும். "தழைக்கும் துழாய்" என்னுமாபோலே. செவ்வி பெற்றுத் தழைக்கிற திருத்துழாயோடே கூடின திருவபிஷேகத்தை உடையனாய், தர்சநீயமான வடிவையுமுடைய உபகாரசீலனான க்ருஷ்ணனை நிரைமலர்ப்பாதங்கள் சூடித் தொழுவார். (ஒற்றைப்பிறை அணிந்தானும்) ஒரு கலாமாத்ரமான சந்த்ரனை ஜடையிலே தரித்து ஸுகப்ரதாநனாயிருக்கிற ருத்ரனும், அவனுக்கு ஜநகனான சதுர்முகனும், தேவர்களை மெய்க்காட்டுக் கொண்டிருக்கிற இந்த்ரனும், மற்றுமுண்டான தேவர்களும் எல்லாம். இப்படி அவர்கள் தடுமாறா நிற்க தன்னைப் பெறுகைக்கு, அதெல்லாம் தான் என்னைப் பெறுகைக்குப் பட்டு வந்து, என் உச்சியுளானாகா நிற்கிறான். ராஜாக்கள் அந்தப்புரத்தில் ஒரு கட்டில் நின்றும் மற்றைக் கட்டேறப் போகாநிற்க, நடுவே அந்தரங்கர் முகங்காட்டித் தம் காரியங்கொண்டு போமாபோலே இவர் திருநெற்றியில் நின்றும் திருமுடியேறப் போகாநின்றால், ப்ரஹ்மாதிகள் நடுவே முகங்காட்டித் தங்கள் காரியங் கொண்டு போமித்தனை.

விளக்கம் - (நெற்றி இத்யாதி) - எனது நெற்றியில் நின்று என்னைத் தனது அடிமையாக்கிக் கொள்பவன். (நிரை மலர்ப்பாதங்கள் சூடி) - மலர்களை அடைப்பது போன்று வைத்துள்ள திருவடிகளைத் தங்கள் தலைகளில் சூடி. (கற்றைத்துழாய் இத்யாதி) – செடியில் பறிக்கப்பட்டு நீண்ட நேரம் ஆனாலும் வாடாமல் அப்படியே உள்ளதான துளசிக் கற்றைகள். இது எப்படி? வாடிய மாலை ஒன்றைக் கொண்டு வந்து இவன் திருமுடியில் வைத்தாலும், இவனுடைய திருக்கேசத்தின் தொடர்பு காரணமாக அந்த மாலை மலர்ந்து, தழைத்துக் காணப்படும். பெரிய திருவந்தாதி (39) – தழைக்கும் துழாய் - என்றது காண்க. மிகுந்த அழகைப் பெற்றுத் தழைத்துக் காணப்படும் துளசிமாலைகளுடன் கூடிய திருமுடியைக் கொண்டவனாக, இப்படியாக அனைவருக்கும் உதவும்படியாக உள்ள க்ருஷ்ணனைத் தொழுவார்கள்; அவனது மலர்கள் நிறைந்த திருவடிகளைத் தொழுவார்கள். (ஒற்றைப்பிறை அணிந்தானும்) – ஒரு பிறையை மட்டும் கொண்டதான சந்த்ரனைத் தனது ஜடாமுடியில் வைத்து மிகுந்த இன்பத்தில் உள்ளவனாகிய சிவனும்,

அவனுடைய புத்திரனாகிய நான்முகனும், எண்ணற்ற தேவர்களைத் தன் கீழே கொண்டுள்ள இந்த்ரனும், மற்றும் உள்ள பல தேவர்களும். இப்படியாக உள்ள பலரும் க்ருஷ்ணனைப் பெறுவதற்குப் படாதபாடு பட்டபடி இருந்து அவனைக் கிட்டுகிறார்கள்; இப்படி உள்ளபோது, அவர்கள் பட்டபாட்டை தான் பட்டு, என்னைக் கிட்டி, எனது உச்சியில் நின்றான். அரசர்கள் அந்தப்புறத்தில் உள்ளபோது ஒரு வஸ்த்ரத்திலிருந்து அடுத்த வஸ்த்ரத்திற்கு மாறும்போது அங்குள்ளவர்கள் அரசனுக்கு உதவுவது போன்று வந்து தங்களுடைய செயல்களை முடித்துக்கொள்வது வழக்கம்; இது போன்று க்ருஷ்ணன் இவருடைய நெற்றியிலிருந்து தலைக்குச் செல்லும் நேரத்தில் இந்தத் தேவர்கள் வந்து தொழுது தங்கள் செயல்களை நிறைவேற்றிக் கொள்கிறார்கள்.

1-9-11 உச்சியுள்ளே நிற்கும் தேவதேவற்குக் கண்ணபிராற்கு
இச்சையுள் செல்லவுணர்த்தி வண்குருகூர்ச் சடகோபன்
இச்சொன்ன வாயிரத்துள் இவையுமோர் பத்து எம்பிராற்கு
நிச்சலும் விண்ணப்பம் செய்ய நீள்கழல் சென்னி பொருமே.

பொருள் – இப்படியாக எனது தலைமீது உள்ளவனும், தேவாதிதேவனும், க்ருஷ்ணனாக அவதரித்தவனும் ஆகிய ஸர்வேச்வரனிடம், தன் பக்கம் அவன் கொண்டுள்ள ப்ரேமத்தைத் தான் அறிந்துகொண்டதை, அவனுக்கு உணர்த்துவதாக இந்தப் பாசுரங்கள் உள்ளன. இப்படியாகத் திருக்குருகூரில் அவதரித்த நம்மாழ்வார் அருளிச்செய்த ஆயிரம் பாசுரங்களில் "இவைபோல் வேறு ஏதும் இல்லை" என்று கூறலாம்படியுள்ள இந்தப் பத்து பாசுரங்களையும் ஸர்வேச்வரனுக்கு விண்ணப்பம் செய்தால், ஸர்வேச்வரனின் நீண்ட திருவடிகள் அவர்கள் தலை மீது எப்போதும் விளங்கும்.

அவதாரிகை - நிகமத்தில், இத்திருவாய்மொழியை எம்பெருமானுக்கு விண்ணப்பஞ்செய்ய, அவர்கள் தலையிலே எம்பெருமான் திருவடிகள் நாடோறும் சேரும் என்கிறார்.

விளக்கம் – இறுதியாக இந்தத் திருவய்மொழியை ஸர்வேச்வரன் முன்பாக விண்ணப்பம் செய்தால் அவர்கள் தலை மீது ஸர்வேச்வரனின் திருவடிகள் ஒவ்வொரு நாளும் வந்து நிற்கும் என்கிறார்.

வ்யாக்யானம் - இனி எங்கே போவதாக இருந்தான் என்னில், (உச்சியுள்ளே நிற்கும்) அமரர் சென்னிப்பூவான தான், என் சென்னிக்கு அவ்வருகு, கந்தவ்ய பூமியில்லை என்று என் உச்சியுள்ளே வர்த்தியா நின்றான்; என் உச்சியுள்ளே நிற்கையாலே தேவதேவன் ஆனான் என்றுமாம். (உள்ளே நிற்கும்) இனி அவ்வருகு போக்கில்லை. (தேவதேவற்கு) அயர்வறும் அமரர்களதிபதியாயிருக்கிற இருப்பையும் நினைக்கிறிலன். (கண்ணபிராற்கு) உபகாரசீலனான க்ருஷ்ணனுக்கு. (இச்சை உள் செல்ல உணர்த்தி) ஸர்வேச்வரனுக்குத் தம் பக்கலுண்டான இச்சையைத் தாம் அறிந்தபடியை அவன் திருவுள்ளத்திலே படும்படி

உணர்த்தி. (வண்குருகூர்ச் சடகோபன்) ஸர்வேச்வரனுக்கு அறிவித்தவளவேயன்றிக்கே ஸம்ஸாரிகளும் அறியும்படி பண்ணின உதாரரான ஆழ்வார். (இச்சொன்ன) இப்பாவ வ்ருத்தியாலே சொன்ன ஆயிரத்திலும் இவையும் ஓர் பத்து. (எம்பிராற்கு இத்யாதி) எம்பிராற்கு விண்ணப்பஞ்செய்ய, நிச்சலும் நீள்கழல் சென்னி பொரும் – தனக்குப் பாங்கான ஸமயத்திலே ஒருகால் விண்ணப்பஞ்செய்ய, நாள்தோறும் ஆசாலேசமுடையார் இருந்தவிடத்திலே செல்ல வளரும் திருவடிகள் சென்னியோடே சேரும். எம்பிரான் என்றது - இப்படி ஸாத்மிக்க ஸாத்மிக்கவும், இழவு மறக்கவும், அநுபவிப்பித்த உபகாரகன் என்றபடி. ஆழ்வார் க்ரமத்திலே "உச்சியுளானே" என்ற பேறு, இது கற்றார்க்கு முதலடியிலே உண்டாம். "பொரு" என்று ஒப்பாய், ஒப்பாவது - சேருகையாய், சேரும் என்றபடி. "உச்சியுள்ளே நிற்கும்" என்று இவர் பெற்றதுவே பேறாகக் கடவது.

விளக்கம் - அடுத்து எங்கே செல்ல உள்ளான் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார். (உச்சியுள்ளே நிற்கும்) – திருக்குறுந்தாண்டகம்(6) – அமரர் சென்னிப்பூ - என்பதற்கு ஏற்ப தேவர்களின் தலையில் நின்ற எம்பெருமான், இனி எனது தலையைக் காட்டிலும் வேறு போக்கிடம் இல்லை என்று எண்ணி, எனது தலையில் நிலைத்து நின்றான். எனது தலையில் நிற்பதால் தேவதேவன் ஆனான். (உள்ளே நிற்கும்) - இனி போக்கிடம் இல்லை. (தேவதேவற்கு) - தான் "அயர்வறும் அமரர்கள் அதிபதி" என்ற எண்ணமும் அவனுக்குத் தோன்றவில்லை. (கண்ணபிராற்கு) – தனக்கு அனைத்துவிதமான உபகாரங்களையும் செய்தபடி உள்ள க்ருஷ்ணனுக்கு. (இச்சை உள் செல்ல உணர்த்தி) - ஸர்வேச்வரனாகிய அவனுக்குத் தன் பக்கம் ஏற்பட்ட ஆசையைத் தான் அறிந்து கொண்டதை அவன் திருவுள்ளத்தில் நன்றாகப் படும்படியாக உணர்த்தி. (வண்குருகூர்ச் சடகோபன்) – ஸர்வேச்வரனுக்கு மட்டும் இப்படியாக அவர் தெரிவிக்கவில்லை, ஸம்ஸாரிகளும் உணரும்படியாக உரைத்த தாராள மனம் கொண்ட ஆழ்வார். (இச்சென்ன) – இது போன்ற எண்ணத்துடன் உரைத்த ஆயிரம் பாசுரங்களில் இந்தப் பத்துப் பாசுரங்கள். (எம்பிராற்கு இத்யாதி) – அதாவது தனக்கு ஏற்ற நேரத்தில் ஒருவர் விண்ணப்பம் செய்தாலும், அவர்களுக்கு நாள்தோறும் ஆசை சிறிதளவே உண்டு என்றாலும், அவர்கள் உள்ள இடம் வரை செல்வதற்காக வளர்கின்ற திருவடிகள்; இப்படிப்பட்ட திருவடிகள் தலையில் நிற்கும். "எம்பிரான்" என்பதன் மூலம் - இப்படியாகப் பொறுத்துக்கொண்டு அனுபவிக்கும்வரை பொறுமையுடனும், தான் அவனை இழந்தது குறித்து சோகம் கொண்டால் உதவும் தன்மையுடனும் உள்ளவன் என்கிறார். "கண்ணபிரான்" என்பதால் அனைவருக்கும் உதவிய தன்மையையும், "எம்பிராற்கு" என்பதால் தனக்கு உதவிய தன்மையையும் உரைக்கிறார். ஆழ்வார் வரிசையாக உரைத்த, இறுதியாக உள்ள இந்தப் பாசுரத்தில், "உச்சியுள்ளானே" என்றார். ஆயினும் இந்தத் திருவாய்மொழியைக் கற்றவர்களுக்கு இந்தப் பேறு, இந்தத் திருவாய்மொழியின் முதல் அடியிலேயே ஏற்படும். இவர் பெற்ற பேறு போன்றே வேறுபாடு இன்றி அனைவரும் பெறுவர்.

வ்யாக்யானம் - முதற்பாட்டில், என்னுடைய பர்யந்தத்திலே வந்து நின்றான் என்றார்; இரண்டாம் பாட்டில், அது ஸாத்மித்தவாறே அருகே நின்றான் என்றார்; மூன்றாம்

பாட்டில், நம்முடனே கூட நின்றான் என்றார்; நாலாம் பாட்டில், ஒக்கலையிலே வந்திருந்தான் என்றார்; அஞ்சாம் பாட்டில், நெஞ்சிலே வந்து புகுந்தான் என்றார்; ஆறாம் பாட்டில், தோளிலே வந்திருந்தான் என்றார்; ஏழாம் பாட்டில், நாவிலே வந்து புகுந்தான் என்றார்; எட்டாம் பாட்டில், கண்ணுள்ளே நின்றான் என்றார்; ஒன்பதாம் பாட்டில், நெற்றியிலே நின்றான் என்றார்; பத்தாம் பாட்டில், திருமுடியிலே நின்றான் என்றார்; நிகமத்தில் ஆக, இத்தால் தம்முடனே ஸாத்மிக்கும்படி கலக்கையாலே, அவனை சிரஸா வஹித்தார்; பலஞ்சொல்லித் தலைக்கட்டினார்.

விளக்கம் - முதல் பாசுரத்தில், "என்னுடைய எல்லையில் வந்து நின்றான்," என்றார்; இரண்டாம் பாசுரத்தில், "நான் அதனைப் பொறுத்துக் கொண்டவுடன், எனது அருகில் வந்து நின்றான்", என்றார். மூன்றாம் பாசுரத்தில் தன்னுடனே நின்றான் என்றார். நான்காம் பாசுரத்தில் தனது இடுப்பில் வந்து அமர்ந்தான் என்றார். ஐந்தாம் பாசுரத்தில் தனது நெஞ்சில் வந்து புகுந்தான் என்றார். ஆறாம் பாசுரத்தில் தனது தோள்களில் வந்து நின்றான் என்கிறார். ஏழாம் பாசுரத்தில் தனது நாக்கில் வந்து நின்றான் என்றார். எட்டாம் பாசுரத்தில் தனது கண்களுக்குள் நின்றான் என்றார். ஒன்பதாம் பாசுரத்தில் தனது நெற்றியில் நின்றான் என்றார். பத்தாம் பாசுரத்தில் தனது திருமுடியில் நின்றான் என்றார். இறுதியாக இந்தப் பாசுரங்களுடைய பலன் என்ன என்பதை உரைத்தார்; அடுத்து அவன் தன்னுடன் இருப்பதைப் பொறுத்துக் கொள்ள இயலும் என்பதால் தலையில் ஏற்றார்.

முதற்பத்து ஒன்பதாம் திருவாய்மொழி ஸம்பூர்ணம்

முதற்பத்து பத்தாம் திருவாய்மொழி
பொருமாநீள் ப்ரவேசம்

மூலம் – "கீழில் திருவாய்மொழியில் பிறந்த ஸர்வாங்க ஸம்ச்லேஷத்தை அநுஸந்தித்து நிர்வ்ருதராகிறார்" என்று முன்புள்ள முதலிகள் நிர்வஹிக்கும்படி. அதாவது, நிர்வ்ருதியென்று ஸுகமாய், ஸுகிக்கிறார் என்றபடி. கீழ்ப்பிறந்த ஸர்வாங்க ஸம்ச்லேஷத்தை அநுஸந்தித்து பட்டர் அருளிச்செய்வதோர் ஏற்றமுண்டு. அதாவது "உச்சியுள்ளே நிற்கும்" என்றிறே கீழ் நின்றது, பேற்றில் இனி இதுக்கு அவ்வருகு ஏற்றமாகச் செய்து கொடுக்கலாவதொன்றுமில்லை; இனி இதினுடைய அவிச்சேதத்தைப் பண்ணிக் கொடுக்கையே உள்ளது; "பேறு கனத்திருந்தது, இது வந்த வழி என்ன?" என்று ஆராய்ந்தார், இப்பேற்றின் கனத்துக்கு ஈடாயிருப்பதொரு நன்மை தம்தலையில் இன்றிக்கேயிருந்தது; இத்தலையிலும் ஏதேனும் உண்டாகப் பார்த்தாலும், அத்வேஷமாதல், ஆபிமுக்யமாதலிறே உள்ளது; அத்தை ஸாதநமாகச் சொல்லப் போராதே; இத்தலையிலே பரமபக்தி பர்யந்தமாகப் பிறந்தாலும் பேற்றின் கனத்துக்கு இத்தை ஒரு ஸாதநமாகச் சொல்லப் போராதே; ஒருவன் ஓர் எலுமிச்சம் பழம் கொடுத்து

ராஜ்யத்தைப் பெற்றால் அது விலையாயிராதே; ஸர்வேச்வரனடியாக வரும் பேற்றுக்கு இத்தலையால் ஓரடி நிரூபிக்கலாயிராதே; "வரவாறொன்றில்லையால் வாழ்வினிதால்" என்னும்படியிறேயிருப்பது.

விளக்கம் - கடந்த திருவாய்மொழியில் தன்னுடைய அனைத்து அவயவங்களிலும் ஸர்வேச்வரன் கலந்து நின்றதை அருளிச்செய்தார்; இந்தத் திருவாய்மொழியில் அவன் அவ்விதமாகக் கலந்ததை எண்ணி மகிழ்ந்து, அதன் காரணமாக ஏற்பட்ட ஆனந்தத்தை அருளிச்செய்தார் என்று ஒரு சில ஆசார்யர்கள் உரைப்பார்கள். ஆனால், "கடந்த திருவாய்மொழியில் தனது அனைத்து அவயவங்களையும் ஸர்வேச்வரன் அனுபவித்தான் என்று ஆழ்வார் அருளிச்செய்தார்; இப்படியாக உள்ள நிலைக்கு ஆழ்வார் ஏதேனும் காரணம் அருளிச்செய்தாரோ?", என்று ஸ்வாமி பராசரபட்டர் ஆராய்ந்தார்; அப்படி எந்தவிதமான காரணமும் கிட்டாமல் போகவே பட்டர் பின்வருமாறு கருத்து உரைத்தார். கடந்த திருவாய்மொழியில், "உச்சியுள்ளே நிற்கும்" என்று அருளிச்செய்தார்; இந்த அனுபவத்தைக் காட்டிலும் உயர்ந்த அனுபவம் வேறு ஏதேனும் இருக்கமுடியுமா? நிச்சயமாக முடியாது. ஆனால் இந்த அனுபவம் என்பது எந்தவிதமான தடையும் இன்றி, தொடர்ந்து உண்டாகவேண்டும்; ஆனால் அப்படிப்பட்ட நிலை ஸர்வேச்வரனின் திருவுள்ளத்தைப் பொறுத்தது. கடந்த திருவாய்மொழியில் ஆழ்வார் அப்போது தனக்குக் கிட்டிய இந்த உயர்ந்த பேறு குறித்து ஆராய்ந்தார். அப்போது அவர் தனது மனதில், "இப்போது நமக்குக் கிட்டியுள்ள இந்தப் பேறு மிகவும் கனமான ஒன்றாக உள்ளது. இதனைக் காட்டிலும் உயர்ந்த பேறு வேறு ஏதும் இல்லை. இத்தகைய பேறு நமக்கு ஏற்பட என்ன வழி உண்டானது அல்லது எதனால் இந்தப் பேறு கிட்டியது?", என்று ஆராய்ந்தார். இந்தப் பேற்றைத் தான் அடையத் தன்னிடம் தகுதியான ஏதும் இல்லை என்று உணர்ந்தார். அப்படியே தன்னிடம் ஏதேனும் தகுதி இருந்தாலும் அவை பகவானிடம் த்வேஷம் இல்லாத தன்மை, பகவான் அளிப்பதை எதிர்க்காமல் இருத்தல் என்ற இரண்டு மட்டுமே என்பதையும் அறிந்தார். ஆனால் இவை இரண்டும் இவர் பெற்ற பேற்றுக்குச் சாதனமாக ஆகமாட்டா. ஒருவரிடம் பரமபக்தி வரை உண்டானாலும், அதனைக் கூட இந்தப் பேற்றுக்குச் சாதனமாக உரைக்க இயலாது; ஏன்? ஒருவன் ஒரு எலுமிச்சம்பழத்தைக் கொடுத்து ஒரு ராஜ்யத்தைப் பெற்றால், அதற்கான விலை எலுமிச்சம்பழம் மட்டுமே என்று கூற இயலாது அல்லவோ? பெரியதிருவந்தாதியில் (56) – வரவாறொன்றில்லையால் வாழ்வினிதால் - ஸர்வேச்வரனாகிய க்ருஷ்ணன் நமக்கு அளித்த உபாயம் நம்மிடம் வந்த வழியை நாம் அறியோம் – என்று இவரே உரைத்தார் அல்லவோ?

மூலம் - இவனை முதலிலே ஸ்ருஷ்டிக்கிறபோது "இவன் தீய வழியைத் தப்பி நல்ல வழி போகவேணும்" என்று உபகரணங்களைக் கொடுத்துவிடுகையாலே, இவன் தலையால் பிறந்த நன்மைக்கு அடி அவனாயிருக்குமே; இனி புத்த்யாதி ஸகல பதார்த்தங்களுக்கும் நிர்வாஹகனாகையாலே, அத்வேஷம் தொடக்கமாக, பரிகணநை நடுவாக, பரமபக்தி பர்யந்தமாகத் தானே பிறப்பிப்பானொருவன்; "நித்யஸூரிகள் பேற்றை அநாதிகாலம்

ஸம்ஸரித்துப் போந்த நமக்குத் தந்தான்; ஒரு விஷயீகாரமிருக்கும்படியென்!" என்று, கீழில் திருவாய்மொழியில் உந்மஸ்தகமாகப் பிறந்த ஸம்ச்லேஷ ரஸத்தை அநுஸந்தித்து நிர்வ்ருதராகிறார் என்று.

விளக்கம் - ஸர்வேச்வரன் சேதனனைப் படைக்கும்போதே, "இவன் தீய வழியில் போகாமல் நல்ல வழியில் செல்லவேண்டும்", என்று எண்ணியபடியே அனைத்து உறுப்புகளையும் கொடுக்கிறான்; ஆகவே சேதனன் தனக்குத்தானே நன்மைகளைத் தேடிக்கொண்டாலும், அதற்கு மூலகாரணமாக ஸர்வேச்வரனே உள்ளான் என்றாகிறது. புத்தி போன்ற அனைத்து வஸ்துக்களுக்கும் அவனே நிர்வாஹகன் என்பதால், ஸர்வேச்வரன் மீது வெறுப்பு இல்லாத தன்மை தொடங்கி, அவனிடம் கொள்ளும் பரமபக்தி முடிய உள்ள அனைத்தையும் ஸர்வேச்வரனே உண்டாகும்படிச் செய்கிறான். ஆக, "நித்யஸூரிகள் அனுபவிக்கவல்ல பேற்றை எல்லையற்ற காலமாக ஸம்ஸாரத்தில் உழன்றபடி உள்ள நமக்கு அளித்தான்; அவனது கடாக்ஷம் எத்தகையது?", என்று கடந்த திருவாய்மொழியில் உண்டான சேர்க்கை காரணமாக ஏற்பட்ட சுவையை எண்ணி இங்கு மகிழ்கிறார் என்று கருத்து.

1-10-1 பொருமா நீள்படை ஆழிசங்கத்தொடு
திருமா நீள்கழல் ஏழுலகுந் தொழ
ஒரு மாணிக்குறளாகி நிமிர்ந்த அக்
கருமாணிக்கம் என் கண்ணுளதாகுமே

பொருள் - தனது அடியார்களுடைய விரோதிகளை எதிர்த்துப் போர் செய்ய வல்லதான பெருமை கொண்டதாக உள்ள சிறந்த ஆயுதங்களாக சங்கும் சக்கரமும் உள்ளன. மேலும், "இவனே மஹாலக்ஷ்மியின் நாயகன்" என்று பறை சாற்றுவதான அடையாளங்களைக் கொண்டதாகவும், அடியார்கள் உள்ள இடம்வரை சென்று உணர்த்துவதாகவும் உள்ள திருவடிகளை ஏழு உலகில் உள்ள அனைவரும் வணங்கி அனுபவிக்கும்படியாகச் செய்தான். எப்படி என்றால் தனக்கு ஈடில்லாத ஒரு பிரம்மச்சாரியாய் வந்து, அதன் பின்னர் ஓங்கி வளர்ந்தான். இப்படிப்பட்ட வைபவத்தை உடைய கருமாணிக்கம் போன்ற அவன், எனது கண்ணில் எப்போதும் உள்ளான்.

அவதாரிகை - இத்திருவாய்மொழியில் சொல்லுகிற அர்த்தத்தை திரள அருளிச்செய்கிறார் முதற்பாட்டில். "மஹாபலி, தன் வரவை நினையாதேயிருக்க அவன் பக்கலிலே தானே இரப்பாளனாய்ச் சென்று தன்னுடைமையைத் தன்னதாக்கினாற்போலே, எனக்கு நினைவின்றிக்கேயிருக்கத் தானே வந்து தன் வடிவழகை என் கண்ணுக்கு இலக்காக்கினான்" என்று அவன் படியை அநுஸந்தித்து இனியராகிறார்.

விளக்கம் - இந்தத் திருவாய்மொழியில் தான் அருளிச்செய்யவுள்ள அனைத்தையும் தொகுத்து இந்தப் பாசுரத்தில் அருளிச்செய்கிறார். மஹாபலிச் சக்ரவர்த்தி தன்னுடைய

யாகசாலைக்குச் ஸர்வேச்வரன் வரப்போகிறான் என்று எண்ணவில்லை; ஆயினும் அவனிடம் ஸர்வேச்வரன் ஒரு யாசகம் கேட்பவனாகச் சென்றான்; அப்படிச் சென்று தனக்கு உடைமையான பூமியைத் திரும்பவும் பெற்றுக் கொண்டான். மஹாபலியைப் போன்றே நானும் அவனுடைய நினைவு ஏதும் இல்லாமல் இருந்தேன்; அப்போது தனது வடிவழகுடன் வந்த அவன், தனது வடிவழகை எனது கண்களுக்கு இலக்காக்கினான் என்று அவனுடைய தன்மையை எண்ணிப் பூரித்துப்போகிறார்.

வ்யாக்யானம் - (பொரு) திருவுலகளந்தருளுகிறபோது, திவ்யாயுதங்கள் நமுசி ப்ரப்ருதிகள் மேலே பொருதபடியைச் சொல்லுதல்; திவ்யாயுதங்கள்தான் ஒருவரையொருவர் அதிசங்கை பண்ணிப் பொருகிறபடியைச் சொல்லுதல். நமுசி ப்ரப்ருதிகளோடே பொரும் என்றது சேருமிறே. [இடங்கை வலம்புரி நின்றார்ப்ப] இடத்திருக்கையிலே ஸ்ரீபாஞ்சஜந்யமானது அப்போதப்போது பிறந்த விஜயத்தை அநுஸந்தித்து ஆர்த்துக்கொண்டது; அங்ஙன் ஆர்த்துக்கொள்ள அவஸரமின்றிக்கே, திருவாழி நெருப்பை உமிழ்ந்து விரோதிகளை "வாய்வாய்" என்று ஒடுங்கப் பண்ணிற்று; [விடங்காலும் தீவாயரவணை] திருவநந்தாழ்வான் உகவாதார் மேலே கிடந்தவிடத்தே கிடந்து நெருப்பை உமிழ்ந்தான். விரோதிபூயிஷ்டமான இத்தேசத்தில் அவன் இப்படி செய்யச் சொல்ல வேணுமோ, அங்கே உட்பட இப்படி செய்யக் கடவ அவன்? ஆங்காரவாரமது கேட்டு அழலுமிழும் பூங்காரரவணையிறே; ஆங்கு - தேசம் அது, ஆரவாரம் அது – "அஹமந்ந மஹமந்நமஹமந்நம், அஹமந்நாதோஹமந்நாதோஹமந்நாத:" என்கிற ஆரவாரம். அங்கே இது கேட்டு அப்படி படுகிறவர்கள் இங்கே இது கண்டால் இப்படி படச் சொல்ல வேணுமோ? இவர்கள் இப்படி அலமருகைக்கு அடியென்? என்னில், [அரவணை மேல் தோன்றல்] திருவநந்தாழ்வானைப் படுக்கையாகவுடைய ஸர்வேச்வரன் காடுமேடையும் அளக்கைக்காகப் புஷ்பஹாஸ ஸுகுமாரமான திருவடிகளை நிமிர்ந்தபோது எல்லாம் பட வேண்டாவோ? அவன் இப்படி வ்யாபரியா நின்றால், தன்னில் தான் பொருது என்றபோது அஸ்த்தாநே பயசங்கையாலே ஒருவரையொருவர் அதிசங்கை பண்ணிப் பொருகை. "ராகவம் சரணம் கத:" என்றவனையிறே "வத்த்யதாம்" என்றது; "பரதஸ்ய வதே தோஷம் நாஹம் பச்யாமி" என்றாரிறே இளையபெருமாள்.

விளக்கம் - (பொரு) - இந்த உலகத்தை அளந்தபோது, மஹாபலியின் புத்திரனாகிய நமுசி போன்றவர்கள் மீது சக்கரம் போன்றவை சென்றதைக் கூறினார். அல்லது "சக்கரம் காப்பாற்றுமோ" என்று சங்கும், "சங்கு காப்பாற்றுமோ" என்று சக்கரமும் ஒருவரை ஒருவர் சந்தேகம் கொண்டு நின்றன என்றும் கூறலாம். ஆனால் நமுசி முதலானவர்கள் விரோதிகளாக உள்ளதால் அவர்களுடன் இந்த ஆயுதங்கள் யுத்தம் செய்தன என்று கூறுவது பொருத்தமே ஆகும். அடுத்து இரண்டாம் திருவந்தாதி (71) – இடங்கை வலம்புரி – என்னும் பாசுரத்திற்கான வ்யாக்யானம் அருளிச்செய்கிறார். [இடங்கை வலம்புரி நின்றார்ப்ப] – அவனுடைய இடது திருக்கரத்தில் உள்ள ஸ்ரீபாஞ்சஜன்யம், நமுசி போன்றவர்களை இவன் வென்றது குறித்து, அப்போது உண்டான வெற்றியை உணர்த்தும்விதமாக பெரும் ஆரவாரம் செய்தது. ஆனால், இவ்விதம் ஆரவாரம் செய்து

கொண்டாட இது சரியான நேரம் இல்லை என்று எண்ணி, சக்கரத்தாழ்வான் தனது நெருப்பை நமுசி போன்ற அசுரர்கள் மீது உமிழ்ந்து, அந்த விரோதிகளை ஒடுங்கும்படிச் செய்தான். [விடங்காலும் தீவாயரவணை] – தான் இருந்த இடத்தில் இருந்தபடியே ஆதிசேஷன் விரோதிகள் மீது நெருப்பை உமிழ்ந்தான். ஆனால் ஆதிசேஷன் உள்ள இடம் பரமபதம் ஆகும்; அது எந்தவிதமான விரோதிகளும் இல்லாத இடம் ஆகும்; இப்படிப்பட்ட இடத்திலும் ஆதிசேஷன் இது போன்று செய்யவேண்டுமோ; பரமபதத்தில் இவ்விதம் செய்வானோ என்று கேட்கலாம். நான்முகன் திருவந்தாதி (10) – ஆங்கு ஆரவாரம் அது கேட்டு அழல் உமிழும் பூங்காரரவணை – என்பதற்கு ஏற்ப பரமபதத்தில் பகவானுக்கு ஏற்றவர்களின் ஆரவார ஒலியைக் கேட்டாலும், "ஸர்வேச்வரனுக்கு ஆபத்து வந்ததோ" என்று எண்ணுபவன் ஆயிற்றே! அங்கு அவர்கள் எழுப்பும் ஆரவாரம் என்னவென்றால் தைத்திரீய உபநிஷத் (10) – அஹம் அந்நம் அஹம் அந்நம் அஹம் அந்நம், அஹமந்நாதோஹமந்நாதோஹமந்நாத: - நான் அவனுக்கு இனியவன், நான் அவனை அனுபவிப்பவன் – என்ற முழக்கமே ஆகும். பரமபதத்தில் உள்ளபோது உண்டாகின்ற இது போன்ற புகழ்ச்சி ஒலிக்கே பயம் கொள்பவர்கள் என்றால், இங்கே நமுசி போன்ற அசுரர்கள் சூழ இவன் நிற்கும்போது இவர்களுடைய பயத்தைக் கூறவும் வேண்டுமோ? சரி, இவர்கள் இவ்விதம் பதறியபடி உள்ளதன் காரணம் என்ன? [அரவணை மேல் தோன்றல்] – திருப்பாற்கடல் உறுத்தாமல் இருப்பதற்காக அதன் மீது மென்மையான படுக்கையாக ஆதிசேஷனைக் கொண்டவனாக ஸர்வேச்வரன் உள்ளான். இத்தனை மென்மையான அவன், காடு மற்றும் மேடு ஆகிய பலவற்றையும் அளப்பதற்காகத் தனது மலர் போன்ற மென்மையான திருவடியை உயர்த்தினான். அப்போது அதில் எல்லாம் இடறி, அந்தத் திருவடி அனைத்து பாடுகளும் படும் அல்லவோ? அவன் இப்படியாக நின்றபோது, தகாத இடத்தில் ஏற்படும் தேவையற்ற பயம் போன்று உண்டான பயம் காரணமாக, சங்கும் சக்கரமும் பயம் கொண்டு மோதின என்று கருத்து. இராமாயணம் யுத்தகாண்டம் (17-27) – ராகவம் சரணம் கத: - இராமனே சரணம் – என்று புகுந்த விபீஷணனையும், வத்யதாம் – கொல்லவேண்டும் – என்றனர்; இராமாயணம் அயோத்யாகாண்டம் (96-24) - பரதஸ்ய வதே தோஷம் நாஹம் பச்யாமி – பரதனைக் கொல்வதால் எந்தப் பாவமும் உண்டாவதை நான் காணவில்லை – என்று லக்ஷ்மணன் உரைத்தான்; இவை அனைத்தும் பயம் காரணமாகவே ஆகும்.

வ்யாக்யானம் - (மா) அவற்றின் வடிவின் பெருமையைச் சொல்லவுமாம். அன்றியே, ஆச்ரித விஷயத்தில் அவனிற்காட்டில் இவர்களுக்கு உண்டான பக்ஷபாதத்தைச் சொல்லவுமாம். "அவ்யாஹதாதி க்ருஷ்ணஸ்ய சக்ராதீந்யாயுதாநி தம் ரக்ஷந்தி ஸகலாபத்ப்யோ யேந விஷ்ணுருபாஸித:" என்கிறபடியே ஸர்வேச்வரன் எதிரியானாலும் அவன் கையிலே காட்டிக்கொடாதே நோக்கும் மஹத்தையைச் சொல்லுகிறது. (நீள் படை) "ஆயிரக்காதம் பறப்பதின் குட்டி ஐந்நூறு காதம் சிறகடிக்கொள்ளும்" என்னுமாபோலே, ஸர்வேச்வரன் அதிகரித்த கார்யத்திலே அவன் தன்னிலும் முற்பட்டிருக்கை. நீள்படையான ஆழிசங்கத்தோடே கூட. (திரு மா நீள் கழல் ஏழுலகும் தொழ) "கதா புந:"

என்று நான் ஆசைப்பட்டுக் கிடக்கும் திருவடிகளைக் கொண்டு கிடீர் ஆசையில்லாதார் தலையிலே வைத்தது. (திரு) ஐச்வர்ய ஸூசகமான த்வஜாரவிந்தாதிகளை யுடைத்தாயிருக்கை. (மா) பரமபூஜ்யமாயிருக்கை. (நீள்கழல்) ஆசாலேசமுடையார் இருந்தவிடம் எல்லையாக வளரும் திருவடிகள். (ஏழுலகும் தொழ) ஒரு ஸாதநாநுஷ்டாநம் பண்ணாதாரும் தொழ. (ஒரு) இவன்தானே "இவ்வடிவை இன்னமொருகால் கொள்ளவேணும்" என்னிலும் வாயாதபடி அத்விதீயமாயிருக்கை. (மாணி) ஸ்ரீய:பதி என்று தோற்றாதபடி இரப்பிலே தழும்பேறுகை. (குறளாகி) கோடியைக் காணியாக்கினாற் போலே, பெரிய வடிவைக் கண்ணாலே முகக்கலாம்படி சுருக்கினபடி. (நிமிர்ந்த) அடியிலே நீர்வார்த்துக் கொடுத்தவாறே நிமிர்ந்தபடி. வாஸுதேவ தருவிறே. நெய்தற்காடு அலர்ந்தாற்போலே, ஆகாசாவகாசமடையத் தன் வடிவழகாலே பாரித்தபடி. (அக்கருமாணிக்கம்) மயர்வற மதிநலம் அருளப்பெற்ற தம்மாலும் பரிச்சேதிக்கப் போகிறதில்லை காணும். (என் கண்ணுளதாகுமே) ஏழலகத்துள்ளார் வாசியறிந்திலர்களிறே; அவ்வாசியறியுமவராகையாலே "என் கண்ணுளதாகுமே" என்கிறார். கண் என்று - இடமாய், என்னிடத்தாகும் என்னவுமாம். "கருமாணிக்கம்" என்கையாலே, கண்ணுளதாகும் என்கிறது.

விளக்கம் - (மா) சங்கு சக்கரம் போன்றவற்றின் வடிவத்தின் பெருமையை உணர்த்துகிறார். அல்லது அடியார்களின் விஷயத்தில் அவனைக் காட்டிலும் அவர்களுக்கு உள்ள பக்ஷபாதத்தை உரைக்கிறார் என்றும் கொள்ளுலாம். அவனைக் காட்டிலும், இவர்களுக்கு அடியார்கள் விஷயத்தில் பக்ஷபாதம் உண்டு என்பதற்கு ப்ரமாணம் அருளிச்செய்கிறார். ஸ்ரீவிஷ்ணுதர்மம் - அவ்யாஹதாதி க்ருஷ்ணஸ்ய சக்ராதீந்யாயுதாநி தம் ரக்ஷந்தி ஸகலாபத்ப்யோ யேந விஷ்ணுருபாஸித: - ஸர்வேச்வரனை ஆராதிக்கும் ஜீவராசிகளை, எதனையும் தடுக்க இயலாத சக்கரம் போன்ற ஆயுதங்கள் அனைத்து ஆபத்துக்களிலிருந்தும் காப்பாற்றுகின்றன - என்றது காண்க; அதாவது அடியார்கள் விஷயத்தில் ஸர்வேச்வரனே எதிர்த்து நின்றாலும், அவன் திருக்கரத்தில் புகாமல் நிற்கும் தன்மையை உரைத்தார். சக்கராயுதம் துர்வாஸரையும், இக்ஷீகாஸ்த்ரம் காகத்தையும் மெதுவாகவே பின் தொடர்ந்தன; இதனால்தான் அவர்களுக்குச் சரணாகதி செய்ய அவகாசம் கிட்டியது. (நீள் படை) – "ஆயிரம் காதம் தூரம் ஒரு பறவை பறக்கும் என்றால், அதன் குட்டியானது ஐந்நூறு காதம் பறக்கும்" என்பதற்கு ஏற்ப, ஸர்வேச்வரன் எடுத்த செயலில் அவனைக் காட்டிலும் வேகமாக முன்னே சென்று நிற்பவை. இப்படியாக உள்ள சக்கரமும் சங்கும் தவிர. (திரு மா நீள் கழல் ஏழுலகும் தொழ) – ஸ்தோத்ரரத்னம் – கதா புந: - உனது திருவடியே தலைக்கு ஆபரணமாய் – என்று நான் ஆசைப்பட்ட திருவடிகளை, ஆசையில்லாத பலரது தலைகளிலும் வைத்தான். (திரு) - ஐச்வர்யத்தை உடையவன் என்பதை உணர்த்தும் விதமாக இவனது திருவடிகளில் கொடி, தாமரை போன்ற அடையாளங்கள் கொண்டவன். (மா) - அனைவராலும் வணங்கி ஆராதிக்கத் தக்கபடி இருத்தல். (நீள்) துக்கத்தில் உள்ள அடியார்கள் உள்ள இடம் வரை வளர்ந்து செல்லும் திருவடிகள். (ஏழுலகும் தொழ) எந்தவிதமான சாதனத்தையோ, அனுஷ்டானத்தையோ கைக்கொள்ளாதவர்களும் தொழும்படியாக. (ஒரு) - ஸர்வேச்வரன் தனது மனதில், "இதே போன்ற ரூபத்தை மீண்டும்

ஒருமுறை எடுத்துக் கொள்ளவேண்டும்", என்று எண்ணினால், அது கிட்டாதபடி, இதனைப் போன்று இன்னொன்று இல்லை என்னும்படி உள்ள நிலை. (மாணி) மாணி என்றால் பிரம்மச்சாரி. இவன் மஹாலக்ஷ்மியின் நாயகன் என்ற நிலைக்கு, யாசகம் கேட்டதன் மூலம் தழும்பு ஏறியது. (குறளாகி) – குறள் என்றால் சிறிய வாமனன். கோடியைக் காணி என்று செய்தது போன்று, கண்ணால் முழுவதுமாகக் காண இயலாத தனது உருவத்தை மிகவும் எளிதாகக் கண்டு பருகலாம்படிச் சுருக்கினான். (நிமிர்ந்த) – வேரில் நீர் விட்டவுடன் செடியானது ஓங்கி வளர்வது போன்று, கையில் தான நீர் பெற்றவுடன், ஓங்கு வளர்ந்தான். இவன் வாஸுதேவன் என்ற மரம் அல்லவோ? நீலோத்பல மலர்கள் நிறைந்த வனம் முழுவதும் மலர்ந்து காணப்பட்டது போன்று ஆகாயம் முழுவதும் தனது வடிவழகால் பரப்பி நின்றான். (அக்கருமாணிக்கம்) - மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வாராலும் இவனை அளவிட இயலாதபடி உள்ளான் என்கிறார். (என் கண்ணுளதாகுமே) – ஏழு உலகில் உள்ளவர்கள் இவனுக்கும் மற்றவர்களுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை அறியமாட்டனர். இவர் இந்த வேறுபாட்டை அறிந்தவர் என்பதால் "என் கண்ணுளதாகுமே" என்கிறார். கண் என்பதை இடம் என்று பொருள் கொண்டு, "என்னிடம் உள்ளான்" என்றும் கூறலாம். "கருமாணிக்கம்" என்று கூறியதால் "கண்ணுளது" என்று அஃறிணையில் உரைத்தார்.

1-10-2 கண்ணுள்ளே நிற்கும் காதன்மையால் தொழில்
எண்ணிலும் வரும் என்னினி வேண்டுவம்
மண்ணும் நீரும் எரியும் நல்வாயுவும்
விண்ணுமாய் விரியும் எம்பிரானையே.

பொருள் – பூமி, தண்ணீர், அக்னி, காற்று மற்றும் ஆகாயம் என்ற பஞ்சபூதங்களைத் தனது சரீரமாகக் கொண்டு எங்கும் பரந்து விரிந்து நிற்கும் ஸர்வேச்வரனை மிகுந்த ப்ரியத்துடன் வணங்கினால், அவன் தன்னை வணங்கியவர்கள் கண்களில் எப்போதும் நிற்பான். ஒன்று, இரண்டு என்று எண்ணினாலும் வந்து நிற்பான். ஸர்வேச்வரனின் தன்மை இப்படியாக உள்ள பின்னர் நமக்கு அவன் செய்வது வேறு ஏதேனும் உண்டோ?

அவதாரிகை - பரமபக்திக்கும் பரிகணனைக்கும் ஒக்க முகங்காட்டும் என்கிறார்.

விளக்கம் - பரமபக்திக்கும், எண்ணுதலுக்கும் ஒரே போன்று தன் திருமுகம் காட்டுவான் என்று இந்தப் பாசுரத்தில் அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் - (கண்ணுள்ளே நிற்கும் காதன்மையால் தொழில்) பரமபக்தி யுக்தராய்க் கொண்டு தொழில், அவர்கள் கண்வட்டத்துக்கு அவ்வருகு போகமாட்டாதே நிற்கும். தன்னையொழியச் செல்லாமையை உடையராய்க் கொண்டு தொழில், தானும் அவர்களை யொழியச் செல்லாமையை உடையனாய் அவர்கள் கண்வட்டத்தினின்றும் கால் வாங்கமாட்டாதே நிற்கும். (எண்ணிலும் வரும்) "கடம், படம், ஈச்வரன்" என்றால், "நம்மை, 'இல்லை' என்னாதே, இவற்றோடொக்கப் பரிகணித்தானிறே" என்று வரும். "சதுர்விம்சதி தத்த்வமாயிருக்கும் அசித்து, பஞ்சவிம்சகன் ஆத்மா, ஷட்விம்சகன் ஈச்வரன்" என்றால், "நம்முடைய உண்மையையும் இவற்றோபாதி இசைந்தானிறே" என்று வந்து முகங்காட்டும். (வரும்) நிற்குமதில்லை. இவன் "போ" என்றபோதும் அதுக்கும் உடலாக வருமித்தனை. அன்றியே, (எண்ணிலும் வரும்) நம்முடைய எண்ணை மிஞ்சிவரும் என்றுமாம். (எண்ணிலும் வரும்) "இருபத்தொன்று, இருபத்திரண்டு, இருபத்துமூன்று, இருபத்துநான்கு, இருபத்தஞ்சு, இருபத்தாறு" என்று எண்ணினால், "இருபத்தாறு நானே" என்று வரும் என்றுமாம்.

விளக்கம் - (கண்ணுள்ளே நிற்கும் காதன்மையால் தொழில்) - பரமபக்தியுடன் தொழுதால், அவர்களின் கண் வட்டத்தை விட்டு அப்பால் செல்லாமல் அங்கேயே இருப்பான். தன்னைத் தவிர வேறு எங்கும் செல்லாமல் தொழுதபடி இருந்தால், தானும் அவர்களை விட்டு எங்கும் செல்லாமல் அவர்களுடைய கண் வட்டத்திலேயே அகலாமல் இருப்பான். (எண்ணிலும் வரும்) – வாதங்கள் செய்யும்போது "கடம், படம், ஈச்வரன்" என்று உதாரணம் கூறுவர்; இவ்விதம் கூறும்போது ஸர்வேச்வரன் தனது திருவுள்ளத்தில் "நம்மை இல்லை என்று கூறாமல் இவற்றுடனாவது பட்டியல் இட்டானே" என்று எண்ணி அவனிடம் வருவான், "24வது தத்வம் அசித், 25வது தத்வம் ஆத்மா, 26வது தத்வம் ஈச்வரன்" என்று வேதாந்திகள் கூறுவர்; அப்போது ஈச்வரன் "நம்மைப் பற்றிய உண்மையை இவற்றுடனாவது சேர்த்துக் கொண்டானே", என்று எண்ணி வருவான். (எண்ணிலும் வரும்) - நாம் அவனை எண்ணாதபோதிலும் அவன் வந்து நிற்பான். (எண்ணிலும் வரும்) – "21, 22, 23, 24, 25, 26" என்று எண்ணியபடி இருந்தால் "அந்த இருபத்து ஆறு நானே ஆவேன்" என்று வருவான்.

வ்யாக்யானம் - (என் இனி வேண்டுவம்) பரமபக்திக்கும் பரிகணைக்கும் ஒக்க முகங்காட்டுவானான பின்பு எனக்கு ஒரு குறையுண்டோ? அவன் இவன்பக்கல்

அப்ரதிஷேதத்துக்கு அவஸரம் பார்த்திருந்து முகங்காட்டுவானான பின்பு, இவனுக்கு ஹிதாம்சத்தில் செய்யவேண்டுவது உண்டோ? இப்படியிருக்கிற பகவத்ஸ்வரூபத்தை புத்திபண்ணுகையிறே இவன் ப்ரபந்நனாகையாவது. அவன் தன் ஸ்வரூபோபதேசத்தைப் பண்ணி, "உன்னால் வரும் இழவுக்கு அஞ்சவேண்டா, மாசுச:" என்றாப்போலே, இவரும் அவன் ஸ்வரூபத்தை அநுஸந்தித்து, "என் இனி வேண்டுவம்" என்கிறார். அப்ரதிஷேதமே பேற்றுக்கு வேண்டுவது. அதுக்குப் புறம்பான யோக்யதா யோக்யதைகள் அகிஞ்சித்கரம். வேல்வெட்டி நம்பியார் நம்பிள்ளையை, "பெருமாள் கடலை சரணம் புகுகிறவிடத்தில் ப்ராங்முகத்வாதி நியமங்களோடே சரணம் புக்காராயிருந்தது. இவ்வுபாயம் இதர ஸாதநங்கள் போலே சில நியமங்கள் வேண்டியிருக்கிறதோ?" என்று கேட்க, "பெருமாள் தமக்கு 'ஸமுத்ரம் ராகவோ ராஜா சரணம் கந்துமர்ஹதி' என்று உபதேசித்தான் ஸ்ரீவிபீஷணாழ்வான்; அவன்தான் பெருமாளை சரணம் புகுகிறவிடத்தில், கடலிலே ஒரு முழுக்கிட்டு வந்தான் என்றில்லை; ஆக, இத்தால் சொல்லிற்றாயிற்று என்னென்னில்; பெருமாள், இக்ஷ்வாகு வம்ச்யராய், ஆசார ப்ரதாநராகையாலே, சில நியமங்களோடே சரணம் புக்கார்; ராக்ஷஸஜாதீயனாகையாலே, அவன் நின்ற நிலையிலே சரணம் புக்கான்; ஆகையாலே, யோக்யனுக்கு அயோக்யதை ஸம்பாதிக்கவேண்டா; அயோக்யனுக்கு யோக்யதை ஸம்பாதிக்க வேண்டா; ஆகையாலே ஸர்வாதிகாரம் இவ்வுபாயம்" என்று அருளிச்செய்தார். பகவத்ப்ரபாவ ஜ்ஞாநமுடையார்க்கு "இதுவே அர்த்தம்" என்று தோற்றியிருக்கும்; "கேவல க்ரியாமாத்ரத்துக்கே பலப்ரதாந சக்தியுள்ளது" என்று இருப்பார்க்கு "இவ்வர்த்தம் அநுபபந்நம்" என்று தோற்றியிருக்கும்.

விளக்கம் - (என் இனி வேண்டுவம்) - பரமபக்தி மற்றும் எண்ணிக்கை ஆகிய இரண்டிற்கும் ஒரே போன்று தனது திருமுகத்தைக் காண்பிற்பான் என்ற பின்னர் ஏதேனும் குறைவு உண்டோ? ஸர்வேச்வரன் இந்த ஆத்மாவிடம் வெறுப்பின்றி சரியான காலத்தை எதிர்நோக்கித் திருமுகம் காட்டுவான் என்று ஆன பின்னர், இந்த ஆத்மா தனது நன்மையைக் குறித்து ஏதும் செய்யவேண்டுமோ? இப்படியாக உள்ள ஸர்வேச்வரனின் ஸ்வரூபத்தைப் புத்தி பண்ணுவதே இவன் ப்ரபந்நன் ஆதல் என்று கருத்து. ஸர்வேச்வரன் தனது ஸ்வரூபத்தை உள்ளது உள்ளபடி தானே காண்பித்து, உபதேசம் செய்து, "உன்னால் ஏற்படும் துன்பம் குறித்து அச்சம் கொள்ளவேண்டாம் - மா சுச: - துயரம் கொள்ளாதே" என்று கூறினான்; இதே போன்று இவரும் தனது ஸ்வரூபத்தை எண்ணி, "நான் இனி வேண்ட என்ன உள்ளது?", என்றார். ஆக ஸர்வேச்வரனை வெறுக்காமல்

உள்ளதை மட்டுமே வேண்டியபடி இருந்தால் போதுமானது; இதற்கு மாறாக உள்ள யோக்யதை, யோக்யதை இல்லாமை போன்றவை அவசியம் அற்றவை என்று கருத்து. வேல்வெட்டிநம்பி என்பவர் ஸ்வாமி நம்பிள்ளையிடம், "இராமன் கடலிடம் சரணம் புகுந்தபோது கிழக்கு பார்த்து இருத்தல் போன்ற சில நியமங்களைச் செய்து சரணம் புகுந்தார். ப்ரபத்திக்கும் இது போன்ற நியமங்கள் ஏதேனும் உண்டோ?", என்று கேட்டார். இதற்கு நம்பிள்ளை, "விபீஷணன் இராமனிடம் இராமாயணம் யுத்தகாண்டம் (19-31) - ஸமுத்ரம் ராகவோ ராஜா சரணம் கந்துமர்ஹதி - அரசனாகிய இராமன் கடலைச் சரணம் அடையத்தக்கவரே - என்று உபதேசித்தான். ஆனால் அவன், தான் இராமனிடம் சரணம் புகுந்தபோது ஸமுத்ரத்தில் நீராடிவிட்டு வரவில்லை. ஆகவே இதனால் அறியப்பெறுவது என்னவென்றால் இராமன் இக்ஷ்வாகு குலத்தின் ஆசாரத்திற்கு ஏற்ப ஒரு சில நியமங்களுடன் சரணம் புகுந்தான்; விபீஷணன் ராக்ஷஸ குலம் என்பதால் அப்படியே சரணம் புகுந்தான்; ஆகவே யோக்யனாக உள்ள ஒருவனுக்கு அயோக்யதை அவசியம் இல்லை, அயோக்யனாக உள்ள ஒருவனுக்கு யோக்யதை சம்பாதிக்க வேண்டியதில்லை என்று கருத்து. ஆகவே இந்த ப்ரபத்தி அனைவருக்கும் ஏற்றதே", என்று அருளிச் செய்தார். ஸர்வேச்வரனுடைய ப்ரபாவம் குறித்து நல்ல ஞானம் கொண்டவர்களுக்கு "இதுவே சரியான அர்த்தம்" என்று தோன்றும்; "செயல்களுக்கு மட்டுமே பலனை அளிக்கும் ஆற்றல் உண்டு" என்று எண்ணுபவர்களுக்கு "இது சரியான அர்த்தம் அல்ல" என்று தோன்றும்.

வ்யாக்யானம் - (மண்ணும் இத்யாதி) காரணமான பூதபஞ்சகத்துக்கும் உள்ளீடாய், "பஹூ ஸ்யாம்" என்கிறபடியே தன் விகாஸமேயாம்படியிருக்கிற உபகாரகன் கண்ணுள்ளே நிற்கும் காதன்மையால் தொழில், எண்ணிலும் வரும், என் இனி வேண்டுவம்? தன்னியொழிந்த ஸகலபதார்த்தங்களும் தன் ஸங்கல்பத்தைப் பற்றி உளவாம்படி இருக்கிற ஸர்வேச்வரன், தன் பக்கல் ஆசாலேசமுடையார் ஸங்கல்பத்தைப் பற்றித் தான் உளனாம்படி இருப்பானான பின்பு, இவ்வாத்மாவுக்கு ஒரு குறையுண்டோ? என்கிறார். "நல்வாயுவும்" என்றது – தாரகத்வத்தைப் பற்ற. விண்ணுமாய் – இவற்றுக்கு அந்தராத்மாவாய் நிற்கும் என்றபடி. "விரியும்" – பஹூஸ்யாம் என்கிறபடியே விஸ்த்ருதனாகா நிற்கும். "எம்பிரான்" - எனக்கு உபகாரகன். ப்ரதமையை த்விதீயையாக்கி, "எம்பிரானை" என்று கிடக்கிறது.

விளக்கம் - (மண்ணும் இத்யாதி) - அனைத்திற்கும் காரணமான பஞ்சபூதங்களுக்கும் அந்தர்யாமியாக, தைத்திரீய ஆனந்தவல்லீ – பஹூ ஸ்யாம் – நான் பலவாகக் கடவேன் –

என்பதற்கு ஏற்ப அனைத்தும் தனது மலர்த்தியே என்னும்படி உள்ள உபகாரகன்; தன்னைத் தவிர உள்ள அனைத்து வஸ்துக்களும் தனது ஸங்கல்பத்தப் பற்றினால் மட்டும் அவற்றின் இருப்பு என்பது உண்டாகும் என்று அவன் உள்ளபோது, இந்த ஆத்மாவிற்கு என்ன குறை உண்டாகும் என்கிறார். நல்வாயுவும் என்பதன் மூலம் காற்று அனைத்தையும் தரிக்க வைப்பது என்று கூறுகிறார். (விண்ணுமாய்) – இவற்றுக்கு அந்தர்யாமியாய். (விரியும்) – பஹு ஸ்யாம் – நான் பலவாக விரிவேன் – என்பதற்கு ஏற்ப மலர்ந்து நிற்பான். (எம்பிரான்) – எனக்கு உதவி செய்தபடி இருப்பவன்.

1-10-3 எம்பிரானை யெந்தை தந்தை தந்தைக்கும்
தம்பிரானைத் தண்டாமரைக் கண்ணனை
கொம்பராவு நுண்ணேரிடை மார்பனை
எம்பிரானைத் தொழாய் மடநெஞ்சமே

பொருள் - எனது சொல்வழி நிற்கின்ற நெஞ்சமே! எனக்குப் பல உதவிகள் செய்தபடி உள்ளவனை, என்னளவில் மட்டும் நிற்காமல் எனது குலத்திற்கே நாதனாக உள்ளவனை, குளிர்ந்துள்ள கடாக்ஷத்துடனும் தாமரை போன்ற அழகும் கொண்ட திருக்கண்கள் உடையவனை, மலரின் காம்பு மற்றும் நாகம் ஆகியவற்றைக் காட்டிலும் மெலிந்த இடையைக் கொண்டவளான பெரியபிராட்டியைத் தனது திருமார்பில் கொண்டவனை – இப்படியாக உள்ள எனது ஸ்வாமியை நீ வணங்குவாயாக.

அவதாரிகை – "கண்டாயே அவன் ஸ்வரூபமிருந்தபடி; நீயும் உன் ஸ்வரூபத்துக்குச் சேர நிற்கப்பாராய் நெஞ்சே!" என்கிறார்.

விளக்கம் – "பரமபக்தி மற்றும் எண்ணுதல் ஆகிய இரண்டிற்கும் ஒரே போன்று திருமுகம் காண்பிக்கும் அவன் ஸ்வரூபத்தை நீ கண்டாய் அல்லவோ? இனி நீயும் உனது ஸ்வரூபத்துக்கு ஏற்றபடி அவனுடன் சேர்ந்து நிற்க முயல்வாயாக", என்று தனது நெஞ்சத்திடம் உரைக்கிறார்.

வ்யாக்யானம் – (எம்பிரானை) – கீழிற்பாட்டில் அவன் நீர்மையை அநுஸந்தித்து, என் நாயனானவனை என்கிறார். (எந்தை இத்யாதி) தம்மளவிலேயாய் அடியற்றிருக்கை

அன்றிக்கே, என் குடிக்கு நாயகனானவனை என்கிறார். இவர் இப்படி ஏத்தினவாறே, ப்ரயோஜநாந்தரபரருடைய பாசுரத்துக்கும், அநந்யப்ரயோஜநர் பாசுரத்துக்கும் வாசியறிமவனாகையாலே "இப்படி ஏத்துகிறவன் ஆர்?" என்று குளிரக் கடாக்ஷித்தான்; (தண் தாமரைக் கண்ணனை) "தாநஹம் த்விஷத: க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந் க்ஷிபாமி" என்னுமவன் இப்படி கடாக்ஷிக்கைக்கு ஹேதுவென் என்று பார்த்தார்; அருகே கடாக்ஷிப்பிக்கிறார் உண்டாயிருந்தது; (கொம்பராவு நுண்ணேரிடை மார்பனை) கொம்பு போலவும், அரவுபோலவும் இருப்பதாய், அதுதானும் நுண்ணிதாயிருந்துள்ள இடையை உடைய பெரியபிராட்டியைத் திருமார்பிலே உடையவனை. "அரவு" என்கிற இத்தை "அராவு" என்று நீட்டிக்கிடக்கிறது; "நச்சராவணை" என்னக்கடவதிறே. அன்றியே, கொம்பை லகூகரிக்கிற இடை என்றுமாம். (எம்பிரானை) அச்சேர்த்திக்கு ஒருகால் "எம்பிரானை" என்கிறார். (தொழாய்) தொழப்படும் விஷயம் ஒரு மிதுநமாயிற்று இருப்பது. (மடநெஞ்சமே) "தொழுதெழு" என்னலாம்படி பாங்கான நெஞ்சன்றோ நீ.

விளக்கம் - (எம்பிரானை) - கடந்த பாசுரத்தில் அவனுடைய நீர்மையை எண்ணி "எனது ஸ்வாமியை" என்றார். (எந்தை இத்யாதி) – தன்னுடைய அளவிலே மட்டும் அல்லாமல், தனது வம்சத்திற்கும் உதவுவதால் தனது குடிக்கே ஸ்வாமி என்கிறார். இவர் இப்படியாக இவனைப் புகழ்ந்தவுடன், தன்னைத் தவிர வேறு பலனை விரும்புவர்கள் யார், தன்னைத் தவிர மற்ற பலனை விரும்பாதவர்கள் யார் என்ற வேறுபாடு அறிபவன் என்பதால், "இப்படியாக நம்மைத் துதிப்பவர் யார்?", என்று இவரை குளிர நோக்கினான். (தண் தாமரைக் கண்ணனை) - கீதையில் (16-19) – தாநஹம் த்விஷத: க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந் க்ஷிபாமி – என்னை வெறுப்பவர்களையும், என் மீது பொறாமை கொள்பவர்களையும் நான் ஸம்ஸாரத்தில் தள்ளுகிறேன் - என்று உரைத்த இவன் நம்மைக் கடாக்ஷிக்கக் காரணம் என்ன என்று ஆழ்வார் வியந்தார். அப்போது தன்னைக் குளிர நோக்கும்படிச் செய்தவர் அவன் அருகிலேயே உள்ளதைக் கண்டு உரைக்கிறார். (கொம்பராவு நுண்ணேரிடை மார்பனை) – கொம்பு போன்றும், பாம்பு போன்றும் மெல்லிய இடையைக் கொண்ட பெரியபிராட்டியைத் தன் திருமார்பில் உடையவன். அரவு என்றால் நாகம்; ஆனால் இங்கு அராவு என்று உள்ளது; இந்தப் பதம் பாம்பு என்று குறிக்குமோ என்ற சந்தேகத்திற்கு ப்ரமாணம் காட்டுகிறார், திருச்சந்தவிருத்தம் (85) – நச்சராவணை – என்றது காண்க. (எம்பிரானை) - இந்தச் சேர்த்திக்காக ஒருமுறை "எம்பிரான்" என்கிறார். (தொழாய்) – தொழவேண்டிய விஷயம் இங்கு ஒரு ஜோடியாக

உள்ளது. (மடநெஞ்சமே) – திருவாய்மொழி (1-1-1) – தொழுதெழ – என்று கூறுவதற்கு ஏற்றபடி உள்ள நெஞ்சம் அல்லவா நீ?

1-10-4 நெஞ்சமே! நல்லை நல்லை உன்னைப் பெற்றால்
என் செய்யோம் இனி யென்ன குறைவினம்
மைந்தனை மலராள் மணவாளனைத்
துஞ்சும்போதும் விடாது தொடர்கண்டாய்.

பொருள் – நெஞ்சே! நீ செய்த செயல் மிகவும் நன்று, மிகவும் நன்று. உன்னைத் துணையாகப் பெற்றால் எந்தச் செயலைத்தான் செய்து முடிக்க இயலாது? உனது துணையை அடைந்த பின்னர் நாங்கள் எந்தவிதமான குறைவு அடைவோம்? எப்போதும் யௌவன பருவத்திலேயே உள்ளவனும், எல்லையற்ற இன்பத்தை அளிக்கின்ற மஹாலக்ஷ்மியின் நாயகனும் ஆகிய ஸர்வேச்வரனை நான் பிரிய நேர்ந்தாலும் நீ பிரியாது அவனைத் தொடர்வாயாக.

அவதாரிகை - தாம் சொன்னபோதே மேல் விழுந்து தொழுதவாறே நெஞ்சைக் கொண்டாடி, "நிகர்ஷாநுஸந்தாநம் பண்ணி நான் விச்லேஷித்த ஸமயத்திலும் நீ விடாதே கொள்" என்கிறார்.

விளக்கம் - கடந்த பாசுரத்தில், "எம்பிரானைத் தொழாய் மடநெஞ்சமே" என்று நெஞ்சத்தை நோக்கி உரைத்தார். உடனே இவரது நெஞ்சம் அவன் மீது விழுந்து தொழுதபடி நின்றது. இதனைக் கண்ட இவர் தனது நெஞ்சத்தை கொண்டாடி, "எனது தாழ்மையை நான் எண்ணியபடி அவனை விட்டுப் பிரிந்து சென்றாலும், நீ அவனை விடாமல் இருப்பாயாக" என்கிறார்.

வ்யாக்யானம் - (நெஞ்சமே நல்லை நல்லை) சொன்ன காரியத்தைச் சடக்கெனச் செய்த ஸத்புத்ரர்களை மடியிலே வைத்துக் கொண்டாடும் மாதா பிதாக்களைப்போலே, இவரும் மார்விலே அணைத்துக் கொண்டாடுகிறார் நெஞ்சை. (நெஞ்சமே நல்லை நல்லை) நல்லை என்ன அமையாதோ? "நல்லை நல்லை" என்கிற வீப்ஸைக்குக் கருத்தென்? என்னில்; இவர்தாம் அவன் பக்கல் தூதுவிடுமாபோலே, தனக்கு இவர் தூதுவிடவேண்டும்படி

இவர் தம்மை விட்டு அவன் பக்கலிலே நிற்கவல்ல நெஞ்சாகையாலே; "என் நெஞ்சினாரைக் கண்டால் என்னைச் சொல்லி அவரிடை நீர் இன்னஞ்செல்லீரோ?" என்னும்படி முந்துற்ற நெஞ்சாகையாலே "நல்லை நல்லை" என்கிற மீமிசை.

விளக்கம் – (நெஞ்சமே நல்லை நல்லை) – சொன்ன சொற்களை ஏற்றுக்கொண்டு, அந்தச் செயல்களை வெகு விரைவாகச் செய்து முடிக்கின்ற நல்ல புத்திரர்களைத் தாயும் தந்தையும் தங்களது மடியில் அமர வைத்துக் கொண்டாடுவர்; இது போன்று இவரும் தனது நெஞ்சத்தை மார்புடன் அணைத்துக் கொள்கிறார். (நெஞ்சமே நல்லை நல்லை) – "நல்லை" என்று ஒருமுறை கூறினால் போதாதோ, இங்கு நல்லை நல்லை என்று அடுக்குத் தொடராக ஏன் உரைக்கவேண்டும்? இவர் அவனுக்குத் தூது விடுவது போன்று, இவரது நெஞ்சம் இவரை விட்டுச் சென்று அவன் பக்கம் சென்றபடியால் அந்த நெஞ்சத்திற்கும் சேர்த்து தூது விடும்படி நிலைமை ஆனது; எனவே இவ்விதம் உரைத்தார். திருவிருத்தம் (30) – என் நெஞ்சினாரைக் கண்டால் என்னைச் சொல்லி அவரிடை நீர் இன்னஞ்செல்லீரோ – அன்னம், குருகு போன்று உங்களிடம் நான் யாசிக்கிறேன்; எனது நெஞ்சம் என்னை விட்டு அவனிடம் சென்றது; அதனைக் காண நேர்ந்தால் எனது தவிப்பை உணர்த்தி மீண்டும் என்னிடம் வரும்படி உரைப்பீர் - என்றது காண்க. பெரிய திருவந்தாதி (1) – முந்துற்ற நெஞ்சே – அவனுக்குக் கைங்கர்யம் செய்வதில் என்னைக் காட்டிலும் முற்பட்ட நெஞ்சமே – என்று உள்ளதால் அடுக்குத் தொடராக அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் – என்னை இப்படி ச்லாகிக்கிறதென்? என்ன, (உன்னைப் பெற்றால் என் செய்யோம்) நீ என்னொடு ஒருமிடறான பின்பு, எனக்குச் செய்ய முடியாததுண்டோ? நெஞ்சு ஒத்த பின்பு முடியாததுண்டோ? பலம் தருகைக்கு ஈச்வரன் உண்டு, விலக்காமைக்கு நீ உண்டு; இனிச் செய்யமுடியாதது உண்டோ? (இனி என்ன குறைவினம்) "உன்னைப் பெற்றால் என்செய்யோம்" என்று ஸாத்யாம்சமுண்டாகச் சொன்னவிடம் தப்பச்சொன்னோம்; உன்பக்கல் விலக்காமையே பற்றாசாக அவன் கார்யம் செய்வானாயிருந்தால், ஸாத்யாம்சந்தான் உண்டோ? அவன் உபாயபாவம் நித்ய நிரபேக்ஷமானால் ஸாத்யாம்சம் உண்டோ? ஆனால் பின்னை, க்ருத்யாம்சமென் என்ன; ஸாத்யாம்சமுண்டுகிடாய் என்கிறார். (மைந்தனை இத்யாதி) நான் அவனைக் கிட்டக் கொள்ள, "வளவேழுலகு" தலையெடுத்து அகலப்பார்ப்பதொன்று உண்டு; நீ அப்போது

அவனை விடாதே கிடாய். (மைந்தனை) இவ்விஷயத்தைக் கெடுவாய்! சிலராலே விடப்போமோ? (மைந்து - இனிமை, அழகு, மிடுக்கு). (மலராள் மணவாளனை) பெரியபிராட்டியார் "அகலகில்லேன் இறையும்" என்னும் விஷயத்தையன்றோ நான் உன்னை "விடாதே கிடாய்" என்கிறது. (துஞ்சும்போதும்) "அயோக்யன்" என்று அகலும் போதும். விச்லேஷம் விநாசபர்யாயம் என்கை. "முஹூர்த்தமபி ஜீவாவ:" என்னுமதிறே இவர்க்குத் துஞ்சுகையாகிறது. நான் அவனை அகன்று முடியுமன்றும், நீ அவனை விடாதே தொடரப்பார் கிடாய். இவ்வேப்பங்குடி நீரையன்றோ நான் உன்னைக் குடிக்கச் சொல்லுகிறது! பிராட்டி "அகலகில்லேன் இறையும்" என்கிற விஷயத்தையன்றோ நான் உன்னை அநுபவிக்கச் சொல்லுகிறது.

விளக்கம் - இதனைக் கேட்ட இவரது நெஞ்சம், "என்னை ஏன் இவ்விதம் கொண்டாடவேண்டும்?", என்றது. இதற்கு விடை அளிக்கிறார். (உன்னைப் பெற்றால் என் செய்யோம்) – நீ என்னுடன் ஒரே ஹ்ருதயம் என்று ஆன பின்னர் நான் செய்யவேண்டியதான ஸாதனங்களைக் கைக்கொள்ளாமல் போக இயலுமோ? பலன் அளிப்பதற்கு ஸர்வேச்வரன் உள்ளான்; அவனை விலக்காமல் இருப்பதற்கு நீ உள்ளாய்; ஆக இனி செய்ய இயலாதது ஏதும் உள்ளதோ? (இனி என்ன குறைவினம்) – "உன்னைப் பெற்றால் எதனைத்தான் செய்யமாட்டோம்" என்று கூறுவதற்கு அவசியமே இல்லை; இது உபாஸகரின் சொற்கள் ஆகும். ப்ரபந்நன் ஒருவன் செய்யவேண்டியது ஏதும் இல்லை என்பதை உணர்த்தும்விதமாக "இனி என்ன குறைவினம்" என்றார். நீ அவனை அண்டி இருப்பதையே கைம்மாறாகக் கொண்டு ஸர்வேச்வரனே அனைத்தையும் செய்து முடிப்பான் என்பதால், நாம் செய்யவேண்டியது ஏதேனும் உண்டோ என்றார். நம் பக்கம் ஏதும் செய்யவேண்டாமோ என்ற சந்தேகத்திற்கு விடை அளிக்கிறார். அவன் உதவுதல் என்பது எதனையும் எப்போதும் எதிர்பார்த்து அல்ல என்றார். இதனைக் கேட்ட நெஞ்சம், "அப்படி என்றால் நான் என்ன செய்யவேண்டும்" என்று வியந்தது. இதற்கு விடை அளிக்கிறார். "நீ செய்யவேண்டியது ஒன்று உண்டு" என்றார். (மைந்தனை இத்யாதி) – நான் அவனை அடையும்போது, வளவேழுலகு என்று திருவாய்மொழியில் உரைத்தது போன்று எனது தாழ்மை உணர்ச்சி தலை தூக்குவதால், அவனை விட்டு அகல முயல்வேன்; நீ அப்போது அவனை விடாமல் இருக்கவேண்டும். (மைந்தனை) – மைந்து என்றால் அழகு, நாயகத்தன்மை, யௌவனம் ஆகிய பொருள் உண்டு. இப்படிப்பட்ட விஷயத்தை ஒரு சிலரால் விட இயலுமோ? (மலராள் மணவாளனை) –

பெரியபிராட்டியாரே திருவாய்மொழியில் (6-10-10) அகலகில்லேன் – என்று உரைத்த விஷயத்தை அல்லவோ எனது நெஞ்சமான உன்னை "விடக்கூடாது" என்று கூறுகிறேன். (துஞ்சும்போதும்) – அகலும்போது என்று கூறாமல் துஞ்சும்போது என்று ஏன் கூறினார்? என்னை நான் அயோக்யன் என்று கூறிக்கொண்டு அகல நினைத்தாலும், பிரிந்து செல்லுதல் என்பது இறப்பதற்கு முன்பு ஏற்படும் நிலையாகும். இராமாயணம் அயோத்யா காண்டம் – முஹூர்த்தமபி ஜீவாவ: - உன்னை விட்டு ஒரு முஹூர்த்தகாலம் கூட உயிர் தாங்க மாட்டேன் – என்பது போன்றே இவரும் உள்ளார். நான் அவனை விட்டு அகன்று சென்று முடிந்தாலும், நீ அவனை விடாமல் தொடர்ந்தபடி இருப்பாயாக. இந்த வேப்பஞ்சாற்றை அல்லவோ நான் உன்னைப் பருகச் சொல்லுகிறேன். பெரியபிராட்டி "அகலகில்லேன்" என்ற விஷயத்தை அல்லவோ நான் உன்னை அனுபவிக்கச் சொல்லுகிறேன்.

1-10-5 கண்டாய் நெஞ்சே! கருமங்கள் வாய்க்கின்றோர்
எண்டானு மின்றியே வந்தியலுமாறு
உண்டானை உலகேழுமோர் மூவடி
கொண்டானைக் கண்டு கொண்டனை நீயுமே

பொருள் - எனது நெஞ்சமே! பலவிதமான செயல்கள் (அவன் மீது வெறுப்பு இல்லாமை, அவன் வந்து உதவுதல், நாம் அவனை அண்டி நிற்பது போன்ற பலவும்) அனைத்தும் நமக்கு நடந்தபடி உள்ளபோது, அவற்றைக் குறித்து நாம் ஏதும் எண்ணாதபோதிலும், அவை தாமாகவே நடப்பதைக் கண்டாயா? இது எப்படி? ஏழு உலகங்களையும் ப்ரளய ஆபத்தின்போது தனது திருவயிற்றில் வைத்துக் காப்பாற்றியவனும், ஈடில்லாதபடி மூன்று அடிகள் கொண்டு அனைத்து உலகங்களையும் கொண்டவனும் ஆகிய ஸர்வேச்வரனை நீ காணப் பெற்றாய் அல்லவோ?

அவதாரிகை – கீழ் "எண்ணிலும் வரும்" என்ற எண்தானும் மிகையானபடி கண்டாயே என்று அவன்படியை நெஞ்சுக்கு மூதலிக்கிறார்.

விளக்கம் – "எண்ணிலும் வரும்" என்று உரைத்தபடி, அந்த எண் என்பது மிகையாக உள்ளது போன்று தானாகவே வந்து நிற்பதைக் கண்டு தனது நெஞ்சத்திடம் அவன் தன்மையை உரைக்கிறார்.

வ்யாக்யானம் – (கண்டாயே நெஞ்சே) நான் சொன்னபடியே பலத்தோடே வ்யாப்தமானபடி கண்டாயே! (நெஞ்சே) ஜ்ஞாநப்ரஸர த்வாரமான உனக்குச் சொல்ல வேண்டாவிறே. (கருமங்கள் வாய்க்கின்று) கார்யங்கள் பலிக்குமிடத்தில். (ஓர் எண் தானுமின்றியே வந்தியலுமாறு கண்டாயே) "எண்ணிலும் வரும்" என்றதுதான் மிகையாம்படி வந்து பலித்துக் கொண்டு நிற்கிறபடி கண்டாயே! இயலுகை – பலிக்கை. பகவத் ப்ரபாவம் சொல்லுவார் சொல்லுமளவல்ல காண். இத்தலையில் எண்ணின்றிக்கே இருக்கப் பலிக்கும் என்னுமிடத்துக்கு உதாஹரணங்காட்டுகிறார் மேல். (உண்டானை இத்யாதி) ப்ரளயங்கொண்ட ஜகத்துக்கு "அவன் நம்மை வயிற்றிலே வைத்து நோக்கும்" என்னும் நினைவுண்டோ? "உலகேழும்" என்கிறவிடம் இரண்டிடத்திலும் கூட்டிக் கொள்ளக் கடவது. அவன் ஜகத்தையடைய அளக்கிறபோது "நம் தலையிலே திருவடிகளை வைக்கப் புகாநின்றான்" என்னும் நினைவுண்டோ? இதுக்கு உதாஹரணம் தேடிப்போகவேணுமோ ஒன்று? (கண்டு கொண்டனை நீயுமே) விலக்குகைக்குப் பரிகரமுடைய நீயுமன்றோ கண்டு கொண்டாய். ப்ரளயாபத்தில் அவற்றுக்கு ப்ரதிகூலிக்கப் பரிகரமில்லையே! இங்கு அவஸரமில்லை; அறியில் விலக்குவர்களிறே; அசங்கிதமாக வருகையாலே பேசாதிருந்தார்களித்தனை.

விளக்கம் - (கண்டாயே நெஞ்சே) - நான் உரைத்தபடி பலன் கைகூடியதைக் கண்டாய் அல்லவோ? (நெஞ்சே) – ஞானம் புகுவதற்கு வழியாக உள்ள உனக்கு நான் ஏதும் கூறவேண்டிய அவசியம் இல்லை. (கருமங்கள் வாய்க்கின்று) – நமது கார்யங்கள் கைகூடும்போது. (ஓர் எண் தானுமின்றியே வந்தியலுமாறு கண்டாயே) – "எண்ணிலும் வரும்" என்று உரைத்தது மிகை ஏன்று கூறலாம்படி அனைத்தும் தாமே வந்து நிற்பதைக் கண்டாயா? அனைத்தும் பலித்தன என்றார். அப்படி என்ன பலித்தது? கீழே உரைக்கிறார். இவனைப் பற்றிய விஷயத்தில் எண்ணாமல் இன்றிக்கே இருந்தாலும் பலிக்கும் என்பதற்கு உதாரணம் காட்டுகிறார். (உண்டானை இத்யாதி) – ப்ரளயத்தால் சூழப்பட்டபடி நின்ற உலகத்திற்கு, "இவன் நம்மைத் தனது திருவயிற்றில் வைத்துக் காப்பாற்றுவான்", என்ற எண்ணம் இருந்ததோ? "உலகேழும்" என்பதை இரண்டு

உதாரணங்களிலும் சேர்த்துக் கொள்ளவேண்டும். அவன் தனது திருவடிகளால் உலகத்தை அளந்தபோது, "நமது தலையில் திருவடிகளை வைக்கப்போகிறான்" என்ற எண்ணம் இருந்ததோ? ஆக நம்முடைய செயல்கள் அனைத்தும் தாமாகவே நிகழ்கின்றன என்பதற்கு உதாரணம் தேடியபடி இருக்கவேண்டுமோ? (கண்டு கொண்டனை நீயுமே) – உனது தாழ்வு காண்பித்து விலக்குவதற்கான எண்ணம் கொள்ளக்கூடிய நீயும் அவனை கண்டுகொண்டாய். ப்ரளயத்தின்போதும், உலகை அளந்தபோதும் அவற்றால் அவனை விலக்க வழி இல்லை; ஆகவே விலக்காமல் இருந்தனர்; முடிந்திருந்தால் அப்போதே விலக்கியிருப்பார்கள். அவன் எதிர்பாராத வகையில் வந்ததால் ஏதும் பேசாமல் இருந்தனர்.

1-10-6 நீயும் நானுமிந் நேர்நிற்கில் மேல் மற்றோர்
நோயும் சார்கொடான் நெஞ்சமே சொன்னேன்
தாயும் தந்தையுமாய் இவ்வுலகினில்
வாயு மீசன் மணிவண்ண னெந்தையே

பொருள் - தாயைப் போன்று பரிவும், தந்தையைப் போன்று நமது நன்மையைக் குறித்து எண்ணியபடி உள்ள சிந்தையும் கொண்டவனாக இந்த உலகத்தில் அவதரிக்கின்ற ஸர்வேச்வரன் நீலரத்னக்கல் போன்று, எனக்கு அனைத்துவிதமான உபகாரமும் செய்தபடி உள்ளான். இப்படிப்பட்ட எனது தந்தையான அவன் – "தொழு" என்று நியமிக்கும்படியாக உள்ள எனது நெஞ்சமான நீயும், உன்னைக் கொண்ட நானும் இப்படியாக ஒருமித்து நின்றால் இனிவரும் காலங்களில் நமக்கு எந்தவிதமான துன்பமும் ஏற்படாதபடி பார்த்துக்கொள்வான். இதனை உனக்கு நான் உரைக்கிறேன்.

அவதாரிகை – "இப்படி ஸுலபனானவன் நம்மை விடானிறே" என்ன, "நம் அயோக்யதையை அநுஸந்தித்து அகலாதொழியில் நம்மை ஒருநாளும் விடான்" என்று திருவுள்ளத்துக்கு அருளிச்செய்கிறார்.

விளக்கம் - ஆழ்வாரின் நெஞ்சம் அவரிடம், "அவன் மிகவும் சுலபமாக அடைபவனாக உள்ளான். இப்படிப்பட்ட அவன் நம்மை விடமாட்டான் அல்லவோ?", என்றது. இதற்கு

ஆழ்வார், "நமது தாழ்மையை மனதில் சிந்தித்தபடி அவனை விட்டு நாம் அகல முயலாதவரை அவன் நம்மை ஒரு நாளும் விடமாட்டான்", என்கிறார்.

வ்யாக்யானம் - (நீயும் நானும் இந்நேர் நிற்கில்) அப்புள்ளின் பின் போன நீயும், உன்னைப் பரிகரமாகவுடைய நானும். பலாநுபவம் பண்ணவிருக்கிற நாம் இப்படி விலக்காதேயிருக்கில்; "ந நமேயம்" என்னும் ப்ராதிகூல்ய மநோரதமின்றிக்கேயொழியில். (மேல் மற்றோர் நோயும் சார்கொடான்) நிஷித்தாநுஷ்டாநம் பண்ணி அகலவிடுதல், தன்னையொழிய ப்ரயோஜநத்தைக் கொண்டு அகலவிடுதல், அயோக்யாநுஸந்தாநம் பண்ணி அகலவிடுதல், வேறொரு ஸாதந பரிக்ரஹம் பண்ணி அகலவிடுதல், முன்பு பண்ணின பாபபலாநுபவம் பண்ணி அகலவிடுதல் செய்ய விட்டுக்கொடான். (நெஞ்சமே சொன்னேன்) திருக்கோட்டியூர் நம்பியைப் போலே, பிறர் வைத்து "இதம் தே நாதபஸ்காய" என்றவனைப்போலே படுகிறார் (சொன்னேன்) என்று. த்ரௌபதி, குழல் விரித்துக் கிடக்கிறபடியைப் பார்த்து, செய்வது காணாமல் சொல்லிக்கொடு நின்றான்; அர்த்தத்தின் கனத்தைப் பார்த்து, "கைப்பட்ட மாணிக்கத்தைக் கடலிலே பொகட்டோம்" என்று "பதண் பதண்" என்றானிறே. இனி ப்ரதிபத்தி பண்ணாதார் இழக்குமித்தனை.

விளக்கம் - (நீயும் நானும் இந்நேர் நிற்கில்) - திருவிருத்தம் (3) – அப்புள்ளின் பின் போன தனி நெஞ்சமே – என்பதற்கு ஏற்ப - கருடனின் பின்னேயே போய் நின்ற எனது நெஞ்சமான நீயும், உன்னைத் துணையாகக் கொண்டுள்ள நானும், அவன் அளிக்கவுள்ள பலனை எப்போதும் அனுபவிக்கும்படியாகச் சேர்ந்துள்ள நாம் விலகாமல் இருந்தால்; அதாவது இராமாயணம் யுத்தகாண்டம் – ந நமேயம் – யாருக்கும் நான் உரியவன் அல்லேன், தலைவணங்கமாட்டேன் – என்று கூறி அவனிடத்தில் வேறுபட்ட எண்ணம் கொண்டு விலகாமல் இருந்தால். (மேல் மற்றோர் நோயும் சார்கொடான்) – "ஓர் நோயும்" என்பதை விவரிக்கிறார். தாழ்ந்த அனுஷ்டானங்கள் போன்றவற்றை நம்மைச் செய்ய வைத்து அதனைக் காரணம் காட்டி நம்மை விலக்குதல், தன்னைத் தவிர்த்துள்ள மற்ற பலன்களை நமக்கு அளித்துவிட்டு மறைமுகமாக ஒதுக்குதல், நமது தாழ்மையை நாம் எண்ணி அகன்று செல்லும்படிச் செய்தல், வேறு உபாயங்களைக் கைக்கொள்ளும்படிச் செய்து நம்மை அகலும்படிச் செய்தல், முன்பு செய்த பாவத்திற்கான பலனை அனுபவிக்கவைத்து நம்மை விலக்குதல் போன்ற எந்த ஒரு செயலையும் அவன் செய்யமாட்டான். (நெஞ்சமே சொன்னேன்) – திருக்கோஷ்டியூர் நம்பி போன்று "பகவத்

விஷயம் என்பது மற்றவர்கள் அறியக்கூடாது" என்று இவரும் உள்ளார் போலும். ஸ்ரீமத் பகவத்கீதை முழுவதையும் உபதேசித்த பின்னர் கீதையில் (18-67) – இதம் தே நாதபஸ்காய – இதனைத் தவம் செய்யாதவனுக்கு உபதேசிக்கக்கூடாது – என்று தவித்தவன் போன்று உள்ளார். முதலிலேயே அர்ஜுனனின் தகுதியை ஆராய்ந்து நோக்கி உபதேசம் செய்திருக்கலாம் அல்லவோ? இதற்கு விடை அளிக்கிறார். திரௌபதியின் அவிழ்ந்த கூந்தலைக் கண்டவனாக, செய்வது அறியாமல் உபதேசம் செய்தான்; அதன் பின்னர் தான் உபதேசித்த உயர்ந்த இரகசியத்தின் மேன்மையை எண்ணியவனாக, "கையில் கிட்டிய மாணிக்கத்தைக் கடலில் தொலைத்தோமே" என்று பதறினான். அல்லது உபதேசம் செய்ததில் தோஷம் இல்லை, இதனை நினைக்காமல் உள்ளவர்கள் இழப்பார்கள் என்றும் கொள்ளலாம்.

வ்யாக்யானம் – (தாயும் தந்தையுமாய்) மாதாபிதாக்களைப்போலே பரிவனாய். அவர்கள் அளவன்றிக்கே, (இவ்வுலகினில் வாயும் ஈசன்) ப்ரஜை கிணற்றில் விழுந்தால் ஒக்கக் குதிக்கும் மாதாவைப் போலே, ஸம்ஸாரத்திலே ஒக்க விழுந்து எடுக்குமவன். இங்கு வந்து அவதரிக்கைக்கு ஹேதுவென் என்னில், (ஈசன்) ப்ராப்தனாகையாலே. அன்றிக்கே, இங்கே வந்து அவதரித்து ஈரரசு தவிர்க்கையாலே ஈசனானான் என்னவுமாம். (மணிவண்ணன் எந்தையே) தன் வடிவழகைக் காட்டி. என்னை விஷயாந்தர ப்ரவணனாகாதபடி மீட்டு, தன் சேஷித்வத்தைக் காட்டி, என்னுடைய சேஷத்வைத்தை நிலை நிறுத்தினவன். தாயும் தந்தையுமாய் இவ்வுலகினில் வாயும் மணிவண்ணனாய் எந்தையான ஈசன், நீயும் நானும் இந்நேர் நிற்கில் மேல் மற்றோர் நோயும் சார்கொடான் நெஞ்சமே சொன்னேன் – "ஸத்யம் ஸத்யம்" என்கிறபடியே இது மெய்.

விளக்கம் - (தாயும் தந்தையுமாய்) - தாய் தந்தை போன்று பரிவுடன் உள்ளவனாக. அவர்கள் போன்றல்ல இவன்; அதாவது அந்த அளவு மட்டும் பரிவு காண்பிப்பவன் அல்லன், அவர்களைக் காட்டிலும் அதிகமாகப் பரிவுள்ளவன் என்கிறார். (இவ்வுலகினில் வாயும் ஈசன்) – தனது கைக்குழந்தை ஒன்று கிணற்றில் விழுந்தால் அதனை எடுப்பதற்காகத் தானும் வேகமாகக் குதிக்கும் தாய் போன்று, ஸம்சாரத்தில் விழுந்த நம்மை எடுக்க தானும் ஸம்சாரத்தில் குதித்தவன். இங்கு அவன் வந்து அவதரிக்க என்ன காரணம்? (ஈசன்) – அடையத்தக்கவனாக உள்ளதால் ஆகும். அல்லது இங்கு வந்து அவதரித்ததால் இரண்டு ராஜ்யங்களையும் தவிர்த்ததால் ஈசன் என்றும் கருத்து.

(மணிவண்ணன் எந்தையே) – தனது வடிவழகைக் காண்பித்து, மற்ற உலக விஷயங்களில் நான் ஈடுபட்டு நிற்காதபடி என்னை மீட்டு, தனது எஜமானத் தன்மையை எனக்கு உணர்த்தி, என்னுடைய கைங்கர்யத் தன்மையை நிலைநாட்டியவன். "தாயும் தந்தையுமாய் இவ்வுலகினில் வாயும் மணிவண்ணனாய் எந்தையான ஈசன், நீயும் நானும் இந்நேர் நிற்கில் மேல் மற்றோர் நோயும் சார்கொடான் நெஞ்சமே சொன்னேன்" என்று படிக்கவேண்டும். ஸத்யம் ஸத்யம் – என்பது போன்று இதுவும் மெய் என்கிறார்.

1-10-7 எந்தையே யென்றும் எம்பெருமானென்றும்
சிந்தையுள் வைப்பன் சொல்லுவன் பாவியேன்
எந்தை யெம்பெருமான் என்று வானவர்
சிந்தையுள் வைத்து சொல்லும் செல்வனையே

பொருள் – பரமபதத்தில் உள்ளவர்களான நித்யஸூரிகள், "எங்களது இருப்புக்குக் காரணமான ஸர்வேச்வரன் எங்களுக்கு எஜமானன்", என்று எப்போதும் சிந்தித்தபடி உள்ளவனாகிய ஐச்வர்யம் கொண்டவனை, மிகுந்த பாவங்கள் உடைய நான், "எனது நன்மையைக் கருத்தில் கொள்பவனே! எனக்கு எஜமானனே!", என்று சிந்தித்தும் கூறவும் செய்வேன்.

அவதாரிகை - கீழ் இவர் அஞ்சினாற்போலே விடிந்தது; "அயோக்யன்" என்று அகலுகிறார்.

விளக்கம் – "துஞ்சும்போது" என்று கூறியதற்கு ஏற்ப, இவர் அச்சம் கொண்டது போன்றே விடிந்தது. அப்போது தான் தாழ்ந்தவன் என்று கூறி அகல்கிறார்.

வ்யாக்யானம் - (எந்தையேயென்றும்) எனக்குப் பரிவனானவனே என்றும், (எம்பெருமான் என்றும்) எனக்கு வகுத்த ஸ்வாமி என்றும். (சிந்தையுள் வைப்பன்) எத்தனை விஷயங்களை நினைத்துப் போந்த நெஞ்சிலே வைத்தது! நான் அறிந்ததாக நெஞ்சிலே வைத்து தூஷித்தவளவேயோ? (சொல்லுவன்) பிறர் அறியும்படி தூஷித்தேன். இவ்வஸ்துவை அழிக்கைக்கு நான் ஒரு பாபகர்மா உண்டாவதே! (பாவியேன்) ஸாத்விகனாயிருப்பானொருவன் தமோகுணாபிபூதனாய் ஒரு க்ருஹத்தில் நெருப்பை

வைத்து, ஸத்வம் தலையெடுத்தவாறே அநுதபிக்குமாபோலே "பாவியேன்" என்கிறார். நீர் இங்ஙனே சொல்லுவானென்? பகவத்விஷயத்தை நினைக்கையும் சொல்லுகையும் பாபபலமோ? என்னில்; புரோடாசத்தை நாய் தீண்டினாப்போலே, விலக்ஷணருடைய போக்ய வஸ்துவை அழிக்கை பாபபலமன்றோ? (எந்தை இத்யாதி) நினையாவிடில் அரைக்ஷணம் தரிக்கமாட்டாத நித்யஸூரிகள் நினைத்து அநுபவித்த அவ்வநுபவம் வழிந்து "எங்களுக்குப் பரிவனானவனே, ஸ்வாமியானவனே" என்று தங்கள் நெஞ்சிலே வைத்துச் சொல்லும்படியான ஐச்வர்யத்தையுடையவனை நான் என் சொன்னேன்! இவ்வஸ்துவை ஒருவர் நம்பாதபடி அழித்தேன் என்கிறார்.

விளக்கம் - (எந்தையேயென்றும்) - என்னிடம் எப்போதும் அன்பு கொண்டவனே என்றும், (எம்பெருமான் என்றும்) – என்னால் எப்போதும் அடையப்படவேண்டிய ஸ்வாமியே என்றும், (சிந்தையுள் வைப்பேன்) – எத்தனை தாழ்வான விஷயங்கள் பலவற்றையும் வைத்தபடி உள்ள நெஞ்சத்தில் இவனையும் வைத்தேனே! நான் இவனை அறிவேன் என்று எனது நெஞ்சில் இவனை எண்ணியதன் மூலம் இவனைத் தூஷிக்க அல்லவோ செய்தேன்? (சொல்லுவன்) – மற்றவர்களும் அறியும்படி தூஷித்தேன். (பாவியேன்) – வேறுபட்ட மேன்மை கொண்டதான இந்த வஸ்துவை அழிக்கும்படியான பாவியாக நான் உள்ளேன். (பாவியேன்) – ஸத்வகுணம் நிறைந்துள்ள ஒருவன் சட்டென்று தமோகுணம் மேலிட, ஒரு வீட்டிற்கு நெருப்பு வைத்து எரித்துவிடுகிறான்; அதன் பின்னர் மீண்டும் ஸத்வகுணம் ஏற்படும்போது ஆழ்ந்த வருத்தம் கொண்டு தவிப்பது போன்று இவர் "பாவியேன்" என்கிறார். இதனைக் கேட்ட இவரது நெஞ்சம் இவரிடம், "இது போன்று நீவிர் உரைப்பது சரியோ? ஸர்வேச்வரனைக் குறித்து எப்போதும் எண்ணியபடி இருத்தலும், அவனைப் பற்றி உரைத்தலும் பாவத்தின் பலனாகுமோ?", என்றது. இதற்கு ஆழ்வார், "யாகத்தில் இடப்படும் புரோடசம் என்ற அடையை நாய்க்கு இடுவது போன்று, மேன்மையான நித்யஸூரிகளால் எப்போதும் அனுபவிக்கப்படும் உயர்ந்த வஸ்துவை அல்லவோ நான் எனது சிந்தை மூலம் அழிக்க எண்ணுகிறேன்! இது பாவத்தின் பலம் அல்லவோ?", என்கிறார். (எந்தை இத்யாதி) – அவனைப் புகழாமல் அரைநொடிக்கூட தரிக்க இயலாதபடி நித்யஸூரிகள் உள்ளனர். இப்படியாக அனுபவிக்கும் அவர்கள், அந்த அனுபவம் வழிந்தோடி, "எங்களுக்காகப் பரிந்து நிற்பவனே! எங்கள் ஸ்வாமியே!", என்று தங்கள் நெஞ்சத்தில் எப்போதும் வைத்துக் கொண்டாடியபடி உள்ளனர். இப்படிப்பட்ட உயர்ந்த ஐச்வர்யம் கொண்டவனை நான் எனது தாழ்ந்த நாக்கு கொண்டு உரைத்தேன்;

இப்படியாக யாரும் நம்பாதபடி இந்த வஸ்துவை நான் அழித்தேன்", என்கிறார் (அதாவது தாழ்ந்த ஒருவன் கூறும் வஸ்து குறித்து யாரும் நம்பமாட்டார்கள் அல்லவா? இது போன்று நான் உரைத்த காரணத்தால் அவனை யாரும் நம்பாமல் போனார்கள்; இப்படியாக அவனை நான் அழித்தேன் என்று கருத்து).

1-10-8 செல்வ நாரண னென்றசொல் கேட்டலும்
மல்கும் கண்பனி நாடுவன் மாயமே
அல்லு நன்பகலும் இடைவீடின்றி
நல்கி என்னை விடான் நம்பி நம்பியே

பொருள் – "ஸ்ரீமந் நாராயணன்" என்ற திருநாமம் கேட்டவுடனேயே எனது கண்களில் நீர் ததும்பி நிற்கிறது. நானும் அவனை "எங்கு உள்ளாய்" என்று தேடியபடி உள்ளேன். இது என்ன வியப்பு! அனைத்திலும் பரிபூர்ணனாயுள்ள அவன் இரவும் பகலும் இடைவிடாமல் அருள் செய்தபடி, என் மீது மிகுந்த விருப்பம் கொண்டவனாக என்னை எப்போதும் விடாமல் உள்ளான்.

அவதாரிகை - "நாம் இதுக்கு முன்பு நினைத்தும் பேசியும் தப்பச்செய்தோம்; இனித் தவிருமித்தனை" என்று, "அவன் குணங்கள் நடையாடாததோர் இடத்திலே கிடக்கவேணும்" என்று போய், ஒரு குட்டிச்சுவரிலே முட்டாக்கிட்டுக் கொண்டு கிடந்தார்; அங்கே, வழிபோகிறான் ஒருவன், சுமை கனத்து "ஸ்ரீமந்நாராயணன்" என்றான்; அச்சொல்லைக் கேட்டுத் தம்முடைய கரணங்கள் அங்கே ப்ரவணமாகிறபடியைக் கண்டு விஸ்மிதராகிறார்.

விளக்கம் – "நாம் இதுவரை அவனைப் பற்றியே சிந்தித்தபடியும், பேசியபடியும் இருந்தோம். இது நமது தகுதிக்கு ஏற்காது. ஆகவே இதனைத் தவிர்க்கவேண்டும்" என்று எண்ணியவராக, "அவனது குணங்கள் வெளிப்படாத ஏதேனும் ஓர் இடத்திற்குச் சென்றுவிடவேண்டும் என்று முடிவு செய்தார். இது போன்ற தனிமையான இடத்தில் யாரும் இல்லாதபடி தனியாக அமர்ந்திருந்தார். அப்போது அந்த வழியாக சென்ற ஒரு வழிப்போக்கன் தனது தலையில் வைத்திருந்த பொருளின் பாரம் தாங்காமல் "ஸ்ரீமந்

நாராயணா" என்றான். இந்தச் சொல்லைக் கேட்டவுடனேயே தனது கரணங்கள் அனைத்தும் அங்கேயே அன்பு கொண்டதை எண்ணி மிகுந்த ஆச்சர்யம் அடைந்தார்.

வ்யாக்யானம் - (செல்வ நாரணன் என்ற சொல்கேட்டலும்) ஆழ்வார் பரிஸரத்தில் ப்ரஹ்மசாரி எம்பெருமான் பேர் சொல்லுவாரில்லை; அதில் அர்த்தாநுஸந்தாநம் பண்ணவேண்டாவாயிற்று இவர் நோவுபடுகைக்கு; என்போல என்னில் – விஷஹரண மந்த்ரம்போலே, அச்சொல் செவிப்பட்டவளவிலே, கண்ணானது என்னையொழியவே நீர் மல்கப்புக்கது; நெஞ்சும் அவ்வளவிலே, "எங்குற்றாய்" என்று தேடப்புக்கது. (மாயமே) "அல்லேன்" என்று அகலுகைக்கு நான் வேண்டிற்று; "ஆவேன்" என்று கூடுகைக்கு நான் வேண்டிற்றில்லையீ! ஈதோர் ஆச்சர்யம் இருந்தபடியென்! அவன் பின்னைச்செய்கிறதென்? என்னில், (அல்லும் இத்யாதி) தம் அபிஸந்தியொழியவே, தம்முடைய கரணங்களுக்கு பகவதநுபவமே யாத்ரையாம்படி அவன் மேல் விழுகிற காலமாகையாலே, "நல்ல அல்லும், நல்ல பகலும்" என்கிறார். திவாராத்ரவிபாகமற எனக்கு ஸ்நேஹித்துப் பரிபூர்ணனானவன் என்னை ஸ்வீகரித்து என்னைவிட க்ஷமனாகிறிலன்; அவன் பேர் மாத்ரத்தைக் கேட்டவளவிலே, என் கண்ணானது பனிமல்கா நின்றது; நெஞ்சானது தேடாநின்றது; இது ஓர் ஆச்சர்யமிருந்தபடியென் என்கிறார். (இடைவீடின்றி) நான் ஒருகால் தேடிவிடா நின்றேன்; அவன் இடைவிடாதே ஸ்நேஹியா நின்றான். (என்னை விடான் நம்பி நம்பியே) அபூர்ணனான என்னைப் பூர்ணனான தான் நம்பி விடுகிறிலன். (நம்பி) – என்னை ஒரு மதிப்பனாக நினைத்து. நம்பி, அல்லும் நன்பகலும் இடைவீடின்றி நல்கி, நம்பி என்னை விடான்; மாயமே! (நம்பியே) இவனையே பரிபூர்ணனென்கிறது? ஸம்ஸாரி சேதநனைப் பெற்று, பெறாப்பேறு பெற்றனாயிருக்கிற இவனையே பரிபூர்ணனென்கிறது லோகத்தார்?

விளக்கம் – (செல்வ நாரணன் என்ற சொல்கேட்டலும்) - வழிப்போக்கன் ஒருவன் ஸ்ரீமந் நாராயணன் என்று உரைப்பானோ என்ற கேள்விக்கு விடை அளிக்கிறார். திருவாய்மொழி (6-7-2) – ஊரும் நாடும் உலகமும் தன்னைப் போல் அவனுடைய பேருந்தார்களுமே பிதற்ற - என்றது காண்க. அந்த வழிப்போக்கன் அந்தத் திருநாமத்தின் பொருளை உணர்ந்து உரைக்கவேண்டிய அவசியம் இல்லை, அவனுடைய உச்சரிப்பு மட்டுமே இவருக்கு மயக்கம் ஏற்படுத்தியது. விஷத்தை நீக்கவல்ல மந்திரம் ஒன்றினை பொருள் உணராமல் காதுகளில் கேட்டால் மட்டுமே போதுமானது, அந்த மந்திரம்

விஷத்தை நீக்கிவிடும் என்பது போன்று இவருக்கு உள்ளது. அந்தச் சொல்லைக் கேட்டவுடனேயே இவருடைய கண்கள் நீர் கொண்டன, நெஞ்சமும் திருநெடுந்தாண்டகம் (9) – எங்குற்றாய் – என்று தேடத்தொடங்கியது. (மாயமே) – "நான் அவனிடம் போவதற்குத் தகுதி கொண்டவன் அல்லேன்" என்று உரைப்பதற்கு நான் தேவையாக இருந்தேன்; ஆனால் "நான் அவனுக்கு ஏற்புடையேன் ஆவேன்" என்று உரைப்பதற்கு நான் அவசியம் இல்லாமல் போனேனே – இது என்ன வியப்பு? அவன் மேலும் என்ன செய்தார் என்று கூறுகிறார். (அல்லும்) – தனது கரணங்களுக்கு பகவத் அநுபவம் என்பதே ஏற்றதாக உள்ளதால் அவனை அண்டி நிற்பதே சிறப்புடையது என்பதால் "நல்ல அல்லும், நல்ல பகலும்" என்றார். இரவுபகல் என்ற வேறுபாடு ஆராயாமல் என்னிடம் அன்பு கொண்டு, அனைத்திலும் பூர்ணமாக உள்ள அவன் நான் அவனிடம் இல்லாததைக் குறையாக எண்ணி என்னைத் தன்னுடையவன் என்று எடுத்துக்கொண்டு, என்னை விட்டு அகல மனம் இல்லாதவனாக உள்ளான். அவனது பெயரைக் கேட்ட உடனேயே எனது கண்களில் நீர் நிறைந்தும், நெஞ்சம் அவனைத் தேடிய படியும் உள்ளதே – இது என்ன ஆச்சர்யம் என்கிறார். (இடைவீடின்றி) – நான் அவனைச் சிலகாலம் மட்டும் தேடி, பின்னர் விட்டேன்; ஆனால் அவனோ என்னை இடைவிடாமல் தேடி, என்னிடம் அன்பு கொண்டபடி உள்ளான். (என்னை விடான் நம்பி நம்பியே) – எதிலும் முழுமை பெற்றிராத என்னை, முழுமையானவன் என்று எண்ணி, என்னை விடாமல் உள்ளன். (நம்பி) – ஏன்னை ஞானம் கொண்டவன் என்று எண்ணி, "நம்பி அல்லும் நன்பகலும் இடைவீடின்றி நல்கி, நம்பி என்னைவிடான்" என்று வரிசைப்படுத்தி பொருள் உரைத்தார். இது என்ன மாயம்! (நம்பியே) – இவனைப் பரிபூர்ணன் என்று எப்படி உரைத்தனர்? ஸம்ஸாரி சேதனன் ஒருவன் கிட்டினாலும் அவனைப் பெற இயலாத பேறு பெற்றதாக எண்ணும் இவனை எவ்விதம் இது போன்று உரைத்தனர்?

1-10-9 நம்பியைத் தென்குறுங்குடி நின்ற அச்
செம்பொனே திகழும் திருமூர்த்தியை
உம்பர் வானவர் ஆதியஞ்சோதியை
எம்பிரானை என் சொல்லி மறப்பனோ

பொருள் – அழகான திருக்குறுங்குடியில் நின்றதால் அனைத்துவிதத்திலும் பரிபூர்ணமாக நிற்பவனை, பரமபதத்தில் உள்ள நிலைக்கு ஒப்பிட்டு உரைக்கலாம்படி சிவந்த பொன்

போன்று ப்ரகாசிக்கும் திருமேணி உள்ளவனை, உயர்ந்த நித்யஸூரிகளின் இருப்புக்குக் காரணமாக உள்ளவனை, அவர்கள் எப்போதும் தரிசிக்கின்ற பரஞ்சோதியை, என்னை அடிமையாக்கியவனை நான் என்ன காரணம் கூறி மறப்பேன்?

அவதாரிகை - நீர்தாம் இங்ஙனே கிடந்த படாநில்லாதே, அவ்விஷயத்தை மறந்து ஸம்ஸாரிகளோபாதி உண்டு உடுத்துத் திரியமாட்டீரோ? என்ன; நான் எத்தைச் சொல்லி அவனை மறப்பது என்கிறார்.

விளக்கம் – ஆழ்வாரிடம், "நீவிர் இப்படியாக ஸர்வேச்வரனைக் குறித்து எப்போதும் எண்ணி, வருத்தம் கொண்டு, அவனை அடையவேண்டும் என்று புலம்பாமல், அவனை மறந்து, ஸம்ஸாரிகளுடன் சேர்ந்து உணவு உட்கொண்டு வஸ்த்ரங்கள் தரித்துத் திரியமாட்டீர்களோ?", என்றனர். இதற்கு ஆழ்வார், "நான் எதனைக் கூறி அவனை மறப்பேன்?", என்கிறார்.

வ்யாக்யானம் - (நம்பியை) கல்யாணகுண பரிபூர்ணனை. பரமபதத்தில் குணங்களுக்கு ஸத்பாவமேயிறே உள்ளது; இங்கேயிறே குணங்களுக்குப் பூர்த்தி. (தென்குறுங்குடி நின்ற) கலங்காப்பெருநகரத்தைக் கலவிருக்கையாகவுடையவன், அத்தைவிட்டு என்னைப் பற்றத் திருக்குறுங்குடியிலே அவஸர ப்ரதீக்ஷனாய்க் கொண்டு ஸ்தாவர ப்ரதிஷ்ட்டையாக நின்றவன். (நம்பியைத் தென்குறுங்குடி நின்ற) குணத்திலே குறையுண்டாதல், தூரஸ்தன் என்னுதல் செய்து, நான் மறக்கவேணுமே. (அச்செம்பொனே திகழுந் திருமூர்த்தியை) வடிவழகிலே குறையுண்டாய்த்தான் மறக்கவோ? (அச்செம்பொன்) உபமாநரஹிதமாய். ஒட்டற்ற செம்பொன்போலே நிரவதிக தேஜோரூபமாய், வாங்மநஸ்ஸுக்களாலும் பரிச்சேதிக்கவொண்ணாத திவ்யமங்கள விக்ரஹத்தையுடையவனை.

விளக்கம் – (நம்பியை) – திருக்கல்யாண குணங்கள் பரிபூர்ணமாகக் கொண்டவனை; பரமபதத்தில் இவன் உள்ளபோது இவனுக்கு உள்ள குணங்களுக்கு வெறும் இருப்பு மட்டுமே உள்ளது, ஆனால் இங்கு திருக்குறுங்குடியில் இவன் நிற்கும்போதுதான் அவை பூர்ணமாக வெளிப்படுகின்றன. (தென்குறுங்குடி நின்ற) – மூன்றாம் திருவந்தாதி (51) – கலங்காப் பெருநகரம் – என்று கூறியபடி உள்ள பரமபதத்தைத் தனது சபையாகக் கொண்டவன்; அதனை விட்டு என்னைக் கைப்பற்றுவதற்காகத் திருக்குறுங்குடியில்

காலத்தை எதிர்நோக்கியபடி நிற்பவனாக, அசையாத பொருள் போன்று நின்றான். (நம்பியைத் தென்குறுங்குடி நின்ற) – அவன் குணத்திலே குறைகள் உண்டு, எனக்கு மிகவும் அப்பால் உள்ளான் என்பது போன்று குறைகள் கூறி நான் மறக்க முயன்றாலும் முயலாதபடி உள்ளவன். (அச்செம்பொனே திகழுந் திருமூர்த்தியை) – சரி, வடிவழகில் குறை இருந்தால் மறந்து விடலாம் என்றால் அதுவும் இல்லாதபடி உள்ளான். (அச்செம்பொன்) – உபமானம் ஏதும் இல்லாதபடி, உருக்கிய பொன் போன்று, எல்லையற்ற தேஜஸ் கொண்டு, வாக்காலும் மனதாலும் அளவிட இயலாதபடியான திவ்யமங்கள விக்ரஹம் கொண்டவன்.

வ்யாக்யானம் – (உம்பர் இத்யாதி) அவ்வடிவழகை அநுபவிக்க இட்டுப்பிறந்த நித்யஸூரிகளைச் சொல்லுகிறது. ஆக்கரான இவ்வருகில் வானவரைப்போலேயன்றியே, மேலான நித்யஸூரிகளுடைய ஸத்தாதிகளுக்கும் தானே கடவனாய், அவர்களுக்கு அநுபாவ்யமான திவ்யமங்கள விக்ரஹத்தையுடையவனை. (எம்பிரானை) அவர்கள் அநுபவிக்கும்படியை எனக்கு உபகரித்தவனை. (என் சொல்லி மறப்பனோ) அபூர்ணனென்று மறக்கவோ? அஸந்நிஹிதனென்று மறக்கவோ? வடிவழகில்லை யென்று மறக்கவோ? மேன்மையில்லை யென்று மறக்கவோ? எனக்கு உபகாரகனன்று என்று மறக்கவோ? எத்தைச் சொல்லி மறப்பன்? என்கிறார்.

விளக்கம் - (உம்பர் இத்யாதி) - அவனுடைய வடிவழகை அநுபவிப்பதற்காக உண்டான நித்ய்ஸூரிகளைக் கூறுகிறார். உண்டாக்கப்பட்ட தேவர்கள் போன்று அல்லாமல், அவர்களைக் காட்டிலும் உயர்ந்தவர்களான நித்யஸூரிகளின் இருப்பு என்பதற்கும் தானே காரணம் என்று உள்ளவனாய், அவர்கள் அநுபவிக்கத் தகுந்தபடி உள்ள திவ்யமங்கள விக்ரஹத்தோடு கூடியவனாய். (எம்பிரானை) – அவர்கள் எவ்விதம் அநுபவிக்கிறார்களோ, அதே போன்று நானும் அநுபவிக்கும்படிச் செய்தவன். (என் சொல்லி மறப்பனோ) – அவன் எதிலும் முழுமையானவன் அல்லன் என்று கூறி மறக்கவோ, எனக்கு அருகில் இல்லாதவன் என்று மறந்துபோகவோ, அழகோடு கூடியவன் அல்லன் என்று கூறி மறக்கவோ, மேன்மை இல்லாதவன் என்று மாறக்கவோ, எனக்கு உதவி செய்வதில்லை என்று கூறி மறக்கவோ முடியுமா? எதனைக் கூறி நான் மறப்பேன் என்கிறார்.

1-10-10 மறப்பும் ஞானமும் நானொன்றுணர்ந்திலன்
மறக்கு மென்று செந்தாமரைக்கண்ணோடு
மறப்பற வென்னுள்ளே மன்னினான் றன்னை
மறப்ப னோவினி யானென் மணியையே?

பொருள் – மறந்துபோதல் என்பதையும், ஞானம் என்பதையும் நான் சிறிதும் அறிந்தவன் அல்லன். இப்படியாக நான் உள்ளபோது தனது விஷயத்தில் எனக்கு அறிவை ஏற்படுத்தி, "இவன் இதனை மறந்துவிடுவான்" என்று தனது திருவுள்ளத்தில் எண்ணினான். ஆகவே கடாக்ஷிப்பதற்குக் காரணமாக உள்ள தனது சிவந்த தாமரைப் போன்ற கண்களுடன் நோக்கியபடி, மறந்துபோக வாய்ப்பு இல்லாதபடி, எனது நெஞ்சத்தில் நிலையாக நின்றான். இப்படியாக நீலரத்தினம் போன்ற எனது ஸர்வேச்வரனை நான் இனி எவ்விதம் மறப்பேன்?

அவதாரிகை - ஆனாலும் வருந்தியாகிலும் மறந்தாலோவென்ன; நெஞ்சில் இருளை அறுத்துக்கொண்டு நிரந்தரவாஸம் பண்ணுகிறவனை மறக்க விரகுண்டோ? என்கிறார்.

விளக்கம் – "ஆனாலும் மிகவும் முயற்சி எடுத்து அவனை நீவிர் மறக்க இயலும் அல்லவோ?", என்று சிலர் கேட்டனர். இதற்கு ஆழ்வார், "எனது நெஞ்சத்தில் உள்ள இருளை முற்றிலுமாக விரட்டிவிட்டு, எப்போதும் எனது நெஞ்சத்தில் வசிப்பவனை நான் மறந்துபோக ஏதேனும் வழி உள்ளதோ?" , என்கிறார்.

வ்யாக்யானம் - (மறப்பும் ஞானமும் நான் ஒன்று உணர்ந்திலன்) நான் சேதநனாய் நினைத்தேனாகிலன்றோ மறப்பது? நினைத்தேன் நானானவன்றிறே மறக்க இடமுள்ளது. ஜ்ஞாநத்துக்கு ஆச்ரயமாமதிறே அஜ்ஞாநத்துக்கும் ஆச்ரயமாவது; அசித் கல்பனாய்க் கிடீர் நான் இருந்தது. (மறக்கும் இத்யாதி) இப்படியிருக்கிற நான் நினைத்தேனாகவும் நினைவையும் என் தலையிலே ஏறிட்டு, "பிறந்த ஜ்ஞானத்துக்கு விச்சேதம் வரவொண்ணாது" என்று பார்த்து, அழகிய திருக்கண்களாலே குளிர நோக்கிக்கொண்டு, தன்னைப் பற்றி எனக்கு வரும் விஸ்ம்ருதி போம்படி என் ஹ்ருதயத்திலே நித்யவாஸம் பண்ணுகிறவனை. (மன்னினான்) "புறம்பே அந்யபரதை உண்டு" என்று தோற்ற

இருக்கிறிலன். (மறப்பனோ இனி யான் என் மணியையே) பெருவிலையனான ரத்நம் கைப்புகுந்தால் அத்தை முடிந்து அநுபவியாதே உதறுவர்களோ? (மறப்பனோ இனி) மறவாமைக்குப் பரிகரம் அவன் கையிலே உண்டாயிருக்க, இனி மறக்க உபாயமுண்டோ? கீழ் அநாதிகாலம் நினைக்க விரகில்லாதாப் போலேயிறே மேலுள்ள காலமும் மறக்க விரகில்லாதபடியும். (யான்) அநாதிகாலம் "மறந்தேன் உன்னை முன்னம்" என்கிறபடியே விஸ்மரித்துப் போந்த நான். (என் மணியையே) பெருவிலையனாய் முடிந்தாளலாம்படி கைப்புகுந்து புகரையுடைத்தான நீலமணி போலேயிருக்கிற தன்னை எனக்கு அநுபவ யோக்யமாம்படி பண்ணி வைத்த பின்பு, நான் அவனை அநாதரிப்பனோ?

விளக்கம் - (மறப்பும் ஞானமும் நான் ஒன்று உணர்ந்திலன்) - நான் சேதனனாய் எண்ணினால் மட்டுமே மறக்கக் கூடும்; அல்லது அவனைப் பற்றி நான் எண்ணினேன் என்றால் அவனை மறக்கக்கூடும்; அவன் அல்லவோ என்னை எண்ணுகிறான்? ஞானத்திற்கு அடிப்படையாய் இருக்கும் ஒன்று மட்டுமே அஜ்ஞானத்துக்கும் அடிப்படையாய் இருக்கும். நான் அறிவற்ற பொருளாக அல்லவோ கிடந்தேன்? அதாவது அசித் வஸ்துவாகக் கிடந்த என்னை எடுத்துக் கொண்ட பின்னர் மறப்பேனோ? "ஞானம் நானொன்று உணர்ந்திலன்" என்றால் போதாதோ, "மறப்பும் ஞானமும்" என்று சேர்த்துக் கூற வேண்டுமோ என்ற கேள்விக்கு விடை அளிக்கிறார். இப்போது பகவத் விஷயம் குறித்த ஞானம் இல்லாமல் போனாலும், காலம் எல்லையற்றதாக உள்ளதால் முன்பு ஒரு காலகட்டத்தில் அந்த ஞானம் ஏற்பட்டு இப்போது மறந்திருக்க வாய்ப்பு உள்ளதே; ஆனால் அப்படியும் இல்லை என்று உணர்த்தவே இவ்விதம் கூறுகிறார். (மறக்கும் இத்யாதி) – இப்படியாக உள்ள நான், அவனை நினைத்தேன் என்று தனது திருவுள்ளத்தில் பற்றிக் கொண்டு, அந்த நினைவை எனது செய்கையாகவே கொண்டு, "இவனுக்கு இப்போது பிறந்த ஞானத்துக்கு நாசம் ஏற்பட்டு விடக்கூடாது" என்று எண்ணினான்; ஆகவே தனது அழகான திருக்கண்களால் குளிர கடாக்ஷம் செய்தபடி, தன்னைப் பற்றி எனக்கு ஏற்படக்கூடிய அறியாமை என்பது விலகும்படி, எனது ஹ்ருதயத்தில் எப்போதும் வாசம் செய்தபடி உள்ளவனை. (மன்னினான்) – முன்பு மற்ற வஸ்துக்கள் பலவற்றிலும் எனக்கு ஈடுபாடு உண்டு என்று நான் இருந்தேன்; அதனால் மன்னினான் என்றார். (மறப்பனோ இனி யான் என் மணியையே) – மிகுந்த விலை மதிப்பு கொண்ட இரத்தினக்கல் கிடைத்தால் அதனை முற்றிலுமாக அனுபவிக்காமல், தூக்கி எறிவார்களோ? (மறப்பனோ இனி) – மறந்து போகாமல் இருப்பதற்குக் கருவியான

செந்தாமரைக்கண்கள் அவனிடம் இருக்கும்போது இனி மறந்து போக ஏதேனும் வழி உண்டோ? எல்லையற்ற காலம் அவனுடைய சிந்தனையும் ஞானமும் ஏற்பட வழி இல்லாதது போன்று, இப்போது அவனை மறந்து போக வழி இல்லாமல் உள்ளது. (யான்) – எல்லையற்ற காலம் பெரிய திருமொழி (6-2-2) – மறந்தேன் உன்னை முன்னம் – என்பதற்கு ஏற்ப மறந்திருந்த நான். (என் மணியையே) – மிகுந்த விலை கொண்டதான ப்ரகாசத்துடன் கூடிய நீலமணி போன்று ஸௌலப்யத்துடன் கூடியுள்ள தன்னை, எனக்கு அனுபவிக்கலாம்படி அவன் செய்து வைத்த பின்னர் நான் அவனை மறப்பேனோ?

1-10-11 மணியை வானவர் கண்ணனைத் தன்னதோ
ரணியை தென்குருகூர்ச் சடகோபன் சொல்
பணிசெயாயிரத்துள் இவை பத்துடன்
தணிவிலர் கற்பரேல் கல்வி வாயுமே

பொருள் – ஒளிவீசும் மாணிக்கம் போன்ற வடிவம் கொண்டவனை, பரமபதத்தில் உள்ளவர்களின் தலைவனை, தனக்குத் தானே ஓர் ஆபரணம் போன்று உள்ளவனை, அழகான ஆழ்வார் திருநகரியில் அவதரித்தவரான நம்மாழ்வார் சொற்கள் மூலம் செய்யப்பட்ட ஆயிரம் பாசுரங்களில், இந்தப் பத்துப் பாசுரங்களை மிகுந்த ஈடுபாட்டுடன் கற்பவர்களுக்கு கைங்கர்யம் என்பது பலனாக ஏற்படும்.

அவதாரிகை – நிகமத்தில், இப்பத்தைக் கற்றவர்கள் நிரதிசய புருஷார்த்தமான பகவத் கைங்கர்யத்தைப் பெறுவர் என்கிறார்.

பொருள் – இந்தப் பத்துப் பாசுரங்களையும் கற்பவர்கள் எல்லையற்ற புருஷார்த்தமாக விளங்குகின்ற பகவத் கைங்கர்யம் என்பதைப் பெறுவார்கள் என்று கூறுகிறார்.

வ்யாக்யானம் - (மணியை) "முந்தானையிலே முடிந்து ஆளலாம்படி கைப்புகுந்திருக்கும்" என்று ஸௌலப்யம் சொல்லுகிறது. "தென்குறுங்குடி நின்ற" என்கிறவிடத்தில் ஸௌலப்யம். (வானவர் கண்ணனை) "உம்பர் வானவராதியஞ்சோதி" என்ற மேன்மையைச் சொல்லுகிறது. (தன்னதோரணியை) "அச்செம்பொனே திகழுந்திருமூர்த்தி" என்கிற வடிவழகை நினைக்கிறது. இம்மூன்றும் கூடின

பசுங்கூட்டாயிற்று பரதத்த்வமாகிறது. (தென்குருகூர்ச் சடகோபன்) ஆழ்வார் அருளிச்செய்ததாய், "நாம் இங்குத்தைக்குக் கிஞ்சித்கரித்தோமாக வேணும்" என்று, சொற்கள் தான் "என்னைக் கொள், என்னைக் கொள்" என்று, "மிடைந்த சொல்" என்கிறபடியே சொற்கள் பணி செய்த ஆயிரம் என்னுதல்; சொல்லாலே பணி செய்த ஆயிரமென்று வாசிகமாக அடிமையைச் சொல்லுதல். (உடன் தணிவிலர் கற்பரேல்) ஸாபிப்ராயமாகக் கற்பராகில். தணிவாகிறது - மெத்தென்கை. "வரில் பொகடேன், கெடில் தேடேன்" என்றிருக்கையன்றியே, ச்ரத்தை மாறாதே கற்பராகில். (கல்வி வாயுமே) "ஒண் தாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கும் உணர்வு" என்கிறபடியே, ஜ்ஞாநமாகில் பகவத் விஷயத்தைப் பற்றியல்லது இராமையாலே, இத்தை அப்யஸிக்க, இதுக்குப் பலமாகக் கைங்கர்யத்தை இதுதானே தரும். (கல்வி வாயும்) கல்விதானே ப்ரயோஜந என்றுமாம்.

விளக்கம் – (மணியை) - முந்தானையில் எடுத்து முடிந்து கொள்ளலாம்படி ஸௌலப்யமானவன். "தென்குறுங்குடி நின்ற" என்ற இடத்திலும் இதே ஸௌலப்யத்தைக் கூறுகிறார். (வானவர் கண்ணனை) – "உம்பர் வானவராதியஞ்சோதி" என்பதன் மூலம் மேன்மையைக் கூறுகிறார். (தன்னதோரணியை) – தனக்குத்தானே வேறு ஏதும் இல்லாத ஆபரணம் போன்றுள்ளவன். "அச்செம்பொனே திகழுந்திருமூர்த்தி" என்பதன் மூலம் வடிவழகைக் காட்டுகிறார். இந்த மூன்றும் சேர்ந்து பரதத்வம் என்றானது. பசுங்கூட்டு என்றால் கர்ப்பூரம், சந்தனம், குங்குமம் போன்ற பலவும் சேர்ந்துள்ளது போன்று எனக் கருத்து. (தென்குருகூர்ச் சடகோபன்) – ஆழ்வார் அருளிச்செய்ததாகவும், "சொற்களாகிய நாம் இங்கு வந்து கைங்கர்யம் செய்யவேண்டும்" என்று கூறியபடி, "என்னை இந்த இடத்தில் சேர்க்கவேண்டும், என்னைச் சேர்க்கவேண்டும்" என்று சொற்கள் ஓடிவந்தன. அதாவது திருவாய்மொழி (1-7-11) – மிடைந்த சொல் – என்பதற்கு ஏற்ப உள்ளவை. சொற்கள் மூலம் செய்யப்பட்ட கைங்கர்யம் என்றும் சொல்லலாம். (உடன் தணிவிலர் கற்பரேல்) – மிகுந்த ஈடுபாட்டுடன் கற்பார்கள் என்றால். தணிவு என்றால் முயற்சி இல்லாமல் இருத்தல். அதாவது "வந்தால் பத்திரப்படுத்தமாட்டேன், தொலைந்தால் தேடமாட்டேன்" என்று இல்லாமல் மிகுந்த சிரத்தையுடனே கற்பார்கள் என்றார். (கல்வி வாயுமே) – முதல் திருவந்தாதி (67) – ஒண் தாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கும் உணர்வு – ஞானம் என்பது பகவத் விஷயத்தை அல்லாது வேறு எதனையும் பற்றியிராது என்பதால், இதனைக் கற்கும்போது இதற்குப் பலனாக உள்ள கைங்கர்யத்தையும் இதுவே

அளிக்கும் என்கிறார். (கல்வி) – கல்வி தானே பயனாகவும் உள்ளது; அதாவது ஸ்வயம் ப்ரயோஜனம் என்று கருத்து.

வ்யாக்யானம் - இத்திருவாய்மொழியில், மேல் பரக்க அருளிச் செய்யப் புகுகிற அர்த்தத்தை ஸங்க்ரஹேண முதற்பாட்டிலே அருளிச்செய்தார்; இரண்டாம் பாட்டில், பரமபக்திக்கும் பரிகணைக்கும் ஒக்க முகங்காட்டும் என்றார்; மூன்றாம் பாட்டில், கண்டாயே அவன் ஸ்வரூபமிருந்தபடி, நீயும் உன் ஸ்வரூபத்துக்குச் சேர நிற்கப்பாராய் என்றார். நாலாம் பாட்டில், ஸ்வருபாநுரூபமாக நெஞ்சு தொழுதவாறே நெஞ்சைக் கொண்டாடினார்; அஞ்சாம் பாட்டில், கீழ் "எண்ணிலும் வரும்" என்றது பலத்தோடே வ்யாப்தமானபடியை நெஞ்சுக்கு அருளிச்செய்தார்; ஆறாம் பாட்டில், நாம் இருவரும் இப்படியே நிற்கப் பெறில் நமக்கு ஒரு அநர்த்தமும் வாரா என்றார்; ஏழாம் பாட்டில், கீழ் இவர் அஞ்சினபடியே விடிந்தபடி சொன்னார்; எட்டாம் பாட்டில் திருநாம ச்ரவணத்தாலே தம்முடைய கரணங்களுக்குப் பிறந்த விக்ருதியைச் சொன்னார்; ஒன்பதாம் பாட்டில் விக்ருதராகாதே மறந்தாலோ வென்ன, மறக்கவொண்ணாது என்றார்; பத்தாம் பாட்டில், வருந்தியாகிலும் மறந்தாலோ வென்ன, என் ஹ்ருதயத்திலே இருக்கிறவனை மறக்கப்போமோ? என்றார்; நிகமத்தில், கற்றார்க்குப் பலஞ்சொன்னார்.

விளக்கம் – இந்தத் திருவாய்மொழி முழுவதிலும் அருளிச்செய்ய இருந்த விஷயத்தை சுருக்கமாக முதல் பாசுரத்தில் உரைத்தார். இரண்டாம் பாசுரத்தில் பரமபக்தி மற்றும் எண்ணிக்கை ஆகிய இரண்டிற்கும் ஒரே போன்று திருமுகம் காண்பிக்கும் என்றார். மூன்றாம் பாசுரத்தில் அவன் ஸ்வரூபம் எப்படிப்பட்டது என்று நீ அறிந்தாய், இதற்கு ஏற்றபடி நீயும் நில்லாய் என்றார். நான்காம் பாசுரத்தில் தனது ஸ்வரூபத்திற்கு ஏற்றபடி தனது நெஞ்சம் அவனைக் கொண்டாட, அதனை அவர் கொண்டாடினார். ஐந்தாம் பாசுரத்தில் "எண்ணிலும் வரும்" என்ற நிலை பலனுடன் கூடியுள்ளதை தனது நெஞ்சத்திற்கு உரைத்தார். ஆறாம் பாசுரத்தில் இப்படியாக நாம் இருவரும் சேர்ந்து நின்றால் எந்தக் கேடும் உண்டாகாது என்றார். ஏழாம் பாசுரத்தில் இவர் அச்சம் கொண்டது போன்றே பொழுது விடிந்ததை உணர்த்தினார். எட்டாம் பாசுரத்தில் திருநாமங்களைக் கேட்டதன் மூலம் தனது உடல் உறுப்புகளுக்கு ஏற்பட்ட வேறுபாட்டினை உரைத்தார். ஒன்பதாம் பாசுரத்தில் "வேறுபட்டவர் ஆகாமல் மறந்துவிட்டால்" என்று கேட்க, மறக்க இயலாது என்றார். பத்தாம் பாசுரத்தில் மிகுந்த

சிரமத்துடன் மறந்துவிட்டால் என்னாவது என்று கேட்க, எனது இதயத்தில் உள்ளவனை மறக்க இயலுமோ என்கிறார். இறுதியாக இந்தப் பத்துப் பாசுரங்களைக் கற்பவர்களுக்கு பலன் உரைத்தார்.

வ்யாக்யானம் – ஸர்வஸ்மாத்பரனென்றார்; பஜநீயனென்றார்; அவன்தான் ஸுலபனென்றார்; ஸுலபனானவன் அபராத ஸஹனென்றார்; அவன் சீலவானென்றார்; ஸ்வாராதனென்றார்; நிரதிசய போக்யனென்றார்; அவனுடைய ஆர்ஜவகுணம் சொன்னார்; ஸாத்ம்யபோக ப்ரதனென்றார்; இப்படி ஏவம்பூதனானவன் நிர்ஹேதுகமாக விஷயீகரிப்பானொருவன் என்றார். "ஆகையாலே, அவன் துயரறு சுடரடி தொழுதெழு என் மனனே என்று தம் திருவுள்ளத்தைக் குறித்து அருளிச் செய்து தலைக்கட்டினார்.

விளக்கம் - அனைத்திற்கும் மேம்பட்டவன், அனைவராலும் வணங்கப்படுபவன், மிகுந்த சுலபமானவன், சுலபமாக உள்ள அவன் அபராதங்களைப் பொறுப்பவன், சீலவான், ஆராதனைக்கு மிகவும் சுலபன், எல்லையற்ற இன்பம் அளிப்பவன், ஆர்வம் நிறைந்தவன் என்று பலவிதமாக உரைத்தார்.இப்படிப்பட்டவன் எந்தவிதமான காரணமும் இல்லாமல் தன்னை எடுத்துக் கொள்வான் என்கிறார். ஆகவே திருவாய்மொழி (1-1-1) – அவன் துயரறு சுடரடி தொழுதெழு என் மனனே – என்று தனது திருவுள்ளத்திடம் கூறினார்.

வ்யாக்யானம் - முதற்பத்தால் பகவத் கைங்கர்யம் புருஷார்த்தமென்று அறுதியிட்டார்; இரண்டாம் பத்தால் அந்தக் கைங்கர்யத்தில் களையறுத்தார்; மூன்றாம் பத்தால் விரோதி கழிந்த கைங்கர்ய வேஷம் பாகவத சேஷத்வ பர்யந்தமான பகவத் கைங்கர்யமென்றார்; நாலாம் பத்தால் இப்படிப்பட்ட கைங்கர்யத்துக்கு விரோதி ஐச்வர்ய கைங்கர்யமென்றார். ஐந்தாம் பத்தால் அந்த விரோதியைப் போக்குவானும் அவனே யென்றார்; ஆறாம் பத்தால் விரோதி நிரஸந சீலனானவன் திருவடிகளிலே சரணம் புக்கார்; ஏழாம் பத்தால் இப்படி பெரியபிராட்டியார் முன்னிலையாக சரணம் புக்கவிடத்திலும், தக்தபட ந்யாயம் போலே ஸம்ஸாரம் அநுவர்த்திக்கிறபடியைக் கண்டு விஷண்ணராகிறார்; எட்டாம் பத்தால் "இப்படி ப்ரபந்நராயிருக்கச் செய்தேயும் தக்தபட ந்யாயம்போலே நம்மை விடாதே அநுவர்த்திக்கிறது நம்முடைய ஆத்மாத்மீயங்களில் நசையறாதபடியாலே" என்று பார்த்து, அவற்றில் ஒரு நசையில்லை என்கிறார்; ஒன்பதாம் பத்தால் "இப்படி நசையற்ற பின்பும் ரக்ஷியாதொழிவானென்?" என்று அதிசங்கை பண்ண, "நான் நாராயணன், ஸர்வசக்தி

யுக்தன்; உம்முடைய ஸர்வாபேக்ஷிதங்களும் செய்து முடிக்கிறோம்" என்று அருளிச்செய்ய, அவனுடைய சீலகுணத்திலே ஆழங்காற்படுகிறார்; பத்தாம் பத்தால் ஆழ்வாருடைய பதற்றத்தைக் கண்டு, திருமோகூரிலே தங்கு வேட்டையாக வந்து தங்கி, இவர்க்கு அர்ச்சிராதிகதியையும் காட்டி, இவருடைய அபேக்ஷித ஸம்விதாநம் பண்ணினபடியை அருளிச்செய்தார்.

விளக்கம் - முதல் பத்து மூலம் பகவத் கைங்கர்யமே மிகவும் உயர்ந்த புருஷார்த்தம் என்றார். இரண்டாம் பத்தில் அந்தக் கைங்கர்யத்தில் உள்ள தடைகளை விலக்கினார். மூன்றாம் பத்தில் விரோதி ஏதும் இல்லாத கைங்கர்ய நிலை, பாகவதர்களுக்கு அடிமையாக இருத்தல் என்று முடிகின்ற பகவத் கைங்கர்யம் குறித்து உரைத்தார். நான்காம் பத்தில் இப்படிப்பட்ட கைங்கர்யத்தின் விரோதி ஐச்வர்ய கைங்கர்யம் என்றார். ஐந்தாம் பத்தில் இந்த விரோதியைப் போக்குபவன் அவனே என்றார். ஆறாம் பத்தில் இப்படியாக தனது விரோதியைப் போக்கித் தரும் சீலம் கொண்டவனின் திருவடிகளில் விழுந்தார். ஏழாம் பத்தில் பெரியபிராட்டியார் முன்னிலையில் சரணம் புகுந்தாலும், ஸம்ஸாரம் தொடர்ந்ததைக் கண்டு தயங்கினார். எட்டாம் பத்தில் இவ்விதம் நாம் ப்ரபன்னராக உள்ளபோதிலும் ஸம்ஸாரம் தொடர்வதற்குக் காரணம் நமக்கு விஷயங்களில் பற்றுதல் போகாமல் இருப்பதே என்று ஆராய்ந்து அவற்றில் பற்றில்லை என்றார்.ஒன்பதாம் பத்தில் இவ்விதம் பற்றற்று இருந்த பின்னரும் அவன் காப்பாற்றாமல் நிற்பது ஏன் என்று வினவ, "நான் நாராயணன், அனைத்து சக்தியும் கொண்டவன், உனது அனைத்து விருப்பங்களையும் நாம் முடித்துத் தருகிறோம்" என்று அவன் அருளிச்செய்ய, அந்த எளிமையில் ஈடுபட்டார். பத்தாம் பாசுரத்தில் ஆழ்வாரின் வேகத்தைக் கண்டு, திருமோகூரில் வந்து நின்று, அர்ச்சிராதி கதியைக் காண்பித்து, இவருடைய விருப்பத்தை நிறைவேற்றியதை அருளிச்செய்தார்.

பத்தாம் திருவாய்மொழி ஸம்பூர்ணம்

நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி முதற்பத்து ஸம்பூர்ணம்

பெரியபெருமாள் திருவடிகளே சரணம்

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்

ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்